JL
Rm221,N17MR
N17·1
161426

உ

பரமபதி துணை.

மனோரஞ்சனி.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 1 } பிங்கள-௵ ஆடி-௴ 31௳
1917-ம்௵ ஆகஸ்டு௴ 15௳ { பகுதி 1

கடவுள் வணக்கம்.

சிவமெனும் பொருளும் ஆதிசத்தியொடு
சேரினெத்தொழிலும் வல்லதாம்
இவள்பிரிந்திடி னியங்குதற்குமரி
தரிதெனும றையிரைக்குமால்
நவபெரும்புவன மெவ்வகைத்தொழில்
நடத்தியாவரும் வழுத்துதாள்
அவனியின்கணொரு தவமிலார்பணிய
லாவதோ பரவலாவதோ.

கங்கையும் பிறையுந் தும்பையு மறுகுங்
கடுக்கையு மெருக்கணிச் சடையும்
கனபணா டவிநீ ளுரகக் கணமுங்
காதினிற் கவசகுண் டலமும்
செங்கையின் மானு மழுவுமே தரித்துச்
சிரமுடன் சூலமு மேந்தி
செக்கர்வான் மேனி தவளநீ றணிந்து
செம்புலி யுரியுடை யுடுத்தி
மங்கையோர் பாகந் தன்னையே வைத்து
மதியுரு வெள்விடை யேறி
மலரடி தன்னிற் சிலம்பொலி யார்ப்ப
வந்தெனை யாண்டரு ளிதயத்
தங்கிருந் தருளும் அம்பலத் தரசே
யமரர்கள் தேடியுங் காணா
அதிசய வடிவே சதுர்மறைப் பொருளே
ஐயனே ஞானதே சிகனே.

1426

மனோரஞ்சனி

பிங்கள-௵ ஆடி-மீ 31உ

சகோதரர்களே! சகோதரிகளே!!

சீமான்களே! சீமாட்டிகளே!!

உங்களனைவருக்கும் இதயமார்ந்த வந்தனம். தங்கள் திருக்கண்களைச் சாத்தியருள வேண்டுகிறேன்.

பிறப்பதற்கு முன்னமே மனோரஞ்சனி என்னும் பெயரை வகித்துக்கொண்ட யான், (நிகழும் பிங்கள-௵ ஆடி மாதம் முதல்) விராட் புருடனுக்குத் துவாத சாந்தஸ்தலமாகவும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் சிறப்புற்று நிகரின்றி விளங்குவதாகவும், சர்வலோக நாயகனான சிவபெருமான் அன்பர்கள் பொருட்டு எண்ணிறந்த அற்புத திருவிளையாடல்களை இயற்றியருளியதாகவும், ஜெகத் ஜோதியாய் விளங்கிவருகிற திருவாலவாயென்னும் மதுரை முதலிய அற்புதத் திராவிட வேதங்கமழும் பதினான்கு மகா சிவஸ்தலங்கள் நிரம்பப்பெற்ற இப் பாண்டிவள நாட்டில்; திருப்பணிக்கே உருப்பணிகொண்டு வந்தாலொத்துச் சிவதருமங்களை தமக்குரித்தான தவ தருமங்களாகக் கொண்டொழுகும்; தனவைசிய பிரபுகுல சிகாமணிகள் வாழையடிவாழையெனவந்த திருக்கூட்டமாக வாழ்ந்து வருகிற; முக்கியநகரங்களில் ஒன்றாகிய சிறைக்குடியாகக் கொள்ளும், காரைக்குடி யென்னும் திவ்ய நகரத்தின் ஞானாம்பிகா அச்சியந்திர சாலையாகிய தாயார் வயிற்றில் உதித்துப் பிறந்தவுடன் என் சகோதர சகோதரிகளாகிய உங்கள் கரங்களில் விளையாடும் பாக்கியம் பெற்று; எனக்கு நடக்கும் சக்தியைக்கொடுத்ததால், ஓட்டோட்டமாக ஓடிவந்து உங்கள் கரங்களில் ஏறி விளையாடும் பெரும் பாக்கியம் பெற்றேன். என் பொருள் நிரம்பா மழலைச் சொற்களை உங்கள் திருச்செவிகள் குளிரக்கேட்டு மகிழ்ந்து மகிழ்ச்சியடைவீர்களென்று நம்புகிறேன்.

“குழலினிது யாழினிதென்பர் தம்மக்கள்
மழலைச்சொற் கேளாதவர்”
—என்று வள்ளுவரும்)

R.M. 211, N17 MR

“சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி”
—என்று புகழேந்தியும்)

கூறியிருப்பவைகளை; நீங்கள் அறிவீர்களன்றோ? அதிலும் ஆண்மகவின் மழலையைப் பார்க்கிலும் மனோரஞ்சனி என்னும் பத்திரபுத்திரியாகிய எனது மழலைச்சொல் உங்கள் திருச்செவிகளுக்கு அதிக இன்பங் கொடுக்குமென்றே நம்புகிறேன். பெண்ணொன்றால் பேயும் இரங்குமானால்; ஆறறிவுடைய மனிதர்களாய்ப் பெற்றுப் பெருகிப் பெருவாழ் வடைந்திருக்கும்; நீங்களெல்லோரும் என்னிடத்தில் இரக்கம் பாராட்டுவதற்கு தடையில்லையன்றோ? “அடைக்கலாங் குருவிக்கு ஆயிரந்தத்து” என்ற பழமொழியைப் போல் பத்திரபுத்திர புத்திரிகளுக்கும் அளவற்ற தத்துகளுண்டாம். நமது தேசத்தில் கருவினுள்ளழிந்த பத்திரிகை எத்தனை? காயமுற்றழிந்த பத்திரிகை எத்தனை? பரிணமித்தழிந்த பத்திரிகை எத்தனை? பாலனாயழிந்த பத்திரிகை எத்தனை? தருணனாயழிந்த பத்திரிகை எத்தனை? தானனைத்தழிந்த பத்திரிகை எத்தனை? யென்று யாரால் கூறமுடியும்?

இவ்வாறு அற்பவயதாய் அத்தமித் தொழிவதற்குக் காரணம்; பெரும்பாலும் வாங்குவோர்களாகிய கையொப்பக் கனதனவான்கள் அதற்கு விதித்திருக்கும் சந்தாத் தொகையாகிய செல்வப் பாலூட்டி வளர்த்துவிராத குறையென்றே சொல்லலாம். வாங்குவோரில்லாவிட்டால் விற்பவர்களென்ன செய்யக்கூடும். பத்திரிகையை உற்பத்தியாக்கி நடாத்தும் பத்திராதிபர்கள் பெரும்பாலரும் பொதுஜனோபகாரம் கருதியே நடாத்த முன்வருகிறார்கள். இதை உத்தேசித்தே சந்தா தொகையையும் குறைத்து வருடம் ஒன்றுக்கு ரூ 2, ரூ 2—8—0, 3, ரூபாயாகவும் விதிக்கிறார்கள். விதித்து என்ன? எத்தனையோ தர்மங்களைச் செய்யக்கூடிய நமது கனதனவான்கள், அத்தருமங்களைச் செய்யத்தூண்டி அறிவை விசாலப்படுத்தக்கூடிய கல்வியையும், அதற்கு ஆதாரமாயுள்ள பத்திரிகைகளையும் போஷித்து பத்திராதிபர்களுக்கு உண்மையான உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உண்டாக்கவேண்டியது தங்க

ளது கடமையெனக் கொள்ளவேண்டாமா? இச்சொற்ப சந்தா தொகையை ஓர் பொருட்டாக நினைக்கலாமா? பத்திரிகையாலுண்டாகும் நன்மை ஒன்றா! இரண்டா!! ஆயிரம் ஆயிரமான நன்மைகளுண்டாமன்றோ? பத்திரிகைகளில் தரும விஷயங்கள் அடங்கியிருப்பதனால் தருமசாலை யென்றும், அர்த்த விஷயங்கள் அடங்கியிருப்பதனால் தனசாலை யென்றும், மனோகரமான இனிய விஷயங்கள் அடங்கியிருப்பதால் இன்பசாலை யென்றும், நல்லறிவு உதயமாகும் ஞானவிஷயங்களெல்லாம் அடங்கியிருப்பதனால் மெய்ஞ்ஞான சாலையென்றும், வர்த்தக விர்த்திக்கேதுவான விஷயங்களெல்லாம் நிறைந்திருப்பதனால் வர்த்தகசாலை யென்றும் கைத்தொழிற் சம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருப்பதனால் கைத்தொழில் சாலையென்றும், இன்னும் அரிய பெரிய தத்துவ விஷயங்களெல்லாம் நிறைந்திருப்பதால் தத்துவ சாலையென்றும், நீதி நியாய பரிபாலன விஷயங்களெல்லாம் நிறைந்திருப்பதனால் நீதிசாலை நியாய சாலை யென்றும், இன்னும் பக்தி முக்திகளுக்குரிய விஷயங்களெல்லா மிருப்பதால் பக்திசாலை முக்திசாலை யென்றும், பண்டிதர்களின் இலக்கிய இலக்கண சாஸ்திரவிஷயமெல்லாம் அடங்கிவருவதனால் இலக்கிய இலக்கண சாஸ்திர சம்பிரதாயச் சாலையென்றும் வர்ணித்துச் சொல்லலாம்.

இத்தகைய பெரும் பயன்களை இருந்தவிடத்திருந்தே யறிந்து கொள்ளச் சாதனமாயிருக்கும் பத்திரிகைகளை எளியவிலைகொடுத்து வாங்கிப்படிக்காத தோஷத்தை நான் என்னென்று சொல்லலாம்?

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகாதது போலப் பத்திரிகையென்றால் எல்லாம் பத்திரிகையாகாது. நெல்லுடன் பதர் கலந்திருப்பது போலப் போலிப் பத்திரிகைகளும் உண்டு. பதரை நீக்கி நெல்லைக் கொள்வதுபோல்; போலிப் பத்திரிகைகளை நீக்கி உத்தமமானப் பத்திரிகைகளை வாங்கிப் படித்துப் பத்திராதிபர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டுபண்ணி ஆதரிக்க வேண்டுவது தேசோபகாரிகளின் கடமையேயாம்.

ஆகையால், கல்வியாலும் செல்வத்தாலும் சிறப்புற்ற பெரியோர்களாகிய நீவிரனைவரும் நான் பாலாரிஷ்டம் முதலிய தோஷத்திற் குள்ளாகாமல்; அரோகதிடகாத்திர சரீரியாய்த் தீர்க்காயுளுடன் நித்திய சிரஞ்சீவியாய் மாதாமாதம் உங்கள் திருக்கரங்களில் வந்தேறி விளையாடிவரும் வண்ணம் ஆசீர்வதிக்கப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வி. எஸ். சோமசுந்தரம்,
பத்திராதிபர்.

செந்தமிழ்ப் பாஷையுந் தேவபாஷையே.

இவ்வியாசம் ஹரித்வாரமங்கலம்.
ஸ்ரீமான்: வா. கோபாலசுவாமி ரகுநாத ராஜாளியாரவர்கள்
அக்ராசனத்தின்கீழ் பிரசங்கிக்கப் பெற்றது.

தமிழ்த் தெய்வ வணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரியத்தோ
றெழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

அவையடக்கம்.

அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
றிறமுரைத் தானும் புலவன் —குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனின். —பொய்யாமொழி)

அறமுரைத்தான் "அன்றாலின் கீழிருந்தங்கறமுரைத்தான் காணேடி" எனத் திருவாசகத்திலும்; "ஆலமா நீழலறம் நால்வர்க் கன்றுரைத்த ஆலமர் கண்டத்தான்" என முதற் றிருவந்தாதியிலும் கூறியபடி தக்ஷிணாமூர்த்தியாகிய சிவபிரானை யுணர்த்தி முதற்சங்கப் புலவராய் வீற்றிருந்தருளிய இறையனார் என்னும் பொருளில் வந்தது இறையனாரும், வள்ளுவரும், அகத்தியனாரும் புலவர்; யானும் புலவனெனில் தரணிபொறுக்குமோ என்று பொய்யாமொழிப்புலவரே கூறியிருப்பா ரெனில் என்போன்றார்கள் புலவரெனப் பெயர்வகித்துக் கற்றோர் நிறைந்த இம் மஹா சபையில் பிரசங்க மேடையேறிப் பிரசங்கிப்பது நகையாடற்பாலதன்றி வேறென்?

நிற்க,

“தேவபாஷையினிக்கதை செய்தவர்” என்று கம்பர் வடமொழியையே கூறினார். “செந்தமிழும் தேவபாஷையே” என்பது இங்கு எடுத்துக்கொண்ட விஷயம். இதற்கு மேலே கூறிய தெய்வவணக்கச் செய்யுளிலும், அவையடக்கச் செய்யுளிலும், போதிய ஆதாரங்கள் உள்ளனவாம்.

பாஷையென்பது ஒருவர் கருத்தை மற்றோர் அறியவும் மற்றவர் கருத்தை நாம் அறிவதற்கும் கருவியாய் வழங்குவதேயாம். அவ்விதபாஷைகள் உலகத்தில் அளவிறந்தனவாம் அவைகளிலெல்லாம் வடமொழியுந் தென்மொழியுமே அநாதியானபாஷைகளாம். எப்படியெனில்:—

“வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்.”
—எனக் காஞ்சிப்புராணத்திலும்,)

“தழற்புரை நிழற்கடவுள் தந்ததமிழ் தந்தான்” எனக்கல்வியிற் பெரிய கம்பநாடர் (ஆரணியகாண்டம் அகத்தியப்படலம் 41.) இராமாயணத்திலுங் கூறியிருப்பதினால் ஆரியம், தமிழ், என்னுமிரண்டற்கும் முதலாசிரியர் சிவபெருமானே யென்பது வெளிப்படை. சிவபெருமானுக்கு உற்பத்தி நாசம் சொல்லக் கூடுமானால், ஆரியமொழிக்கும், தமிழ்மொழிக்கும் உற்பத்தி, நாசஞ் சொல்லக்கூடும். சிவபெருமான் உற்பத்திக்குக் கிரேதாயுகம் முதலிய யுகக்கணக்கும், விக்ரம சகாப்தம், சாலிவாகன சகாப்தம் முதலிய சகாப்த கணக்கும், கி. பி. முதலிய வருஷக்கணக்கும், ஒருவர் கண்டறிந்து சொல்வார்களேயானால் இப்பாஷைகளுக்கும் கணக்குக் கண்டறிந்து சொல்லலாம்.

“எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேம்நம் சோணேசர்—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்த கதையுங்கேட்டி லேம்” —அருணகிரி அந்தாதி)

நமது தமிழ் அநாதியென்பதை, “என்றுமுள தென்றமி ழியம்பி யிசைகொண்டான்” எனக்கம்பரும் விளக்கியிருக்கிறார். அம்மட்டோ, சிவபெருமான் இவ்விருபாஷைகளையும் பாணினிக்கும், அகத்தியர்க்கும் திருவருட் சுரந்ததன்றிச் சிவபெருமானே அப்பாஷைகள், அப்பாஷைகளே சிவபெருமானென அபேதமாக “முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்” “செந்தமிழோ டாரியனைச் சீரியானை” “ஆரியன்கண்டாய் தமிழன்கண்டாய்” “ஆரியந்தமிழோ டிசையானவன்” என்று தெய்வத் திருமறையாகிய தேவாரங்கள் கட்டளையிடுகின்றன. “அந்தமிழின்பப்பாவினை” யெனத்திருவாய்மொழியிலுங் கூறப்பட்டுள்ளது. சிவசொரூபமாகவும், திருமொழியாகவுமுள்ள இச்செந்தமிழ்ப் பாஷையைத் தேவபாஷையெனக்கூறத்தடையாது?

ஆனால், ஒருவர் கருத்தைப் பிறரறியவும் பிறர் கருத்தைத் தாமறியவும் ஏதுவாயுள்ளது பாஷை என்று முன் கூறியபடி சிவபெருமான் முதலிய தெய்வங்களால் ஏதாவதுண்டாவெனில், எத்தனையோ உண்டு. பாஷை ஒவ்வொன்றிலும் உலகவழக்கும், செய்யுள்வழக்கும், என இருவகையாகும். உலகவழக்குச் சாதாரணமாக ஒருவர்க்கொருவர் வார்த்தைகளால் அபிப்பிராயம் தெரிவிப்பது, செய்யுள் வழக்குக் கவிமூலந் தெரிவிப்பது.

(1) தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களில் தலைச்சங்கத்தில் ஐந்நூற்றுநாற்பத்தொன்பதுபேர் சங்கமிருந்து தமிழாய்ந்தார்களென்றும், அவர்கள் அத்தலைச் சங்கத்தில் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது வருஷங்கள் சங்கம் வளர்த்தார்களென்றும் அவருள் தலைமைப் புலவர்களாய்த் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும், வீற்றிருந்தருளினார்களென்றும் நூல்களால் அறிகிறோம் இவ்விரு பெருந்தெய்வங்களும் மற்றச்சங்கப் புலவர்களுடன் அளவளாவி யிருந்தது தமிழ்பாஷையில் தானேயிருக்க வேண்டும் தமிழ்ப் பாஷையை வளர்க்கவந்த மேற்படி தெய்வங்கள் வேறுபாஷையிற் பேச நியாயமில்லையென்க ‘அறமுரைத்தானும் புலவன்’ என்றது கருதத்தக்கது இதனால் உலகவழக்கிலும் செந்தமிழ்ப்பாஷை தேவபாஷையாயிற்று இனிச் செய்யுள் வழக்கைப்பற்றிச் சிறிதுகூறுவோம்.

(2) கடைச்சங்க காலத்தில் பாண்டிய நாட்டில் பன்னிரண்டு வருஷங்கள் மழைபெய்யாமல் பஞ்சம் வருத்தியதாகவும் சங்கத்தாரெல்லோரும் வேற்றிடங்களுக்குப் போய்விட்டதாகவும் பின்பு மழைபெய்து நாடு செழிக்கப் புலவர்களைப் பாண்டியன் மதுரையிடத்தழைப்பித்துத் தமிழையாய்ந்ததாகவும் அப்பொழுது எழுத்து,சொல், பொருள்,யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களில் பொருளிலக்கணங் காணாமற் போயினதாற் சங்கப்புலவர்களும் பாண்டியனும், கவலையுற்று ஆலவாய் இறைவரிடம் விண்ணப்பஞ் செய்ததாகவும். அவர் “அன்பினைந்திணை” யென்பதைமுதலாகக்கொண்டு அறுபது சூத்திரம் திருவாய்மலர்ந்து கொடுத்து அவர்கள் கவலையையொழித்ததாகவும் அந்நூலே “இறையனாரகப்பொருள்”என்று இன்றும் நின்று நிலவுவதாகவும் நாமறிந்திருக்கிறோம். இதைத்தான் தமிழ்த் தெய்வணக்கத்தில் “இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ்செய்யப்பெற்றே” என்று குறித்துள்ளது. இதனை:—

“உலகியல் நிறுத்தும் பொருண்மர பொடுங்க
மாறனும் புலவரும் மயங்குறு காலை
முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கால்
அன்பினைந் திணையென் றறுபது சூத்திரம்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோல்
பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்”
—என்ற கல்லாடம் இனிது விளக்கும்.)

அன்றியும், இறையனாரகப் பொருட்குச் சங்கப்புலவர்கள் தனித்தனி யுரையியற்றி "என்னுரைசரி உன்னுரைபிழை" யென்று கலகமிட்டு மீட்டும் ஆலவாயண்ணலிடம் முறையிட்டுக் கொள்ள அப்பெருமான் மதுரை யம்பதியிலேயே ஸ்ரீ சுப்ரமண்யக்கடவுளின் திருவவதாரமாய் வணிககுல திலகனாய் "உருத்திரசர்மன்" என்றநாமம் உள்ளவனாக விளங்கும் ஊமைப் பிள்ளையை யழைத் தாசனத்தமர்த்தி, உங்கள் உரைகளை யுரைத்தால் உண்மையுரை யிதுவென உணர்த்துவா னென்றபடி செய்து தெளிந்ததும் கருதத்தக்கது. இதனை:—

"மணிக்காலறிஞர் பெருங்குடித் தோன்றி
யிறையோன் பொருட்டுப் பாணர்முதல் கேட்பப்
பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும்
பாய்பாரறிய நீயேயாதலின்."

என்ற கல்லாடம் முருகர்துதி நன்குவிளக்குவதுடன் திருவிளையாடற் புராணம் சங்கத்தார் கலகந்தீர்த்தபடலமும் நன்கு விளக்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நமது சோழநாட்டின் தமிழபிமானத்தைச் சொல்லாம லிருக்கக் கூடவில்லை. அதாவது பாண்டியநாட்டில் 12 வருஷம் மழை வருஷியாமல் பஞ்சத்தால் வருந்திய பஞ்சவிலக்கணப்புலவரெல்லாம் பஞ்சவர்கோன் சொற்படிகலைந்தவர்கள் நமது செல்வச் சோணாட்டில்வந்து ஆலஞ்சேரியென்னும் ஊரில் நமது அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் இராஜாளி யாரவர்களைப் போலக் கற்றவர்க் கெல்லாம் சுற்றமாகப் பிரபுகுலதிலகனாக மகௌதாரியாகவீற்றிருந்த "மயிந்தன்" என்னும் மகாப்பிரபுவினால் ஆதரிக்கப்பெற்றிருந்து பஞ்சங் தெளிந்தவுடன் பாண்டியநாடடைந்ததாகத் தக்க ஆதாரங்களுடன் வெளியாகிறது.

"பயந்தமழைநீர் பெய்யாது பன்னீராண்டுபஞ்சமெலாம்
வியந்தசங்கத் தமிழோர்க்கு வெவ்வேறுதவிவிடுந்தவுடன்
நயந்தகாலை யெனுந்தமிழை நாட்டுந்துரையாலஞ்சேரி
மயிந்தனுபர் பாண்டியன் புகழ வாழ்ந்தோன் சோழமண்டலமே"
—சோழமண்டலசதகம்)

இன்னும் அப்புலவர் பெருமக்கள் தாங்கள் அனுபவித்தறிந்த பஞ்சவிலக்கணங்களையும், தங்களையாதரிக்கும் பிரபுகுல சிகாமணியின் உத்தமோத்தம சத்திய குணவிசேடங்களையும் தங்கள் க்ஷேமலாபங்களை விசாரித்து வரவிடுத்தபாண்டிய மகாராஜாவின் தூதனிடம் கீழ்வரும் அகவற்பாவினால் விளக்கி யெழுதி யனுப்பினதாகத் தமிழ் நாவலர்சரிதையாற்றெரிகிறது.

அகவல்

காலைஞாயிறுக் குங்கதிர்பரப்பி
வேலையுங் குளனும் வெடிபடச்சுவறித்
தந்தையைமிக்கண் முகம்பாராமே
வெந்தசரகம் வெவ்வே றருந்திக்

குணமுள தனையுங் கொடுத்து வாழ்ந்த
துணைவனை மகளிர் கண்பா ராமே
விழித்த விழியெலாம் வேற்றுவிழி யாகி
யறவுரை யன்றி மறவுரை பெருகி
உரைமறந் தொழிந்த ஊழிகா லத்திற்
றாயில் லவர்க்குத் தாயே யாகவும்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாநிதிக் கிழவன்
நீலஞ் சேரும் நெடுமால் போல்வன்
ஆலஞ்சேரி மயிந்த னென்பான்
தன்குறை சொல்லான் பிறர்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையிற் குன்றான்
இறந்து போகா தெம்மையுங் காத்தான்
வருந்த வேண்டா வழுதி
யிருந்தன மிருந்தன மிடர்கெடுத் தின்னே.

OFFICE OF T
26 FEB 1918
MADRAS

நச்சினார்க்கினியர் தொல்காப்பிய அகத்திணை 30-ம் சூத்திரவுரையில் "ஆலஞ்சேரி மயிந்தன் ஊருரைகேணிநீ ரொப்போன்" எனவுஞ் சான்றோர் செய்யுட் செய்தார் என்றெழுதியிருப்பதால் இதன் உண்மை வலியுறும்.

அப்படிப்பட்ட சோணாடு இப்பொழுது தமிழபிமானங் குறைந்து தமிழ்ப் புலவர்களிடம் அன்பும் ஆதரவுங் காட்டாமல் வீண் இடம்பத்திற் காளாகி வருவது பரிதபிக்கத் தக்கது; இது நிற்க,

மேலேகூறிய இறையனாரகப்பொருள் விஷயத்தால் பரங்கருணைத் தடங்கடலாகிய திருவாலவாய் மகாதேவனே ஒரு சூத்திரமல்ல இரு சூத்திரமல்ல, அறுபது சூத்திரமாகச் செந்தமிழ்க் கடலின் செழுஞ்சுவையைத் திரட்டி ஒரு நூலாகவழங்கியிருப்பாரானால் செந்தமிழ்ப்பாஷை தேவபாஷையேயென்று சொல்லாமல் வேறென் சொல்வது?

இன்னும் இவ்விறையனார் நூல்செய்து தந்ததோடு நின்றாரா?

"கொங்கு தேர்வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறி யெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே."

என்று பாண்டியன் கருத்தை விளக்கித் தருமி யென்னும் ஆதிசைவப் பிரமசாரிக்குச் சிந்தாசமுத்திப் பாவைப் பாடிக் கொடுத்துப் பொற்கிழி யுதவிய சரிதம் அறிஞர்களறிந்ததே.

இதனை,—

"பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்பட னுதவி
யென்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்கும்
கள்ளவிழ் குழல்சேர் கருணையம் பெருமான்"

"மலர்பதம் நீங்கா உளப்பெருஞ் சிலம்ப" என்றகல்லாட[illegible] திருவிளையாடல் தருமிக்குப் பொற்கிழியளித்த படலமும்வலியுறுத்தும். இம்மட்டோ!

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறை
யன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனக் காவலர்க்
கொருமையி னிருமையு முதவிய வொளிதிகழ்
குருமா மணிநிரைக் குடையத னிழற்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காணக்
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்னைக்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே"

என்ற திருமுகப்பாசுரம் எனப் பதினோராந்திருமுறை முதலிற் சேர்க்கப் பட்டுள்ளதை யாரும் அறிவர். இதனை

"குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலி புரிசைத் திருமுகங் கூறி
அன்புருத் தரித்த இன்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய
மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்"

என்ற கல்லாடமும், திருவிளையாடலில் திருமுகங்கொடுத்த படலமும் சான்று பகரும். இத்திருமுகப் பாசுரத்தில் 'ஆலவாயில் மன்னியசிவன்யான்' என்று தன்முத்திரை வைத்திருத்தலே எமது மகுடத்திற்குத்தக்க ஆதாரமாம்.

இறையனார் தருமிக்கும் பாணபத்திரனுக்கும் கவியெழுதிக் கொடுத்தேயன்றி வள்ளுவர்குறளுக்கு,

"என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றாத

செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போல்
முன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்"

என்று சிறப்புச் செய்யுட் கூறியிருப்பதையும் அறியாதார் யார்?

இதை,— "சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"
—என்ற கல்லாடம் வலியுறுத்தும்.)

அல்லாமலும் "கொங்கு தேர்வாழ்க்கை" யென்ற தமது கவியில் பொருட்குற்ற மிருப்பதாக மறுத்த நக்கீரரை யிகழ்ந்து இறையனார்;

"அங்கம் வளர்க்க வரிவாளி னெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீர்கீ ரெனவறுக்குங் கீரனோ வென்கவியைப்
பாரிற் பழுதென் பவன்"

என்று கூறியதாக வழங்குவதையும் அறியாதார் யார்? தவிரவும் பொய்யாமொழிப்புலவர் முச்சங்கமிருந்து தமிழாய்ந்த மதுரைமாநகரில் மீட்டுஞ் சங்கங் கூட்டுங் கருத்தினராய்ப் பாண்டிநாடு நோக்கிப் புறப்பட்டுத் திரிசிரபுரமடைந்து அங்குச் சிலநாட் டங்கியிருக்கும்பொழுது சிவபிரான் அவர்முன் புலவர் வேடம் புனைந்து,

"கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுக்கும்—காட்டானைத்
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை"

எனத்தாம் உவந்தஸ்தலம் இஃதென்பதை புலவருக்கு நினைப்பூட்டவும் அவர்பெரிதும் வியந்தவராய் மலைமேல் திருக்கோயில்கொண்ட நயினாரை வணங்கி அபராத க்ஷாபணம் செய்துகொண்டு பாட்டால் துதித்ததாகவுந் தெரிகிறது.

இவைகளன்றியும் சபாநாயகர் பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுக்கும்படி உமாபதி சிவாசாரியருக்கு,

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"

என்று எழுதியனுப்பினதும், திருத்தொண்டர் புராணம்பாட, ஸ்ரீசேக்கிழார் நாயனாருக்கு "உலகெலாம்" என்று அடி எடுத்துக் கொடுத்ததும்

சுந்தரமூர்த்திக்கு "பித்தாபிறைசூடி" என்று அடியெடுத்துக்கொடுத்ததும், திருத்தொண்டத் தொகைபாட "தில்லைவாழந்தணர்தம் மடியார்க்குமடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கவையாம். இனிச் சிவபிரானையன்றி உமாதேவியார் திருவருளைக் குகைநமச்சிவாயரின் மாணாக்கராகிய குருநமச்சிவாயர் தில்லையில் பசியோடிருந்து சிவகாமியம்மையைக் குறித்து,

"ஊன்பயிலுங் காயம் உலருமலுந்தனது
வான்பயிலும் பொன்னடியை வாழ்த்துவேன்—தேன்பயிலும்
சொல்லியல் நல்லார் துதிக்கும் சிவகாம
வல்லியே சோறுகொண்டு வா." என்று பாட அவ்வம்மையார்

"கொண்டுவந்தேன் சோறு குகைநமச் சிவாயரது
தொண்டரடியார் சுகிக்கவே—பண்டுகந்தி
பேய்ச்சி முலையுண்ட பெருமாளுடன்பிறந்த
நாச்சி சிவகாமி நான்." என்று சொல்லி அன்னம்

படைத்து மறைந்ததாகவும் சொல்லப்படுகிறது. இனி நாமகள் குறட்குச் சிறப்புப் பாயிரமாக,

"நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேல் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு"

என்று பாடிய பாவைப் படித்து வாராதார் யார்? இதில் தன்கணவன் நான்முகனாவிலிருந்தென்றும், அவனவதாரம் ஆதலின் வள்ளுவன் வாயதென் வாக்கென்றும் நாமகள் கூறியது கவனிக்கத்தக்கது. நான்மறையாகிய பூர்வ வேதத்தை அருளிச்செய்த பிரமதேவன் திருவள்ளுவராய் வந்து உத்தர வேதமாகத் "திருக்குறளை" யருளிச் செய்திருப்பது எல்லா விசேடங்களினும் பெரிய விசேடம் என்க.

"நான்மறையின் மெய்ப்பொருளை
முப்பொருளா நான் முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாத் தந்துரைத்த" என்றது சான்றும்.

முருகக்கடவுள் செந்தமிழ்ப் பாமாசாரியராய்த் தலைச்சங்கத்திருந்து தமிழாய்ந்ததன்றிக் கடைச்சங்கத்தில்,

"திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
உருத்திர சன்மனென" அசரீரி யுரைத்தாங்கு

உருத்திர சன்மராய் வீற்றிருந்த விஷயம் அறிஞர்களறிந்ததே. இன்னும்

முருகப்பிரான் திருச்செந்தூரில் பகழிக்கூத்தரென்னும் புலவர்பாற் சென்று தம்மீது பாமாலை சூட்டும்படி விரும்பி,

"பூமாது போற்றிப் புகழ்பகழிக் கூத்தாநின்
பாமாலை யாங்கேட்கப் பற்றேமா—யாமுங்
கொடுக்க வறியேமா கூற்றுவன்றான் வந்தால்
தடுக்க வறியேமா தான்." எனப்பாடியதாகவும் தெரிகிறது.

இதுமாத்திரமா? கோழியைப்பாடிய வாயால் குஞ்சைப்பாடுவதில்லையென்று விரதங்கொண்டிருந்த (பரமசிவனைப்பாடியவாயால் குமாரக்கடவுளைப் பாட இசையாத) பொய்யாமொழிப்புலவர் சங்கம் நிறுத்த மதுரைநோக்கி முன் கூறியபடி திரிசிரபுரம் விட்டு இடையிற் பாலைவனத்தைக் கடந்து மிகுந்த களைப்புடன் செல்லுங்காலத்தில் ஸ்ரீ முருகப்பெருமான் வேட உருவத்துடன் வந்து "நீவிர் யாவர்?" என்று கேட்ப "பொய்யாமொழியென்னும் பெயருடைய புலவன் யான்" என்றிவர் கூற "ஆயின் என்பேரில் ஒருகவி பாடும்" என்று முருகர் சொல்ல புலவர் "உன் பெயர் யாது?" என்று கேட்ப முருகர் "முட்டை" எனலும் புலவர்,

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேல் முட்டைக்குங் காடு" என்று

அம்முருகப்பிரானாகிய வேடனைப்பாடினன் இதுகேட்ட அக்கடவுள் மனமகிழ்ச்சியடைந்தாரானாலும் இப்பாலையைப் "பொன்போலும்" என்று தொடங்கியது பொருந்தவில்லை என்று தமக்கு மகிழ்ச்சி இல்லாததைக் காட்டுவார் போலக்கூறிப் புலவர் பாடிய ஷெ சுரம்போக்குத் துறையிலேயே,

"விழுந்ததுளி யந்தரத்தே வேமென்று வீழ்ந்தால்
எழுந்தசுடர் வருமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினாள்
பொய்யா மொழிப்பகைஞர் போல்"

என அப்பொய்யாமொழியாரைப் புகழ்ந்து பாடித் தமது நிஜசொரூபத்தைப் புலவர்க்கு வெளிப்படுத்தி அவரிளைப்பையு மாற்றி அவர் நாவில் வேலாயுதத்தால் எழுதி அனுக்கிரகம் புரிந்து மறைந்த திருவிளையாடல் அறிஞர்கள் அறிந்ததே இதனை "ஸ்ரீ அருணகிரிநாதர்"

"முற்றித்திரி வெற்றிக்குருபா
முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப் பெயர் செப்பிக்கவிபெறு பெருமாளே"

என்றும் "புகல்தலைகற்றோர் சொற்கேட்கத் தனிவழி வருவோனே" என்றும் திருப்புகழில் பல இடங்களிற் பாடியிருப்பது வலியுறுத்தும். இன்னும் இதனை மார்க்கசகாய தேவர் திருவிரிஞ்சைப் பிள்ளைத் தமிழில்,

"பொய்யர் மொழிப்புலவர் மதுரையிற் சங்கம்
புரக்கவெழு நாள் மறவனாய்
புறவுற வளைத்தெனது பெயர்முட்டை பாடென
பொன் போலு மென்றுபாட
வெய்யான பாலைக்கி தேலாது நம்பெயர்
விளம்பென விளம்பவவர் மேல்
விழுந்ததுளி என்றெடுத் துப்பாடியவர் நாவில்
வேல்கொடு பதித்த சதுரா"

என்று இக்கதையைக் குறிப்பிட்டிருப்பதும் சான்றும். முருகக்கடவுள் தம்பெயர் "முட்டை" என்று கூறியது இடுகுறியாக்கமென்பர் நன்னூல் விருத்தியுரைகாரர். அன்றியும் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளுக்குக் குமாரக்கடவுள் "பொன்பூத்த குடுமி" என்று அடியெடுத்துக்கொடுத்து முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்ப் பிரந்தம் பாடியளிக்கப் பெற்றது காணத்தக்கதாம்.

பழமறைகள் முறையிட பைந்தமிழ்ப்பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலாகிய சீதாமூர்த்தி திருவரங்கம் பெரியகோயிலில் கம்பர் தாம்பாடிய இராமாயணத்தை யரங்கேற்றியகாலத்தில் ஸ்ரீ சடகோபரைத் துதியாமைகண்டு நஞ்சடகோபனைப் பாடினையோவென நம்பெருமாள் விஞ்சியவாதரத்தாற் கேட்டதும் ஸ்ரீ மணவாளமுனிவரிடம் ஸ்ரீயப்பதி நேரில் வந்தழைத்து மாறன் சடகோபனருளிய செந்தமிழ் வேதப்பொருளை உலகில் வெளியிட அருளியதும் குறிக்கத்தக்கன. இதனை மணவாள மாமுனிகள்,

"நாமார் பெரியதிரு மண்டபமார் நம்பெருமான்
தாமாக என்னைத் தனித்தழைத்து—நீமாறன்
செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை நாளுமிங்கே
வந்துரையென் றேவுவதே வாய்ந்து"

என்று பெருமாள் தன்னிடம் பேசியதை வெளியிட்டிருப்பது அறியத்தக்கது.

இவ்வாறு ஹரி, அரன், அயனாகிய முத்தேவர்களும்,முருகப்பிரானும், உமாதேவியும், நாமகளும் ஆகிய தெய்வங்கள் செந்தமிழாய்ந்தும், செந்தமிழ் நூல்களியற்றியும், செந்தமிழ்க் கவிபாடியும் பேசியுமிருப்பார்களேயானால் இது தேவபாஷை என்று கூறாமல் மற்றென் கூறுவது? ஆனால் இவை எல்லாம் மனித லோகத்தில் தானே, தேவ லோகத்தில் எதாவது தமிழ் விஷயப் பிரஸ்தாபம் உண்டோ எனில்! உண்டு. அது ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாருடன் கைலங்கிரி சென்ற சேரமான் பெருமான் தாம் பாடிய ஆதியுலா என்ற கைலாய ஞான உலா பொன்வண்ணத் தந்தாதி முதலாகிய நூல்களை முப்பத்து முக்கோடி தேவர்கள் வணங்க உமாதேவியுடன் வீற்றிருக்கும் சிவ சந்நிதானத்தில் அரங்கேற்றச் செவிகுளிரக் கேட்டானந்தம் அடைந்த விசேஷம் யாவரும் அறிந்ததாதலால் நாம் கூறுவது மிகையேயாம். பரமகுருமூர்த்தியாகிய பரசிவ வாக்காகிய ஆரியம், தமிழ், இரண்டும் சமமேயாம். ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வு கூறுதல் தகுதியன்று. முன் கடைச் சங்க காலத்தில் கொண்டான் என்னுங் குயவனொருவன் மதுரையின் வடமொழிச் சங்கமொன்றில் தலைவனாயிருந்து தமிழை யிகழ்ந்துரைக்க நக்கீரதேவர் அவனை சாகப்பாடிப் பின் பிழைக்கவும் பாடினதாகத் தமிழ் நாவலர் சரிதை கூறும்.

"நாடத்துக்குயக்கொண்டான் சாகப்பாடிய அங்கத வெண்பா"

"முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—யரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்க சுவாகா"

(அவனைப்பிழைக்க பாடின வெண்பா)

"ஆரியம் நன்று தமிழ்தீதென வுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையினால்
செந்தமிழே தீர்க்க சுவாகா"

இவ்வெண்பாக்களிரண்டும் மந்திரசெய்யுட்குப் பேராசிரியரால் தொல்காப்பியம் பொருளதிகாரம் (491) மேற்கோளாய் காட்டப்பட்டுள்ளன.

ஜி. சதாசிவம் பிள்ளை,
நாகை நீலலோசனி பத்திராதிபர்.

* * *

மனோசக்தி.

தனது சீர்த்தியைத் தக்கார் பலர்க்குந் தகுதி யிதுவெனக் காட்டும் ஆர்த்தியுடைய இம் "மனோரஞ்சனியில்" மனோ சக்தியைக் குறித்தெழுதல் பொருத்தமாகுமெனக் கருதி, இவ்வியாஸத்தை எழுதத் தொடங்கியது ஒரு திருத்தமேயாம்.

இந்த வுலகத்திலே சேதனம், அசேதனம் என்னும் இருவகைப் பொருள்களை நாங்கள் பார்க்கின்றோம். அவ்வப்பொருட்களைத் திருவருட் சக்தியானே பரிபாலிப்பவர் கடவுளேயாம். அறிவில் பொருட்கள் அறிவுடையவர்களுக்குத் துணையாக விளங்குகின்றன. உயிருடையவர்க்கங்கள் விசிட்டமானவைகள். எப்பகுதியினும் மநஸானுணரும் ஜீவன்களே அதிக மேம்பாடுடையன. அறிவுக்குச் சாதனமான உயிர்கள் எத்தின்மையினும் ஒத்தபன்பினவே. மனோசக்தியில் வேறுபாடு இவற்றிற்கு உண்டு. மனம் என்றால் பிறபல பொருட்களின் தொகுதியைப் பிரித்துணருதற்கும் சிந்தித்தல், இச்சித்தல், நிதானித்தல், வெறுத்தல், சம்மதித்தல் முதலியவற்றிற்கு இன்றியமையாத சக்தியாகும். எனவே, பொருட்கூறுபாடுகளைப் பகுத்து எல்லைபுரியும் சக்தியே மனம் என்பது பெறும். பூதசம்பந்தமான யாவும் தத்தம் நிலையைவிட்டுப் பிரியவும், சேரவும், சில பொருட்களைக் கவரவும், சில பொருட்களைக் கழிக்கவும் முக்கியமான இம் மனோசக்தி பிரபஞ்ச சிருஷ்டியின் அதிக முக்கியமானதென்பது ஆன்றோர் கருத்து.

ஆத்மா சார்ந்ததன் வண்ணமாவதற்கு மனோசக்தியே காரணம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவைகளில் மனமே முதன்மையான அமைப்பென்பதை விளக்க முதலிற் கூறப்பட்டது. அது ஒரு பளிங்குபோலச் சார்ந்த பன்னிறங்களையுங் காட்டும் பெற்றித்து. “கண்டது கலக்கும் பளிங்குபோன்ற துன் மனம்” என்ற ஆப்த மூர்த்தியாகிய சிவபரமாரியஸ்வாமிகள் திருவாக்குக் கவனிக்கத்தக்கது. மனமாகிய மதயானையை அறிவாகிய அங்குசத்தினாலே அடக்கி ஜீவாத்ம சுகாநந்தத்தைப் பெற யாவரும் பிரயாஸப்படுதல் வேண்டும்.

மனோரஞ்சனி என்பது மனஸான் விரும்பப்படத்தக்கது என்று அர்த்தமாகும். மனம், நித்திய அநித்திய வஸ்துக்களைப் பற்றுமியல்பினது. இவற்றுள் அநித்திய மானவைகளை இலகுவாக மனம் விரும்பும். இவை பிராணனுக்குத் துணையாகா. ஆகலின், நித்தியமான பொருட்களை விரும்பியடையச் செய்வதே மனித ஜந்மத்தேயாகிய எங்கள் கடமையாகும். நித்தியமான பொருட்கள் கடவுளும், ஆன்மாக்களும், பாசங்களுமாம். பாச சம்பந்தமான

வேடிக்கைப் பொருட்களையும் மனோரஞ்சிதமாக இப்பத்திர நங்கை ஒரோவிடத்துக் காட்டினும், பெரும்பான்மையாக நித்தியாநந்தப் பொருளையே விரும்பி விளக்கித் தர்ம போதனை புரிவாள் என்று நான் கருதுகின்றேன். நிற்க,

“மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்” என்றும், “பேய் மனத்தையண்டியே தாயிலாப்பிள்ளைபோற் பித்தாகவோ மனத்தை நான்: சாராதபடி யறிவி னிருவிகற் பாங்கமாஞ் சாசுவத நிஷ்டையருளாய்.” என்றும் மனோபாவ மிதமெவணி வுணர்ந்து உரவோருரைத்தனர்.

யார் விவேக முடையவராகவும், எப்பொழுதும் மனசை வசப்படுத்தினவராகவும், இருக்கிறாரோ, அவருடைய இந்திரியங்கள், தேர்ப்பாகனுடைய நல்ல குதிரைகளைப்போல் வசப்பட்டுள்ளன.

கட உபநிஷத்து 3, 6-ல்,

யஸ்து விஜ்ஞாநவாந் பவதி யுக்தேந மநஸாஸதா தஸ்யேந்திரியாணி வஸ்யாநி ஸதச்வா இவ ஸாரதே:—என்பது முனிவரர் வதந்தி.

கடவுளை யடைய விரும்பும் மனிதன் மனதைத் தன்வசப்படுத்த வேண்டியது ஆவஸ்யகம். இருளான பூமியை நாடுவோன் அங்ஙனம் செய்யவேண்டாம். சிலர் தங்களை மகாதாதாவாக எண்ணி மனம் போனவழிகளிலே இடம்பமாகச் செலவு செய்து வீண்பழிகளையும் பாவங்களையும் மூட்டையாகக் கட்டிச் சுமக்கின்றார்கள். சில வகுப்பார் “படிப்பது தேவாரம் இடிப்பது சிவாலயம்” என்றபடி நடக்கின்றார்கள்; சிலர் அந்தணரைக் கெடுத்தும், மங்கையரை யடுத்தும் விகார மனோலயராய்க் கெடுகின்றார்கள். சிலர் “முகம்பத்மதளாகாரம் வாசாசந்தன சோபிதம் ஹ்ருத் கர்த்தரீசமம்” என்றபடி நடித்துக் கள்ளக் கும்பிடு போட்டுக் காலத்தையும் மனோதர்மத்தையும் வியர்த்தமாக்குகின்றார்கள். இவைகளுக்காக இந்த அரியசக்தி யமைக்கப்பெற்றதன்று. உலகிற்காட்டும் வேஷங்களும், வேடிக்கைகளும் பிரயோசனமில்லை. திருவருள் முதல்வராகிய சிவஞான பாதாரவிந்த தியானமும், சிவ சின்னதாரண சம்பந்நர்கள் சிசுரூஷையும் உடையவர்

களாய் வாழ முன்னிற்பதே சிறந்த மனோசக்திவாய்ந்த எங்கள் கடமையாகும். இதனைச் சகோதரர்கள் கவனிப்பார்களாக.

இங்ஙனம்,
வ. மு. இரத்நேசுவ்ரையர்,
தமிழ்ப்பண்டிதர் & பிரசாரகர்,
விவேகாநந்தசபை,
மாத்தளை.

"பெற்றோரைப் பேணல்"

எனதருமைச் சகோதரர்களே!

நீர்சூழ்ந்த நிலவுலகத்திலே, அமரரும் விரும்பும் ஆறறிவுடைய அரிதினும் அரிதாகிய மானிட யாக்கையை யடைந்த யாமனைவரும் அருந்தவம் புரிந்து நம்மை வருந்தி யீன்ற தாய் தந்தையர்களைக் குறித்து ஆலோசிக்க வேண்டியது அத்தியாவசியமன்றோ?

நம்மைப் பரிவுடன் ஈன்றெடுத்த பெற்றோர்களின் பெருமையையும், அன்பின் பெருக்கையும், அன்னாரை வழிபடுமார்க்கத்தையும், அவ்வழிபாட்டா லடையத்தக்க அரும்பெரும் பலனையும், என் சிற்றறிவிற் கெட்டியவரை யொரு சிறிது விளக்கத் தொடங்குகின்றேன். குற்றங்க ணீக்கிக் குணங்கொண் டொழுகுவீர்களாக!

புண்ணிய தலங்களைத் தேடியும் புண்ணிய தீர்த்தங்களிலாடியும், கண்ணுதற் கடவுளை நாடியும், கண்டு களித்துக் கண்களில் நீரரும்பக் கசிந்துருகிப் பாடியும் பெரியோர்களைப் பேணியும், விசேட விரதங்களை விடாதனுட்டித்தும், அன்னசத்திரம், ஆலயத் திருப்பணி, தண்ணீர்ப்பந்தர் முதலிய தானதருமங்களைத் தக்கவாறு புரிந்தும், "காதலிருவர் கருத்தொரு மித்தாதரவுபட்டு" ப்பரிவுடன் பெற்றுவளர்த்த நமது அன்னை தந்தையர்களை யாருக்கிணையாகச் சொல்வோம்? பதினான்கு பாருக்கிணையாகச் சொல்லப்புகின் பத்து மாதத்திலும் ஒரு நாளுற்ற வருத்தத்திற்கு அவை யெள்ளளவு மீடாகாதே!

"ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கெவரே கைம்மா றியற்றிடவா
ரான்ற மதலை நூறுவய தளவு மடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத்துள்ளபொருள் முற்று மளித்து முறைமுறையே
யேன்ற வழிபாடியற்றிடினு மொருநாள் வளர்த்தற் கிணையாதே."

—என்ற தனிச்செய்யுளிதனை விளக்குகின்றது.)

அட்டமூர்த்தமாய் விளங்குஞ் சராசரப் பொருள்கள் யாவற்றினுள்ளும் பூவு மணமும்போல் பொருந்தி விளங்குவது எது? பாவும் பொருளும் போல் பரவி யொளிர்வது எது? எள்ளுமெண்ணெயும் போல் ஏகமாயிலங்குவது எது? நீரும் உப்பும் போல் நீக்கமின்றி நிறைந்து நிற்பது எது? கரும்பின் சுவையினு மினிய கருணையங் கடலாகிய பரசிவமே யன்றோ?

வீட்டை விட்டுக் காட்டையடைந்து, காய்கனி கிழங்குகளை யருந்தி, பஞ்சதீபாக்கினி மத்தியிலிருந்து பஞ்சேந்திரிய நிக்கிரகஞ் செய்து, இப்பரம்பொருளைக் காண விரும்புவார் சிலர். வாசியை யடக்கி மனோலயம் பெற்று மௌனவிரதம் பூண்டு யாருத்தியானத் திருப்பார் சிலர். மலை முழை புகுந்து வருத்தமுறுவார் சிலர். பாரெங்கு மோடிப் பற்பலவாறு பரிதபித் துழலா நிற்பர் பலர்.

அந்தோ! பாவம்! இத்தகைய செய்தற்கரிய செயலுடையோரனைவரும், வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கலைவோரையும், தீபத்தைக் கையிற்கொண்டு தீக்கலைவோரையும் போல், தியக்கமுற்றவர்களாகின்றார்களேயொழிய வேறல்ல. குருவுந்தெய்வமும் வீட்டிற் குடிகொண்டிருக்கக் கோயிலைச் சுற்றுவதிற் பலனென்னும்? "அன்னையுந் தந்தையு முன்னறி தெய்வம்" என்ற ஔவைப் பிராட்டியார் அமுதவாக்கையும்,

"கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லை மக்களி
னொண்மைய வாய பொருளில்லை யீன்றாளி
னென்ன கடவுளு மில்"

என்று விளம்பிநாகனார் விளம்பிய பாடலின் கருத்தையும் விரித்துரைக்க, அன்புட னீன்றுவளர்த்த அன்னையினு மரியதெய்வம் அவனியிலில்லை யென்பதைப் பெற்றோமன்றோ? "தாயிற்

சிறந்தொரு கோயிலுமில்லை" என்றும், "தாயினிற் சிறந்த தெய்வமிலையுயர்தந்தை, தன்னின், நேய நற்குருவுமில்லை" யென்றும் பெரியோர்கள் புகழ்ந்து பேசியிருத்தலைக் கேட்டும், தெய்வத்தைத் தேடித் திரிபவர் செய்கையென்னும்?

சகோதரர்களே! அன்பினுயர்ந்த அன்னையுந் தந்தையும் முறையே தெய்வமுங் குருவுமாகச் சிறப்பித்துக் கூறியதை விடுத்து அவர்களுக் குவமைதேடப் புகுவது தெய்வத்திற்குங் குருவுக்கும் உவமை தேடுவதை யொக்குமன்றோ? ஒப்புயர்வற்ற பெற்றோர்களின் பெருமையைப் பேசவல்லவர் யாவர்? அவர்களின் பெருமையே பெருமை! அருமையே யருமை!

இனி அப்பெற்றோர்களின் அன்பைக் குறித்து ஒரு சிறிது ஆராய்வாம்.

(௧) கருப்பமுற்ற காலமுதற் கருவுயிர்க்குங் காலம் வரையிற் பலவித நோய்களால் வருங் கஷ்டங் கணக்கிலடங்கா கருவுயிர்க்குங்கால் பெறும் வேதனையோ கடலினுமதிகம். அதைக் கணிக்கவு முடியா! சகிக்கவுமுடியா! ஈன்ற தளர்ச்சியாலடையுங் களைப்பை யெண்ணவுமொண்ணா! எழுதவுமொண்ணா! இத்தகைய பொறுத்தற்கரிய துன்பங்களை யன்னையானவள் பொறுத்தற்குக் காரணம் குழந்தையின் மீதுள்ள அன்பின் பெருக்கேயன்றோ?

"வயாவும் வருத்தமும் ஈன்றக்கா னோவுங்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாங்கு"

என்ற நாலடியுரையை விளக்குவாம். தாய்-தாயானவள், வயாவும்-கருப்பத்திலடைந்த வருத்தத்தையும், வருத்தமும் (கருவுயிர்க்குங் காலடைந்த) வருத்தத்தையும், ஈன்றக்கால் நோவும்-பெற்றபின் அடைந்த வருத்தத்தையும், கவான்-தன் றுடையின்மேலுள்ள மகன் கண்டு-புத்திரனைப் பார்த்து, மறந்தாங்கு-மறந்தாற்போல, என்றபடி வருத்தமெல்லாம் புத்திரனை மடியிற்கண்ட அக்கணத்தே மறந்துபெரு இன்புறுவாளென்றால், அன்னையினன்பு அனந்தனுக்கு மளவிடத்தக்கதோ? அன்று. "காக்கைக்குந் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்ற பழமொழிக்கிணங்க, தான் பெற்ற குழந்தை யங்கப்பழுதாயிருந்தாலும், அழகொழுகா திருந்தாலும் முன் வறுமையுற்றவன் செல்வத்தைப் பாதுகாப்பதுபோல் பாதுகாத்தும், படிப்பிலார்வமுடையவன் பாடத்தைப் பாராட்டுவதைப் போல் பாராட்டியும், வாசநீராட்டியும், வண்ணமை தீட்டியும், தொட்டிலிற் கிடத்திக் கண்ணுறங்கத் தாராட்டியும், ஓர் செய்யுடையவன் பயிரை வளர்ப்பதைப்போல் செல்வமாய் வளர்க்கும் நற்றாயினன்பை யியம்ப என்னொரு நாவிற்கடங்குமா? தான் பெற்ற குழவிக்குப் பிணியுற்றகாலைத் தனக் குற்றதைப்போல் வருந்தி, மருந்துண்டு, பத்தியங்கொண்டு, முலைப்பாலருத்திப் பத்திரமாய்ப் பாதுகாத்து வளர்க்கும் பக்ஷமுள்ள தாயின் அன்பைப் பகரவுங் கூடுமோ? மழலைச் சொல்லைக் கேட்டும், மடியில் வைத்து முத்தமிட்டும், அடையும் அருமையுள்ள அன்னையினன்பு அறைதற்கெளிதோ? இவ்வாறு பரிந்துவளர்த்த பாலனைப் பல்லோரும் நல்லோனென்று புகழ்ந்துகூறக் கேட்டதாய் பெற்றகாலத்தினுற்ற வருத்தத்தால் மெய்மறந்து சோகமுற்றதைப்போல், ஆனந்த சோகத்திலழுந்தி யகமகிழும் அன்பின் பெருக்கிற்கு* ஆர்கலியு மடங்கத்தக்க தென்றால் அம்மம்ம! யானோ அளவிடவல்லவன்.

இனி பிதாவினன்பைக் குறித்துச் சிறிது பேசப்புகுவாம். இளமைப் பருவத்திலேயே வித்தையைக் கற்பித்து சரீரசுகம், சன்மார்க்கம், பெரியோர்ப் பணிவு, முதலான நன்னெறிகளைக் காட்டி யறியாமையை யோட்டி யறிவூட்டி வளர்க்கும் தந்தையினன்பை யறியாதார் யாவர்? தரித்திரத்தால் தம்மக்கள் தளராதிருக்கும் வண்ணம், திரைகடலோடியேனும் திரவியந் தேடிவந்து சேமித்து வைத்து, அறுசுவை யுணவுகளை யருந்திக்களிக்கவும் உயர்தர ஆடைகளையுடுத்து மகிழவும், பொன்மணிப் பூண்களைப் பூண்டு களிக்கவும், காட்சிகள் பலவற்றைக் கண்டு சுகிக்கவும், கீதங்களநேகங் கேட்டுவக்கவும், வாசங்கள் பூசி மனம் பூரிக்கவும் வேண்டியகாலையில் அப்பொருளை யுவப்புடனுதவுந் தந்தையினன்பு உரையிலடங்குமோ? அடங்காது.

அன்னையுந் தந்தையும் அன்புடைமையில் ஒருவாறு ஒத்திருப்பினும், பிதாவைவிட மாதாவே பெருமை மிக்கவளாவாள். என்னை?

"அன்னை யானவ டாதைக்கு மதிக மன்னையும் பிதாவு; முன்னேயோர் தெய்வமென்ற மொழிக்கெவர் முதன்மை பூண்டார்;

---

* ஆர்கலி—சமுத்திரம்.

பின்னோராச் சிரமத்தேகிப் பிதாவையும் வணக்கங் கொள்ளுஞ்; சந்நியாசிகளுமந்தத் தாயரைத் தொழுவரன்றே'' என்ற திருவாக்கை நோக்க, ஔவையாரருளிய "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்ற நீதிமொழியில் முதனிலை யுற்றவளா யிருப்ப தொன்று. தன் குமாரன் தத்துவஞானத்தைப்பெற்று, சந்நியாச வாச்சிரமத்தை யடைந்தபோது அவனைத் தந்தையும் வணங்க நேரும். ஆனால்! அவ்வித வுபர்தர நிலைமையையுற்ற வுத்தமகுமாரனும், தன் தாயைக் கண்டளவில் தான் எழுந்து வணங்குவானே யொழிய, தாய் அவனை வணங்காள். பட்டினத்தடிகள் முதலிய பரமஞானிகளே யிதற்குத்தக்க சான்றாம். இத்தகைய எண்ணி லடங்காப் பெருமையும், பெருங் கருணையு முடைய மாதாபிதாக் களை வழிபடு நெறியைப்பற்றி யினி பேசப்புகுவாம்.

முன்னமே, தாய்தந்தையர்களை முறையே தெய்வமுங் குருவு மெனக் கொண்டோமன்றோ? ஆதலால் அத்தகையோரை வழி படுவதும் கடவுள் வழிபாடுங் குருபணிவிடையுமாகும். அன்னோ ரைப் புகழ்ந்தால் கடவுளைப் புகழ்ந்ததாகும்; தீயவார்த்தைகளால் திட்டினால் தெய்வத்தைத் திட்டியதாகும்; அன்னோருக்குப் பொய் யுரைத்தால் தெய்வத்துக்குப் பொய்யுரைத்ததாகும்: அவர்களுக் குச் சூது புரிந்தால் தெய்வத்தினிடம் சூது புரிந்ததாகும். கடவு ளிடம் எவ்விதவணக்கமும் பக்தியும் இரக்கமுங் காட்டுகின்றோமோ அவ்விதமே யன்னையிடமும் நமது எளிமையைக் காண்பிக்கவேண் டும். குருவினிடம் எவ்வாறு நமது கோபமுதலிய கீழ்க்குணங் களைக்காட்டாது பணிந்து நடக்கின்றோமோ, அவ்வாறே நமதுதந்தை யிடத்திலும் நடக்கவேண்டும். "தந்தைதாய் பணித்தல் செய்யுந் தவமலாற் றவம்வேறில்லை, மைந்தருக்கு..." என்ற வான்றோர் வாக்கால் மைந்தருக்கு மாதாபிதா பணிவிடையைத் தவிர மற்றைய மேலான தவம் வையகத்திலுண்டோ? அல்லது வானகத்தி லுண்டோ? எங்குமேயில்லை.

> "வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
> நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
> றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
> முந்தையோர் கண்ட முறை"

என்று மூதறிவாளர் மொழிந்தவண்ணம், அதிகாலையில் அம ளியினின்று மெழுந்து, அத்தியந்த பக்தியோடு அன்னை தந்தை

யர்களின் அடிகளைப் பணிந்து நடத்தலே மேலான தருமமும் மேலோர் கடனுமாம். "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" என்று நமது அருண்மொழித்தாயா ரருளியவாறே அன்னோர் கூறும் அரு மையுரைகளே வேதமந்திரமாகும். ஆகையால் அவர்கள் சொல் லும் ஒவ்வொரு வுரைகளையும், மிக்க பணிவோடும் அச்சத்தோ டும், அன்போடும், கேட்டு அவ்வாறே யொழுகவேண்டும்.

அவ்வாறின்றி சில மூடமக்கள்:- அவர்கள் கல்வி கற்கக் கலா சாலைக்குப் போவென்றால் கலவிகற்கக் கணிகையர் வீட்டுக்குச் செல்வதும், வாத்தியாருக்குக் கீழ்ப்படிந் துபசரியென்றால் கூத்தி யாருக்குக் கீழ்ப்படிந் துபசரிக்கிறதும், சாமவேதம் படியென்றால் காமவேதம் படிக்கிறதும், கடுதாசி விளையாடாதே யென்றால்* கெடு தாசியோடு விளையாடுவதும், பையலோ டிணங்காதே யென்றால் தையலோ டிணங்குவதுமாகித் திரிந்துழலுகிறார்கள்.

இன்னுஞ் சில சிற்றறிவுடையோர், தங்கள் பெற்றோர்கள் தேக அசதியைக் குறித்துக் காலைப் பிடியென்றால் கோலைப் பிடித்து மேலே யடிக்கிறதும், வயிறைப்பிடித் தழுத்து என்றால் மயிரைப் பிடித்தழுத்துகிறதும், எண்ணெய் தேய்த்துவிடு என் றால், கண்ணில் மண்ணை தேய்த்து விடுகிறதும், முதுகைச் சொறி யென்றால், முள்ளைக்கொண்டு கீறுகிறதுமாக, மாறாகச்செய்து மதி மயங்குகிறார்கள்.

இன்னுஞ் சில மதியீனமக்கள், பெரியோர்களுக்குப் பணிந்து நடவென்றால், வறியோர்களை வயிற்றிலடித்து நடக்கிறதும், சீவகா ருணியஞ் சிந்தையிற் கொள்ளென்றால், பாவகாரியங்களைப் பத்திர மாய்க் கொள்வதும், நோய்க்கிடங்கொடாம லிருவென்றால், தாய்க் கிடங்கொடாமல் தள்ளுகிறதும், புண்ணிய நெறியில் நடவென் றால், பொய் யொருகோடி புலையறு கோடி கொலையெழுகோடியா கக் கொண்டு நடக்கிறதுமாகக் கெட்டுழலுகிறார்கள். அந்தோ! பாவம்! இத்தகைய தீயமக்கள் மறுமையிற் றென்றிசைக் கடவுள் தங்களுக்குச் செய்யுங் கொடுமையை யறியார்போலும். பெற் றோர்களை யுதாசீனமாய்ப் பேசினோர் வாயில், காலதூதர்கள் காய்ச் சிய தரா நீரை வார்ப்பார்களே; வணங்காத தேகத்தை வாளாயுதத் தால் பிளப்பார்களே; தாய் தந்தைகளைப் பேணாத சண்டாளர் கள் மறுபிறப்பிலே பயித்தியத்தினாலும் நாக்குப் புற்றினாலும்

---

* கெடுதாசி—கெடுக்கின்ற தாசிகள்.

நேத்திர ரோகத்தினாலும் காலிற் புண்ணாலும், வருந்தி சதகோடி பிறப்பிலே தாக்குண் டுழலவேண்டுமே! பிதா மாதாக்களுக்கு, உத்தர கிரியைகள் முதலியவற்றைச் செய்யாத லோபிகள் தங்குலத்தோடு தரித்திரமுற்று தகாதவிடத்தில் இரந்துண்டு சாகநேருமே! பெற்றோர்கள் பசித்திருக்கப்புறம்பே வைத்துவிட்டு, தானும் மனைவியும் மக்களும் உண்டு களிக்கின்ற கண்டர்களுக்கு உய்யும் வழியுமுண்டோ! என்றவர்களுக் கிடுக்கண் புரிந்து காட்டிற்கேகி யெண்ணிலாத் தவங்கள் செய்யினும், அவர்களை மும்மூர்த்திகளுழித்து முடிவிலா நரகத்திற் செலுத்தி வருத்துவார்கள்.

“ஈன்ற தாயினை யீன்றெடுத் திருபுயத்தணைக்கு
மான்ற தந்தையை யரந்தைசெய் தகன்றுபோ யடவி
தோன்றி மாதவந் தொடங்கினோ ரிவர்களைத் தொல்லை
மூன்று தேவரு முனிவுற நிரயமுற் றிழிவார்.”

என்று உபதேச காண்டங் கூறுவது இங்கு சிந்திக்கத்தக்கது.

ஆகையால்; எனதன்புள்ள சகோதரர்களே! இவ்வித பெரும் பழிக்கும் அருநரகிற்கும் ஆளாகாது,

“தாயினிற் சிறந்த தெய்வமில்லை யுயர்தந்தை தன்னி
னேயநற் குருவுமில்லை யென்னின் மற்றிவர் கடாளிற்
றூய்மலர் தூவிநாளுந் தொழுதிடு மறிஞர்தாமே
யாய்கதிர் பரப்பும் பொன்னாட் டமரரா யினிதுவாழ்வார்.”

என்று கூர்ம புராணங் கூறியவாங்கு தினந்தோறு மதிகாலையினித்திரை நீங்கி, நமது அருமைத் தாய்தந்தையரை வலம்வந்து பத்திர புஷ்பங்களைக் கொண்டு அவர்கள் பாதத்திற் கர்ச்சித்து அவர்கள் கட்டளையின் வண்ணமே கீழ்ப்படிந் தொழுகலே யிம்மையிலெல்லாப் பேற்றையும்பெற்று இன்புற்றுவாழவும், மறுமையில் மோட்சவுலக வாட்சியுற்றுப் பேரின்ப சித்திப் பெருவாழ்வை யடையவும் செய்விக்கு மென்பதொரு தலையாம்.

“மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்.”

என்ற தெய்வப்புலவர் திருவாக்கிற் கிணங்க, இப்புதல்வனைப் பெற இவன் தாய் தந்தையர்கள் என்ன தவஞ் செய்தார்களோ என்று எல்லோரும் புகழ்ந்துகூற இணங்கிநடந்து இணையிலா இன்புற்று வாழ்வோமாக.

ஆர். சுவாமிநாத பிள்ளை,
உமையாள்புரம்.

மாணவர் பக்கம்.

“ கல்விச் செல்வமே செல்வம்.”

அன்பார்ந்த எனது அருமைச் சகோதரர்களே!

திருவுலாவிய இப் பூமியின்கண் உற்பவிக்கும் எண்ணிலாப் பிறவிகளில் சொல்லுதற்குங் கிடைத்தற்கும் அருமையாகிய இம்மானிடப் பிறவியைப் பெற்ற நாம் அத்யாவசியமாய் அடைய வேண்டியது யாதெனில் கல்விப்பொருளேயாம்.

கல்விப் பொருளை என் அத்யாவசிய மெனச் சொல்ல வேண்டும்?

செல்வப் பொருளை என் அத்யாவசியமெனச் சொல்லக்கூடாதாவெனில், இவ்விரு பொருள்களுக்குமுள்ள தாரதம்மியத்தை ஆராய்ந்து பார்க்கில், கல்விப் பொருளே நாம் மேம்பாடடைவதற்கு முதற்காரணமான கருவியாகச் சிறந்து விளங்குகிறதன்றி; நமக்கிரு நேத்திரமாகவுந் துலங்குகின்றது. அஃதெவ்வாறெனில்,—

“எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.
“ கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

என்ற வள்ளுவர் வாக்கால் நன்குணரலாம். இச்செய்யுள் வழக்கிருக்க உலக வழக்கைப் பற்றிச் சிறிது சொல்வாம். அதாவது, “கல்விக்கரசி சரஸ்வதி யென்பதும், பொருளுக்கரசி, இலக்குமி யென்பதும்” எனது சகோதரர் களாகிய தாங்களனைவர்களும் அறிந்திருப்பினும், இவ்விருவருக்கும் “பூமகள்” என்ற ஒரே பெயர் பொருந்தினும்,“சரஸ்வதியானவள் வெண்டாமரை மலரில் வசிக்கின்றாள், இலக்குமியானவள் செந்தாமரை மலரில் வசிக்கின்றாள்”இவர்கள் வசிக்கும் மலரின் பெயர் ஒன்றேயாயினும் அவைகள் நிறபேத மிருப்பதைப்போல முறை பேதமாயும் “மாமி, மருமகளாகினர்.” மாமியானவள்மருமகளால் உபசரிக்கப்படுவதைப்போல “பொருளுக்கரசியை கல்விக்கரசியினால் உபசரிக்கப் படுகிறது.”

அஃதாவது நமதிளம் பிராயத்தில் உபாத்தியாயரிடம் கல்வியைக் கற்றுத் தெளிந்து முற்றிய வுணர்ச்சியின் பேரில் பொருளைச் சம்பாதிக்கத்தக்க சத்தியேற் படுவதாலும். கல்வியே கல்லாதவர்கள் நுண்ணறிவின்றி மேன்மையாகிய ஜீவனத்துக்குப் போகாமல் கஷ்டமாகிய ஜீவனங்களைச் செய்து அதனால்வரும் சொற்ப வரும்படியைக் கொண்டு உஜ்ஜீவிக்கின்றதாலும் பொருட் செல்வத்தைச் சம்பாதிக்க ஆதாரமாகிய “கல்விச் செல்வமே” சிறந்ததாம்.

இஃதன்றியும், நமக்கு முகக்கண் ணிருந்தும் சூரியனுடைய பிரகாசமில்லா விடில் என்ன பிரயோசனம் அதைப்போல நமது அகக் கண்ணுக்கு கல்வியாகிய ஞானப் பிரகாசம் வேண்டுவ தவசியமாம். இதனையே உதாரணமாக கவிச்சக்கர வர்த்தியாகிய கம்பரும் "என்மனக் கூரிருட் கோர் வெயிலே நிலவேழு மேனி மின்னே" என சரஸ்வதி யந்தாதியினிலுங் கூறியுள்ளார்.

இம்மட்டோ! இன்னமும் நமது மூதோர் மொழிந்த மதுரச் சொற்களாகிய பழமொழி பற்பலவாம். அதனிற் சிற்சில வாக்கியங்களை இங்குணர்த்தலாம்.

முதன்மையாக "ஒழுக்கமே உயர்குலம்" என்ற வாக்கியத்தை எடுத்துக் கொண்டு அதன்படி எவ்வித நடையினால் ஒழுக்கமுதலிய நல்லறிவு உண்டாகுமென ஆராயப்புகின் அவைகாரணம் இவைகாரண மென்ற பெருஞ் சந்தேகம் உண்டாமெனக்கருதி (கல்வியே அதற்குக் காரணமென) "ஓதாதார்க்கில்லை உணர்வொடு வொழுக்கம்" என்ற வாக்கியத்தால் நமது சந்தேகத்தை நிவர்த்தி செய்தனர்.

இவ்விதமே "அறிவே சிவ மெனும்" பழமொழிக் கிணங்க "கற்கச் சுரக்கும் பேரறிவு" என்றதனாலும். "சான்றோ ரென்கை யீன்றோர்க் கழகு" என்ற வாக்குக் கிணங்க, "நூற்பலகல், கற்றுணர்ந் தடங்கல்" என்றதனாலும், பற்பல நூற்களை ஆராயுங்கால் சந்தேகந் தோன்றில் அதனை நிவர்த்தி செய்து கொள்ள "கேள்வி முயல்" என்றதனாலும். தெளிவாய் விளங்கும்படி நமது முன்னோர் சொன்ன முதுரைகளின் மதுரசப் பிரவாகமானது உலக மெங்கணும் பரவித் ததும்பி வடிகின்றது.

ஆகையால்! நாம் அடைய வேண்டிய கல்விச் செல்வமாகிய உண்மைப் பொருளை அடையாவிடில், இல்லற தருமத்திற்குரிய நீதிமார்க்கங்களையும் பொருளைச்சம்பாதிக்கும் யுக்தி, புத்தி, முதலிய மேன்மைகளையும், அறம், பொருள், இன்பம், வீடு, என்ற புருஷார்த்தங்களையும், சரியை, கிரியை, யோகம், ஞானம், என்ற படிகளையும்,கலைக்யானங்களின் சூட்சுமங்களையும், வேத வேதாந்தங்களின் கருத்துக்களையும், சுருதி, ஸ்மிருதிகளின் இயல்புகளையும், அன்னியர் புரியும் சூழ்ச்சிகளையும், இகபர சுகங்களின் மார்க்கங்களையும், கண்டுகொள்ள வேறு விதங்களால் முடியாதனவேயாம்.

இன்னமும், கள்வர்களாலும், துஷ்டர்களாலும், தூர்ச்செய்கைகளினாலும், அக்கினியினாலும், கவர்ந்துகொள்ள முடியாத கல்விச்செல்வமாகிய பொருளையே எனது சகோதரர்களாகிய ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இருதய கமலமாகிய பெட்டகத்திற் சேகரித்து வைப்பதே உங்கள் கடமையும்; எனது கோரிக்கையுமாம்.

சுபம்.

ஸ்திரீகள் பக்கம்.

இதுவென்ன சபதம்?

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை."

முத்தினங் கொழிக்குங் கத்துகடல் சூழ்ந்த இத்தலத்தின் கண் சுந்தரமாக வந்தவதரித்த உத்தமிகளாகிய எனது சகோதரிகளே!

அழகாபுரியும் அமராபதியும் நிகரல்லவென நடுநாயகமாய்ச் சகல வளங்களும் பொருந்திச் சிறப்புற்றோங்கக் காரைக் குடியாகக் கொண்டுவிளங்கும், ஊர்த்தவபுர மெனும் பட்டணத்தை மனு நீதியாக அரசுபுரிந்த சோமசேகரனெனும் வேந்தன் நெடுங்காலம் புத்திரனில்லாப் பெருங்குறையால் அருந்தவம் புரிந்து ஈசனருளால் தேசம் புகழும்படியான அழகமைந்த ஓர் மைந்தனைப்பெற்றான். அவ்வாறே அவன் முதன் மந்திரிக்கும் ஓர் மைந்தன் பிறந்தான்.

இவ்விரு மைந்தர்களில் இராஜகுமாரனுக்கு அமுதகிரணனென்றும் மந்திரிகுமாரனுக்கு பிரபாகரனென்றும் பெயரிட்டு மிகவும் அருமை பெருமையாக வளர்க்க நாளடைவில் வளர்பிறை யென்ன வளர்ந்து சகல வேதாகம கலைக்கியானங்களையுங் கற்று எவ்வன பருவத்தை யடைந்து இணைபிரியாச் சிநேகிதர்களாய் இருக்கையில் ஓர் நாள் மாலைநேரத்தில் அந்நகர்க்கு வடபாரிசத்திலிருந்த உத்யான வனத்தில் உல்லாசமா யுலாவிக்கொண்டிருந்தனர்.

அந்த உத்யான வனத்தின் பக்கத்தில் அவ்வூரில் வசிக்கும் பெண்கள் தண்ணீர்க்குவருந் தாமரைத்தடாக மொன்றிருந்தது. அத்தடாகத்தில் அழகெலாந்திரண்டு ஒருருவடைந்த சுந்தரவதியாகிய 13, 14 வயதுள்ள மனோரஞ்சனி யெனும் பெயருடைய சிறிய பெண் தன் குடத்தில் ஜலம் மொண்டுகொண்டிருந்தாள். அச்சமயத்தில் மற்றொரு பெண் தண்ணீர்க்கு வந்தாள் அவள் தேகமெங்கும் பிரம்பினால் அடிபட்டுத் தடித்ததில் மஞ்சளும் நெல்லும் அரைத்துப் பூசிக்கொண்டிருந்தாள். சில இடங்களில் இரத்தமானது ததும்பி உறைந்திருந்தது. அதனைக்கண்ட மனோரஞ்சனியானவள்,—

இஃதென்ன? அக்கா உன் தேகமெங்கும் கொழுக்கட்டை மாதிரி உப்பியிருக்கிறதே! இவ்விதம் அடித்தது யார்?

என் பிரியமுள்ள தங்கையே! நான் என்னென்று சொல்வேன்! நாயகன் செய்த தீவினையேயன்றி வேறல்ல. ஏதோ நான் செய்த பாக்கியம் இக் கொடியனை மணந்து கஷ்டப்படுவதுடன் அடியும்பட வேண்டியிருக்கிறது.

என்ன! நீ செய்த பாக்கியமா? குற்றமெல்லாம் உன்மீது வைத்துக் கொண்டு மணாளனை மதியாது, நின் வாய்க்கு வந்தபடி ஏதேதோ பேசுகின்றாயே. அது தெய்வசம்மதமல்ல. நீ குற்றஞ்செய்யாக் குணவதியாயிருக்கில் உன்னை உன் கணவர் எவ்வித மேன்மையில் வைத்திருப்பார் தெரியுமா? அவ்வாறின்றி, நீ செய்த குற்றத்திற்காக "முரட்டுக் குதிரைக்கு முள்ளுலகான்" என்ற பழமொழிக் கிணங்க அடித்திருக்கிறார்.

ஆம், அது வாஸ்தவந்தான். நீ இன்னமுஞ் சிறு பெண். உலக அனுபவமும் புருஷர்களின் குணாகுணமும் உனக்கெவ்வாறு தெரியப்போகிறது? ஆகையால் இவ்விதஞ் சொன்னாய். நீ புத்தியறிந்து மணம்புரிந்த பின் உன் கணவன் கையால் ஒரு அடியாவது படமாட்டாயே அப்படிப் படில் நீ எனக்கு அடிமையாகவேண்டும். என்ன சொல்கிறாய்?

"உதி பெருத்தால் உத்திரத்துக் குதவுமா" என்ற பழமொழிப்படி நீ ஒரு பெண்ணென்று பூமிக்குப் பாரமாய்ப் பிறந்தும் வஞ்சிக்கொடி போல் வளர்ந்தும், மிஞ்சிய வயதையடைந்தும், எட்டிப்பழமானது மேற்பார்வைக் கழகாயும் உள்ளே கொடியதாயும் இருப்பதைப்போல; நீ, ரூபவதியாயிருந்தும் கொஞ்சமாயினும் விவேகமும் நாணமும் நின் கணவனின் மனமானது சந்தோஷமடையும்படி இனிமையாக நடக்கும் நடத்தையும் இல்லாமல் "வெட்கங் கெட்டு வெளிப்பட்ட மூளிக்கு முக்காடேதுக்கு" என்பதைப்போல நான் செய்த குற்றத்திற்காக எனது கணவன் அடித்ததை உத்தமிகள் யாவருங் கண்டு காரித்துப்புங்களென்று குடமெடுத்துத் தண்ணீர்க்கும் வந்தாயே! உன்னைப்போல் மூடஜெனமென்று என்னையும் நினைத்தாயா? நான் அப்பேற்பட்டவள் அல்ல. எனக்கு கல்யாணம் நடந்தபின் எனது புருஷரின் கையால் ஒரு அடிபட்டாலும் உனக்கு நான் அடிமையாவேன். அப்படி நான் அடிபடாமலிருந்தால்; நீ எனக்கு அடிமையாகவேண்டும் இது சத்தியம்.

இவ்விதம் இரண்டு பெண்களும் பேசிய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த அமுதகிரணன் ஆச்சரியமடைந்து; எவ்விதத்திலும் நானே இந்தக் கன்னிகையை கல்யாணஞ்செய்து இவளுடைய சபதத்தை நிறைவேற்றுகிறதைப் பார்க்கவேண்டுமென நினைத்து மந்திரிகுமாரனை அக்கன்னிகையின் பின்னாகச்சென்று அவளின் தாய்தந்தையின் பெயர் முதலியதை விசாரித்து வரும்படி செய்து, அதனை தனது தகப்பனாகிய சோமசேகரனுக்குத் தெரிவித்து அனுமதியின்பேரில் அக்கன்னிகைக்கும் அமுதகிரணனுக்கும் அதிக ஆடம்பரமாகக் கல்யாணம் நடந்தது.

அதுமுதல் மனோரஞ்சனி யானவள் தன் கணவனுக்குச் செய்யும் பணிவிடைகளில் யாதொரு சோர்வில்லாமலும் காலபேத சமயங்களுக்கேற்ற சுகாதாரங்களையும் கணவன் நினைவை குறிப்பாலறிந்தும் பாங்கியர்களுதவியைக் கருதாது, இராப்பகல் நித்திரையின்றி பதிபக்தியே தனக்கு

ஆபரணமென நினைத்து தன்மீது யாதொரு குற்றமும் கணவனுக்கு கோபமும் வாராமலும், சில சமயங்களில் அமுதகிரணனே அவள் செய்யும் பணிவிடைகளைக்கண்டு அதிசயமும் ஆனந்தமும் அடையும்படி நடந்துவந்தாள்.

அதனால் அமுதகிரணனின் மனமானது மனோரஞ்சனியை ஒருஅடியாவது அடிக்கவேண்டுமெனத் தூண்டியும். அந்த எண்ணத்திற்கும் அவனது கைகளுக்கும் சக்தியில்லாமற் போனதால் ஒருவித யோசனை செய்து தன் மனைவியை அழைத்து பெண்ணே! நானும், எனது மந்திரியுங் காசியாத்திரை போகிறோம்; போனால் இவடம் வர ஒரு வருடஞ் செல்லும் அதற்குள், நீ "உன்னைப்போல ஒரு பெண்ணும், என்னைப்போல ஒரு ஆணும்" சம்பாதித்து வைக்கவேண்டுமெனச் சொல்லி வேறு பேச்சொன்றும் பேசாமல் காசிக்குச் சென்றான்.

அதன்பின் மனோரஞ்சனி பலவிதத்திலும் யோசித்து ஓர்வித முடிவு செய்து; அதன்படி நடப்பதே மிகவுஞ் சமர்த்தென நினைத்து பாங்கியர்களில் தன் மனதுக்கிசைந்த கோமளாங்கியிடம் சில ரகசிய வார்த்தைகளைச் சொல்லி, தான் ஆண்பிள்ளையைப்போல் வேடம் பூண்டு அழகிய குதிரையின் மீதேறிக்கொண்டு காசிக்குச் செல்லும் வழியில் ஓர் நகரத்தைக்கண்டு அந்நகரைப் பரிபாலனஞ் செய்துவரும் ஜெயசீலனென்னும் அரசனின் புத்திரியாகிய பத்மாசனி யெனும் பெண்ணரசியைத் தனது சாமர்த்தியத்தினால் கல்யாணஞ் செய்து அவளைத் தான் காசிக்குப் போய்வரும் வரை அந்நகரத்தில் இருக்கும்படி செய்து தான்மட்டுங் காசிக்ஷேத்திரஞ் சென்று மாறுவேடங்கொண்டு தன் கணவனை யடைந்து கெற்பக்குறி கண்டவுடன் அன்னவன் கணையாழியை வாங்கிக்கொண்டு முன்போல ஆணுடைதரித்து திரும்பி தான் கல்யாணஞ் செய்துவிட்டுச் சென்ற பெண்மணியையும் அழைத்துக்கொண்டு தன்னுடைய நகரத்திற்கு வந்துசேர்ந்தாள்.

அப்பால்! தான் கல்யாணஞ்செய்து கொண்டுவந்த பெண்ணிடம் தனது சங்கதிகளைச் சொல்லி அவளைச் சந்தோஷமடையச்செய்து இருவருஞ் சகோதர ஒற்றுமையாய்ச் சுகமாக இருக்கையில் பத்துமாதமுஞ் சென்று மனோரஞ்சனி யோர் பாலனைப் பெற்றாள். அக்குழந்தை அமுதகிரணனைப்போலவே விளங்கினதால் அவ்விரு பெண்களும் அதிக சந்தோஷமடைந்து சபதத்தில் நாமே ஜெயித்தோமென பேசிக்கொண்டு தங்கள் அருமைப் புத்திரனைப் பெருமையாக வளர்த்துவந்தனர்.

இவ்விதஞ் சிலநாள் சென்றபின் அமுதகிரணன் காசியைவிட்டுப் புறப்பட்டு வருவதாய்த்தெரிவித்தான். அதைக்கேட்ட மனோரஞ்சனி தான் கல்யாணஞ்செய்து கொண்டுவந்த பெண்மணியையும் தன் புத்திரனையும் மறைவில் வைத்துத் தான் மட்டும் கணவன் வருவதை யெதிர்பார்த்திருக்கையில் அமுதகிரணன் அங்கு வரவே பரவசமாய் எதிர்சென்று கை

கொடுத்து அழைத்துக்கொண்டு வந்துஸ்தானஞ் செய்வித்து போசனம் படைத்துச் சாப்பிட்டபின் தாம்பூல மென்றுகொண் டிருக்கையில் பெண்ணே நான், சம்பாதித்து வைக்கும்படி சொல்லிச் சென்ற இரண்டையும் சம்பாதித்து வைத்தாயா என்ன?

சுவாமி தாங்கள் சம்பாதித்து வைக்கும்படி சொல்லிச் சென்றதென்ன அதனை நான் மறந்திருந்ததற்காக என் குற்றத்தை மன்னிக்கவேண்டும். இவ்வார்த்தையைக் கேட்ட அமுதகிரணனுக்கு அதிக கோபம் உண்டாயிற்று. அதனால் அவனுடைய கண்கள் கோவைப்பழம்போற் சிவந்தது, மீசைகள் படபடவெனத் துடித்தது, அவன் வலதுகையானது மனோரஞ்சனியை அடிப்பதற்காக விரைவுடன் உயர வெழுந்தது, அந்தச்சமயத்தில் அவன் முன்பாக வைக்கப்பெற்றிருந்த நிலைக்கண்ணாடியில் மனோரஞ்சனியைப்போல வேறொரு பெண்ணும் தன்னைப்போல ஓர் குழந்தையின் உருவமுங் காணப்பெற்றன.

அதனைக் கண்டவுடன் "நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" என்ற வாய்மைக்கிணங்க அமுதகிரணனின் கோபம் நீங்கி முகமலர்ந்து பரவசனாய் மனோரஞ்சனியால் கல்யாணஞ் செய்து வரப்பெற்ற பத்மாசனியையும் தன் புத்திரனையுங் கண்டு மகிழ்ந்து மனோரஞ்சனியே சபதத்தில் ஜெயமடைந்ததற்காகப் புகழ்ந்து முன் தாமரைத்தடாகத்தில் மனோரஞ்சனியுடன் சபதமிட்ட பெண்ணாகிய பூங்காவனத்தை அவளின் ஆயுர்பரியந்தம் நமது மனோரஞ்சனிக்கு அடிமைத் தொழில் செய்யும்படியாகச் செய்து அமுதகிரணன் மனோரஞ்சனியுடனும் பத்மாசனியுடனும் சகல சம்பிரமத்துடன் சந்தோஷமாக வாழ்ந்துவந்தான்.

அவ்வாறே நமது மனோரஞ்சனி யெனும் மாதாந்த சஞ்சிகையானது சற்சங்கவாசனை பரிமளிக்கவும், தக்க விஷயங்களை ஆபரணமாகப் பூண்டு நீண்டநாள் வரையிலும் உங்கள் திருக்கரங்களில் குழந்தையைப்போல் விளையாடி அதன் இளஞ்சிரிப்புடன் கூடிய மழலைச் சொற்களை உங்கள் இரு செவிகளால் கேட்டு ஆனந்தமடையும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

எனது சகோதரிகளாகிய ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் புருடரையே தெய்வமென நினைத்து அவர் சொற்படி நடந்து கற்பெனும் ஆபரணம் பூட்டி நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, எனும் முட்களை வேலியாக நாட்டி சொல்லவொண்ணாப் பெருமைவாய்ந்த இல்லறத்தில் நல்லோரெனப் பல்லோராலும் புகழும்படி எல்லையில்லா ஆனந்தக்கடலில் மூழ்கி இன்பமெய்த வாழ்ந்திருப்பதே உங்கள் கடமையும் எனது கோரிக்கையுமாம். சுபம்!

எம். பாலுசாமி நாயுடு.
மதுரை.

சுகாங்கி.

ஓர் துப்பறியும் நாவல்.

முதலாவதத்யாயம்.

உலகின்கண் பூமகள் நுதலின் திலகம் போலவும், பூமகளும் பூமகளும் பொருந்தி வாழவும், விண்ணுலகும், மண்ணுலகும், புகழ்ந்து பேசவும், மலை, நதி, நிலம், குடிவள முதலிய சகல சிறப்பினுமிகுந்து மாட மாளிகையுடன், பிரகாசிக்கின்ற "இரத்தினபுரி" இராஜ பாட்டையின் மார்க்கமாய், இரவு 12-மணிக்குமேல் 16-வயதுள்ள "புவன்" கரத்திற் பொற்பிரம்புடன் ஒருவரைத்தேடிப் போய்க்கொண்டிருந்தான்.

அவ்வழியிலோர் பெண்மணியைக்கண்ணுற்றுச் சிறிது சந்தேகித்தானாயினும்; பின் ஐயந்தெளிந்து, அதி வேகமாய் நடந்து அந்நகர்க்கு வட பாரிசத்தில் தேன்கனி மிகுந்து சோபிதமாகத்தோன்றுஞ் சோலையைச் சேர்ந்தனன். அச்சோலையின் தென்பால் சந்தன விருக்ஷத்தில் இரண்டு பரிகளைப் பிணித்து சந்திரவதன "சுந்தரி" யொருத்தி உலவிக்கொண்டிருந்தாள். அப்பெண்மணியானவள், அங்கு வந்த "புவனை"க்கண்டு வினவுகின்றாள்.

ஏ! சுந்தரவதனா உனது இருப்பிடமெது?

நான் வசிப்பது சிருங்கார வனம்.

ஏது அதி சீக்கிரமாய் வந்தாய் போலும்.

இல்லை. எனது காவல் கடக்கத் தாமதமாயிற்று.

ஆ! எனதன்பீர்!! இப்பரிகளில் உமக்கியைந்ததின்மீ தேறிக்கொள்ளும்.

அன்னவரெங்கிருக்கின்றார்?

பூஞ்சோலையை நாடிச் சென்றார்.

எப்பொழுது?

சற்றுமுன்; நாமும் அங்கு செல்லலாம்.

சரி; இச்செம்புரவியின்மீ தேறிக்கொள்ளுகிறேன்.

அதனை கேட்பானேன்.

இவ்வசனங்களை யுணர்ந்த "புவன்" பரியேறக்கண்ட ரமணியானவள், இனி நமது கோரிக்கை யாதொரு விக்கினமுமின்றி நிறைவேறுமெனச் சந்தோஷித்தவளாய், மற்றொரு வெண் புரவியின்மீ தேறிக்கொண்டனள். உடனே இரண்டஸ்வங்களும், வாயு வேகத்தினுமிஞ்சி, மனோ வேகமாய்ச் சென்றன. அம்மார்க்கமாய்ச் சிறிது தூரஞ் சென்றபின் காடாரம்பமாயிற்று. அங்கு கற்குன்றுகள், மேடுபள்ளங்களாயும் இரு பாரிசமும், வேலியைப்போன்ற, செடி, கொடிகளடர்ந்த வழியாயும், நீண்டு ஒவ்வொரு பரிகளாக நிதானமாய் நடத்தவேண்டியதாயுமிருந்தன.

அவ்வழியின் வாயிலையடுத்த "புவன்" சந்தேகித்து, அப்பெண்மணியை நோக்கினான்; ஆனால் அன்னவள் "அகக்கமலமானது வஞ்சகமெனும் சந்திரனைக் கண்டு குவிந்தும், முகக்கமலமானது யாதொரு களங்கமன்னியில், கபட சாகஸ்யமெனுங் கதிரைக்கண்டு அலர்ந்த செந்தாமரைபோல் சொலித்திருந்தது." அதனைக் கண்ணுற்ற "புவன்" சிறிதையநீங்கினும் அன்னவளின் கருத்தை யுணரச் சக்தியற்றவனாய் அம்மாதரசியின் பரியை முன்னதாய் நடத்தும்படி ஆக்யாபித்தான்.

அஃதுணர்ந்த ஸ்திரீ ரத்தினமானவள் நமது பரியை முன்னதாய் நடத்துவோமாயின் கோரிக்கையாகிய காரியத்திற்கு விக்கினமாமென நினைந்தவளாய் இதனைச் சொல்வதாயினள். ஆகா! எனதன்பீர்!! தாமெதற்காகச் சந்தேகிக்கவேண்டும்? சந்தேகமின்றி உமது பரியை முன்னதாய் நடத்தும், என்றுரைத்ததை யுணர்ந்த அப்புருஷ சிம்மமானவன், தனது நேசனைக் காணவேண்டுமென்ற அவாவென்னும் பாகனானவன், மனதாகிய பரியைத்தூண்ட அப்பூபனும் தனது பரியைத் தூண்டினன். அதனைக்கண்ட பூங்கொடியாகிய பூவையுஞ் சந்தோஷித்தவளாய்த் தனது பரியைப் பின்னதாய் நடத்திச் சிறிதுதூரஞ் சென்றுகொண்டிருந்தாள்.

தொடரும்.

PRINTED AT THE G. P. WORKS, KARAIKUDI.

உ

பரமபதி துணை.

மனோரஞ்சனி.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."— திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 1
பிங்கள-௵ ஆவணி-௴ 31௳
1917-ம்௵ செப்டம்பர்௴ 15௳
பகுதி 2.

கடவுள் வணக்கம்.

ஆதியந்த மாய்நடுவாய் முடிவாய் வேதத்
தமர்பொருளா யுயற்றிருவா யயனாய் மாலாய்ப்
பாதிமதி யணிந்தருத்ர மயமா யெங்கும்
பரவு மகேஸ் பரவடிவாய்ப் பரமஞான
சோதிசதா சிவவொளியாய் வெளியாய்ஸ் தூல
சூக்மகா ரணமுடன்மூச் சுடராய்த் தோன்றும்
நீதியாய் நிரஞ்சனநிட் களமா யென்றும்
நின்றொளிரும் பரம்பொருளைச் சிந்தை செய்வாம்.

ஓமெனு மூலா தாரமொன் பதினு
முதித்திடும் வல்லபை சத்தி
உயர்ந்திடுஞ் சுவாதிஷ் டானமே பிரம
னோங்கொளி நாமகள் சத்தி
வாமமா மணிபூ ரகத்தினில் விஷ்ணு
மருவளர் திருவெனுஞ் சத்தி
வளரநா கதத்தி லுருத்திர னுருத்திரி
மயேசுரன் மயேசுரி விசுத்தி
தாமமாக் கினையிற் சிவன்மனோ மணியுந்
தற்பரன் தற்பரி யுடனே
தயவதாய்த் துவாத சாந்தமே முதலாய்த்
தமியனுக் கிதுவெலாந் தெரிந்த
தாமென வருளு மம்பலத் தரசே
யமரர்கள் தேடியுங் காணா
அதிசய வடிவே சதுர்மறைப் பொருளே
ஐயனே ஞான தேசிகனே.

மனோரஞ்சனி.

பிங்கள-ஸு ஆவணி-மீ 31௳

உறவினர் யாவர்?

பேரறிவுடையீர்!

இவ்வுலகத்திலுள்ள மானிடர்கள் யாவரும் சிற்றறிவும், சிறுதொழிலுமுடையவர்களென்பது நமது நேயர்கள் யாவரும் நன்கு அறிந்தவிஷயமே! ஆயினும், இங்கே, துணையினாலே ஒருவர் ஒரு தொழிலைச் செய்யத்தொடங்கினால் அது இனிது முடிவு பெறுமென்பதும் அத்துணை மனமாசகன்று உறவு பாராட்டும் உத்தமப் பண்புடையதாயின் விசேஷ மதிப்புடையதாகும் என்பதும் பிறவும் எடுத்துச் சுருக்கமாக எழுதப்பெறுகின்றன.

உறவாவது—அன்புடன் கூடிய சிநேகம் என்று சொல்லப்படும். அன்பே நற்செயலுக்கும் தீச்செயலுக்கும் காரணமாயது. சிநேகமாவது மனதாலும் செயலாலும் ஒத்தபண்பினராதல். உற்ற இடத்து உறவை மறந்து மற்றையிடத்து மகா இச்சகம் பேசுவது உறவுக்கு அழகாகாது. மனிதர்களுக்குத் தேகத்தோடு வாழுங் காலத்துக் கூடி மிகுமன்புகாட்டு மனிதர்களைச் சுற்றத்தார் உறவினர் என இருபகுதியாகப் பிரிக்கலாம். சுற்றத்தாராவார் தேகத் தொடர்புடைய தந்தை தாயார்களின் வழிவந்தவர்களே! இவர்கள் ஆத்மாவுக்குத் தொடர்புடையாராதலில்லை. ஆத்மாவாற் றொடர்புடையர். சுற்றியிருக்கும் பெற்றியரையும் சுற்றத்தவரெனக் கூறுதல் சாலப்பொருந்தும். சுற்றத்தவர்களும், சகோதரர்களும் ஒருவரை யொருவர் நேசித்து நடந்தால், அறநிலைவளரும். ஒற்றுமையின்றி வன்கண்மை பூண்டால் யாவரும் பகையாவார்கள். பாசத்தார் என்ற பெயரை வகித்த தற்கால மாந்தருட் பலர் பாசம் என்பதற்குரிய அன்பு என்னும் அர்த்தத்தை நிலையாக்காது கட்டு என்று ஒரு பொருள் காட்டி நடக்கின்றார்கள்.

சகோதரமுறை யுடையவர்களும் அப்படியே சண்டை சச்
சரவுகளைச் சதாதியானமாக நடக்கின்றார்கள். இச்சன சமூகத்தில்
பெரும்பாலும் அழுக்காறு, அவா. வெகுளி, இன்னாச் சொல்லல்
முதலிய குற்றங்கள் நாளுக்குநாள் வளர்பிறைபோல் வளர்ந்து வரு
கின்றன. முன்காலத்து முதன்மையான அரசர்களுக்கும் இக்
கெட்ட குணங்களிருந்து பட்ட கஷ்டங்கள் பல. மற்றைய சாதா
ரண ஜனங்களும் சுற்ற ஒற்றுமையில் பின்னிற்பவர்களே! எத்
தனை வருஷஞ் சென்றாலும் இரக்கமில்லாது "கூலிக்கு மாரடிக்
குங் கொள்கைபோல" நம்மவர்கள் திருந்தாது நடப்பரேல் ஒருக்
காலும் முதன்மையுடைய மாட்டார்களென்று துணிவாகப் புன்
முறையுஞ் சொல்லலாம். ஜாதிச்சண்டை, மதச்சண்டைகளும்
அன்பின்மையால் விருத்தியடையும், சுற்றத்தவர்கள் ஒருவருக்
கொருவர் பகையாகிக் "கீரியும் பாம்புமென்ன" நடக்கச்செய்வது
யாது? •அன்னிய ஜனங்கள் எவ்வளவு கேடுகளை ஒருவர் செய்தா
லும் உறவு முறை பிரளாரன்றோ! சுற்றம் என்று சூழ்ந்து ஒரு
வனைச் சுற்றிப் பொருளையும்பற்றி வருத்துவது கலியின் பெரு
வலியேபோலும்!

தன் சுற்றத்தவன் மதிப்பும், கலையும் குணமும் பெற்று
வாழ்ந்தால் எவ்வளவு கௌரவமென்று நினைக்காத பாதகர்கள் பலர்
அறிவின்மையால் பற்பல இடர்களைச் செய்தும் பணச்செலவுக்
குரிய பல வியாச்சியங்களைத் தொடங்கியும் காலத்தை வீணிற்
செலவுசெய்து துரோகிகளாகின்றார்கள். தர்மச் செயல்களைச்
செய்யாவிட்டாலும்; பிறரைக் கெடுக்காதிருப்பது புண்ணிய மென்
பது கண்ணுக்கும் மனதுக்கும் புலப்படாமை ஒரு அதிசயமே!

நமது ஆன்றோர்கள் பண்டைக்காலத்திலே குடும்ப வியவ
காரங்களைச் சாதுரியமாக நடாத்தியிருப்பது சரித்திரங்களினாலே
தெரிகின்றது. பஞ்சாயத்துக்கள் மூலமாய் எவ்வளவு பெரிய
வழக்குகளும் தீர்க்கப்பட்டன. இக்காலத்தில் பணவிரயத்திற்கு
இவர்கள் பாடுபடுகிறார்களேயன்றி தங்கள் குடும்பமாவது கிராம
மாவது தேசமாவது பாஷையாவது மேற்பட பிரயாசைப்படுகின்
றார்களா? இல்லை என்றே சொல்லலாம். ஆனாலும் சில கனவான்
கள் அவதரித்துப் பொதுத் தருமத்தையும், உறவு முறையையும்
நன்கு காட்டினார்கள். ஸ்ரீமாந்-கோக்கலேயவர்கள், ஸ்ரீமத்

ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் நமது பாரதமாதாவிற்கு அரிய தோராபரணமாக விளங்கினார்கள். அழுக்கற்ற மனமுண்மையால் இவர்கள் சூக்ஷ்மதிரேகத்துடன் இன்னும்நிலவுகின்றனர். தேகத்தோடு வாழும் நாட்களில் ஒருவரையொருவர் அடுத்துக் கேடு புரிய நினையாது உறவு பாராட்டி நடத்தலே சீரியோர் செய்கை. பூரியோர் தீமையையே செய்பவர். உறவினர் இலக்ஷணத்தை ஔவை பிராட்டியாரும்:—

அற்றகுளத்தி லறுநீர்ப் பறவைபோ
லுற்றுழித் தீர்வா ருறவல்லர்— அக்குளத்தில்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
யொட்டி யுறுவா ருறவு.

என்று கூறியிருக்கின்றார். இதனாலேயே பிரியாது கஷ்டகாலத்தும், மற்றைச் சுககாலத்தும் நன்மை நாடிகள் உறவினராவரென்று காட்டப்பெருகின்றது.

இனி ஆத்ம உறவினர் யாவரென்னில் பரமாத்மா பிர்மம் என்று மேலோர் திருவாய்மலர்ந்தருளிய கடவுளேயாம். காருண்ணியமுடைய பரிசுத்தரைக் கடவுளென்று கொள்ளும் நமது தேசத்தவர் மேலே சொன்ன தீச்செயலையும், சிந்தையையும் விட்டுக் கடவுளை வழிபடவேண்டும். "படிப்பது தேவாரம் இடிப்பது சிவாலயம் என்றிருந்தால் உறவாவார் யாவர்? ஆத்மநாதரான உமாபதியை (ஈஸ்வரனை) அடைந்து சுகித்துவாழ விரும்பும் சகலரும் "கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த வொன்றுநன் றுள்ளக்கெடும்" என்பதைச் சான்றாகக் கொண்டு தன்னுயிரென்ன மன்னுயிரோம்பி வாழவேண்டுமென்பது எனது துணிவான முக்கிய அபிப்பிராயம்.

பாரதமாதாவின் புத்திரர்களாகிய நாமெல்லோரும் சகோதர பாவத்தைச் செய்கையாலும் நடையாலுங் காட்டி நல்ல உயர்ச்சியை நாட்ட முன்னிற்போமானால்; நமக்கு மேம்பட்டவர்களில்லையென்று பிரசித்தமாகும். தர்மமும், வளரும் என்பதும் எனது துணிபு.

திரு—வி. எஸ். சோமசுந்தரம்,
பத்திராதிபர்.

சாதுக்களாக்குஞ் சாஸ்திரங்கள்.

இவ் வுலகத்தின் கண்ணே, எய்தற்கரும் பிறவி மானுஷ்ய ஜன்மா வென்பது காதலாமுலகமே! அன்னவாறாக நமது சகோதரர்கள் சாஸ்திரமென்பது என்னை? அதனால் நாம் அடையவேண்டியதென்னை? என்று எள்ளளவுஞ் சிந்தியாது மாயைவழிச்சென்று மயக்கத்தால் சாதுக்களாகாது பாதகர்களாவதும், சிலர் மாத்ரமே சாதுக்கள் ஆவதும் கண்கூடாகவிருக்கின்றது. நித்தியா நித்திய விசாரத்தினாலேதான் மனோரஞ்சிதமான பூர்வஸ்துவை யடைதல் கூடும். மனோலயமான நித்ய வஸ்துவைப் புத்திமான்களாகிய சாதுக்கள் சாஸ்திரவழித் தியானித்துப் பிறவியைக் கழிக்கின்றார்கள். நிருவிகற்பம், சவிகற்பம் என்ற இருவகையானநிலையிலே மானுஷ்யன் மனஸைச் செலுத்தவேண்டும். உலக வின்பத்தினும் இப்படியே மனஞ் செல்லப் பயிற்றல் வேண்டும். பலவித பிறவிகளும், பல்வித பேத சாஸ்திரங்களும் சர்வ தத்துவாதீத முதல்வராகிய பரம்பொருளருளிச்செய்த கிருபா விசேஷம் சொல்லத்தக்கதா? என்னை? கடவுளும், ஆன்மாக்களும், பாசமும் உண்டென ஸ்தாபிக்கும், பொது நூல், சிறப்பு நூல்களாகிய வேதாகமங்களும், அவற்றுள் விளங்கும் அரியனவாகிய அர்த்தங்களைத் தெரிக்கும் வேத சிரசுகளும், ஸ்மிருதி புராணாதிகளும், மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம், என்னும் பக்தி பேதம் பூண்ட ஆத்ம கோடிகளுக்குக் கற்ப பேதத்தால் நிகழுங்கால மாற்றத்திற்கு ஏற்பச் செவி யறிவுறுத்த மெய்யருள் விலாசத்தைச் சிந்தித்தால் சாதுக்களாவதுஞ் சந்தேகமா? இச் சாஸ்திரங்கள் சாதுக்களாக்குவது எவ்வளவு அருமையின மகிமை! ஒரு சாஸ்திரம் கொலை கூடாதென்ன இன்னொரு சாஸ்திரம் கொலை விதிக்கின்றதே என்னில்; அஃதும், பாவமும், பக்குவமும் ஏற்றபெற்றி ஒவ்வோராற்றானே சென்று பொருந்துவதென அறிக. ஆனால், எல்லா நூல்களும், வேதாகம வழித்தாகி விரிந்தன. செய்தோர் கருத்தும் மனோ தர்மமும் ஆராயாது கடவுளை அல்லது சாஸ்திரங்களை குறை கூறுவது சாலாது. இனிச் செம்பொருளாகிய சிவபெருமான் காலவர்த்தமான சம்யுக்தமானபடி செய்யாது பலவித உணர்ச்சிக்கிடமாகச் சாஸ்திரங்களைச் செய்யலாமா என்னில், அஃது ஈசுவர தோஷமன்று. பிரித்துணரும் ஆற்றல் ஆத்ம விசாரமுடையோரிடத்ததாகும். பவ்வியும் ஆராதனமுமிருந்தால் எடுப்பது எதனை? அதுபோற் சிந்தித்தல் சாஸ்திரத்திற்குமியையபே!

"வேதமொ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடிலிரண் டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே."

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்"

என்பன காண்க. இவை வேதாகமப் புராதனமும், அபேதமின்மையுந் தெரிக்கின்றன. மற்றைய நூல்களின் தோற்றமுறையும் விகலிதமாம். பேதமான நிலையிற் செய்யவேண்டிய உல்லங்கனமான சாஸ்திரங்கள் சிலவற்றை இறைவனே அருளிச்செய்திருக்கின்றார்:

அந்நியானி சைவ சாஸ்திராணி லோகேஸ்மிந் மோஹநாயவை,
வெத வாத விருத்தாநி மயைவ கதிதா நிது
வாமம் பாசுபதஞ் சைவ லாகுள சைவ பைரவம்
நஸேவ்ய மேதத் கதிதம் வேதபாஹ்யம் ததேதாத்ச

இந்த உலகத்திலே வேதமொழிக்கு மறுதலையான அந்நிய சாஸ்திரங்களும், மயக்கஞ் செய்யும் பொருட்டு என்னாற்றானே செய்யப்பட்டன அவை வாமம், பாசுபதம்,லாகுளம், பைரவம் என்பனவும் பிறவுமாம். அவை வேதபாஹியமாகலின், சத்துக்களாற் கொள்ளப்படுவனவல்ல. எனச் சிவபெருமானருளிச் செய்திருக்கின்றார். கூர்ம புராணத்திற் காண்க.

(சிவ. சிவா. வியா. ௬௧ பக்கம்)

இனிச் சாஸ்திரவழியொழுகாது மனம்போனவாரே பேசும் அன்பர்கள் சாஸ்திரோக்தம் எது என்பதை ஆராயாமை விசனகரமாகும். சாஸ்திர பாஹியத்தன்மையான அரிய செயல்கள் பக்தியின் பாலன. கண்ணப்பநாயனார் சரித்திரம் நோக்குக. இவ்வன்பர் பெருந்தகையாரைக் குறித்துச் சங்கர பகவத் பாதாசாரிய சுவாமிகள்,

மார்க்காவர்த்தித பாதுகா பசுபதேரங்கஸ்ய கூர்ச்சாயதே
கண்டூஷாம்பு நிஷெசநம் புராரிபோர்த் திவ்யாபி ஷெகாயதெ
கிஞ்சித்பக்ஷித மாம்ஸசேஷகபளம் நவ்யொபகாராயதே பக்தி
கிம்நகரோத்யஹொ வநசரோ பக்தாவதம் ஸாயதே.

நடந்து தேய்ந்த பாதரக்ஷையானது பரமசிவனுக்கு புருவ மத்யஸ்தானமாயிற்று. வாயில்விட்டு உமிழ்ந்த நீரானது தீர்த்தமாயிற்று. உச்சிட்டமான மாம்ஸமே நைவேத்யமாயிற்று. வனத்திலுள்ள வேடனே பக்தாக்ரகண்யனானான். ஆதலின், பக்தி எதனைச் செய்யாது? எல்லாஞ்செய்யும். தனது செயலெனக் கோடாது திருவருட் செயலாக் கொள்வது உயர்ச்சியான பலத்தைக் கொடுக்கும். உபப்பிருங்கணக் கருத்துச்சில விடங்களில் மாறுபோலத் தோன்றும்படியே செய்யப் பெற்றுள்ளமை வெளிப்பட, ஆப்த வாக்கியங்களை நம்பி வழிபடின் சாதுக்களாகலாம். சத்துவகுண

விருத்தியான நூல்களைக் கற்றுக்கேட்டு ஆனந்தமடைந்தால் சாதுவாக விளக்கமடைவது ஆத்மாவுக்கு இயல்பே! இவ்வுண்மை விளக்க இத்தேகத்திலே ஆத்மா தங்கியிருக்குங் காலத்திலே, மங்கையர் போகத்தை இங்கிதமாகக் கோடாது சுகானந்தம்பெறச் சாஸ்திர ஆராய்ச்சி முக்கிய துணையாகும். ஆகவே; ஆரியத்தும், செந்தமிழிலுமுள்ள கிரந்தங்களை நாடி நன்னிலைபெற நாம் முயற்சிப்போமாக. சுபமஸ்து.

வ. மு. இரத்நேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர் & பிரசாரகர்,
விவேகாநந்தசபை,
மாத்தளை.

கல்வியைப்பற்றி யோர் கட்டுரை.

நாமகளே யென்றனது நாவிருந்து பற்பலவா.
மாமதுரச் சொன்மழைபெய் வாய்.

வித்தையை விரும்பும் விவேகர்காள்!

"பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுட்
டிரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி
யரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே"

என்று சிந்தாமணியுட் கூறியபடி, வடகடலிலிடப்பட்டவோர் தாற்றுக்கோலானது, காற்றின் வலியாலலையோ டொதுக்கப்பட்டுத் தென்கடலிலிடப்பட்டவோர் நுகத்தடியின் றுளையுட் பொருந்தினால், அதுஎவ்வளவு அருமையுடையதோ, அவ்வளவு அருமையுடையதாகும். கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட எழுவகைத்தோற்றத்து எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதங்களைக் கடந்து, இவ்வரிய மானிடசரீரத்தையாம் அடையப்பெற்றது.

என்னெனில்;— ஓரறிவுமுதல் ஐயறிவு வரையுமுள்ள சகல ஜீவர்களையும் அடக்கியாளும் ஆண்மையும், "புண்ணிய பாவம் சுவர்க்க நரகம் முதலிய மறுமை விஷயங்களுண்டு. அவற்றையறிவிக்கவல்ல சாஸ்திரங்களுஞ் சமயங்களுமுண்மை. அவ்வழியொழுக

வேண்டும்' என்ற இடவறிவும், உடைமையாலன்றோ இம்மானிடசரீரம் மஹா அருமையுடைய தெனக்கொண்டு, நம்முன்னோர்கள் “அரிது அரிது மானிடராதலரிது; எண்ணரியபிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண்” என்று அடுக்கிக்கூறிப் புகழ்வாரானார்கள்.

இத்துணை அருமைவாய்ந்துள்ள இச்சரீரத்தையாம் சும்மா பெறுதல் கூடுமோ? ”சும்மா தனுவருமோ சும்மா பிணி வருமோ, சும்மா வருமோ சுகதுக்க—நம்மான்முன்; செய்தவினைக் கீடாச் சிவனருள்செய் விப்பதன்றோ!” என்னெனில் “கடலேத்தனை மலையேத்தனை யத்தனைகன்மமதற், குடலேத்தனை யென்னிற்கட னுண்மணலோக்கும்” என்றபடி, பூர்வத்தில் எண்ணில்கோடி சென்மங்களில் யாம் செய்த இருவினைகளின் காரியமாகவந்தது இச்சரீரம். பூர்வத்தில்யாம் செய்த வினைகளையும் அவற்றை யநுபவித்தற் கெடுத்த சரீரங்களையும் எண்ணிமுடியுமா? அல்லதுஏட்டிலடங்குமா? அடங்காதெனக் கருதியன்றோ” மாதாவுடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன், வேதாவுங் கைசலித்து விட்டானே? “என்றுவ “முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ! ”என்றும் பலவாறு முறையிடுவாராயினர் பட்டினத்துப் பிள்ளையார்.

புண்ணிய மிகுதியினாலே தேவலோக போகமுற்ற தேவர்களும், அப் புண்ணிய முள்ளளவும் அப்போகத்தை யநுபவித்தொழித்து, பரமுத்தியையடைதற்குரிய அவ்வறிவைப் பெறுதற்கேற்ற இம்மானிட யாக்கையைக்குறித்து, பல்லூழிகாலம் நோற்பார்களென்றால், இச்சரீரத்தின் பெருமையைக் குறித்துப் பேசுதலெளிதோ? இதுபற்றியே நமது மணிவாசகப் பெருமானும் ”புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப், பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாநின்றவித்தாவர சங்கமத்துள், எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்” என்றும், தாயுமானசுவாமிகளும், ”இப்பிறவிதப்பினா லெப்பிறவிவாய்க்குமோ? 'இந்தச், சடலத்தை யான்விடுமுன்னே, நினைவந்து சாரவிருட், படலத்தை நீக்கப்படாதோ, நிறைந்த பராபரமே! ”என்றும் பலவாறு பிரலாபித்து மனங்கசிந்துரைப்பாராயினர்கள்.

உலகத்திலே மின்சாரத்துதவியால் காணப்பெறும் எவ்வளவோவித அற்புதக்காட்சிகளும், கீதங்களும், இயந்திரங்களும், விமானங்களும், ஆகியயாவும் இம்மானிடசரீரத்தைப் பெற்ற அறிவின் விசேஷத்தாலன்றோ?

இத்தகைய மானிடசரீரத்தை யொருவன் அடையப்பெற்றாலும், கூன், குருடு, செவிடு, முடம், ஊமை முதலிய அவயவப்பழுதின்றிப் பிறத்தல் மிக அருமை. அவ்வாறு பழுதின்றிய யாக்கையைப்பெற்றாலும், வேதாகமங்கள் வழங்கப் பெறும் புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்திலே வந்து தோன்றுதல் மஹா அருமை. அப்படியொருகாற் றோன்றினாலும், உயர்குடிப்பிறப்பு, கல்வியறிவு அன்பு, அருள், ஈகை, ஞானம், முதலியவற்றை யடையப் பெறுதல் அருமையினு மருமையேயாம்.

இவ்வளவு அருமையும் பெருமையும் வாய்ந்துள்ள இச்சரீரத்தின் நிலைமையோ.

”உப்புற்ற பாண்டமென வொன்பது துவாரத்து
 ளூற்றசும் பொழுகு முடலை
யுயர்கின்ற வானிடை யெறிந்தகல் லென்று மலை
 யுற்றிழியு மருவியென்றும்
வெப்புற்ற காற்றிடை விளக்கென்று மேகமுறு
 மின்னென்றும் வீசு காற்றின்
மேற்பட்ட பஞ்சென்று மஞ்சென்றும் வினைதந்த
 வெறுமாய வேடமென்றுங்
கப்புற்ற பறவைக் குடம்பையென்றும் பொய்த்த
 கனவென்று நீரி லெழுதுங்
கையெழுத் தென்றும்”

சொல்லத்தக்கதாய் வருகணத்து வாழுமோ அல்லது வீழுமோ என்ற ஐயப்பாட்டிற் கிடமாய் அநித்தியத்தன்மையைப்பெற்று விளங்குகின்றது. இவ்வரிய சரீரம் நமக்குக்கிடைக்கப்பெற்றது எதன் பொருட்டு? சூதாடவா? வாதாடவா? கற்றவரைக் கடிந்து பேசவா? நற்றவரை நையாண்டி செய்யவா? உற்றவரை யொதுக்கித்துறத்தவா? அற்றன்று? “இதனாலடையத்தக்க அரும் பெரும் பொருளாகிய ”அறம்பொருளின்பம்வீடு” என்

னும் சதுர்வித புருஷார்த்தங்களையுந் தடையின்றி யடையும் பொருட்டேயாம். ஆகையால், நம்மவர்களே! காலமுள்ளபோதே அவ்வித ஆன்ம லாபத்தை நாமொவ்வொருவரும் அடையக் கருதுதல் அத்தியாவசியமன்றோ?

அன்பர்காள்!

ஒப்புயர்வற்ற எந்தவொருபொருளைப் பெற்றால் சதுர்வித புருஷார்த்தங்களையும் ஒருங்கே யடையப்பெற்று, உலகின்கண்ணே குன்றாப்பெயரும் பொன்றாப்புகழும் பெறத்தக்கவராவோம், நீதி யநீதியின்னெறியறிந் தொழுகுவோம்; உலகியலனைத்தின் உண்மையை யுணர்வோம்; பண்டைக்கால வழக்க வொழுக்கங்களையும், பெரியோர்களின் பெயரையும், அவர்களின் எண்ணங்களையும், குணங்களையும், செயல்களையும், பிறவற்றையும் பிரத்தியக்ஷத்திற் கண்டதைப்போற் றெரியவல்லவராவோம்; அத்தகைய வொருபொருளை யாமொவ்வொருவரும் அறிவு தோன்றிய காலந்தொடங்கி யவசியம் அடைய முயற்சித்தல் வேண்டும்.

எந்த நிகரற்ற வொருபொருளைப்பெற்றால், அது, நாமெண்ணிய எண்ணியவாறு முடிக்கவும், அன்புற்றகாலையி லின்புற்றுதவவும், எந்நாட்டையும் எவ்வூரையுந் தன்னாடுந் தன்னூருமாகச்செய்யவும் மன்னாதி மன்னர்களையும் தன்னடிக்கீழ் மடக்கவும். வல்லதாகி, நமக்கோர் கற்பகம்போல் விளங்கக்கூடும்? அந்த நிகரற்ற வொருபொருளை, யாமொவ்வொருவரும் குழந்தைப் பருவத்திற்றானே சம்பாதிக்க முயலல்வேண்டும்.

எந்த வொப்பில்லா வொருபொருளைப் பெற்றால், பிறவிக்கடற்கோர் பெருந் தோணியாகும், அஞ்ஞானவிருட்கோர் ஆதித்தனாகும், மாதர்மயற்கோர் மாமருந்தாகும், தண்ணருள் விளக்குஞ் சந்திரனாகும். எவ்வித சுகபோகங்களையு மளிக்கவல்ல இந்திரனாகும், அந்தவொப்பில்லா வொருபொருளை, யாம் எவ்விதபாடுபட்டேனும் தேகசிரமத்தையும் பசியையும் நித்திரையையும் பிறருடையமதிப்பையும் அவமதிப்பையும், கொஞ்சமுங் கருதாது அதியிளமைப் பருவத்திலேயே யடையக்கருதுதல் வேண்டும்.

எந்த வுற்றபொருளைப் பெற்றால் அது, பாவாகிய பாலூட்டி, பரமசுகமாகிய தொட்டிலிற்கிடத்தி, நமது அறிவைவளர்க்கத்தக்க அன்புள்ள அன்னையாகும், புன்னெறியின் விலக்கி நன்னெறியிற் செலுத்தவல்ல புண்ணியமிக்க தந்தையாகும். ஆபத்திலுதவத்தக்க அருந்துணையாகும். பகைவர் அணுகியவழி நமக்குற்றதோட்டுணையாயுதவவும் பக்ஷமுள்ள முன்னோனாகும். பிரபஞ்சமுகத்திலமுந்தியுழலாது நம்மையடக்கியாளும் ஆற்றலுடைய அரசனாகும். முக்காலத்திலும் நமக்குவரும் நன்மை தீமைகளை விளக்கிக்காட்டித் தந்திரயுத்திகூறும் மதிநுட்பமுள்ள மந்திரியாகும், அந்தப் பெறற்கரும் பொருளை, யாம் பிச்சைபுக்காயினும், தாய்தந்தை சுற்றம்,முதலானவற்றைத்துறந்து நெடுந்தூரஞ் சென்றாயினும், அதிபாலிய வயதிலேயே பெறுவதற்கு முக்கியம் முயற்சிக்கவேண்டும்.

எந்த வுண்மைப்பொருளைக் கைக்கொண்டால் அது, கடவுளினுண்மை, காலத்தினுண்மை, தேசத்தினுண்மை, சாதியினுண்மை, சமயத்தினுண்மை, சாஸ்திரங்களி னுண்மை, வர்த்தகத்தினுண்மை, மணிபணிகளினுண்மை, முதலிய பலவித உண்மைகளையறிந்து அனுபவிப்பதற்குக் காரணமாகும். அவ்விதவுண்மைப் பொருளைக் காலந்தாழ்க்காது, உற்றுழியுதவியும், உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது, நாமெல்லோரும் விரைவிற் றேடிக்கொள்ளக் கருதுதல் வேண்டும்.

எந்த மகத்தானபொருளை யடையப்பெற்றால் அது, மகாத்மாக்களின் மகிமை, மந்திரங்களின் மகிமை, யந்திரங்களின் மகிமை, விபூதியுருத்திராக்கம் முதலிய சிவபூஷணங்களின் மகிமை, சிவாலயதரிசனத்தின்மகிமை, சிவனடியார்களின் மகிமை முதலான, பற்பல மகத்தானநெறிகளைப் போதிக்கத்தக்கதாகும், அந்தமகத்தான பொருளை, நாமனைவரும் வாணாளை வீணாளாக்காது "உடையார் முன்னில்லார்போல், அப்பொருளை யுடையாரைத் தேடியடைந்து, அவருக்குற்றபணிகளைக் குற்றமின்றியியற்றி, அவரதுகுணத்துடன்பழகிக் குறிப்புடனொழுகி, முக்கியம் சம்பாதித்துக்கொள்ளல் வேண்டும்.

இவ்வளவு உயர்வொப்பில்லா மஹாவுன்னதப் பொருள்தான் யாதோவென்னிபில்? அதுதான், கல்வி! கல்வி!! என்று எந்தத்தேசத்திலும், எந்தப்பாஷையிலும், எந்தச்சாதியிலும், எந்தச்சமயத்திலும், எந்தமதத்திலுமுள்ள பெரியோர்களால், பலவாறுபுகழ்ந்து

கூறப்படுகின்றது, ஏனெனில்; சின்னாட்பல் பிணிச்சிற்றறிவினராகிய மக்கட் பிறப்பினர் கடைத் தேறுவதற்கு, இன்றியமையாச் சிறப்புடையபொருள், வேறொன்றில்லாமையினாலே, அக்கல்விப்பொருளைத் தேடிக்கொள்ளவேண்டியது முக்கியகடமையே யாமென்று, பெரியோர் பலரும் பறை யறைவாராயினர்.

கல்வியென்னும் மொழி கல் என்னும் பகுதியும் வி யென்னும் தொழிற் பெயர் விகுதியுங் கூடிய பகுபதமாய் கற்றற்குரிய நூல்களைக் கற்றல் என்னும் பொருள் மேல் நின்றது.

இனி, 1. இக்கல்விப் பொருளினுயர்வு இத்துணைத்தென்றும் 2. அதைக் கற்கவேண்டிய கால மிதுவென்றும் 3. கற்குமுறையித் தன்மைத் தென்றும் 4. கற்கவேண்டிய பாஷைகளிவையென்றும் 5. அப்பாஷைகளின் சிறப்பு இவ்வளவென்றும் 6. அப்பாஷைகளிற்கற்றற்குரிய நூல்களிவையென்றும் 7. கற்றவர்களினுயர்வுங் கல்லாதவர்களினிழிவு மினையவென்றும் 8. கற்றவரைக் கண்டொழுகத்தக்க காரணமிதுவென்றும் 9. கற்றதனாலாகியபெரும் பயனீதென்றும் 10. ஆகையால் அவசியம் கல்வியை அவமதியாது அனைவருங் கற்கவேண்டு மென்றும், பத்து வகையாகப் பிரித்து முறையேவிரித்துக் கூறத்தொடங்குவாம்.

1. முதலில், கல்விப்பொருளி னுயர்வையும், ஏனைய பொருளினிழிவையுங் குறித்து ஒருசிறிதுபேசப்புகுவாம்:

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" என்ற

பொய்யா மொழிப்படி, அறத்திற்கும் இன்பத்திற்குங் காரணமான செல்வப்பொருளை, ஒருவனடையப்பெற்றால், இத்துணைச்சிறப்பின்றோ? என்றாலோ, இன்னும் என்னை?

"இருவிழிகள் வாண்முகத்திலிருந்தாலும் வானிரவி யெழுந் தா லன்றிக்
கருதுகிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல், யாரும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்விபெருவார்க் கன்றித்
திருவளர் புண் ணியபாவ மிம்மைமறு மையுவீடுந் தெரியா வன்றே" என்ற

பெரியோர் கூற்றுப்படி, உலகப்பொருள்களைக்காணுதற்குக் கருவியாகிய கண்கள் முகத்திலிருப்பினும், வானத்திற் சூரிய னுதித்தாலன்றி அப்பொருள்களின் குணாகுணங்களைக்கண்டறிய, அக்கண்களுக்கியல்பின்றாம். அதுபோல, குபேர செல்வமும், குமரவேளையொத்த விளமையும், ராமனையொத்த வாண்மையும், காமனையொத்த கட்டழகும், ஒருவனுக்கு வாய்க்கப் பெற்றிருப்பினும், கல்வியறிவொன்றின்றேல், அவன் அவைகளை அநுபவிக்கவும்காக்கவும்வகையறியாது வாடியும், மறுமைக்கு வித்தாகிய புண்ணியபாவநெறிகளையும், அவற்றையடையும் முறைகளையும், அடைந்தாலணுகும்பயனையும், அணுவளவு மாராயுமாற்றலற்றவனாய் வருந்தியும், திரியத்தக்கவனாவான்.

இன்னுஞ் செல்வப்பொருளைத் தருமவழியிலே சம்பாதிக்கவும், சம்பாதிக்கப்பெற்ற அப்பொருளைத்" தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான்" என்னும் ஐம் புலத்தாற்றில், அளவறிந்து செலவிடவும், மீதியைவைத்துக் காக்கவும், உலகத்தோடொட்டியொழுகவும், உற்றோர் உறவினர் பெற்றோர் முதலியவர்களைக் காக்கும் வழியறிந்து காக்கவும் கல்வியறிவை யன்றிச் சிறந்த கருவி வேறில்லாமையால் அக்கல்வியே கைப்பொருளை விட மெய்ப்பொருளாம்.

செல்வப்பொருள்:— வெள்ளத்தாலுந் தீயாலும், பெருங்காற்றாலும் கடுமழையாலும் அழியுமிழிவுடையது.

கல்விப்பெருளோ! எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவராலும், எள்ளளவும், அழிவையடையாவுயர் நிலையுடையதாகும்;

செல்வப்பொருள்.- அரசர், கள்வர், பகைவர், தாயத்தார், முதலியவர்களால் வல்வழக்கிட்டுப் பறிக்கப்படும்.

கல்விப்பொருளோ! அவ்வாறு பிறராற் கவர்ந்துகொள்ளத்தக்கதன்றாம்.

செல்வப்பொருள்.- எடுக்குந்தோறும் எடுக்குந்தோறும் சுருங்குந்தன்மையுடையது.

கல்விப்பொருளோ! அவ்வாறின்றித் "தொட்டனைத்தூறு மணற்கேணி" யைப்போற்சுரக்கும்பெருமையுடையது.

செல்வப்பொருள்.— பிறருக்குக்கொடுக்குந்தோறும் தேய்பிறைச் சந்திரனைப்போல்வளரு முயர்வுடையது.

கல்விப்பொருளோ! பிறருக்குக் கொடுக்குந் தோறும் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளருமுயர்வுடையது.

செல்வப்பொருள்.— தேடும்பொழுதும், காக்கும்பொழுதும், அழிக்கும்பொழுதும், பிறர்பா விழக்கும் பொழுதும், ஆகிய எக்காலத்தும் பெருந்துன்பமே பயக்கத்தக்கதாகும்.

கல்விப்பொருளோ! "நவில்தோறும் நூனயம்போலும்" என்ற நாயனார் தூயவுரைக்கிணங்கப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் பாலினும் பாகினுந், தேனினுந்தெள்ளமுதத்திரளினும், பலமடங்கு இனிமை வாய்ந்து, சொற்சுவை பொருட் சுவைகளை யிடையறாதூட்டி யிணையற்றபேரின்பம் பயக்கத்தக்கதாகும்,

செல்வப்பொருளைக்காக்கவோ! கன்னக்கால் நாட்டிக்கட்டப்பட்ட கருங்கல்மாளிகையும், கனமான இருப்புப் பெட்டியும் வேண்டும்.

கல்விப்பொருளைக்காக்கவோ! அணுத்துணைச் சிரமுமின்று.

செல்வப்பொருள்.— தன்னையுடையானுக்கு அவனதூரில் மாத்திரம் பெருமையையுண்டு பண்ணும் கல்விப்பொருளோ! தன்னையுடையானுக்குச் சென்ற சென்றவிடங்களிலெல்லாம், புகழையும் பொருளையும் பூஜையையும் உண்டு பண்ணத்தக்கதாகும்.

செல்வப்பொருள்.— நீரினலையையும், நீர்மேற்குமிழியையும், வானிடுவில்லையும், மழைபடுமின்னலையும் போன்று, சிறிது நேரத் துட்டோன்றி, இருந்தவிடமுமறியாது, இவ்வுடலோடு அழியத் தக்கநிலையாமையைத் தலைமேற்கொண்டுள்ளது, இதுபற்றியே, "பெருஞ்செல்வம்— எல்லிற்; கருங்கோண்மூ வாய்திறந்த மின்னுப் போற் றோன்றி மருங்கறக்கெட்டுவிடும்" என்றார் நாலடியார்.

கல்விப்பொருளோ! எக்காலத்து மழிவின்மையுடையதாகி, யெழுபிறப்பினுந் தன்னையுடையானைத் தொடர்ந்துபற்றி, அவ்வப் பிறப்பிலவனுக்கு ஊன்றுகோல்போலுதவி, 'ஒப்பற்றமுத்தியுலகில்

அவனைச் சேர்க்கத்தக்க மேன்மையை யுடையது. இதுபற்றியே "ஒருமைக்கட்டான் கற்ற கல்வி யொருவற் கெழுமையு மேமாப் புடைத்து என்றார் பொய்யில்புலவர். இதனால் கல்விப்பொருள், பின்னைப்பிறவிகளிற் சிலவற்றை மானிட மாக்கத்தக்க வன்மையுடையதாகவுங்காணப்படுகின்ற தன்றோ?

தொடரும்.

ஆர். சுவாமிநாத பிள்ளை,
தமிழ்ப் பண்டிதர்,
உமையாள்புரம்.

புறங்கூறாமையே தூய்மை.

அறிவின்மிக்க அன்பர்காள்!

அவனியின்கண் நால்வகை யோனி எழுவகைத் தோற்றம் எண்பத்து நான்கு லெட்சம் ஜீவபேதங்களில் கிடைத்தற் கருமையாகிய மானிடப்பிறவியைப் பெற்ற நாம் அடைய வேண்டிய ஒப்பிலா நற்குணம் நற்செய்கைகளில் புறங்கூறாமை என்றதும் ஒன்றேயாம்.

புறங்கூறுதலாவது? ஒருவனைத் தான் கண்டவிடத்திற் புகழ்ந்து பேசுவதும், காணாதவிடத்தில் இகழ்ந்து பேசுவதுமாம். இவ்விதம் இகழ்ந்தும் புகழ்ந்தும் பேசாத ஒருவனை உத்தமனென்று உலகத்தார் புகழ்ந்து சொல்வார்கள். அவ்விதம் புகழ்ந்து சொல்லும் சொல்லானது அவனுக்குண்டாகிய மல பந்தம் நீங்கி மலரகிதனாகிய பரம்பொருளை அடைவதற்கு வழிகாட்டும் அரிகுறியான சாக்ஷி ரூபமாய் நின்று செய்தற்கரிய தருமத்தைச் செய்த புண்ணிய பலத்தையுங் கொடுக்கின்றது.

இதனை யுற்றுணர்ந்த தற்காலத்தவர் சிலர் தன் சுற்றத்தாரையே உதாசினமான வார்த்தைகளால் கேட்பவர் பரிகசிக்கும்படி தூற்றுகிறார்கள். தன் சுற்றத்தாரையே தூற்றும் இயல்புடையவர்கள் மற்றவரை எவ்விதந் தூற்றுவார்களென்பது சொல்லாமலே நன்கு விளங்கும்.

இம்மட்டோ! பாலுந் தண்ணீர்போலவும், எள்ளும் எண்ணெய்யைப்போலவும், கன்றும்பசுவும் போலவும், அன்றியும் பேடும்போலவும், பூவும் மணமும்போலவும், கோழியுங் குஞ்சும்போலவும், தாயுஞ் சேயும் போலவும், மன தொற்றுமையாய் உள்ளன்புடன் நேச விசுவாசமாய் வாழ்ந்திருக்கும் சதிபதிகளையும், சிநேகிதர்களையும் சில புண்ணிய சீலர்கள் அவர்களுடன் மிகுந்த ஆப்த நண்பர்களைப்போலப்பழகி தனது வஞ்சகமாகிய மாயாசாலங்களால் மயக்கி ஒருவர்க்கொருவரை வயிரிகளாக்கித் தங்கள் வசத்தராகச் செய்து படுகுழியில் வீழ்த்துகிறார்கள். அந்தோ! இவை மிகவும் பரிதாபம். இத்தன்மையாய்ச் செய்விக்கும் உத்தமர்க்கு எத்தன்மைத்தான பலன் கிடைக்குமென்பதை யான் சொல்ல வல்லேனல்ல.

அன்றியும் புறங்கூறுவதால் விற்பன விவேகத்தையும் உத்தம குணத்தையும் வகித்த ஒருவராற்செய்யப்பெற்ற தருமத்தைக் கெடுத்தலினாலுண்டாகும் பாபத்தைப்பார்க்கிலும் எண்மடங்கதிகமாகிய பாபத்தைத் தருமென்பதிற் சிறிதுஞ் சந்தேகமின்மையாம்.

ஒருவன் தானதருமங்களைச்செய்ய மனமில்லாதிருப்பினும் அல்லது சக்திபற்றிருப்பினும் புறங் கூறாமலிருப்பானாகில் அதுவே மேலான தருமத்தைச் செய்த பலனைத்தருமெனப் பொய்யாமொழி புகலுகின்றது.

பிறரைப்பற்றி தூஷிக்கும் ஒருவனை மற்றவர்கள் மிகவும் இழிவாகத் தூஷிப்பதன்றியும் இவ்வுலகமும், தருமமும், கடவுளும், அவனுக்குப் பகையாம். ஆகையால் ஒவ்வொருவரும் பேருண்டி, நீதிக் குறைவு, நெடுந்துயில், மறதி, பொய், சோம்பல், ஒழுக்கம் வழுவுதல், கொலை, வஞ்சகம், காமம், கோபம், என்ற துற்குணங்களைத் தன்னாலியன்றமட்டிலும் நீக்குவதற்காக முயற்சித்து ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி யடக்கம், என்ற சத்துவ குணத்தை மேற்கொண்டொழுகுவாராக சுபம்.

எம். பாலுசாமி நாயுடு.

மதுரை.

தேவாரம்—வேதசாரம்.

தேவாரம் என்பது, வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்மொழியாய் நின்று, தெய்வத் தன்மையையுடைய ஆரம், தேவினால் வாரஞ்செய்யப்பெறுவது, தேவுக்கு ஆரமாயுள்ளது, தேவினின்றும் வந்த ஆரம், தேவினது ஆரம், தேவினிடத்து வாரத்தைச் செலுத்துவது, என அறுவகை வேற்றுமைப்பொருளும் மேலும் பலவுமாகத் திருவருட் பெருஞ்செல்வர்கள் திருவுளக்கருத்தின் விளக்கமுற்று விரித்துரைத் தருளுதற் கிடந்தந்து நிற்பதோர் அரிய பெரிய மகா வாக்கியமாகும்.

இதில், நிலைமொழிப்பொருள் தெய்வமென்பதொன்று. அத்தெய்வம் பலவல்ல சிவனொருவனே. ஏனையாவருஞ் சீவர்களே. அரி பிரமேந்திராதியருந் தேவரென்று சொல்லப்படுதல் உபசாரமே. இவர்கள் மும்மல சகித சகல சீவர்களே. இதனை, "தெய்வம் பலவலவொன்றேயத் தெய்வஞ் செழுங்கமலை, யுய்வம் பலவல மாதேவனேனை யுயிர்மனமே, யெய்வம் பலவல ழுந்துங்கயவ ரிசைப்பதெல்லாம்; பொய்வம்பல வலங்கையாற் கரும்பதம் போற்றுகவே." என்னுஞ் சுருதியாலும், "காவுளா னயன்கண்ணன் முற்றேவர்கள், யாவருந் தொண்டராயினு மும்மல, மோவி மெய்யருளுண்மையிற்பற்றுபு, மேவுமின்னர் விசேடவடியரே." என்னுஞ் சூதசங்கிதை யானும் இன்னுமெத்தனை பிரபல சுருதிகளானுந் தெளியக் காணலாம்.

இனிப், பிரம விஷ்ணு வாதியரைத் தேவரென்று வழங்குவது, பரமசிவன் அவர்களுக்குச் சிருஷ்டியாதி யதிகாரங்கொடுத் தண்ணின்று நடாத்தித் தன்னோடு உடன்வைத் தெண்ணும்படி நிற்றலாலும், அந்தந்தப் புவனவாசிகள் அவரவர்க்கு அடங்கி நடக்கும்பொருட்டுச் சுருதியாதிகளில் அதிகாரத்தலைமை கூறுதலாலும் வந்த உபசாரமே. உண்மையன்று இதனை, "சாவமுன்னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி, யாவவெந்தாயென்றவிதா விடுநம் மவரவரே, மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண்ணாண்டு மண்மேற் றேவரென்றே யிறுமாந்தென்ன பாவந்திரிதவரே." என்னும் ஸ்ரீ மணிவாசக சுருதியானுந் தெளியலாம்.

அரி பிரமாதியர்க்குச் சுருதியாதிகளிற் கூறுந் தலைமை உபசாரமே யென்பதை, அச்சுருதிகள், உபக்கிரமத்திலும் (ஆரம்பத்திலும்) உபசங்காரத்திலும் (முடிவிலும்) சிவனொருவனையே வியந்து கூறுதலாலும், "சிவ" சப்தம் சிவனொருவனுக்கே யாண்டும் வழங்குதலாலும், மற்றெவர்க்கும் வழங்காப் பெருமையாலும், நாராயணாதியர்க்கு. "தியாதிரு" சப்தமே வழங்கப்பெறுதலாலும், இடையிடையில் அரி பிரமாதியர்க்கு அதிகாரம் நோக்கி அவ்வளவுக்குக் கூறிய உபசாரத் தலைமையை உற்றுநோக்கு மூகமில்லார் உண.

மையென்று கடைப்பிடித்து, அவர்களையுஞ் சிவனைப்போலப் பரமென மயங்கித் தெய்வம் பலவெனக்கொண்டு சமத்துவம்பேசி யுறுதியிழந்து தம்மால் வழிபடப்படுகின்ற அவ்வரி பிரமாதியர்க்குங் கோபத்தை விளைத்து அதற்காளாகி மீளா நிரயத்துறுவண்ணம், நாலாவதாகிய அதர்வண வேத சிரசின்மேற் சிகையில் முடிந்தது முடித்தலென்னு முத்தியாக "சிவனொருவனே தியானிக்கற்பாலன் சிவத்தைச் செய்வோன் (இதற்குமுன், உபசரித்துத் தலைமை கூறப்பட்ட அரி பிரமாதியர் தியானிக்கின்றவர்களே. தியானிக்கப்படுவோரல்லராதலால் அவர்கள்) யாவரும் அன்னியர் வர்ச்சிக்கப்படுவோரே அதர்வசிகை முற்றிற்று" என்று பரிஷ்காரமாகக் கூறுதலாலும், தாந்தாம் நிற்குநிலைபற்றி ஒருபாற் கோடாமல் நடுநிலை பற்றிநின்று உற்றுநோக்கின் உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்கு தெளியலாம்.

சிவனொருவனே தெய்வம், அவனே பதி, மற்றெவரும் பசுக்களே. இவர்கள் அப்பதியை வழிபட்டு முறையிட்டு அவனருளாலேயே தத்தம் இடர்நீங்கி வாழ்வேண்டியவர்களே என்பதை, லோகோபகாரச்செயலை விளக்குகின்ற 'காமாரி திரிபுராரி சலந்தாரி அந்தகாரி நரசிங்காரி பசுபதி மகாதேவ நீலகண்டாதி காரண நாமங்களும், எத்துணைச் சிறந்த வாதிகளாலும் அசைக்கப் பெறாது நிலைநிறுத்தி விளக்கும்.

இனித் தே என்பது தேனையும் இடத்தையும் உணர்த்தும் பலபொருளொரு சொல்லாதலின், அவை ஆகுபெயராய் நின்று, அப்பொருள்களாலும் பரமசிவனையே யுணர்த்தும். எங்ஙனமெனில்? பரமசிவன் சிவசரியாதி திருத்தொண்டுசெய்து பரிபாக முற்றுள்ளார்க்கு நித்தியானந்தமாகிய இனிமையைச் செய்தலாலும், சர்வான்மாக்களுக்கும் இடந்தந்து சர்வ வியாபகியாய் நிற்றலாலுமென்க. அரிபிரமாதியரும் தம்மை வழிபடுவார்க்கு இனிமையைச் செய்வோராயினும், அவ்வினிமை அனித்தியங்களேயாம். அது ஒருவாறு காலம் நீட நின்றாலும் அப்பிரம விஷ்ணுக்கள் ஆயுளெல்லையில் அழிவது திண்ணமே. அவர்கள் வியாபகமும் அவரவர் புவனங்களினளவே. சர்வ வியாபகமன்று.

இனித் தேவாரமென்பது மேற்கூறியபடி அறுவகை வேற்றுமைப் பொருட்கு நிற்கும் உண்மையை, "தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததுமுதலை, யுண்டபாலனை யழைத்தது மென்பு பெண்ணுருவாக், கண்டது மறைக் கதவினைத் திறந்ததும்." முதலிய பற்பல அற்புதங்களைச் செய்த தெய்வத்தன்மையை யுடைமையால் இரண்டாம் வேற்றுமைப் பொருளும், சிவபிரானால் மற்றெவற்றினு மிக்க வாரஞ்செயப் பெறுதலால் மூன்றாம் வேற்றுமைப் பொருளும், சிவபிரானுக்கு வேறெவற்றினு மிக்க ஆரமாகி விளங்குதலால் நான்காம் வேற்றுமைப் பொருளும், சிவபிரானினின்றும் திருவருட்பெருஞ்செல்வர்கள் வாயிலாக வெளிவந்தமையால் ஐந்தாம் வேற்றுமைப்

பொருளும், சிவனொருவனது மகிமையே விளக்கிநிற்றலால் ஆறாம்வேற்றுமைப்பொருளும், தன்னையோதுவார்க்குச் சிவபிரானிடத்தே செல்லும் வாரத்தை விளைத்தலால் ஏழாம் வேற்றுமைப் பொருளுங்கோடற்கிடந்தந்து அவ்வப்பொருளெலாம் சிவபிராற்கே இயைபுற்று நிற்றலால் இனிது காணலாம். இவ்வறுவகைப் பொருள்களுக்குமுரிய பிரமாணங்கள் ஒவ்வொன்றிற்குந் தனித்தனி காட்டி விரிப்பிற் பெருகும். அமைக.

பெயர் மாத்திரைக்கே, இவைபோன்றின்னும் பற்பல பொருள் விரிவுக்கு இடந்தந்து நிற்குமேல், இத்தேவாரத்தின் சொரூபமகிமை இத்துணைத்தென்றுள்ளபடி எடுத்திசைக்கவல்லார் யாவர்? தேவாரம் வேதசாரமென்றொரு சொல்லாலொருவா றியம்பலாம். இயம்பினாலுமென்ன? ஒவ்வொன்றும் எடுத்துக்காட்டி விளக்கினாலன்றோ? அவ்வுண்மை தெளிவாகும். ஆனால் அவ்வாறு விளக்குதல் நம்போன்ற சிற்றறிவினர்க் கரிதேயன்றி, நம்முன்னையோராகிய சுத்தாத்துவித சித்தாந்தசைவ மெய்கண்ட சந்தான சிவானுபூதிப் பெருந்திருவாளர்க்கு அரிதன்று. அங்ஙனமாகவும், அப்பெருஞ்செல்வர்களும்,

"கரும்பினிற் கோதுநீத்துச் சாறடு கட்டியேபோல்
வரம்பிலா மறையின் மாண்ட பொருளெலா மாணத்தெள்ளிச்
சுரும்பிவர் கொன்றைவேணிப் பிரானிடந் தோறும்போகி
விரும்பிய தென்சொன்மாலை சிவமணம் விளையச்சாத்தி" என்பது

முதலியவாகத் தேவாரம் வேதசாரமென்னும் அவ்வளவினதாக வைத்துக் காட்டினான்றித், தேவாரங்களிலாங்காங்குள்ள வாக்கியார்த்தங்களுக்கும் வேதவாக்கியார்த்தங்களுக்கும் ஒற்றுமை யுண்மை எடுத்துக்காட்டி விளக்கினாரல்லர். அது பின்னையோராகிய நம்மவர்களது தௌர்ப்பாக்கியம் போலும்.

சிவாலயமில்லாத நகரத்தைச் சுட்டுப்போடு, திருநீறில்லாத நெற்றியைச் சுட்டுப்போடு. என்பன வாதி வேதவாக்கியங்கள், உலகர்க்கு அதி பயங்கரகுரூர. காடின்னியமாயிருத்தலால், இவற்றை நேரே உலகந்தாங்காதெனத் திருவுளங்கொண்ட நம்பெருமக்கள் நம்மில் வைத்த பெருங்கருணையினாலே, அவ்வாக்கியப் பொருள்களை வடித்து அதி சாந்தமாக்கி,

"திருக்கோயிலில்லாத திருவிலூரும் திருவெண்ணீறணியாத
திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும் பாங்கினொடு பலதளிக
ளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்க மூதாவூரும் விதானமும் வெண்கொடியு
மில்லாவூரு
மருப்போடு மலர்பறித்திட் டுண்ணாவூரு மவையெல்லா மூரல்ல
மடவிகாடே.

என்று உலகஞ் சிரமேற்கொண்டுய்யும் வண்ணம் திருவாய்மலர்ந்தருளினார்கள். இப்படி மிக அரிதிற் புலனாகின்ற ஏகதேச விளக்கமேயன்றித் தேவாரத் திருமுறைகள் ஏழினுமுள்ள வாக்கியங்கள் பெரும்பாலும் எடுத்துக்காட்டி இவைகள் வேதவாக்கிய ஒற்றுமையுடையனவென்னும் பூரண விளக்கம் கிடைக்கப்பெறாத இக்காலத்தில், எம்மனோர் இக்குறை நீங்கி நிறைவெய்தி யுய்தியுறத் திருவுளங்கொண்டு, திருச்செந்திநாதனே யுண்ணின்று வெளியிட்டருளினனென்று உலகெலாஞ் சிரமேற் கொண்டு பாராட்டிப் படன் சிரவணாதி செய்து சிவானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யும்படி ஸ்ரீ காசி வாசிகளும் சித்தாந்த சிகாமணிகளுமாகிய பிர்மஸ்ரீ செந்திநாத அய்யரவர்கள், "செயற்கரிய செய்வர் பெரியர்," என்ற திவ்விய சுருதிக்குத்தாங்களே இலக்காக நின்று, தேவாரம் வேதசாரம் என்பதோர் அரிய பெரிய சிவசாஸ்திரமொன்றை எம்மனோர் திவ்வியாரமிர்தென்றே தெவிட்டாதுண்டு சிவானந்த வாழ்வுறத் திரட்டித் தந்தார்கள். "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி, னன்மை கடலிற் பெரிது." இப்பெருஞ் சிறப்பு வாய்ந்தபேருதவிக்கு எம்மனோர் செய்யுங் கைம்மாறு யாதுளது. கைம்மாறு வேண்டா கடப்பாட்டின் மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

இப் பெருந்தகையாளராகிய அய்யரவர்கள், லோகப் பிரசித்தர்களாய் உலகெலாஞ் சிரமேற்கொண்டு பாராட்டப்பெற்ற ஸ்ரீமந் நாவலர் பெருமானிடத்தே, சுமார் இற்றைக்கு நாற்பத்தைந்து வருஷங்களுக்குமுன், அத்தியந்த அணுக்கத் தலைமை வாய்ந்த மாணாக்கர்களா யமர்ந்து, நுனித் துணர்ந்து கொண்ட கல்விநிறை செல்வமன்றியும், பிறர்க்கரிய அத் திருவருட் சார்பின் விசேடத்தால், அப்பெருமானிடத் தியற்கையி னமைந்து நிறைந்துள்ள சுத்தாத்துவித சித்தாந்த சைவ நெறிச் சீலமுதலிய திவ்விய குணங்களெல்லாந் தங்களிடத்து வந்து நிரம்பப்பெற்றவர்கள். இது அக்காலத்திலேயே யான் நேரிற் கண்டதொன்றே. அப்பெருமான் ஸ்ரீ குஞ்சிதபாதத் திறண்டறக் கலந் தருளியபின், அய்யரவர்கள் அத்தல வாசத்தை விட்டு, சிவக்ஷேத்திரங்களெவற்றினுஞ் சிறந்த ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் நெடுங்காலம் வசித்தமையால் காசிவாசி என்னும் பெயரும், சைவசித்தாந்த மெய்கண்ட சந்தான சிவசாஸ்திர பாரங்கதர்களாய் விளங்குதலால் சித்தாந்த சிகாமணியென்னும் பெயரும் வகிக்கப் பெற்றார்கள்.

ஆரிய வேதசாரமே சீரிய திராவிட வேதமாகிய தேவாரமென்னும் உண்மை எம்போலிகட்கும் எளிதில் விளங்கக்காட்டிய இவ்வரிய பெரிய செயற் கருஞ்செயல் கொண்டே, கைமுதிக ஞாயத்தால் இவர்களது வடகலை தென்கலை யென்னும் இருகலைக்கடலும் நிலைகண்டுணர்ந்த தெய்வப் புலமைத்திறம் ஊகித்துணரு நம்பெரியார் யாவராலும் வியக்கற் பாலதே. அய்யவர்கள் இவ்வாறே இன்னும் லோகோபகாரமாக அரும் பெருஞ் செயல்கள் செய்து உலகை வாழ்விக்கும்பொருட்டு, இவர்களை இன்னும் பன்னெடுங்காலம் இப்பூமியில் அரோக திட காத்திரர்களாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீ தெய்வயானை வள்ளி சமேத ஸ்ரீ செயந்தி புரேசராகிய சிவசுப்ரமண்யப்பெருமான் திருவடிகளைப் பன்முறையும் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

பொன்னிறமால்கடல்கடைந்தான்பொருப்பாதி துணைகொண்டேபோந்ததால
மின்னலினைந் துடல்கருகியிறையருளாலுடற்கமுதேயிமையோர்க்கீந்தான்
றன்றிவான் மறைமதித்துத் தேவார நால்வேத சாரமென்னு
யன்னமுதீந் தானெவர்க்கு மகிழ்செந்தி நாதய்ய வள்ளலம்மா.

ராம. சொ. சொக்கலிங்கஞ்செட்டி,
அறுபத்துமூவர் மடம்,
காரைக்குடி.

◆

மாணவர் பக்கம்.

பொறாமையே பெரு நஷ்டம்.

சகோதரர்களே!

சீருலாவிய விந்தமாபுரியெனும் நகரத்தின் தெற்கு வீதியில், கயிலேசரென்ற வயோதிகரொருவரிருந்தார். அவர் நெடுங்காலம் தரித்திரவந்தராய் கஷ்ட ஜீவனஞ் செய்து கொண்டிருந்ததினால், ஒரு நாள் தனது தரித்திர திசையை நீக்கும்பொருட்டு பலவிதமாயோசித்து ஒன்றுந்தோன்றாமல் மயங்கினார். அதன்பின் ஈசனைக்கோரித் தவம் புரிந்து பாக்கியம் வளரும் வரத்தைப்பெற்று வாழ்வதே நலமெனக்கருதினார். உடனே அந்நகரத்திற்கு வடதிசையிலுள்ள தபோவனஞ் சென்று இந்திரியங்களை நிக்கிரகித்து மனதை ஓர்மைப்படுத்தி அருமையாகிய தவஞ் செய்திருந்தார்.

இதனைக் கயிலேசர் வீட்டிற் கெதிர்வீட்டு செல்லப்பரென்றவர் கேள்விப்பட்டு மனம் பொறாமல் தியங்கினார். இவன் என்னைப் பார்க்கிலும் நன்னடைக்கையிற் சிறந்தவனா? இருக்கட்டும்; நானும் தவஞ் செய்யச்செல்வேனெனக் கருவங்கொண்டார். உடனே தன் மனையாளுக்குத் தெரிவித்துத் தான் தபோவனஞ் சென்றார். அங்கு சென்றுமென்ன? பொறாமைக்குணம் நீங்காதவராய் கயிலேசருக்கெதிரில் சமீபத்திலிருந்து கடுமையாகிய தவஞ்செய்ய வாரம்பித்தார்.

இவ்விதம் இருவருந் தவஞ்செய்திருக்கையில் ஓர்நாள் கயிலேசர் கண்விழித்து எதிர்வீட்டுச் செலலப்பர் தவஞ் செய்திருப்பதனைப் பார்த்தார். அதே சமயத்தில் செல்லப்பரும் கண்விழித்துப் பார்த்தார். உடனே அவ்விருவர்களின் கண்களும் ஒன்றையொன்று விடாமல் அரை நாழிகை வரை பார்த்த பார்வையால் அவ்விருவர்களின் மனதிலுங் குடிகொண்டிருந்த பொறாமையின் பிரதி விம்பமானது பிரகாசித்தது. அதன்பின் இருவர்களும் முன்போல் தவஞ் செய்திருந்தனர்.

அப்பால் சிலநாட் சென்றபின் சாக்ஷாத் கருணாநிதியாகிய சிவபெருமான்; கயிலேசரென்பவர் முன்வந்து உமக்கு வேண்டிய வரத்தைக் கேள் தருகிறேனென்றார். அதற்கு; காண்பதற்கரிய கடவுளைக் கண்டபின்பும் பொறாமைக் குணம் நீங்காமல்; அதோவிருந்து தவஞ்செய்வோன் கேட்பதற்கு இரட்டிப்பான வரத்தைத் தந்தருள வேண்டுந் தயாநிதியேயெனப் போற்றினார். அதன்படியே சிவபிரானும் செல்லப்பரிடஞ் சென்று உமக்குவேண்டிய வரம் யாதெனக்கேட்டார். அதற்கந்த செல்லப்பர் அதோவிருக்கிறவன் என்ன கேட்டான்? அதனை எனக்குச் சொல்லவேண்டுமெனத் தோத்திரஞ் செய்தார். இவ்விருவர்களின் நினைவைத் தெரிந்துகொண்ட சிவபெருமான்; நீ கேட்கும் வரத்திற்கு இரட்டிப்பான வரந் தனக்கு வேண்டுமென்கிறானென்றார். இவ் வார்த்தையைக் கேட்ட செல்லப்பர் மனதில் பொறாமை யென்ற அக்கினியின் சுவாலை அதிகரிக்க என்னிலும் அதிக பாக்கியம் அவனுக்கு வரலாமோவெனக் கருதி சுவாமியைப் பார்த்து செல்லப்பர் தனக்கொரு கண் கெட்டுப்போகும்படியான வரத்தைக் கொடுத்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தார். இதனைக் கேட்ட ஈசனும் புன்னகை புரிந்து அவ்வாறே ஆகுகவென வரங்கொடுத்துச் சென்றனர். உடனே செல்லப்பரென்பவருக்கொரு கண்ணும் கயிலேசரென்பவருக்கிருகண்ணுங் கெட்டது அந்தோ! இஃது மிகவும் பரிதாபம்! பரிதாபம்!

இவ்விதந் தாங்களடையும் பெரும் நஷ்டத்தையும் பாராது; அன்னியரடையும் நஷ்ட துக்கமே தனக்கானந்தமென நினைக்கிறார்கள். ஆதலால் எனது சகோதரர்களாகிய நீங்களும் துற்குணங்களிலொன்றாகிய பொறாமையென்னும் கோரையானது இருதயமாகிய நிலத்தில் வேரூன்றாமற்களைந்து நற்குணமாகிய வித்தை விதைத்து; அதன் பலனாகிய தருமத்தை தவமாகிய களஞ்சியத்திற் சேர்த்துவைப்பதே உங்கள் கடமையும் எனது கோரிக்கையுமாம். சுபம்.

* * *

ஸ்திரீகள் பக்கம்.

முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்.

அறிவிற்சிறந்த சகோதரிகளே!

சூரீய சந்திரன் பிரகாசிக்கச் சீருலாவிய இப்பூமியின்கண் வித்தியாரண்யமென்ற நகரத்தில்; சகல வேதாகம சாஸ்திரங்களையும் இதிகாச முதலிய புராணங்களையும் கற்றுணர்ந்து மேலான உத்தம குணத்தைப்பெற்ற கலாபூஷணரென்ற ஓர் வயோதிகரிருந்தார். அவர் சிறு வயது முதல் நமது சுப்பிரமண்யக் கடவுளை பூசை செய்து வந்ததன்றியும் அக்கோவிலுக்கருகாமையிலுள்ள புற்றில் நெடுங்காலமாக வசித்திருந்த பாம்பிற்குப் பால் வார்த்தும் வந்தார். இவ்விரண்டு கயிங்கரியங்களையும் விரதமாகத் தினந்தோறும் நடத்திவருகையில் அவருக்கு அந்தியகால மேற்பட்டதைதெரிந்து தனது புத்திரனாகிய கமலாகரனை அழைத்து அப்பா எனது புத்திர ரத்னமே நீ அனுதினமும் சண்முக நாதனுக்கு பூசை செய்வதுடன், நான் பால் வார்த்து வந்த பாம்பிற்கும் பால் வார்த்து வருவாயாகில் உனக்கு சகல சம்பத்தும் அதிக மேன்மையும் உண்டாகுமென்றுரைத்து பரகதியடைந்தார். அதன்பின் கமலாகரன் தந்தைசொல் மிக்க மந்திரமில்லையென்ற வாக்கியத்தை சிரமேற்கொண்டவனாய் தகப்பனுக்குச் செய்யவேண்டிய கருமகிரியைகளைச் செய்துமுடித்தபின் குகப்பெருமானுக்கு பூசை செய்தும், பாம்பிற்கு பால்வார்த்தும் வந்தான்.

இவ்விதம் நடந்துவரும் காலத்தில் கூடாவொழுக்கம் குடிகொண்ட சில மூடர்களுடைய சிநேகம் கமலாகரனுக் குண்டாயிற்று. அவர்களின் சிநேகங் கிடைத்த சில தினங்களுக்குப்பின் தனது குலாசாரந் தவறி தாசிகள் வீட்டுக்குப் போக்குவரத்தாயிருந்தான். அத்தாசிகளில் ரூப சௌந்தரியாகிய சுந்தராங்கி என்பவள் கமலாகரனை தனது தந்திர சாலங்களெனும் வலையை வீசி அதனுட் சிக்கும்படி செய்துகொண்டாள். அதன்பின் கமலாகரன் அவ்வலைக்குட் கட்டுப்பட்டவனாய் அவளை நம்பி சிலநாட்களில் தனது தந்தையால் சம்பாதிக்கப்பெற்றுள்ள சகலசம்பத்தையும் சுந்தராங்கிக்கு கொடுத்து ஒரு காசுமில்லாதவனாகினான். அதனைக்கண்ட வேசியானவள் பொருளில்லாதவனின் சிநேகந் தனக்கு வேண்டுவதில்லையென்றக் குறிப்பைக் காட்டி நாளுக்குநாள் கமலாகரனை வெறுத்துவந்தாள்.

சுந்தராங்கியானவள் அடிக்கடி தன்னை வெறுத்துப்பேசியதனைக் கண்ட கமலாகரன் கையிலொரு காசுமின்றியும் இன்னது செய்வதென்று

தோன்றாமலும் சுந்தராங்கியை மறக்க முடியாமலும் மனம் வருந்தி எவ்விதத்திலும் அவன் மரணமடைவதைத்தவிர வேறு வகை யில்லாமையாலும், தான் பால் வார்த்து வளர்த்துவந்த நாகம் வசிக்கும் புற்றினுள் தன் கையை விட்டான். அவன் கையைக்கண்ட நாகமானது நடுநடுங்கி, நமக்கு அநேக நாட்களாய்ப் பாலூட்டி வளர்த்தவன் கையானதால் இதனை நாம் கடிக்கப்படாதென்றுநினைத்து அவன் கையில் தனது நாகரத்தினத்தைக் கக்கியது.

அந்த ரத்தினத்தைக்கண்ட கமலாகரன் தான் வைத்துப்பிழைத்துக்கொள்வோமென்று நினையாமல் புத்தி மயங்கி சுந்தராங்கியின் வீட்டிற்கோடி அவ்விரத்தினத்தை அவள் கையில் கொடுத்தான். அதனைக்கண்ட சுந்தராங்கியானவள் மிகவுஞ் சந்தோஷமும் அன்புங் கொண்டவளைப்போல பாசாங்கினால் கமலாகரனை மயங்கும்படி செய்து இவ்விரத்தினம் உனக்கெவ்வாறு கிடைத்ததெனக் கேட்டாள். அதற்கவன் உண்மையைச் சொல்ல அப்படியாயின் அந்நாகத்தினிடம் இன்னொரு ரத்தினமிருக்கிறது, அதனையும் வாங்கி வருவாயானால் நான் உன்னுடன் இணைபிரியாம லிருப்பேனென்றாள்.

அவ்வார்த்தையைக்கேட்ட கமலாகரன் மிகுந்த சந்தோஷமுடையவனாய் “கெடுமதி தனக்குத் தோன்றுதென்ப” அந்நாகத்தைக் கொன்றாலன்றி இன்னொரு ரத்தினம் தனக்குக்கிடையாதென நினைத்து வரும்வழியில் ஓர் மரத்தில் கிளையொன்றை யொடித்துக்கொண்டு வந்து அப்புற்றில் செலுத்தி அக்கிளையினால் குத்தினான். அதனைக்கண்ட நாகமானது விஷாக்கினி சுவாலிக்க அதிக கோபங்கொண்டு அவனைக்கடித்தது. உடனே விஷமேறி கமலாகரன் மாண்டான். இதனை ஓர் வித்வான் கீழ்க்கண்ட செய்யுளாகச் செய்தான்.

பையராமணிப் பாவையர்க்கீய்ந்திடக்
கையிராமலே காளையிறந்தனன்
செய்ததீவினை செய்தவர்க் கெய்திடும்
ஐயமில்லை யரன்சிவனாணையே. —என்ற

இப் பாடலை அந்நகரத்தில் வடதிசையிலுள்ள மடத்தில் வெகுநாளாக வசித்திருக்கும் ஓர் பரதேசி இராஜாவின் அரண்மனையின் பின்புறமுள்ள வீடுகளுக்குப் பிச்சைக்கு வரும்போதெல்லாம் பாடிக்கொண்டுவருவதுவழக்கம். அப்பரதேசிக்கு இப்பாடலைத்தவிர வேறுபாடல்தெரியாது. இப்பாடலை இராஜாவின் மனைவி அனுதினமுங்கேட்டு வெறுப்புற்று அவனைக் கொன்றுவிட வேண்டுமென நினைத்து ஒருநாள் தன் தாதியிடத்தில், மத்தியானம் சாப்பாட்டுக்கு அப்பரதேசியை வரும்படி சொல்லிவாவென்றனுப்பினாள். அத்தாதியானவள் அவ்வாறே அவனிடஞ் சொல்ல அவனும் அப்படியே வருவதாய் ஒப்புக்கொண்டு சென்றான். இராஜாத்தியானவள் அவன்

வருவதற்குள் வேறே ஒரு மண் பானையில் விஷங்கலந்து சாதஞ் சமைத்து அதற்குத் தாரமான காய் கறி முதலியதும் வைத்து அப்படியே மண் பாத்திரத்துடன் அவனிடம் கொடுத்து விடும்படி தாதிகளுக்குச் சொல்லியிருந்தாள். அதன்படியே தாதிகளும் செய்துவைத்து அப்பரதேசியின் வருகையை எதிர்பார்த்திருந்தார்கள்.

அச்சமயத்தில் பரதேசியானவர் அரண்மனையின் அந்தப்புரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். அவ்வழியில் அப் பரதேசியைத் தெரிந்த ஒருவன்; தன் தகப்பனுக்குத் திதியாகையால் தாங்கள் கட்டாயம் எனது வீட்டிற்கு வந்து சாப்பிடவேண்டுமெனக்கூப்பிட்டான். பரதேசியும் அவன் வார்த்தையைத் தள்ள முடியாமல் அப்படியே வருகிறேனென்று அவன் வீட்டுக்குச் சென்று அறுசுவையுடன் கூடிய அன்னம் புசித்து விடை பெற்றுக்கொண்டு ராஜபத்தினியின் அந்தப் புரத்தின் கொல்லை வாயலில் வந்து கதவைத் தட்டினான். அவன் வரவிற்காக எதிர்பார்த்திருந்த தாதியானவள் கதவைத்திறந்து அவனுக்காக வைத்திருந்த அன்னமுதலிய பதார்த்தங்களையும் பாத்திரத்துடன் கொடுத்து உனது மடத்திற்குக் கொண்டுபோய் சாப்பிடுமென்று சொல்லி தாதியானவள் கதவை யடைத்துக் கொண்டு போய் விட்டாள்.

அதன்பின் அப்பரதேசியும் பாத்திரத்துடன்பதார்த்தங்களை எடுத்துக்கொண்டு மடத்திற்கு வந்து சாதத்தில் நல்ல தண்ணீர்விட்டு வைத்து காய் கறி முதலியதை அடுப்பில்வைத்து சுண்டவைத்துவிட்டுத் தனது காரியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

மறுநாட் காலையில் இராஜன் தனது பரிவாரங்களுடனும் மந்திரி பிரதானிகளுடனும் வேட்டையாடப் புறப்பட்டு காட்டிற்குச்சென்று வேட்டையாடித் திரும்பி நகரத்தை நோக்கி வரும்போது இராஜன் தாகவிடாய்ப் பொறுக்கமுடியாமல் பரதேசி வசித்திருக்கும் மடத்தின் சமீபத்தில் பல்லக்குடன் வந்திறங்கி அம்மடத்திலுள்ளவரிடம் கொஞ்சந் தண்ணீர் வாங்கி வரும்படி மந்திரியை அனுப்பினான். அதன்படி மந்திரியும் மடத்திற்குட் சென்று பரதேசியைக் கண்டு மகாராஜாவுக்குத் தாக சாந்தி செய்யக் கொஞ்சந் தண்ணீர் வேண்டுமெனக் கேட்டான். பரதேசியானவர் அச்சமயம் நல்ல தண்ணீர் கைவசமில்லாமையால் ராஜபத்தினி கொடுத்த சாதத்தில் தான் வார்த்துவைத்திருந்த தண்ணீர் தெளிந்து முத்துப்போலிருந்ததால் அத்தண்ணீரை பாத்திரத்தில்விட்டு மந்திரியிடம் கொடுத்தான்.

மந்திரி அத்தண்ணீரைக்கண்டு சந்தோஷமடைந்து மகாராஜாவினிடம் கொண்டுவந்து கொடுத்தான். உடனே மகாராஜாவானவர் தாகவிடாயால் அப்பாத்திரத்திலுள்ள தண்ணீர் முற்றிலுங்குடித்துவிட்டு அப்பாடி

என்ற சத்தத்துடன் பாத்திரத்தைக் கீழே வைத்தார்." அதன்பின் சிறிது நேரத்திற்குள் இராஜாவுக்கு ஒருவித மயக்கமுண்டாய் தலை கிறுகிறென்று சுழலப் பல்லக்கில் குப்புறவிழுந்து மரணமானார். அதனை மந்திரி கண்டு மதிமயங்கி சற்று நேரம் ஒன்றுந் தோன்றாதவனாய் நின்று பின் மதிதெளிந்து பல்லக்கின் மூடு திரையை விட்டு போகியர்களை பல்லக்கைத் தூக்கச் செய்து அரண்மனை அந்தப்புரத்திற்கு கொண்டுவந்து இராஜாவை பல்லக்கைவிட்டெடுத்து பஞ்சணையில் படுக்க வைத்து வைத்தியர்களைக் கொண்டு பரிக்ஷித்ததில் விஷத்தினால் மரணமடைந்ததாய்த் தெரியவந்தது. அதன்பின் வைத்தியர்களை அனுப்பிவிட்டு தண்ணீர்கொடுத்த பரதேசியை யழைத்துவரச் செய்து நீயேன் இராஜாவுக்கு விஷத்தை கொடுத்தாய்? அவருனக்கென்ன கெடுதல் செய்தாரென்றான். அவ்வார்த்தையைக்கேட்ட பரதேசி தேகமுற்றிலும் நடுநடுங்கி இந்நகரமாகிய தாய்க்குக் கணவனாகியும், இந்நகரவாசிகளுக்குப் பிதாவாயும் விளங்கும்; மகாராஜாவுக்கு எதற்காக விஷத்தை கொடுக்கவேண்டும் அவ்விதம் என் மனப்பூர்வமாய் விஷத்தைக் கொடுப்பேனா என்றான். இதனைக்கேட்ட மந்திரி; ஆனால் நீ கொடுத்த தண்ணீரைச் சாப்பிட்டபின் மகாராஜாவுக்கு ஒருவித மயக்கமுண்டாகி அநேகர் கொடுத்த மருந்தினால் ஒருவாறு மயக்கந் தெளிந்து களைப்பினால் படுத்துக் கொண்டிருக்கிறார் அதன் காரணமென்ன? (பரதேசி) அதன் காரணம் எனக்கொன்றுந் தெரியாது; அந்தச் சாதமானது நமது உலக மாதாவாகிய ராஜ பத்தினியினால் எனக்குக்கொடுக்கப்பெற்றது. அவர்களை விசாரித்தால் உண்மை விளங்குமென்றார்,

அதன்பின் மந்திரி அப்பரதேசியை இருக்கச் செய்து தான் மட்டும் அந்தப்புறஞ் சென்று விசாரிக்க சங்கதி தெரிந்து வருத்தப்படுவதை இராஜபத்தினி கண்டு ஏன் வருத்தப்படுகிறீர்கள்? என்று கேட்க அரசன் இறந்துபோனதைச் சொல்லக்கேட்டு வேரற்றுவிழும்-மரம்போல பூமியில் விழுந்து புரண்டு பலவிதமாய்ப் புலம்பி "நானொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்ததே" என்றேங்கி ஆறாத் துன்பத்திற்காளானாள் அதன்பின் மகாராஜாவை அடக்கஞ் செய்துவிட்டு மந்திரி தானே அந்நகரத்திற்கு அரசனானான். ஆகையால்; எனது சகோதரிகளே! நீங்கள், ஒருவருக்குந் தீங்கு செய்ய நினைக்காமலும் சன்மார்க்க வழியைவிட்டுப்பிசகாமலும் நடையுடை பாவனையினாலும் நல்லோரெனப் பல்லோராலும் புகழும்படி விளங்குவதே உங்கள் கடமையும் எனது கோரிக்கையுமாம். சுபம்.

எம். பாலுசாமி நாயுடு.
மதுரை.

தேவதாஸன்.

ஓர் துப்பறியும் நவீனம்.

முதல் அத்தியாயம்.

16-ம் வருடம் மாலை 4 மணிக்கு, மதுரை, மாசிவீதியில் உள்ள உன்னத மாளிகையொன்றின் மேன்மாடத்தின் ஓர் அறையில், ஒரு யுவதி, சாய்மான நாற்காலியிற் சாய்ந்துகொண்டு ஏதோ ஆழ்ந்த யோசனையில் மூழ்கிக் கிடந்தாள். அவள் வதனம் மிக்க சோர்வுற்றிருந்தது. அந்தோ! அங்கணமணியாம் இவள் அகம் ஆறாத் துயரத்திற் காளாகிற்று. தன்னை மறந்திருந்த 'தருணீ' தனக்குத் தானே தேற்றிக்கொண்டாள்.

என் கணவர் சென்னைக்குச் சென்று இன்றுடன் பதினான்கு நாளாயிற்று. அவருடைய வரவை எவ்வளவோ ஆவலுடன் எதிர்பார்த்தும் வீணாயிற்று. வேலைக்காரர்கள் விஸ்வாசத்துடன் நடந்துகொள்கிறார்களென்றாலும் அபலையாகிய என்னால் அவர்களை நம்பக்கூடவில்லை. வேதவதியான என் தோழி என்மேல் மிக்க வாஞ்சையுடையவள் ஏராளமான திரவ்யக்குவியல்கள் என்னைச் சூழ்ந்திருந்தும் எனக்கு அவைகள் பயனற்றவைகளாகவே விளங்குகின்றன. என்னுடைய தங்கை மனோகரிக்கு இரண்டொரு லிகிதங்கள் எழுதினேன். அவைகளுக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. சென்னைக்கு என் கணவருக்கு இரண்டு தந்திகள் அனுப்பினேன். அவருடைய மனம் இரும்போ! கல்லோ!! அரிய பதிலொன்றும் அளித்தாரில்லை. எனது கணவருக்கு அன்பார்ந்த நண்பரும் துப்பறிவதில் உலகப்பிரசித்தி பெற்றவருமான தேவதாசனுக்கு நேற்று மாலை தந்திச்செய்தியனுப்பினேன். அதற்கும் இதுவரை பதில் வந்தபாடில்லை. ஐயோ! என் கணவர் சென்றதுமுதல் இந்நாள் வரை ஏன்! இந்நிமிஷம்வரை அவரை மறந்தறியேன். அவருடைய இனிய மொழிகளும், கருணைமிகுந்தொழுகு வதனமும் நான் என்றும் மறக்கக் கூடாதனவாகவிருக்கின்றன. ஈசனே! ஈசனே! இப்பாழுஞ் ஜென்மத்திற்கு இத்தனை சுகங்களெதற்கு? எந்தப் புண்ய புருடரால் இந்த அளவற்ற செல்வங்களுக்கு அதிகாரியாக்கப்

பெற்றேனோ! எவரிடம் என் கற்பினைக் கொடுத்து உண்மைக் காதலையடைந்தேனோ! அவ்வாண்சிங்கமல்லாது என் துயரத்தை நீக்க வல்லவர் யார்? என்று புகன்றுகொண்டிருந்தாள். களங்கமற்ற வெள்ளிய சந்திரனைப் பழித்த அவள் வதனம் சோகமென்னுங் களங்கத்தால் வாடியிருந்தது. ஒழுங்குப் படுத்தப்படாமல் அங்குமிங்கும் தொங்கிக்கொண்டிருந்த கேசராசிகள் அவள் அழகை அதிகப்படுத்தினவேயன்றிச் சிறிதுங் குறைத்தில. அவள் கொண்ட துக்கம், அந்நங்காதலன் அகன்றதால் ஏற்பட்டது. கற்புள்ள காரிகைகளுக்குக் கணவனன்றோ தெய்வம்? தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை என்றார் திருவள்ளுவர். நாரீமணிகளுக்கு நாயகனே சகலமும் கணவன் கசடனாயினும், குரூபியாயினும், தரித்திரனாயினும் அவனில் பக்தி விசுவாசத்துடன் நடந்துகொள்பவளே சதி. சகிக்கமுடியாத சங்கடத்திலும் கற்பைக் காத்துத் தைரியத்துடன் வீற்றிருப்பவளே நாரீமணியெனப் பெறுவாள். தமயந்தி, சாவித்திரி, சந்திரமதி, சீதை முதலான வீராங்கனைகளினாலன்றோ பாரத வருஷம் பலனடைந்திருக்கிறது. கற்பின் அருமையை என்னென்றுரைப்பது. அதுவே தமது அரும்பெரும் பொருளென மதித்துப் போற்றும் அங்கனாமணிகளின் பெருமைதான் என்னே!

நிற்க, மனக் கலவரத்துடன் மங்கையிருந்த அறைக்கு மாது ஒருத்தி வந்தாள். தாங்கமுடியாத துக்கத்தால் தன்னை மறந்திருக்கிறாள் தருணீமணி என்பதை அறிந்துகொண்டாள். அடக்கமுடியாத துக்கத்துடன் ஆ! ஜீவரத்தினம்! என்ன சோகம், என்றுமில்லாத கோலம் என்றாள். வனிதையும் வந்தவளைப் பார்த்து திடுக்கிட்டுத் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, தோழீ வேதவதி நீ வந்ததை நான் கவனிக்கவில்லை. வேறு சிந்தனையிலிருந்து விட்டேன். விசேடமேதாவதுண்டா? உன் முகம் சந்தோஷத்தால் நிரம்பியிருக்கிறதே என்றாள் மாது.

வேதவதி—ஆம்! உனக்கு ஓர் கடிதம் உண்மையில் வந்தது. கொடுத்துனை மகிழ்விக்க கொண்டிதோ வந்தேன்.

ஜீவரத்தினம்—ஆ. கடிதமா! எனக்கா!! எங்கே!—என்று கூறிக் கரத்தை நீட்டினாள்.

அவள் கரம் நடுங்கிற்று. அவள் முகம் மனத்தினிடையே நிகழும் பல சந்தேகங்களை வெளியாக்கிற்று.

வேதவதி கடிதத்தைக் கொடுக்க மேல்விலாசத்தைக் கூர்ந்து கவனித்தாள். சந்தோஷத்தால் ஆனனம் மலர்ந்தது. உடனே திறந்து எழுதியிருக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பருகுவதேப்போலப்படித்தாள். படித்து முடிந்த விநாடியே மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். வேதவதி தாங்கிக்கொண்டிராவிட்டால், மண்டை உடைந்து மண்ணுலகைத் துறந்திருப்பாள் மங்கை. தர்மந்தலைகாக்கும் என்பதிதுதான்போலும்!

மிக்க பீதியடைந்துவிட்டாள் வேதவதி. ஜீவரத்தினத்தின் மயக்கத்தைத் தீர்க்கவெண்ணி, கதவைச் சாற்றிக்கொண்டு கீழ்க் கட்டிற்கு ஓடினாள். அவள் சென்ற மறுநிமிஷம், ஜீவரத்தினம் படுத்திருக்கும் அறையைத் திறந்துகொண்டு உட்புகுந்தான். அவள் கிடக்கும் அலங்கோலத்தைக் கண்டு பிரமித்து நின்றான் ஒரு வாலிபன்.

தொடரும்.

கே. எல். சிங்காரவேலு பிள்ளை.

சுகாங்கி.

(பிங்கள௵ ஆடி மாதச் சஞ்சிகையின் தொடர்ச்சி.)

இவ்விதமாகச் சென்ற அவ்விரு கந்துகங்களும், மலைச்சாரலின்கண்ணுள்ள சோலையைச் சேருஞ்சமயம். ஓர், இனிமையான குரலின் றொனி கேட்டது. உடனே முன்னாற் சென்ற "புவன், பின்னாக வந்துகொண்டிருந்த பெண்மணியை நோக்கினான். (அ ன்னவளை) அப்பரியின்மீது காணவில்லை; ஆனால்! மற்றொரு புருட னிருக்கக்கண்டு அவனைத் தனதுயிர்த் தோழனெனவெண்ணி ஏ. அனங்கனுங்கண்டு அஞ்சலிசெய்யும் குயங்களையுடைய கோ தையர் மயங்குஞ் சுந்தரா! தாங்கள் வரைந்துள்ள நிருபத்தின்படி நான், நடந்துகொண்ட விஷயத்தைப்பற்றித் தங்கள் இதயமலர் மலருமென நம்புகின்றேன். இப்பொழுது நம்மிருவரையுஞ் சந்திக்கச் செய்த பெண்மணியானவள். எங்கு சென்றாளென்பதனையுந் தா ங்களெப்பொழுது இப்பரியின்மேல் வந்தயர்ந்தீர்களென்பதனையுங் கவனித்தேனில்லை பார்த்தீர்களா? இவ்விதம், தாங்களிருப்பதாகச்

சொல்லிய பூஞ்சோலையினை என் புத்தியானது நாடியிருந்தது என்பதனை யான் சொல்லாமலே தாங்களறிந்திருப்பீர்கள்; ஆகையால்! தாங்கள் வந்ததனை கவனிக்காத என், குற்றத்தை மன்னிப்பீர்களென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேனென்றான்.

அதற்கப் பரியின்மீதிருந்தவன் ஒன்றும் பேசாததனைக்கண்டு சற்று, கவனித்து தனதுயிர்த்தோழன் அல்லவென்றறிந்து ஆகா! இஃதென்ன இவ்விதமும், கருதலாகுமாவென் றதிசயித்தான்; இதனுள் விசாலமாகிய சோலையின்கண்ணிருந்து தடார், தடாரெனக் குதிரைகள் வருகின்ற சத்தங்கேட்டது. உடனே திரும்பிப் பார்த்தான். அதற்குள் அப்பரிகளின்மேல் வந்துகொண்டிருந்த திட்காத்திர தேகர்களான வீரர்கள். ஆயுதபாணிகளாய் நான்கு பக்கமும் (புவனை) வளைந்துகொண்டனர். அக்கணம் ‘புவனை’யும் மற்ற வீரர்களையும், பரிகளையும், அடைத்திற் காணவில்லை; ஆனால்! ‘புவன்’ ஏறிவந்த புரவிமட்டும் அச்சோலையின்கண் தழைத்துள்ள பசும்புற்களை மேய்ந்துகொண்டிருந்தது.

இரண்டாவதத்யாயம்.

இச்சம்பவம் நடக்குமுன்,—

சண்பகம் இரவு 12-மணிக்குமேற் சற்று கண்ணயர்ந்து விழித்தனள். சப்ரமஞ்சத்திற் சயனித்திருந்த “சௌந்தரி”யைக் காணவில்லை. கபாடபந்தனஞ் செய்திருந்த வாயல்களெல்லாந் திறந்திருக்கக் கண்ட சண்பகம், சந்தேகித்தவளாய் திடீரென்றெழுந்து உள் மாடியிற்சென்று நான்கு பாரிசமும் தேடினாள். அவ்விடத்திலுங் காணாமையால் உடனே, மற்ற சகிகளையும் விழிக்கச் செய்து அழைத்துக்கொண்டு மேன்மாடியிற் சென்றிருப்பாளென, அங்கு சென்று பார்க்க “சந்திரிகையோ அநேக நட்சத்திர ராசிகளுடன் மேக சாலங்களின் மறைபடாமற் “சௌந்தரியின்” வதனாரவிந்தம் போற் பிரகாசித்திருந்ததன்றி” சௌந்தரியைக்காணாமல் சண்பகம் மனங்கலங்கி கரங்களைப் பிசைந்துகொண்டு சேடியரிடஞ் சொல்வதாகினள்.

சண்பகம்—‘அடி கமலம்” இஃதென்ன மோசமாயிருக்கின்றது, நமதெசமாட்டியைக் காணவில்லையே என் செய்வேன்! சுகானந்தனிடம் யாதெனச் சொல்வேன்; மூடியிருந்த கதவுகள் திறந்திருக்கக் கண்டபோதே மனமுஞ் சோர்ந்தனவே இதற்கென்செய்வேனெனக் கலங்கினாள்.

கமலம்—ஆகா! நீ தயங்குவதிற் காரியமென்ன? சற்று மனத்தைரியமாய் வா, ஒருவாறு தென்றற்காக உத்யானவனத்திற் சென்றிருந்தாலுமிருக்கலாம், அங்கு சென்று பார்ப்போம்.

சண்பகம்—ஆ! இந்நிசி வேளையிலா? ஒருக்காலும் அங்கு சென்றிருக்கமாட்டாள். இஃதேதோ மோசமாய்த்தானிருக்கின்றது. நாம் எவ்விதந் தைரியமாயிருக்கமுடியும்?

கமலம்—சரி, இனி நாம், தாமதமின்றி உத்யானவனஞ் செல்வோமெனச் சண்பகத்தின் மனதைத்தேற்றி அழைத்துக் கொண்டு யாவர்களும் உத்யானவனத்திற்குச் சென்றார்கள்.

இவ்விதஞ் சேடியரனைவரும் சண்பகத்துடன் உத்யானவனத்திற் றேடி வருகையில் ரோஜாச் செடியினோரத்தில் இரத்தமானதுறைந்து, தேங்கிச் சேறாகியதிற் “சந்திரவனனவனொளித்திருக்கின்றனனோ வென்ன” அன்னவன் பிரதிபிம்பமானது பிரகாசிக்க அவ்விரத்தத்தி லாடற் செய்திருந்தனன். அதனருகே வெட்டப்பட்ட ஓர் அழகிய கரமானது முன்கைப் பொன் காப்புடன், விரலில், இரத்தின மோதிரமுஞ் சொலித்துக்கொண்டிருந்தது அதன் சமீபத்திற் “சௌந்தரி” முகந்துடைத்துக்கொள்ள அன்னவள்பெயரை வரையப்பெற்ற அழகாகிய கை வஸ்திரமுமிருந்தது. அதனைக் (கமலம்) முன்னதாய் வந்து கவனித்து சிந்தாக்கிராந்தியாய் “சண்பகம்” சொன்னவை சரியாயிருக்கின்றன. ஆரோ சௌந்தரியைக் கொலை செய்து கரத்தைத் துணித்து; யாது காரணத்தினாலோ இவ்விடத்திற் போட்டுச்சென்றிருக்கவேண்டுமென் றுத்தேசித்தாள். அதற்குள் (சண்பகம்) அவளருகிற்சென்று இஃதென்ன பார்த்துக்கொண்டிருக்கிறாயென்றாள். (கமலம்) அக்கேள்விக்கென் சொல்வாள் பாவம்! ஒன்றுஞ்சொல்ல வாயெழாமல், திப்பிரமைகொண்டிருந்தாள். உடனே (சண்பகமும்) பூமியைப் பார்க்க அங்குமுன் சொன்னவைகளை கண்ணுற்றளவில் ஆ! தெய்வமே யுன்தென்னமிப்படியுமா விருந்தது எமதெசமாட்டியைக் கொலைசெய்யவுந் தகுமோவென்றலறி அடியற்ற மரம்போல் பூமியிற் சாய்ந்து மூர்ச்சையானாள். இதனைக்கண்ட பாங்கியரோடி மார்போடணைத்து அன்னவள் மயக்கத்தை நீக்கினர். உடனே சண்பகந்தெளிந்து “கமலத்தையும் லீலாவதியையும்” அக்கரத்தைக் காத்திருக்கச் செய்து மற்ற பாங்கியரை கன்னிகா மாடத்திற் கனுப்பிவைத்து (சுகானந்தன்) அரண்மனைக்கோடினாள். அப்பெண்மணியானவள் வருகின்ற செயலைக்கண்ட காவலாளர்கள்பயந்து என்னகாரணமோ தெரியவில்லையென்றாலோசித்துத் தடைசெய்யாதிருந்தனர் “சண்பகம்” ஒருவரையும் கவனியாது, அநேக கட்டுகளிலுஞ் சுகானந்தனைக்காணாமல் இராஜனதுபள்ளியறையைச்சேர்ந்து பரிமளமிகுந்த பஞ்சணைமீது தனது மனைவியாகிய (குமுதவல்லி)யுடன் சம்பாஷித்

திருந்த சுகானந்தன் பாதத்தில் விழுந்து மூர்ச்சையானாள். இதனைக்கண்ட (குமுதவல்லி) திடீரென்றெழுந்து அன்னவளை யெடுத்துத் தனது மார்போடணைத்தனள். அதற்குள் (சுகானந்தன்) அவ்வறையிலிருந்த ஓர் வஸ்துவைத் தொட்டளவில் அதினின்றுங்கணகண வெனுந் தொனியானது கிளம்பினது. அத் தொனியைக் கேட்டு அனேகம் பாங்கியர்கள் ஓடி வந்து "சண்பகத்தைத்" தேற்றத்தெளிந்தாளாகினுஞ் சரீர முற்றும் வியர்வை சிந்த நடுங்கிக் கொண்டிருந்தாள். அதனைக்கண்ட "சுகானந்தன்" சண்பகத்தை அருகழைத்து வினவுகின்றான்.

சுகானந்தன்—ஆ, சண்பகம், ஏன் இவ்விதம் மயங்குகின்றாய்? யாது நடந்தன சீக்கிரஞ் சொல்?

சண்பகம்—யான் சொல்வதற்கு என்னவிருக்கின்றது; தெய்வ கருணை யிப்படியுமிருந்ததோ! யாது காரணமோ தெரியேன்.

சுகானந்தன்—அஃதிருக்கட்டும்; நேர்ந்தவை யென்ன?

சண்பகம்—சிருங்கார வனத்திற் பெரிய மோசம் நடந்திருக்கின்றது.

சுகானந்தன்—"அடி துஷ்டை" மோசமென்றாலென்ன?

சண்பகம்—ஆ பிரபு, (சௌந்தரியைக்) காணவில்லையே.

சுகானந்தன்—சௌந்தரியா? எங்கு சென்றிருப்பாள்? எங்குஞ் செல்லாள், உத்யானவனத்தில் பார்த்தனையா?

சண்பகம்—இல்லை, இல்லை, யாரோ (கொலை) செய்திருக்கிறார்கள்..... ......கொலை..............

சுகானந்தன்—என்ன? "சௌந்தரி" தன்னையா?

சண்பகம்—ஆம்.

சுகானந்தன்—ஆ; தெய்வமே! நானென்செய்குவேன் அட்டா உன்றனையா கொலை செய்வது? ஏ புத்ரிகா இரத்னமே, நீ யெங்கொளித்தனை; யாருன்னை கொலை செய்தாரென்றேங்கி, நிலத்திற் சாய்ந்து மூர்ச்சித்தான்.

இதனைக்கண்ட சேடியரோடி, (சுமுகனுக்குரைத்தனர்) அன்னவனுடனே; நான்குபக்கமும் மூடியிட்ட கைத்தீபத்துடன் "சுகாகனந்தன் பள்ளியறையைச் சேர்ந்து, சுகானந்தன், குமுதவல்லி, சண்பகம், மூவருமடைந்திருக்கின்ற சோகத்தைக் கண்டு சகிக்காதவனாய்," (சௌந்தரி)யை யார் கொலை செய்திருப்பார்? அல்லது பொய்யோ? மெய்யோ? எதற்குங் கன்னிகாமாடஞ் சென்றறிவோமென்றுத்தேசித்து அம் மூவரின் சோகத்தையுமாற்றி அழைத்துக்கொண்டு சிருங்கார வனத்தை நாடிச் சென்றான்.

தொடரும்.

PRINTED AT THE G. P. WORKS, KARAIKUDI.

உ

பாயபதி துணை.

மனோரஞ்சனி.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."— திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 1 } பிங்கள-௵ புரட்டாசி-௴ 31௳
1917-ம் ௵ அக்டோபர்-௴ 16௳ { பகுதி 3

கடவுள் வணக்கம்.

சத்தாகித் தானாகி யெங்கு மாகி
சர்வபரி பூரணமா மகண்ட மாகி
வித்தாகி வித்துள்விளை மணிய தாகி
விளங்கிநின்ற வயன்மாலு மூவ ராகி
முத்தாகி முத்துவளர் சிப்பி யாகி
மூதண்டங் கடந்தவெளி நடன மாகிச்
சித்தாகிச் சிலம்பொலியின் கீத மாகித்
திகழ்கின்ற பரம்பொருளைச் சிந்தை செய்வாம்.

நித்தமுஞ் சுழினை வழிமனஞ் செலுத்தி
ரேசக மாதியா யறிந்து
நியமமாம் பிராணா யாமமாம் நாதம்
நிறைவிந்து கலைகளை விரும்பித்
தத்துவந் தொண்ணூற் றாறையுந் தெரிந்து
சாக்கிரந் தன்னையு முணர்ந்து
சதாசிவ முதலா யறுவரைப் பணிந்து
தற்பரை தன்னையு மிறைஞ்சி
புத்தமு தூறல் தன்னையே யருந்திப்
பூரணா னந்தமே யுகந்து
புதுமையா முனது சிவானுபோ கத்தைப்
பொருந்தவே நின்பத மருள்வாய்
அத்தனே கனக அம்பலத் தரசே
யமரர்கள் தேடியுங் காணா
அதிசய வடிவே சதுர்மறைப் பொருளே
ஐயனே ஞான தேசிகனே.

மனோரஞ்சனி.
பிங்கள-௵ புரட்டாசி-௴ 31௳

ஒற்றுமை பெற வாழ்.

"ஒற்றுமை" என்னும் நான்கு எழுத்துக்களாலமைந்த சிறந்த பதமானது மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாத மஹா மந்திரம்போல விளங்குகிறது. இந்நிலவுலகின்கண் எறும்பு முதல் யானை ஈறாகவுள்ள சகல ஜீவராசிகளும் ஒற்றுமையால் பெரும் பயனை அடைகின்றனவென்பதை எவருமே மறுக்கார். ஒரு குடும்பத்திலுள்ளார் சந்தோஷ சித்தராய் விளங்குவதற்கும் ஒரு கிராமத்திலுள்ளார் அமைதியாய் வாழ்வதற்கும் ஒற்றுமையே பிரதானமென்பது நமது அநுபவமாகும். அவ்வண்ணமே ஒரு தேசம் முன்னுக்கு வர வேண்டுமானால் ஜனங்களின் ஒற்றுமை முக்கியமானதென்பது நாம் சொல்லாமலே விளங்கும். ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் ஒற்றுமையின்மையால் கலகங்கள் விளைவித்து கோர்ட்டே கதியென்று திரிவோரைக் கண்டு அயலார்கள் எப்படி கேலி செய்து நகைப்பார்களோ! அவ்விதமே ஒரு தேசத்திலுள்ளவர்கள் ஜாதீயப் போராட்டங்களினால் ஒற்றுமையற்றுக் கெட்டலைவார்களானால் பிற தேசத்தவர்களால் நன்கு மதிக்கப் பெறாமல் கேவல நிலைமையில் இருப்பார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

நம் தாய் நாடானது பல ஜாதிகளாலும், பல மதங்களாலும், பல வேறு பாஷைகளாலும் நிரம்பப் பெற்றதாகும். நம்மவர்கள் உலகத்தின் மற்றவர்களுக்கு நாகரீகத்தைக் கற்றுக்கொடுக்கும் அத்துணைச் சிறந்த நிலைமையிலிருந்த காலத்தும், அவர்கள் நான்கு முக்கிய பிரிவுகளாகவும் அவை ஒவ்வொன்றிலும் பல பல பாகுபாடுகளையுடையவர்களாகவுமே இருந்து "ஒற்றுமை"யின் மேன்மையால் கீர்த்தி வாய்ந்தவர்களாக விளங்கினார்கள். ஜாதி பேதமானது பூர்வம் முதலே இருந்து வந்ததாகப் பண்டைக்காலத்து இதிகாசங்களால் விளங்குகிறது. ஜாதி மத வேற்றுமையினால் ஒற்றுமையடைய முடியாதென்று சிலர் கூறுகின்றனர். அப்படி நினைப்பது முற்றும் தவறேயாகும். ஜாதிப் பிரிவினையானது தொழிலினால் ஏற்பட்டதே அல்லாமல் வேறல்லவென்பதை சாஸ்திர வல்லுனர் எவருமே மறுக்கார்.

ஒரு மனிதன் தன்னுடைய புத்தியினாலேயே உயர்ந்த அந்தஸ்திலோ தாழ்ந்த நிலையிலோ நிற்கிறான். ஒரு பஞ்சமன் சுடுகாடு காத்துப் பிணங்களைச்சுட்டு அதனால் ஜீவனம் செய்துகொண்டிருப்பானானால் சகலராலும் அசுத்தவானாகக்கருதப்பட்டுத் தீண்டக்கூடாதவனென்று சொல்லப்பெறுகிறான். ஆனால் அதே பஞ்சமனுடைய குமாரன் (அவன் பெயர் கருப்பன் என்று வைத்துக்கொள்வோம்) உயர்தரக் கல்வி பயின்று பெரிய உத்தியோகத்தை வகித்துக் காலத்திற்கேற்ற கோலத்துடன் விளங்குவானானால்; கருப்பன் என்ற பெயர் காற்றுடன் கரைந்து கருப்பண பிள்ளையோ! அல்லது முதலியாரோ! ஆகிவிடுகிறான். அத்துடன் எவ்விதமாகவேனும் திரண்ட செல்வத்தை சம்பாதித்துவிடுவானானால், அயலூரிலிருந்து வரும் ஒருவர் வீதியில் செல்லும் ஒருவரைப்பார்த்து, ஐயா! கருப்பண பிள்ளை வீடெங்கிருக்கிறது என்று கேட்பாரானால் யார்? திவான் பகதூர் கருப்பண பிள்ளையவர்களா! என்று திருப்பிக் கேட்கும் நிலைமைக்கு வந்துவிடுகிறான். ஆராய்ந்து பார்க்குமிடத்து அறிவினாலேயே ஒவ்வொரு மனிதனும் சிறப்படைகிறானென்பது தெற்றெனப் புலப்படுகிறதன்றோ.

ஜாதி மத பேதங்கள் நம்முடைய நாட்டில்மட்டும் இருக்கவில்லை. நாங்கள் ஒரே ஜாதி, ஒரே மதம், ஆகவே ஒற்றுமைபெற வாழ்கின்றோம் என்று பெருமை பேசிக்கொள்ளும் நாட்டாரிடத்திலும் இருக்கின்றது. நம்மிடம் பகிரங்கமாக அநுபவத்திலிருக்கிறது; மற்றவர்களிடம் பகிரங்கமில்லாமல் அநுபவத்தில் மட்டும் இருந்து வருகிறது. ஆகவே, இரண்டும் ஒன்றேயாகும். எனவே ஜாதி மத வேற்றுமை ஒற்றுமையின்மைக்குக் காரணம் ஆகாது. அறிவே ஒற்றுமைக்கு காரணமாகும். பல ஜாதி, பல மதம், பல பாஷையுடையவர்களால் நடக்கப்பெறும் ஐரோப்பா யுத்தமானது நீடித்த காலம் ஊக்கத்துடன் நடைபெறுவதற்கு ஆதாரம் ஏது? என்று ஒரு சிறு மாணவனைக் கேட்டால் அவன் அதற்கு விடையாக உடனே ஒற்றுமை என்று கூறுவான்.

ஆகவே நாம் நமது தாய் நாட்டின் க்ஷேமத்தைக் கருதி ஜாதி மத வித்யாசங்களை ஒரு புறமாக கட்டி வைத்துவிட்டு ஒற்றுமையுடன் பாடுபட முன் வரவேண்டும். இந்தியாவென்ற ஒரு மனிதனுக்கு பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு ஜாதியாரும் தலை, கை, வயிறு, கால்களாகிறார்கள் அந்த நான்கு உறுப்புகளும் ஒன்றுக்கொன்று முரண் பட்டிருந்தால் மனிதன் எப்படி ஒன்றும் செய்யக்கூடாதவனாகிறானோ! அப்படியே நமக்குள் ஒற்றுமையின்றி இருந்தால் தேசம் கேவல நிலைமைக்கு வந்துவிடுமென்பது திண்ணம்.

நமக்கிருக்கும் பகுத்தறிவினால் நாம் ஒருவரை யொருவர் சகோதர பாவத்துடன் நோக்கவேண்டும். அதுவே நமது சமூக தர்மமும் ஆகும். ஸ்ரீராமன் சோதரனான பரதன் கோசலா தேவியினிடத்தில்;—குகனைப்பற்றி

இன்றுணைவன் இராகவனுக் கிலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்
குன்றனைய திருநெடுந்தோட் குகன் என்பான் இந்நின்ற குரிசில்) [தான்

என்று சகோதர பாவம் தோன்றக்கூறியதாகவும், அதற்கு "கோசலை" என்னும் பெரியாள் துயரத்துடன் தொழுது நின்ற குகனை நோக்கி:—

நைவீர் அலீர்மைந்தீர் இனித்துயரால் நாடிறந்து காடுநோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்றாம் அன்றே விலங்கல் திண்டோள்
கைவீரக் களிறனைய காளை இவன் தன்னோடும் கலந்து நீங்கள்
ஐவீரும் ஒருவீர்ஆய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்திர் என்றாள்.

என்றும் கவிச்சக்கிரவர்த்தியாகிய "கம்பர்" தமது பெருமை பொருந்திய ராமாயண காவ்யத்தில் கூறியுள்ளார். ஆகையால் சகோதரபாவமே ஒற்றுமையை உண்டாக்கக்கூடியதென்று விளங்குவதாயிற்று. நான்கு வருணத்தினரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்து வாழமுடியாத அத்துணைப் பெரும் பந்தத்துள் கட்டுப்பட்டவர்களாக விருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் பிரிந்தாலும் இந்து சமூகம் நிலைபெறமாட்டாது. விஷயம் இவ்விதமிருக்க, பிராமணர்கள் உன்னத நிலைமையில் இருக்கின்றனர் என்று கூறி, ஒரு விகல்பத்தை உண்டுபண்ணச் சிலர் தோன்றி இருக்கின்றனர். அதை நோக்கும்போது மனிதன் தெய்வத்தன்மையடையக் கூடாதென்று சைத்தான் தூண்டியதாக கிறிஸ்துமார்க்கத்தில் கூறப்பட்டிருப்பதுபோல் நம்மை ஒற்றுமையுடனிருக்க விடக்கூடாதென்று கங்கணங்கட்டிக்கொண்டிருக்கும் ஒரு பூதமே நம்மவரைத் தூண்டிவிட்டிருக்குமென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

பிராமணர்கள் எப்பொழுதும் உயர்ந்தவர்களே. அவர்களிடம் ஒரு தெய்வீகத்தன்மை பொருந்தி இருக்கிறதென்பதிற் சிறிதும் ஐயமில்லை. அரிச்சந்திரன், தசரதர் முதலிய ஹிந்து சக்ரவர்த்திகள் காலத்திலும் பிற்காலத்தவர்களான மகம்மதிய அரசர் காலத்திலும் உயர் பதவிகளை வகித்திருந்தார்கள் என்று தெரிகிறது. அவர்கள் விடாமுயற்சியுடன் உழைப்பதாலும் கருமத்திலேயே கண்ணாகவிருப்பதாலும் கல்வியில் தேர்ச்சியடைந்து உன்னத நிலைமையை அடைந்தார்கள்,—அடைந்து வருகிறார்கள். அதைக்கண்டு மற்றவர்கள் பொறாமைகொள்வதும் அவர்களைக் கண்டபடி தூஷிப்பதும் அழகாகாது. சந்தோஷத்துடன் நாமும் அவர்களைப் பின்பற்றவேண்டும் நாம் முன்னேற்றமடைவதில் பிராமணர்கள் தடையாய் நிற்கிறார்களா? அல்லது, நாம் படித்துத் தேர்ச்சியடைந்தால் நமக்கு உத்தியோகங்கள் கொடுப்பதற்குக் காருண்யமிக்க கவர்ன்மெண்டார் மறுதளிக்கிறார்களா? இரண்டுமில்லையே! அவ்விதமிருக்க பிராமணர்கள் கல்விகற்று முன்னுக்கு வருவதைக்கண்டு ஏன் நாம் பொறாமைகொள்ளவேண்டும்?

ஆகையால், பிராமணர்களைத் தூஷிப்பதை அடியோடு விட்டு விட்டு பிராமணர் அல்லாதவர்கள் முன்னேற்றமடைய வேண்டியதற்கான மார்க்கங்கள் ஏது உண்டோ அவைகளைச் செய்து பிராமணர்களும் பிராமணரல்லாத இந்துக்களும் ஒற்றுமையுடன் இருக்கும்படி செய்பவர்கள் தான் இந்தியாவிற்கு நன்மை செய்ய முன் வந்தவர்கள் ஆவார்கள். கேவலம் ஒரு மண்குடத்தைச் செய்வது கடினம்" அதை உடைத்தெறிவது சுலபம்.

ஆகவே, ஹிந்து, மகம்மதிய, கிறிஸ்தவர்கள் முதலாகவுள்ள சகல ஜாதியாரும் சகல மதஸ்தரும் ஆகிய நாம் எல்லோரும் அப்ப வித்யாஸங்களை விட்டு விட்டு பாரதமாதாவின் புத்திரர்கள் ஆகவே சகோதரர்கள் என்ற நல்லெண்ணத்துடன் சகல தேசத்தினரும் மெச்சும்படி, பெருமை பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்டு சுதந்திரர்களாய்ப் பிரகாசிக்கும் நாள் எந்நாளோ அந்நந்நாளை கூடிய விரைவிற் கொடுத்தருளும்படிக்கு எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை மனமொழி மெய்களால் வழுத்துவோமாக.

பத்திராதிபர்.

சரியாய் உச்சரித்தல்.

அழகாய்ப் பேசுவதற்கு நாம் பால்யம் முதல் உரக்கப்படித்துப் பழகவேண்டும். படிக்கும்போது உச்சரிப்பு மாறுபடா திருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். தினந்தோறும் ஒருவரிடத்தில் உரக்கப்படித்துப் பிழைகளைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டும். அப்படி நாம் செய்யாவிட்டால் பிற்காலத்தில் நல்லவிதமான உச்சரிப்பையடைவது கஷ்டம். நன்றாய் உச்சரிப்பறிந்த ஸ்நேகிதர்களிடமோ அல்லது ஆசிரியர்களிடமோ உச்சரிக்கும் விதங்களை அறிந்துகொள்ளவேண்டும். எப்பொழுதும் உரக்கப் படிக்கவேண்டுமேயல்லாது வாய்க்குள்ளேயே முணுமுணுத்தல் ஒருநாளுங்கூடாது. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உச்சரிப்பு மாறுபடவேண்டும். ஒரு புத்தகத்தில் சந்தோஷமான இடங்களை வாசிக்கும்பொழுது அழுகிறதுபோலப் படிப்போமானால் ஜனங்கள் நம்மை மிகவும் அவமதிப்பார்கள் என்பதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு பேசுவதிலும் உச்சரிப்பதிலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சில வக்கீல்கள் பிரக்யாதியடைவதற்கு அழகாகப் பேசுவதே காரணம். முரட்டுத்தனமாகச் சட்டத்தைப் புரட்டிப் புரட்டிக் காண்பிப்பதிலும் சாந்தமாயும் இனிமையாயும் நியாயத்தை எடுத்துக் கூறுவதினால் நன்மையுண்டு.

" பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே."
" மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே."

என்ற நீதி வாக்கியங்களே இதற்குப் போதிய சான்றாம்.

கல்விக்கழகு கசடற மொழிதலே யாதலின் சரியாய் உச்சரிக்க ஒவ்வொருவரும் பழகவேண்டும். வாய்க்குள்ளே முணுமுணுப்பார் சிலர், மோட்டார் (கார்) வண்டியின் ஓட்டத்தையும் தோற்கச் செய்யும் வேகத்துடன் படிப்பார் சிலர். சிலர் படிப்பது ஒன்றும் விளங்காது. சிலர் இராக ஆலாபனம் செய்யத்தொடங்கிவிடுவார். இவைகளெல்லாம் மிகவும் அவலட்சணமாகும். ஆகையால் அவ்வசங்கிதங்கள் படியாவண்ணம் சர்வ ஜாக்கிரதையுடனிருக்கவேண்டும்.

உடுப்பு.

ஜனங்களின் மனதைச் சந்தோஷத்திலிருக்கும்படி செய்வதில் உடுப்பு முக்கியமான தொன்றாகும். ஆகவே, நாம் உடுப்பு விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஒருவர் அணிந்திருக்கும் ஆடையைக்கொண்டே அவரின் தன்மை இத்தகையதென்று இனிதறிந்து கொள்ளலாம். உடுப்பு விஷயத்தில் அதிக ஆடம்பரங்காட்டுவது அறிவின்மையை வெளியிடுவதாகும். நமது உடைகள் எப்பொழுதும் பரிசுத்தமுடையவைகளாக விருக்கப் பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும். பரிசுத்தமான உடையைத் தரித்துக்கொள்வதால் பலவிதமான தொத்துநோய்கள் நாடுவதில்லை. "இரக்கப்போனாலும் சிறக்கப்போ" வென்பது பழமொழி. எப்பொழுதும் பரிசுத்தமான உடைகளையே அணியவேண்டுமென்பது நம் நாட்டாரின் கொள்கையேயாம். இதனை

மேலாடையின்றிச் சவைபுகுந்தாலிந்த மேதினியோர்.
நூலாயிரம் படித்தாலு மெண்ணார் நுவல் பாற்கடலோ
மாலானவனணி பொன்னாடை கண்டு மகளைத்தந்தே
ஆலாலமீந்தது தோலாடை சுற்றும் அரன்றனக்கே.

என்று ஒரு புலவர் வேடிக்கையாகப் பாடி விளக்கியுள்ளார். அறிவாளன் தானிருக்குமிடத்தில் உயர்ந்த நிலைமையிலிருக்கும் குணக்ஞர்கள் எவ்விதம் உடைகள் அணிந்து கொள்வார்களோ அவ்விதமே அணிந்துகொள்வான். புத்திசாலிகள் எவரும் புதியபாதிரியாய் வேஷ்டி முதலானவைகளைக் கட்டிக்கொள்ளமாட்டார்கள். தங்கள் தேகசௌக்கியத்தின் பொருட்டு பரிசுத்தமான வஸ்திரங்களை தரித்துக்கொள்வார்கள். வேடிக்கையாய் போட்டுக்கொண்டால் டம்பாச்சாரியாம்! அற்பமாக அணிந்துகொண்டால் மரியாதையாகாது. ஆகவே, கூடியவரை சிறிது அழகான உடைகளையே தரித்துக்கொள்ளவேண்டும்.

பத்திராதிபர்.

சிதம்பர சிவாலயம்.

உலகெலாம் உய்ந்திடேறுதற்குரியதாய், வேத சிவாகம திவ்விய சுருதிப் பிரதிபாத்தியமாய், எல்லார்க்கும் பொதுவாய், அதனைத் தனது திருப்பெயராலுங்காட்டிச் சர்வலோகப் பிரசித்தியாய் விளங்குகின்ற சிதம்பர சிவாலயம், சிவாகமவிதிப்படியே நித்திய நைமித்திகாதி பூசைகள் நடந்துவரப் பெற்றுள்ளது.

இதனைப் பதஞ்சலி வியாக்கிரபாத மகரிஷிகளிருவரும், தாங்கள் அத்தில்லைவனத்துக்கு வந்தகாலந் தொடுத்துத் திருமூலட்டானேசுரருக்கும் ஸ்ரீமந் நடராஜ ராஜவள்ளல் அங்குவந்தருளி நடனதரிசனந்தந்தருளிய தைமாச குருபூச சுபதினந்தொடுத்து நடேசப்பெருமானுக்கும் சிவாகமவிதிப்படியே பூசித்து வந்தார்களென்றே அப்புராணங்கள் கூறுதலாலும், அவ்விருவரும் ஆத்மார்த்தமாக்கொண்டு அப்படியே பூசித்துவந்த திருப்புலீச்சுரம் அனந்தேச்சுரமாகிய இரண்டு திவ்வியாலயங்களிலும், பிராமணருள்ளே மிகச் சிறந்த ஆதி சைவர்களாகிய சிவப்பிராமணர்களாற் சிவாகம விதிப்படி நித்திய நைமித்திகாதிகள் நடந்து வருதலாலும், பதஞ்சலிப் பகவான் அப்போதே அச்சிவாகமங்களுள் ஒன்றாகிய மகுடாகம சம்பந்த பூசனையே இச்சிதம்பர சிவாலயத்தில் எக்காலமும் நடந்துவரவேண்டுமென்னும் நியமத்தை உலகெலாமுணர்ந் துய்யும்படி, அம்மகுடாகம சம்பந்தமாகவே சிற்சபா பூஜாவிதானம் என்றொரு பத்ததிசெய்து வைத்திருத்தலாலும், அப்படியே தில்லைமூவாயிர முனிவர்களும் பூசித்துவந்தமையாலும், ஆதிமனுச் சக்கிரவர்த்தி குமாரராகிய இரணியவர்மச் சக்கிரவர்த்தியும் பூர்வ சிவபுண்ணிய விசேடத்தால், வியாக்கிரபாத மகாமுனிவரை வந்தடுத்துப்பரிபாகமுதிர்ச்சிபெற்று, அவராக்ஞையின்படி ஸ்ரீமந்நடராஜப்பெருமான் திருவருளாற், சிவாகமவிதிப்படியே அச்சிதம்பர சிவாலயத்திருப்பணி செய்து வைத்தலாலும், பின்னையோர் பலரும்சிவாகம விதிப்படியே அத்திருப்பணி சீரணோத்தாரணம் செய்துவருதலாலும், சிதம்பரசிவாலய கும்பாபிஷேக பத்திரிகையில் மகுடாகம சம்பந்தபதஞ்சலி பத்ததிப்படியென்றே விளக்கியிருத்தலாலும், உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளியக்காணலாம்.

இவ்வுண்மை விளக்கத்திற்கு இன்னும் வேண்டிய எத்தனையோ பிரபலப் பிரமாணங்களுள்ளன அவையெல்லாம் எடுத்துக்காட்டி விரிப்பிற் பெருகும் இவ்வுண்மை இப்படியிருக்க இக்காலத்துள்ள சிதம்பர சிவாலய பூஜகர்கள் சிவாகம விதியைப் புறக்கணித்து அதனால் தாங்கள் சிவாகமிகளல்ல என்று விளக்கி, அச்சிவாகமத்தில் வைஷமிகளாய், வைதிகபூஜையே நாங்கள் செய்வதென்று பிறர்க்குஞ் சொல்லிச் செய்துவருகின்றார்கள். அதுவுமன்றி அவ்வைதிக பூஜைக்கு ஆதாரம் பதஞ்சலி பத்ததியென்றும் அப்பதஞ்சலி வேறொருவரென்றும் சொல்லுகிறார்கள். சிதம்பர சிவாலய

பூசனை பதஞ்சலி பத்ததிப்படியே நடந்துவருகிறதென்பது லோகப்பிரசித்தமாதலால், அதனை மறுக்கமுடியாதென்று குய்யுக்தி பண்ணி வேறொரு பதஞ்சலி பத்ததி உண்டென்று சொல்லுகிறார்கள் போலும்.

தில்லை மூவாயிர முனிவர்களும், அவர்கள் பிற்காலத்து வந்தவர்களும் யாதொரு விரோதமின்றி எத்தனையோ கற்பகாலமாகச் சிவாகம சம்பந்தமாகவே சிதம்பர சிவாலய பூஜை நடத்திவருதல், நூல்களில் விளக்கமாயிருக்கவும், சில காலத்துக்கு முன் தங்கள் பாவகர்ம மிகுதியாற் சிவாகம விரோதிகளாகிய சில பிராமணர்கள், சிதம்பரசிவாலய பூஜகர்களை ஆகமிகளென்று இகழ்ந்து, தங்கள் சுபகாரியாதிகளில் விரும்பியழைத்து உபசரிக்காமல் ஒதுக்கி வருதலைக்கண்ட பிர்மஸ்ரீ மீனாக்ஷிவல்லபநாத தீக்ஷிதரவர்கள் ஆகம விரோதிகளாகிய சிலர் நம்மை யொதுக்குதலால் நமக்கு யாதோரிழிவுமில்லை, அவர்கள் சிவவாக்காகிய சிவாகமத்தை இகழ்தலால் மகாசிவத்துரோகத்தை அடையட்டுமென்றுரைத்து நிற்கும் துணிவை நழுவவிட்டு அப்பிராமணர்களுடன் கலந்து வாழுதலைப் பெரிதாமேற்கொண்டு, அப்போதுள்ளபடி பன்னெடுங்காலமாக நடந்துவந்த மகுடாகம சம்பந்த பதஞ்சலி பத்ததியை ஒதுக்கிவிட்டுத் தாமே சிதம்பர சிவாலய பூஜாவிதானமாக வைதீகவழித்தாய் ஒரு நூல் செய்து பூஜித்துவந்ததாகவும் அதை மேற்கொண்டே அவர் பின்னையோரும் செய்து வருகிறதாகவும் அவ்வுண்மையுணர்ந்தமுதியோர் பலர் கூறுகின்றார்கள்.

இதனை ஸ்ரீமந் நாவலர் பெருமான் ஆயிரக்கால் மண்டபத்திலே தக்க பிரமாணங்களுடன் விரித்துப் பிரசங்கித்து, மகுடாகம சம்பந்த பதஞ்சலி பத்ததிப்படியே சிதம்பரசிவாலய பூசனை நடத்தவேண்டுமென்று, பிரபலப் பிரமாணசகிதமாக, தீக்ஷிதர்கள் எல்லாருக்கும் பத்திரிகை அனுப்ப அதுபற்றியே தீக்ஷிதர்களுக்கும் நாவலர்களுக்கும் விரோத நேர்ந்து, அதுபலவாய்த் தொடர்ந்து, கோர்ட்டில் வியாச்சியமாகித், தீக்ஷிதர்களுக்குக் கோர்ட்டாரால் அபராதம் விதிக்கப்பட்டதென்கிற பிரசித்தவிளக்கமுந் தெளியக் காட்டும். இவை எல்லாம் இப்படியிருக்க இப்போது பிர்மஸ்ரீ தண்டபாணி தீக்ஷிதரவர்கள் முதலிய சில தீக்ஷிதர்கள் அவர்கள் சொல்லிக்கொள்ளுகிற வேறு பதஞ்சலி பத்ததி முதலிய சாஸ்திர பாடங்கள் தீக்ஷிதப்பிள்ளைகளுக்குப் படிப்பித்தற்காக ஒரு பாடசாலை நியமிக்கவேண்டித் தனவைசியர்களாகிய நகரத்தார்களிடம் பொருளீட்டுதற்கு வந்து முயற்சிக்கின்றார்கள்.

நகரத்தார்களோ, காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தகாலத்தும் இங்கு வந்த காலந்தொடுத்து இக்காலவரையிலும் இனி எக்காலத்தும் சிவாகமவழியே சிவ தீக்ஷாதி பெற்று அனுஷ்டித்து வருகின்ற சைவர்களே. இதனை இவர்கள் பாரம்பரையாக மேற்கொண்டுள்ள விபூதி ருத்திராக்ஷதாரண பஞ்சாக்ஷர ஜெப சிவாலயத் திருப்பணியாதி சத் காரியங்களாலும், இவர்களுக்குச் சொந்தமாக்கொண்டு பாரம்பரையாய் வழிபாடு செய்துவரும் ஒன்பது சிவாலயங்களாலும், அத்தகை விபூதி திருமாலைப் பிரசாதங்கொண்டே சுப

காரியங்கள் செய்துவருதலாலும் சுபாசுபங்களில் விபூதியையே முக்கியாங்கமாக முதலிற்கொண்டு நடத்திவருதலாலும், லெக்கினாதிகள் ஒன்றும் நோக்காமற் சிவப்பிரீதிகரமாகிய கார்த்திகை திருவாதிரை முதலிய தினங்களிலேயே தங்கள் பிள்ளைகளுக்குப் புதுமை விசேஷங்கள் செய்து வருதலாலும், இத்தனை பெருந் தொகுதியில் அன்னிய மத சம்பந்த லேசமும் இல்லாமையாலும்; இன்னும் பலவற்றாலும் தெளியலாம்.

தீக்ஷிதர்களோ, தற்காலம் ஏதோ காலபேதத்தால் வைதிகவழிமேற்கொண்டவர்களாயிருந்தாலும், இவர்கள் முன்னோர்களும், இரணியவர்மச் சக்கிரவர்த்தியால் அழைக்கப்பெற்றுவந்த தில்லை மூவாயிரவர்களும், சிவாகமவழியே மேற்கொண்ட சித்தாந்த சைவர்களே. அக்காலத்துத் தில்லை மூவாயிர முனிவர்கள் பதஞ்சலி பகவானாற் செய்யப்பெற்ற பத்ததியைப் பூஜித்து யானையிலேற்றித் திவ்வியாலங்காரங்களுடன் திருக்கோயிலை வலம் வரச்செய்து சிரமேற்கொண்டு திருக்கோயிலினுள் வீற்றிருந்தருளச்செய்து நித்திய பூஜையும் நடத்திவந்தார்கள். இதனை, இம்மூவாயிரவருளொருவராகிய கொற்றங்குடி உமாபதி சிவாசாரியரும் "நிலவுபதஞ்சலிமுனியா னிறுத்தவித்த, புத்தக மின்புற முனிவர்யானை யேற்றிக் கோயில்வலங்கொண்டு புகுவித்தார்கள்." என்றருளிய திருப்பாசுர முதலியவற்றாலுங்காணலாம். இவர்கள் சைவாகமிகளே என்பதை ஸ்ரீமந் நடராஜப்பெருமான் உலகெலாமென்று முதல் கொடுத்துச் சேக்கிழார்பெருமான் திருவாக்கினின்று வெளியிட்டருளியதும் எவ்வகைச்சிவபுராணங்களுள்ளும் சிறந்தமகத்துவம் வாய்ந்ததென்பதைத் தன் பெயராலும் விளங்குவதுமாகிய பெரியபுராணத்தில் "ஞானமேமுதலாநான்கு நவைபறத்தெரிந்துமிக்கார்" "செம்மையாற்றணிந்தசிந்தைத் தெய்வவேதியர்களானார், மும்மையாயிரவர்தாங்கள் போற்றிடமுதல்வனாரை, யிம்மையே பெற்றுவாழ்ந்தா ரினிப்பெறும்பேறொன்றில்லார், தம்மையே தமக்கொப்பான நிலைமையந் நிலைமைசார்ந்தார்." என்னும் திருப்பாசுரங்கள் முதலியவற்றாலும் தெளியலாம்.

இப்பொழுது நகரத்தார்களிடம் பொருளீட்டவேண்டி முயற்சிக்கின்ற இவர்கள் தாங்கள் தில்லை மூவாயிரவர்கள்வழியில் வந்தவர்களென்று சொல்லுகிறார்கள் அது உண்மையானால் அம்மூவாயிரவர்கள் சிரமேற்கொண்டு அனுட்டித்துவந்த சிவாகமங்களை புறக்கணித்து வைதீகவழிப் பூஜையேமேற்கொண்டொழுகுவது அம்மூவாயிரவர் திருவுளக்கருத்துக்கு விரோதமாகாதா ஆனால் தண்டபாணிதீக்ஷிதரவர்கள் மீனாக்ஷிவல்லபநாத தீக்ஷிதரவர்களுடைய பவுத்திரரென்று சொல்லுகிறார்கள். அந்த அபிமானம் பற்றியேபின் ஏற்படுத்திக்கொண்ட பத்ததியையே நிலைநிறுத்த முயலுகின்றார்கள்போலும். இவர்கள் வித்தியாவிசிஷ்டர்களாதலால், அபிமானநோக்காது நடுவு நிலைமைநோக்கி எல்லாவற்றிலும் சிறந்த முக்கியப்பிரமாணம் வேதசிவாகமமே என்பதையும் அவ்விரண்டனுள்ளும் "வேதசாரம் இதந்தந்திரம்" என்னும் உண்மைப்படி அவ்வேதத்தினுண்பொருளைத்தெளியவிளக்கும்சிவாகமமே சிறந்ததென்பதையும், பூர்வாசாரியர்கள் பரம்பரையாக கையாண்டு வந்ததென்பதையும் உற்றுநோக்கி, சிவாகமங்களை லாகவப்படுத்தாமல், அச்சிவாகமவழிப் பூஜையே இனி எப்பொழுதும் நடந்துவரும்படி செய்வார்களானால், இவர்களது வித்துவ மேன்மைக்கும் அதற்கியைந்த குணங்களுக்கும் பொருத்தமாகயிருக்கும். நகரத்தார்களும், மேற்கண்ட உண்மைகளெல்லாம் உற்றுநோக்கி, மகுடாகம சம்பந்த பதஞ்சலி பத்ததிப்படியே சிதம்பர சிவாலய பூஜாதிகள் நடந்துவருவதற்கு உரித்ததாகவே, தங்கள் தங்களாலியன்ற பொருளுதவிசெய்து இம்மை மறுமை மோக்ஷமென்கிற முப்பயனும்பெற்று வாழும்படி, ஸ்ரீ சிவகாமசௌந்தரி ஸமேத ஸ்ரீ சிதம்பர நடேச பாத பங்கயங்களைப் பணிந்து பிரார்த்திக்கிறேன்.

வைரவநாத பிள்ளை,
குலசேகரன்பட்டணம்.

கல்வியைப்பற்றி யோர் கட்டுரை.

முன் தொடர்ச்சி.

ஆகையினாலே இக்கல்வியே மனித சென்மத்தைப்பெற்ற வொவ்வொருவரும் முக்கியம் தேடிக் கொள்ளத்தக்க செம்பொற் களஞ்சியம்; கூடிக் குலவத்தக்க குணமிகு குலமகள், நாடிப்பழகத் தக்க நலமிகு நண்பன், பாடிப் பரவத்தக்க பழம் பண்டாரம்.

இக்கல்விச் செல்வமே! பொருட் செல்வம், செவிச் செல்வம், அருட் செல்வங்களைச் சிறப்புறவளிக்கும், அறத்தைப்பெறுக்கும், மறத்தைச் சுறுக்கும், ஆபத்தை நீக்கும், தாபத்தைப் போக்கும், புகழ்நிலை நாட்டும், புண்ணியங் கூட்டும், இகழ்வெலாமோட்டும், இன்பமே காட்டும், கீழ்பாலொருவனை மேற்பாலொருவனாக்கும்; வறியவனொருவனை மன்னனருகிற் சேர்க்கும்.

இன்னும் இக் கல்விப் பொருளே, உலகம் நடைபெறுவதற்கு முக்கிய காரணப்பொருளாகவுங் காணப்படுகின்றது. இவ்வரும் பொருளொன்றின்றேல், உலகத்திலே மாட்சியேது? மன்னராட்சியேது? நீதியேது? அநீதியேது? இம்மையேது? மறுமையேது? பாவமேது? புண்ணியமேது? சொர்க்கமேது? நரகமேது? பரமேது? பத்தியேது? சித்தியேது? முத்தியேது? மதியேது? துதியேது? விதியேது? விலக்கேது? மகமெங்குமோங்குமோ? மழைபெய்து தாங்குமோ? சுகம் வந்து தேங்குமோ? துன்பங்கள் நீங்குமோ?

இன்னும் தானமுண்டோ? தருமமுண்டோ? மானமுண்டோ மதிப்புண்டோ? ஞானமுண்டோ? நாகரீகமுண்டோ? வாணிபமுண்டோ; வர்த்தமானமுண்டோ? ஒன்றுமேயின்றி உலகம் நிலைகுலைந்து தலைமயங்கித் தத்தளித்துத் தடுமாறத் தக்க தகுதியுடையதாகக் காணப்படுமன்றோ? அதனாலேயே ஒவ்வொரு தேசத்தாரும், ஒவ்வொரு பாஷையாரும், ஒவ்வொரு ஜாதியாரும், ஒவ்வொரு சமயத்தாரும். கல்விப் பொருளின் ஒப்புயர்வற்ற வுன்னத நிலையையும், பெருமையையுஞ் சிரமேற்கொண்டு, அதனை; யவலியம் அடையவும் வளர்க்கவும், அன்புடையவர்களாகக் காணப்படுகிறார்கள்,

உலகம் நடைபெறுவதற்கு இது முக்கிய காரணமெனக் கருதியன்றோ, காட்சிக் கெளியரும், கடுஞ் சொல்லற்றவரும் காருணிய மிக்கவருமாகிய நமது ஐந்தாவதுஜார்ஜ் சக்கரவர்த்தியாரவர்களும், டெல்ஹியில் தமது முடிசூட்டி வைபவ சுபதினத்திலே, நமது தேசத்திலே கல்விப்பயிரை யபிவிருத்தி செய்யும் பொருட்டு, வருஷம் ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாவுக்குமேல் வித்திய விலாக்கா விற்பன வேளாண்மையுடையவருக்கு உபகரிப்பதாக வுரிமைகூறி, அவ்வண்ணமே பரிபாலனஞ்செய்துவருவது யாமெல்லோரு மறிந்ததேயாம்.

கல்விப் பொருளுடைமையால் இப்பூமண்டலத்திலே இற்றைநாள் வரையில் பலவித்தும் பெருமையுற்றுப் பேரழியா திருக்கும் பெரும் புண்ணியசாலிகளெத்தனைபேர்? செல்வங்களெல்லாம் பெற்றுச் சிறப்புற்று விளங்குபவர் எத்தனைபேர்? அழியாப்புகழைத் தமது மனைவாயிலில் அசையாது நாட்டினவர் எத்தனைபேர்?

இக்கல்விப் பொருளின் பெருஞ் சகாயங்கொண்டே அரசாங்க முதலிய எல்லா அங்கங்களையும் பெற்று, எல்லாச் சுகங்களையுமுற்று இவ்வுலக மாதா இனிது விளங்குகின்றாள்.

இன்னும் இக் கல்வியின் பெருமை கடலினுமதிகம்; மலையினுமதிகம். அதைப் பணிக்கலாமா? கணிக்கலாமா? எண்ணலாமா? எழுதலாமா?

இது காறுங் கல்விப் பொருளினுயர்வு ஒருவாறு சுருக்கி விளக்கப்பெற்றது.

கண்ணிய நிறைந்த புண்ணிய சீலர்களே!

இவ்வளவு உயர்வு பொருந்திய கல்வியைக் கற்றற்குரிய காலவரையைக் குறித்து ஒரு சிறிது கணிக்கப்புகுவாம்.

உதாரணமாக:- ஓர் ஸ்டீல் பேனாவை யெடுத்துக்கொள்வோம் அது ஆரம்பகாலத்தில் எழுதுவதற்கு நன்றாக வுபயோகப்பட்டு நாட்செல நாட்செலக் கூர்மழுங்கி யெழுதும் வன்மையற்றதாகின்றது.

ஒரு மோட்டார்வண்டி புதிதாயிருக்கும்போது, அதில் நாம் சவாரிசெய்யின், தேகமசையாது அவ்வளவு சுகமாய்ச் செல்லுகிறோம். பழய வொரு வண்டியிலேறினாலோ, அது கட்டை வண்டிக்கு மேற் கடகடத்துப் போய்த் தேகத்தைப் புண்ணாக்கிவிடுகிறது.

ஓர் கெடியாரமானது வாங்கப்பட்ட காலத்தில், நேரத்தைக் கிரமமாகக் காட்டிக்கொண்டு ஒழுங்காக நடக்கிறது. நான்கு வருஷஞ் சென்றாலோ, அதனுடைய சக்கரம் வில் பல் முதலிய கருவிகள் தளரப்பெற்றுக் காலத்தைக் காட்டுஞ் சக்தியற்றதாகின்றது.

இவைபோல, தோல் இரத்தம் இறைச்சி மேதை யெலும்பு மச்சை சுவேதநீர் என்னும் சப்த தாதுக்களாலாகிய நமது தேகத்திலுள்ள தத்துவக் கருவிகளும், இளமைப் பருவத்திற் பெற்றிருக்கும் ஊக்கமும் உறுதியும், நாட்செல நாட்செலக் குன்றப்பெற்று நிலைதளர்கின்றன.

"இட்டமிகு பிள்ளைமதலை மீரையாண் டதனில்
இருபதினில் வளர்ச்சியுமுப் பதுவருடத் தழகும்
உட்டகைய மேதையுநாற் பதுவருடத் திடலின்
ஒண்பலமு மைம்பதினி லறுபதினிற் றுதும்
திட்டியுமங் கெழுபதினி லெண்பதினிற் செவியுந்
திகழ்மனமுந் தொண்ணூறிற் சீவனூறா றளவில்
விட்டகலு மெனவுணர்ந்த அறிஞர்கள் வாணாட்கள்
வீணாள்பட் டழியாமல் விரும்புவர்நற் றவமே"

என்று தத்துவவிவேக வித்துவ சிரோமணிகள் சொல்லியபடி, எக்காலத்தும் நமது தேகதத்துவங்களொருதன்மையுடையனவாக விளங்குவதின்று. மேலே யெடுத்துக்காட்டப்பட்ட வுதாரணப்படி, இளமைப்பருவத்திலே நமது தேகதத்துவங்கள்

எவ்வகைத் தொழிலையுங் கற்பதற்குஞ் செய்வதற்கும், ஊக்கமும் உற்சாகமு முள்ளனவாகக் காணப்படுகின்றன.

இதுபற்றியே, ஒவ்வொரு ஜாதியாரும், தந்தந் தொழிலைத் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அதிக இளமைப் பருவத்திலேயே கற்பிக்கத் தொடங்குகிறார்கள். பிராம்மணர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, இளமையிலேயே வேதாத்தியானஞ் செய்விக்கிறார்கள். அரசர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, வில்வித்தை வாள்வித்தை யானையேற்றங் குதிரையேற்றம், முதலியவைகளை யதிகப் பாலியத்திலேயே பழக்குவிக்கிறார்கள். வைசியர்களாகிய நகரத்தார்கள் 7 அல்லது 8 வயதிலேயே தங்கள் குழந்தைகளைத் தாங்கள் வர்த்தகத்திற்குச் செல்லும் இரங்கூன், பினாங்கு, சிங்கப்பூர், கொழும்பு முதலிய தேசங்களுக்குத் தங்களுடன் அழைத்துக்கொண்டுபோய் வாணிபத்தின் மர்ம தர்மங்களைப் பழக்கிவைக்கிறார்கள். இன்னும் நாட்டியக்குதிரை இராணுவக் குதிரை முதலியவைகளைக் குட்டியிலேயே பழக்குகிறார்கள். கிளி, நாகணவாய்ப்புள், முதலிய பறவைகளைக் குஞ்சிலேயே பேசும்படி பழக்குகிறார்கள்.

என்னெனில்:—ஒரு மரத்தை யது கன்றாயிருக்கும்போது நாமெவ்வாறு வளைக்கவும் நிமிர்க்கவுங் கூடுமோ, அவ்வாறே நமது தேகத்தையும், இளமைப்பருவத்திலே யெவ்விதத் தொழிலினும் பழக்கவும் நிறுத்தவுங் கூடுமாகலால், அவ்விளமைப்பருவமே கல்வி கற்றற் கேற்றபருவமாகும்.

அஃதன்றியும், இளமையிலே மனமானது யாதொரு கவலையுமின்றிச் சுத்த படிகம்போல் விளங்குகின்றது. ஆகையால், அம்மனத்தை யெதிற் செலுத்தினோமோ, அதிலேயே ஊக்கமாய்ச் செல்வதாயிருக்கிறது.

முதுமைப் பருவத்திலோ, தேகதத்துவங்கள் தளர்ச்சியடையப் பெற்று, பலவித வியாதிகளாற் சிக்குண்டு, தங்கவும் நடக்கவுஞ் சக்தியற்றதாகின்றன. மனமுதலிய கரணேந்திரியங்களோ, பலவித கவலைகளாற் பீடிக்கப்பட்டு, ஊக்கமும், உறுதியுமழிந்து, சஞ்சலத்தன்மையை யடைகின்றன.

எப்படி யென்னில்:—மண்ணாசை யொருபக்கம், பெண்ணாசை மற்றொருபக்கம், பொன்னாசை வேறொருபக்கம்; புத்திராசையின்னொருபக்கம் இழுக்கவும், இன்னும் எத்தனையோ வுலக வழக்குகளும், வம்புகளுந், துன்பங்களும் மற்றொருபக்க மிழுத்தவும் மனம் அலைபாய்ந்தழிகின்றது. அவ்வித மனத்திற் கல்வி யெவ்விதம் பதியும்? களங்கமற்ற கண்ணாடியில் முகம் விளக்கமாகத் தோன்றுமே யொழிய, களங்கமுற்ற கண்ணாடியிற் செவ்வையாகத் தோன்றுமா? அழுக்கில்லாத வஸ்திரத்திற் சாயம் நன்றாய்ப் பிடியுமேயன்றி, அழுக்குடையவஸ்திரத்திலவ்வாறு பிடியுமா? வியாதியுற்ற கிழக்குதிரை வேகமாகப் பாயுமா? அன்று. அவைபோல, தேகதத்துவங்களுக்கு ஊக்கமும் உறுதியும், மனத்தில் உலகஆபாசமறுங்காலமும், ஆகிய, இளமைப்பருவமே கல்விகற்றற் கேற்ற பருவமாகும். இதுபற்றியே, நமது அருள் மூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியார் "இளமையிற்கல்" என்று அருளிச்செய்வாராயினர்.

இன்னும், "பருவத்தே பயிர்செய்" என்ற சூத்திரத்தையும் பொதுவகையாகச் சொல்லியருளினார். இதன் கருத்து யாதோவெனின்,—பயிர்களை யுரியகாலத்திலே, அவற்றிற்கு வேண்டிய முயற்சிகளிற் றாழ்க்காது செய், என்பதாம். இச் சூத்திரத்தைப் பொதுவகையாக நோக்கின், இது ஒவ்வொரு தொழிலாளிகளுக்கும் உரியதாகக் காணப்படுகின்றது. எவ்வாறெனின்,—வைத்தியனொருவன், எவ்வெக்காலத்தில் எவ்வெப் பச்சிலைகள் கிடைக்குமோ, அவ்வக்காலத்தில் அவ்வப் பச்சிலைகளைக் கொண்டு, செய்யக்கூடிய மருந்துவகைகளைச் செய்து வைத்துக்கொள்ளல் வேண்டும். இன்றேல், பின்பு அவன் தொழில் செவ்வனே நடைபெறாது; வருந்தத் தக்கவனாவான். இதுபோலவே ஒவ்வொரு தொழிலுக்கு மொப்பத்துணர்ந்து கொள்க. ஆகையால், ஒருவன் இளமைப்பருவத்திற் கற்றற்குரிய வித்தையை, யக்காலையிற் கல்லாது கழித்தால் பின்பு தனது வாணாள் முழுவதும் கண்ணீர் விட்டு வருந்தத் தக்கவனாவான். இதைக்குறித்தே,—"இளமையைக் கல்லாவளர விடல் தீது" என்றார் இன்னா நாற்பதிலும்.

உதாரணமாக:—ஓர் ஊரில் பிரபல வர்த்தகனொருவனிருந்தான். அவன், தன்னிடத்துள்ள திரவியமிகுதியால், ரத்நவியாபாரம், நெல்வர்த்தகம், வட்டியீட்டல், முதலிய பலவித வாணிபமுஞ் செய்துகொண்டு யாதொரு குறைவுமின்றிச் சுகமாகவாழ்ந்து வந்தான். ஆனால் புத்திரபாக்கிய மொன்று மாத்திரமில்லாதவனாய்ப் பற்பல தானதருமங்களைச் செய்து, அவற்றின் பயனாய் ஓர்

ஆண்மக்களைப் பெற்றான். அப்புத்திரனுக்குச் செய்யுஞ் சடங்குகளெல்லாஞ் சீர்பெறச் செய்து, வித்தியாரம்பமும் உரிய பருவத்திலே செய்துவைத்தான். தந்தைக்குரிய கடனையவன் கழித்துவிட்டான். ஆனால் குழந்தையோ, வித்தியாரம்பஞ் செய்வித்த காலத்திற் கலாசாலையைப் பார்த்திருப்பானே யொழிய, மற்றையொருபொழுதும், கல்விச்சாலை யிருக்குமிடத்தையுங் கனவினுங் கண்டறியான். பந்து விளையாடவும், பாரிவிளையாடவும், கோலிவிளையாடவுங் குஸ்தி விளையாடவும், சீட்டுவிளையாடவும் சூதுவிளையாடவுங் கற்றுக்கொண்டு, கல்விக்குரிய இளமைப் பருவத்தை யவமே கழித்தான். அதனையறிந்த தந்தையானவன், சிற்சிலகாலம் கல்விக்குரிய முயற்சிகளைப் புரிந்தும் பயனற்றனனாய்த் தனக்குள்ள செல்வமிகுதியானும், ஏகபுத்திரனென்ற எண்ணத்தானும், பராமுகனாயிருந்தான். வயது முதிர முதிர, மைந்தனும் குதிரையேறவும், கோச்சேறவும், பைசைக்கிள் விடவும், கூத்துப்பார்க்கவும், வம்பு பேசவும் வழக்குப் பேசவுங் கற்றுக்கொண்டு கல்விவாசனையற்றிருந்தான். கொஞ்சகாலங்கழிய, தந்தையிறக்க, அவன் கொடுக்கல் வாங்கல்களை நேர்செய்து பார்க்க, இருப்பிடமு மிஞ்சாது, ஏக்கற்றுப் போக்கற்று, தெருவில் நின்று தான் இளமையில் வளர்ந்த செல்வத்தையுஞ் சிறப்பையும் மதிப்பையும், கல்லாது கழித்தகாலத்தையும், தற்காலமடைந்த கோலத்தையும் எண்ணி எண்ணிக் கண்ணீர்விட்டுத் தன் தந்தையை நினைந்து நினைந்து தன்னை நிந்தியாது அவன் றன்னை நிந்தித்தவாறு,—

"அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவாய்க்
கொள்ளிக்கும் பட்டகடனுக்கு மென்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்திலே யென் றுடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை யாகிய பாதகனே"

என் செய்வாம், பிள்ளை தன் பிழை யறியாது தந்தையை நிந்தைகூறலாயினான்.

ஆனதினாலே, சகோதரர்களே! இளமைப்பருவத்தில் கல்வி கல்லாது, பாட்டிலுங், கூத்திலும், விளையாட்டிலும், வீண்வம்பு பேசுவதிலும், சண்டையிடுவதிலும், கடுதாசி விளையாடுவதிலும், காலத்தை யவமே கழிப்போமாயின், பின்பு குடும்பாதிபத்தியம் பெற்றுவிளங்குங் காலத்தில், பிறருக்கு ஒருகடித மெழுதவும், வந்தகடிதம் வாசிக்கவும், சம்பாத்தியத்திற்குரிய வழியில், கணக்கு வழக்கு அறியாது, கட்டுக்கெட்டு முட்டுப்பட்டு உழலவும் நேரும்

"வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ் தான்"

ஒரு மூங்கிலைக் கன்றாயிருக்குங்காலந்தொடங்கி யாம்வளைத்து வளைத்து வளர்த்துவருவோமாயின், முற்றியபின் அது படிமன்னர் முடியின்மேலாரத்தக்க பல்லக்கின் கொம்பாய் விளங்கும் பாக்கியமுடையதாகும். அவ்வாறின்றி வளர்ந்த மூங்கில், கழைக்கூத்தாடிகள் கைப்பட்டுக் கண்ட கண்ட விடங்களிலெல்லாம் அவர் காலைத்தாங்குங் கீழ்மையுடையதாகும். அதுபோல, நாமும் இளமைப்பருவத்திலேயே நமது கரணேந்திரியங்களைக் கல்வி கற்பதில் விடைபெறாது செலுத்திக்கொண்டு வருவோமாயின், பின்னர் வானும் வையமும் வாழ்த்தி வணங்கத்தக்க மகத்துவமுடையவராவோம். இன்றேல், மூடசிரோமணிகளின் முதற்றரமுடையராய், எல்லோராலு மிகழத்தக்க புல்லோராய்க் கழிவோம். ஆகையால், பாலப்பருவத்திற் கற்குங்கல்வியே பசுமரத்தாணி. பாறையிலெழுத்து.

இதுகாறும், இளமைப்பருவமே கல்வி கற்றற்கேற்ற பருவமாகுமென்றும், அக்காலத்திற் கற்ற கல்வியே, மனத்தில் வேரூன்றிப் பதியத்தக்க ஏற்றமுடையதாகுமென்றும், ஒருவாறு சுருக்கி விளக்கப்பெற்றன.

தொடரும்.

ஆர். சுவாமிநாத பிள்ளை,
தமிழ்ப் பண்டிதர்,
உமையாள்புரம்.

கற்றவர்க்குரிய கடமை யாது ?

பெற்றியிற் சிறந்த பேரறிவுடையீர்!

கற்றவரும் கற்றவரும் மற்றவருஞ் சுற்றத்தவரும் புகழும்படியாக எல்லையில்லா இன்ப சாகரமாகிய சச்சிதானந்த பரஞ்சுடர் வளரும் அம்பரத்தைக் கண்ணுற்றுத் தனது பிறவிப் பிணியை மாற்றுதற்கு வழி காட்டுஞ் சஞ்சீவியாகிய கல்வியைக் கற்றுத் தெளிந்த வல்லவர்கள் பலர். நாம் எதற்காக இம்மானிட சரீரத்தைப் பெற்றோம்? எதற்காகக் கல்வியைக் கற்றோம்? கல்வியைக் கற்றுக்கொண்டதனால் நாமடையவேண்டிய

பயனென்னவென்பதையுங் கருதாது தனது வாணாளெல்லாம் வீணாளாக்கிப் பல்லோராலும் கற்றுமறிவிலாரெனச் சொல்லும்படி கருவம் பிடரியைப் பிடித்துந்த இறுமாந்து மாயாசாலங்களெனும் பாசத்துட் சிக்கி அஞ்ஞான மேற்கொண்டு நன்மதியைக் காசுக்கு விற்று கல்லார் மதியைப்பெற்று வல்லார் நகைக்கும்படி சாதிச்சண்டை மதச்சண்டைகளிற் பிரவேசித்து "அவன் கெட்டான் குடியன் எனக்கொன்றரை திராம் போடு" என்பதொப்ப அத்வைதம்பொய் துவைதந்தான்மெய், சைவமேமெய் வைணவமேபொய், யென வாய்ப்பறை கொட்டி அறிவுக்கும் புகழுக்கும் நட்டியைத்தேடி கல்வியாகிய முதலீக்கொண்டு அடையக்கூடிய அதன்பயனாகிய வட்டியுங்கெட்டு தட்டுத்தடுமாறி அங்கிங்குமோடி அரிவையரைநாடி இதோபதேசம் பெற்று யாப்பிலக்கண விதியைக் கற்று பஞ்ச லெட்சணம் வந்தெய்தப்பெற்று திண்ணை தூங்குமாசாமிகளாகி ஊணற்றுழல்வதுமன்றி வேதங்களை கிளைகளாகவும், சாஸ்திரங்களை இலைகளாகவும் புராண இதிகாசங்களைமலர்களாகவும், கலைக்யானங்களை வாசனையாகவும், அவற்றின் அர்த்தசாரங்களை மதுரமாகவும் ததும்பி வடியுங் கல்வியாகிய தருவைக்கண்டு இயல், இசை, நாடகம், என்ற முத்தமிழில் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்ற நாற்கவி பாடும் வித்வான்களும், கவி, கமகன், வாதி, வாக்கி, என்ற நான்குவகைப் புலவர்களுமாகிய அரிகுழாங்கள் அத்தேனையுண்டு மதுராராகம் விண்டு ஆனந்தங்கொண்டு நிறைந்த அவைப்பின்கணுள்ள பிரசங்க மேடையேறித் தன்னைக் கலாபூஷணமென நினைத்து அம்மதம் பொய் இம்மதம் மெய்யெனப் பிரசங்கிக்க வாயைத் திறந்தவுடன் அச்சபையிலமர்ந்துள்ள தோற் கருவியில் வல்லவர்களும், கடம் வாசித்தலிற் சிறந்தவர்களும் எழுந்து இவ்ரங்கத்தை மிருதங்கமாகவும் இவர் சடத்தைக் கடமாகவும் நினைத்துத் தங்கள் தங்கள் இருகரங்களாலும் தாளபேதமின்றி நன்றாய் வாசித்து எங்கள் தாளத்திற்கிணங்க உமது பிரசங்கமாகிய கீதமானது சுதிலயபேதப்படுகிறதென்றும் அவர்களை அச்சபையினின்றும் வெளியே தள்ளி விடுகின்றனர். அந்தோ பாவம்! இத்தகைய உத்தமர்களை முன் காரணமின்றிக் காரியமாகிய சச்சரவியற்றும் வகுப்பினரைச்சார்ந்தவராக யிருந்திருக்கலாமென யூகிக்கலாம். அன்றியும், இவர் கற்ற கல்வியில் மததூஷணையும் தெய்வ தூஷணையுஞ் செய்யும்படியாகத்தான் சொல்லியிருக்கிறதுபோலும் தனக்குளிருக்கின்ற காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், என்ற குற்றங்களை நீக்கிக் கொள்ள முடியாமல் மததூஷணையிற் பிரவேசித்ததை யோசிக்கில் சிறு கலயஞ் செய்யத்தெரியாத குயவன் பெரியமிடாச் செய்ய அச்சாரம் வாங்கியதைப் போலவும், சோற்றிலிருக்குங் கல்லை யெடுக்கத் திறமில்லாதவன் சொக்கநாதன் கோவில் மதிக்கல்லை யெடுக்கப் புகுவது போலவுமிருக்கின்றது இஃது விந்தையிலும் விந்தையே!

"சினமடக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும், மனமடக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே." (என்றும்) "மனமது செம்

மையானால் மந்திரஞ் செபிக்கவேண்டாம்." (என்றும்) "சாமநாலுவேதமுந் சகலசாஸ்திரங்களுந், சேமமாக வோதினுஞ் சிவனைநீ ரறிந்திலீர், காமநோயை விட்டுவின்று கருத்தொடுங்க வல்லிரேல், ஊனமற்ற காயமா யிருப்பனெங்க ளீசனே."—என்ற வாக்கியங்களைக் கற்றுணர்ந்தும் அதன்படி தனது மனதாகிய பரியை விவேகமென்ற பாகனால் அடக்கியாளுந் தன்மையில்லாமலும் அவ்வழியிற் முயற்சியாகிலும் செய்யாமலுஞ் சிவனையும், விஷ்ணுவையும், நேரிற் கண்டவர்களைப்போல வாதிட்டும் இன்னும் பலவிதக் கொள்கைகளை யுடையவர்களாய் "பல்லூழிகாலம் பயின்றரனைப்பூசித்தால், நல்லறிவு சற்றே நகும்." என்ற வாக்கியத்தின்படி நாளடைவில் வந்தெய்தப் பெற்று தனக்கு சுபாவமாக உண்டாயிருக்கும் இயற்கையறிவை மென்மேலும் விர்த்திசெய்யும்படி போதித்துள்ள "அறிவு தன்னைத்தோன் றறிவதனைக் கண் டறிவதுசிவமாமே." என்ற வாக்கியத்தையும் மறந்து கல்லாரைப்போல வல்லாண்மை பேசி செல்லாவழியிற் சென்று நல்லாரெனும் பெயர் கெட்டுப் பல்லோர்களுஞ் சொல்லாமொழி சொல்லும்படி பரிகாசத்திற்காளாய் நிற்கின்றனர் அந்தோ! இதுவென்ன கொள்கை? இதுவோ கற்றுணர்ந்தவர்களின் கடமை? மற்றென்னவெனில் என்போன்ற புல்லறிவாளர்க்குக் கல்லாமையால் இருதயமாகிய நிலத்தில் முளைத்துள்ள தீய குணங்களெனுங் கோரைகளைத் தனது சத்துவகுணமெனும் மண்வெட்டியாற் களைந்து மேற்படி நிலத்தை பண்படுத்தி பக்தியாகிய வித்தை விதைத்துத் தனது சடமாகிய ஆகாயத்திலிருந் துதிரும் அன்பு பொருந்திய மதுரச்சொற்களெனும் நீர்விட்டு பக்தியெனும் முளை கிளம்பித் நவமாகிய பசுந்தழைகள் விரிந்து சிவமாகிய பூங்கொம்பிற்படர்ந்து இரண்டறக்கலந்து யேகவஸ்துவெனும் வெளியாகிய பந்தலிலடர்ந்து செழித்து இன்பமாகிய மலர் மலர்ந்து புகழாகிய வாசனை பரிமளிக்கும்படி செய்வதுடன் சமதிருஷ்டி, சகோதரத்துவம், ஜீவகாருண்யம், பரோபகாரம், நீதி, தருமம், வியாபாரம், கைத்தொழில், விவசாயம், முதலாகிய அரியவிஷயங்களைக் கேட்பவர்கள் இருதயத்தில் வேரூன்றி கொழுந்துவிட்டெழும்படி பிரசங்கஞ் செய்து ஒவ்வொருவரையும் நன்னிலைமையிற் பிரவேசித்து இன்பமடையச் செய்வதே கற்றுணர்ந்தவர்களின் கடமையாம். சுபம்.

எம். பாலுசாமி நாயுடு.
மதுரை.

* * *

பதிபக்தி.

உலகமெங்கும் உன்னத மலர்கள் நிறைந்து தேன் பொழியுங் காலம் வஸந்தகாலமே. எங்கும் பலவர்ணக் கொடிகள் தளிர்த்து பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூத்தபூமி தேவியின் மேகலைபோல் படர்ந்து மானிடரின்

மனதை மகிழ்வுறச் செய்யும் காலம் வசந்தகாலமே. வண்டினங்கள் மலர்களிலுள்ள இனிய தேனையுண்டு கட்குடியர்களைப்போல மயங்கி ரீங்காரம் செய்து குயிலின் இன்னிசைப் பண்களை– இனிமைபெறச் செய்யுங்காலம் வசந்தகாலமே. பூர்ணசந்திரனின் மேன்மையும் இனிமையும் பிரகாசமும் பொருந்திய தண்ணருங் கிரணங்களை ஆடவர் மகளிர் ஆசையாய் வரவேற்குங் காலம் வசந்தகாலமே. சுவை பொருந்தியதும் பக்தி நிறைந்ததுமான நமது கதை தொடங்குங்காலமும் வசந்தகாலமே.

துவாரகையில் உலகெலா முணர்ந்தோதற் கரியவனும் கரியவனும் விஜயனுக்கு விஸ்தாரமான கீதை விண்டவனும் விண்டவனும் பக்தவத்ஸலனுமான கண்ணன் தனது பல தேவிமார்களிடத்தும் அவரவர் விருப்பத்திற் கிணங்க இல்லறம் நடாத்தி இனிதமர்ந்தருளினான்.

ஓர் வீட்டில் பத்தினியுடன் தாம்பூலம் மென்று கொண்டிருந்தான் மற்றோர் வீட்டில் மனைவியின் மடியில் மயங்கிக்கிடந்தான். வேறோர் மனையில் தனது மக்களின் மழலைச் சொற்களை மாண்புடன் கேட்டு மகிழ்ந்துகொண்டிருந்தான். இத்துணைக் குடும்ப வியவகாரங்களுக்கிடையே அரும்பெரும் காரியங்களை ஆஸ்தான மண்டபத்திற் செய்துகொண்டிருந்தான் கண்ணன் பரமகருணாநிதியான கண்ணன் ஒருவனே ஏககாலத்தில் எல்லா விடத்திலும், தனித்தனியாக விளங்கித் திருவிளையாடல்கள் புரிந்துகொண்டிருந்தான்.

திரிலோக சஞ்சாரியான "நாரதர்" திவ்ய க்ஷேத்ரமாகிய துவாரகைக்கு வந்து சேர்ந்தார். கண்ணனைக் காண்பதில் கனபிரியம் அவர்க்கு ஆகவே, அடிக்கடி அமரரும் போற்றும் அரியதுவாரகைக்கு வருவார் அம்முனிவர் வந்தவர், வழக்கம்போல தேவிமார்களின் ஒவ்வொரு மனைக்கும் சென்று கண்ணனையுங் கன்னியரையுங் கண்டு களிப்பெய்தியவராய் "சத்தியபாமையின்" மனைக்குவந்து சேர்ந்தார். சத்தியபாமையும் முற்றுமுணர்ந்த முனிவர்க்கு நல்வரவு கூறி மகிழ்ந்தாள். செய்த உபசாரத்தால் செய்வதின்னதென்றுணராத தபஸி; ஆசி பல கூறி அவ்வம்மையை நோக்கிப் பின்வருமாறு கூறலானார்.

ஆ! உயர்குடியிற் பிறந்த உத்தம பாமா! சர்வலோக சரண்யனான கேசவனின் சதியாகவமைந்து சகல நலங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கிறாய் நீ உன்பாக்கியமே பாக்கியம். பரந்தாமனுக்குப் பல தேவிமார்களிருந்தும் உன்னிடத்து அவர்க்குள்ள பிரேமையைப் போல மற்றோரிடத்து இருக்கக் காண்கிலேன். தனியாகவே உன்னிடத்தில் விளங்குகிறார் கண்ணன் உனது குணமும் குணத்துக்கேற்ற அழகும் அழகுக்கேற்ற இன்சொலும் எம்பெருமானின் இருதய பத்மத்தை இனிது கவர்ந்து விட்டன. பாவையர் திலகமாம் பாமா; உன் மகிமையே மகிமை! உன் கருணைக்குப் பாத்திரனான எனக்கு என்னகுறை! எனக்கு வேண்டியதை உம்மிடமல்லாது வேறு யாரிடத்தில் பெறப்போகிறேன். நாடோடி நாரதன் ஒருவன் நம்மை

எப்பொழுது தியானித்தவனாகத் திரிகிறான் என்ற எண்ணம் சிறிதளவு தமக்கு இருந்துவிட்டால் அதுவே என் பெரும்பாக்கியமாகும் என்றார்.

நாரதரே தாம் ஏதோ ஒன்றை விரும்பி வந்திருப்பதாக தமது பேச்சினால் நன்கு விளங்குகிறது. உம்முடைய விருப்பத்திற்கு மாறாகத் தடை செய்ததுண்டா? என்றாள்.

அம்மணி தாம் மறுத்துச் சொன்னீரென்று கூறினேனில்லை. நான் கேட்டபனவற்றைத் தரக்கூடாதவரென்று தம்மை நினைத்து வந்தவனுமல்லேன் ஆனால் நான் இன்று எண்ணிவந்த ஒன்றைமட்டும் தம்மிடம் கூறுவதும் அதைத் தம்மிடமிருந்து எதிர்பார்ப்பதும் தவறென்றே நினைக்கிறேன் என்றார் நாரதர்.

தபோதனராகிய தாம் ஒன்றை விரும்பிக்கேட்க என்னால் கொடுக்க முடியாதென்றுரைப்பதற்கு என்னிடத்தும் ஒன்றுளதோ? சந்தேகமே வேண்டாம். கிடைக்கும் என்ற தைரியத்துடன் கூறும் என்றாள் பாமை.

அன்னையே இப்பொழுது தாம் உறுதியே கூறுகிறீரெனினும் ஏனோ வென்மனம் நம்பேனென்கிறது. என்றார் முனிவர்.

ஆனால்நீர் ஏமாந்துபோகிறீர். சட்டுமைமறக்கேன் யான் காரியமென்ன கடிதிற் கூறும் என்றாள் சத்தியபாமை.

இல்லை ஒருக்காலும் இல்லை நான் ஏமாந்து விடுபவனல்ல! என்றார்.

வீண் வாதமிது, விளம்பும் விரைவில் வாயினாற் கூறுவதைவிட செய்கையாற் சாணபிக்கிறேன் என் தன்மையை என்றாள்.

அம்மணீ தமது தன்மை இத்தகையது என்பதை நான் முற்றும்அறிந்தவன் எனினும், என்னவோ அம்மா இதில் எனக்கு சந்தேகம் சந்தேகமே. என்றார்.

நாரதரே! எனக்கு கோபத்தையுண்டாக்குகிறீர். நீர் இவ்வளவு பிடிவாதமாகக் கூறினவரையில் நான் என் கண்ணனை வேண்டுமென்று கேட்கினும் கொடுக்கச் சித்தமாகவிருக்கிறேன். அதைவிட உயர்ந்ததொரு பொருளை என்னிடமிருந்து உம்மால் கேட்கமுடியாது. ஆகவே இனியாவது தைரியமாகக் கூறும் என்றாள்.

ஆனால் நிச்சயமாகக் கொடுக்கப்போகிறீர் போலும்.

பித்தம் அதிகமாகிவிட்டதா என்ன? இன்னும் சந்தேகமா உமக்கு

நிச்சயந்தானே?

நிச்சயமே.

ஆனால் எள்ளுடன் தத்தம் எனக்குச் செய்துகொடும் உடனே சத்தியபாமை தோழிகளை விரைந்தழைத்து எள்ளுடன் தண்ணீரைக் கொண்டுவரச்செய்து நாரதர் கேட்கும் எதையும் தருவதாகத்தத்தம் செய்து கொடுத்தாள் பிறகு நாரதர்; அம்மே தாம் சாற்றுமுன் கூறியபடி உமது கண்ணனை

எனக்குக்கொடும். வேறொன்றிலும் விருப்பம் எனக்கில்லை. தாம் எல்லாவற்றையுங் கொடுப்பீரன்றோ? என்றார்

ஓ இதுதானே! வென்று கூறிவிட்டு, வீட்டிற்குள்ளிருந்த கண்ணனை யழைத்து வந்து மந்திரத்துடன் எள்ளும் நீரும்விட்டு, தத்தம் செய்தேன் என்று கூறி நாரதரிடம் ஒப்பு வித்தனள். மாமறைக்கு மெட்டாத மாயன் மாமுனிவரிடம் சேர்ந்தார்.

பனிமொழிப்பாவை நல்லாரில்லங்கள் தோறும் பாங்குடன் பொருந்தியிருந்த பரந்தாமனை மனைவியர் காணாது ஏங்கி, நடந்ததை அறிந்து, கண்களில் கோபத்தணல் வீச, சத்யபாமையின் மனையை அடைந்து, அவளை நோக்கி, அடிசத்யபாமையே! உனக்கென்ன இவ்வளவு ஆண்மை. நீ எப்படியடி எங்கள் கணவனை நாரதருக்குத்தத்தம் செய்வாய்? உனக்குச்சொந்தமான சொத்தா அவர்? உனக்கிருக்கும் அவ்வளவு சொந்தம் எங்களுக்குக் கிடையாதோ? அடி படுபாவி நீ இப்படியும் மோசம் செய்யலாமோ? சற்றுநேரத்தில் எங்கள் கண்ணனை எங்களிடம் ஒப்பிவிக்காவிட்டால் நாங்களென்ன செய்கிறோம் பார்! இனிப் பொருக்கமாட்டோம். எந்தவிதமாவது உடனே எங்கள் உத்தமனைக்கொடுத்து விட்டு மறுகாரியம் பார் என்று கூச்சலிட்டார்கள்.

பார்த்தாள் பாமை. இதேது, கிணறுவெட்ட பூதங்கிளம்பியகதையாகி விட்டதென்றெண்ணிக் கொண்டு, பெண்களை நோக்கி,

என் கணவர் எனக்குச் சொந்தம்; நான் அவரை என்ன செய்தால் தான் உங்களுக்கென்ன? என்றாள்.

சீ. சீ. வாயைமூடு. கண்ணன் என்ன! உன் கல்நகைகளில் ஒன்றா? அல்லது உனக்குமட்டும் சொந்தமா? மாய்மாலக்காரி! இன்னும் சற்று நேரத்தில் எங்கள் கண்ணனை எங்களிடம் ஒப்பிக்காவிட்டால் சாமான்யத்தில் விடமாட்டோமென்று கூறினார்கள்.

சிறிதும் யோசனையின்றி முன் பின் பாராது முட்டாள் தனமாகச் செய்து விட்டகாரியத்திற்காக வருந்தினாள்பாமை.

என் வீணாக வந்ததைக் கொட்டிவம்பளக்குகிறீர்கள் கண்ணன் வேண்டுமென்றால் என்னைகேட்கிறதுதானே! நாரதருக்குக் கொடுத்தவள் உங்களுக்குக் கொடுப்பது ஒரு பெரியகாரியமா? என்று சற்று இறுமாப்புடன் கூறிவிட்டு பின் நாரதரைப்பார்த்து,

ஐயனே! இவர்களுடைய தன்மையை அறியாது செய்து விட்டேன் மன்னித்து கண்ணனை இவர்களிடம் ஒப்புவித்துவிடும் என்றாள்.

நன்று! நன்று!! திடமனத்துடன் தத்தம் செய்ததைத் திரும்பப் பெறுவாருண்டோ? என்றார்.

அவர்க்குப்பதிலாக நீர் என்ன கேட்டபோதிலும் சத்தியமாய்க் கொடுத்து விடுகிறேன். இவர்களிடத்திலிருந்து என்னைக்காப்பாற்றும். என்றாள்

பதிலா! சரி இருக்கட்டும் எம்பெருமானிடைக்கு சமானமாக பொற்குவியலைக்கொடுத்தால் அதுவேபோதும்.

அவ்வளவு தானே. இதோ தருகிறேன் என்று கூறிவிட்டு, சகிகளைக் கூவி ஒரு தராசுகொண்டுவரச் செய்து, ஒருதட்டில் கண்ணனைவைத்து மற்றொருதட்டில் தம்மிடமுள்ள சகலவிதமான பொருள்களையும் வைத்தாள். தட்டு அசைந்தபாடில்லை.

சத்தியபாமையின் முகம் வாட்டமுற்றது. அவள் அடைந்ததுக்கம் அளவுகடந்ததாயிற்று அவள் நாரதரைநோக்கினாள். அவரும் அவளைப்பார்த்து.

அம்மா இன்னும் இருப்பதைக் கொண்டுவாரும். பரிகாஸம் வேண்டாம். இருப்பதை" எடுத்துவாருமே! இவர்கள் எல்லாம் என்னைப்பார்த்து நகைக்கும்படி நான் ஏன் நின்றுகொண்டிருக்கவேண்டும்! என்றார் "ஆம், ஆம். கொண்டுவா, கொண்டுவா, என்றார்கள் கன்னியர்கள். "இன்னம் என்ன இருக்கிறது கொண்டுவர. ஒன்றுமேகிடையாதே. தயவுசெய்யும் என் உம்முடையகாலில் விழுகிறேன். நான் சொல்வது கேட்கவில்லையா? என்னைக்காப்பாற்றுமே! என்று வேண்டினாள்.

நான் எப்படிக்காப்பாற்றுவேன். கண்ணனுடையகனம் உனக்குத்தெரியாமற்போய்விட்டதே. நீ அவரை அறிந்திருந்தும் மதிக்கமுடியாமற் போய்விட்டதல்லவா? என்று கூறிவிட்டு அங்கு நின்றுகொண்டிருந்த ருக்மணியை நோக்கி,

பெருமாட்டி! நீயன்றோ பரந்தாமனது ஹிருதயபத்மத்தில் வசிப்பவள். நீயல்லவா பெரியாள்! ஆகவே உன்னுடைய சகோதரிகளின் தாபத்தை நீக்கமாட்டாயா நீமனம் வைத்தால் ஆகாதகாரியமும் ஒன்றுளதோ? உன்னையன்றி இவர்களுக்கு வேறுகதி இல்லை. என்றார்.

இங்ஙனம் நாரதன் கூறியதும் கன்னியர்கள் அனைவரும் ருக்மணியைப் பெரிதும் துதித்து வேண்டிக்கொண்டார்கள். உடனே "ருக்மணி தட்டிலுள்ள பொற்குவியலை எடுத்துவிடச்செய்து, ஒருதுளசி தளத்தைக் கரத்திலெடுத்துக் கொண்டு.

சர்வலோக சரண்யரான எம்பெருமானது கருணைக்குப் பாத்திரமானதும், தரித்தவர்க்கு பரந்தாமனது கடாட்சத்தையளிப்பதும் இத்துளசி தளமே! பைந்துளபத்திலிருந்து கசியும் தேனிற்பட்ட ஈக்களும் முகுந்தனின் வைகுந்தம் நண்ணுவதுண்மை இதை உலகினரெவரும் மறுக்கார். இத்தகைய பெருமைவாய்ந்தது இத்துளசிதளம். கேவலம் சிற்றறிவினள். அதிலும் ஒரு பேதமைப்பெண். எம்பெருமானது பெருமையை இவ்வளவென்று உள்ளபடி இனிதறிந்து கொள்ளாதவள், அத்தகைய யான் உண்மைக்காதலுடனும் உள்ளம்பூரிக்கும் பக்தியுடனும், இதை! இத்துளசிதளத்தை இத்தட்டில் வைத்துவிடுகிறேன். அது எம்பெருமானின் கருணாவிலாஸத்தால் இருதட்டுகளையும் ஸமன்செய்யுமாக! என்றுகூறித் தட்டிலிட்டதும் தட்டுகளிரண்டும் சமநிலையடைந்தது சகிகளின் மனதும் ஒருநிலையடைந்தது.

ருக்மணிப் பிராட்டியாரை நாரதரும் நங்கையரும் நாவார வாழ்த்தித் துதித்தார்கள்.

இதுவன்றோ உண்மைக் காதல்! இதுவன்றோ பதி பக்தி!! பக்தியின் சக்திதான் என்னே!!!

K. L. சிங்காரவேற் பிள்ளை
முத்துப்பட்டணம்,
காரைக்குடி.

* * *

மாணவர் பக்கம்.

பத்துக் கற்பனைகள்.

ஸ்வீடன் தேசத்துப் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிலும் அடியிற்கண்ட 10 கற்பனைகள் அத்தேசபாஷையில் எழுதி ஒட்டப்பட்டிருக்கும். அவைகளாவன:—

1. தேகசுகத்திற்கு முக்கிய ஆதாரமான நல்ல காற்றை இரவும்பகலும் சுவாசிப்பதே சுவாசா சயரோகங்களைத்தடுக்க சிரேஷ்டமான மருந்து.

2. தினந்தோறும் திறந்த வெளியில் நடந்தும் வேலைசெய்தும் தேகப்பயிற்சி செய்யவேண்டும். இதுவே ஒரே இடத்திலிருந்து வேலை செய்வதற்கு மாற்று.

3. சாப்பிடும் பானமும் மிதமாய் குருத்வமில்லாமல் இருக்கவேண்டும். சாராயத்தைவிட தண்ணீரையே பானமாகக்கொண்டு, பாலையும் பழங்களையும் உபயோகிப்பவன் தன் சௌக்யத்தைக் காப்பாற்றிக்கொள்வதோடு வேலைசெய்யும் திறமையையும் அதிகப்படுத்திக் கொள்ளுகிறான்.

4. நாள்தோறும் குளிர்ந்த ஜலத்தால் கழுவி வாரத்திற்கு ஒருமுறை தவறாமல் வெந்நீரில் மூழ்குதல் தேக சௌக்கியத்தைக் கொடுப்பதோடு நீர்க்கொள்ளாமலும் தடுக்கும்.

5. உடுப்புகள் மிதமிஞ்சி உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடியனவாகவும் இறுகலாகவும் இருக்கக்கூடாது.

6. வீடு சூரிய கிரணம் -படக்கூடியதாயும், உலர்ந்ததாயும், விசாலமுடையதாயும், சுத்தமாயும், வெளிச்சமுள்ளதாயும், சௌகரியமாயும், இன்பம் தரத்தக்கதாயும் இருக்கவேண்டும்.

7. எல்லாவற்றிலும் அதிக சுத்தம் வேண்டும். காற்று, ஆகாரம், தண்ணீர், ரொட்டி, கம்பளித் துணிகள், உடுப்புகள், வீடு முதலியன சுத்தமாயிருப்பதோடு நல்லொழுக்கமும் வேண்டும். இதனால் வாந்திபேதி ஹஸ்தி ஜுரம் முதலிய வியாதிகள் வராமல் தடைபடும்.

8. ஒழுங்காயும் அதிகமாயும் வேலை செய்தல் தேகவியாதியை வரவொட்டாமல் தடுப்பதுடன் மனோவியாதியையும் நீக்கும். இன்பகாலத்திலும் துன்பகாலத்திலும் இதுவே பெரிய ஆறுதலாகும்.

9. வேலை செய்தபிறகு இளைப்பாறவும் பொழுதுபோக்கவும், பெருவிருந்தும் களியாட்டும் நல்லவழிகளல்ல. இரவு தூங்குவதற்கு ஏற்பட்ட காலம். வேலையில்லாத நேரத்தையும் தமாஷில் செலவழிக்குங் காலத்தையும் குடும்பத்திற்கும் ஆத்மரட்சணைக்கும் உபயோகிக்கவேண்டும்.

10. வேலையும் ஸத்கிருத்தியங்களும் தீதற்ற களிப்பும் நிறைந்துள்ள வாழ்வே நல்ல தேக சௌக்கியத்திற்கு முதற்காரணம். குடும்பத்தில் நல்லவனும் தன் தொழிலில் கெட்டிக்காரனும், தன் தேசத்தில் அபிமானமுள்ளவனும் இருக்கவேண்டும் என்னும் ஆசை, ஒருவன் வாழ்நாட்களுக்கு அளவிடக்கூடாத மதிப்பை உண்டு பண்ணுகிறது.

இக்கற்பனைகளை நமது மாணவர்கள் கவனித்து அதன்படி நடக்க முயலவேண்டுமென்பது எமது கோரிக்கையும் ஆசையுமாம். நமது உபாத்தியாயர்கள் இதைத் தமது பள்ளிக்கூடங்களில் மாணாக்கர்கள் எழுதிப்படிக்கும்படி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

* * *

ஸ்திரீகள் பக்கம்.

குறிப்பறிந் தொழுகல்.

அலைகடல் சூழ்ந்த அவனியின் கண் ஆறறிவுடைய மக்கட்கு இல்வாழ்க்கையே நல்வாழ்க்கை என்பதும், அதற்குக் கற்பின் மிக்க கன்னிகையர் இன்றியமையாதவர் என்பதும் அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க தொன்றாம். எனவே பெண்களினாலேயே இல்லறம் வழுவற நடக்க வேண்டுமென்பதும் வெள்ளிடை மலையென விளங்கும். இல்லறம் வழுவாது நடப்பதற்கு வேண்டிய விவேகம் இயற்கையாகவே பெண்களிடத்துப் பிரகாசிக்கின்றது. இல்வாழ்க்கை குறைவற நடைபெறுவதால் நடத்துவோர்க்கே யன்றி உலகினர்க்கும் இன்பம் பயக்குமென்பது நிச்சயம்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த இல்வாழ்க்கை இனிது நடைபெற்று அதனாலுண்டாகும் அரும் பெரும் பயனை அடைவதற்கு பலவேறு காரணங்கள் உண்டெனினும் "குறிப்பறிந் தொழுகலே" முக்கியமானதாகும்.

காதலாலுங் கடிமணத்தாலும் கட்டுப்பட்ட கணவனின் முகக்குறிப்பினால் அல்லது செய்கையினால் அவன் விருப்பம் இன்னதென்றுணர்ந்து அதற்கிசைய நடந்துகொள்வதே குறிப்பறிந் தொழுகலாம்.

“ இல்லறமாகிய வண்டியைக்காதலனுங் காதலியும் இரண்டெருதுகளாக நின்றிழுத்தாலன்றோ நன்கு நடைபெறும். தவளை தண்ணீர்க்கிழுக்க ஓணான் வேலிக்கிழுப்பது போன்று ஒருவர்க்கொருவர் வேறுபட்ட மனத்தினராய் இருப்பின் எவ்வண்ணம் நடைபெறும்? போலியன்பு பூண்ட எவரும் அதன் ஒப்பற்ற இன்பத்தையடைய முடியாது. அதற்கு, “குறிப்பறிந் தொழுகல்” அவசியத்திலும் அவசியமாம்.

கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர் நாணியல்பினாள்—உட்கி
இடனறிந் தூடி யினிதி னுணரும்
மடமொழி மாதராள் பெண்.

என்றபடி சமயமறிந்து அதற்கேற்றவாறு நடந்துகொள்ளுமவளே பெண்ணெனப் பேசத்தக்கவள். அவ்வனிதா மணிகளால் தான் அகிலம் ஆனந்தமடையவேண்டும். இத்தகைய பெண்ணரசிகளை இன்பக் காதலிகளாக அடைந்த புருடசிரேஷ்டர்கள் துக்கத்தை எக்காலத்தும் காணமாட்டார்கள் என்பது சத்தியம்.

இதற்கோர் உதாரணங்காட்டி விளக்குவோம்.

மதுரை ஜில்லாவிலுள்ள ஓர் கிராமத்தில் வசித்துவரும் எனது ஆருயிர் நண்பர் ஒருவரைச் சில வருடங்களுக்கு முன் சந்தித்தேன். அவர் என்னை தமது வீட்டில் அன்புடன் வரவேற்று உபசரித்தார். அவர் சதா சந்தோஷசித்தராகவே விளங்குகிறார் என்பதைக் கண்டு அதிசயித்தேன் சிறிதுநேரத்திற்கெல்லாம் போஜனமருந்தினேன் பிறகு அவரை நோக்கி!

ஐயா! தாங்கள் ஜனநெருக்கமில்லாத சிறிய கிராமத்தில் வசித்தலால் விசனமின்னதென் றறியாதிருக்கின்றீர்கள். என்றேன் அதற்கவர்,

ஓ இல்லை! இல்லை! என் இன்பத்திற்குக் காரணம் என் மனைவியே என்றார் நான் அது எவ்விதம் என்றேன்.

என்! நீர் எண்ணுவதை நான் அறியாமலில்லை. அவள் அதிக அழகு வாய்ந்தவளில்லையென்றெண்ணுகின்றீர். அகத்தினழகினால் அவள் என் அகத்திற் குடிகொண்டாள். முகத்தினழகைக் காட்டிலும் அகத்தினழகன்றோ உயர்ந்தது. என் விருப்பமின்னதென்று நான் கூறுவதற்கு முன்னதாகவே என் முகக்குறியாலறிந்து என்னை மகிழ்விக்கின்றாள். நான் செய்யும் எக்காரியத்திலும் என் மனதிற்கு விரோதமின்றி நடந்துகொள்கிறாள். இதைவிட எனக்கு வேண்டியதும் ஒன்றுளதோ? என்றார்.

இது வன்றோ இல்லற சுகம் என்று ஆச்சரியப்பட்டேன்.

சகோதரிகளே!! கவனியுங்கள் கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி என்பதுபோல உங்கள் கணவன்மாரைப்போற்றி வாழுங்கள், கணவனை எதிர்த்துப் பேசுபவள் நமனுக்கொப்பாவாள். விடியற்காலத்தில் சமையல் வீட்டிற் புகுந்து தொழில் செய்யாதாள் மருந்திற்றீராத நோய்க்கொப்பாவாள். சமைத்த உணவை உண்ணென்று கணவனுக் கிடாதாள் பேய்க் கொப்பாவாள் என்பதற்கு கீழ்க்காணும் வெண்பாவே போதியசான்றாகும்.

எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
அட்டில் புகாதா ளரும்பிணி—அட்டதனை
உண்டி யுதவாதா ளில்வாழ்பேய் யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

ஆகவே என்னருமைச் சகோதரிகளாகிய நீங்கள் அனைவரும், புருடனைப்போற்றி வாழவேண்டுமென்ற நல்லெண்ணமுடையவர்களாக விருந்து இல்வாழ்க்கையின் இன்பங்கட்கு குறிப்பறிந் தொழுகலே முக்கியமாமென்பதையும் நன்குணர்ந்து சகல நலன்களுமடைந்து சந்தோஷமுடையவர்களாய் இனிது வாழும்படி எல்லாம்வல்ல முழுமுதற்கடவுள் அருள்புரிவாராக.

ஜப்பானியச் சிறுமிகள்.

ஜப்பான் தேசத்தில் பெண்களை படிக்க வைப்பதில் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். ஒவ்வொரு சிறுமியும் தனக்கு வயது 12 அல்லது 14 ஆகும் வரையிலும் படித்தே தீரவேண்டும். படிக்காமலிருக்க அத்தேசத்துச் சட்டம் இடங்கொடுக்காது. அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கும்படிப்பில் அவர்கள் மதாசாரங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. அத்தேசத்தில் ஒரு பெண்ணுக்கு கற்பிக்குங்கல்வி அவளை ஓர் புருஷன் அடைந்தால் அவனுக்கு உதவி செய்யவும் இசைந்து நடக்கவும் தூண்டுகின்றது.

சிறுமிகளுக்கு முதல் முதலில் தங்கள் தொந்தரவுகளையும் கஷ்டங்களையும் மறைக்கும்படி சொல்லிவைக்கப்படுகிறது. அசௌக்கியமாக விருந்தாலும் மறைத்துக்கொள்ள வேண்டுமாம். ஏனெனில் தன் உபத்திரவத்தால் தன் புருஷன் வருத்தமுறுவதல்லாமல் தன் சந்தோஷமும் போய்விடுகின்றது. இதுவல்லாமல் தையல்வேலை, சமைத்தல் முதலியவைகள் சொல்லிவைக்கிறார்கள். ஜப்பானியரின் மரியாதைகளைக் கற்றல் பூஜோடிக்கும் விதம் முதலியவைகளை அத்தேசத்துச் சிறுமிகள் கட்டாயம் கற்றுக்கொள்ளவேண்டும். இவைகளுக்கென்றே அநேகம் புஸ்தகங்களை வெளியிட்டிருக்கிறார்கள். பூஜோடித்தலைக் கற்காவிட்டால் அவளை அலட்சியமாக ஜனங்கள் நினைப்பார்கள். இந்தியப் பெண்களாகிய நமது சகோதரிகளுக்கு இத்தகைய உதவிகள் எக்காலத்தில் ஏற்படுமோ! அன்றுதான் இந்தியாவிற்கு புதிய சகாப்தம் என்று கூறலாம். சுபம்!

K. L. சிங்காரவேற் பிள்ளை
முத்துப்பட்டணம்
காரைக்குடி.

* * *

தேவதாஸன்

முன் தொடர்ச்சி

* * *

ஜீவரத்தினம் மயங்கிக்கிடந்த அறைக்குட் சென்ற வாலிபன் அவள் கிடந்த அலங்கோலத்தைக்கண்டு மனங்கலங்கியவனாகப்பன்முறை அவள் பெயரைச்சொல்லி யழைத்தான். அவன் அழைத்தது அவலமாயிற்று. ஜீவரத்தினமோ! நிர்ஜீவரத்தினமோ!! என்று சந்தேகிக்குமாறு கிடந்தாள் வனிதை.

ஆகவே, அவள் நாடியைப்பார்க்க அவன் மனம் நாடிற்று. அவ்விதமே நாடிபார்த்துக்கொண்டிருந்த சமயம், தண்ணீர்கொண்டுவரத்தாவியோடிய "வேதவதி" தண்ணீருடன் வந்து சேர்ந்தாள். அதேசமயம் நாடிப்பரிட்சை செய்து கொண்டிருந்தவனும் திரும்பினான்.

வாலிபன்—ஆ! நீதானோ "வேதவதி"?

வேதவதி—ஆம் என்பெயர்தான் அது. என் எஜமானிக்கு அபாயம் ஒன்றுமில்லை என்று நீர் எண்ணுகிறீர் அல்லவா?

வாலிபன்—ஆம்!- என் எண்ணமும் அதுதான் என்று நீ எப்படி யறிந்தாய்?

வேத—ஏன்? உம்முடைய முகமே கூறுகிறதே!

வாலிபன்—ஆனால் நீ துப்பறிவதில் கெட்டிக்காரி. உன் உதவி எனக்கு ஒருசமயம் வேண்டியிருக்கும்.

வேதவதி—(சிரித்துக்கொண்டு) சாதாரணமாக எவருங்கண்டுகொள்ளக் கூடியதைத்தான் அறிந்தேன் இதிலென்ன விருக்கிறது நான்புகழப் பெறுதற்கு?

இவ்விருவரின் சம்பாஷணைகளுக்கிடையே மெல்லிய இனிய குரலால் வாரும்! வாரும்! "தேவதாஸரே!! இப்பொழுதுதான் வந்தீரோ? என் கதியைப்பார்க்கவும் பிரயாணமாகிவிட்டீர் போலும்! என்று கூறிக் கொண்டே எழுந்துநின்றாள் "ஜீவரத்தினம்"

தேவதாஸனைக்கண்டதினால் அவள் மனதிற்குச்சிறிது திடம் மகிழ்வுண்டாயிற்றென்பதை அழகிய முகமலர்ச்சியால் வெளியிட்டாள்.

தேவதாஸன்—ஆம் ஆம் சிறிது நேரத்திற்கு முன்னால் வந்தேன். தங்கள் தேகம் ரொம்ப அசௌகரியம் அடைந்திருக்கிறதென்று நினைக்கிறேன்.

ஜீவ—இல்லை இல்லை எனினும், எனக்கது வரவேண்டியதே.

தேவ—ஆயின் தாங்கள் மரணத்தை விரும்புகின்றீர்போலும்.

ஜீவ—ஆம் எனினும், ஓர் நிபந்தனைக்குட்பட்டு. அதுவே பழிக்குப்பழி.

தேவ—எனவே, என்னுடைய உதவியைதாங்கள் நாடுவீர்கள்!

ஜீவ—சந்தேகமென்ன, தாங்கள்தான் நிறைவேற்றவேண்டும். தங்களை நான் பூரணமாக நம்புகிறேன்.

தேவ—அப்படியாயின், தாங்கள் சிறிது ஜலமருந்திக் களைதீர்த்துக்கொண்டபின் அமைதியாகவிருந்து பேசலாம் என்றான்.

வேதவதி தண்ணீர்கொடுக்க ஜீவரத்தினம் பருகினாள். களைதெளிந்ததென்றாலும் கண்ணீர்கொண்ட துயரம் கடுகளவுங் குறையவில்லை என்பதை அவள் முகங்காட்டிற்று.

தேவ—அப்பா! தங்களுடைய மனதைச் சீர்ப்படுத்திக்கொள்ளுங்கள். நிலையற்ற மனதுடையவர் எவரும் நிச்சயமான பலனையடைய முடியாது.

ஜீவ—ஆம் நான் தங்களைக் காணுமுன் யிருந்ததைவிட அதிகத் தைரியமுடையவளாகத்தானிருக்கிறேன். இனி விஷயத்தைக் கவனிப்போம். என் கணவரைப்பற்றி என்ன அறிந்துகொண்டிருக்கிறீர்கள் அதை விபரமாகத் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

தேவ—அவ்விஷயமாக என்னுடைய அபிப்பிராயத்தைத் திடீரென்று சொல்லிவிடமுடியாது. ஆகையால் தாங்கள் நான் கேட்கும் கேள்விகளுக்கு விபரமான விடை பகரவேண்டும்.

ஜீவ—சொல்லுகிறேன் கேளுங்கள்.

தேவதாசனின் கேள்விகளுக்குக் கீழ்க்கண்டவிதம் விடை கூறினாள் ஜீவரத்தினம்.

எனது கணவருடன் நான் எப்பொழுதுஞ்சச்சரவிட்டுக்கொண்டதில்லை அவர் சொல்லுவதெதுவானாலும் அதைக்கேட்டு அப்படியேநடந்துகொள்வதில்தான் எனக்குப் பிரியம். சென்னையிற்கூடுவதாகவிருந்த திராவிட மகாநாட்டிற்குச்சென்று வருவதாகக்கூறியே

தான் சென்றார். எதையும் என்னிடத்தில் மறைத்துப்பேசமாட்டார். அது அவருடைய சுபாவம். அவர்சென்று பல நாட்களாகியும் இன்னும் வரவில்லையே என்று ஏக்கத்துடனிருக்கும்போது சற்று முன் தோழி வேங்கவதி ஒரு லிகிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதை வாசித்தமாத்திரத்தில் நான் கொண்ட துக்கம் அளவு கடந்ததாயிற்று. அதனாலேயே நான் மூர்ச்சையடைந்து வீழ்ந்தேன். என்று கூறித் தனக்குவந்த கடிதத்தை தேவதாஸனிடம் கொடுத்தாள்.

தேவதாஸன் அதைக் கூர்ந்து கவனித்தான் லிகிதம் பின்வருமாறு எழுதப்பெற்றிருந்தது.

சென்னை,
13/ஜுலை.

ஜீவரத்தினத்திற்கு!

உண்மைக் காதலையுடையவளென்றே உன்னை எண்ணினேன். நான் எண்ணிய வெண்ணத்திற்கு முற்றும் மாறானவளென்று அறிந்துகொண்டதைப் பற்றிச் சிறிது சந்தோஷமடைகிறேன். என் எண்ணங்களெல்லாம் பகற் கனவாயிற்று. இனி உன் முகத்தைப் பார்க்கும் அதிர்ஷ்டம் எனக்குண்டாகமாட்டாது.

நம்பி மோசம்போன,
சந்திரசேகரன்.

தேவ—நிரம்ப கெட்டிக்காரத்தனமிது. தங்கள் கணவரின் கையெழுத்துத்தானே?

ஜீவ—இல்லை அவர் சொல்ல, வேறு ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம்.

தேவ—ஏன் வேறு ஆசாமி வேண்டுமென்றே எழுதியிருக்கக்கூடாது?

ஜீவ—ஆனால், இது பொய்க்கடிதமென்கிறீரா என்ன?

தேவ—என்னவோ அம்மா என்னால் இப்பொழுது ஒன்றுங் கூறமுடியாது. என்றாலும் அநாமதேயக் கடிதமே இது என்பது தான் என் அபிப்பிராயம்.

ஜீவ—அப்படியாயின் நான் சிறிது சந்தோஷமடைகிறேன். என் கணவர் எங்கிருக்கிறார்?

தேவ—அவர் இருப்பிடத்தை நான் அறிந்திருப்பேனானால் இவ்வளவு வருத்தம் எதற்கு? ஆனால் கூடியவரை முயற்சிக்கிறேன்.

ஜீவ—அதற்காக நான் செய்யவேண்டிய காரியம் என்ன?

தேவ—சொல்லுகிறேன் பிறகு உம்முடைய வீட்டில் இப்பொழுது சகல காரியங்களையும் பார்த்துக்கொண்டிருப்பவர் யார்?

ஜீவ—"கணபதிசாமி பிள்ளை" என்பவர் அவர் மிக்க யோக்யர் நீடித்தகாலமாக இந்தக் குடும்பத்திலிருந்து வருகிறார்.

தேவ—சரி அவர் இப்பொழுது எங்கிருக்கிறார்?

ஜீவ—அவருக்குத் தனியாக ஒரு அறை கீழ்க்கட்டில் விடப்பட்டிருக்கிறது. அது பூர்வீகமாக அவரிடமே இருந்துவருகிறது. அதில்தான் அவர் தமது வேலையைச் செய்துகொண்டிருப்பார்.

தேவ—ஆனால், நான் போய் அவரைப் பார்த்து விட்டுச் செல்கிறேன்.

ஜீவ—தாங்கள் கொஞ்சம் சிற்றுண்டி அருந்திவிட்டுச் செல்லுங்கள்.

தேவ—இல்லை வேண்டாம், சற்றுமுன்தான் அருந்தினேன்.

ஜீவ—ஆனால் சரி அடிக்கடி எனக்குத் தகவல் தரவேண்டும். தங்களைப் பார்க்கவேண்டுமென்ற அவசரம் நேர்ந்தால் எப்படி சந்திப்பது.

தேவ—ஆ! மறந்தேபோனேன். (ஒரு கடிதத்துண்டைக்கொடுத்து) இந்த விலாசத்திற் கெழுதினால் எனக்கு உடனே கிடைக்கும்.

ஜீவரத்தினம் விடைகொடுக்க, 'தேவதாஸன்' கீழ்க்கட்டிற்கு வந்து குமாஸ்தா கணபதிசாமி பிள்ளையைக் கண்டு பேசினான். சிறிது நேரம் அவருடன் பேசிக்கொண்டிருந்து விட்டு வெளியில் வந்து வீதியில் விரைந்து சென்று அங்கு தனக்காகக் காத்துக்கொண்டிருந்த வண்டியில் ஏறி உட்கார்ந்தான். வண்டி ஓடத்தொடங்கியது. இச்சமயம் தேவதாஸனின் முகத்தைப் பார்த்தவர் அவன் ஏதோ கண்டுபிடித்துவிட்டான் என்றே அறிந்துகொள்வார்கள்.

தேவதாஸன் வண்டிக்காரனை நோக்கி, வண்டியை போலீஸ் இன்ஸ்பெக்டர் பரமசிவம் பிள்ளை வீட்டிற்கு ஓட்டும்படி கூறினான். சிறிது நேரத்திற்கெல்லாம் வண்டி இன்ஸ்பெக்டர் வீட்டையடைந்தது தேவதாஸன் அவ்வீட்டிற்குள் நுழைந்து மறைந்தான்.

இரண்டாம் அத்தியாயம்.

தேவதாஸன் சென்றபின் சிறிது நேரங்கழித்து "ஜீவரத்தினம்" இருந்த அறைக்கு குமாஸ்தா கணபதிசாமிப் பிள்ளை வந்து சேர்ந்தார். கறுத்துத் தடித்துக் கட்டையான மனுஷர் அவர். அறுபதாம் ஆண்டை அகன்று சென்ற வயதுடையவர்" என்பதும், கூரிய புத்தியையுடையவரென்பதும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர் என்பதும் அவரைக் கண்டவுடனேயே அறிந்துகொள்ளலாம். பற்கள் உதிர்ந்துவிட்டாலும் பொய்ப் பற்களால் தமது வாயை நிரப்பிக்கொண்டிருந்தார். முதல்தாரம் காலஞ்சென்று போக கஸ்தூரியம்மாள் என்னும் பதினெட்டு வயது பூர்த்தியாகாத ஒருபெண்ணைத் தமது இளைய மனைவியாக்கிக் கொண்டார். கட்டழகமைந்த அக்கன்னிகையின் மேல் காதல் அதிகம் அவர்க்கு. அவள் காலாலிட்ட வேலையைச்சிரசால் செய்து மகிழ்விப்பார். அவள் சந்தோஷப்படுவதற்காக எதைச் செய்யவும் பின் வாங்கார். ஆடவேண்டுமா? அவள் சொல்லவேண்டியதுதான் தாமதம். பாடவேண்டுமா? அவள் பார்த்தால் போதும்! சாரீரவன்மை சிறிதும் இல்லாதிருந்தும் ஒருவகையாகக் கத்தித்தீர்ப்பார். இவரின் ஆட்டபாட்டங்களைக்கண்டு கேட்டு குலுங்கக் குலுங்க நகைப்பாள். அவள் நகைக்க நகைக்க இவர் செய்கை யதிகப்படுமேயன்றி வெட்கந்தோன்றி விட்டுவிட மாட்டார். தமது நடக்கை வெளிப்படத்தெரியாதென்பது அவர் எண்ணம். ஆனால் எவ்விதமாகவோ ஊரிலுள்ளோர் ஒருவர் பாக்கியில்லாமல் இவர் விஷயத்தை யறிந்திருந்தார்கள். இவர் நடக்கையின் பலனாக விஷமம்பிடித்தவர்களால் இவர்க்கு கஸ்தூரி கணபதிசாமி பிள்ளையென்று பெயரிடப்பட்டது. ஓர் பெரிய குடும்பத்தின் மானேஜரும் பல சங்கத்தின் அங்கத்தினருமான இவருடைய அசம்பாவிதமான சில விஷயங்களை வெளியிட்டுவிட்டதைப்பற்றி நாம் வருந்துகிறோம்; உண்மையைச் சொல்லவேண்டியது நமது கடமையாகும்.

நிற்க, கணபதிசாமிபிள்ளையைக்கண்ட ஜீவரத்தினம் வாருங்கள் தங்கள் வரவைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன் என்றாள்.

தொடரும்.

K. L. சிங்காரவேற் பிள்ளை

PRINTED AT THE G. P. WORKS, KARAIKUDI.

தேவை! தேவை!! தேவை!!!

நமது "மனோரஞ்சனி" பத்திரிகை தாய் பாஷையின் அபிவிர்த்தியையும், பொதுநல நன்மையையும் கருதி வெளிவந்துலவுகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந் நன்னோக்கத்தைக்கொண்ட பத்திரிகைக்கு சந்தாதார்களை சேர்த்துக்கொடுக்க

ஏஜண்டுகள் தேவை

தக்க கமிஷன் கொடுக்கப்படும் தக்க கமிஷன்

சந்தா விபரம்.

ஒரு வருஷத்திற்கு	....	ரூ 2—0—0
அரை வருஷத்திற்கு	....	ரூ 1—0—0
தனிப்பிரதி	....	ரூ 0—3—0
பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு	....	ரூ 2—8—0

இப்பத்திரிகையின் விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாசத்திற்கு	ரூ 5—0—0
அரை பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	ரூ 2—8—0
கால் பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	ரூ 1—4—0

வருஷத்திற்கு கண்டிறாக்டாக எடுத்துக்கொள்பவர்களுக்கு 100-க்கு 10 வீதம் தள்ளிக்கொடுக்கப்படும்.

மற்ற விபரம் அறியவேண்டின்;

மானேஜர், "மனோரஞ்சனி" ஆபீஸ்,
காரைக்குடி.

என்ற விலாசத்திற் கெழுதுக.

இனாம்! ரூ 100 இனாம்!

ஞானக் கண்ணாடி.

இது ஓர் ஆச்சரியம் வாய்ந்த கண்ணாடி. இதைநம்பிக்கையுடன் பார்ப்பதால் நடந்தது நடக்கப்போவது, புதையல், களவுமுதலிய சகல விஷயங்களையும் கண்காட்சியாகக் கண்டு கொள்ளலாம். இதன் விலை தபார் கூலியுடன் ரூபாய் 1—4—0

இரசமணி முறைகள்.

முற்காலத்தில் சித்தர்களால் வெகு அருமையாக மதிக்கப்பெற்ற தனிர்சத்தில் மணிசெய்யும் முறைகளும் வாதவைத்ய முறைகளும் அடங்கிய எட்டுப்பக்கமுள்ள சிறிய சிறந்த நூல்புத்தகம் ஒன்றுக்கு தபார்கூலியுடன் ரூ 1—2—0.

இனாம் விபரம்.

மேற்கண்ட இரண்டையும் சேர்த்து வாங்குவோருக்கு 1000-ம் நம்பரானவுடன் சீட்டுக்குலுக்கி அதிர்ஷ்டமுள்ளவர்களுக்கு ரூ 100 இனாம் கொடுக்கப்படும். நம்பர்கள் சீக்கிரம் முடிவடைந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இனாம் அடைந்தவர்களின் பெயரை நமது மனோரஞ்சனியில் வெளியிடப்படும்.

கே எல். சிங்காரம் அண்டு கோ,
காரைக்குடி.

* * *

கொடியவியாதிக்கோர் கூற்றுவன்.

நரம்புச் சிலந்தி என்னும் கொடியவியாதி உண்டாகும் விதமும், வியாதியை உண்டாக்கக்கூடிய புழுவின்சரித்திரமும், நோய்அனுகாமல் இருப்பதற்குவேண்டிய மார்க்கங்களையும் செவ்வனே எளிய தமிழ்நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. அனுபவ வைத்தியர்களின் அபிப்பிராயங்களையும் பெற்றிருக்கின்றது.

புஸ்தகத்தின் விலை அணு 0—2—0 தபாற் கூலி வேறு.

என்னை விரும்புவீர்கள்!
என்?

நோயினால் கஷ்டப்பட்டால் வைத்தியர் மருந்தைக் கொடுப்பார். கொசு முதலிய கடிகளினால் தூக்கம் வராமலிருந்தால் அதைத் தீர்க்க நான் முன்வருவேன்.

பாக்கேட் 1-க்கு அணு 0—8—0 தபாற் கூலி வேறு.

உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

R. கோபாலராவ்
ஜர்னலிஸ்ட், காரைக்குடி.

உ
பரமபதி துணை.

மனோரஞ்சனி.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."— திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 1 } பிங்கள-௵ ஐப்பசி-௴ 30௳ } பகுதி 4
1917-ம் ௵ நவம்பர்-௴ 15௳

கடவுள் வணக்கம்.

உலகநிலை முழுதாகி யாங்காங் குள்ள
வுயிராகி யுயிர்க்குயிரா மொளிதா னாகிக்
கலகநிலை யறியாத காட்சி யாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி
யிலகுசிதா காசமதாய்ப் பிரமா காச
வியல்பாகி யிணையொன்று மில்லா தாகி
யலகிலறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி யமர்ந்த தேவே.

சகமெனுந் துரியா தீதமே யிருந்து
துரியமா முன்மனை புகுந்து
சுழுத்தியா மெனுமோ ரிருட்டறை திறந்து
சொற்பன விலாசமுங் கடந்து
இகமென விளக்குஞ் சாக்கிரத் திருந்தே
யிந்த்ரியப் புலன்கா ரணங்கள்
இயல்புறுங் காலே சுத்தவத் தைகளோர்
டெட்டணைக் குணங்கள் வாக்காதி
மகவுறும் பூத காரியம் நாடி
வாய்வுதொண் ணூற்றுட னாறின்
வகைதனைத் தெரிந்துன் சொரூபமே யுணர்ந்துன்
மலர்ப்பதம் பணியவே தருவாய்
அகமகிழ் கனக அம்பலத் தரசே
யமரர்கள் தேடியுங் காணா
அதிசய வடிவே சதுர்மறைப் பொருளே
ஐயனே ஞானதே சிகனே.

மனோரஞ்சனி.

பிங்கள-௵ ஐப்பசி-௴ 30௳

கடமை.

உலகத்திலுள்ள சகல ஜீவர்களும் தமது கடமைகள் இன்னவை என்பதை உணர்ந்து; அதன்படி நடக்க முயலவேண்டும். மனிதவர்க்கம் நீங்கலாக மற்றவைகள் ஒருவாறு தங்கள்கடமைகளைச் செவ்வனே செய்கின்றன. ஆனால், தமது கடமையைச் செய்யும் பெருமையை அடைந்தவர், மனிதவர்க்கத்தில் மிகச்சிலரேயாவர்.

ஒவ்வொருவரும் தங்கள்; தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாததினாலேயே, தாங்கள் எடுத்தகாரியத்தில் அபஜெயமடைந்து வருந்துகின்றார்கள். கல்விகற்கும் மாணவன் ஒருவன் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று; கவனத்துடன் பாடத்தைப்படித்து. ஆசிரியர் கூறும் அரிய விஷயங்களை மனத்திற் பதித்து, தனது கடமையைச் செலுத்தத் தவறினனாகில், எப்படி பரீட்சையிலும் தவறி விடுகிறானே! அவ்விதமே பிரவிர்த்திகளிலும் தங்கள் கடமையைச் செய்யாதவர்கள் அபஜெயமடைகிறார்கள்.

நமது கடமைகளும் காலத்திற்கேற்ப மாறுதலையடையவேண்டும். இதற்கு ஓர் உதாரணம் கூறுவாம்,

முற்காலத்தில்—பூமியைப்பயிரிட்டுச் சாகுபடி செய்ய தோடங்கியகாலத்தில், மனிதர்கள் தாங்கள் வேளாண்மை ரேய்யவேண்டிய, பூமியில் ஆடுமாடுகள் மிதிக்கும்படிவிட்டு அதில் விதைகளைத் தேளித்து வேளாண்மை செய்தார்கள். அக்காலத்தில் அதனால் நல்ல பலனை அடைந்துவந்த அவர்கள் சிலவருடங்களில் மகசூல் குறைந்துவிட்டமையால் கூரிய பலகோல்களைக் கோண்டு பூமியைக்கிண்டி பயிர்த்தோழில் செய்யலானார்கள். அதுவும் சிலவருடங்களில் பயன்படாதோழிந்தது. பிறகு-கலப்பைபோன்ற சிறியகருவியைக் கோண்டு முன்னைவிட சிறிது ஆழமாகக்கீறிப் பண்படுத்திபலவாண்டுகள் பயிரிட்டுப் பயனடைந்தார்கள். என்றாலும் அக்கைக் கலப்பையின் உபயோகத்தில் உண்டாகும் பலன் நாளடைவில் குறைந்துக்கோண்டே வந்தமையால், யோசனை செய்து பெரிய கலப்பைகளையுண்டாக்கி, மாடுகளைப்பூட்டி உழவுசெய்து பயிரிடலானார்கள். சில ஆண்டுகளில் அம்முயற்சியால் ஏற்படும்பலனும் குறையவே, எரு, தழை, முதலிய உரங்களிட்டுப் பண்படுத்திப் பயிரிடலானார்கள். தற்காலமோ இயந்திரக்கலப்பைகளினால், உழுதுசாஸ்திரீயஉரம் இட்டுபயிர் செய்வதால்; நல்லமகசூலை அடையக்கூடுமென்று நமது கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கிறார்கள்.

காலத்திற்கேற்றவாறு விஷயங்கள் மாறுதலடையினும், அவ்வக்காலத்திற்கேற்ப; நமதுகடமைகளும் மாறவேண்டியது இதனால் அவசியமாயிற்று. முற்காலத்தில் நடத்திய படியேதான் இக்காலத்தும்; விவசாயத்தொழிலை நடத்துவேனென்று ஒருவன்கூறினால், அதைக்கேட்டு மற்றவர்கள் எப்படிநகைப்பார்களோ! அப்படியே ஒவ்வொரு தொழிலாளிகளும் காலத்திற்கேற்றவாறு கடமைகளைச்செய்து விளங்காராயின் பிறரால் நகைக்கப்படுவதுடன், பணநஷ்டமும் அடைகிறார்கள்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே——என்றபடி

நமது புராதனமான வைதீகக் கொள்கைகளை ஒருபுறம் கட்டிவைத்துவிட்டு, பொது நன்மைக்கேற்றபடி நமது கடமையைச்செலுத்த முன்வரவேண்டும். ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரைக் கேவலமாக மதித்து, நிந்திப்பது இக்காலத்திற்குச்சிறிதும் பொருந்தாது. அது மானிடரின் கடமையுமாகாது.

நமது கடமை.

பத்திராதிபராகிய நமது கடமை—மிகவும் முக்கியமானது! பத்திரிகையை ஒழுங்காக நடத்தி, காகிதத்தாலும், எழுத்தாலும், விஷய அருமையாலும், எளிய இனிய நடையாலும் நமது நண்பர்களின் மனதைக்குதூகலிக்கச் செய்யமுயலுவதாலும், ஒன்றுக்கு ஒன்பதாக விலைகொடுத்து கிடைப்பதும் கடினமாகிய இக்காகிதப் பஞ்சத்தில் அதிகப்பணத்தை அளந்துகொடுத்து, காகிதம் வாங்கிச் சேமித்து வைத்திருப்பதினாலும், செலுத்தவேண்டிய கடமை எத்துணைக் கஷ்டத்திலிருக்கிறதென்பதை நமது நண்பர்களின் யோசனைக்கே விட்டுவிடுகிறோம். என்னசெய்யலாம்? எவ்வளவானாலும் எடுத்தகருமத்தைத் தொடுத்து நடத்துவதென்ற துணிவுடன் நமது கடமையைச் செலுத்த முன்வந்துவிட்டோம்.

நாம் இப்பத்திரிகையை நடத்தமுன்வந்தது படாடோபத்திற்கும், பணம் சம்பாதிப்பதற்குமன்று. பின்னை என்னவென்னின்,— நம் மனோரின் முன்னேற்றத்தையும், பாஷாபிவிர்த்தியையும் தேசாபிமானத்தையுங் கருதியே என்க.

உங்கள் கடமை.

ஆம். அன்பும் ஆதரவுமிக்க உங்கள் கடமை. இது எல்லாவற்றினுஞ் சிறந்தது; உண்மையே. ஏன்? நீங்கள் நமது மனோரஞ்சனியின் போஷகர்களாயும், சந்தாதார்களாயுமிருந்து, உங்கள் கடமையைக் குறைவறச் செய்யும் பெரும் பொறுப்புவாய்ந்தவர்களன்றோ! ஆகவே இதற்கேற்படுத்திருக்கும் (இக்காரிகபஞ்சகாலத்தில் அஞ்சத்தக்க)குறைந்த சந்தாத்தொகையைச் செலுத்தி, இப்பத்திரிகையை அபிவிர்த்தி செய்வதே உங்கள் கடமையாகும்.

எல்லாம்வல்ல இறைவன்கடமை

செந்தமிழ்ச் செல்வியாகிய நமது மனோரஞ்சனி எக்காலத்தும் எவ்விதக்கஷ்டத்தையும் அனுபவியாதவளாய்; உங்கள் கரங்களை அலங்கரிக்கச் செய்து நம்மெல்லோருக்கும் மங்களத்தைக் கொடுத்து அருள்புரிவதே எல்லாம் வல்ல இறைவன் கடமை.

பத்திராதிபர்.

தமிழ்ப் பாஷையின் உயர்வு.

தமிழ்ப்பாஷை கடவுட்டன்மையுடையது. காலவரம்பு அற்றது. சரித்திரம் இன்மையால் குறைவுளதன்று; அஃதிருந்தால் சிறப்புடைத்தாமெனினும் காலத்தைக்கணக்கிடல் அசாத்தியமானது. முன்னோர் அறம் பொருள் இன்பங்களைப் பெரிதாகக் கொண்டனரேயன்றிக் காலத்தைப் பொருளென்று கொள்ளவில்லை. ஆதலின் காலத்தைக் கண்ட சரித்திரங்கள் தமிழில் இல்லை. ஆங்கிலம் முதலிய பாஷைகளைப்போல இன்னகாலத்தில் இன்ன இடத்திலிருந்து இன்ன இடத்திற்குக் குடியேறியதென்று சொல்ல வகையில்லை. தமிழ் வழங்கும் நிலம் "குணகடல்குமரி குடகம் வேங்கடம் எனப் பிற்காலத்தார் எல்லை கூறினாரேனும் பாண்டவர்காலத்து அத்தினாபுரம்வரையில் பரவியிருந்ததாகப் பாலைக்கௌதமனார் கூறிய புறநானூற்றுச் செய்யுளால் விளங்கும். பாலை நிலத்தை புகழ்ந்தாராகலின், பாலைக்கௌதமர் எனக்கூறப்பட்டார். இவர், வியாசர் வான்மீகர் காலத்தவர். வடமொழியிலுள்ள முறைப்பெயர் சில ஆங்கிலபாஷையிலிருப்பதாலும், தமிழ்ப்பாஷையிலுள்ள சிலமுறைப்பெயர் சீனபாஷையிலிருப்பதாலும், வடமொழியும் ஆங்கிலமும் ஓரிடத்தது. மற்றிருபாஷையும் ஓரிடத்தது. எனஆங்கில

பாஷையிலுள்ள சரித்திர ஆராய்ச்சி நூல் வல்லார் கண்டுபிடித்துள்ளார்கள். ஆகலின் சீனதேசம் வரையில் தமிழ் பரவியுள்ளதாகத் தெரிகிறது. தமிழ் என்று குறிக்கும் திராவிடம் என்றசொல் வடமொழியிலிருப்பதாலும் அநாதியாயுள்ளது. வடமொழி பேசும்பாஷையின்மையால் சுத்தமாய்ப் புலவர் பாலிருந்து வந்தது. தமிழ், பேசும் பாஷையாதலாலும் திசைச்சொற்கலத்தற்கிடம் பெற்றுத் திரிந்தமையாலும் சிதைவு கொண்டது. வடமொழி தென்மொழியிரண்டும் கண்ணுதற் கடவுளிடமிருந்து தோன்றியது.

> "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
> இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
> இருமொழியு மான்றவரே தழீஇனா ரென்றாலிவ்
> இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ"

—என்பதனால் அறியலாகும்.

அகத்தியரால் தமிழ் உற்பவித்தது என்பது பொருத்தமன்று. அகத்தியரைத் தென்றிசைக் கனுப்பிய காலத்தில் அவரது வேண்டுகோளுக்கிணங்கித் தமிழிலக்கணம் அவருக்கு உபதேசிக்கப்பெற்றது. வடமொழியிலக்கணம் பாணினிக்குபதேசித்ததுபோல. ஆகலின் தமிழ் பழைமையினும் பழைமையானது. தமிழைத் தென்னாட்டுத் தமிழ் வேந்தர் மூவரும் ஆதரித்து வந்தனர். தேவ பாஷையாகலின் இருடிகளாலும் ஆதரிக்கப்பெற்றது. இப்பால் இந்நாட்டில் அந்நிய அரசாட்சிப் பிரவேசத்தால் பல பாஷைகள் கலக்கநேரிட்டது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியவை தமிழின் சிதைவு. இவைகளுக்குத் தமிழ் தாய்பாஷை. தமிழ் அருக்கர்காலத்து மிகக் கஷ்டமடைந்தது. யாது காரணத்தாலோ விசாரியாது புதியதொன்றைக் கைக்கொள்ளுவதும் பழைமையை விடுவதும் தமிழர்களது இயற்கைக்குணம். ஆகவே யிப்போது ஆங்கிலரது ஆசாரம் கையாண்டு வருகிறது. இதனால் நம்மவரால் அவமதிப்படைவதன்றி ஆங்கிலராலும் இகழப்படுகிறார்கள்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே" எனக் கொண்டார்போலும். ஒவ்வொன்றையும் சுருதி, யுக்தி, அனுபவத்தாலாராய்ந்து கொள்ளல் வேண்டும். ஆங்கில பாஷைக்குக் கடவுட்டன்மையின்மையால், அதனைக்கற்ற ஐரோப்பியர் வடமொழி தென்மொழிகளைச் சுத்தமாக வசனிக்குந் திறனில்லை. தென்மொழி வடமொழிகட்குக் கடவுட்டன்மையுண்மையால் இப்பாஷைகளைப் பயின்றவர் ஐரோப்பியரும் வியக்குமாறு வசனிக்குந் திறமுடையவராகின்றனர். ஆங்கிலம் பயின்ற வடதேயத்தார், அகத்தில் பேசுவது தங்கள் தாய்ப்பாஷையே. ஆங்கிலம் பயின்ற தென்றேயத்தார் அகத்திற் பேசுவது ஆங்கிலமே. கல்விகற்பது அறிவு விருத்திக்கு, அதன்பொருட்டு ஆங்கிலங் கற்பதால் குற்றமில்லை. ஐரோப்பாவில் அறிவு விருத்திக்கென்றே ஆயுள்பரியந்தம் கற்கின்றார்கள் நம்மவர்கள் பரீக்ஷைக்கென்றே படிக்கிறார்கள். மருந்துண்டவன் பத்தியங்காட்கழிப்பது

போல பிறகு படிப்பதேயில்லை. பரீக்ஷைமுடிந்தால் உத்தியோகத்திலமர்ந்து விடுகின்றனர் மரம் வைத்தால் நிழலைத்தரும் கல்விகற்றால் அறிவைத்தரும். "ஒருமைக்கட்டான் கற்றகல்வி யொருவற் கெழுமையு மேமாப் புடைத்து" மனைவியையடைவது சுகத்தின் பொருட்டு. அவள் நிமித்தம் தாயையிகழலாகுமா? அங்ஙனமாக ஜீவனார்த்தமாக ஆங்கிலம் பயின்றாலும் புருஷார்த்தங்களைத்தரும் தாய்ப்பாஷையை யிகழலாகாது. ஜப்பானியர் ஐம்பதுவருடங்களுக்குள் முயற்சியால் பெரும்பலத்தை யடைந்துள்ளார்கள். ஆங்கிலம் பயின்றவர் தாமறிந்தநூதன விஷயங்களை நீடித்திருக்கும்படி தமிழில் மொழி பெயர்த்து எழுதிவைத்தல் வேண்டும். ஆங்கிலங் கற்றதற்குக் கூலியில்லை. முயற்சிக்காகத்தான் கூலி. யாவருங் கற்கவேண்டியதவசியமே. "விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோடேனையவர்" என்றார் நாயனாரும். கற்பனை யெல்லாப் பாஷைகளிலுமுண்டு. தமிழ்ப்பாஷையின் கற்பனைகளினால் அக்காலத்திய நாகரீகப் பெருமை எளிதில் விளங்கும் "ஒற்றையாழியான்." "உற்கையென்றெறியும்" இவைகள் போன்ற சில கற்பனைகள்போக நாட்டுச்சிறப்பு நகரச்சிறப்புகள் இகழற் பாலதன்று. "குணநாடிக் குற்றமும் நாடியவற்றுள் மிகைநாடி மிக்ககொளல்" என்றாராகலின் நாட்டுப்படலத்தால் ஆற்றுப்பெருக்கும் அந்நீரைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், இந்நிலமாக்கள் உபயோகித்துச் செய்யும் கிருஷியும் நன்குவிளங்கும். நகரப்படலத்தால் சிற்பம் இயந்திரமுதலிய சாத்திரப் பயிற்சி விளங்கும். ஆங்கிலச் சிற்பிகளும் அதிசயிக்கத்தக்க, தஞ்சைமாநகரத்தின் கோயில் விமானம், மதுரைத்திருமலை நாயக்கர்மால். இராமேச்வரம் சொக்கட்டான்மண்டபம் முதலிய பலவுள பொறிகள் புட்பவிமானம் உளதாக திருவிளையாடற்புராணம், சீவகசிந்தாமணி, பாரதம் முதலியவற்றால் அறிகிறோம். இவை யிப்போதுள்ள புகைக்கூண்டின் வரலாற்றைவிளக்கும். அச்சாத்திரங்கள் இப்போது இறந்தமையால் அத்தொழிலைக் கைவிடநேர்ந்தது. தமிழ்ப்பாஷையில் சிற்ப முதலியவையில்லையென்று நினைப்பதுபேதைமை.

ஆங்கிலங்கற்றவரில், ஒருசிலர்தவிரப் பெரும்பாலாருக்கு ஒவ்வொரு சாத்திரமேவரும். தமிழ்ப்பாஷைகற்றால் எல்லாச் சாத்திரமும் வரும் பலமுயற்சியால் பிறரிடமுள்ளபொருளைப் பெறுமாறு போல ஆங்கில பாஷையிலுள்ள நவீனசாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ளவேண்டிய தவசியமாயிருப்பினும் தமிழை யிகழ்தல் கூடாது. முற்காலத்தவர்போலத் தத்தம் தொழிலைத் தாம் தாம் பயிலாது கைவிட்டுப் பிறதொழிலைக் கைக்கொள்ளுவராயினர். ஆகலின் இப்போது சாத்திரப் பயிற்சி குன்றலதாயிற்று. தத்தம்தொழிலைத் தாம் தாம் கைக்கொண்டிருந்தார் என்பதற்குத்தரும வியாதன்கதையேசான்றாகும். இத்தகைய சாத்திரங்களை நம்முன்னோர் பெரும்பொருளாகக் கொண்டிலர். சரீரதத்துவ ஆராய்ச்சியையேபெரும்பொருளாகக் கொண்டவராகலின், இதற்கு அவர்கள் எழுதிவைத்திருக்கும் நூல்களே தக்க சான்றாகும். சரீரம் பஞ்சபூதத்தாலானது. இரசாயன சாத்திரத்தால் ஒன்றை யொன்று மாற்றிக்கொள்ளுவது போலச் சரீரதத்துவ உணர்வால் ஆயுளை நீட்டிக்கச் செய்து கொள்ளுவது முதலியன இலகுவாயிருந்தது. தசரதர் (60000) அறுபதாயிரம் வருடங்கள் நாடாண்டதும் கட்டுப்பாடல்ல. இப்போதுள்ளவர்கள் யோகமார்க்கத்தை யனுட்டிக்கிறதில்லை. அதன் அனுபோகசித்தி யெழுதிவைக்க இயலாதது. வைத்திய நூல்களும் பலவிருக்கின்றன. வானசாஸ்திரம் ஆங்கிலர் கண்ணாடி முதலிய பலகருவிகளாலறிந்தவற்றை நம்மவர் சோகிமுதலிய கொண்டு எளிதில் கணக்கிட்டறியக்காட்டுகிறது. "தமிழாசாரங்களை மறந்து ஆங்கில ஆசாரங்களைக் கைக்கொண்டு வெகுதூரம் போய் விட்டோம். மெல்லமெல்லத்தான் திரும்பல் வேண்டும் திரும்பி நமது வழிக்குவரச் சென்றகாலத்தில் பாதியாவது வேண்டும்" என்று வயதில் முதிர முதிர மதிமயங்காது அறிவில் முதிர்ந்து வந்து காலங்கடந்த நமது திவான்பகதூர் ரகுநாதராவ் அவர்கள் கூறியதை யாவரும் அறிவார்கள். பரமான்மா யாவையும் தானேயறியும் சக்தியுள்ளது. ஜீவான்மா அறிவித்தாலறியும் சக்தியுள்ளது. குழந்தை தாயைத்தானேயறியும். தாய் காட்டத் தகப்பனையறியும். தகப்பனால் குருவையும் குருவினால் தெய்வத்தையுமறிகிறான். அதுபோலத் தாய்ப்பாஷையால் விஷயத்தையறிகிறோம். அதைக்கொண்டு மற்றப் பாஷைகளைத் தெரிந்து கொள்ளுவதால் ஆதியிற் கற்றபாஷையே தாய்ப்பாஷையாகும். தமிழ் பழமையாலும் ஆன்றோர் தரித்து வந்தமையாலும், நமக்குத் தாய்ப்பாஷையானதாலும் உயர்வு பெற்றது. ஆங்கிலபாஷையிலுயர்வைச் செய்ததும் தமிழ்ப்பாஷையே எத்தனையோ நன்மைகளை நமக்களித்த தாய்ப்பாஷையாகிய தமிழைக் கைவிடுவது செய்ந்நன்றி கொன்றமையாகும். "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றாராகலின் பலவித்துவான்கள் பலகாலும் சொன்னாலும் தமிழின் பெருமை சொல்லப்போகாது. ஒரு மனிதன் முகத்தையே பாராமலிருக்கையில் அவனழகைத் தூஷணிப்பதுபோலத் தமிழின் பெருமையை யறியாது தூஷணிக்கிறார்கள். தமிழ்ப்பாஷையிலுள்ள நூல்களில் மூன்றிலிரண்டு பாகம் இறந்துவிட்டது.

அகத்தியம் அகத்திய மில்லாமற் போய்விட்டது. தமிழபிவிர்த்திக்கு அச்சியந்திரம் ஒரு முக்கியகாரணம். காடு கரடு தெரிந்துபடிக்கத் தெரியுமா? என்பது ஆன்றோர் வழக்கு. அச்சங்கடங்கள் இப்போதில்லை. ஆங்கில பாஷைப் புத்தகங்கள் வெளியானால் வேண்டுமளவு செலவாகும். தமிழ்ப் புத்தகங்கள் செலவாகிறதில்லை. ஜப்பானியர் தேசாபிமானத்திற்காக உயிரையும் கொடுக்கிறார்கள். ஆகலின் தேசாபிமானத்திற்காகவாவது தமிழ்ப் புத்தகங்களை வாங்கல் வேண்டும். புராதன ஏடுகளைத்தேடிக் கண்டு உபயோகிக்கக்கூடிய இடங்களுக்குக் கொடுத்துதவல் வேண்டும். "நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு"

“முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை யின்மை புகுத்திவிடும்” ஆகலின் கனதனவான்கள் யாவரும தமிழை யனாதரவு செய்யாது 300 லட்சம் ஜனங்கள் பேசிவரும் இந்தத் தனித்தமிழ்த் தாய்ப்பாஷையைத் தங்களால் இயன்றபொருளுதவியும் புரிந்து ஆதரிக்க வேண்டும். முற்காலத்து வடநாட்டரசர் தங்கள் காலத்தையும் பணத்தையும் அயல் நாட்டரசர்கள் தம்மை யெதிர்த்து வருத்தா வண்ணம் செய்துகொள்ளும் விஷயத்திலேயே செலவிட்டு வந்தார்கள். தமிழ் நாட்டரசர்களுக்கோ அப்படிப்பட்ட கஷ்டநிஷ்டூரங்களில்லமையால் தங்கள்காலத்தையும் பணத்தையும், தங்கள் புகழ்நீடித்திருக்கச்செய்யத்தக்க புலவர்களைப்போற்றுவதிலும் ஆலயங்களை நிருமிப்பதிலும் செலவிட்டார்கள். அவர்கள் செலவிட்டார்களென்பதற்குப் பிறநாடுகளில் அவைகள் அருகியும் இந்நாட்டில் அவைகள் பெருகியு மிருப்பதே போதியசான்றாகும். புலவர்களை மற்றவர்களினும் இந்நாட்டார் மிகப் போற்றினர் என்பதற்குப் புறநாட்டில் காளிதாசன் முதலிய வித்துவான்கள் சிற்சிலரே தமிழ்நாட்டிலோ தெய்வீக முச்சங்க நிகழ்ச்சியும், தெய்வப் புலமைத் திருவள்ளுவர், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகப் புலவர், சேக்கிழார் முதலியோர் மூவேந்தராலும், பிற்காலத்தில் புறநானூறுமுதலிய புராதன நூல்களியற்றியுள்ளாரைத் தமிழ்நாட்டுச் சிற்றரசர்களாலும், ஒரு துறைக் கோவைபாடிய அமிர்தகவியை ரகுநாதசேதுபதி கனகாபிஷேகஞ் செய்து தானுந்தன் பத்தினியாருமாக அவர்சிவிகை தாங்கியும், குமாரகுருபரசுவாமிகள் புறநாட்டாராலும் போற்றப் பட்டமை சான்றாகும். செல்காலமிங்ஙனமாகத் தற்காலத்தில் மூவேந்தருமடங்கிச் சிற்றரசுமொடுங்கிக் கல்விவிருத்திக்கென்றே யுள்ள மடாதிபதிகளும் வேறுவகையில் முயலவே புலவர்கள் தந்தொழிலைக் கைவிட்டுப் பிறதொழில் கைகொள்ளுவாராயினர். நூல்படிப்பவரேயில்லை. படிப்போரும்முறைபிறழப்படித்துத்தாமரைக்குளத் தவளையைப்போலப் போலிப் புலவராயினர். பெரும் புலமைவாய்ந்த நாவலரவர்கள் பிள்ளையவர்கள் முதலியோரைத் தூஷிப்பதே தம்பெரும்புலமைக்கு அங்கமெனவுங்கொண்டனர் தாய்ப்பாஷையைப் பேணாதார் தலையெடுப்பதியலாது. பேணுவோர் தலைமைபூணவுங்கூடும்

ஸ்ரீ. சதாசிவம் பிள்ளை,
நாகை நீலலோசனிப் பத்திராதிபர்.

கல்வியைப்பற்றி யோர் கட்டுரை.

(முன்றொடர்ச்சி.)

கல்வியைக்கற்குங் கருத்துடையவர்களே!

இனிக்கல்வியைக் கற்குமுறை இத்தன்மைத் தென்பதைக் குறித்து ஒருசிறிது ஆராயத் தொடங்குவாம்.

நாடோறுந்தவறாது குறித்தகாலத்திற்குமுன்னரே, கலைபயிலிடத்திற்குச் சென்று, ஆசிரியரிடத்தில் அத்தியந்த பத்தியுடன் பழகி, அவர் கட்டளை

யிடும் பணிவிடைகளைக் கொஞ்சமும் புறக்கணியாது அவ்வப்போது புரிந்து, இருவெனவிருந்து, சொல்லெனச்சொல்லிக் கோடைகாலத்திலே பாலைநிலத்திலே, பகல் பதினைந்து நாழிகை நேரத்திலே, தாகவிடாய் கொண்டலையும் ஒருவன், ஓர் தண்ணிய நீர்ப்பொய்கையைக் கண்டமாத்திரத்தில், அவனுக்கு எவ்வளவு ஆசைமீதூருமோ, அவ்வளவு பேரன்போடும் “இச்செய்யுளுக்கு எவ்வகை உரைகூறுவார். இக்கற்பனையை யெவ்வாறு விளக்கிக்காண்பிப்பார். இச்சங்கைக்கு எவ்வகை சமாதானங்கூறுவார். இவ்வாக்கியத்தொடருக்கு எவ்வகை இலக்கணமுடிபு கூறுவார்.” என்ற பேரவாவோடும், சித்திரப்பாவை யினத்தகவடங்கிச் செவிகொடுத்துக் கேட்டல் வேண்டும். அவ்வாறு கேட்டபொருள்களை யடிக்கடி சிந்தித்து, மனத்திற் பதித்துக்கொள்ளல் வேண்டும். தெரியாதவற்றை மீண்டும் ஆசிரியரிடத்தில் கேட்டுத்தெளிந்து கொள்ளல்வேண்டும். தன்னொடு கல்வி கற்கும் மாணவர்களுடன், தான் கேட்டபாடங்களை, வினாவிடையாயும், சம்பாஷணை ரூபமாயும், பலகாலும் பழகல்வேண்டும். மூலபாடத்தை யடிக்கடி சிந்தித்து, மனத்தைவிட்டகலாது காத்தல் வேண்டும். அவ்வாறின்றித் தான்கற்றதை மறந்துவிட்டு மேலுமேலுங்கற்கத் தொடங்குதல் எதுபோலுமெனின்,

“வருந்தித்தான் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்”

என்ற, குமரகுருபரர் வாக்குப்படி, எழுகடல்தாண்டி மிக்க கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வந்த திரவியத்தை எரியிலெறிந்து விட்டுப், பின்பு பொன்னரிப்பானைக் கொண்டு, அரிகூடையிட்டு அரிப்பரித் தெடுத்தலைப் போலவும், மிக்கதவமும் தானமும் தருமமும் விரதமுஞ்செய்து பெற்ற ஓர் அருமைப் புத்திரனை யாற்றிலெறிந்துவிட்டுப் பிறகு புத்திரனைக் குறித்துப் பிரயத்தனஞ் செய்தலைப்போலவும், ஆகும். ஆதலால், கற்றபாடத்தைக் கனவினு மறவாது கருத்துட் பதித்துக்கொள்ளல் வேண்டும்.

இன்னும், ஆசிரியரிடத்தில் அருள் வரும்படி நடத்தலே, கல்விக்குச் சிறந்த கருவியென்பார் கற்றறிந்தோர்.

என்னெனில்:—மல மூத்திரங்கள் நிறைந்ததும் பலவித பிணிகளுக்கிடமாயுள்ளதும், மட்பாண்டத்தை யொத்த அநித்தியமுடையதும், காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், டம்பம், அகங்காரம் முதலிய தீய குணங்களாலாகும் துன்பமே குடிகொண்டதுமாகிய, இத்தூல சரீரத்தை நமது தாய்தந்தையர்கள் தம்பயன் கருதி வளர்க்கிறார்கள்; நமதாசிரியரோ, அதிபரிசுத்தமும், பலவித நுண்ணிய நூற்பொருளுக் கிடமாயுள்ளதும், பூவுலகுந் தேவுலகுமாகிய எவ்வுலகங்களும், எவ்வெவர் பதவிகளும், அழியினும், தான் அணுவளவும் அழிவுறா மாட்சியுடையதும், பேரானந்த வடிவாயுள்ளதுமாகிய நமது அறிவைத் தம்பயன்

அணுவத்துணையுங் கருதாது, நம்பயன் கருதியே கருணைமீதூர வளர்க்கிறார். ஆகையால், நேயர்களே! நமது ஆசிரியரிடம் நாம் எவ்வளவு அன்பும், அச்சமும், பணிவும், பக்தியும்; உடையவர்களாயிருத்தல் வேண்டும். அவ்வறிவை வளர்த்தலேயன்றிப், பவத்தை யறுத்துச் சிவத்தை விளக்கி, மேலான வீட்டுலகிற் கோர் நல்வழி காட்டியாய் விளங்கும் பரம தயாளுவாகிய ஞானசாரியரிடத்தில், நாம் எவ்வளவு பயபக்தி யுடையவர்களாயிருத்தல் வேண்டும். எவவாறெனின்:—

“உடற்குயிர்போல் கட்கிமைபோ லூசிநூ லொத்து
விடிற்புலிதீ பாம்பினில்வீழ் வார்க்காம்—சுடச்சுடினும்
வாழைக்கா காவேதி மட்கலத்துக் காகாவா
றேழைக்கா காத திது”

என்ற ஸ்ரீகண்ணுடைய வள்ளல் கட்டளையிட்டருளியபடி, உடம்பை யுயிர் அபிமானித்தல் போலும், கண்ணை யிமை காத்தல்போலும், ஊசி சென்ற இடந்தோறுஞ் சரடுபின் செல்லுதல் போலும், ஞானசாரியரைப் பிரியாது நின்று, அவர் திருமேனியைத் தன் தேகமாய் அபிமானித்துச் செய்யவேண்டிய உபசாரமெல்லாஞ் செய்தும், இரவும் பகலும் விட்டு நீங்காதிருந்து, துஷ்ட ஜெந்துக்கள் வந்து அணுகாவண்ணம் பாதுகாத்தும், அவர் திருவுள்ளக் குறிப்பின் வழியே சென்று வழிபட்டும், அவர் பார்த்துப், புலி, தீ, பாம்பு, முதலியவற்றிற் செலுத்தினும், கொஞ்சமும் பின்னிடையாது, அவைகளின் மேல் வீழ்ந்தும், தேகாபிமானத்தை யறவே யொழித்து, அந்தப் பரம குருபரனையே பரம்பொருளாகக் கொண்டொழுகுந் திடசித்த முள்ளவர்களா யிருத்தல் வேண்டும். இதுபற்றியே “எழுத்தறிவித்தவ னிறைவனாகும்” என்றும், குருலிங்க சங்கமபத்திகளிற் குருபக்தியே முதன்மையான தென்றும், முன்னோர்கள் முரசறைகிறார்கள்.

சன்மார்க்க முற்றுவிளங்குஞ் சகோதரர்களே! இக்குரு பக்தியின் மகாத்மியத்தைப் பின்னொருகாற் சமயம்நேர்ந்துழி விரித்தெழுத எண்ணங்கொண்டுள்ளேன். ஆண்டுணர்ந்தகமகிழ்க! இவ்வாற்றால், கல்வி கற்போர் ஆசிரியரிடத்து மிக்க பயபக்தியோடு பழகல்வேண்டு மென்பதைப் பெற்றாம்.

உலகத்திலே, பயிரிடுந்தொழிலை மேற்கொண்டொழுகுவோர் எவ்வாறு அதற்குரிய முக்கியசாதனங்களாகிய, உழுதல், எருவிடுதல். களைகட்டல், நீர்பாய்ச்சல், காத்தல், முதலியவைகளைக் கைக்கொண்டொழுக வேண்டிய கடமை பூண்டவர்களாய் விளங்குகிறார்களோ, அவ்வாறே, கல்விப் பயிரை விளைக்கக் கருதுங் கருத்துள்ள மாணவர்களும், கீழ்க்கண்ட சாதனங்களைக் கைக்கொண்டு, அக்கல்விப் பயிரை வளர்க்கக் கருதுவார்களாக! அவை யாவன:—

மணமாகிய வயலைப் படித்தலாகிய கலப்பையைக்கொண்டு ஆழ உழுது கேட்டலாகிய எருவையிட்டு ஆசையாகிய நீரைப்பாய்ச்சி, வித்தையாகிய

விதையை விதைத்து, எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம் முதலிய களைகளைப் பிடுங்கி, மறதியாகிய மாடு, அசதியாகிய ஆடு, வெறுப்பாகிய வெட்டுக்கிளி, பாசாங்காகிய பச்சைக்கிளி, இறுமாப்பாகிய எலி, சோம்பலாகிய வாம்பல் முதலியவற்றால் அழியாவண்ணம் அக்கல்விப் பயிரைக் காப்பாற்றி வளர்த்து, அறிவாகிய தானியத்தை யறுத்து, அறியாமையாகிய பதரைப் போக்கி, அத்தானிய வுணவைக் கருத்தாரவுண்டு, பிறவியாகிய பசியைத் தணித்துத், தவமாகிய மெத்தையிற் படுத்துச், சத்துவகுணமாகிய தலையணையை யணைத்துக், குருவருளாகிய போர்வையைப் போர்த்துக்கொண்டு, பேராநந்த நித்திரையாகிய பெருஞ்சுகத்தை யடையக் கருதுவதே, எம்போல்வார்க் குற்றநன்மையும், இம்மானிட தேகத்தைப் பெற்ற பயனுமாகும்.

இவ்வாறின்றிக் குருவில்லா வித்தையும், முறையில்லாப் பயிற்சியும் ஒரு சிறிதும் பயன்படாவென்ப.

இதுகாறும், கல்வியைக் கற்குமுறை ஒருவாறு சுருக்கி விளக்கப் பெற்றது.

(தொடரும்)

ஆர். சுவாமிநாத பிள்ளை,
தமிழ்ப் பண்டிதர்,
உமையாள்புரம்.

“முயற்சியின் பயன்.”

சகோதரர்களே!

நாம்; ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குங் காலத்தில் இதனைச் செய்யும்படியான சக்தி நமக்குண்டாயிருக்கிறதாவென்று நினையாமல் அத்தொழிலை ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் மெய்ம் முயற்சியில், இடைவிடா மெய்ம்முயற்சி செய்வோமாகில் நம்மால் செய்யமுடியாத (காரியமாகிய) தொழில் யாதொன்றுமில்லை யென்பதை நமது சகோதரர்க ளொவ்வொருவரும் நன்குணரலாம்.

முதலில் சோம்பலுள்ளவனைப் பற்றிப் பேசாமல் சோம்பலில்லாதவனைப் பற்றிப் பேசுவோம். அச்சோம்பலில்லாதவனும் தனது தொழிலாகிய (காரியத்தில்) மெய்ம்முயற்சி செய்யாமலிருந்தால் அவனை, இவ்வுலகமும், சுற்றத்தாரும், பகைப்பதன்றி அத்தொழிலும் முற்றுப்பெறாமல் வியர்த்தமாகி அவசியமாக அடையவேண்டிய பொருளையு மடையாது இழந்துவிடுகிறான். இம்மட்டோ!

அல்ல; மற்றொருவருக்கு உதவி செய்ய முயலுங்காலத்தில் மெய்ம் முயற்சி செய்யாமல் தளர்ச்சியுடையவனாயிருப்பானாகில், பேடி கையிற் கொடுத்த ஆயுதம் போலவும், மொட்டைத்தலையிற் பிடித்தப் பேனைப்போலவும், குரங்கின் கையிற் கொடுத்த பூமாலையைப்போலவுமாகிறான். எவனொருவன் காரியமாகிய சுகத்தை விரும்பாமல் காரணமாகிய முயற்சியை விரும்புகிறானோ அவன் உற்சாகமாகிய இன்பத்தை யடைவதுடன் தனது பந்துமித்திரர்களின் துன்பத்தைத் தாங்குந் தூணைப்போலவுந் துலங்குகிறான்.

ஒருவன் ஒரு காரியத்தை விடா முயற்சியோடு செய்வானாகில் அவனை அம்முயற்சியானது சேற்றில் வசிக்குந் தாமரை மலர் போலவும், சகல பாக்கியமும் விளையும் நல்ல செய் நிலமாகவும், நினைத்ததை யெல்லாங் கொடுக்குங் கற்பக விருக்ஷமாகவும், தரித்திரமென்னும் பகைவனைச் சங்கரிக்கும் ஆயுதமாயும் விளங்குகின்றது.

(கற்பனையிலுள்ள பழமொன்றை) "காக்காய் ஏறவும் பனம்பழம் விழவும்" என்ற பழமொழியால் நம்மவர் சொல்லியுள்ளதை நோக்குங்கால் ஆச்சரியமே! காக்காய் ஏறவும் பனம் பழம் விழுமா? மற்றென்னென்று யோசிக்கில் பனங்காயானது முக்காற்பங்கு பழுத்தவுடனே பழம்போல தன்னிறத்தைக் காட்டுகிறது. அதனைக் கண்ட நாம் பழம் பழுத்துவிட்டதென அடிக்கடி அதனை அடைய முயல்கிறோம், அவ்விதம் முயன்றுமென்ன? ஒன்றும் முடியவில்லை. அப்பால் முக்கால் காயின்மேல் (காக்காய்) கால்கா யேறவும் முழுப் பழமாகிறது. இவ்விதம் முழுப்பழமானவுடன் கூர்மை பொருந்திய அரிவாளால் அன்றி செய்யவும் முடியாமற் குலையுடன் பலவாயுள்ளதும், நாம் ஒருவித முயற்சியுஞ் செய்யாமலிருக்கத் தனக்குத் தானாகவே பூமியில் விழுகிறது. அதனை நாம் எடுத்து உபயோகிக்கிறோம். அதுபோலாக நம்முயற்சியும் முக்கால் பழமாகவிருக்கும் போது அதனை உபயோகிக்க முடியுமா? முடியாது. அதுபோல் நம் முயற்சியும் பூரணமாகப் பழுத்தவுடன் அதன் பயனை நாமடைவதுடன் நம்மினத்தாரு மடைகின்றனர்.

சீவச் செயலென்றும், தேவச் செயலென்றும் இரண்டுண்டு. அதனில்; சீவனொருவன் வீட்டைக் கட்டுகிறான், தேவனொருவன் மரத்தையுண்டு பண்ணுகிறான். அவ்விதமுண்டுபண்ணின மரத்தைச் சீவனுக்கே வீடு கட்டுகிறதற்கு உபயோகமாகும்படி செய்கிறத்

கிறானென்பதைத் தெரிந்து அம்மரத்தை வெட்டி பலகையாகவும் உத்திரமாகவும், கைகளாகவும் உபயோகிக்கின்றோமோ. அதைப்போல தொழிலென்ற வீட்டைக் கட்டிக்கொள்ள முயற்சி யென்ற மரத்தை யுண்டுபண்ணியிருக்கின்றான். இதனை யறிந்தும் அறியாதவர்போல சிலர் அதிஷ்டம்போல் நடக்குமென்கிறார்கள். அத்துடன் முயற்சியு மவசியமே. "தெய்வத்தா லாவதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்ற ஆன்றோர் வாக்கையும் மறந்து தெய்வ கிருபை யிருந்தால் நாம் முயற்சி செய்யாமலே எல்லாம் நடக்குமென்கிறார்கள் இவ்வார்த்தையைக் கேட்கில் பரிதாபமே தெய்வ கிருபை அவசியமே; நாம் தெய்வ கிருபையில்லாமல் யாதொரு முயற்சியுஞ் செய்யவில்லை யென்பதைச் சிறிதாராய்வாம். நமக்கு எண்ணெய் வேண்டுமானால் எள்ளைக் கொண்டுவந்து வெயிலிற் காயப்போட்டுப் பக்குவப் படுத்திச் செக்கில் போட்டு ஆட்டினால் எண்ணெய் யுண்டாகிறது. இவ்வெள்ளுக்குள் எண்ணெயை யுண்டாக்கினது நாமா? அல்ல! மற்றாரெனில்; கடவுளென்றே நன்குணரலாம். எள்ளுக்குள் எண்ணெய்யை யுண்டாக்கியதைப் போல நமக்கும், தொழிலென்ற எள்ளையும், பயனென்ற எண்ணெய்யும், முயற்சி யென்ற விடையையும், அறிவென்ற செக்கையும், பகவான் கொடுத்திருக்க, அதனை மறந்து அதற்கெதிரிடையாய் ஒருவன் கொள்ளைக்கொண்டுவந்து செக்கிற்போட்டு ஆட்டி எண்ணெய் யிருக்கிறதாவென்று பார்த்து "காணம்" என்று சொல்லியதால் (கொள்ளுக்குக் காணமென்ற பெயர்) இன்றும் உலகில் வழங்கிவருகிறதென்பதாக நாம் யூகிக்கலாம். அதைப்போலாக இனிமேலும் ஏமாறாமல் நாம் செய்யப்புகும் மெய்ம்முயற்சியை மெய்ம் முயற்சியினால் இடைவிடாமல் முயற்சிப்போமாகில் அடையலாமேயன்றி வேறு விதத்தினால் முயற்சியின் பயனாகிய இஷ்டகாமியார்த்தங்களை அடையமுடியாதென்றே சொல்லலாம்.

அன்றியும் மெய்ம் முயற்சியாகிய பெரிய மலைபோன்ற தொழிலை எவ்விதஞ் செய்துமுடிப்போமென்ற தளர்ச்சியைநாம் அடையாதிருக்கும்பொருட்டாக பகவான் சிற்பர்களை யேற்படுத்தி பெரிய மலைகளையும் சிற்றுளியினுதவியைக்கொண்டு வகிர்ந்து தூண்களாகவும், பட்டியலாகவும், விட்டங்களாகவும், இன்னும் சிற்சில சதுரக்கற்களாகவுஞ் செய்து தனது மெய்ம் முயற்சிக்கேற்ற பலனையும் அவர்களை அடையும்படி செய்து காட்டியுள்ளார். அதனைக்கண்டும்

காணாதவர்கள்போல நாம் தளர்ச்சியுற்றிருக்கில் (நாம்) அடையக்கூடிய இன்பம் யாதொன்றுமில்லையல்லவா.

தற்காலம் நாம் யாவருங் கண்டறிந்துள்ள சர்க்கஸ் கனம் ராமமூர்த்தி நாயுடு அவர்கள் யானையைக் கட்டி அடக்கக்கூடிய சங்கிலியை அறுத்தும், 40, 50, பேர்கள் ஏறியுள்ள வண்டியைத் தன் தேகத்தின் மீதேற்றியும், பெரிய சதுரக்கல்லை மார்பிற்றாங்கி அக்கல்லைப் பொடிப்பொடியாயுடைத்தெறியும்படி செய்தும், அதிவேகமாயோடும் மோட்டாரை நிறுத்தியும் புகழ்பெற்றது அவரின் விடா முயற்சியே காரணமன்றி வேறல்ல. இன்னமும் ரயில், கப்பல், மோட்டார், சைக்கிள், எந்திரங்கள் முதலிய பல்பல அரிய செய்கைகளைச் செய்ததற்கும் விடா முயற்சியாகிய கருவியை ஆதாரமாகக் கொண்டுள்ள அறிவின் சக்தியேயாம்.

இஃதன்றியும் நான் பள்ளியில் வாசிக்குங் காலத்தில் உபாத்தியாயர் போதித்துள்ள சிறிய கதையொன்று நினைவிற்கு வருகிறது அக்கதையொன்றே நமது முயற்சிக்குந் தக்க சான்றாம். பறவைக் கூட்டங்களில் சிறிய தேக உறுப்பமைந்த ஊர்க்குருவி ஆணும் பெண்ணுமாகக் கூடி சமுத்திரக்கரையில் கூடுகட்டி ஆண் குருவியானது பெண் குருவியைப் பார்த்து நீ யிதில் முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பொரிப்பாயென்று சொல்ல பெண் குருவி; சமுத்திரத்தின் அலை வந்து குஞ்சுகளை யடித்துக்கொண்டு போனால் என் செய்வதென்று சொல்ல அப்படி அலைவந்து அடித்துக்கொண்டு போனால் நான் சமுத்திர ராஜனுடன் சண்டையிட்டு உன் குஞ்சுகளை வாங்கித் தருகிறேனென்று ஆண் குருவி சொல்லிற்று. இவ்வார்த்தைகளைக் கேட்ட சமுத்திர ராஜன் நகைத்து இதன் முயற்சியையறிவோமென்று பெண் குருவி குஞ்சு பொரிக்கும்வரை எதிர்பார்த்திருந்து தன் கரமெனும் அலைகளால் குஞ்சுகளுக்குயாதொரு தீங்கின்றியில் ஏந்திக்கொண்டு சென்று பத்திரமாய் வைத்திருந்தான். அதனைக்கண்ட பெண் குருவி பரிதவித்து, இரைதேடச் சென்றிருந்த ஆண்குருவி வந்தவுடன் சொல்லிற்று. அவ்வார்த்தையைக் கேட்ட ஆண் குருவி சமுத்திர ராஜனுக்கு அவ்வளவு கெருவமா இருக்கட்டும் பார்ப்போமென்றுரைத்து தனது இனமாகிய ஊர்க்குருவிகளையும் கெருடன் முதலிய மற்ற பக்ஷி சாதிகளையுஞ் சிநேகஞ் செய்து அழைத்துக்கொண்டுவந்து சமுத்திரத்திலுள்ள தண்ணீரைத் தங்கள் இறக்கைகளில் வாரிக்கொண்டுவந்து பொட்டலாகிய நிலங்களில் ஊற்றி சமுத்திர நீரை வற்றும்படி செய்துவிட்டதுகள். இதனைக்கண்ட சமுத்திர ராஜன் சந்தோஷ மேற்கொண்டு ஊர்க்குருவியின் குஞ்சுகளைக்கொண்டுவந்து கொடுத்து ஆசீர்வதித்துச் சென்றான். சகோதரர்களே பார்த்தீர்களா பறவை ஜாதிகளும் முயற்சியினால் பேருபெற்றதென்றால் மேன்மையாகிய மானிட சரீரத்தைப்பெற்ற நாம் முயற்சி செய்தால் அடைவதற் கருமையாகிய இன்பமும், புகழையும் பெற்று வாழ்வோமென்பதிற் சிறிதுஞ் சந்தேகமின்மையாம்.

எம். பாலுசாமி நாயுடு.

மதுரை.

* * *

ELEMENTARY EDUCATION.

எலிமெண்டரி அல்லது மூலாதாரப் படிப்பு.

1. இப்பரதகண்டத்தின்கண் தோன்றியிருக்கும் ஆன்மகோடிகளனைவருக்கும் படிப்பு இன்றியமையாதது "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்" என்னும் பழமொழி நம்முடைய தேசத்தார்கள் படிப்பின் மகிமையை நன்கறிந்திருக்கிறார்களென்று காட்டுகிறது. தவிர கிராமங்களிலுள்ள அநேக ஜனங்கள் தத்தம் வீடுவாசல்களை விற்றாவது நிலபுலங்களை விக்கிரயம் செய்தாவது அல்லது அவைகளின்பேரில் கடன் வாங்கியாவது தமது குழந்தைகளைப் பட்டினங்களுக்கு யனுப்பி அங்குள்ள கல்லூரிகளில் வாசிக்க வைப்பதையும் நாம் தினந்தோறும் பார்த்துவருகிறோம். படிப்பினால் ஜனங்களின் புத்திகூர்மையும் பொருள் சம்பாதிக்கும் திறமையும் சுய நன்மை பிறர் நன்மை இவைகளைப் பகுத்தறியும் சக்தியும் அதிகமாகி ஜனசமூகத்தின் க்ஷேமலாபங்கள் அதிகரிக்கவேதுவாகிறது.

2. இன்னும் கல்வி இருவகைச் செல்வங்களில் ஒன்றாகும். நமது நாட்டில் முக்கியமாக செட்டி நாடுகளில் பொருட்செல்வம் மிகுந்திருக்கிறது. கல்விச் செல்வம் சிறிதளவு இருக்கிறது. பொருட்செல்வம் பிறரால் அபகரிக்கப்படும், அதை கள்வர் கொள்ளாமல் காப்பாற்றல் வெகு சிரமம்.

"இன்னல் தரும்பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே
....
அன்னதை இழத்தலும் துன்பமேயாம்"

என்றபடி, பொருளினால் அதிகத் துன்பங்கள் ஏற்படுகின்றனவே யொழிய நன்மையேயில்லை கல்விச் செல்வமோ ஒருவராலும் கொள்ளப்படமாட்டாது. வெள்ளத்தினாலாவது அக்கினியினாலாவது அழியமாட்டாது.

பிறருக்குக் கொடுக்கக்கொடுக்கக் குறைவுபடாது பெருகிக்கொண்டேவரும் இம்மையிலும் மறுமையிலும், அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களையும் அழிவில்லாத புகழையும் கொடுக்கும். ஆகையால் செல்வப் பொருளில் உழன்றுவருகிற இந்நகர் வாசிகள் இதன் உண்மையை யறிந்து படிப்பை பரவச்செய்ய முயல்வது தங்கள் கடமையாகும். இன்னும் நம் நாட்டிலுள்ள ஒவ்வொருவர்களும் படித்தவர்களாக இருப்பது அவசியமென்று இராஜ்யபாரம் வகிக்கும் நிர்வாகிகளுடையவும் அரசர்களுடையவும் கொள்கை. ஆகையால் நவீன நாகரீகம் உள்ள ஒவ்வொரு தேசத்திலும் படிப்பு விஷயமாக எவ்வளவு சிரத்தை எடுத்து கொள்ளலாமோ அவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். (Higher Education மேல்தரபடிப்புக்கு ஒத்தாசை செய்துவருவதோடுகூட இந்தியாவின் அநேக பாகங்களில் மூலாதாரப்படிப்பை (Elementary Education) கட்டாயமாயும் இலவசமாயும் செய்திருக்கிறார்கள் இது விஷயத்தில் மற்ற தேசங்களோடு நமது நாட்டை ஒப்பிட்டு பார்த்தால் மலையும் அணுவும்போலிருக்கிறது.

3. ஆராயப்புகுங்கால் ஐரோப்பாவில் நாகரீகத்தில் தாழ்ந்த ருஷியாவில் 100-க்கு 20 பேருக்குத்தான் எழுதப்படிக்கத்தெரியும் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளிலும் (United states) கனடாவிலும் ஆஸ்ட்ரேலியாவிலும் அநேகமாய் எல்லாரும் எழுதப்படிக்கத்தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். இந்தியாவிலோ 100-க்கு 6 பெயர்கள் கூட எழுதப்படிக்கத் தெரியாது இதன் விவரம் படிப்பு விஷயமாக சர்க்காரால் இயற்றப்பட்டு வரும் பத்திரிகைகளினின்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

4. படிப்பு அபிவிருத்தியை பரிசோதிக்குங்கால், ஒவ்வொரு தேசங்களிலுள்ள ஜனங்களுக்கும் அந்த தேசத்துப் பள்ளிக்கூடங்களில் போய் படிக்கும் பிள்ளைகளுக்கும்உள்ள தாரதம்மியம் அதிகமாயிருக்கிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் 100-க்கு 21 பேரும் கன்னடா முதலான விடங்களில் 20 முதல் 17 பேரும் ஜெர்மனி நார்வே ஹாலண்டு இவைகளில் 17 முதல் 15 பேர்களும் பிரான்சு தேசத்தில் 14 பேருக்குக் கொஞ்சம் மேலும் பெல்ஜியத்தில் 12, ஜெப்பானில் 11, இட்டலி கிரீஸ் இவைகளில் 8 முதல் 9 பேர்களும், போர்த்துகல், ருஷியா, இவைகளில் 4 முதல் 5 பேர்களும், பள்ளிக்கூடங்களுக்குப் போய் வருகிறார்கள் நம்முடைய இந்தியாவிலோ, பள்ளிக்கூடத்தில் படிக்கிறவர்கள் 100-க்கு 2 பேர்கள் கூட இல்லை.

5 சிற்சில விடங்களில் மூலாதாரப் படிப்பை கட்டாயமாயும் இனாமாயும் சில விடங்களில் கட்டாயமல்லாமலும் போனாலும் இனாமாகவாவது சொல்லிக் கொடுக்கிறார்கள் இந்தியாவிலோ வெகுகாலமாய் இவ்விஷயத்தை முற்றிலும் மறந்துவிட்டார்கள். சமீபத்தில் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு காலம் சென்ற லேட்மிஸ்டர் கோபாலகிருஷ்ண கோக்கலே, என்னும் மகாராஷ்டிரத் தலைவர் "தோன்றின் புகழுடன் தோன்றுக, அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்றபடி, இந்த மூலாதாரப் படிப்பை கட்டாயமாயும் இலவசமாயும் கற்றுக்கொடுக்கும்படி கவர்ன்மெண்டாரை வற்புறுத்தி (Elementary Educational Bill) எலிமெண்டரி எஜுகேஷன்பில் என்று ஒரு மசோதாச் சட்டம் கொண்டுவந்து தானும் புகழ் பெற்றார். அதை அனுசரித்து இந்தியாவில் அநேக விடங்களில் மூலாதாரப் படிப்பு விஷயத்தில் எவ்வளவோ முயற்சிகள் செய்து நமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் படித்துவரும்படி ஏற்பாடுசெய்து வருகிறார்கள். முனிஸிபாலிட்டிகளும் ஜில்லா போர்டுகளும் மாகாண கவர்ன்மெண்டார் அனுமதி பெற்று மேற்சொன்ன சட்டத்தை அமுலுக்கு கொண்டுவருகிறார்கள். ஆகையால் தனமுள்ள பிரபுக்களும் இக்கல்வி விஷயத்தில் சிரத்தையுள்ளவர்களும் மற்ற எல்லோரும் ஒன்றுகூடி மூலாதாரப்படிப்பை பிள்ளைகளுக்கு போதித்துவரும்படி எலிமெண்டரி பாடசாலைகள் மேற்கூறியவாறு ஏற்படுத்தவேண்டும்.

எம். கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
அஸிஸ்டெண்டு எஸ். எம். எஸ். வித்தியாசாலை
காரைக்குடி.

கீர்வாணீ.

இம்மண்ணுலகில் வாழும் ஆன்ம கோடிகளுக்கு, வித்தையே இன்றியமையாதது. அதிலும் வடமொழிப்பயிற்சி. மிக்க அவசியம். நாம்பிறந்து, வளர்ந்து, இறக்கும், பாஷை இந்த வடமொழியைத்தவிர்த்து வேறு ஒன்றுமில்லை. அதுவே ஸம்ஸ்கிருதம். அல்லது, கீர்வாணீ, எனப்படும். நமக்குப் பாலூட்டி நம்மைத் தாலாட்டி வளர்த்துவருகிற? தாயாகிய இந்தகீர்வாணீயை செவ்வனே படித்து. அதில் பாண்டித்யமடைந்து உலகெங்கும் பிரசித்திபெறச் செய்வதுநமக்கு விதித்திருக்கும் கடமைகளில் ஒன்றாகும்.

இப்பரதகண்டம் முழுவதும் நவீந நாகரீகத்திற்கு அறிகுறியானவும், பிழைப்பிற்கு முக்கியசாதனமானவுமான ஆங்கிலபாஷைதான் தற்காலத்தில் மேன்மையடைந்து வருகிறது. ஆங்கிலபாஷை ராஜாங்கபாஷையாகவிருந்தபோதிலும், பிறர் நாட்டுபாஷையேயொழிய வேறல்ல, அத்தகைய பாஷையை நமது பிள்ளைகளுக்குக்கற்றுக்கொடுத்து, இதரபாஷைகளை நழுவவிடுதல் பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறது, "அந்தோ!" வெகுநாளாய் மேன்மைபெற்றுவந்த நமது தாய்பாஷையான கீர்வாணீயை. பிள்ளைகளுக்கு போதிக்காமல் இருப்பது என்னே! கலாசாலைகளில் இந்தபாஷையை போதிக்காவிடினும் அதை ஆதரிக்கும் சிரோமணிகளாவது தத்தம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்த ஷைபாஷையையும் முன்னுக்குக் கொண்டுவரவேண்டும்.

ஆங்கிலத்தில் பூரணபாண்டியத்தையடைந்த ஒருவனுக்கு சாதாரணமாய் உலகில் பதினைந்து. அல்லது இருபது ரூபாய்கள். வருமான உத்தி

யோகத்தையடைய எவ்வளவுமுயன்றும் பிரயோஜன மில்லாமல்போகிறது. வெகுசிரமத்துடனும் பெரிய மனுஷியர்களின் சிபார்சைக் கொண்டும் ஒரு குமாஸ்தாவேலை பெறுதல் பகீரதமுயற்சி போலிருக்கிறது. ஆகையால் காலத்திற்கேற்ற கோலம் அவசியந்தான் ஆயினும் ஆங்கில பாஷையைப் படிக்க ஆரம்பித்தவன் சுயபாஷையைமுற்றிலும் மறந்துவிட்டால் அது அவனுக்கு ஒரு விதபிரயோஜனமுமில்லை சொந்தமாதாவை விட்டு விட்டு அந்நியஸ்திரியைக் கொண்டாடுவது போலும், இன்னும் சோரநாயகனைக் கொண்டாடி வரும் ஒரு நங்கை எவ்வளவு லாபநஷ்டத்தை யடைகிறாளோ. அவ்வளவு லாபநஷ்டத்தை சுயபாஷையை இகழ்ச்சிசெய்கிறவன் பெறுவான் என்பதற்குச், சிறிதேனும் ஐயமில்லை. இன்னும் உலகில் வழங்கிவரும் பாஷைகளில் மிகவும் உயர்ந்தது சமஸ்கிருதமென்பதை மேல் நாட்டாரும் மனப்பூர்வமாய் அங்கீகரித்து, அப்பாஷையைக் கற்க சிலர் முயல்வதும், இன்னும் சிலர் அப்பாஷையைக்கற்று தேறசி யடைந்திருப்பதுவும் பிரத்யக்ஷமாய் நமக்குத் தெரிகிறது. நமது சுயபாஷையில் அயல்நாட்டார் ஊக்கங் காட்டுவதைவிட பதின் மடங்கு அப்பாஷையை முன்னுக்குக் கொண்டுவர உறித்தான நாம் ஊக்கங்காட்டி அதில் தேற்சியடைந்து இம்மையிலும் மறுமையிலும் புகழ்பெற முயற்சிப்பது நமது கடமையன்றோ.

சம்ஸ்கிருதம், யென்றால் நன்றாக பயிற்சி செய்யப்பட்டது என்று, அதன்பொருள். இதற்கே கீர்வாணீ யென்னும் பிரதிநாமமுண்டு கீர்வாணீ யென்பது இரண்டு பதங்களால் அமையப்பெற்ற ஒரு வார்த்தை கீர், வாணீ என்ற இரண்டு பதங்களுக்கு சரஸ்வதீ, சரஸ்வதீ, எனப்பொருள்படும். இம்மாதிரி இரண்டு தடவை சொல்லுவதற்குப் பதிலாக ஒரே வார்த்தையில் (சரஸ்வதீ) என்பதை உணர்த்துகிறதினால் வித்தைக்கு ஆதாரமான சரஸ்வதீயைக் கொண்டாடுவது முக்கியம். சரஸ்வதீ, கீர், வாணீ, வித்தை, இவைபோன்ற பதங்கள் கல்வியென்ற ஒரு விஷயத்தையே சுட்டிக்காட்டுகிறது. அக்கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டியது ஜனனமரணங்களில் உழலும் ஆன்மகோடிகளுக்கு ஏற்பட்டிருக்கும் முக்கிய கடமை. எவ்வளவோ வித்வான்கள், நூல்கற்ற பெரியோர்கள் இக்கல்வியைப்பற்றி பலவிடங்களில், பல தடவைகளில் பலவிதமாக உபந்யாஸங்கள் மூலமாகவும் பத்திரிகைகளின் மூலமாகவும் எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆதலால் அற்பனாகிய யான் கல்வியைப்பற்றி அதிகமாக எடுத்துச் சொல்வதென்றால் அப்பெரியோர்கள் முன் யான் ஒரு மின்மினிப் பூச்சி போலாம்.

சமஸ்கிருதமும் தமிழும் சிவபெருமானாலும் ரிஷிகளாலும் அருளிச் செய்யப்பட்ட இலக்கணநூல்களை அமையப்பெற்று ஆன்றோர்களாலே தழுவப்பட்டு வருகின்றன. தமிழ் பாஷைக்கு இலக்கணநூல் அகத்தியமுனிவர் அருளிச் செய்ததுபோல சிவபெருமான் உடுக்கிலுண்டான சூத்திரங்களை ஆதாரமாகக்கொண்டு பாணினி முனிவர் ஸமஸ்கிருதத்திற்கு இலக்கணநூலை அருளிச்செய்திருக்கிறார்.. இன்னும் ஆதியில் வடதிசையினின்றும் தென்றிசைக்கு வந்தமையால் சமஸ்கிருதம் வடமொழியெனப்படும் முதல் இடை கடை ஆகமுச் சங்ககாலங்களிலும் மூவேந்திரர்களால் கையாளப்பெற்றுவந்த தமிழ் பாஷை மேன்மையடைந்திருந்த காலத்திலும் ஸமஸ்கிருதபாஷை தமிழ் கன்னடம் மஹாராஷ்ட்ரம், கூர்ஜரம் முதலிய இப்பாஷைகள் தோழமைபெற்று உலகெங்கும் சீர்பெற்று விளங்கியதென்றால் அப்பாஷையை நாகரீக முதிற்சி அடைந்த இக்காலத்தில் புத்தி நுட்பம் மிகுந்த நாம் அதைப்படித்து ஆதரித்து காப்பாற்றிவரவேண்டியது அவசியமன்றோ.

சமஸ்கிருதபாஷையில், புல்லிங்கம், ஸ்திரீலிங்கம், நபும்ஸகலிங்கம் என்று மூவகை லிங்கங்கள் உள்ளன. லிங்கம் என்பதற்கு அடையாளமென்று பொருள், நாம் தலைப்பெயராக எடுத்துக்கொண்ட கீர்வாணீ, என்பதை, அமரசிம்ம கவியானவர் கீர், வாக், வாணீ, சரஸ்வதீ, என்று ஸ்திரீ லிங்கமாக கிருகித்திருக்கிறார், அதைப் பார்க்குமளவிலும் நமது அநுஷ்டான ஆசாரத்தினாலும் நாம் ஸ்திரீயை கைநழுவ விடாததைப்போல ஸ்திரீலிங்கமான கீர்வாணீயையும் நாம் கைநழுவவிடாமல் ஆதரிப்பதே நமது முக்கிய கடமையாம். தவிரவும், கீர்வாணீ, என்பது இரண்டு பதங்களால் சேர்க்கப்பட்ட பதம், அதில் கீர், அல்லது, வாணீ, என்று சொன்னால் போதுமானது. இரண்டு பதங்களும் சரஸ்வதியைத்தான் குறிப்பிடுகிறது. அப்படியிருக்க இரண்டு பதங்களை ஒரேசமயத்தில் உபயோகித்திருப்பதால் அவசியம் ஷை பாஷையை கற்கவேண்டியதென்று தோன்றுகிறது ஏனென்றால் ஒருவன் ஒரு பொருட்படும் வாக்கியத்தை இரண்டு முறை அடிக்கடி உறைப்பானே யானால் அவை நிச்சயம் என்று எண்ணவேண்டும்.

ஆகையால் சங்கீத வித்வான்கள் கீர்வாணீ ராகத்தை ஆதரிப்பதைப் போலநாமும் கீர்வாணீ ராகம் (கீர்வாணீ பாஷை ராகம்) ஆசையுள்ளவர்களாகவேண்டும் கீர்வாணீயென்று தேவதைகளுக்கும் பெயர் இருக்கிறபடியால் ஷை கீர்வாணீயைப் படித்தால் தேவதைகளைப்போல் நாம் ஜனனமரண மில்லாமையான கைவல்யத்தை அடைய யாதொரு ஐயமும் இல்லை.

ஆகையால் நமது முன்னோர்களால் ஆதரிக்கப்பட்ட கீர்வாணீ யென்னும் ஸமஸ்கிருதபாஷையை நாமும் கற்கவேண்டியது நமது கடமையாம்.

T. P வயித்தியநாதன்,
திருவாதூர்.

தாய்மாரின் கடமையும் குழந்தைகளின் சீலமும்:

குழந்தைகள் தாய்களுக்கு மற்றிதர ஐசுவரியங்களைப் பார்க்கிலும், அதிகப் பலனுள்ளதாமென்று நம் சகோதரிகள் முதலாவதாக அறியவேண்டும். அதனால் தம் வாழ்நாளுக்குறிய சாதனங்களில் முதன்மையான சந்தானங்களை (குழந்தைகளை) மிக்க கவனத்துடன் பாதுகாக்கவேண்டுவது, அவசியமுங், கடமையுமாயிற்று. தேச க்ஷேமங்களுக்கும், சமுதாய விருத்திக்கும், குழந்தைகளே முக்கிய முதற்காரணமானவர்கள். குழந்தைகள் கண்திறந்து பிரபஞ்சத்திலுள்ள வெளிச்சம் காண்கிற விநாடிமுதல் சுமார் ஏழு வயதுவரை தாய்மாருடைய சர்வாதீனத்திற்குட்பட்டதாமல்லவா?

சிறுவர்கட்கு மேற்குறித்த வயது வரையிலும் தம் தம் வீடுகளே பாடசாலைகளாகவும், தாய்மார்களே ஆசிரியர்களாகவும், ஆவர். இப்பாடசாலையினிற்றான் குழந்தைகளை இதர பாடசாலைகளில் கவனிப்பதைவிட பதின்மடங்கு கவனிக்கவேண்டும். இதில் கவனக்குறைவு நேரிட்டால் அதனால் நேரிடும் சங்கடங்களும், அனர்த்தங்களும், அளவிலாதவைகளாகும். அவ்வாறு நேரிடுஞ் சங்கடங்களை நிவர்த்திப்பது ஒருநாளும் முடியாததாய் முடியும். ஆகையால் தாய்மார்களே! உங்கள் குழந்தைகளை நல்வழிக்குக் கொண்டுவரப் பிரயாசை எடுத்துக்கொள்வது யாரைச்சேர்ந்ததென்று எண்ணுகிறீர்கள் இதுவே முதல் லக்ஷியமாகச் செய்யுங்கள்.

குழந்தைகளுடைய துற்கிருத்தியங்களுக்கு தாய்மார்களான நீங்களே, காரணமாயிராமல் வேறுயாருமில்லையென மனதிற்பதித்துக் கொள்ளுங்கள்.

குழந்தைகளை ஓயாது அழுதுகொண்டிருக்கும்படி விட்டிருந்தால் அஃது அத்துற்சீலமான அபிவிர்த்தியை சம்பாதித்துவிடும். குழந்தைகள் அழாதிருக்கும் வண்ணம் அடிக்கடி தின்பண்டங்கொடுத்து சாந்தப்படுத்துவதுமுண்டு. அல்லது, விளையாட்டில் கவனஞ்செலுத்தும் பொருட்டு வீட்டு சாமான்களை கொடுப்பதுமுண்டு. அதனால் குழந்தைகளுக்காவது, சாமான்களுக்காவது, ஏதாவது தீங்கு நேரிடுமாவென்று யோசிப்பதில்லை. சாமான்களை தட்டி நொறுக்கவோ, அல்லது துற்பிரவிர்த்தியில் உபயோகப்படுத்தவோ; குழந்தைகள் செய்வதிலிருந்து, சாமான்களுக்காவது. குழந்தைகளுக்காவது கேடுவருமென்று கண்டபின் உடனே அதனைப் பிடுங்கிக்கொள்வதினிமித்தம் அல்லது கோபமேலிட்டு உரத்தசத்தமாய் இரண்டொருவார்த்தை சொல்வதினிமித்தம், குழந்தைகளின் அழுகை முன்னிருந்தவைகளைப் பார்க்கிலும் பலமடங்கு அதிகமென்பதுமட்டுமல்லாமல் நெடுநேரம் விடாது உரக்க அழுவதால் குழந்தைகள் தான் நினைத்த காரியம் சாதிக்குமெனத் தெரிந்துகொள்ளுகின்றனர். இதேவழக்கத்தில் கொஞ்சக்காலம் நடந்துகொண்டிருந்தால் எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கும் ஓர் கெட்ட சுபாவம் குழைந்தைகளுக்கு சாஸ்வதமாய் ஏற்பட்டுவிடும். அல்லாமலும் அவர்களுக்கு கெட்ட சுபாவங்களில் அவா அதிகம் பலப்பட்டு, அதற்கடிமையாகி பிற்காலத்தில் மனுடலக்ஷியங்குறைந்தால், தாயாருக்குள்ள பிரதிபலனென்னவென்பதை நாம் வேறு கூறவேண்டுவதில்லை.

சகோதரிகளே! மேற்கூறியவாறுள்ள சங்கதிகள் ஒவ்வொன்றும், உங்களுடைய அநுபவத்திலும் கேள்வியிலுமுள்ளது தானென்றாலும் உங்களில் பலர் அதனிவர்த்திக்குறிய யோசனைகளை ஆராய்ந்துணராதுழற்றி நாமும் அதனை எடுத்துக்கூறியதாமென்றும் இதில் நல்லசுபாவத்தை கடைப்பிடித்தொழுகும் நீங்கள் உங்கள் மற்ற சகோதரிகளுக்கும் இதை விளங்கச்செய்யவேண்டுமென்றும் உணர்ந்துகொள்வீர்களாக.

குழந்தைகளை எப்பொழுதும் நல்லசேர்க்கையிலேயே பழக்கி அதோடு இனியவார்த்தைகளை சம்பாஷித்து, அதன் அவாவில் கெட்டதென்றுதோன்றுவதை மாற்றவேண்டும். அப்படியானால், காரணமில்லாமல் எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கும் கெட்டபழக்கம்விட்டு நல்ல சீலத்தை சம்பாதிக்கும். ஏதாமோர் நல்லகாரியத்தை நம்மால் உடன் சாத்தியப்படுத்திக்கொடுக்க முடியாத சமயங்களில் ஒருக்கால் குழந்தைகள் அழுவதாயிருக்கலாம். அச்சமயங்களில் அதன் கோரிக்கையை உடனே ஈடேற்றிக்கொடுப்பதான பாவனைகாட்டி அந்தசமயம் சந்தோஷப்படுத்தி மறக்கும்படிசெய்துவிடவேண்டும். பின்னும், ஞாபகத்திற்கு குழந்தைகள் கொண்டுவருமானால் வேறுசமாதானமாக இனியவார்த்தைகளைக்கூறி அதைபெறமுடியாதுஎன்று வேறொன்றை புதியதாய் நிர்மானித்துக்கொடுப்பதாயும், கொடுத்தும் சாந்தப்படுத்தவேண்டும். அழும்போதெல்லாம் தின்பண்டமாவது சாப்பாடாவாது கொடுக்கக்கூடாது. இவைகளுக்கு வேறுசமயங்களை திட்டப்படுத்திக்கொர்ள்ளவேண்டும். அவ்வாறு திட்டப்படுத்தி அதை அநுசரித்து கொடுப்பதாயிருந்தால், விபரீதமான சமயங்களில் தின்பண்டகளுக்காக ஒரு நாளும் அழுது தொந்திரவு செய்யமாட்டாது. அன்றியும், அழும்போது தனக்கு தின்பண்டம் கிடைக்கமாட்டாதென்றும், அதற்குவேறுசமயங்களிருக்கிறதென்றும், குழந்தைகள் தெரிந்துகொள்ளுவார்கள்.

ஓர் குழந்தை தின்பண்டத்திற்காகவே; அழுவதாயிருந்தால், அழுகை நிறுத்தப்பட்டபின்புதான், கொடுக்கவேண்டும். அவ்விதந்தான் கிடைக்குமென்றவிபரம், இலகுவில் அவைகளுக்கு தெரியும்படி செய்துவிட்டால், வீணாய்அழுவதில் பிரயோஜனமில்லை யென்று அவைகளுக்கு தெரிந்துவிடும். இவ்வாறுள்ள மார்க்கங்களை நடப்பிற்குக்கொண்டு வந்துவிட்டால் சிறிய பிராயத்திலேயே உண்மையான் ஆத்மசம்யமனத்திற்கு, அஸ்திவாரக்கல்லிடுவதற்குச் சாத்தியமாகும். குழந்தைகள், இச்சம்பிரதாயத்தைப்பற்றி நியாயாநியாயவாதஞ் செய்யமாட்டார்கள் அதற்குள்ள சக்தியுமேற்பட்டுவிடாது. ஆனால் இவைகள் காலக்கிரமத்தில் பெருகிவிடும்

அப்பொழுது அறிவு விசாலித்து ஓர் காரியத்தை ஏற்றுக்கொள்ளப்படுகிற, பலமும் ஞானமும் தானே உண்டாகும்.

குழந்தைகளுக்கு அவரவர் சக்திக்குத்தகுந்தவாறு இலகுவில் செய்துமுடிக்கக்கூடிய காரியங்களைக்கொடுத்து. தினம் அதற்கொருசமயத்தையும் திட்டஞ்செய்து அதைஅநுசரித்துச்செய்யத் தூண்டவேண்டும் அப்படிச் செய்யச்சொல்லுவதில் அவர்களுக்கு சிரமந்தோன்றாதிருக்க வேண்டிய புலமார்க்கங்களையும் காட்டவேண்டும். சிலகுழந்தைகளுக்கு சிலவழிகள் சிரமமில்லாமலும் சில சிரமமாயும் தோன்றும். அதனைக் கண்டறிந்து அவர்களுக்குற்ற இலகுவான வழியையே அநுசரித்துவிட பழக்கவேண்டும். இச்சுலபமானவழிகளையே வேறுகாரியங்களிலும் உட்படுத்தி ஒழுக்கமான மேன்நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும். நிமிட நேரமாவது அவர்களை சோம்பேரிகளாயிருக்கவிட்டுவிடக்கூடாது. இப்படிச் செய்யும்பொழுது, குழந்தைகளுக்கு சிரமமேற்படக்கூடிய சமயங்களிலாவது. அல்லது இஷ்டமில்லாது கடமையை ஆலசியங்காட்டும்பொழுதாவது தாய்மார்களுக்கு கோபம்வந்து அடிப்பதுவழக்கமாயிருக்கிறது. இதனால் காரியசித்தியாகுமென்று சிலருடைய கொள்கை. இது சரியானதன்று. அதைப்பார்க்கிலும் அதனைச்சமாதானஞ்செய்து நாமே சிலவற்றைச்செய்துமுடித்து கஷ்டந் தோன்றாவாறுசெய்து, இனியமொழிகளையும் உபயோகப்படுத்தி உற்சாகப்படுத்தி விடுவதே மேலானதாகும். அப்படியில்லாமல் அடிப்பதானால் சிலகுழந்தைகளுடைய மனமுடைந்து போவதோடு சிரத்தையற்று அடிக்குப்பயந்து கடனுக்கு வேலைசெய்வதுபோல, கடமையைத திறமையோடுசெய்து முடியாமல் செய்து முடிப்பனவாயிருக்கும்.

இப்படிக் குழந்தைகளை நன்னடையிற்கொண்டுவருவதற்கு தாய்மார்களுக்குப்போதுமானகல்வியும், தர்மசிந்தனையும், அறிவும், மேன்பட்டிருத்தல்வேணடுமன்றோ. இதனை உத்தேசித்தேதான் பெண்கள் வாசிக்கவேண்டியதென்று மேதாவிகள்கூறுகின்றனர். இப்பொழுது அநுபவத்தில் பார்த்தாலும். படித்தபெண்கள் வயிற்றில் பிறந்த குழந்தைகள் எவ்வளவு திடகாத்திரமும், அறிவும், சீலமுமுள்ளதாயிருக்கிறதோ அவ்வளவு கல்வி வாசனையறியாத பெண்கள் வயிற்றில் பிறந்த குழந்தைகளுக்கில்லை என்பது சாதாரணமேயாகும், இதனை நீங்கள் யோசித்துப்பாருங்கள்.

(தொடரும்.)

இ. எஸ். சிவராமலிங்கம்பிள்ளை,

புனலூர்.

* * *

மாணவர் பக்கம்.

இதோபதேசம்.

அன்புமிக்க சகோதரர்களே!

அருமை மாணவர்களே!!

நீங்கள் நல்லொழுக்க முள்ளவர்களாகவும் கபடற்ற மனத்தினராகவும்; தந்தை, தாய், உபாத்தியாயர், சுற்றத்தார் முதலியவர்களிடத்து வணக்கமுள்ளவர்களாகவும், சகோதர, சகோதரிகளிடத்து பட்ச முள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இப்பொழுது சிறுவர்களாய் பள்ளிக்குச் சென்று கல்விகற்பதில் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தாலும், இன்னுஞ் சில வருஷங்களில் பெரிய மனிதர்களாய் உலக வியவகாரங்களில் ஈடுபட்டு உங்கள் குடும்பங்கட்கும் சுற்றத்தினர்க்கும் தாய்நாட்டிற்கும் பொறுப்பாளிகளாய் விளங்கவேண்டியவர்களன்றோ நீங்கள்! சுயநலங் கருதாத்தன்மையும் பரோபகாரம் செய்யவேண்டுமென்ற உத்தம எண்ணமும், பரதகண்டத்திற் பிறந்து பாரதமாதாவின் மார்பகத்தே இருந்துபொங்கிவழியும் அமுததாரையே போன்று இப்புண்யபூமியில் உற்பத்தியாகும் பலன்களால் வளர்ந்த சரீரத்தை உடையவர்களாதலின் நாம்—இந்து மஹமதிய, கிறிஸ்தவர்களாகிய நாம், அனைவரும் சகோதரர்கள்— பல்வேறுபட்ட மதத்தினராகயிருந்தாலும் ஆதியும் அந்தமும் இல்லாத அருட் பெருஞ்சோதி ஒன்றுண்டென்று கூறுகிறவர்களாதலின் சகோதரர்கள்' என்றஒற்றுமை யுணர்ச்சியை உடையவர்களாகவும் இருந்து உலகில் உத்தம நிலையை அடைய வேண்டியவர்களன்றோ நீங்கள்!

வயோதிகர்களான தேசபக்தர்கள் தங்கள் வாழ்நாட்கள் முழுமையும் உழைத்து உழைத்து பலங்குன்றிப் பரகதியடைந்தது உங்களுக்காக வன்றோ! — பழுத்ததேச ஊழியர்கள் தங்கள் முதிர்ந்த அறிவினால் ஆக்கிவைத்ததை அனுபவிக்கவேண்டியவர்கள் நீங்களேயன்றோ!

உங்களையே தேசம்— நமது அரிய பாரத வருஷம், எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதை உணர்ந்து உத்தமர்களாக நடந்து கொள்ளவேண்டியது உங்கள் கடமையும் எமது கோரிக்கையுமாகும்.

இன்னொன்று.

“முக்கியமான விஷயத்தைப் பற்றி.”

முற்காலம் முதலே அரசனைத் தெய்வமாகக் கொண்டுவழிபடுதல் நமது குலமுறை யாகவுள்ளது. நமது புராதன சரித்திரங்களும் நீதிநூற்களும் சான்றாக விளங்குகின்றன. அரசன் மனிதரில் உயர்ந்தவன்— அவதாரபுருஷன்— விஷ்ணு அம்சம் பொருந்தினவன், என்றுகூறி அரசனின் ஆக்ஞையை மீறி நடந்தவன் பாபி— தண்டனைக் குற்றவன் என்று தூஷிப்பது நமது வழக்கம். “இந்தியர்” ராஜபக்தியுடையவர் என்று, பெருமையாகக் கூறுவது மேல் நாட்டார் வழக்கம். ஆகவே நீங்கள் அனைவரும் ராஜபக்தியுடையவர்களாகவிருக்கவேண்டும். தேசபக்தி எவ்வளவு முக்கியமோ அதைவிடப் பன்மடங்கு அவசியம் ராஜபக்தி.

கே. எல். சிங்காரவேலுப் பிள்ளை,

ஸ்திரீகள் பக்கம்.

இதோபதேசம்.

எமது அன்பார்ந்த சகோதரியே!

> "கொழுநன் சொற்கடவாதுறை கொள்கையே
> வழுவி னல்லறம் வான்றவ மாற்றுந்
> ஒழுது தெய்வம்ப ராய்மலர் தூவுதல்
> பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே."
>
> —காசி காண்டம்.

குற்றமற்ற கற்பினையுடைய உத்தம பத்தினிகட்கு நாயகனுடைய உத்தரவு கடவாது நடக்கின்ற கோட்பாடே; தவறில்லாத தர்மமும், மாட்சிபெற்ற தவமும், தெய்வத்தை வழிபட்டு மலரா லருச்சித்துப் பூசித்தலுமாகும் என்பதை நீ உணர்ந்திருத்தல் வேண்டும். அதுவே, நீ, அடைய விரும்பும் இகபர இன்பங்கட்கு இன்றியமையாததாகும்.

நிற்க, நமது மூதாதைகளின் ஆசாரங்களின் அந்தரங்கமின்னதென்று ஒரு சிறிது முணர்ந்துகொள்ளாத சில மேல் நாட்டார் "நீங்கள் பெண்களை அடிமைகள்போல நடத்துகிறீர்கள். நாங்களோ சகலசுதந்தரங்களுங் கொடுத்து சமத்துவமாக நடத்துகிறோம் என்று வெகு டம்பமாகச் சொல்லுகிறார்கள். நாமும் அவ்விதமே கூறுவதால் நம்மையும் நவநாகரீக கோலாகலரென தேசத்தவர்கள் மதிப்பார்களென்ற வீண் எண்ணத்தைக் கொண்டவர்களாக நம்மவரிற் சிலரும் பிதற்றித் திரிகின்றனர். அந்தோ! இது பரிகசிக்கத் தக்கதொன்றென் றுணர்ந்தார்களில்லை. என்னே! இவர்களின் மதி.

நமது நாட்டிற் சொற்பகாலமே தங்கி இருந்து சென்ற ஒரு பிரசித்திபெற்ற அமெரிக்க கிருஸ்துவ பாதிரியார் அறிந்துகொண்ட நம்முடைய விஷயங்களை, புண்ய பூமியான பரதகண்டத்திற் பிறந்து பூஜ்யர்களான நமது மூதாதைகளின் உத்தம ரக்தமானது ஊடுருவிச் செல்லும் தேகத்தைத் தாங்கியிருப்பவர்களான நம்மவர்கள் அறியாதிருப்பது அந்தோ! வெட்கம்! வெட்கம்!!

மேலே குறிப்பிட்ட கிருஸ்துவ பாதிரியார் அமெரிக்காவிற் செய்த சிறந்ததொரு பிரசங்கத்திற் கூறியதாவது:—

("நாம் இந்தியாவில் கணக்கற்ற பணத்தைச் செலவு செய்து வாலிபர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் வைத்து உயர்ந்த கல்வியைப் புகட்டினாலும் அவர்களைக் கிருஸ்தவர்களாக்கிவிட முடியவில்லை. அவர்கள் நமது "பைபிலைத் தங்கள் பாடப்புத்தகங்களிலொன்றாக நினைக்கிறார்களே யொழிய வேறல்ல. வீட்டிற்குச் சென்றதும் நமது பாடத்தை மறந்தேவிடுகிறார்கள். ஏனெனில் "ஹிந்துமதம்" இந்திய மாதர்களின் காவலில் இருக்கிறது. ஒரு இந்தியன் எவ்வளவு பெரிய உத்தியோகத்திலிருந்தாலும் அவன் குடும்ப விஷயத்தில் தனது மனைவியின் இஷ்டப்படியே நடந்துகொள்கிறான். இன்று விரததினம் ஆகவே, நான் மாமிசம் சமைக்கமாட்டேனென்று அவன் மனைவி கூறினால், அன்று மாமிச போஜனத்தை இழந்து விடுகிறான். எனவே ஹிந்துவாகிய ஒருவன் மத விஷயம் குடும்ப விஷயம் முதலியவைகளில் தன் மனைவிக்கு அடிமை போலவே நடந்து கொள்கிறான். ஆகையால் பெண்களுக்குப் பள்ளிக்கூடம்வைத்து மதக்கல்வி புகட்டவேண்டும்.)

இவ்விதமாக அவர் கூறியதானது இந்தியாவில் புருடர்கள் மனைவிகளிடத்து வைத்துள்ள மட்டற்ற அன்பை வெளியாக்குகிறதன்றோ? ஆகவே

சகோதரியே! உன் வீட்டிற்கு எஜமானி நீயே! நீயே நமது புராதனமான ஹிந்துமதத்தைக் காக்கும் பெருமை வாய்ந்தவள். உன் கணவன் யாவராலும் மதிக்கப்பெறும் உன்னதநிலையிலிருந்தாலும் உன் வேண்டுகோளை உடனே நிறைவேற்ற ஆவலுற்றவனாகவிருக்கிறான். அதற்குக்காரணம், உனது கணவனிடம் நீ வைத்துள்ள அளவற்ற அன்பாலும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென எண்ணி நீ நடந்து கொள்ளும் விசேஷத்தாலும் உன்னிடத்து அவனுக்குள்ள பிரேமையேயாகும்.

நாள் முழுவதும் நெற்றி வியர்வை நிலத்தில்விழ அரும் பாடுபட்டுச் சம்பாதிப்பதெல்லாம் உனக்கும் உன் சந்ததிக்குந்தான் என்பதை சிறிது யோசித்துப்பார். பார்ப்பதற்கே பயங்கரமான ஆழிய கடலைக்கடந்து சகித்தற்கரிய சங்கடங்களை அனுபவித்துத் திரவ்யத்துடன் திரும்பவந்து உன்னைப் பொன்னாலும் மணியாலும்

அலங்கரித்துக் கண்ணால் பார்த்துக் களிக்கிறான். ஆ!! இத்துணை அரும்பாடுகளும் பட்டுவந்த உன் கணவன் உன்னிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன தெரியுமா?

முகத்தில் மலர்ச்சியும் அகத்தில் அன்பும் வாயில் இன்சொல்லுந்தான்.

"குலமகட் கழகுதன் கொழுநனைப்பேணுதல்" என்றபடி உன் கணவன் மனங்கோணாதவாறு நடந்துகொள்வதே உன் கடமையாகும்.

ஆகவே என் அருமைச் சகோதரியாகிய "நீ" உயிரும் உடலும் போலவும் நகமும் சதையும் போலவும், மலரும் மணமும் போலவும் ஒளியும் அனலும் போலவும் உன் கணவனுடன் மனமொத்துவாழ சகல ஜீவ தயாபரனான ஜகதீசன் தண்ணருள் பாலிப்பாராக. ஓம் தத்சத்.

கே. எல். சிங்காரவேற்பிள்ளை,
முத்துப்பட்டணம், காரைக்குடி.

"மனோரஞ்சனி" என்ற நடுவெழுத்தலங்கார விநோத விடுகதை. நெ. 1

(செய்யுள்)

பொன்னின்பே ரொன்று மதன் பேரி லொன்று
பூலோக நதியொன்று மந்திரப்பேர்
தன்னிலே ஒன்று துரைத் தனப்பே ரொன்று
தாரத்தின் பெயரொன்று சார்பெழுத்து
மன்னுமிவ் விருமூன்றும் மூன்றெழுத்தாம்
வரிசையுடன் நடுவெழுத்தை வரைந்து நோக்க
துன்னு "மனோரஞ்சனி" யென்றாகுமந்தத்
தொகுபெயரை வல்லோரே துலக்குவீரே

நண்பர்கள், இதற்கு விடை கூறுவார்களாக.—

இ. எஸ். சிவராமலிங்கம் பிள்ளை,
புனலூர்.

தேவதாஸன்

(3-ம் பகுதியின் தொடர்ச்சி)

கணபதி—ஆம் அம்மா தாங்கள் அப்படித்தான் இருந்திருப்பீர்கள். எஜமானவர் இவ்விதம் செய்வாரென்று நான் கனவிலும் எண்ணினவனில்லை.

ஜீவ—ஆம்! அதற்கு நாமென் செய்வது. ஊழ்வினையின் பயன் இது.

கணபதி—தங்கள் மனம் நிம்மதியடைந்திருப்பதைக் காண நான் சந்தோஷமடைகிறேன்.

ஜீவ—ஆம் ஐயா! வேறு என்ன செய்வது. இச்சமயத்தில் தைரியத்தைக் கைவிடலாமா?

கணபதி—உண்மையே தைரியத்துடன் இருக்கவேண்டிய தருணம் இது!

ஜீவ—தாங்கள் இருக்கும் போது தைரியத்துக்குக் குறைவென்ன. தங்களுக்கேதாவது தனிமையான சமாசாரங்கள் கிடைத்தனவா? தாங்கள் இதுவரை முயற்சி எடுக்காமலிருக்க மாட்டீர்களே.

கணபதி—ஒரு விதத்திலா! பலவிதத்திலும் முயற்சித்தேன். ஆயினுமென்ன? பலன் தானடைந்தேனில்லை. சற்று முன் ஒருவர் வந்திருந்தார். அவர் சென்னையிலிருந்து எனது நண்பர் குமாரலிங்கம் பிள்ளையால் அனுப்பப்பெற்றவர். வியாபாரநிமித்தம் இவ்வூருக்கு வந்திருக்கிறார். அவரைக் கூடக் கேட்டேன் தமக்குத் தகவல் ஒன்றும் தெரியாதென்று கூறிவிட்டார்.

ஜீவ—பட்டணத்தாரா? அவர் பெயர் என்ன?

கணபதி—வேணு முதலியார் என்பது அவர் பெயர். முப்பதுக்கு மேற்படாத வயதினர். சிவந்த மேனியர்.

(தேவதாஸன் தன் பெயரை எக்காரணம் பற்றியோ இவரிடம் மறைத்துக் கூறியிருக்கின்றான் என்பதைத் தெரிந்துகொண்டாள் ஜீவரத்தினம். ஆகையால் இம்மனுஷனிடம் நாமும் சர்வஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டாள். பிறகு அவரை நோக்கி,

ஜீவ—சரிதான் தங்களுக்கில்லாத அக்கறை வேறு யார்க்குண்டு. கையில் இப்பொழுது இருப்புத்தொகை எவ்வளவு?

கணபதி—சுமார் ரூபாய் ஆயிரம் வரைதானிருக்கும்.

ஜீவ—வரவேண்டிய இனங்களிலிருந்து வசூல் செய்யவில்லையா?

கணபதி—ஒரு விசனகரமான விஷயம், இச் சமயத்தில் அதைத் தங்களிடம் கூறுவதற்கு வருத்தமாகவிருக்கிறது.

ஜீவ—குற்றமில்லை கூறுங்கள், எதுவரினும் வருத்தமில்லை.

கணபதி—ஆனால் கூறுகிறேன். குஞ்சிதபாதம் கம்பெனிக்கு ரூபாய் ஐம்பதினாயிரம் இரண்டு வருடங்களுக்கு முன் கொடுத்திருந்தோம். அந்தக் கம்பெனி பல கடன்களுக்குள்ளாகித் தரித்திர நிலைமைக்கு வந்துவிட்டதென்றும், இனிமேல் நாணயம் செல்லாதென்றும் அதன் சொந்தக்காரர் என்னிடம் இன்று கூறினார். நமக்குத் துரோகம் செய்யவேண்டுமென்ற எண்ணம் அவருடைய மனதில் இல்லை என்றும் பூராவாகத் தீர்த்து ரசீது கொடுத்தால் ரூபாய் பதினாயிரம் கொடுப்பதாகவும் பகர்ந்தார். எனக்குச் சம்மதமில்லை. என்னசெய்வது வேறு வழியும் கிடையாது. எதற்கும் தங்களிடம் ஆலோசனை செய்தபிறகு தான் பதில் கூறக்கூடும் என்று சொல்லியனுப்பினேன். கஷ்டகாலம் ஒன்றன்பின் ஒன்றாகத் துன்பத்தைக் கொடுக்கிறது.

ஜீவ—தாங்கள் கூறுவது விந்தையாக இருக்கிறது.

கணபதி—(சற்று கோபத்துடன்) வேண்டுமானால் நேரில் அவரையழைத்துவருகிறேன்.

ஜீவ—தாங்கள் வருத்தப்படக்கூடாது நானோ இவைகளில் அனுபவமில்லாதவள். அதனால் தான் ஆச்சரியப்பட்டேன்.

கணபதி—ஆம்! ஆம்!! உண்மையே. இந்தக் குடும்பத்திற்குத்தானா நான் துரோகம் செய்வேன்.

ஜீவ—ஐயா தங்களைத்துரோகம் செய்யக் கூடியவரென்று கூறினேனில்லை. அப்படியிருக்க நீங்களாகவே ஏன் இல்லாததைச் சொல்லி வருத்தப்பட்டுக் கொள்ளவேண்டும்?

கணபதி—விந்தை என்று தாங்கள் கூறினபடியால்தான் சிறிது விசனம் எனக்கு.

ஜீவ—சரி சரி, அத்துடன் விடுங்கள், அந்தப்பேச்சை சம்மதமானால் ரூபாயை வாங்கிவாருங்கள். இரசீது தருகிறேன்.

கணபதி— அப்படியே வாங்கி விடுவதுதான் உசிதம்.

ஜீவ—அவ்விதமே செய்யுங்கள்.

கணபதிசாமிப்பிள்ளை ஜீவரத்தினத்தினிடம் விடை பெற்றுச் சென்றார். வரும்போதிருந்ததைக் காட்டிலும் போகும்போது நரைத்தமீசையும் சுருங்கிக் குழிந்தகன்னமும் உடைய அவர்முகம் மலர்ந்திருந்தது. அவர் சென்றதும் பின்வருமாறு தனக்குள் சொல்லிக்கொண்டாள் ஜீவரத்தினம்.

ஆசாமி வெகு கெட்டிக்காரன். பழம் பெருச்சாளி. இவனை நாம் சாமான்யனென நினைத்து மிதமாக இருந்துவிட்டோம். இவனை இன்று முதல் பகைவனாகவே கருதவேண்டும். தன் பெயரை இவனிடம் மறைத்துக்கூறிய தேவதாஸன் நமக்கு ஏன் எச்சரிக்கை செய்யவில்லை? எதற்கும் நாம் அவருக்கு உடனே இவன் விஷயத்தில் கவனம் வைக்கும்படி எழுதவேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் "வேதவதி" அவ்விடம்வந்து ஒரு சிறுவன் தன்னிடம் கொடுத்துச்சென்றதாக ஓர் கடிதத்தைக் கொடுத்துச்சென்றாள். அக்கடிதத்தைத் திறந்து படித்தாள் ஜீவரத்தினம்.

அம்மா!

நான் இன்று சென்னைக்குப் பிரயாணமாகிறேன் கூடிய சிக்கிரம் தங்களைக்காண்பேன். கணபதியிடம் என்னைப்பற்றி ஒன்றும் கூறவேண்டாம்.

தேவன்.

இக்கடிதத்தைக் காணாத முன்னமே நாம் அவன் விஷயத்தில் எச்சரிக்கையாகிவிட்டோம் என்று சந்தோஷித்தாள். திடீரென்று அவள் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. உடனே வேதவதியைக் கூவியழைத்தாள்.

(தொடரும்)

கே. எல். சிங்காரவேற்பிள்ளை
முத்துப்பட்டணம்
காரைக்குடி

பத்திராதிபர் குறிப்புகள்.

"மனோரஞ்சனி" பத்திரிகாபிமானிகட்கு நமது வணக்கமான விக்ஞாபனம் ஒன்றுளது. அன்பர்கள் பத்திரிகா நிர்வாக கஷ்டத்தை நன்குணர வேண்டுகிறோம். பத்திராதிபரின் பொறுப்பும் செலவுகளும் கணக்கிலடங்காதன—எண்ணற்கியலாதன. அவைகளைச்சகித்துச் சென்றால்தான்; பத்திரிகை கிரமமாக நடந்தேறும். பத்து ரூபாய்களை மாற்றினால் பத்து நிமிஷங்களிற் பறக்கும் இக்காலத்தில் (வருடம் ஒன்றுக்கு) நாம் ஏற்படுத்தியுள்ள சந்தாவெல்லாம் ரூபாய் இரண்டேதான். மனோரஞ்சனியாகிய பச்சைப் பசும்பாலகி தன் வளர்ச்சியைக்கருதி உங்களிடமிருந்து (பன்னிரு மாதத்திற்கும்) அடைய விரும்புவது முப்பத்திரண்டு அணாக்களே! நாம் ஒரே தினத்தில் எத்தனையோ ரூபாய்களைச்செலவு செய்துவிடுகிறோம். ஒரு பத்திரிகையை நிலைநிறுத்துவதற்காக நாம் வருடத்தில் இரண்டு ரூபாய் கொடுப்பது பெரியகாரியமல்ல! இரண்டு ரூபாய் மட்டும் ஒருவர் கொடுப்பதினால் பத்திரிகை நடைபெறுமென்று நாம் கூற வரவில்லை: ஒவ்வொருவரும் இவ்விதம் செய்வதால் பல துளி பெருவெள்ளம் என்பதுபோலச் சேர்ந்து கஷ்டமின்றி இனிது நடைபெறும். ஆகவே, அன்பர்கள் நமது முயற்சியில் அபிமானம் வைத்து ஆதரிப்பதுடன், தமது நண்பர்களையும் சந்தாதாரர்களாகச் சேரும்படிசெய்து நம்மைத் தைரியப்படுத்துமாறு பிரார்த்திக்கின்றோம்.

☞ இன்னொன்று.

வி. பி. யைத்திருப்பிவிட்ட சில நண்பர்களுக்கு.

நாம் வி. பி. அனுப்பப் பல நாட்கள் முன்னரே ஒவ்வொருவருக்கும் வி. பி. அனுப்பப்போவதாக வரைந்து பிறகு வி. பி. அனுப்பினோம். அதைப்பலரும் ஆர்வத்துடன் பெற்றிருக்க சிலர் மட்டும் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அதற்காக நாம் மிகவும் விசனிக்கிறோம். நாம் விசனிப்பது ஒன்றரையணா செலவாகிவிட்டதே என்பதற்கன்று! மற்றெதற்கெனின்; மேல்நாட்டார் நாம் ஆச்சரியப்படத்தக்க விதமாகப் பத்திரிகை விஷயத்தில் செலவு செய்துகொண்டிருக்க நம்மவர்கள் மட்டும் அவ்விஷயத்தில் சிறிதும் கவலையின்றி இருக்கின்றார்களே என்பதற்காகத்தான் நாம் வருந்துகின்றோம். நம்முள் அடங்கிக்கிடக்கும் அறிவின் அபாரசக்திகளை கிளப்பிவிடுவதற்குப் பத்திரிகைகளே இன்றியமையாதன. நம்முடைய நாட்டில் ஒரு பத்திரிகை ஏற்பட்டு கேவலம் இரண்டு ரூபாய் செலுத்தி ஆதரிப்பாரின்றி நின்றுவிட்டது என்று பிறர் கூற இடங்கொடுப்பது இழிவன்றோ? ஆனால் நமது அருந்தமிழன்னையின் ஆர்வம் மிக்க பெண்மகளாகிய "மனோரஞ்சனி" யை சிலர் ஆதரிக்க முன்வராவிடினும், அவள்பாற் காணப்படுங்

குற்றங்குறைகளைச் சீர்திருத்தியும், குணநலங்களைப் பெரிதும் பாராட்டியும் அவளை அன்போடு ஆதரித்து ஆசீர்வதிக்கப் பல புண்ய சீலர்கள் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சந்தோஷத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்றொன்று:

நமது பத்திரிகையின் மாதிரி கோரியவர்கட்கும் முந்திய பகுதிகளைப் பார்வையிட்டு சந்தோஷத்தால் வி. பி. அனுப்புமாறு கோரியவர்கட்கும் முறையே அனுப்பியிருக்கிறோம். நம்மீது விஸ்வாசம்வைத்து எக்காலத்தும் ஆதரித்து வருவார்கள் என்று நம்புகிறோம்.

இனாம்.

நமது சந்தாதார்கள் அனைவர்க்கும் ஜனவரி மாதத்தில் இனிய தமிழ் நாவலொன்று இனாமளிக்கப்போகிறோம். அவ்விதமே ஒவ்வொரு வருடமும் செய்வோம். சந்தாதார்களாகச்சேர விரும்புவோர் சீக்கிரமே சேர்ந்துவிடுவீர்களென்று நம்புகிறோம்.

மதிப்புரை.

ஏகாதசிமகிமை:-இது வேலூர் ஸ்ரீமத் பு.க. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்களால் இயற்றப்பெற்ற ஓர் சிறிய சிறந்த புத்தகமாகும். இதில் ஏகாதசியின் மகிமையைப் பற்றி விரிவாக விளக்கிக் காட்டியுள்ளார். இதை நமது பார்வைக்கு அனுப்பிய புனலூர் ஸ்ரீமான் இ. எஸ். சிவராமலிங்கம் பிள்ளையவர்கட்கு நன்றி பாராட்டுகிறோம். வேண்டுவோர் மேற்கண்ட பிள்ளையவர்கட்கே எழுதிக்கொள்க. இதின் விலை அணா ஒன்று.

ப்ரஜானுகூலன்:—இது திருச்சி ஸ்ரீரங்கத்திலிருந்து வெளியாவது. இதன் 14-வது வால்யம் 1-வது சஞ்சிகையைவரப்பெற்றோம். வழக்கம் போல அழகிய நடையில் வியாசங்கள் விமரிசையுடன் வெளியிடப் பெற்றிருக்கின்றன. இதன் வருட சந்தா ரூ 2 தான்.

கற்பகம்:—இது புதுவையிலிருந்து வெளிவரும் ஒரு மாதாந்த சஞ்சிகையாகும். இதன் 4-வது தொகுதியின் 12-வது பகுதி வரப்பெற்றோம். இதில் நல்ல வியாசங்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. எனினும், இதில் அச்சுப்பிழைகள் சில காணப்படுகின்றன. இனியாவது பிழையறப் பரிசோதித்து வெளியிடுவார்களென நம்புகிறோம். இதன் வருட சந்தா அணா 12.

கமலாசனி:—இப் பெயர்பூண்ட மாதாந்த சஞ்சிகை திருவாரூரிலிருந்து வெளியாகிறது. இதன் 5-வது, தொகுதி 1, 2-வது பகுதிகள் வரப்பெற்றோம். இதன் சகல செலவையும் அவ்வூர் தமிழ்சங்கத்தார் ஏற்றுக்கொண்டு அவர்களே நடத்திவர தீர்மானித்து முதல் சஞ்சிகை வெளியிட்டார்களென்றும், பிறகு பொருட் செலவைக் கருதி சங்கத்தார் நடத்தாமல் இப்பத்திரிகையின் அதிபரான ஸ்ரீமாந் தியாகராஜ ஞானியாரிடமே விட்டுவிட்டார்களென்றும் பத்திரிகையின் மூலியமாய்த் தெரிகிறது. இதில் அநேக நல்ல வியாசங்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. சங்கத்தார் கைவிடினும் பத்திராதிபர் ஊக்கத்துடன் நடத்துவாரென நம்புகிறோம்.

இதன் வருட சந்தா ரூ 3 வெளிநாட்டிற்கு ரூ 5.

திருநெல்லிக்காவற்பதிகம்:—இப்புத்தகம் ஒன்று நமது அருமை நண்பர் K. L. சிங்காரவேற்பிள்ளை அவர்களால் நமது பார்வைக்குக்கிடைத்தது. இதனை இயற்றியவர் மழவை இராமசாமி அய்யர் அவர்களாவர் தமிழ்த்தெய்வமாகிய திருமுருகக்கடவுளினிடத்து இவர்க்குள்ள பக்தியையும் பாக்கள் இயற்றுவதில் இவர் தம் ஆற்றலையும் ஒவ்வொருபாக்களிலும் இனிது காணலாம். இதற்கு தமிழ்ப்பண்டிதர் சிதம்பரமய்யரவர்கள் எழுதிய சிறப்புப்பாயிரம் சிறப்பாகவே விளங்குகின்றது இதன் விலை போடவில்லை.

(பத்திராதிபர்.)

விளம்பரம்.

நாணயமான சரக்குகள். சரசமான விலை.

சொந்தத்தில் தயார் செய்கிற அநேகவித புதிய ஜவுளிகள் குறைந்த விலை!! நாம் சொந்தத்தில் ஜவுளிநிலுசுகள் உற்பத்திசெய்வதில் இம்மதுரையில் பெயர் பெற்றவர்கள் வியாபாரிகளிடத்தில் வாங்குவதைக்காட்டிலும் சொந்தத்தில் உற்பத்தி செய்பவர்களிடம் வாங்கினால் அதிக சுலபமாயிருக்கும் என்று எல்லோருக்கும் தெரியும். ஆகையால் எங்களிடம் ஒருமுறை வாங்கி பரிக்ஷைப்பாருங்கள்! சரிகைகலந்த பட்டு ரவிக்கைகள் ரூபா 3 to 10 & 12 to 20 வரை, சரிகைகலந்த பட்டு சேலைகள் ரூபா 75 to 300 வரை, சரிகைகலந்த பட்டுதுப்பட்டாக்கள் ரூ. 12 to 25 சரிகைகலந்த பட்டு உருமால்கள் ரூ. 20 to 45 வரை, சரிகைகலந்த 80 நெ. 100 நெ. 150 நெ. etc. நூலில் தயார் செய்த துப்பட்டாக்கள் ரூ. 3 to 20 வரை, தென்னிந்தியாவில் பெயர்பெற்ற பரம்பக்குடி ஜோடிவேஷ்டிகள் ரூ. 3, 4, to 15 மேற்படி சரிகைகலந்தது ரூ. 12 to 25 வரை தாவணிகள், சேலைகள், பேடாக்கள், இன்னும் அநேக நிலுசுகள் இருக்கின்றன. வேண்டியவர்கள் வி. பி. மூலமாக பெற்றுக்கொள்ளலாம். மற்ற விபரம் அறியவேண்டின் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்.-எம். ஆர். கோவிந்தய்யர் & சன்ஸ்,
உயர்ந்த ஜவுளிநிலுசுகள் உற்பத்திசெய்கிறவர்கள்
& கமிஷன் ஏஜண்டுகள், லக்ஷ்மிபுரம். 3-வது தெரு, மதுரை.

உ
பரமபதி துணை

மனோரஞ்சனி.

22 JUN 1918
MADRAS

“ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.”— திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

பத்திராதிபர்;—திரு. ஸி. எஸ். சோமசுந்தரம்.

தொகுதி 1 } பிங்கள-௵ கார்த்திகை-௴ 29௳
1917-ம்௵ டிசம்பர்-௴ 14௳ { பகுதி 5

கடவுள் வணக்கம்.

உலகமெலாந் தனிநிறைந்த வுண்மையாகி
யோகியர்தம் மநுபவத்தி னுவப்பாயென்றுங்
கலகமுறு வுபசாந்த நிலையதாகிக்
களங்கமற்ற வருண்ஞானக் காட்சியாகி
விலகலுறு நிபிடவா னந்தமாகி
மீதானத் தொளிர்கின்ற விளக்கமாகி
யிலகுபரா பரமாய்ச்சிற் பரமாயன்ப
ரிதயமலர் மீதிருந்த வின்பத்தேவே.

* * *

தேகமாஞ் சோங்கு பாய்மரம் பொறிகள்
சேனியாங் கரணமே வினைகள்
திகழ்ந்திடுஞ் சரக்குச் சிவனும் வணிகன்
சிறந்திடுஞ் சாட்சி மீகாமன்

மோகமாங் கட்டிற் புலன்வழி யதனால்
முயற்சியாய் நடத்திடும் பொழுது
மும்மலச் சுழிக்காற் றூக்கவங் தெடுத்து
முடுக்கியே தூரமாம் பொழுது

சோகமே புரிந்து சிவசிவா வென்று
சொல்லிட ஞானபோ தந்தான்
றுணையென நினது பதக்கரை யேற்றிச்
சுகம்பெறச் சொரூபமே யருள்வாய்

ஆகமம் மொழியும் அம்பலத் தரசே
யமரர்கள் தேடியுங் காணு
அதிசய வடிவே சதுர்மறைப் பொருளே
ஐயனே ஞானதே சிகனே.

மனோரஞ்சனி.

பிங்கள ௵ கார்த்திகை ௴ 29௳

நமது திராவிட பாஷையின் நிலைமை.

பல்லோர்களாலும் புகழ்ந்து கொண்டாடப்படும், இப்பரதகண்டத்தில் ஆதிகாலந்தொட்டு ஆரியபாஷையாகிய சமஸ்கிருதமும், திராவிட பாஷையாகிய தமிழும் உலவிவருகின்றன. சமஸ்கிருதம் நெடுங்காலமாக சாஸ்திரபாஷையாகமட்டும் இருந்து வருகிறதேயல்லாமல், சகலரும் பேசும் பாஷையாக விளங்கவில்லை, வேதங்களாகிய சாஸ்திரங்கள் யாவும் இதிலேயே இருப்பதாகஎண்ணி இதிலுள்ள விஷயங்களைத் தெரிந்துக்கொள்ளக்கருதி; மேல்நாட்டார் இதில் மிகுந்த ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள். ஒருகாலத்தில் சமஸ்கிருதமும் ஜனங்கள் பேசிக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ஆனால் ஆரியதேசமாகிய வடநாட்டில் அன்னியர்கள்வர ஆரம்பித்ததுமுதல், இப்பாஷைக்குள்ள கௌரவம் ஒழிந்துவிட்டதென நினைக்கவேண்டியிருக்கிறது. சுமார் 1000 வருஷங்கட்குமுன்னர் பாரசீகரும், கிரீக்கரும் வந்து தங்களிஷ்டத்தை நிறைவேற்றியதுமன்றி, மகம்மதியர்களும் வந்துசேர்ந்து; அவர்களோடு ஆரியர்களை ஒத்திருக்கும்படிச் செய்து பல பாஷைகளையும் ஏற்படுத்தி பேசிவரும்படி வழக்கத்திற்கு கொண்டுவந்து விட்டார்கள். இதனாலேயும், இது மறைந்து கிடக்கின்றன. ஆனால் அதன் அருமையைத் தெரிந்த சில பண்டிதர்கள் மட்டும் மிக அன்போடு கற்று வருகிறார்கள். ஐரோப்பியர்களும் இதில் பாண்டித்யமுடையவர்களாயிருப்பதாகத் தெரிகிறது.

இதுதான் இப்படியென்றால்,—திராவிட பாஷையாகிய தமிழோ! ஆதரிப்பாரின்றி அலைகிறது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு இந்நான்கையும் திராவிடபாஷை என்றே சிலர் கூறுகிறார்கள். பின் மூன்று பாஷைகளுடன் தமிழும் சம்பந்தப்பட்டிருப்பதாய்த்தெரிகிறபடியால், தமிழ்ப்பாஷையே இவைகட்கு ஆதாரமாகிய முதல்பாஷை என்றுஞ் சொல்லலாம். ஏனென்றால் ஆதியில் வடதேசத்தில் சமஸ்கிருதமும் தென் தேசமாகிய நம்முடைய நாட்டில் தமிழுமே இருந்ததன்றி மற்றெந்த பாஷையும் இருந்ததாகத் தெரியவில்லை.

இத் தமிழ்ப்பாஷையில் வேறெந்த பாஷைகளின் கலப்புங் கிடையாது. ஆகையால் இது தனிப்பாஷையே. இதற்குச் சமமான பாஷை வேறெதுவுமில்லை என்று சொல்லுவது குற்றமாகாது. வடதேசத்தில் பல தேசத்தார்கள் வந்து பல பாஷைகளை உண்டாக்கி சமஸ்கிருதத்துடன் கலந்து பேசிவந்ததைப்போல; ஆரியர்கள் இத்தேசத்திற்கு வர ஆரம்பித்ததால் சமஸ்கிருதமும், தமிழும் கலந்து கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்பது ஏற்பட்டது.

இத் தமிழ்ப்பாஷையானது (ஆரியபாஷையாகிய) சமஸ்கிருதத்தைப்போல் மறைந்து விடாமல், ஆதிகாலந்தொட்டு சர்வ ஜனங்கட்கும் பேசும் பாஷையாக இருந்துவருகிறது. எந்த பாஷையானது ஆதிகாலந்தொட்டு நிலைகுலையாமல் இருந்து வருகிறதோ, எந்தபாஷையானது சர்வஜன சம்மதமாய் எல்லா மதத்தினராலும் எடுத்தாளப்படுகிறதோ அதையே தாய்ப்பாஷையென்பது பொருந்தும்.

இவ் வொப்புயர்வற்ற தமிழ்ப்பாஷையை நம் திராவிட சகோதரர்கள், கவனிக்காமல், ஒருசாண் வயறுவளர்ப்பதற்காக மட்டும் வேண்டியதாயுள்ள, இங்கிலீஷ் பாஷையை மிக்க ஆவலோடு கற்பதும், ஆன்மலாபத்தைத் தரக்கூடிய அமிழ்தினுமினிய தமிழைக் கற்காது அவமதிப்பதும் மிகவும் பரிகசிக்கத்தக்கதொன்றும்.

நமது ஜனசமூகம் விர்த்தியாவதற்கு முக்கியமாய் வேண்டியது பாஷையல்லவா? நம்முடைய மூதாதைகள் நமக்குச் சேகரித்து வைத்த பெரும் ஐசுவரியம் இத்தமிழ்ப்பாஷையன்றோ? இப்பாஷையினாலல்லவா; நாம் மேன்மை அடையவேண்டும்? அடைந்து வருகிறோம் இதை ஆர்வத்தோடு ஆதரித்து வளர்க்கவேண்டியது தேசாபிமானிகளின் கடமையல்லவா?

முற்காலத்திருந்த பாண்டியராஜாக்களெல்லாம் இத்தமிழுக்கு முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்றபெயருள்ள மூன்று சங்கங்கள் ஸ்தாபித்து வளர்த்து ஆதரித்துவந்தார்களே! திராவிட சகோதரர்களே! நீவிர் அறியாதனவோ? அறிந்தும் அறியாதிருப்பது ஆச்சரியமே!

பிற்காலத்தில் அப்படி ஆதரித்து வளர்க்கக் கூடியவர்களில்லாவிடினும், காருண்யமிக்க நமது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சிரத்தை எடுத்துக்கொண்டு ஆதரித்து வந்தார்கள். அவர்களும் இப்பொழுது கைநழுவ விடுகிறார்கள்,—விட்டு வருகிறார்கள். ஐயோ! என் செய்வது?

நம்முடைய தேசத்திற்கு முக்கியமாய் வேண்டிய தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையையும், இங்கிலீஷ் பாஷையைப்போல் ஆதரித்து வருவார்களானால் நமக்குஎவ்விதமான குறைவும் ஏற்படாது. நமது தேசமும் முன்னுக்கு வரும்.

இப்பொழுது பள்ளியில் வாசிக்கும் மாணவர்கள்கூட; தங்கள் தாய், தமக்கையர்களுடன் பேசும் போதும், சாப்பிடும்போதும், நித்திரை செய்யப் போகும்போதும், இங்கிலீஷையே உபயோகிக்கிறார்கள் தமிழ் என்றால் வேம்பினும் கசப்பாயிருப்பதாக நினைக்கிறார்கள்!

ஐயோ! இத்திராவிட பாஷையாகிய தென்மொழியை நன்கு கற்றறிந்த விற்பனர்கள் தேன்மொழி என்றல்லவா கொண்டாடுகிறார்கள். எம்போலியோர்கட்கு வேம்பாகத்தான் தோன்றும். அந்த வேம்பையும் விரும்பினால் கரும்பென்று புகலுகிறார்களே! அதேமாதிரி இத் தென்மொழியையும் விரும்பிக் கற்றால் இது தேன்மொழியாகாதா? என் செய்யலாம்! ....காலம்.

சமீபத்தில் காலஞ்சென்ற பாண்டித்துரையவர்கள் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தி நன்கு நடத்திவந்தார். பிற்காலத்தவராலும் சற்றேறக்குறைய நடைபெற்று வருகின்றன. தமிழின் அருமைபெருமைகளை நன்கு அறிந்த தேசாபிமானிகள்பலரும் ஆதரிக்க முயற்சிக்கிறதாக மட்டும் தெரிகிறதேயல்லாமல், முன்னேற்றத்திற்கு கொண்டுவந்ததாகமட்டும் தெரியவில்லை.

நான் இவ்வளவெழுதப் புகுந்ததெல்லாம், ஆரியபாஷையைப்போல் இத்திராவிட பாஷையாகிய தமிழும் மறைந்துவிடாமல் இப்பொழுதிருக்கும் நிலைமையிலாவது நிலைத்திருக்க பலர் முயற்சிக்க வேண்டியதென்பதை உத்தேசித்தென்றறிக.

பத்திராதிபர்.

"ஒழுக்கமே உயர்குலம்"

கல்வியிற் சிறந்த கண்ணியமுடையீர்!

நமது இந்தியாவென்னுந் தாய்நாடானது சகல மதஸ்தர்களாலும் சகல பாஷைகளாலும் சகல வளங்களாலும் சிறப்புற்று விளங்குகின்றது. இந்நாட்டில் வசிப்பதால் நமக்கு இந்தியர்களென்ற நாமம் பிறநாட்டாரால் கூறப்படுகிறதென்பது யாவருமுணர்ந்தவிஷயமே. ஆகையால் நாம் எக்குலத்தவராயினும் சுக்கிலசுரோணிதத்தால் ஆண்பால், பெண்பாலென்னும் இருவகுப்பினராக அவதரிப்பதன்றி பிறக்குங்கால் சாதி வித்தியாசமாவது மதவித்தியாசமாவது இருக்கிறதாவென்று யோசிக்கில் அவை யொன்றுமேயில்லாமல் களங்கமற்ற நீர்நிலையையும், கண்ணாடியினையும், சான்றோருள்ளத்தையும் போற் பிரகாசிக்கின்றோமேயன்றி வேறல்ல.

அதன்பின் நம்மையீன்ற தாய் தந்தையர் நாகரீகர்களாகில் நாகரீகமும், அநாகரீகர்களாகில் அநாகரீகமுமுடையவர்களாகின்றதன்றி அவர்களது நடையுடைபாவனைகளையும் சாதி வித்தியாசம் மதவித்தியாசத்தையுமடைகின்றோமென்பதைக் கற்றுணர்ந்தவர்களெவரும் மறுக்கார்களென்பது எனது துணிவாம். (உதாரணமாக) தற்காலம் பஞ்சமனென்று யாவராலுஞ் சொல்லப்படுகிறவனுடைய குடும்பத்திற் பிறக்கும் குழந்தையைப் பிறந்தவுடன் உயர்குலத்தார்களென்று சொல்லப்படுகிறவர்களெடுத்து வளர்ப்பார்களாகில் அக் குழந்தையானது வளர்ப்பவர்களுடைய குலாசாரத்தையும் நடையுடைபாவனையையும் உடையதாய் விளங்குமேயன்றி வேறு விதத்தால் பஞ்சமனுடைய குலாசாரத்தை யடையாதென்றே சொல்லலாம்.

இதற்குச் சாட்சியாக தாசிகள் இழிகுலத்தாருடைய பெண் மகவை விலை கொடுத்து வாங்கித் தாங்கள் அக்குழந்தையை மிகவும் அருமை பெருமையாக வளர்த்து இளம் பிராயத்திலேயே கல்வி, சங்கீதம், பரதம், முதலிய தாசிகளுக்குடைய நடையுடை பாவனைகளைக் கற்பித்துத் தங்கள் தொழில் முறையிற் பிரவேசிக்கச்செய்து (காமுகர்களிடத்திற்) பொருட்பறித்து ஜீவிப்பதையும் இவ்வாறு வளர்க்கப்பெற்ற சில கணிகையர் நாடகத்திற் சேர்ந்து பெரிய தனவந்தர்களால் புகழப்பெற்றிருப்பதையும் நாம் நேரிற் பார்த்தும் பிறரால் சொல்லக்கேட்டுமிருக்கின்றோமல்லவா? இவ்வி

தம் மற்ற சாதியார்களுக்குள்ளும் நடைபெற்றிருப்பனவை எத்தனையோ நாம் கண்காட்சியாக நேரிற் பார்த்தும் கேள்விப்பட்டும் இருக்கின்றோம்.

இன்னமும் சாதி வித்தியாசத்தைப்பற்றி நாம் ஆராய்ந்தறியப் புகுங்கால், விராட்புருடனுடைய முகத்திலிருந்து பிராமணர்களும் புயத்திலிருந்து சத்திரியர்களும், தொடையிலிருந்து வைசியர்களும், பாதத்திலிருந்து சூத்திரர்களும் பிறந்ததாகச் சொல்லிக் கொள்கிறார்களே தவிர இவர்களில்லாத பஞ்சமர்களும், மகம்மதியர்களும், கிருஸ்துவர்களும், எதிலிருந்து எக்காலத்தில் எவ்வாறு பிறந்தார்களென்பதை நம்மனோர் ஒருவரும் இதுவரையிலுஞ் சொல்லாமையை நோக்கில் இவர்கள் பிற்காலமாகிய தற்காலத்திற்கு முன் இந்நான்கு வகுப்பார்களிலிருந்தே மற்ற மூன்று வகுப்பினராகப் பிரிந்திருப்பார்களோ என்ற சந்தேகம் எனக்கே தோன்றியிருப்பதால் அதனுண்மையை யுற்றுணரும்படி உங்கள் சார்பாகவே விட்டு விடுகிறேன்.

உயர் குலத்தோர்க்கும் இழிகுலத்தோர்க்கும் ஒழுக்கமென்னும் ஆசாரமானது இம்மை, மறுமை, யென்னும் இருமைக்குந் துணையாகி மேலான சிறப்பைத் தருதலால் அவ்வொழுக்கத்தை ஒருவனுடைய உயிருக்கும் மேலானதாகச் சொல்லப்படும். உத்தம குலத்திற்பிறந்த சத்திய சீலர்களாகிய பிராமணர்கள் ஓதிய வேதத்தை இடையில் மறந்தபோதிலும் பின்னால் அவ்வேதத்தைப் பாராயணம் பண்ணிக்கொள்ள அவர்களால் முடியுமென்றும், அவ்வைதிகர்களாகிய பிராமணர்களே சகல சிறப்பிற்குங் கருவியாகிய ஒழுக்கத்தினின்றுந் தவறுவார்களாகில் மிகவும் இழிவானவர்களுளொருவராக வைக்கப்படுமென்று முன்னோர் சொன்ன முதுரைகள் மொழிகின்றது.

ஒழுக்கமென்பது கல்வியுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, பொய் சொல்லாமை, புறங்கூறாமை, களவாடாமை, கொலைசெய்யாமை, ஊக்கமுடைமை, கள்ளுண்ணாமை, சூதாடாமை, குற்றங் கருதாமை, சிற்றினஞ்சேராமை, கொன்றுதின்னாமை, நடுவுநிலைமை, நன்றிமறவாமை, பயனில சொல்லாமை, பிறர்மனைவிரும்பாமை, முதலிய நற்செய்கைகளாகிய ஆசாரத்தினின்றும் நீங்காமல் வாழ்ந்திருப்பவர்களே உயர்குலத்தோன்றலெனச் சொல்லப்பெறுவார்கள்.

குணசீலர்களே! நாம் ஒழுக்கந்தவறாமல் நன்னிலையில் நிற்போமாகில், புண்ணியம் வளரும், புண்ணியம் வளரப் பாவந்தேயும், பாவந்தேயவே அறியாமை நீங்கும், அறியாமை நீங்கவே இது நித்தியம் இது அநித்தியம் என்கின்ற பகுத்தறிவும் நிலையில்லாத இம்மை, மறுமை யின்பங்களில் வெறுப்பும், பிறவியினாலுண்டாகுந் துன்பங்களுந் தோன்றும். அவை தோன்றவே மோட்சத்திலாசையுண்டாகும். அவ்வாசையுண்டாகவே பிறவிக்குக் காரணமாகிய வினைமுயற்சிகளெல்லாம் நீங்கி மோட்சத்துக்குக் காரணமாகிய யோகமுயற்சி யுண்டாகும். அம்முயற்சி யுண்டாகவே தத்துவ ஞானம் பிறந்து எனதென்பதாகிய மமகாரமும், நானென்பதாகிய அகங்காரமும் நீங்கும், இவ்விரண்டும் நீங்கவே அருளுண்டாகும். அருளுண்டாகவே அதன்வயத்தனாய் விளங்குகிறான்.

இதற்குச் சாட்சியாக, சகல சாதியாராலும், சகல மதஸ்தர்களாலும் புகழப்பெற்ற நந்தனார், வால்மீகி, கண்ணப்பர், விபீஷணர் முதலிய மற்ற தபோதனர்களாகிய உத்தமசீலர்களே தக்கசான்றாம்.

அன்பீர்! அறிந்தீர்களா? உயர் குலத்தாரென்று உலகோர்கள் சொல்லும்படியான புகழடைவதற்கு ஏதுவாகிய இவ்வழியை விட்டு, இவர் பிராமணர், இவர் சத்திரியர், இவர் வைசியர், இவர் சூத்திரர், இவர் பஞ்சமர், இவர் மகம்மதியர், இவர் கிருஸ்துவர், என்று வித்தியாசங்காட்டி மும்மலச் சேட்டைக்குட் சிக்கி, வீண் விவகாரஞ்செய்து ஆற்றிற் கரைத்த புளியைப்போலவும், சேற்றில் நட்ட கம்பத்தைப் போலவும், இலவு காத்த கிளியைப்போலவும், யாதும் பயனற்றவராகின்றனர். அந்தோ பாவம்!

இம்மட்டோ? அல்ல, நமது முன்னோர்களிற் சிலர் சாதிச் சண்டை மதச்சண்டைகளிற் பிரவேசித்து "வல்லான் வகுத்ததே வாய்க்காலெனும்பெரு வழக்குக் கிழக்குமுண்டோ" என முன்னோர் சொன்ன முதுரையுங் கருதாது வாழ்நாளெல்லாம் வீணாக்கி மண்ணுக் கிரையாகினரேயன்றி வேறல்ல. நாம் இதனை நேரிற் பார்த்தும் பிறரால் சொல்லக்கேட்டும் ஆராய்ந்துணராமல் தீபத்தை மலரென்றெண்ணி அதனிடஞ்சென்று அதன் சுவாலையால் மடியும் விட்டிற் பறவையைப்போலாக சாதி, மதம், என்ற காட்டாக்கினியில் விழுந்து மாழாமல், அன்னமானது பாலுந் தண்ணீ

ருங் கலந்ததைப் பால்வேறு நீர் வேறாகப் பிரித்துப் பாலைப்பருகி நீரை விலக்குவதுபோல, கலவுமியைச் சோதித்தால் ஓரவல் கிடைக்குமென்ற பழமொழிக்கிணங்க மாயாசாலங்களைக் கற்றுணர்ந்த மதிவல்லபர்களால் இயற்றப்பெற்றுள்ள சாதி, மத, நூல்களாகிய உமியைச் சோதித்து அதிற்கிடைக்கும் அவலாகிய பயனையுண்டு அவனருட்கொண்டு எம்மதஸ்தர்களும், தத்தம் நிலையில் உயர்ந்தவர்களே என்பதைக் கருதி ஒற்றுமையுடன் உஜ்ஜீவிக்கும் நிலையை நாடி இன்புற்று வாழ்ந்திருப்பதே நமது கடமையாம். சுபம்.

எம். பாலுசாமி நாயுடு,
மதுரை.

"மனோரஞ்சனி" என்ற நடுவெழுத்தலங்கார விநோத விடுகதை.

நெ. 2

ஆறெழுத் துள்ளதோர் பெயராகு, மதனிலே
ஐந்திரண் டைந்திறு தியை,
அறிவோடு தயையுள்ள வன்னை யென்றறையலாம்,
ஐந்திரி வைந்து நான்கும்,
சீர்தவ முறவலுறு விர்சைமயற் பிணியாளன்
தின்பொரு ளாகு மாறு
திரிநான்கு ஐந்திறுதி துர்க்கை யென் றோதலாம்,
திகழான வாதி பஞ்சம்
ஓரைந்தச் சொறிவென் றுரைக்கலா முதன்மூன்று
ஒன்று திரி ஒலி யென்னலாம்
உயர் மூன்று மைந்தாறு மிரவெனக் கொள்ளலாம்,
உண்மை சோர றெழுத்தில்
நேர்வரும் பெயரினை உலகெலாம் நிறைந்துநன்
னிலைபெறு "மனோரஞ்சனி"
நேயராம் கவிவாணர் விடைதருவ ரெனப்பதந்
நெஞ்சம் வைத் திறைஞ்சினே னே.

நண்பர்கள் இதற்கு விடை கூறுவார்களாக.—

இ. எஸ். சிவராமலிங்கம் பிள்ளை.

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்."

பரிதிபுரம் என்னும் ஊரில் சோமேசன் என்னும் வேளாளன் ஒருவன் வெகுநாட்களாக இறச்சிக்கடைவைத்துக்கொண்டு அதனால் வரும்ஊதியத்தால் தன் குடும்பத்தை ரட்சித்துக்கொண்டுவந்தான்.

காட்டிலே பனிரண்டுவருடம் கடுந் தவம்புரிந்து அநேகசித்திகளைப்பெற்று; அதனால் மிக்க அகம்பாவம்பெற்றவனான "கொங்கணன்" என்னும்வாலிப முனிவன் தன்க்ஷுத்பாதைக்காகப் பிச்சையெடுக்கச்சென்றவிடத்தில் ஒரு பெண்மணியால் அனுப்பப்பட்டவனாக நமதுசோமேசன்" என்னும் இறைச்சிக்கடைக் காரனிருக்கும் இடந்தேடிவந்து சேர்ந்தான். இரண்டு மூன்று ஆடுகளின் அங்கங்கள் தனித்தனி களாந்தொடுக்கப்பட்டு அவன்கடையிற்றொங்கிக்கொண்டிருந்தது. ஜனங்கள் அவனைச்சுற்றி உட்கார்ந்துகொண்டு தங்கட்குவேண்டியவைகளைக் கேட்பதும் அவன் (சோமேசன்) அவரவர் இஷ்டம்போல் கொடுத்துப்பணம்பெறுவது மாகவிருந்தான்.

அந்நிலைமையில் அவனைக்கண்ட "கொங்கணன்" மனம்வருந்தினான்; கேவலம் பெண்ணின் பேச்சைநம்பி சிறிதும் யோசனையின்றி கொலைத்தொழில் புரிந்து ஜீவனம் செய்யும் ஒருவனைத்தேடிவந்ததற்காகத் தன்னைத்தானே நொந்து கொண்டான். மரியாதையுடன் திரும்பிப்போய்விடுவதே நன்றென்று எண்ணிக்கொண்டு சோமேசன் முன்நின்றான். கொங்கணனைக் கண்ட சோமேசன் வாரும் வாரும் ஐயா! கொங்கணவரே? சற்றுதயவு செய்து உட்காருங்கள் வேதவல்லி அம்மைதானே தங்களை இங்குவரச்சொன்னார்கள்? என்று கூறினான்.

இவ்வசனங்களைக் கேட்ட கொங்கணன் உளம்பதைத்தான். செய்வதின்னதென்று தோன்றாதவனாக பிரமைகொண்டான். பிராமணியம் என்பது அணுவளவு மில்லாத இவன் தொழிலென்ன? மானஸ சக்தியின் மர்மந் தானென்ன? இதற்குக்காரணந்தா னென்? என்றுதனக்குத்தானே கூறிக்கொண்டான்.

"சோமேசன்", முன்சொன்ன இரண்டொரு வார்த்தைகளைத் தவிர வேறொன்றும் புகலானாகித் தன் வியாபாரத்திற்கண்ணுங் கருத்துமாகவிருந்தான். இரண்டொரு நாழிகைக்குள் இருந்தவையெல்லாம் விற்றுவிட, தன்னிடமிருந்த ரூபாய்களைக் கணக்கிட்டான்.

இன்றைக்கு ஈசன் எட்டு அணுக்களை கொடுத்தார், அதுவே போதுமானது என்று சொல்லிக்கொண்டே வாரும் ஐயா முனிவரே! நமது இல்லிற்குச் செல்லுவோம் என்றெழுந்தான். முனிவனும் அவனைப் பின்பற்றினான். சோமேசனுடைய வீடு வெகு பழமையானது. பனையோலையால் வேய்ந்த வீடுதான். கொங்கண முனிவன் வீட்டினுட் சென்றதும், ஆ! இது வென்ன பரிசுத்தத்தின் பிறப்பிடமோவென அதிசயித்தான். அதன்பின் தோட்டத்திற்குள்ளிருந்த கிணற்றில் இருவரும் நீராடிவந்தனர் வந்ததும் முனிவனை ஒரு ஆசனத்திலிருத்திவிட்டு ஐயா! சற்று இங்குதானே இருங்கள் நானென்தெய்வங்களுக்கு பூசைசெய்துவிட்டு வருகிறேன் என்று கூறி விடைபெற்றுச் சென்றான். வீட்டிற்குட்சென்றவன் இரண்டு ஆசனப்பலகைகளைக் கொண்டுவந்துபோட்டு ஒன்றில் ஒரு தொண்டு கிழவனைத் தூக்கிவந்து உட்காரவைத்தான் மற்றொன்றில் கிழவனுக்கு எவ்விதத்திலும் குறைவுபடாத ஒரு கிழவியைத் தூக்கிவந்து உட்காரவைத்தான். இவைகளையெல்லாம் கொங்கணன் அதிசயத்தோடு பார்த்துக்கொண்டிருக்கலானான். பிறகு தொண்டு கிழங்களுக்கு இளஞ்சூடான வெந்நீரால் ஸ்நானம் செய்வித்து, வேறுஉடை அணிவித்து, அவர்களுக்கு விபூதிக் காப்பிட்டு புஷ்பங்கள் சூடிச் சுற்றிவந்து ஹிருதயபூர்வமான சாஷ்டாங்க நமஸ்காரம்செய்து முடித்தான். சோமேசன் மனைவி (அருந்ததி என்றால் அவளே) பர்த்தாவுடன் நின்று பலவிதத்திலும் உபசாரம் செய்தாள். பின்னர் இருவர்க்கும் அறுசுவையோடு கூடிய அன்னம் ஊட்டப்பெற்றது பிறகு முனிவனுக்கு அதிதிபூசை செய்யப்பெற்றது. தானுமுண்டானதன் பின்னர் ஓரிடத்திலிருந்து கொங்கணனுடன் அளாவளாவிப் பேசிக்கொண்டிருந்தான்.

கொங்கணனை நோக்கிப்பின் வருமாறு கூறலானான்:— ஐயரே! யோகியரே?

அடியேன் கூறுவதைச் சற்று திருச்செவி சாய்த்துக் கேளும்: இவனென்ன கொலைத்தொழில் புரிந்து ஜீவனம்செய்கிறான். காட்டிற்கேகி உத்தமமான தபஸ்ஸைச் செய்து ஈசனின் சரணாரவிந்தங்களையடைய வேண்டிய மார்க்கங்களைத் தேடாதவனாகவிருக்கின்றான். அப்படியிருந்தும் நாம் வந்தவிபரத்தையும் நம்முடைய பெயரையும் எப்படி அறிந்துகொண்டான் என்று எண்ணி ஆச்சரியப்படுகிறீர்.

ஆம், உலகத்தில் உள்ள உண்மைகளை ஆராய்ந்தறியாது, நாட்கள் செல்லக்கூடியதானாலும் நேரானதும் சுலபமானதுமான வழியைவிடுத்து, பயங்கரமான காட்டிற்கேகிப் பாடுபட்டு மனக்கிடனற்றுமயங்கி, அல்லும்பகலும் சுற்றுவழியிற்றிரிந்து வந்தநீர் வேறு என்னதான் எண்ணுவீர்?

இல்லறவாசியாகிய எனக்கு, (நீர் காட்டிற்குத் தேடிச்சென்ற) தெய்வம், என் மாதா பிதாக்களே! பூஜ்யர்களான அவர்களுடைய பாத பூஜையே எனக்கு இன்பந்தரத்தக்கது. கண்கண்ட தெய்வங்களான மாதா பிதாக்களை விட்டுவிட்டு காணாத் தெய்வத்திற்காகக் காட்டிற்கோடுவானேன்—காஷாயம் தரிப்பானேன், கஷ்டப்படுவானேன். இன்னொன்று உம்முடைய சந்தேகத்தை அதிகப்படுத்தலாம், அதாவது நான் கொலைத்தொழிற் புரிந்து ஜீவிக்கின்றேனென்பதே அதற்கு நான் தக்கசமாதானம் உமக்குக்கூறுகிறேன் கேளும்:-

இல்லறமானது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும் உடையதாகவே வகுக்கப்பட்டிருக்கிறது. நான்காவதான ஞானத்தையடைந்தவனான இல்லறவாசி எந்தத் தொழிலைச்செய்வதாலும் பாபத்தையடைகிறதில்லை. ஈஸ்வரார்ப்பணமாகவே சகல கருமங்களையும் ஞானத்தையடைந்தவன் செய்கிறான். ஆனால் இத்தொழிலை விட்டு வேறு ஒரு தொழிலைச் செய்யப்படாதா வென்றால் செய்யலாம். என்னை நம்பி இருப்பவர்களைக் காப்பாற்றும் பொருட்டே நான் தொழில்புரிவது. திரவ்ய சேகரிப்பின் பொருட்டன்று. அன்று சம்பாதித்ததை அன்றே செலவுசெய்துவிடுவேன். நாளைக்கென்று சேர்த்துவைப்பது என் கொள்கைக்கு முற்றும் விரோதமானது. அதனால் இந்தவூரில் இருந்துகொண்டு எதைச்செய்தால் என் கடமைநிறைவேறுமோ அதைத்தான்செய்கிறேன். இவ்வூரில் என்னுடைய சொற்ப முதலைக்கொண்டு வேறு தொழில்செய்து ஜீவிக்க முடியாது ஆகலால், இத்தொழிலைச்செய்கிறேன். இதில் எனக்கு வெறுப்பாவது, இகழ்ச்சியாவது தோன்றுவதில்லை. என்று இல்லறஞானி கூறிமுடித்தார்.

இதுவரை வெகு பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த கொங்கணன் என்னும் துறவி ஆனந்த மேலீட்டால் பல பல வார்த்தைகளால் துதித்து விடைபெற்றுச் சென்றான்.

ஆகவே அன்னையும் பிதாவுமே முன்னறி தெய்வங்களாவரென்பது சத்தியம்.

பெற்றோர்களும்—பிள்ளைகளும்.

"பெறு மவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" —திருக்குறள்

நம் பழந்தமிழ் நாட்டிற் குழந்தைகளின் அருமை பெருமைகளை முழுதுமுணர்ந்தார் மிகச் சிலரேயாவர். தாங்கள் காணவும் களிக்கவும் பேசி விளையாடவுமே தாம் பெற்றதாக நினைக்கின்றனரன்றி அவைகளின் பிற்காலகதியைச் சிறிதும் கவனிக்கின்றாரில்லை. இன்று சிறுவராய் நமது கரங்களை யலங்கரித்திருக்கும் மழலைச் சொன் மைந்தர், பிற்காலத்திற் பெரியராய்ப் பேர் பெற்று வாழ வேண்டியவர்களேயன்றோ? அவர் உத்தமராக உலகம் நன்மையும் அதமராக உலகம் தீமையும் அடையுமென நாம் சொல்லவேண்டியதின்றாம்.

உழவன் தனது நிலங்களில் நல்ல பலனடைய எண்ணினால்; எப்படி அதற்கு எருவிட்டு காலத்தில் தண்ணீர் வார்த்து பக்குவப்படுத்திப் பலனடைவானோ அவ்வாறே மக்கட் பயிரிடும் மாதா பிதாக்கள் தம் அருமை மக்கட்கு வேண்டுவன வெல்லாம் அளித்திடல் வேண்டும். பயிரிடுவோன் சில பலன்கள் அதிக மழையையும்; சில வெயிலையும் சில பனியையும் வேண்டி நிற்கு மென்பதை அவசியம் அறிந்துகொள்ளவேண்டியவனாகிறானோ அவ்விதமே பெற்றோரும் தமதுபிள்ளைகளின் குணங்கள் இத்தகையதென் றுணர்ந்து அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டும்.

சில சிறுவர் இனிமையாகச் சொல்வதாலும் சிலர் கோபித்துக் கொள்வதாலும் சிலர் பயத்தாலும் அடங்கி நடப்பார். சிறுவர்களின் தன்மையை யுணர்ந்து அதற்கேற்ப நடந்துகொண்டு அவர்களை நல்லவர்களாக்க முயற்சிப்பதே பெற்றவர்களின் கடமையாகும்.

சிலர் தம்மக்கள் முரட்டுசுபாவமுள்ளவரென்றும் துட்டரென்றும் பழித்து அவர்களைக் கைவிடுகின்றனர். அந்தோ! இது மிகவும் பரிதபிக்கத்தக்கதொன்றும். மிருகங்களில் மிகவும் கொடிய சுபாவமுள்ளவைகளான புலி, கரடி, சிங்கம், முதலியவைகள் இட்டகட்டளைப்படி இனிது நடக்க அடிக்கியாளப்படுகின்றன. மலைகளையும் புரட்டித் தள்ளவல்ல காறுகளும் தன்போக்கின்படி ஓடிக்கடலில் தம் அரிநீரை வீணாக்காதபடி தடுக்கப்பெற்று மனிதசமுகத்திற்கு உதவுமாறு ஆளப்படுகின்றன. இவைகள் இவ்வாறாக உலகவிஷயம் ஒன்றுமே அறியாத பச்சைப்பாலர்கள் எம்மாத்திரம்.

சில பெற்றோர்களே தம்மக்கட்குக் கூறுவனாகிறார்கள். எவ்விதமெனின், குழந்தை தவழ்ந்து விளையாடும் பக்குவம் வந்தகாலத்து என் மகனே என் செல்வமே அம்மாவையடி. "அக்காளையுதை. அண்ணன்பேரில் உமிழ். என்று கூறி அவைகள் அவ்விதமே செய்யத்தாங்கள் சந்தோஷிக்கின்றார்கள் அந்தோ! "தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும் இருக்கு"மென்ற பழமொழியை ஆராய்ந்துணர்ந்தார்களில்லை. மகனே உன் தந்தையை வணங்கு, அம்மாளுக்கு முத்தமிடு, என்றவை போன்ற இன் சொற்களைச் சொல்லிப் பழக்கினால் எத்துணை நலமாக விருக்கும், எவ்வளவு துஷ்டராக விருப்பினும் அவர்களை அன்பொன்றினாலேயே அடக்கியாளலா மென்பது நிச்சயம். அன்பென்னும் அருமருந்து ஏற்றவாறு பிரயோகிக்கப் படுமாகில் துஷ்டத்தனம் இருந்த விடந்தெரியாது ஓடியொழியாதோ? அன்பிற்கு வயப்படாதது எது? அறிவற்ற துஷ்ட மிருகங்களும் அன்பிற் கடங்கி நடக்கின்றன. கழுதையே! நாயே!, பேயே மூடனே, போக்கிரிப்பயலே என்று தொண்டை கிழியக்கத்திக் கைசலிக்க அடிப்பதற்கும், என்கண்ணே இங்கேவா! நீ இக்காரியத்தை இவ்விதம் செய்பலாமா? இதனால் இன்னகுற்றங்கள் உண்டாகுமே! செல்வமே! நீ இக்கெட்டகாரியத்தை இனிச்செய்யாதே. இதனால் எனக்கு எவ்வளவு கோபம்வருமென்பதை நீ அறியாய். இனிச்செய்யமாட்டாயல்லவா? வென்று கூறுவதற்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள். இதனன்றோ "அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்" என்றார் பெரியோரும்.

நிற்க, குழந்தைகளின் மனதை (photograph) புகைப்படமெடுக்குங்கருவிக்கு ஒருவாறு ஒப்பிடலாம். அக்கருவிதனக்கு முன்பாக

வஸ்துக்கள் என்னநிலைமையிலிருக்கின்றவோ, அந்தநிலையிலேயே படம்பிடித்து விடுகிறது தனக்குமுன் இருப்பவர் சரியான நிலையிலிருக்கிறாரோ, என்னவோ அதைப்பற்றிய அக்கரை அதற்குச் சிறிதும் இல்லை, ஆனால் அக்கருவியை வைத்திருப்பவன் படம் பிடித்துக்கொள்பவரை ஒழுங்காக உட்காரவைத்த பின்னரேதான் அக்கருவியைத்திறக்கவேண்டும் சிறுவர்களும் அவ்வாறே தம்மிளமனத்தில், சிலையிலெழுத்தென கண்டு கேட்டவைகளைப் பதித்துக்கொள்கின்றனர். குழந்தைகள் எதிரில் எப்பொழுதும் நாம் சாந்தமாகவே விளங்கவேண்டும் அவர்கள்முன் பொய் முதலியவைகளைப் பேசுதல் முற்றும் தவறான காரியமாகும். நாம் எப்படிப் பழக்குகிறோமோ அவ்விதமே அவர்கள் பிற்காலத்தில் நடக்க ஆரம்பிக்கிறார்கள் என்பதிற் சிறிதும், ஐயமில்லை.

தெய்வத்தைத்தொழுதல், பொய் பேசாதிருத்தல், சோர்பலின்மை, படிப்பில் உற்சாகம் முதலியவைகளைப் பெற்றவர்களே குழந்தைகட்குப் போதிக்கவேண்டும்.

இவ்விஷயங்களைப் பெற்றோர்கள் கவனித்து நடப்பார்களானால் அருமையாய்ப் பெற்றெடுத்த குழந்தைகள் உன்னத நிலையிலிருப்பதிலும் "இவன்றந்தை என்னோற்றான் கொல்" என உலகம் புகழ்வதிலும் எட்டுணையும் ஐயமுண்டோ?

கே. எல். சிங்காரவேற் பிள்ளை

முத்துபட்டணம், காரைக்குடி.

* * *

மாணவர் பக்கம்.

இதோபதேசம்.

நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே—

அன்பார்ந்த மாணவனே!

உன்னைக் கௌரவப் படுத்துவது கல்வியே! யாகும். கல்வியே உன் ஆருயிர்க்குற்ற துணையாகும். கல்வியே உன்வாழ்நாட்களை இனிமை பெறச் செய்வது. நீ அரும்பாடுபட்டு சம்பாதிக்க வேண்டியது முதலிற் கல்வியேயாகும். நீ உத்தமகுலத்திற் பிறந்தவனாகவிருந்தாலும், ஏராளமான ஆஸ்திக்கு வாரிசாக விருந்தாலும், உன்னிடத்திற் போதிய, கல்வியறிவு இல்லையேல், கற்றறிந்த வுலகம் கண்ணியத்துடன் உன்னை யேற்றுக்கொள்ள மாட்டாது. அதிகாரமே புருஷார்த்தமென்று எண்ணிக்கொண்டிருக்கும் மேல் நாட்டினர் கூட ஷேக்ஸ்பீயர் என்னும் மகாகவீந்திரரை கனவிலும் நனவிலும் துதிக்கின்றார்கள். நமது பரதகண்டமோ படித்தவர்களையன்றிப் பணக்காரர்களை ஒரு சிறிதும் மதிக்காததாகும். பணத்துடன் படிப்புமுள்ளவர்களைத்தான் இரு நிதியுடையார் என்று. கூறத்தகும். உலகவாழ்க்கைக்குப் பணம் எவ்வளவு பிரதானமோ அதைவிடப் பன்மடங்கு பிரதானம் கல்வி. இத்துணைச் சிறப்புடைத்தாய கல்வியைக் கற்பதற்கு இளமைப்பிராயமே ஏற்றதாகும். அதனாற்றான் "இளமையிற்கல்" என்று முற்றுமுணர்ந்த மூதாட்டி கூறியருளினார். கல்வி கற்பதிலும் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பலவுள. ஏதாவதொரு பாஷையிற் பூரண பாண்டித்யம் இருந்தாற் போதுமென்று நினைப்பது இக்காலத்துக்குச் சிறிதும் பொருந்தாது.

தாய்ப்பாஷையும் ராஜாங்கபாஷையாகிய இங்கிலீஷும் ஒவ்வொருவருக்கும் அவசியமானதே. இங்கிலீஷை மட்டும் கற்றுத் தாய் பாஷையைக் கைநழுவ விடுவது நன்றியற்ற செய்கையாகும்.

ஒருவன், எனக்கு விஷயங்களை இங்கிலீஷில் எடுத்துச் சொல்வதென்றால் வெகு சுலபம். ஆனால் அதை அப்படியே தமிழில் கூறுவதென்றால் கஷ்டம் என்று கூறுவது!

"ஊரில் உள்ளவர்களை எல்லாம் நான் அறிவேன்,
என் தகப்பனை மட்டும் தெரியாது"—என்று

கூறுவதற்கொப்பாகும். இது இழிவன்றோ?

நிற்க, சகோதரனே! இங்கிலீஷ், தமிழ் ஆகிய இரண்டு பாஷைகளிலும் பாண்டித்யம் பெறவேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும். தமிழில் உள்ள அரும்பெருங் காவ்யங்களை வாசித்து அதனாலுண்டாகும் இன்பத்தை நுகரவேண்டுமென்பதே எமது பிரார்த்தனையாகும். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரின் இராமாயணத்தைப் படிக்குங்காலத்தில் தமிழைக் கற்றதனாலாய பயனை அடைவாய் என்பது திண்ணம். தாய் பாஷையிலுள்ள ஒப்பற்ற நூற்களே உன்னை உயர்ந்தவனாக்குவன இத்துணைச்சிறப்புவாய்ந்த அரிய நூற்கள் மேல்நாட்டு பாஷைகளில் வெகு சிலவேயுள.

ஆகவே, ஹிருதய பூர்வமான அவாவுடன் தாய் பாஷையை நீ கற்க வேண்டுமென்று வற்புறுத்த எமக்கு பாத்யமுண்டு.

கே. எல். சிங்காரவேற்பிள்ளை,
முத்துப்பட்டணம், காரைக்குடி.

அதிவீர ராமபாண்டிய னியற்றிய நைடதத்தில் ஓர் சந்தேகம்.

"உருவின் மைந்தரில் வேளில் வேட்குடைத நகரில்லை"

என்பது நகரப்படலம் 9-வது செய்யுளின் முதலடியாகும் (பொருள்) (குடிகளில்) அழகில்லாத மாந்தர்கள் மன்மதனுடைய அழகிற்குத் தோற்பவரில்லை.

என்றும்

"பொருசிலை வேளில் வேளனைய பொற்பினான்"

என்பது ஷை படலம் 40-வது செய்யுளாகும். (பொருள்) அரசனுவ (நள) ன், மன்மதனைப் போன்றுள்ள அழகுடையவன். என்றும் கூறுவது பொருத்தமில்லை. அதிவீர ராமபாண்டியன் அரசனாயிருந்தும், குடிகளில் அழகிற்குறைந்தவர்கள் மன்மதனுக்கு மேலாயிருப்பதாய் சிறப்பித்தும் அக்குடிகளையே பரிபாலிக்கப்பட்ட அரசன் மட்டும்,, மன்மதனுக்குச் சமமானவனென்று குறைப்பித்தும் பாடுவாரோ வென்பதுதான் எனதையம். இதனை அறிந்த வித்வசிரோமணிகள் இப் பத்திரிகைவாயிலாக அறிவிப்பார்களாக.

ஓர் சந்தேகி

ஸ்திரீகள் பக்கம்.

"காவறானே பாவையர்க்கழகு"

கற்றவர் புகழுங் கண்ணியம் நிறைந்த சகோதரிகளே!

உங்கள் உயிருக்கும் மேலாகிய கற்புக்கு அழிவு வாராமல் ஒவ்வொருவரும் தானே தங்களுக்குக் காவலாக இருந்து அக்கற்பைக் காத்துக் கொள்வதுவே பெண்களுக்கழகாம். என்று நமது மூதாட்டியாகிய ஔவைப்பிராட்டியாரும் போதித்துள்ள முதுமொழியின்படி நடந்துகொண்ட ஓர் உத்தமியின் கதையைச் சொல்லுகிறேன். எனது தங்கையர்களாகிய நங்கையர்சிகாமணிகள் தங்கள் ஞாபகத்தில் வைத்து அதன்படி நடப்பார்களாக.

நெடிய கடல்சூழ்ந்த இப்பூமியின்கண் நீர்வளம், நிலவளம், குடிவளம் முதலிய பலவளம் நிறைந்த வேதபுரியெனும் நகரத்தில் சகல சற்குணசம்பன்னராக அவதரித்த உமாபதியென்ற உத்தமரொருவரிருந்தார். அவர்மனைவி பார்வதியம்மாளெனும் உத்தமியின்மனதில் நெடுங்காலம் புத்திரரில்லாப் பெருங்குறையொன்றிருந்தது அதனால் அநேக சத்காரியங்களைச் செய்தும், விரதாதிகளை யனுஷ்டித்ததின்பின் பகவானருளாற் கண்டவருள்ளங்களிகூறும் வண்ணம் அழகெலாஞ்சேர்ந்து ஓர், உருவமாய்வந்ததைப்போல திவ்ய சுந்தரமுள்ள ஓர் பெண்குழந்தையைப் பெற்றாள்.

அக்குழந்தையை நாளொருமேனி பொழுதொருவண்ணமாக மிகவும் அருமை பெருமையாகவளர்த்து கமலாசனி யெனப்பெயரிட்டுப் பாதுகாத்து வருங்காலத்தில் கமலாசனியும் நாளடைவில் வளர்ந்து பரிபக்குவமடைந்தபின், வேதபுரியெனும் நகரத்தில் உத்தம குலத்தில் அவதரித்த கமலநாதனெனும், கனவானை மணந்து இல்லறத்தை இன்பமாக நடத்தி வருங்காலத்தில். கமலநாதன் வியாபார விஷயமாய் அன்னியநாட்டிற்குச் சென்றிருந்தான். அவன்வரவைப் பலநாளும் எதிர்பார்த்திருந்த கமலாசனி. தனது மணாளன் வாராமையால் அதன்மேல் அவனைப்பிரிந்திருக்க முடியாமையால் தானே அந்நகரத்திற்குச் சென்று கணவனையழைத்துவர வேண்டுமென நினைத்துத் தனது தாய்தந்தையரிடத்திற் சொல்லாமலும், தனக்கு யாரொருவரையுங்கருதாமலும். கற்பே தனக்குக் காவலாகக் கணவனின் திருவுருவையும் அவன் பாதபத்மங்களையும் (மானதபூஜையாக)

மனதில்நினைத்துத் துதித்துக்கொண்டு கமலநாதன் சென்றிருக்கும் நகரத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

இவ்விதம் புறப்பட்ட கமலாசனியானவள். அநேகநாடுநகரங்கள், மேடுபள்ளங்கள் முதலியதாவுகளைக்கடந்து ஓர்பெருந்தவனத்தின் மத்தியிற் சென்றுகொண்டிருக்கையில் அவ்வனத்திற்குச் சமீபத்திலிருக்கும் நாகபுரியெனும் நகரத்தை யரசாண்டுவரும். பிரதாபசீலன், என்ற அரசன் தனதுசேனைகளுடன் அவ்வனத்திற்கு வேட்டையாடவந்து வேட்டையாடி தன் சேனைகளைப்பிரிந்து, ஓர்பக்கமாக வந்தவன்.. கமலாசனியைக்கண்டு, பரவசனாய்ப் பற்பல விதமாகக்கெஞ்சி, தன்னைச்சேரும்படி வற்புறுத்தியும் பயனில்லாமற் போகவே கோபங்கொண்டவனாய்த்தனது, பட்டாக் கத்தியைக்கையில் உருவிக்கொண்டு வெட்டப்போகுஞ் சமயத்தில் கமலாசனி அதற்குச் சற்றும் அஞ்சாமல்- நீ, மனிதர்களுக்கெல்லாம் இராஜாவானாலும் உன் தலையிலுள்ள கிரீடமானது எனது கணவனின் காலதூசிக்குச் சமானமாகுமா? ஆகாது! நீ, எனது ஜீவனுக்கு ஆதாரமாகிய கற்புக்குப் பங்கம் வராமல் கொன்றுவிடுவாயாகில், என் தந்தையும், தாயும், குருவும், நீயே என்று பொருளமைந்த கீழ்கண்ட பாடலைப்பாடி வெட்டும்படி குனிந்து நின்றாள்.

"நரபதிநீ யாகிலுமென் னன்பரின்பா தத்துகட்குன்
சிரமகுடம் நிகரெனவோ சேரலையெற் கொல்வையெனக்
கரவாளை யுருவிநின்றாய் கற்பினுக்கோர் பழுதுறாதத்
தாமதனிற் கொல்லினையேல் தந்தைதாய் குருவும் நீயே."

இப்பாடலைக் கேட்ட அரசன் அவ்வுத்தமியின் பதிபக்திக்கும் கற்பின் முதிர்ச்சிக்கும் பயந்து கமலாசனிக்கு உபசாரம் புரிந்து நகரத்திற்கழைத்துச்சென்று சகல வைபவத்துடன் கமலநாதனையும் அழைத்துவரச்செய்து அவனைத் தனது மந்திரிகளில் முதன் மந்திரியாக ஏற்படுத்திக்கொண்டு சகல ஆடையாபரண பூஸ்திதிகளையுங் கொடுத்து மேன்மைபெறச்செய்தான். அதன்பின் கமலாசனியும், கமலநாதனும் உள்ளன்பினால் ஆனந்தமாக வாழ்ந்துவந்தனர்.

சகோதரிகளே! பார்த்தீர்களா? கமலாசனியானவள் தானே தன் கற்பைக் காத்துக்கொண்டதுமன்றித் தனது புருஷனையும் மேன்மையடையும்படி செய்தாள் நீங்களும் அதன்படி கற்பைக் காத்து உங்கள் கணவர்களுக்குப் புகழையும் மேம்பாட்டையும் உண்டு செய்வீர்களென நம்புகிறேன். சுபம்!

எம். பாலுசாமிநாயுடு,
மதுரை.

"வேண்டுகோள்"

கற்றுணர்ந்தழகிய கட்புலனுடையீர்!

பட்டினத்துப் பிள்ளையார் பாடலாகிய "திருவேகம்ப முடையார் திருவந்தாதி" யில் பின்னர் குறித்துள்ள செய்யுட்களுக்கு பொருளுணர்ந்துய்யக்கருதி நமது "மனோரஞ்சனி"யில் வரைந்து முற்றுமுணர்ந்தமூதறிவாளராகிய தங்கள்பால் விடுத்துளேன். அன்பால், அறியா மடமைநீங்க, இப்பத்திரிகை வாயிலாகவே பொருளுணர்த்துவீர்களென நம்புகிறேன்.

எம்மையு மெம்மைப் பணிகொள்ளுங்கம்ப னெழிற்கயிலை
யும்மையு மானிடமிப்புனத்தே விட்டுவந்த மைந்தர்
தம்மையு மானையுஞ் சிந்தையு நோக்கங் கவர்வவென்றே 14
வும்மையு மம்மலர்க் கண்ணும்பெரியீ ருரைமினே.

அஞ்சரத் தான்பொடி யாய்விழத் தீவிழித் தன்புசெய்வோர்
நெஞ்சரத் தாழ்வுதந் தோர்கச்சி யேகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரத் தாழ்வரை வீழநுங்கொம் புய்யக் கும்பமுழ 19
வெஞ்சரத் தானவோ வல்லவோவிவ் வியன்முரசே.

இரியப் புரமெய்த வேகம்பனூர்திக ழுங்கயிலை
இரியக் குறவர் பருவத்திடு தாளம் வினையோம்
விரியச் சுருண்முக வானுமடைந்தோம் விரைவிரைந்து 22.
பிரியக் கதிர்முத்தி னீர்பெறற தென்னங்கு பேசுமினே.

பேசுகையாவரு மைக்கணியா ரென்று பித்தரெங்கும்
பூசுகையார் திருநீற்றெழில் லேகம்பர் பொற்கயிலைத்
தேசுகையார் சிலைவெற்பன் பிரியும் பரிசிலராக் 23.
கூசுகையாது மில்லாக்குல வேங்கைப் பெயர்நும்மையே.

இடைக்கு மின்றேற்கு மிணைமுலையாய் முதியார்க் கடஞ்சொற்
கடைக்கணன் றூங்கச்சி யேகம்ப னையங்கொளக்கடவும்
விடைக்குமுன் றேற்றநில்லே நின்றினியிங்கு மொய்குழலார் 52.
இடைக்குமுன் றேற்ற நஞ்சங் கிதுவோதங் கிறித்துவமே.

இறைத்தார் புரமெய்த வில்லிமைநல்லிம லான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம் வெண்குன்றஞ் செங்குன்ற மன்னற்குன்ற
நிறைத்தார் நெடுங்குன்ற நீள்கழுக்குன்ற மென்றீவினைகள்
குறைத்தார் முதுகுன்ற மேகம்பர் குன்றென்று கூறுமினே. 59.

உவரச்சொல் வேடுடைக் காடுகந்தாடிய வேகம்பனார்
அவரக்கன் போனவிமானத்தை யாயிரமுண்மை சுற்றுந்
துவரச் சிகரச் சிவாலயஞ் சூலந் துலக்கு விண்மேல்
கவரக்கொடி திளைக்குங் கச்சிகாணிலுங் கார்மயிலே. 75.

ஓங்கின வூரகமுள்ளக மும்ப ருருகிடமாம்
பாங்கினி னின்றவரியுறை பாடகந் தெய்விரிய
வாங்கின வாட்கண்ணி மற்றவர் மைத்துவான்கவிக
டாங்கின நாட்டிருந்தாளது தன்மையை யாயிழையே. 83.

உலவிய மின்வடம் வீசியுருமதிர் வுண்முழங்கி
லலவிய மாமதம்பாய்முகி லியானைகள் வானில்வந்தாற்
சலவிய வார்குழல் பின்னையென்பா னணிநினைந்து
நிலவிய வேகம்பர் கோயிற்கொடி யன்னநீர்மையனே 85.

நீரொன்னி லும்மழுங் கண்முகில்கா ணெஞ்ச மஞ்சலவென்
றூரொன்னி லூர்தரா யுமைப்பாரம ராபதிக்கு
நேரொன்னி லுந்தங் கச்சியு ளேகம்பர் நீண்மதில்வாய்ச்
சேரொன்னி லுந்தங்கும் வாட்கண்ணி தானென்பர் தேர்வரமே. 87.

முகம்பாகம் பண்டமும் பாகமென் றோதிய மூதுரையை
யுகம்பார்த் திரேலென் னலமுய ரேகம்பர் கச்சமுன்னி
நகம்பாகவார்வி னாவில்லையென்னின் பவளச்செவ்வாய்
நகம்பாற் பொழிற் பெற்றவாமுற்றவர் கொள்க நன்மயிலே. 94.

மயக்கத்த நல்லிருட் கொல்லுஞ் சுறவுடைமகர
மியக்கத் திடுகழி யோதங்கழிகின ரக்கழித்தார்
துயக்கந் தவங்கருளேகம்பர் கச்சிக் கடலபொன்னூன்
முயக்கத் தகல்வுபொருள் கொள்கநீர்வரு மூர்க்கஞ்சுமே. 95.

மேயிணைவைக்கத் குருநணரா மதுவுண்டு புன்னை
மீயிரை வண்டோ தமர்புக டிய்விரிகடல்வாய்ப்
பாயிரை நாகங்கொண் டோன்றொழுங் கம்பர் கச்சியப்பய்வநீர்
தூயிரை கானன் மற்றாழிவார் நந்துறைவர் பொய்யே. 96.

கே. எல். சிங்காரவேற் பிள்ளை,
முத்தாப்பட்டணம், காரைக்கால்.

தேவதாஸன்.

(௪-ம் பகுதியின் தொடர்ச்சி)

வாலுறவோங்கி வளம்பெற வளர்ந்த தென்னமரச்சோலைகளால் சூழப்பெற்றதும், இடைவிடாது சலசலவென்று சத்தமிட்டுக்கொண்டோடும் தெளிந்த நீரையுடைய காவிரியாற்றினால் நீர்வளம் மிக்கதுமான தஞ்சைமாநகரத்தின் அரண்மனைக்கு அடுத்துள்ள நீண்டதோர் வீதியில் ஒரு பிச்சைக்காரன் வீடுகள்தோறும் ஐயமேற்றுக்கொண்டு போகிறான். அவனது உடை மாசுபடிந்து கிழிந்து தைக்கப்பட்டிருந்தது. அவன் நொண்டி நொண்டி நடப்பது வெகு விநோதமாகவிருந்தது. அவன் பாடின வேடிக்கைப் பாட்டிற்காக விஷமம் பிடித்த பையன்கள் கூடிவிட்டார்கள். அச்சமயத்தில் ஒரு போலீஸ் சேவகன் வந்து சேர்ந்தான். பையன்கள் கூட்டமாகநின்று கும்மாளம் போடுவதைக்கண்டவுடன் அவனுக்குத் தாங்கொணா கோபம் வந்துவிட்டது. 'அடே தடிப்பயல்களா! உங்களுக்குப் புத்தியில்லை. அந்த பாழாய்ப்போன உபாத்தியாயரும் சரியாகப் பிரம்பை உபயோகிக்கிறதில்லை. ஓடி விடுங்கள் வீட்டிற்கு. இல்லையோ! ஸ்டேஷனுக்கு இழுத்துக்கொண்டுபோய் விடுவேன் என்று கூவினான். இதைக்கேட்ட பையன்கள் காற்றாய்ப் பறந்து விட்டார்கள். பிச்சைக்காரன் சந்தோஷத்துடன் போலீஸ் சேவகனுக்கு சலாம் போட்டுவிட்டு தன் போக்கிலே போய்க்கொண்டிருந்தான்.

ஒவ்வொரு வீடாகப் பார்த்துக்கொண்டே செல்லும் ஒருகரிய மனிதனைப் பிச்சைக்காரன் கண்டான். அவனைப்பார்த்தவுடன், வெகு சந்தோஷமடைந்தவனாக அவனிடமணுகி ஐயா! ஒருகாசு கொடுங்கள் ஒரேகாசு ஒரேகாசு என்று கூறினான்.

சீ சீ மடையா! உனக்கு சமயம் தெரிவதில்லை. இந்தப் பிச்சைக்காரப் பயல்களுக்கெல்லாம் அகம்பாவம் அதிகம். என்று கூறிக்கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சல்லியை யெடுத்து எறிந்துவிட்டு சரேலென்று அங்கிருந்த ஒரு பெரிய கட்டிடத்திற்குள் நுழைந்துவிட்டான். பிச்சைக்காரனும் அக்கட்டிடத்திற்குப் பக்கத்திலுள்ள சிறிய சந்தில் நுழைந்து போய்விட்டான்.

நாம் முன்கூறிய மனிதன் புகுந்த இடம் ஒரு பெரிய ஹோட்டல். தனவந்தர்கள் தான் அதில் தங்க விடப்படுவார்கள். அந்த ஹோட்டலின் பெயர் "நளபாக சுகபோஜன சாலை" என்பது. அதன் சொந்தக்காரர் "ரமணி முதலியாராவர்" தமது ஹோட்டலில் தங்குகிறவர்களின் மனம்போல நடந்துகொள்வதில் அவருக்கு நிகர் அவரே "நளபாக சுகபோஜனசாலை" யில் தங்குவதிற்றான் பிரபுக்களுக்குப் பிரியம் அதிகம். நிற்க, மேற்கூறிய மனிதன் அந்த ஹோட்டலில் நுழைந்து பெரிய கூடத்திற்குச் சென்றான். அங்கு அநேக கனவான்கள் கூடி உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மேஜையில் தங்களுக்காக வைத்திருக்கும் சிற்றுண்டியை அருந்துவதும் தங்கள் நண்பர்களுடன் சம்பாஷிப்பதுமாக இருந்தார்கள். உள்நுழைந்த கரியமனிதனை அங்கிருந்த சிலர் கண்டு வாரும்! வாரும்! தாமோதரம்பிள்ளை! ஏது இந்நேரமாயிற்று வந்து சேர? உட்காரும் இப்படி. என்று கூறினார்கள்,

தாமோதரம்:—ஆம் இப்பொழுது தான் வந்தேன். ஊருக்குப் புதியவனாகிய நான் தனித்துச் சென்றதுபற்றி விசனிக்கிறேன்.

அங்கிருந்தவர்களிலொருவரான இராமாநுஜலு நாயுடு:—சரிதான் ஐயா! எங்களையெல்லாம் கூட்டிப்போனால் நமக்கு எங்கே செலவு நேர்ந்துவிடப்போகிறதோ வென்று பயந்துகொண்டு சென்றவர் மேற்பூச்சாகப் பேச வந்துவிட்டீரே!

வேதாசலம்:—சே, தாமோதரர் அப்படிப்பட்டவரல்ல! இருந்தாலும்................

பொன்னுசாமி பிள்ளை:—ஏது! டாக்டர் வேதாசலம் இருந்தாலும் என்றதுடன் சமாசாரத்தை விழுங்கிவிட்டீர்களே!

வேதாசலம்:—இல்லை ஐயா, தாமோதரர் ஏதோ காரணமில்லாமல் போகமாட்டார் என்பதே நான் கூறவந்தது.

தாமோதரம்:—நண்பர்களே! என்னிடமிருந்து விஷயங்களை அறிந்துகொள்ளும் முன்னமேயே யோஜனைகளெல்லாம் செய்து முடித்துவிடுகிறீர்களே. நான் கூறுவதைக் கேளுங்கள்.

நான் இன்றைய மெயிலில் சென்னைக்குச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது ஆகையால்...........

எல்லோரும்—என்ன—என்ன சென்னைக்கா! அதுவும் இன்றைக்குத்தானா?

தாமோதரம்:—ஆம் என் நண்பர்களே! நேற்றுத்தான் இங்கு வந்தேனென்றாலும்—உடனே போகவேண்டிய அவசரம் நேர்ந்துவிட்டது.

டாக்டர் வேதாசலம்:—தங்கள் பிரிவுக்காக வருந்துகிறோம். ஒரு நாட்பழகினும் பெரியோர்கேண்மை—இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.

தாமோதரம்:—அதற்கென்ன சந்தேகம்? ஈசன் கிருபைசெய்வாரானால் மற்றொருமுறை நாம் அனைவரும் ஒருங்கே சந்திப்போம்

சற்று இருங்கள் நான் என்னுடைய அறைக்குச்சென்று வருகிறேன். அதிகமான சாமான்கள் கொண்டுவரவில்லை என்றாலும், ஒழுங்குசெய்து பிரயாணத்திற்கு சித்தம் செய்துவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றார் தாமோதரம். அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருவர் வெகு அவசரமாக உள்ளே நுழைந்து கூடத்திற்குவந்து சேர்ந்தார். அங்கிருந்தவர்கள் அவரைப் பார்த்துவிழித்தார்கள். அவரைத்தொடர்ந்து ஓட்டல் சொந்தக்காரர் ரமணிமுதலியாரும் வந்தார்.

ரமணி முதலியார்:—ஐயா! அந்தப்பெயருடையவர் எவரும் என் ஓட்டலுக்குள் இல்லை. தாங்கள் தான் பதிவு புத்தகத்தைப் பார்வையிட்டீர்களே!

வந்தவர்:—இல்லை—இல்லை அவன் இங்கேதானிருக்கிறான் நீர் பொய்கூறுகிறீர்சற்றுமுன் தான்நான்பார்த்தேனே! முழுபூசணைக்காயைச் சோற்றில் மறைக்கப்பார்க்கிறீரே, அது முடியுமா?

"ரமணிமுதலியார்:—சத்தியமாகச் சொல்கிறேன். குமாரலிங்கமென்ற பெயரையுடைய ஒருவருமே கிடையாது இங்கு.

வந்தவர்:—அப்படியானால் அவன் இங்கு வேறு பெயர் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். சொல்கிறேன். கேளும். அவன் நெட்டை மனிதன். நிறம் நல்ல கறுப்பு. அழகிய சிறியமீசை. சற்று நேரத்திற்கு முன்னர்தான் அழகிய வெள்ளைச்சட்டையொன்றை அணிந்துகொண்டு உள்ளே பிரவேசித்தான். என்றார்.

அங்கிருந்தவர்கள் அனைவரும் தாமோதரம் தாமோதரம் என்று கூவினார்கள்.

"வந்தவர்—ஆ! அவன் இங்குதன் பெயர் தாமோதரம் என்று கூறினானா? சபாஷ் அவன்தான் அவனெங்கே!

"ரமணிமுதலியார்—தாங்கள் செய்வது நியாயமாகத்தோன்றவில்லை. இதுவரை தங்களை நான் மதித்து வார்த்தையாடினேன். தங்களால் கூறப்பட்ட குமாரலிங்கம் என்பவர் இங்கு கிடையாதென்று நான் நிரூபித்தவுடனேயே தாங்கள் திரும்பிச் சென்றிருக்கவேண்டும். என்னுடைய ஹோட்டலில் தங்குகிறவர்கள் தகுந்த பெரிய மனுஷர்கள் என்பதைத் தாங்கள் அறிந்திருக்கலாம். அங்ஙனமிருக்க சிறிதும் மரியாதையின்றி ஒவ்வொருவராகச் சோதித்

றுக்கொண்டிருப்பது அழகல்லவே. அப்படிச் செய்வது என்ஹோட்டலின் கௌரவத்துக்குக் குன்ற தேடுவதாகும்.

வந்தவர்:—ஆனால் கொலைபாதகனும் நரசோரனும் பகல்முடிச்சவிழ்க்கியுமான ஒருவனுக்கு இடங்கொடுப்பதுதான் உமது ஹோட்டலுக்கு கௌரவம் தரும் போலும்.

எல்லோரும்:—என்ன! என்ன!! கொ......லை......பா......தகனா? என்று அச்சத்துடன் கூவினார்கள்.

ரமணிமுதலியார்—ஆம் ஐயா! அப்படியே கொலைபாதகனென்று வைத்துக்கொள்வோம்.. அவனைத்தேடி என் ஹோட்டலுக்குள் வந்து வம்புசெய்கிறீரே எந்த அதிகாரத்தைக் கொண்டுசெய்கிறீர்.

வந்தவர்:-சீ முட்டாளே இதோபார் என்று வெகுகோபத்துடன் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக்காட்டினார்.

ரமணிமுதலியார் அதைப் பார்த்ததும் அப்படியே மரம்போல நின்றுவிட்டார் அங்கிருந்த கனவான்கள் ஆ, என்று வாயைத் திறந்து கொண்டிருந்தார்கள்.

“ரமணிமுதலியார்:—அநேகவந்தனம் ஐயா! தங்களை இன்னவரென்று இதுவரை அறிந்துகொள்ளாமலிருந்ததனால் தப்பிதமாக இரண்டொன்று கூறிவிட்டேன் மன்னியுங்கள்.

வந்தவர்:—ஆனால் இனிமேல் நான் தேடிவந்த மனுஷனைப் பார்க்கலாமல்லவா?

ரமணிமுதலியார்.—தடையென்ன வாருங்கள் போவோம். மேல் மாடியில்தான் அவனுடைய அறையிருக்கிறது. அங்கு செல்வோம் என்று கூறிவந்தவரை அழைத்துச்சென்றார். அவ்விருவர் கூட அங்கிருந்த அனைவரும் சென்றார்கள். தாமோதரம் இருந்த அறை காலியாகவிருந்தது. ஒரு சிறிய மூட்டைதானிருந்தது அதை எடுத்துப்பார்க்க அது ஒரு கல்லாக இருந்தது. யாவரும் ஆச்சரியத்தோடு உற்று நோக்கினார்கள். அங்கு சிறிய கடிதத்துண்டொன்று கிடந்தது. அதை தாமோதரனைத் தேடிவந்தவர் எடுத்துப்பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

“தேவதாஸனே! நீர் ஏமாந்து விட்டீர் என்பதே ஆம் ஆம் நான் ஏமாந்துபோனேன் என்பது முற்றிலும் உண்மையே! என்று கூறிவிட்டு அவசரமாக அங்கிருந்தவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்.

அங்கிருந்தவர் அனைவரும் இப்பொழுது வந்து சென்றவர் பிரசித்திபெற்ற தேவதாஸனா! என்று கூறி ஆச்சரியப்பட்டார்கள்.

கள்ளனுக்குக்கள்ளன் இவன்றான் போலும்! தொடரும்

கே. எல். சிங்காரவேற்பிள்ளை,
முத்துப்பட்டணம், காரைக்குடி.

---

600 008

உ
பரமபதி துணை

மனோரஞ்சனி.

“ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.”—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

பத்திராதிபர்:—திரு. ஸி. எஸ். சோமசுந்தரம்.

தொகுதி 1 } பிங்கள-௵ மார்கழி-௴ 30௳ / 1918-ம்௵ ஜனவரி-௴ 13௳ { பகுதி 6

கடவுள் வணக்கம்.

வித்தாகி முளையாகி விளைவதாகி
விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச் சித்தாகி யின்பமாகிச்
சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷியாகி
முத்தாகி மாணிக்க மாகித்தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்ததேவே.

* * *

வாடியே திரிந்து மனமது தளர்ந்து
மாயையின் கட்டிடை புகுந்து
வையக மெல்லாம் யானென மதித்து
மயங்கியே கொடும்பிணி யதனாற்

தேடியே காலன் பகட்டி லேறித்
திரமுடன் வந்திடும் பொழுதிற்
தேகமு மறந்து போகமு மிழந்து
தியங்கியே திரிந்தழ லாமல்

நீடிய ஞானச் செழுஞ் சுடரான
நின்மலா காரமா யடியேன்
நினைவினிற் கனவாய் சச்சிதா னந்த
நிலைமையெப் போதருட் செய்வாய்

ஆடிய கனக அம்பலத் தரசே
யமரர்கள் தேடியுங் காணா
அதிசய வடிவே சதுர்மறைப் பொருளே
ஐயனே ஞானதே சிகனே.

மநோரஞ்சனி.

பிங்கள-௵ மார்கழி௴ 30௳

அறிவுடைமை.

அன்பீர்! பிறத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற நாம் அறிவின் மயமாகவே விளங்குகின்றோமா? அல்லவா? என்பதைப் பற்றிச் சிறிதாராய்வாம். அறிவுடைமை என்பது,— இயற்கையாகவே கல்வி, கேள்விகளினால் நமக்குண்டாயிருக்கும் அறிவோடு சேர்க்கையான உண்மையறிவுங் கூடியிருந்தே அறிவின் வடிவத்தனாகின்றோமென்பதாம். அன்றியும் அறிவென்னுஞ் சொல்லுக்கு உணர்வு, உண்மை, உரன், உறழ்வு, ஒண்மை, ஓதி, காட்சி, சேதனம், சைதன்னியம், ஞாபகம், ஞானம், தீ, துப்பு, தெருட்சி, தெளிவு, புத்தி, புந்தி, புலன், பொறி, போதம், மதி, மேதை, விவேகம், என்றும் பேரறிவுக்கு, முதறிமை, முதுக்குறைவு, என்றுஞ் சொல்லப்பெறும். இன்னும் அறிவுடைப்பொருளாவது, சித்து, சேதனம், உயிர், ஆன்மா, சித்தம், தன், பசு, இயங்கியற்பொருள், சங்கமம், சத்து, என்பதாம்.

இனி அறிவின்மையாவது, அசேதனம், அவிவேகம், அறியாமை, எய்யாமை, சிதடு, பேதைமை, மடமை, மடம், மருட்சி, மாழை, வெண்மை, வெளிறு, வெறிது, என்பதாம். இனி அறிவின்மைப் பொருளாவது அசித்து, அசத்து, சடம், அசேதனம், பாசம், மலம், நிலையியற்பொருள், தாவரம், என்பதாம்.

அறிவுடைமை, அறிவின்மை யென்ற இரண்டு பதங்களுக் குறிய பொருட்களை நோக்குமிடத்து அதனதற்குரிய தாரதம்மியம் கரதலாமலகமென நன்கு விளங்கும்.—

சகோதரர்களே! அறிவென்பது நாம், முக்கியமாக யடைய விரும்பும், வஸ்துவெதுவோ? அவ்வஸ்துவை யடையச்செல்லும் வழியில் வேலியிட்டடைத்துத் தடுக்கும் சத்துருக்களாகிய குற்றங்களைச் சங்கரிக்குங் கத்தியாகவும், நாம் புரியுஞ் சத்கருமமாகிய

கோட்டைக்கு, விக்கினங்களென்ற பகைவர்கள் வராமற்றடுக்கும் அகழியாகவுந் துலங்குகிறது.

தமது குதிரையை மேடுபள்ளந் தாவுகளையறிந்து செலுத்தும் வீரனைப்போலாக மனமெனுங் குதிரையைத் தனதிஷ்டப்படி மேடுபள்ளங்களெனும் விடயங்களில் வீழ்ந்து மாழாமல் புலமறிந்து செலுத்துந் திறமுடையது.

ஆன்மகோடிகளுக்கேற்ப தங்கள் தங்களாற் செய்யப் புகுங் காரியங்களை இது நன்மைபயக்கும் இது தீமை பயக்குமென்ற தன்மையைத் தெரிவிக்குங் கருவியாகவும், வருமுன்னுணர்த்தும் மந்திரியாகவும் விளங்குகின்றது.

அன்றியும் அறிவாகிய பயிரை வளர்ப்போர்க்கு அப்பயிரின் முதிர்ச்சியால் அடையக்கூடிய பயனானது அளவற்ற மேன்மையைத் தருவதுடன் அவரவர் பிறவிப்பிணியை மாற்றுஞ் சஞ்சீவியுமாம். "உண்மையறிவென்பது" தீயநெறிகளை விட்டு நீங்கிக் கீழ்க்கண்ட விதமாக சாக்ஷாத் பரப்பிரமத்தை மானதபூசையாகத் துதிக்கும் பக்தியோகமேயாம்.

> "வஞ்சனை வன்னியாக வாயுவே புட்பமாக
> நெஞ்சமே யமுதமாக நேசமாய்ப் பூசைசெய்தால்
> பஞ்சுபோற் பறக்கும்பாவம் பாரினிற் பிறப்புமில்லை
> வஞ்சனையல்லச் சொன்னேன் மக்களே மனத்தின்பூசை"

இவ்விதம் மானதபூசை செய்யும் பக்தர்கள் சாக்ஷாத் பரப்பிரம சொரூபமாகிய பரமாத்மாவின் கிருபா நோக்கர்களாய் அவ்வஸ்துவைக் கண்டு அதன் வயத்தர்களாய் "அண்டர்கோனிருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானிகள் கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே" என்றதொப்ப சதானந்தர்களாய் விளங்குகின்றனர். இவர்களையே நம்மனோர்களால் அறிவுடையோரெனச் சொல்லப்பெறுவார்கள்.

அறிவுடையோர், அறிஞர், ஆய்ந்தோர், ஆரியர், ஆன்றவர், உயர்ந்தோர், உரவோர், உரியோர், உலகம், எழுத்தாளர், கணக்காயர், கலைவல்லோர், கவிஞர், குசலர், கூவலர், சான்றோர், சீரியர், கருதியோர், நல்லோர், நிபுணர், நூலுரைப்போர், நூலோர், மிகவல்லோர், மிக்கோர், மேதாவியர், மேலோர், விபுதர், என்பதாகிய நாமங்களைப்பெற்று விளங்குகின்றவர்களாம்.

பத்திராதிபர்.

"தற்கால நிலைமை"

நான் இப்போது "இந்தியாவின் தற்கால நிலைமை" என்பதைப்பற்றி சொல்லும் முன்னமே நம்முடைய இந்தியாவானது முந்தி எந்த நிலைமையிலிருந்து வந்தது என்பதைப்பற்றிச் சொல்லாமலிருக்க முடியவில்லை. நமது முன்னோர்கள் காலத்தில் நமது ராஜ்யமானது எந்த நிலைமையிலிருந்து கொண்டிருந்தது என்பதைப்பற்றி விபரமாகச் சொல்லியபிறகு தற்காலம் நாமிருக்கும் நிலைமையைப்பற்றிச் சொல்லும் காலத்தில் மட்டுந்தான் அதிலிருந்து நாம் வித்தியாஸம் அடைந்திருக்கும் நிலைமை தெரிந்து கொள்ளமுடியும். ஆகையால் அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லி உங்களுக்கு ஞாபகத்தை மூட்டுகின்றேன். பூர்வசரித்திரம்.

நமது பாரதபூமியானது எல்லா உலகத்திற்கும் தாயைப்போல் விளங்கி, மனுஷிய வர்க்கங்களையும், சிசு முதல் விருத்தாப்பியர் வரையில் பூர்ணதிட காத்திர தேகிகள் முதல், அசையவுமுடியாமல், கிடந்தது கிடந்தாப்போல் படுக்கையிற் கிடக்கும் நோயாளிகள் வரையில், ஆபத் பாந்தவனைப்போல் அமுதம் அளித்து உதவுகின்ற பசு ஸ்வரூபமாக இருக்கிறதென்று பூமியை வர்ணித்திருக்கின்றார். நமது முன்னோர்கள் அப்படிச் சொல்லியிருப்பது வாஸ்தவந்தானா? பொருத்த முடையது தானா? என்று யோசிக்குங்கால் நமது முன்னோர்களின் உவமை ஒப்பத்தக்கதென கொள்ளப்படுகிறது. இப்பசுவாகிய பூமிக்கு நமது ஜென்ம தேசமாகிய இந்தியாவானது பால் சுரக்கும் மடி ரூபமாக இருந்து வருகிறதென்பது சொல்லாமலே நன்கு விளங்கும். தனக் காம்புகளின் மூலமாயன்றி வேறெந்த அவயவங்களின் மூலமாயும் தாபத்தைத்தணிக்க வல்ல (க்ஷீரம்) பால் வெளி வராது. அதுபோல பூமியில்நமது சுதேசத்திலிருந்தேயன்றி வேறெந்த தேசத்திலிருந்தும் ஆத்மஞானப் பிரவாகமாகிற அமுதம் வெளிப்பட்டதாக நாம் சாஸ்திரங்களின் மூலமாய் இதுவரையில் அறிய முடியவில்லை. ஆத்மஞானதீரர்கள் அவதாரமாகி திரிலோகங்களையும் அலக்ஷியஞ்செய்து திருவிளையாடல்கள் புரிந்து வந்த பூமி இதுவேயாகும். உலகையெல்லாம் அடக்கி என்றும் ஆண்டு வருகின்ற மஹான்கள் இத்தேசத்திலேயே அவதரித்தார்கள்! உலகத்தில் பற்பல தேசத்தினின்றும் துரத்தப்பட்டு ஓடிவந்த நானாவித மதஸ்தர்களையும் ஸம்ரக்ஷித்து பலவிதமான தேசத்தார்களை உபசரித்து வந்ததும் வருகிறதுமான

பூமியாகும் இது. இன்னும் அன்னிய மதஸ்தர்கள் செய்யும் உபத்திரவத்தை கொஞ்சமும் பொறுக்கமுடியாமல் தங்கள் தங்கள் தேசங்களைவிட்டு ஓடிவந்து இப்பூமியில் குடியேறிய புறமதஸ்தர்களைக் கைக்கொடுத்துக் காப்பாற்றிய புண்ணியபூமியாகும் இது. இயேசுகிருஸ்து மகம்மது முதலிய சில மதஸ்தர்கள் அடுத்த தேசங்களிற் உற்பவித்திருந்த போதிலும் அவர்களும் இங்கிருந்து சுற்றிலும் வீசும் கிரணங்களின் பெருமை யென்றே சொல்லவேண்டும்.

இந்தியா தேசம் ஆத்ம ஞானத்தை அஸ்திவாரமாகக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணர், புத்தர், சங்கராச்சாரியார், ராமானுஜர், சைதந்நியர், ஸ்ரீராமகிருஷ்ணபரஹம்ஸர் இவர்களைப் போன்ற மஹான்களை உடைத்தாயிருக்கிற வரையில் இவ்வுலகட்கு ஒரு நாளும் அழிவில்லை. இத்தேசமானது பூர்வத்திலிருந்ததை ஆராய்ந்துப் பார்க்குங்கால் சத்தியவான்களென்ன தர்மபுத்திராதிகளென்ன பதிவிரதைகளென்ன தத்துவ ஞானிகளென்ன கவிகளென்ன சிற்பிகளென்ன சித்திர வேலைக்காரர்களென்ன மற்றுமுள்ள அனேகர்களுக்கும் ஆதிஇருப்பிடமாக இருந்துவந்த பூமியாகும்இது! அதுவிஷயங்களைப்பற்றி நமது இராமாயணம், மகாபாரதம், மற்றுமுள்ள தேசசரித்திரங்களைபடிக்குமிடத்து நன்குணரலாம்.

அதேகாலத்தில் மேனாட்டின் சரித்திரத்தை பார்க்குமிடத்து, இப்படிபட்டவர்கள் எவருமிருந்ததில்லையென்றும்; எவரும் அவதரித்ததாகவும் கேள்விப்படவில்லை. இப்போது ஸதா ஸர்வகாலமும் புகைபோக்கிகளின்மூலமாகப்புகைகளைக்கக்கிக்கொண்டிருக்கும்லண்டன்மகா நகரமானது கூட அக்காலத்தில் சாதாரண ஒருசிறு கிராமமாகஇருந்து வந்ததாக தெரிகிறது. அதில் வசித்துவந்த மனுஷியர்கள் அவ்வளவுநாகரீகத்தைப்பெற்றிருந்ததாக சொல்லமுடியவில்லை. காலம் செல்லச்செல்ல மேம்பாட்டையடைந்து வருகிறார்களென்று சொல்லாமலேவிளங்கும் இப்படியாக மேகோன்னதஸ்திதியிலிருந்த இப்பரதபூமியானது இப்படி உலகத்தாரெல்லாம்இகழ்வதற்குஆளாகும்படி வந்ததற்கு எந்தக் காரணத்தைத்தான் சொல்லமுடியும்.

சென்ற ஆயிரம் வருஷங்கட்கு மேலாக நமக்கும் அன்னிய தேசத்தாருக்கும் ஸம்பந்தம் வெகு நெருக்கமாக ஏற்பட்டு அதனால் நாம் அனேக நன்மைகளை அடைந்திருக்கின்றோம். ஆனால்

அத்தன்மைகளினும் அதிகமான மேன்மைகளையும் அடைந்திருக்கின்றோம். அன்னியதேசத்தவர்களுடைய நெருக்கமான ஸம்பந்தம் ஏற்படுவதற்கு முன்னமேயே, கௌதமபுத்தர்காலம் தொட்டே நமதுநாடு வீழ்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது. நமது ஜன ஸமூகம் முன்னேற்றத்தையடைய வேண்டுமென்ற விருப்பத்துடன் நாம் இப்பொழுது சீர்திருத்த முயன்றுகொண்டிருக்கும் குற்றங்குறைகளெல்லாம் அக்காலத்திலிருந்து ஏற்பட்டவையே. அன்று முதலின்று வரை அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நாம் பலவழிகளிலும் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். இம்முயற்சிகள் இன்னும் முடிவுபெறவில்லை; பலனும் அடையவுமில்லை அவ்வளவு சீக்கிரம் நமது நோக்கத்தை அடைய சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன இதற்குக் காரணம் நமது முன்னோர்களாகிய ஆரிய ஸ்ரேஷ்டர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஜாதி தர்மமானது நிலைகுலைந்துவிட்டது. இந்த ஜாதிதர்மத்தைச் சீர்திருத்தக்காரர்கள் சரியாய் உணருகிறார்களில்லை நான்குவித ஜாதிகளையும் உண்மையான ஸமபாவனையில் ஒரே மாதிரியாக அபிவிருத்தி செய்து நிலைநிறுத்த முயல்கின்றார்களில்லை. பௌத்தமதத்தின் அதிர்ச்சியினால் நிலைகுலைந்த ஆரிய ஜன ஸமூகத்தை நிலைநிறுத்தப் பெரும் பிரயத்தனம் செய்த மகாத்மாக்களுக்கும் பெரியோர்கட்கும் நமஸ்காரம். அவர்களுடைய பாததூளி என்றென்றும் நமது சிரசிலிருக்கக்கடவது. ஆயினும் அவர்களெல்லோரும் அந்தந்தகாலங்களில் நமது தேசத்திற்கு ஏற்பட்டிருந்த முக்கிய குறைகளையே நிவர்த்திசெய்வதில் கண்ணும் கருத்துமாயிருந்தார்களே யொழிய, மற்றைய விஷயங்களை கவனிக்கவேயில்லை. நமது தேசசரித்திரங்களைப் பார்த்தால் இவ்விஷயம் நன்கு விளங்கும்.

தொன்றுதொட்டு புண்ணிய பூமியென்றும், பொன்னாடு என்றும் பெயர்பெற்ற இந்நாடு எக்காலத்தும் நன்னாடு எனச் சிறந்து செழித்துக் கொழித்திருந்தது. அந்த [illegible] நமது ஜனஸமூகத்திற்கு அஸ்திவாரமாக இடப்பட்ட ஜாதிதர்ம மகிமையினால் நமது தேசமானது பெருமை யடைந்திருந்தது. நமது பிராமணர்கள் பிரபஞ்சத்தினுடைய அபிவிருத்தியின் பொருட்டு ஜீவகாருண்ணியம் மேலிட்டால் வேதசாஸ்திர இதிகாச புராணங்களையும் சகல ஞானங்களையும் உலகினர்க்கு அளித்தனர். நமது க்ஷத்திரியர்கள் உலகின் நாற்றிசைகளிலும் சென்று

திக்குவிஜயம்செய்து செங்கோல் செலுத்திவந்தனர். நமது வைசியர்கள் தமது வியாபாரத்தை உலகெங்கும் பரப்பி உலகிலுள்ள தனக்குவியல்களை எல்லாம் ஒருங்குசேர்த்து வைத்துக் கொண்டனர். தொழிலாளிகளாகிய நமது சூத்திரர்களோ எந்த தொழில்களிலும் நிரம்பிருந்தவர்களாய் அற்புதமான வேலைப்பாடுகளைச் செய்து உலகை யாச்சரியப்படுத்திவந்தனர்.

இங்ஙனம் இந்தியாவானது எல்லாவிதத்திலும் இன்புற்றிருக்கும் நாளில் துன்பம் தோன்ற ஆரம்பித்தது. மதாநுஷ்டானங்களில் உண்மையென்பது குன்றி துவேஷமிருந்தது. பிராமணர்கள் மற்ற ஜாதியார்களைத் தாழ்வாகக் கருதிக் குறைவாகப் பேச ஆரம்பித்தார்கள். ஒற்றுமையழிந்தது வேற்றுமை மிகுந்தது. பிராமணர்களுக்கு அரசர்களிடத்துள்ள செல்வாக்கினாலும், மதிப்பினாலும், தங்களுடைய இஷ்டம்போல மற்ற ஜனங்களை இம்சிக்கத்தலைப்பட்டார்கள். இக்காலத்தில் ஏற்பட்டவைதாம் ஜாதிவித்தியாசத்தைப் பெரிதாக பாராட்டுகின்ற ஸ்மிருதிகளெல்லாம். பிராமணர்களின் அதிகாரம் பொறுக்க முடியாது போயிற்று. மற்ற ஜாதியார்கள் எல்லாரும் ஈஸ்வரனைக் குறித்துப் பிரார்த்தனை செய்தார்கள். தர்மத்தை ரக்ஷிக்கும் பொருட்டும், அவதாரஞ்செய்கின்ற பகவான் எளியோர்களை இரக்ஷிக்கும் பொருட்டும், பிராமணர்களுடைய அஹங்காரத்தை அடியுடன் அழிக்கும்பொருட்டும், ஸ்ரீகௌதம புத்திரராக அவதரித்தார். ஜீவகாருண்ணியத்தையும், ஸர்வஸமாஸ பாவனையையுமே பிரதானமாகப் போதித்து அன்பென்னும் பாசத்தால் அனைவரையும் அணைத்துக் கட்டினார். பிராமணர்களுடைய அஹங்காரமானது அழிந்தது ஆனால் அதனுடன் ஹிந்துமதத்தின் ஆணிவேர் போன்ற பலகொள்கைகளும் சீர்குலைந்தன புத்தர் மனோபரிபக்குவ பேதத்தைப் பாராது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக போதித்தார். சிலகாலம் இந்தியா க்ஷேமம் அடைந்து விட்டது போல் தோன்றிற்று ஆயினும் இவ்வுத்தமோபதேசத்தை ஏற்றுக் கொள்வதற்குத்தக்க மனோபரிபக்குவமின்றியவர்கள் பலரும் தங்கள் தங்களுடைய மனதிற்குத் திருப்தியைக் கொடுக்கவல்ல தங்களுடைய பழய தேவதைகளையும் விக்கிரங்களையும் எடுத்துக்கொண்டார்கள். ஆகவே, பொது ஜனங்களுடைய மதமானது, இந்துமதத்திலும் உட்படாமல், பௌத்தமதத்திலும் சேராமல், உபயப் பிரஷ்டமாயிருந்தது. ஜீவகாருண்ணிய ஸ்வரூபிகளாகிய சில மகான்

கள் இந்நிலைமையைக் கண்டார்கள்; பரிதபித்தார்கள்; எம்பெருமானை பிரார்த்தித்தார்கள். பௌத்தராகத்தோன்றிய பகவான் இப்பொழுது ஸ்ரீசங்கரராக அவதரித்தார். இப்பொழுது இவிடத்தில் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியதொன்றுண்டு. பௌத்தமதம் உயர்வையடைந்து தேசம் எங்கும் பரவியகாலத்தில் நமது கைத்தொழில் வியாபாரம் முதலியவைகளெல்லாம் பௌத்தர்களுடையதாய் விட்டது. சீரும் சிறப்பும் பௌத்தர்களுக்கே யுரியனவாயின. பௌத்தர்கள் தங்களுடைய மதத்தினால் பெருமையிருந்தனர். தோன்றினார் சங்கரர் ஹிந்துமதம் உயர்ந்ததாக இருந்தும் அதைக்கொண்டு பிராமணர்கள் பௌத்தமதத்தை ஜெயிப்பதற்கு ஆற்றலில்லாது போயதனால், பௌத்தமதம் மேலோங்கிவிட்டதென்றும், ஆனால் பொதுஜனங்கள் பேருக்கு மாத்திரம் பௌத்தர்களாக இருந்தார்களே யொழிய அநேக அநாசாரங்களைக் கைப்பற்றிக் கொண்டார்களென்றும், ஆதலால் இந்திய ஜனஸமூகம் பெருமை குன்றியதென்றும் கண்டார். ஹிந்துமதத்தின் உண்மையை எடுத்து விரித்துரைத்து பௌத்தர்களுடைய பெரும்பேச்சுகளை யடக்கி ஹிந்து மதஸ்தாபனம் செய்தார் பலமாக வேரூன்றிவிட்ட பௌத்தமதத்தை அசைப்பதற்கு சங்கரர், ஜனஸமூகத்தின் மனோபலம் முழுமையும் ஒன்று சேர்த்தார். மதாபிவிர்த்தியே ஜனஸமூகத்தின் முன்னேற்றம். கைத்தொழில் வியாபாரம் ராஜரீகம், முதலியவை அறவே புறக்கணிக்கப்பட்டன, மதமானது உண்மை பிராமணர்களாலும் மஹாத்மாக்களாலும், ஞானிகளாலும், நிரம்பப்பெற்றது. பொது ஜனங்கள் பிரபஞ்சம் மித்தை என்னும் கொள்கையில் பற்றியிருந்தது. கைத்தொழில் அபிவிர்த்தியை அசட்டை செய்தார்கள் வியாபாரத்தில் ஊக்கம் குறைந்தார்கள் ராஜரீகக் கல்வியைப்பற்றி கவனிக்கவே இல்லை; புஜபலம் குன்றினார்கள். இந்தியா தேசமானது ஒரு பெரிய பிரஹ்மநிஷ்டாமடமாய்விட்டது.

ஆனால் பௌத்தமதம் ஒழிந்தது. இந்துமதம் முன்போலவே வேரூன்றிக்கொள்ளவே கைத்தொழில் வியாபாரம் முதலியவை எல்லாம் ஹிந்து மதத்தினர் கைக்குள்வந்தன ஆயினும் மதமே உயர்வுபெற்றிருந்தது. கைத்தொழிலாதியவை ஜீவப்பிரேதங்கள் போல நடந்தேறினவேயொழிய ஊக்கத்துடனாவது உற்சாகத்துடனாவது நடத்தப்படவில்லை ஜனஸமூகத்தின் ஸ்தூலபலமானது குன்றிவிட்டது. ஜனங்கள் சரீரத்தையும் சரீர வளர்ச்சியையும் அலட்சியம் செய்தார்கள். இங்ஙனமே சிலகாலம் செல்ல மேற்கிலிருந்து மகம்மதியர்கள் படையெடுத்துவந்தார்கள். இங்கு ஸ்தூலபலமேதான் அலட்சியம் செய்யப்பட்டுப் போய்விட்டதே! இவர்கள் எப்படி மகம்மதியர்களை வெல்வார்கள்? பூவுலகு பொய்யென்று புலம்புகின்ற இவர்கள் வசத்தில் பூமிதான் எப்படியிருக்கும்? மகம்மதியர்கள் நமது நாட்டை ஜயித்துக் கொண்டார்கள். ஹிந்துக்கள் அப்பொழுது மிகவும் வருத்தப்பட்டபோதிலும், வேண்டிய சரீரப்பயிர்ச்சியும் பலமும் இல்லாததினால் அடங்கிக்கிடக்கவேண்டி வந்தது. பின்னர் மகம்மதியர்கள் நெடுங்காலம் அரசாக்ஷிசெய்து வரவே, ஹிந்துக்களில் சிலர் மகம்மதிய அரசாக்ஷியின் சில கொடுமைகளை சஹிக்கமுடியாது மனம்புழுங்கிக் கொண்டிருக்குங்கால், பஞ்சாப்தேசத்தில் குரு நானக் என்பவரும், மஹாராஷ்ட்டிர தேசத்தில் ஸிவாஜி என்பவரும் இன்னும் பல சூரர்களும் தோன்றினார்கள். ஹிந்துமதமானது ஜனங்களுடைய ரத்தத்தில் கலந்தொன்றுபட்டு விட்டதினால், ஜனங்களுடைய மனத்தை அடியோடு அதனின்றும் திருப்ப முடியவில்லை. ஆகையால் இக்காலத்தில் தோன்றிய வீரபுருஷர்கள் ஜனங்களுக்கு மதவாசனையுடன் கலந்த சரீரபயிர்ச்சியின் ஆவசியத்தைப் போதித்து ஜனஸமூகத்தின் சரீரபலத்தை விருத்திபண்ண ஆரம்பித்தார்கள். மகம்மதியர்களிடத்தினின்றும் அரசாங்கமானது அநேக இடங்களில் பிடுங்கப்பட்டது. இந்துக்கள் மறுபடியும் சீரும் சிறப்பும் எய்தினர். ஆனால் இப்பொழுது பிராஹ்மணத்தன்மையும், க்ஷத்திரியத் தன்மையும் விருத்தி செய்யப்பட்டனவே யொழிய, வியாபாராதிகள் கவனிக்கப்படவேயில்லை. இரண்டாயிரம் வருடங்களாக வியாபாராதிகள் கவனிக்கப்படாமலிருந்தால், வியாபார தந்திரங்கள் கைவிடப்பட்டுவிட்டால், அந்த ஜனஸமூகத்தின் வியாபாரமானது எந்த ஸ்திதியிலிருக்கும் என்பதை நாமே யூகித்துக்கொள்ளலாம்.

மேனாட்டார்கள் இப்பூமிக்கு வருவதற்கு முன்னமே இந்தியர்கள் தாம் தாமே அரசாக்ஷிசெய்துகொள்ளும் ஆண்மையையடைந்தவர்களாகவும், கோடீஸ்வரர்களாகவும், இருந்துவந்தார்களென்பதையும், இவர்களுடையசெல்வத்தையும், ஐஸ்வரியத்தையும் கண்டுதான்; ஈஸ்டு இந்தியா கம்பெனியார் இந்தியர்களுடன் வியாபாரம்செய்ய ஆசைகொண்டார்கள். வியாபார சிந்தையேயில்லாத

இந்திய ஜன ஸமூகத்தை வியாபாரதந்திரத்தினால்ஜயித்துக்கொண்டார்கள். மகம்மதியர்கள் தங்களுடைய ஸ்தூலபலத்தினால் நாட்டைக்கைப்பற்றிக் கொண்டபோது, கைத்தொழில், வியாபாரம் எல்லாம் அவர்கள் கையில் சென்றன. ஸ்தூலபலத்தினால் தங்கள் மதத்தையும்பரவச்செய்தார்கள். அதுபோலவேஇப்பொழுதுஐரோப்பிய வியாபாரிகள் வியாபாரதந்திரத்தினால் மதத்தையும் பரப்புகிறார்கள். கைத்தொழில் முதலியவற்றையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அரசாங்கமும் அவர்களுடைய கையிலிருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது நமது கைத்தொழில் வியாபாராதிகளை விருத்திசெய்யவேண்டுமென்று பலர் கூக்குரலிடுகிறார்கள். நமக்கு அரசாங்க ஸ்வதந்திரங்கள் கிடைக்கவேண்டுமென்றால், உலகிலுள்ள மற்ற ஜனசமூகங்களுக்கு சமமாக நாமும் நிலைபெறவேண்டுமென்றால் நாம் வியாபாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று நமது மேதாவிகளிற் பலரும் கூறுகின்றார்கள்.

அப்படிக் கூறுவது நியாயம் தான். ஆனால் நாம் நமது கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றை அபிவிர்த்திசெய்யும் வேகத்தில் மதாபிவிர்த்தியையும், சரீரப்பயிர்ச்சியும் இழந்துவிட்டால்,அக்காரணங்களால் நாம் பின்னர் திண்டாடவேண்டி வருமென்று இம்மேதாவிகள் கொஞ்சங்கூட நினைக்கின்றார்களில்லை. வியாபார விருத்தியினால் தற்காலத்தில் நாம் ஒருவேளை சிறிது உயர்வடையலாம். ஆனால் நாம் சீக்கிரத்தில் மறுபடியும் கீழே விழவேண்டி வரும். மதம், ராஜாங்கம், வியாபாரம், கைத்தொழில் இவையெல்லாம் ஏககாலத்தில் ஸரிஸமமாக விருத்தி செய்யப்படவேண்டும். இந்நான்கும் ஜன ஸமூகத்தைத்தாங்கி நிற்கும் நான்கு தூண்கள் போன்றனவாம். இந்நான்கு விஷயங்களையும் குறிப்பிடுவதற்கே ஜன ஸமூகமானது நான்கு ஜாதிகளாகப்பிரிக்கப்பட்டது. இந்தியாயத்தை நன்குணராது தற்கால ஜன ஸமூக சீர்திருத்தக்காரர்களிலும், தேசாபிமானிகளிலும் பலர் விதவை (Widow marriage) களுக்கெல்லாம் விவாகம் செய்துவிடவேண்டும். ஜாதிகளையெல்லாம் ஒன்றாக்கிவிடவேண்டும், எவ்வித்தியாசமுமில்லாது எல்லோரும் ஒரே பந்தியிலுட்கார்ந்து உண்ணவேண்டும். ஸ்திரீகளும் புருஷர்களைப்போலவே சகல தொழில்களையும் அநுசரிக்கவேண்டும் என்று பலவாறாக மொழிகின்றார்கள். சிலர் எடுத்ததற்கெல்லாம் இயந்திரத்தைக் கொண்டுவந்து, இந்தியாதேசத்தை இயந்திர மய

மாக்கிவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். சிலர் விக்ரகங்களை உடைத்தெரிந்துவிட வேண்டுமென்கிறார்கள். இவையெல்லாம் செய்யப்பட்டால் இந்தியாதேசம் முன்னேற்றத்தை யடைந்துவிடுமா? ஏழைகளின் வயிறு நிரம்புமா? பஞ்சம் பறந்துவிடுமா? தொத்துவியாதிகள் தொலைந்துவிடுமா? 18வயது விதவைக்கு மறுவிவாகம் செய்துவைத்து, அவள் தனது 20வது வயதில் இரண்டாவது புருஷனையும் இழந்துவிட்டால் என்ன செய்வது? புதிய புதிய புருஷர்களை விவாகம் செய்துகொண்டே செல்வதா? ஆச்சரியம்! “விதவைகளுக்குக்கிடைக்கும் புருஷர்களின் கணக்கினால் முன்னேற்றத்தையடைந்திருக்கிற ஒரு ஜன ஸமூகத்தை நான் இனிமேல் தான் பார்க்கப்போகிறேன்” என்றார் ஸ்வாமி விவேகானந்தர். ஒரே ஜாதியில் பிறந்து ஒரேபந்தியிலுட்கார்ந்துண்ணும் நெருங்கின பந்துக்களுக்குள்ளுஞ்சச்சரவுநேரிடுவதில்லையா? இப்பொழுதுநடக்கும் பயங்கரமான யுத்தத்தில் போர்புரியும் இருகக்ஷியாரும் ஒரே ஜாதியைச்சேர்ந்தவர்களல்லவோ? ஒருபந்தியிலுட்கார்ந்துண்ணுபவரல்லவோ? புருஷர்களுடன் எல்லாவிஷயங்களிலும் போட்டிபோட ஆரம்பித்திருக்கும் ஸ்திரீ ஸ்வதந்திரவாதிகளின் தீச்செய்கைகளை நாம் அறியோமா? பெண் தன்மையை இழந்து பிசாசுகுணங்களைக் கொள்ளும் இவர்களைப்போலவா சீதை, சாவித்திரிபோன்ற ஸ்திரீ ரத்தினங்களின் குணங்களைப்பின்பற்ற கடமைப்பட்டிருக்கிற நமது ஸ்திரீகள் ஆகவேண்டும்.

நாகரீகம் சம்பந்தப்பட்டவரையில் நம்முடைய நாகரீகங்களுக்கும் ஐரோப்பியர்களுடைய நாகரீகங்களுக்கும் பேதம் உண்டு. நம்முடைய பெற்றோர்கள் பிள்ளைகள் மற்று முள்ள நமது சுற்றத்தார்கள், அதிதிகள் முதலிய எல்லோரையும் காப்பாற்றக்கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் நமது பெற்றோர்களினுடைய விருப்பம் இன்னின்னவைகள் என்பதையும் சொல்லாமலிருக்க முடியவில்லை. தமது பிள்ளைகளுக்கு மிகுந்த திரவியத்தைத் தேடிவைத்து விடவேண்டுமென்பதும், நல்ல ஆஸ்தி, நல்ல ஜாதி, நல்ல சீதனம், உள்ளிடத்தில், அதிபாலியத்திலேயே கல்யாணம் செய்து முடித்துவிடவேண்டுமென்றும், உத்தியோகத்தை நிர்வகிக்க சக்தி யுண்டோ! யில்லையோ? Bribe கைக்கூலியாவது கொடுத்து ஒரு உத்தியோகத்தை வாங்கிக் கொடுத்துவிட்டால் பெருங்காரியமென்று நினைக்கிறார்கள். இதேவிஷயத்தைப்பற்றி

மேனாட்டுச் சிறுவர்களிடம் யோசிக்குங்கால் தம் தம் வயிற்றுக்கு வேண்டிய உணவைத் தாங்களே சம்பாதிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எந்தக்காரியம் எந்தப் பிள்ளையைப் பொறுக்கிறதோ, அந்தப்பிள்ளையின் விருப்பத்தினும், தெரிவிலும் விட்டுவிடுகிறார்கள். அவர்களுக்காக அவர்கள் பெற்றோர்கள் பெருந்திரவியம் தேடவும், அவாக் கொள்ளுகிறதில்லை. அப்பிள்ளைக்கு அவரவர்களுடைய சம்ஸாரங்களைத் தாங்கக்கூடியசக்தி வந்தாலொழிய அவர்கள் கல்யாணம் செய்து கொள்வதில்லை. நமது சிறுவர்களுக்கோ விபரம் பிள்ளைக்கு தெரிவதற்கு முந்தியே கல்யாணம் சிறு வயதிலேயே செய்துவைத்து விடுகிறார்கள். அதன்விஷயத்தைப் பற்றி நான் இவ்விடத்தில் ஜாஸ்தியாகச் சொல்ல முன்வரவில்லை. தனவந்தராக இருப்போர்கள் தமக்குள்ளதை நியாயமாகசெலவுசெய்து தர்ம வழியினும், தேச க்ஷேமத்தின் பொருட்டும் செலவிட்டு, மிஞ்சியதையே தமது பிள்ளைகளுக்கு விடுவார்கள். பிள்ளைகளுக்கு கல்வியையும் கைத்தொழிலையும் கற்பித்து வைக்கவேண்டியது மாத்திரமே தகப்பனுடைய கடமையே தவிர அவனுக்குப் பொருள் தேடிவைக்க வேண்டியது தகப்பனுக்குரிய கடமையன்று

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்று திருவள்ளுவர் செப்பியுள்ளதைக் காண்க. தகப்பன் பிள்ளைக்கு ஆஸ்தி வைக்காமலிருந்தால் அப்பிள்ளை தன் பெண்சாதி பிள்ளைகளைப் பாதுகாக்கும் பொருட்டு ஏதேனுமொரு தொழிலைச் செய்துகொண்டு காலத்தை நன்மார்க்கத்தில் கழிக்கிறவனேயல்லாது துஷ்ட கிருத்தியங்களில் மனதைச் செலுத்த அவனுக்கு அவகாசமிராது. மேலும் அவனுக்கு நேரிடும் துன்பங்களெல்லாம் தகப்பன் தேடிவைத்த பொருளேயாகும். ஆகையால் மகனுக்கு கல்வி கைத்தொழில் முதலியவற்றைக் கற்பித்து தன் குடும்பத்தைத் தானே கஷ்டப்பட்டு ஸம்பாதித்து காப்பாற்றிக்கொள்ளும்படியான வழிதேடிவைக்கவேண்டும். ஆன்டிரூ கார்னாஜீ என்னும் கோடீஸ்வரர் ஒருமுறை சொன்னதாவது "என்மகன் தனக்கு செல்வம் வேண்டுமென்று தானேயுழைத்து அந்த சந்தோஷத்தை யடைவதே என்று வாஞ்சை" என்றார். அவர் அப்படி சொல்லியது நமது சாஸ்திரத்தை அனுஸரித்து சொல்லியிருக்கிறார் என்பதற்கு

உதாரணமாக,—உத்தமம் ஸ்வார்ஜிதம் மத்திமம் பிதார்ஜ்ஜிதம் என்றபடி தான்தேடிய பொருள் உத்தமமென்றும், தகப்பன் தேடிய பொருள் மத்திமம் என்றும் சொல்லப்படுகிறது.

நமது தேசத்தவர்களைப்போல், மேனாட்டார்கள் நினையாமல் அவர்களுடைய பிள்ளைகளை போதுமான கல்வி பயில்வித்து அவர்களைக் கைத்தொழில்களிலோ வியாபாரத்திலோ, பாலியத்திலேயே விட்டுவிடுகிறார்கள். அதினால் அவர்கள் பாலிய அநுபோகத்தினால் தேர்ச்சியடைந்து பிறர் கைகளை எப்பொழுதும் எதிர்பாராமல் அவர்களை தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலைமைக்கு ஆய்விடுகிறார்கள். இதனால் அவர்களுடைய இலக்கு என்னவென்றால் Steam Engine கண்டு பிடிப்பதிலும், Electricity மின்சாரம் மூலியமாய் ஆகாயத்தில் பிரயாணம் செய்து, பூமியைச்சுற்றி குறுக்குமறுக்குமாக ஓடி இனியும் கண்டு பிடிக்கவேண்டியது ஏதாகிலும் உளதோ! என்று அலைந்து திரிவார்கள். உதாரணமாக,—இப்போது நடந்துவரும் யுத்தத்தினால், ஜெர்மனியர்கள் பிரிட்டிஷாருடைய கடற்படையினால் பருத்தி, தாமிரம், ரப்பர், ஆகாராதிகள் மற்றுமுள்ள யுத்தஸாமான்கள் வெளிதேசங்களிலிருந்து வரத்து இல்லாமல் திண்டாடுகிறார்களென்பதைப் பற்றி, ஒவ்வொருவரும் பத்திரிகைகளின் மூலியமாய் தெரிந்துகொண்டிருக்கலாம். ஆகவே ரப்பர் இல்லாமல் ஜெர்மனியர் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் உண்மையான ரப்பருக்கு பதிலாக இன்னும் ஜாஸ்தி குணத்தைக் கொடுக்கக்கூடிய ஓர்வகை ரப்பரைத் தயாரிக்கும் மார்க்கத்தைக் கண்டுபிடித்து விட்டார்களென்றும், ஆகாரத்திற்கு பதிலாக மரப்பொடியிலிருந்து ஓர்வித கூழ் செய்யும் விதத்தைக் கண்டுபிடித்து விட்டார்களென்றும் சொல்லப்படுகிறது. இப்படியாக முயற்சித்துவரும் நாகரீகம்பெற்ற மேனாட்டாருடைய செய்கைகளை அடிக்கடி பத்திரிகைகளின் வாயிலாக தெரிந்துவருகிறோம். இப்படிக் கல்வி பயில்விப்பதினால் மாத்திரம் நமது ராஜ்ஜியம் செழுமைக்கு வந்து விடுமென்று நினைக்க இடமுமில்லை.

அதில் முக்கியமானது "ஒற்றுமை அதாவது ஐக்கிய பத்தியம்" Union அப்படி ஒத்துழைக்கும் தேசங்கள் கைத்தொழில் வியாபாரங்களினால் எவ்வளவு உன்னதஸ்திதிக்கு வந்திருப்பதென்

பது யாவரும் அறிந்த விஷயமே! Great Britan என்ன! Germany என்ன? Austria என்ன? America என்ன? Japan என்ன? மற்றுமுள்ள தேசங்களும் ஒத்துமையினால்தான் கைத்தொழில் வியாபாராதிகளை விருத்திசெய்து கொண்டிருக்கின்றனர். இப்போது உதாரணமாக ஜெப்பானை எடுத்துக்கொள்வோம். சுமார் 20 வருஷத்திற்கு முன் ஜெப்பான் நிலைமையையும், இப்போது இருந்து வரும் நிலைமையையும் ஒத்திட்டுப் பார்க்குமளவில், முன்னைவிட் எத்தனையோ மடங்கு எல்லா விதத்திலும் விருத்தியடைந்திருக்கிறதை யாரும் அறிந்துளர். நமதுநாட்டில் எக்கடையில் போய் பார்த்தாலும் ஜெப்பான் ஸாமான் இல்லாதகடை நிரம்பவும் குறைவு. மேலும் இந்த யுத்தம் ஆரம்பித்ததும் மேல்நாட்டு ஸாமான்கள் வரத்து குறையவும் ஜெப்பானுக்குக் "கார்ப்பயிருக்குக் களைப்படிங்கினது" போலாயிற்று. குண்டூசி முதல் இப்போது ஜெப்பான் ஸாமான்தான் அமெரிக்காவும் ஜெப்பானும் இந்தியாவை வியாபாரத்தில் பாகம் போட்டுக் கொண்டிருக்கிறது. அப்படியவர்கள் அவ்வியாபாராதிகளை விருத்திசெய்ய அந்த கவர்ன்மெண்டார் தம்மால் வேண்டிய முழு ஒத்தாசைகளையும் செய்து கொடுக்கிறார்கள். வேண்டிய மூலதனங்களையும் கொடுத்து விருத்தி செய்கிறார்கள். அவ்விதம் ஒரு விளம்பரம் வெளியானதை யாரும் அறிந்துளர். அவ்விதம் நம் கெவர்ன்மெண்டார் நம்முடைய கைத்தொழில் வியாபாராதிகளுக்கு ஒத்தாசை செய்ய கொஞ்சநாளைக்கு முன் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் மற்ற ஜனஸமூகத்தாரைப்போல கைத்தொழில் வியாபாராதிகளில் முன்னேற்றத்தை அடைவோமென்பதில் கொஞ்சமும் ஸந்தேகமில்லை. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் கவர்ன்மெண்டார் செய்து வருகிறார்கள்.

நம்முடைய ராஜ்யத்தில் கைத்தொழிலை விருத்தியடையச்செய்ய வேண்டுமானால் இதுதான் ஸமயம். நமது நாட்டுத்தொழிலாளிகளினால் செய்யப்படும் சாமான்களை நாம் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இவற்றை நாம் அவசியம் வாங்கவேண்டும் இவற்றோடு நாம் அன்னியநாட்டு சரக்குகளை ஒப்பிட்டுப்பார்க்கும் போது இவைகள் அவ்வளவு நயமானவைகளாய் இராமலிருக்கலாம். ஆயினும் இவற்றையே வாங்கி தொழிலாளிகளுக்கு ஊக்க முதவவேண்டும். கைத்தொழில் விஷயமாக இந்தியர்களை வெளிதேசங்களுக்கு வியாபாரம் தொழில் இவைகளைக் கற்க அனுப்புவதில் பிரயோஜனம் உண்டென்பது ரொம்பவும் சந்தேகமென்று இந்தியன் டெக்ஸ்டைல் ஜெர்னல் பத்திராதிபர் மிஸ்டர் வாலெஸ் அபிப்பிராயப்படுகிறார். "இந்தியா மாணவர்கள் வெளிதேசங்களுக்குப் போய் மிக

வும் உழைத்து அனேகம் பரிசுகள் பெறுகிறார்களென்பதில் சந்தேகமில்லை. அவ்விடம் மில்களில் உயர்ந்த வேலையிலிருக்கும் உத்தியோகஸ்தர்கள் எல்லாம் இந்தியாவிலேயே இருந்து அனுபோகம் பெற்றவர்களாய் இருக்கிறார்கள், ஒவ்வொரு வருஷமும் கைத்தொழில் விருத்தியாகவாக வெளிதேசங்களுக்குப் போய்க் கற்கவேண்டிய அவசியம் குறைந்துபோகிறது. அப்படி வெளிநாடுகளுக்குப் போகவேண்டியது அவசியமென்றால், மாணவர்கள் இந்தியாவின் தொழில்களைப்பற்றிய விஷயங்களில் அனுபவமடைந்தபிறகு வெளிதேசங்களுக்குப் போனால் அங்குள்ள விசேஷங்களை சரிவர உணர்ந்துகொள்ள சௌகரியமாயிருக்கும்" என்றார்.

நமது தேசம் முன்னுக்குவர க்ஷேமமானது யாரைச் சார்ந்துள்ளதாக இருக்கிறது என்பதைப்பற்றி நான் சில வார்த்தைகள் சொல்லி முடிக்கின்றேன். அதானது நமது Younger generation ஙிழ் சந்ததியாரை பொறுத்திருக்கிறது. ஆகையால் நம்மிடமிருந்து இந்தப் பெருந்தன்மையை நம் தேசம் வேண்டிநிற்கின்றது. இளைஞர்கள்தான் இந்த காரியத்தை செய்யவேண்டும். எப்படிப்பட்ட இளைஞர்களுக்கு இவ்வேலைத்தகுதி என்று கேட்கும் பக்ஷத்தில் அவர்கள் இளைஞர்களாயும் பலசாலிகளாயும், பராக்கிரமசாலிகளாயும், நல்ல தேகக்கட்டுள்ளவர்களாயும், யுக்திசாலிகளாயும் இருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களுக்குத் தான் இந்தவேலை ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய இளைஞர்கள் ஆயிரக்கணக்காக இந்தியாவிலேயே இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக் கல்விப் பயில்விக்க வேண்டியது அவசியமென்று முன்னமே கூறியுள்ளது ஆனால் எவ்வித கல்வி என்றால் ஸாராம்சங்களை மண்டையில் ஏற்றி வைப்பதன்று குணத்தையும், சீலத்தையும், செவ்வைப்படுத்தி ஆத்மோந்நதியையும் புருஷார்த்த லாபத்தையும் கைகூடச்செய்யவேண்டும். படிப்பைப்பற்றி மறுபிரசுரத்தில் சொல்ல உத்தேசித்திருப்பதால் இத்துடன் முடிக்கின்றேன். உண்மையாக நமது ஜனசமூகம் சீர்திருத்தமடைய வேண்டுமானால் இவைகளெல்லாம் மார்க்கங்களாகா! நமது பழய ஜாதி தர்மத்தை யனுசரிக்கவேண்டும். ஜாதி தர்மம் என்றவுடன் ஜாதிகளின் உயர்வு தாழ்வைப்பற்றிப் பேசுவதாக நினைக்கவேண்டாம். அதனதன் தொழில்களைச்செய்வதில் அந்தந்த ஜாதி சிறப்புற்றதே. ஒரு ஜாதியைவிட மற்றொரு ஜாதி சிறந்ததென்று சொல்வது சரீரத்திலுள்ள ஒரு அவயவத்தைவிட மற்றொரு அவயவம் சிறந்ததென்பதுபோலாம். அந்தந்த ஜாதியார்கள் அந்தந்த தொழிலை செய்யட்டும். நமது ஜனஸமூகம் அபிவிருத்தியடைந்துவிடும்.

கடைசியாக இன்னும் நமக்குத் தன் நம்பிக்கை யென்பது கிடையாது. நமக்குள் அந்த சக்தி அடங்கிக்கிடக்கின்றது. நம்மால்

செய்ய முடியாத காரியம் ஒன்றுமேயில்லை. உலக சரித்திரங்களை எடுத்துப்பார்ப்போமாயின், பஞ்ச பூதங்களையும் மனிதன் தன் இஷ்டம்போல் ஆட்டிவருகிறானென்பது புலப்படும். நம்மிடத்திலேயே நமக்கு ஈஸ்வரனிடத்தில் நம்பிக்கையிருக்கின்றது என்ற திட நம்பிக்கையே நமது வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கவேண்டும். என்னிடத்திலேயே நம்பிக்கையில்லாத நான் வேறொருவனை நம்புவதெப்படி? ஆகையால் நமக்குத்தன் நம்பிக்கைப் பயிற்சியுண்டாகவேண்டும். அதற்குக் குணம் உண்டாகவேண்டும். அஹங்காரம், பொறாமை முதலிய துற்குணங்களை ஒழித்து ஜாதி தர்மத்தை ஸமரஸ நியாயத்தின்மீது நிலைநிறுத்த வேண்டும் அறிவுபரவச் செய்யவேண்டும். நமது முன்னேற்றம் என்ன? என்பதைப்பற்றி நான் சொல்லப்பிரியப்படுகிறேனானாலும் காலசம்பந்தப்பட்டமட்டில் அதைப்பற்றி விஸ்தரித்து சொல்வதை நிறுத்திக்கொண்டேன். எப்பொழுதும் நமது நிலைமையைப்பற்றியே சிந்திப்பதில் நமது காலத்தைக்கழிக்க வேண்டியிருக்கிறது. ஐரோப்பாவில் நடக்கும் பயங்கரமான யுத்தமானது ஏற்கனவே கைத்தொழில் வியாபாராதிகளை இழந்துவிட்டு ஏங்கிக்கொண்டிருக்கிற நம்மை மேன்மேலும் வறிஞர்களாக்க ஆரம்பித்திருக்கின்றது. இந்த யுத்தமானது பிரபஞ்சம் முழுவதையுமே பிரமிக்கச் செய்திருக்கின்றது. ஆதலால் நாம் இந்த யுத்தத்தினால் பீடிக்கப்பட்டு வருந்துவது ஆச்சரியமன்று. இந்த யுத்தம் முடிந்தால் தான் உலகத்திற்கு க்ஷேமமுண்டாகும். இத்துடன் ராக்ஷஸத்தன்மையும் நீங்கவேண்டும். ராக்ஷஸத்தன்மை நீங்கி இந்த யுத்தமானது நமது அரசாங்கத்தாருக்கு சீக்கிரத்தில் வெற்றியாக முடியவேண்டுமென்று நாம் எல்லாம் வல்ல இறைவனை இரவும் பகலும் பிரார்த்தித்துக் கொண்டிருக்கவேண்டும்

இச்சமயத்தில் ஒன்று சொல்லாமலிருக்க முடியவில்லை. நமது தேசத்து மந்திரி ப்ரபுக்களும் ராஜபிரதிநிதி அவர்களும் இத்தேசம் சம்பந்தப்பட்ட வரையிலும் கூலிசம்பந்தப்பட்டவரையிலும் எவ்வித சௌகரியத்தை இந்துக்களுக்குச் செய்து கொடுக்கலாமென்று நேரே நமது நாட்டுத்தலைவர்களுடன் கலந்து பேசவும் விஜயம் செய்திருக்கிறார்கள். அவசியம் நமது நோக்கங்களும் நிறைவேறுமென்று நம்பியிருக்கலாம். இத்துடன் நிறுத்தி, நமது முயற்சிகளில் ஈஸ்வரன் கிருபைபாலிப்பாராக, என்ற முழுநம்பிக்கையுடன் இவ்வியாஸத்தை பூமாதாவாகிய மகா சக்தியின் பரிசுத்த பாதாரவிந்தங்களில் ஸமர்ப்பிக்கிறேன்.

கல்லூர்,—ஆர். கிருஷ்ண மூர்த்தி,

பேப்பர் நிருபர், காரைக்குடி

கல்வி.

“வித்யாவி ஹீநா: பசுபிஸ்ஸமாநா:”

மானிட ஜென்மமெடுத்த நாம் ஒவ்வொருவரும் பயிற்சிக்க வேண்டியது கல்வி. அக்கல்வி எச்சமயத்திலும் தேவையுள்ளதைக் கொடுக்கும் திறமைவாய்ந்தது.

“கிம் கிம் நஸாதயதி கல்பல தேவவித்யா”

என்று கூறியிருக்கிறார்கள்.

உலகில் நமது அன்பிற்சிறந்த சில பிரபுக்கள் செல்வத்தையே முக்கிய சாதகமென்று நினைத்து அந்நியர்களை கொஞ்சமும் பொருட் செய்யாமல் தாம் நினைத்தபடி அநேக கேடுகளை விளைவித்துக்கொள்கிறார்கள். அந்தோ கிஞ்சிற்றும் கல்விப்பயனை யடையாமல் செல்வம் செல்வம் என்றே கூறிக்கொண்டு படித்தவர்களை கொஞ்சமேனும் மதிக்கிறார்களில்லை. தாங்கள் படிக்காததால் மதியில்லாத அவர்கள் படித்தவர்களிடம் மதிப்பை அடைகிறார்களில்லை யாகையால் அன்னவர்கள் கிருஷ்ணபக்ஷமுள்ளவர்கள் (தேய்பிறையர்கள்) என்று தோன்றுகிறது. வளர்பிறையாக இருப்பார்களாகில் மதியால் (சந்திரனால்) பிரகாசிப்பார்கள். தேய்பிறையானதால் தான்; தங்கள் மதி (புத்தியும்) தேய்ந்து க்ஷீணிக்கிறது; தவிரவும் கற்றறியாத நாங்கள் நரகத்திற்குச் செல்வோம் செல்வோம். என்பதற்குப் பதிலாக ஒரு கொம்பையும் காலையும் வெட்டிவிட்டு செல்வம் செல்வம் என்று உரைக்கின்றனர். செல்வமுள்ளவர்கள் தான் என்னும் மமதையால் கர்வித்து அடாதகாரியங்களைச் செய்யத்துணிகிறார்கள். நிற்க, பணக்காரர்களுக்கு அநேகமாக படிப்பின் அருமை தோன்றுகிறதில்லை. படித்தவர்கள் சிலர் ஏழைகளாகவும் படியாதவர்கள் பணக்காரர்களாகவும் இருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்தவிஷயம். காரணமென்னவெனில்,—

“குடிலா லக்ஷ்மீர்யத்ர ப்ரவதி நசரஸ்வதீ
தத்ர ப்ராய: ச்வச்ரூஸ்நுஷேயா: ந்த்ருச்யதே
ஸௌஹ்ருதம் லோகே”

என்றபடி லக்ஷ்மீ எவ்விடமிருக்கிறாளோ அவ்விடம் சரஸ்வதி இருக்கமாட்டாள் ஏனென்றால் உலகில் மாமியாரும் மருமகளும் ஒற்றுமையுடன் வாழமாட்டார்கள். என்று இக்காலத்தில் அநேகமாய் நடந்துவருகிறது. இதை யனுசரித்தே கொஞ்சமும் மாறுபாடடையாமல் மாமியான லக்ஷ்மியும் மருமகளான சரஸ்வதியும் அனுஷ்டிக்கிறார்கள். இக்காலத்தில் இவ்விருவர்களுக்கும் கல

கம் ஏற்பட்டால் எப்படி மருமகள் பக்ஷமாய் அநேகமாய் ஜயம் உண்டாகிறது? மாமி மிகவும் மனம்நொந்து வருந்துகின்றாள் தனக்கு கிடைத்தவுடன் சரஸ்வதி கொஞ்சம் பரிகசிக்கிறாள் அதாவது நான் ஜயமடைந்துவந்திருப்பதால் நான்முகத்தை (நான்-முகத்தை) பிரம்மாவையடைந்தேன். நீ அதற்குள் பரீதமிருந்தமையால் மார்பை யடைந்தாய். இன்னும் ஜயத்தால் சத்யலோகஞ் சென்றேன். அபஜயமடைந்த உன்னை வைகுண்டத்தில் என்று சொல்லுவதற்கு முன் நீயாகவே வைகுண்டமடைந்தாய் போலும், தவிரவும் கீர்த்தியை வெண்மையாக வர்ணிப்பது கவிகளுக்கு சகஜமாதலால் கீர்த்திபெற்ற எனக்கு வெண்டாமரை ஆசனமும் வெண்பட்டு ஆடையும் உண்டாயிருக்கின்றன. அபகீர்த்தி கறுப்பாகையால் உனக்குக் கறுப்பான மகாவிஷ்ணுவின் சரீரமானது இடங்கொடுத்தது போலும். ஆகையால் சரஸ்வதிக்கு ஏற்பட்டிருக்கும் மகிமை அளவற்றது. அனைத்தனத்தாரும் இது கருதியே அநேக பட்டணங்கள் கிராமங்கள் முதலிய இடங்களில் கல்விக்கலாசாலைகளை ஏற்படுத்தி அநேக ஏழைகளை முன்னுக்குக் கொண்டுவருகிறார்கள்.

தரித்திரமென்பது படித்தவர்களிடந்தான் அதிக அன்புடன் தேடிவருகிறது. அதை யொருவர் எழுதுகிறார்.

"தாரித்ர்ய போத்வம் பரமம் விவேகி
குணாதிகே பும்ஸி ஜனோ நுரக்தா
வித்யா விஹீனே குணவர்ஜி தேச
முகூர்தமாத் ரம் நரதிம் கரோஷி"—என்றார்

அதாவது-ஏ-தரித்திரமே நீ மிகவும் புத்திசாலி ஏனென்றால் படித்தவர்களாகியும் குணமுள்ளவர்களாயுமிருக்கும் மனுஷியர்களிடத்தில் உனக்கு அதிக விசுவாசம் மேலிட்டு அவர்களை அரைக்ஷணமேனும் பிரியாமலிருக்கிறாய் படியாதவர்களிடம் நீ போகிறாயில்லை. ஆனதால் உனக்கும் வித்தையில் அதிக வாத்சல்யம் ஏற்பட்டிருக்கிறதைப் பார்க்க மிகவும் சந்தோஷம்.

ஆனதுபற்றி நாம் செல்வத்தைக்கருதாமல் கல்வியையடைந்து நமது கதியை நற்கதியாகச் செய்துகொள்ள வேண்டுமென்பது நமது கடமைகளிலொன்றாகும். ஆகையால்தான்

"வித்யைவ பூஷணம் பும்ஸாம்"

என்று ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்கள்.

T. P. வைத்தியநாத சாஸ்திரி,
S. M. S. வித்தியாசாலை, காரைக்குடி.

கோயிலூர்

உபந்நியாசப் பத்திரிகையின்மேல் கேள்வி.

ஐயா, காரியதரிசிகளே! தாங்கள் கோயிலூரில் பிரமவித்தை உபந்நியாச விஷயமாக எழுதிவெளியிட்ட பத்திரிகை ஒன்று இப்போது கிடைத்தது. இதில் இப்பிரமவித்தையை கலிப்பிரபாவத்தால் உலகத்திலுள்ளவர்கள் அறியாதவர்களாயும் பெரும்பாலும் அதற்குச்சாதனமான சாஸ்திராப்பியாசம் இல்லாதவர்களாயும், ஜீவனோபாயங்களிலேயே காலத்தைக்கழித்து இச்சென்மத்தைப் பிறவாநாளாக்குகின்றனர். அவர்கள் உஜ்ஜீவித்தற்பொருட்டு அறிவின் மிக்க பிர்மஸ்ரீ சாஸ்திரிகளாலும் ஸ்ரீ சாதுக்களாலும் அநேக அரிய பெரிய பிர்மவித்யா சம்பந்தமான விஷயங்களை உபந்நியாசிக்கப்பெறும் என்று எழுதியிருக்கிறீர்கள். விஷயங்களையென்று ஐயுருபு கொடுத்து அவற்றைச் செயப்படுபொருளாக்கி விட்டீர்கள். பின்பு உபந்நியாசிக்கப்பெறும் என்றீர்கள். அவ்வாறு பெறுகின்ற வினைமுதல் ஈண்டுக் காணப்பெற்றிலது. அதனை யாண்டு வைத்திருக்கின்றீர்கள்? ஈண்டு இலக்கணவழுவை விசாரிக்கப்புகின் விரியும் அமைக. விஷயத்திற் செல்வோம். உலகத்திலுள்ளவர்களென்று தாங்கள் சொன்ன பேர்வழிகள் யார்? பிரமமா? கூடஸ்தனா? ஈச்வரனா? ஜீவர்களா? ஜகத்தா?

பிரமமென்றால் அது ஒரே பொருள்தானே அதற்கு அறியாமைகிடையாதே. சாஸ்திரிகள் சாதுக்களது உபந்நியாசத்தால் உஜ்ஜீவிக்கவேண்டிய அவசரம் அதற்கில்லையே? கூடஸ்தனென்றால் அது தங்கள் கொள்கைப்படி பிரமத்தைக்காட்டிலும் வேறல்ல. அதற்கறியாமையுமில்லை உபந்நியாசத்தைக்கேட்டு உஜ்ஜீவிக்க வேண்டிய அவசரம் அதற்குமில்லை. இனித்தங்கள் மதத்தில் கழித்துவிட்டபொருள்கள் மேற்கூறி எஞ்சிநின்ற ஈசுவரன், ஜீவர்கள் ஜகத்து என்னும் முப்பொருள்களே. அவற்றுள் ஈசுவரன் என்றாலோ அவன் சர்வஞ்ஞனாதலால் கிஞ்சிஞ்ஞர்களது உபந்நியாசத்தால் ஆகவேண்டிய காரியம் பிரமம்போல அவனுக்குமில்லை. ஆனால் ஈசுவரன் தங்கள் கொள்கைப்படி மாயையினால் கற்பிக்கப்பட்ட கல்பிதனே வஸ்துவல்ல. அவனுக்கு சர்வஞ்ஞத்தைக் கல்பித்ததும் மாயை அன்றி வேறில்லை. அவனும் விவகாரத்திலன்றிப் பரமார்த்தத்தில் இல்லை. ஆதலால் அவன் சுவயம் வஸ்துவுமல்ல. சுவயம் சர்வஞ்ஞனுமல்ல. ஆகவே, அவனுக்குப் பிரமவித்தை

உபந்நியாசம் வேண்டுமென்பீர்களாயின் உபந்நியாசகர்களோ அவைகளிலும் மோசமுடைய கிஞ்சிஞ்ஞர்களாச்சே, அன்றியும் விவகாரத்திலன்றி பரமார்த்தத்திலில்லாத ஈசுவரனுக்கு விவகாரத்தில் தாங்கள் செய்விக்கும் உபந்நியாசத்தைக் கேட்டாலும் பரமார்த்தத்தி லநுபவிக்கும் பலனாகிய உஜ்ஜீவனமும் பிரமானந்தமுமெப்படி லபிக்கும்? ஆளேயில்லையே! இனி உலகத்திலுள்ளவர்களென்று தாங்கள் சொல்லிய பேர்வழிகள் ஜீவர்களேயென்றால் ஜீவர்கள் கிஞ்சிஞ்ஞர்களாதலால் அவர்களுக்கு உபந்நியாசம் வேண்டியதவசியந்தான். தங்கள்கொள்கைப்படி அவர்கள்பாடோபெருமோசமாச்சே அவர்களும் மாயையிற் கல்பிதர்களேயன்றிச் சுவயம் வஸ்துக்களல்லவே. விவகாரத்திலன்றிப் பரமார்த்தத்தில் ஜீவர்கள் இல்லையே தாங்கள் உபந்நியசிப்பிக்கும் வித்தையோ பிரமவித்தை ஆச்சே; அதன் பலமோ பிரமானந்தமாச்சே, பிரமானந்தமோ பரமார்த்தத்திலன்றி விவகாரத்திற்கிடையாதே, பரமார்த்தத்திலில்லாத ஜீவர்களுக்கு பரமார்த்த பலனாகிய பிரமாநந்தத்தைத்தரும் பிரமவித்தையை விவகாரத்தில் சாஸ்திரிகளாலும் சாதுக்களாலும் உபந்நியசிப்பித்து யாருக்கு என்ன பலம்? ஜீவர்களென்ற மனமும் பரமார்த்தத்தில் தங்களுக்கில்லையே.

அப்படிப்பட்ட ஜீவர்களுக்குத் தாங்கள் செய்விக்கும் பிரமவித்தை உபந்நியாசம் தங்கள் மதக்கொள்கைப்படி மலடிமகனுக்கும் ஓவிய மங்கைக்கும் கட்டியபள்ளியறை ஆச்சன்றி வேறு யாது முடிந்தது.

பிரமமே ஜீவனைப்பிரவேசித்தது. அதுவே பிரமமாச்சு. அதற்காகத்தான் உபந்நியாசம் வேண்டுமென்பீர்களானால், இது இந்திரஜாலமே. சூரியனே பொந்துக்குள்ளே நுழைந்துவிட்டான். வெளியில்வர வழிதெரியவில்லை யென்று இரங்கி அதற்காக வெளிச்சங்காட்டுகிறவர்கள் சாஸ்திரிகளும் சாதுக்களுமாகக் காட்டுவிக்கிறவர்கள் தாங்களுமாயல்லவா முடிந்தீர்கள்.

சுருதி "அப்படிச்சொல்லியிருக்கின்றதே" யென்பீர்களாயின் அதற்குத் தாத்பரியமென்ன? சடத்தைப்பற்றியோ இங்கே விவகாரமில்லை, ஆதலால் சாஸ்திரிகள் சாதுக்கள் பிரமவித்தை உபந்நியாசத்தைக்கேட்டு உஜ்ஜீவித்துப் பிரமாநந்தத்தை அடைபவர்களாய் உலகத்திலுள்ளவர்கள் என்று தாங்கள் உத்தேசித்த பேர்வழிகள் சொரூபத்தில் யார்? யாரையாவது சொன்னீர்களானால் அவர்கள் பிரமத்துக்கு வேறாதல்வேண்டும். அப்பொழுது வஸ்து ஒன்றே இரண்டாவது இல்லையென்னும் தங்கள் ஏகாத்மவாதம் போய்விடும். ஏகாத்மவாதம் இருக்கவேண்டுமானால் பிரமத்துக்கு வேறாக பரமார்த்தத்தில் ஆளேயிருக்கப்படாது. ஆளில்லாதபரமார்த்தத்தைத் தாங்கள் யாருக்கு உபந்நியசிப்பிக்கிறது.

ஆகலால் தாங்கள் உபந்நியசிப்பிக்கும் உபந்நியாசமானது பலன் பெறுவாரில்லாத கோலாகலமேயன்றி வேறு யாது? அதில் யாருக்கு என்ன பலன்? இதற்கு விடைதந்தருளத் தங்களை மன்றாடிக் கேட்கிறேன்.

காரைத்திராவிடன்,

நாகரீகம்.

ஆதிகாலந்தொடங்கி, சில பத்துவருடங்கள் முன்வரை இந்தியாவின் புராதன நாகரீகம் என்னும் பெண் சீருஞ்சிறப்பு முடைத்தானவளாய் பாரதமக்களின் மனதிற்கிசைந்த பருவ மங்கையாய் விளங்கிக் குதூகலித்தாள். இந்தியர் அவளுடன் சேர்ந்திருந்தவரை இந்தியாவின் உயிரெனத்தக்க ஹிந்து மதம் வளர்ச்சியில் ஒரு சிறிதுங்குறைவின்றி, மானிடர்க்கியற்கையாயமையவேண்டிய சகல நலன்களையும் அளித்து வந்தது. இம்மட்டுமா? பிள்ளைகள் பெற்றோர்க்கடங்கி நடந்தனர். மாணவர்கள் ஆசாரியர் வார்த்தையைமீறி நடக்கமாட்டார்கள். பிராம்மணர்கள் தெய்வபக்தியிற்சிறந்து விளங்கினர். அதனால் மற்ற வகுப்பினர் பிராமணர்க்கு வந்தனை வழிபாடுகள் செய்வாராயினர். காலத்தில் மழை வருஷித்தது. ராஜத்துரோகிகளைக் காண்பதரிது. ஞானிகள்தான் சன்யாசத்தைப் பூண்டார்கள். போலிப்புலவர்கள் ஒருவருமிரார்.

ஆனால் புதுநாகரீகம் என்னும் பேதை மேற்கிலிருந்து உதயமானாள். இவள் உதயமானதே இயற்கைக்கு விரோதமான இடமென நம்நாட்டினர் உணர்ந்துகொண்டார்களில்லை. உலகத்திலெல்லா விதசக்திகளையுங்கொடுத்து ஜீவர்களுக்கும் தாவரங்கட்கும் இன்றி

யமையாதவன் ஆதவன் (சூரியன்) அவன் உதயமாவது கீழ்த்திசையிலன்றோ. பல் கதிர் ஞாயிற்றின் சில் கதிராவது தமது சரீரத்திற்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பவர் நோக்கிக்கொண்டிருப்பது கிழக்கையல்லவா? அஃதேபோல நாகரீகமெனும் பெண் ஆதியில் கிழக்கில்தான் உதயமானாள். அவளை மேற்கிற் சென்றாள் என்பதை நம்மவர் அறிந்தும் அறியாராய், (இந்தியா கஷ்டமடைய வேண்டிய காலப்பலனோ! கலியின். கொடுமையோ! என்னவோ) மேற்கில் நூதனமாய் உதயமானவளை ஆவலுடன் அணைய ஆசிக்கலானார்கள். அக்காலம்—நவ நாகரீகம் புகுந்த அக்காலம் தொடங்கி பின்னுக்கிருந்த குடுமி முன்னுக்கு வந்தது. பஞ்சகச்சம் பஞ்சாய்ப் பறந்தது. திரிகால ஸ்நானம் ஒரு காலத்திற்கு இழுவையாய்ப் போயிற்று. பழய சாதம் புறக்கடைக்குப் போயிற்று. காப்பியை குப்பிக்குடி என்று பழமொழி யொன்றுண்டாயிற்று. சதிபுருடரிருவரும் சங்கோசமின்றித் திரிந்துலாவச் செய்தது. அம்மம்ம! சொல்வதற்கே நாக் கூசுகின்றது. அவைகளெல்லாம் உண்டாயிற்று! வர்ணாச்சிரம தர்மத்தைத் தலைகீழாய் கவிழ்க்க பிரயத்தனம் செய்யப்படுகிறது.

சொல்வதென்றால் அடுக்கடுக்காய்ச் சொல்லலாம். உரைக்கிற் பெருகும். முடிவாகக் கூறுமிடத்து புது நாகரீகத்தை அநுசரித்தவர்களான நம்மவர்கள் தாங்கொணாக் கஷ்டத்திற்குள்ளானார்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டார்கள். சம்பாத்தியம் எவ்வளவு ரூபாயானாலும் செலவுக்குக் காணவில்லை. மீத்துவைப்ப தெங்ஙனம்!. தமிழ்த்தெய்வ மங்கையை கண்ணீருங் கம்பலையுமாய் நிற்கவைத்தார்கள். எவ்வளவுதான் நாம் உலக வியவகாரங்களை அறிந்துவிட்டாலும் ஆசாரங்களை—நமது முதியோர்கள் நமக்காக ஏற்படுத்திய சட்டதிட்டங்களைக் கடந்துவிடலாமா? புறக்கணிக்கலாமா? கூடாது கூடாது. இந்தியா முன்னேற்றமடைய வேண்டியது எத்தனை அவசியமோ அத்தனை நமது பழய கொள்கைகளை ஆதரிப்பது அவசியமாகிறது. அதுதான் நாம் மேல்நாட்டுக் கல்வி கற்றதின் பலனாகும்.

கே. எல். சிங்காரவேற்பிள்ளை,
முத்துப்பட்டணம்,
காரைக்குடி.

வித்யாபிரபை
அல்லது
விர்த்தாம்பிகை.

(முதலாவது அத்யாயம்)

அலைகடலாடை பூண்ட உலக மங்கையின் உன்னதஸ்தானமாய் நின்றொளிரும் சோழதேசத்தின்கண் பலவளங்களும் நிறைந்து பொன்னியுலவும் நன்னிலமாகிய "சுந்தரபுரம்" என்னும் நகரத்தை "சுந்தரேசன்" என்னும் ஓர் அரசனரசாண்டு வந்தான். அழகிய அணங்கினை நிகரும் அருந்ததியும் வணங்கும் கற்புடையளாகிய வித்யாபிரபை என்னும் மங்கையை மணம்பூண்டு வாழ்ந்து வருகையில், ஓர் நாள் புள்ளினங்கள் தனது இனிய குரலோசை காட்டி சப்திக்க, தென்காற்றுலவி சிந்தையை பரவசமாக்க, மாலை வேளையில் மலர்கள் குதூகலமுற்றுத் தனது மணங்களை வீச, வேளைக் கணைதொடுக்கும்வேளை ஈதென, முழுமதி நிலாவெறிப்ப; சந்திரகாந்த மேடையின்மேல், சுகமறியுஞ்சுந்தரபுருஷனாய், வாமதேவனைப் போல தன் மடியின்மேல் வித்யாபிரபையுடன் ஏகாந்தமாய் பேசிக்கொண்டிருக்கையில், அரசன் திடீரென திடுக்கிட்டு மனைக்கிழத்தியைநோக்கி ஏ, கண்மணி! துடியிடைமடமாதே! உலகத்தில் இறைவனால் மறைகள் உதித்து மனுமாந்தர்களால் நீதிநூற்களியற்றப்பட்டும், மகரிஷிகளால் ஆரிஷ இதிகாசபுராணாதிகள் சகலமும் ஏற்பட்டிருக்கின்றன என்பது முழுச்சத்தியம். அவைகள் நாளதுவரையில் நம் பெரியோர்களால் பண்டைமொழியெனக்கொண்டு பொய்க்காது ஒவ்வொன்றும் நடந்தேறி வருகின்றன.

அவைகளின் மூலமாயுணர்ந்த சோதிட சாஸ்திரத்தை யோசித்து, நல்லநாள், திதி, பட்சம், நக்ஷத்திர கரணங்கள் கூடிய சுபவோரையில், சதிபதிகள் கூடி தரிக்குங் கருவினுற்பத்தியாகி உதிக்கும் சிசு, அவனிமுழுதும் ஓர் கோலோச்சி நீடூழியாண்டுவருமென பெரியவர்களால் கேழ்விப் பட்டிருக்கிறேன். அதை யான் நினைத்தவுடனே, அறியாத்தனத்தால்; சரசத்திற்கு முயன்றோமே என்கிற பீதியானது மெத்த நடுக்கத்தை விளைவிக்கிறது.

மாதரசே!—என் மொழியை நம்பு—

மேற்கண்ட சாஸ்திரங்களின் உண்மை பிரகாசிக்கவன்றோ; சிசுக்கட்கு ஜாதகங்கணித்து, அச்சிசுவின் பலாபலத்தையும் ஆயுள் விருத்தியையும் அறிகிறோம். ஆகையால், நான் நாளையதினம் சோதிடர்களாலறிந்த சுபவேளையில், நாமிருவரும் குதூகலமாக சுகித்திருப்போம். நினக்கு அத்தினத்தை முன்னாடியே வள்ளுவர்களாலறிவிப்பேனென சுந்தரன் குறித்தவிடஞ் சேர்ந்தான்.

பதிவாக்கியத்தை நிதியாக்கொண்ட வித்யாபிரபையும் சம்மதித்துக்கொண்டு அந்தப்புரஞ் சேர்ந்தாள்.

மறுதினம் அரசனரியணையேறி சோதிடர்களாலுணர்ந்த சுபவேளையை மனைவிக்கறிவித்து (சுந்தரனுஞ்) சமயத்திற் கெதிர் பார்த்திருந்தான்.

திரு—ஸி, எஸ். சோமசுந்தரம்.

(இரண்டாம் அத்தியாயம் விசேஷ அனுபந்தத்தில் பார்க்க)

சமாசாரக் குறிப்புகள்.

பொன்:—ஒரு டன் களிமண்ணில் ஒரு ஷிலிங் பெருமான பொன்னிருக்கிறதாம். எல்லா சமுத்திரங்களிலுமுள்ள தண்ணீரில் 2900 கோடி பவுன் பொன் இருக்குமென மதிப்பிடுகிறார்கள்.

ஓர் ஆச்சரியம்:—மொகலாய சக்கரவர்த்திகளில் மிகப் புகழ் பெற்ற அக்பர் சக்கரவர்த்தியின் தாயார்தான் கர்ப்பமாயிருக்கையில் தன்னுடைய கால்விரலில் மசியினால் புஷ்பம் வரைந்துகொண்டார்களாம். அக்பர் பிறந்ததும் அவருடைய காலில் சிருஷ்டியிலேயே புஷ்பம் வரையப்பெற்றிருந்தனவாம்.

இங்கிலாந்தில்:—தினசரிப்பத்திரிகை (Daily mail) தினம் 1-க்கு பத்துலட்சம் பிரதிகளுக்கு மேல் செல்வாகிறதாம்.

டெயிலி ஸ்கெட்ச் என்ற பத்திரிகைக்கு ஏழு லட்சம் பிரதிகள் செல்வாகிறதாம்.

டெயிலிமிரர்:—பத்திரிகைக்கு எட்டு லட்சம் பிரதி செலவாகிறதாம்.

வாரப்பத்திரிகை:—டிட்பிட்ஸ் என்ற பத்திரிகை சுமார் 8லட்சம் பிரதிகள் செலவழிகின்றதாம்.

லண்டன் ஒபீனியன்:—என்ற பத்திரிகைக்கு 2 லட்சம் பிரதிகள் பிரதிகள் செலவழிகின்றதாம்.

இந்தியாவில்:—ஸ்டேட்ஸ்மேன் என்ற பத்திரிகை தினம் ஒன்றுக்கு 18000 பிரதிகள் செலவழிகின்றதாம்.

பாம்பெக்ரானிகல் ஹிந்து:—இரண்டு பத்திரிகைகளும் தினம் ஒன்றுக்கு 5000 பிரதிகள் செலவாகின்றதாம்.

THE MANORANJANI

மனோரஞ்சனி

விசேஷ அநுபந்தம்

SUPPLEMENT.

1918-ம் வருஷம் ஜனவரி மாதம்.

சீருலவு நான்மறைபாற் செப்பிடுநன் னீதியெல்லாந்
தாருலவு திண்புயத்தீர் தாமறிய—ஏருலவு
விந்தமலர் மேவீமனோ ரஞ்சனிவி சேஷவனு
பந்தமென வேவிடுத்தாள் பார்.

பத்திராதிபர்—திரு. ஸி. எஸ். சோமசுந்தரம்.

உ

ஓம்சிவமயம்.

சிறப்புரை.

அறிவிற்சிறந்த அன்பர்காள்!

நமது, தாய்நாட்டின் தாழ்மைநீக்கிப் பண்டைக்காலத்துப் பண்பெறக்கருதி இட்டவித்தானது; தற்காலம் நிலங்கீண்டெழுந்து முளைகிளம்பி: கொழுந்துவிட்டெழ ஆரம்பித்த இளந்தருவானது. பாரித்துவளர்ந்து, சத்வகுணங்களெனும் இலைகடர்ந்து; கைத்தொழில் வர்த்தகமென்னும் மலர்மலர்ந்து: அதன் பலனாகிய பழம்பழுத்து நமது நாட்டாரனைவர்களும் அநுபவிக்கும்படி செய்யும்பொருட்டு, மேற்படி இளந்தருவை வளர்ப்பதற்கு ஜீவாதாரமாகிய,

சகோதர சகோதரிகாள்!

உங்கள் மனமெனுங்காத்தால்; சமதிருஷ்டி, சகோதரத்வம் ஜீவகாருண்யம், பரோபகாரம், உற்சாகம், நீதி, ஞானம், அருள்; பாஷை, விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், பூஜோசக்தி, முதலாகிய விஷயங்களெனும் நீரை முகந்து: வார்த்து வளர்ப்பதற்காகத் தன்னுள் வைத்திருக்கும் கருவியெனும் பாத்திரமானது பத்திரிகைகளைத்தவிர வேறுசாதனங்களின்மையால், நமது, மனோரஞ்சனியெனும் மாதாந்த சஞ்சிகையே நம்மனோர் முன்னேற்றத்திற்குத்தகுந்த சாதனமெனக்கருதி; இக்காரிய ப்ரசத்தில் பொருளையும் தேகசிரமத்தையும் ஓர் பொருட்டாக நினையாது:[இம் மனோரஞ்சனியை] நடாத்துதற்கு முன்வந்த எனதாசிரியனுஞ் சிறந்த சகோதரராகிய ஸ்ரீமான் திரு. வி. எஸ். சோமசுந்தரம்பிள்ளையவர்கட்கும், கைம்மாறு வேண்டாத கார்முகிலென இச்சஞ்சிகைக்கு விஷயதானஞ்செய்துவரும் ஆப்தநண்பர்களாகிய யாழ்ப்பாணம், வ. மு. இரத்திநேசுரவையரவர்கட்கும், நாகை நீலலோசனி, பத்திராதிபராகிய ஜி. சதாசிவம்பிள்ளையவர்கட்கும், உமையாள்புரம், ஆர். சுவாமிநாதபிள்ளையவர்கட்கும், எனது மைத்துனர்காரைக்குடி, கே. எல். சிங்காரவேலுப்பிள்ளையவர்கட்கும் நாம், நன்றி பாராட்டுங் கடமையுடையவர்களாயிருக்கின்றோம்.

ஆகையால்! இம்மனோரஞ்சனியை எனதன்பார்ந்த சகோதரர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கரத்துள பொருட்பாலையூட்டி மதலையாகிய மனோரஞ்சனியின் மேனி பூரிப்படையும்படி செய்து, இச்சஞ்சிகையினு லடையக்கூடிய உலகநன்மை, ஜனோபகாரம், சௌபாக்கியம் என்னும் பலனைப்பெற்றுமகிழ்வெய்தி வாழ்வீர்களாக.

எம். பாலுசாமிநாயுடு,

மதுரை.

“நட்பும் ஸம்சயமும்”

நவரசம் ததும்பும் நற்றமிழ் நாவல்.

இதில் நெஞ்சு திடுக்கிடும்படியான அபூர்வ சம்பவங்கள் அநேகம் அடங்கியுள்ளன. விவேகானந்தனின் துப்பறியும் சாமார்த்தியம் மெச்சத்தகுந்ததாகும். நூலாசிரியர்தமது முழு சக்தியையும் இச்சிறந்த சிறியநாவலில் விளக்கியுள்ளார். தற்கால நாகரீகத்தை அனுசரித்த இக்கதாரத்னம் தமிழுலகத்தவரால் நன்கு ஆதரிக்கப்படத்தக்க தோன்றுகும். கதையின்போக்கு வாசகர்களின் மனத்தைக்கவரத்தக்கதாக விளங்குகின்றது. பாலக பாலகிகளும் அறிந்து கொள்ளுமாறு எளியநடையில் எழுதப்பட்டுள்ளது. பால்யராகவிருந்தும் உலகஅநுபவம் அதிகம் பெற்றவராக விளங்குகின்றாரென முதிர்ந்த தேசாபிமானியும் சுதேசமித்திரன் ஆசிரியருமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமத் ஜீ சுப்பிரமண்யஐயர் அவர்களால்நன்கு புகழ்ந்து பேசப்பெற்றவரும் “ரஞ்சிதசுந்தரி” தேவதாசன்” முதலிய நவீனகங்களின் கிரந்தகர்த்தரும் எமது ஆப்தநண்பருமான ஸ்ரீமான் K.L. சிங்காரவேலு பிள்ளையவர்களால் இச்சுவைபொருந்தியகதைஎழுதப்பெற்றுளதுகதாப்பிரியர்கள் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கதக்கது இதன் விலை அணா 10

இஃது அச்சிலிருந்து வெகுசீக்கிரம் வெளிவரும் குறிப்பிட்டசொற்பகாப்பிகளே அச்சிடுவதால் வேண்டுவோர் முன்னமேயே தெரிவித்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்,

“மனோரஞ்சனி”

காரைக்குடி

லீலாவிநோதன்.

(டி. எம். எஸ். சுந்தரராஜலு நாயுடு அவர்கள் எழுதியது)

தரணிமடந்தைக்கோர், ஒப்பற்ற திலகம்போன்று இலங்காநிற்குஞ் சம்புத்தீவிற்கிரிராஜ புரமென்றோர், அணிநகருளது. அந்நகரைச்சூழ்ந்து, மா, பலா, தென்னை. கமுகு, வாழை, முதலியவிருக்ஷஜாதிகள் வானுறவோங்கி, மாமுகில், தங்குதற்கிடமாய் நிற்பதுமன்றி, வேதஅந்தணர் விடுதியோர்பாலும், ஏதமில்வைசியரெழின்மனைகளோர்பாலும், சீதக்கழனியுழுவோரில்லமோர்பாலும், கோதில்ஆவணவீதியோர் பாலுஞ்சூழ, நீதிமன்னனரண்மனையதன் மத்தியில் அமையப்பெற்றும், அரும்புனலோடை, ஊருணி, கூபம், அதிகவளம் பெறுமந்நகர்தன்னை திருந்தியசெங்கோலங்கையிற் றாங்கிச்சீருயிரனைத்தும், அவனுருயிர்போலவும், செந்தமிழோரிடம், அன்புபொருந்தியும், சிம்மாசனமிருந்தரசுநடாத்துங் கோலாகலபூபதியென்றோர் கோமகனிருந்தான், அன்னோன்புரிந்த, அருந்தவத்தாலொரு, ஆண்மகவினைப்பெற்று' லீலாவினோதனெனப் பெயரிட்டு, அச்சிசுவை, அன்புடன்வளர்த்து,ஐந்துவயதினில், அருங்கலைத்தேர்ச்சியும், ஆயுதப்பயிற்சியும், புகட்டினன்.

லீலாவினோதன்:- அறிவின்முதிர்ச்சியும், அழகினுயர்ச்சியும் யௌவனப்பருவமும், அடைந்தனன். அதுகண்டு கோலாகலபூபதியிளஞ்சிங்கம்போன்ற தன்னரும்புதல்வன் லீலாவினோதனுக்கு மணஞ்செய்வித்து, இளவரசுப்பட்டமுங்கட்டிப் பார்த்தானந்திக்க வேண்டுமென்ற, எண்ணங்கொண்டு, தன்புத்திரன், இலக்ஷணத்திற்கேற்றகன்னிகையைப்பார்த்து வரவுத்தேசித்து, ஓவியத்துறையிற்கைதேர்ந்த வொருவனால் லீலாவினோதனைப் போலொருசித்திரம் வரைவித்து, அதைத்தன் மந்திரியாகிய மனோகரனிடங்கொடுத்துத் தன்புத்திரன், இலக்ஷணத்திற் கேற்றகன்னிகையைப்பார்த்து வரும்படியனுப்பினன்.

மனோகரன்:- மன்னவன்விடையும் வனப்புறும், இளவரசன் படமும்பெற்று, மகிழ்வொடுஞ்சிலசேனையும் பின்வர, வடதிசை நோக்கிச்சென்று, ஆங்குள்ள, அரசர் பெண்களைக்கண்டு அழகில்லாதவரெனவிண்டு' மேற்றிசையிற்றிரும்பி, மணிகண்டபுரஞ்சத்திரத்தில் வந்துதங்கினான்.

அச்சத்திரத்திற்குத்தெற்கே சற்றேறக்குறைய, ஐம்பதுகாதவழிக்கப்பால், மலராஜபுரமென்றோர் பாநகருளது. அந்நகரையாளும்கஜேந்திரபூபதியென்னும் மன்னன், தன்னரும்புதல்வி யாகியபிரமானந்தத்திற்கு வதுவைசெய்யக்கருதி, அவள் வனப்பிற்குகந்த வரனைத்தேடும்படி, அச்சிறுமியைப் போலொரு சித்திரமளித்துத் தன்மைச்சனாகிய மகிழ்பாலனை யனுப்பினன்.

மகிழ்பாலன்:—தன்பரிவாரத்துடன் பலதேசங்கள் சுற்றிப்பயனடையாது, மணிகண்டபுரஞ்சத்திரத்திற்குவந்துசேர்ந்தான். அவரவர்கள் அபிப்பிராயப்படி அமையாது அயர்ந்துகவலையுடன் வந்தகளைப்பினாலும், வெயிலினாலும், பசியதிகரிக்க, இருதிறத்தவர்களும் அவரவர்கள்ஜாகாக்களில் போஜனஞ்செய்யவாரம்பித்தனர்.

உண்டுகளைப் பாறியபின்னர், உபயமந்திரிகளுஞ் சந்தித்து, ஒருவரையொருவருசாவி ஓவியங்களையுற்று நோக்கி, ஒத்துளதெனப் புத்தியால்மதித்து ஆனந்தித்து உடனே புரப்பட்டு மகராஜபுரஞ்சென்று, மன்னவனாகிய கஜேந்திரபூபதியைக்கண்டு வணங்கித்தங்கள் படங்களிரண்டையும் கொடுத்து லீலாவினோதன் குணத்தையும், அவன்விருத்தாந்தங்களையுந் தெரிவித்தனர்.

கஜேந்திரபூபதி:—அப்படங்களைப்பார்த்துப் பரவசமடைந்து பலவாறு புகழ்ந்து, தன் புத்திரியின் சகியாகிய, குஞ்சரியை யழைத்து, குஞ்சரி! இப்படத்தைப்பார், என்ன அற்புதம்! என்னஅழகு! நம்புதல்வியாகிய பிர்மானந்தத்திற்குத் தகுந்த சுந்தரனிவனே யெனத் தோற்றுகின்றது. இன்னோன் கிரிராஜபுரத் தரசனாகிய கோலாகல பூபதியின் மைந்தன், லீலாவினோதனெனப் பெயர்புனையப்பெற்றோன் இத்தேசுயர்பூமான் படத்தை, நஞ்செல்வியாகிய

விட்டல் அண்டு கம்பெனி.

காஞ்சீவரம்.

நயமானஜவுளிகள்! சரசமானவிலைகள்!!

ஆர்டர் செய்துபாருங்கள்.

நகரத்தாரின் பெண்களுக்குத் தேவையான சேலைகள் 10, 11, 12 முழம் நீளம் 2¼ முழமகலமுள்ளது சிவப்புநிறத்தில் பல ரகங்களில் ரெட்டு கரையுள்ள சேலைகள் ரூ 4-8-0 முதல் 6 வரை.

சிற்றாடைகள் 6, 7, 8, 9 நீளமுள்ளது ரூ 2 முதல் ரூ 3 வரையில்.

பட்டுச்சேலைகள் 10 முழம் கோத்துவாங்கின பட்டு சேலைகள் ரூ 15 முதல் ரூ 20 வரை.

12 முழம் ,, ,, 20-25

ஈர்கம்பி வேஷ்டிகள் 60 நம்பர் நூலில் செய்யப்பட்டது.

8 முழம் நீளம் 3 முழமகலம் ஜோடி 1-க்கு ரூ 5—8—0
7 ,, ,, ,, 5—0—0
6 ,, ,, ,, 4—8—0
ஆரணி மேல்வேஷ்டிகள் 6 முழம் ஜோடி 1-க்கு ரூ 4—0—0
ஆரணி துண்டுகள் 4 முழம் 4 கோண்ட மடி 1-க்கு 4—8—0
நாட்டுத்துண்டுகள் 4 முழம் 4 கோண்ட மடி 1-க்கு 3—8—0 முதல் 4—8—0 வரை.
3 முழம் ,, 2—0—0 ,, 3—0—0

இடுப்பில் கட்டும் பட்டு பச்சாக்கண் 6, 7 முழம் நீளம் 3 அங்குலமகலமுள்ளது ரூ 3 முதல் ரூ 4 வரை.

நூல் சேலைகள் பல ரகங்களில் 16 முழம் நீளம் ரூ 7 முதல் ரூ 12 வரையில்.

மட்டம் 14 முழம் ரூ 2—12—0 முதல் ரூ 5 வரையில்

பீட்டு சேலைகள் ரூ 25 முதல் ரூபா 200 வரை.

விபரமுள்ள கியாட்லாக் இனாம்.

Vittal & Co. Kanjeeveram (S. India)

Robinia Oil

சந்தோஷ கூட்டங்களில் உமக்கு சந்தோஷத்தைக் கொடுப்பது எது?

ஓடோமோகினி.

அதை மறவாதேயுங்கள்

இந்த செண்டு மனதை ரமிக்கச்செய்யும். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்

ரோபினியா ஆயில், இது ஸ்திரீகளின் கூந்தலுக்கும். முகத்திற்கு அழகைத் தருகின்றது.

ஓடோமோகினி டிபோ, 41-நே தங்கசாலை வீதி மதராஸ்.

ஓடோமோகினி ½ அவுன்ஸ்	ரூ.	2—0—0
,, 1 டிராம்	ரூ.	0-12—0
,, ½ டிராம்	ரூ	0—8—0
வாசனை கார்டு டஜன்	ரூ.	0-12—0
ரோபினியா ஆயில் சீசா	ரூ.	1—8—0

பிர்மானந்தத்திற்குங் காண்பித்து, அன்னவ ளபிப்பிராயமறிந்துவாவென, அப்படத்தைக் குஞ்சரிகையிற் கொடுத்தனுப்பினன்.

குஞ்சரி:—அவ்வரசன் படத்தைக் கொண்டுபோய்க் கன்னிகாமாடத்தில், இன்னிசைபாடும், இராஜபுத்திரியாகிய பிர்மானந்தத்தினிடங் கொடுத்து, இறைவன் செப்பிய வனைத்துஞ் சவிஸ்தாரமாய்த் தெரிவித்தனள்.

பிர்மானந்தம்:— அச்சித்திரப்படத்தைச் செங்கையில் வாங்கிச் சற்றுநோக்கி, அடிசகி! என் பிதா இப்படத்திலுள்ள வுருவம் போன்ற லீலாவினோதனை யெனக்குச் சரியான நாயகனென்று எவ்விதந் தீர்மானித்தனர். இவன் எழிலற்ற முகத்தை நோக்கின் என் மனஞ் செம்மையுறுமோ கொண்டு செல் என அப்படத்தைக்குஞ்சரிகையிற் கொடுத்தனுப்பி விட்டனள்.

குஞ்சரி:—தன் கையிற்றாங்கிய படத்தைக் கொலுவீற்றிருந்த அரசனிடங் கொடுத்துப் பிர்மானந்தத்தின் அபிப்பிராயத்தை மொழிந்து அனுமதி பெற்றுச் சென்றனள்.

கஜேந்திரபூபதி:—தன் புதல்விக்கு லீலாவினோதனைத் தவிர வேறு நாயகன் கிடைப்பது அரிதென்று தீர்மானித்தும் எவ்விதம் விவாகம் முடியுமோவென்ற கவலை மேலிட்டுந் தன்னுடனிருந்த மனோகரனிடம் லீலாவினோதன் படத்தைக் கொடுத்தனுப்பினன்.

மனோகரன்:—அதனைப் பெற்றுக்கொண்டுதான் கோரிவந்தகாரியம் நிறைவேறாமற் போனதை நினைந்து வருத்தமுற்று, மீண்டுந் தன்னகரையடைந்து கோலாகல பூபதியைக்கண்டு வணங்கித்தான் சென்ற அனேக தேச விருத்தாந்தங்களையும் மணிகண்டபுரச் சத்திரத்தில் மகிழ்பாலனைச் சந்தித்தது முதல் கஜேந்திர பூபதியின் புத்திரியாகிய பிர்மானந்தத்தின் வெறுப்பான மொழிகளால் அந்நகரைவிட்டு நீங்கியவரை நடந்த சம்பவங்களையும் அம்மாதின் சிறந்த ரூபலாவண்யங்களையும் சவிஸ்திரமாய்த் தெரிவித்தனன்.

லீலாவினோதன்:—மனோகரன் தன் பிதாவினிடஞ் சொன்ன மொழிகளைக் கேட்டுக் கோபங்கொண்டு அப் பிர்மானந்த மென்னும் மாதின் கர்வத்தை யடக்கி அன்னவளையே விவாகஞ் செய்யக் கருதி

"எந்த னழகினை யேதமென வேயுரைத்த
அந்தமிலாப் பேதை யணிநகர்போய்—விந்தை
மணமாலை சூட்டி மமதை யடக்காமற்
கணமேனுந் தூங்காதென் கண்."

எனமொழிந்து பிதா, மந்திரி, பிரஜைகள் முதலியோர் தடுத்துங் கேட்காது மனோகரன் சொன்ன மகராஜபுரத்தை நோக்கிப் புறப்பட்டான். அவ்விதம் புறப்படுங்கால் அவன் கோரிக்கை முற்றக் "கூரையிற்காக" வென்றபடி வாயஸம் வலமாயிற்று; அதினின்றும் பத்தடிதூரம்நடப்பதற்குள் பொற்கருடன் தொனியுடனிடமாயிற்று; உடனே வானோக்கிய கெருடனையுந் தரிசனஞ் செய்துகொண்டு அப்பாற் செல்லுகையிற் பாட்டையினிருமருங்கிலுமுள்ள சோலைகளின், புன்னை, மாதுளை, கொய்யா ஆல் அரசு, முதலியபல விருக்ஷங்களினின்றுங் கட்டுக்காடையும் வலியனு மிடமாயின. நாரையும் வலமாயிற்று, இவ்வித சுபசகுனங்களைக்கண்டுதான் கோரிப்பிரயாணமானகாரியம் அவசியம்கைகூடு மெனத்தீர்மானித்துத் தன்னிஷ்டதேவதையைத் தோத்திரஞ் செய்துகொண்டே செல்லாநின்றான்.

கோலாகலபூபதி:—அதைப் பார்த்து அருந்துயரடையுங்கால் "ஹே! மன்னா, நின்மைந்தனைப்பற்றி வருந்துத லொழிக, அன்னவன் கோரிய அனைத்தையும் பெற்று அரசர்க்கரசனாய் அரசுப்புரிகுவன்" என அசரீரி மொழியக் கேட்டு அகமகிழ்வானாயினன்.

2-வது அத்தியாயம்.

இவ்வித சுபசகுனங்களுடன் வழிநோக்கிச் செல்கின்ற லீலாவினோதன் ஆச்சரியப்படும்படி ஓரசரீரிவாக்குமுண்டாயிற்று. அது யாதெனில், "ஹே! வத்ஸா, லீலாவினோதா! நீ, ஆதவனைக்கருத்திலிருத்திப்பிரார்த்தித்து, முல்லைவனத்திற்குச் சென்று, ஆங்குள்ள சாந்தமுனியைப் பணிந்து, அன்னவரால், தெய்வலோகஸ்திரீகளைக்கண்டு, அவர்களளிக்குங் கணையாழிகளைக் கைக்கொண்டு, மேலு

Electric Solution.

அமெரிக்காவினுடைய விசேஷக் கண்டுபிடிப்பு

எலக்ட்ரிக் ஸொல்யூஷன்

இம்மருந்து

அடியிற் குறித்த வியாதிகளைத்தீர்க்கும்.

SOLE
AGENT
DR. D.D HAZR
FATEHPU
GARDEN REACH PS.

பொதுப் பலஹீனம் ஆண்மைக் குறைவு நரம்புத்தளர்ச்சி, முடக்குவாதம், மலச்சிக்கல், பசியின்மை, மூலம், பாரிசவாய்வு, வீரியநஷ்டம்: நீரழிவு, மின்சார விசையை இம்மருந்து சரீரத்தில் சரியாகப் பரப்புந்தன்மையுடையது. அவ்விசை அதிகமாகுமாயின் மனுஷ்யவுடலை எல்லாவித வியாதிகளுக்கும் உட்படுத்தி விடுகிறது.

அலோபதிக் ஹோமியோபதிக், ஹகீமி அல்லது ஆயுர்வேதிய மருந்துகள் தவறிப்போகுமிடத்தில் இது மிகவும் தீர்க்கமாக வேலை செய்கிறது.

விலை:—ஒரு மாதத்திற்குப் போதுமான புட்டி1க்குரூபா 1. மூன்று புட்டிகள் வரையில் தபாற்கூலி அணா 6 வெளிநாடுகளுக்கு தபாற்கட்டணம்உள்பட புட்டி1க்கு ரூ 2

Dr. D. D. HAZAR.
Fatehpur, Garden Reach P. O. CALCUTTA.

The Three Miracles

மூன்று அற்புதங்கள்.

மிராகில்

இது எல்லாவிதமான மேகக்கட்டி, இரத்தக்கட்டி, ராஜப்பிளவை முதலிய எவ்விதமான கட்டி, ரணங்களை ஒரே மூச்சிலேயே சௌக்கியப் படுத்தக்கூடியது. உத்தரவாதம். 1–டின் ரூபாய் 1.

சந்தன ஷர்பத்

இது தேகத்திலுண்டான மேக வெட்டை, மேககாரிகம், பசியில்லாமை, அஜீரணம், முதலியவைகளைப் போக்கும். இதைத்தாகசாந்தியாக உபயோகித்துக்கொண்டுவந்தால் அநேகநாளாய் தேகத்தில் ஊறினவெட்டையைக்கண்டித்து தேகத்தை பலப்படுத்தும். ஒரு புட்டியின் விலை ரூபா 1–4–0.

டோன்-டோன்

என்பது நீடித்த ஆனந்தத்தைத் தரக்கூடியது. சாப்பிட்ட அன்றே இதன் குணத்தைக் காணலாம். இதுவல்லாமலும் இரத்தத்தை விர்த்தி செய்து உடைந்த தாதுவை பலப்படுத்தும். ஒரு புட்டி மாத்திரை ரூபாய் 2–0–0

லாகூர் ட்ரக் ஸ்டோர்,
சீமை மருந்து வியாபாரம்,
106, மிண்ட்ஸ்ட்ரீட், மதராஸ்.

டம்முனிவ ரனுக்கிரகத்தினால், சந்திராயுதமும், குண்டலமும், கனசுகங்கணமும் பெற்று, அப்பால் மகாராஜபுரத்திற் கேகுவையாகில், உனதெண்ண மெளிதிலீடேறும் 'என்றும், உற்பவித்தவார்த்தைகளைக்கேட்டு யாவரிவ்விதம் மொழிந்தனரென, ஆராய்ந்துபார்த்தான். ஒருவரையுங் காணோம்பின்பு சற்றாலோசித்தான் அசரீரிவசன மெனப்பூசித்தான். அன்புமிகுந்தப்பால் நடந்தான், அதிகதூரங்கடந்தான்,

அடவியும், மலையும், ஆற்றையுங்கண்டான். அதுவே முல்லைவனமெனக் கொண்டான், ஆங்கு சாந்தமுனிவரைச்சாலவுந் தேடினான். சடுதியிலிங்குமங்கு மோடினான். அப்பால் தன்னெதிரிலோர் பர்னகசாலை யிருப்பதைப்பார்த்து, அதனருகினிற் சென்று, உற்றுநோக்கி, மேனிமுழுதும் விபூதியே தரித்தும், சங்கரனைப் போற்சடை முடியிலங்கவும், சமாதிபுரியுஞ் சாந்தமுனியைக்கண்டு, சந்தோஷங்கொண்டு, சாலவணக்கத்துட னெதிரில்நின்று கொண்டிருந்தனன்.

சாந்தமுனி:—சிறிது நேரஞ்சென்று, நிஷ்டை தெளிந்து, தினகரனைதெரிசித்து தன்னெதிரில்நின்ற லீலாவினோதனைப்பார்த்து "நீயார்! உன்னைப்பார்த்தால், ராஜபுத்திரனாகத் தோற்றுகின்றதே, மனிதசஞ்சாரமில்லாத, இந்தமுல்லை வனத்திற்கு எதையுத்தேசித்துவந்தா" யெனவினவினர்,

லீலாவினோதன்—:

"வேதநெறியுணர் வித்தகாசரணம்- ஏதமில்மாதவமியற்றுவோய்சரணம்,
பூதலம்போற்றும்புனிதனேசரணம்-காதலித்தெந்தனைக்காப்பதுன் கடனே.
ஆதிபராபரமே, அருமறையுணர்ந்ததிரமே-எனையாதரிப்பதுன் பரமே."

அகண்டமார்பினில், முப்புரிநூல்பூண்ட ஒப்பிலா எனதையனே, எனையாட் கொள்ளுங்குருவாகிய மெய்யனே, தவமிகுதப்பனே, யான் இராஜபுத்திர னென்பதுவாஸ்தவமே யானே, எனதன்னையாகிய வசரீரியின் வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு, மகாராஜபுரம் கஜேந்திரபூபதியின் புதல்வி பிர்மானந்தங் கொண்ட கெர்வத்தை யடக்கி, அன்னவளைத் தெய்வலோகவாசிகளால் விவாகஞ்செய்யக்கருதி, இங்குற்றேன், தெரிசனம் பெற்றேன், எனை இரக்ஷித்தல் வேண்டுமெனப் புகன்றான்

தொடரும்.

D. M. S. சுந்தரராஜலுநாயுடு. காரைக்குடி

Wonderful Discovery

ஆச்சரியப்படும்படியான—அதிசயங்கள்!
எலக்ட்ரிஸிடி என்னதான் செய்யாது?

முடவர்களை நடக்கச்செய்யவும், குருடர்களைப் பார்க்கச்செய்யவும், செவிடர்களைக் கேட்கச்செய்யவும், இன்னும் ஆயிரக்கணக்கான அதிசயங்களை இக்காலத்தில் ஆச்சரியப்படும்படியான வைகளெல்லாம் செய்யவல்லது.

கால்வாஸ்என்னும் எலக்டரிக் மோதிரமானது ரஸாயன முறைப்படி செய்திருப்பதுடன் பார்வைக்கு அழகாகவும் அணிவதற்கு பூஷணமாகவும், சரீரத்தில் நோய்களைப்பரவச்செய்யும் விஷக்கிருமிகளை தொலைக்கச்செய்யவும் இன்னும் அநேகவிதமான அதிசயங்களைச் செய்கின்றது, இம்மோதிரம்சுமார் 2000000 க்கு மேல் நாகரீக வுலகத்தில் அணியப்பெற்றிருக்கிறது. இது அடியிற்கண்டவியாதிகளைத்தீர்க்கும். பொருப்பலஹீனம், ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சி முடக்குவாதம், அக்னிமந்தம், மலச்சிக்கல், பசியின்மை, மூலம், பாரிசவாய்வு, வீரியநஷ்டம், நீரழிவுமுதலியனவாம். மின்சாரவிசையை இது சரீரத்தில் சரியாகப் பரவச்செய்கிறது.

மோதிரம் 1க்கு ரூபா 1—0—0 டஜன் ரூபா 12—0—0 தபாற்கூலி வேறு உபயோகிக்கும் முறை பார்சலுடன் அனுப்பிக்கப்படும்.

இனும் விபரம், 1 டஜன் மோதிரம் ஒரேசமயத்தில் வாங்குபவருக்கு ஒபன்பேஸ், சாவியில்லா நிக்கல்வெள்ளிக் கைகெடிகாரம் இனமாய்க் கொடுக்கப்படும்.

சாவியில்லா எலக்ட்ரோப்ளேடட் ஹண்டிங்வாச்
3 வருஷத்திற்கு உத்திரவாதம்.

இந்தக் கைகெடிகாரமானது அமெரிக்கன் 18 காரட்டு தங்கக் கை கெடிகாரத்தைப் போன்றது. மதிப்பிற்குரூபாய் 200-க்கு மேலாகவே அனுமானிக்கப்படும். 16 ரீடியம்ஸைசில் உள்ள கைகெடிகாரம் ரூபா 9-12-0 நிக்கல் வெள்ளியிலுள்ளது 3-12-0 பாக்கிங்கும் தபாற்கூலியும் வேறு வேண்டுவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாய் இங்கிலீஷில் எழுதவேண்டும்.

R. L. BURMAN & Co.,
371, (J) Upper Chitpoor Road,
CALCUTTA.

Look ✻ Balajee & Co. ✻ Look

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

பட்டுலேஞ்சுகள்.

வெண்பட்டில் கோள்ளேகால் லேஞ்சு மாதிரி உடல் சாதாவாகவும் கறுப்பு சிகப்புக் கரைகளில் 5½ முழம் நீளம், 2½ முழம் அகலம் லேஞ்சு ஒன்றுக்கு ருபா. 7-8-0 முதல் ரூ 10—0—0

பால்காயம் கலப்பற்றது 12 தோலாகோண்ட டப்பி
1-க்கு ரூ 1—0—0

கலப்பற்ற முதல்தரம் கஸ்தூரி ஒரு ருபா இடைகோண்ட
தோலா ஒன்றுக்கு ரூ 40—0—0

நயம் குங்குமப்பூ தோலா ஒன்றுக்கு ரூ. 2—0—0

"பித்தளை விளையாட்டுப் பாத்திரங்கள்" 32 வித சாமான்கள் அடங்கியது.

1 நெ. பெரிய செட் 1-க்கு	4-0-0
2 நெ. மத்திய செட்	2-8-0
3. நெ. சிறு செட்	2-0-0

அன்ன பூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனம்.
உடனே எழுதுங்கள்.

BALAJEE & CO, Silk Merchants,
Benares City.

When ordering Please mention this Magazine

அச்சிலிருக்கிறது! அச்சிலிருக்கிறது!

சீக்கிரம் வெளிவரும் **முந்துங்கள்** சீக்கிரம் வெளிவரும்

"ரஞ்சித சுந்தரி"

இஃது.

காரைக்குடி ஸ்ரீமான் கே. எல். சிங்காரவேலுபிள்ளையவர்களாலும் மனோரஞ்சனி பத்திராசிரியர் திரு ஸி. எஸ். சோமசுந்தரம் பிள்ளையவர்களாலும் இயற்றப்பெற்றதோர் இனிய செந்தமிழ் நாவல்.

இந்நாவலில் {
- உண்மைக் காதல்
- காதலின் வெற்றி
- நட்பின் பெருமை
- கூடா வொழுக்கம்
- ஸ்திரீ சகாயம்

முதலிய விஷயங்களைப்பற்றி யாவரும் எளிதில் படித்துணருமாறு இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ளது. படித்து முடிக்கும்வரை கீழேவைக்க மனம் வாராது.

இதில் ஒரு விசேஷம்!

இந்நாலின் முற்பகுதியை ஆக்கினவர் ஸ்ரீமான் கே. எல். சிங்காரவேலுபிள்ளையவர்கள். முற்பகுதி இயற்றியவரின் நோக்கத்தையே தழுவி பிற்பகுதியை ஆக்கியவர் திரு. ஸி. எஸ். சோமசுந்தரம்பிள்ளையாவர். கதையின்போக்கு சிறிதும் மாறுபடாது ஒருவராலேயே முடிவுவரை எழுதப்பட்டிருப்பது போன்று விளங்குவது ஒரு விசேஷமல்லவா?

இக்கதாரத்னம் சிறந்த மதிப்புரையுடன் கூடியது.

இதன் விலை ருபா 0—12—0
மனோரஞ்சனி சந்தாதார்கட்கு ருபா 0—10—0

"சரஸ்வதி" டிரேடிங் கம்பெனி,
புக்ஸெலர்ஸ் & ஜெனரல் மர்ச்சென்ட்ஸ், காரைக்குடி.

வித்யாபிரபை
அல்லது
விர்த்தாம்பிகை.

* * *

ஆருயிரானன் அனுகுந்தினமறிந்து, வித்யாபிரபை பணியணிந்து பத்தாவரவிற்கெதிர்பார்த்திருந்தாள். சுந்தரனோ வரவில்லை கிலேசித்து......துக்கத்துடன் நம்மாலாவதென்னே? ஒன்றுமில்லை. இறைவன் கட்டளைப்படி நடக்குமென பலவாறு சிந்தித்துக்கொண்டிருக்குந் தருணத்தில், சுபவோரை என சோதிடர்களால் குறித்த நாழிகை கடந்தவுடன், சுந்தரன் அதிக வேகத்துடன் மனைவி பாலணுகி; ஒண்ணுதலுத்தமியே! மன்னித்தல் வேண்டும். அத்யாவசியகமான விஷயத்தில் கவலையாயகலப் போதின்றியிருந்தேன். நேசர்கட்கு வேண்டியகாலத்தில் யானில்லாவிடின், மனையாட்டி மனைக்கேகினர், சுந்தரனுக்கு நேசர்கள் பேரில் விசுவாசமில்லையென தூற்றுவார்கள். நீ இவைகளை அறியாதனவோ? எப்படியாயினுமாகுக. இதுவே சுபவேளை-நின்னையணைவேனென அன்புடன் கூடி அமர்ந்திருந்தார்கள். வித்யாபிரபைக்குக் கருத்தரித்து பத்துமதியுங் கடந்து பாலனைப் பருதியையொப்ப பயந்தாள் சுந்தரன் தானங்கள் வழங்கி, சோதிடர்களை அழைத்துக் குமாரன் ஜாதகத்தைக் கணித்துப் பலன்களைப் பகரும்படி ஆக்ஞாபித்தான். சோதிடர்கள் சுந்தரனை வணங்கி நின்று கண்ணீர் சொரிந்தார்கள். சுந்தரன் என்னை என வினவ; ஏ சுந்தரீஸ்வரா! என் செய்வோம். தாங்கள் அச்சிசுவின் வதனத்தை நோக்குவீரேல், தாம் காலனூர் புகுவது திண்ணம். தங்களுக்குக் காலனாய் ஜனித்தது. உடனே அச்சிசுவை இந்நகருக்கு வெளியில் கொண்டுபோய் சேதப்படுத்தினால் தப்புவீர்கள் அன்றேல், சுந்தர! நின்னுயிர் போவது சத்தியம் என்றார்கள். சுந்தரன் நேசனை நோக்க, நேசன் சந்தேகித்தவனாய் அன்ப! இச் சோதிடத்தில் எனக்குறுதியில்லை. இச்சிசுவை நீர் எப்படியாவது வதைப்பீரேல், இந்நகர் மண்மாரியா லழியுமென்பது நிச்சயம். அன்றி சிசுப்பாதகம் வந்து அமையும். என்று மொழிந்தான். சுந்தரன் கேளாது ஆட்களை அழைத்து; சிசுவை வெட்டிவிட உத்தரவளித்தான். கொலைஞர்கள் அந்தப்புரத் தாசியிடத்தடைந்து, அரசன் கட்டளையைக் கூறி, சிசுவைக் கேட்டார்கள்.

வித்யாபிரபை:—எதும் பதிலுரையாமல் சிசுவைக்கொடுக்க கொலைஞர் சிசுவைக் கரத்தேந்தி, கொலைகளஞ் செல்லுகையில் நகரார் கண்டு துக்கித்தழுதார்கள். நகரங் கடந்து அடர்ந்த கானகத்தையுற்றுச், சிசுவைக்கொலைசெயக் கூசி சாகைகளைப் பரப்பிச் சிசுவைக் கிடத்திச் சென்றார்கள்.

அச்சிசுவானது தன்னை யாதரிக்கும்படி; தயாபர மூர்த்தியைச் சிந்தித்து அழுதுகொண்டிருந்தது. அக்காட்டில் வசித்துக்கொண்டிருந்த வேடர் தலைவனான "வேலன்" என்பவன் அச்சிசுவின் ஒளியைக் கேட்டு வந்தெடுத்துச் சென்று, தன் மனைவியிடத்திற் கொடுத்து காதலி! இவ்வனஞ் செய்த புண்ணியமோ? நாம் செய்த தர்மமோ? நம்முன்னோர்களிழைத்த தவமோ? கோடிசூர்ய பிரகாசமான சிசுவகப்பட்டது. இராஜாக்கள் வீட்டில் கூட இவ்வளவு அழகான மதலை யுதிப்பது துர்லபம்! எனச் சொல்லி, குழந்தையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

குழந்தைக்கு வயது ஐந்தானவுடன் அக்காட்டிற் பர்ணசாலையில் வசித்துக்கொண்டிருந்த ஓர் தபசியிடத்தில் ஒப்புவித்து, சகல கலைகளையுங் கற்பிக்கச்செய்தான் அக்குழந்தையை ஜெயவீர கேசரி என அழைத்துவந்தார்கள். வயது பதினைந்தடைந்து, வில் வேட்டையில் சமர்த்தனாகி, வேட்டை புரிந்து வரு நாளையில், ஓர் நாள் அடுத்த கானகத்தில் சென்று வேட்டையாடுவானானான்.

இருண்டும் மரங்களடர்ந்தும் கண்டவர் மனந் திகிலடைய, கிளைகளொன்றோடொன்று பின்னிக்கொண்டு, தழை, பூ, பிஞ்சு, காய், கனிகள் மூடிக்கொண்டு, கூரையைப்போல் மேயப்பட்டு, காட்டின் விலங்குகளுக்காக இறைவனாலமைந்த, தட்முடை ஸ்தானம் போலவுமிருப்ப; ஓர் பாகத்தில் ஐந்தாலமரங்கள் தழைத்துப் பெரிய அரண்போன்று இருக்கவும், அவ்வாலமரத்தின் விழுதுகள் காலத்தூன்றி செறிந்தும், பிரிந்தும் இருப்பதானது, அரணிலமைத்திருக்கும் கூடம், அறை, தாழ்வாரம், முற்றம்போன்று தனித்தனிப் பொதுவிடங்களேற்பட்டிருந்தது.

திரு. ஸி. எஸ். சோமசுந்தரம்.

(தொடரும்.)

ஆர். ஜி. ஆர்ஸ். உலகப் பிரசித்திபெற்ற,

இந்தியன் கொசுநாசகாரி.

நமது இந்தியன் கொசுநாசகாரி என்கிற பவுடர் இரவில் நல்ல நித்திரையை உண்டாக்கவும், அபாயகரமான விஷக்கிருமிகளைத்தொலைக்கச்செய்யவும், மனதிற்கு வாசனை மனோகரமாய்த் தரத்தக்கனவாயும் சேர்க்கை மருந்துகள் விஷமற்றனவாயும் விலை மிகவும் சரசமாயும் எல்லோராலும் புகழப்பெற்றதாயும் இருக்கிறது.

விலை டப்பி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

உபயோகமுள்ள புஸ்தகங்கள்.

கணக்குப் பதிவு நூல் 3—0—0 ஆயில் எஞ்சின் 1—8—0

கணக்குப் பரிசோதனை 1—0—0

ஒற்றன் ஓர் இனிமையானதுப்பறியும் தமிழ் நாவல் 0—10—0

வியாபாரத்தை விருத்திக்குக் கொண்டுவர முயலுவோருக்கும் சுயேச்சையாய் வாழவிரும்புவோருக்கும் மேல்கண்ட புஸ்தகங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. சில புஸ்தகங்களே இருக்கின்றன முந்துங்கள் உங்கள் ஆர்டரை இன்றைக்கே எழுதுங்கள்;

ஆர். கோபால் ராவ், 3 காரைக்குடி.

ஸ்ரீலோகமாதா.

இதன் பெயருக்கேற்ற ஸ்தானத்திலிருந்து நம் நாட்டின்
மக்களுக்குறிய பல அரிய விஷயங்களை புகட்டும்

ஓர் உயர்தர மாதாந்தச் சஞ்சிகை.

நாளது பிங்களவருடம் தை-௴ முதல் வெளிவந்துலாவும் இதற்கு சில விற்பன்ன சீலர்கள் தமிழ் நடையில்லாத பல கிரந்தங்களை பாமரர் முதலிய சகலரும் அறியத்தக்கவண்ணம் எளிய நடையி லெழுதுவதாய் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இனி உங்களுக்கு பலபல நூல்களையும் சஞ்சிகைகளையும் பார்க்கவேண்டிய அவசியமும் சிரமமும் ஏற்படாது. அப்படிக்கான எல்லா விஷயங்களும் இதில் வெளியாகுமென்று நாம் சொல்வது மிகையாகும். இதனை ஆதியிலிருந்தே பார்த்துவர வேண்டுமென்று ஒரு விஷயத்தை மட்டும் பலமுறையும் சொல்லுவோம் ஆகையால் உங்களுக்குற்ற மாதாவெனக்கருதி இப்பொழுதே உங்கள் விலாசங்களை தெரிவித்து ஆர்டர் பதிவுசெய்து கொள்ளுங்கள் இதன் 6 மாசத்திய சந்தா ரூ 0—12—0 தான்.

இ. எஸ். சிவராமலிங்கம் பிள்ளை, புனலூர்.

---

22 JUN

உ

பரமபதி துணை.

மனோரஞ்சனி.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து."— திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.

பத்திராதிபர்:—திரு. ஸி. எஸ். சோமசுந்தரம்.

தொகுதி 1 — பிங்கள-௵ தை-௴ 1918-௵ பிப்ரவரி-௴ — பகுதி 7

கடவுள் வணக்கம்.

கண்ணோரா யிரத்தானுங் கதிராழிப் படையானுந்
தண்ணாரும் பூங்கமலத் தவிசுறையும் பிரமாவும்
பெண்ணொருந திருமேனிப் பெருமானுங் கைகூப்பி
யுண்ணாடும் பரம்பொருளை யுண்ணாடி வணங்குவாம்.

* * *

மாவிலங்கை பலாசுதாதகி வன்னிமா மருதங்
கூவிளந்த ளவம்பலா மலர்கொன்றை புன்னைகுரா
நாவணீ ழலின்மேவி வாழ்தரு நான்மறைப்பொருளான்
மூவர்பாடிய தேவநாயக முதல்வனைத் தொழுவாம்.

* * *

பண்ணுலவு மொழிப்பூவை யிமயப்பாவை
பாகத்தா னாகத்தாபரணம் பூண்டான்
விண்ணொடு மண்ணொடும் பாதலமும்போற்றும்
விரைமலர்ச் செஞ்சேவடியான் வேணிநாத
னெண்ணுமிரு வினையுடன் மும்மலமுநீக்கி
யிகபரந்தந் தெனையாளு மீசனேசன்
கண்ணுதலா னடியரையஞ்சலி செயாக்கை
கழியாக்கை யொழியாக்கை காக்கைதானே.

மனோரஞ்சனி..

பிங்கள-௵ தை-௴

"நல்லிணக்கமல்ல தல்லற படுத்தும்."

ஔவை பிராட்டியார் மொழிந்த இவ்வாக்கியம் அனைவரும் அறிந்ததே! கூடாநட்பே கொடுந்துன்பத்திற்கு பிறப்பிடம் மனத்திலொன்றும், வாக்கிலொன்றுமாக எண்ணிப் பேசும் நண்பர்களே,—கூடாநட்பினராவர். தமது காரியம் முடியும்வரை கழுதையின் காலைப்பிடித்தாலும் இழிவாகாதென்று எக்காலத்தும் சுயநலமே எண்ணி எண்ணி ஆகாசக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் புண்யவான்களே கூடாநட்பினர். செய்யப்படாத கெட்டகாரியத்தைச் செய்தாயினும் தனது பாழுங் கும்பியை நிறைத்துக்கொள்ள நினைப்பவர்களும், மால்கொண்டலையும் மைந்தர்களை மாயவலை வீசி மயக்கி இழுக்கும் மட்டி மாதர்களும் அவர்களில்லங்கள் தோறும் சென்று பற்களைத் திறந்து பசுந்தாய்மொழி பகர்ந்து; பட்டாங்கடிக்கும் பரம சாதுக்களுமே கூடாநட்பினராவர்.

இப் பெரிய கனவான்களின் சேர்க்கையே மானிடவாழ்க்கையைப் பாழ்படுத்துவன. கண்ணுட் கருமணியே போன்ற திவ்ய மங்கள சொரூபியான பகவானை சிறிது காலமேனும் தொழற்குவிடாது; சனியனைப் போலத் தொடர்ந்து திரிந்து, பாடுபட்டுத்தேடிய அருந்தனத்தையெல்லாம் கொள்ளைகொண்டு, விவேக சூன்யர்களாக்கி நடுத்தெருவில் விட்டு; நெடுங்கம்பி காட்டும் இம்மித்திர ரத்னங்களை அம்மம்ம! என்னென்று சொல்வது?

உலக வியவகாரத்தில் ஈடுபட்ட பணத்தின் வயப்பட்டிருக்கும் ஆன்மா; தன் சொரூபத்தினை யறிந்துகொள்ளாமலும், அறத்தின் ஓர் அங்கத்தினையேனுங் கண்டு கொள்ளாமலும் செய்து நிலையற்ற உலகபோகத்தில்; மேன்மேலும் அழுந்தச்செய்யும், அதமோத்தம சிகாமணிகளை அறவே யொழித்து நீங்கவேண்டியது அவசியத்திலும் அவசியமன்றோ!

இம்மட்டோ! கல்வி நலம்பெற்று கண்யத்துடன் வாழ்பவராயினும், மனவொற்றுமையிலராயின், அவரும் கூடாநட்பினரெனவே பெறுவர். அவர் நட்பானது சதாசஞ்சலத்தையே தருவதாகும். அதற்கு,—

முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக் கண்டன்ன விரலால் நெருமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட வின்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு,—

என்ற வெண்பாவே போதிய சான்றாகும்.

இன்னும்,—சிறியதாகத் தோன்றும் மலையருவியானது தன்னைப் போன்றவைகளின் சேர்க்கையால் மலைகளையும் புரட்டித்தள்ள வல்லதாய்; பெரிய ஆறாகமாறித் திரைகடலை நோக்கி ஓடிவருவதும், பின்னர் சிறிய கால்வாய்களின் சேர்க்கையால்; தம் பெருமை குலைந்து உருக்கெட்டுத் தனது பழைய நிலைமைக்கும் கீழான நிலைக்கு வந்து விடுகிறதென்பதும் நாம் அறிந்ததொன்றே. அங்ஙனமே, தன்னையொத்த நண்பர்களின் சேர்க்கையால் பெருமையும், இழிகுண நட்பினரால் அளவிடற்கரிய தீமையும் விளையுமென்பது திண்ணம்.

ஆகவே, சகோதரர்களே! நாம் அனைவரும் உத்தம சிநேகிதர்களைக் கொண்டவர்களாக விளங்கிப் பொது நன்மைக்குப் பாடுபட முன் வரவேண்டுமாய் எல்லாம்வல்ல இறைவனை எமது மனமொழி மெய்களாற் றுதிக்கின்றேன்.

பத்திரிகாசிரியன்.

INDUSTRIAL HINTS.

கைத்தொழில்.

கைத்தொழிலினால் தான் நமது தேசம் அபிவிர்த்திக்கு வரவேண்டும். இதற்கு ஒவ்வொருவரும் விர்த்திசெய்யவேண்டிய, யோசனையும் பணஉதவியு மிருந்தால்தான் ஆங்காங்கு தொழில்கள் ஏற்படஹேதுவுண்டு. ("உதாரணமாக ஜப்பான் தேசமே.")

பற்பொடி:—நிறம் வெள்ளை அல்லது ரோஸ், சீமைச்சுண்ணாம்பு, ரோஸ் பவுடர், சீனிக்காரம், சாதா உப்பு, ஏலம், கிராம்பு, பெப்பர்மிட், சால்ட் பழைய சூடன், பச்சைக்கற்பூரம்,

கறுப்புநிறம்:—வாதாங்கொட்டை கறுக்கல், களிப்பாக்கு, கறுக்கல், சுத்தமாய் அலம்பிய அடுப்புகறிப் பொடி, சீனிக்காரம், சாதாஉப்பு, ஏலம், பெப்பர்மிட் சால்ட்பழைய சூடன், பச்சைக்கற்பூரம்.

உடைந்த கண்ணாடி ஒட்டுதல்:—பிளாஸ்டர் ஆப் பாரிஸ் என்று கடையில் விற்கும் Plaster of paris மாவை ஒரு கிண்ணத்தில் தோசைமாவு மாதிரி கரைத்துக்கொண்டு உடைத்த இரண்டு துண்டு பொறுத்துக்களுக்கிடையே வைத்து சேர்த்து 5 நிமிஷம் சேர்த்துக்கொண்டிருந்தால் ஒட்டிக்கொள்ளும்.

மற்றொரு முறை:—வெள்ளைப்பூண்டு சாறு எடுத்து துணியில் வடிகட்டி மேலே சொன்னபிறகாரம் துண்டிடுவில் ஜாயிண்டு செய்து, இரண்டு மரச்சக்கை ஆதரவில் பிடித்து பிரஸ் பண்ணிக்கொண்டு புகையில்லாத விளக்கின் ஜுவாலையின்பேரில் சூடு காண்பிவித்தால் பிடித்துக்கொள்ளும்;

கறந்த பசுவின்பாலை ஸ்டாக்கு செய்துகொள்ளல்:—ஜலம் சேராத பாலை நன்றாய்க் காய்ச்சி ஆடை படாதபடி எடுத்து இளஞ்சூடாக சுத்தமான சீசாக்களில் விட்டு கார்க்கு போட்டு அதின்பேரில் மெழுகுதிரி சூடேற்றி காற்றுப் போகாதபடி மெழுகு தடவிவிடவும். எக்காலத்திலும் எடுத்து உபயோகப்படுத்தலாம். மறுபடி உபயோகப்படுத்தும் சமையம் சூடான டிகாக்ஷன் அல்லது சூடான ருசியான தண்ணீருடன் இப்பாலை உபயோகப்படுத்தவும், இந்த பாலை காய்ச்சக்கூடாது. ஆகச்சே ஒரு தடவைக்கு தேவையான பாலுக்குறிய அளவு சீசாக்களில் விடுவது நலம் முதல் காய்ச்சலில் அ. சீனி போடுவதும், நலம்.

(இன்னும் வரும்)

பசலா. 75.
காரைக்குடி

கல்வியைப்பற்றி யோர் கட்டுரை.

(முன்தொடர்ச்சி.)

பாஷாபிவிருத்தி செய்யும் பாக்கியவான்களே!

இனி, கற்றற்குரிய பாஷைகள் இவையென்றும், அவற்றின் சிறப்பு இவ்வளவு என்றும், ஒரு சிறிது ஆராயத்தொடங்குவாம்.

பாஷையாவது, ஒருவர் எண்ணத்தை மற்றவருக்குத் தெரிவிப்பதற்குரிய காரணங்களில் முதன்மையுற்றதாய் விளங்குவது. அப்பாஷைகள் அளப்பில.

முதலில், ஒவ்வொருவரும் அவரவர் தாய்ப்பாஷையைக் கசடறக் கற்கவும், எழுதவும், பேசவும் பயிலல் வேண்டும். ஏனெனில்,—தமது தாய்ப்பாஷையின் மூலமாகத்தான், உலகப் பொருள்களின் தோற்றமும், நிலையும், செயலும், பிறவுஞ் சந்தேக விபரீதமறத் தெரிதற் கேதுவாகும். ஆகையால் நமது தாய்மொழியாகிய தமிழ்மொழியை யாம் ஆரம்பத்திற் கற்கத்தொடங்கல் வேண்டும். இனி யித்தமிழ் மொழியின் பிறப்பையுஞ் சிறப்பையுங் குறித்துச் சற்று விசாரிப்பாம்.

இத்தமிழ் என்னுஞ் சொல் எவ்வாறுண்டாயதென்பதைக் குறித்துப் பண்டித சிரோமணிகள் பலவாறு கூறுகிறார்கள். தொல்காப்பியர் முதலிய முன்னூலாசிரியரும், உரையாசிரியரும், வெளிப்படையாக விளக்கினாரில்லை. பிற்காலத்துப் புலவர் மணிகளிற் சிலர் திரமிளம் என்பது தமிழாயிற்றென்பர். சிலர் திராவிடம் என்பது தமிழாயிற்றென்பர். சிலர் தமம் என்பது தமிழாயிற்றென்பர். சிலர் தாமம் என்பது தமிழாயிற்றென்பர். சிவனடியார்கள் தமரம் என்பது உடுக்கை யென்னும் ஒலிக்கருவியின் பெயராதலால், அது, தமிழ் எனச் சிதைந்து, சிவபெருமானது உடுக்கையிற்பிறந்த மொழியெனக் காரணங் கூறுவர். திருவருட்பா பாடிய சிதம்பரம் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் த்+அ+ம்+இ+ழ் என ஐந்தெழுத்தாகப் பிரித்து. விரிவுரை கூறினரென்பர். இன்னும் பலர் பற்பல காரணங் கூறுகிற்பர். எது எவ்வாறாயினும் ஆகுக! தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்றபொருளுண்மையால், அது பண்பாகு பெயராய், அதனையுடைய பாஷையை யுணர்த்திற்றென்பதே பலவிதத்தும் பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றது. என்னெனில், தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும், இத்தமிழ் என்னும் சொற்பிரயோகம் வருமிடங்கடோறும், தேன்றமிழ், அமுதத்தமிழ், நறுந்தமிழ், தண்டமிழ், தனிதமிழ், இன்றமிழ், சுவைத்தமிழ், என்பனவாதிய இனிமைப் பண்பையே அடை கொடுத்துக் கூறப்பட்டிருத்தலால் சுவை நிரம்பிய மொழி, இனிமையையுடைய மொழி, என்று கொள்ளப்படுதலே எல்லாவிதத்தும் ஏற்றமுடையதாகும். இதற்கு:—

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
னூன்கலந் துயிர்கலந் துவட்டாம லினிப்பதுவே."

என்பனவாதிய அருள்வழிப்பட்ட அடியவர் பலருடைய அமுதவாக்கு அளப்பில சான்று பகரும்.

தமிழ்த்தாய் வயிற்றிற் பிறந்து விளங்குஞ் சகோதரர்களே!

அமிழ்தினுஞ் சிறந்த இத்தமிழ் மொழியானது, அநாதிமல முத்தசித்துருவாகிய சிவபெருமானிடத்தே தோன்றிச், சங்கப்பலகையிற் றங்கி இறையனார், முருகவேள், முதலிய கடவுளராலும், அகத்தியர் தொல்காப்பியர் முதலிய முனிபுங்கவராலும், நக்கீரர், கல்லாடர், முதலிய பொய்யடிமையில்லாப் புலவர் பலராலும், முதலிடை கடையாகிய முச்சங்கங்களிலும் ஆராயப்பெற்று, அருமையாக வளர்க்கப்பட்டு, அறம்பொருளின்பம் வீடு, என்னும் உயிர்க்கு உறுதியைத் தரத்தக்க உண்மைப்பயன் நான்கையுந் தனக்கோர் ஆபரணமாக அணிந்து, கற்றோர் நாவிற் பயின்று, உலகெங்கும் பரந்துவிளங்குகின்றதென்பதை யுணராதார் யாவர்?

சேரசோழ பாண்டியர் என்னும் மூவரசராலு மொழியரசு எனப் புகழ்ந்துபோற்றி வளர்க்கப்பட்டது நம் நாட்டில் வழங்குஞ் செந்தமிழல்லவா?

இத்தமிழ் மொழியானது, இனிய சுவையாலும், எழுத்துச் சொற்பொருள்யாப்பணி என்னும் ஐந்திலக்கணத்தையுந் தன்னகத்தே கொண்டிருத்தலாலும், நீதிமொழிக்கு நிபுணமொழியாய் விளங்குவதாலும், அருள்நிறைந்ததாலும், அற்புதமுறைந்ததாலும், ஒப்புயர்வில்லா ஒரு மொழியென்று உயர்ந்தோர் புகழ்ந்து கூறுகிறார்கள்.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
வெங்கேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்"

என்ற ஆன்றோர்வாக்கே யிதற்குத்தக்க சான்றாகும்.

தத்துவத்திற் கெட்டாத் தனிப்பழம் பொருளாகிய சிவபெருமானது திருவாக்காற் சொல்லப்பட்டதாலும், திருக்கரத்தால் எழுதப்பட்டதாலும், இதைத் தெய்வமொழி யென்று கூறுவர்.

இந்தியாவின் தென்பாகத்தில் வழங்கப் பெறுதலாலும், அழகு நிரம்பியதாலும், இதைத் தென்மொழி என்றுங் கூறுவர்.

"தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச், சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே; தனித்த நறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின், தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி; இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி, யெடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந் தெள்ளமுதத்" திறம் வாய்ந்திருப்பதாலன்றோ, நம் அருமைத் தமிழ்மொழியை அமிர்தமொழி யென்று அனைவருங் கூறுவாராயினர்.

இது, சுவை நிரம்பியமொழியென்பதை:—ஸ்ரீமான் காந்தி என்னும் ஓர் இங்கிலீஷ் அறிஞர் அடியில் வருமாறு பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அதாவது.—"..................சென்றமாதம் தமிழர்களுடைய பாஷையைக் கவனமாகப் படித்துவந்தேன். அதைப்படிக்கப்படிக்க அப்பாஷையிலுள்ள அழகு அதிகமாகத்தெரிகிறது. அது அதிக நேர்த்தியானதும் அமிர்தம் போன்றதுமான பாஷை. இந்தியாவாசிகள் ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டியது ...." என்று பலவாறு புகழ்ந்தெழுதியிருக்கிறார்.

அயல் நாட்டாரே, நம் தமிழ்மொழியின் சுவைகண்டு இவ்வாறு புகழ்ந்து சொன்னால், நாம் எவ்வாறு போற்றிவளர்க்கவேண்டும். புத்திமான்களே! தன்னிடத்துள்ள இன்பரசத்தினால், அந்நியபாஷையை அபிவிருத்தி செய்யும் ஆற்றலுறும் அறிவுடையோரையும், தன்வசமாக்கும் சாமர்த்தியமுள்ளதாயிருத்தலால், நம் தெய்வச்செந்தமிழை இனியசுவையுடைய மொழி யென்று கூறுவதற்கு ஐயப்பாடுண்டோ?

"கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?"

என்ற பரஞ்சோதியார் வாக்கால் இதனருமை பெருமை நன்குணரத்தகும்.

திருக்குறள், நாலடியார், முதலிய எண்ணிறந்த நீதிநூல்களும், சமயநூல்களும், இங்கிலீஷ், ஜெர்மன், பிரஞ்சு, முதலிய அநேக பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு, இப்பூவுலகெங்கும் வழங்கப்பெறும் பெருமிதத்தாலன்றோ, இச்செந்தமிழை, "நீதிக்கடல், நீதிப்பெட்டகம்", என்று வித்துவ சிரோமணிகள் வியந்து கூறுகிறார்கள்.

கடலிற் கற்றூண் மிதந்ததும், செங்கல் தங்கமானதும், எலும்பு பெண்ணுருவானதும், முதலையுண்ட பாலனை முன்னழைத்துக் கொடுத்ததும், ஆகிய அளவிலடங்கா அற்புதங்கள் நிரம்பப் பெற்றிருத்தலால், இதையேன் அற்புதமொழி யென்று கூறலாகாது? திடமாகக் கூறலாம்.

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர்."

என்ற பெரியோர் பநுவலே யிதற்குத்தக்க பிரமாணமாகும்.

ஆதிகாலத்திலே, மதுராபுரியிலே, சமணர்களுக்கும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்கும் சமயசம்பந்தமான வாதம் நிகழ்ந்த காலையில் அச்சுவரமிகளா லெழுதப்பெற்ற திருப்பாசுர மடங்கிய திருவேடானது, அக்கினியிலிடப்பட்ட பொழுது எரியாது பச்சென்றிருந்தும், வைகை யாற்றின் வெள்ளத்திலிடப்பட்டபொழுது, பின்முக நோக்காது முன்முக நோக்கிச் சென்றும் விளங்கியதால் நமது அமிர்தத்தமிழை யேன் அருள் மொழி யென்று சொல்லப்படாது?

"பாரறியு மறிவினுமிப் பார்மேனின்ற
பசுஞானத் தாலுமெட்டிப் பார்க்கொணாத
பேரறிவே! சிற்றறிவேற் கிருளை நீக்கும்
பேரொளியே! யங்கயற்கண் பிரியாதானே!
யாரறிவார் தமிழருமை யென்கின்றேனென்
னறியாமை யன்றோவுன் மதுரை மூதூர்
நீரறியும் நெருப்பறியும் அறிவுண்டாக்கி
நீயறிவித் தாலறியும் நிலமுந்தானே."

என்ற பரஞ்சோதி முனிவர் பநுவல் இங்கு சிந்திக்கத்தக்கது.

அன்பர்களே! இத்தமிழின் பெருமையை அறிவில் பொருள்களாகிய நீரும், நெருப்புமே யறிந்ததென்றால், ஆறறிவுற்ற யாம் அறிதல் அருமை யாகுமா?

இம்மதுரமொழியின் ஆசைப் பெருக்கத்தாலன்றோ, எந்நாட்டினுஞ் சிறந்த தென்னாட்டின் திலகம்போல் விளங்கும், மதுரைமாநகரத்திலே, எல்லாம் வல்ல இறைவனாகிய நம் சிவபெருமான், சுயம்பிரகாசத் திருமேனியை மறைத்து, மானிடவுருவைத் தரித்து, சௌந்தரபாண்டியனாகியும், நமதருளன்னையாகிய உமாதேவியே தடாதகைப்பிராட்டியாராகியும், நம்சுப்பிரமணியக் கடவுளே உக்கிரகுமார பாண்டியனாகியும், அவதரித்து, இத்தே மொழியைத் தேக்கெடுக்க வுண்டுகளித்து, உலகமெங்கும் பரவச்செய்தார்களென்றால், இதைத் தெய்வமொழி யென்பதற்கு ஐயமொழியுண்டோ?

"தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவுங் கனிமுகத் தொருநீ
சௌந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்?"

என்ற குமரகுருபரர் திருவாக்கே இதனது தெய்வத்தன்மையைத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

இத்தமிழ் மொழியின் இனிமையாலன்றோ, தெய்வப்பெருமானாகிய சிவபெருமான், மாதரிடத்தில் தூதுசென்றதும், வீதிதோறும் பிச்சை யேற்று நின்றதும், குதிரை விற்றதும், மண்சுமந்ததும், மாற்றடிபட்டதும், இன்னும் இத்தகைய இழிவான செயல்கள் எத்தனையோ செய்தார்.

"பாடும் பணிக் கடிப் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிக்கு மண்பொறை சுமந்தும்
தீந்தமிழின் மேலன்பின் மாற்றடி பட்டும்"—என்ற சிவப்பிரகாசர் திருவாக்கு இங்கே சிந்திக்கத்தக்கதாம்.

தண்ணார் தமிழ் பயிலுஞ் சகோதரர்களே! இத்தமிழின் பெருமை பலவற்றை இம்மகோந்நத ஞானபத்திரிகையிலேயே பல அன்பர்கள் விளக்கியிருக்கிறார்கள். யானும் எண்ணி விரித்தெழுதப்புகின் நீண்டு செல்லுமெனக்கருதி யித்துடனிறுத்தி மேற்செல்வாம்.

நமது தெய்வச் செந்தமிழ்ச் செல்வியை, ஓர் செவிலித்தாய் போல வளர்த்துவந்த மன்னர்களும், மடாதிபதிகளும், காலவேற்றுமையால் மறக்கலானார்கள். அமிர்தத்திலும் அதிக இன்பமுள்ளதென அயல்நாட்டார் வியந்து கூற, வேம்பினும் எட்டியினும் மிக்க கசப்புள்ளதென வெறுத்துவிட்டார்களோ? அறியேம்.

மகமதியர் முதலிய கொடுங்கோலரசர்களால், வளங்குன்றிக் கிடந்த நமது செந்தமிழ் மாது, காருணியமிகுந்த காவலராகிய ஆங்கிலேய அரசர்களால் சென்ற நூற்றாண்டாக விருத்திமுகங் கொண்டு ஓங்க ஆரம்பித்தது. அவர்களும் இக்காலம் பராமுகமானார்கள். அந்தோ! பரிதாபம்.

'செந்தமிழ்ப் பயிர் செழித்து வளராவிடின், மதாசாரம் குலாசாரம் உலகாசாரம், முதலிய ஆசாரங்களும், குருலிங்க சங்கமபத்திகளும், சன்மார்க்க சாதனங்களுந் தலையெடுக்காமல் நிலைகுலைந்து போகுமே! ஆகையினாலே, தருமம் வளர்க்குஞ் சற்குண நிதிகளே! நமது தாய்மொழியுந் தனிமொழியுமாகிய தமிழ் மொழியை வளர்த்தற்குரிய காரணங்களை நீங்கள் கைக்கொண்டொழுகுவீர்களாக!

இதுகாறும் நமது தாய்மொழியாகிய தமிழ்ப்பாஷையின் உயர்வு இவ்வளவென்பதும் அதை நாம் ஒவ்வொருவரும் கொஞ்சமும் அவமதியாது கற்கவும்வளர்க்கவும்வேண்டுமென்பதும்,ஒருவாறுசுருக்கிவிளக்கப்பெற்றன.

இன்னும், நம் தமிழ்மொழியோ டொற்றுமையுடையதும், தேவர்பாஷை யெனப் புகழப்பட்டதும், வேதாகம வுபநிடதமுதலான முதனூல்களைத் தன்னகத்தே யடையப்பெற்றதும், சகல பாஷைகளுக்கும் தாயாய் விளங்குந் தலைமைவாய்ந்ததும், பற்பல சொற்களாலும், அணிகளாலும், தருக்கம் நியாயம் முதலிய கருவிநூல்களாலும், பிரபல சுருதிகளாகிய எண்ணிறந்த வேதாந்த சாஸ்திரங்களாலும், நமது தாய்மொழியை யலங்கரிப்பதுமாகிய, ஆரியப்பாஷையாம் சீரிய சமஸ்கிருத பாஷையையும், மிக்க கூரிய புத்தியுடன் நாம் ஒவ்வொருவரும் கற்கவேண்டிய அவசியமேயாம்.

ஆனால், தாய்மொழிப் பலமின்றி, பிறபாஷையைப் பயிலுதல், தன் குலமறிய வகையறியாது பிறர்குலத்தைப் பிரித்துக் கேட்பதுபோலவும்; தன்னாட்டின் வளமறியான் அயல்நாட்டின் வளத்தை யாராயத் தொடங்குவதுபோலவும், தாய்ப்பாலை விரும்பாது நாய்ப்பாலை விரும்புவதுபோலவும், அவமேயாகும். ஆகையினாலே இவ்வடமொழி முதலிய பிறமொழிகளைத் தாய்மொழியைக் கசடறக் கற்றபிறகே கற்கத்தொடங்குதல் மிகநலமாம். அல்லது இளமையிலேயே யிருமொழியையும் ஒருங்கே பயிலுதல் மகா நன்மையாகும். தத்துவநூல், தருக்கநூல், முதலியவைகள் பெரும்பாலும் வடமொழி மொழிபெயர்ப்பை யுடையனவாகவே இருத்தலால், அவற்றை யாராயத் தொடங்குவோர்க்கு, வடமொழி ஞானஞ் சிறிதிருப்பின் மிக்க வநுகூலமாகும்.

இவ்வாற்றால், நமது தாய்மொழியோடு வடமொழியையும் பயிலுதல் அநுகூலமென்றும், அதன் சிறப்பு இத்துணைத்தென்றும், மிகவும் சுருக்கிக் காட்டப்பெற்றன.

இன்னும், "மன்னவனெப்படி மன்னுயிரப்படி" என்னும் முதுமொழிக்கிணங்க, உலக நடையையும், அரசாங்க சட்டதிட்டங்களையும், பிறவற்றையும், அறிந்து நடப்பதற்கு மிக்க அநுகூலமாயிருக்கின்ற, நமது அரசபாஷையாகிய ஆங்கிலமொழியையும்நம்மவர் சிறிதுகற்கமுன்வரவேண்டும்.

ஏனெனில்:-நாம் வர்த்தகத்தின் பொருட்டோ, மற்றக் காட்சியின் நிமித்தமோ அயல்நாட்டுக்குச் செல்ல நேரின், முதலில் வண்டிக்காரனே "கம்மான் சார்! கம்மான் சார்! வேர் ஆர்யூ கோயிங்? கேன் யூ இவ்மிஎயிட் அணாஸ் சார்ஜ்?" என்று வினவுவதைப் பட்டணம், பம்பாய், முதலியவிடங்களிற் சர்வ சாதாரணமாகக் காணலாம். ரெயில்வேயில் படுங் கஷ்டமோ பரிதாபம். டிக்கட்டை வாங்கிச் சரிபார்க்கத் திக்கெட்டையும் நோக்கவேண்டியிருக்கிறது. இங்கிலீஷ் தெரிந்தவர்களிடங் காண்பித்தாலோ, அவர்களில் தீயவர்கள் பலவாறு மோசஞ்செய்து விடுகிறார்கள். சக்கண் கிளாஸ் (II class) வண்டியில் அந்தஸ்துக்குத் தக ஏறினாலோ "வெல்கம் சார்! வென்ஸ் ஆர் யூ கோயிங்? வாட் ஆர் யூ?" என்று அவ்வண்டியிலிருப்பவர்கள், நமது ஊர்,பேர், தொழில், நாட்டின் வளம் முதலியவற்றை இங்கிலீஷிலேயே கேட்கவும், பேசவும், ஆரம்பிக்கிறார்கள். நமக்கு அவர்கள் கேட்பதும், பேசுவதும், இன்னது என்று விளங்காமையாலே, சுற்றிலும் பார்த்துத் தேகம் வேர்த்து, முகஞ் சோர்ந்து, வாட்டமடைகிறோம்.

இம்மட்டோ? அயல்நாட்டார் கடைகளிலும், தந்தி தபால் ஆபீஸ்களிலும், கோர்ட்டு விஷயங்களிலும், கப்பலிலும், சீமைச் சாமான்களை வாங்கி விற்குந் தொழில்களிலும், பாஷை விளங்காதவர்களாயும், உண்மை யுணராதவர்களாயும், அவற்றின் குணகுணங்களைத் தெரியாதவர்களாகியும், நம்மவர்கள் மோசமடைகிறார்கள். நமக்கொரு இங்கிலீஷ் கடிதம் வந்தால், "அது நமக்குத்தானா? எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறது?" என்று அதனுண்மையை யறிய இங்கிலீஷ் படித்தவர்களைத் தேடவேண்டியிருக்கிறது.

இவ்வாற்றால், நமது அரசபாஷையின் பிரயோசனம் இவ்வளவென்பதும், நம்மவரனைவரும் அப்பாஷையிற் சிறிது பேசவும் எழுதவும் பழகிக்கொள்ளுதல், உலக வியவகாரத்திற்குப் பேருபகாரம் ஆகும் என்பதும், ஒருவாறு சுருக்கி விளக்கப்பெற்றன.

இதுகாறும், தமிழ்மக்களாகிய யாம் கற்றற்குரிய பாஷைகள் இவையென்றும், அவற்றின் சிறப்பும், பயனும் இவ்வளவென்றும், சுருக்கமாகக் காட்டப்பெற்றன.

நூலாராய்ச்சி செய்ய விரும்பும் நுண்ணறிவாளர்களே! இனி, அப்பாஷைகளில் கற்றற்குரிய நூல்கள் யாவையென, ஒரு சிறிது ஆராயத்தொடங்குவாம். முதலில், நமது தாய்ப்பாஷையின் இலக்கணம் இலக்கியம், தருக்கம், முதலிய கருவிநூல்களை, நன்காராய்தல் வேண்டும். ஏனெனில் கருவியின்றிக் காரியமாகாதன்றோ? கப்பலின்றிக் கடலைக் கடக்கவும், கருணையின்றிக் கடவுளை யடையவுங் கூடுமோ? கூடா. ஆதலால், கருவி

நூலாராய்ச்சியின்றி, வேதாகம சாஸ்திரங்களின் உண்மையை யுணரப் புகுவோர், கண்ணின்றிக் காண எண்ணுபவரை யொப்பாவார். இதுபற்றியே சமஸ்கிருதத்திலும், வியாகரணம், தருக்கம், நியாயம் முதலிய சாஸ்திரங்களைக்கற்ற பிறகே, வேதாகமங்களை யாராயத் தொடங்குகிறார்கள் வேதியர்கள்

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்ப னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதநூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்" என்றும்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்றும்.

"எண்ணெழுத் திகழேல்" என்றும், இக்கருவி நூல்களை நன்றாகவும், அவற்றைக்கல்லாதிகழ்ந்து தள்ளாது, அவசியம் ஒவ்வொருவருங் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், நம்முன்னோர்கள் பலபடக் கூறுவாரானார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் ஆரம்பத்திற் கருவி நூல்களைக் கற்கவேண்டும், பின்பு இக்கருவிகளின் துணைகொண்டு இவ்வரிய, சரீரத்தா லடையத்தக்க, பேரின்பசித்திப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய சன்மார்க்க நெறிகளை விளக்கிக் காட்டும் ஞானசாஸ்திரங்களைப் பயிலவேண்டும். அம்மெய்ஞ்ஞான நூல்கள்தாம், சகலவேதங்களின் முடிவாகிய உபநிடதார்த்தங்களை, யதார்த்தமாகவும், வெளிப்படையாகவும் விளக்கிக்காட்டும், "வேதாந்த சித்தாந்த நூல்கள்" என்று சொல்லப்படும், இம்மெய்ஞ்ஞான சாஸ்திரங்களி னுட்கருத்தைப் பிண்டமாகக் கொண்டு காணுகையில், ஆத்ம அநாத்மவிலக்ஷணங்களும் அநாத்ம புத்தியை யொழித்து, ஆத்மஞானத்தைப் பெற்று, சர்வதுக்கநிவிர்த்தியும் பேரானந்தப் பிராப்தியும் அடைதற்குரிய வழிகளுமேயாம். இன்னும்,

"அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்"

(தொடரும்)

ஆர். சுவாமிநாத பிள்ளை,
தமிழ்ப் பண்டிதர்,
உமையாள்புரம்.

---

plea for a Tamil University.

தமிழ் சர்வகலா சங்கங்கள்.

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" பிங்கலந்தை.

தற்காலத்தில் நமது இந்தியா முழுவதும் சர்வகலாசங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்ற அவாக்கொண்டு ஜனங்கள் தம்மால் இயன்றமட்டும் முயற்சி செய்கின்றார்கள். உதாரணமாக மைசூரில் கன்னட பாஷையைப் பிரதானமாகக்கொண்டு ஓர் யூனிவர்சிடி சமீபத்தில் ஏற்பட்ட விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. இன்னும் இந்துஸ்தானத்தில் பிர்ம்மஸ்ரீ மதனமோஹனமாளவ்யா, தர்பங்க மஹாராஜா அவர்கள் இந்தியாவே தன் தாய்நாடென்று பாவித்து இந்தியர்களாகிய நமக்கு..............இன்றியமையாததென்றும் அதை அடையும் நிமித்தம் தன் உடல் உயிர் அனைத்தையும் நமக்காக அர்ப்பணஞ்செய்து அல்லும் பகலும் உழைத்து வருகின்ற மிஸ்ஸஸ் அன்னிபெஸெண்டு அம்மாள், முதலிய பெரியோர்களின் இடைவிடா முயற்சியால் கங்காநதிக்கரையினால் ஸனாதன தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு ஹிந்து யூனிவர்சிடி (Hindu University) ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற விஷயமும் நம் நேயர்கள் அறிவார்கள். இங்ஙனம் நம் ஆந்திரசகோதரர்களும் இப்பொழுது விழித்துக்கொண்டு தங்களுக்கென்று ஓர் யூனிவர்சிடி வேண்டுமென்று போராடுகிறதும் பத்திரிகைகள் மூலமாய் அறிகிறோம். இது இவ்வாறு இருக்க திருவனந்தபுரத்தில் மலையாள பாஷையைப் பிரதானமாகக்கொண்டு ஒரு கேரள யூனிவர்சிடி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுமென்று நம் நாட்டிற்சிறந்த Prof. K. V. ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் செய்யும் முயற்சியைப் பார்த்து வருகிறோம்.

இப்பரத கண்டம் எங்கும் இவ்வண்ணம் சுறுசுறுப்பும் குதூகலமுமாயிருக்க நாம் தூங்குவதேன். செந்தமிழ்நாடுகள் பன்னிரண்டிலும் தனிகர்கள் பலர் உளர். அவர்கள் தினந்தோறும் காலை முதல் மாலை வரை கணக்கற்ற தானதர்மங்கள் செய்கின்றார்கள். பெரிய பிரபுக்கள், தனவான்கள், மிராசுதார்கள், ஜமீன்தார்கள் பாரி வர்த்தகர்கள் முதலானவர்கள் இந்த தமிழ் யூனிவர்சிடி என்ற விஷயத்தை கனவிலும் நினைக்கிறார்கள் இல்லை. இவர்கள் அறியாமையை நினைக்கும்போது நமக்குப் பிரலாபமும் பெருமூச்சும் உண்டாகின்றன. நம்மைப்பெற்று வளர்த்து, தாலாட்டி தூங்கவைத்த தமிழை இப்போது இகழலாமா. யானை முதல் எறும்பு கடையாக உள்ள சகல ஜீவ ஜெந்துக்களுக்கும் தனித்தனியே ஒவ்வொரு பாஷை சொந்தமாயிருக்கின்றது. அந்தந்த ஜெந்துக்களுக்குரிய பாஷைகளை அவைகள் ஒரு காலத்திலும் மறவாமல் எப்போதும் உபயோகித்துக்கொண்டு வருகின்றன. ஆங்கில நாட்டினரும் மற்ற ஐரோப்பியர்களும் தத்தம் சொந்தபாஷைகளை எவ்வளவோ கவனமாகப்போற்றி வருகிறார்கள் என்பதை இந்த வித்தி

யார்த்திகளே அறிவார்கள். இங்ஙனமிருக்கத் தங்கள் ஜன்மபாஷையாகிய தமிழையும் தமிழ்வித்வான்களையும் நாம் அவமதிக்கலாகுமா.

முற்காலங்களில் பாண்டிய நாட்டில் முதல், இடை, கடை ஆக முச்சங்கங்கள் இருந்த விஷயம் எல்லோரும் படித்தும் கேட்டும் இருக்கிறோம். ஒவ்வொன்றும் நம் நாட்டில் ஆதரித்து வந்ததை சற்று உற்றுப்பார்த்தால் நமது தமிழ்பாஷையின் உயர்வும், சிறப்பும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அகஸ்தியர் நாவிலே பிறந்து ஆரியத்தின் மடியிலே வளர்ந்து ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமைப்பெற்று சங்கப்புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்வான்களின் வாக்கிலே விளையாடி திராவிடதேசம் முழுவதும் ஏகசக்ராதிபத்தியம் செலுத்திவந்தது "என்றால் அதன் பெருமையை எவ்வாறு எடுத்துரைப்பது. நமது தமிழ்ஜனங்களுக்கு அறிவு புகட்டுவதும் தமிழை அபிவிருத்திசெய்து தேசமெங்கும் பரவச்செய்வதும், தமிழ் மக்கட்கு ஊக்கத்தை உண்டுபண்ணி இனிய தமிழ் நடையில் நூல்கள் இயற்றும்படி பழக்குவதும் அங்ஙனம் அற்புதமுன் நூல்கள் இயற்றினவர்களுக்கு சங்கத்தில் அறங்கேற்றின பிறகு ஏராளமான பரிசுகள் அளிப்பதுவும் முதலிய விசேஷ அறிவுடையோர்களுக்குச் சங்கப் பலகையில் இடங்கொடுப்பதுவும் முதலிய கௌரவங்கள் செய்வதுவும், மேற்கூறிய முச்சங்கங்களின் குணங்களாம். மூவேந்தர் படைத்த தமிழகத்தே விளக்கமுற்றிருந்தச்செய்தி பண்டைஇலக்கியங்களை ஆராயுமிடத்து வெளியாகும். வரையா வண்மையால் தான் அடைந்த ஒப்பற்ற புகழைக்கொண்டு சேரசோழபாண்டியராகிய மூவேந்தரும் அழுக்காறுகொள்ளும்படி இத்தமிழ் நின்றது எனின், அதற்கு வேறு ஒரு பெருமையும் வேண்டுமோ. ஆதிகாலத்தில் தமிழ், ஆந்திரம், கருநடம்' மகாராஷ்டிரம், கூர்ஜரம் என்ற இவ்வைந்து மொழிகட்கும் அதிகவேற்றுமை இருந்ததில்லை இப்பொழுதுதான் தங்கள்நாடு என்ற அபிமானம் ஏற்பட்டு தமிழ்நாட்டைத் தவிர்த்து மற்ற திராவிட நாடுகள் எல்லாம் தத்தம் பாஷைகளை முன்னுக்குக் கொண்டுவர முயர்ச்சிசெய்து வருகின்றார்கள். ஆகையால் நம்நாட்டுக்குரிய பாத்தியத்தை முன்னிட்டு தமிழ் சர்வகலா சங்கம் ஏற்படுத்துவதில் சிறு பகுதியேனும் ஊக்கம் காட்டுதல் தமிழ் மக்கட்களாகிய நம்மவரின் கடமையன்றோ.

இதர பாஷைகளால் சுதேசபாஷைகளுக்கு தாது குறைந்தபோதிலும் சென்னை (Senate) செனேட்என்னும் ஆலோசனை சங்கத்தைச் சேர்ந்த அநேக பிரபுக்களில் இரண்டொரு இந்தியகனவான்கள் அத்தியாவஸ்தையிலிருக்கிற சுதேசபாஷைகளுக்குப் பிராணாதாரம் கொடுத்து காப்பாற்றி வருகின்றார்கள், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பதுபோல சமயம் வாய்த்திருக்கும்போதே சீர்குலைந்திருக்கும் நமது சுதேச பாஷையை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு முக்கிய சாதனம் இத்தமிழ் யூனிவர்சிடி ஏற்படுத்துவதுதான். முப்பதின் முக்கோடிஜனங்களில் தமிழர்கள் ஏறக்குறைய பத்தொன்பதின்மரில் ஒருவர் ஆகின்றனர், தென்னிந்தியாவில் உள்ளஜனத் தொகையில் தமிழ்பேசுகின்றவர்கள் நூற்றுக்கு நாற்பதுவீதமென்றும் தமிழ்ப்பயிர்ச்சி உள்ளவர்கள் ஐம்பத்தைந்து வீதமென்றும் கணக்கிட்டு இருக்கின்றது.

"நெடியோன் குன்றமுந் தொடியோன் பௌவமும்,
தமிழ்வாம்பறுத்த தண் புணனாடு!! என்றுசிலப் பதிகாரத்தினும்,
"பஃறுளியாற்றுடன் பன்மலையடுக் கத்துக்
குமரிக் கோடுகொடுங்கடல் கொள்ள"

என்றும் தமிழ்அகத்தின் விரிவையும் பரப்பையும் மிகப்பெரிதாக விளக்கி இருக்கின்றார்கள். இக்காரணங்களை உத்தேசித்து தென்னாட்டில் தமிழ் சர்வகலாசங்கம் ஸ்தாபிப்பது இன்றியமையாதது. இன்றைக்கும் மதுரையில் தமிழ்ச்சங்கமொன்று வழங்கி வருவதாலும், அநேகதமிழ்நூல்கள் இயற்றப்பட்டு வருவதாலும் தமிழ்பாஷைக்கு ஆதிகாலம் முதல் இரிப்பிடம் ஆனதாலும் ஜனத்தொகை மிகுந்திருப்பதினாலும் தமிழ்நூல்களை ஆராய்வதற்கு வேண்டிய சாதனங்கள் இருப்பதினாலும் சிறப்புவாய்ந்த மதுரைமாநகரையே (Seat of the proposed Tamil University) உத்தேசித்திருக்கும் தமிழ்சர்வ கலாசங்கத்திற்கு தலைமை வைக்குமிடமாக ஸ்தாபிக்க வேண்டும்.

மைசூர், ஹிந்துயூனிவர்சிடிகளில் என்னகோட்பாடுகள் என்னசட்டதிட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அதுபோலவே நமது தமிழ் யூனிவர்சிடியினும் சட்டதிட்டங்கள் நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆனரபில் அண்ணாமலை செட்டியார் அவர்களால் இரண்டுவருஷங்களுக்கு முந்தி மதுரைகாலேஜிக்கு மூன்றுலெக்ஷரூபாய் **வித்தையின் நிமித்தம்** கொடுத்தபேருதவிக்கு மதுரைமாநகரத்தார் நன்றியறிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்பொழுது பெருமைபொருந்திய செட்டியார் அவர்களைப் போன்ற கல்வி விஷயத்தில் ஊக்கமுள்ள பிரபுக்கள் ஒன்றுகூடி இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டு முயற்சித்தால் வெகுநாளாய்க் கோரின தமிழ் சர்வகலாசங்கம் நமக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

சிற்பம், சங்கீதம், வாணிகம், அன்னிய தேசயாத்திரை, தேவாலய பரிபாலனம், ராஜபக்தி, நாட்டுவளம் நகர்வளமாகிய விஷங்களில் இந்தியா தேசத்து ஜமீன்களாலும் ராஜாக்களாலும், மிராசுதார்களாலும் ஊக்கங்காட்டப்படுகின்றதோ, அதைவிட பதின்மடங்கு இவ்விஷத்தில் காட்ட வேண்டுமென்பது கோரிக்கை ஊக்கம் மனஉறுதி இருப்பதுடன் தமிழர்களும் தமிழ்ப்பாஷாபிமானிகளும் ஒன்றுகூடி தமிழ் ஜில்லாக்களில் பற்பல இடங்களில் மீட்டிங்கு

கள் கூடி இச்சங்கவிஷயமாக வியபகரித்து அதைக் கூடியசீக்கிரத்தில் ஸ்தாபிப்பதற்கு வேண்டிய சாதனங்களைத் தேட அல்லும் பகலும் முயற்சிசெய்ய வேண்டியது இன்றியமையாதது; நமக்கென்று ஓர் யூனிவர்சிடி இல்லாததினால் தமிழ்ப் பண்டிதர்கள் கவிராயர்கள் வித்துவான்கள், இவர்களுக்கு தத்தம் திறத்தை வெளியிட சமயம் நேரவில்லை. மதுரையிலிருக்கும் தமிழ்ச்சங்கத்தார் பரீக்ஷகர்களே ஒழிய போதகர்களல்ல. ஆகையால் மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு நூல்கள்கற்ற பெரியோர்களும், தனவான்களும் தத்தம் நாட்டில் மீடிங்குகள்கூடி உடனே கமிடிகள் ஏற்படுத்தி யூனிவர்ஸிடிக்கு வேண்டிய பண்டு உண்டாக்கி, தமிழகத்தில் தங்கள் தங்களுக்கு ஒப்பற்ற புகழும் புண்ணியமும் கிடைக்கும்படி கோரினவரத்தைப் பெறவேண்டுமென்பது தமிழ் மாணாக்கரின் பிரார்த்தனை.

எம். கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
Assistant Master.
எஸ் எம். எஸ். வித்தியாசாலை, காரைக்குடி

“கூடிப்பிரியேல்.”

சகோதரர்களே!

நட்பின் பெருமை நவிலற்பாலதன்று. அதனாலடையும் இன்பமும் அங்ஙனமே அளவிடற்பாலதன்று. கொழுந்துவிட்டெரியும் அக்கினியே போன்ற கோபமும் குணமணியான மித்திரனால், கொஞ்சநேரத்தில் குளிர்ந்தே போகிறது. மட்டற்ற மனவருத்தங்களும், மாண்புள்ள நண்பனின் மனோகர சம்பாஷணைகளால்,—தேறுதலால் அறவே தீர்ந்துவிடுகிறது. மதுவையுண்டுமயங்கிக் கிடக்கும் வண்டே போன்று தோழனின் தூய்மொழிகளாகிய தெவிட்டாத தேனையுண்டுமயங்கிக் கிடப்பதே மானிடற் கியற்கையாயமைந்து விட்டது. காதலித்துக் கடிமணம் புரிந்தகற்பொளிர் காரிகையைவிடக் கற்றுணர்ந்தடைந்த காதல்நண்பனே வாழ்க்கையின் இன்ப துன்பங்களில் பெரிதும் பங்கு பெறுபவனாகிறான். என்னே நட்பின் பெருமை! ஆம்,—சுபாவமாகவே மானிடர், கூட்டுறவில் மிகுந்த ஆசை யுடையவர்கள். அவர்கள் நண்பனுக்காக உயிரையுந் தியாகஞ்செய்ய வல்லவர்கள். தற்காலத்தில் நடக்கும் ஐரோப்பிய யுத்தமே இதற்குப் போதிய சான்றாகும்.

உலகத்திலுள்ள இல்லறவாசிகளுள் நண்பனில்லாத வொரு மனிதனை யேனுங்காண முடியாது. ஏனெனில், கூட்டாளி இல்லாமல் குவலயத்தில் வாழ எந்த மனிதனாலு மாகாது. எனவே நட்பு மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாததாகிறது. ஆகாரமில்லாததால் எப்படி சோகமே விடுகிறதோ அப்படியே அன்பும் ஆதரவும் அமைந்த நண்பன்பிரிவால் துன்பம் உண்டாவது திண்ணம். என்பதாற்றான் “கூடிப்பிரியேல்” என்னும் முதுமொழியும் உண்டாவதாயிற்று.

நாம் நேசித்த வொருவர் பொறுமை யின்மையால்,—சமய பேதத்தாலுண்டான கோபத்தால், நமக்குத் துன்பத்தைத் தரக்கூடியதைச் செய்து விட்டால், அவரால் நேர்ந்த அத்துன்பமானது நமது ஊழ்வினையால்நிகழ்ந்ததுவென வெண்ணிப் பொறையுடையராய் அவர்தம் நட்பை விட்டகலா திருக்கவேண்டும். இதை,

இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானகநாட
விலங்கிற்கும் விள்ள லரிது.

என்ற வெண்பாவானு முணர்க.

உடுக்கை இழந்தவன் கைபோலும், இடுக்கண் களைந்த நண்பனைக் கூறப்பட்டது, தேகத்தைப் பலவிதத்தும் காத்து நிற்பது கைகளே யாகலின் அங்ஙனங் கூறலாகியது. எனவே, தன் கண்ணைக் குத்திற் றென்று தன்கையை யரிந்தாரிலராகலின் நட்பிற்பிழை பொறுத்தலே அறிவாளிகளின் செய்கையாகும். முற்றுமுணர்ந்த மூதறிவாளராயினுந் தவறு நேர்தல் சகசம். நாம் அதையொரு பொருட்டாக வெண்ணுதலும் அக் காரணங்கொண்டு பிரிதலுங் கூடாவாம். மனிதர் இயற்கையிலேயே உருவத்தில் எப்படி வித்தியாசப் பட்டிருக்கிறார்களோ, அப்படியே குணத்திலும்சிறிது மாறு பட்டிருப்பார்கள்.

ஆகவே, மனமொத்த நண்பர்களுள் அபிப்பிராய பேதங்களும் தெரிந்தோ—தெரியாமலோ கால வித்தியாசத்தால் ஏற்பட்ட சஞ்சலத்தைத்தரக்கூடிய தெனத்தோன்றும்வார்த்தைகளும், செய்கைகளும மன்னித்தற் குரியனவென்பதையும், “கூடிப்பிரிவதில்” கொஞ்சமுங் குணமில்லை யென்பதையு முணர்ந்தவர்களாயிருக்கவேண்டுமென்பதே நூற்களின் முறையும், எமது வேண்டுகோளுமாகும்.

கே. எல். சிங்காரவேற் பிள்ளை.
முத்துப்பட்டணம், காரைக்குடி.

“ கல்வி ”

கனதனம் பொருந்திய பெரியோர்களே! நான் இப்பொழுது எழுத ஆரம்பிக்கும் விஷயமானது மிக்க விசாலமுடையனதாயும், ஆழ்ந்த புத்தி கூர்மையுடனும் எழுதவேண்டியவையா யிருக்கின்றது. ஆனால் என்னுடைய அபிப்பிராயத்தை கல்வியிற் றேர்ச்சியுற்ற கனதனவான்களுக்குள்ளும், வித்வ சிரோமணிகளுக்குள்ளும் வெளிப்படுத்தி என்னைத் திருத்திக்கொள்ளவேண்டி இச் சிற்றறிவுடைய யான் இங்ஙனம் எழுதத்துணிந்தேன். எப்படி சூரியபகவானானவர் உலகில் மலரக்கூடியதும் கூடாததுமாகிய சகலஜாதி புஷ்பமொட்டுகளின் மீது உயர்வு தாழ்வுஎன்ற யாதொரு வித்தியாஸம் (வேற்றுமையன்றி) தமது கிரணங்களை சமரஸ பாவனையாக பிரகாசித்து உலகத்தினருக்கு நறுமணத்தையும், அழகையும் கொடுக்கக்கூடியதுமான துளிர் மொட்டுக்களை மலரச்செய்தும், பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடாததுமான மொட்டுகளை கருகச்செய்வதுபோல என் வியாஸத்தில் உலகத்தினருக்கு பிரயோஜனத்தை கொடுக்கக்கூடிய ஸத்துள்ள விஷயங்களை கிரகித்து அங்கீகாரம் செய்துக்கொண்டும், அசத்துள்ள விஷயங்களை புறக்கணித்து என்னையும் மேன்மேல் ஊக்கி உயர்த்துவீர்களென்று நம்பியே இவ்வியாஸம் எழுதத்துணிந்தேன்.—

“கல்வி” என்பது அறிவு எனப் பொருள்படும். “கல்வி” என்னும் பொருளுக்கு “கல்” என்னும் பதம் தாதுவாக விளங்குகிறது. “கல்” என்னும் பதத்திற்கு தோண்டுதல் எனப்பொருள்படவே கல்வியாவது அரிய பெரிய நூல்களிலுள்ள விஷயங்களை ஆராய்ந்தறிவதாகும். இவ்வித கல்வியறிவைத் தேடவேண்டுமாயின் நமது தாய்மொழியைத்தான் கைக்கொள்ள வேண்டும்.

தற்காலம் நமது பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிப்பதற்கு அன்னியபாஷையாகிய ஆங்கிலத்தையே முக்கிய கருவியாகவும் நமது தாய்ப்பாஷையைத் துணைக்கருவியாகவும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. நமது இந்தியா தேசமானது ஈஸ்டு இந்தியா வர்த்தகசங்கத்தாரின் ஆளுகை or அரசாட்சியின் கீழிருந்தபோது அதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கல்வியானது ஆங்கிலத்தில் நடத்துகின்றதா? அல்லது தாய்மொழிகளில் நடத்துகின்றதா? என்பதைப்பற்றி விவாதம் ஏற்பட்டதாகவும் இவ்விவாதம் சுமார் 12 வருஷகாலம் நிகழ்ந்து வந்ததாகவும், கடைசியாக 1835-ஞுத்தில் நமது இந்தியா கவர்னர்ஜெனரலாயிருந்த கனம் லார்டுவில்லியம் பெண்டிங் பிரபுஅவர்கள் பிரதமவகுப்புகளில் பாடங்கள் பாலர்களுக்கு தாய்மொழியிலேயே நடைபெற வேண்டுமெனவும், உயர்தரக்கல்வியானது ஆங்கிலத்தில் தான் போதிக்கப்படவேண்டுமெனவும் முடிவு செய்தார்கள். இவ்விதத் தீர்மானத்தினால்தான் விசேஷமாக நமது தாய்மொழிகள் வலிவுகுன்றி மறையவும் தலைப்பட்டன.

தாய்மொழியோ நமது குழந்தைப் பருவகாலம் தொட்டு கற்றுவருகிறபடியால் மொழிகளின் அர்த்தங்களை விசேஷமாகச் சிரமப்பட்டு தேடப்போவது அவசியமில்லை. அப்படி தேடவேண்டுமாயின் விசேஷப் பொருட்செலவு கிடையாது. நமது வெளிப் பழக்கத்தினாலும், கற்றறிவுடையோர்களின் சேர்க்கையினாலும், இயல்பான குணத்தினாலும், மிகவும் சுலபமாகக் கற்றுக்கொள்வோம். பிறமொழிக் கருவிகளோ மிகவும் சிரமப்பட்டு முயன்றே தெரிந்துகொள்ள வேண்டியதுடன், அதிகபணச்செலவும் பிடிக்கின்றது. அப்படி சிரமப்பட்டும் பணத்தை பொருட்படுத்தாது கற்றுக்கொண்டபோதிலும் அவைகளை உபயோகிப்பதில் ஓர்வித சிரமம் ஏற்படுகிறதை யாவரும் அனுபவார்த்தமாக உணர்ந்துளர். இவைகளையும் கடந்து கற்றுக்கொண்டபோதிலும், தாய்மொழிகளால் விஷயங்களை உணருகிறதுபோல் அவ்வளவு சுலபமாக பிறமொழிகளால் உணரமுடியாது. இது நிற்க, பிறமொழிகளால் நுண்ணிய ஆராய்ச்சிகள் நடத்துவதும் அரியபெரிய விஷயங்களை கற்றுக்கொள்வதும் நமது பாலர்களுடைய மூளைக்கு அளவற்ற பாரத்தைக் கொடுக்கின்றது. அப்படி பாலியத்திலே பாலர்களின் இளம் மூளைக்கு ஜாஸ்தி பளுவைக் கொடுப்பதினால் தக்க வயதில் கற்றுத்தேர செயல்கள் அற்றும் அவர்களினுடைய சரீர சுகங்குன்றி அதிபாலியத்திலே காலமாகியும் விடுகின்றதை நாம் பன்முறை அனுபவத்தில் பார்த்துவருகின்றோமல்லவா? நல்ல கல்வி கற்று, நற்சாக்ஷிபத்திரம் பெற்று அதிபாலியத்தில் இறந்துபோகும் மாணவர்களுக்கு தேகபுலஹீனம் என்ற காரணம்தான் எனக்கு புலப்படுகிறது.

நமது பாலர்கள் தாய்மொழியிலேயே கல்வி கற்றுக்கொள்வதென்றால் அவர்கள் பிறமொழிகளைக் கற்றுத்தேர்ச்சியடைவதற்காகச்செலவாகும் காலத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்திக் கொள்வதோடும் அதனால் அடையும் பெரியபிரயாசையையும் நீக்கிக் கொள்கிறார்களன்றோ? இக்கருத்தைக்கொண்டே சில வருஷங்களுக்கு முன் சென்னைச் சர்வகலாசங்க உயர்தர பரிக்ஷைகளில் தேரிய மாணவர்களுக்குத் தகுதி சீட்டுக் கொடுப்பதற்காகக் கூடிய மகா சபையில் கனம் Harold Stuart துரையவர்கள் சொன்னதாவது:—நமது பரீக்ஷைகளில் எவ்வளவு பெயர்கள் தவறிப்போகிறார்களென்பது எனக்குச் சிறிதும் ஆச்சரியமில்லை. இத்தனை மாணவர்கள் தேருவதே எனக்கு வியப்பை விளைவிப்பதாகும். உங்களிற் பெரும்பாலர் உமக்கு உரியதல்லாததொரு அன்னிய மொழியிற் கல்வி கற்கவேண்டியிருக்கிறது. 240 லக்ஷம் தெலுங்கர்களும் 180 லக்ஷம் தமிழர்களும் தங்கள் கல்வியிற் பெரும்பாகத்தை அன்னியமொழியொன்றின் உதவிகொண்டே தேட-

வேண்டுமென்பது நம்புவதற்கும் மிகக் கடினமாக யிருக்கின்றது. இவ்வளவு தொகையுள்ள ஜனங்களின் தாய்மொழிகளை மாற்றுவதென்பது அசாத்தியம். இவர்கள் கல்வியிற் பெரும்பாகம் பிறமொழி யொன்றின் உதவிகொண்டே தேடப்பெற வேண்டியதாயின் கல்வி அவர்கள் மாட்டு இலேசாகப் பரவுவதற் கில்லை பிள்ளைகளுடைய முயற்சியெல்லாம் மொழியைக் கற்பதிலேயே செலவாய் விடுவதன்றி, நூல்களிற் கூறப்படும் விஷயங்களை அறிவதற்குச் சக்தி ஒன்றும் இல்லாதுபோய் விடுகிறது. இத்தகைய பழக்கம் வீணே காலத்தையும் அறிவையும் செலவு செய்விப்பதன்றி யாதும் பிரயோஜனம் உள்ளதாகத் தெரியவில்லை லாகூரில் விலங்குகளின் சிகிச்சாமுறைமைகளைப் பற்றி போதிக்கும் பாடசாலை யொன்று ஸ்தாபனமான போது மற்றய பாடசாலைகளைப் போலல்லாது அங்கு தாய்மொழியிலேயே மாணவர்களுக்குக் கல்விபோதிப்பதாகச் செய்திருந்த ஏற்பாடுகளைப்பற்றி மிகவும் வியந்து பேசியிருக்கிறார்கள். உலகெலாம்போற்றும் மகாபண்டிதரான கனம் இராமேந்திரநாத் டாகூர் அவர்களும் தாய்மொழியிற் கல்வியே சிறந்ததெனக் கொண்டார்களென்பது அறிஞர் பலரும் நன்குணர்ந்திருக்கின்றார்கள். சென்ற வருஷம் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாஸபைக்கு இச்செட்டிநாட்டிலிருந்து விஜயம் செய்திருந்த அனேக நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் மண்ணுயிரைத் தன்னுயிராய் கருதியவரும், தென் ஆபிரிக்காவில் இந்தியர்களின் கஷ்டத்தை நிவர்த்திக்க முன்வந்த வருமான ஸ்ரீமான் காந்தி அவர்களை அவருடைய இருப்பிடத்தில் பார்க்கப்போன ஒவ்வொருவரிடம் நீங்கள் தாய்பாஷையைக் கைவிடக்கூடாது. அதைவிருத்திசெய்ய வழிதேடவேண்டும் அடுத்த சமயம் என்னைப் பார்க்கும்பொழுது தாய்மொழியை உபயோகப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதைக்கேட்க அவர்களின் அபிப்பிராயமின்னதென்று நன்கு விளங்கவில்லையா? தாய்மொழிகளில் ஏற்பட்டுள்ள நூல்கள் அந்தந்த மொழிக்குரிய இனத்தார்கள் கண்டறிந்த உயர்ந்த கருத்துக்களையும், அவர்களுடைய பெரியோர்கள் போதித்த அரும்பெரும் உண்மைகளையும் அடங்கியுள்ளனவாயிருக்கின்றன. இவைகள் யாவும் அந்தந்த இனத்தார்கள் உலகின்கண் முன்னேற்றமடைவதற்கு இன்றியமையாதது இவ்வுண்மை நன்கறிந்தன்றோ ஸ்ரீமான் காந்தியானவர்களும் தாம் புதிதாக ஆரம்பித்த ஆச்சிரமத்தில் தாய் மொழியினையே கல்வி பயிற்சிக்கேற்ற கருவியாகக்கொண்டனர்.

கல்வியின் நோக்கமாவது உலகிற் பற்பல விஷயங்களை ஆராய்ந்தறிவதும் நற்குண நற்செய்கைகளைக் கைக்கொள்வதும், அறிவை விருத்திசெய்துகொள்வதுமாம். அன்னிய மொழிப்பயிற்சி சர்வகலாசங்கத்தினர் நியமிக்கும் பரிக்ஷைகளிற் றேருவதற்கு மட்டும் கற்றுக்கொள்வதன்றி வேறு விசேஷ பிரயோஜனம் அடைவதைக்கண்டு கொள்ளவில்லை. இப்பேர்ப்பட்ட படிப்பெல்லாம் பள்ளிக்கூடத்தோடே நின்று விடுகின்றன. கல்வியானது பிறமொழி வாயிலாய் பெறும் காலத்தில் அதற்குரிய இயல்பான சக்தி எங்கேயோபோய்விடுகின்றது. நமக்குபழக்கமில்லாத ஆகாராதிகளைச் சாப்பிட்டால் அது எவ்வாறு ஜீரணமாகாமல் வெளிப்படுகிறதோ அதுபோல் கல்வி பிற மொழி வழியின்படி பெறுவோமாகில் அஃது நமக்குரியதாய் நின்று பயனை உண்டாக்கக்கூடியதில்லை.

இன்னும் வரும்,

கல்லூர்,—ஆர். கிருஷ்ண மூர்த்தி,
பேப்பர் நிருபர், காரைக்குடி.

பக்தி

பக்த்யாவிஹீந: நரகம்.
ப்ராயாந்தி

அறிவிற் சிறந்த அன்பர்காள் கண்ணியம் நிறைந்த கனவான்காள் பக்தியைப்புகட்டும் பெரியோர்காள் அடியிற் கண்டவிஷயத்தில் கொஞ்சம் கண்ணுறுங்கள்.

நரஜன்மமெடுத்தவர்கள் அனைவர்களும் தனது நற்கதியைப் பெறவிரும்புவார்களாகில் பக்தியைச்செய்து பரகதியடையவேண்டும் மேல்படி பக்தியானது பலவகையுளது.

குருபக்தி, பிதுருபக்தி, பதிபக்தி, ஈசுவரபக்தி என்பதேயாம். குருபக்தி யானது. நாம் கல்விகற்கும் ஆசிரியருக்கு அடங்கிநடத்தல் குருவசனங்களை அங்கீகரித்தல் குருசுச்ரூஷயாவித்யா என்றபடி பணிவிடை முதலியதுகள் செய்து அவரது அபிமானத்திற்கு பாத்திரமாகவேண்டும். எவன் இப்படிச் செய்கிறானோ, அவன் கல்வியில் தேர்ந்து அனேக சபைகளுக்குச் சென்று அங்குதனது கல்வித்திறமையைப் பிரகடனம் செய்வித்துத் தானும் கீர்த்திபெற்று தனது குருவுக்கும் நற்பெயரை வுண்டாக்குகிறான் ஒரு குருவுக்கு பூர்வமே நல்லபெயர் இருந்தபோதிலும் ஒருமாணுக்கரால் தனது பெயர்விளங்குமாகில் அதுதான்முக்கியமாய் கீர்த்திக்குஇருப்பிடமாகிறது.

வித்யாதுரும் ஷிதுலாவத்கா
மாதநோதி.

குருபக்தியால் ஏகலைவன் கீர்த்திபெற்று தனதுகுருவான துரோணருடைய வித்யாவிசேஷத்தையும் ஓங்கிவளரச் செய்தான் அல்லவா.

நிற்க பிதுருபக்தியாவது பெற்றோர்களிடத்தில் உதிக்கும் பக்தியென்பதேயாம். அதாவது தங்களைப் பத்துமாதம் சுமந்து பெற்று வளர்த்துத்தாலாட்டிச் சீராட்டி போஷித்த அன்னையை அந்தரங்கத்துடன் அபிமானித்து தன்னிடத்தில் ஏற்பட்டிருக்கும் வாத்ஸல்யத்தை வளரச் செய்து தாய்வசனங்களைத் தள்ளாமல்

நமாது: பரம்தைவதம்.

என்றபடி தாயைக்காட்டிலும் வேறு தெய்வம் கிடையாதாகையால் மாதாவை அநுதினமும் ஆதரித்து பணிந்துவரவேண்டும். இதுபோலவே நமது கல்வி விஷயமாய் திரவியத்தை லக்ஷியம் செய்யாமல் கொஞ்சமும் முகங்கோணாமல் குழந்தைகளைப் படிக்கச்செய்வதிலேயே தனது வாழ்நாள்களை வீண்நாட்களாக்கும் தந்தையர்களிடமும் பிரீதியுடன் பக்தியைப்பாராட்டி தாய்தந்தையர்களின் வயோதிககாலத்தில் அவர்களை தெய்வமென்று கருதி யாதொரு கஷ்டங்களுக்கும் உட்படுத்தாமல் பூஜித்துவருவதையே சிரமேல்கொண்டு புத் என்னும் நரகத்தினின்றும் அவர்களை விடுவித்து புத்ரன் என்று பெயரை தனக்கு ஸ்திரப்படுத்திக் கொள்ளவேண்டும், இதுவே பிதுருபக்தி யென்பது.

இந்தப் பிதுரு பக்தியால் ஸ்ரீராமர் வனவாஸம் செய்து பத்னியைப்பறிகொடுத்து; அநேக போர்களில் நுழைந்து துஷ்டகண்டனஞ் செய்து சிஷ்டமண்டனம் வளர்த்து, ஸீதையைக் கிரஹித்து நகரம் வந்து மகுடம் தரித்து ராஜ்யபரிபாலனம் நடத்திவந்தாரென்பது குழந்தைகள் முதல் எல்லோரும் அறிந்தவிஷயம். இதற்கெல்லாம் காரணமென்றால் பிதுருவாக்ய பரிபாலனமே முக்கிய சாதனமாகும். ஆகையால் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

பதிபக்தி.

கல் என்றாலும் கணவன் புல் என்றாலும் புருஷன்:-என்றபடி மங்கையர்களுக்கு எப்பொழுதும் புருஷனைத் தவிர வேறு தெய்வம் கிடையாது. புருஷன் எவ்வகைக்குணமுள்ளவனாகயிருந்தபோதிலும் அயுக்தனாகவிருந்தபோதிலும் துஷ்டனாகவிருந்தபோதிலும் அவனது வசனங்களுக்குயாதொரு பதிலையுமுரைக்காமல் சொன்னதைச் செய்யவேண்டியது. ஸ்திரீகளுக்கு பதிவிருதை என்றொரு பெயர் வழங்கிவருகிறது. அதற்கு பதியைவிரதமாக உடையவள் பதிவிருதை-யென்பது பொருள்.

"பர்த்தா தேவோ குருர் பர்த்தா
தர்ம தீர்த்த வ்ருதாநிச
தஸ்மாத் ஸர்வம் பரித்யஜ்ய
பதிமேகம் பஜேத் ஸ்தீ—"

நாஸ்தியஞ்ஞு: ஸ்திரிய: கிஞ்சித்
நவ்ருதம் நோபவாஸகம்
யாது பாத்தரி சுச்ரூஷா
தயாஸ் வர்க்கம் ஜபத்வயஸௌ

என்பதால், தவம், தர்மம், புண்ணிய தீர்த்தம்வ்ருதம்பாகம், உபவாஸம் முதலிய நியமங்களை யாவும், புருஷனை உள்ளன்போடு பூஜித்து அவர்களுக்குவேண்டிய உபசாரணைகளைச் செய்து வருவார்களாகில் அவர்களுக்கு சுவர்க்கலோகப்பிராப்தி நிச்சயமாய்ச்சித்திக்கிறது என்பது திண்ணம்.

ஈசுவரபக்தி யாவது.

நமது ஜனனத்திற்குக் காரணபூதரான கடவுளை அந்தரங்கத்துடன் பூஜைமுதலிதுகளைச்செய்து ஈசுவரனைத்தவிர வேறு ஒருவரும் கெதியில்லையென்றுநன் குணர்ந்து ஸர்வம் சிவமயம் ஜகத் என்கிறபடி எக்காத்திலும் தவசிந்தையுள்ள வராகயிருக்கிற வருக்குயாதொரு சங்கடமும் கிட்டாது.

தைவேவிமுகதாம் யாதேந கோப்யஸ்தி
ஸஹாயவாந்—

தெய்வம் பிரஸந்ந மில்லாவிடில் உலகில் நமக்கு சகாயம் செய்வோர் யாருமிலர்.

கடவுளைநம்பினோர்கைவிடப்படார்

ஆகையால் எந்தபுருஷன் பகவானை இடைவிடாமல் மனனம் செய்கிறானோ அவனுக்கு ஈசுவரன் பிரத்யக்ஷம் கொடுத்து வேண்டிய அபீஷ்டங்களையும் அன்போடு அளிக்கிறாரென்பது உறுதி இதைப்பார்க்க ஒருகதை, ஞாபகத்தில் வருகிறது, அதாவது ஒருகிராமத்தில் ஒருபிராமணன் தனது குடும்பகஷ்டங்களை சகிக்கமுடியாதவனாய் கானகஞ்சென்று பகவானை நினைத்து வெகுகாலம் தவம்செய்து ஈசுவரன் பிரத்யக்ஷமாகாததைக்கண்டு விசனமுறுகையில் வேடன்ஒருவன் ஓடி பிராமணனைக்கண்டு சொல்லத்தொடங்குகிறான்.

வேடன்—ஒய்வன்விசன மடைகிறாய்

பிராமணன்— பொருளொன்றைத் தவரவிட்டேன் அதைத்தேடியுங் காணாமையால் விசனம்.

வேடன்—என்னபொருளது.

பிராமணன்—நீஎதற்காகக் கேட்கிறாய் உன்னால் அதுவிஷயத்தில் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

வே—எதாகிலும் சரி, சொன்னால் அவசியம் நான்செய்கிறேன்

பி—அது முடியுமா, நிச்சயந்தானா

வே—பிரமாணமாகச் சொல்கிறேன் நிச்சயமாய்க் கொணர்ந்து தருகிறேன்

பி—வீண் சபதம் செய்யாதே உன்னால் முடியாது

வே—என்னால் முடியும், மனிதர்களுக்கு முடியாத காரியமும் இருக்கிறதா, முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பதை அறிவீர் இல்லை போலும்

பி—நீ நிச்சயமாய் செய்வாயாகில் உன்னை மிகவும் ஆதரிப்பேன், நான் ஒரு மானைத் தொடர்ந்து வருகையில் அம்மானானது எவ்விடமோ மறைந்து விட்டது, என்று தனது மனதில் தோன்றியிருந்த மானின் அடையாளங்களைக் கூறுகிறான், ஹே வேடனே கேள், சிங்கமுகமும் மநுஷஉடலும் நான்கு கைகளும் கூடிய ஒரு மான் அதைப்பிடித்துவா என்றுஉரைத்தான்!

அது கேட்டவேடன், சரி, என்று அதைவிட்டுப் புறப்பட்டு காடுகளில் சென்று பிராமணன் சொன்ன அடையாளங்களையே தியானித்துக்கொண்டு திரிந்து கொண்டிருக்கையில் வெகுதினங்கள்வரை அம்மான் கிடையாமையால் மனம் நொந்து கால்சோர்ந்து ஒருமரத்தடியில் உட்கார்ந்திருக்கையில் மனதில் சிந்தித்தான் ஐயோ! பிராமணருக்கு மானைக்கொணர்ந்து தருவதாக வாக்களித்தது பொய்யாய்விட்டதே என்னசெய்வேன். என்றுமனம் வருந்துகையில்தான் உட்கார்ந்திருக்கும் புதருக்குள் சலசலவென்று சப்தம் உண்டாயிற்று, உற்று நோக்கினான் அச்சமயம்தான் நினைத்துதியானித்த மிருகமாகவே இருந்தது. உடனே கயிற்றால்கட்டி பிராம்மணருகில்வந்துதித்தான். பிராமணரும் மிகவும் சந்தோஷம் பூரித்து சாஷ்டாங்கமாக பணிந்து ஹே, ஈசா, என்னை நற்பதவியைச்சேர்க்க வேண்டுமென்று பிரார்த்தித்தான்உடனே பகவான் பிரசந்நவதனத்துடன் பக்தசிரோமணியாகிய விப்ரோத்தமநீ விரும்பியதை அளித்தேன், நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் உனக்குயாதொரு குறைவுமுண்டாகாது. என்று ஆசீர்வதித்து வேடனைப்பார்த்து, பக்தியிற்சிறந்த வேடனே. நீ பிராம்மணரின் உபதேசத்தால் ஒரேநிலைமையுடன் என்னைத்தியானித்து வந்ததால்உன்னையும் உன்பொருட்டு பிரமணனுக்கு மோக்ஷத்தையுங்கொடுத்தேன்.

பிராமணன் தன்னால் சம்சாரத்தில் சங்கடங்கள் பொறுக்கமுடியாமல் தவம்செய்து வருகையில் சற்றுநேரம் கிருகத்தின் குடும்பகவலையும் சற்றுநேரம் எனது தியானத்தையும் செய்துவந்ததால் அவனது விருப்பத்தையும் பூர்த்தி செய்தேன். ஆகையால் எவனொருவன் சதாகாலமும் வேறுசிந்தையன்னியில் என்னைஸ்மரிக்கிறானோ அவனைஎக்காலத்திலும்கைவிடேனென்று மறைந்தார்.

T. P. வயித்தியநாதன்.
ஸம்ஸ்கிருதபண்டிதர்.
எஸ். எம். எஸ். வித்தியாசாலை, காரைக்குடி.

மாணவர் பக்கம்.

நன்மொழி.

தீயரோடிணங்கேல்:—புலியினுள்ளும் பகவான் இருக்கின்றார் என்பது உண்மையாயினும், நாம் போய் அந்த ஜந்துவின் முன் நிற்கலாகாது. அவ்வாறே, பரம துஷ்டர்களிடத்தும் பகவான் இருப்பினும் அவர்களுடன் நாம் சேர்வது சரியன்று.

* * *

விவாதம் புரியேல்:—வெறுங்குடத்தில் நீரைக்கொட்டினால் உண்டாகும் நீர்க்குமிழிகளின் சத்தமானது; குடம்நிறைந்தபொழுது நின்றுவிடுகின்றது. அதுபோலவே கடவுளைக் காணாதவன் ஈஸ்வரன் நிச்சயத்தைப் பற்றியும், ஈஸ்வரன் லக்ஷணத்தைப் பற்றியும் வீண் தர்க்கம் புரிகின்றான்; ஆனால் பகவானை ஏகாந்தத்தில் தரிசித்தவன் ப்ரஹ்மானந்த சுகத்தை மௌனமாய் அனுபவிக்கின்றான். "நிறைகுடம் நீர் தளும்பலில்"

* * *

நாம் விசுவாச யோக்கியர்களாக இருக்கவேண்டும்:—இது ஆணுக்கும் பெண்ணுக்கும் அவசியம் வேண்டிய குணம். நாம் ஒருவேலையிற் புகுந்தால் நம்மிடத்தில் விசுவாசம் வைத்து நம்மை நம்பலாமா என்று அதிகாரி யோஜிப்பான். மனைவியை நம்பலாமா என்று கணவனும், கணவனை நம்பலாமா என்று மனைவியும், யோசித்து நம்புவது விசுவாசயோக்கியமான குணம். அம்மனைவியிடத்தும் அப்புருஷனிடத்தும் இருப்பதனாலன்றோ? இக்குணம் இல்லாத ஒரே காரணத்தினால் பல பேர்கள் இவ்வுலகத்தில் முன்னுக்கு வராமற் போகின்றார்களாகையால் நாமிதை முற்றிலும் சிறுவயது முதல் கைப்பற்றிவரவேண்டும்.

* * *

கடவுளைக் கண்டவர்கள்:—கடவுளைக் கண்டவனே உண்மையான ஞானியாவான். அவன் நிலை குழந்தையின் நிலையைப்போன்றது. குழந்தைக்கும் ஒருவித அஹங்காரம் இருப்பதாகத் தோற்றினும், அது வெறுந்தோற்றமேயன்றி தேற்றமான அகந்தையன்று, வளர்ந்த மனிதனது அஹங்காரத்தை நோக்க பால் மணம்மாறாப் பசிய குழந்தையின் அஹங்காரம் சூனியமேயாகும்.

* * *

உலகவாஞ்சைகளிற் பற்றுள்ள பக்தன்:—தன் எண்ணங்களையே அபஹரிக்கின்ற கள்வன்; எதையும் போதிக்கின்றானில்லை. உன் முழுமனதும் பிராணனும் பகவானை நாடி நினையாவிட்டால் அவனை நீ எவ்வாறு காண்பாய்.

* * *

பாபாத்மாவின் ஹ்ருதயம்:—பாபியின் ஹ்ருதயம் சுருண்ட மயிரையொத்தது. அதை எவ்வளவு நீளம் இழுத்தாலும் நேராய்ச் செய்யமுடியாது. அதுபோல் பாபிகளின் ஹ்ருதயத்தையும் எளிதில் மாற்றமுடியாது.

ஸ்திரீகள் பக்கம்.

"கணவனை யிகழேல்"

கற்பேசிறந்த ஆபரணமாகப் பூண்டொழுகுங் கண்ணியம்நிறைந்த சகோதரிகளே:—தற்கால ஸ்திரீகளிற்பலர் துஷ்டர்களாய்த் தன்கணவனையும் அவனைச்சேர்ந்த சுற்றத்தார்களையும், உதாசினமாகப்பேசி தனக்கியற்கையாயுண்டாயிருக்கும் நடையுடைகளைக்கைவிட்டுத் தட்டுக்கெட்டுத் தன்னிலைமாறி உலகந்தன்னை யிகழும்படியான உடம்பினராய்த் திரிவதே, கவுரவமாகநினைத்துத் திரிகின்றார்கள். அவ்விதந் திரிபவர்களை நடைப்பிணங்களென்று சொல்வதே மிகவும்பொருத்தமாம்.

இவர்கள்மனம் இவ்வாறு செல்வதற்கு ஏதுக்கள்பற்பலவுண்டு,—அதனில் முக்கியமிரண்டேயாம். அவையாதெனில்? "கரைப்பார்கரைத்தால் கல்லுங்கரையும்"என்றபடி தன்னிலைகெட்டு மூட்டுப்பட்டலையும் போலிகளாகிய துற்குண ஸ்திரீகளின் போதனையை மெய்யென்று நம்பி அவகுணமேற்படுதலும். எதிர்த்தவீட்டு எல்லம்மாள் எவ்வளவுசொத்துள்ள சிறந்தமோட்டி, எப்பேர்ப்பட்டரூபவதிதெரியுமா? அடடா! அவகுணமென்ன அவலட்சணமென்ன அவளேஅடுத்தவீட்டு அருணாசலத்தை அழைத்துக்கொண்டு போய் விட்டாள். அவளைப்பார்க்கிலும் நாம் உயர்ந்தவர்களாகுதும். என்ற அறிவின்மையே துற்கிருத்தியங்களைச் செய்வதற்குத் தூண்டுகோலாகவிருக்கின்றது.

ஆகையால் எனதுசகோதரிகளொவ்வொருவரும், துற்குணம், துற்செய்கை முதலிய கெட்டநடைகளையுடைய ஸ்திரீகளுடன் சிநேகஞ்செய்யாமலும், ஆபாசமான நடைகளையுடைய புஸ்தகங்களைப்பார்க்காமலும், அறிவைவளர்க்கும் சற்சங்கவாசனையோடு பரிமளிக்குஞ் சாஸ்திரங்களையும், நன்னடைகளைப் போதிக்கும், உத்தமநீதிக் கதைகளையும், படித்துணர்ந்து, அந்நீதிகளின்படிநடந்து, கணவனையே தெய்வமென்று பாவித்து உபசரணைபுரியும்.சக்தியடைந்து உயர்தர உத்தமியென்று புகழும்படியான பத்தினியார்களுடன் சிநேகஞ்செய்து இன்புற்றுவாழ்ந்திருப்பதே உங்கள் நோன்பானதால் அவ்விதம்நடந்துகொண்ட ஓர் உத்தமியின் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் அதனைத்தங்கள் ஞாபகத்தில்வைத்து அதன்படி நடப்பீர்களாக.

சகலவளங்களாலும் சிறப்புற்றோங்கும் தென்னாட்டிலுள்ள தஞ்சாக்கூரென்னும்நகரத்தில் வேளாளகுலத்திலவதரித்த வாணனென்னும் ஓர் பிரபு ஆயிரம்ஏர்வைத்து வேளாண்மையென்னும் (விவசாயத்) தொழில்புரிந்து அநேகஅடிமைகள் ஏவல்செய்ய வாழ்ந்துவந்தனர். இவ்விதம் நெடுநாள் வாழ்ந்துவருங்காலத்தில் உத்தமிக்குரிய உள்ளன்புடைய அவர்மனைவி ஓர் ஆண்குழந்தையைப்பெற்றுச் சிலநாட்களிருந்து மரணமடைந்தாள்.

அப்பால் வாணர் மைந்தனை யன்புடன் வளர்த்துவருகையில் அவருக்கு அந்தியகால மேற்பட்டதைத்தெரிந்து தனதுஅடிமைகளில் தலைவனாயிருந்த (எகன்) யென்னும் சாம்பானை யழைத்து புத்திரனை யவனிடத்தொப்புவித்து இவனையுனது புத்திரனைப்போல பாதுகாத்து வளர்த்துவருவாய் வேண்டியபொருள் கொல்லையில் புதைத்திருக்கிறதென்று சொல்லி மரணமடைந்தார்.

அதனைக்கண்ட எகன், மிகுந்ததுயரமடைந்து வாணருக்குச் செய்யவேண்டிய கருமகிரியைகளை அவர்குலப்பார்களைக்கொண்டு நடத்தும்படி செய்து தானே அக்குடும்பத்திற்குத் தலைவனாயிருந்து சகலகாரியங்களையும் நடத்தி அவர் புத்திரனுக்கு அன்னபானாதிகளைக்கொடுத்து வளர்க்கும்படி தக்கமுயற்சியுடன் வளர்த்து ஐந்துவயதானவுடன் கல்வியில்வல்ல கம்பரிடத்தில் கல்விகற்கும்படி ஏற்பாடுஞ்செய்தான்.

அதனால் வாணரின்புத்திரன் கல்வியில்தேர்ச்சியடைந்து கம்பரைப்போலாக கவிபாடும் திறமையைப்பெற்றுப் பருவமடைந்ததைக்கண்ட எகன் அவர்குலத்தில் உத்தமியென்று யாவராலும் புகழப்பெற்றபெண்ணைக் கல்யாணஞ்செய்துவைத்து இருவரும் ஒற்றுமையுடன் வாழ்வதைக்கண்டு மகிழ்ந்திருந்தான்.

இவ்வாறிருக்கையில் எகன் அந்தியகால மேற்பட்டு மரணமடைந்தான். அதனால் வாணரின்புத்திரன் மனம்வருந்தி அவனுக்குச்செய்யவேண்டிய கிரியைகளைச்செய்து நிறைவேற்றியபின் தனது தந்தையைப்போலிருந்து அன்புடன்வளர்த்துவந்த எகன் பெயரைமுதலிலும், தனக்கு உபாத்தியாயராயிருந்து கல்வியைக்கற்றுக்கொடுத்த கம்பரின்பெயரை மத்தியிலும், தன் தந்தையின்பெயரைக் கடைசியிலும்வைத்து 'எகம்பவாணன்' என்றபெயரை ஞாபகார்த்தமாகத் தனக்குவைத்துக்கொண்டான். அப்பெயர் வரவர எகம்பவாணன் என்று யாவராலும் அழைக்கப்பெற்றுவந்தது.

அதன்பின் ஒருநாள், சேரன், சோழன், பாண்டியன், என்ற மூவரசர்களும் எகம்பவாணரைப் பார்க்கும்பொருட்டு அவர்வீட்டுக்குச் சென்றார்கள். அச்சமயம், அவர் வீட்டிலில்லாமையால் அவர்மனையாளைக்கண்டு அன்னவரெங்குசென்றாரென விசாரித்துவரும்படி ஆளனுப்பினர். அதற்கந்தமங்கையர்க்கரசி வயலுக்குச்சென்றிருப்பதாய் சொல்லியனுப்பியதைக்கேட்ட அரசர்கள்மூவரும் ஓ! அப்படியா? முதலியார் மூடிநடப்போயினரோவென்று உழவுத்தொழிலை யிழித்துப் பேசியதனைத் தூரத்திலிருந்து மனம்பொறாது அப்பதிவிரதா உத்தமசிரோமணியாகிய மாதர்க்கரசி நமதுபுருஷரையும் இழித்துப்பேசுந்தன்மை யிவர்களுக்கெவ்விதமுண்டாகினவென்ற பதிபக்தியால் இவர்கள் அரசர்களென்றதையும்பாராமல். போர்க்களமாகிய வயலில் யானைகளால் சேனைகள் தழையாகவும், இரத்தம் தண்ணீராகவும் நிறப்பி,

மிதித்துச் சோக்கியதில்,என்கணவர், உங்கள் மூவரின் தலைகளாகிய (முடிகளை) ப்பறித்து நடப்போயினாரென்ற பொருளமைந்த கீழ்க்கண்ட பாடலைப்பாடி அவர்கள் பார்வைக்கனுப்பினாள்.

"சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
யானை மிதித்த வருஞ்சேற்றில்—மானபரன்
பாவேந்தர் வேந்தன் பரித்துநட்டா னேகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி.

என்றபாடலைப் பார்த்தவரசர்கள் கோபமும் வெட்கமுங் கொண்டவர்களாய் அவ்விடம்விட்டு நீங்கி தங்கள் தங்கள் தேசங்களுக்குச்சென்றனர். அப்பால் தனதுகணவன் வீட்டிற்குவந்தபின் நடந்தசங்கதிகளைச் சொல்லக்கேட்ட ஏகம்பவாணர் தனக்கேவலாயிருந்த ஓர்பூதத்தையனுப்பி அந்தமூன்றரசர்களையுங் கொண்டுவரும்படிசெய்து சிறையிலடைத்தனர். அதற்கவ்வரசர்கள், தங்களைவிட்டுவிடும்படிக்கும். அவ்விதம்விட்டுவிட்டால் தாங்கள் அந்நன்றிக்காக கப்பங்கட்டிவருவதாயும் ஒப்புக்கொண்டபின்பேரில் அவர்களைச்சிறையிலிருந்து விடுதலைபடையும்படிசெய்து அவர்கள்கப்பங்கட்ட மங்களமாகவாழ்ந்துவந்தனர்.

சகோதரிகளே! பார்த்தீர்களா? தனதுகணவனை அவமதிப்பாக அற்பச்சொல் சொல்லிய அரசர்களையும் மதியாமல் தனதுகவியினாற் பங்கப்படுத்தியும். அவ்வுத்தமியின் மனக்கொதிப்பானது நீங்காமல். கணவன்வந்தவுடன் தெரிவித்து அவர்களைச்சிறையிடும்படிசெய்து அவர்களாயுள்வரைக் கப்பங்கட்டும்படியுஞ் செய்துகொண்டாளெனில் அம்மங்கையர்க்கரசியின் கற்பையும் பதிபக்தியையும் என்னாற்சொல்லத்தம்மன்று, ஆகையால் நீங்களொவ்வொருவரும் அவ்வுத்தமியைப்போல் விளங்குவதே உங்கள் கடமையாம். சுபம்.

எம். பாலுசாமி நாயுடு,
மதுரை.

குறிப்பு:— இப்போது புதிதாகச்சேரும் சந்தாதார்களுக்குக் குறைவாக அனுப்பப்படும், சஞ்சிகைகள் இரண்டாம் முறை அச்சிட்டு; சீக்கிரத்தில் அனுப்பப்படும்.
ப—ர்.

லீலாவினோதன்.

(முன்தொடர்ச்சி)

சாந்தமுனி:—அதைக்கேட்டு, லீலாவினோதனைப் பார்த்து ஹே! அரசிளங்கன்றே, தெய்வலோக வாசிகளைப்பார்த்து, அவர்கள் உதவியால் தெய்வலோகஞ்சென்று, தேவேந்திரனைக்கண்டு, அன்னவரால், திரிமூர்த்திகளைத் தெரிசித்துப் பிரதிதினமும், காலையிலும், மாலையிலும், ஆதவனிருப்பிடஞ்சென்று, நித்தியகர்மானுஷ்டானங்களைச் செய்து அவருடன் வசித்தது மறுஜனனமில்லாது அவருள்ளவரை ஜீவித்திருந்து பூமண்டலத்தில் நடக்கும்ஞாயம் அன்யாயங்களை பிரத்திக்ஷயமாகப்பார்ந்து பரமதயாளுவிடத்திற்சென்று பூர்த்திசெய்தி வருவாய்யென ஆகாயவாணி சொல்லிய வண்ணம் நிறைவேறும் பொருட்டு அத்தெய்வலோகவாசிகளை நேரில்பார்க்கவேண்டுமென நெடுநாளாய் ஆகாராதிகளை யொழித்தும், அருந்தவம்புரிந்தும், அப்பயனால் அத்தெய்வலோக வாசிகளிறங்கி ஜலக்கிரீடைசெய்கின்ற இடத்தைமட்டும், அறிந்தேனல்லாது அவர்களை என்கண்ணாற் கண்டதில்லை, இவ்விதமிருக்க, இளம்பிராயம்வாய்ந்த இராஜபுத்திரனாகிய நீ இப்பெருங்காரியத்தை யெண்ணி; இக்கூற்றதை நினைக்கமிகவும் வியக்கத்தக்கதேயென் மொழிந்து லீலாவினோதனுரைத்த வார்த்தைகளைக்கேட்டு இவ்வரசிளங்குமரனால் அத்தேவலோகவாசிகளைச் சீக்கிரத்தில் நமதாச்சிரமத்திற் காணும்படி நற்றவப்பயனே முற்றியதென மனத்திலுத்தேசித்துக்கருணைகூர்ந் துரைப்பாராயினர் "ஹே. மன்னா! இவ்வாச்சிரமத்திற்கு வடபால் இரண்டு நாழிகைவழி தூரத்தில் ஓர்பிருந்தாவன மிருக்கின்றது. அதைக்கடந்தப்பால் அரைநாழிகைவழி செல்லுவையாகில். நிர்மலாவென்னும் ஓர்நதிகுறுக்கிடும் அந்நதியையுங்கடந்து சற்றுமேற்குநோக்கின் ஆங்கு நாற்புறமும்படி களமைத்த வோர்தடாகமும், அத்தடாகத்தின் கீழ்திசைப் படித்துறைக் கருகிலோர்புன்னை மாமும் இருப்பதோடு நாற்புறமும்பல புஷ்பச்செடிகள் பூத்துநறுமணங் கமழாநிற்கும் அவ்விடத்திற்கு அருனோதயகாலத்தில் அந்தரமாதர் எழுவரும்வந்து தங்கள் ஆடைகளைக் களைந்து அப்புன்னைமரத்தடியில் வைத்துவிட்டுப் புனலாடுவர். அச்சமயமறிந்து அவர்களுக்குத் தெரியாமல் அவ்வாடைகள் ஏழையுஞ்சுருட்டி யெடுத்துக்கொண்டு அதிகவிரைவுடன் திரும்பிநிர்மலா நதியைக்கடந்து அன்னோன்ன சொன்ன போதிலுந்திரும்பிப் பாராது பிருந்தாவனத்துக்கு வருவையாகில் அவ்வேழுமாதர்களும் உன்னிடம்வந்து உன்மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவார்கள் ஆதலின்யானுரைத்த, அனைத்தும் ஞாபகத்திருத்திச்சென்று நலமுடன்வருவா யென ஆசீர்வதித்து அன்றிரவில் தன்னிடம் தங்கியிருக்கும்படிசெய்து விடியஜாமத்தில் விடைகொடுத்தனுப்பினார்

லீலாவினோதன்:—மகரிஷி வாக்கியத்தை மனதினிற்பதித்து வடதிசைநோக்கிநடந்து அம்முனிவருரைத்த அடையாளங்கள் ஆங்காங்கு முன்னேயிருக்கக்கண்டு ஆனந்தப்பரவசங்கொண்டு நலமிகுந்த பிருந்தாவனத்தையும், நிர்மலாநதியையுங்கடந்து நாழிகைமூன்றிக்குள் தண்புனல்நிறைந்த தடாகமடைந்து ஆங்குள்ள புன்னைமரத்திற்கெதிரிலிருக்கும் புஷ்பச்செடிகளுக்குட் புகுந்து மறைந்து புனிதமாதர் வரும்பொழுது பார்த்திருந்தனன்.

தேய்வலோகஸ்திரீகள்:—தினம்வரும் வழக்கம்போல் அத்தடாகத்துக்கு அன்றும்வந்து தங்கள் ஆடைகளையுரிந்து ஒன்றுசேர்த்து அப்புன்னைமரத்தடியில் வைத்துவிட்டுப் புனலாடிக்கொண்டிருந்தனர்.

லீலாவினோதன்:—உடனே அம்மாதர்களறியாவண்ணம் அதிஜாக்கிரதையாய், அவர்கள் சேலைகள் ஏழையுஞ்சுருட்டி எடுத்துக்கொண்டு திரும்பிப்பாராது, தீவிரமாயோடி நிர்மலாநதியைக்கடந்து பிருந்தாவனத்தினுட்புகுந்து வெகுகுதூகலத்துடனிருந்தனன்.

தேய்வலோகஸ்திரீகள்:—ஜலக்கிரீடைசெய்து முடித்துத்தங்கள்தங்கள் சேலைகளையுடுத்திக் கொள்ளப்பார்க்குங்கால் காணாமலாச்சரியமடைந்து சற்று நிதானித்து "பெண்புத்தி பேதைமையென்ற பழமொழிநமக்கே பலித்த"தென்று வியாகூலமடைந்து அவ்வாடைகளைப் பூலோகத்தாரனுபவிக்கவிடாமல் கைப்பற்றக்கருதி அவற்றையெடுத்துச் சென்றலீலாவினோதனைத்தேடிவருகையில் அன்னவன் பிருந்தாவனத்திலிருப்பதைக்கண்டு ஆங்குள்ள ஓடையிலிறங்கி கழுத்தளவுதண்ணீரில் நின்றுகொண்டு லீலாவினோதனைக் கூவியழைத்து, அவன்முகத்தைப்பார்த்து நீயார்? எந்தலோகவாசி, உமதுபெயரென்ன? இந்தக்குற்றகாரணம்யாது, எங்கள் துகில்களையேன், கைக்கொண்டீரென வினவினர்.

லீலாவினோதன்:—"யான் பூலோகவாசி கிரிராஜபுரத்"தரசனாகிய கோலாகலபூபதியின் மைந்தன் எனதுநாமம் லீலாவினோதன், யானேமகராஜபுரத்தை யரசுபுரியுங் கஜேந்திர பூபதியின் புதல்வியாகிய பிரும்மானந்தத்தின் கெர்வத்தையடக்கி அன்னவளைத் தங்களால் விவாகம்புரியக்கருதி உங்களையழைத்துச் செல்வதற்கிங்குற்றேன்,, னெனமொழிந்தனன்.

தேவலோகஸ்திரீகள்:—லீலாவினோதனிடமிருக்குந்தங்கள் ஆடைகளைக்கைப்பற்ற வேண்டிய நிருப்பந்தத்தினாலும் அன்னோன்தனக்கு மணம் முடித்துவைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் நிமித்தத்தாலும் அவன்கருத்திற்கிணங்கி வாக்களித்தனர்.

லீலாவினோதன்:—தன்கையிலிருந்த ஆடைகளை அம்மாதர்களுக்கு முன்னால் ஓடைக்கரையில் வைத்துவிட்டுச் சற்றுமறைவிலிருந்தனன்.

தேவலோகஸ்திரீகள்:—ஜலத்தினின்றுங் கரையேறித்தங்கள் தங்கள் ஆடைகளையுடுத்திக் கொண்டு அப்பால்தங்களிருப்பிடஞ் செல்லஅனுமதி கேட்டனர்.

லீலாவினோதன்:—அத்தேவமாதர்களைத் தங்களிருப்பிடஞ் செல்லக்கூடாதென்றும் வாக்களித்தபடி மணஞ்செய்துவைப்பதற்காகத் தன்னுடன் வரவேண்டுமென்றும் சொல்லினன்.

தேவலோகஸ்திரீகள்:—"இப்போது நாங்கள் உம்முடன்வந்தால் தேவராஜனது சாபத்திற் குள்ளாகும்படி நேரிடும் ஆதலால்எங்களைப் பார்க்கவிரும்புஞ்சமயந்தோறும் நாங்கள்வருவதற்கேதுவாய் ஏழுகணையாழிகள் கொடுக்கின்றோம் அக்கணையாழிகளை ஒருவிரலிலணிவீராகில் உடனேஎழுவரும்உம்மிடம்வந்து உம்மைத்திருப்தி செய்துபோகின்றோம்" மெனச்சொல்லித் தங்கள் ஏழுகணையாழிகளையும் லீலாவினோதனிடங் கொடுத்து அவனனுமதிபெற்றுத் தங்களிருப்பிடமாகிய தேவலோகஞ்சென்றார்கள்.

லீலாவினோதன்:—அத்தேவலோகஸ்திரீகளால் கொடுக்கப்பட்டகணையாழிகள் சகிதம்முல்லை வனத்தையடைந்து சாந்தமுனியைத் தெரிசித்துத்தான் அம்முனிவரைப் பிரிந்துபோனதுமுதல் தேவலோகஸ்திரீகளை வசப்படுத்திக் கணையாழிகளைப் பெற்றுமுல்லை வனமடைந்தவரை நடந்தசம்பவங்களைச் சவிஸ்தாரமாய்மொழிந்தான்.

சாந்தமுனி:—"இராஜபுத்திரா! நீ வசப்படுத்திய ஸ்திரீகளையிங்கழைத்துவரவேண்டியதிருக்க அவ்விதமின்றித் தனிமையாய்வந்த காரணம்யாது" என்றுரைத்தார்.

லீலாவினோதன்:—"ஸ்வாமிநானவர்களைக் கையோடு அழைத்துவந்துவிட்டால் எனக்குமவர்களுக்குந் தேவராஜனால் கெடுதியேற்படுமென்றும் மேலுமவர்களை யான்நினைக்குஞ்சமயங்களில் வருவதாகவும் வாக்களித்துக்கணையாழிகளைக் கொடுத்துச்சென்றனர் யானுமவர்கள் வாக்கைநம்பித்தனியேவந்து விட்டேன அம்மாதர்களை இதோவரவழைக்கின்றேன்" என்றுதன்னிடமிருக்கும் ஏழுகணையாழிகளையும் ஒருவிரலிலணிந்தான்.

தேவலோகஸ்திரீகள்:— லீலாவினோதனைக் குறித்தவாக்கின்படி அறுசுவையுண்டி வாசனாதிகள்சகிதம்வந்து அவனையுபசரித்துப் போஜனத்திற்கழைத்தனர்.

லீலாவினோதன்:— என்குருவாகிய மகரிஷியவர்களுக்கும் போஜனஞ்செய்து வைக்கவேண்டுமெனச் செப்பினன்.

தேவலோகஸ்திரீகள்:— லீலாவினோதன கருத்தின்படி இருவருக்கும் போஜனமளித்து வாசனாதிகளுதவி காபனமுஞ்செய்து முடித்தார்கள்.

சாந்தமுனி:— லீலாவினோதனுடைய சாமர்த்தியத்தை நினைந்து பேரானந்தமடைந்து தன்னிடமிருந்த சந்திராயுதத்தை நிராயுதபாணியாகவிருக்கும்லீலாவினோதனுக்குக் கொடுத்து அதற்குள்ள மந்திரோபதேசமும் செய்து அதைப் பிரயோகஞ்செய்கின்ற விதமுந் தெரிவித்துச் சமீபத்திலுள்ள மல்லிகைவனத்திற் சஞ்சரிக்குஞ் சுத்திரனிடமிருக்குங் குண்டலத்தையும் புன்னைவனத்திற் சஞ்சரிக்கும் சுத்திரனிடத்திலிருக்கிறகனககங்கணத்தையும் நீபெறுவையென அருள்புரிந்து "எமன்னவன் மைந்தா அவ்விருவரும் தன்னிடமிருப்பவைகளின் மர்மமறியாததால் விஷயமறியாது நிஷ்பிரயோஜனமாய் வைத்திருக்கிறார்கள். நீ அக்குண்டலத்தைக் காதிலணிந்து உனக்கு வேண்டிய திரவியத்தை மனதிலுத்தேசித்து அக்குண்டலத்தைத்தொடுவாயாகில் நீயுத்தேசித்த திரவியம் க்ஷணமே கிடைக்கும் மேலுமந்தக்கனககங்கணத்தைக் கையிலணிந்து பூலோகத்திலெவ்விடத்திற்குச் செல்லவேண்டுமோ அதைமனதில் நினைத்துக்கையிலுயர எற்றுவையாகில் நீநினைத்த விடத்திற்குக் க்ஷணமாத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்க்கும் அதற்குரிய மர்மமந்திரங்களையுபதேசிக்கிறேன்" என்று அருகிலழைத்து

த்தை யுபதேசித்து ஆசீர்வதித்து தேவஸ்திரீகளைப் பார்த்து எனதெண்ணம் ஈடேறும் பொருட்டு என்னைத் தேவேந்திரனிடம் கொண்டுபோய்ச்சேர்ப்பிக்கவேண்டுமெனத் தெரிவித்தார்.

தேவஸ்திரீகள்:—சாந்தமுனி கேட்டுக் கொள்ளுதலின்பேரில் லீலாவினோதன் அபிப்பிராயப்படி சாந்தமுனியை அழைத்துக் கொண்டு லீலாவினோதனிடம் அனுமதிபெற்றுத் தங்களிருப்பிடஞ்சென்று சாந்தமுனியைத் தேவேந்திரனிடஞ் சேர்ப்பித்தார்கள்.

டி. எம். எஸ். சுந்தராஜலு நாயுடு
காரைக்குடி.

தமது சந்தா நேயர்கட்கோர்
வேண்டுகோள்.

எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களால்; நமது பத்திரிகை காலந்தாழ்த்து வெளியாவது பற்றி நாம் மிகவும் வருந்துகிறோம். காலத்தில் காகிதங்கள் கிடைக்காததும், திடீரென்றேற்பட்ட தேக அசௌகரியமுமே; தாமதத்திற்கு காரணமாகும்.

நமது எண்ணத்திற்கு மாறாக நேர்ந்த இச் சம்பவங்கள் பற்றி, நேயர்கள் தங்கள் சுபாவத்தின்படி; நம்மை மன்னிப்பார்களென்று நம்புகிறோம்.

காளயுக்தி-ளு சித்திரை-மீ முதல் அந்தந்த மாத சஞ்சிகை அம்மாதத்திலேயே வெளிவரக்கூடிய ஏற்பாடுகளைத் தீவிரமாய்ச் செய்து வருகிறோம். ப—ர்.

OFFICE OF THE … 3 MAR 19 … HA …

மேனகா

15-வது அதிகாரம்

கண்டதும் பொய்; விண்டதும் பொய்

பத்தாவது அதிகாரத்தின் முடிவில், நைனா முகம்மது மரக்காயன், கட்டிலின் மீது படுத்திருந்த பெண்மணியை மேனகாவென்று நினைத்து, அவளைப்புகழ்ந்தும், தன் மனைவியைத்தூற்றியும், அருகில் நெருங்கி அவளது முகத்தை வலுவாகத் திருப்ப, தன் மனைவி நூர்ஜஹானே அவ்விதம் படுத்திருந்தவளென்றறிந்து திடுக்கிட்டு அச்சங்கொண்டு மயங்கி வீழ்ந்துவிட்டானென்பது சொல்லப்பட்டதல்லவா.

நூர்ஜஹானென்ற பெண்ணரசியின் அப்போதைய மனோநிலைமையை உள்ளவிதம் அறிந்துகூற யாரே வல்லவர்! மனிதர் முதல் விலங்கு, பறவை, புழு முதலிய இழிந்த ஜெந்துக்கள் வரையிலுள்ள ஆன்மாக்கள் எல்லாம் எதைப் பொறுக்கினும் பொறுக்கும்; ஆனால் அதனதன் ஜோடி அதன் கண் முன்னாகவே இன்னொன்றுடன் விபசாரம் செய்வதை மாத்திரம் பொறுத்துச் சும்மாவிருப்பது இயலாத காரியமல்லவா? அதனால் உண்டாம் கோபமும், பகைமையும், மூர்க்கமும் அளவிறந்தனவாகும்; குத்து, வெட்டு, கொலை, சண்டைமுதலிய கொடிய செய்கைகள் உண்டாதல் நிச்சயம். அப்படியே தன் கணவனுடைய கன்ன கடூரமான சொற்களையும், செய்யத்தகாத செயல்களையும் ஆரம்பமுதல் அன்றிரவு கேட்டும் கண்டுமிருந்த நூர்ஜஹானின் மனதிலெழுந்த கோபமும் பொறாமையும் ஒரு சண்டமாருதத்திற்கிணையாயிருந்ததென்று கூறுவதும் குன்றக் கூறியதாகும். "மேலும் என்ன நடக்குமோ பார்க்கலாம்" என்று நினைத்து அவள் மிகவும் பாடுபட்டு தன் மனதின் நிலைமையை வெளியிற்காட்டாமல் அடக்கிக் கொண்டிருந்தாள். அன்று நிகழ்ந்தவையாவும் கனவோ அன்றி உண்மையோ என்று ஐயமுற்றாள். அதுகாறும் தன்னிடத்தில் பரமயோக்கியனைப் போலவும் மகா சுத்தனைப்போலவும் ஏகபத்தினி விரதனைப்போலவும் நடித்துவந்த தனது கணவன், தன்னிடம் வரும்

போதெல்லாம் 'கண்ணே!' என்றும் 'முத்தே!' என்றும் கொஞ்சிக் குலாவி 'உன்னை ஒரு நொடி விடுத்தாலும் உயிர் வாழ்வேனே' என்று சொல்லி வஞ்சித்துத் தன் மனதையும் காதலையும் ஒருங்கே கொள்ளை கொண்ட கணவன்—தன் கண்ணெதிரில் அப்படிச் செய்ததை உண்மையென்று அவள் மனது எளிதில் நம்பவில்லை. அவளுக்கு யாவும் வியப்பையும் திகைப்பையும் கொடுத்தன. சித்தப்பிரமை கொண்டவளைப்போல உருட்டி உருட்டி விழித்தாள். அவளுடைய மனதிலெழுந்த உணர்ச்சிகளும் எண்ணங்களும் புயற்காலத்தில் கடல் கொந்தளித்து ஆர்ப்பரித்தலைப்போல விருந்தன. ஆனால் திகைப்பு என்னும் பூட்டினால் வாயின் சொற்கள் பூட்டப்பட்டு வெளிப்படாமல் தடைப்பட்டு நின்றன.

அவள் ஒரு பெரிய குடும்பத்திலுதித்த உத்தமி; நற்குண நல்லொழுக்கத்திற்கு இருப்பிடமானவள்; தமிழ்நாட்டுப் பெண்ணாகையால், அவள் இந்துஸ்தானி பாஷையிற் பேசுதல் மாத்திரம் அறிவாள். தமிழ், ஆங்கிலம் முதலிய இரண்டு பாஷைகளிலும் நல்ல பாண்டித்தியம் பெற்றவள்; அவ்விரண்டு பாஷைகளிலும் கவிகள் பாடும் திறமைவாய்ந்தவள்; அழகிலும், புத்தியிலும் சிறந்தவள்; இயற்கையழகும் குணமும் வாய்ந்த அவள், கல்வி கேள்விகள் நிரம்பப் பெற்றுப் பட்டைதீட்டப்பெற்ற வைரக்கல்லைப்போல, தனிச்சுடராய் விளங்கினாள். அவளுடைய தந்தை சென்னை கவர்னரின் நிருவாக சபையில் ஒரு அங்கத்தினர்; அவர் செல்வாக்கும், செல்வமும் நிரம்பவுடையவர். அவரது அருமைப் புத்திரியாயிருந்தும், அவள் செருக்கென்பதேயற்றவளாய், பெண்களுக்கெல்லாம் நற்பெயரும் மேம்பாடும் தேடிக்கொடுக்கும் சட்டகமாய் விளங்கினாள். அவளது நடை, உடை, தோற்றம் யாவும் மிருதுத்தன்மையையும், பொறுமையையுமே சுட்டின. அவள் தமிழ்ப் பாஷையிலுள்ள இதிஹாச புராணங்கள் நீதி நூல்கள், சமய நூல்கள் முதலியவற்றை நன்றாகப் படித்தவளாதலின், இந்துக்களிடம் சகோதர வாஞ்சையையும் மனமார்ந்த அன்பையுங் கொண்டவள். பரிசுத்தமான பழக்க வழக்கங்களையுடையவள். கணவனிடம் பக்தியும், நம்பிக்கையும் நிரம்பக்கொண்டவள்; அவனே தனது உயிராகமதித்தவள். அத்தகைய கபடமற்ற ஸ்திரீரத்தினம் தன் விஷயத்தில் நைனா முகம்மது அந்தரங்கத்திற் செய்து வந்த வஞ்சகங்களையறிந்து, அதற்குப்போதியசான்றையும் கண்ணிற்கெதிரே காண்பாளாயின், அவளது மனது எப்பாடுதான் படாது? மாயாண்டிப் பிள்ளையின் கடிதங்களைக் கண்டபோது வராகசாமியின் மனம் எப்பாடுபட்டதோ, மேனகாவைப் பற்றி எவ்வகையான எண்ணங்களும் உணர்ச்சிகளும் கொண்டதோ அவற்றைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகரித்த அல்லலையும் ஆத்திரத்தையும் நூர்ஜஹானது மனம் பெற்றது; அவள் புருஷனாகவும், நைனா முகம்மது மனைவியாகவுமிருந்தால், தன் கண்முன்னே கண்ட விபசார நடத்தையின் பொருட்டு நைனாமுகம்மதைக் கத்தியாற் குத்திச் சித்திரவதை செய்து கண்டதுண்டமாக்கியிருப்பாள். அல்லது நைனாமுகம்மதுவின் கண்காண அவன் மனைவி அவ்விதத் தீயசெயலைப்புரிய முயன்றிருந்தால், அவனும் அப்படியே செய்பவனென்பதற்கு ஆக்ஷேபனையில்லை. ஆனால், பெண்பேதையாகிய அவள் அவனை அவ்வாறு தண்டித்தல் கூடுமா? கணவன்மீது அதிகாரமற்ற அபலையின் மனதில் எவ்வளவு வீராவேசம் தோன்றினும் அதனால் யாது பயன்? கணவன் மனைவி என்னும், சம்பந்தத்தில் பலவான் கட்சியே நீதியானதாகவல்லவோ இருந்து வருகிறது. நூர்ஜஹான் யாது செய்தாள்? ஆண்மக்களைப்போலக் கொல்ல வேண்டுமென்னும் நினைவைக் கொண்டாளா? இல்லை; தனது ஆருயிர்க் கணவனது தேகம்—தனக்கே உரிய பொருளாகிய தன் கணவனது—தேகம் அன்னிய மாதரால் தீண்டப்படுவதாவென்னும் பொறாமை யொன்றையே கொண்டாள். அவனது தேகத்தின் மதிப்பு அவள் பார்வைக்கு முன்னிலும் கோடி மடங்கு உயர்ந்து தோன்றியது. பிற மாதர்மீது சிதறிச் சென்றிருந்த ஆசை முழுதும் தன்மீது திரும்பிவிட, இந்த உலகத்தை அவள் கொடுக்கக் கூடுமாயின், அப்படியே செய்து விடுவாள். கணவனைத் தண்டிக்க வேண்டுமென்னும் விருப்பத்தை அவள் கொள்ளாவிடினும் அவன் விஷயத்தில் பெரிதும் அருவருப்பும், ஆத்திரமுமடைந்தாள். உடனே எழுந்து அவனை விடுத்து அப்பாற் போய்விட வேண்டுமென்னும் பதை பதைப்புத் தோன்றியது. படுத்திருந்தவள் சுருக்கென எழுந்து உட்கார்ந்தாள்.

161426

அதற்குள், முதல் பயத்திலிருந்தும் மனவதிர்ச்சியிலிருந்தும் தெளிவடைந்த நைனா முகம்மது சிறிது துணிவைப் பெற்றான். அவன் தனது சபல புத்தியினாலும் தன்னோடு பழகும் மற்ற புருஷரின் கெட்ட நடத்தையைக் கண்டும் விபசாரத்தில் விருப்பங்கொண்டானாயினும், அவன் தன் மனைவியின் பாண்டித்தியம், புத்திசாலித்தனம், நற்குணம் முதலியவற்றைக் கண்டு அவளிடம் உள்ளார்ந்த அச்சங்கொண்டவன்; நிற்க, அவளுடைய தந்தையின் உயர்ந்த பதவி

யையும் செல்வாக்கையும் கருதி, அவளிடம் பெருத்த மதிப்பும் வைத்திருந்தவன். ஆகையால் அவன் அவளைக் கேவலம் தன்கீழுள்ளடங்கிய மனைவிதானே யென அசட்டை செய்யத் துணியவில்லை. அவள் வெளியிற் போய் எவ்விதமான தீங்கைச் செய்வாளோ, விஷயத்தை அவளுடைய தந்தை யறிவாரானால் அவர் எவ்விதமான துன்பமிழைப்பாரோ என்று பெரிதும் அச்சமுங் கவலையுங்கொண்டான். அவளால் மேனகா விடுவிக்கப்பட்டுப் போனாளென்பதை யூகித்துக்கொண்டானாதலின், மேனகா தன் கணவனிடம் சென்று நிகழ்ந்ததைத் தெரிவிப்பாளாயின் அதனால் தனக்கு எவ்வகையான பொல்லாங்கு சம்பவிக்குமோ என்று ஒரு புறத்தில் கலங்கினான்; மேனகா எங்குசென்றனளென்பதை அவளிடம் அறிந்து, மேனகா இன்னமும் தன் வீட்டிலிருந்தால், தன்னைக் காட்டிக்கொடாமலிருக்க நூர்ஜஹான் மூலமாக ஏற்பாடுசெய்ய நினைத்ததுமன்றி, தன் மனைவியின் கோபத்தையும் தணித்து அவளுடைய அன்பைத்திருப்பவும் நினைத்தான்; இவ்விரண்டு காரியங்களும் மிகவும் எளிதில் சாதிக்கக்கூடிய விஷயங்களல்லவா! அவ்வெண்ணம் மலையை விழுங்கியவன் அதை ஜீரணம் செய்துகொள்ள சுக்குக்கஷாயம் குடிக்க நினைத்ததுபோன்றதே! அவன், எழுந்து உட்கார்ந்த தன் மனைவியின் கரத்தை மெல்லப் பிடித்தான். ஆலகால விஷத்தைக் கொண்ட கொடிய நாகம் தன் கையின்மேல் ஊறியதைப்போல மதித்த நூர்ஜஹான், தன் கையை அப்பால் இழுத்துக்கொண்டு விரைந்து கட்டிலைவிட்டுக் கீழே இறங்கினாள். அவனும் எழுந்து பாய்ந்து அவளை இறுகக்கட்டிப் பிடித்தான். நூர்ஜஹானுக்கு அடக்கமுடியாத ஆத்திரமும், அழுகையும், அருவருப்பும் மிகுந்த உரத்தோடு பொங்கி யெழுந்தன. அவனைக் காண்பதற்கும் அவளது கண்கள் கூசின; தன் சுந்தர வதனத்தை அப்புறம் திருப்பியவண்ணம் பதைபதைத்தவளாய்த் தன்னை விடுவித்துக்கொண்டு போய்விட வேண்டுமென்னும் ஆவலோடு நின்றாள். நைனா முகம்மது அவளை முரட்டாட்டமாக இழுத்துக் கட்டிலில் உட்கார வைத்துத் தானும் அவளுக்கருகில் உட்கார்ந்து அவளது மோவாயை தன் வலக்கரத்தால் தாங்கி முகத்தைத் தன் பக்கம் திருப்பி நயமாக "அப்பாடா! எவ்வளவு கோபம்! எவ்வளவு ரோஷம்! நீ ஆண்பிள்ளையாக மாத்திரம் இருந்தால் இந்நேரம் என்பாடு திண்டாட்டமாயிருக்கும்" என்று மிகவும் கொஞ்சிய குரலாய்ப்பேசி, தன் முகத்தை அவளுடைய முகத்திற் கருகில் கொணர்ந்து "கண்ணே! இவ்வளவுதானா

உன் புத்தியின் மேன்மை! இதையெல்லாம் உண்மையென்று நினைத்துக்கொண்டாயா? ஆகா! பிராம்மணப் பெண்ணைப் போலவே யிருக்கிறாயே! இம்மாதிரி உடைதரிக்க நீ எங்கே கற்றுக்கொண்டாய்? இந்த உடையில் உன் அழகே குறைந்துபோய்விட்டதே! இதை நீ சீக்கிரம் விலக்கிவிட்டால், அதன் பிறகே, என் கண்ணாட்டியான நூர்ஜஹான் தன் இயற்கை அழகில் விளங்குவள். இதையெல்லாம் உண்மையென்று நினைக்காதே!" என்று தேன்போலமொழிந்து முகத்தில் முத்தமிட முயல அவள் மகா அருவருப்போடு தன் முகத்தை அப்பால் இழுத்துக்கொண்டு "எதையெல்லாம்?" என்று கேட்டாள்.

நைனா முகம்மது "என்ன ஒன்றையு மறியாதவளைப் போலக் கேட்கிறாயே! நடந்ததையெல்லாம் நான் திரும்பச் சொல்லவேண்டுமென்று ஆசைப்படுகிறாயா? அதிருக்கட்டும்; இந்தப்பெண் எங்கிருக்கிறாள்? இங்கேயே இருக்கிறாளா? தன்னுடையவீட்டுக்குப் போய்விட்டாளா? அதைத் தெரிவி. கோபிக்காதே, என் சீமாட்டி! 'ஆறுவது சினம்' என்று தினந்தினம் படித்துக்கொண்டே யிருப்பாயே; அதை நினைத்துக்கொள். இதன் உண்மையையெல்லாம் நான் உனக்கு பின்னால் விரிவாய்ச் சொல்லுகிறேன். அப்போது, நான் குற்றமற்றவனென்று நீ நிச்சயமாக அறிவாய். முதலில் அவள் எங்கிருக்கிறாளென்பதைத் தெரிவி." என்று தந்திரமாக மொழிந்தான்.

நூர்ஜஹான் ஒன்றையு மறியாதவளைப்போல "பெண்ணா! எந்தப் பெண்?" என்றாள்; நைனா முகம்மது புன்சிரிப்பைக்காட்டி "ஆகா! என்ன வேஷமிது? அவளை உனக்குத் தெரியாதா? கொஞ்ச நேரத்துக்கு முன் இங்கிருந்தாளே அவள் தான்; இதோ உன்மேலிருக்கும் உடைக்கு எவள் சொந்தக்காரியோ அவள்தான்" என்றான்.

நூர்ஜஹான் பைத்தியங் கொண்டவளைப்போல் உருட்டிப் பார்த்து "என்ன ஆச்சரியம்! இதெல்லாம் கனவில் நடக்கிறதென்றல்லவோ நினைத்தேன்! உண்மையாக இவ்விடத்தில் வேறொரு பெண் வந்தாளா? அவளிடம் சொல்லப்பட்ட வார்த்தையெல்லாம், உங்களால் சொல்லப்பட்டதுதானா?" என்றாள்.

அவள் பெருங்கொதிப்பை தன்மனதில் அடக்கிக்கொண்டுகேட்கிறாளென்பதை யுணர்ந்து எவ்விதமாயினும் அவளைச் சாந்தப்படுத்தாமல் விடக்கூடாதென உறுதிகொண்டு அவன் முன்னிலும் இளக்கமும் உருக்கமும் காட்டி, "நூர்ஜஹான்! என் தங்கமே! என்னைச்

சோதித்தது போதும்; காரியம் இப்படி விபரீதத்துக்கு வருமென்று எனக்கு முன்னமே ஒருவகையான சந்தேகமுதித்தது. இதை நீ தப்பாக நினைத்துக்கொள்வாய் என்று நினைத்தேன்; அப்படியே செய்துவிட்டாய். கோபிக்காமல் கொஞ்சம் பொறுமையோடு நடந்துகொள். நீ அருமையான உயர்ந்த குணமுடையவளென்பதை இந்த சமையத்தில் நீ அவசியம் காட்டக் கடமைப்பட்டவள். இதிலேதான் உன் மேன்மை இன்னமும் உயரப்போகிறது. ஒன்றையுமறியாத அசட்டுப் பெண்களைப்போல, நீயும் இப்படி ஆத்திர மடைவதைக் காண என் மனம் வருந்துகிறது. உன்னுடைய ஆழ்ந்த காதலைச் சோதனை செய்யவே இந்த நாடகத்தை நான் ஆடினேன். இது நிஜமான செய்கையல்ல. இதில் உன்னுடைய காதலின் பெருமையை உள்ளபடி அறிந்தேன். ஆனால் இதனால் உன்னுடைய உண்மைக் காதலை மாத்திரம் நான் அறிந்தேனன்றி உன்மீது எனக்குள்ள காதலை நீ சந்தேகிக்கும்படி செய்துகொண்டது மூடத்தனம். நான் இப்படி விஷப்பரிட்சை செய்திருக்கக்கூடாது. என் காதலை உனக்கு நான் இன்னொருமுறை நன்றாக மெய்ப்பிக்கிறேன். அதுவரையில் பொறுமையோடிரு; இப்போது பெருந்தன்மையோடு நடப்பாயானால் இதனால் உனக்கு ஒரு குறைவும் வராது. நாமிருவரும் இனி உயிரும் உடலுமென ஒன்றுபட்டு வாழலாம்'' என்று கூறி அன்போடு அவளைக்கட்டி யாலிங்கனம் செய்தான். குஷ்டநோய் கொண்டவரைக் கண்டு மனிதர் அருவருப்பைக்கொண்டு அஞ்சி விலகுதலைப் போல, அவள் அவனது ஆலிங்கனத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு அப்பால் நழுவி "என்ன இது! மறந்துவிட்டீர்களா? கழுதையிலும் தாழ்ந்த மிருகமல்லவா நான். தங்களைப்போன்ற மனிதப் பிறப்பினர் என்னைக் கையாலும் தொடலாமோ! சே! இதென்ன கேவலம் இழிவான காரியம்! இந்த எருமை மாட்டை இனி பார்ப்பதே இல்லையென்று இப்போதுதானே சொன்னீர்கள்! நீங்கள் மறந்தாலும் நான் மறக்கமாட்டேன். தங்கள் உத்தரவுப்படி நடக்க நான் கடமைப்பட்டவள். நான் போய்விட்டு வருகிறேன். இதுவே நான் தங்களைக் கடைசியாகப் பார்ப்பது; உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன்'' என்று கூறிக்கொண்டெழுந்து விசையாக இரண்டோரடிகள் வைத்தாள். பெரிதும் வெட்கி அவமான மடைந்த அவன் வழிமறித்துக் குறுக்கில் நின்று "கடைசியாகப் பார்ப்பதா! எங்கே போகிறாய்? உன்னை விட்டுப்பிரிந்து நான் ஒரு நிமிஷமும் உயிருடனிருப்பேனோ? என் சீமாட்டி! கோபித்தது போதும் உட்கார்ந்துகொள்; இந்த நடுராத்திரியில் எங்கே போகிறாய்? இப்படியே படுத்துக்கொள்.'' என்றான்.

நூர்ஜ.—எங்கே போகிறேனா! நான் மேனகாவின் வீட்டுக்குப் போக வேண்டாமா? மறந்து விட்டீர்களோ?

நைனா:—(அன்பாக) சே! நீ போகவேண்டாம்; நானே பெட்டி வண்டியில் வைத்து அவளைக் கொண்டுபோய் அவளுடைய வீட்டில் விட்டு வருகிறேன். இதற்காக நீ ஏன் போகவேண்டும்?

நூர்ஜ:—இப்படி முன்னுக்குப்பின் விரோதமாக நீங்கள் பேசினால் நான் எதைச் செய்கிறது? மேனகாவுக்குப்பதிலாக அவளுடைய புருஷனிடம் என்னை அனுப்புகிறேனென்று சொன்னீர்களே! அது ஞாபகமில்லையா? தங்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமல் அடிமையாகிய நான் வேறு எதற்காக இருக்கிறேன்? உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறேன்.—என்று மேலும் நடந்தாள்; கூர்மையான அம்பால் அடிக்கப்பட்ட பறவையைப்போல நைனா முகம்மது ஒரு நிமிஷம் தத்தளித்துத் தடுமாற்ற மடைந்தான்; தன்னுடைய பிழையை மறைக்கப்புன்னகை செய்தான். ஆனால் முகத்தில் அசடு வழிந்தது. குற்றமுள்ள மனதாகையால் தன்வினை தன்னையே சுட்டது. என்றாலும் அச்சத்தினால் தூண்டப் பட்டவனாய் விரைந்தோடினான், வாயிற்படியைக் கடந்து கொண்டிருந்த நூர்ஜஹானின் இடையில் கையைக் கொடுத்துக் குழந்தையையெடுப்பதைப்போலத் தூக்கிக் கொணர்ந்து கட்டிலின்மேல் பலவந்தமாக உட்காரவைத்து "நூர்ஜஹான்! என்ன இது? என்றைக்கும் என்மனம்போல நடப்பவள் இன்றைக்கு இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாயே! இது ஆச்சரியமாகவே இருக்கிறது! நான் கபடமாக அவளிடம் பேசியதை நீ உண்மையென்று நினைத்து இப்படிக் கோபிக்கிறாயே! உன்னை அன்னிய புருஷனிடம் அனுப்ப என்னைப் பேடியென்று நினைத்தாயா? வேடிக்கைக்காகச் சொல்லும் வார்த்தைகளையெல்லாம் நிஜமாக நினைத்துக் கொள்ளலாமோ? எவ்வளவோ படித்த புத்திசாலியான நீ இப்படிப் பிணங்குவது சரியல்ல'' என்று கூறிக் கெஞ்சி மன்றாடினான்.

நூர்ஜ:—இப்போதும் தங்களுடைய சொற்படித்தானே செய்யப்போகிறேன். ஏன் என்னை இப்படி முரட்டுத்தனமாக கட்டாயப்படுத்துகிறது? ஆண்பிள்ளைகளாகிய உங்களுக்கு உடம்பில் பலம்

அதிகம்; அபலைகளாகிய பெண்டு பிள்ளைகளைக்காப்பாற்றும்பொருட்டு ஆண் பிள்ளைகளுக்கு ஆண்டவன் அதிக பலத்தைக் கொடுத்திருக்கிறார். நீங்கள் பெண்டுபிள்ளைகளை வஞ்சித்துத் தம்மிச்சைப்படி வற்புறுத்துவதற்கு அந்த பலத்தை உபயோகிக்கிறீர்கள். உங்களுக்கு அதிக பலமிருக்கிறதென்று அதன் உதவியால் உங்கள் விருப்பமே சட்டமாய்ச் செய்கிறீர்கள். நீங்கள் எங்களது கண்ணிற் கெதிரே விபசாரம் செய்தாலும், நாங்கள் அதற்கு அநுசரணையாக விருந்து காதலராகிய உங்களிருவரையும் ஆசீர்வதிக்க வேண்டும்; ஆனால் நாங்கள் மாத்திரம் மிகவும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். இது என்ன நியாயமோ தெரியவில்லை. இது வலுக்கட்டாயமான நியாயமன்றி மனிதருடைய பகுத்தறிவுக்குக் கொஞ்சமும் பொருந்தாத நியாயம். அன்னிய புருஷனிடம் பெண்டாட்டியை அனுப்பும் பேடியா நான் என்கிறீர்களே? நீங்கள் ஒவ்வொரு தினமும் ஒரு அன்னிய ஸ்திரீயை அபகரித்து வருவதாகச் சொன்னீர்களே; அவர்களுடைய புருஷர்களெல்லாம் பேடிகளென்று நினைத்தீர்களா? நீங்கள் ஒருவரே உலகத்தில் பேடித்தனமில்லாதவர்கள் போலிருக்கிறது! புருஷர் அறியாமல் திருட்டுத்தனமாகக் கொணர்ந்து துணையற்ற இடத்தில் வைத்துக்கொண்டு பெண்களை வற்புறுத்துவது சூரத்தனம்போலிருக்கிறது! இவர்களுடையபுருஷர்கள்தாம் பேடிகளாயிற்றே. அவர்களுக்கு நேரில் போய் இந்தக் காரியத்தை ஏன் செய்யக்கூடாது? இருக்கட்டும்; இந்த விஷயத்தை நியாய ஸ்தலத்திற்கே கொண்டு போய் எது சூரத்தனமென்பதை அறிந்து கொள்வோம். இன்று வந்த மேனகா இந்நேரம் தன் வீடு போய்ச் சேர்ந்திருப்பாள். நாளையதினமே நியாயாதிபதியிடத்தில் வியாச்சியம் தொடருவதாகச் சொல்லியிருக்கிறாள். இங்கு நடந்த விஷயங்களையெல்லாம், நானும், என் அக்காளும், மற்றும் வேலைக்காரரும் நேரில் பார்த்திருந்தோம். அவளுடைய கற்பை அவளது கணவனுக்கு ருஜூப்படுத்த வேண்டுமல்லவா! அதற்காக எங்களையெல்லாம் சாட்சியாகக் கோரப்போகிறாள். நியாயாதிபதி, குரானை வைத்துக்கொண்டு சத்தியம் செய்யச் சொன்னால், நாங்கள் உயிர் போவதாயினும் பொய் சொல்ல மாட்டோம்; நடந்தவற்றையே சொல்வோம். அங்கிருந்து இந்த சூரப்புலி தப்பிவந்தால், இனிமேலும் தினந்தினம், ஒரு அன்னியப் பெண்ணைக்கொண்டு வரலாம்; ஆனால் மேனகாவின் புருஷனுக்கு என்னைக் கொடுத்து விட்டால், பிறகு தினம் தினம் இங்குவரும் பெண்களின் புருஷர்களுக்குக்

கொடுக்க அத்தனை நூர்ஜஹான்களுக்கு எங்கே போவீர்கள்? இதற்காகத்தான் தனியாக இந்த சயன அறையை வைத்துக் கொண்டிருக்கிறீர்களோ? அடாடா! என்னை எவ்வளவோ அருமையாக வளர்த்த என் தந்தை இருந்திருந்து என்னை நல்ல புருஷருக்குக் கொடுத்தார்! என் தலைவிதி இப்படியா இருக்க வேண்டும்! நான் அவரிடம் போய் எல்லாவற்றையும் சொல்லுகிறேன்; அவர் இதைக் கேட்டு மிகவும் சந்தோஷமடைவார். போய் வருகிறேன். இனி உங்கள் முகத்திலும் விழிப்பேனென்று நினைக்க வேண்டாம்; என்னை விடுங்கள்” என்று கூறித் திமிறிக் கொண்டெழுந்தாள். அவன் அவளை விடாமல் பிடித்துக் கொண்டே எழுந்து “சே! என்னபிடிவாதம் இது? உனக்கு நான் உண்மையில் வஞ்சகம் செய்வேனென்று நினைத்தாய்? என்ன முட்டாள்தனம் இது! உன்மனதைப் பரிட்சை செய்தேனென்று நான் எவ்வளவு சொல்லியும் நீ நம்ப மாட்டேனென்கிறாயே? உனக்கு என்மீது அந்தரங்கமான காதலிருப்பதாக இதனால் உணர்ந்து விட்டேன். என்னைப் பார்க்கிலும் பாக்கியவான் ஒருவனுமிருக்கமாட்டான். நான் இப்போது அடையும் ஆநந்தத்திற்கு அளவில்லை. அதை வீணாக நீ கெடுக்காதே; இனி நான் அரை நொடியும் உன்னைவிட்டுப் பிரிவதில்லை. உன்னையே ஆண்டவனாக மதித்துக் கொண்டாடுவேன். கவலைப்படாதே” என்று நயந்து கெஞ்சிக் கூத்தாடி அவளை அணைத்து சரச சல்லாபம் செய்யத் தொடங்கினான். அதுகாறும் தன்னுடைய ஆத்திரத்தை மிகவும் பாடுபட்டு அடக்கிக்கொண்டிருந்தவள், தன் பொறுமையை இழந்து, கோபமூட்டப்பட்ட பெண் சிங்கத்தைப்போலானாள். மகா ஆத்திரத்தோடும் கம்பீரமாகவும் தன் கணவன் முகத்தைப்பார்த்து “இது யாரை ஏமாற்றும் வித்தை? நான் ஒன்றையு மறியாதமுட்டாளென்று மதிக்கவேண்டாம். இது வரையில் எனக்குத் தெரியாமல் என்னை முட்டாளாக்கி யதிலிருந்து, எல்லாவற்றையும் நான் அறிந்த பிறகும் என்னை ஏமாற்ற நினைத்தீர்களோ? அது ஒருநாளும் பலியாது. இந்த நியாயத்தையும் கச்சேரியில் சொல்லிக்கொள்ளுவோம்” என்று கூறித் தன் முழுபலத்தையும் செலுத்தி அவனை மீறித்தன்னை விடுவித்துக் கொண்டு விரைந்தோடினாள். எதிர் பாராத அந்த அம்பு பாய்ந்ததனால் தளர்வடைந்து சிறிது தயங்கியபின் எதையோ நினைத்துக்கொண்டு அவளைத் துரத்தியோடினான். அவள் அந்த அறையை விடுத்து அப்பாற் சென்றாள். அவனும் விடாமல் தொடர்ந்

தான். இரண்டொரு அறைகளைக் கடந்தவுடன் அவள் "அக்காள்! அக்காள்!" என்று உரக்கக் கூவ, சற்று தூரத்திலிருந்து, "ஏன் அம்மா, இதோ வந்தேன்" என்று இன்னொரு குரல் கேட்டது. அதைக் கண்ட நைனா முகம்மது தயங்கி நின்று விட்டான். அவ்வீட்டில் இரண்டு நாட்களாக வந்திருந்த நூர்ஜஹானுடைய அக்காள் கோஷா ஸ்திரீயாதலால், அவளை நைனாமுகம்மது பார்த்தல்கூடாது; ஆகையால், தான் செய்யவேண்டுவதென்னவென்பதை யறியாமல் தத்தளித்துக் கலங்கினான். அச்சம் மேற்கொண்டு அவனைப் பெரிதும் வதைத்தது. நிற்க வலுவற்றவனானான். அவர்கள் என்ன செய்வார்களோ, மேனகா எங்கிருக்கிறாளோ, அவள் தன் வீட்டிற்குச் சென்றால் என்ன துன்பம் சம்பவிக்குமோ, அதைத் தன் மாமனார் உணர்ந்தால் அதனால் என்ன விபரீதம் நேருமோ வென்று பலவாறு நினைத்துக் கலங்கினான். என்றாலும், தன் மனைவி தன்னை எவ்விதம் கோபித்துப் பழித்தாலும் தன் மீதுள்ள ஆழ்ந்த அபிமானத்தினால் தன்னைக்காட்டிக் கொடுக்கமாட்டாளென்று ஒரு அந்தரங்கக் குரல் அவன் மனதில் கூறியது. மிகவும் களைப்படைந்தவனாய்த் தன் சயன அறைக்குப் போய்க் கட்டிலிற்படுத்து நித்திரையின்றி வருந்திக்கிடந்தான்.

16-வது அதிகாரம்.

திரிசங்கு சோர்க்கம்

மேனகா காணாமற்போன தினத்திற்கு நான்காம் நாட் காலை ஏழுமணி சமயம்; சாமாவையர், பெருந்தேவி யம்மாள், கோமளம் ஆகிய மூவரும் வழக்கப்படி, வராகசாமியின் வீட்டுக்கூடத்தில் உட்கார்ந்திருந்தனர். அதற்கு முதல்நாள் மாலையில்தான் வராகசாமி மோட்டார் வண்டியின்கீழ் அகப்பட்டுக் கொண்டானாகையால், அவர்களுடைய முகம் மிகவும் கவலையைத் தோற்றுவித்தது. பெருந்தேவியம்மாள் சாமாவையரைப் பார்த்து "மேனகா போன விஷயத்தைப்பற்றி போலீஸ் இன்ஸ்பெக்டர் உன்னிடம் கேட்டாரென்றாயே! அவருக்கு இதையார் சொல்லியிருப்பார்கள்? ஒரு வேளை மேனகா மரக்காயன் வீட்டிலிருந்து தப்பித்துக் கொண்டு தஞ்சாவூருக்குப் போயிருப்பாளோ? அங்கிருந்து அவளுடைய அப்பன் இந்த ஊர் போலீசாருக்கு இதைப்பற்றி எழுதியிருப்பானோ? காரியம் அப்படி நடந்திருந்தால் நம்முடைய பாடு திண்டாட்டந்தான்." என்றாள்.

உற்சாகமற்றவராயிருந்த சாமாவையர் "நன்றாய்ச் சொன்னாய்! நீ மரக்காயன் வீட்டுக்குள் வந்து பார்த்திருந்தும் இந்த சந்தேகம் உனக்கேன்? அவன் மாளிகைக்குள் இரகசியமான அறைகள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றில் ஒரு அறைக்குள் மேனகாவை விட்டுப்பூட்டி யிருக்கிறானே! அவள் இனி வெளியில் வருவது எமலோகத்துக்குப்போன உயிர் மீளுவதைப் போலத்தான். இந்த விஷயத்தில் மரக்காயன் மகா கெட்டிக்காரனல்லவா; அவனுக்குத் தெரியாத தந்திரமே இல்லை. அவன் வீட்டில் நானும் இன்னும் எத்தனையோ குமாஸ்தாக்களும், ஏராளமான வேலைக்காரர்களும் வேலை பார்த்து வருகிறோம்! அவன் வீட்டில் நடந்த இந்த விஷயம் யாருக்காவது தெரியுமா? ஒருவருக்கும் தெரியாது; காதும் காதும் வைத்த மாதிரி இது நடந்து போயிருக்கிறது; அவன் ஒன்றையு மறியாதவனைப் போலவும், ஏதோ வியாபார நிமித்தம் போகிறவன் போலவும் நாகைப்பட்டணம் போய்விட்டானாம். அவளையும் நாகைப் பட்டணத்திற்குக் கொண்டுபோய் பந்தோபஸ்தாக, வைத்திருக்கிறானோ, அல்லது அவனுக்கு அந்தரங்கமான ஒரு வேலைக்காரி இங்கிருக்கிறாள்; அவள் வசம் மேனகாவை ஒப்புவித்துப் போயிருக்கிறானோ தெரியவில்லை. எந்த வகையிலும், அவள் அவனிடமிருந்து தப்பிப் போயிருக்கமுடியாது." என்றார்.

பெரு:—அப்படியானால், டிப்டிகலெக்டரே நேற்று நமக்குக்கொடுத்த தந்தியோடு போலீசாருக்கும் தந்தி கொடுத்திருக்கவேண்டும்.

சாமா:—அப்படி இருக்கலாம்.

கோமளம்:—அவள் மரக்காயனுடைய வீட்டிலிருந்து கொண்டே போலீசாருக்காவது, அவளுடைய அப்பனுக்காவது, வராக சாமிக்காவது கடிதம் எழுதி, நாமே துலுக்கனிடம் அவளை விற்றவர்களென்று தெரிவித்து விட்டால், போலீசார் அவனைப் பிடித்துக் கொள்வார்களே! தான் தப்பும் பொருட்டு அவனே நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டால், நாம் என்ன செய்கிறது?

சாமா:—பைத்தியந்தான், அவள் கடிதம் எழுதி நாக்கை வழித்துக் கொள்ளவேண்டியதுதான்; அந்தக் கடிதத்தை வெளியில் யார் எடுத்துக் கொண்டுபோய் தபாலில் சேர்க்கிறது? முதலில் அவளுக்கு அங்கே காயிதம் யார்கொடுக்கப் போகிறார்கள்? அதைப் பற்றிக் கவலையேயில்லை. அவனுடைய தலை போவதாயினும், அவன் நம்மை ஒரு நாளும் காட்டிக் கொடுக்கமாட்டான். அவன் வீட்டிற்குள் போலீசார் திடீரென்று நுழைந்துவிட முடியுமா? உள்ளே இருக்கும் கோஷாப் பெண்டுகள் அப்புறம் போக சாவகாசம் கொடுத்த பிறகே போலீசார் உள்ளே நுழையவேண்டும். அதற்குள் மேனகா பூமிக்குள்ளிருக்கும் அந்தரங்க அறைக்குள் விட்டுப் பூட்டப்படுவாள். அந்த இடத்தை எவனும் கண்டுபிடிக்க முடியாது; அந்த சாமர்த்தியமில்லாமற்போனால், அவன் துணிந்து இதில் இறங்குவானா?

கோமளம்:—அவனுடைய வீட்டுக்குள் இருக்கும்போது அவளைக் கண்டுபிடிக்க முடியாது. அது சரிதான். அவள், அங்கிருக்கும் வேலைக்காரிக்கு லஞ்சம் கொடுத்து வெளியில் வந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது நீ என்ன செய்வாய்?

பெரு:—அடி முட்டாளே! போ; அவள் வெளியில் வந்தால் அதனால் நமக்கென்ன கெடுதல்? மாயாண்டிப் பிள்ளைதான் கடிதம் எழுதியிருக்கிறானே! மாயாண்டிப் பிள்ளை அவளைத் தள்ளிவிட்டான்; அவனிடமிருந்துதான் வந்திருக்கிறாளென்று நாங்கள் சொல்லிவிடுகிறோம். அதன் பிறகு அவள் ஆயிரம் சொல்லட்டுமே. அவள் சொல்லை யார் நம்புவார்கள்? நம்மீது சொல்ல, அவளுக்கு என்ன சாட்சி இருக்கிறது? அவள் எதைத்தான் சொல்லிக் காடியாய்க் கத்திய போதிலும் சரி; நாமே அவள் விஷயத்தில் பரிந்து பேசி சிபாரிசு செய்தாலும் சரி; வராகசாமி இனி தன் உயிர்போவதானாலும் அவளை ஒரு நாளும் அழைத்துக் கொள்ளமாட்டான். ஓடிப்போனவளை அழைத்துக் கொண்டானென்னும் தூஷணைக்கு அவன் ஒரு நாளும் இணங்கமாட்டான். அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலையில்லை. இந்த அசடுபோய் மோட்டார் வண்டியில் விழுந்து அரைபடுமோ! பட்டப்பகலில் கண் அவிந்தா போய்விட்டது! இதுவல்லவோ சகிக்கக்கூடாத கஷ்டமாயிருக்கிறது. நேற்றுமுதல் இன்னமும் கண்ணைக்கூடத் திறக்கவில்லையாமே! அவன் கதி என்னவாகுமோ தெரியவில்லையே! நம்மை அங்கே இருக்கவிட மாட்டேனென்கிறார்களே! வழியில் போகிறவர்களுக்கு நம்மைப்பார்க்கிலும் அதிகக்கவலையோ!

சாமா;—சே! அப்படிச் சொல்லாதே; நாம் அங்கே இல்லாவிட்டாலென்ன? அவர்கள் எவ்வளவு கவலையோடும் உபசாரம்செய்தும் பார்த்துக் கொள்ளுகிறார்கள் தெரியுமா! மணிக்கணக்குப்படி யல்லவா ஒவ்வொரு காரியமும் செய்கிறார்கள். அவனை இப்போது பார்த்துவிட்டே இப்படி நடுங்குகிறாயே, நேற்று சாயுங்காலம் கடற்கரையில் அவன் பயங்கரமாக விழுந்து கிடந்தபோது பார்த்திருந்தால் என்ன சொல்லமாட்டாயோ! பாவம்! தரைமுழுதும் இரத்தம் சிறிய குளத்தைப்போலத் தேங்கி உரைந்துபோய்க் கிடந்தது. வண்டி முழங்காலின்மேல் ஏறிப்போய் விட்டதாம். அங்கே ஒரு எலும்பு முறிந்துபோயிருப்பதாகத் தெரிகிறதாம்; பெரிய டாக்டர் துரை அதனால்தான் மிகவும் பயப்படுகிறாராம். அவன் பிழைத்தால், பழையபடி எழுந்து நடக்க ஒருமாசத்துக்கு மேலாகுமாம்.

பெரு:-ஹோட்டலில் காப்பி சாப்பிடப் போகிறேனென்று சொல்லிவிட்டுப் போனவன் கடற்கரைக்கு ஏன் போகவேண்டும்? இவன் போகாமல் அங்கே என்ன மகா காரியம் கெட்டுப் போய் விட்டது! பெண்டாட்டி போய்விட்டால், கடற்கரையில் என்ன திண்டாட்டம் வேண்டியிருந்தது? இதுவரையிலில்லாத அருமைப் பெண்டாட்டியை இப்போதென்ன கண்டு விட்டது!

சாமா:—நான் நேற்றைய தினமே சொன்னேன்; அவனை இப்போது தனிமையில் வெளியில் விடக்கூடாதென்றேன். அது நிஜமாய் முடிந்தது. இதனால் என்னுடைய நாகைப்பட்டணம் பிரயாணங்கூட வீணாய் நின்றுபோய் விட்டது. நான் வீட்டில் பணத்தை வைத்துவிட்டு வெளியில்போய் தெருத்தெருவாயலைந்து தேடிப்பார்த்தேன்; அவன் எங்கும் காணப்படவில்லை. ஒருவேளை கடற்கரைக்குப் போயிருப்பானோ என்று ஒருவித சந்தேகமுதித்தது. பார்த்தசாரதி கோவிலுக்கெதிரிலுள்ள சந்தின் வழியாக சமுத்திரக் கரைக்குப்போய் மணலில் மூலைமுடுக்கெல்லாம் தேடினேன். அதற்குள் ஜனங்கள் கூக்குரல் செய்து கொண்டு பாட்டைக்கு ஓடினர். அது என்னவோ வென்றஞ்சி நானும் ஓடினேன். ஓடிப்பார்க்கிறேன் இவன் விழுந்து கிடக்கிறான். என்ன செய்கிறது! என்தேகம் அப்படியே பதறிப்போய் விட்டது. நல்ல வேளையாக

அங்கே அப்போது ஒரு தனிகருடைய மோட்டார் வண்டிவந்தது. அவர் பவழக்காரத் தெருவிலிருப்பவராம்; அவர் பெயர் முத்தையன் செட்டியாராம்; எங்கேயோ அவசர காரியத்தின்மேல் போனவர் இந்த கோரமான காட்சியைக் கண்டு மனவிரக்கங்கொண்டு, அதில் வராகசாமியையும், என்னையும் வைத்துக்கொண்டு போய் ராயப்பேட்டை வைத்தியசாலையில் விட்டுப்போனார்.

பெரு:—அவர் நல்ல தயாள குணமுள்ள மனிதர்போலிருக்கிறது! எல்லாப் பெரிய மனிதர்களும் அப்படி இருக்கமாட்டார்கள்; இப்படி எவனாவது விழுந்திருக்கக் கண்டால் அவர்கள் இன்னொரு பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டுபோய் விடுவார்கள்.—என்றாள்.

அப்போது டக்டிக் கென்ற காலடியோசையுடன் நடையில் வந்தயாரோ ஒருவர் "சாமாவையர்!" என்று கூப்பிட்டார். அந்தக் குரலைக்கேட்ட இவர்கள் மூவரும் திடுக்கிட்டு வாயில்புறம் நோக்கினர். அடுத்த நொடியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் **சமையசஞ்சீவி அய்யர்** உட்புறம் நுழைந்தார். அவருடைய கருடப் பார்வையையும் கம்பீரத் தோற்றத்தையும் இராஜவேத நடையையும் கண்ட அம்மாள்களிருவரும் நடுநடுங்கி, எழுந்து நாணிக்கோணி சமையலறைக்குட் புகுந்து மறைந்தனர். சாமாவையர் விரைவாகத் தமது ஆசனத்திலிருந்து எழுந்து "வாருங்கள் அண்ணா! இப்படி வாருங்கள்; ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்து கொள்ளுங்கள்." என்று கையைக் காட்டி நாட்டியமாடி, அவரைக் கூடத்திற் கழைத்து வந்து ஊஞ்சலில் உட்காரவைத்தார்.

போலீஸ்:—உட்காருவதிருக்கட்டும்; எப்போதுந்தான் உட்கார்ந்துகொண்டே இருக்கிறோமே; வந்த காரியத்தைப் பார்ப்போம். இந்த வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்? வராகசாமி அய்யங்காரின் அக்காள், தங்கை ஆகிய இருவரைத் தவிர வேறு ஒருவருமில்லையே?

சாமா:—ஆம்; வேறு ஒருவருமில்லை.

போலீஸ்:—அன்றைக்கு ராத்திரி என்ன நடந்தது? அவருடைய தமக்கையை இப்படிக்கூப்பிடும்; அந்த அம்மாளுடைய வாக்குமூலம் வாங்கவேண்டும்.—என்றார். உடனே சாமாவையர் சமையலறைப்பக்கம் திரும்பி "பெருந்தேவியம்மா! இப்படிவா; அன்றைக்கு ராத்திரி நடந்ததைச்சொல்" என்றார்.

கதவின் மறைவில் நின்ற பெருந்தேவியம்மாள் "நீதான் சொல்லேன்; என்வாயால்தான் வரவேண்டுமோ" என்றாள்.

சாமா:—கச்சேரியில் உனக்குப்பதிலாக நான் சாட்சி சொல்ல முடியுமா? நீதான் சொல்லவேண்டும். அன்றைக்கு நடந்தது எனக்குத் தெரியுமோ? உனக்குத்தானே நேரில் தெரியும்.

பெரு:—அன்று ராத்திரி 7½ மணிக்கு நீயும், வராகசாமியும் [illegible] புறப்பட்டுப்போன பிறகு நாங்கள் மூன்று பேரும் சாப்பிட்டுக் கையலம்பினோம். கோமளம் பாயைப் போட்டுப் படுத்துக் கொண்டவள் அரை நாழிகைக்கெல்லாம் தூங்கிவிட்டாள். நானும் மேனகாவும் பேசிக்கொண்டிருந்தோம். சுமார் 8, 8½ மணி இருக்கலாம். "அம்மா! அம்மா!" வென்று கூப்பிட்டுக்கொண்டு உள்ளே ஒருவன் வந்தான். 'யாரடா?' என்றேன். "நான் தஞ்சாவூர் டிப்டி கலெக்டருடைய சேவகன் ரெங்கராஜு; எஜமான் வாசலில் பெட்டி வண்டியிலிருக்கிறார்; மகளோடு பேசவேண்டுமாம்; கூப்பிடுகிறார்" என்றான். உடனே மேனகா புறப்பட்டு வெளியில் போனாள். வாசலில் நின்ற பெட்டிவண்டியிலிருந்த மனிதரோடு பேசிக்கொண்டு கொஞ்ச நாழிகை நின்றாள். பிறகு அவர் பெட்டி வண்டியின் கதவைத் திறந்தார். அவளும் ஏறி உள்ளே உட்கார்ந்து கொண்டாள். உடனே வண்டி போய்விட்டது. நடந்தது அவ்வளவு தான்—என்றாள்.

போலீஸ்.—அந்தச் சேவகன் சாதாரணமான உடைதரித்திருந்தானா? அல்லது சேவகனைப்போல சர்க்கார் உடுப்புப் போட்டிருந்தானா?

பெரு.—ஆம், தலைப்பாகை, நீண்ட சட்டை, வெள்ளி வில்லை முதலிய அலங்காரத்துடன் வந்தான்.

போலீஸ்.—அதற்குமுன் அவன் எப்போதாவது, டிப்டி கலெக்டருடன் வந்திருக்கிறானா? அல்லது வந்தவனைப்போலவாகிலும் இருந்தானா?

பெரு.—ஒரு வருஷத்துக்குமுன், அவரோடு இரண்டு சேவகர்கள் வந்தார்கள். எனக்கு அவ்வளவாக ஞாபகமில்லை. இவன் அவர்களில் ஒருவனாக இருக்கலாம்; ஆனால் நான் இவனை அவ்வளவு நன்றாக கவனிக்கவில்லை.

போலீஸ்.—பெட்டி வண்டியிலிருந்தவர் டிப்டி கலெக்டர் தானே? அதைப்பற்றி சந்தேகமில்லையே?

பெரு.—நான் சமீபத்தில் நெருங்கிப் பார்க்கவில்லை. முற்றத்தில் நின்று கொண்டு பெட்டி வண்டியைப் பார்த்தேன். தலைப்பாகை, சட்டை, திருமண் முதலியவற்றுடன் ஒருவர் வண்டியிலிருந்தார். அவர் டிப்டி கலெக்டரென்றே அப்போது நான் நினைத்தேன். அவரில்லாவிட்டால் மேனகா நின்று பேசமாட்டாளாகையால் வந்தவர் அவர்தானென்று நிச்சயமாக நினைத்தேன்.

போலீஸ்.—அந்தப் பெண் பிறகு இதுவரையில் திரும்பி வரவில்லையா?

பெரு.—இல்லை.

போலீஸ்.—இதற்கு முன் அவர் பெண்ணை எப்போது இங்கே கொணர்ந்து விட்டார்?

பெரு.—ஒரு வாரத்துக்கு முன்.

போலீஸ்.—அப்படியானால், இவ்வளவு சீக்கிரமாக மறுபடியும் வந்து அழைத்துப்போன காரணமென்ன?

பெரு.—அதுதான் எங்களுக்குத் தெரியாமையால், தவிக்கிறோம். அதைப்பற்றி அவரையே கேட்க வேண்டும்; கேட்டு உண்மையை எங்களுக்கும் தெரிவிப்பீர்களானால் உபகாரமாயிருக்கும்—என்றாள். போலீஸ் இன்ஸ்பெக்டர் "சரி; அப்படியே செய்கிறோம்" என்று ஒருவாறு புரளியாகக் கூறிவிட்டு "சாமாவையரே! இதில் உமக்கென்ன தெரியும்?" என்றார்.

சாமா:—நான் வராகசாமியைக் கொண்டு போய் ரயிலில் ஏற்றி விட்டு வந்தேன். அப்போது மணி ஒன்பதிருக்கலாம். இங்கே வந்தவுடன் வாசலில் உட்கார்ந்திருந்த பெருந்தேவியம்மாள் என்னைக் கூப்பிட்டு இப்படி நடந்ததென்று விவரம் தெரிவித்தாள், மேனகா

கூட தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டாளே என்று வருத்தப்பட்டாள். ஒருவேளை அவர் எங்கேயாவது அறிமுகமான இடத்துக்கு அவளை அழைத்துக் கொண்டு போயிருப்பாரென்றும், திரும்பவும் கொணர்ந்து விடுவாரென்றும், கவலைப்பட வேண்டாமென்றும் சொல்லிவிட்டு நான் என் கிரகத்துக்குப்போய் விட்டேன்; மேனகா பிறகு இதுவரையில் வரவே இல்லை—என்றார். அவர்களிருவரின் வாக்குமூலங்களையும் காகிதத்தில் எழுதிக்கொண்டே வந்த இன்ஸ்பெக்டர், அடியில் அவர்களுடைய கையெழுத்தை வாங்கிக் கொண்டு புறப்பட்டு வெளியிற் போனார். சாமாவையர் திரும்பவும் விதவைகளோடு பேசிக்கொண்டிருந்தார்.

வெளியிற் சென்ற இன்ஸ்பெக்டர் தமது கைக்கடியாரத்தைப் பார்த்தார்; எட்டுமணி ஆயிருந்தது. வாயிலிலிருந்த இரண்டு ஜெவான்களையும் அழைத்துக் கொண்டு அவர் எதிர் வீட்டின் திண்ணைக்குப் போய் உட்கார்ந்து கொண்டார். அந்த மூன்று செந்தலைப்பூச்சிகளையும் கண்ட அவ்வீட்டு மனிதர் தமக்கு எத்தகைய துன்பம் நேரப் போகிறதோ வென்று பெரிதும் அச்சங்கொண்டு நடுநடுங்கி, செய்ய வேண்டுவதை யறியாமல், உள்ளேயே உட்கார்ந்து விட்டனர். அண்டை வீட்டுக்காரர்கள் யாவரும் ஒன்று கூடி மகா புத்திசாலித்தனமான பல யூகங்களைச் செய்யலாயினர். போலீசார் உட்கார்ந்திருந்த வீட்டிற்குள் ஏதோ திருட்டுச் சொத்திருப்பதாகவும், அந்த வீட்டைப் போலீசார் சோதனைபோடப் போகிறார்களென்றும், அந்த வீட்டிலுள்ளோரைக் கைதிசெய்து விலங்கிட்டுக் கொண்டு போகப் போகிறார்களென்றும் பலவாறு கூறிப் புரளி செய்திருந்தனர். எவரும் தம் தம் வேலையைக் கவனிக்கவே மனமற்றவராய், அவ்விடத்தில் நடக்கப் போவதென்ன வென்பதைப் பார்க்க ஆவல்கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

கால்மணி நேரம் கழிந்தது. அப்போது ஒரு குதிரை வண்டி ஜல் ஜல் ஜல் ஜல் என்று சதங்கை யோசை செய்து கொண்டு வந்தது; ஆடம்பரம் மாத்திரம் அதிகமாயிருந்ததேயன்றி, குதிரையோ மாதம் காதவழிமாயமாய்ப் பறக்கும் நீலவேணிக் குதிரை; அதன் வயது சொற்பமே. அது உயிர் விடக்கூடிய முடிவு காலம் சென்ற பிறகு மேலே கொசருக்கு மூன்று நான்கு வருஷங்களே ஆயிருக்கலாம். உடம்பு முற்றிலும் முகத்திலும் எலும்புகள் மாத்திர

மிருந்தமையால், அது குதிரையைப்போலவுமிருந்தது கழுதையைப் போலவுமிருந்தது. ஒவ்வொரு கண்ணிலும் எலுமிச்சங் காயளவு வெண்ணெய் திரண்டிருந்தது. சதங்கையொலிக்குச் சரியாகப் பின்புறக்கால்கள் தத்தோம் தகதோமென்று தாளம் போட்டு பஜனை செய்தன; அதற்கு வருஷம் முன்னூற்றறுபத்தைந்து நாட்களும் விரத தினங்கள்; வயதான ஜெந்துவாதலால் அவ்வாறு பஜனைசெய்து பட்டினிகிடந்து அடுத்த உலகத்துக்குத் தன்னைத் தயார்செய்து கொண்டு வந்தது. ஆனால் முகமெல்லாம் பட்டுக் குஞ்சங்கள் அழகு செய்தன. உடம்பு முழுதும் இளைத்திருந்ததாயினும், அதன் வால் மயிரும், அதை யோட்டிய சாயப்புவின் தாடி மயிரும் கொஞ்சமேனும் இளைக்காமல், இரண்டு சாமரங்களா யசைந்து குதிரையின் எண்ணிறந்த புண்களில் மொய்த்த ஈக்களை யோட்ட உதவியாயிருந்தன. அந்த வண்டிக்குள் வருபவர் யாவரென்று போலீஸ் இன்ஸ்பெக்டர் உற்று நோக்கினார். வண்டி அடுத்த நிமிஷத்தில் வந்து வராகசாமியின் வீட்டு வாயிலில் நின்றது. அதற்குள்ளிருந்து கீழே இறங்கிய சாம்பசிவம், கனகம்மாள் இருவரும் அவ்வண்டியின் குதிரையைப்போல உயிரற்றவராய்க், காண்போர் இரக்கங் கொள்ளும் வண்ணம் பரிதாபகரமான நிலைமையிலிருந்தனர். எப்போது பட்டணம் வருவோம், எப்போது தம் பெண்ணிருந்த விடத்தைக்கண்டு உண்மையை அறியப்போகிறோம் என்று ஆவல்கொண்டு இரவு முழுதும் கண்மூடாமல், முதல் நாட் காலையிலிருந்து தண்ணீரும் அருந்தாமல் பெருத்தவேதனை யடைந்து, தவித்து வந்தனராதலின், அவர்களுடைய உடம்பில் உற்சாகமென்பது ஒருசிறிதும் காணப்படவில்லை. அதிகாலையில் தனது இளங்கன்றை விடுத்துப் பிரிந்த பசு, மாலையில் கன்றைப் பார்க்க ஆவலும் இரக்கமும் கொண்டு ஓடி வருதலைப்போல வராகசாமியின் வீட்டைக் கண்டவுடனே அவர்களுடைய உள்ளம் பொங்கியெழுந்து பதறியது. மேனகா இருக்கமாட்டாளென்று அவர்களுடைய மனது நம்பவில்லை. உள்ளே நுழைந்தவுடன் அவளைக் காணலாம் என்னும் மூடநம்பிக்கை கொண்டவராய், வண்டியிலிருந்திறங்கி உட்புறம் விரைந்து சென்றனர்.

வண்டிக்காரன் வண்டியை ஓட்டிச்செல்லாமல், அவ்விடத்திலேயே அதை நிறுத்திக்கொண்டிருந்தான். எதிர் வீட்டின் திண்ணையிலுட்கார்ந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் சைகைசெய்து

வண்டிக்காரனை அழைத்தார். அவன் இன்ஸ்பெக்டரிடம் பன்முறை சூடுண்டவனாதலின், எமனைக் கண்ட உயிரைப்போல, அவன் நடுநடுங்கி ஓடிவந்து, எண் சாண் உடம்பையும் ஒருசாணாக் குறுக்கிக் குனிந்து சலாம் செய்தான்.

மகாகம்பீரமாகவும் அலட்சியமாகவும் அவனைப்பார்த்த இன்ஸ்பெக்டர் "அடே தாடிமியான்! என்னடா ஜோர்மேலே ஓட்டுகிறாய்? இரட்டைக் குதிரை சவாரியோ? சிவப்புக் குதிரைமேலே வண்டி வெள்ளைக்குதிரைமேலே நீ! நல்ல வேட்டைதானோ? எங்கிருந்து வருகிறாய்? கூலி ஒரு ரூபாயாவது இருக்குமா?" என்றார்.

வண்டிக்காரனுக்கு அடிவயிற்றில் நெருப்பு விழுந்தது. தான் வண்டியை மிதமிஞ்சிய விசையில் ஓட்டினதாக அவர் எழுதித் தனக்கு பத்து இருபது அபராதம்போட்டு வைப்பாரோவென்று நினைத்து அச்சங்கொண்டவனாய் "இல்லெ நாயனா! ஏளெமேலே கோவம் வைக்காதீங்க நாயனா! நம்பிளுக்கு புள்ளெக்குட்டீங்க பத்துப் பதினஞ்சு இருக்குறான்; பஞ்சகாலம் நாயனா! ஓங்ககாலுக்கு நம்ப சலாம் செய்யுறான் நாயனா! மனசுலே கோவம் வைக்கவாணாம் நாயனா! வண்டி எளும்பூருலேயிருந்து வந்திச்சு நாயனா! வண்டியிலே வந்தவரு தஞ்சாவூரு துப்பட்டி கலெக்கட்டராம் நாயனா! இன்னெக்கி முழுக்க வண்டி பேசிருக்கான் நாயனா! ரெண்டேரூவாதான். அதிகமில்லீங்க நாயனா" என்று தனது பற்களைக் காட்டிக் காட்டிக் கெஞ்சிக் கூத்தாடினான்.

அதைக் கேட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் வியப்பைக்கொண்டவரைப்போலக் காட்டி "ஓகோ! தஞ்சாவூர் டிப்டிகலெக்டரா வந்திருப்பவர்! இவருடன் நான் அவசரமாகப் பேசவேண்டும்; நல்லது நீ ஒருவேலை செய்; இவர் மறுபடியும் வண்டியில் ஏறியவுடன் இவரிடம் சொல்லாமல் வண்டியை நம்முடைய ஸ்டேஷன் வாசலுக்குக் கொண்டுவா. நாங்கள் பேசியபிறகு நீ அவர் போகச்சொன்னவிடத்துக்கு ஓட்டலாம், தெரியுமா? நான் போகலாமா? இந்த ஜெவான்களை இங்கே வைத்து விட்டுப்போகிறேன்; வராமல் தவறி ஓட்டிக்கொண்டு போவாயானால் முதுகுத்தோலை உரித்து விடுவேன்; ஜாக்கிரதை" என்றார்.

வண்டிக்காரன் குனிந்து குனிந்து சலாம் செய்து "அப்பிடியே ஆவட்டும் நாயனு! நம்பளொடெ ரோக்கியம் இதுலே பாரு நாயனு நாம்ப முசல்மான் நாயனு! நம்பவாயிலே பொய்வரமாட்டான் நாயனு நீங்கபோவலாம். நாயனு!" என்றான்.

உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெவான்களிடம் ஏதோ இரகசிய விஷயத்தைக் கூறியபிறகு அவர்களை இவ்விடத்திலேயே உட்காரவைத்து விட்டு தம்முடைய ஸ்டேஷனுக்குச் சென்றார். வண்டிக்காரன் வராகசாமி வீட்டு வாயிலையடைந்து அன்றைப்பொழுது அபாரதமில்லாமல் நல்லபொழுதாய்ப் போக வேண்டுமேயென்று அல்லாவைத் தொழுது கொண்டிருந்தான்.

சாம்பசிவம் முன்னும், கனகம்மாள் பின்னுமாக இருவரும் உட்புறஞ்சென்றனர். கூடத்தில் நின்று கொண்டிருந்த சகோதரிமாரிருவரும் அவர்களைக்கண்டவுடன் பெரிதும் அருவருப்பைக்காட்டிய முகத்தோடு, "வாருங்கள்" என்று ஒரு உபசாரவார்த்தைகூடச் சொல்லாமல் அசைந்தாடிக் கொண்டு அலட்சியமாக சமையல்றைக்குள் நடந்தனர். ஊஞ்சற் பலகையிலிருந்த சாமாவையர் மாத்திரம் திடுக்கிட்டெழுந்து டிப்டிகலெக்டருக்கு மரியாதை செய்து "வாருங்கள் அண்ணா! வாருங்கள் பாட்டியம்மா!" என்று அன்போடு இருவரையும் வரவேற்று உபசரணை செய்தார்.

சந்திர பிம்பம்போல இனிமையே வடிவாகத் தமது பெண்மணி மேனகா தம்முன் தோன்றுவளோவென்று நினைத்துமனப்பால் குடித்தவராய் வந்த அவர்களுக்கு அந்த வீடு இழவு வீழ்ந்ததனால் பாழ்த்துப்போன வீட்டைப்போலத் தோன்றியது. பெருந்தேவி, கோமளம் இருவரும் எந்த நாளிலும் அவர்களுடன் அன்னியோன்னியமாகப் பேசிப்பழகியோரல்லர். என்றாலும், வரும்போது 'வாருங்கள்' என்று சொல்வது மாத்திரமுண்டு. அந்த வாயுபசரணையும் இப்போது இல்லாமற்போனது. தமது பெண் போனமையால், அந்த மரியாதையும் அவளுடன் போயிருப்பதாக அவர்களிருவரும் நினைத்து அதைப்பற்றிச் சிறிதும் மனவருத்தங் கொள்ளவில்லை. அவர்களுடைய மனம் பெண்ணைப்பற்றிய கவலையால் பெரிதும் உலைபட்டு அவளைப்பற்றி எவ்விதமான செய்தியைக் கேட்போமோ வென்று கரை கடந்த ஆவல் கொண்டு தத்தளித்தது. அவர்களுக்கு

ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு யுகமாய்த் தோன்றியது. அவ்விருவரும் எதிரிலிருந்த தண்ணீர்க் குழாயில் கால்களை யலம்பிக்கொண்டு கூடத்திற் புகுந்தனர். சாம்பசிவம் ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்தார். கனகம்மாள் ஒரு கம்பத்தருகில் நின்றாள். அதற்குள் சாமாவையருடைய முகம் முற்றிலும் மாறுதலடைந்தது. மனம் கலங்கியது. அவர்களிடம் எவ்விதமாகப் பேசுவதென்பதை யறியாமல் தடுமாற்றமடைந்தார். என்றாலும், ஏதாயினும் ஒன்றைச் சொல்லவேண்டுமென்று நினைத்து "போட்மெயிலில்தானே வந்தீர்கள்?" என்றார்.

அதைக்கேட்ட சாம்பசிவம் "ஆம்; வேறு வண்டியேது? எங்கே மாப்பிள்ளையைக் காணோமே? பெரியவக்கீல் வீட்டுக்குப் போயிருக்கிறாரோ?" என்றார்.

உடனே சாமாவையர் பெரிதும் விசனத்தோடு சிரத்தைக் கீழே கவித்தார்; இரண்டொரு நிமிஷநேரம் மௌனமாயிருந்தார். பிறகு "அதை ஏன் கேட்கிறீர்கள்! பட்டகாலிலே படும்; கெட்டகுடியே கெடும் என்பதுபோல எல்லா ஆபத்தும் நமக்கே வந்து சேருகிறது" என்றார். எதிர் பாராத அந்த பயங்கரமான சொல்லைக்கேட்க, அவர்களுடைய பதை பதைப்பு ஒன்றுக்கு நூறாய்ப் பெருகியது. சாம்பசிவம் சாமாவையருடைய வாயிலிருந்து என்ன விபரீத சமாசாரம் வெளிப்படுமோவென்று அஞ்சினார்; அவருடைய வாயையே நோக்கியவண்ணம் "என்னசெய்தி?" என்று ஆவலோடுகேட்க சாமாவையர் "நேற்று காலையில் சேலத்திலிருந்து வராகசாமி திரும்பி வந்தான். வந்தவுடன், மேனகா காணாமற் போனதைப் பற்றிக் கேள்விப்பட்டு நிரம்பவும் விசனமடைந்தான்; ஜலபானங் கூடச் செய்யாமல், பைத்தியம் பிடித்தவனைப்போல பிதற்றிக் கொண்டிருந்தான். சாயுங்காலம் எழுந்து ஒருவருக்கும் தெரியாமல் கடற்கரைக்குப்போய் விட்டான் போலிருக்கிறது. அதற்கப்புறம் தற்செயலாக நான் இங்கேவந்தேன். வராகசாமி எங்கே என்றேன். ஹோட்டலில் காப்பி சாப்பிடப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனான் என்று இவர்கள் சொன்னார்கள். நான் உடனே அவனைத்தேடிக்கொண்டு தெருத்தெருவாயலைந்தேன். அவன் எங்கும் அகப்படவில்லை; கடைசியாக கடற்கரைக்குப் போனேன். அங்கே அப்போது ஒருவன்மேல் மோட்டார் வண்டி ஏறிவிட்டதைக் கண்டு

ஜனங்கள் ஓடினார்கள்; நானும் ஓடிப்போய்ப் பார்க்கிறேன்! வராகசாமி கீழே கிடக்கிறான்!" என்று பெரிதும் வியப்போடு கூறினார்.

அதைக் கேட்டுத் துடிதுடித்த கனகம்மாள் கையைப்பிசைந்துகொண்டு, "ஐயோ! அவர் இப்போது எங்கிருக்கிறார்? உயிருக்கு மோசமில்லையே?" என்று சகிக்கமாட்டாத ஆவலோடு கேட்டாள். அவர்களுக்கு அந்த ஒரு நொடியும் ஒருகோடி வருஷங்களாய்த் தோன்றியது. வராகசாமி உயிர் துறந்திருப்பானோவென்னும் சந்தேகம் உள்ளூற அவர்களை வதைத்து வாட்டியது.

சாமா:—உயிருக்கு ஆபத்தில்லை. ராயப்பேட்டை சர்க்கார் வைத்திய சாலையில் இருக்கிறான்—என்றார். அப்போதே கனகம்மாள் சாம்பசிவம் இருவருக்கும் உயிர்வந்தது; சரியான மூச்சாக விடுத்தனர்.

சாம்ப:—காயம் அதிகமோ?

சாமா:—வண்டி முழங்காலில் ஏறிவிட்டது; அதில் ஒரு எலும்பு கொஞ்சம் ஒடிந்துபோய் விட்டதாம். இரத்தச் சேதம் இவ்வளவு அவ்வளவென்று சொல்லமுடியாது! அபாரம்! அவன் இன்னம் கண்ணைத்திறக்கவில்லை. நேற்றுராத்திரி முழுதும் மருந்து கொடுத்தார்கள்; இன்று காலையில் நாங்கள் மூன்றுபேரும் போய்விட்டு இப்போதே திரும்பிவந்தோம். பெரிய டாக்டர், மிகவும் கவலைப்படுகிறார்; அங்கே எல்லோரும் கூடிக்கொண்டிருந்தால் சீக்கிரம் குணப்படாதென்று சொல்லி, எங்களை அனுப்பி விட்டார்—என்றார்.

அந்தப்புதிய இடியைப்பெற்ற அவர்களுடைய மனம் ஆடி அலமர்ந்தது; அவர்களது தேகங்கள் மண்ணில் நிலைத்து நில்லாமல் விண்ணில் பறந்தன. அவர்களுடைய உள்ளம் பட்டபாட்டை என்னவென்று சொல்வது! அவர்கள் அப்படியே திகைத்துப் போயினர்.

கனகம்மாள் "பெண் இப்போது இங்குதானே இருக்கிறாள்?" என்று மிக்க துன்பகரமான அந்த முக்கிய விஷயத்தை மெல்லக் கேட்டாள். அந்தக் கேள்வியைக் கேட்காதிருக்கவும் அவளுக்கு சகிக்கவில்லை; அதைக்கேட்டவுடன் "அவள் இல்லை" யென்னும் மறுமொழி வந்துவிடுமோ வென்று தயங்கிக் கடைசியில் அதைக் கேட்டு விட்டாள்; சாமாவையர் என்ன செய்வார்? கையுங் களவுமாய்ப் பிடிபட்ட கள்ளனைப்போல விழித்து சிறிதுநேரம் தவித்தார்; பிறகு "பெண் இங்கிருந்தால், வராகசாமிக்கு ஏன் இந்த ஆபத்து வருகிறது? பெண் போனவிடந்தான் தெரியவில்லை." என்றார்.

கனகம்மாள் இன்னமும் அதை நம்பாமல் "ஆனால் அவள் இப்போது உள்ளே இல்லையா?" என்று பேதைமைப் பெருக்கால் மறுபடியும் வினவினாள்.

சாமாவையர் "இல்லை" யென்று விடை கூறினார். ஆகா! அவர்களுடைய மனதின் குழப்பம் பெருங்குழப்பமாயிற்று! அவர்கள் தீத்தணலின்மேல் விடப்பட்டோரைப் போலாயினர். பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் ஒரே காலத்தில் துன்பம் சம்பவித்த விஷயம் ஒரு நிமிஷத்தில் அவர்களுடைய தேகத்தைச் சீர்குலைத்து, நெஞ்சைப் பிளந்து இதயத்தைச் சின்னபின்னமாக்கி விட்டது. பேசமாட்டாமலும், எவ்விதயோசனையும் செய்யமாட்டாமலும் அப்படியே சோர்ந்து அசைவற்றுச் சாய்ந்து விட்டனர். ஒரு நிமிஷமான பிறகு சாம்பசிவம் "அப்படியானால் நான் இங்கே வந்து மேனகாவை அழைத்துப் போனேனென்று இவர்கள் மாப்பிள்ளையிடம் சொன்னதாக எனக்குத் தந்தி வந்ததே! அதென்ன சங்கதி? அந்தத் தந்தியை யார் கொடுத்தது?" என்றார்.

சாமா:—அதை வராகசாமிதான் கொடுத்தானாம். நான்காம் நாள் வராகசாமி ஒரு கேசின் விஷயமாக சேலம் போனான். இராத்திரி எட்டுமணி வண்டிக்கு நானும் அவனுடன் போய் அவனை ரயிலில் ஏற்றிவிட்டு ஒன்பதுமணிக்குத் திரும்பிவந்தவன் வராகசாமிக்கு ரயில் கிடைத்து விட்டதென்று இவர்களிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குப்போக நினைத்து இங்கே வந்தேன். அப்போது கோமளம் தூங்கிக் கொண்டிருந்தாள்; பெருந்தேவியம்மாள் மிகவும் வருத்தத்தோடு உட்கார்ந்திருந்தாள்; என்னவென்று கேட்டேன். அதற்குக்கொஞ்ச நாழிகைக்குமுன் நீங்கள் ஒரு பெட்டி வண்டியில் வந்து வாசலில் வண்டியிலேயே இருந்துகொண்டு, வெள்ளி வில்லை தரித்த ஒரு சேவகனை உள்ளே அனுப்பி, மேனகாவை அழைத்து வரச்சொன்னதாகவும் உடனே மேனகா வெளியில் வந்து பெட்டி வண்டிக்கருகில்

நின்று உங்களோடு கொஞ்ச நாழிகை பேசிக்கொண்டிருந்து விட்டு அவளும் வண்டியில் ஏறிக்கொண்டதாகவும், பிறகு வண்டி போய் விட்டதாகவும் பெருந்தேவி என்னிடம் தெரிவித்தாள். மேனகா தன்னிடம் சொல்லிக் கொள்ளாமற் போனதைப்பற்றி பெருந்தேவி யம்மாள் வருத்தப்பட்டுக் கொண்டாள். நீங்கள் எங்கேயாவது அறிமுகமான விடத்துக்கு மேனகாவுடன் போய்விட்டுத் திரும்பி வந்து விடுவீர்களென்று இவளுக்கு சமாதானம் சொல்லிவிட்டு நான் போய் விட்டேன். மறுநாளும் நீங்கள் வராமையால், உங்களுக்கு அறிமுகமானவர் வீட்டிலெல்லாம் போய் நாங்கள் விசாரித்துப்பார்த்தோம். ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. நேற்று வராகசாமி வந்தான்; உடனே உங்களுக்குத் தந்தி கொடுத்தான்—என்றார்.

அதைக்கேட்ட சாம்பசிவம் சகிக்கவொண்ணா ஆச்சரியத்தையும் திகைப்பையுங் கொண்டு "என்ன கண்கட்டு வித்தையாயிருக்கிறதே! நானாவது இங்கே வரவாவது! அன்றையதினம் நான் அம்பாள் சமுத்திரத்திலல்லவோ முகாம் செய்திருந்தேன்; இங்குவர எனக்கு ரஜா ஏது? ரஜா இல்லாமல் நான் இங்குவர முடியுமா? ஒரு வாரத்துக்கு முன்னால் தானே நான் இங்கே பெண்ணைக் கொண்டு வந்து விட்டேன். அதற்குள் இவர்களுடைய அனுமதியில்லாமல் அவளை அழைத்துப் போவேனா! எனக்கென்ன பைத்தியமா? இது கேழ்வரகில் நெய் ஒழுகுகிறதென்னும் சங்கதியா யிருக்கிறதே!" என்று கூறி மேலும் பேசமாட்டாமல் மதிமயக்கங் கொண்டு சாய்ந்தார்.

மிகவும் பதை பதைத்து நின்ற கனகம்மாள் "இதைப் போலீஸில் எழுதி வைத்தீர்களா?" என்றாள்.

சாமா:—வராகசாமி எழுதிவைக்க வேண்டாமென்று சொல்லி விட்டான்.

சாம்ப:—ஏன்?—என்றார்.

அதற்குமேல் பதிற் சொல்ல மாட்டாமல் சாமாவையர் தயங்கினார்; கனைத்துக்கொண்டார்; இருமினார்; எச்சிலை விழுங்கினார்; அப்புறம் திரும்பினார்; ஆகாயத்தைப் பார்த்தார்; பூமாதேவியைக் கடாட்சித்தார்; சமையலறையைக் கடைக்கணித்தார்; கடைசியாக மௌனம் சாதித்தார். சாம்பசிவம் அத்துடன் விடுபவரல்லர்; "போலீசில் பதிவு செய்யும்படி நான் தந்தியில்கூட தெரிவித்தேனே; அதைச் செய்யாத காரணமென்ன?" என்று அதே கேள்வியைக் கேட்டார்.

சாமா:—உங்களுடைய தந்தியைப் பார்த்தவுடன் அன்றைக்குப் பெட்டி வண்டியில் வந்தது நீங்களில்லையென்று நிச்சயித்தோம். ஆனால் மேனகா எப்படித்தான் போயிருப்பாளென்பதைப்பற்றி வராகசாமி எண்ணாததெல்லாம் எண்ணிப்பார்த்தான். அப்போது அவனுக்கு ஏதோ சந்தேக முதித்தது. மேனகாவின் டிரங்குப் பெட்டியை உடைத்துப் பார்த்தான்; அதில் ஏதோ இரண்டு கடிதங்கள் அகப்பட்டனவாம். அதைப் படித்தவுடன், அதிற் பல இரகசியங்கள் வெளிப்பட்டனவாம். அதன்மேல், அவன் போலீஸில் எழுதி வைக்க வேண்டாமென்று நிறுத்தி விட்டான்—என்றார். அதைக் கேட்ட அவ்விருவரின் பைத்தியமும் ஆவலும் உச்ச நிலையை யடைந்தன; சிரம் சுழன்றது; வீடே கிருகிரென்று சுற்றி மேலே கிளம்புவதாய்த் தோன்றியது. புத்தியின் தெளிவை இழந்து மேலே கேட்க வேண்டுவதென்ன வென்பதை யறியாமல் சிறிது சோர்ந்தனர்.

சாம்ப:—என்ன கடிதங்கள்? யாருக்கு யாரால் எழுதப்பட்ட கடிதங்கள்? அதில் அப்படி என்ன பரம ரகசியத்தைக் கண்டீர்கள்? எங்கே அந்தக் கடிதங்கள்? நான் படித்துப் பார்க்கிறேன்—என்று அருவருப்போடும் அடக்கிய கோபத்தோடும் கேட்டார்.

சாமா:—(மிகவும் பணிவாக) "அண்ணா! அதை மாத்திரம் நீங்கள் என்னிடம் கேட்கவேண்டாம்; கடிதங்கள் வராகசாமி இடத்தில் வைத்தியசாலையி லிருக்கின்றன. நேரிலேயே பார்த்துக் கொள்ளுங்கள்; இந்த விஷயத்துக்குமாத்திரம் தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும்—என்றார்.

சாமா:—(பொங்கியெழும் ஆத்திரத்தோடு) என்ன ஐயா! இவ்வளவு தூரம் சொன்னவர், பாதிக்கிணற்றில் விட்டதைப்போல முக்கியமான இடத்தில் மறைக்கிறீரே! எங்கள் மனம் தவிக்கிறது உமக்குக் கொஞ்சமும் தெரியவில்லையா? வீணாக இன்னமும் வேடிக்கை பார்க்கவேண்டாம். மிகுதி விஷயத்தையும் சொல்லும். எப்படியும் அதை நாங்கள் அறிந்து கொண்டே தீரவேண்டும்.

நடந்ததைச்சொல்ல உமக்கேன் யோசனை? அதனால் உம்மீது யார் என்ன குற்றம் சொல்லப்போகிறார்கள்? பாதகமில்லை சொல்லும்; அது எதுவாக இருந்தாலும் இருக்கட்டும்—என்றார்.

சாமாவையர் பற்களைக் காட்டிக் கெஞ்சி “இல்லை அண்ணா! இதைமாத்திரம் நீங்கள் மற்றவர்களிடத்திலேயே கேட்டுக்கொள்ளுங்கள். இதை வாயில் வைத்துச் சொல்லவும் எனக்கு மனமில்லை; இப்போது இன்னம் ஐந்தே நிமிஷத்தில் நாம் இராயப்பேட்டை வைத்திய சாலைக்குப்போனால் கடிதங்களையே நீங்கள் பார்க்கலாம்.” என்று பிடிவாதமாகப்பேச அவர்கள் மிகுந்த ஆயாசமும், ஆத்திரமுமடைந்தனர். அவர்களது ஆவல் மகா உக்கிரமாக வெழுந்து அவரது நெஞ்சையும் தேகத்தையும் படீரெனக் கிழித்துவிடுமோ வென்னத் தகுந்த விசையையும் பருமனையுமடைந்தது. கோபம் தேகத்தையே நெருப்பாய்ப்பற்றி எரித்தது. ஆனால் அதை யார் மீது காட்டுவது? சாமாவையர் அன்னிய மனிதர்; வராகசாமியின் வீட்டில் பண்ணியத்திற்கு உழைப்பவர். ஆகையால் அவரை மேலும் வற்புறுத்த சாம்பசிவத்திற்கு மனமில்லை. இரண்டு கைகளுமற்ற மனிதன் முஷ்டியுத்தம்செய்ய நினைத்ததைப்போல அவருடைய அடங்காக் கோபம் வீணில் ஜ்வலித்தது. “சரி; அப்படியானால், போவோம் எழுந்திரும்” என்றார் சாம்பசிவம். இருவரும் எழுந்தனர்.

அதற்குள் கனகம்மாள் சமையலறைப் பக்கம் போய் உள்ளே எட்டிப்பார்த்து “பெருந்தேவியம்மாள்! என்ன செய்கிறாய்? இப்படி வா அம்மா! என்ன இது கூத்தாக இருக்கிறதே! பெண்ணை யார் அழைத்துக்கொண்டு போனது? நீங்கள் ஒருவரும் பார்க்கவில்லையா? அந்தச் சேவகன் யார்? விவரமாகச் சொல்லம்மா!” என்று தன் ஆத்திரத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு நயமாகக் கேட்டாள்.

பொறுப்பதற்கேலாத துர்நாற்றத்தைக் கண்டு முகத்தைச்சுளித்துக் கொள்பவள்போல பெருந்தேவியம்மாள் தனது முகத்தை விகாரப்படுத்திக்கொண்டு அருவருப்பாக “ஆம்: கூத்துத்தான்! அது எங்களுக்கு எப்படித் தெரியப்போகிறது? கூத்தைப் பார்க்கிறவர்களுக்கும், கூத்தாடிகளைப் பார்க்கிறவர்களுந்தான் நிஜம்தெரியும்; எங்களுக்கென்ன தெரியும்!” என்று ஒன்பதுமுழம் நீட்டிப்பேசினாள். அவளுடைய முகமும் உதடுகளுங் கைகளும் யாவும் நீண்டன. ‘வா, உட்கார்’

என்ற மரியாதையும் இல்லாமற் போனதன்றி, தன் வீட்டில் வந்து அல்லல்கொடுக்கும் பிச்சைக்காரரை அவமதித்துப் பேசுபவளைப் போல மொழிந்தாள் பெருந்தேவியம்மாள்.

கனகம்மாள் தங்களுடைய பொல்லாத காலத்தை நினைத்துத் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு “என்ன இது? நீ சொல்வதொன்றும் விளங்கவில்லையே! நடந்ததை விவரமாகச் சொல்லம்மா! பெண்ணை அழைத்துப்போனது யார்? ஏதோ கடிதம் அகப்பட்டதாமே; அது என்ன கடிதம்?” என்று திரும்பவும் நயமாகக் கேட்டாள்.

பெருந்தேவி முன்னிலும் அதிகரித்த எரிச்சலைக்காட்டி “பெண் எங்குதான் ஊர் சிரிக்கிறதே! அவளால், நாங்கள் எல்லோரும் மூடி முக்காடிட்டு உள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கும்படி ஆய் விட்டதே! வராகசாமி இதைக்கேட்டு தற்கொலை செய்துகொள்ளத்தானே மோட்டார் வண்டியின்கீழ் தன் கழுத்தைக் கொடுத்தான்; அபடாடியல்லவோ செய்துவிட்டாள்! பெண்ணிருந்தாலும் இப்படியல்லவா இருக்க வேண்டும்! இந்தப் பெண்ணைப்பெற்ற வயிற்றில் பிரண்டையை வைத்துக் கட்டிக்கொள்ளலாம். இப்படிப்பட்ட பெண்ணிருந்தால் ஏழேழு தலைமுறைக்கும் அது போதும். அடாடா இருந்திருந்து நல்ல இடத்தில் சம்பந்தம் செய்து கொண்டோம்! இனி எங்கள் வீட்டில் நாய்கூடத் தண்ணீர் குடிக்காது. அநியாயமாக எங்கள் குடியைக் கெடுத்துவிட்டாள் கொழுப்பெடுத்த முண்டை” என்றாள்.

அந்தச்சொல் உருக்கிய இரும்பைப் பெய்தலைப்போல, கனகம்மாள், சாம்பசிவம் இருவரின் செவிகளிலும் நுழைந்தது. அவர்கள் தேகங் கட்டுக்கடங்காமல் பதைபதைத்தது; ஒரே அடியில் பெருந்தேவியின் மண்டையை சுக்கல் சுக்கலாக உடைக்கக்கூடிய மூர்க்கத்தையடைந்தனர். கோப மூட்டப்பெற்ற புலியைப்போல நின்ற கனகம்மாள் “பெருந்தேவியம்மா! என்ன தாறுமாறாகப் பேசுகிறாய்? யாரிடம் பேசுகிறாயென்பதைக்கூட மறந்து விட்டாயே! நடந்த விஷயத்தையும் சொல்ல மாட்டேனென்கிறாய்; நினைத்த விதம் எங்களை தூஷிக்கிறாய்! இதனால் உங்களுக்கு மாத்திரமே துக்கமும் வெட்கமுமென்று நினைத்துக் கொண்டாய் போலிருக்கிறது! அருமையாக வளர்ந்த எங்களுடைய குழந்தை போய்விட்டது; எங்கள் மாப்பிள்ளையின் உயிருக்கு ஆபத்து வந்தால், அதில் எங்களுக்கு விசனம்

இல்லையா? உங்களுடைய விசனத்துக்கு எங்களுடையது குறைந்ததென்று நினைத்துக் கொண்டாயா? நீ எங்களை எதிரிகளைப்போல் நினைத்து ஆத்திரமாய்ப் பேசுவதேன்? குழந்தை எங்கு தவிக்கிறாளோ! அவளையல்லவோ நாம் இருவரும் சேர்ந்து கண்டு பிடிக்கவேண்டும். இந்தசமயத்தில் நீயும் நானும் சண்டையிடுவதா அழகு?—என்றாள்.

பெருந்தேவி மிகுந்த அருவருப்பைக் காட்டி வலது கையால் மோவாயில் வியப்புக் கொக்கி மாட்டி, "குழந்தையாமே குழந்தை! நல்ல குழந்தை! வாயில் விரலை வைத்தால் அந்தக் கோந்தைக்குக் கடிக்கக்கூடத் தெரியாது பாவம்! அந்தக் கோந்தை தவிக்கிறதோ? நல்ல தடிப்பயலோடே உல்லாசமாகப் பொழுது போக்கித் தவிக்கிறதோ? அவள் போன இடம் தெரியாதோ? தஞ்சாவூரில் ஒரு வருஷம் வைத்துக்கொண்டு நாடகக்காரனுக்குக் கூட்டிக்கொடுத்த உங்களுக்கு அவள் போன இடம் தெரியாதோ? காக்கை பிடிக்கிற பைத்தியக்காரியைப்போல, என்னைக் கேட்க வந்து விட்டாயோ? அப்பா! பொல்லாக்கும்பல்! மகா பட்டிக்கும்பலென்று தெரிந்து கொள்ளாமலல்லவா மதிமோசம் போனேன்" என்று ஏழு மேகங்களும் ஒன்றாகூடி கிடுகிடாயமான இடிகளை உருட்டி விடுதலைப்போல மொழிந்தாள். அந்த கன்ன கடூரமான சொற்களைக் கேட்ட சாம்பசிவம் வீராவேசங் கொண்டு தம்மை முற்றிலும் மறந்து பாய்ந்து, எதிரில் கிடந்த அம்மிக்குழவியைக் கையிலெடுத்துக்கொண்டு சமையலறைக்குள் நுழைய, சாமாவையர் குறுக்காக விழுந்து மறைத்து அம்மிக் குழவியைவாங்கி அவரையும் கூடத்திற்கு இழுத்து வந்தார். நெருப்புக் கடலில் நீந்திய கனகம்மாள் அழுத்தமாக "அடி பெருந்தேவி! நாக்கை உள்ளே வைத்துப் பேசு; தாறுமாறாக உளறாதே; என்ன நடந்ததென்று கேட்டோம். ஒழுங்காகச் சொல்ல மனமிருந்தால் சொல்; இல்லாவிட்டால், சொல்ல மாட்டேனென்று சொல்லி விடு; நாங்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் அறிந்து கொள்ளுகிறோம். உனக்குத்தான் வாயிருக்கிறதென்று பேச்சை ஓட்டாதே—என்றாள்.

அதற்குள் கட்டுக்கடங்காத கோபத்தைக் கொண்ட பெருந்தேவியம்மாள் "அடியாமே அடி! உங்கள் வீட்டு சேவகன் பெண்டாட்டி யென்று நினைத்துக் கொண்டாயோடி நாறமுண்டை! யாரைப் பார்த்து அடி என்கிறாய்? அதற்குள் அந்த கட்டையிலே போவான் மொட்டைச்சிமாதிரி அம்மிக் குழவியைத் தூக்கிக்கொண்டு ஓடிவருகிறான்! வந்து அடிபடா தொடைப்பக்கட்டை! பானையைத் தூக்கித் தலைமேலே போட்டு உடைக்கிறேன்! தூ! மானங்கெட்ட நாய்களா! போங்கள் வெளியில்; ஜாதிகெட்ட பிணங்களா! உங்களையார் இங்கே பாக்கு வைத்து அழைத்தது? பேத்தியை நாடகக்காரப் பயலுக்குக் கூட்டிக்கொடுத்த தாய்க்கிழவி முண்டைக்கு இவ்வளவு அகங்காரமா? வீட்டை விட்டு மரியாதையாக வெளியிலே போகிறாயா? சந்தனாபிஷேகம் பண்ணட்டுமா?—என்று கூறி தைதாவென்று தாண்டிக் குதித்து இலங்கணி யவதார மெடுத்தாள்.

அந்த விபரீதத்தைக் கண்டு மிகவும் அச்சமடைந்த சாமாவையர் நடுவில் விழுந்து "அண்ணா! வாருங்கள் வெளியில் போவோம்; இது சுத்த அசடு; இவளோடு சண்டையிடுவது நமக்குத்தான் அவமானம்; அம்மாவைக்கூப்பிடுங்கள். நம்முடைய அகத்துப்போவோம், வாருங்கள் பாட்டியம்மா! இது நன்றாக இல்லை; வாருங்கள் வெளியில் போவோம்" என்று வற்புறுத்தினர். ஆகாயமோ பூலோகமோவென்பது தெரியாமல், தம்மை முற்றிலும் மறந்து நின்ற சாம்பசிவம், அம்மாளுடைய கையைப்பிடித்து அழைக்க, அவள் கடைசியாக "பெருந்தேவியம்மா! கடப்பாரையை முழுங்கிவிட்டு சுக்குக் கஷாயத்தால் அதை ஜீரணம் செய்யப் பார்க்கிறாயோ! அது எங்களிடம் பலியாது; இரு இரு; இதோ ஒருநிமிஷத்தில் உன் சூதைக்கண்டு பிடிக்கிறோம்" என்று சொல்லி விட்டுவர, மூவரும் வீட்டிற்கு வெளியில் வந்தனர்.

அப்போது சாமாவையர் "அண்ணா! இவளுடைய குணம் உங்களுக்கு எப்போதும் தெரிந்தது தானே; நீங்கள் அதைப் பாராட்டி மனவருத்தப்பட வேண்டாம்; நாம் பாலைப்பார்ப்பதா பானையைப்பார்ப்பதா? வராகசாமியின் பொருட்டு நீங்கள் இதை க்ஷமிக்கவேண்டும். வாருங்கள் நம்முடைய அகத்துப்போவோம். இன்னம் நீங்கள் காப்பி கூட சாப்பிடவில்லையே! முதலில் காப்பி கொஞ்சம் சாப்பிட்டு விட்டு பிறகு மேல் யோசனையைச் செய்வோம்" என்றார்.

அவருடைய சொற்கள் சாம்பசிவத்தின் செவிகளில் நுழையவில்லை. அவருடைய மனமும் தேகமும் கோபத்தாலும், ஆத்திரத்தாலும், அவமானத்தாலும், துயரத்தாலும் படபடத்து அதிவிசையில் சுற்றிக் கொண்டிருந்தும் அசைவற்றிருப்பது போலத் தோன்

றும் பம்பரத்தைப்போல விருந்தன. உடம்பெல்லாம் வியர்வை ஒழுகியது; கண்கள் கலங்கின. தாம்ஒருபெண்ணைப்பெற்றதனால் அவ்வாறு கேவலமாக நடத்தப்பட நேர்ந்ததல்லவா என்று சாம்பசிவம் நினைத்து உருகி ஓய்ந்துபோனார். அதுகாறும் அத்தகைய பழிப்பைப் பெறாமல், எவ்விடத்திலும் பணிவையும் மரியாதையையும் பெற்றவராதலின், வெட்கமும், துக்கமும், அழுகையும் பொங்கியெழுந்தன; கண்ணில் துளித்த நீரைத்துடைத்துக் கொண்டார்; இன்னமும்தாம் வந்த காரியம் முடியாமையால், அதற்குள் தாம் அவ்வாறு சோர்வடைதல் கூடாதென நினைத்தவராய் "சாமாவையரே! வண்டியில் ஏறும்; நேராக வைத்தியசாலைக்குப் போவோம்," என்றார். அவருடைய சொல்லின் உறுதியைக் கண்ட சாமாவையர் அதை மறுக்கமாட்டாதவராய் உடனே அதற்கிணங்கி வந்து வண்டியில் உட்கார்ந்து, இன்ன இடத்திற்குப் போகவேண்டுமென்று வண்டிக் காரனிடம் சொன்னார். அதற்குள் சாம்புசிவம், கனகம்மாள், இருவரும் ஏறி வண்டியில் உட்கார்ந்து கொண்டனர். அதிவேகமாய் ஓட்டும்படி சாம்பசிவம் கண்டித்து உத்தரவு செய்தார். வண்டி அப்படியே புறப்பட்டது; வண்டிக்கார சாயப்புவின் கைகளும்,சாட்டை வாரும், சதங்கைகளும், வாயும் அதிவேகமாய் வேலை செய்தனவேயொழிய குதிரையின் ஓட்டத்தில் எவ்விதமாறுபாடும் உண்டாகவில்லை. அடிகள் அதிவேகமாக படப்பட நடை தளர்நடையானது. கிழக்குதிரையின் முதுகில் அவன் இன்னம் சிறிது தாராளமாக அடிகளை சமர்ப்பித்திருந்தால், குதிரை ஈசுவரனைக் குறித்துத் தவம் செய்து இன்னம் அதிகமான பலத்தையும் பாலியத்தையும் பெற்றுவா அடுத்த உலகம் சென்றிருக்கும்; எதிர் வீட்டுத்திண்ணையிலிருந்த போலீஸ் ஜெவான்களும் வண்டியின் பின் தொடர்ந்து வந்தனர்.

வண்டிக்குள்ளிருந்த தாயும், பிள்ளையும், அப்படியே பிரமித்து வாய் திறக்கவும் மாட்டாமல் உட்கார்ந்திருந்தனர். மேனகாவின் விஷயம் அவர்களுக்கு இன்னதென்று நன்றாய் விளங்கவில்லை. பெருந்தேவியம்மாளின் தூஷணையிலிருந்து, அவளுடைய கற்பிற்குக் குறைவான விஷயம் ஏதோ வெளிவந்திருப்பதாக மாத்திரம் ஒரு சிறிது தெரிந்தது. மேனகாவின் நற்குண நல்லொழுக்கத்தையும், கற்பின் உறுதியையும், மேன்மையான மனப்போக்கையும் அவர்கள் நன்றாக அநுபவத்தில் உணர்ந்தவராதலின், அது சுத்தக்கட்டுக்கதையாகவே இருக்கவேண்டுமென்று நினைத்தனர். மேனகாவைப் பற்றி அப்படி அவதூறாக நினைக்க அவர்களுடைய மனம் துணியவில்லை. மகா புனிதவதியான அந்தக் கோமளாங்கியின் கற்பைப் பற்றிச் சந்தேகித்தால், சந்தேகிப்போரின் சிரத்தில் இடியே வீழ்ந்து அழித்து விடுமென்று நினைத்தனர். அவர்கள் அவ்வாறு எண்ணமிட்டிருந்த தருணத்தில் வண்டி மேன்மேலும் சென்றது; தொளசிங்கப் பெருமாள் கோயில் தெருவின் தொடர்ச்சியான சாந்தானித் தெருவைக்கடந்து அப்பால் மேற்குமுகமாய்த் திரும்பி பீட்டர் சாலையிற் செல்லவாரம்பித்து அடுத்த நிமிஷத்தில், அங்கே இடது பக்கத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷன் வாயிலில் திடீரென்று நின்றது. சாமாவையர் "சாயப்பு! ஏன் வண்டி நின்றுவிட்டது?" என்றார்.

உடனே சாயப்பு ஒன்றையு மறியாதவனைப்போல "இல்லெ ஸாமி? எங்க வூடு இங்கே இருக்கிறான்; அதுக்காவ குதிரெ எடக்குப் பண்றாங்கோ; இதோ ஆச்சு ஓட்றேன் ஸாமி! ரோசனை பண்ணவேணும் ஸாமி!" என்று கூறிக்கீழே குதித்து, குதிரையின் கடிவாளவாரைப் பிடித்து நடத்துபவன்போலச் செய்து, வண்டியை ஸ்டேஷன் வாயிலின் ஓரமாக நிறுத்தினான். அதற்குள் புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புதலைப்போல, ஐந்தாறு போலீஸ் ஜெவான்கள் தோன்றி, வண்டியின் நாற்புறங்களிலும் சூழ்ந்து கொண்டனர். போலீஸ் இன்ஸ்பெக்டர் பின்பக்கத்தில் திடீரென்று தோன்றி பனைமரத்தைப்போல விறைத்து நின்று சாம்பசிவத்திற்கு திருஷ்டி தோஷம் கழிப்பவரைப்போல வலதுகையைக் காட்டி ஒழுங்காக சலாம் செய்து தமது கையைத்துடையில் சேர்த்து நின்றார். எதிர்பாரா அந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிட்ட சாம்பசிவத்தின் நிலைமை எப்படியிருந்ததென்றால் பாசி நிறைந்த குளத்தில், ஒரு கல்லைப்போட்டவுடன் பாசிவிலகி நாற்புறங்களிலும் அலைந்து நகர்ந்து, இடையில் தெளிவான இடத்தைக் காட்டுதல்போல, அவருடைய ஏனைய துன்பங்களும், உணர்ச்சிகளும், திடுக்கென்று அவருடைய மனத்தின் முன்புறத்திலிருந்து பின்புறத்திற்கு ஒதுங்கின; அவர் சுய உணர்வைப்பெற்று. தமது இயற்கையான கம்பீரத் தோற்றத்தையும் கௌரவத் தோற்றத்தையும் கொண்டு, தம்முகத்தில் சந்தேகம் தோன்ற "யார் நீங்கள்? இந்தபாகத்தின் போலீஸ் இன்ஸ்பெக்டரோ? இதற்கு முன் என்னைப் பார்த்திருக்கிறீர்களோ?" என்றார்.

சமைய சஞ்சீவி அய்யர் தம்முடைய முகத்தைத் தாமரைப் பூவைப்போலப்புன்னகையால் மலர்த்திக்காட்டி "ஆம்; தாங்கள் தஞ்சாவூர் டிப்டி கலெக்டரவாளல்லவா?" என்றார்.

சாம்ப:—ஆம்; நான்தான்—என்றார்.

போலீஸ்:—அப்படியானால் தாங்கள் ஒருநிமிஷ நேரம் ஸ்டேஷனுக்குள் தயவு செய்யவேண்டும்—என்றார்.

குதிரையின் இடக்கினால் வண்டிநின்றவுடன் இன்ஸ்பெக்டர் அதைப்பார்த்து வெளியில் வந்ததாகவும், வண்டியில் தாமிருந்ததைக் கண்டவுடன் பழைய அறிமுகத்தால், தம்மை அவ்வாறு சலாம் செய்தாரென்றும் முதலில் சாம்பசிவம் நினைத்தார். பிறகு இறங்கி ஒருநிமிஷம் வரும்படி மரியாதைக் குறைவாகத் தம்மிடம் அவர் சொல்லவே சாம்பசிவம் ஒருசிறிது திகைப்படைந்தார். ஒருகால் காலை வேளையாதலால், தமக்கு பழம், காப்பி முதலிய சிற்றுண்டிகள் கொடுத்து உபசரிக்க ஒரு வேளை அழைக்கிறாரோவென்று நினைத்தார்; என்றாலும் தம்முடைய அவசரத்தை நினைத்து "ஸ்டேஷனுக்குள் என்ன விசேஷம்? நான் நிரம்ப அவசரமாகப் போகவேண்டும்" என்று கூறினார்.

போலீஸ்:—ஸ்டேஷனில் தங்களுக்கு அதிகம் தாமதமுண்டாக்கும்படியான வேலை ஒன்றுமில்லை. **போலீஸ் கமிஷனர்** வந்திருக்கிறார். அவர் தங்களோடு மிகவும் அவசரமாக இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறார் உடனே வந்துவிடலாம், தயவுசெய்யவேண்டும்—என்று நயமாகவும், அதிகாரத்தோடும் கூறினார். அதைக்கேட்ட சாம்பசிவத்திற்கு அது உண்மையுலகமோ அல்லது தாம் கனவு நிலைமையிலிருக்கிறோமோ வென்னும் சந்தேகமுதித்தது; பெரிதும் ஆச்சரியத்தோடு "என்ன ஐயா! நான் வண்டியிலிருக்கிறேனென்பதை இப்போதுதானே நீங்கள் தெரிந்து கொண்டீர்கள்! கமிஷனர் என்னோடு பேசவேண்டுமென்று எப்போது சொன்னார்? என் வரவை முன்னாகவே எதிர் பார்த்திருப்பவரைப் போலப் பேசுகிறீர்களே! முதலில் நான் இந்த ஊருக்கு வந்ததுதான் உங்களுக்கு எப்படித் தெரியும்? இப்போது இந்த வழியாகவருவேனென்பதுதான் எப்படித் தெரியும்? அதற்குத் தகுந்தாற்போல, இவ்விடத்தில் வண்டியும் தானாக நின்றதும் ஆச்சரியகரமாக விருக்கிறது!" என்றார்.

போலீஸ்:—இந்த விவரங்களையெல்லாம் அவரே தங்களிடம் நேரில் திருப்திகரமாய்ச் சொல்வார்; காத்திருக்கிறார்; தயவு செய்யுங்கள்-என்று மேன்மேலும் வற்புறுத்தினார். சாம்பசிவையங்காருடைய மனதில் உடனே கோடானுகோடி யெண்ணங்கள் தோன்றின; தாம் செல்லுமிடங்களிலெல்லாம் போலீசார் தம்முடன் தொடர்ந்துகொண்டே வருகிறார்களோவென்றும் அவர்கள் அவ்வாறு செய்யவேண்டிய முகாந்திரமென்னவென்றும் நினைத்து நினைத்து எவ்வித நிச்சயமான முடிவையும் அடையக் கூடாதவராய் தயங்கினார்; தாம் அதற்குமுன் பார்த்து மறியாத போலீஸ் கமிஷனர் தம்மிடம் என்ன அவசர சங்கதியைக் கூறப்போகிறாரென்றும், அது எத்தகைய புதிய துன்பத்தைச் செய்யக்காத்திருக்கிறதோவென்றும் கவலை கொண்டு தவித்தார். பெண்ணின் விஷயமும் மாப்பிள்ளையின் விஷயமும் இன்னொரு புறத்தில் வதைத்து, "நிற்க வேண்டாம் பறவும் பற"மென்று அவரைத் தூண்டிக்கொண்டே இருந்தன. இந்த நிலைமையில் இருதலைக் கொள்ளி எறும்புபோலான சாம்பசிவம் அரை மனதோடு கீழே குதித்து ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்; நடந்த சம்பாஷணையைக் கவனித்திருந்த கனகம்மாளுடைய மனது இன்னதென்று, விவரிக்க இயலாத ஒருவகை சஞ்சலத்தை யடைந்தது. இன்ஸ்பெக்டடைய குரலைக் கேட்டபோதோ, கோட்டான், சாகுருவி, முதலியவற்றின் அவக்குரலைக் கேட்பதைப் போல விருந்தது. சாம்பசிவத்திற்கு ஏதோ பெருத்த விபத்து நேரக் காத்திருப்பதாக நினைத்த அம்மாள் வண்டியிலிருக்க மனமற்றவளாகக் கீழே இறங்கினாள். சாமாவையரும் தொடர்ந்தார். அவர்களிருவரும் ஸ்டேஷனுக்குள் நுழைந்தனர். அவர்களும் வந்ததை போலீசார் ஆட்சேபிக்கவில்லை. சாம்பசிவம் உள்ளே சென்று, எதிரில் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருந்த ஒருவெள்ளைக்கார அதிகாரியைக் கண்டார்; அவர் நமது சாம்பசிவத்தைப் பார்த்தவுடன், அன்பான குரலில் மரியாதையாக "டிப்டி கலெக்டரே! வரவேண்டும். இதோ இந்த ஆசனத்தில் உட்காருங்கள்" என்றார். சாம்பசிவம் அப்படியே உட்கார்ந்தார்; என்றாலும் விஷயம் இன்னதென்பது தெரியாமை மாத்திரம் அவருக்கு மிகுந்த ஆவலைக் கொடுத்தது. சாம்பசிவம் மெதுவாக "தங்களை நான்பார்த்ததில்லை; போலீஸ் கமிஷனர் தாங்கள்—?"

துரை "ஆம்; நான்தான்; வேறொன்றுமில்லை. நேற்றிரவு எனக்குத் தஞ்சாவூர் கலெக்டர் துரையிடமிருந்து ஒரு அவசரத்

தந்தி வந்தது. அதை உங்களுக்குந் தெரிவிக்க விரும்பியே உங்களைத் தருவித்தேன்" என்றார்.

திடுக்கிட்டுப் பெரிதும் வியப்படைந்த சாம்பசிவம் "நேற்று சாயங்காலந்தானே நான் அங்கிருந்து புறப்பட்டு வந்தேன்! அதற்குள் என்ன அவசரமான சம்பவம் நேர்ந்து விட்டது?" என்றார்.

துரை "இதோ படிக்கிறேன்; கேளுங்கள். இதில் முதல் பாதி பாகம் உங்களுக்கு சம்பந்தமானது. பிற்பாதி பாகம் எங்களுக்கு சம்பந்தமானது ஆகையால் உங்களுக்கு சம்பந்தப்பட்ட முதல் பாகத்தைப் படிக்கிறேன் கேளுங்கள்:

சென்னை போலீஸ் கமிஷனர் அவர்களுக்கு தஞ்சாவூர் டிப்டி கலெக்டர் சாம்பசிவையங்காரவர்கள் இன்று மாலையில் இங்கிருந்து புறப்பட்டு பட்டணம் வருகிறார். காலையில் எழும்பூரில் இறங்குவார். பிறகு திருவல்லிக்கேணி தொளசிங்கப்பெருமாள் கோவில் தெருவிலிருக்கும் வக்கீல் வராகசாமி அய்யங்காரவர்கள் வீட்டிற்கு வருவார். அவரைக் கண்டு அவரிடம் அடியில்கண்ட எனது உத்தரவைக் கொடுத்து, அதற்கு சாட்சியாக நீங்களே அவருடைய கையெழுத்தையும் பெருவிரல் ரேகை யடையாளத்தையும் பெற்றுக்கொள்ளக் கோருகிறேன். 'அவர் ரஜா' உத்தரவு இல்லாமல் இரண்டு தடவைகளில் தம்முடைய அதிகார எல்லையை விடுத்து வெளியூர்களுக்குப் போயிருக்கிறார். அப்படிப்போன ஒரு சமயத்தில், தாம் தம்முடைய உத்தியோக முறையில் தம்முடைய அதிகார எல்லைக்குள்ளிருக்கும் கிராமங்களில் முகாம் செய்ததாக பொய்யான செலவுப்பட்டித் தயாரித்து, சர்க்காரை ஏமாற்றி பணமும் வாங்கிக் கொண்டிருக்கிறார். தவிர, அவர் பலரிடம் லஞ்சம் வாங்கினதாக அநுமானிக்கப் பல சாட்சிகளுமிருக்கின்றன. இவற்றால், அவர் உத்தியோகத்தினின்று நீக்கப்படத்தக்கதும், நியாய ஸ்தலத்தில் தண்டனைபெறத்தக்கதுமான பல குற்றங்களைச் செய்திருப்பதாக நினைக்க இடமிருக்கிறது, இவற்றைப் பற்றி நாம் செய்யப்போகும் விசாரணை முடியும் வரையில், அவரை வேலையிலிருந்து நீக்கி வைத்திருக்கிறோம்; தம்மிடமிருக்கும் சர்க்கார் சம்பந்தமான காகிதங்கள் சில்முகர் முதலிய யாவற்றையும் இந்த உத்தரவை அவர் பெற்ற இரண்டு நாட்களுக்குள் தஞ்சை கஜானா டிப்டி கலெக்டரிடம் ஒப்புவிக்க வேண்டியது.

என்று கமிஷனர் முற்பகுதியைப்படித்துக்காட்டினார். அதைக் கேட்ட சாம்பசிவத்தின் மனோ நிலைமையை மனிதர் யூகித்தல் வேண்டுமேயன்றி, அதை உள்ளவாறு விரித்தெழுதத் தேவையான அறிவாற்றல் இந்த எழுதுகோலுக்கில்லையென்று சொல்வது பொய்யாகாது. அவர் மிதமிஞ்சிய வியப்பும் திகைப்புங்கொண்டு, பேசமாட்டாமல் அப்படி கல்லாய்ச்சமைந்துபோனார். அவமானத்தால் அவருடைய தேகமும் மனமும் குன்றிப்போயின. முகத்தைக் கீழே கவித்துக்கொண்டார், உடம்பு பதை பதைத்தது. விழிகளில் தீப்பொறி பறந்தது. அது வேறு எவராலோ அனுப்பப்பட்ட பொய்த் தந்தியாயிருக்கவேண்டுமென்று நினைத்தார். தான் எத்தகைய குற்றமும் செய்யாதிருக்கையில், கலெக்டர் தம்மீது பொய்க்குற்றம் சுமத்தி, வேலையினின்று தம்மை நீக்கியிருக்கிறாரென்பதை அவருடைய செவிகள் நம்பவில்லை. அது உண்மையாயிருக்குமோவென்றும், அது யாருடைய விஷயமோவென்றும் யோசித்தார். ஒன்றுந் தோன்றவில்லை. சாமாவையர் ஆங்கிலபாஷை சிறிதுணர்ந்தவராதலால், அவர் அந்த நடந்த சம்பாஷணையின் கருத்தை யறிந்துகொண்டார். கனகம்மாள், விஷயம் என்னவென்பதை மெல்ல சாமாவையரிடம் கேட்க, அவர் உடனுக்குடனே மொழிபெயர்த்து வந்தார். கனகம்மாளின் மனமும், மெய்யும் ஆத்திரத்தாலும், வியப்பினாலும், அவமானத்தினாலும் படபடத்து நின்றன; சாம்பசிவையங்கார் கமிஷனரைப்பார்த்து "என்ன ஆச்சரியம்! இந்த உத்தரவு எனக்கு சம்பந்தப்பட்டது தானா? நன்றாகப்பாருங்கள். இந்தக் குற்றங்களில் எதையும் நான் செய்யவில்லையே!" என்றார். கமிஷனர் துரையேனும், மற்ற போலீசாரேனும் அவர் சொன்னசொல்லைச் சிறிதும் மதிக்கவில்லை. கையுங்களவுமாகப் பிடிபடும் திருடர்கூட தாம் குற்றம் செய்யவில்லையென்றே சொல்வதைக் கேட்டுக் கேட்டுப் பழகிய போலீசார் புத்திக்கு சாம்பசிவமும் அதே வேஷந்தான் போடுவதாகத் தோன்றியது; ஆகையால் கமிஷனர் அவரைப்பெருத்த அயோக்கிய சிகாமணியாகவே மதித்தாராயினும் வெளிக்குமாத்திரம் மரியாதைகாட்டி "கலெக்டர் சொல்வது பொய்யோ, டிப்டிகலெக்டர் சொல்வது பொய்யோ; அது தானே பின்னால் விளங்குகிறது. எனக்கு அவர் கொடுத்தவேலையைச்செய்ய நான் கடமைப்பட்டவன். இதோ தந்தியை நீங்களே பாருங்கள்" என்று கூறியவண்ணம் தந்தியின் கீழ்ப்பாகத்தை மறைத்துக்கொண்டு முற்பகுதியைக் காட்டி

னார். அது உண்மைத் தந்தியாகவே காணப்பட்டது; தஞ்சாவூர் கலெக்டரிடத்திலிருந்தே வந்திருந்தது. அதன் வாசகமும் கமிஷனர் படித்தபடியே இருந்தது; சாம்பசிவம் சிறிது யோசனை செய்தவராய் "உம் நடக்கட்டும்; எல்லாம் காலவித்தியாசம்; என்னென்ன சம்பவிக்கிறதோ பார்க்கலாம். இப்போது உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்றார்.

துரை அவருடைய வேதாந்தப் பேச்சைக் கேட்டுப்புரளியாகப் புன்னகை செய்து "இந்த முற்பாதியின் நகல் ஒன்று வேறு காயிதத்தில் தயார் செய்யப் பட்டிருக்கிறது. அதில் என்னுடைய கையெழுத்தும் செய்திருக்கிறேன். அதைப்பெற்றுக் கொள்ளுங்கள். "சென்னை ஐஸ்ஹவுஸ் போலீஸ் ஸ்டேஷனில் நானே நேரில் கமிஷனரிடம் இதன் முற்பகுதியான உத்தரவைப் பெற்றுக்கொண்டேன்" என்று தந்தியின் பின்புறத்தில் எழுதிக்கையெழுத்துச்செய்து அதில் உங்களுடைய பெருவிரல் ரேகையை அழுத்துங்கள்; அவ்வளவே வேறொன்றுமில்லை. அதன்பிறகு தங்களுக்கு விருப்பமான விடத்துக்கு நீங்கள் போகலாம்". என்றார்.

அதைக்கேட்ட சாம்பசிவம் தம்மை மறந்த நிலைமையில், அவர் சொன்னபடி சடங்குகளை யெல்லாம் செய்துவிட்டு, உத்தரவுக் காயிதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, துரையிடம் சொல்லிக் கொள்ளவேண்டுமென்னும் மரியாதையையும், தம் தேகத்தையும் முற்றிலும் மறந்து நேராக வெளியிற்போய் வண்டியில் ஏறிக்கொண்டார். கனகம்மாளும் சாமாவையரும் அப்படியே ஏறிக்கொண்டனர்; வண்டி ஓட்டப்பட்டது. மூன்று உலகங்களையும் எரித்த ஈசனது கோபத்தையே, அவ்விருவரின் கோபத்திற்கு இணைசொல்லவேண்டுமன்றி, வேறு எந்தக்கோபமும் அந்த சமையத்தில் இணை சொல்லத் தகுந்ததல்ல. தாங்கள் வண்டியிற் செல்வதாக அவர்களுக்குத் தோன்றவில்லை. ஆகாயத்தில் பறப்பதாக நினைத்துக் கொண்டனர். அவர்களுடைய மனதிலிருந்து பொங்கியெழுந்து உலகத்தை யெல்லாம் போர்த்திய உணர்ச்சியைக் கோபமென்பதா? துயரமென்பதா? வியப்பென்பதா? என்னவென்பது? யாவுமிருந்தன வென்றே சொல்லவேண்டும். மிதமிஞ்சிய கொதிப்பில் அவர்களுடைய நிலைமை கட்டுக் கடங்காமல் போயிற்று; வாய்திறந்து பேசவும் வலுவற்றவராய்ப் போயினர். ஐந்து நிமிஷநேரத்தில் வண்டி

வைத்திய சாலை வாயிலில் நின்றவுடன், சாமாவையர் இறங்குங்கள் என்றபிறகே, அவ்விருவரும் தமது உணர்வைப் பெற்றுக் கீழே இறங்கினர். மூவரும் உட்புறம் நுழைந்தனர். அப்போது அகாலமாய்ப் போனமையால், பிணியாளிகளிடம் போகக்கூடாதென்று சேவகன் அவர்களைத் தடுத்துவிட்டான். என்ன செய்வதென்பதைப் பற்றி சாம்பசிவம் யோசனை செய்தார். மற்றவரை, வெளியில் இருக்கச்செய்துவிட்டுத் தாம் மாத்திரம் பெரிய டாக்டர் துரையிடம் போய் தாமே தஞ்சாவூர் டிப்டிகலெக்டரென்றும், வண்டியில் அரைபட்டுக் கிடக்கும் தம்மருமகப் பிள்ளையை அவசரமாகப்பார்க்க வேண்டுமென்றுங்கூற, அவர் இரக்கங்கொண்டு, போய்ப்பார்க்க அநுமதிகொடுத்தார். ஆனால் வராகசாமியுடன் பேசி, அலட்டக்கூடாதென்றும் பதினைந்து நிமிஷத்திற்கு மேலிருக்கக் கூடாதென்றும் நிபந்தனை கூறி அவ்வாறு அநுமதித்தார்.

உடனே மூவரும் நோயாளிகள் கட்டில்களிற் படுத்திருந்த ஒரு அறைக்குள் சேவகனால் நடத்தப்பட்டனர். வராகசாமி படுத்திருந்த விடத்தை சாமாவையர் அறிவாராதலின், அவர், மற்றிருவரையும் அவ்விடத்திற்கு அழைத்துப் போனார். ஆனால், கட்டிலில் படுத்திருந்த மனிதன்வராகசாமி தானோவென்னும் சந்தேகம் அவர்களது மனதிலுதித்தது. அவ்வளவு அதிகமாக அவன் உருமாறிப்போய் கண்களைத்திறவாமல் முற்றிலும் உணர்வற்றுத் தளர்வடைந்து, உயிரற்றவன்போலத் துவண்டுகிடந்தான்; உடம்பில் ஏராளமான துணிக்கட்டுகள் காணப்பட்டன. அவன் அத்தனை காயங்களை யடைந்தானென்பதை அவற்றிலிருந்து யூகித்துணர்ந்தவுடன் அவர்களது உயிரே திடுகிடென்று ஆடித் தத்தளித்தது; குலை நடுக்கமெடுத்தது; மயிர் சிலிர்த்தது; கண்களில் கண்ணீர் பொங்கிக் தடகடவென்று கன்னங்களில் வழிந்தது. அவர்களது மனம் கொதித்தது; வயிறு பற்றியெரிந்தது. இருவரும் அந்த நிலைமையில் என் செய்வர்? அந்தப் பிணியிலிருந்து அவனை மீட்பதற்குத் தம் உடல் பொருளாவி மூன்றையுங் கொடுத்துவிடத் தயாராக விருந்தனர். அந்தப் பரிதாபகரமான தோற்றத்தைக்காண, அவர்களுடைய முந்திய விசனங்கள் யாவும், புலியின் முன் ஆட்டுக்குட்டிகளென்ன ஓடி யொளிந்தன; அவர்களது மனம் நைந்திளகி ஏங்கியது. இருவரும் கட்டிலுக்கருகில் நின்று மாறி மாறிகாயங்களையும், முகத்தை

யும் உற்று நோக்கினர். ஒவ்வொருகாயமும் எவ்வளவு பெரிதாயிருந்ததென்னும் விவரத்தை சாமாவையர் சொல்லச் சொல்ல, அவர்கள் விம்மி, விம்மி யழுதனர்; தமது முந்தானையால் வாயைமூடிக் கொண்டு பொருமியழுது, கண்ணீரைத் துடைத்துக் கொண்டனர். சிறிதும் அசைவின்றி வராகசாமி சவம்போலக் கிடந்தான். உடனே சாம்பசிவம் மனமுருக்க மடைந்து ஐயோ! ஏழரை நாட்டான் எல்லாரையும் ஒரேகாலத்தில்தானா ஆட்டிவைக்கவேண்டும்? எனக்காயினும் உத்தியோகம் போனதோடு நின்றது; உமக்கு தேகத்துன்பமா நேர வேண்டும்! பாவியாகிய எனக்கு நன்மையே நிலைப்பதில்லை; பத்து நாட்களுக்குமுன், மேனகாவை நீர் மிகவும் அன்பாக நடத்தி அரை நொடியும் அவளை விட்டுப்பிரியாது வாஞ்சையைக்காட்டியதைக் கண்டு என் மனம் எவ்வளவு பூரித்தது. 'உனக்கும்' அவ்வளவு சந்தோஷமா? என்று தெய்வமே அதைக்கண்டு பொறாமைகொண்டு என் வாயில் மண்ணைப்போட்டது! என்னுடைய திருஷ்டி தோஷமே உங்களிருவரையும் இப்படி அலங்கோலப் படுத்தி உங்கள் வாழ்க்கையைச் சின்ன பின்னமாக்கி யிருக்கிறதே! அப்படிப்பட்ட துஷ்டக் கண் இப்போது விசனப்படுவதேன்" என்றும் பலவாறு தமக்குள் நினைத்துருகினர். கனகம்மாள், வராகசாமியின் முகத்தருகில் குனிந்து அன்பு ததும்ப "மாப்பிள்ளை மாப்பிள்ளை!" என்று இரண்டு மூன்று முறை கூப்பிட்டாள். அவன் அதை உணர்ந்ததாகத் தோன்றவுமில்லை; சிறிதும் அசைவற்றும், கண் திறவாமலும் முன்போலவே கிடந்தான்; கனகம்மாள் தள்ளாடினாள்; மேனகா காணாமற்போனதையும் சாம்பசிவத்தின் உத்தியோகம் விலகிப்போனதையும் அசட்டைசெய்து, வருஷக்கணக்கில் பட்டினி கிடந்து இராக்கண் விழித்திருந்து வராகசாமிக்குரிய சிகிச்சைகள் செய்து அவனைக் காப்பாற்றக் கூடிய கனகம்மாள் அப்போது அவனுக்கு எவ்வித உபசாரணைசெய்வதென்பதை யறியமாட்டாமல் தவித்தாள். புலிப்பால் தேவையென்றாலும், உடனே கறக்கவும், அவனது உயிர் எமலோகத்தின் வாயிற்படியிலிருந்தாலும், அங்குசென்று எமனுடன் முஷ்டியுத்தம் செய்து அவனுயிரை மீட்டுவரவும் தக்க திறமைவாய்ந்த கனகம்மாள் அப்போது எப்பாடு படுவதாயினும், வராகசாமியின் நிலைமையில் சிறிய மாறுபாடும் தோன்றவில்லை;மற்ற துன்பங்களாகிய இடிகளைத் தாங்கிய கனகம்மாள் அதைக்கண்டு தாங்கமாட்டாமல் பதை பதைத்தாள்; தான் ஒன்றையும் செய்யாமல் சும்மாவிருப்பது அவளுக்குத் துன்பமா

யிருந்தது. அன்பு என்னும் பெரும்பேய் அவளது மனதிற்குள்ளிருந்து ஓயாமல் இடித்து இடித்து ஊக்கிக் கொண்டேயிருந்தது. கன்றிற்குக் கனிந்திரங்கும் பசுவைப்போல உள்ள முருகி நின்று, தன் வலதுகையை நீட்டி அவனுடைய கன்னத்தை மெல்லத்தடவி "மாப்பிள்ளை! மாப்பிள்ளை!" என்றாள். திடீரென்று வராகசாமியின் கண்கள் திறந்துகொண்டன. விழிகள் பயங்கரமாக, விருந்தன. பார்வை அங்கு நின்றவர்களின்மீது விழவில்லை. அவன் வெறு வெளியைப் பார்த்தான், அவனுடைய மூளை நன்றாய்க் குழம்பிப் போயிருப்பதையும் அவன் தேகம்முற்றிலும் பச்சைப்புண்ணாயிருப்பதையும், அவன் விழியின் குழப்பமும், ஒளியின்மையும் தெளிவாகக் காட்டின. அடுத்த நிமிஷத்தில் கண்களில் அயர்வுதோன்ற, இமைகள் தாமே மூடிக்கொண்டன. அதற்குள் அங்குவந்த துரைசானியாகிய தாதியொருத்தி "சந்தடிசெய்யாமல் பார்த்து விட்டுப் போங்கள். அவனுடன் பேசக்கூடாது" என்று ஆங்கில பாஷையில் கீச்சுக்குரலில் அதிகாரத்தோடு கூறினாள். அதைக்கேட்ட கனகம்மாள் அடங்கிப்பின் வாங்கினாள்.

அதற்குள் சாமாவையர் வராகசாமிக்குப் பக்கத்தில் கழற்றி வைக்கப்பட்டிருந்த, அவனுடைய சொந்த உடையை மெல்ல எடுத்து அதிலிருந்த கடிதங்களிரண்டையும் படத்தையும் எடுத்து சாம்பசிவத்தினிடம் கொடுக்க அவர் மிகுந்த ஆவலோடு அவற்றை வாங்கிப் படத்தை உற்றுநோக்கினர். அதைக்கண்ட கனகம்மாளும் அருகில் நெருங்கி அதைப்பார்த்தாள்; விஷயம் இன்னதென்பது அவர்களுக்கு உடனே விளங்கவில்லை. மதிமயக்கங் கொண்ட சாம்பசிவம் ஒரு கடிதத்தை எடுத்துப் படித்தார்; பிறகு இன்னொன்றைப் படித்தார். கனகம்மாளும் அவருடன் கூடவே அவற்றைப் படித்துவிட்டாள். இருவரின் முகங்களும் சடக்கென்று மாறிவிட்டன; பிரேதக்களை தோன்றியது; புத்தி குழம்பியது; சிரம் கிறுகிறென்று சுழன்றது; நெருப்பாற்றில் நீந்தித் தத்தளிப்போரைப் போலாயினர் வைத்தியசாலையும், வராகசாமியும், அவனுடைய காயங்களும், கட்டுகளும் அவர்களுடைய நோக்கத்தினின்று இந்திர ஜாலமோவென்ன நொடியில் மறைந்தன. மாயாண்டிப் பிள்ளையும், மேனகாவுமே, அகக்கண்ணாகிய நாடக மேடையில் கூத்தாடினர். தம்முடம்பையும் தாமே கிருக்கிறோ

மென்பதையும் மறந்து பதறிப்போய் அப்படியே தூண்களைப்போல நின்றுவிட்டனர். யார் என்ன சொல்லைச் சொல்லுவதென்பதையறியாமல் சுவரில் தீட்டப்பட்ட சித்திரப்பதுமைகளைப் போலவிருந்தனர். அப்போது தாதியின் கீச்சுக்குரல் திரும்பவும் உண்டாயிற்று "பதினைந்து நிமிஷம் முடிந்துபோய் விட்டது; போகலாம்" என்ற சந்தோஷ சங்கதியை சிறிதும் மனங்கூசாமல் அவள் தெரிவித்தாள். அதற்குள் சாமாவையர் "அண்ணா! நாழிகையாய் விட்டதாம்; நாம் வெளியிற் போகவேண்டும்: கடிதங்களை முன்போல வைத்துவிடுவோம். துரையின் அநுமதியில்லாமல் நாம் எதையும் எடுத்துக் கொண்டுபோகக்கூடாது" என்றார். அதைக் கேட்ட சாம்பசிவம் கடிதங்களையும் படத்தையும் முன்போல உடைக்குள் வைத்துவிட்டு, வெளியில் நடந்தார். அவருடைய நிழலைப்போலக் கனகம்மாளும் சென்றாள். மூவரும் வைத்தியசாலைக்கு வெளியில் வந்தனர். அங்கு குதிரை வண்டியுடன் சாயப்பு தயாராகவிருந்தான். வண்டியில் பூட்டப்பட்டு விடுபடும் வழியறியாமல் தத்தளித்து நின்ற குதிரையும், சாம்பசிவம், கனகம்மாள் இருவருக்கும் நேர்ந்துவரும் பொல்லாங்குகளை நினைத்து அழுவதைப்போலக் கண்ணீர் சொரிந்து தன் விதியை நினைத்து அழுதுகொண்டு நின்றது.

வெளியில் வந்தவுடன், சாம்பசிவம் வண்டிக்கருகில் நெருங்காமல் சற்று தூரத்திலேயே நின்றார். மற்றஇருவரும் வந்தனர். இரணியனது குடலைப்பிடுங்கி மாலையாய்த்தரித்துக் கொள்ளும் எண்ணத்துடன் மகா கோபத்தோடு தோன்றிய உக்கிர நரசிம்ம மூர்த்தி தூணிற்குள்ளிருந்து கோபநகை செய்ததைப்போல, அங்கிருந்தோர் நடுங்கும்படி சாம்பசிவம் கல கலவென்று சிரித்தார். கடிதங்களில் காணப்பட்ட விஷயம் முற்றிலும் முழுப்புரட்டான கற்பனையென்று அவர் ஏற்கனவே உறுதி செய்துகொண்டார். மேனகா தஞ்சையிலிருந்த ஒரு வருஷ காலத்தில், கணவனது பிரிவாற்றாமையால் பட்டபாட்டையும், ஊணுறக்கமற்றும் மேன்மாடியைவிட்டுக் கீழிறங்காமலும் கிடந்து ஏங்கித்துரும்பாய் மெலிந்து தன்னை வதைத்துக் கொண்டதையும் நன்றாகவறிந்தவராதலின், அவளுக்கு விபசாரதோஷம் அளிப்பது, பாபத்திலும் பாபமான காரியமென்றெண்ணினார். அவளைப்பற்றி மனதாலும் அவ்வாறு நினைப்பது கொடியபாதகமென்று உறுதியாய்க்கொண்டார். மகா உத்தமியான அவள் விஷயத்தில் எத்தகைய தகாத நினைவுங்கொள்ள அவருடைய மனது கூசியது. தம் விஷயத்தில் தந்தியில் அபாண்டமான பொய்க்குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கையில், தமது பெண் விஷயத்திலும் இப்படிக் கற்பனையான குற்றம் சுமத்தப்படுவது ஒரு பெருத்த வியப்பாகாதென்றும் ஒன்று எப்படி முற்றிலும் புரட்டோ, அவ்வாறே மற்றதும் புரட்டானதென்றே நிச்சயித்தார். கடித விஷயம் நாத்திமார்களாலேயே உற்பத்தி செய்யப்பட்டதென்றும் கனகம்மாள் முதல் நாட் கூறியபடி அவர்கள் மேனகாவைக் கொன்றே இருக்க வேண்டுமென்றும் நினைத்தார்; அவர்கள் போலீசில் பதியவைக்காமையும், அந்த நினைவையே உறுதிப்படுத்தியது. தமது அருமைப் பெண்ணை தாம் இனிக்காண்போமோ, அவளை எப்படிக் கொன்றிருப்பார்களோ வென்ற எண்ணங்கள் உதிக்க உதிக்க அவருடைய உடம்பு அப்பொழுதே வெடவெடவென்று துடித்தது. உடனே போலீசில் பதிய வைத்து, வராகசாமியின் வீட்டைச் சோதனைப்போட்டு, விதவைகளிருவரையும் கைதிசெய்து நன்றாக விசாரணையைத் தொடக்கவேண்டுமென்று நினைத்தார். தன் சகோதரிகளை அவமானப்படுத்தியதைப் பற்றி வராகசாமி தம்மீது கோபங்கொள்ளினும், தாம் அவ்வாறு செய்தே தீரவேண்டுமென்று உறுதியாக வெண்ணினார். ஆனால் அதற்குள், அவர் மனதில் இன்னொரு நினைவுண்டாயிற்று. சென்ற பத்து மாதங்களாக தஞ்சையில் நாடகம் நடத்திய **வீராசாமி** நாயுடு கம்பெனியில் மனமோகன மாயாண்டிப்பிள்ளையென்ற புகழ்பெற்ற ஒரு ராஜ வேஷக்காரனிருந்ததாகவும், அவன் ஏராளமான குடும்ப ஸ்திரீகளை பைத்தியங்கொண்டலையும்படி செய்து அவர்களைக் கெடுத்து விட்டானென்றும்; அந்தக் கம்பெனி சமீப காலத்தில் சென்னைக்கு வந்ததென்றும் அவர் தஞ்சையிலேயே, நாளடைவில் கேள்விப்பட்டிருந்தார். வீராசாமி நாயுடுவும் வருமான வரிபோடும் விஷயமாக தமது கச்சேரியில் ஒருதரம் விசாரணைக்கு வந்ததாகவும் அவருக்கு நினைவுண்டாயிற்று; ஆகையால், உடனே நாடக கொட்டகைக்குப்போய், வீராசாமி நாயுடுவையாவது மாயாண்டிப்பிள்ளையையாவது கண்டு கடிதத்தில் எழுதப்பட்டிருப்பது பொய்யென்பதற்கு, அவர்களுடைய சாட்சியமும் கிடைக்கும்படி தயார்ப்படுத்திவிட்டுவந்து அதன்பிறகு போலீசில் பதிவுசெய்வதே பல்மானமுறையென்று நினைத்தார். "சாமாவையரே! வீராசாமி நாயுடுவின் கம்பெனி எந்தக் கொட்டகையில் ஆடுகிறது?" என்றார், சாம்பசிவம்.

மாயாண்டிப் பிள்ளையிருந்த கம்பெனியின் விஷயத்தையறிந்தவரைப் போலப் பேசியதைக்கண்டு திடுக்கிட்டு உள்ளூற நடுநடுங்கினார். ஆனால் அதை வெளியிற் காட்டாமல் மறைத்துக்கொண்டு "செங்காங் கடைக் கொட்டகையில் ஆடுகிறது" என்றார்.

"சரி: அங்கே போய்விட்டு வருவோம்; வாரும்" என்றார். சாம்பசிவத்தின் அந்தரங்க நினைவையுணராத கனகம்மாள், அவர் மேனகாவின் கற்பு விஷயத்தில் சந்தேகப்படுகிறாரென்று நினைத்து, அதைப் பொறாமல் "என்னடா இது? இந்தப் பொய்க் கடிதாசியை எடுத்துக்கொண்டு நாடகக் கொட்டகைக்குப் போகவேண்டுமோ? குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா? இந்த மொட்டை முண்டைகளே கட்டுக்கதை எழுதிவைத்துவிட்டு, நீ இங்கே ரஜா இல்லாமல் வந்ததாக கலெக்டருக்கும் எழுதியிருக்கிறார்களடா! அங்கே எதற்காகப் போகிறது? "ஏனடா மாயாண்டிப்பிள்ளை! நீ என் பெண்ணை அழைத்துக் கொண்டுவந்து விட்டாயா?" என்று கேட்கிறதா? அதெல்லாம் வேண்டாமப்பா! நீ பேசாமல் போலீசில் எழுதிவை; முண்டைகள் தாமாக வழிக்கு வருகிறார்கள்" என்றாள்.

சாம்பசிவம் பணிவாக "அம்மா! அதுதான் உண்மையென்பது எனக்குத் தெரியாதா? இருந்தாலும் கொட்டகைக்கு நாம் போவதில் கொஞ்சம் அநுகூலமிருக்கிறது. நாம் போய்விட்டு வர ஒரு மணி நேரத்துக்குமேலாகாது. அப்புறம் உடனே போலீசில் பதியவைப்போமே! போலீஸ் எங்கே ஓடிப்போகிறது?" என்று மரியாதையாகக் கூற, கனகம்மாள் "அப்படியானால் வண்டியில் ஏறுங்கள்" என்றாள்.

உடனே மூவரும் வண்டியிலேறிக் கொண்டனர். வண்டியை செங்காங்கடைத் தெருவிற்கு விரைவாக ஓட்டும்படி சாமாவையர் வண்டிக்காரனுக்கு உத்தரவு பிறப்பித்தார். எப்போதும் சுறுசுறுப்பையும் துரிதத்தையுமன்றி சோர்ந்த நிலைமையைக்காட்டாத வண்டிக்கார பாச்சாமியான் சாய்ப்புவின் வாயில் "இதோ ஆச்சு ஸாமி" என்ற சொல்லே எப்போதும் தவறாமல் வந்தது. அதற்கிணங்க, குதிரையின் சதங்கைகளும் ஜல் ஜல் ஜல்லென்று ஓசை செய்தன. அவற்றால் உள்புறம் இருந்தவர், வண்டி வேகமாகவே ஓட்டப்படுவதாக நினைத்துக் கொண்டு திருப்தியடைந்தனர். ஆனால் உண்மையில்

விசைமுன்னிலும் குறைந்துகொண்டே வந்ததன்றி அதிகரிக்கவில்லை. தமயந்தியின் இரண்டாவது சுயம்வரத்திற்குப்போகும் பொருட்டு சாரத்தியம் செய்த நளமகாராஜனைப்போல பாச்சாமியான் சாயப்பு கடிவாள வாரை கம்பீரமாகக் கையிலேந்தினன். வண்டி புறப்பட்டது. ஒன்பதரை மணிக்கு வைத்தியசாலையிலிருந்து கிளம்பிய வண்டி மிகவும் சீக்கிரமாக பிற்பகல் ஒரு மணிக்கு செங்காங்கடைத் தெருவை யடைந்தது (மூன்று மயில் தூரம்). வீராசாமி நாயுடு எவ்விடத்தில் ஜாகை வைத்துக் கொண்டிருக்கிறானென்று சாமாவையர் விசாரிக்க, அவன் நாகமணித் தோட்டத் தெருவில் குடியிருக்கிறானென்பது தெரிந்தது. வண்டி அவ்விடம் சென்றது. அது பரத்தையர் வசிக்கும் தெருவாதலால், அங்கு எப்போதும் இரவாகவேயிருந்தது. வீட்டின் கதவுகள் திறக்கப்படவில்லை; மனிதரும் காணப்படவில்லை. பிளேக் வியாதி கொண்டதனால் காலி செய்யப்பட்ட ஊரைப்போல, அந்த இடம் மிகவும் பயங்கரமாகக் காணப்பட்டது; சூரியனும் அந்தத் தெருவில் தனது கிரணங்களை விடுவதற்கு அஞ்சுபவன்போலத் தனிமையில் நின்று மேற்குப்புறத்திலிருந்த தெருவிற்கு ஓடப்பார்த்தான். ஆந்தை, கோட்டான், கூத்தாடிகள், பரத்தையர், கள்வர், கொலைஞர், அமெரிக்கா தேயத்திய ஜனங்கள் முதலியோர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராதலின், நமது பகல் அவர்களுக்கு இரவல்லவா? ஆதலால் அந்தத் தெருவில் யாவரும் அப்போது படுக்கையிலிருந்தனர்.

வீராசாமி நாயுடு எந்த வீட்டிலிருக்கிறானென்பதைச் சொல்லக்கூடிய மனிதன் எவனும் அங்கு காணப்படவில்லை. சாமாவையரும், வண்டிக்காரனும் கீழே இறங்கி வீடுதோறும் சென்று கதவைத் தட்டினர். ஒரு வீட்டில் பதிலே இல்லை. இன்னொரு வீட்டில் அப்போதே பயங்கரமாகக் கொட்டாவிவிடுத்துக் கூச்சல் செய்து விழித்துக் கொண்ட ஒரு மனிதன் இன்னமும் தனது உணர்வைப் பெறாமல் "ஆ" "ஊ" என்ற மறுமொழியையே கொடுத்தான். இன்னொரு வீட்டில் அரைத்தூக்கத்திலிருந்த ஒரு கிழவி "ஆரது? இங்கே ஒருத்தருமில்லே; போடா!" என்று குழறிப்பேசியதட்டினாள். அவ்வாறு அவர்கள் வீண்பாடுபட்டுக் கொண்டே செல்ல, அப்போது தெய்வச் செயலாக அங்கு ஒரு வழிப்போக்கன் வந்தான். அவன் வீராசாமி நாயுடுவின் வீட்டைக் காட்டினான். சாமாவையர், சாம்பசிவம், கனகம்மாள் மூவரும் அந்த வீட்டை

யடைந்தனர். சாமாவையர் கதவைத் தட்டினார். பதில் இல்லை. மேலும் ஓங்கி இடித்தார். அப்போதும் பதில் இல்லை; கை ஓயாமல் ஒரு நாழிகை வரையில் கதவில் தமது முஷ்டியை உபயோகப் படுத்தினார். அதன் பிறகு ஒருவன் கதவைச் சிறிதே திறந்து அதைக் கையில் பிடித்துக்கொண்டு வழிமறித்து நின்று மிகவும் நிதானமாக சாம்பசிவம் முதலியோரை ஏறஇறங்கப் பார்த்துவிட்டு இழுப்பான குரலில் "நீங்க எங்கேயிருந்து வறீங்க?" என்றான்.

உடனே சாமாவையர் "வீராசாமிநாயுடு இங்கேதானே குடியிருக்கிறார்?" என்று கேட்டார்.

திறந்தவன் மனிதன் "என்ன சங்கதி? நீங்க எங்கேயிருந்து வாறீங்க" என்று திரும்பவும் கேட்டான். அவன் ஒருவித அச்சங் கொண்டவனாக அதனால் காணப்பட்டது.

சாம்ப:—தஞ்சாவூரிலிருந்து வருகிறோம். நாயுடு தெரிந்தவர்; அவரைப்பார்த்துவிட்டுப் போக வேண்டும்—என்றார்.

அதைக்கேட்ட அந்த மனிதன் மறுமொழியொன்றுங் கூறாமல் கதவைத் திரும்ப மூடி, உட்புறம் தாளிட்டுக்கொண்டு போய்விட்டான். வெளியிலிருந்த மூவருக்கும் அவனது நடத்தை வியப்பையுண்டாக்கியது; அவன் வருவானோ மாட்டானோ, வீராசாமி நாயுடு அந்த வீட்டில் இருக்கிறானோ இல்லையோ, மறுபடியும் கதவை இடிப்பதா கூடாதா வென்று பலவாறு எண்ணமிட்டுக் கொண்டு அரை நாழிகை நேரம் வெளியில் நின்றனர். அப்படி நின்றது சாம்பசிவத்திற்கு மிகவும் அவமானமாய்த் தோன்றியது; தேகமே கூசியது. என் செய்வார்? அது பெண்ணைப் பெற்றதன் பலனென்று நினைத்து அப்படியே நின்று வருந்திக்கொண்டிருந்தார். நல்ல வேளையாக, அவன் திரும்பவும் கதவைத் திறந்தான். அவன் என்ன சொல்லப் போகிறானோவென்று இம்மூவரும் அவன் வாயை நோக்கினர். அவன் "அவுங்க, இப்பத்தான் எந்திரிச்சாங்க; அப்படி ஒக்காருங்க; மொகங்கழுவிக்கின பொறவாலே உள்ளற போவலாம்," என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் தாளிட்டுக்கொண்டு போய்விட்டு ஒரு நாழிகைக்குப் பிறகு வந்து கதவைத்திறந்து "வாங்க உள்ளற" என்றான். மூவரும் உட்புகுந்தனர். பல தாழ்வாரங்கள், கூடங்கள், அறைகள் முதலியவற்றைக் கடந்து

மூன்றாங்கட்டுக்குள் நுழைந்தனர்; கண்ட விடமெல்லாம், கிழிந்த திரைகளும்; ஒடிந்த நாற்காலிகளும், பல்லிளித்த பக்கப்படுதாக்களும் இடுப்பொடிந்த காட்சிகளும், மூங்கில்களும், கயிறுகளும், குப்பையும், செத்தையும் புகையிலைத் தாம்பூலங்களும், கிழிக்கப்பட்ட தீக்குச்சிகளும், குடித்துமிகுந்த சிகரெட்டுகளும், வாடிப்போன வெற்றிலைகளும் கிடந்தன. ஆண்களும், பெண்களும் மூலைமுடுக்குகளிலெல்லாம் அலங்கோலமாய்ப் படுத்துக் குறட்டைவிட்டுத் தூங்கினர். முகத்தில் பூசப்பட்ட அரிதாரம் பாதிகலையாமலும், கடைவாயைப் பெருக்கவிட்டும், உடைகளை இழந்தும் தாறுமாறாய்க் கிடந்தனர் எங்கும் துர்நாற்றம் சூழ்ந்து வயிற்றைப்புரட்டியது. சாம்பசிவம், கனகம்மாள் இருவரும், துணியால் மூக்கையும் வாயையும் மூடிக்கொண்டு விரைவாக அப்புறம் நடந்தனர். "ஆகா! இந்த அழகைக் கண்டுதானா ஜனங்கள் ஏமாறி மோகிப்பது! இதன் பொருட்டா ஜனங்கள் ஒவ்வொரு நாளும் ஆயிரம் இரண்டாயிரம் ரூபா விரயம் செய்கிறார்கள்! இந்த விகாரங்களைக் கண்டுதானா குல ஸ்திரீகள் தமது உயிராகிய கற்பையும், இம்மை வாழ்க்கையையும், தம்பெற்றோர், உற்றாரையும் இழந்து திண்டாடித் தெருவில் நிற்பது? இவைகளைப்பார்த்த கண்களைத் தண்ணீர் விடுத்தலம்பினும் அருவருப்புத் தீராது! கோரம்! கோரம்!" என்று நினைத்துக் கொண்டே மூன்றாங்கட்டில் நுழைந்தனர். அங்கிருந்த தனியான ஓரறையில் பாய், திண்டு, முதலியவற்றின்மீது வீராசாமி நாயுடு உட்கார்ந்திருந்தான். ஒரு மூலையில் காப்பித் தண்ணீரும், கழுத்த ஆப்பமும் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு புறத்தில் வெற்றிலைபாக்கு புகையிலை சிகரெட்டு முதலிய நிவேதனம் வைக்கப்பட்டிருந்தன. வேறு யாரோ வரப்போகிறார்களென்று நினைத்து அமத்தலாகக் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்திருந்த வீராசாமி நாயுடு சாம்பசிவத்தைக் கண்டவுடன் திடுக்கிட்டுத் தன் கண்களை நம்பாமல் வாரிச்சுருட்டிக் கொண்டெழுந்து அடங்கி யொடுங்கி குனிந்து கைகுவித்து "சுவாமி! நமஸ்காரம்; வரவேண்டும்" என்று அன்போடு வரவேற்று, நாற்காலிக்காக அங்குமிங்கும் தாண்டிக் குதித்தான். ஒன்றும் அகப்படாமையால், எதிரிலிருந்த ஒரு கம்பளியை எடுத்துக் கீழேவிரித்து உட்காரும்படி வேண்டினான். அவர் தஞ்சை டிப்டி கலெக்டரென்பது அவனுக்கு நன்றாக நினைவிருந்தது. அவனுடைய அந்தரங்கமான விசுவாசத்தைக் கண்ட சாம்பசிவத்தின் அருவருப்பு

ஒரு சிறிது தணிந்தது; அவரும் புன்னகைகாட்டி "நான் உட்காருவதற்கு நேரமில்லை; குறைத் தூக்கத்தில் உம்மை நாங்கள் எழுப்பிவிட்டோம்; ராத்திரியெல்லாம் கண் விழித்திருப்பீர்கள். பக்கத்திலுள்ள நாட்டுப் பிள்ளையார் கோவில் தெருவுக்கு ஒரு காரியமாக வந்தோம்; நீர் இங்கே இருப்பதாகக் கேள்விப்பட்டு, உம்மையும் பார்த்து விட்டுப்போகலாமென்று வந்தோம். வேறொன்றும் விசேஷமில்லை; சௌக்கியந்தானே?" என்றார்.

நாயுடு:—கைகுவித்து தங்கள் தயவில் சௌக்கியந்தான்; ஏதோ இருக்கிறேன். இந்த ஏழையை மதித்து தாங்கள் இவ்வளவு தூரம் தயவுசெய்தது என்னுடைய பாக்கியந்தான்.—என்றான். ஆனால், அவனுடைய மனது மாத்திரம் ஒருவாறு அச்சங்கொண்டது. அவர் தமக்கு அதிகரித்த வருமான வரிவிதிக்கும் பொருட்டு உளவறிய வந்திருப்பாரோவென்று ஒருமூலையில் ஒரு சந்தேக முதித்தது. ஆகையால் அவன் தனது தேக சௌக்கியத்தைக்கூட பூர்த்தியாகத் தெரிவித்துக் கொள்ளாமல் இழுப்பாகக் கூறினான்; தான் சௌக்கியமாக இருக்கிறேனென்று அவன் சொன்னால், அதனால் அவனுக்கு நல்ல வருமானம் வருகிறதென்று நினைத்து வரி விதிக்கக் கூடிய சர்க்கார் அதிகாரிகளுமிருப்பதால், அவன் தன் க்ஷேமத்தைத் தெரிவிப்பதில் கூட சுங்கம் பிடித்தான்.

சாம்ப:—உங்களுக்குத் தஞ்சாவூரில் நஷ்டம் வந்ததென்று சொல்லிக் கொண்டார்களே! இங்கே எப்படி இருக்கிறது?—என்றார்.

நாயுடுவின் சந்தேகம் நிச்சயமானது. உடனே மூக்காலழத் தொடங்கினான். "ஆமாம்! இராமேசுவரம் போனாலும் சனீசுவரன் விடாதென்கிற மாதிரி தன்னிழல் தன்னோடு தானே வரும். அங்கே நஷ்டப்பட்டேன்; இங்கே பொருளைவாரி எடுக்கவந்தேன். இங்கே பெரிய அவகேடு சம்பவித்தது; என்ன செய்கிறது? அதிர்ஷ்டமில்லை." என்றான்; சாம்பசிவம் மிகவும் அநுதாபங்காட்டி "அடாடா! என்ன அவகேடு வந்தது? சொல்லக் கூடியதுதானே?" என்றார்.

வீரா:—எங்களிடத்தில் மாயாண்டிப் பிள்ளையென்று ஒரு புகழ்பெற்ற ராஜாவேஷக் காரனிருந்தான். அவன் திடீரென்று ஒரு வாரத்துக்குமுன் எங்கேயோ ஓடிப்போய் விட்டான். அவன் போனதுமன்றி, ஐந்நூறு ரூபா உடுப்புகளையும், நகைகளையும் எடுத்துக்கொண்டு நல்ல சமையத்தில்போய் விட்டான். வேறு சரியான ராஜா வேஷக்காரனில்லாமையால், பண வசூலே கிடையாது; சோற்றுக்கும் திண்டாட்டமாய் விட்டது—என்றான்.

சாம்ப:—ஐயோ பாவம்! அவன் ஏன்போய் விட்டான்? சம்பளம் குறைவென்று போய்விட்டானோ?

நாயுடு:—அப்படியொன்றுமில்லை. அவனுக்குச் சாப்பாடு போட்டு மாதம் நூறு ரூபா கொடுத்தேன். நான் அதில் குறைவு வைக்கவில்லை; இங்கிருந்தால் அவனும் பிழைத்துப் போகலாம்; நாங்களும் தலையெடுப்போம். தலைச்சுழி யாரை விட்டது!

சாம்ப:—அப்படி யானால், அவன் ஏன் ஓடினான்?

நாயுடு:—வேறு எதற்காக ஓடுகிறான்? எல்லாம் ஸ்திரீ விஷயந்தான். அவன் சும்மா விருந்தாலும், நாடகம் பார்க்கவரும் பெண்டுகள் அவனை விடுகிறதில்லை. அவன் தஞ்சாவூரிலிருந்தபோது யாரோ ஒரு பெரிய மனிதருடைய பெண்ணைத் திருட்டுத்தனமாக வைத்துக் கொண்டிருந்தானாம். அவள் மகா அழகு சுந்தரியாம்; அவளுடம்பில் ஐயாயிர ரூபா நகை இருந்ததாம். அங்கிருந்து நாங்கள் இங்கேவந்த பிறகு, அவளும் ஏதோ தந்திரம் செய்து, தன் பெற்றோர் புருஷன் முதலியோரை ஏமாற்றிவிட்டு, இவனிடம் வந்து விட்டாளாம். அவளும், அவனும் எங்கேயோ இரகசியமாக ஓடிப்போய் விட்டார்கள்; ரெங்கூன், சிங்கப்பூர் முதலிய அக்கரை தேசங்களுக்குப்போய் அவர்களிருவரும் நாடகக் கம்பெனி ஏற்படுத்தி ஆடப்போகிறதாகக் கேள்விப்பட்டேன். அவன் போன தேதிமுதல் எங்களுக்குத் துன்பந்தான்.—என்றார்.

அதைக்கேட்ட சாம்பசிவம், கனகம்மாள் இருவரின் முகங்களும் மாறுதலடைந்தன; விஷயம், கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதைப்போல முடிந்ததைப் பற்றிப்பெரிதும் சலக்கமடைந்தனர். மேனகா தஞ்சையில் தம் வீட்டிலிருந்த ஒவ்வொரு நிமிஷமும் கனகம்மாளின் கண்ணில் பட்டுக்கொண்டே இருந்தாளாதலின், இதில் சம்பந்தப்பட்டவள் மேனகாவன்றென்பது நிச்சயமாகத் தெரிந்ததாயினும் கடிதத்திற்கும், அந்த விவரத்திற்கும் ஒற்றுமை

யிருப்பதால், ஒருகால் அவளே அவ்வாறு செய்திருப்பாளோ வென்னும் சந்தேகமும் அவர்களுடைய மனதில், அஞ்சி அஞ்சித் தலையைத் தூக்கியது. அவர்களுடைய குழப்பம், பெருங் குழப்பமாய், முற்றிலுங் குழப்பமானது.

தமது சந்தேகத்தை விலக்கிக்கொள்ள நினைத்த சாம்பசிவம் “அந்தப்பெண் எந்த ஜாதிப்பெண்ணாம்?” என்றார்.

நாயுடு:—பிராம்மண ஜாதியாம்.

சாம்ப:—வைஷ்ணவ ஜாதியா? ஸ்மார்த்த ஜாதியா?

நாயுடு:—அதை நான் கேட்கவில்லை. யாரோ ஒருபெரிய யனிதருடைய பெண்ணாம். மகா சாகஸம் செய்து தங்கள் வீட்டாரை ஏமாற்றிவிட்டு வந்துவிட்டாளாம்.

சாம்ப:—பாவம்! யாருடைய பெண்ணோ தெரியவில்லை. சரி; நான் தஞ்சாவூர்போனவுடன் அந்தப்பெண்ணின் பெற்றோர் என்னிடம் வந்து பிராது சொல்லிக் கொண்டழுவார்கள்; அவனுடன் கூட இருந்த உங்களுக்கே அவன் போனவிடம் தெரியவில்லையே! நான் இதில் என்ன செய்யப்போகிறேன்! சரி! நாழிகை யாகிறது; நாங்கள் போய் விட்டுவருகிறோம். நீர் ஒரு உதவி மாத்திரம் செய்யும்; மாயாண்டிப் பிள்ளை எங்கிருக்கிறானென்பது உமக்கு இனிமேல் தெரியவந்தால் தஞ்சைக்கு என் பெயருக்கு ஒருகடிதம் எழுதி விவரத்தைத் தெரிவிக்கவேண்டும்; அதை நான் அந்தப் பெண்ணின் பெற்றோரிடம் சொன்னால் அவர்கள் போய் பெண்ணை யழைத்து வருவார்கள்; அப்போது அவனும் இங்கே உங்களிடம் திரும்பி வந்துவிடுவான்” என்றார்; வீராசாமி நாயுடுவுக்கும் அது அநுகூலமான காரியமாகத் தோன்றியது; கையைக் குவித்துக்கொண்டு “அவசியம் அப்படியே செய்கிறேன்; எஜமான்களின் தயவு ஏழைமேல் மாறாமல் எப்போதும் இருக்கவேண்டும்” என்று யன்முறை வேண்டிக் கொண்டான். உடனே மூவரும் வெளியில் வந்தனர். திண்ணையில் உட்கார்ந்திருந்த பாச்சாமியான் சாயப்பு எழுந்துபோய் வண்டியில் தன் சிம்மாதனத்தில் திடீரென்று உட்கார்ந்தான். நின்றபடியே தூங்கி ஆடிவிழுந்து கொண்டிருந்த குதிரை, எதிர்பாராத அந்த அசைப்பால் மரக்கிளையிலிருந்து நைந்து விழும் பழம்போல பொத்தென்று கீழே விழுந்துவிட்டது. சாயப்புவும் குதிரையின் முதுகின்மேல் குப்புறவிழுந்தான்; ஆனால் அவனுடைய மீசையில் மண் படுமுன் எழுந்துவிட்டான். என்றாலும் தன்னுடைய குதிரை அப்படிச்செய்து தன்னை அவமானப் படுத்தியது அவனால் சகிக்கக் கூடாத காரியமாக விருந்தது. அவனுடைய கோபத்தினால் தாடி மயிர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஈட்டியைப்போல நீண்டு நின்றது; அவன் படுத்திருந்த குதிரையின் முகத்தண்டை வந்து கீழே உட்கார்ந்து அதன் இரண்டு காதுகளையும் இரண்டு கைகளிலும் பிடித்துக் கொண்டான்; அவன் ஒருகால் அதன் காதில் ஏதேனும் இரகசியமான மந்திரம் சொல்லி அதை எழுப்பப்போகிறானோவென்று, பிறர் சந்தேகிக்கத்தக்கதாக, அந்தநிலைமை காணப்பட்டது. ஆனால் அவன் குதிரையின் இரண்டு காதுகளையும் இறுகப் பிடித்துக்கொண்டு, பாறையில் மட்டையை உடைக்க, இளநீரை மோதுதல் போல் ஓங்கி அதன் முகத்தைத் தரையில் ஏழெட்டுமுறை மோத, கிழக் குதிரை வீர் என்று கதறிக்கொண்டெழுந்தது. அதன் உடம்பில் விபரீதமான சுறுசுறுப்புண்டாயிற்று. மோவாயும், உதடுகளும், பற்களும், வாயிலிருந்த கடிவாள முள்ளும், இரத்தப்பெருக்கும், ஒன்றுசேர்ந்து தக்காளிப்பழமாய் நசுங்கி உருவமற்று ஒரேமொத்தையாகத் திரண்டு, காய்ந்த பேரீச்சம் பழம் போலாயின; குதிரை சாகவு மாட்டாமல், சகிக்கவு மாட்டாமல் தவித்து மரணவேதனைப் பட்டது. தான் வண்டியில் ஏறும்போது தூங்கிய பெரும் பிழைக்காகக் குதிரையைத்தான் தக்கபடி தண்டித்து விட்டதாக நினைத்துத் தன் மார்பை பெருமையோடு பார்த்துக்கொண்ட சாயப்பு மூவரையும் நோக்கி “ஏறுங்க ஸாமி! போவலாம்” என்று மரியாதையாக அழைத்தான். சாமாவையரும், பெரிதும் களைப்படைந்து தம்மை முற்றிலும் மறந்திருந்த மற்றிருவரும் வண்டியில் ஏறிக்கொண்டனர்.

அதற்குள் அந்தத் தெருவில் இரண்டொரு வீட்டு வாயில்கள் திறக்கப்பட்டிருந்தன. எதிர் வீட்டுத்திண்ணையில் நாலைந்து சோம்பேறிகள் உட்கார்ந்து சிகரெட்டுப் பிடித்துக்கொண்டும், சிரித்துக் கொண்டு மிருந்தனர். அவர்கள் நால்வரும் இருபது முதல் முப்பது வயது வரையிலடைந்த யௌவன புருஷர். அவர்கள் அந்தத்தெருவிலுள்ள பரத்தையர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளும் புருஷ

ரைத் தேடிவந்து பிழைப்புக்கு வழிசெய்யும் பேருபகாரிகள். அவர்களுடைய அலங்காரங்களோ, அவர்கள் மிகவும் கண்ணியமான பெரிய மனிதர்களென்பதைச் சுட்டின. ஆனால் உண்மையில் அவர்களைக் காட்டிலும் இழிந்த மனிதரைப் பூமிதேவி இதுகாறும் பெற்றிராது. சாம்பசிவம், கனகம்மாள், சாமாவையர் ஆகிய மூவரும், வீராசாமி நாயுடுவின் வீட்டிற்குள்ளிருந்து வந்ததைக் கண்டவுடன் அத்தாசர்கள் புரளிசெய்து அவர்களைப் பழிக்கத்தொடங்கினர்; அவரவர் மனதிலிருப்பதே அவரவர் வாயிலும், செயலிலும் தோன்றுமென்பதற்கிணங்க, அந்தப்பெரிய மனிதர்களுக்கு, உலகத்திலுள்ள எல்லோரும் கூட்டிக்கொடுக்கும் தரகராய்த் தோன்றினர், அவர்கள் சாம்பசிவம் முதலியோரைக் கண்ணெடுத்தும் பாராமலே சுவரைப் பார்த்து, உரத்த குரலில் பேசத் தொடங்கினர். ஆனால் அவர்களது ஒவ்வொரு சொல்லும் கணீர் கணீரென்று நம்மவர் செவியிற் பட்டது. என்றாலும், தம்மை ஏன் அப்படிப் பழித்துப்பேசுகிறார்கள் என்று சாம்பசிவம் கேட்பதற்கு வழியின்றி, அச்சோம்பேறிகள் தமக்குள் பேசிக்கொள்வோரைப்போல சாமர்த்தியமாகப் பேசினன்.

ஒருவன் "அடே பாப்பான்!" என்றான். இன்னொருவன் "அடே கும்பகோணத்துப் பாப்பான்!" என்றான்.

மூன்றாவது மனிதன் "இல்லேடா! அக்காளே! மாயாண்டிப் பிள்ளையைத் தேடறாண்டா! அக்காளே! இவனுக்கும் மக இருப்பாடா! மாயாண்டிப்பிள்ளைதான் ஆண்டவனாச்சே; அந்த ஆண்டவனுக்கு எல்லாரும் குட்டிகளை இட்டாந்து நிமித்தியம் (நிவேதனம்) பண்ணவாராங்கடா!" என்றான். நான்காவது மனிதன் "அக்காளே! இந்த பாப்பார, நாயுங்க கெட்ட மாதிரி ஒருத்தனுங்கெடல்லேடா! அக்காளே! அவுங்க எந்த வேலைக்குப்போவட்டுமே; எல்லாரையும் கெலிச்சுப்புட்றாங்கா! கள்ளுங்குடிக்கட்டும்; அதை, நாம்ப மொந்தே மொந்தையாக் குடிச்சா அவுங்கமொடா மொடாவா முழுங்கிப் புடறாங்க. பள்ளிக் கூடத்துலே படிச்சா, அவுங்கதான் மொதல்லே தேர்றாங்க. ‘ கச்சேரிவேலே சேஞ்சா ஒருத்தன் நாலுபேரு வேலையைச் செயரான். அவுங்க பெரியாக்கசப்பயனுங்கடா! போனவருசம் கெவுனரு பங்களாவுலே ஒருவிருந்து நடந்திச்சாம்; அதுலே ஒரு பாப்பானும், மூணு தமிளனும், ஒரே மேசெமேலே ஒக்

காந்தானாம். மீன்குஞ்சுகளை நெய்யிலே பொரிச்சு ஆளுக்கு ஒரு தட்டு வந்துதாம். அக்காளே! அந்தப்பாப்பான் நாலு தட்டையும் பொட்லரு கையிலிருந்து புடிங்கிக் கொட்டிக்கினு தானே துன்னுட்டானாம். அப்பாலே இன்னம், எட்டுத்தட்டுக் கொண்டாரச் சொல்லித் துன்னானாம் அக்காளே! அவுங்க ஆம்பிளெங்களும் அப்பிடித்தான் பொம்பிளெங்களும் அப்பிடித்தான். பொம்பிளெங்க, நாடவம் பாக்கவந்தா நாடவக் காரனெப்புடிச்சுக் கறாங்க.—என்றான்.

முதல் மனிதன் :—(பல்லைக் கடித்துக் கொண்டு). பாருடா ?
அக்காளே! வெக்கம், மானம், சூடு, சொரணை ஒண்ணுமில்லாமெ
பட்டப்பகல்லெ, ஒரு கெயவியையும் இட்டுக்கினு நாடவக்காரன்
ஊட்டுக்கு வந்துட்டான்; பாருரா பாக்கரத்துக்கு மகா பெரிய மனி
சனைப்போல இருக்கிறாண்டா! ஒதேடா அக்காளே! என்றான்.

இன்னொருவன் "அக்காளே! குடுடா சாக்கடெ ஹல்வா" என்றான்.

அவர்கள் தம்மையே அவ்வாறு தூற்றுகிறார்களென்பதைச்சாம்ப
சிவம் அறிந்து அந்தப்பக்கம் திரும்பி உற்று நோக்கினார்; அவர்கள்
ஒன்றையுமறியாத பரம சாதுக்களைப்போலக் காணப்பட்டனர்.
அவர்களில் ஒருவன் எழுந்து மிகவும் மரியாதையாகவும் அன்பாகவும்
நன்மையும் புன்னகையும் விளங்கிய முகத்தோடும் "என்ன நாயனா!
பாக்கறீங்க? யாரைத் தேடறீங்க; சொன்னாக்க, நாங்க காட்டறோம்
நாயனா!" என்று உபசாரமாகக் கேட்டவன் தணிந்த குரலில், ஒவ்
வொரு சொல்லுக்கும் பின்னால் "அக்காளே" அக்காளே" என்று
திட்டினான். சாம்பசிவம் பட்டணத்துச் சோம்பேறிகளின் குணத்
தை நன்றாயறிந்தவராதலின் பேசாமல் வண்டியிலேறிக் கொண்டார்.
மற்றவரும் ஏறிக்கொள்ள, வண்டி புறப்பட்டு தெருவின் கடைசியிற்
போய் நின்றது. வண்டியை எவ்விடத்திற்கு ஓட்டுவதென்று வண்டிக்
காரன் கேட்க, சாமாவையரும், கனகம்மாளும் சிந்தனை செய்யலாயி
னர். அதற்குள் சாமாவையர், "இப்போது மணி மூன்றிருக்கலாம்.
நாம் நேராக என்னுடைய வீட்டிற்குப்போவோம். அப்புறம் மற்ற
தைச் செய்வோம். நாங்கள் வேறு யார் வீட்டிலும் இறங்கவேண்
டாம்" என்றார். வேறு வழியில்லாமையால், அவர்கள் அதற்கு
இணங்கினர்; தெள்ளசிங்கப் பெருமாள் கோவில் தெருவுக்கு ஓட்டும்

படி சாமாவையர் வண்டிக்காரனிடம் சொல்ல, அவன் அப்படியே வண்டியை நடத்தினான்.

சாம்பசிவமும், கனகம்மாளும் மேலே செய்யவேண்டுவதென்ன வென்பதைப் பற்றி எண்ணமிடலாயினர். வீராசாமி நாயுடுவின் நாடகக் கம்பெனியின் விவரங்கள், மாயாண்டிப் பிள்ளையின் காரியம் முதலியவற்றை நிச்சயமாக அறிந்துகொண்டு போலீசில் பதியவைக்க நினைத்த சாம்பசிவத்தின் சந்தேகம் தீராச் சந்தேகமானது; அவர்களுடைய மனக்குழப்பமும் மலையாய்ப்பெருகியது. மாயாண்டிப் பிள்ளையைத் தேடிச்செல்வதா?; அப்படியானால் எங்கு தேடிச் செல்வது? ரெங்கூனுக்குப் போவதா, சென்னையிலேயே தேடுவதா என்று ஒன்றன்மேலொன்றாக எண்ணிக்கையற்ற நினைவுகளும், சந்தேகங்களும் மனதிலுதித்தன. முதல்நாட் காலையிலிருந்து அன்னந் தண்ணீரின்றி ஓயாமல் அலட்டப்பட்டதனால் அவர்களது தேகம், கட்டுக்கடங்காமல், தளர்ந்துபோய் விட்டது. மயிர்க்காலெல்லாம் நெருப்பாய்ப்பற்றி யெரிந்தது. முதல்நாளிரவு துயிலாமையால், கண்கள் அடிக்கடி இருண்டன; மூளை கலங்கியது, அடிக்கடி மயங்கி வண்டிக் கூண்டில் சாய்ந்தனர். முகம் விகாரமடைந்தது; தமக்கு ஏற்பட்ட பல விபத்துகளையும் ஒன்றன்பின்னொன்றாக நினைத்து நினைத்து, அவர்கள் மனது எவ்வித முடிவிற்கும் வரக்கூடாமல் சுழன்றுகொண்டே இருந்தது; அதுகாறும், மேனகாவின் உறுதியான கற்பையே ஒருவலுவாகக் கொண்டு, அதனால் எத்தகைய மனிதரையும், துன்பங்களையும் பொருட்படுத்தாமல், வந்த அவர்களுக்கு, அந்த வலு, ஆற்றிலிறங்கிய மண் குதிரையின் வலுவைப் போலத் தோன்றவே, அவர்களுடைய பெருமையும், ஆபத்திலும் ஒடுங்காத மனோதிடமும் சோர்வடையவாரம்பித்தன. மேலே எங்கு செல்வது? எதைச்செய்வது? பிழைப்பானோ சாவானோவென்னும் ஐயந்தோன்றக் கிடக்கும் மருமகப்பிள்ளையைப் பற்றிக் கவலைகொண்டு அவனைப்பிழைப்பிக்க வழிதேடுவதா? அன்றி, காணாமற்போன பெண்ணைத் தேடுவதா? இரண்டுநாட்களுக்குள் தஞ்சாவூர்போய் தமது உத்தியோகத்தை ஒப்புக்கொடுத்துவிட்டு அங்கு நடக்கும் விசாரணையைக் கவனிப்பதா என்று எண்ணாததெல்லாம் எண்ணி ஏங்கித்தவித்தனர். அவர்களிருவரும் வாய்பேசாமௌனிகளாய்க் காணப்படினும் அவர்களது மனமும, தேகமும் எரிமலையின் உட்புறம் போல, எல்லாம் உருகிய நெருப்புக் குழம்பாயிருந்தமையால் தமது துயரத்தினாலும், கோபத்தினாலும், வியப்பினாலும், தாமே எரிந்து பஸ்மீகரமாய்ப் போய்விடத்தக்க நிலைமையிலிருந்தனர்.

அவர்களுடைய நிலைமையைக் காட்டிலும் கோடி மடங்கு அதிகரித்த வேதனையை யடைந்து, சாகுந் தருணத்திலிருந்த குதிரை இடைவழியில் திடீரென்று கீழே விழுந்து படுத்துவிட்டமையால், ஆங்காங்கு வண்டி அரை நாழிகை, ஒரு நாழிகை நின்று போயிற்று. அதனால், உள்ளிருந்தோரும் விழுந்து ஒருவர்மேலொருவர் விழுந்துபுரண்டுமோதுண்டதும், வண்டியின் நிறுத்தங்களும், சாம்பசிவம், கனகம்மாள் இருவரின் யோசனைகளுக்கு முற்றுப்புள்ளிகளாகவும், வியப்புக் குறிகளாகவும், வினாக் குறிகளாகவும் விளங்கின. தம்மைப்பிடித்த சனியன் இன்னமும் ஒழியவில்லையே யென்றும் மேலும் என்னென்ன துன்பங்கள் சம்பவிக்குமோ வென்றும் அவர்கள் பெரிதும் அச்சமுற்றனர். எதற்கும் கலங்காத அவர்களது நெஞ்சம் கலங்கியது. அத்தகைய நிலைமையில் வண்டி மாலை ஐந்தரை மணிக்கு சாமாவையருடைய வீட்டை யடைந்தது. மூவரும் இறங்கி உட்புறம் சென்றனர். சாம்பசிவம், நடைத்திண்ணையில் 'உஸ்' என்று உட்கார்ந்தார்; வாயிற்கதவை அரைப்பாகம் மூடிவிட்டு அதன் மறைவில் கனகம்மாள் கீழே உட்கார்ந்து கொண்டாள். சாமாவையர் தடதடவென்று உள்ளே ஓடினார்.

கீழே உட்கார்ந்த இருவருக்கும் களைப்பு வந்து மேலிட்டது; தேகத்தின் அங்கங்கள் யாவும் ஈயக்குண்டுகளைப் போலப் பெருஞ் சுமைகளாக அழுத்தின. உட்கார்ந்த மாத்திரத்திலேயே அவர்கள் பிரம்மானந்தபோக மநுபவிப்போரை யொத்தனர். ஆனால் அவர்களது மனமொன்றே மேற் செய்யவேண்டுவதைப் பற்றித் துடிதுடித்தது. உள்ளே ஓடிய சாமாவையர் இரண்டு நிமிஷ நேரத்திற்குள் காப்பியும், உப்புமாவும், தயாரிக்கும்படி தமது மனைவியிடம் கூறிவிட்டு, அங்கிருந்த சமையற் பாத்திரங்களிற் சிலவற்றைக்கொணர்ந்து முற்றத்திலிருந்த கிணற்றடியிற் போட்டு விட்டு, நடைக்குவந்தார். "பாட்டியம்மா! எழுந்திருங்கள்; சாயுங்காலமாய் விட்டது. பாத்திரங்களை தயாராக வைத்திருக்கிறேன். எழுந்து கொஞ்சம் சமையல் செய்து கொள்ளுங்கள். ராத்திரிமுதல் பட்டினியல்லவா? வாருங்கள். காப்பிதயாராகிறது; சமையலாவதற்குள் அண்ணா கொஞ்சம் காப்பி சாப்பிடட்டும்; என்று கூறிவிட்டு உள்ளே ஓடினார்.

அதற்குள் அவர்களுடைய தேகம் அசைக்கவும் வல்லமையற்று ஓய்ந்துபோனது. அவர்களுடைய உயிர் எந்த லோகத்திலிருந்ததோவென்பது அவர்களுக்கே விளங்கவில்லை. மனமோ, மேனகா, வராகசாமி, தஞ்சை கலெக்டர், மூவரிடத்திலும் சென்று சென்று மாறி மாறிப்பிரதட்சணம் செய்து கொண்டிருந்தது. சாம்பசிவம் "அம்மா! எல்லா வற்றிற்கும் நீ கொஞ்சம் ஆகாரம் தயார்செய். மேலே பல இடங்களுக்குப் போய்ப்பார்க்க வேண்டியிருக்கிறது. உன்னாலும் இனிமேல் பசிதாங்கமுடியாது" என்றார். அம்மாள் (அருவருப்போடு) எனக்கு ஆகாரமும்வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். ஸ்நானம் செய்தால், களைப்புத்தீர்ந்து போகும்; அதை மாத்திரந்தான் செய்யப்போகிறேன்! நீ காப்பியைச்சாப்பிடு" என்று சொல்லிவிட்டு எழுந்து கிணற்றடிக்குச்சென்று நீராடத் துவக்கினாள். அதற்குள் சாமாவையர், கூஜாவில் காப்பியும், ஒரு தட்டில் உப்புமாவும் எடுத்துக்கொண்டு ஓடிவந்து நடைத் திண்ணையில் வைத்துவிட்டு, வாயிற்கதவை மூடித்தாளிட்டு விட்டு, அவற்றை நிவேதனங் கொண்டருளும்படி சாம்பசிவத்தை வேண்டினார். அவர் தமக்கு வேண்டாம் வேண்டாம்' என்று மறுக்க, சாமாவையர் "இல்லை, இல்லை; கொஞ்சம்ஆகட்டும். ஆகட்டு"மென்று வற்புறுத்தினார் சாம்பசிவம் எனக்கு உடம்பெல்லாம் அசுசியாக விருக்கிறது. ஸ்நானம் செய்தபிறகு பார்த்துக் கொள்ளுவோம்" என்று கூறிவிட்டு காப்பியை மாத்திரம் அருந்தும் எண்ணத்துடன் எழுந்து குழாயண்டையிற் சென்று இடையின் வஸ்திரத்தை நனைத்துக்கொண்டு ஸ்நானம் செய்யத்தொடங்கினார். பாதிவழி தூரம் கீழே நடந்துதானே குதிரையை இழுத்துக் கொண்டுவந்த பாச்சாமியான், வண்டியிலிருந்து குதிரையை அவிழ்க்காமலே வேகவைக்கப்பட்ட கொள் நிறைந்த பையை அதன் வாயிற் கட்டிவிட்டு, வண்டியின் பெட்டிக்குள்ளிருந்த ஒரு ரொட்டியை எடுத்துக்கடித்து இழுத்து, அதிலிருந்து கொஞ்சமும் பியக்கமாட்டாமல், கைக்கும், வாய்க்கும் பெருத்த தகரார் உண்டாக்கி விட்டான். அந்த ரொட்டி அவன் மனதைக்காட்டிலும் அதிகமாக இறுகிப் போயிருந்தது.

அப்போது சமையலறைக்குள்ளிருந்த சாமாவையருடைய மனைவி மீனாட்சியம்மாள் ஏதோ ஒரு அவசரமான விஷயத்தை நினைத்துக் கொண்டவளாய், அதைத் தன் கணவனிடம் தெரிவிக்க நினைத்துக்கொண்டு கூடத்திற்கு வந்தாள். சாமாவையர் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு வேறு பக்கத்தில் தன் கவனத்தைச் செலுத்தியிருந்தார். சாம்பசிவம் முதலிய அயலார் இருந்தமையால், தன் கணவனைக் கூப்பிட வெட்கியவளாய் சூசுவென்று மூஞ்சூறு கத்துவதைப்போல உதட்டால் ஓசை செய்ய, அதை யுணர்ந்த ஐயர் அவளிடம்சென்றார். மிகவும் சாந்தமாக அவள் அவருடையசெவியில் "காலை 9-மணிக்கு ஒருதந்திவந்ததாம். அதைப் பெருந்தேவியம்மாள் கொடுத்துப் போனாள்; அதை வாங்கிப்புரையில் வைத்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு விளக்கெண்ணெய்வழிந்த ஒரு மாடத்தைக் காட்டினாள். சாமாவையர் விரைந்து சென்று மாடத்தில் எண்ணெயில் நனைந்து கிடந்த ஒரு தந்தியை எடுத்து மேல் விலாசத்தைப் பார்த்தார்.

"சென்னை திருவல்லிக்கேணி தொளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிலிருக்கும் வக்கீல் வராகசாமி அய்யங்கார் வீட்டில் வந்திருக்கும் தஞ்சை டிப்டிகலெக்டர் சாம்பசிவயங்கா ரவர்களுக்கு" என்ற மேல் விலாசம் அதன்மேல் காணப்பட்டது. தஞ்சை கலெக்டரிடத்திலிருந்து அது வந்திருக்கலாமென்று நினைத்த சாமாவையர் அதை எடுத்துக்கொண்டு குழாயண்டையில் ஓடி "அண்ணா! உங்களுக்குத் தஞ்சாவூரிலிருந்து, ஒருதந்தி இன்று காலையில் வந்ததாம். வாங்கி வைத்திருக்கிறாள்" என்று கூறி உறை மூடிக்கொண்டிருந்த தந்தியைக்காட்ட, அதை எதிர்பாராத சாம்பசிவம் திடுக்கிட்டு "யாருக்கு எனக்கா? எங்கிருந்து வந்திருக்கிறது? இப்படிக் கொடும்" என்று பதை பதைத்தவராய் பாதி நனைந்ததும் நனையாததுமா யிருந்த இடைத்துணியோடு, பாய்ந்து வந்து, அதை வாங்கி உடைத்து அது யாரிடத்திலிருந்து வந்ததென்பதை முதலில் பார்த்தார். அடியில் 'கிட்டன்' என்று கை யெழுத்துச் செய்யப்பட்டிருந்தது. உடனே அவர்மனது எண்ணாததெல்லாம் எண்ணியது? அந்த ஒரு நிமிஷமும் நான்கு யுகங்களாய்த் தோன்றியது. விஷயத்தைப் படித்தார். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது "நீங்கள் பட்டணம்போன பின், நேற்றுராத்திரி பன்னிரண்டு மணிக்கு நம்முடைய வீட்டிற்குள் தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் முப்பதுபேர்கள் நுழைந்து என்னையும் அக்காளையும் அடித்துப் போட்டுவிட்டு நகைகள், பணங்கள், துணிகள், பாத்திரங்கள், பெட்டிகள், மேஜை நாற்காலிகள்முதலிய எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுபோய் விட்டார்கள். எனக்கு ஒரு கோவணமும், அக்காளுக்கு ஒரு சிறிய கிழிந்த புடவைத்துண்டமும்

கொடுத்துவிட்டு, ஒரு துரும்பு கூடவிடாமல் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். அக்காள் மேலிருந்த நகைகளைப் பிடுங்கியதில் காது, மூக்கு முதலியவற்றை அறுத்துவிட்டதோடு, பச்சைப் புளியந்தடியால், அவளை அடித்துவிட்டனர். அவள் செத்தவள் போலவே கிடக்கிறாள். பிழைப்பது கடினமென்று டாக்டர் சொல்லுகிறார். நீங்கள் உடனே வராவிட்டால் அவளைக்காண முடியாது. தந்திக்குப்பணமும், கட்டிக்கொள்ளத் துணிகளும் சேவகரெங்கராஜு கொடுத்தான்'' என்று எழுதப்பட்டிருந்த தந்தியை சாம்பசிவம் படித்தார். எதிர்பாராமல் பீரங்கிக்குண்டு மார்பில் பாய்ந்து அவருடைய உடம்பையே தகர்த்துச்சின்னா பின்னமாக்கி விட்டதைப் போல தமது மனதிலெழுந்த விசனத்தையும் ஆத்திரத்தையும் தாங்க மாட்டாமல் பைத்தியங்கொண்டவரைப்போல ஆகாயத்தில் துள்ளிக் குதித்தார். பல வீடுகளுக்கு ஓசை கேட்கும்படி "அம்மா" வென்று வீரிட்டுக்கத்தினார். அந்த விபரீதக் கோலத்தைக் கண்ட கனகம்மாள் திக்பிரமை கொண்டு தண்ணீர் ஒழுகிய வஸ்திரத்தோடும், உடம்போடும், என்ன! என்ன!!'' வென்று கேட்டுக்கொண்டே ஓடிவந்தாள். சாம்பசிவம் தந்தியின் கருத்தை இரண்டொரு வார்த்தையாகத்தெரிவித்து விட்டு, வெளியில் ஓடி மிகவும் அவசரமாக ரயிலுக்குப் போகவேண்டுமென்றும், வண்டியைத் தயாரிக்கும்படியும் கூறிவிட்டு உள்ளே ஓடிவந்து அம்மாளையும் அழைத்துக்கொண்டு வெளிப்பட்டார். மேனகாவையும், வராகசாமியையும், தமது உத்தியோகத்தையும், உலகத்தையும் மறந்தனர். சாம்பசிவத்தையும், நடையிலிருந்த காப்பியையும், இடையில் பிடரிபடாமையால் ஜலம் சொட்டிய வஸ்திரத்தையும், கவனியாமல், இருவரும் வெறிகொண்டவரைப் போலசென்று வண்டியில் உட்கார்ந்து கொண்டு "எழும்பூருக்கு ஓட்டு" என்றனர். மகா தயாள மனதுக்கொண்ட சாயப்பு அவர்களது கோலத்தைக்கண்டு வேறுபுறம் தன்முகத்தைத் திரும்பி கலகலவென்று சிரித்தவனாய் வண்டியிலேறிக் கொண்டான். அத்தோடு அவர்கள் தன்னைவிட்டு விடுவார்களென்று நினைத்து வண்டியை ஓட்ட ஆரம்பித்தான். கொள்ளிருந்தபை, வாயை விட்டுப்போய் விட்டதே என்று ஏக்கங்கொண்ட நமது நீலவேணிக்குதிரை திரும்பவும் புறப்பட்டது. ஒன்றையு மறியாமல் திகைத்த சாமாவையர், வெளியில் ஓடி வந்தார், அதற்குள் வண்டி நெடுந்தூரம் போய் விட்டது.

மேனகா.

17-வது அதிகாரம்.

அணங்கோ? ஆய்மயிலோ?

மூர்ச்சையடைந்து இரவு பன்னிரண்டு மணிக்குக் கீழே வீழ்ந்த மேனகா மறுநாட் காலை எட்டுமணிக்கே தனது உணர்வை ஒருசிறிது பெற்றாள். அவ்வளவு நீண்ட நேரம் வரையில், அவளது தேகம் உணர்வற்று, உயிர்ப்பற்று, அசைவற்று, ஓய்ந்து, ஜடத்தன்மையடைந்து இவ்வுலகையும், தன்னையும் மறந்து, சவம்போலக் கிடந்தது. அவளது ஜீவனோ மண்ணிலுமின்றி, விண்ணிலுமின்றி, அந்த தேகத்தைவிட்டுப் பிரிந்ததோ, பிரியவில்லையோ வென்னும் சந்தேக நிலைமையில் எவ்விடத்திலோ மறைந்து கிடந்தது.

மெல்லிய மலர்கள் மூக்கிற் கருகில் வருதலால் வாடிக் குழைந்து போதலைப் போல உத்தமஜாதிப் பெண்மணிகளின் மனதும் தேகமும் காமாதுரரது சொல்லால் குழைந்து கருகிப் போகுமல்லவா! அவ்வாறே மேனகா வென்னும் மெல்லியலாள், எதிர் பாராத பெருத்த விபத்திற்பட்டு அன்றிரவில் நெடுநேரம் வரையில். நைனா முகம்மது மரக்காயனுடன் போராடியதால், அவளது மனதும், மெய்யும், அளவு கடந்து அலட்டப்பட்டு நெகிழ்ந்து போயின. உயிரிலும் அரியதான தனது கற்பை, அந்தக் கள்வன் அபகரித்துவிடுவானோ வென்ற சகிக்கவொண்ணா அச்சமும், பேராவலும் பொங்கியெழுந்து அவளை வளைத்துக்கொண்டன. கணவனது சுகத்தைப் பெறாமல் நெடிய காலமாய்ப் பெருந்துன்ப மனுபவித்து அலமர்ந்து கிடந்த தன்னைத் தன் ஆருயிர்க் கணவன் கடைசியாக வரவழைத்து ஒப்பற்ற அன்பைக்காட்டி இன்பக்கடலி லாட்டிய காலத்தில், அதை ஒரு நொடியில் இழந்துவிட நேர்ந்ததைக் குறித்துப் பெரிதும் ஏங்கினாள். தனது பிராணநாதனை இனி காணல் கூடுமோ கூடாமற் போகுமோ வென்ற பெருந் துயரமும் பேரச்சமும் உரமாக எழுந்து வதைத்தன. நைனா முகம்மதுவின் காமாதுரத் தோற்றமும், மோகாவேசக் குறிகளும், வரம்புகடந்த, கன்ன கடூரமான சொல்லம்புகளும், பசுமரத் தாணிபோல அவளது உள்ளத்தில் தைத்து ஊடுருவிப் பாய்ந்து

அதை சல்லடைக் கண்ணாய்த் துளைத்துப் புண்படுத்தியதால் தத்தளித்து மயங்கித் தற்கொலை புரிந்துகொள்ள வெண்ணி, தனது மெல்லிய இயற்கைக்கு மாறாக மிகவும் வற்புறுத்தி வலுவையும், மனோவுறுதியையும் வருவித்துத் தனது தேகத்திற்கும் மனதிற்கும் ஊட்டி, வின்னொன்று சுருதி கூட்டப்பட்ட வீணையைப்போல விருந்த தருணத்தில், தந்தி யறுதலைப்போல, அவளது கரத்திலிருந்த கத்தியை யாரோ பிடுங்கிக்கொள்ள, அவளது வீராவேசமும், மனதின் உரமும், உறுதியும், ஒரு நொடியில் உடைந்துபோகும் நீர்க்குமிழியைப்போல, இருந்தவிடந் தெரியாமற் போகவே, அவளுடைய அங்கம் முற்றிலும் தளர்வடைந்து நிலை தடுமாறிப் போனது. தனது கத்தியைப் பிடுங்கினவன் அந்த மகம்மதியனே யென்னும் அச்சமும், இனி தனது கற்பு நிலையாதென்னும் அச்சமும் பெரும் பேய் அறைதலைப்போல, அவளுடைய மனதைத் தாக்கவே, அவளது மூளையும், அறிவும் சிதறிப்போயின. சிரம் கிறுகிறென்று சுழன்றது. ஒரு விநாடிக்குள் வேரற்ற மரம்போலக் கீழே படேரென வீழ்ந்து மூர்ச்சித்தாள். முகம் வெளுத்துப் பிணக்களை பெற்றது. நித்திரைக்கு அப்பாலதும் மரணத்திற்கு இப்பாலதுமான இருண்ட நிலைமையில் நெடுநேரம்வரையில் அவளது உணர்வு ஆழ்ந்து கிடந்தது.

மேற்கூறப்பட்டபடி மறுநாட் காலை எட்டுமணிக்கே பூந்தோடுகள் போன்ற அவளது அழகிய இமைகள் சிறிது விலகின. வெளுத்திருந்த வதனத்தில் இரத்த ஓட்டம் காணப்பட, ரோஜா விதழின் நிறம் தலை காட்டியது. ஆனால் அவளது விழிகள் தமது தொழிலைச் செய்யாமல் வெறும் விழிகளா யிருந்தன. வெளியிலுள்ள எந்தப் பொருளையும் அவ்விழிகள் உட்புறத்திற்குக் காட்டவில்லை. ஆனால், அவைகள் உட்புறத்தின் தன்மையை மாத்திரம் நன்றாய் வெளியில்தோற்றுவித்தன. மூளையின் குழப்பமும், உணர்வின்மையும் நிதரிசனமாய் விளங்கின. அவ்வாறு பிளவுபட்ட இமைகள் இரண்டொரு நிமிஷநேரத்தில் சோர்வடைந்து தாமே சேர்ந்துகொண்டன. அவள் திரும்பவும் சவம்போலானாள். மகா பயங்கரமாக இருண்ட இரவுகளில் எப்போது இரவு தொலையுமென்றும், எப்போது பொழுதுபுலருமென்றும், மனிதர் வருந்துகையில், நெடுநேரத்திற்கு முன்னரே கோழி கூவி, பொழுது விடியுமென்னும் நம்பிக்கையை உண்டாக்குதலைப்போல மேனகாவை நாகபாசமென்னக் கட்டி அழுத்தியிருந்த இருள் விலகுமென்பதை அவளது இமைகள் முன்னால் அறிவித்தன. ஆனால் உடம்பு மாத்திரம் இன்னமும் அசைவற்றுக் கிடந்தது; காணாமற்போன மனிதரைத் தேடியழைத்துவர வேவுகாரரை அனுப்புதலைப்போல, மறைந்துபோன அவளது உணர்வைத் தேடிக் கொண்டுவரும்பொருட்டு, அன்றிரவு முதல் காலை வரையில் உள்ளே செலுத்தப்பட்ட மருந்துகள் தமது அலுவலை மிகவும் திறமையோடு செய்து, எமனுலகம் வரையிற் சென்று, அவளுயிரைக் கவர்ந்து கொண்டுபோன கள்வனான எமனுடன் முஷ்டியுத்தம் செய்து, அதைத் திருப்பிக் கொணர்ந்து, அவளுடைய உடம்பை இறுக அழுத்திக் கொண்டிருந்த இரும்புக்கதவு போன்ற உணர்வின்மையை உடைத்து அதில் ஒரு சிறிய துளைசெய்து, உட்புறத்தில் உயிரைப் பெய்தன. அவளது உயிராகிய விளக்கு நன்றாய்ப் பிடித்துக்கொண்டு சுடர் விட்டெரிய ஆயத்தமாய்ப் புகைய வாரம்பித்தது. அவள் மனதில் உடனே ஒருசிறிது உணர்ச்சி உதயமானது. அவ்வுணர்ச்சியில், ஒரே குழப்பமும், உடம்பு முற்றிலும் ஒரே இரணகாயமா யிருப்பதும் தெரிந்தன வன்றி, தான் யாவளென்பதும், தானிருந்த இடம் எது வென்பதும், தனக்கு நேர்ந்த துன்பங்கள் என்னென்ன வென்பதும் மனதில் புலனாகவில்லை. இன்னமும், தேகமும், மனதும் சலனப்பட்டு இயங்காமல், ஜடத்தன்மையான நிலைமையி லிருந்தன. மேலும் கால் நாழிகையில் புகையின் நடுவில் மெல்லிய சுடர் எழுதலைப்போல அவளது உயிரும் உணர்வும் சிறுகச் சிறுக வலுப்பெற்றுப் பெருகின. தான் மேனகா வென்பதை உடனே அவள் உணர்ந்தாள். தான் தனது இல்லத்தில் படுத்துத் துயில்வதாயும், அதில் பயங்கரமான கனவு கண்டுகொண் டிருப்பதாயும் ஒரு எண்ணம் அவளது மனதில் உதிக்க வாரம்பித்தது. தனது நாத்திமார்களும், அவர்களது துர்ப்போதனையால் தன் கணவனும், தன்னைக் கொடுமையாய் நடத்தியதும், அவர்கள் சொன்ன சொற்களும், புரிந்த செய்கைகளும், தான் பிறகு ஒருவருஷகாலம் தஞ்சையில் தவித்துக் கிடந்ததும், அப்போதே நிகழ்வனபோலக் காணப்பட்டன. தான் இன்னமும் தஞ்சையில் இருப்பதாகத் தோன்றியது. அவளது உணர்வு மேலும் அதிகரிக்க அதிகரிக்க, முற்றிலும் சிதறிக் குழம்பிக் கிடந்த மனது தெளிவடையத் தொடங்கியது. தான் தனது கணவனிடம் திரும்பி வந்ததும், அவனுடன் ஐந்து நாட்கள் புதிய வாழ்வாக வாழ்ந்து பேரின்ப சுகமடைந்ததும் தோன்றின. கடைசியில் தனது கணவன்

சேலத்திற்குப்போன அன்றிரவு சாமாவையர் தன்னையும், பெருந்தேவியம்மாளையும் நாடகம் பார்க்க அழைத்துச் சென்ற நினைவு மெல்ல மனதில தலைகாட்டியது. அதன் பிறகு தான் மகம்மதியன் வீட்டில் தனிமையில் விடப்பட்டதும், அங்கு ஒரு யௌவன மகம்மதியன் தோன்றியதும் அதன் பிறகு நேர்ந்த விஷயங்களும் ஒன்றன்பின் ஒன்றாக அவளது நினைவில் நாடகக் காட்சிகளைப்போலத் தோன்றின. முடிவில், தான் கத்தியால் குத்திக்கொண்டு தற்கொலை புரிய முயன்றதும், அப்போது திடீரென்று ஒருவர் தோன்றிக் கத்தியைப் பிடுங்கிக்கொண்டதும் அதன் பிறகு தன் உணர்வு மறைந்து போனதும் தெளிவாக விளங்கின. கத்தி பிடுங்கப்பட்ட பிறகு நடந்ததென்னவென்பது அவளுக்குத் தெரியவில்லை. அதன் பிறகு எட்டுமணி நேரம் இடைவேளை கழிந்ததென்பதை அவள் அறிந்தவளேயன்று. அது இன்னமும் இரவென்றும், முந்திய நிமிஷத்திலேதான் கத்தி பிடுங்கப்பட்டதென்றும் தோன்றின. அன்றிரவில் நிகழ்ந்த விஷயங்கள் யாவும், உண்மையில் சம்பவிக்கக் கூடாத அசாதாரணமானவைக ளாதலால், அவைகள் நிஜத்தில் நடந்தனவென்று அவள் மனது நம்பிக்கை கொள்ளவில்லை. தான் கனவு காண்பதாகவே, அவள் உறுதியாக நினைத்தாள். ஆனால், அது, எங்கிருந்து, எதுவரையில் கனவென்பதை நிச்சயிப்பதே கூடாமல் குழப்பத்தை யுண்டாக்கியது. தான் நாடகம் பார்க்கப் போனதும், அதன் பின்னர் நடந்தவைகளும் கனவா, அன்றி, தான் தகப்பன் வீட்டிலிருந்து திரும்பி வந்ததும், இன்புற்று வாழ்ந்ததும், பிறவும் கனவா, அன்றி, தான் தஞ்சைக்குப் போனதும், அவ்விடத்தில் ஒரு வருஷ மிருந்தது முதலிய யாவும் கனவா, அன்றி தன்னைத் தன் கணவன் முதலியோர், கொடுமையாய் நடத்தியதே கனவா, என்று அவளுடைய குழப்பம் பெருங்குழப்பமாய்விட்டது. “உலகமே பொய்; அதிலுள்ள பொருட்கள் பொய்; எல்லாம் மாயை; பொருட்களே கிடையா” என்று மாயா தத்துவத்தைப்பற்றி வாதிப்போருக்கு, தமது தேகமும், தாம் பேசுவதும், தாம் நினைப்பதும், தாம் உணர்வதும் எல்லாம் பொய்யாகத் தோன்றுதலைப்போல, மேனகாவின் மனதிற்கு அப்போது எல்லாம் பொய்யாகவும், மெய்யாகவும் தோன்றியது. பாவம்! மனிதருக்கு உணர்வு என்னும் அந்த ஒப்பற்ற ஒரு வஸ்து தனது நன்னிலைமையை இழந்துவிடுமானால், அப்புறம் அவர்கள் மனிதரல்லர். கட்டழகு, காந்தி முதலிய எத்தகைய உயர்வுகளும் அருமை பெருமைகளு மிருப்பினும் அவை சிறிதும் பதிப்பற்றவையாம்! அங்ஙனமே யானது அவளது நிலைமை. தான் மேனகாதானா, தான் டிப்டி கலெக்டருடைய பெண்டாட்டியா என்னும் பெருத்த சந்தேகம் தோன்றியது. கண்களைத் திறந்து தனது உடம்பைப் பார்த்து அந்த சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள நினைத்தவளாய், நலிந்து தனது நேத்திரங்களைத் திறந்து தனது மேனியை உற்று நோக்கினாள்; என்ன ஆச்சரியம்! தனது உடம்பு மேனகாவின் உடம்பாகத் தோன்றவில்லை! தும்பைப்பூவிலும் அதிகமான வெண்மை நிறத்தைக் கொண்ட மெல்லிய மஸ்லின் துணியொன்று தனது தேகத்தில் ஒரு சுற்றாக அணியப் பெற்றிருந்தது! தனது விலையுயர்ந்த மேகவருணப் பட்டாடை, காப்பு, கொலுசு, காசுமாலை, அட்டிகை முதலியவை தனது தேகத்தில் காணப்படவில்லை. அவற்றை தன் தேகத்திலிருந்து எவரும் விலக்கியதாகவும் அவளுக்கு நினைவுண்டாகவில்லை. தன்னுடைய கரத்திலிருந்த கத்தியை மாத்திரம் யாரோ சற்றுமுன்னே பிடுங்கியது நினைவுண்டாயிற்று. தான் கண்ணை மூடித் திறப்பதற்குள் அத்தகைய மாறுதல் தனது தேகத்தில் வந்திருப்பதென்ன விந்தை! அது இந்திரஜாலம் மகேந்திரஜாலமோ? சே! எல்லாம் தவறு! எல்லாம் பொய்! தான் காண்பது கனவே! என்று நினைத்த அவளது பேதை மனம் முற்றிலும் குழம்பி சோர்வடைந்துபோயிற்று. மனதிலெழுந்த எண்ணிறந்த சந்தேகங்களின் சுமையைத் தாங்கமாட்டாமல் மனம் தவித்து மழுங்கி ஓய்வையடைந்துவிட்டதாகையால் கண்ணிமைகள் மூடிக்கொண்டன. அவளது மனம், தன் குழப்பத்தால், தன்னையே ஏமாற்றிக்கொண்டது. வெள்ளை வஸ்திரத்தை விதவைகளே அணிபவர். தான் ஒருநாளும் மஸ்லின் துணியை அணிந்ததில்லையே. தானறியாவகையில் அது அப்போது தன் உடம்பில் எப்படிவந்தது? தான் மேனகாவன்று, வேறு யாரோ ஒருத்தி என்று எண்ணாததெல்லாம் எண்ணி மயக்கமும் குழப்பமு மடைந்தாள்.

மேலும் அரை நாழிகை சென்றது. ஊற்றுக் கண்களிலிருந்து தெளிந்த நீர் ஊறுதலைப்போல, அவளுடைய உணர்வு பெருகித் தெளிவைப் பெறப் பெற, விஷயங்கள் யாவும் உண்மையாகவே தோன்றின. தான் மேனகாதான் என்னும் நினைவு இயற்கையாகவும், உறுதியாகவும் அவள் மனதிலெழுந்து மாறுபடாமல் நிலைத்து நின்றது. தான் கனவு காணவில்லையென்பதும் தெளிவாகத் தெரிந்தது; அப்படியானால், தானறியாமல், தன்னுடம்பில் வேறு வஸ்

திரம் எப்படி வந்தது. தனது பட்டுத்துயிலை எவர் களைந்தவர் என்ற சந்தேகங்களே இப்போது உரமாகவெழுந்து வதைத்து அவள் மனதில் பலவித வேறு பயங்கரமான யூகங்களுக்கு இடங் கொடுத்தன. மனதில் பெருத்த வேதனையுண்டாயிற்று; தன் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக் கொண்ட மகம்மதியனே தன் ஆடையை மாற்றினவனென்றும், அவன் தனது கற்பையழித்து விட்டானென்றும் யூகித்துக் கொண்டாள். கத்தி பிடுங்கப் பட்டபோது தான் மயங்கிக் கீழே தரையில் விழுந்ததாக கனவைப்போல ஒரு ஞாபகம் உண்டாயிற்று. உண்மை அப்படி இருக்க, தான் இப்போது விலையுயர்ந்த உன்னதமான கட்டிலில், மிக்க இன்பகரமான வெல்வெட்டு மெத்தையின்மீது படுத்திருப்பதன் முகாந்தரமென்னவென்பதை நினைத்தாள். தனது கற்பு ஒழிந்துபோனதென்பதை தனது சயனம் உறுதிப்படுத்தியது. ஆகா! என்ன செய்வாள்! அவளது தளர்வடைந்த மனம் பதறியது? வேதனையும் வியாகுலமும் பெருங்கோபமும் மகா உரத்தோடு எழுந்து மனதிற்குடிகொண்டது; அவளது தேகமே அவளுக்கு சகிக்க இயலா அருவருப்பைத் தந்தது. தன் உடம்பைப் பார்ப்பதற்கே கண் கூசியது. மகம்மதியனைத் திரும்பவும் பாராமல் தற்கொலை புரிந்துகொள்ள முயன்ற தனது எண்ணத்தில் மண் விழுந்துபோனதை நினைத்து பெருந்துயரமும் ஆத்திரமுமடைந்தாள். களங்கமடைந்துபோன தனது இழிவான தேகத்தை உடனே சாம்பலாக எரித்து அழித்துவிடத் தனக்கு வல்லமையில்லையே என்று நினைத்துப் பதைத்தாள். அவ்வளவு நாழிகை தனது வேசைச் சரீரத்தைச் சுமந்திருப்பதுபற்றி ஆறாத்துயரமடைந்தாள். கட்டிலின்மீது தனக்கருகில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருந்தது அவள் மனதில் புலனாயிற்று. அவன் தன்னைக் கெடுத்த மகம்மதியனே என்று நினைத்தாள். அவள் மனதில் ரௌத்திராகாரமாய்க் கோபம் பொங்கி எழுந்தது.

அந்த அசங்கியமான படுக்கையில், அன்னிய புருஷனுக்கருகில் தானிருப்பதாக நினைத்து, தான் ரௌரவாதி நரகத்திலிருப்பதாக வெண்ணிப் பதறினாள். அவ்விடத்தைவிட்டெழுந்து அப்பாற்செல்ல நினைத்து மிகவும் வற்புறுத்தி முயன்றுபார்த்தாள். அவளது மனது மாத்திரம் துடித்ததன்றி, தேகம் ஒருசிறிதும் அசையும் வல்லமை இன்னமும் உண்டாகவில்லை. தான் நினைத்த விதம் கண்களைத் திறந்து நோக்கவும் இயற்கையான திறனுண்டாகவில்லை. தேகம்

ஜடப்பொருளாய்க் கிடந்தது. தேகவலுவற்றவருக்கு, மற்றையோரினும், கோபமும், ஆத்திரமும் அதிகமென்பது யாவருமறிந்த விஷயமாம். செயலற்றுக்கிடந்த மேனகா தன் மனதில் பொங்கி எழுந்த சீற்றத்தைக் கடவுளின்மீது திருப்பினாள். நிரபராதியான ஜெகதீசனை நினைத்த விதம் தூஷிக்கலானாள், “ஆ! பாழுந்தெய்வமே! உன் கோவில் இடியாதா? நீ நாசமாய்ப் போகமாட்டாயா? என்னை இப்படிக் கெடுத்து சீர்குலைத்துக் கண்ணாரப் பார்க்க வேண்டுமென்று எத்தனை நாளாய் நினைத்திருந்தாய்! என் வயிறுபற்றி எரிகிறதே! மனம் பதைக்கிறதே! உயிர் துடிக்கிறதே! தெய்வமா நீ! கருணாநிதியென்று அழைக்கப்பட நீ கொஞ்சமும் யோக்கியதை யுள்ளவனா! முற்காலத்தில் நீயோ திரௌபதியின் மானத்தைக் காத்தவன்! எவனோ புளுகன் எழுதி வைத்தான் மகாபாரதத்தை! சதிகார தேசத்திற்குக் கொலைகாரன் அரசனும் என்பதைப்போல உன்னுடைய மகிமை இருக்கிறது. உன்னுடைய படைப்பும், உன்னுடைய நியாயமும் நன்றாயிருந்தன! இந்தப் பாழும் உலகத்தில் கற்பாம்! நீதியாம்! சே! மூடத்தனம்!” என்று கடவுள்மீதும், உலகத்தின் மீதும், தனது தேகத்தின்மீதும் பெரிதும் ஆத்திரமும் வெறுப்புங் கொண்டு தூஷித்து திரும்பவும் அநாசாரம்பிடித்த மெத்தையை விடுத்து எழுந்து அப்பால்போய், நொடியேனும் தாமதியாமல் தனது உயிரை மாய்த்துக்கொள்ள நினைத்தாள். அவளது மனம் பம்பரம் போலச் சுழன்றது. ஆனால், அவளது தேகம் ஓரே பச்சைப் புண்ணாகவும், இரணக்குவியலாகவும், அசைவற்று கட்டிற் கடங்காது கிடந்தது. மனது மாத்திரம் புதிதாய்ப் பிடித்துக் கூண்டிலடைக்கப் பட்ட கிள்ளையைபோல படபடத்துத் தவித்தது.

அந்த நிலைமையில் அவளுக்கருகில் மெத்தையில் உட்கார்ந்திருந்தவர் தமது கரத்தால் அவளது முகத்தைத் தடவிக்கொடுத்ததாக அவளுடைய உணர்வில் புலனாயிற்று. ஆகா! அந்தக் கை ஆண்பிள்ளையின் முரட்டுக்கையாகத் தோன்றவில்லை. அது பூவிதழைப் போல மிருதுவாயும், குளிர்ச்சியாயுமிருந்தது. பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, பனிக்கட்டி முதலியவை கலக்கப்பட்ட சந்தனம், ஜுர நோய் கொண்டவன் உடம்பில் பூசப்படுதலைப் போல, அது அளவுகடந்து இனிமையாய்த் தோன்றியது. உடனே, “மேனகா! அம்மா மேனகா!” என்று ஒருகுரல், அருகில் உண்டாயிற்று; அந்தக் குரல் குயிலையும், குழலையும், யாழையும்,

பாகையும், தேனையும் பழித்ததாய், சங்கீத கானம் போன்றதாய் அமுதத்துளிகளையும் குளிர்ச்சியையும் ஒருங்கே சொரிந்து செவிகளில் இனிமையைப் பெய்வதாய் கணீரென்று சுத்தமாய் ஒலித்தது. எதிர்பாராத அந்தக் குரலைக்கேட்டுத் திகைத்த மேனகா, அது தேவகானமோ சாமகானமோ வென்று சந்தேகித்து வியப்புற்றாள். அது ஒருபெண்மணியின் குரலென்பது சந்தேகமற விளங்கியது. தன்னை அபகரித்து வந்த மகம்மதியனுடைய குரலுக்கும் இந்தக் குரலுக்கும் பெருத்த வேறுபாடு காணப்பட்டது. ஒன்றைப் பறையோசைக்கு ஒப்பிட்டால், இன்னொன்றை வீணா கானத்திற்கே ஒப்பிடல் வேண்டும். ஆதலின் இப்போதுண்டானது அந்த மகம்மதியனது குரலன்றென்பதும், இது ஒரு பெண்பாவையின் இனிய குரலென்பதும் அதிகப்பாடின்றி விளங்கி விட்டன. தனக்கருகிலிருப்பது மகம்மதியனல்லன் என்றும், அவனது பணிப்பெண்ணாகவேனும் அல்லது உறவினளாகவேனும் இருக்கவேண்டுமென்றும்யூகித்துக்கொண்டாள். மேனகா தனது உணர்வு அறிய தான் அன்னிய புருஷனைத் தீண்டினாளென்னும் இழிவும், பாவமும், இல்லாமற் போனதைக் குறித்து உடனே பெருத்த மகிழ்வடைந்தாள். ஆனால் அந்த அற்பமான சுகமும் ஒரு நிமிஷமே மனதில் நிலைத்து நின்றது. என்றாலும், தனது கற்பு ஒழிந்தது நிச்சயமே என்ற அருவருப்பு நினைவில் திரும்பவே, அவளது மனக்களிப்பு கைப்பாய் மாறியது. தான் கண்களைத் திறந்து தனக்கருகிலிருந்த அந்த மாதை, வெட்கமில்லாமல் பார்த்து எப்படி அவள் முகத்தில் விழிப்பது என்று நினைத்து மனமாழ்கினாள். தேகம் குன்றியது. கண்ணைத் திறவாமலே இரண்டொரு நிமிஷநேரம் கிடந்தாள். முன்னர் அறியாத, அயலான் வீட்டில், அதுவும், அவனது கட்டிலில் தான் எவ்வளவு நேரம் அவ்வாறு கண்ணை மூடிப் படுத்திருத்தல் கூடுமென்றும், அப்படி இருப்பதனால் இழிவேயன்றி தனக்குயாது பயனென்றும், தான் அவ்வாறுகிடப்பது ஒழுங்கல்ல வென்றும் நினைத்தாள். மெல்லக் கண்ணைத் திறந்தாள். அவள் ஒருபுறமாகத் திரும்பிப் படுத்திருந்தாளாகையாலும், அவளை முதலில் பார்க்கக்கூடவில்லை. அவளது அகன்ற சுந்தர விழிகள் ஒரு நொடியில் அந்த அறையை நன்றாக ஆராய்ந்தன. உடனே ஒரு விஷயம் எளிதில் விளங்கியது. அது, தான் மகம்மதியனோடு தனிமையிலிருந்த அறையல்ல வென்பது நிச்சயமானது. தான் ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்கு வந்ததையும், தனது தேகத்திலிருந்த ஆடையாபரணங்கள் விலக்கப்பட்டதையும், வெள்ளைக் கலைபுடைக்கப்பட்டதையும், தான் அறியாது போனது என்ன மாயமோ என்று திகைத்தாள். அப்போது தான் துயின்றாளோ வென்று சந்தேகித்தாள். அல்லது மயக்கந்தரும் மருந்தை, அந்த மகம்மதியன் தனது வஞ்சகத்தால், தன் உடம்பில் செலுத்திவிட்டானோவென்று எண்ணுகிறதெல்லாம் எண்ணினாள். அந்த இடமும் மிக்க அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு சயன அறையாய்க் காணப்பட்டது. எங்கும் அழகிய மலர்களையும், இலைகளையும் கொண்ட தொட்டிகளும், சம்பங்கிக் கொடிகளும், ரோஜாச் செடிகளும், நிலைக்கண்ணாடிகளும், படங்களும், பதுமைகளும், நாற்காலிகளும், சோபாக்களும், பிறவும் நிறைந்திருந்தன. தானிருந்தகட்டிலும், அதன்மீதிருந்த மெத்தையும், தின்டுதலையணைகளும், ஏராளமான மெல்லிய பட்டுப் போர்வைகளும், பட்டுத் துப்பட்டிகளும், சால்வைகளும், கொசுவலைகளும் விலை மதிப்பற்றவையாயும், ஒரு சிறிய மாசுமற்றவையாயும் இருந்தன. மனிதரது பஞ்சேந்திரியங்களுக்கும் சுகம் தரத்தக்க பொருட்கள் யாவும் அந்த அறையில் காணப்பட்டனவாயினும், மிகவும் மேம்பட்ட மகாராஜனும், அங்கிருந்த இனிய போகத்தில் ஆழ்ந்து ஈடுபட ஆவல் கொள்ளத்தக்கனவாய் அவை காணப்படினும், மேனகா, தான் தீத்தணல்கள், தேள்கள், பாம்புகள் முதலியவற்றின்மீது கிடப்பதாக எண்ணங்கொண்டு அருவருப்படைந்து வருந்தினாள். அவளது விழிகள் அந்த அறையை ஆராய்ந்தபோது, இன்னொரு புதுமை அவள் காட்சியில் பட்டது. கட்டிலிற் கருகிலிருந்த ஒரு நாற்காலியில் ஒரு வெள்ளைக்கார துரைசானி உட்கார்ந்திருந்ததைக் கண்டு திடுக்கிட்டாள். அவளது வயது சற்றேறக்குறைய முப்பத்தைந்திருக்கலாம். மெலிந்ததும், கம்பீரமாக நீண்டதுமான அழகிய தேகத்தை கொண்ட அந்த மாது, தனது இடக்கரத்தில் ஒரு சிறிய தோல்பையையும் வலக்கரத்தில் வைத்தியர் பிணியாளரின் மார்பில் வைத்து நாடி பார்க்கும் குழாயையும் வைத்திருந்தாள். அந்த துரைசானியை தான் அடிக்கடி பார்த்திருப்பதாக உடனே மேனகாவுக்கு நினைவுண்டாயிற்று. அவளை தான் கண்டது எவ்விடத்தில் என்று மேனகா யோசனை செய்தாள். தனது கணவன் வசித்த தொளசிங்கப்பெருமாள் கோயில் தெருவிலுள்ள வீடுகளில் பெண்பாலாருக்கு வைத்தியம் செய்ய அவள் அடிக்கடி வந்து போவதைத் தான் கண்டதாக வெண்ணினாள். அவள் தனது கண்ணைத் திறந்து புதுமையான அத்தனை விஷயங்களையும் கண்டதனால், மிகவும் சோர்வடைந்தாள். இமைகள் திரும்பவும் மூடிக்கொண்டன.

கால் நாழிகை வரையில் அயர்வடைந்து உணர்வற்று உறங்கினாள். மறுபடியும் தனது உணர்வைப் பெற்றாள். திரும்பவும் மனது வேலை செய்யத் தொடங்கியது. தனக்கருகில் துரைசானி உட்கார்ந்திருப்பதிலிருந்து, தனக்குஏதோ தேக அசௌக்கியமுண்டானதென்றும், அதன் பொருட்டு அவள் வந்திருப்பதாகவும் யூகித்துக்கொண்டாள். தனக்குஎவ்விதமான நோயுண்டானதென்பதைப்பற்றி நினைத்துப் பார்த்தாள். ஒருகால் தான் தன்னைக் கத்தியாற் குத்திக்கொண்டதனால் இரணம் ஏற்பட்டதோவென்று ஐயமுற்றாள். தனது தேகத்தின் எந்தவிடத்தில் நோவுண்டாகிறதென்பதையறிய தன் தேக நிலைமையைஊன்றி அகக்கண்ணால் நோக்கினாள். பொதுவாக தேக முற்றிலும்மரத்துப் புண்பெற்று அசைவின்றித்தோன்றியதேயன்றி எந்தக் குறித்தவிடத்திலும், எத்தகையபிணி இருப்பதாகவும்புலப்படவில்லை. ஆதலால் அவள் அவ்விஷயத்தில் எத்தகையமுடிவிற்கும் வரக்கூடாமற் போனது. அப்போது பகலாய்விட்டதை யுணர்ந்தாள். தான் இரவு பன்னிரண்டு மணிக்கே தற்கொலை செய்து கொள்ள முயன்றதென்பதும், அப்போதே கத்தி பிடுங்கப்பட்டதென்பதும், நினைவிற்கு வந்தன. இடைவேளையான அவ்வளவு நீண்டகாலம் தான் உணர்வற்றோ துயின்றோ இருந்திருக்க வேண்டுமென்பதும், அப்போதே உடை மாற்றப்பட்டதென்பதும் ஒருவாறு விளங்கின. தனது பெயரைச் சொல்லி அன்பே நிறைவாக அழைத்த பெண்மணி யாவளென்பதை யறிய ஆவல் கொண்டவளாய், மிகவும் பாடுபட்டுத் தன் வதனத்தைச் சிறிது இப்புறம் திருப்பி தனக்கருகிலிருந்தவளை நோக்கினாள். அந்தக் குறிப்பை யறிந்து, அருகில் உட்கார்ந்திருந்த யௌவன மங்கை திரும்பவும் முன்போலவே அன்பாக அழைத்து "அம்மா! உடம்பு இப்போது எப்படி இருக்கிறது தெரிவி; யாரோ அன்னியரென்று எங்களை நினைக்காதே; நாங்கள் உன் விஷயத்தில் அந்தரங்கமான அபிமானமுள்ளவர்கள்" என்று மிக்க உருக்கமாகக் கூறி, தனது கரத்தால் அவளது கன்னம் கரம் முதலிய விடங்களை அன்போடு மிருதுவாக வருடினாள். விடுபடும் வழியின்றி, கொடிய நரகத்திடையில் கிடந்து தவிக்கும் ஒருவனது வாயில் ஒரு துளி தேன் சிந்தியதைப் போல, அத்தனை துன்பங்களினிடையே அவ்வளவு மனமார்ந்த உண்மை அன்பை ஒருவர் தனக்குக்காட்டக் கிடைத்ததை நினைத்த **மேனகா** ஒரு நிமிஷம் தன்னை மறந்து ஆநந்த பரவசமடைந்தாள். அழகே வடிவாய் பூரண சந்திரோதயமென்ன ஜெகஜ்ஜோதியாய் கந்தருவமாதைப்போல தனக்கருகில் உட்கார்ந்திருந்த பெண்மணியின் கபடமற்றதும், மேன்மை, உத்தம குணம் பெருந்தன்மை முதலிய அருஞ் சிறப்புகளை கிரணங்களாய்ச் சொரிந்ததுமான அழகிய வதனத்தைக்காண மேனகாவின் மனதில் ஒருவகையான நம்பிக்கையும், ஆறுதலும் இன்னமும்தோன்றின. காணக்கிடைக்காத அந்த அற்புதமான காட்சி உண்மையானதோ அன்றி பொய்த்தோற்றமோ வென்று உடனே ஐயமுற்றாள். மகா பயங்கரமான நிலைமையி லிருந்ததான், இரமணீயமான அந்த நிலைமையை யடைந்த பாக்கியத்தை நினைத்து நினைத்துப் பெருமகிழ்வடைந்தாள். அந்த இன்பகரமான நிலைமையில் அவளது புலன்கள் தோய்ந்து எளிதில் தெவிட்டிப்போயின. மனதிலும், உணர்விலும் அந்த மனோகரமான அற்புதக்காட்சி எளிதில்பதிந்தது. அதற்குமுன், தன்னை ஒருநாளும் கண்டறியாத அப்பெண்பாவை தனக்கருகில் உட்கார்ந்து, தனக்குரிய உபசாரணைகளைச் செய்ததும், தன்மீது அவ்வளவு ஆழ்ந்த அபிமானம் காட்டுவதும், தன் பெயரைச் சொல்லி யழைத்ததும், மேனகாவின் மனதில் பெருத்த வியப்பை யுண்டாக்கின.

அவளது நடத்தையெல்லாம் வஞ்சக நடத்தை யல்லவென்பதும் அவள் மகா உத்தம ஜாதி ஸ்திரீ யென்பதும் அவளது முகத்திலேயே ஜ்வலித்தன. அவள் யாவள்? முதல் நாளிரவு தன்னை வற்புறுத்திய மகம்மதியனுக்கு அவள் உறவினளா? பணிப்பெண்ணா? அல்லது அவனுக்கும் அவளுக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லையா? அது முதல்நாளிரவில் தானிருந்த வீடுதானா? அல்லது வேறிடமா? கத்தி தன் கையினின்று பிடுங்கப்பட்ட பிறகு தனக்கு என்ன நேர்ந்தது? என்பன போன்ற எண்ணிறந்த சந்தேகங்களைக்கொண்டு அவற்றை வெளியிடவும் வல்லமையற்று, பெரிதும் கலக்கமும், துன்பமுமடைந்து திரும்பவும் சோர்வடைந்து, காம்பொடிபட்ட ரோஜாப் பூவைப்போலக் கண்களை மூடிக்கொண்டு தலையணையில் சாய்ந்துவிட்டாள். பிறகு நெடுநேரம் வரையில் அவள் இமைகளைத் திறக்கவுமில்லை. அவளது தேகம் அசையவுமில்லை. திரும்பவும் உணர்வற்ற நிலைமையில் வீழ்ந்து விட்டாள்.

மூர்ச்சையிலிருந்து மேனகா தெளிவடைந்ததையும், அவளது வதனம், தேகம் முதலியவற்றின் மாறுபாடுகளையும் மிகவும் ஆவலோடும் சிரத்தையோடும் கவனித்து உணர்ந்த துரைசானியம்மாள் "நூர்ஜஹான்! நான் வைத்தியசாலைக்குப் போக நேரமாய்

விட்டது. இனி இந்த அம்மாளைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மிகவும் விரைவில் நல்ல நிலைமையை யடைந்து விடுவாள். நான் போய்விட்டு மாலையில் திரும்பவும் வந்து பார்க்கிறேன். இவளே கண்விழித்துப் பேசினால் நீ பதில் சொல்; அப்போதும் இவளது மனதை அலட்டாமல் பார்த்துக்கொள். பெருத்த பயத்தினால் உண்டான மன அதிர்ச்சி இவளது நரம்புகளை வரம்பு கடந்து தளர்த்திவிட்டது. நரம்புகள் மிகவும் தாமதமாகவே தமது சுய நிலைமையை யடைய வேண்டும்; நாம் இன்னம் சிறிது தாமதமாய் மருந்து கொடுத்திருப்போமாயின் இவள் இதுவரையில் பிழைத்திருப்பதே அரிதாய்ப் போயிருக்கும்; அதே மருந்தை மூன்று மணி நேரத்திற் கொருமுறை மார்பில் தடவிக்கொண்டே இரு; மூக்கினால் உள்புறம் செலுத்தும் மருந்தை இனி மூக்கினால் வார்க்கவேண்டாம். இவள் விழிக்கும்போது அதை வாயினாலேயே இரண்டொரு முறை செலுத்தினால் முற்றிலும் குணமுண்டாய் விடும்; நான் போய் விட்டு வருகிறேன்." என்று இங்கிலீஷ் பாஷையில் கூறினாள்.

நூர்ஜஹான் கவலையோடு "இனி உயிருக்கு பயமில்லையே?" என்றாள்.

துரைசானி:—இல்லை, இல்லை. இனி அதைப்பற்றி கவலைப்படாதே? சந்தேகப்படக்கூடிய குறிகள் ஏதாவது இனி தோன்றினால் உடனே எனக்கு செய்தி யனுப்பு. பகல் பதினொன்றரை மணி நேரம் வரையில் நான் இராயப்பேட்டை வைத்தியசாலையி லிருப்பேன். அதன்பிறகு என்னுடைய பங்களாவிலேயே இருப்பேன். இவளுடைய புடவையையும், நகைகளையும் இப்போது அணிவிக்க வேண்டாம். அவைகள் மாத்திரம் விலக்கப்படாம லிருக்குமாயின், தடைப்பட்ட இரத்த ஓட்டம் இவ்வளவு விரைவில் திரும்பியிராது. இந்த மஸ்லினை உடம்பி லிருக்கட்டும். இதை நாளைக்கு மாற்றலாம்.

நூர்:—சரி; அப்படியே செய்வோம். நடுராத்திரி முதல் நீங்கள் இங்கிருந்து பட்ட பாட்டிற்கு நான் எவ்விதம் நன்றி செலுத்தப்போகிறேன். தவிர, இந்த விஷயம் இப்போது எவருக்கும் தெரிதல் கூடாது. இரகசியமாக இருக்கவேண்டும்; என்னுடைய கணவனது மானமோ அவமானமோ உங்களுடைய கையிலிருக்கிறது.

துரைசானி:—நூர்ஜஹான்! அதைப்பற்றிக் கவலை கொள்ளாதே. எப்படிப்பட்ட இரகசியமாயினும், நான் அதை வெளியிடமாட்டேன். வைத்தியர்கள் அதை வெளியிடுதலும் கூடாது. எவ்வளவோ அந்தரங்கமான வியாதிகளுக் கெல்லாம் நாங்கள் சிகிச்சை செய்கிறோம். அவற்றை வெளியிடுவதானால் எங்களுடைய தொழிலே கெட்டுப்போகுமே; இரகசியத்தைக் காப்பாற்றுதலே இந்தத் தொழிலின் நாணயம்; இதைப்பற்றி நீ யோசனை செய்யாதே. நான் போய்விட்டு வருகிறேன் —என்றாள்.

நூர்:—சரி; நீங்கள் மாலையில் வருவதற்குள் இவள் நன்றாய் விழித்துக் கொண்டால், இவளுக்கு எவ்விதமான ஆகாரம் கொடுக்கிறது? இவள் பிராம்மணப்பெண் என்பதை பார்வையிலேயே நீங்கள் அறிந்து கொண்டிருக்கலாம். அதற்குத் தகுந்த விதம் ஆகாரம் கொடுக்க வேண்டும். நாம் தயாரித்த ஆகாரத்தைக் கொடுப்பது பிசகு. எவ்வளவு பணம் கேட்ட போதிலும், அதைக் கொடுப்பதாய்ச் சொல்லி, ஒரு பிராம்மணப் பரிசாரகனை அழைத்து வரும்படி ஆளனுப்பி யிருக்கிறேன். இந்த பங்களாவில் நாங்கள் வசிக்கும் இடத்திற்கும் இதற்கும் இடையில் நெடுந்தூர மிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியும். விஷயத்தை யெல்லாம் நான் என் தகப்பனாரிடம் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். என்னுடைய அக்காள் அப்படிச் செய்வது தவறென்று நினைத்து அவரிடம் சொல்லி விட்டாள். அவரே பரிசாரகனை அழைத்து வரும்படி ஆளை அனுப்பினார்; ஒரு மனிதர் அவசியம் வருவார்; ஒருவரும் அகப்படாவிட்டால், நாம் என்ன ஆகாரத்தைக் கொடுக்கிறது?—என்று கேட்டாள்.

துரைசானி:—இப்போது எவ்வித ஆகாரமும் கொடுக்க வேண்டாம். உட்புறம் செலுத்தப்படும் இந்த மருந்திலேயே தேக புஷ்டிக்குரிய மருந்தும் கலக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இன்று மாலை வரையில் பசியே தோன்றாது; ஒருகால் இவளே பசி யென்று சொன்னால் சருக்கரை கலந்த பாலில் சிறிதளவு கொடுப்பது போதும். இன்றிரவு பார்லி அரிசிக்கஞ்சி கொடுக்கலாம். அதற்குள் நான் திரும்பவும் வருகிறேன்.—என்று கூறிய வண்ணம் அறையை விட்டு வெளியிற் சென்று தனது மோட்டார் பைசைகிளில் ஏறிக்கொண்டு போய் விட்டாள்.

அவளை அனுப்பிவிட்டுத் திரும்பி வந்த நூர்ஜஹான், அருகிலிருந்த மருந்தை எடுத்து மேனகாவின் மார்பில் தடவி விட்டு, முன்போலவே அருகில் உட்கார்ந்து கொண்டு பரிதாபகரமாகக் காணப்பட்ட அவளது களங்க மற்ற முகத்தைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள். தனது கணவனும், பிறரும் செய்த சதியினால், ஒரு சூதையு மறியாத அப்பெண்பேதை, அடைந்த நிலைமையைப் பற்றி நினைத்து நினைத்து வருந்தினாள். அவளைத் திரும்பவும், அவளுடைய கணவனிடம் சேர்த்து, அவன் அவளது கற்பின் விஷயத்தில் எவ்வித ஐயமும் கொள்ளாதபடி திருப்தியடைந்து அவளை ஏற்றுக்கொள்ளும்படி எப்படிச் செய்வதென்னும் யோசனையே ஓயாமல், அவள் மனதிலெழுந்து பெருஞ்சுமையாக அழுத்தியது. அதைக் குறித்து எவ்விதமான முடிவிற்கும் வரக்கூடாமையால் தாமரை இலைத் தண்ணீரைப்போலத் தத்தளித்தாள். அவளது முழு வரலாற்றையும், அவள் வாய்மூலமாக எப்போது அறிவதென்பதைக் குறித்து மிகவும் ஆவல் கொண்டவளா யிருந்தாள். அதுகாறும் தனது கணவன் பரமயோக்கியனென்று நினைத்து அவனே உயிரென மதித்துத் தனது பாக்கியத்தை நினைத்துப் பெருமையடைந்து வந்ததெல்லாம் ஒரு நொடியில் ஒழிந்து போனதையும், அவன் கேவலம் இழிகுண முடையவனாய், வேசைப்பிரியனாய், சமையத்திற் கேற்ற விதம் பொய்ம்மொழி கூறி வஞ்சிக்கும் அயோக்கியனா யிருந்ததையும் ஓயாமல் சிந்தித்தாள். அதைப்பற்றி நினைக்கும்போது, துக்கமும் வெட்கமும், அழுகையும் அவள் மனதில் பொங்கி யெழுந்து நெஞ்சையடைத்தன. கண்களும், மனதும் கலங்கின. அப்போதைக்கப்போது தண்ணீர்த் துளிகள் தோன்றின. நெடு மூச்செறிந்தாள். மனிதர் வெளிப்பார்வைக்கு அழகாயும், உட்புறத்தில் அவ்வளவு மிருகத்தன்மையைக் கொண்டு மிருப்பரோ வென்று நினைத்து அவள் பெரும் வியப்புற்றாள்; தன் கணவன் எழுத்து வாசனை யறியாதமுட்டாளன்று; அப்படி யிருந்தும், கொஞ்சமும் நல்லொழுக்கமும் மனஉறுதியு மற்றவனாயும், நிறையில் நில்லாத சபலபுத்தி யுள்ளவனாயு மிருப்பதைக் குறித்து வருந்தினாள். அவனுக்கும் தனக்குமுள்ள உறவு இனி ஒழிந்ததென்றும், அவன் முகத்திலேயே இனி விழிப்பதில்லையென்றும், அவன் இனி தன் வீட்டிற்கு வாராமல் தடுத்துவிட வேண்டுமென்றும், தனது இல்லற வாழ்க்கை அந்த இரவோடு ஒழிந்து போய் விட்டதென்றும் உறுதியாக நினைத்து மனமாழ்கினாள். தனது சொந்த விசனத்தைக் காட்டிலும் மேனகாவின் நிலைமை

யும், அவள் களங்கமற்றவளென்பதை ருஜுப்படுத்தி அவளுடைய கணவனிடம் அவளை எப்படிச் சேர்ப்பது என்னும் கடினமான காரியமும், அவள் மனதில் அதிகமாக வேரூன்றிவளைத்த்தன. அதிலேயே அவள் தன் முழுமனதையும் செலுத்தி தனிமையில் சிந்தனை செய்து கலக்கமடைந்து மனமுருகிக் கண்ணீர் பெருக்கி யுட்கார்ந்திருந்தனள்.

மிகவும் சிங்காரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த அறையில், சிறிய மாசும், தூசியும் தோன்றாத புதிய மெல்லிய பட்டுப்போர்வைகள், துப்பட்டிகள், திண்டு தலையணைகள் முதலியவற்றினிடையில் மேனகா அழகே வடிவாய்க்கிடந்ததும், அவளுக்கருகில் இரதி தேவியோவென்ன தனக்குத்தானே நிகராய் தேஜோமயமாக நூர்ஜஹான் உட்கார்ந்திருந்ததும் தெய்வங்களுக்கும் காணக்கிடைக்காத கண் கொள்ளா அற்புதக் காட்சியாக விருந்தன. அவ்விருவரில் எவள் அழகிற் சிறந்தவள் என்பதைக் கண்டு பிடிப்பது எவருக்கும் பலியாக்காரியமா யிருந்தது. மேனகாவைப் பார்க்கையில் அவளழகே சிறந்ததாயும், நூர்ஜஹானைப் பார்க்கையில் அவள் அழகே சிறந்ததாயும், இருவரையும் ஒன்றாகப் பார்க்கையில் இருவரும் இரண்டு அற்புதஜோதிகளாயும், ஒருத்திக்கு இன்னொருத்தியே இணையாயும் தோன்றினர். ஒருத்தியை ஜாதி மல்லிகை மலருக்கு உவமை கூறினால் மற்றவளை ரோஜா மலருக்கு உவமை கூறுதல் பொருந்தும். ஒருத்தி வெண்தாமரை மலரைப் போன்றவளென்றால், மற்றவள் செந்தாமரை மலரை யொத்தவளென்றே கொள்ளல் வேண்டும். ஒருத்தியை இலட்சுமி தேவிஎன்றால், இன்னொருத்தியை சரசுவதி தேவியென்றே மதிக்க வேண்டும். இருவரது அமைப்பும் அழகும் ஒப்புயர் வற்ற தனிப்பேறாய், விளங்கினவன்றி, அவர்களைக் காணும் ஆடவர் மனதில் காமவிகாரத்தை யுண்டாக்காமல், அவர்களிடம் ஒருவகை அச்சமும், அன்பும், பக்தியும் உண்டாக்கத் தக்க தெய்வாம்சம் பொருந்திய மேம்பட்ட அமைப்பாகவும், அழகாகவும் இருந்தன. சிருஷ்டியின் செல்வக் குழந்தைகளாயும், கடவுளின் ஆசைக் குழந்தைகளாயும் காணப்பட்ட அவ்விருமடமயிலார் வசிக்கும் பாக்கியம் பெற்ற இல்லத்தில், எவரேனும் காலையிலெழுந்தவுடன் அவர்களது தரிசனம் பெறுவாராயின் அத்தகையோரின் மனக் கவலைகளும், துன்பங்களும் அகன்று போம். அந்த உத்தமிகளைப் பார்த்தாலே பசி தீறும்.

அவ்வாறு நூர்ஜஹான் அப்படியே வடிவாக இரண்டொரு நாழிகை உட்கார்ந்திருந்தாள். அதற்குள் மேனகாவின் மார்பில் இரண்டுமுறை மருந்தைத் தடவினாள். அப்போது திடீரென்று நூர்ஜஹானின் அக்காள் உள்ளே நுழைந்து "அம்மா! பரிசாரகன் வந்துவிட்டான்; ஏதாவது ஆகாரம் தயாராக வேண்டுமா? இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள்.

நூர்ஜ:—சற்றுமுன் கண்ணைத் திறந்து நன்றாகப் பார்த்தாள். இனி பயமில்லையென்று துரைசானியம்மாள் சொல்லிவிட்டாள். இப்போது ஆகாரம் கேட்க மாட்டாளாம். எல்லாவற்றிற்கும் பாலை மாத்திரம் காய்ச்சி வைக்கட்டும்—என்றாள்.

அலிமா:—சரி; அப்படியே செய்வோம். உனக்கு காப்பியும், சிற்றுண்டியும் இவ்விடத்திற்கே கொண்டு வருகிறேன். நீ அவற்றை சாப்பிடு; ஒன்றும் வேண்டாமென்று சொல்லாதே—என்றாள்.

நூர்ஜ;—இல்லை அக்கா! எனக்கு இப்போது ஒன்றும் வேண்டாம். பெருத்த விசனத்தினால் எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. பசியானால் பார்த்துக் கொள்ளுவோம். தயவுசெய்து என்னை வற்புறுத்த வேண்டாம்.—என்று நயந்து வேண்டினாள்.

அதைக்கேட்ட அலிமா புண்பட்ட மனத்தோடிருக்கும் தன் சகோதரியை மேலும் வருத்த மனமற்றவளாய் "அப்படியானால் இன்னம் கொஞ்ச நேரம் ஆகட்டும் அப்புறம் வருகிறேன்" என்று அன்போடு கூறிவிட்டு அவ்வறையை விடுத்துச் சென்றாள்.

மேலும் ஒரு நாழிகை நேரம் கழிந்தது. நூர்ஜஹானால் பிரயோகிக்கப்பட்ட மருந்து நன்றாய் வேலை செய்து மேனகாவின் உணர்வைத் திருப்பியது. தனக்கருகில் அழகிய பெண்பாவை யிருந்ததைத் தான் கடைசியாகக் கண்ட நினைவும் அவ்வுணர்ச்சியோடு திரும்பியது. அந்த நினைவினால் அவளது அப்போதைய மனோநிலைமை ஒருவித இன்பகரமாயும், நம்பிக்கை நிறைந்ததாயு மிருந்தது. அந்தப்பெண் யாவளென்பதையும், தன் கதி என்னவான தென்பதையும், அது இனி எப்படி முடியுமென்பதையும், இன்னம் எல்லா விவரங்களையும் அந்தப் பெண்மணியிடம் கேட்டறிந்து கொள்ளவேண்டுமென்னும் விருப்பமும் ஆவலும் உண்டாயின. அந்த

மகம்மதியப் பெண், அன்றிரவு தன்னை வற்புறுத்திய மகம்மதியனுக்கு அநுகூலமானவளாய் ஒருகால் இருப்பாளோ என்னும் ஒருவகை அச்சம் தோன்றி ஒருபுறம் அவள் மனதைக் கவரவாரம்பித்தது; இவ்வாறு நம்பிக்கையாலும், அவ் நம்பிக்கையாலும் ஒரே காலத்தில் வதைக்கப்பட்டவளாய், நூர்ஜஹானது முகத்தை நோக்கினாள்; அதுகாறும் அவளுடைய வாய் பூட்டப்பட்ட கதவைப்போலத் தோன்றியது. அப்போது, தான் பேசக்கூடுமென்னும் தைரியம் அவளது உணர்வில் தோன்றியது.

தன்னை மேனகா உற்று நோக்குவதைக் கண்ட நூர்ஜஹான் கன்றிற் கிரங்கும் தாயைப்போல அன்பும் இனிமையும் பெய்த முகத்தோடு அவளது கன்னத்தைத் தடவிக்கொடுத்து "அம்மா! உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? இன்னமும் மயக்கமாக விருக்கிறதா?" என்று கேட்டாள்.

உடனே மேனகா ஏதோ வார்த்தை சொல்லத் தொடங்கினாள்; ஆனால் அவள் பேசியது ஒருவன் கிணற்றிற்குள்ளிருந்து பேசுதலைப் போல விருந்தது. "அம்மா! நான் ஏதோ உடம்பு அசௌக்கியப்பட்டுக் கிடப்பதாய்த் தெரிகிறது. நீ என் விஷயத்தில் காட்டும் அந்தரங்க அன்பையும், படும்பாடுகளையும் காண என் மனம் உருகுகிறது. என்னைப்பெற்ற தாய்கூட இவ்வளவு அருமையாகப் பாராட்டிக் காப்பாற்றுவாளோ வென்ற சந்தேகம் உதிக்கிறது. நீ மகா உத்தமி யென்பதை உன் முகமே காட்டுகிறது. ஆகையால் உன்மீது எவ்விதமான சந்தேகங் கொள்ளவும் என் மனம் இடந்தரவில்லை. என்றும் சில விஷயங்களை அறிந்துகொள்ள என் மனம் மிகவும் ஆவல் கொண்டிருக்கிறது. தயவு செய்து நான் கேட்பதைத் தெரிவிப்பாயா?" என்றாள். உடனே நூர்ஜஹான் முகமலர்ச்சி யடைந்து "எல்லா விஷயங்களையும் சந்தோஷமாகத் தெரிவிக்கிறேன். எதை வேண்டுமானாலும் கேட்கலாம்" என்று கூறினாள்.

முற்றிலும் அந்தரங்க அபிமானத்தைக் காட்டிய அந்தச் சொல்லைக் கேட்ட மேனகா சிறிது ஆறுதலும் துணிவு மடைந்து "நான் இப்போது எங்கிருக்கிறேன்? நேற்றிரவு நான் கண்ட மகம்மதியருக்கு நீ அநுகூலமா யிருப்பவளா அல்லது எனக்கு அநுகூலமா யிருப்பவளா? என் தேகம் இப்போது களங்கமற்ற

நிலைமையி லிருக்கிறதா? அல்லது களங்கமடைந்து, தீயில் சுட்டெரிக்கத்தக்க நிலைமையி லிருக்கிறதா?" என்று மிகவும் நயந்து உருக்கமாகக் கேட்டாள்.

அவளது சொற்கள் மிகவும் பரிதாபகரமாக விருந்தன; வாய் குழறியது. கண்களினின்று கண்ணீர் பெருகி வழிந்தது. நூர்ஜஹானது வாயிலிருந்து எவ்விதமான மறுமொழி வரப்போகிறதோ வென்று அவளது வாயையே உற்று நோக்கினாள். அந்த ஒரு நொடியும் ஒரு யுகமாய்த் தோன்றியது. இயற்கையிலேயே மேன்மையான குணமும் இளகிய மனமும் பெற்ற நூர்ஜஹான் அந்தப் பரிதாபகரமான காட்சியைக் கண்டு நைந்திளகி மேனகாவினண்டையில் நன்றாக நெருங்கி அவளை யன்போடணைத்து, அவளது கண்ணீரைத் தனது முன்தானையால் துடைத்து "அம்மா! அழாதே; உனது கற்பிற்குச் சிறிதும் பங்க முண்டாகவில்லை. நீ கத்தியால் குத்திக்கொள்ளப் போனதைக் கண்டு நானே உனது கையிலிருந்த கத்தியைப் பிடுங்கினேன். உடனே நீ பயத்தினால் மூர்ச்சையடைந்து, உயிரற்றவள்போலக் கீழே விழுந்துவிட்டாய். நானும் என்னுடைய அக்காளுமாக உன்னை எடுத்து வந்து விட்டோம்." இப்போது நாம் அந்த வீட்டிலில்லை, இது மைலாப்பூரிலுள்ள என் தகப்பனாருடைய பங்களா, நீ, இனி கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்" என்று உறுதி கூறினாள். அந்த சந்தோஷகரமான செய்தியைக் கேட்டவுடன் மேனகாவின் தேகம் கட்டிற்கடங்காமல் பூரித்துப் புளகாங்கித மடைந்தது. நூர்ஜஹானது பேருதவியைப் பற்றி அவள் மனதி லெழுந்த நன்றிப் பெருக்கினால், உள்ளம் பொங்கி யெழுந்தது. கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. தென்றலால் நடுங்கும் மாந்தளிர் போல, அவளது மேனி துடித்தது. "அம்மா! புண்ணியவதி! எனது கற்பைக்கொள்ளை கொள்ள நினைத்த கள்வனிடமிருந்து என்னைக் காப்பாற்றிய தன்றி, என் உயிரைக் கவர்ந்து சென்ற எமனிடத்தி லிருந்தும் அதை மீட்ட பேருபகாரியாகிய உனக்கு நான் எனது நன்றியறிவை எவ்விதம் காட்டப்போகிறேன்!" என்று உருக்கமாகக் கூறினாள்.

நூர்:—நன்றா யிருக்கிறதே! கரும்பைத் தின்பதற்கு, வாய், கூலி கேட்பதைப்போல விருக்கிறதே இது! விலைமதிப்பற்ற கற்பினாலேயே பெண்மக்களுக்கு இவ்வளவு மேன்மையும் பெருமையும் மதிப்பு மேற்பட் டிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு ஸ்திரீயும் தனது உயிரைக் காட்டிலும் கற்பையே உயர்ந்த தாக மதித்து அதைக் காப்பாற்றக் கடமைப்பட் டிருக்கிறாள். நம்முள் ஒருத்தியின் கற்புக்கு துன்பம்நேரிடுமாயின் அதை மற்றவர் தம்முடைய துன்பமாகக் கருதி, விலக்கக் கடமைப்பட் டிருக்கின்றனர். அப்படிச் செய்யத் தவறுவாளானால், ஒருத்தியின் இழிவில் எல்லோருக்கும் பங்கு கிடைக்குமென்பது நிச்சய மல்லவா! என்னுடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ள நான் எவ்வளவு தூரம் கடமைப் பட்டவளோ அவ்வளவு தூரம் உன்னுடைய மானத்தைக் காப்பாற்றவும் கடமைப் பட்டவள். நாம் உண்பதைக் குறித்து, கைக்கு வாயும், வாய்க்கு வயிறும், வயிற்றுக்கு எல்லா அவயவங்களும் உபசார வார்த்தைசொல்லி நன்றி செலுத்துதல் போல விருக்கிறது இவ்விடத்தில்நாம் ஒருவருக் கொருவர் நன்றி செலுத்துவது" என்றாள்.

நூர்ஜஹானது கண்ணிய புத்தியையும் உயர்ந்த குணங்களையும் ஜீவகாருண்யத்தையும் கண்ட மேனகா பேருவகை கொண்டு சிறிது நேரம் மெய்ம்மறந்து பேசமாட்டாம லிருந்து, அப்புறம் "ஈசுவரன், எனக்கு மலைபோல வந்த ஆபத்தை, மகா உத்தமியான உன்னுடைய நட்பைக் காட்டி, பனிபோல விலக்கி விட்டான் போலிருக்கிறது. அம்மா! முதலில் இந்த மஸ்லின் துணியை விலக்கிவிட்டு, என்னுடைய புடவையை உடுத்திக்கொண்டால், எனது கவலையில் முக்காற் பங்கு தீரும். இந்தத்துணி, துணியாகவே எனக்குத் தோன்றவில்லை. நான் ஆடையின்றி வெற்றுடம்போடிருப்பதாகத் தோன்றுகிறது" என்று நயந்து கூறினாள்.

நூர்ஜ:—மேனகா! கவலைப்படாதே; இங்கே புருஷர் எவரும் வரமாட்டார்கள். கீழே விழுந்த உன்னை வேறு அறைக்குக் கொணர்ந்த உடன் டாக்டர் துரைசானியை வரவழைத்தோம். அவள் வந்து நாடியைப் பார்த்தவுடன் முதலில் உனது புடவை நகைகள் முதலியவற்றை விலக்கிவிட்டு, இந்த மஸ்லின் துணியை அணிவிக்கச் சொன்னாள். அப்படிச் செய்யாவிடில், தடைப்பட்டு நின்றுபோன இரத்த ஓட்டம் திரும்பாதென்று கூறினாள். இன்றைக்கு முழுவதும் இதே உடையில் இருக்கவேண்டுமென்று சொல்லிருக்கிறாள். நாளைவரையில் கொஞ்சம் பொறுத்துக்கொள்" என்று நயமாகக் கூறினாள். ஆனால், நூர்ஜஹான் மேனகாவுக்கு மஸ்லினை யுடுத்தி மருந்

துகளை உபயோகித்து சோபாவில் படுக்கவைத்து, துரைசானியையும், தனது சகோதரியையும், அவளண்டையி லிருக்கச்செய்து, தான் மேனகாவின் உடைகளை யணிந்து, தனது கணவனது அந்தரங்கமான சயன அறைக்குப் போன விஷயத்தை அவளிடம் அப்போது கூறுவது தகாதென நினைந்து அதை மறைத்துவைத்தாள். தன் கணவனுடன் தான் சச்சரவு செய்து, அவனால் துரத்தப்பட்டு ஓடிவந்தவுடன் மேனகாவை மோட்டாரில் வைத்து மூவருமாக மைலாப்பூருக்குக் கொணர்ந்ததையும், அங்கோம் முதல் துரைசானி, பங்களாவிலேயே தம்முடன் கூடவிருந்து அப்போதே போனாளென்பதையும் தெரிவித்தாள். அம்மூவரும் தன்னைக் காப்பாற்றும் பொருட்டு செய்த காரியங்களை யெல்லாம் கேட்ட மேனகாவின் மனதிலெழுந்த நன்றியறிவின் பெருக்கை எப்படி விவரிப்பது! அவளுடைய கண்கள் கண்ணீரைப் பெருக்கின. வாய்பேசா மௌனியாய் அப்படியே சிந்தனையிலாழ்ந்தாள். அவளது அதிகரித்த சந்தோஷம் திடீரென்று துக்கமாக மாறியது. முகம் மாறுபாடடைந்தது. அதைக் கண்ட நூர்ஜஹான் "ஏனம்மா விசனப்படுகிறாய்? உன் விஷயத்தில் நாங்கள் ஏதாயினும் தவறு செய்தோமா? எங்கள்மீது கோபமா?" என்றாள். அதைக் கேட்ட மேனகா "ஆகா! மகா பேருபகாரிகளான உங்கள்மீது கேவலம் சண்டாள குண முடையோர்களே கோபங் கொள்வார்கள். நான் அதை நினைக்கவில்லை. நீங்கள், என் கற்பையும் என் உயிரையும் காப்பது எனக்கு ஒப்பற்ற பெரிய உதவி யென்று செய்தீர்கள். ஆனால் இன்னொரு காரியம் செய்திருந்தீர்களானால், அது எல்லாவற்றிலும் மேலான பரம உதவியா யிருக்கும். என்னுடைய கற்பைமாத்திரம் காப்பாற்றியபின், என்னை மூர்ச்சை தெளிவிக்காமல், அப்படியே இறந்துபோக விட்டிருந்தால், ஆகா! அந்த உதவிக்கு இந்த உலகமும் ஈடாயிராது. ஆனால் அந்த உதவியைப் பற்றி நன்றி கூற நான் உயிருட னிருந்திருக்க மாட்டேன். என்னுடைய ஜீவன் மாத்திரம், எத்தனை ஜென்மமெடுத்தாலும் உங்களை மறந்திராது. இவ்வளவு நாழிகை எனது உயிர் இவ்வுலகத்தின் விஷயங்களை மறந்து எங்கேயோ சென்றிருக்கும். எனது கற்பு அழியாமல் காப்பாற்றப்பட்டதைப்பற்றி நான் அடைந்த இன்பத்தைக் காட்டிலும், என் கணவனைவிட்டுப் பிரிந்ததால் இனி நான் அநுபவிக்க வேண்டியிருக்கும் நரக வேதனை எனக்குப் பெரிதாகத் தோன்றுகிறது. அதைக் குறித்த துயரம் இப்போதே மேலிட்டு வதைக்கத் தொடங்கி விட்டது. நான் என்ன செய்வேன்?" என்று கூறிப் பரிதவித்தவளாய் தனது கண்களை மூடிக்கொண்டு சாய்ந்தாள். திரும்பவும் இரண்டொரு நிமிஷத்தில் கண்களைத் திறந்து "அம்மா! என் விஷயத்தில் இவ்வளவு உபகாரம் செய்த குணமணியான உனது பெயர் இன்னதென்றறியவும், உனக்கும், நேற்றிரவு என்னை வற்புறுத்திய அந்த மனிதருக்கும் என்ன உறவுமுறைமை யென்பதை யறியவும் என் மனம் பதைக்கிறது. அவைகளைத் தெரிவிக்கலாமோ?" என்று நயந்து வேண்ட, நூர்ஜஹான் விசனத்தோடு "என்னுடைய பெயர் நூர்ஜஹானென்பது. ஆனால் நீ கேட்ட இரண்டாவது விஷயத்திற்கு மறுமொழி தர எனக்கு மனமில்லை. அந்த மனிதர் இதுவரையில் எனக்கு உறவினராயிருந்தது உண்மையே. நேற்றிரவு முதல் அவருக்கும் எனக்கும் எவ்வித உறவு மில்லாமற் போய்விட்டது. ஆகையால் இப்போது அவரை நான் அன்னியராகவே மதிக்கிறேன்" என்று துக்கமும் வெட்கமும் பொங்கக் கூறினாள்.

அதைக் கேட்ட மேனகாவிற்கு அதன் கருத்தொன்றும் விளங்கவில்லை. ஊன்றி யோசனை செய்து அதன் கருத்தை யறிய முயன்றாள். களைப்படைந்திருந்த அவளது மூளை அதனால் பெரிதும் குழம்பியது. பெரிதும் ஆவலுடன் "நூர்ஜஹான்! நீ சொல்வது இன்னதென்று எனக்கு விளங்கவில்லை; அவர் உனக்கு நெருங்கிய உறவினரில்லையானால், நீ அந்த வீட்டிலிருந்திருக்க மாட்டாய். நடந்தது நடந்ததுபோய் விட்டது. என்னிடம் உண்மையை மறைப்பதேன்? அந்த மனிதருடைய துர்நடத்தையால் உன் மனது அவர்மீது மிகவும் வெறுப்படைந்திருப்பது நிச்சயமாய்த் தெரிகிறது. இப்போது உறவு ஒன்றுமில்லை யென்றே வைத்துக்கொள்வோம்; இதற்கு முன்னிருந்த உறவுமுறைமையைத்தான் தெரிவிக்கக் கூடாதா?" என்று அன்பாக வற்புறுத்திக் கூறினாள்.

நூர்ஜஹான் வெட்கத்தினால் தனது முகத்தைக் கீழே தாழ்த்தினாள். "அம்மா! மேனகா! அந்தக் கெட்ட மனிதரை எனது உறவினரென்று சொல்லிக்கொள்ள வெட்கமா யிருக்கிறது. தவிர ஒவ்வொருநாளும் ஒவ்வொரு அபலமாதை விரும்பி யலையும் இழிகுணமுடைய ஒரு மனிதரை ஒரு ஸ்திரீ தனது கணவரென்று சொல்லிக் கொண்டால் உலகம் நகைக்கு மல்லவா? அந்த இழிவான நிலைமையிலேயே நான் இப்போதிருக்கிறேன்" என்று கூறினாள். அதிக

ரித்த வெட்கத்தினாலும் துயரத்தினாலும் அவளது தேகம் துடித்தது. கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவளது மனதும், கண்களும் கலங்கின.

அந்தப் பரிதாபகரமான நிலைமையைக் கண்ட மேனகா "அடாடா! எனக்குப் பேருபகாரம் செய்த மனிதருக்கு நான் நல்ல பதிலுதவி செய்தேன்! ஐயோ! பாவமே! மூடத்தனமாக ஒரு கேள்வியைக் கேட்டு உன்னை துக்கத்தி லாழ்த்திவிட்டேனே! ஆகா!" என்று பெரிதும் பச்சாதாபமும் விசனமும் அடைந்தாள். விரைவாக எழுந்து நூர்ஜஹானது கண்ணீரைத் துடைத்துத் தேற்ற நினைத்து நலிந்து தன் மேனிக்கு வலுவைப் புகட்டி எழுந்திருக்க முயன்றாள். அவளது மெலிந்த நிலைமையில் அது அளவு கடந்த உழைப்பாய்ப் போனது. உடனே கண் இருண்டு போனது; மூளை குழம்பியது. மயக்கங்கொண்டு உணர்வற்று, அப்படியே சயனத்தில் திரும்பவும் வீழ்ந்து விட்டாள். முன்னிலும் அதிகரித்த மூர்ச்சை யடைந்து பிணம்போலானாள்.

அதைக் கண்ட நூர்ஜஹான் பெரிதும் கவலைகொண்டு, அவளுக்கு எவ்விதமான தீங்குண்டாகுமோ வென்று மிகவும் அஞ்சி, தனது கணவனைக் குறித்த நினைவையும் விடுத்து அவளைத் தெளிவிப்பதே அலுவலாய்ச் செய்யத் தொடங்கினாள். திரும்பவும் மருந்தை மார்பில் தடவினாள். அவள் விழித்திருந்தபோது உள்புறம் அருந்தும் மருந்தைக் கொடாமல் தான் ஏமாறிப் போனதை நினைத்து வருந்தினாள். அந்த முறை மேனகாவின் மூர்ச்சையைத் தெளிவிக்க நூர்ஜஹான் எவ்வளவு பாடுபட்டாளாயினும் அவளது உணர்வு அன்று மாலைவரையில் திரும்பவில்லை. அப்போதைக் கப்போது மேனகாவின் கண்கள் மாத்திரம் இரண்டொரு விநாடி நேரம் திறந்து மூடிக்கொண்டன வன்றி அவள் உலகத்தையும் தன்னையும் மறந்து கிடந்தாள்.

அவள் நன்றாய்க் குணமடையும் முன்னர் தான் அவளிடம் அதிகமாக உரையாடி, அவள் மனதிற்கு உழைப்பைக் கொடுத்து விட்டதைக் குறித்துத் தன்னைத் தானே தூற்றிக்கொண்டவளாய் நூர்ஜஹான் தனிமையி லுட்கார்ந்திருந்தாள். அதிக மூர்க்கமாகப் பொங்கியெழுந்து வதைத்த எண்ணிறந்த நினைவுகளால், சூறாவளிக் காற்றிலகப்பட்ட சருகைப்போல அவளது மனம் தடுமாறியது.

மென்மையும் இரக்கமுமே வடிவாய்த் தோன்றிய அந்தப் பொற்கொடி என்னசெய்வாள்! எதைக்குறித்து வருந்துவாள்! மேனகாவிற்கு வந்த விபத்தைக் குறித்து வருந்துவாளா? அன்றி, தன் கணவனது இழிகுணத்தையும் வஞ்சகச் செயலையும் நினைத்து வருந்துவாளா? தான் நல்ல கணவனை யடைந்து அதுகாறும் பேரின்ப சுகமடைந்ததாக நினைத்திருந்த தன் எண்ணமெல்லாம் மண்ணாக மறைந்ததையும், தனது எதிர்காலவாழ்க்கையே இருள் சூழ்ந்த பாழ் நரகாய்ப் போனதையும் நினைத்துவருந்துவாளா? மேனகா எவ்விதமான களங்கமு மற்றிருந்தாளென்பதை ருஜுப்படுத்தி அவளை அவளது கணவனிடம் எப்படிச்சேர்ப்பது என்பதைக்குறித்து வருந்துவாளா? தனது உயர்ந்த கல்வியாலும், அறிவாலும், புத்தியாலும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் தான் தனது நாதனை இன்புறுத்தி, அதனால் தானும் இன்புற நினைத்திருந்த தனக்கு, நற்குணம், விவேகம், முதலியவற்றின் அருமையை ஒருசிறிதும் உணராதவனும் கேவலம் அழகைமாத்திரம்கருதி அயல்வீட்டுப் பெண்களின்மீது மோகங்கொண்டு தீமைகளியற்றும் காமாதுரன், புருஷனாக வந்து வாய்த்ததை நினைத்துவருந்துவாளா! தான் இனி தனது ஆயுட்காலத்தை எவ்வாறு கடத்துவதென்பதை யெண்ணி வருந்துவாளா? தான் உண்ணும்கவளத்தையும் தன் புத்திரிக்கு அருமையாக ஊட்டி உயிரைப் போல மதித்து வளர்த்துக் கல்வி முதலிய சிறப்புகளை யுண்டாக்கி, ஏராளமான செல்வத்தையும் வாரிக்கொடுத்து இன்புறும்பொருட்டுக் கணவன் வீட்டுக்குத் தன்னையனுப்பியதந்தை இந்தவரலாறுகளைக் கேட்டு எவ்வாறு பொறுப்பாரோ அல்லது மனமுடைந்து மரிப்பாரோ வென்னும் நினைவினால் வருந்துவாளா? எதைக்குறித்து வருந்துவாள்? எதைமறந்திருப்பாள்? இத்தனை நினைவுகளும், ஒன்றன் பின்னொன்றாயும் ஒரே காலத்திலும், மகா உக்கிரமாக எழுந்து அவளது மனதை யழுத்தி ஒவ்வொன்றும் முதன்மைபெற நினைத்து உலப்பியது. பல மலைப்பாம்புகள் ஒரு ஆட்டுக்கடாவின் உடம்பில் கால் முதல் நெஞ்சு வரையில் சுற்றிக்கொண்டு தயிர் கடைவதைப்போல அது திணறிப்போம்படி அழுத்தி அதன் எலும்புகளை யெல்லாம் நொறுக்குதலைப்போல அவளது மனதை இத்தனை எண்ணங்களும் கசக்கிச்சாறு பிழிந்தன.

அந்த நிலைமையில் அவளது சகோதரி அலிமா என்பவள் அப்போதைக் கப்போது அங்குத் தோன்றி உணவருந்த வரும்படி அவளை

யழைத்தனள். நூர்ஜஹான் தனக்குப் பசியில்லை யென்று சொல்லி அவளை அனுப்பிவிட்டுத் தனிமையில் உட்கார்ந்திருந்தாள். இரண்டொரு நாழிகைக்கொருமுறை மேனகாவின் கண்கள் திறக்கும் போது, அவளுக்கு மருந்து கொடுக்க முயன்றும், இனிய சொற்களால் அவளை உபசரித்து உணர்வு பெறுவிக்க முயன்றும், ஏதாயினும் ஆகாரம் கொள்ளும்படி அவளை வேண்டியும், அவளுக்கு குணமுண்டாக்கத் தன்னாலேன்றவற்றை யெல்லாம் புரிந்தவண்ணமிருந்தாள். அவள் கண்களை மூடியபிறகு, இவள் தனது விசனங்களான படைகளால் தாக்கப்பட்டு, அதைப்பொறாமல் தத்தளித்திருந்தாள். பூங்கொம்பிலிருந்து பூக்களும் பனித்திவலைகளும் உதிர்தலைப்போல அவளது கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் கீழே வீழ்ந்து பெருகி, அவளது ஆடைகளை நனைத்தன. துக்கமும், வெட்கமும், ஆத்திரமும் பொங்கியெழுந்து வதைத்தன. தேம்பித் தேம்பி யழுது நெடுமூச்செறிந்து உயிர்சோர ஓய்வடைந்து உயிரற்ற ஓவியம்போல விருந்தாள். அன்றைப் பகல் முற்றிலும் தண்ணீரும் அருந்த நினைவு கொள்ளாமல் துயரமே வடிவாக உட்கார்ந்திருந்தாள். வஞ்சகனான தன் கணவன் முகத்தில் தான் இனி எப்படி விழிப்பதென்றும், அவனுடன் எப்படி வாழ்வதென்றும் நினைத்து, அவனிடம் பெருத்த அருவருப்பை யடைந்தாள்: தனது துர்ப்பாக்கியத்தை நினைத்துத் தன்னையே வைது கொண்டாள். தனது தந்தையினிடத்தில் விஷயங்களை வெளியிட்டு தன் கணவனை இழிவுப்படுத்தவும் அவளது பேதை மனது இடங்கொடுக்கவில்லை. ஆனால் அவருடைய உதவியினாலேயே மேனகாவை அவளது கணவனிடம் திருப்திகரமாகச் சேர்க்க முயல வேண்டும்; தன் கணவன் குற்றத்தைக் கூடிய வரையில் மறைத்துக் குறைவுப்படுத்திக் கூறுவதென்றும், மேனகா தனது கணவனையடைந்தவுடன், தான் விஷத்தைத் தின்று உயிரை விட்டுவிட வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டாள். அன்று மாலையில் டாக்டர் தவறாமல் காலையில் வருவதாயும், அதுவரை கவலைப்படாமல், அதே மருந்தை பிரயோகிக்கும்படியும் செய்தி யனுப்பினாள்.

அதைக்கேட்ட நூர்ஜஹான், மேலும் துன்பக்கடலி லாழ்ந்தாள்; மறுநாட்காலையில் துரைசானி வரும் வரையில், மேனகா பிழைத்திருப்பாளோ வென்று பெரிதும் அஞ்சினாள். வேறு துரைசானி யொருத்தியை தருவிக்கலாமோவென நினைத்தாள். ஆனால்

அந்த இரகசியங்களை பலருக்குத் தெரிவிப்பது தவறென வெண்ணினாள். இத்தகைய எண்ணிறந்த வேதனைகளிலாழ்ந்து அன்றிரவையும் ஊணுறக்கமின்றிப் போக்கினாள். அவளுடைய சகோதரியும் அவளுடன் அன்றிரவு முற்றிலுமிருந்து அவளை உண்ணும்படியும் சிறிது நேரமேனும் துயிலுக்குச் செல்லும்படியும், வற்புறுத்தி வேண்டியதெல்லாம் வீணாயிற்று. அந்த பயங்கரமான இரவு மெல்லக் கழிந்தது; மறுநாட் பொழுது புலர்ந்தது. மேனகாவின் உணர்வை கிரகணம்போல மறைத்திருந்த இரவு கழிந்தவுடன், அவளது உணர்வு தெளிவடைந்தது; மதியும் பிரகாசிக்கத் தொடங்கியது. அவள் கண்களை நன்றாகத் திறந்து கொண்டாள். முதல்நாள் முற்றிலும் ஆகாரமின்றி யிருந்தமையால் அவளது தேகம் நிலைத்து நில்லாமல் பறந்தது. கண்கள் இருண்டன. தலை சுழன்றது. தேகம் அசைக்க வொண்ணாமல் மரத்துப்போயிருந்தது.

அத்தகைய சமயத்தில் ஒருமோட்டார் பைசைகில் வந்து அந்த அறைக்கு வெளியில் நின்றது. அடுத்த நிமிஷத்தில் டாக்டர் துரைசானி மிகவும் சுறுசுறுப்பாக உள்ளே நுழைந்தாள்.

அவளைக்கண்டவுடன் நூர்ஜஹான் விரைந்தெழுந்து துரைசானியை வரவேற்று ஆசனத்தில் அமரச்செய்தாள். துரைசானி உடனே நாடி பார்க்கும் குழாயை எடுத்து மேனகாவின் மார்பு முதலிய விடங்களில் வைத்து ஆராய்ச்சி செய்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தாள்; ஆனால் அவளது முகம் திருப்திகரமாகக் காணப்படவில்லை. முதல்நாட் காலையில் அவள் அவ்விடத்தை விட்டுப் போன பின்னர் நிகழ்ந்தவற்றையும் மேனகாவின் நிலைமையிலுண்டான மாறுபாடுகளையும், அவள் ஆகாரமே கொள்ளாமலும், கண்ணைத் திறவாமலும் ஒரே நிலைமையில் கிடப்பதையும் நூர்ஜஹான் அவளிடம் உடனே விரிவாய்க் கூறித் தனது அச்சத்தை வெளியிட்டாள். அதைக் கேட்ட துரைசானி "நான் நேற்றைய தினம் மிகவும் அருமையான மருந்தைக் கொடுத்தேன். அதனாலேயே இவள் தனது இயற்கை நிலைமையை யடைந்திருப்பாள். நீங்கள் இருவரும் சம்பாஷணை செய்ததனாலேயே இவளுடைய நிலைமை கெட்டுப்போயிருக்கிறது. அவிந்துபோகும்போது விளக்குச்சுடர் துடிப்பதைப்போல இவளுடைய நாடி இப்போது மிகவும் கேவலமான நிலைமையிலிருக்கிறது; இனியாவது இரண்டொரு நாளைக்கு இவளிடம் அதிகமாகப் பேச

வேண்டாம்; இப்போது மிகவும் அருமையான ஒரு மருந்திற்கு சீட்டெழுதிக் கொடுக்கிறேன்; அதை உடனே வரவழைத்துக் கொடுங்கள். விரைவில் தெளிவடைந்து விடுவாள். இன்று மாலையில் இவளை மோட்டார் வண்டியில் வைத்துக் கொஞ்சநேரம் கடற்கரைக்குக் கொண்டு போங்கள். நான் தவறாமல் மாலை ஆறுமணிக்கு வருகிறேன். பயப்பட வேண்டாம்" என்று கூறியவண்ணம் ஒரு காகிதத்தில் மருந்துகளின் பெயரை எழுதிக் கொடுத்தாள். "நான் போய்விட்டு வருகிறேன். பார்லி அரிசிக் கஞ்சியையாவது காப்பியையாவது கொஞ்சம் கொடுங்கள். ஆகாரம் அதிகமாகச் செல்லவில்லையே என்னும் கவலை வேண்டாம்." என்று சொல்லி விட்டு, விடைபெற்றுக் கொண்டு எழுந்து சென்றாள் துரைசாணி.

உடனே நூர்ஜஹான் சீட்டிற் காட்டப்பட்ட மருந்தையும் வரவழைத்து மிகவும் பாடுபட்டு மேனகாவுக்கு அருந்துவித்தாள். அதன் பிறகு நான்கு நாழிகை வரையில் அவள் நன்றாய்த் துயின்று அப்புறம் கண்ணை விழித்தாள்; அவளுடம்பில் புதிய மாறுபாடுண்டாயிற்று. பசியும் களைப்பும் தோன்றின. முகம், மார்பு முதலிய விடங்களில் வியர்வை கசிந்தது. சிறிது நேரம் கழிந்தது. சயனத்தில் ஒரு நிலைமையிலிருப்பது அவளுக்கு அருவருப்பாகவும் துன்பகரமாகவும் தோன்றியது. அப்புறம் இப்புறம் புரண்டு படுத்து, மெல்ல எழுந்து அருகிலிருந்த திண்டில் சாய்ந்து கொள்ள முயன்றாள். அதைக்கண்ட நூர்ஜஹான் "மேனகா! நான் பிடித்துக் கொள்ளுகிறேன்; மெல்ல எழுந்து சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறாயா? அதில் சாய்ந்து கொண்டால் சுகமாயிருக்கும்" என்று அன்போடு கேட்க, அவள் "ஆகட்டு" மென்று தலையை அசைத்தாள். அருகிலிருந்த, மெத்தை தைக்கப்பெற்ற அழகான சாய்மான நாற்காலி யொன்றைக் கட்டிலிற்கருகில் இழுத்தாள். அதன் கால்களில் சகடைகளிருந்தமையால், அது ஓசையின்றி எளிதில் வந்தது; உடனே மேனகா தானே எழுந்துவிடுவதாய்க் கூறித் தனது உடம்பை நிமிர்த்தி எழுந்திருக்க முயன்றாள். ஆனால் தேகம் கட்டில் நில்லாமல் கீழே தள்ளி விட்டது. பொத்தென்று தரையில் வீழ்ந்து விட்டாள். அதைக் கண்டு சகியாத நூர்ஜஹான் பெரிதும் திகிலடைந்து பாய்ந்து, குழந்தையை எடுப்பதைப்போல வாரி எடுத்து சாய்மான நாற்காலியில் விடுத்தாள். அவளது மஸ்லின் உடையை ஒழுங்காக அணிவித்தாள். உடம்பில் கசிந்த வியர்வையைத்

தனது பட்டுத் தாவணியால் துடைத்து விட்டு, அந்த அறையை விட்டு வெளியிற் சென்றாள். உடனே ஒரு பிராம்மணப் பரிசாரகன் வெள்ளிச் செம்பில் வெந்நீர், பற்பொடி முதலியவற்றை உட்புறம் கொணர்ந்து, அவளுக் கெதிரிலிருந்த மேஜையை சுத்தி செய்து, அதன்மீது வைத்து விட்டு வெளியிற் சென்றான். அதைக்கண்ட மேனகா திடுக்கிட்டு அவனை உற்று நோக்கி மிகவும் வியப்படைந்தாள். தன் விஷயத்தில் அந்த மகம்மதியப் பெண் அளவிறந்த அபிமானத்தையும், அன்பையும் கொண்டு செய்துள்ள ஏற்பாடுகளைக் கண்டு நன்றி சுரக்கப்பெற்றவளாய் அவளது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தாள். அடுத்த நொடியில் நூர்ஜஹான் உள்ளே நுழைந்து, "அம்மா! முகத்தை சுத்தம் செய்துகொள்," என்றாள்.

மேனகா:—ஆகா! என் விஷயத்தில் நீ எவ்வளவு பாடுபடுகிறாய்! என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறாய்! உனது மனப்பூர்வமான அன்பைக்காண என் ஹிருதயம் பொங்கி யெழுகிறது. ஆனால் இத்தனையும் விழலுக்கிறைத்த நீரா யிருக்கிறதே யென்றுதான் ஒருவிதமான விசனம் என்னை வதைக்கிறது. பயனற்ற இந்த உடம்பை இப்படியே மடிந்துபோக விடாமல் நீ இதற்கு இவ்வளவு உபசாரணை செய்து இதை வீணிலே காப்பாற்றி என்ன செய்யப் போகிறாய்? என் உடம்பு தேறி நல்ல நிலைமைக்கு வருவதாக வைத்துக் கொள்ளுவோம். அதன் பிறகு நான் எங்கே போகிறது? என் புருஷன் வீட்டிற்குப் போவதற்கு வழியில்லை. தகப்பனார் வீட்டிற்குப் போய் நடந்தவற்றைச் சொன்னால் அவர்கள் என் சொல்லை நம்பி என்னை ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆனால் புருஷன் வீட்டார் என்னைப் பற்றி எவ்விதமான தூஷணை சொல்லுகிறார்களோ தெரியவில்லை. ஒருவேளை நானே உன் புருஷனிடம் ஓடி வந்து விட்டேனென்று கட்டுப்பாடாகச் சொன்னாலும் சொல்லுவார்கள். அவ்வளவு அவமானத்தை நானுமடைந்து என் பெற்றோர்க்கும் உண்டாக்கி உயிர்வாழ்வது தகுமா? அதைக்காட்டிலும் உயிரை விட்டு விடுவதே மேலல்லவா! அம்மா! இந்த உபசாரணைகளை யெல்லாம் விடுத்து, என்னை ஒரே நொடியிற் கொல்லும் விஷத்திற் கொஞ்சம் துரைசாணியினிடமிருந்து வாங்கிக் கொடுப்பாயானால் உனக்குப் பெருத்த புண்ணியமுண்டாகும்; அதுவே பெருத்த உதவியுமாகும். எத்தனை ஜென்மமெடுத்தாலும் அதை நான் மறக்க மாட்டேன்" என்று நயமாகக் கூறி வேண்டினாள். அம்மொழியைக் கேட்ட நூர்ஜஹானது மன

மும் கண்களும் கலங்கின. கண்ணீர் விடுத்தாள். அவளுடன் சம்பாஷித்தல் கூடாதென துரைசானி கண்டித்துக் கூறியுள்ளது நினைவிற்கு வந்தது. என்றாலும் மேனகாவிடம் இரண்டொரு வார்த்தைகள் கூறி அவளது மனதை சாந்தப்படுத்தி நம்பிக்கை யுண்டாக்க வேண்டுவதவசியமென்று கருதினவளாய் "அம்மா! மேனகா! நீ சொல்லுவதெல்லாம் உண்மைதான். இருந்தாலும், இன்னொரு விஷயமிருக்கிறது. இவ்விதமான விபத்தெல்லாம் உண்டாகுமென்று நாம் கனவிலும் எதிர் பார்த்தோமா? இல்லை யல்லவா! அடுத்த நிமிஷத்தில் நமக்கு என்ன தீமை சம்பவிக்குமோ! அதை நாம் அறியோம்; நேற்றிரவு நீ தத்தளித்து முடிவில் எமன் வாயிலிருந்த போது உன்னைக் காப்பாற்ற ஆண்டவன் என்னைக் கொணர்ந்துவிடவில்லையா? நீங்காததுபோலத் தோன்றும் பயங்கரமான விபத்தையும், நீக்கக்கூடிய ஆண்டவன் எங்குமிருந்து நம்மெல்லோரையும் பாதுகாத்து வருகிறான். அவனையே முற்றிலும் நம்பி, நாம் ஒழுங்கான வழியிலே செல்லுவோம். பிறகு ஏற்படும் முடிவு அவனருளைப் பொருத்ததாகும். ஏதோ ஒரு நோக்கத்துடன் விபத்தில் நம்மை விடுத்தவன் அதை விலக்குவதற்கும் வழிகாட்டுவான். ஆகையால் மனந் தளரவிடாதே யம்மா! மேலே நடக்க வேண்டுவனவற்றைப் பற்றி அப்புறம் யோசனை செய்வோம். இப்போது உனது உடம்பை நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவது முக்கியமான விஷயம். நீ இப்போது அதிகமாய்ப் பேசுவதும், வருந்துவதும் கூடாதென்று துரைசானி சொல்லியிருக்கிறாள். ஆகையால், பல்லைத் தேய்த்துக்கொள். பிராம்மணப் பரிசாரகர் காப்பி தயாரித்திருக்கிறார். இந்த பங்களா மிகவும் பிரம்மாண்டமானது. நாங்களெல்லோரும் வசிக்குமிடம் நெடுந்தூரத்திற்கு அப்பாலிருக்கிறது. இது, நானும் என்னுடைய அக்காளும் ஏகாந்தமாயிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் சிறிய சவுக்கண்டி. இங்கே எவ்வித அசுத்தமுமில்லை. பரிசாரகர் காப்பி தயாரித்திருக்கிறார். முன்னால் அதில் கொஞ்சம் சாப்பிடு" என்றாள்.

அதைக்கேட்ட மேனகா தனக்குக் கடவுளின் உதவி ஏற்படுமென்றும், தான் பழையபடி தனது கணவனுடன் திருப்திகரமாய்ச் சேர்ந்து வாழ்க்கை செய்தல் கூடுமென்றும், நம்பிக்கை கொள்ளவில்லையேனும், மருந்தைப் பருகியதனால் தனது வாய் முதலியவை அருவருப்பாகத் தோன்றின வாகையால் முகத்தை சுத்தி செய்துகொள்ள நினைத்தாள். எதிரிலிருந்த தண்ணீரை யெடுத்து வாய், முகம், கை

கால்கள் முதலியவற்றை சுத்தி செய்துகொண்டு நாற்காலியிற் சாய்ந்தாள். அவ்வாறு எழுந்து உட்கார்ந்ததனாலும், கைகால்களுக்கு உழைப்பைக் கொடுத்ததனாலும், தேகத்தில் தண்ணீர்பட்டதனாலும் ஒருவிதமான களைப்பு மேலிட்டதனால் மயக்கமடைந்து நாற்காலியிற் சாய்ந்து உறங்கினாள். மேல் நடந்த விஷயங்களை யெல்லாம் விரிவாகக்கூறுவது மிகையாகும்.

அன்று மாலை ஐந்தேகால் மணிக்கு ஒரு மோட்டார் வண்டி அவர்களிருந்த சவுக்கண்டியின் வாயிலில் வந்து நின்றது. அதில் மேனகா தனது சொந்த உடையையும் ஆபரணங்களையும் அணிந்தவளாய் வாடித்துவண்டு சாய்ந்திருந்தாள். உச்சி முதல் உள்ளங்கால் வரையில் துப்பட்டியால் தன்னை மறைத்துக் கொண்டு நூர்ஜஹான் அருகில் உட்கார்ந்திருந்தாள். வண்டி நிற்குமுன், அலிமாபி, அங்கு வந்து ஆயத்தமாக நின்றாள். வண்டி நின்றவுடன் இரண்டு மகம்மதியப்பெண்களும் மேனகாவை மெல்லத் தாங்கி உட்புறம் அழைத்துப்போய் சாய்மான நாற்காலியில் விட அவள் அதில் சாய்ந்து கொண்டாள். நூர்ஜஹானது தேகம் படபடத்துத் தோன்றியது. உஸ்ஸென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள். மேனகாவின் மேனியில் குளிர்ந்த கடற்காற்று பட்டதனாலும், வண்டியின் ஓட்டத்தினாலும் இரண்டு நாட்களாக மரத்துப்போயிருந்த அவளது தேகத்தில் சுறுசுறுப்பும் ஊக்கமும் உண்டாயின; இரத்தமும் நன்றாக ஓடத்தலைப்பட்டது. இரண்டு நாட்களாக ஆகாரங் கொள்ளாமையால் ஏற்பட்ட களைப்பு அப்போதே மேலிட்டுத் தோன்றியது. அந்த நிலைமையில் கடற்கரையில் ஒருவருக்கு நேர்ந்த விபத்தைக் கண்டதனால் அவள் மனது பொங்கி எழுந்து இன்னமும் தத்தளித்தது. அவ்விருவரது தோற்றமும் சந்தேகப்படத்தக்கதாய்க் காணப்பட்டமையால், அலிமாபி, நூர்ஜஹானைப் பார்த்து என்ன விசேஷமென்று கேட்க, நூர்ஜஹான் "ஆகா! என்னவென்று சொல்லுவேன்! நாங்கள் உலாவிவிட்டு வரும்போது பாதையில் ஒருவர்மீது மோட்டார் வண்டி ஏறிவிட்டது. ஆகா! எவ்வளவு இரத்தம்! பாதை யெல்லாம் சேறாய்ப் போய்விட்டது! அதைக்கண்டவுடன் எனக்கு மயக்கம் வந்து விட்டது. ஏது! இனி அந்த மனிதர் பிழைக்க மாட்டார்" என்றாள்.

அதைக்கேட்ட அலிமாபி திடுக்கிட்டு அச்சங்கொண்டு "நம்முடைய வண்டியா ஏறியது?" என்றாள்.

நூர்ஜஹான் "இல்லை. வேறு வண்டி; நம்முடைய வண்டி அப்போது அருகில் வந்தது. நமக்கு ஏதாவது துன்பம் உண்டாகுமோவென்று நினைத்து நாங்கள் வேகமாய் வந்து விட்டோம். தவிர, நியாயஸ்தலத்தார் இந்த விஷயத்தில் எங்களை சாட்சிகளாகக் கொருவார்களானால், மேனகா கச்சேரிக்குப்போக நேரும்; அதனால் உபத்திரவம் உண்டாகுமென்றும் நினைத்து வண்டியை விரைவாகவிடச் சொன்னேன். அந்த இரத்தத்தைக் கண்டவுடன் மேனகாவும் மயங்கி விழுந்து விட்டாள். இப்போது விரைவாக துரைசானியை அழைத்து வந்து இதனால் மேனகாவின் உடம்பில் எவ்வித விபரீதமும் ஏற்படாமல் நாம் முன்னெச்சரிக்கையாகச் செய்ய வேண்டும். நம்முடைய மோட்டார் வண்டியை அனுப்பு" என்றாள். அவள் உடனே வெளியிற் சென்று வண்டியை அனுப்பினாள்.

ஆறு மணிக்கு வருவதாகச் சொல்லிவிட்டுப் போன துரைசானியை அதற்கு முன்னாகவே அழைத்துவர நினைத்து, அவர்கள் தமது மோட்டார்வண்டியைஐந்தேகால்மணிக்கு அனுப்பினாராயினும், துரைசானி வரவில்லை; மணி ஆறாயிற்று. அப்போது அவள் தவறாமல் வந்து விடுவாளென்று நினைத்து நூர்ஜஹான் அவளது வருகையை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தாள். மேனகா தனது சுய உணர்வுடனிருந்தாளாயினும், அயர்வினால் வாய்திறந்து பேசமாட்டாமல் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். மணி ஆறுக்கு மேலும் நகர வாரம்பித்தது. ஆறேகால், ஆறரை, ஆறே முக்காலும் ஆனது; நூர்ஜஹானுடைய ஆச்சரியம் அதிகரித்துக் கொண்டே வந்தது. மணி ஏழு அடித்தது. வாயிலில் மோட்டார் வண்டி 'கிர்' றென்று வந்து நின்றது. நூர்ஜஹான் எழுந்து வந்தாள். விரைவாக உட்புறம் நுழைந்த துரைசானி "நூர்ஜஹான்! மன்னிக்க வேண்டும். உன்னுடைய வண்டி ஐந்தரை மணிக்கு முன்னாகவே வந்து விட்டது. நான் புறப்படப்போன சமயத்தில் மிகவும் ஆபத்தான நிலைமையில் ஒருவர் கொண்டு வரப்பட்டார்; ஆகையால் நான் வரக்கூடாமல் போய்விட்டது. அவர்மேல் மோட்டார் வண்டி ஏறி விட்டதாம். அவர் பிழைப்பாரோ மாட்டாரோ வென்னும் நிலைமையில் வந்தார்; எங்கள் வைத்தியசாலையின் தலைமை உத்தியோகஸ்தரான துரை உடனே அந்த மனிதருக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார். அவருடன் நானும் கூட எப்போதும் இருக்க வேண்டுமாகையால் இதற்குமுன் வரக்கூடாமல் போய்விட்டது. இந்தப் பெண்ணுக்கு உடம்பு எப்படி இருக்கிறது? அவசரமாக வண்டி யனுப்பினாயே" என்று சொல்லிக் கொண்டே மேனகாவின் நாடியைச் சோதனை செய்தாள்.

அப்போது நூர்ஜஹான் "எவ்விடத்தில் வண்டி ஏறியது?" என்றாள்.

துரை:—கடற்கரைப் பாதையில் சென்னை துரைத்தனத்தாரின் சர்வகலா சாலைக் கெதிரில் ஐந்து மணிக்கு—என்றாள்.

நூர்:—அவர் பிழைத்தாரோ இல்லையோ?

துரை:—ஏது? பிழைப்பது சந்தேகம்! உடம்பிலுள்ள இரத்தமெல்லாம் போய்விட்டது! நாளைக்குக் காலையிலேதான் எதையும் நிச்சயமாகச் சொல்லக்கூடும். அதிருக்கட்டும். இந்தப் பெண்ணின் உடம்பு இவ்வளவு படபடத்திருப்பதன் காரணமென்ன? நான் சொன்னபடி கடற் காற்றிற்கு அழைத்துப் போனாயா?

நூர்:—ஆம்! அழைத்துப் போனேன். அதனால் உடம்பு சிறிது தெளிவடைந்தது. ஆனால் நீங்கள் இப்போது குறித்த விபத்தை நாங்கள் நேரில் கண்டோம். அங்கு ஓடிய இரத்த வெள்ளத்தைக் கண்டு பேனகா மூர்ச்சித்து விட்டாள். இங்கு வந்தவுடன் மருந்தை உபயோகித்தேன். இப்போது சிறிது குணமாயிருந்த போதிலும் அந்தப் படபடப்பு மாத்திரம் இன்னமிருக்கிறது. இதனால் ஏதாவது துன்பம் சம்பவிக்குமோ வென்று உங்களை சிறிது முன்னாகவே வரவழைக்க வெண்ணி வண்டி யனுப்பினேன்.

துரை:—அப்படியானால் அந்த மனிதரின்மேல் ஏறிய வண்டி யாருடைய தென்பது உங்களுக்குத் தெரிந்ததா?

நூர்:—இல்லை. அந்த வண்டி மிகவும் வேகமாய்ப்போய் விட்டது. நாங்களும் உடனே வந்து விட்டோம்.—என்றாள்.

அப்போது துரைசானி தன் கையிலிருந்த ஒரு மருந்தை மேனகாவின் இமையில் தடவிவிட்டு "மேனகா! மேனகா!" வென்று இரண்டு மூன்று கூப்பிட, அவள் உடனே தனது கண்களைத் திறந்து கொண்டு மெல்ல ஏனென்றாள்.

துரை:—ஏதாவது ஆகாரம் சாப்பிட்டாயா?—என்றாள்.

மேனகா மெதுவாக "இல்லை" என்றாள்.

துரைசானி "இனிமேல் ஆகாரம் சாப்பிடாமல் இருப்பது பிசகு. வெறும்பாலாகிலும் கொஞ்சம் சாப்பிடத்தான் வேண்டும். ஆகாரமில்லாமலேயே இந்தக் களைப்பு தோன்றி யிருக்கிறது. நூர்ஜஹான்! பால் தயாராக விருந்தால் கொஞ்சம் வரவழை" என்றாள்.

அடுத்த நிமிஷம், காய்ச்சப்பட்ட நல்ல பசுவின்பால் வந்துசேர்ந்தது. துரைசானி அதைக் கையில் எடுத்துக் கொண்டு மேனகாவின் வாய்க்கருகில் கொண்டு போய் "மேனகா! வாயைத்திற" என்றாள். அவள் கண்ணைத் திறவாமலே வாயைத் திறந்தாள். உடனே துரைசானி பாலிற்சிறிது அருந்து வித்தாள். "சரி! இதுபோதும்! நாளைக்குள் உடம்பு குணமடைந்து விடும். இப்போது நான் அவசரமாகப் போகவேண்டும். இன்று ராத்திரி முழுவதும் அந்த மனிதருக்கருகில் இருந்து கவனிக்க ஒரு தாதியை அமர்த்தவேண்டும். நான் போகிறேன். நாளைக்குக்காலையில் நான் இங்குவர வேண்டுமானால் ஆளனுப்பு" என்று சொல்லிக் கொண்டு வாயிலை நோக்கி நடந்தாள்.

நூர்:—அப்படியே செய்கிறேன். அந்த மனிதர் யாரென்பது தெரிந்ததா?—என்றாள்.

துரை:—ஆம் தெரிந்தது; அவர் தொளசிங்கப் பெருமாள்கோவில் தெருவிலுள்ள ஒருவக்கீலாம். பிராம்மண ஜாதியைச் சேர்ந்தவராம். அவருடையபெயர் என்னவென்று சொன்னார்கள். (சிறிது யோசனை செய்து) ஆம் ஆம் வராகசாமி ஐயங்காராம்—என்றாள். அந்தச்சொல்லைக்கேட்ட மேனகா "ஐயோ என் புருஷன்!" என்று அலறிக்கொண்டு நாற்காலியை விட்டு விசையாக எழுந்தவள் மயங்கிப்போய், வேரற்ற மரம்போலத் தரையில் படீரென்று விழுந்தாள். நூர்ஜஹானும் துரைசானியும் திகைப்படைந்து ஓடி வந்து அவளை நெருங்கினார்கள்.

II அங்கம்.

5-வது காட்சி.

(**சுருக்கம்:**—தொண்டைமானது குதிரைத் தலைவன் கங்காதரனும் திலோத்தமாவின் தலைமைத் தோழியான மாலினியும் ஒருவரையொருவர் மிகவும் காதலித்து ஒருவரையொருவர் மணக்க வெண்ணியிருக்கின்றனர். திலோத்தமாவை விஷங்கொடுத்துக் கொன்றுவிடத் தீர்மானித்த விக்ரமன் கங்காதரனைக் கொண்டு மாலினியின் உதவியால் அதை நிறைவேற்றக் கருதி, அவனுக்கு இருபதினாயிரம் பொன் தருவதாக வாக்களிக்க, கங்காதரன் அதற்கிணங்கிவந்து மாலினியின் வரவை எதிர்பார்த்திருக்கிறான். மறுநாள் குறிக்கப்பட்டிருந்த திலோத்தமாவின் மணத்திற்காகத்தயாரிக்கப்படும் உயர்ந்த பலகாரங்களை கங்காதரனுக்காக எடுத்துக்கொண்டு, அவனிடம் வந்து சிறிதுநேரம் கொஞ்சிக் குலாவியிருந்துவிட்டுப் போகவெண்ணி மாலினி வருகிறாள். வந்தவள் அன்பொழுக அவனுடன் உரையாடவும், பலகாரத்தை அவன் வாயில் ஊட்டவும் முயல்கிறாள். அவன் பிணங்கி, அவளைவெறுத்து தூஷித்து, பலகாரமும் அவளுடைய நட்பும் தனக்குத் தேவையில்லையென்று கடுமையாய்க் கூறுகிறான். இன்னம் சில நாட்களில் தமது மணத்தை நிறைவேற்றநினைத்திருந்தவளாதலின், அச்சொல்லைக் கேட்ட மாலினி பெரிதும் கலக்கமும், ஏக்கமுங்கொண்டு, அவன் அவ்வாறு புதுமையாய்ப் பேசும்படி தான் செய்த பிழையென்னவென்று கேட்கிறாள். தான் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளப் பொருள் தேடுவதே கடினமாயிருப்பதால், தான் ஒருத்தியை மணந்துகொண்டால் மனைவிக்கும் ஆகாரம் தேடிப்போடுவது தன்னால் இயலாதென்றும், அதனால் தனக்கு மணமே தேவையில்லையென்றும் கூறுகிறான். அவள், தான் பெருவயிறு படைத்த அரக்கியல்லவென்றும், அவனுக்கும் தனக்கும் வேண்டிய எல்லாவற்றையும் தானே தேடித் தருவதாயும், அவன் தன்னுடன் எப்போதும் சந்தோஷமாக சரசசல்லாபம் செய்திருப்பதே போதுமென்றும் அவள் கூறுகிறாள். அவன், பொருள்தேடமாட்டாத சோம்பேறிகளே, பெண்களின் தயவால் பிழைப்பவரென்றும், தான் அவளுக்குக் கீழ்ப்

பட்டிருக்க விரும்பவில்லையென்றும், தன்னை மணக்கும் பெண், தன் வீட்டைவிட்டு வெளியில் போகாத நற்குணவதியாயிருத்தல் வேண்டுமென்றும் கூறுகிறான். அவள், தான் அப்படியே வீட்டிலிருப்பதாய்க் கூறி, அவனுக்கு எவ்வளவு பொருள் தேவையென்றும், அவன் பொருட்டு தான் என்ன செய்ய வேண்டுமென்றும் கேட்கிறாள். அவன் தனக்கு இருபதினாயிரம் பொன் வேண்டுமென்றும், தான் சொல்லும் விதம் அவள் செய்தால் அன்றிரவிற்குள் அந்தத்தொகையை சம்பாதித்துவிடலா மென்றும் கூறுகிறான். அவள் அவ்வளவு பெருத்த தொகையை ஒழுங்கான நெறியில் ஒரு இரவிற்குள் சம்பாதித்தல் எப்படிக் கூடுமென்று கேட்கிறாள். அவன் உடனே, விஷங் கலந்த மருந்தை அவளிடம்காட்டி, அதைத் திலோத்தமா அருந்தும் பாலில் கலந்துவிடும்படி வேண்டுகிறான். அதை விஷமென்று நினைத்த மாலினி பெரிதும் அச்சமும், அருவருப்புமடைந்து, தன தருமைத் தலைவியான திலோத்தமாவைக் கொல்லத் தன் உயிர் போவதாயினும் தான் இணங்கேனென்று கூறி மறுக்கிறாள். அவன் அது விஷமன்றெனவும், வசியமருந்தெனவும், விக்ரமனிடம் திலோத்தமா மிகவும் வெறுப்பைக் கொண்டிருப்பதால், அதை மாற்றி, அவன்மீது அவள் காதல் கொள்ளும்படி செய்யவே அது கொடுக்கப்படுவதாயும் உறுதி கூறுகிறான். அவள், அதை உண்மையென நம்பி அதற்கிணங்கி மருந்தை வாங்கிக் கொண்டு செல்கிறாள்.)

இடம்:—அரண்மனையில் ஒரு தனி விடுதி; குதிரைத் தலைவன் கங்காதரனும் காலாள்களின் தலைவன் **கமலநாதனும்** வசனிக்கின்றனர்.

கங்காதரன் :—மாரனுக் கிணைசொலும் மனிதரிப் பூமியில்
யாரெனு மிருப்பரோ! யாதே யவன்விதி!
பணிமக னாயினும் அணியிலோ மாரவேள்!
குணமுமொ ழுக்கமுங் கூறிடற் பாலவோ!
இனிமையே வடிவினன்! எண்ணிலா நன்மையன்!
தனியெழில் சுமந்தவன்! தனையெவர் காணினும்
காதலை யுதவிடுங் கட்டழ கெய்தியோன்!
சாதலு நிகழ்ந்ததே! சகித்திடற் பாலதோ!
இம்மனை செறிந்தவ ரெண்ணிலா மக்களும்
தம்வினை விடுத்தனர் தவித்தனர் துயரினால்.

எங்கணும் விசனமே பொங்கிய தாசனைத்
தூற்றின ரனைவரும் துட்டனென் றெள்கினர்.

கமலநாதன்:—எவரே யாயினும் என்றேனுந் தன்னெறி
தவறா யொழுகினாற் சங்கட மேயுறும்.
கேவல மிழிந்தவோ ரேவலன் தானெனல்
முற்றிலும் மறந்தனன்; கொற்றவ னண்டையில்
பதுமினி மீதிவன் மிதமிலா மையலால்
பகலெனும் இரவெனும் பாரா தெங்கணும்
பாங்கரிற் கொண்டதாற் பணிமகள் சோலிகள்
நடைபெறா திருந்தன; நாளெலாங் கலவியில்
வீழ்ந்து கிடந்ததால் வேந்தனே கண்டனன்.
சிறுபிழை யோவது? சேவகர்க் குரியதோ?
பெருந்தகை மன்னனைத் துரும்பென வெண்ணினன்.
சிறுக்கியின் மையலாற் செருக்கே கொண்டுதன்
கீழ்நிலை மறந்ததால் வாழ்நிலை யற்றது.
தன்வினை யேதனைத் தாக்கிய ழித்தது.
யாரென் செய்குவர்? மாரனைப் போலவே
நீயு மங்ஙனே தீயவோர் நெறியினிற்
போதலைக் காண்கிறேன்; காதலால் மானிடர்
தீமைகள் பெறுவது திண்ணமே யாதலின்
எச்சரிப் பாகநீ இனியெனு மொழுகுவாய்.
நிச்சய முனக்கும் நீங்காத் தீங்குறும்.

கங்கா:—என்னே இங்ஙனம் சொன்னாய் நண்பனே!
எனக்குந் தீங்குற வெப்பிழை புரிந்தேன்?

கமல:—என்னடா பையலே! என்னையே மாற்ற நீ
நினைப்பது முறையோ? நினக்கிது தகையதோ?
இரகசிய மியாவையு மறிகுவே னென்வயின்
மறைக்க முயலலின் சிறுக்கியர் நட்பினைத்
துறக்க விரைவையேற் சொல்லொணா நன்மையாம்.
சீற்றப் புலியையும் திண்டிறல் நஞ்சையும்
ஆற்றையும் புயலையுங் கூற்றையு நம்பலாம்.
துயிலையு டுத்திய தோகையை நம்புவோர்

தேம்புவர் சந்ததஞ் சாம்புவர் துயரினால்.
மாலினி யின்தொடர் பாலுனக் கெத்தகை
யலக்கண் தோன்றுமோ? விலக்குவா யவளை நீ.
வீணே தீங்கினைப் பூணுதல் மதியோ!
ஆய்ந்தோய்த் தொழுகினால் மாய்ந்திடா திருப்பாய்.

கங்கா:—நன்றே சொற்றனை! நவின்றனை விந்தையே!
உயிருடல் போலயா மொருவர்மீ தொருவர்
காதலை யடைந்தனம்; கோதைமா லினிதனை
நீக்கநி னைக்குமுன் போக்குவே னென்னுயிர்.
கூடிய வெம்மன நாடிய திருமணம்
புரியநி னைத்தனம்; புனிதையின் தாதையும்
சம்மதி யீந்தனர்; இம்மதி போமுனம்
வதுவையும் முடிவுறும்; வம்பே திதனால்?

கமல:—கோமான் சீற்றங் கொளாவித மொழுங்கிற்
புரிந்தாற் சிறிதும் பொல்லாங் கிலதாம்.
பலியா வினைகளும் பலிப்பன போல
முதலிற் றோன்றுமா லதனால் மகிழ்வர்.
எண்ணாத் திண்ணிய வின்னா வந்துறும்;
தூக்கிச் செய்குவோர் நோக்க மெய்துவர்.
மாரன் கதிதனைப் பாருனக் கதுவாம்.

கங்கா:—என்னையே னத்தகை யிடுக்கண் பற்றிடும்?
என்றனை விடுத்திதோ சென்றனள் மாலினி.
கோவின் மனைவியாங் கோமள தேவிபால்
மணத்திற் கநுமதி கணத்திற் பெற்றிவண்
தோன்றுவள் கிள்ளையே போன்றவென் மாமணி.

கமல:—என்னே யதிசயம்! எத்தகை இரகசியம்!
நிகழ்ந்தவை யனைத்தையு நிகழ்த்தா தென்பால்
இதுவரை மறைத்தனை எத்தகை வஞ்சகம்!
முதியவ னென்வயின் மொழிந்தா லுண்மையை
சங்கட முறுமெனச் சங்கையிற் கொண்டையோ?
கங்கா:—எத்தகை வினையையு மிறுதியிற் கூறலே
நிரம்பவு மாண்மையாம்; நிறைவே றுமுனம்

கூறிடிற் பலவிடை யூறுகள் தோன்றுமால்
முற்றிய பின்னரே சொற்றிட வெண்ணினேன்.
(மாலினி சற்று தூரத்தில் வருகிறாள்

கமல:—மாலினி வந்தனள்; மறைவிற் செல்கிறேன்;
ஆசைக் காதலி பேசிடு மொழிகளை
முற்றினு நீயே பெற்றின் பெய்துவாய்;
விரைவில் மணத்தின் விருந்தெனக் களிப்பீர்.
(கமலாகரன் போய்விடுகிறான்.)

கங்கா: (தனக்குள் நினைக்கிறான்.)
அணுவெனும் பிரியா வன்றிலை யொப்பவே
இணையிலா வன்புட னிம்மூ வாண்டுகள்
விரும்பியே உயிரென விழைந்தன னென்றனை.
கரும்பினும் சுவைமிகு கனிமொழி மடவரல்
என்றனை மணத்தலே இந்திர போகமாய்க்
கொண்டன ளதற்குக் கோமள தேவியின்
அநுமதி கிடைக்குமே லரைநொடி தரியாள்.
விக்ரமன் பணித்த வினையையான் முடித்திடத்
தக்கவ ளிவளே; தவறா ளிவள்வயின்
தந்திரம் புரிவேன், தக்கன செய்குவேன்.

மாலினி:—(புன்முறுவல் செய்து.)
எந்நக ரரணைநீ ரிடித்திட யோசனை?
என்னையுந் துணையென வேற்றிடல் தகாதோ?

கங்கா:—(வெறுப்போடு பிணங்கி)
அறிவேன் அறிவேன் அனைத்தையு மறிவேன்;
உன்றன் குணத்தையா னுள்ளவா றுணர்வேன்.
என்றனை மயக்கிட எப்பெரும் பகட்டு!
வாயின் பந்தர்; வாயுவின் மூட்டை.
கேட்பதை ஈவையோ? கிளப்பது புரிவையோ?

மாலினி:—(திடுக்கிட்டு ஏக்கங்கொண்டு)
ஐயமேன்? இத்துணை யாண்டுகள் கூடியும்
தையலென் னுளத்தின் தன்மைய றிந்திலீர்.

ஆவியே கோரினும் ஈவேன் திண்ணமே.
எத்தகை வினைகளை இயற்றவி ரும்பினும்
சத்திய மதையான் சரிவறப் புரிகுவேன்.
சோதனை பார்த்தென் காதலை யுணரலாம்.
(அருகில் உட்கார்ந்து)
இங்ஙன நோக்குவீர்; இனியபல் லுண்டிகள்
மங்கைதி லோத்தமை மணத்திற் கியற்றின.
சுவையும் மணமும் சுகமும் கமழும்
இவைதமை யீங்குள வீசனுக் களித்து
நிவேதனம் புரிந்திட நினைத்துக் கொணர்ந்தேன்.
என்மனப் பத்தியைப் புன்மையாய் மதித்திக்
கன்மனக் கடவுளார் கருதிடா தென்வயின்
முனிவே கொண்டனர்; மொழிந்தனர் கடுமையாய்.
சொற்பமுட் கொண்டிதன் சுவைதனை நோக்குவீர்.
(பலகாரத்தை ஊட்ட முயல்கிறாள்).

கங்கா:—(முனிவோடு)
வேண்டேன் தின்பன; வேண்டேன் உன்னையும்;
தீண்டேன் இனியுனை; தெற்றன வென்றனைத்
தனிமையில் விடுத்துநீ தயைபுரிந் தேகுவாய்.
நனிபல உண்டிகள் நல்குதல் போலாம்.

மாலினி:—(அன்பும் உருக்கமும் ததும்ப)
ஓகோ! என்னையும் உம்முளம் வெறுத்ததோ!
சாகா முன்னமிச் சன்னிதி விடுத்துயான்
போவே னெனநீர் புந்தியில் நினையீர்;
கோவெனு மென்மயல் கொன்றிட லாகுமோ?
என்றெனு முயிருட லிரண்டாய் வாழ்ந்தவோ?
நன்றினி மணந்துயா நன்மைகள் திளைத்துத்
கணமிணை பிரியாக் காலங் கழித்திட
அணுகிய தருணத் தமங்கல வசனம்
மொழிந்திட லழகோ; முன்னமி துண்ணுவீர்.
(திரும்பவும் ஊட்ட முயல்கிறாள்.)

கங்கா:—ஏனெனை வதைக்கிறாய்? என்வரு வாயினால்
யானெனைத் தாங்கலே யாற்றா துழல்கிறேன்.

நின்னையு மணந்தா லின்னொரு வயிற்றுக்
கெங்ஙனந் தேடுவேன்; ஏலா தென்றால்.

மாலினி:—குன்றென வுண்டியைக் குவித்துவி ழுங்குவே
னென்றெனை யாக்கியென் றெண்ணினீர் விந்தையே!
இத்தகை யச்சமே னென்பா லுதித்தது?
எத்தகைப் பொருளையு மீவே னுமக்கியான்.
இருவருக் குரியன ஈட்டலென் பொறையாம்;
இணைபிரி யாதிருந் திரவிலும் பகலிலும்
களிகொடு வாழலே கருதினே னாதலின்
கவலுதல் விடுப்பீர்; காப்பே னும்மையான்.

கங்கா:—செயலிலாப் பதர்களே திறனிலா தரிவையர்
தயவிலே வாழ்ந்திடல் சங்கையிற் கொள்ளுவர்.
நாணிலாப் பஞ்சையே நங்கையர்க் கடியனாய்
ஆணிலாப் பேடிபோல் யாக்கைவ ளர்ப்பவன்;
கண்டதே காட்சியாய்க் காமத் தழுந்திக்
கொண்டதே கோலமாய்க் கூசா திருந்து
நாரியர்க் கின்பமே நல்குமோர் கருவியாய்ப்
பாரிலி ருத்தலிற் பாழ்நர கினிய தாம்.
மணந்தால், நாயகன் மனைவிடத் தகலாக்
குணந்தான் தேவையாற் கொள்ளே னுன்னையான்.

மாலினி:—(மிக்க வருந்தி)
எங்ஙன மொழுகுதல் நுந்தமக் கிச்சையோ
அங்ஙன மொழுகுவே னயல்மனை நாடேன்.

கங்கா:—மனைவியைப் போற்றலும் மற்றவட் குரியபல்
லுணவுகள் முதலிய உதவிடந் தேவையாம்
பொருளையான் தேடியே பூவையை மணப்பேன்.

மாலினி:—எத்தனை பொன்களை ஈட்டுதல் கருதினீர்?

கங்கா:—இருபதி னாயிரம் இருந்தால் மணப்பேன்.

மாலினி:—என்னே அதிசயம்! எம்மா லப்பெரும்
பொன்னைக் குவித்திடப் போதுமோ யுகமெனும்?

கங்கா:—நினைத்தா லெத்தகை வினைதா னரியதாம்;
மனத்தா லெண்ணினாற் கணத்திலே யீட்டலாம்.
என்றன் விருப்பிற் கிணங்கி நடப்பையேல்
இன்றை யிரவிலே எண்ணிய பொருட்டிரள்
குன்றென மனையிற் குவிவது நிச்சயம்.
காலையி விருவரும் கடிமண முடித்தினி
மாலையுந் திருவையும் போலவின் பெய்தலாம்.
சொல்வதை மறுப்பையேற், சொன்னவா மணக்கச்
செல்லுமோர் பெருயுகம் செத்தபின் மணப்போம்.

மாலினி:—(புன்முறுவலொடு)
எம்சிறு திறமைக் கேலாப் பெரும்பொருள்
செம்மை நெறியினில் தேடவோர் கங்குலும்
போதுமோ? கொடியவோர் பொல்லா வினைபுரிந்
தேதமார் நெறியிலே ஈட்டுத லெண்ணமோ?

கங்கா:—(முனிவடைந்து)
நன்றே சொற்றனை! நமதிரு மனமும்
ஒன்றா வென்றும்; உனதுளம் தூயது.
புண்ணிய நெறியிலே போகும் புனிதை நீ
கண்ணியம் பெற்றவள் கருதாள் என்றனை.
மனதிற் குகந்தவன் மற்றொரு புருடனை
இனிநீ நாடுவாய்; எழுந்துட னகலுவாய்.
(தள்ளுகிறான்; அவள் கீழே வீழ்ந்தெழுகிறாள்.

மாலினி:—(பொறுமையும் அன்பும் பொலிய)
என்னே புதுமை! எப்பிழை புரிந்தேன்?
சொன்னா லல்லவோ சொற்படி யொழுகுவேன்.
கண்டென நீவிரோர் கனிமொழி கூறுவீ
ரென்றுமி ருவருஞ் சின்னா ழிகையெனும்
மகிழ்வொடு குலாவிமெய்ம் மறந்திவ ணிருக்கவும்
மிகவிழைந் திங்ஙன மேகுமென் மாட்டுநீர்
அரவெனச் சீறலு மன்பிலாக் கடுமொழி
தருதலு மடுக்குமோ?' தவறா தியற்றெனப்
பணிப்பீ ரேலதைப் பணிவொடு முடிப்பேன்;

ஐயமே னெதையா னாகா தென்றேன்?
வெய்யம னத்தொடு வேண்டா மென்றனை
விலக்குவ தாகநீர் விளம்பிய சொற்களே
கலக்கின வென்னுளம்; காதைத் துளைத்தன.
வேண்டே னென்னுமவ் வெறுப்புறு மொழிதனை
வேண்டார் மாட்டே விடுப்பது தகுதியால்
என்வயி னிங்ஙன மியம்புதல் சகியேன்.
கங்கா:—உரைப்பது புரிவையோ? உறுதிநீ தருதியோ?
சிரத்தினி லடிப்பையோ? செய்வதெ தற்கெனக்
காரணங் கருதா தறைவது புரிவையோ?
மாலினி:—கூறுவ புரிவேன்; மாறேன் சத்தியம்.
(சிரத்திலடித்து உறுதி கூறுகிறாள்.)
கங்கா:—வேறொரு கருமமும் விரும்பினே னல்லேன்.
பாரிதோ மருந்தைநீ பதறா திரவில்நந்
திலோத்தமை யருந்திடுந் தீம்பா லோடிதைக்
கூட்டி யின்றிரவே கொடுப்பாய் மறைவினில்.

மாலினி:—(கவலை கொண்டு)
நன்றே கூறினீர்! நாயகி யாருயிர்
கொன்றோ பெரும்பொருள் குவிப்பது கருதினீர்?
இம்மொழி கேட்குமோ என்செவி நொடியெனும்?
அம்மையே மடிந்தபி னடியே னுய்வெனோ?
என்னுயிர் குடித்துநீ ரிவ்வினை புரியலாம்.

கங்கா:—மெச்சினேன் மெச்சினேன்! வெள்ளையே நின்மதி!
இச்செக மதிலுனக் கிணையெவர் புத்தியில்!
“விஷமென”க் “கொல்”லென விளம்பினே னோயான்?
மடமையே யல்லவோ மடவரற் கணிகலம்.
விக்ரம வண்ணலை விடிந்தால் மணந்திடப்
போகுமப் பூவையைப் போக்க நினைப்பரோ?
மணமகன் வயினம் மங்கையாள் சிறிதெனும்
குணமுள தெனவே கொண்டிலள். அவர்தமை
விடமென வெறுத்தனள். வேண்டே னென்றனள்.
மடமையே பூண்டனள்; மனந்தனை மாற்றவும்
அத்தான் மாட்டெழு பற்றொடு காதலை

வைத்தே மன்றலை மகிழ்வொடு கொள்ளவும்
புரிந்திடு வசீகர மருந்தே யாமிது.
நன்மையே கருதினோம் நங்கையாட் கெத்தகை
யின்னலு மிதனா லெழாதது நிச்சயம்.

மாலினி:—வாய்மையோ இப்பொருள் வசியம ருந்தெனல்?
மாய்க்கும் நஞ்சிலா மருந்தென லுறுதியோ?
அன்னார் மெல்லிய யாக்கையி லெத்தகை
யின்னா வுதவா திருக்குமோ கூறுக.

கங்கா:—என்னே பேதைமை! எந்நினை வெய்தினை!
வண்டரே துணியுமக் கண்டகச் செய்கையை
நின்பா லுரைப்பெனோ? என்மன மிசையுமோ?
விடிந்தால் திருமணம்; விரும்பிய வாறது
முடிந்தா லினியபல் லுண்டிக ளென்வயின்
கொள்ளை கொள்ளையாய்க் கொடுப்பாய் மகிழ்வோடு;
இன்றுநீ கொணர்ந்தவை எங்கே? எடுப்பாய்;
நன்றா யுளதே! நறுமணங் கமழ்ந்ததே!

(அவளது கையிலிருந்த பலகாரத்தைப் பிடுங்கித்தின்கிறான். அவள் தன்னைமறந்து அவனை அணைகிறாள்.)

உன்சுவை தன்னிலும் உயர்ந்தசிற் றுண்டியோ?
பெண்மணி நின்னையான் பிரிவேனோ நொடியெனும்?

(அவளை அணைத்து முத்தமிடுகிறான்.)

மாலினி:—(இன்பத்தி லீடுபட்டு)
என்பெரு மாட்டியார்க் கெத்தகை யிடும்பையுந்
துன்பமு மில்லையே லுரைத்தவா புரிகுவேன்.
கங்கா:—ஒருசிறு தீங்கெனு முறாதது சத்தியம்!
சிரமீ தடித்துச் செப்புவே னுறுதியாய்.
ஆயினு மெவரு மறிந்திடா வகையி
லேயிது புரிவையே லெண்ணிய பலிதமாம்.
மாலினி:—என்திற னறியா அன்னியர் போலநீர்
தந்திர முரைத்திட வந்தது விந்தையே!
கொடுப்பீர் மருந்தையான் முடிப்பே னித்தினம்.

(மருந்தை வாங்கி வைத்துக்கொள்கிறாள்.)

கங்கா:—(புன்முறுவல் கொண்டு)
மறதியாய் நீயே மருந்திதை யுண்பையேல்
அறுதியாய் நின்மன வாதா முற்றிலும்
விக்ரன் மீதே விரைவில் திரும்புமால்
பக்குவ மாயிதைப் பாலிற் புகுத்துவாய்.

மாலினி:—கண்டிலும் பாகினும் கரும்பினும் மிகுசுவை
கொண்டவென் னாருயிர்க் கோமளாங் கா! உமை
யன்றியோர் புருடனை யகத்திலு நினைப்பெனோ!
முனியா தென்னொடு முற்றிலு மின்பமாய்த்
தினநீ யிருந்திடச் செய்யுமோர் வசீகர
மருந்திற் சிறிதெனக் களித்தா லினியான்
வருந்திடா துய்வேன் வாணாள் முற்றிலும்.

கங்கா:—அன்பே! மாலினி! அரியநின் காதலும்
என்பால் நிறுத்திய ஈடிலா உருக்கமும்
இணைபெறா நின்னெழி லெண்ணிலா நற்குணம்
கணமெனு மகன்றிடா ஆனன மலர்ச்சியும்
வலிதினும் வலியவோர் வசீகர மருந்தாய்ப்
பொலியவென் மனதைநீ புதியவோர் மருந்தினால்
மயக்கிடல் வேண்டுமோ? மாற்றிலா நன்மணி!
நாழிகை யானது; நான்பெயர் கின்றேன்;
நாளைக் கிருபதி னாயிரம் பெறுவாய்;
மறுநாள் மணப்பேன்; மாசுக மடைகுவாய்.

மாலினி:—இனியேன் கவலுதல்? எவின முற்றுவேன்;
இனியோன் பொருட்டெவ் வினைதான் செய்திடேன்!
(கட்டியணைத்துப் பிரிந்து போகின்றனர்.)

(காட்சியின் முடிவு.)

6-வது காட்சி

(சுருக்கம்:—ஏவலர் மாரனை ஆரணியத்தில் நெடுந்தூரத்திற் கப்பாற் கொண்டுபோய் வெட்ட முயல்கின்றனர். அதைக் கண்ட மாரன் திகைத்து, வீரன் கடைசியாகக் கூறியபடி ஏன் செய்யவில்லையென்று கேட்கிறான். வீரன் வேண்டியபடி, ஒரே வெட்டில் கொல்லப் போவதாக ஏவலர் கூறுகின்றனர். முன்னிலும் அதிகம் திகைத்த மாரன் அவ்விடத்தில் மண்டபமொன்றிருப்பதாயும் அதில் தன்னை அவர்கள் உயிருடன் விடுவதாக வாக்களித்ததாயும் வீரன் சொன்னானென்கிறான். அதைக் கேட்ட ஏவலர் நகைத்து, தாம் அவ்வாறு வாக்களிக்கவில்லையென்று கூறித் தமது அலுவலைச் செய்யவாரம்பிக்கின்றனர். வீரன் சொன்னது உண்மையோ, அன்றி, அவர்கள் சொல்வது உண்மையோ என்று மாரன் ஐயமுற்றுக் கலங்கித் தன்னை மறந்து தனது மந்திரி குமாரனை மகிபதி அவ்வாறு செய்வனோ வென்றும், தஞ்சையிலிருக்கும் தன் பெற்றோர் தான் இறந்ததால் எவ்வாறு வருந்துவரோ வென்றும் அன்றிரவில் அங்கு தோன்றும் திலோத்தமா தன் சவத்தைக் கண்டு எவ்வாறு விசனிப்பாளோ வென்றும் வாய்விட்டுப் பிதற்றுகின்றனன். அதைக்கேட்ட ஏவலர் அவனது வரலாற்றைக் கேட்டறிந்து, அவனை உயிருடன் விட்டு விடுகின்றனர். பிறகு அவன் அவர்களிடம் தன் முத்திரை மோதிரமும் ஒரு ஓலையும் கொடுத்து தஞ்சைக்குப் போய் மந்திரியிடம் கொடுத்தால், அவர் உடனே இருவரையும் பெருந்தனவந்தராக்குவாரென்று கூறியனுப்பி விட்டுத், திலோத்தமா இரவில் அவ்வளவு தூரம் வந்து தத்தளிக்காமல் அவள் புறப்படும்போதே அரண்மனைச் சோலையிற் கண்டு, அவளது ஆவலைத் தீர்க்க நினைத்து காஞ்சி மாநகரை நோக்கி நடந்து மாலையில் அங்கு சென்று இரவில் சோலைக்குட் புகுந்து மறைந்திருக்கிறான்.)

கோடிய ஆரணியம்; மாரனும் ஏவலரும்.

முதல் ஏவலன்:—

வந்தது போதும்; இந்தவி டத்திலே
வேலையை முடித்து, வீட்டைய டைகுவோம்.

இரண்டாம் ஏவலன்:—

கையையுங் காலையும் கட்டிய ணைத்திவ
னையா விதத்திலே யடக்கிநான் பிடிப்பேன்.
விசையாய் நீயே வெட்டித் தள்ளுவாய்,
நல்லஇம் மனிசனை நானொரு காலமும்
கொல்லவும் மாட்டேன் உள்ளமும் பொறாது.

மு. ஏ:—

பொல்லா மனிசனோ, நல்ல மனிசனோ
எல்லாம் ராசா இட்டதே சட்டம்.
கூலிக் காரியேன் தாலிய றுக்கிறாள்?
மாரா! இங்ஙனே வாராய் உன்னைநாம்
கொல்லு மிடமிதே; நில்லடா குனிந்து.

மாரன்—(திகைத்து)

மண்டப மின்னமும் வரக்காண் கிலெனே!

இ. ஏ:—(ஏளனமாக)

சிங்கமும் புலியும் தங்கிய காட்டிலே
மண்டப மியற்றி வைப்போ ரியாவர்?
வருவான் மாரனென் றறிவா ராயின்
சோலையும் மாடமும் சுகமே யமைத்ததிற்
பதுமினிப் பெண்ணையும் பக்கத் திருத்துவர்.

மு, ஏ:—

பித்தமா உனக்கு? பேய்பிடித் தாட்டுதா?
சாகிற வேளையில் சங்கரா வென்றால்
போகும் வழிக்கது புண்ணிய மாகும்.
மண்டப மென்னடா மனைவியா மக்களா?
கண்டால் அதனால் கருமந் தொலையுமா?

மாரன்—(தனக்குள்)

மண்டப மிருப்பதாய் விண்டது கனவோ!
விந்தையே யிஃது! விளங்கா விநோதமே!
இங்குள மண்டபத் தெனையிவ ருயிரொடு
தங்கவி டுவதாய்ச் சாற்றிய வீரனைப்

பொய்யனென் றெண்ணவோ? புகன்றது மில்லையோ!
கைகால் விலங்கினாற் கட்டிப் பிணைத்துளார்.
விடுவது கருதுவோர் விலக்கா திருப்பரோ?
முடிவதை யுணர்கிலேன்; முழுமுதற் கடவுளே!
உன்றுணை யன்றியோ ருறுதுணை பெற்றிலேன்.

இ. ஏ:—வெட்டப் போவதா விட்டமே தாயினும்
இருந்தாற் சொல்லலாம்; வருந்துதல் வீணே.

மாரன்:—வீரன் கோரிய வேண்டுகோ ளென்னும்?

மு. ஏ:—வீரன் விரும்பிய விதமே செய்வோம்.
சின்னவ ராயினும் சொன்னதில் தவறோம்;
நிலையிலே நின்றுன் தலையைநீ நீட்டுவாய்.

மாரன்:—சொன்னவா புரிந்திட வெண்ணுக லுண்மையேல்
சென்னியை நீட்டும் செய்தி யெதற்கு?

மு. ஏ:—ஒன்றே வீச்சில் உன்னுயிர் கொன்றிட.

மு. ஏ:—மாரன் வேறெதைக் கூறினா னுனக்கு?

மாரன்:—இங்குள மண்டபத் தெனைநீ ருயிரொடு
தங்க விடுவதாய்ச் சங்கதி கூறினன்.

மு. ஏ:—எத்தகைத் திறமை! ஏய்க்கப் பார்த்தையோ!
சுத்த மடையனென் றெத்தநி னைத்தையோ?

இ. ஏ:—விந்தையா இருக்குதே இந்த உன் சங்கதி!
ஒன்றே வீச்சில் உன்தலை போக்க நீ
விரும்பினா யென்றவன் வேண்டினா னெங்களை;
கொல்லவே கோரினன் பொல்லாக் கொடியவன்.

மாரன்:—(திகைத்துக் கலங்கி)
அன்னா னிங்ஙன மறைவனோ கனவிலும்!
மந்திரி புதல்வனா மாருயிர் மகிபதி
தந்திடற் குரியதோ தகைவிலா விம்மொழி!
விந்தையின் விந்தையே! என்னுயிர் மித்திரன்

சிந்தையி லிக்கொடுந் தீமைநி னைப்பனோ!
இவர்வயி னென்னையும் என்பாற் பிறிதையும்
அவனொரு காலமு மறைந்திரா னுறுதியே!
இவ்விரு பணிஞரே இழிமனம் பெற்றவர்.
பொய்ம்மொழி கூறிடும் புன்மைசேர் குணத்தினர்.
சூதுபு கன்றனர்; சுந்தர மடந்தையின்
போதுநே ரானனம் காணுமுன் புவியைநான்
போக்கநி கழ்ந்ததே! நீக்கினு மகலுமோ!
தேக்கிய மனங்கொளா வேட்கையோ டிங்ஙனம்
போமவள் என்சவம் நோக்கப் பொறுப்பளோ?
வாமக் களஞ்சியம் வகிப்பளோ தன்னுயிர்!
எத்தகை வேளையிற் பாவியே னென்முகம்
உத்தமி நோக்கின ளோவதை யறிகிலேன்?
என்முகம் காணா திருப்பளே லித்தகைத்
துன்பமு மல்லலுந் தொலையாத் துயரமும்
வந்திரா வல்லவோ! வாஞ்சையே வடிவெனும்
எந்தையும் யாயுமென் னிழவினை யெங்ஙனம்
மறந்திட லாற்றுவர்! அறைகுந ரிலரே!
ஊட்டிவ ளர்த்தொரு நொடிபிரி யாதுசீ
ராட்டியன் பாதரங் காட்டிவ ளர்த்தவர்
இப்பெரு மிழவினை எங்ஙனந் தாங்குவர்!

இ. ஏ:—(முதல் ஏவலனை நோக்கி மெல்ல)
விந்தையைக் கேட்டையா? வீரன் இவனது
மந்திரி மகனும்; மகிபதி யாம் பெயர்.
பெரியவி டத்திய பிள்ளையா மிவனெனக்
சொன்னதை மறுத்தையே! சுத்த மடையனீ!

மு. ஏ:—எல்லாம் பகட்டடா; இவனோ பெரியவன்?
இ. ஏ:—மூடரின் புத்தியே! முழுதுமி ருந்ததே!
சாடைகள் காட்டினும் மூடனுக் கெட்டுமோ!
(மாரனை நோக்கி)

மாரா! என்னிடம் கூறாய் உனது
பெற்றோர் இருப்பெது? பெயர்வி வரங்களை
விளங்கக் கூறினால் விளம்புவோம் செய்தியை

மாரன்:—அன்னார் தொலைதூ ரந்தனி லிருப்போர்;
சொன்னா லவர்நிலை சொற்பமு நம்பீர்.

மு. எ.—எத்தனை பீடிகை! எல்லாம் வேசம்!

இ. எ.:—இறக்கும் நிலைமையி லெவனடா புளுகுவன்!
உரைக்கும் யாவும் உண்மையே யாகும்.
(மாரனை நோக்கி)
சொல்லுவா யெம்மிட மெல்லா விவரமும்

மாரன்:—என்னென உரைப்பே னென்கொடு நிலைமையை!
நன்மைகூர் மனத்தின னாதலி னுன்பாற்
சொல்லா திருக்கத் துணிந்திலேன்; எம்பதி
தஞ்சைமா நகரென் தந்தையார் சோழரே.
வந்தஇவ் வீரனென் மந்திரி புத்திரன்;
மாற்றாருக் கொடியாம் அகன்றன மெம்பதி;
கூற்றினை யழைக்கயா முற்றன மிந்நகர்;
இத்தகை விபத்தெனக் கெய்திய தரசனால்;
சித்தமி ரங்கினீர் செய்திட விணங்கினால்
உம்பால் வரைந்தோ ரோலையான் கொடுப்பேன்;
அன்பா லதையென் னையனுக் குதவுவீர்.

இ. ஏ:—அதிசயங் கேட்டையா? யாரென அறிந்தையா?
சற்றெனும் பொறுத்தாற் குற்றம் வந்திடும்.

மு. ஏ:—ஆத்திரப் படாதே! யாரென ஆய்ந்து
பார்த்துச் செய்யடா பதற்றம் கெட்டது.

இ. ஏ.—(பதை பதைத்து)
மூடப் பையலே! மூடடா வாயைநீ
நீக்கடா விலங்கெலாம் நின்று லுதைப்பேன்.
(இருவரும் விலங்குகளை நீக்குகின்றனர்.)

இ. ஏ:—(கை குவித்து வணங்கி)
அரசிளங் குமாரரே! அறியாச் சிறியோம்
பிழையும் பாவமும் இழைத்தோம் பலவாய்.
அரசன தேவலைப் புரிந்திடு மேழைகள்.

மன்னிப் பீரெமை! இந்நகர் விடுத்துடன்
செல்வோம் தஞ்சையில் சேர்ப்போம் உந்தமை,

மாரன்:—(பெருமகிழ்ச்சி யடைந்து)
இதுவுமுன் கருணையோ! ஈசனே யருளா
லுதவிய பேறிதோ? ஒப்பிலா நற்குணம்
பெற்றவென் னேயரீர்! பேருப காரிநீ
ரீந்தவிந் நன்மையா னென்றெனும் மறந்திடேன்;
உதவியின் மாண்பினுக் குரியவா றுமக்கியான்
வதிலொரு நாளிலே வழங்குதல் காணுவீர்.
இன்னமும் சின்னா ளிந்நகர் மறைவினில்,
உறைந்திட விரும்பினேன்; உடனே இருவரும்
விரைந்தென் றேய மெய்துவீர்; முத்திரை
மோதிரம் நல்குவே னோலையொன் றுதவுவேன்;
ஓதிய வெம்பதி யுட்புகுந் தமாத்தியர்
மாட்டவை யிரண்டையும் வைப்பீ ரக்கணம்
பெருத்த தனதாரம் பேற்றினை யடைகுவீர்.
சுகித்தவ ணிருப்பீர் துரையிலே தொடருவேம்.

இ. ஏ:—நீதியே இல்லா நீசன் நாடிது.
நாதியே எவரும் நமக்குமிங் கில்லையால்
இங்ஙனே இருந்து சங்கடப் படுதலில்
அங்ஙனே நடந்துநா மதிசுக மடையலாம்.

மு. ஏ:—குடிக்கக் கள்ளும், கூத்தியர் சிநேகமும்
கிடைக்குமோ அங்ஙனே? கிடைத்தாற் போகலாம்;

இ. ஏ:—குடிகள் ளாண்டவன் கூத்தியா மம்பிகை
அடிகளா மெந்தமக் ககப்படா வூரெது?
உயிருட லேயிலா வூரெது சொல்லுவாய்?

மாரன்:—மாந்தரின் வேட்கையே மடந்தைய ராசையோ!
ஏந்தெழில் மகளிரே எவரையு மியக்கும்
பம்பரக் கயிறோ? பாரோர் வணங்குப
ரம்பொரு ளவரோ? அம்பிகை யோவவர்!
சொன்னது மெய்யே! சூதிலா மொழியே!

என்னரு நண்பரே! எழில்பெறு மனைவியர்
இருவரை யுந்தமக் கீந்திட வரைகிறேன்.
விரைவிற் செல்லுமின் இறைவன் துணையொடு.
(வீரன் கொடுத்த எழுத்தாணியால் பனை ஓலை
யில் எழுதப்பட்ட கடிதமும் மோதிரமும்
பெறுகின்றனர்.)

இ. ஏ.—அண்ணலே! வந்தனம் அடியே மேகுவோம்.
இன்னலே யிலாம லீச னுந்தமைக்
காப்பா ரங்கசர் சேர்ப்பார் வெற்றியாய்.
(போகின்றனர்.)

மாரன்:—(தனிமையில்)
இத்தகை நல்லோ ரியம்பிய மெய்யோ!
மித்திரன் மகிபதி விளம்பிய மெய்யோ!
யாதோ உண்மையென் றறிந்திட லாற்றேன்.
ஏதோ தவறால் இத்தகை முரணிய
சங்கதி நிகழ்ந்தது தவறில ரிவரும்.
மங்கையை இக்கொடு வனம்புக விடுத்தல்
தீமையா மிரவில் திலோத்தமை இங்ஙனம்
போமுனஞ் சோலையிற் போயொளிந் திருப்பேன்.
இன்ப வல்லியை இரவினிற் கண்டவள்
துன்பமு மவள்பெருந் துயரமும் போக்குவேன்.
(செல்கிறான்.)

(காட்சியின் முடிவு.)

III அங்கம்.

1-வது காட்சி.

(சுருக்கம்:—வீரன் திலோத்தமாவிடம் சென்று மாரனது ஓலையைக் கொடுத்து, அவள் மனதைக் கலக்குகிறான். மாரனைப்பற்றிய எத்தகைய வரலாற்றையும் அறிந்துகொள்ளக் கூடாமையால் பெரிதும் வருந்தியிருந்த அப்பெண்மணி பதைபதைத்து அப்போதே மாரனிடம் செல்லவும் அவனைக் காணவும் ஆவல் கொள்ளுகிறாள். வீரன் தான் அன்றிரவு பத்து நாழிகைக்கு இரண்டு குதிரைகளுடன் பூங்காவில் காத்திருப்பதாயும் திலோத்தமா அங்குவரின் அவளைத் தானழைத்துப் போவதாயும் கூறுகிறான். அவள் அதற்கு இணங்குகிறாள்.) **திலோத்தமாவின் அந்தப்புர வாயிலில் வீரன் நிற்கிறான்.**

வீரன்:—(தனக்குள்)
விடிந்தால் திருமணம்! விருந்தினர் கடலென
மிடைந்தனர், செறிந்தனர்; இடமெலா மடைந்தது.
எள்ளெனும் வீழ்ந்திட இயலா வகைதனில்
வெள்ளமே போற்றலை விளங்கின எங்கணும்;
மகிழ்வொடு காலையிம் மணம்பெறு மிருவரும்
திகழ்தலா மப்பெருந் திப்பிய காட்சியைக்
கண்ணுறக் காணவுங் களியுடன் விருந்துகள்
உண்ணவும் வந்துள ஒப்பிலாத் தொகையின
ராகிய மாந்தரின் ஆசைகள் முற்றுமோ?
மோகன வல்லியின் முழுஅன் பெனதா
யாக்கநி னைத்தவென் னாசைப லிக்குமோ?
பாக்கிய முதவுமப் பங்கய முகத்திளம்
பூங்கொடி பெற்றுயான் போகுதல் முற்றுமோ?
ஏங்கிய தென்மனம்; எப்பொழு தின்றிர
வெய்துமோ வெனயான் வெய்துய ரடைந்தேன்.
செய்தது சிறியதாம்; செய்தற் கிருப்பன
பெருங்கூ றாகுமாற் பெருந்திற னவசியம்.
தந்திர மாகவித் தையலர் மணிதனை
இன்றிர வழைத்துயா னேகுவே னென்பதி.
மணப்பே ணிவளையோர் கணப்பொழு தாயினும்
பிரியா திருந்துயான் பேரின் பெய்துவேன்.
(திலோத்தமாவி னந்தப்புரத்தில் நுழைந்து
அவளை வணங்குகிறான்.)

வீரன்:—(மிகவும் விசனித்து)
அரசிளங் குமரியா மருந்தவ மணியே!
ரிபவம் போக்குக; பாங்கரி ருந்துமைக்

கடவுளே காத்தனர்; காரிய மங்ஙனம்
முடிந்தது; கவலுதல் முற்றவ கற்றுக.
நம்பினோர்க் கடியனா நாயக னினியுநுந்
துன்பெலாம் போக்குவன்; துயர்க்கடல் பருகுவன்.
தனிமையி னுரைதரத் தக்கவோர் செய்தியான்
புனிதைபா லியம்புவான் போந்தனே னிங்ஙனம்.
சித்தமே சட்டமாய்ச் செய்பவன் தமியேன்;
நத்திய தனிமைநீர் நல்குக வம்மையே!

திலோ:—தனிமையிற் செப்பிடத் தக்கவம் மறைபொருள்
இனியவென் மாலினிக் கியம்பொணாச் செய்தியோ?
அன்னவள் போதலு மவசிய மானதோ?

வீரன்:—நுங்கள்தி ருச்செவி நுகர்ந்தபின் னவள்வயின்
சங்கதி விரித்திடல் தகுமெனத் தோன்றுமேல்
அங்ஙனம் புரியலாம்; அவட்குமு ரைக்கலாம்.

மாலினி:—அன்னையே! அடியே னப்புறஞ் செல்வதாய்
முன்னமே வேண்டியான் மொழிந்துளேன் செய்தியை.

திலோ:—ஆயா முண்மையே! அகன்றுடன் மீளுவாய்.
(மாலினி வெளியிற் போகிறாள்.)

வீரனே! என்வயின் கூறவி ரும்புவ
தென்னென வாய்ந்தே னாயினு மென்மனம்
உண்மையா தோவென உணர்கிலா தாவலே
கொண்டதா லென்பாற் கூறுதி விரைந்துநீ.

வீரன்:—வாயா லதையான் வகுப்பதென் றாலதற்
கோயா விதமர் யுகமெலாம் பேசிட
வல்லமை பெற்றவோர் வாக்கே தேவையாம்.
கல்லாய் மனதும் கருணையி லாததாய்
மாறுத லவசியம்; மற்றதை யடியேன்
கூறுமுன் சாம்புவீர் கூக்குரல் புரிகுவீர்.
அழுவீர் விழுவீர் அரற்றிநீ ரேங்குவீர்;
எழுவீர் அரண்மனை விடுத்தே யேகுவீர்;

பதறா வினையே சிதறா தென்பரால்
எதையா மெய்தினு மெம்முள மடக்கியாம்
மதைமேற் கொள்ளலே மாந்தரி னுயர்வாம்.
வனிதையர்க் கரசியே! வருந்தேல்; பதறேல்.
தீங்கைவி லக்குமத் தெள்ளிய பாதையும்
நீங்காத் துயர்தனை நீக்குமோ ராற்றலும்
விளக்கமா மெந்தகை விபத்தையும் பெரியதாய்
வளர்க்கா நெறியிலே மனதை நடத்துமால்
இசைபெற வொழுகுவீர்; எண்ணிநீர் புரிகுவீர்.

திலோ:—(ஆவல் கொண்டு)
வேண்டா வென்றுநீ விளம்புமத் தீமைகள்
தாண்டா வெள்ளமாய்ச் சங்கையி லெழுதலால்
விரைவிற் சுருங்கநீ விளம்பலே மருந்தாம்.
வீரன்—நொடியே னதையான்; நோக்குக விச்சிறு
கடிதம னைத்தையுங் காட்டிடு மாடிபோல்.
(கடிதத்தை வாங்கிப் பார்க்கிறாள்.)

திலோ:—(திகைத்து)
யாரிதை வரைந்தவர்? ஆகா! நண்பரே;
என்னரு விழிகா ளிப்பெரும் பாக்கியம்
துன்னிடு மெனநீர் சொப்பனத் திடையினு
மெண்ணினீ ரல்லரே! என்னே நுந்தவம்!
அமிழ்தென அருந்துமின் ஆருயிர் நாயகர்
தமிழ்தா வரைந்தவித் தனிநிரு பந்தனை;
எங்கணோ வேகின னெனயா னயிர்த்துச்
சங்கட வாரியில் தங்கினா மாழ்கையில்
அஞ்சே லெனவரு மபயக் கரமிதோ!
துஞ்சே லெனவருந் தூயசஞ் சீவியோ!
(படிக்கிறாள்.)

நிருபம்.

"கண்ணே! மணியே! கற்பகத் தாருவே!
பெண்ணே! யுற்றதை யெங்ஙனம் பேசுவேன்!
கதிரவன் தோன்றுதல் காணாப் பங்கயம்

பதறியு ணங்கிய பரிபவ நிலையிலோர்
அசனியவ் வணிமலர் கருக்குதல் போலஇவ்
விசனநின் மெல்லுயிர் விலக்குமென் றஞ்சினேன்.
தொண்டைமா மன்னவர் தோன்றியென் விடுதியிற்
கண்டன ரென்றனைக் காய்சின மெய்தினர்.
சீறின ருரப்பினர்; செப்புதல் தகாவகை
கூறினர்; வாள்கொடு கொல்லமு யன்றனர்.
ஏவல ரிருவரை ஏவின ரென்னுடல்
பிணித்தெனை யரணியந் தணித்துயிர் கொன்றிடப்
பணித்தன ரங்ஙனம் பற்றியே கொணர்ந்துளார்;
வீரனிக் கொலைஞரை வேண்டின னன்பினாற்
கோறலை நிறுத்தினர்; கோதைநீ இரவினில்
அரண்மனை விடுத்திவ் வரணியம் போந்தநின்
சுந்தர மதிமுகந் தோற்றிநின் கடைவிடை
தந்திட வென்மன தமைந்திடு மப்புறம்
என்னுயிர் துறக்கயா னெண்ணினேன் கிள்ளையே!
கங்குலி லெழுந்துநீ கானகம் வருவையேல்
என்கொலை மாறலாம் ஏவலர் நன்மையால்;
இல்லையே லிறக்குமுன் என்மனம் வருத்திய
தொல்லையே யாகினும் தொலையுநின் தோன்றலால்;
வீரனா மிவனென தாருயிர் நேயனாம்.
கூறும வன்மொழி நம்பலா முண்மையாய்.”

* * * *

என்னே! திண்ணிய இடிமீ திடியே!
மன்னே னிங்ஙன மநீதம் புரிந்தனர்?
நினைக்கா தனவெலா நிகழ்கின் றனவே!
நினைக்கா னாருயிர் நீங்கிடு நிலைமையில்
இருந்தே னெனக்குமு னிறந்திட லானதோ!
எந்தையின் கன்மன மென்னெனக் கூறுவேன்!
முந்தியென் பாலவர் மொழிந்தபோழ் திங்ஙனம்
புரிவரென் றிறையெனும் புந்தியிற் கொண்டிலேன்;
இறகுகள் பெறுவெனே லித்துணை நாழிகை
பறவைபோ லோடிநும் பக்கலி லிருப்பேன்!

நும்முயிர் காத்திட நும்பா லேகுமு
னென்னுயிர் நிற்குமோ! எங்ஙன நோக்குவேன்!
உன்னிட வுன்னிட உள்ளம் பதைத்ததே!
அங்ஙனம் போமுனம் அன்னவர் கொல்வரோ!
எங்ஙனங் கானிலே யிருப்பிட மறிகுவேன்!
வீரா! இந்நகற் கெத்திசை யத்தலம்?
கூறா யடைவதற் குற்றவோர் தந்திரம்.

வீரன்:—அரசியே! இதனைநீ ராழவே யெண்ணுவீர்!
இரவினி லங்குநீ ரேகுதல் தவறுமேல்
மார னுறுதியாய் மரிப்பா னாதலின்
தீரவே யாய்ந்தவோர் தந்திரம் செப்புவேன்.
இன்றிர வொருபது நாழிகைக் கெழுந்துநீர்
பூங்கா வடைகுவீர்; புரவிக ளிரண்டொடு
நீங்கா தங்ஙனம் நிற்பே னிருவரும்
கணந்தனி லேகலாங் கானக மெய்தலாம்.

திலோ:—போமுனங் கொல்வரோ! பொறுப்பரோ வதுவரை?

வீரன்:—போமுனங் கொல்லார் புகன்றன ருறுதியாய்;
கவலேல் நீவிர் காத்திருப் பாரவர்.

திலோ:—அங்ஙன மாயி னாரமத் தண்டையிற்
பங்கயம் பூத்தவப் பளிக்குநீர் வாவியின்
கரைமீ தென்றனைக் காண்பாய் கங்குலில்;
உரைதவ றாதுயா னுறுவேன்; முன்னநீ
இருபரி கொணர்ந்தவ ணிறுவுவாய் பொழுதிலே.

வீரன்:—அவசிய மிருப்பே னங்ஙனம்; இதில்யான்
தவறுவே னாயினென் னாயுளே தவறும்.
விடையெனக் கீவீர்! கடவுளே காப்பன்.
(விடைபெற்றுச் செல்கிறான்.)

திலோ:—(தனக்குள்)
உன்னரு ளிதுவோ! ஓங்கிய முதல்வனே!
என்னென வழுத்துவே னின்பெரு மகிமையை!

என்மனம் விரும்பா இம்மணம் விலக்குதல்
எங்ஙன்; மனையா ரிரவிலும் பகலிலும்
சங்கையி லெண்ணியான் சாலவு நொந்தேன்.
கல்வினுள் தேரையைக் காப்பவ னல்லனோ!
தொல்லையி னின்றெனைத் தூண்டி யகற்றிடச்
கருதியே இத்தகைக் காரியம் சூழ்ந்தையோ!
உறுதியே நின்றுணை என்வயி னுண்டெனல்.
தஞ்சமெ னக்குநீ தனிமுத லண்ணலே!
எஞ்சிய வினைசெய லியாவுநின் பொறையே!

(காட்சியின் முடிவு.)

2-வது காட்சி

(அன்றிரவு ஜாமநாழிகை; மாரன் பூங்காவில் தனிமையில் நிற்கிறான். திலோத்தமா இரகசியமாகத் தனது அந்தப்புரத்தினின்று இறங்கிச் சோலைக்கே வரவேண்டுமாதலின் அவ்வழியில் அவளைக் காணும் கருத்துடன் நிற்கிறான்).

மாரன்;—(தனக்குள்)

அறிந்தோர் நோக்கி லகப்படா தகன்றியான்
மறைந்து மறைந்துநின் மாலையை யொழித்திங்
செய்துத லெத்தகை யின்னலே யானது!
மைதவழ் மாவிழி மடவர லொடுதினம்
தோன்றியின் புற்றவிச் சோலையைக் கண்ணுற
யான்பெறு மின்பையா னியாதென விரிப்பேன்!
அம்புயம் நகுவபோன் றன்ன முறுவலா
லஞ்சுக வஞ்சியாள் கொஞ்சுமவ் வின்னிலை
கண்ணெதிர் நின்றதே! காரிகை யமுதப்
பண்மொழி யாழெனப் பனுவலா யொலித்ததே!
அன்பின் பிழம்பா மற்புத வெழில்முகம்
கண்கூ டாகயான் கண்ணுறல் கூடுமோ?
மாடத் திருந்தவள் மறைவா யிழியுமப்
பூடக வாயிலிப் பூங்கா வணைதலின்

இந்நெறி யாகவே ஏகுவள் பெண்மணி!
நிற்பே னிங்ஙனம் பொற்பே வடிவினள்
கண்டெனை யின்புறக் சழறுவேன் சோபனம்.

(காட்சியின் முடிவு.)

3-வது காட்சி.

(சுருக்கம்:—இரவு பத்து நாழிகை சமயம். மறுநாளின் மணத்தைப்பற்றிய கவலைகளால் மிக்க மனவெழுச்சி பெற்ற தொண்டைமான் துயிலவொற்றானாய் தனது சயனத்தை நீத்து வெளியில்வர, எதிரில் விரைவாகச் சென்று கொண்டிருந்த வீரனைக்கண்டு அவ்வளவு விரைவாக அவன் எங்கு செல்கிறானென்று கேட்கிறான். அவன், மறுநாளின் அணிவகுப்பின் பொருட்டு படைகள் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றனவோ வென்பதை உணர்ந்து தம்மிடம் கூறும்படி சேனாபதி தனக்குக் கட்டளையிட்டன ரென்றும், அவர் துயிலச் செல்லுமுன் மறுமொழி தரும் பொருட்டு தான் விரைவிற் செல்வதாயும் கூறுகிறான். அரசன், சேனாபதி அப்போதே சயனிக்கச்சென்றாரென்றும், தனக்குத் துயில் வாராமையால், தன்னுடனிருந்து உலவும்படிக்கும் கூறுகிறான். நல்ல தருணத்தில் தனது காரியம் கெட்டுப்போவதை நினைத்து உள்ளூற வருந்தியவனாய், வீரன் அரசனுடன் உலாவுகிறான்.)

அரசன் தனது சயனத்தை விடுத்து வருகிறான்.

அரசன்:—(தனக்குள்)

இன்றிராக் கழியுமு னிரண்டொரு நாழிகை
சென்றுறு யின்றிட வெங்ஙன முயலினும்
இமைகள் கவிந்தில வென்மன தமைந்தோ
ரிமையெனு நின்றில திம்மண முயற்சியா
லெல்லிலாக் கவலைக ளயர்தலை நீக்கின,
உலகெலா மெழுந்திவ ணுற்றபல் லரசரும்

நண்ணிய விருந்தின ரளவிறந் தவர்களும்
எண்ணிலா மேன்மைகூ ரேனையோர் குழாங்களும்
சுகமாய் வதிதலைச் சுற்றினு நோக்கியான்
மிகவே மகிழ்ந்தேன்; மெத்தவும் மேன்மையாய்
மணத்திற் குரியன வனைத்தும மைந்தன.
இணையிலா வகைதனி லிம்மண நடைபெறும்;
வந்தோ ரிருந்தோ ரனைவரு முவகையால்
அந்தோ! களித்தனர்; அவர்தமை மீறிய
மகிழ்வுறற் குரியவென் மாதவச் செல்வியோ
மிகவிளைத் தேங்கினள். மெலிந்துயிர் தேய்ந்தனள்.
ஐந்தா மாடக் காவலை யகற்றினேன்;
சிந்தா குலமே சிறுமியை வதைத்தது!
என்னே பேதைமை! என்னே சிறுமை!
மெல்லிய லாரெனல் மெய்யள வினதோ?
எல்லா வற்றினு மெளியரே யன்னவர்;
உறுதியுங் கற்பும் ஒழுக்கத் தூய்மையும்
அறுதியாய் மெலியன அணுவெனுந் தவறில.
குலநலங் கலைநலங் குணநலம் முதலுறு
பலநலன் செறியினும் பக்குவ வயதின்
மோகப் பெருக்கினால் முற்றினுந் தாழ்ந்திழி
போகமுங் கருதுவர்; புலன்வயத் தடிமையாய்
மானமுந் தானமு மீனமும் பாரார்.
கலங்கிய வுளத்தராய் விலங்கென மாறுவர்.
அங்ஙன மொழுகின ளருமருந் தனையவென்
பைங்கிளி திலோத்தமை பருவத் துண்டலால்;
விதிவழி யெவரே விலக்குத லாற்றுவர்.
பதியிவள் பெறுவளேல் பன்னாட் கழியுமுன்
மடமைய கன்றிடும் மனக்குணக் கொழியும்;
விடமென வெறுப்பது மினியதா நிச்சயம்.
(வீரன் வருகிறான்)
விசையாய்ச் செல்பவன் வீரனே யல்லவோ!
இசைபெறு வீரனே! எங்குளி ரைந்தனை?

வீரன்:—(தனக்குள்)
என்னே தீம்பு! இவனெங் குற்றனன்!

சொன்னவா சோலைமாட் டேகுமித் தருணம்
சனியனைப் போலவென் வினைகெட வந்தனன்.
அலகிலாப் பகலா யாழவே சூந்தவிந்
நிலைகெட விப்பய விங்ஙன முற்றனன்.
நடம்பயில் மயிலென நங்கைதி லோத்தமை
இடம்பெயர்ந் திக்கண மிருப்பளோ காவிலே.
துன்பாய் முடிந்ததே; துரையினில் விடுவனோ?
தன்பா லிருந்திடத் தருவனோ கட்டளை?
(அரசனை நோக்கி உரக்க)

கரிகளும், பரிகளும், காலாட் படைகளும்
அரியன புதியன வாயபல் லணிகளா
லலங்கரிப் புற்றினி திலங்கிய வோவெனச்
செப்பிட விடுத்தனர் சேனா பதியார்.
அண்ணலின் தகைவினுக் கணுவெனுங் குறைவிலா
தெண்ணிய போலவே இயைந்தன முற்றிலும்.
துயிலா முன்னரே யவர்வயின் சொற்றிட
வியலா தோவென வெண்ணியே கடுகினேன்.
மணமெனுங் கவலையான் மனத்தெழு கிளர்ச்சியிற்
கணமெனு மின்றியாங் கண்படல் கூடுமோ?
உறக்கம் பெற்றிடா தோடிய லைந்தனம்.

அரசன்:—சேனா பதியார் சென்றனர் சயனம்.
யானே துயிலா தானென வயிர்த்தேன்;
நீயெனக் கிணைந்தநற் றுணைவனா யுற்றனை;
வாயினிச் சிறிதுயாம் வசனித் துலவுவோம்.

வீரன்:—சித்தமே யாகுக; செய்வே னங்ஙனம்.

(தனக்குள்)
இத்தகை இடுக்கணுக் கென்கொலோ புரிகுவேன்!
மாலையே கண்டுயில் வழக்குடை மன்னனிக்
காலையே னுற்றனன்! கருதிலே னிதனையான்.
ஈங்ஙனஞ் செல்வனோ! எதுவரை தரிப்பனோ!
மங்கையம் மெல்லியல் மன்றலஞ் சோலையி

லென்றனைக் கண்ணுறா தெங்கெனுந் தவறியே
சென்றன னொன்னிலென் செய்குவே னையகோ!

(இருவரும் உரையாடிய வண்ணம் செல்லுகின்றனர்)

(காட்சியின் முடிவு.)

---

4 வது காட்சி.

(சுருக்கம்:—அதேகாலத்தில் திலோத்தமா பூஞ்சோலைக்கு வந்து வீரனைத் தேடிக்காணாமையால் வருந்தி மேலும் தேடும்போது அங்கு மறைந்திருந்த மாரனைக்கண்டு பெருவியப்பும் பேரின்பமு மெய்துகின்றனள். மகிழ்வடைந்த மாரன் தான் தப்பி வந்த வரலாற்றைக் கூறுகின்றான். அப்போது தொண்டைமானும் வீரனும் உலவியவண்ணம் உரையாடிக்கொண்டு வருகின்றனர்: திலோத்தமா மாரனோடு நட்புக்கொண்டதை வீரனே அரசனிடம் வெளியிட்டவனென்பது, அந்த சம்பாஷணையால் தெரிகிறது. தனது காதலி பணிப்பெண் அன்றெனவும் அரசன் மகளென்றும் மாரன் அப்போது உணர்கிறான். திலோத்தமா, தான் தன்னை மறைத்துப் பொய்ம்மொழி கூறியதைப்பற்றி மன்னிக்கவேண்டுமென்று, மாரன் காலில் வீழ்கிறாள். அவன் அவளை வாரி யெடுக்கிறான். அப்போது அங்கு தோன்றிய விக்ரமன், அந்தச் சிறுமையைக் கண்டு பொறாமல் தனது வாளால் மாரனை வெட்டப்போகிறான். அவன் தடுக்க இருவருக்கும் போர் விளைகிறது; விக்ரமன் கொல்லப்படுகிறான்.)

திலோத்தமா பூஞ்சோலையில் தனிமையில் வீரனைத் தேடுகிறாள்.

திலோ:—(தனக்குள்)

புரவிகள் கொண்டிவண் போவதாய் மொழிந்தவன்
வரவையான் கண்டிலேன்; வகையிலா தெங்கெனும்
போந்தனனோ அவன்? போவனோ இனியே?
வேந்தன தேவலால் வேறிடஞ் சென்றிட

நேர்ந்ததோ வறிகிலேன். நேரமு ணர்ந்திடச்
சோர்ந்துப டுத்தினந் துயின்றவ னவனோ?
ஏதிதனைத் தேருவேன்? எங்ஙனந் தேடுவேன்?
றீதினிற் பட்டவென் றீங்குண வினியரைத்
தாமதம் பொறுதவர் தகைப்பரோ காவிலே?
போமுன மெப்பெரும் பொல்லாங் கெய்துமோ?
என்னரு மணியிலா திவ்வுயிர் நிற்குமோ?
மன்னரு மிணையிலா மாரனைக் காண்கிலா
தாவியு முள்ளமு மமைதியே கொள்ளுமோ?
மேவியச் சிலரை விடுத்துயா னிங்ஙனம்
போதலோ போகா தெங்கெனு மென்றன்
காதலோ டேகலோ யானெது புரிகுவேன்?
செல்லலு நவையாந் திரும்பலோ தீமையாம்.
நல்லவென் மாலினிக் கனைத்துமி யம்பினேன்;
விடியுமு னிங்ஙனம் விரைவதா யுரைத்தேன்;
நெடிதவ ரோடியா னின்றின் பெய்திய
தித்தல மல்லவோ! என்னுயிர் பொன்னடி
வைத்தவிப் புண்ணிய வட்டமென் மனதிலோர்
மகிழ்வைய ளிக்கவென் மனதுகு ளிர்ந்ததே!
மிகவுஞ் சோர்ந்தவென் மெய்யுயிர் தளிர்த்தவே!
என்னே விந்தை! ஏனினம் வந்திலன்!
முன்னே சென்றியான் முற்றிலுந் தேடுவேன்.

(சிறிது அப்பாற்சென்று தேடுகிறாள். மறைவிலிருந்த மாரன் வருகிறான்.)

மாரன்;—(தனக்குள்)

வந்தனள் ஆருயிர்! வந்தனள் பாமசு
கந்தனுள் தேக்கிய கண்மணி துறக்கமே
வருவபோல் தோன்றினள். மாமதி யமிழ்தினைத்
தருவபோல் வீசினள் தண்ணொளி யினிமைகள்.
யாரையோ நோக்கினள்? வீரனே னின்னமும்
வாரா திருந்தனன்? வகைதெரிந் திலதே!
என்றனைக் காண தேங்கினள் துடித்தனள்.
மின்றன தாவலை விலக்குவே னிக்கணம்.

இறையெனு மிவள்மன வேதனைப் பொறியிற்
குறைவதே யாயினிக் குவலய மெனுமியான்
கொடுப்பே னுயிரையும் விடுப்பே னிக்கணம்.
(நெருங்குகிறான்.)
வருந்தேல் அன்னமே! வந்தேன் மாரனே.

திலோ:—(துணுக்குற்று)
என்னே யதிசயம்! எவரிங் குற்றவர்?
(உற்று நோக்கி)
முன்னே நிற்பதும் மொழிவது முண்மையோ?
இந்திர ஜாலமோ! இரவோ பகலோ!
வந்தவ ரென்னுயிர் வள்ளலார் தாமோ?
கனவோ நினைவோ! கண்முன நிற்பவர்
அவரே! அவரே! ஆகா! பாக்கியம்!
(ஓடி யணைதல்.)

மாரன்:—பொன்னே! மணியே! புண்ணிய வடிவமே!
நின்னையிப் பிறவியி லின்னொரு முறையான்
காண்பே னோவெனக் கவன்றுள மாழ்கினேன்.
மாண்பே யானவன் மாபெரும் பரமனே
கூடிட வருளினன்; கூடுமோ பிறரால்?

திலோ:—ஆவியே! அமுதமே! ஆருயிர்த் துணைவவிப்
பாவியேன் றொடர்பினாற் பலித்ததோ விக்கதி!

மாரன்:—மின்னே! கொடியே! மேதகு செல்வமே!
நின்னா லென்னுயிர் நீங்குத லாயினு
மதுவொரு பொருட்டோ? அரியநின் காதலிற்
கெதுவெனு மிணையென வெண்ணிடற் பாலதோ!
கண்மணி! என்றனைக் காவலர் கொன்றா
லென்செய வெண்ணினை யேந்திழை யணங்கே?

திலோ:—என்னே நும்வினா? என்னே அயிர்த்தல்?
செய்தியே யென்னிரு செவிபுகு முன்னுயிர்
ஒய்திடு மில்லையேற் கொள்வேன் விடத்தையான்;
கொன்றுயி ருந்தமைக் கூடுவே னங்கொடி.

மாரன்:—என்றனுக் கிப்பெரு மிணையிலாப் பேறுற
எத்தனை மாதவ மியற்றினேன் தொல்லையில்?
பத்தினிப் பாவையே! இத்தினம் போனபின்
மணமுனக் கெனவே வகுத்தனர் யாவரும்;
கணமெனை விடுத்திடக் கருதா நீஅதற்
கென்செய நினைத்தனை? எங்ஙனஞ் சூழ்ந்தனை?

திலோ:—எல்லாம் வல்லா னீசனே யதற்குச்
சொல்வான் தந்திரம்; துன்ப மகற்றுவான்.
உந்தமை யரணியம் வந்துய் வித்தவன்
செய்கலாக் சரியம் செகத்தினி னுளதோ?
அவனிலா தவனியி லணுவெனு மியங்குமோ?
அவனையே நம்பினா லகற்றுவா னிடர்தமை.
(வீரனும் அரசனும் சற்று தூரத்தில் வருகின்றனர்.)

திலோ:—என்னே நிகழ்ச்சி! இன்னொரு மனிதனும்
வீரனோ டிங்ஙன மெய்துதல் விந்தையே!
யாரவன்? பொறியினால் அரசனை யொத்தனன்;
அப்பால் மறைகுவோ மகன்றவர் போம்வரை.
(மாரனும் திலோத்தமாவும் மறைகின்றனர். அரசனும் வீரனும் நெருங்குகின்றனர்.)

அரசன்:—மாரனி யற்றிய காரிய மென்பால்
விரைவிற் கூறா திருப்பையே லதையென்
மருமா னறிவான்; மணமும் தடைபெறும்;
நின்பே ருதவியை நினைப்பேன் றினமும்;
நண்பனே யானாய்! நன்றியை மறவேன்.

வீரன்:—மன்னவர் பணிந்திடு மாகழல் வேந்தே!
என்னரும் பெருந்தகை! எறும்பினு நாயினும்
புழுவினுங் கடையவப் புல்லிய மாரனிவ்
விழிதக வுந்தமக் கியற்றுத லடுக்குமோ!
சீற்றங் கொண்டிடா தெவரிது பொறுப்பர்?
போற்றற் குகந்தவெம் புரந்தர ருமக்கவ
மானமு றுமுனம் மறைத்ததென் வெகுமதி;

யானெவ் வழியையு மடைவது கருதிலேன்.
துடுச்சுறும் மாரனைத் தொலைத்தவச் செய்கையே
அடுக்குநி ரப்பவு நன்றே யானது.

மாரன்:—(தனக்குள்)

என்னே அற்புதம்! என்செவி கேட்டதோ!
சொன்னவன் வீரனே! சூதோ மொழிந்தது!

அரசன்:—இங்ஙன நிகழ்ந்ததை யெவ்வா றுணர்ந்தனை?

வீரன்:—மாலினி யெனும்பெயர் வரைந்த நிருபமோர்
மாலையி லென்வயின் மாரனே யீந்தனன்.
அன்னவ ளவன்றனை ஆவிபோல் மதித்துக்
காதலை யுற்றது கழறினன். மாலினிக்
கோதையாள் நெடிதுமு குந்தனை விழைந்தன
ளென்பதை யறிகுவேன். எனவே, அயிர்த்தேன்.
பின்பதை யெடுத்துப் பெயர்ந்தனன் பூங்கா;
அவனறி யாவித மடியேன் றொடர்ந்தேன்.
அவண்வந் தெய்தின ரரசிளங் குமரியார்.
கண்டன ரிருவருங் களிகொண் டிருந்தனர்.
விண்டனர் கருத்தினை; விளம்பினேன் முன்னரே.

அரசன்:—பிறரெவ ரேனுமிச் சிறுமையு ளார்ந்தன
ரோவென அஞ்சினேன். உன்பால் வினவிட
ஆவல டைந்தனேன். அங்ஙன நிகழ்ந்ததோ?

வீரன்:—விக்ரம வண்ணனும் வேறுமற் றவர்களும்
அக்கண மென்பா லணுகினர்; மன்னவர்
காய்சினங் கொண்டதன் காரண மென்னென
ஆய்ந்தன ருசாவினர். அடியேன் பிறிதொரு
கதைதனை யுடனே கட்டியு ரைத்தேன்.
பதுமினி யாளொடு பகற்பொழு தெல்லாம்
மாரன் மிகவிப சாரம் செய்ததை
நேரிலே கண்டதால் நிருபர் முனிந்தன
ரென்னவு ரைத்தேன்; சொன்னதை நம்பினர்.

அரசன்:—எத்தகை யன்பைநீ வைத்தனை யென்வயின்!
மெத்தம கிழ்ந்தேன்! மெச்சினேன்! மெச்சினேன்!
(இருவரும் அப்பால் போய்விடுகின்றனர்.)

மாரன்:—(தனக்குள்)

அதிசயம்! அதிசயம்! அழுவதோ! நகைப்பதோ!
சதிசெய வெண்ணியோன் சார்ந்தவென் னேயனே!
இரவும் பகலுமோ ரிடந்தனி லொருகா
லுறுவபோ லிங்ஙன நன்மையு மல்லதும்
பலித்தவே! இதனையான் பாக்கிய மென்பதோ!
நிலைத்தவோர் மனமிலா நீலியர் வேசையர்
அணைத்துசு கந்தரு மக்கணம் பெருநோய்
இணைத்தலே போலவென் தீக்குண விதியினாற்
பெருமையுஞ் சிறுமையும் பெற்றே னிக்கணம்.
யாரெனை யொப்பவர்? யாங்ஙன நிகழ்ந்திடும்?
வீரனை வஞ்சனாய் விடமெனக் கீந்தவித்
தீமையை நினைத்துயான் சீற்றங் கொள்வதோ?
மாமையே வடிவாம் மடக்கொடி யாளையென்
மடமையாற் கீழ்மகள் மாலினி யெனயான்
கொடுமைநி னைத்தது குறித்துயி ரழிவதோ?
என்னுயிர்க் காதலி யெம்மொடு பகைவளர்
மன்னவன் சுதையென மாறிய விந்தையை
நினைத்திடர் கொள்வதோ? தினைத்துணை யாகிலும்
ஈடிலாப் பணிமக ளென்கரம் பற்றுமப்
பீடிலா நவைமொழி பெருவித நிகழ்ந்தவித்
தனிப்பே றெண்ணியன் களிப்பே கொள்வதோ!
குணமணி யிவள்நலங் குவலய மேழனு
மிணையெனல் பொருந்துமோ! இனியான் பின்னிடேன்.
என்பிறப் புண்மையா னிவள்பா லியம்பினால்
தன்பெருங் காதலைத் தகைத்தெனை வெறுப்பளோ!
ஆதலா லதையா னப்புறம் விரிவா
யோதலே நன்றாம். உண்மை யன்பனு
மாருயிர் நட்பின னமாத்திய ருதவிய
வீரனே பகைவனாய் மிகப்பல தீமைகள்

புரிந்தே னறிகிலேன். புனிதையா மினிமைசே
ரருந்ததி யிவள்தனை அரணியும் புகுத்துவே
னென்றிவ் வியம்பிய தேனென வறிகிலேன்.
என்றனைக் கொல்லா ரேவல ரெனமொழி
தந்தன னன்னவர் தவறென மறுத்தனர்.
பிந்திய செயலினா லேவலர் பேசிய
மொழியே மெய்யென முடிந்தது தெளிவாய்.
நட்டோ ரிங்ஙன நாணிலா தவனாய்க்
கட்டுரை மொழிதலுங் கனவிலு நினையாத்
தீமைகள் புரிதலுஞ் செகமிதில் நிகழுமோ?
மித்திர பேதமே! மெத்த விழிந்தையோ!
இத்தரை தனிலுனக் கிணையான் கண்டிலேன்;
அல்லும் களவும் கள்ளும் கொலையும்
இல்லவள் பிழைத்தலா மெனும்பல தீங்கினு
மாலகா லங்கொளு மரவினுந் திண்ணிய
காலக் கோளினுங் காரிருள் நரகினுங்
கொடிதினுங் கொடியதாய்க் குப்புற விழுந்தையோ!
வஞ்சமே! நொடியிலென் னெஞ்சம் பிளந்தையோ!
கொடிது கொடிதுபே ரிடியினுங் கொடிதிது.
(திகைத்து மெய்ம்மறந்து நிற்றல்).

திலோ :—(நயந்து)

சிந்தனை என்கொலோ? சீற்றமோ வென்பால்?
தந்தேன் பொய்யுரை தகைவிலி யென்னுமோர்
வெறுப்போ? என்பிழை மெத்தவும் பெரியதே;
பொறுப்பீர் நுமதிரு பொன்னடி பற்றினேன்.

(காலில் விழுகிறாள்; அவன் தடுத்து வாரி
எடுக்கிறான்.)

மாரன் :—

மாலினித் தங்கமே! ஆகா மறதியே!
மாலினி யேதினி? மாற்றிலா மணியே!
மங்கையர் நாயகம்! மாவெழில் குணவதி!
நங்கையர் திலகமே! நலனையே கருதியோர்

கட்டுரை மொழிந்தால் திட்டுரை யாகுமோ?
கருத்தின் றூய்மையே கருதுதற் பாலதாற்
பெருத்தஇவ் வுதவியைப் பிழையெனல் பொருந்துமோ!
இப்பெரும் பாக்கிய மென்றனுக் கீந்தநின்
திப்பிய குணந்தனைச் செப்பியா னேத்திட
யுகமெனும் போதுமோ? ஓயுமோ வென்மனம்!
நிகரிலா வன்னமே! நீக்குவாய் நின்றுயர்.
உயிரென விருந்தவன் செயிரிலா அன்பனும்
நேயனே என்செயல் நிருபருக் குரைத்தொரு
தீயனே யானது தீயென வதைத்ததால்
வருந்தியான் வாடினேன். ஏவலர் மாட்டிவன்
பெருந்துன் பிழைத்தனன். பேதா! யுன்றனை
இன்றிர வபகரித் தேகிட வெண்ணினன்.
வன்றிறற் சூழலை மாபெருங் கடவுளே
தடுத்தெமை யாண்டனர் தண்ணளி புரிந்தனர்.
திலோ:—புகலென வெண்ணினாற் புங்கவன் விடுவனோ?
அகலுவோ மப்புறம் யாவனோ வருகிறான்.
(மறைவிலிருந்து வந்த விக்ரமனைக் கண்டு
இருவரும் அப்பாற் செல்லுகின்றனர்).

விக்ரமன் :—(திகைத்துத் தனக்குள்).

பாலினில் விடத்தைப், பருகுமுன் கலந்து
மாலினி வைத்தன ளென்ன வகுத்தனன்
கங்கா தரனெவர் கண்ணிலும் படாமலே
தங்கிம றைந்தனன்; தையல்தி லோத்தமை
பருகிய துணர்ந்துடன் வருகுவே னீங்கென
உரைத்தன னன்னன். உற்றோ ரெவரோ?
ஆபெருங் கொடுமையே! மாபெருந் தீமையே!
இவரோ நின்றனர்! எங்ஙன மிணைந்தனர்!
எவரே நோக்குவ ரிவ்விழி காட்சியை!
இணையாய் நின்றிவ ரிவ்விரு காமுகர்
அணைவது காணவோ அடைந்தே னித்தலம்!
வெறுக்கப் படுவதே குறுக்கிடு கின்றதே!
கேவல மிழிந்தவித் தீம்மகன் சென்னியை
ஏவலர் வீட்டிடா தீங்குவி டுத்தது

துணிவே யென்கோ? துட்டை திலோத்தமை
பணிவே யென்கோ? பாதகப் பதடியின்
கழல்பணிந் திட்டனள்; கட்டிய ணைத்தனள்;
இழிவிதைக் காட்டினு மெங்ஙன மிழிந்தது!
வேசையி விழிந்தஇவ் வெட்கமி லரக்கியைக்
கூடிடா தேற்பதோ ஆசையோ டிவள்கரம்?
நாளையாள் பற்றுதல் நடப்பதோர் கருமமோ?
நினைத்தலே யென்னுள நீறு யெரித்தது.
திணைத்துணை நேரமு மிவ்விரு தீயரை
மண்மீ திருத்துதல் மாபெருந் தீமையாம்.
கண்முன மிங்ஙனே களைவே னிவருயிர்.
மாரப் பதரே! வாராய் இங்ஙனம்.
மறையினு முன்சிரம் குறைப்பே னிச்சயம்.
பார்தனை யாண்டிடும் பார்த்திபர் தம்மைநீ
யாரென மதித்தனை? ஆணவப் பேயனே
ஆட்டி வைத்தலால் நாட்டமி ழந்தையோ?
குண்டகப் புழுவே! குக்கலி னிழிந்தநீ
உண்டக மெரித்திடு கண்டக னானையோ?
சுணங்கனே! உன்றன் சுயநிலை மறந்துய
ரணங்கினை யழித்திட வகத்திற் கொண்டையோ?
மன்னவன் சுதையெனல் மறந்தையோ பேயனே?
அன்னவள் கழல்படு தலத்திற் கருகினும்
நெருங்குதற் கருகனோ? நீசனே! தூயவள்
மருங்கிலி ருந்தவள் மருங்குல ணைத்திட
என்னே துணிபு! எத்தகை மனவுரம்!
பொன்னே போலுயர் பூவையி னுடலம்
பற்றிய நின்கர மெற்றுவேன் பாரிதோ;
துட்டனே! நின்னுடல் துண்டுக ளாய்விழ
வெட்டியோர் நொடியிலே வீழ்த்துவேன் வாளினால்.

(வாளாற் குத்த முயல்கிறான். திலோத்தமா அப்பால் நழுவுகின்றாள்).

மாரன் :—(அதைத் தடுத்து).

அமைவீர்; அமைவீர்; அண்ணலே! அமைவீர்;

கமைகொண் டொழுகுவீர்; காரிய மியாதென
விளங்கா மொழிதனை விடுத்தீர் வெகுண்டீர்;
இலங்கிய உடைவா ளெடுத்தீர் பாய்ந்தீர்.
நும்பாற் றமியேன் நுட்பமுந் தவறிலா
தன்மையே வைத்தேன். அவமாய் நும்முயிர்
போக்கநி னைத்திலேன்? பொறும்பொறு மொருநொடி.

விக்ர:—ஓங்கலின் மாசிலா உயர்குல மழித்தநின்
பாங்கிலா உடலையான் பலகூ றாக்குமுன்
அமைவே னெனநீ யகத்தினி லெண்ணேல்.

(பாய்ந்து பாய்ந்து குத்துகிறான். மாரன் விலக்கமாட்டாமல் போரை மேற்கொள்ளுகிறான்).

மாரன் :—விளக்கின் சுடர்தனில் வீழ்ந்துயிர் தொலைக்கும்
விளக்கமி லாமதி விட்டிலே போலநீ
ரென்மிசை பாய்ந்துயி ரிழத்தலே கருதினீர்.
நும்வசை யேயிது. நுமக்குயா னிரங்கினேன்.
தம்முயிர் காப்பது தருமமே யாதலின்
இம்மியும் மனமிலா தெடுத்தேன் வாளிதோ.
ஏவலர், காப்பென, ஈந்தநல் வாளே!
வா; உன தாற்றலை வல்லையிற் காட்டலாம்.

(இருவரும் பொருகின்றனர். விக்ரமன் குத்தப்பட்டு வீழ்ந்துஉயிர் விடுகிறான்).

(காட்சியின் முடிவு.)

5-வது காட்சி.

சுருக்கம்:—ஒரு நாழிகையில் தொண்டைமான் தனது சயனத்திற்குப் போக, அவனிடமிருந்து விடுபட்ட வீரன் பதைபதைத்து, திலோத்தமாவை அடைய ஆவல் கொண்டு, நெஞ்சுலர்ந்து நாவறளப் பெற்றவனாய், அவள் இன்னமும் சோலையில் காத்திருக்

கிறாளோ அல்லது தனது அந்தப்புரத்திற்கே திரும்பிவந்து விட்டாளோ வென்று ஐயமுற்று, முதலில் அவளது அந்தப்புரத்திற்குள் நுழைந்து பார்த்தபிறகு சோலைக்குப்போக வெண்ணி உட்புறம் நுழைகிறான். அங்கு அவள் காணப்படவில்லை. அவளுக்காக வைக்கப்பட்ட பால் அருகில் காணப்படுகிறது. அதனால் தனது தாகவிடாயைத் தீர்த்துக் கொண்டுபோக நினைந்து அவன் அதை எடுத்துப் பருகுகிறான். அங்கு மறைந்துகொண்டிருந்த கங்காதரன் ஓடோடியும் வந்து தடுக்குமுன் வீரன் பாலை முற்றிலும் பருகிவிடுகிறான்; அதைக் கண்ட கங்காதரன் மிகவும் வருந்தி, அது விஷங்கலந்த பாலென்றும், அவன் சில நிமிஷங்களில் இறந்து போவானென்றும் கூறுகிறான். அதைக்கேட்ட வீரன் பெரிதும் அயர்வுற்று, தனது வஞ்சகத்தைக் குறித்துக் கழிவிரக்கங்கொண்டு பலவாறு பிரலாபித்து இறுதியில் பிணமாய் விழுகிறான். பிணம் அங்கு கிடந்தால் ஏனையோர் அதைக் குறித்து மாலினிமீது சந்தேகங் கொள்வரென நினைந்து அதை எடுத்துப் பலகணி வழியாகப் பூங்காவிற்குள் போட்டுவிடுகிறான்.)

வீரன் திலோத்தமாவின் சயனக் கிரகத்தின் வாயிலில் தனிமையில் நிற்கிறான்.

வீரன் :—(*தனக்குள்.*)

பித்தம் பிடித்தவிப் பேய்மக னென்றனை
எத்துணை நாழிகை யிருத்தினன் நன்றொடு!
கைத்தல நெருங்கிய கனியான் றொடுமுனம்
அத்தல முற்றோ ரரவும றைப்பபோல்
புகுந்தனன் காரியே போலஇம் முதியவன்;
என்செய லுணர்ந்தே எழுந்தன னேனென
அஞ்சியா னயிர்த்தே னங்கம் பதைத்திட
எழுந்தகொ திப்பினா லென்னா வறண்டது.
எக்கண மொழிவனோ எனயா னவாவில்
மிக்கவ ருந்தினேன். இறுதியில் விடுத்தனன்.
சோலையி லிருப்பளோ சுகந்தரு மாங்குயில்?
கீலடி றந்தநாம் காந்தமி னவ்விட
மகன்றுத னிருக்கைய டைந்துயான் வாரா

வகையறி யாதினம் வருந்தின ளோவவள்?
இங்ஙன பார்த்தபி னெய்துவேன் சோலையான்.

(*திலோத்தமையின் சயன அந்தப் புரத்திற்குள் நுழைந்து பார்க்கிறான்*).

நங்கையைக் கண்டிலேன்; நன்மையே யானது.
அங்ஙன மேயவள் தங்கின ளிக்கணம்.
என்னே தளிமம்! எத்தகை யினியது!
மின்னே யனையவள் நின்மே லுறங்கும்
பாக்கிய மின்றொடு போக்கினை சயனமே!
வாரா தெனக்கினி பேரா னந்தம்
தாரா ளின்றொடு தமியேன் மார்பகத்
துயர்வாள் மலரென ஆருயிர் மெல்லியல்.
தாயகச் சயனமே தாருவை வளர்ப்பதும்
நாயகச் சயனமே நறுங்கனி யுண்பதும்
வழக்கே யாமிது தனிப்பே றுனது.
நீயே மாற்றாந் தாயே யாதலின்
பெண்பெறு சுகமே நின்பெரு தவமாம்.
ஒருபது திங்களே யுதரஞ் சுமந்தபின்
தருபவ ளன்னையோ! தருணியாம் வரைபதி
னைந்துநீ ளாண்டுக ளாதர மொடுசுகந்
தந்துநீ பேணிநற் றுயிலு மருமையாய்த்
தாங்கினை யாதலின் ஓங்கினை யன்னையில்.
பதிசதி யிருவரும் பல்லாண் டின்புற
அதியவ சியமா மாசியும் செல்வையும்
தருவாய் நீயே; தகைமைகூர் மாமியே!

(*அருகிலிருந்த பாலைக் காண்கிறான்.*)

என்னே வட்டிலி லிருப்பது பாலோ?
பொன்னே சமைத்த கிண்ணமே! பூவையாள்
பாலைய ருந்துமுன் படர்ந்ததே னறிவையோ?
சோலையில் வழிபார்த் துருகிய நாயகன்
பக்கலை யடைதலே மிக்கவு மினியதாய்
மதித்தன ளாதலின் மதித்தில ளன்றனை.
அப்பால் பெறுவதற் கிப்பால் சகுனமோ!
வருவாய் வருவாய்; மங்கலக் குழியே!

பருகுவே னுன்னையான் பாத்திய முடையேன்;
என்று மறண்டதா விதையுட் கொள்ளுவேன்.

(பால் பாத்திரத்தைக் கையிலெடுக்கின்றான்.)

இன்றிர வெலாம்பெயர்ந் தேகுவேன் இவளோடு;
அன்றிலை யொத்தவ ளகங்கவர் மகேந்திரன்
தஞ்சையின் மகனெனச் சாற்றுவே னப்புறம்
அஞ்சா திவள்வர, ஆசையான் வெளியிடேன்.
நெறியிலோர் மனிதனை நிறுவினே னன்னவன்
எந்தமைக் காணுமுன் வந்தும கேந்திரன்
தம்பதி சென்றன னெம்மையு மங்குற
வேண்டின னென்னவே விளம்புவ னுண்மைபோல்.
அடைவே னென்பதி; அங்ஙன மாருயிர்
மடவா ளென்மனை வைப்பே னெவரும்
காணா வகையிற் காப்பேன் மறைவிலே;
கோணா திவள்மனம் கொள்ளுவேன் திருமணம்.
களிப்பே னிவளொடு கணமக லாமலே
திளைப்பே னச்சுக வாரியில் தினமே;
காலம கல்வதாற் பாலைய ருந்துவேன்.

(பாலைப்பருகுகிறான்.)

கங்காதரன் :—(மறைவிலிருந்து ஓடிவந்து).

அருந்தேல் அருந்தேல் பெருந்தீங் கெய்திடும்.

வீரன் :—(கோபத்தோடு)

எவனடா வந்தவன்? எனடா பதரே!
தலைவனா மென்செயல் தடுப்பது துணிந்தையோ?
அலுவலை யொழிப்பே னப்பாற் செல்லுடன்.

(மிகுதிப் பாலையும் குடித்துவிடுகிறாள்)

கங்காதரன்:—(துடிதுடித்து)

ஐயகோ! மாண்டீர்; அரைக்கால் நாழியே
வையக மிருப்பீர். வாழ்வினி யிழந்தீர்.
நஞ்சைய ருந்தினீர்; துஞ்சுவீர் கணத்திலே.

வீரன்:—(திகைத்து)

என்னே! என்னே! எவர்புரி கொடுமை!
வஞ்சக மியற்றிய வன்செயற் கோட்டையோ
ரிடியா லழிந்ததோ! நொடியிலொ ழிந்ததோ!
இன்னொரு வஞ்சக மென்சதி கொன்றதோ!

(கங்காதரனுக்கு)

மின்னா ளுயிர்கொள விரும்பிய தெவனோ?

கங்கா:—அத்தா னேவிடம் வைத்தா னரசிளங்
குமரியார் தம்முயிர் கொன்றிட நினைத்தான்.
எண்ணா விதமா யின்றவர் பாலையே
உண்ணா தேகினர் ஒருமையி லெங்கணோ.
வருவதை நோக்கியான் வழிபார்த் திருந்தேன்.
உறுவதன் முன்னநீ ரோடிப் பருகினீர்.
தடுக்க முயலுமுன் சடக்கென விழுங்கினீர்.
நினையாக் காரிய நிகழ்ந்தது விந்தையே!

வீரன்:—(மரண வேதனையில் தவித்த வண்ணம்)

கெட்டேன் கெட்டேன் கெடுவினை வுற்றதால்!
பட்டேன் பட்டேன் பாவியே னையகோ!
சிறிதெனு நிலையாச் சிற்றின் பத்தையே
பெரிதென வெண்ணினேன்; பிரியனா மென்னுயிர்
நேயன் மனைவியை நினைவாற் கவர்ந்தேன்.
தீயனே யானேன்; தீங்குகள் சூழ்ந்தேன்.
நஞ்சென மாறினேன். நண்பனை மன்னவன்
விஞ்சிய முனிவினால் வீட்டிடு நிலைமையை
ஆக்கினேன்; அவனுயிர் போக்கினேன் பாவியேன்!
ஏவலர் வாட்கவ னிரையா யிருப்பனோ!
பாவியே னென்மனம் பதறிய தென்பிழை
பொறுப்பையோ சிவனே; புரிந்தவை மறப்பையோ;
மறுப்பையேற் கொடியதாம் மாவிருள் நரகிலே
பட்டழி வேனலாற் பாவியே னுய்வேனோ!
வஞ்சமே யறியா நெஞ்சம் பெற்றனை
உன்றனை வதைத்தே னுருப்படா தழிகிறேன்;
என்றெனும் வஞ்சக மிறுதியில் வென்றதோ?

என்னே யுலகம்! என்னே இன்பம்!
சிறியோர் பெரியோர் சீரியர் கீழவர்
நல்லோர் தீயோர் வல்லோர் புல்லோர்
எனும்பல திறத்தின ரெவரே யாயினும்
கணந்தம தாயுளைக் கடந்திவ ணிராமல்
அகலுதல் கண்டுமி யானெனு மகந்தையால்
தானே நிலையெனத் தான்சுகம் பெற்றிடற்
கானபல் சூசனை புரிந்துட லாவியை
அருப்பண மீந்துதன் னாதரம் போக்கியவ்
விருப்பெனும் பேயினால் மிகப்பல வுழன்று
மாடித் திரிந்துதன் அகநிலை யின்விதம்
நாடிய லைந்துதான் நயப்பதை யெள்ளெனும்
பெறாதபே ரின்னலாற் பெரிதுந் தியனாய்த்
தான்விரி வலையிலே தானே நுழைந்து
முன்னிலும் பெருகிய இன்னலி லாழ்ந்து
மரித்தலே யுலகியல் வழக்கே யல்லவோ!
ஆசையே யுலகம்; ஆசையே துயரம்;
ஆசையே நன்மை; ஆசையே தீங்குகள்;
ஆசையா லுஞற்றல்; ஆசையால் மோசம்;
ஆசையா லெம்பகை; ஆசையால் நாசம்;
ஆசையி லாமையே அழிவிலா வின்பமாம்.
விருப்பிலா வாழ்வே வெறுப்பிலா வாழலாம்.
வெறுப்புட னியாவையும் விலக்கிய வாழ்க்கையே
குறைவிலா நிறைவாம்; பொருண்மனை மக்களாம்
மனங்கவர் யாவினும் வைத்தும் வைக்காப்
பற்றொடு வாழலே முற்றிய சுகமாம். . . . .
தமதெனும் பிறிதெனுந் தன்மையில் நிலைமையே
அமைதியா மகமெனும் சுடரினின் றெழுந்து
திசைதொறுந் திசைதொறும் சென்று விரிந்திடு
நசையாங் கிரணக் கற்றையில் நாடொறும்
ஒன்றாய்ப் பலவாய் ஒழித்தவை முற்றிலும்
இன்றாம் நிலைதனை யெய்துதல் ஞானமாம்.
எல்லாம் படித்தியான் கல்லா மூடனாய்ப்
புல்லிய நசையாற் போக்கினே னாருயிர்

நண்பா! அன்பா லென்பிழை பொறுப்பையோ?
மண்பாற் பிரியினும் விண்பாற் கூடுவேன்.
விடைதா விடைதா கிடையா நேயனே!
போனது போனது புகழிலா தென்னுயிர்!

(உயிர் பிரிகிறது.)

கங்கா:—(இரக்கங்கொண்டு)
என்னே கொடுமை! என்விழி காணுமோ!
வேண்டா பலித்தது. வேண்டியு முற்றில.
மாண்டனன் வீரன்; மன்னவன் சுதையே
மரித்திருந் தாலது மனந்தனை யெங்ஙனம்
ஒறுத்திடு மோவதை ஒருநொடி சகித்திடேன்.
தீயேன் பொல்லேன் தீநெறி புகுந்தேன்.
உலகமே கிடைக்கினு முயிரினிக் கொல்லேன்.
கலக்கமே யுண்டாம் காண்பரே லிச்சவம்.
எவரிது புரிந்தவ ரென்னவு சாவுவர்.
தவறிதை யறியா மாலினித் தையலை
வருத்தினும் வருத்துவர் பலகணி வாயிலா
யுருட்டுவே னிச்சவ முய்யா னம்புக;
அங்ஙன மிறந்ததா யாவரு மெண்ணுவர்;
சங்கையே யெம்பாற் சற்று மிலதாம்.

(சவத்தை யெடுத்துப்போய் பலகணி வழி யாக பூங்காவிற்குள் வீழ்த்தி விடுகிறான்.)

(காட்சியின் முடிவு.)

6-வது காட்சி.

(சுருக்கம்:—மறுநாட் காலையில் தொண்டைமான், கோமள தேவி, மந்திரி முதலியோர் விக்ரமன் இறந்து போனதைக் குறித்தும், அதனால் திருமணம் நின்று போனதைக் குறித்தும் மிகவும் வருந்துகின்றனர். பூங்காவில் வீரன் சவமும், விக்ரமன் சவமும்

அடுத்தடுத்துக் கிடந்தன வாதலாலும், விக்ரமன்மீது வாள் வெட்டிய காயங்களிருந்தமையாலும், வீரனே ஏதோ பகைமையினால் விக்ரமனைக் கொன்று விட்டானென்றும் நினைக்கின்றனர். திருமணம் திடீரென்று நின்று போனதனால், தமக்கு அவமானம் இல்லாமற்போகவும், பெண்வருந்தாம லிருக்கவும், என்னசெய்வதென்று யோசித்து, அதற்கு எட்டாநாள் சுயவரம் ஏற்படுத்தி அன்று வந்து கூடும் அரசர்களில் திலோத்தமாவே ஒருவரை வரித்து மாலையிடுவதென்று தீர்மானிக்கின்றனர்.)

மறுநாட்காலை: அரசன் கோமளதேவி, மந்திரி மூவரும்.

அரசன்:—என்னே பேரிடி! இங்ஙன நிகழுமோ!
பொன்னே யனையான் போந்தது வாய்மையோ?
கனவிலு மிதையெவர் கருதுவர் முன்னரே!
எனதரு மருமா னிம்முடி வடைவனோ!.
என்றவச் செல்வியை மன்றலிற் பெற்றவன்
மாபெரு மிந்நகர்ப் பூபனா யாளுதல்
விரும்பினே னதற்கியான் வேண்டுவ புரிந்தேன்.
இரும்பினு மெஃகினு மிறுகிய புயங்கொளும்
அன்னவன் மாண்டதை யென்னென நம்புவேன்!
நினைவெலா மொழிந்ததோ! நின்றதோ திருமணம்!
மனையெலா மிருண்டதோ? மானம ழிந்ததோ!
வீரனோ டன்னவன் வெம்பகை கொள்ளலும்
போரினை யேற்றவன் பொன்றலு மதிசயம்!
நேற்றைய கங்குலில் நெடுநே ரம்வரை
மாற்றமு ரைத்துடன் வந்தவீ ரப்பதர்
பூங்கா போந்துதி ரும்பின னென்னொடு!
ஆங்கே னெய்தின னப்புற மொருமுறை!
அரமம் சென்றதேன்? அங்குநம் விக்ரமன்
வருவது மிருவரும் பொருவது மெவன்கொலோ?
அறிகிலே னுற்றவை யாரே யுரைப்பவர்?

மந்திரி:—மாயமே இருவரும் மாண்டு கிடந்தது!
காயமே கண்டிலர் வீரன துடம்பில்
வாள்தரு புண்பல மருமான் மேனியிற்

றோள்கர முதலாந் தலங்களி லருந்தன.
மருமான் முன்செல மறைந்துதொ டர்ந்தவண்
வருவோன் வீரனே வாள்கொடு வீட்டினன்.
அப்பால் வீரனை யரவந் தீண்டிடத்
தப்பா திறந்ததாய்ச் சாற்றினர் மருத்துவர்,
வீரன தியாக்கையில் விடக்குறி யிருந்ததாம்.
காரண முள்ளவா றெவருங் கண்டிலர்.

அரசன்;—போனதே யென்கரம்! போனதே என்னுரம்!
யானெதே புரிகுவேன்! யார்துணை யானவர்!
மாவலி பெற்றவென் மருமகன் றுணிபினால்
யாவரு நிகரிலா வாண்மைய னாயினேன்;
தஞ்சையின் சோழனைப் பஞ்சையென் றெண்ணினேன்.
அவனிலா தினியுல காண்டிடல் கூடுமோ?
எங்ஙன முய்குவேன்! என்வலி யொழிந்ததே!
நங்கையென் சோதரி யங்கம் புண்ணுறப்
புலம்பித் துடிப்பளே! புக்கிலா தயர்வளே!
வலம்பட வீழ்வளே! வாணாட் டிறப்பளே!
நினைபாய் பேரிடர் நிகழ்ந்ததே கணத்தில்!

கோமள:—பகைத்தவ ரியாவரு நகைத்திட லானதே!
திருமண னோக்குவான் செறிந்தன ரெண்ணிலர்.
அரியரும் பெரியரு மலகிலா துற்றனர்;
புரியதி னைத்தவப் புனிதமார் மாமணந்
தெற்றிட லானதே! தீராப் புன்மையால்
முற்றிட நேர்ந்ததே! ஊரும ரண்மனை
முதலுறு தலமெலா மொப்பிலா வணியொடு
மிந்திர விமானமே யென்னவி ளங்கின;
சென்றவர் பொருட்டியாம் செய்தற் பாலன
ஒன்றையு மறிகிலேன். உயிரொடு துடிப்பவ
ளொரு தனி மகள்பெறு மோங்கிய துயரைநாங்
கருதலே முதலாம். கன்னிகை யெங்ஙனம்
பரிபவம் பெற்றுயிர் பரிப்பளோ வறிகிலேன்;
நற்றவ மங்கைதன் னுவிநி லைத்திட
வுற்றவை புரிதலே, பெற்றவர் கடனாம்.

மங்கல நாளிலே மாஇழ வுற்றது
சங்கட மானது. சடங்குதொ டங்குமுன்
துர்க்குறி இங்ஙனந் தோன்றுதல் நலனே!
புத்திரி நினைவுபோற் புரிந்தா லினியெமக்
கெத்துணை யின்னலு நிகழா துறுதியே!
இனியெனு நன்றா யெண்ணியி யற்றிடில்
வினையினி தாகலாம். விரும்புதல் பலிதமாம்.

அரசன்:—மானம ழிந்ததை யானறி யேனே!
என்றனுக் கில்லையோ வீனமு மிழுக்கும்?
இன்றைக் கெட்டா நாளொரு நற்றின
மென்றனர் சோதிட ரென்பால் முன்னரே.
அன்றித் திருமண மவசிய நடத்துவேன்.
அன்றே லினியான் தொண்டைய னாவேனே!
கோள்நிலை தவறினுங் கொண்டது மாற்றேன்.
நாள்சில விருத்தலே நகைக்கிடை யுறும்.

கோமளா:—மணமக னிலாமலே மன்றலெ ங்ஙனமுறும்?

அரசன்:—சிந்தனை யதுவே என்றனை வதைத்தது.
தந்தா லொருவனைத் தடைபல கூறுவீர்.
மேனியி னழகே மெலியோர் விழைவது.
யானது கருதிலே னுண்மையு முயர்குலத்
தோற்றமும் மேன்மையு மேற்றன வெனக்கு.
முன்னரே நெடிதாயாம் மன்னவர் மரபெலாம்
ஆய்ந்தோ மெவரையு மறியா துழன்றோம்.
மாய்ந்தோ னொருவனே மனதிற் கியைந்தான்;
வேறொரு மணமகன் வேண்டுமே விரைவிலே?
யாரென வுணர்வது? யாதே புரிவது?

மந்திரி:—அண்ணலே! என்மன தெண்ணின தொன்றினை.
புரிந்தா லங்ஙனம் பொருந்துந் திருமணம்.
கட்டளை யாகுமேற் கழறுவே னதனையான்.

அரசன்:—விட்டுரை யாதென; விரைவிலே யறிகுவோம்;

மந்திரி:—விருந்தின ரிப்பதி விடுத்தே காதிவ
ணிருந்திட வுரைப்போ மெட்டா நாள்வரை.
ஒற்றரை யுலகெலாம் விடுப்போம் பறையவ
ரெற்றவி டுப்போம். எல்லா வேந்தரு
மெழுந்திங் கெய்திட வெழுதுவோ மோலைகள்;
யாவரு மீண்டிய அவைநடு வெமது
பாவையே மணமகன் பற்றிட விடுப்போம்.
சுயம்வர மிதிலெவன் சயம்பெறு பவனோ
அவனையே கொள்வோம்; அனைத்துமொ ழுங்காம்.
வரித்தா லிங்ஙன மொறுத்தலே யிலதாம்.
பண்டையோ ரிந்நெறி கொண்டனர் மேலிதாய்.
விதிமதி இரண்டும் விரவிய செயலிது;
பதியினர் கண்முனம் பலிப்பது நலமாம்.

கோமளா:—சாலவு நன்றே சாற்றினர் மந்திரி.

அரசன்:—என்மன முன்னரே இதனைநி னைத்தது.
நன்மைய தாகுமேல் நாமது புரிகுவோம்.
மங்கையை யாற்றநீ மனதைய றிந்துவா.
இன்றையே புரிகுவோ மியைவன யாவையும்.

(புரோகிதர் வருதல்.)

ஐயரே! கிரியைக் கவசிய மானவை
செய்கிறே னென்றனிர், செப்பிய முடிந்தவோ?

புரோ:—அண்ணலே! யெழுக யாவுமு டிந்தன.
எண்ணிலா மாந்தரு மீண்டின ரொருங்கே.

அரசன்:—(விசனத்தோடு)
மணப்பறை யனைத்தும் பிணப்பறை யானவோ!
மங்கலப் பாடலும் மறையவ கீதமும்
எங்கனு மோலமா யெழுந்து திரிந்தவோ!
ஒருமகன் வருமுனம் மருமகன் சென்றது.
விதியோ! சதியோ! எதுவோ வறிகிலேன்.

(யாவருமெழுந்து செல்லுகின்றனர்.)

(காட்சியின் முடிவு.)

7-வது காட்சி

எட்டாம் நாள் சுயம்வர மண்டபத்தின் சமீபம்:
ஏவலர்களான மூக்கன் முகுந்தன்: இருவரும் உரையாடுதல்.

முகுந்தன்:—மூக்கா! எங்கடா சோக்கா நடக்கிறாய்?
வேலைக் கென்றால் மூலையில் படுப்பவன்
விருந்திற் கென்றால் பறந்து செல்றாய்!
ஐம்பது வடையும் எண்பது சுளையும்
ஒன்றே பிடியில் தின்றே னென்கிறாய்.
ஒட்டகம் போலே பெட்டக வயிறோ!
ஐந்தா மாடியில் வந்தா லுனக்கு
உயிரோ போகுது; அயர்வோ வருகுது.
சாப்பா டென்றால் கூப்பா டிலாமலே
சூரிய மண்டல மேறியு முண்கிறாய்.
(புன் சிரிப்போடு)

மூக்கன்:—மீசை நரைச்சா லாசை நரைச்சுதா?
யாருக் கில்லை ஆசைசு கத்திலே?
குழந்தையைப் பாரடா விழுந்தநாள் முதலே
அம்மா எனவே சும்மாக் கத்துது.
தாயார் பாலிலே வாயா யிருக்குது.
தூங்கி விழுகுது ஓங்கியே அழுகுது.
அட்டையா யொட்டுது ‘ஆ’வெனப் பறக்குது.
பாலோ பாலோ வென்னத் தவிப்பதே
வேலையாச் செய்யுது; தாலிய றுக்குது.
அன்னையின் சிவனை அள்ளிக் குடிப்பதால்
தன்னைவ ளர்க்குது தாங்கா தொருநொடி.
எத்தனை யாசை நீ பார்த்தையா அதற்கு?
இன்னமும் வளர்ந்து சின்னஞ் சிறுவனாய்
பெருத்தால் உலகமே பெருத்த அற்புத
மயமாய்த் தோணுது; மனதைக் கவருது.
எல்லாம் இன்பம்! எல்லாம் புதுமை!
கண்டது காட்சி கொண்டது கோலமாய்

260

Manoranjani
Vol 1, No. 10.

இல்லா துபொல்லா தெல்லாந் தேடுது.
பெட்டையாய்க் கெட்டையோ பெட்டையாற் கெட்டையோ
என்பார் மனிதரை முன்பார்; நிசமே;
உன்றன் செய்தியை உலகமே அறிந்திடும்;
பதுமினி யேஉன் கதியென எண்ணியோர்
பித்தனே யாகிக் கத்திநீ யலைகிறாய்;
உன்மன ஆசையோ உலகையே போர்க்குது
அத்தனை பெரியது அவளிடம் வைத்தனை
கங்கா தரனே தங்கா தனுவலில்
மாலினி யாளின் காலினில் வீழ்கிறாய்
தாலியுங் கட்டினான் காலையுங் கட்டினான்
ஆசையே யில்லா ஆள்களோ நீங்கள்?
சாகிற காலம் ஆகிற தெனக்கு;
இறந்தால் வருமோ விருந்துக ளெப்புறம்?
தின்பதே கண்டது; இன்பமே கொண்டது;
அத்தான் செத்தான்; எட்டோ டெட்டாய்க்
கறியுஞ் சோறும் பொரியலும் வறையலும்
கிட்டுது நமக்குக் கிட்டுமோ நெடுக?
சமையந் தப்பினால் அமையுமோ எதுவும்?
எரிகிற வீட்டிலே எடுப்பது லாபமாம்.

OFFICE OF THE REGISTRAR OF
16 OCT 1920
MADRAS.

முகுந்தன்:— (புன்சிரிப்போடு)
உள்ளது சொன்னால் உடம்பில் எரிச்சலோ!
நல்லது; வேண்டாம்; நமக்கேன் வருத்தம்?
ராசா மகளின் ஆசைக் குரியவன்
எந்தவூர் மன்னனோ! வந்தவர் கும்பலில்
தக்கவன் இல்லையேல் நிற்குமித் திருமணம்.
வந்தது வரட்டும்; வயிறு நிறையுது;
புருடன் வருவது பொய்யோ மெய்யோ!
மூக்கன் தின்பது மூக்கால் வருகுது.

மூக்கன்:— (நகைத்து)

பேய்கொண் டவளோ ஆய்வாள் கணவனை ?
நிச்சய மித்தின நின்றுபோந் திருமணம் ;
நிச்சய மின்னொரு திருமண விருந்து.
போவோம் வருவாய் ; யாவரும் சபையில்
கூடினர் லட்சம் கோடியில் மனிதர் ;
என்னந டக்குதோ வென்னநா மறிகுவோம்.

முகுந்தன்:— சுத்தமாய்க் கெட்டவன் ! சோற்றுக் காகநீ
மங்கல மில்லா வசனஞ் சொல்கிறாய்!
பந்தயம் வைப்போம் பலிக்குது திருமணம்;
வந்தேன் நானும் மண்டபம் செல்லுவோம்.

(இருவரும் சுயம்வரம் காணப் போகின்றனர்)

(காட்சியின் முடிவு)

8-வது காட்சி

(**சுருக்கம் :—** சுயம்வர மண்டபத்தில் யாவரும் நிறைந்திருக்க, திலோத்தமா, தாதியர் சூழ வருகின்றாள். ஒவ்வொரு மன்னனது அருமை பெருமைகளையும் மந்திரி மாலினியிடம் விரித்துக் கூற, அவள் அவற்றை உடனுக்குடனே திலோத்தமாவுக்கு அறிவுறுத்துகின்றாள். மணமகள் எந்த மன்னனுக்கும் மாலை யிடாமல் கடைசி வரையிற் செல்லுகின்றாள். மன்னர்க்கடுத்தாற்போல் நின்ற ஒரு குதிரை வீரன் திடீரென்றக் குதிரையிலிருந்து கீழே குதிக்கிறான். திலோத்தமா அவனுக்கு மாலை யிடுகிறாள். அதைக் கண்ட அரசன் முதலிய யாவரும் திகைத்து அவன் யாவனென்று நோக்குகின்றனர். உண்மையை யறிந்த மந்திரி அவன் மாரனென்று அரசனிடம் தெரிவிக்க, அரசன் அடங்காச் சினங்கொண்டு, அவனை உடனே வெட்டும்படி மந்திரிக்கே கட்டளை

யிடுகிறான். ஏவலர் மாரனைப் பிடிக்க வருகின்றனர். அக்கூட்டத்தில் தன்சேனையோடு வந்து மறைந்திருந்த தஞ்சையரசனது மந்திரி சுமுகன் திடீரென அரசனருகில் தோன்றி, ஏவலரை அதட்டி, அரசனது அநீதியைக் கண்டித்துப் பேசி சோழரின் புத்திரனான மகேந்திரனே மாரனாகவந்தவனென்று உண்மையைக் கூறுகிறான். யாவரும் திகைக்கின்றனர் ; இறுதியில் திருமணம் நிறைவேறுகிறது.)

சுயம்வர மண்டபம் : கோடிக் கணக்கில் மனிதர் நிற்கின்றனர். யானை குதிரை காலாள் முதலிய படைகள் அணி வகுக்கப்பட்டு நிற்றல்; எண்ணிக்கையற்ற மன்னவர் வரிசையாக அமர்ந்திருத்தல்; தொண்டைமான், கோமளதேவி, மந்திரிமுதலியோர் உரையாடுதல்.

அரசன் :— மந்திரி ! யாவரும் வந்தன ரின்னமும்
சுந்தரி யென்சுதை தோன்றிட வில்லையே.
(அரசர் குழாத்தைக் கண்டு திகைத்து)
இத்தனை மன்னரில், எதையும றிந்திடாப்
புத்திரி நற்குணம் பொருந்தியோ னெவனெனக்
கண்டிடல் கூடுமோ ? கவினொளிர் வடிவினைக்
கொண்டவன் தன்னையே கொள்ளநி னைப்பளே !
அன்னவன் முரடனோ, அறிவிலா மூடனோ,
என்னுயர் நிலைமையிற் கேற்றகு லத்தனோ,
நற்குண முடையனோ, நவைசெறி சிதடனோ ?
அற்பனே வாய்ப்பனே லகற்றுத லெங்ஙனம் ?
என்றவச் செல்வியின் விழியிலும் மனதிலும்
நின்றவக் கடவுளே தீமையை நீக்கவும்,
புன்மைவந் தெய்திடா தென்குலம் புரக்கவும்
பன்முறை மனதாற் பரவித் துதிக்கிறேன்.
வந்தனள் வந்தனள் வாமமே யுருவென
வந்தவென் பொற்கொடி வானுறு தேவரும்
வணங்கிட வொளிர்ந்திடு மெழிலுறு தோகையாள்.
பிணங்கிய நடையொடு பெடையன மேங்கிடத்

தோன்றினள் மன்னவர் தொகையெலாந் திகைத்துத்
தோன்றின ருயிரிலா ஓவிய மொத்தனர் ;
தானாய் வரித்தலிற் றாழ்வில தாயினும்
மானா பரணனும் மன்னனென் றேத்திடு
மென்னுயர் நிலைகெட இழிமண நிகழுமேல்
என்னுயிர் ஒழிதலே இறுதியா முறுதியே.

கோமள :— கடவுளே கதியென வெண்ணிய வெமதுணை
விடயுளங் கொள்வனோ ! வீணில யிர்த்தலேன் ?
கோன்மையு முயர்வும் குவலயம் போற்றிடு
மேன்மையு மனைத்தும் எம்மா லானவோ !
வருத்தோ னிறைவனே வாங்குதல் கருதுமேல்
சகத்தோ ரெவரெனுந் தடுத்திட லாகுமோ !

அரசன் :— வந்துளோ ரெவ்வொரு மகிபரி னாற்றலும்
சுந்தரி யுணர்தரச் சொல்பவ ளியாவள் ?
அன்னாள் தவறவெம் மின்னாள் பிழைக்கும் ;
ஆதலி னதற்கொரு மேதையை விடுத்தையோ ?

கோம :— மாலினி யத்திறம் வாய்ந்தநற் பெண்ணவள்
போலினி யெதையும் புரிபவள் கண்டிலேன்.
கப்பிய வேந்தரின் திப்பிய குணமெலாம்
மந்திரி தெள்ளிதில் மாலினிக் கியம்புவர் ;
சிந்தனை செய்தலேன் ! எந்தம தாருயிர்ப்
புத்திரி இதனிற் புரியாள் தவறையே.

(சிலதியர் சூழவந்த திலோத்தமா பெற்றோரை வணங்குகிறாள்).

அரசன் :— மந்திரி ! வருவீர் ; மாபெருந் தவத்துதி
யெந்தம தொருமகள் இனிதினி வாழலும்
எம்முயிர் நிற்றலு மெங்குல நிலைத்தலும்
உம்மொரு கூற்றினு ளுளவா மென்னல்மிகை.
குறைமிகை யின்றிநீ ருள்ளவை கூறியென்

பிறைமதி யருஞ்சுதை, பீடிலா இழிமண
மாகிய காரிருள் மேக மறைத்திடா
தென்குல விசிம்பி லிலங்கிட முயலுவீர்.
ஈண்டிய மன்னவ ரேற்றமு மிழிவுங்
காண்டகு விதநீர் கழறிவி ளக்குவீர்.

மந்திரி :— அங்ஙனே புரிகுவே னாக்கினை மறவேன்.
எங்கணு முறைவோ னெம்மிறை யருளால்
நன்மையே நிகழ்ந்திடு நம்பினோ மவன்றாள் ;
பன்முறை தவலுத லென்செய லாற்றும்;

அரசன் :— அவனரு ளாகுக ; நவிலத் தொடங்குவீர்.

(மந்திரி முதலிலும், பின்னர் முறையே மாலினி, திலோத்தமா, சிலதியர் முதலியோரும் செல்லுதல்; ஒவ்வொரு அரசனது வரலாறும் கூறப்படுகிறது).

அரசன் :— (கோமள தேவியிடம்)
கண்டையோ அதிசயம் ? கவிந்ததன் சிரமெடுத்
தண்டையார் நிருபரை யணுவெனு நோக்கிடா
தேகுநம் எந்தெழிற் றோகையா ளெங்ஙனம்
பொருத்த மறிவளோ ! புத்தியி னழகினைத்
தெரித்திடு மானனந் தெள்ளிதி லாடிபோல்.
முகமே நோக்கிலள் மொழிசெவி கொளாதுதன்
அகமே நோக்கிந டந்தனள் வாளா;
கலிங்கன் மாராடன் கன்னடன் கணபதி
குலிங்கன் முதலுறு கோவிளங் குமரரை
மதியா தேகினள் ; மாபெரும் விந்தையே !
பதியே இலனெனப் பகர்ந்திட நினைவோ !
மனப்பே யெங்ஙன மவள்தனை யீர்த்ததோ !
வனப்பே வடிவென வந்தொளிர் சிலரையும்
பின்னுற விடுத்தனள் பெயர்ந்தன ளெப்புறம் ;
இன்னமி ருப்பவ ரிருவரோ மூவரோ !

கோமள:—விலைமதிப் பறியா விண்ணவர் நிதிநிகர்
சிலைநுதல் மணக்கும் சிறப்பெவ ரெய்திடும்
பாக்கிய முடையரோ ! பதறிய தென்மனம்.

அரசன்:—என்னே அதிசயம்: இறுதியி லிருப்பவன்
முன்னே சென்றுதன் முகத்தையெ டுத்தனள் !

கோமளா:—அங்ஙன மிருப்பவ ரெந்நக ரதிபரோ ?

அரசன்:—கங்கதே யத்தின னிங்கித குணத்தினன்,
கல்வியின் பீடிகை செல்வியி னீடிவன்,
நேமமொ ழுக்கினன். வாமமே வடிவினன்.
சோழனை மெத்தவு மாழவெ றுத்தவன்
குணமணி யிவனே மணமக னாகுதல்
சாலவு நன்றாந் தையலு மவனையே
மாலையிட் டணுகினள் ! மாபெரும் விந்தையே !!

(கடைசியிலிருந்த கங்கதேயமன்
னனுக் கண்டையில் புரவியிலி
ருந்திறங்கிய ஒரு வீரனுக்கு
திலோத்தமா மாலை யிடுகிறாள்.
யாவரும் வியப்படை கின்றனர்.

கோமள:— (வியப்புற்று)
செய்கையைக் காட்டினும் செப்புதல் விந்தையே !
கைதவ மறிந்திலேன் கண்களும் பொய்த்தவோ ?
கங்கனோ பெற்றனன் மங்கையின் மாலையை ?
நன்றே யுரைத்தீர் ! அண்டையோர் புரவியில்
நின்றிழி யொருவரே வென்றனர் நங்கையை.

அரசன்:—(திகைப்பும் முனிவுமடைந்து)
கனவோ யாவும் ? கழறின வாய்மையோ ?
நினைவே யாகுமோ ? நின்விழி பிழைத்ததோ ?
மெய்யின் காவல! விரைவில ழைத்துவா.

(மந்திரி, திலோத்தமா, புரவி வீரன்,
ஏனையோர் யாவரும் அரசனிடம்
வருதல்.

அரசன்:— (முனிவுடன் உற்று நோக்கி)
என்னே விநோதம்! இந்திர சாலமோ !
முன்னே எங்ஙன மோஇவ னானனங்
கண்டதாய்த் தோன்றுதே! கழறுவீர் மந்திரி!

மந்திரி:— கூறுத லெங்ஙனங் கொப்பெரு மண்ணலே !
மாரனோ ! யல்லனோ மாற்றுரு வெய்தினன்.

(யாவரும் திகைத்தல்.)

அரசன் (பொங்கிய சீற்றத்தோடு)
ஆகா ! இப்பதர் ஆக்கினை யின்விதம்
சாகா தெங்ஙனந் தவறியிங் குற்றனன் ?
பதடியி னானனம் பார்த்தலு மிழிவாம் !
சதடன துயிரினைச் செகுப்பீர் ஏவலீர் !
மந்திரி ! நீவிரும் அண்டையி லிருந்திவன்
தந்திர மாயினித் தப்பா தொழிதலைக்
காண்பீர். இவனுடல் கண்ட துண்டமாய்
வீண்பட வெட்டுவீர்; எம்பணி தவறுமேல்
கண்களை இழப்பீர் ; கழறிய துறுதியே.
(மாலினியை நோக்கி)

அத்தான் சென்றதால் மெத்தவு மாகுலம்
பெற்றிவ ளேங்கிப் பெரிதுழ ழன்றனள்.
இன்னா ளாய்மனத் தெளிவிலா திருந்தனள்.
இந்நா ளதனா லிப்பிழை நேர்ந்தது.
மாலினி ! இக்கணம் மங்கையை யழைத்து நீ
உட்புற மேகுவாய் உரியன புரிகுவாய்.

திலோத்தமா (தந்தையை வணங்கி)
கணவரை இழந்தொரு கணமெனு மென்னுயிர்
பூதல நிற்குமோ ? மாதெனை வீட்டலே
தீதில தாகுமா லென்னையு மெனதரு
கொழுநரோ டிணைத்துக் கொன்றிடக் கூறுக;
விழுமிய வண்ணலே! வேண்டியி றைஞ்சினேன்.

அரசன்:—எவரினு மிழிந்தோ னெமக்கோ மணமகன் !
தவறினால் வீழ்ந்தது தாமமே யாதலின்
மணமே நிகழ்ந்தில; அமங்கல மன்றிது.

திலோ:— எந்தாய் ! போற்றினே னென்முழு மனதுடன்
தந்தேன் மாலையான்; தவறே யன்றிது.
இவரே கொழுநரா யிப்பிற வியிலே !
இவரே கிடயா னென்னுயி ரித்தலம்
பாய்ப்பே னிச்சயம் மண்புகூர் கொற்றவ !

அரசன்:—(அன்பும் கோபமும் தோன்ற)
பித்தங் கொண்டவர் சித்தக் குறியிதோ?
பேதர் யின்னமும் பேசத் துணிந்தையோ ?
யாதே கூறினை ? யாரென வெண்ணினை ?
கசடனை யிழிந்தவிக் கயவனை மணந்தென்
வசையிலா மரபினி மாசுற வரியணை
களங்கமு மெய்திடக் காரியம் புரிதியோ?
இவ்விழி மணநீ விழைதலி லெங்குலத்
தெவ்வனுஞ் சோழனை யேற்றிட விரும்பினு
மியைவே னென்னுயிர் விலகினு மிதையான்
மணமென நினையேன் மறுமொழி வேண்டேன் ;
மகளே யிழுக்கினு மானமி ழப்பெனோ !
எவரே சிலதியர் ! இப்பெரும் பேதையை
இக்கண மழைத்து நீ ரேகுவீ ருட்புறம்.
தக்கன புரிந்திவள் தளர்மனம் மாற்றுவீர்.
என்னே காவலீர் ! இன்னமும் தாமதம்?
முன்னே நில்லா தகற்றுவீர் மூர்க்கனை.

(ஏவலர் மகேந்திரனிடம்நெருங்க
மனிதர் குழாத்தில் புதிய பறை
முழக்கமும் ஆரவாரமும்
உண்டாகின்றன. ஒரு புரவி
வீரன் அரசனிடம் கம்பீரமாக
வருகிறான்.)

என்னே ! முரசினை யெற்றுத லெவனோ ?
முன்னே புரவியை யூர்ந்தெவ னுறுபவன் ?
பின்னர் படைக்குழாம் பெயர்ந்து தொடர்ந்தன!
(உற்று நோக்கி)

முன்னே யிருப்பவன் துன்னலன் தஞ்சையான்
சோழனின் மந்திரி சுமுகனே யல்லனோ !
தஞ்சைகெ டுத்தவிப் பஞ்சையர் தம்மையிம்
மனையுட் புகுத்திய மாபெருந் தீயவன்
தனையுட னெற்றுவேன் ; தனிமைந் தெய்தியோன்
மருமா னிறந்ததால் வருவோ ராவரோ ?
செருக்கினா லென்னொடு செருச்செய வாசையோ ?

சுமுகன் :— (மகேந்திரனுக்கருகிலிருந்த ஏவலரை அதட்டி)
ஏவலீர் ! விலகுமின் ; கேவல மிழிந்தநீர்
நிற்பவர் செருப்பையு நீக்குதல் களங்கமாம் ;
தொடுபவன் கரத்தையா னெற்றுவே னந்நொடி
(அரசனை நோக்கி)
கொற்றவா ! இஃதுநுங் கோன்மையோ ? இங்ஙன
முற்றவர் யாவரின் முன்சபை வரித்தவோர்
கணவனை யொழிப்பது காவலர் தகைமையோ ?
தானே வரித்தது தகைவில தாயினும்
நாணா தேற்றலே நடுநிலை யல்லவோ !
மாலைய ளித்தது மங்கையின் குற்றமோ ?
மூலையில் நின்றவிச் சீலர்தங் குற்றமோ ?
குற்றமே யாகினுங் கொலைபெறுங் குற்றமோ ?
சற்றெனு நினையா தற்றனிர் முனிவைநீர்.
பணித்தீ ரிவர்சிரந் துணித்திட ஏவினீர்.
என்னே செங்கோல் ! இத்தனை மன்னவர்
முன்னே இங்ஙன மொழுகுதல் முறைமையோ ?
நீதிபு ணார்ந்தவ ரெவரே கொடியவிப்
பாதகங் கண்ணுறப் பதறா தமைகுவர் ?

அரசன் :— (முனிவோடு)
விழையா மனைதனில் அழையா விருந்தென
வந்தனை துணிந்தனை வன்மொழி கூறிட;
கேவல மிழிந்தவ னேவல னொருவனை
மருமக னாக்கவோ மறுமுறை புகன்றனை ?
மன்னவ ரொருவரே மாலையிற் குரியவர் ;

கன்னிகை யறியாத் தன்மையாற் பிறன்றனை
வரித்தா லதையாம் மறுத்தலே யறநெறி.
யாவையு மறிந்தையோ? பாவைக ரந்தனை
ஏவலன் பற்றவு மேளன மெய்தவும்
எண்ணியு ரைத்தையோ இழிதக வித்தனைநீ ?
நண்ணிய பேதையின் நாவைய கற்றுவீர் ?
பாய்வீர் ஏவலீர் ! நாய்தனை யோட்டுவீர்.

சுமுகன் :— (கம்பீரமாக)

சொன்னஇவ் வசையெலா முயர்குலந் தோன்றிய
மன்னவர் மொழிவது மாஇழி வல்லவோ?
இழிந்தவிச் சொற்களா லென்றனை யெள்கினீர்.
மொழிந்தது பொறுத்தேன் முந்திய நட்பினால்.
வேறெவ ராயினும் வீரிக் குரிசிலை
ஏவல னென்னுமக் கேவல மொழியினாற்
குறித்தவ ராவரேற் கூறிய நாவையான்
தறித்தது நிச்சயம் தக்கணம் வாளினால்.
கோமக னார்க்குநீர் மாமனா ராதலின்
வணக்கங் கருதியான் சுணக்கங் காட்டினேன்.
இங்ஙன நிற்பவ ரெங்கோ விளவலென்
ஞானக் குறிகளா லறியா திருந்தது
விந்தையே! வனோ வியப்பொடு நோக்குதல் ?
சுந்தர புருடரே சோழரின் குலமணி.

(அரசன் சோமளதேவி, திலோத்
தமா முதலிய யாவரும் துணுக்
குற்று கல்லாய்ச் சமைகின்றனர்).

அரசன் :— (ஐயத்தோடு)

புதுமையு ரைத்தையே ! போற்றிய வின்னவன்
பதியாள் சோழரின் புதல்வனோ உண்மையில் ?
பித்தமே கொண்டையோ ? புத்தியின் சிதைவிதோ?
மெய்யின் காவலில் மிகநா ளிருந்தவிப்
பொய்யனும் மாரனோ புரந்தர னாயினன் ?

சுமுகன்:— என்சுதன் மகிபதி ; இன்னவர் மகேந்திரர்;
சின்னாள் முன்னரே இருவரு மெழுந்தனர்.
தேயம னைத்தினுஞ் சென்றிவர் நோக்கிட
மேயினர்: இந்நக ரெவ்வா றுளதென
உணர்வான் ஏவலர் உருக்கொடு புக்கனர் ;
பணிதனை யேற்றன ரணிமைய டைந்தனர்.
மாரனும் முறையே வீரனு மாயினர்.
நமதருஞ் செல்வியை நோக்கினர் மகேந்திரர் ;
உண்மையை யோரா தொருவரை யொருவர்
விழைந்தனர் நட்டனர் ; இருமன மொன்றின.
இழிந்தவிவன் சுதனுந் திலோத்தமை மீதிலே
வேட்கைய டைந்தனன்; வினைபல துணிந்தனன்;
வாட்கிரை யாம்வரை வஞ்சக மியற்றுவான்
சூழ்ந்தன னிவருயிர் தொலைத்திட வெண்ணினன்.
வீழ்ந்தன னவனே விலக்கொணா விதமாய்த்
தன்வலை யானே தன்னுயிர் நீத்தனன் ;
என்மக னெனத்தகா திழிந்தோன் மாய்ந்ததால்
மகிழ்வுயா னெய்தினேன் ; மன்னவ ரிவர்தம்
புகழ்பெறு நீர்மையும் புத்தியின் மாட்சியுங்
குணநல முதலிய கொண்டவ ருளரோ ?
தொல்லைநல் வினையோ, துன்னிய மலைசிகர்
அல்லலும் பகைமையு மகற்றிட இறைவன்
சூழ்ந்ததோ வறிகிலேன் சுதையு மிளவலும்
ஆழ்ந்தவிக் காதலை யடைந்தனர் காணுமுன் ;
இருவருக் கிருவரே இணையெனும் பெற்றியர்.

(யாவரும் வியப் பெய்துகின்றனர்.)

கோமள :— கொற்றவ ! வெண்ணுவீர் சற்றுமு னுரைத்ததை.
பகைவரே யென்னினும் பார்த்திபர் குலத்துதி
தகைவின ராவரேல் தனிமக வின்காம்
பெற்றிட விணங்குவே னென்றதை மறவீர்.
சற்றெனு மினிமேற் சாற்றுதற் கிலதால்
மணமகன் றனையினி மருமக னாக்கொளல்
அணியே யாமா லங்ஙனம் புரிகுவீர்.

அரசன் :— (சிறிது சிந்தித்து)
நடந்தன யாவும் நன்மைக் கானவோ !
முடிந்ததோ இங்ஙனம் முழுமுதற் கடவுளால் !
அவனரு ளாகுக ! அரசிளங் குமரரே !
அரியணை மீதுநீர் அமருவீர் ; உந்தமை
அறியாத் தன்மையாற் புரிந்தேன் தீமைகள்.
கமைபுரிந் தென்சுதை கரங்கொண் டருளுவீர்.
பகைமையோ ரணுவெனும் பாரா தெம்மகள்
தகைமையே கோரினீர்; தாழ்வுக ளெய்தினீர்.
நும்மன மேன்மையை நுவலுதல் கூடுமோ !
செம்மையே வடிவாம் செம்மலீ ரினியெனும்
பாலொடு தேனெனப் படுகிற தன்மையே
போலவெந் தொடர்பினிப் பொருந்திட வொழுகுவோம்.
(மேளவாத்தியம் முழங்க
சிம்மாசனத்திலமர்ந்து.)

மகே :— மாமனே! என்பிழை மன்னித் தருளுக.
போமினி யெம்பகை; பொருந்தா பொருந்தும்.
குணம்பெறு மெல்லியற் கோதைநுஞ் சுதையினாற்
பணியார் வணங்குவர் ; பகையிலா வுலகாம்.
ஒப்புயர் விலாக்குண மணிதனை யுதவினீர்.
இப்புவி மீதுமக் கெய்தொணா வரிதெது !

அரசன்:— என்னே பெருந்தகை ! என்னே ஆதரம் !
பொன்னே யென்கோ ! பூதவ மென்கோ !
மணியே யென்கோ ! மாதவ மென்கோ !
இன்றே பாக்கியம் ! நன்றே பாக்கியம் !
(திலோத்தமையை நோக்கி)

மகே:— கண்மணி திலோத்தமைக் கனியே பாவாய் !
பெண்மணி வருந்தேல் ; உண்மையா னறியாத்
தன்மையா லுன்மனம் புண்பட லானது.
பொறுப்பா யென்பிழை ; புனிதைநி னக்குயான்
சிறப்பினை நாடியே செய்தே னிதுவரை.
முழுமதி யாகுநின் முகவொளி மறைத்த

செழுமுகி லாகிய வின்னல கற்றுவாய்.
இரங்கினே னிதுவரை இயற்றிய செயற்குயா
னிறைஞ்சினே னின்முக வியற்கை மலர்ச்சிநீ
கொள்ளுவா யென்னொடு குளிர்ந்தொரு தேன்மொழி
சொல்லுவா யாகினிற் சுகம்பெறு மென்னுளம்.

திலோ:— அன்னையுந் தாதையும் முன்னறி கடவுளர்
என்னவு ணர்ந்ததை என்றும் மறந்திலேன்:
அந்தகர் யானையின் வடிவினை யறியமுன்
வந்தது போலயான் வகையுண ராமலே
பெற்றேன் குருடியாய்ப் பெரியோர் நும்மனம்
பற்றிய நன்மையைப் பரமன தருளினால்.
கழலிணை பணிந்தனேன் கமிப்பது நும்பொறை.
(வணங்குகிறாள்)

அரசன் :— என்மன மிக்கன மெய்துபே ரின்பமோ
ரளவினிற் பட்டதோ ! யாரெனை யொப்பவர் !
இளையீ ரிருவிரு மின்னொரு முறையெதிர்
மாலைகள் மாற்றுவீர் மகிழ்ந்தினி வாழ்குவீர்.
(ஜயபேரிகை முழங்க, மாலைகள்
மாற்றப்படுகின்றன.. அரசன் முத
லியோர் ஆசி கூறுகின்றனர்.)

இருவரும் :— தந்தையே ! வந்தனம் ; அன்னையே ! வந்தனம்.
உந்தம தாசியும் ஒப்பிலா வாசையும்
வந்தெம தாகுக வாணாள் முற்றிலும்.
(அப்போது கும்பலில் ஒருவனது
பெருத்த குரல் கேட்கிறது.)

சோதிடன் :— மன்னவா ! அன்றுயான் சொன்னவா முடிந்தது.
பொய்யே னல்லேன் ; மெய்யே சோதிடம்.

அரசன் :— சோதிடர் திலகமே ! சொற்றநின் திறனறி
யாதிடர் இயற்றினேன் ; யாவையு மறப்பையோ ?
எத்தகை விருதுகள் வெகுமதி யென்வயின்
நத்தினு மளிப்பேன் நாணா துரைப்பாய்.

சோதிடன் :— என்மொழி பொய்த்திடா திறுதியில் முற்றிலு
நன்மொழி யானதே நான்பெறு பரிசாம்.
மன்னவர் சிறப்பும் கன்னிகை யின்பமும்
என்னவா ; அவற்றினை இறைவன் பயந்தனன்.

அரசன் :— எல்லாம் வல்லவ னெம்பிரா னாற்றலைச்
சொல்லா லுரைத்திட வல்லா ருளரோ ?
அணுவினு மணுவாய் அனைத்திலும் மகத்தாய்
கனவிலு மகலாத் துணையாம் அவன்றாள்
நம்பினாற் றீமைகள் நண்ணுமோ !
எழுவீர் ; அவன்பத மேத்தியி றைஞ்சுவேம்.

(யாவருமெழுந்து தேவாலயம் செல்லல்)

(காட்சியின் முடிவு)

சுபம் ! சுபம் ! சுபம் !

(நாடகம் முற்றிற்று.)

மேனகா

18-வது அதிகாரம்.

டம்பாச்சாரி விலாசம்.

"நண்டுக்குத் திண்டாட்டம்; நரிக்குக் கொண்டாட்டம்" என்று ஜனங்கள் ஒரு பழமொழியை வழங்குதல் உண்டு. அவ்வாறு வராகசாமி வண்டியில் அறைபட்டு, முழங்காலை ஒடித்துக்கொண்டு, வைத்திய சாலையிற் கிடந்து உயிருக்கு மன்றாடிய தருணத்தில், அவனது அரிய சகோதரிமா ரிருவரும், சாமாவையரும் அவனுக்கு மறு கலியாணம் செய்வதற்குரிய ஏற்பாடுகளையும், அவன் வீட்டிற்குத் திரும்பி வருவதற்குள் பங்களாவை வாங்கிக்கொண்டு அதற்குப் போய்விடுவதற்குரிய காரியங்களையும் செய்யத் தொடங்கினர்; வராகசாமி அவசியம் பிழைத்துக் கொள்வரென்றும், பத்துப் பதினைந்து நாட்களில் அவனை பங்களாவிற்கு அழைத்துவந்துவிட வேண்டுமென்றும் நினைத்தனர். வராகசாமி வீட்டிலிருந்தால் அவன் பொருட்டு ஒவ்வொரு நாளும் இரண்டு முறை சமையல் செய்வதில் அப்பெண்டிர் தமது பொழுதைப் பெரும்பாலும் போக்குவர். இப்போது அவனில்லாமையால் விடுமுறை பெற்றவர்போல தாமே அரசாய்க் காரியங்களை நடாத்தி, மூன்று நாட்களுக் கொருமுறை சமையல் செய்வதும், பட்சணம், பலகாரங்களைத் தயாரித்துத் தின்பதும், சாம்பசிவம், கனகம்மாள் முதலியோருக்கு சென்னையில் நேரிட்ட துன்பங்களைப்பற்றிப் புரளிசெய்து, கைகொட்டி நகையாடுவதும், பங்களாவில் கலியாணத்தை ஆடம்பரமாகச் செய்வதைப் பற்றி சாமாவையரிடம் வாதுகள் செய்வதும், வண்டியில் அறைபட்ட வராகசாமியின் மூடத்தன்மையைக் குறி

த்து ஏளனம்செய்வதும் வேலைகளாய்ச்செய்து தமது பொழுதை நித்திய கலியாணமாகப் போக்கிக்கொண் டிருந்தனர்.

சாமாவையரோ தமது சொந்த நலத்தைக் கருதாது, அவர்களது நன்மையையே மனதிற் கொண்டவரைப்போல நடந்தாராயினும், தம்மிட மிருந்த ஒன்பதினாயிரத் தைந்நூறு ரூபாயை அப்படியே தமக்கு அருப்பணம் செய்துகொள்ள நினைத்திருந்தார். பங்களாவை தமதுபேரில் விலைக்கு வாங்கி சந்தேகத்திற்கு இடமின்றி அவர்களை ஐந்தாறு மாதகாலம் அதில் குடியிருக்க விடுத்து, அதற்குள் அவர்களிடம் ஏதாவது முகாந்திரத்தை முன்னிட்டு சண்டையிட்டுக் கொண்டு பிரிந்துபோய், வக்கீல்மூலமாக நோட்டீசனுப்பி அவர்களை பங்களாவிலிருந்துவெளியேற்ற நினைத்திருந்தார். நிற்க, அவருடைய சொந்த ஊராகிய கோடாலிக் கறுப்பூராரான தமது நண்பர் ஒருவரின் பெண்ணை வராகசாமிக்கு மறுமணம் புரிந்துவிட்டு, அதனால் ஏதாவது பொருள் சம்பாதித்துக் கொள்ளவும் நினைத்திருந்தார்.

வராகசாமி வைத்தியசாலைக்குச் சென்று ஒருவாரமானது. கும்பகோணத்தில் குடியிருந்த சம்பந்தியிடம் சென்று, முகூர்த்த நாளை நிச்சயித்துக்கொண்டு, நாகைப்பட்டணம்போய்பங்களாவை விலைக்கு வாங்கிக்கொண்டு, விரைவில் வந்துவிடும்படி பெருந்தேவியம்மாள் கோமளம்மாள் இருவராலும் சாமாவையர் அனுப்பப்பட்டார். அவர், சென்னையிலிருந்து புறப்படும் ரயிலில், அன்றிரவு ஏறி மறுநாட் காலையில் கும்பகோணம் வந்து சேர்ந்தார். அவருடைய வருகையைப்பற்றி முன்னாகவே தமது ஆப்த நண்பரான சம்பந்திக்கு கடிதத்தின் வாயிலாக அறிவுறுத்தியிருந்தார். ஆகவே, சம்பந்தி வரதாச்சாரியார் சாமாவையருடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்.

வராகசாமியின் முதல் மாமனாரான சாம்பசிவையங்காரின் குணத்தையும், முதல் மனைவியான மேனகாவின் குணத்தையும் நமது வாசகர்கள் நன்றாயறிவார்கள்.

அவனுக்கு இரண்டாவது மாமனாக வரப்போகும் வரதாச்சாரியாரின் நிலைமை, குணம் முதலியவற்றையும், மேனகாவிற்குப் பதிலாக வரப்போகும் நாட்டுப்பெண் பங்கஜவல்லியின் அழகு, குணம் முதலியவற்றையும் அறிந்துகொள்ள, நமது வாசகர்கள் அவாவுவது இயற்கையே. ஆதலின், அவர்களைக் குறித்த சில விவரங்களை இங்கு கூறுவது அவசியமாகிறது.

கும்பகோணத்திற் கருகில் ஓடும் கோள்ளிட மென்னும் ஆற்றங்கரையின்மீது கோடாலிக்கறுப்பூர் என்று ஒரு சிறிய ஊரிருக்கிறது. அதுவே நமது சாமாவையர் திருவவதரித்த புண்ணிய ஸ்தலமாகும். அந்த ஸ்தலத்தில் வரதாச்சாரியார் என்னும் பெயரைக்கொண்ட ஒரு சீமானிருந்தார். அவருக்கும் சாமாவையருக்கும் இரகசியமான பல காரணங்களால், ஆழ்ந்த நட்பு ஏற்பட்டு நெடுநாளாயிருந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவளர்ந்து வந்தது. அந்த வரதாச்சாரியாரே இப்போது வராகசாமிக்கு இரண்டாவது மாமனாக வர விருப்பங்கொண்டவர். அவரைப் பெரிய அகத்து (வீட்டு) வரதாச்சாரி என்று யாவரும் அழைப்பது வழக்கம். அவருடைய முன்னோர் மிகுந்த செல்வவந்தராயும், ஏராளமான விலையுயர்ந்த நிலம், கால் நடைகள் முதலியவற்றை யுடையோராயும், அவ்வூருக்கே தலைவராயும், ஆசார ஒழுக்கங்களிலும் இணையற்றவராயும் இருந்தனராம். அவ்வளவு பெருத்த செல்வமும், அவருடைய பாட்டனார் காலத்திலேயே "செல்வோம்" என்று சொல்லிக் கொண்டு போய்விட்டதாம். அவர் கும்பகோணத்தில் தனலட்சுமி என்ற ஒரு அழகிய தாசியினிடம் சரணம் புகுந்திருந்தமையால், அவரது வீட்டிலிருந்த தனலட்சுமியும் கும்பகோணத்திற்குப் போய் விட்டாள். அவளிடம் அவருக்கிருந்த ஆசையை இவ்வளவு அவ்வளவென்று அளவிட்டுக் கூறுதல் முடியாதகாரியம். அவருடைய கடைசிக்காலம் வரையில் அந்தமோகம் அதிகரித்துக்கொண்டே வந்ததன்றி அது ஒருசிறிதும் குறைவில்லை.

தாம் இறக்குந் தருணத்தில் அவளுடைய மடியில் தலையைவைத்துக்கொண்டு உயிரைவிட வேண்டுமென்பது அவருடைய கடைசி வேண்டுகோள். அந்தப் புண்ணியவதி அதை அவருடைய விருப்பின்படி நிறைவேற்றி வைத்தாள். அவருடைய புத்திரர் (வரதாச்சாரியாரின் தந்தை) நன்றாகப் படித்தமேதாவி; மகா வைதிகர்; தந்தை எவ்வளவுக் கெவ்வளவு தனலட்சுமியின்மீது வாஞ்சைவைத்தாரோ அவ்வளவுக்கவ்வளவு புத்திரர் ஊரிலுள்ள ஜனங்களின்மீது அன்பைவைத்து மகா சீல குணமுடையவரென்று நற்பெயரெடுத்தார். அவர்காலத்தில் அரை வயிற்றுக்குப் போதுமான வருமானமுடைய நிலமும் பெரிய மாடி வீடு ஒன்றும் மிகுதியாய் நின்றன. எதை இழக்கினும் தமது மாடிவீட்டைமாத்திரம் இழக்க மனமற்றவராய் அவர் அதிலேயே குடியிருந்து ஊர் ஜனங்களால் ஆதரிக்கப்பெற்று தமது காலத்தை நல்லகாலமாய்க் கடத்தினார். அவர் தமது புத்திரரான வரதாச்சாரியை வைதிகத் துறையிலே திருப்பிவிட எவ்வளவு பாடுபட்டாராயினும் அவர் பாட்டனாரின் குணத்தைக் கொண்டவராயிருந்தார். அவர் தந்தைக்குத் தெரியாமல், கும்பகோணத்திற்குப்போய் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் பயின்று, எண்ணிறந்த கெட்ட நண்பர்களின் தொடர்பினால், செய்யத்தகாத காரியங்களையெல்லாம்செய்து, கெட்டலைந்து, பரிட்சைகள் ஒன்றிலேனும் தேறாமல் வீட்டிற்குவந்து சேர்ந்தார். கிழவருடைய கடைசி விருப்பம் வரதாச்சாரிக்கு ஒரு பெண்ணைக் கலியாணம்செய்து வைத்துவிட்டுப் போகவேண்டுமென்பதாகும். அவர் அதைப் பல நண்பரின் உதவியால் நிறைவேற்றி வைத்துவிட்டு விண்ணுலகடைந்தார். புத்திர சிகாமணி, உலகவிஷயம் யாவற்றையுமறிந்தவராயிருந்தார். ஆனால் எத்தகைய தொழிலையும்செய்து ஜீவனஞ்செய்ய வகையறியாது தவித்தார். தந்தையைப்போலப் பொருள்தேட, அவர் வைதிகரல்லர்; வெளியூர்களில் சர்க்கார் உத்தியோகம்பெற, இங்கிலீஷில் தக்க திறமையும் பட்டப்பேறுமில்லை. ஆகையால் அவர் எதை போஜனஞ் செய்தார்? தம்முடைய

வீட்டிலேயிருந்து வீட்டையே போஜனஞ்செய்ய ஆரம்பித்தார். வீட்டை அடமானம்வைத்து, பணத்தில் ஒரு பாகத்தை வைத்துக்கொண்டு சாப்பிட்டார். இன்னொரு பாகத்தில் சில வெள்ளிப் பாத்திரங்களையும், தமக்கும் தமது மனைவிக்கும் தேவையான சில உயர்ந்த ஆடையாபரணங்களையும்வாங்கிக்கொண்டார். அவைகளை வைத்துக்கொண்டு வெளிவேஷம்போட ஆரம்பித்தார். அவருடைய ஆசையோ ஆகாயத்தை யளாவியது. தாம் ஏழை என்பதை அவர் நம்பவே இல்லை; பிறர் அவ்வாறு குறித்துக் கூறியதையும், அவர் கடுமையாகக் கண்டித்துவந்தார். ஆகையால் அவருக்கு அவ்வூரார் எத்தகைய சிறிய உதவியும்செய்ய முன்வரவில்லை. தாம் பெரிய அகத்து வரதாச்சாரியார் என்பதை அவர் மறக்கவே இல்லை. அவர் பெரிய அகத்தில் குடியிருந்ததன்றி, அவர் மனதிலும் பெரிய அகம் குடிகொண்டிருந்தது. அவர் எப்போதும், ஒருசாண் அளவு அகன்ற ஜரிகையுள்ள வஸ்திரங்களையணிவார். வெள்ளிப்பூண் கட்டப்பட்ட வழுவழுப்பான கறுங்காலித்தடி யொன்றும், இங்கிலீஷ் சமாச்சாரப் பத்திரிகையும் அவர்கையில் எப்போதும் இருந்தன. காலில் உயர்ந்த ஜோடு அணியாமல் காலைக் கீழே வைக்கமாட்டார். அவருடைய சிவப்புத்தோலும் மடிப்புத்தொந்தியும் அவர் பெரிய மனிதர் என்று பொய்ச்சாட்சி கூறின. அவர் எதைச் சொன்னபோதிலும் அழுத்தந் திருத்தமாகவும், அதற்குமேல் அப்பீலில்லை யென்று நினைத்தும் பேசுவார். அவர் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களின் விஷயங்களைப்பற்றிப் பேசுவாரன்றி, சென்னை, கும்பகோணம் முதலிய ஊர்களின் செய்தியைப் பேசுதல் தமக்குச் சிறப்பல்லவென்று கருதினார். அவருடைய உண்மை மதிப்பை உள்ளபடி உணர்ந்த அவ்வூர் ஜனங்களிடம் அவரது சரக்கு அதிகமாக விற்பனையாகவில்லை. ஜனங்கள் அவரை வரதாச்சாரி யென்பதற்குப் பதிலாக டம்பாச்சாரி என்ற பெயரால் குறித்தனர்.

அவருக்கு வாய்த்த மனைவியோ, அவரைவிடப் பதின்மடங்கு தேர்ச்சிபெற்ற பகல்வேஷக்காரியா யிருந்தாள். அவள் எப்போதும் வாயிற்கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு உட்புறத்திலேயே இருப்பாள். அயல்வீட்டுப் பெண்டிர் "ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டால், பெண்பிள்ளைகள் தமது வீட்டின் படியை விட்டு அப்புறம்போவது கற்பிக்கு அழகல்லவென்று அவர்களுக்குப் புராணங்களிலிருந்து பதிவிரதைகளின் வரலாறுகளைச் சொல்ல வாரம்பிப்பாள். ஆனால் உண்மைக்காரணம் அதுவன்று. அவள் காதறுந்த ஒரு ஊசியின் பொருட்டுக்கூட, தனது கற்பையும் ஆத்மாவையும் அடகுவைக்கத் துணிந்த உத்தமி. அவள் வெளியில வாராதகாரண மென்னவெனில் அவளுக்கிருப்பவை விலையுயர்ந்த இரண்டு பட்டுப்புடவைகளே யாகும். அவை, வீட்டைவிட்டு வெளிப்படும்போது மாறி மாறி யணியப்படுபவை. வீட்டிற்குள் ஒருகந்தையால் இலைமறைவு காய்மறைவாய் தன் உடம்பை மறைத்துக்கொண் டிருப்பாள். அவளுடைய அடுப்பு மூன்று நாளைக்கொருமுறை புகையும். ஆனால் காலை வேளையில் வீட்டின் வாயிலில் சாணித்தண்ணீர் தெளிக்க வரும்போது நூறு ரூபாய் விலைமதிப்புள்ள பட்டுப்புடவை, சில ஆபரணங்கள் முதலியவற்றை யணிந்திருப்பாள். பெருத்த வெள்ளிச் செம்பில் சாணித்தண்ணீர் கொணர்ந்து, சந்திரமதி காலகண்டையர் வீட்டில் வேலைசெய்ததைப்போல, அவ்வாறு செய்வது தனது மேன்மைக்குக் குறைவாயினும் கால வித்தியாசத்தால் அதைச் செய்ய நேரிட்டதென்பதை தன் முகத்தின் வருந்திய தோற்றத்தாற் காட்டித் தண்ணீர் தெளிப்பாள். வரதாச்சாரியார் பிற்பகல் வேளைகளில் நடைத்திண்ணையில் திண்டில் சாய்ந்து கொண்டு தெருவில் செல்வோரை அமத்தலாகப் பார்த்துக் கொண்டிருப்பார். அவருடைய மனைவி அவருக்கு வெள்ளிக்கிண்ணியில் சிற்றுண்டி கொணர்ந்து கொடுப்பாள். அதற்குள்ளிருக்கும் சிற்றுண்டியை எவரும் பார்க்காவண்ணம் அவர் மறைத்துச் சாப்பிடுவார். அவர் நல்ல உயர்ந்த பட்சணங்களைச் சாப்பிடுவதாக

ஜனங்களில் முதலில் நினைத்துக்கொண்டனர். அவர்சாப்பிடுவதென்னவென்பதை யறிய ஆவல்கொண்ட எதிர்த்தவீட்டு இராஜகோபாலன் ஒரு நாள் ஒளிந்திருந்து, அவர் மனைவி வெள்ளிக்கிண்ணியை வைத்துவிட்டுப் போனவுடனே தட தடவென்று வரதாச்சாரி யிருந்த விடத்திற்கு வந்து "இன்றைக்கு பத்திரிகையில் என்ன விசேஷம்?" என்று கேட்ட வண்ணம் கிண்ணியைப் பார்த்துவிட்டான். வரதாச்சாரி திகைத்து அதைமறைக்க முயன்றது பலியாமற்போயிற்று. வறுக்கப்பட்ட பத்துப் பதினைந்து **மொச்சைக் கொட்டைகள்** கிண்ணியிலிருந்ததைக் கண்டு எதிர்த்த வீட்டுக்காரன் ஏமாறிப்போய்த் திரும்பினான்; அவ்விஷயம் அன்று மாலைக்குள் ஊர் முற்றிலும் பரவியது. அன்று முதல் வரதாச்சாரியின் மனைவிக்கு ஜனங்கள் **மொச்சைக் கொட்டை** யென்று பெயரிட்டனர்.

இவ்விரு வேஷதாரிகளும் ஒத்துழைத்துப் பல வருஷங்கள் இம்மாதிரி நாடகம் நடித்துவந்தனர். அவர்களுக்கு ஒரு சிறிய பெண்ணிருந்தது. நமது கதை நிகழ்ந்த காலத்தில் அதற்குவயது பதின்மூன்றென்று அவர்கள் ஜாதகம் தயாரித்துவைத்துக்கொண்டிருந்தனர். தந்தை தாயர் செயற்கை வேஷதாரிகளா யிருந்ததைப்போல பெண் இயற்கையிலேயே வேஷதாரியாய் ஜனித்திருந்தது. அதன் உடம்பு சிவப்பாயும், குள்ளமாயும், கரணைகரணையான குண்டுக் கைகளையும் கால்களையும் பெற்றுப் பெருச்சாளியைப்போலத் திணிந்த அங்கங்களைக்கொண்டிருந்தது. அதன் தோற்றம் உரலுக்குச் சேலையுடுத்தியதைப்போ லிருந்தது. கீழ்ப்பாகம் இளமையையும் மேல்பாகம் முதிர்ச்சியையும் காட்டின, அதன் முகம் இருபத்தைந்து வயதான தருணியின் முகம்போல முற்றிப்போயிருந்தது. அதற்கு இன்னம் கலியாண மாகவில்லை. அந்தப் பெண்ணை பி. ஏ. பி. எல் பட்டம்பெற்ற ஒரு பிள்ளைக்கே கொடுக்க வேண்டுமென்பது **மொச்சைக் கொட்டை** யம்மாளின் விருப்பம். அத்தகைய மணமகன் கிடையாவிடின், டிப்டி கலெக்டர் பிள்ளைக்காயினும், அல்லது, நூறு வேலி நிலத்திற் கதிபதி

யின் பிள்ளைக்காயினும் கொடுக்கவேண்டு மென்பது டம்பாச்சாரியாரின் நினைவு. ஆனால், அவ்வூர் பெண்டிரான கோடிவீட்டுக் கோமாளியம்மாளும், நடுவீட்டு நாச்சியாரம்மாளும், அடுத்த வீட்டு அலர்மேலம்மாளும் தாமரைக் குளத்தில் நீராடுகையில், இவ்விஷயங்களைக் குறித்து சந்தேகமறப் பேசிக்கொண்டனர்.

கோமாளி:— ஏனடி! நாச்சிக்குட்டி! மொச்சைக்கொட்டையகத்துப்பெண்ணும், என்னுடைய பிள்ளை குப்பனும் பார்த்திப வருஷப் பஞ்சத்திலே ஒரே ராத்திரியிலே பிறந்தவர்கள். குப்பனுக்கு இப்போதுதான் ஜாதகம் பார்த்தோம். அவனுக்கு இருபத்துநான்கு வயதாகிறது. இந்தப் பங்கஜவல்லிக்குப் பதினாறு வயதாமே! என்ன அதிசயமடி!—என்று தனது வலது கையை மோவாயில் பாட்டி வியப்புக்குறி காட்டிக் கூறினாள்.

நாச்சி:— அடி பைத்தியமே! போ; அது இருசியென்பது உனக்குத் தெரியாதா? நூறு வயதானாலும் அது ருதுவாகாது.

அலர்:— அதைப் பார்த்தாலே கடுவன்பூனை மாதிரி பயமாயிருக்கிறதே! அதை எந்தக் கட்டையிலே போவான் தாலி கட்டித் தடுமாறி நிற்கப்போகிறானோ. வண்ணாரச் சுப்பிக்கு அது ஒரு நாள் தன் துணியை விழுத்துப்போட்டதாம். அது ஆணுமில்லையாம் பெண்ணுமில்லையாம் அலியாம்—என்றாள்.

இவ்வாறு பங்கஜவல்லியைப் பற்றி அவ்வூர் மகளிர் வம்புகள் பேசிவந்தனர். அந்தப் பெண்ணின் தோற்றமும் அதற்கு ஒத்ததாகவே இருந்தது. அது பிறந்தும் உண்மையில் இருபத்துநான்குவருஷங்களாயின. அது பிரவிடையாகவுமில்லை. புருஷன் என்ற நினைவையே அது கொள்ளவில்லை. இவ்வதந்தி ஊர் முற்றிலும் பரவியது. அவ்வூரார் எவரும் தமது புத்திரருக்கு அந்தப் பெண்ணை மணம் புரிவிக்க நினைக்கவில்லை. அந்த இரகசியத்தை அறியாத அயலூரார் எவரேனும் பெண்ணைப் பார்க்க வருவாராகில், உடனே விஷயம் அவர் காதிற்கு எட்டிவிடும்.

வந்த வண்டியிலேயே திரும்பிப்போய் விடுவர். அவ்வூர் ஜனங்கள் இந்த உண்மையை யறிந்திருந்தன ரென்றாலும் வரதாச்சாரியார் அவர் மனைவி ஆகிய இருவரின் செருக்கையும் வேஷத்தையும் கண்டு மிகவும் அருவருப்பைக் கொண்டு, அவர் விஷயத்தில் பலவாறு புரளிசெய்யத் தொடங்கினர். பிரவிடையான பெண்ணை அவர்கள் கலியாணம் செய்து கொடுக்காமல் வைத்துக் கொண் டிருப்பதாகப், பறையடிப்பதுபோல, ஓயாமல் அதையே கூறி, அவர்களை ஜாதியைவிட்டு விலக்கி வைத்தனர். எவரும் அவர்களது வீட்டிற்குப் போவதையும் நிறுத்திவிட்டனர். ஊரில் நடக்கும் நன்மை தீமைகளுக்கு அவரை யழையாமலும், அவரைப் பந்தியில் வைத்துக்கொண்டு போஜனம் செய்யாமலும் ஒதுக்கி விட்டனர்.

அந்த அவமானத்தைப் பொறுமல், அவர் அவ்வூரைவிட்டு கும்பகோணத்தில் வந்து குடியேறினார். நமது சாமாவையர் இந்தக் குடும்பத்திற்கு அநுகூலமான நண்பராதலால், அவர், வரதாச்சாரியருக்கு ஒரு உத்தியோகமும் செய்து வைத்தார். என்ன உத்தியோகம்? சாமாவையருடைய எஜமான் நைனா முகம்மதுவின் கம்பெனியில் சீமைத்துணிகள் வியாபாரம் நடத்தப்பட்ட தென்பதை இவ்விடம் நாம்குறிக்கவேண்டியிருக்கிறது. அந்தக் கம்பெனிக்கு வரதாச்சாரியார் கும்பகோணத்து பிரதிநிதியாய் (ஏஜண்டாய்) நியமிக்கப்பட்டார். அதற்கு சம்பளம் கிடையாது. எந்த வியாபாரிக்காயினும் துணிகள் தேவையானால், அந்த உத்தரவை வரதாச்சாரியார் வாங்கி சென்னைக்கு அனுப்பினால் அதில் நூற்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் அவருக்கு இலாபம் கிடைத்தது. அதில் மொத்தத்தில் மாதம் முப்பது ரூபா வரையில் வந்துகொண் டிருந்தது. வரதாச்சாரியார் அத்துடன் நிற்கவில்லை.

அவர் தமக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 500 சம்பளமென்றும் அந்தக் கம்பெனியில் ஜனங்கள் பணத்தொகைகளை "வட்டிக்குக் கொடுத்தால் நூறுக்கு இரண்டு வட்டி கிடைக்குமென்றும்

சொல்லிக்கொண்டு வந்தார். அவர் அவருடைய மனைவி ஆகிய இருவரின் வெளிப்பகட்டைக் கண்டு பலர் ஏமாறிப்போய், தாம் எவ்வளவோ பாடுபட்டு நெடுங்காலமாய்ச் சேர்த்துவைத்திருந்த பணங்களை அவரை நம்பி அவரிடம் கொடுத்திருந்தனர். அவர்கள் இரகசியமாய்ச்சேர்த்துவைத்திருந்தசிறுவாடுகளைவரதாச்சாரியார் சென்னைக்கு அனுப்பாமல் தாமே பலகாரம் செய்துவிட்டு அவர்களுக்கு வட்டிப்பணத்தை மாத்திரம் காலத்தில் கொடுத்து எண்ணிறந்த ஏழைகளை வஞ்சித்துத் தமது வயிற்றை வளர்த்து வந்தார்.

நமது சாமாவையர் இவருடைய பெண்ணைத்தான் வராகசாமிக்குக் கட்டிவிட நினைத்து, இவரைப்பற்றி பெருந்தேவியம்மாள் கோமளம்மாள் இருவரிடமும் இந்திரன் சந்திரன் என்று பெரிதும் புகழ்ந்து கூறி அவர்களை ஏமாற்றிக் கொண்டுவந்தார். இவரிடத்திற்கே சாமாவையர் வந்து சேர்ந்தார்.

சாமாவையர்வந்து உள்ளே நுழைந்த சமயத்தில், வரதாச்சாரியார், ஒரு தோசைக்காரக் கிழவி நாற்பது வருஷகாலமாய் இடியாப்பம் சுட்டு விற்றுச் சேர்த்து வைத்திருந்த தொகையான ரூபா ஐந்நூற்றை அவளிடத்திலிருந்து அபகரித்துக் கொண்டிருந்தார். அவள் அவ்வளவு பெருந்தொகையை யாதொரு தஸ்தாவேஜுமில்லாமல் அவரை நம்பி அவரிடம் கொடுப்பதைப்பற்றி ஒரு சிறிது அஞ்சி பணத்தைக் கொடுக்கத் தயங்கின தருணத்தில் சாமாவையர் ஒரு பெருத்த சாவுகார் வருவதைப்போல ஆடம்பரமாக உள்ளே நுழைந்தார். அவரைக்கண்ட வரதாச்சாரியார் எழுந்து மரியாதையாகவும் அன்போடும் "வாருங்கள் வாருங்கள்" என்று வரவேற்று அவரை ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார். உடனே இடியாப்பக்காரியை நோக்கி "ஏ கிழவி! நீ இந்த ஐந்நூறு காசுக்கு இவ்வளவு யோசனைசெய்கிறாயே! இவர்களைப் பார்த்தாயா?. இவர்கள் யார் தெரியுமா?" என்றார். கிழவி திகைப்படைந்து சாமாவையரைப் பார்த்தாள். "இவர்

கள் ஜேஷ்யாதிமங்கலம் மைனர். இவர்களுக்கு 549 வேலிநில மிருக்கிறது. லெட்சலட்சமாய்ப் பணத்தை எங்கள் கம்பெனியில் வட்டிக்குப் போட்டிருக்கிறார்கள். இவர்கள்கூட தஸ்தாவேஜு கேட்கவில்லையே! இந்தா நான் முடிவாகச்சொல்லுகிறேன்; உனக்கு தைரியமிருந்தால் கொடுத்துவிட்டுப்போ; இல்லாவிட்டால் எடுத்துக் கொண்டுபோ, நான் இவர்களுடன் பேசவேண்டும்" என்று உறுதியாகமொழிந்தார்.

கிழவி திகைப்பும் குழப்பமுமடைந்து தயங்கி நின்றாள். உடனே சாமாவையர் "பாட்டி! இந்த இடத்தில் பணம் கொடுத்தால் பயமே இல்லை. இவர்களுடைய சொல்லே போதுமானது; பத்திரம் எதற்கு சாட்சி எதற்கு! ஒன்றும் தேவையில்லை. இதோ பார் நான் இருபதினாயிரம் ரூபா கொணர்ந்திருக்கிறேன். பத்திரமில்லாமலே கொடுக்கப்போகிறேன்' என்று தமது கையிலிருந்த ரயில்வேபாக்கை (தோல் பையை)த்திறந்து அதிலிருந்த ஒரு பெருத்த துணி மூட்டையை அவிழ்த்துக் காட்டினார். அம்மூட்டைமுழுவதிலும் பவுன்களே காணப்பட்டு கண்ணைப் பறித்தன. அதைக்கண்ட கிழவி வாயைப்பிளந்தாள்; வரதாச்சாரியும் திகைத்தார்; ஆனால் அவர் அதை மறைத்துக்கொண்டார். கிழவியின் மனதில் உடனே பெருத்த நம்பிக்கையும் பிறந்தது. தனது கந்தைத்துணி மூட்டையை அவிழ்த்து, ரூபா ஐந்நூற்றையும் கலகலவென்று வரதாச்சாரியின் முன்னர் கொட்டிவிட்டு, போதாததற்கு, அவரையும் சாமாவையரையும் வணங்கி நமஸ்காரம் செய்துவிட்டு விடைபெற்றுக் கொண்டு வெளியில் நடந்தாள். வஞ்சகரிருவரும் தமது வெற்றியை நினைத்து மகிழ்வடைந்து ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டனர்.

உடனே சாமாவையர் "அடே வரதாச்சாரி! நீ பலே சாமர்த்தியசாலியடா! ஒரு நிமிஷத்தில் ரூபா ஐந்நூறு தட்டிவிட்டாயே! உன்னுடைய உத்தியோகம் நல்ல உத்தியோகம்!" என்றார்.

வரதாச்சாரி நன்றியறிவைக்காட்டி "எல்லாம் நீ கொடுக்கும் பிச்சையல்லவா? உன் பேரைச் சொல்லிப் பிழைக்கிறோம்; இனிமேலும் உன்னாலேயே பிழைக்கவேண்டும். உன்னுடைய கடிதம் நேற்று காலையில் வந்தது. உனக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை யாரிடம் சம்பாதிக்கலாமென்று பார்த்தேன். இந்தக் கிழவி காவேரியாற்றங்கரைப் பாலத்தடியில் ஆப்பம் சுட்டுவிற்பவள். அந்த வழியாக நான்

போகும்போதெல்லாம் இவள் ‘சுவாமி தெண்டம்’ என்று ஒரு கும்பிடு போடுவாள். நான் வட்டிக்குப் பணம்வாங்குகிறவனென்பதை யறிந்துகொண்டே இவள் அப்படிச் செய்து வந்தாளென்றும், இவளிடம் பணம் இருக்கின்றதென்பதையும் நான் யூகித்துக்கொண்டேன்: பக்தசிரோன்மணியான இவள் காணிக்கை வைத்து ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுதல் செய்வதை மறுப்பது பாவமல்லவா! ‘சுவாமி! தெண்டம்’’ என்று இவள் சொல்லும்போதெல்லாம் “கவலைப்படாதே, ஒரு நாளைக்குதெண்டம் வைக்கிறேன்.” என்று நான் நினைத்துக்கொண்டு போவதுண்டு. இவள் நல்ல சமயமான இன்று வந்து உதவினாள். அது இருக்கட்டும், வராகசாமிக்கு இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?” என்றார்:

சாமாவையர்:—முக்காற்பாகம் குணமடைந்து விட்டான்; அவனை வீட்டுக்கு அனுப்பும்படி நாம் இப்போது விரும்பினாலும் வைத்தியசாலை அதிகாரிகள் அவனை அனுப்பத் தடையில்லை. ஆனால் நல்லகாற்றுஓட்டமுள்ள விசாலமான வீட்டிலே தான் அவன் இப்போதிருக்க வேண்டுமாம். இப்போது அவர்கள் குடியிருப்பது மிகவும் சிறிய வீடு; காற்று ஓட்டம் இல்லாதது. கடற்கரையோரத்தில் ஒரு பங்களாவிருக்கிறது. அதை அவர்கள் விலைக்கு வாங்கிக் கொண்டு இன்னம் இரண்டு மூன்று நாட்களில் கிரகப்பிரவேசம் செய்யப்போகிறார்கள். அந்த பங்களாவுக்கு நாலைந்து நாளில் வராகசாமியை அழைத்து வரப்போகிறோம். அவன் கடற்காற்று வீசினால் சீக்கிரம் குணமடைந்து விடுவான்.

வரதா:— இந்த நிலைமையில் கலியாணம் செய்து கொள்ள அவன் சம்மதிப்பானா?

சாமா-:அதைப் பற்றி கவலைப்படாதே; நானும் அவன் தமக்கையும் சொல்வதை அவன் ஒருநாளும் மீறமாட்டான். தவிர, இந்த விஷயத்தில், நாங்கள் இன்னொரு யோசனை செய்திருக்கிறோம். இப்போது நாங்கள் வாங்கப்போகும் பங்களாவின் விலை ரூபா பதினாயிரம். அவனுடைய தமக்கை, அவனுக்குந் தெரியாமல் பதினாயிரம் ரூபா சிறுவாடு சேர்த்து வைத்திருந்தாள். அவன் வருமுன், இந்தப் பணத்தைக் கொடுத்து பங்களாவை என்பேருக்கு வாங்கப் போகிறோம். ஆனால் வராகசாமியிடம் வேறு விதமாகச் சொல்லப் போகிறோம்: கலியாணத்திற்காக, நீ பதினாயிரம் ரூபா கொடுத்ததாகவும் அதனால் பங்களாவை வாங்கினதாகவும் சொல்லப்போகிறோம் உன்னிடம் ரூபா வாங்கினபிறகு,கலியாணம்வேண்டாமென்று அவன் சொல்லமாட்டானல்லவா.—என்றார்.

வரதா—: பங்களாவை உன் பேரில் ஏன் வாங்கப்போகிறீர்கள்?

சாமா-: பங்களாவுக்கு சொந்தக்காரன் நம்முடைய நைனாமுகம்மதுவின் சிற்றப்பன். அவன் மற்றவருக்கென்றால் அதை பன்னீராயிரம் ரூபாய்க்குத்தான் கொடுப்பான். எனக்கு இரண்டாயிரம் ரூபா குறைப்பான். அதனால் என்பேரில் வாங்கப் போகிறோம். அப்புறம் பெருந்தேவிபேரில் மாற்றப்போகிறோம்.

வரதா-: அப்படியானால், கலியாணத்துக்காக நான் கொடுக்கவேண்டிய பதினாயிரம் ரூபாயைக் கொடுக்கவேண்டாமா?

சாமா-:நல்ல காரியம் செய்தாய்! நாங்கள் வராக சாமிக்காக இந்தக் கட்டுக் கதையைச் சொல்லப் போகிறோம். உன்னிடமிருந்து பதினாயிரம் ரூபா வாங்க வேண்டுமென்னும் பேராசையினாலேதான் பெருந்தேவி கலியாணத்திற்கு ஒப்புக்கொண்டிக்கிறாள். பணத்தை இரகசியமாக உன்னிடமிருந்து வாங்கி தன்னிடம் கொடுக்கவேண்டுமென்று அவள் என்னிடம் சொல்லியிருக்கிறாள். பணம் வராவிட்டால், பெண் அழகாயில்லை என்று ஏதாயினும் காரணம் சொல்லி கலியாணத்தை நிறுத்தி விடுவாள். ஆகையால் தந்திரமாக அவளை ஏமாற்ற வேண்டும்.

வரதா-:என்ன தந்திரம்?

சாமா:-அவளிடம் உன்னைப் பற்றி நான் மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறேன். நீ ஒரு வேலை செய்;இருநூறு, முன்னூறு ரூபாயை அரையணா, காலணாவாக மாற்றி ஒரு சாக்கு மூட்டையில் அதைப் போட்டு இன்னமும் ஓட்டுத்துண்டுகளையும், அதில்போட்டுப் பெருத்த மூட்டையாகப் போட்டுக் கொண்டு, வந்து சேர். பணம் தேவையானபோதெல்லாம் அதிலிருந்து அலட்சியமாக எடுத்து வீசி ஆடம்பரம் செய். அதைக் கண்டு அவள் ஏமாறிப்போவாள். அவளுக்கெதிரில், நான் உன்னிடம் வந்து வரதட்சணை எங்கே யென்று கேட்பேன். “இதோ அடுத்த ரயிலில் பெண்ணின் அம்மான் பணம் கொண்டு வருவார்;காரியம் நடக்கட்டும்; தாலி கட்டு முன் வந்து விடும்” என்று சொல்லிக்கொண்டிரு. அவள் சந்தேகப்படாவிதம் நானும் அவளுக்கு உறுதி சொல்லி வைத்திருக்கிறேன். தாலி ஏறிய பிறகு “ரயில் தவறிப்போய்விட்டதுபோலிருக்கிறது. நான்ஊருக்குப்போய்

உடனே அனுப்பி விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு, நீ ஊரைப்பார்த்துக்கம்பி நீட்டிவிடு; அப்புறம் யோசித்துக் கொள்ளுவோம். நீ பங்களாவுக்குப் பணம் கொடுத்து விட்டாயென்று, முதலில் அவர்கள்வராகசாமியிடம் சொல்லிவிடுவார்களாதலால் அப்புறம் இதைப் பற்றி ஒன்றும் சொல்லமாட்டாமல், திருடனுக்கு தேள் கொட்டிய மாதிரி, சும்மா விருந்துவிடுவார்கள்.

வரதா:-அது நல்ல யோசனைதான். கலியாணம் பங்களாவிலா நடக்கும்?

சாமா:-அதையும் பேசி முடித்துவிட்டேன் கலியாணத்தை வீட்டில் நடத்தினால் ஐந்து நாள் ஆகும். உனக்கு பணச் செலவும் அதிகமாகும். ஏதாவது ஒரு கோவிலில் செய்தால், ஒருநாழிகையில் ஐந்து நாளைக் காரியத்தை முடித்துக்கொண்டு வந்து விடலாம். அதனால் ஒரு தந்திரம் செய்திருக்கிறேன். இந்த பங்கஜவல்லி குழந்தையாயிருந்தபோது, மாந்தம் வந்ததாயும், இவள் பெரியவளானபின், திருப்பதிக் கோவிலில் வந்து கலியாணம் செய்து வைப்பதாய் அப்போது நீங்கள் பிரார்த்தனை செய்து கொண்டதாயும், ஆகையால், கலியாணத்தை திருப்பதியில் செய்யவேண்டுமென்றும் சொல்லிவிட்டேன். அவர்கள் இணங்கிவிட்டார்கள் உனக்கு கொஞ்சமும் துன்பமில்லாமல், எல்லா விஷயங்களையும் நான் முடித்து விடுகிறேன். இதோ என்னிடம் ரூபா 9500 இருக்கிறது. பங்களா வாங்க ரூபா 500 குறைவாகிறது. அதை மாத்திரம் நீ கொடுத்து விடு. மற்றதை முடித்து வைப்பது என்னுடைய பொறுப்பு.

வரதா:-சரி; இந்தக் கிழவி கொடுத்த பணத்தை இப்படியே நீ எடுத்துக் கொள். —என்று தனக்கெதிரிலிருந்த பணத்தைக் கொடுக்க, சாமாவையர் அதை வாங்கித்தன் மூட்டையில் சேர்த்துக் கட்டிக் கொண்டார்.

வரதா:-முன் கலியாணம் செய்திருந்த பெண் இனி வருவாளா?

சாமா:- அவள் ஏன் வருகிறாள்? அவள்தான் ஒருநாடகக்காரனோடு ஓடிப்போய்விட்டாளே! அந்தக்கவலை வேண்டாம்.

வரதா:- அப்படியா! அதுவும் நல்ல அதிர்ஷ்டந்தான். எப்படியாவது நமது பங்கஜவல்லி வக்கீலைக்கலியாணம் செய்து கொண்டு, பங்களாவுக்கு எஜமானியாக இருந்து வாழ்வதை நாம் ஒரு நிமிஷமாவது கண்ணாரப் பார்த்து சந்தோஷப்படுவது போதும்——என்றார்.

இவ்வாறு அவ்விரு நண்பரும் நெடுநேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தனர். அதற்குள் வரதாச்சாரியார் மனைவியும் அங்கு வந்து, அப்போதே மலர்ந்த தாமரை மலரைப்போன்ற இனிய முகத்தோடு சாமாவையரை வரவேற்று க்ஷேமம் விசாரித்து, பல விஷயங்களைப் பற்றி உசாவி, மகிழ்ச்சியடைந்து, அளவளாவியிருந்தாள். அவருக்குரிய நீராட்டம் விருந்து முதலியவற்றை மிகுந்த பரபரப்போடும் உவப்போடும் செய்து முடித்தாள். ஒரு நிமிஷமும் அவரை விடுத்து அப்புறம் செல்லாமல் மிகவும் குழைவாக அவரிடம் சம்பாஷணை செய்த வண்ணமிருந்தாள். அன்றைய மாலைவரையில் ஐயரவர்கள் வரதாச்சாரியின் இல்லத்தில், அம்மாளின் கரைகடந்த அன்பினால், சகலவித சுகங்களையும் அநுபவித்திருந்தார். கணவன், மனைவி ஆகிய இருவரும், அவருக்கு இராஜ உபசாரம் செய்து, முதல் தரமான விருந்தளித்து, இன்பக்கடலிலாட்டி, அவர் மனம் குளிரும்படி நடந்து கொண்டனர். மாதுரியமான சிற்றுண்டிகளைத் தயாரித்து, அந்தப் பெருந் தெய்வத்திற்குப் படைத்து நிவேதனம் செய்வித்தனர். எவ்விதமாயினும் தமது பெண்ணை உயர்வான இடத்தில் கொடுக்கவும், தம்மீதுள்ள ஜாதிக்கட்டை விலக்கிக்கொள்ளவும் மிகுந்த ஆவல் கொண்டிருந்தனர். தவிர, தமது பெண் அலியாதலால் பிற்காலத்தில் புருஷனோடு அவள் வாழ்க்கை செய்யாவிடினும், அவளுடைய சவரட்சணைக்குத் தேவையான பெரும் பொருளாயினும், அவளது புக்ககத்திலிருந்து கிடைக்குமென்று நினைத்தனர். இந்த மூன்று காரணங்களினால் அவர்கள் இந்த சம்பந்தத்தையே கொண்டுவிட உறுதிசெய்துகொண்டு, அதற்குத்தகுந்த கருவியாகிய சாமாவையரை சரணாகத ரட்சகராயடைந்துஅவருக்குத் தொண்டுபுரிந்தனர்.

சாமாவையர் அன்றிரவு போஜனத்தை மாலை ஏழரை மணிக்கே முடித்துக்கொண்டார். நாகைப்பட்டணம் சென்று பங்களாவின் விக்கிரயப்பத்திரத்தை மறுநாளே முடித்துக்கொண்டு, சென்னைக்குத் திரும்ப நினைத்தவராய், இரவு ஒன்பது மணிக்குக் கும்பகோணத்திலிருந்து புறப்பட்ட ரயிலுக்குவந்துசேர்ந்தார். கையில் ரயில்பைக்குள் ரூபா பதினாயிரம் பவுன்களாகவும், நோட்டுகளாகவும், ரூபாய்கவும், மூட்டை கட்டப்பட்டிருந்தன. அதை மிகுந்த எச்சரிக்கையோடு வைத்துக்கொண்டு வண்டியிலேறினார். ஒருவர் கும்பகோணத்திலிருந்து நாகைப்பட்டணம் போகவேண்டுமானால், கும்பகோணத்

தில் ரயிலிலேறி மாயவரத்தில் இறங்கவேண்டும். அவ்விடத்தில் வந்துள்ள வேறு ரயிலில் ஏறித் திருவாரூர் போய்ச் சேரவேண்டும். அவ்வூரில் வந்துள்ள, வேறு ரயிலிலேறி நாகைப்பட்டணம் செல்ல வேண்டும்; கும்பகோணத்தில் வண்டியில் ஏறிய சாமாவையர், அதில் ஜனநெருக்கமில்லாமையால் உல்லாசமாக பலகையின்மீது காலை நீட்டிவிட்டு, பக்கத்தில் சாய்ந்துகொண்டார். ரயில் புறப்பட்டு கிடுகிடாயமாகப் பறக்க வாரம்பித்தது. சாமாவையரும் தமது மனக்குதிரையைத் தட்டிவிட்டார்.

அதுவும் தனது வேலையைச் செய்யத் தொடங்கியது. இன்பகரமான நினைவுகளில் ஆழ்ந்தார். சென்ற சின்னாட்களாக அவர் பிறவிக்குருடன் திடீரென்று பார்வை பெற்றதைப் போல விருந்தார். பிறந்த நாள் முதலாக, நித்திய தரித்திர நிலைமையிலிருந்து வந்த ஐயரவர்கள் தம்முடையதென்று ஒரு பவுனைக் கூடக் கண்டவரன்று. அவரிடம் திடீரென்று புதையல் அகப்பட்டதைப் போல, ரூபா பதினாயிரம் வந்து சேருமானால், அவர் மனதிலுண்டாம் களிப்பும், பூரிப்பும், ஆனந்தமும் அளவிலடங்கியவையாமோ? ஒரு நிமிஷத்தில் அவர் தமது பழைய நிலைமையை மறந்து, புதுமனிதராகமாறிவிட்டார். அந்தப் பணத்தை என்ன செய்வது? வட்டிக்குக் கொடுப்பது நல்லதா? அல்லது அதை வைத்துக்கொண்டு வர்த்தகம் செய்வது நல்லதா? அன்றி பங்களாவை வாங்குவது உசிதமாவென்று பல நாட்கள் இரவுகளில் தனிமையிலும், தமது மனைவியோடு கலந்தும் யோசனை செய்தார் "பங்களா அரை விலைக்கு வருகிறது. அதில் துரைமாரைக் குடிவைத்தால் மாதம் ஒன்றுக்கு ரூ 200 கிடைக்கும். அதில் உற்பத்தியாகும் பழமரங்களின் மகசூல் வருஷத்தில் ஆயிரம் ரூபா கொடுக்கும். ஆகையால், பங்களாவை வாங்குவதே சிறந்தது என்று நினைத்து அவ்வாறே முடிவுகட்டிக்சொண்டார். தவிர, பங்களாவில் பெருந்தேவி முதலியோரைச் சிறிது காலமாயினும் குடிவைக்காமல், பணத்தை அப்படியே அபகரித்துக்கொண்டால் மூடர்களான அவ்விரு சகோதரிமாரும் ஆத்திரமடைந்து, தம்மோடு பெருத்த சண்டையிடுவரென்றும், மேனகாவை விற்றது முதலிய இரகசியங்கள், அதனால் வெளிப்பட்டு விடுமென்றும், அதனால் தமக்குப்பல துன்பங்கள் சம்பவிக்குமென்றும் நினைத்தார். ஆகையால் பங்களாவை தமது பேருக்கு வாங்கிக்கொண்டு, அவர்களைச் சில மாதங்கள் வைத்திருந்து, பிறகு வக்கீல் மூலமாக

நோட்டீஸ் கொடுத்து அவர்களை வெளியேற்றி விடவும், அதன்பிறகு தாமும், தமது மனைவியும், பெருஞ்செல்வத்துடன் சுகமாக வாழலாமென்று நினைத்து மனப்பால்குடித்தார். பலநாட்களுக்கு முன்னரே, முடிவு செய்யப்பட்ட இவ்விதநினைவுகளில் இப்போது ரயிலில் சாய்ந்திருந்த வண்ணம் தமது சிந்தையைச் செலுத்தி அவைகளில் ஈடுபட்டவராய் இரவுபத்தரைமணிக்கு மாயவரம் வந்துசேர்ந்து வண்டியை விட்டிறங்கினார். திருவாரூருக்குப் போக ஆயத்தமாகநிறுத்தப் பட்டிருந்த வண்டிக்குச் சென்றார். அந்த ரயிலில் பல வண்டிகள் வெற்றுவண்டிகளாக இருந்தன. சிலவற்றில் ஒன்றிரண்டு மனிதர் உட்கார்ந்தும், படுத்துமிருந்தனர். வெறுமையாயிருந்த ஒரு வண்டியில் சாமாவையர் மூட்டையை வைத்தார். அந்தரயில் திருவாரூர் போய்ச்சேர இரவு ஒரு மணியாகுமாதலால், தாம் வெற்றுவண்டியிலிருந்தால், கவலையின்றி சிறிது துயிலலாமென்று நினைத்தே ஐயரவர்கள் ஏகாந்தத்தை நாடினார். வேறு எவரும் வராமல் தடுக்கும் நோக்கத்துடன் அவர், காலடிவைக்கும் பலகையில் நின்றார். முதல் மணி அடிக்கப்பட்டது; புகைவண்டி ஊதியது. இரண்டாவது மணியும் அடிக்கப்பட்டது. அதற்குமேல்எவரும் வரமாட்டார்களென்று நினைத்த சாமாவையர் உட்புறம்சென்று கதவை மூடித்தாளிட்டுக்கொண்டு கதவினண்டையில்உட்கார்ந்தார். அடுத்த நிமிஷத்தில் ஒரு யௌவன மங்கை 'இதோ இந்த வண்டியில் ஏறலாம்' என்று சொல்லிக் கொண்டே விரைந்து வந்து, சாமாவையரிருந்த வண்டியின் கதவைத் திறந்து வண்டிக்குள் ஏறினாள். சாமாவையர் எழுந்து கடைசியில் உட்கார்ந்து கொண்டார். முதலிடத்தில் அந்த அணங்கு உட்கார்ந்தாள். அவளுக்குப்பின்னால்வந்தஇன்னொரு மனிதன்ஒருடிரங்குப்பெட்டியையும் ஒருகூஜாவையும்உட்புறம் வைத்து விட்டுக் கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு வெளியில் நின்று 'அம்மா! கமலம் பத்திரமாய்ப் போய்ச் சேர். நான் நாளைக்குவருகிறேன். ஸ்டேஷனில் இறங்கும் போது சாமான்களை விட்டுவிடாதே; தூங்கிவிடாதே.' என்று சொல்லி எச்சரித்து விட்டு சாமாவையரைப் பார்த்துக் கைகுவித்து வணங்கிசுவாமிகள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?'என்று பணிவாகக் கேட்டான். அவர் 'நாகைப்பட்டணம் போகிறேன்' என்றார். அந்த மனிதன் 'சரி! மிகவும் சந்தோஷம். இந்தக் குழந்தை திருவாரூர் வரையில் வருகிறாள். இவளை அது வரையில் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

சாமாவையர் மிகுந்த பரோபகார குணம் பிரகாசித்த இனிய முகத்தைக் காட்டி 'அப்படியே செய்கிறேனப்பா! கவலைப்படாதே;என் தங்கையைப்போலப் பார்த்துக்கொள்ளுகிறேன்' என்றார். அப்போது வண்டி ஊதிக்கொண்டு நகர்ந்தது. அந்த அழகிய பெண்மணி அடக்க முடியா நாணத்தில் தனது தேகத்தை நெளித்துக்கொண்டு 'நான் போய்வருகிறேன்' என்று குயிலைப்போல் மொழிந்து வெளியிலிருந்த மனிதனிடம் விடைபெற்றுக் கொண்டாள். அதற்குள் வண்டி விசையாக ஓடியதால்,அந்த மனிதன் நெடுந்தூரத்திற்கப்பால் பின்தங்கி விட்டான்.

19. வது அதிகாரம்.

மலையாளபகவதி

அந்த வண்டியில் ஏறுமுன் அப்பெண்பாவை பல வண்டிகளை ஆராய்ந்துகொண்டே வந்தாள். தான் தனிமையிற் செல்வதால் அவள், வெற்றுவண்டியில் ஏற அஞ்சினாள். மனிதர்இருந்த வண்டிகளில் பார்வைக்கு அருவருப்பை யுண்டாக்காத, திருப்திகரமான சகப்பிரயாணி எந்த வண்டியிலிருக்கிறானென்று ஆராய்ந்துகொண்டே வந்தவள், சாமாவையரைக் கண்ணுற்றாள். உடனே அவள் மனதில், அந்த வண்டியிலேயே ஏறவேண்டுமென்னும் ஒரு விருப்பம் உண்டானது. நமது சாமாவையாது தோற்றத்தை வருணித்துச் சொல்வது மிகையில்லவா! அவர் ஆண்பாலார், பெண்பாலார் ஆகிய இருதிறத்தாரும் கண்டு, முதல்பார்வையிலேயே மோகம் கொள்ளத்தகுந்த சுந்தர வடிவினர். உருண்டு, திரண்டு, மன்மதாகாரமான சிவந்த மேனியின் தளதளப்பும், பரந்த வட்டவடிவமான வதனமும் வெள்ளைக்கடுக்கன்களும், ஜரிகை வஸ்திரங்களும், பட்டுஉருமாலையும், தங்கக்கொடியில் தொங்கிய ஒற்றை உருத்திராட்சமும் மோதிரங்களும்,ஒன்றுகூடி கம்பீரத்தோற்றத்தையும்,பெரிய மனிதத்தன்மையையும் உண்டாக்கி, காண்போரை வசீகரித்தன. அவரைக் கண்டு, உள்ளூற மகிழ்ச்சிகொண்ட கமலம், வண்டி புறப்பட்டபின், மிகவும் நாணத்தைக் காண்பித்து, கடைசியாக விடைபெற்றுக் கொள்ள வெளியில் நீட்டிய சிரத்தை உட்புறம் இழுத்துக்கொள்ளாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவளுடைய கரத்தில், வெற்றிலை பாக்கு நிறைந்த, பையூர் பிரம்புச்சாயப்பெட்டி யொன்றிருந்தது. அந்தப் பெண் கதவிற்கருகில் உட்கார்ந்திருந்தாள். சாமாவையர் அவளுக்கு எதிர்ப்புறப் பலகையின் கடைசியில் சாய்ந்துகொண்டு, அவளிருந்த கதவுப்பக்கம் பார்த்துக் கொண்டிருந்தார். முதலில் சாமாவையர், அந்தப் பெண்ணும் அவளுடன் வந்த மனிதனும் ஏறப்போவதாக நினைத்து, ஒருவாறு அருவருப்புற்றிருந்தார். ஆனால் பெண்மாத்திரம் தனிமையில் தம்முடன் திருவாரூர் வரையில் வருகிறாளென்பதை உணர, அவரது மனம் பெருங்களிப்படைந்தது. இனிமையே வடிவாய்த் தோன்றிய அப்பெண்ணழகி, அவ்விரவில் தம்முடன் இருப்பதைப் பற்றி ஆநந்தங்கொண்டார்.

மேல் நிகழவிருக்கும் சம்பவங்களைக் கூறப்புகுமுன், அந்தப் பெண்ணின் வயது, தோற்றம், முதலிய விவரங்களைச் சிறிதளவு விளக்குவது அவசியமாகிறது. அவளது வயது பதினாறு அல்லது பதினேழு என்று மதிக்கலாம். நல்ல பக்குவகாலத்தின் எழிலும், ஒளியும், இனிமையும் நன்றாக விகசித்து விரிந்து உன்னத நிலையிலிருந்து, கண்டோர் கண்களையும் மனதையும் கொள்ளைகொண்டன. நடுத்தரமான உயரமும் பருமனும் கொண்ட மேனி பத்தரைமாற்றுப் பைம்பொன்னோ, எலுமிச்சம்பழமோ, தந்தமோ வென்று ஐயுறும் அழகிய நிறத்தையுடையதாயிருந்தது. நகம் முதல் சிகை வரையிலுள்ள ஒவ்வொரு உறுப்பும் அச்சில் கடைந்து பொருத்தப்பட்டதைப் போல அற்புதமாயும், இலட்சணப் பழுதின்றியும், குற்றங்கூறுதற் கிடமின்றியும் அமைந்திருந்தது. நீலம் பச்சை முதலிய பல விதமான நிறங்களையும், நீரோட்டத்தையும் சொரியும் சில நட்சத்திரங்களைப் போல, அவளது வதனத்தில் வசீகரமும் களையும் ஜிலுஜிலென்று வீசின. தந்தத் தகட்டைப்போலிருந்த நெற்றியும், கறுத்தடர்ந்த புருவவிற்களும், பெருத்த சுத்தமான நீலோற்பல விழிகளும், மாதுளம் பூவின் செவ்விய நிறத்தைக் கொண்டு தேன்கசிந்த தீங்கனிபோலப் பிளவுபட்ட அதரங்களும் நல்முத்தின் பதிப்பைப்போல வொளிர்ந்த பற்களும் ஒன்றுகூடி, அது முகமோ, காண்போர் மதியை மயக்கி, மனதை வதைத்துப், பித்தமுறச்செய்யும் மந்திரஉச்சாடனச் சக்கரமோ, மன்மத வேளின் பாணங்களது அணிவகுப்போ வென்னத் தோன்றியது. நெற்றியின் உச்சியில் தொடங்கி வளைந்து வளைந்து பாலத்தின் கண்களைப் போல

இருபுறங்களிலும் அற்புதமான வேலைப்பாடு தோன்ற, இயற்கையிற் சென்றிருந்த, கருங்கூந்தலின் கற்றையை வாரிப்பின்னலிட்டுத் தேருருளையோ அல்லது திண்டோ வெனத் தோன்ற வளைந்து, ரோஜா, மல்லிகை முதலிய மலர்களால் அதை அலங்கரித்திருந்தாள். இருபுருவ விற்களினிடையிலிருந்த திலகமண்டலத்தில் மூன்றாம் பிறை தவழ்ந்ததைப்போல ஜவ்வாதினால் கீற்றிட்டு, இரண்டு விற்களையும் ஒன்றாய்ச் சேர்த்திருந்தாள். கயல்மீனிலும் அதிகரித்த சுறுசுறுப்பும் பிறழ்ச்சியும் கொண்ட கண்களில் கரிய மை தீட்டப்பட்டிருந்தது. செவிகளிலிருந்த வைரக்கம்மல்களும் அவற்றை கேசத்தோடு இணைத்த வைரமாட்டல்களும் சுடர்விட்டெரிந்தன. கரை காணாது கடல்களில் தவிக்கும் கப்பல்களை, தீபஸ்தம்பத்திலுள்ள பெருஞ்ஜோதி கைகாட்டி யழைப்பது போல அவளது நாசியின் மீதிருந்த ஒற்றை வைரக்கல், தனது கிரணக்கற்றைகளான கரங்களை விரித்து, அண்டுவோர்க்கெல்லாம் அபயஸ்தம் காட்டியழைத்தது. ரோஜாப்பூவை பச்சைஇதழ்கள்மறைத்திருப்பதைப்போல, அவள்தனதுமேனியில் ஜரிகைப்புட்டாக்கள் நிறைந்த பச்சைநிறப்பட்டுத் துயிலையும் ரோஜா நிறக் கச்சையும் அணிந்திருந்தாள். இடையிலிருந்த தங்க ஒட்டியாணம், அவளது தேக அமைப்பை ஆயிரம் மடங்கு வனப்பித்துக் காட்டியது. உச்சிமுதல் உள்ளங்கால் வரையில், இயற்கையழகும், செயற்கையழகும் ஒன்றுபட்டிழைந்து ஜ்வலிக்க, அவள் அப்படியே மணப்பந்தலில் உட்கார ஆயத்தமாய் வந்துள்ள புதிய சோபனப் பெண்ணைப் போல யௌவனமும், புதுமையும், கட்டழகும் நிருத்தனம் செய்ய, நவரத்தினங்களை மலர்களாய் ஏந்திய பூங்கொம்பைப் போல விருந்தாள். பூக்களினின்று பரிமளகந்தம் கமழுதலைப்போல அவளிடம் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் பெண்குணம் பொலிந்தனவாயினும், அக்குணங்கள் காண்போர் மனதைச் சின்னாபின்னமாக்கிச் சிர்குலைத்து, அவர் நினைவை அவள்மீது திருப்பினவன்றி அமைதியுண்டாக்கவில்லை. அவள் இயற்கையில் நாணமுடையவளாயிருந்தாளாயினும், அவளது கூரிய கண்கள், கபடமாக அங்குமிங்கும் கடைக்கணித்து அண்டையிலிருந்தோரைப் பற்றிய விவரங்களை விரைவில் கிரகித்தனவாதலின், அந்த நாணம் குடும்பஸ்திரீகளின் களங்கமற்ற நாணமாய்த் தோன்றவில்லை. அவள் தன் வலது கையின் மணிக்கட்டில் ஒரு சிறிய கடியாரத்தைக் கட்டிக்

கொண்டிருந்தது அவள் புது நாகரிகமறிந்த பெண்ணென்பதைக் காட்டியது. அன்னிய மனிதருக்கருகிலிருத்தலால் பயிர்ப்பைக் காட்டும் பதிவிரதாஸ்திரீகளைவிட அதிகமாக அவள் மேனியின் நெளிப்பையும், அமைதியின்மையையும் காட்டி உடைகளையும், ஆபரணங்களையும் நொடிக்கு நூறுமுறை சீர்திருத்திக் கொண்டாள்.

அவள் அறிந்தோ அறியாமலோ தொடுத்த இத்தனை அம்புகளும் விலக்கக்கூடாவகையில் பசுமரத்தாணிபோல் சாமாவையரின் உள்ளத்திற் பதிந்து ஊடுருவிச்சென்றன வாதலின், அவரது பாடு தொல்லையாய் முடிந்தது. முதலில் அவள் தனிமையில் தம்முடன் வரப்போவதாக உணர்ந்தவுடனே அவர் மனதில் ஒருவித இன்பமும், அமரிக்கையின்மையும், லஜ்ஜையும் சுரந்தன. அவளுடன் வந்த மனிதன் அவளைத் தமது பாதுகாப்பில் ஒப்புவித்தபிறகோ, அவரது மனோவேதனை மலையாக வளர்ந்து அநர்த்தம் செய்யத் தொடங்கியது. சகிக்கவொண்ணாத ஒருவகை இன்பமும், துன்பமும் ஒருங்கே எழுந்து, அவர் மனதைப் புண்படுத்த வாரம்பித்தன. அவள் யாவளோ வென்பதை முதலில் அறிய அவர் மனம் பதறியது. அவளது அதிகரித்த நாணத்தைக் கண்டு, குடும்பஸ்திரீயே யென்று நினைத்துக்கொண்டார். மாணிக்கக்கட்டியோ, கற்கண்டுக்கட்டியோ வெனத் தோன்றிய அந்த கந்தருவமங்கை வேறு எவனுக்காயினும் தன்னை அருப்பணம் செய்துவிட்டவளோ வென்பதை யறிய, அவளது கழுத்தில் தாலி இருக்கிறதோ வென்று உற்றுநோக்கினார். காசுமாலை வைர அட்டிகை, கடியாரச்சங்கிலி முதலியவை அவளது அழகிய மார்பில் காணப்பட்டனவன்றி, மாங்கலியம் காணப்படவில்லை.

அவள் திருவாரூருக்குச் செல்பவளென்பதையும், அவளது பெயர் கமலமென்பதையும் சந்தேகமற உணர்ந்தார். அந்த ஊர் அவளது பிறந்த விடமோ அல்லது புகுந்தவிடமோ என்பதே அவரது சந்தேகமாய் வதைத்தது. கோடீசுவரனது செல்வப்புதல்வியைப் போலக் காணப்பட்ட அந்த யௌவன மின்னாள் நடு இரவில் தனிமையிற் பிரயாணம் செய்யத்துணிந்ததே அவருக்குப் பெருத்த விந்தையாக விருந்தது. பாலியப் பருவத்தினரான சாமாவையர் என்ன செய்வார்? ஏதோ பெருத்த விபத்திலகப்பட்டவரைப்போலத் தம் மதியை இழந்து தவிக்கிறார். தீயின்மேல் வெண்ணெயென உருகி உட்கார்ந்து போனார். அவளது ஒவ்வொரு அங்கத்தையும் பார்த்து

அனததன் அழகிலேயே ஈடுபட்டு; தேனில் வீழ்ந்த ஈயைப்போலத் திகைத்து வாயைப் பிளந்து அசைவற்று உட்கார்ந்தேங்கினர். அவள் வெளிப்புறத்தில் விட்டிருந்த தன் முகத்தை எப்போது உட்புறம் வாங்கித் திரும்புவாளோ வென்றும், அதை எப்போது கண்ணாரக் கண்டு மனதார உண்டு களிக்கலாமோ வென்றும், ஆவல் கொண்டு பதறினர். அதுகாறும், பொன்னாசையில் நெடுந்தூரஞ் சென்றிருந்த அவரது மனதை அந்தப் பெண்ணாசை மிகுந்த உரத்தோடு தாக்கித் திருப்பியது. அந்த அதிர்ச்சியினால் அவரது மனவுரமும் தரித்திர குணமும் சிதறிப்போயின. உள்ளமும் உடம்பும் நெகிழ்வடைந்து, தயாளகுணமும் கண்ணிய புத்தியும் உண்டாயின. அவள் திருவாரூரில் இறங்கிப்போவதற்குள், அவளுடன் ஒரு சொல்லாயினும் பேசாவிடில் தமது ஜன்மம் கடைத்தேறாதென வெண்ணினர். தம்மை புலியோ கரடியோ வென்று நினைத்து அஞ்சி, பிடிவாதமாகத் தனது முகத்தை வெளியில் வைத்துக்கொண்டிருந்த அந்த மங்கையுடன் தாம் எதைக் குறித்துப் பேசுவதென்பதையும் எப்படிப்பேசுவதென்பதையும் அறியாதவராய் மிகவும் தத்தளித்தார். அவரது மனோவேதனையை ஒருசிறிதும் அறியாத துஷ்ட ரயில்வண்டி கிடு கிடு குடு குடு கிலு கிலு குலு குலு வென்று தாளம், மத்தளம், கிஞ்சிரா முதலிய வாத்தியங்களின் முழக்கங்களைச் செய்து கொண்டு ஓடி திருவாரூருக்கும் அதற்குமுள்ள இடைத்தூரத்தைக் குறைத்துக்கொண்டேயிருந்தது. அவர்களிருந்த ரயில்வண்டி ஒரு கட்டிலைப் போலவும், நீலநிறத்தைக் கொண்ட களங்கமற்ற ஆகாயப்பரப்பு, அக்கட்டிலின் மேல் விரித்த அஸ்மானகிரிபோலவும் காணப்பட்டன. ஆகாயத்தில் அதிவேகமா யோடிய சந்திரன் சாமாவையரைப் பார்த்து, ‘ஓய்! ஐயரே! நீர் நினைக்கும் திருட்டு நினைவை நான் நன்றாக அறிந்து கொண்டேன். இதோ ஓடிப்போய் இந்த விஷயத்தை ‘உம்முடைய மனைவி மீனாட்சியம்மாளிடம் சொல்லிவிடுகிறேன். பாரும்’ என்று கூறி, அவரை மிரட்டுவதைப் போல விருந்தது. ரயில்வண்டியிலிருந்த மற்ற யாவருக்கும் அந்தக்குளிர்மாமதி இனிமையையும், சுகத்தையும் குளிர்ச்சியையும், அமுதத்துளிகளையும் வாரி வாரி வழங்கினதாயினும், என்ன காரணத்தினாலோ சாமாவையர் ஒருவரிடம் மாத்திரம் வருமம் பாராட்டி, அவர்மீது நெருப்பு மழைபொழிந்து அவரது தேகத்தைச் சுட்டெரித்தது. நிலவு பகலைப்போலவும், பாலைப்போலவும்

எங்கும் தவழ்ந்தது. இருபுறங்களிலும் செழித்து வளர்ந்திருந்த நெற்பயிர், ஒவ்வொரு படி நெல்லைக் கொண்ட கதிர்களைச் சுமந்து தென்றற்காற்றிலசைந்து ஒலித்துக் கீழேசாய்ந்தது ‘சாமாவையரே! உம்மைப் பார்க்கவும் கண்கூசுகிறதே!’’ என்று ஓலமிட்டு வெட்கத்தினால் தலையைக் கீழேதாழ்த்திக்கொள்வதுபோலிருந்தது. இடையிடையே தோன்றிய தென்னஞ் சோலைகளிலும், மாஞ்சோலைகளிலும் குயில் முதலிய பறவைகளும் ஏனைய ஜெந்துக்களும் இயக்கமொடுங்கியவையாய் உணர்வற்று, துறவிகளைப் போலப்பரம்பொருளிலீடுபட்டு, மெல்ல வீசிய தென்றலால் தாலாட்டப்பட்டு சிற்றாறுகள் நீரோடைகள் முதலிய வற்றிலுண்டான சங்கீதவொலியால் மயங்கி ஆநந்தத்துயிலிலாழ்ந்திருந்தனவாயினும் சாமாவையரது வருகையால் திடுக்கிட்டு விழித்து அவரது நடத்தையைக் கண்டுபொறாமல் சிலும்பின. தென்னந்தோப்புகள் இளநீர்க்குலைகளால் அலங்கரிக்கப்பட்ட கலியாணப்பந்தலைப் போல் விருந்தன. அருகிலிருந்த வாழைத்தோட்டங்களில், இரதங்களின் கீழ் அழகிய தாதியர் சாமரையைத்தாங்கி நிற்றலைப்போல அகன்றஇலைப்பரப்பின்கீழ் வாழைமரங்கள்பழத்தாறுகளையும், பெருத்த பூக்களையுந் தாங்கிநின்றகாட்சி, சாமாவையரையும், கமலத்தையும் ஊர்வலமாக அழைத்துச் செல்ல, வரிசைகளுடன் கலியாணப்பந்தலுக்கருகில்நிற்கும் இரதக்கோலத்தைப்போலவிருந்தது. பெருத்ததேனிறால்களைக் கொண்ட கரும்புப்பயிர், ஈட்டி, கேடயம் முதலிய படைகள் ஊர்வலத்திற்கு அணிவகுக்கப்பட்டு நிற்றலைப்போல விருந்தது. இடையிடையே தோன்றிய நந்தனவனங்களிலும்பங்களாக்களிலுமிருந்தெழுந்த பூக்களின் நறுமணங்களையும், மகரந்தப்பொடியையும், தண்ணீர்த் திவலைகளையும் தென்றல் சுமந்து, வண்டிக்குள் புகுந்து ஒவ்வொருவருக்கும் ஊர்வலத்தின்பொருட்டு பன்னீர்தெளித்து வாசனையூட்டித் தாம்பூலம் கொடுப்பதுபோல விருந்தது. இத்தகைய இனிய பொருட்களின் காட்சியிலும், எண்ணிறந்த இன்பங்களின் பெருக்கிலும் ஆழ்ந்து, ரயில்வண்டியிற் சென்ற ஏனைய ஜனங்கள் யாவரும் துயிலாகிய கள்ளையுண்டு, மயங்கி, பிரம்மாநந்த நிலையடைந்து அசைந்தாடி பக்கத்திலிருந்த பலகைகளிலும் ஒருவர்மீதொருவரும் மோதிக் கொண்டனர். நமது உதிரத்தால் வளரும் நமதுசந்ததியாராகிய மூட்டைப்பூச்சிகள் சாமாவையர் வந்த வைபவத்தைக் குறித்துப் பெருத்த விருந்துண்டுகொண்டிருந்தன. ஆனால் நமது கமலமோ, மூன்றுநாட்

கள் ஒரே மூச்சாகத் துயின்று அப்போதே விழித்தவள் போல சிறிதும் கலக்கமும் அயர்வுமின்றித் தனது கண்களை நன்றாக விழித்துக் கொண்டு தன் மனதை வேறு ஏதோ ஒருநினைவில் செலுத்தியிருந்தாள். அன்றிரவில் தனக்குக் கிடைக்கப்போகும் பெரும்பாக்கியத்தைப் பற்றி அவள் கனவிலும் நினையாத வளாயும், தனது ஆயுதங்கள் சாமாவையர் மனதில் எவ்விதமான அனர்த்தங்களை விளைவித்தன வென்பதை உள்ளவாறு உணராதவளாயும் உட்கார்ந்திருந்தாள் சாமாவையர் மாத்திரம் விவரிக்கமுடியாத ஏதோ ஒருவித சங்கடமடைந்தவராய் அவ்வளவு இரமணீயமான காட்சியினிடையில் பெருத்த வேதனையடைந்தவராயிருந்தார்.

அந்த நிலைமையில் வண்டி அடுத்த ஊரை அடைந்து நின்றது. அப்பொழுது மணி பதினொன்றாதலால், ஒருவரும் வண்டியில் ஏறவில்லை. ஸ்டேஷன் மாஸ்டர், போர்ட்டர் முதலியோர்கண்களை மூடித் துயின்று கொண்டே தமது வேலைகளைச் செய்தனர். ஆனால் அவ்வூரில் முதல் தரமான நல்ல பெங்களூர் கமலாப்பழம் விற்றது. வண்டியிலிருந்த கமலாக்கனிக் கருகில் செல்லவேண்டுமென்னும் நினைவைக் கொண்டவராய், வெளியில் விற்கப்பட்ட கமலாப்பழத்தை வாங்க வெண்ணினார், 'அடே! கமலா! இங்கு கொண்டுவா' என்றுசொல்லிக் கொண்டே எழுந்து வாசற்கதவண்டை ஓடிவந்தார். அந்தப்பெண் உடனே தனது கால்களை மேலே வாங்கிக்கொண்டு அவருக்கு நெடுந்தூரத்திற்கு அப்பால் மரியாதையாக விலகிக்கொண்டு சாய்மானப் பலகையோடு ஒட்டிக்கொண்டாள். என்றாலும் அவள்மீது கமழ்ந்த மல்லிகை ரோஜா முதலிய அரிய மலர்களின் நறுமணமும், ஜவ்வாது, கூந்தல் தைலம் முதலியவற்றின் பரிமளகந்தமும் ஒன்றுகூடி அவர் நாசியில் புகுந்து, அவரைப் பரவசப்படுத்தி இன்பக் கடலிலாழ்த்தின. தாம் அவ்வளவு நெருக்கமாக அவ்விடம் நின்றதைப்பற்றி அவர்ஒருவகை லஜ்ஜையடைந்தார். அவளுடைய புதிய பட்டுப்புடவை சரசரவென்று ஓசைசெய்ததும், கையில் அணியப்பட்டிருந்த பம்பாய் வளையல்கள் கலகலவென்று ஒலித்ததும், சங்கீத ஓசையைப் போல அவர் மனதில் பாய்ந்து இன்பமும் துன்பமும் உண்டாக்கின. அவள்மீதிருந்த குற்றமற்ற ஒவ்வொரு சிறிய பொருள்கூட, அவளுடன் சேர்ந்துகொண்டு அவர் விஷயத்தில் சதிசெய்வதாகக் காணப்பட்டது. உடனே அவர் கமலாப்பழக்காரனை அமர்த்தலாக அழைத்து 'அடே! என்னடா விலை?' என்றார். அவன் 'சாமி! இது குடகு கிச்சிலி. பழம் ஒரு அணா' என்றான். சாமாவையர் 'அடே! எனக்கு ஒரு டஜன்பழம் வேண்டும்; என்ன விலை சொல்லுகிறாய்' என்று ஆடம்பரமாகக்கேட்டார். அவன் அது வரையில் டஜன் கணக்கில் விற்றவனல்லன். அவன் தூக்கத்திலுமிருந்தமையால், கணக்கு சரியாகவிளங்கவில்லை. 'எடுத்துக்கொள் சாமி! சகாயமாய்த்தருகிறேன்; ஒரு ரூபாய்க்குக் குறையாது; ரயில் புறப்பட்டு விடும். சீக்கிரம் ஆகட்டும்' என்றான். சாமாவையருடைய நினைவுமுற்றிலும் அருகில் சுவர்ணவிக்ரகம்போல இன்பமே வடிவாய் உட்கார்ந்திருந்த உயிர்க்கமலாக்கனியின்மீது சென்றிருந்தமையால், அவர் மனது கணக்கில் செல்லவில்லை. சில்லரைகேட்டுக்கொண்டு, அவனிடம் அதிகமாக பேச்சை வளர்த்துக் கொண்டிருக்கவும் அவருக்குப் பொறுக்கவில்லை. அவன் முழு ரூபாயாகக்கேட்டதைப்பற்றி மகிழ்வடைந்தவராய் உடனே பன்னிரண்டு பழங்களை வாங்கி, அந் தப் பெண்ணிருந்த இடத்திற்கு எதிர்ப்புறப்பலகையில் அழகாய்ப் பரப்பினார். தாம் பணக்காரர் என்பதைக் காட்டிக்கொள்ள நினைத்தவராய், அவர் பலகையில் உட்கார்ந்துகொண்டு ரயில்பையைத் தமக்கருகில் இழுத்து அதைத்திறந்து உள்ளே இருந்த பளுவான மூட்டையைத் தூக்கமாட்டாமல் தூக்கி 'அப்பாடா! எவ்வளவு கனம்!', என்று தமக்குள் கூறிக் கொண்டே பக்கத்தில் வைத்து, அதை அவிழ்த்து, அதிலிருந்து ஒரு ரூபாவெடுத்து கதவண்டை சென்று பழக்காரனிடம் கொடுத்தார். அதற்குள் அந்த அழகிய மங்கை தனது கடைக்கண் பார்வையை அவரது பணமூட்டையில் செலுத்தினாள். அங்கு ஏராளமான பவுன் குவியலும், நோட்டுகளும் ரூபாய்களுமிருக்கக்கண்ட பெண்மணி பெருந்திகைப்பும் வியப்புமடைந்து, அந்த மனிதர்யாரோ லட்சப்பிரபுவென்றுதீர்மானித்துக்கொண்டாள். அவர் பழக்காரனிடம் ஏமாறிப் போனதைஅவள்அறிந்தாளாயினும் அதை அவரிடம் தெரிவிக்க அஞ்சி மௌனம் சாதித்தாள். பணமூட்டையைத் தான் பார்த்ததை வெளியில் காட்டிக் கொள்ளக் கூடாதென்று நினைத்து அவள் தனது முகத்தை வேறு புறத்தில் திருப்பிக்கொண்டாள். அப்போது தனது ஆசனத்தில் ஒழுங்காக உட்கார்ந்து கால்களை வழக்கப்படி கீழே தொங்கவிட்டிருந்தாள். பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிய சாமாவையருடைய வஸ்திரமும் அந்தப்பெண்பாவையின் பட்டுத்துயிலும் உராய்ந்து யோகக்ஷேமம் விசாரித்துக்கொண்டன. அதைக் கண்ட சாமாவையரது தேகம் பரவசமடைந்தது மெல்ல ஆடியசைந்து அழகுநடைநடந்து வந்து தமது பணமூட்டைக் கருகில் உட்கார்ந்து அதை அதிகமாகப் பரப்பிக்காட்டியபின் கட்டிப் பைக்குள் வைத்தபின்னர் உல்லாசமாகச் சாய்ந்துகொண்டார். ஒரு பழத்தை எடுத்து தோலை உரிக்கத் தொடங்கியவராய் அந்தப்பெண்மணியுடன் எப்படிப் பேசுவதென்பதைப் பற்றிச் சிந்தனை புரிந்தார். துணிந்து தாமே அவளுடன் பேசுவதைத் தவிர வேறு வழியில்லையென்று உறுதிசெய்து கொண்டார்.

“ஏனம்மா! திருவாலூருக்கு வண்டி எவ்வளவு மணிக்குப்போகிறது?”

என்று மிகுந்த அன்பையும் பட்சத்தையும் புகுத்திக் கேட்டுவிட்டு அவள்முகத்திலுண்டாகும்மாறுதல்களைநன்றாகக்கவனித்தார். அந்தத் தாக்கலை எதிர்பார்க்காத மங்கை சிறிது திகைப்பும் நாணமுமடைந்து தனது முகத்தை அப்புறம் திருப்பினாள். ஆனால் அவர் அவளோடுபேசியதைப் பற்றி அவள் ஆயாசமடைந்ததாகத் தோன்றவில்லை; ஒருவகை இன்பமுற்றதாகவே தோன்றியது. அப்புறம் திரும்பிய வண்ணம், தனது அழகிய வாயைத் திறந்து கிளி கொஞ்சுவதைப் போல மொழிந்து "ஒரு மணிக்குப் போகிறது" என்றாள். அது வீணையின் ஒலியைப் போல விருந்த தன்றி மேன்மேலும் பேசும்படி சாமாவையரைத் தூண்டியதாக விருந்தது. தம்முடன் உரையாட அவளுக்கு விருப்பமேயென்று யூகித்துக் கொண்ட சாமாவையர் அதிகரித்த உற்சாகமும், ஆவேசமும், அவளுடன் நெருங்கிப் பழகவேண்டுமென்னும் ஆவலும் கொண்டார். தமது ஆசனத்தை விட்டு, அவள் பக்கமாக அரைச்சாண் நகர்ந்து உட்கார்ந்த வண்ணம் "திருவாரூர் ஸ்டேஷனுக்கும் உங்கள் வீட்டுக்கும் எவ்வளவு தூரமிருக்கும்? நடு ராத்திரியில் நீ தனியாய் ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்குப் போகவேண்டுமோ?வழியில் திருடரின் பயமுண்டோ?" என்று அவளுடைய விஷயத்தில் அந்தரங்கமான அபிமானத்தைக் கொண்டவராய்க் கேட்டார்.

அவ்வணங்கு முன்னிலும் அதிகரித்தகுலுக்கு, தளுக்கு,நாணம் முதலியவற்றைக் காட்டி 'எங்கள் வீடு கமலாலயம் தெற்கு வீதியிலிருக்கிறது. குதிரைவண்டிகள் ஏராளமாய்ப் போகும்;பயமில்லை'என்று முன்னிலும் அதிகரித்த இனிமை,வசீகரம், மகிழ்வு முதலியவற்றைக்காட்டி மறுமொழி கூறினாள். அவளது சொல்லழகும், அபிநயத்தினழகும் அவர் மனதைக் கொள்ளைகொண்டன. மிகவும் மதிமயக்கமும், மோகவெறியுங்கொண்டார். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணித் தவித்தார். அவரது மனது பல இனிமையானகனவுகளைக் கண்டு இன்பக்கோட்டைகட்டிக் கொண்டிருந்தது. யாவரும் தூங்கிய அந்த இராக் காலத்தில் கமலாப்பழம் விற்கப்பட்டதும், அதைத் தாம் வாங்கியதும் தெய்வத்தின் செயலாகத் தமக்கு ஏற்பட்டனவென்றும்,அந்த உயிர்க்கமலாக் கனியைத் தாம்பெறுவதற்கு, அது சகுனமென்றும் நினைத்து அளவளாவியிருந்தார். அப்போது பலகையிலிருந்த ஒரு மூட்டைப்பூச்சி, மாம்பழத்தைப்போல விருந்த அவரது தேகத்தில் வாயைவைத்து ஒருவாய் இரசம் உறிஞ்சியது. அது,'ஐயரே!சின்னக்கமலாவைவாங்கியதில்ஏமாறிப்போய் நான்கணு இழந்தீர்.பெரிய கமலாவினால்எவ்வளவுஏமாறுவீரோ!ஜாக்கிரதை;இது

நல்ல சகுனமல்ல. அபசகுனம்" என்று அவரை எச்சரிப்பதைப் போல விருந்தது. சாமாவையர் புன்னகை செய்தவராய் எழுந்து கீழே பார்த்து "அப்பாடா! எவ்வளவு சுகமாக மூட்டைப்பூச்சி கடிக்கிறது! இந்த எஸ். ஐ. ஆர். வண்டியே எப்போதும் மூட்டைப்பூச்சிக்குப் பேர்போனது." என்று சொல்லிவிட்டு இன்னும் ஒரு முழம் அவள் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து கொண்டார். அவள் அப்புறம் திருப்பிய முகத்தோடு "ஆம், ஜனங்கள் தூங்கிவிட்டால் இறங்க வேண்டிய இடம் தெரியாதல்லவா! அதற்காக கம்பெனியார் இவைகளை நியமித்திருக்கிறார்கள். இவைகளுக்கு நாம் சாப்பாடு போட வேண்டாமா." என்று தனது நகைப்பை யடக்கிக்கொண்டே கூறினாள். அதைக்கேட்ட சாமாவையர் பெரிதும் மகிழ்வடைந்து விழுந்து விழுந்து சிரித்தார்; இரண்டு நிமிஷம் மௌனமாக விருந்தார்; பிறகு "ஏனம்மா! இப்படி ராத்திரி காலத்தில் நீ துணைக்காக இன்னும் வேறு மனிதரை அழைத்துக்கொண்டு வரக்கூடாதா? இப்படித் தனிமையில் வரலாமா?" என்று உண்மையான உருக்கத்தோடு கேட்டார். உடனே அம்மடந்தை "திடீரென்று புறப்பட்டு திருவாரூர் போகவேண்டி யிருந்தது; சரியான துணை கிடைக்கவில்லை. அதனாலேதான், நான் வேறு வண்டிகளில் ஏற மனமில்லாமல் இங்கு வந்தேன்; தக்க மனிதரிருக்கும் இடமாகப்பார்த்து ஏறி விட்டால் பயமில்லையென்று தனிமையில் வந்தேன்" என்றாள்.

தகாத மனிதராகிய தம்மை, அவள் தக்க மனிதரென்று மதித்திருப்பதாக வெளியிட்டதை யுணர்ந்த ஐயர் பூரித்துப் புளகாங்கிதமெய்தினார்; குனிந்து தமது மார்பையும் உடைகளையும் பார்த்துக்கொண்டார். முதலில் அவளுடன் பேச்சுக்கொடுப்பதே கடினமாய்த் தோன்றியது. ஐந்து நிமிஷத்தில் அவளுடன் மிகவும் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டுப்போனதை நினைத்து உற்சாகமடைந்து, தாம் பிரிவதற்குள் அந்த நட்பு பழுத்துப் பலனைத்தருமென்று உறுதியாக நினைத்து உவகை கொண்டார். மேலும் உரையாடத் தொடங்கி "இப்போது உன்னைக் கொணர்ந்து ஏற்றிவிட்டவர் யார்?" என்ற வண்ணம் அவள் பக்கம் நகர்ந்தார். "அவர் என்னுடைய மாமன்" என்றாள் பெண்ணரசி.

ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும் வால்வைப்பதுபோல, ஐயரவர்கள் நகர்ந்துகொண்டே தனக்கருகில் வந்ததை, அந்த இன்ப

Forms 4 & 5—Printed at the T. V. C. Press, Madras.

வல்லி உணர்ந்தாளாயினும், அதைக் கவனியாதவளைப் போலிருந்தாள்.

ஆனால் சாமாவையர், அவளுக்குத்தெரியாமல் தாம் சாமர்த்தியமாக நகர்ந்துவருவதாக நினைத்துத் தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டவராய் “ஏனம்மா! திருவாலூர் உன்னுடைய சொந்த ஊரா?” என்றார்.

“ஆம்! அதுதான் என்னுடைய தாய் வீடு” என்று இனிமையாக விடையளித்தாள் மடமங்கை. சில நிமிஷங்களுக்கு முன்பே சாமாவையர் சமலாப்பழத்தின் தோலை உரித்துவிட்டார். அதை அவளுக்கு முதலில் நிவேதனம் செய்யவேண்டுமென்பது அவருடைய விருப்பம். அதன்பொருட்டு அவளிடம் நெருங்கிப் பல கேள்விகளைக் கேட்டு, வழிசெய்து கொண்டார். பிறகு “ஆகா! வண்டியிலிருப்பது எவ்வளவு வெப்பமாயிருக்கிறது! தாகம் அதிகமாக உண்டாகிறது. உனக்கு எப்படி இருக்கிறது? வியர்க்கவில்லையா?” என்றார்.

“ஆம், ஆம், நிரம்பவும் புழுக்கமாகத்தானிருக்கிறது. வெயில் காலமல்லவா” என்றாள் மங்கை.

அவள் தமது மனதிற்கு உகந்தவிதம் விநயமாய்ப் பேசுவதைக்கண்ட சாமாவையர் மிகுந்த மகிழ்வையும், துணிவையுமடைந்தார். அவளுடன் நெடுங்காலம் பழகிய நண்பரைப்போல தயக்கமின்றி தமது கரத்தை அவளுக்கருகில் நீட்டி “இந்தா! இந்தப் பழத்தைச் சாப்பிடு; தாகத்துக்கு நல்லது” என்று தோல் உரிக்கப்பட்ட ஒரு பழத்தைக் கொடுக்க, அவள் மிகவும் நாணமும் லஜ்ஜையுமடைந்தவள்போலக் காட்டித் தனது உடம்பை நெளித்துக் கொண்டவளாய்த் தயங்கி “இல்லை; வேண்டாம் வேண்டாம்” என்று அரைமனதோடு கூறினாள். ஆனால் அவள் தனக்கு அறுதியாக வேண்டாமென்று சொல்வதாகத் தோன்றவில்லை. பழத்திற்கருகிலிருந்த தனது கையையும் அவள் அப்புறம் இழுத்துக்கொள்ளவில்லை. சாமாவையர் “பாதகமில்லையம்மா! வாங்கிக்கொள். எல்லாருக்கும் கொடுக்கலாமென்றுதானே இத்தனை பழங்கள் வாங்கினேன்” என்று அன்போடு வற்புறுத்திய வண்ணம் பழத்தை அவளுடைய கையில் வைத்தார். “எனக்கு அவ்வளவு தாகமில்லை. நீங்கள் சாப்பிடுங்கள்” என்று லஜ்ஜையோடு மொழிந்தவளாய் பழத்தை தன்கையால் பிடித்துக்கொண்டாள். அப்போது அவள் மிகுந்த இன்பமுந் துன்பமுமடைந்தாளென்பது அவளது அழகிய முகத்தில் நன்றாகத் தெரிந்தது. அதைக் கண்ட சாமாவையருடைய மனது எண்ணாததையெல்லாம் எண்ணியது. தேகம் ஆவேசத்தால் துடி துடித்தது. எவ்வித இடையூறுமின்றி தமது எண்ணம் நிறைவேறிக்கொண்டே வருவதையும், அந்தப் பெண்ணுடைய நட்பு முற்றிக்கொண்டே வருவதையும் கண்ட சாமாவையர், தாம் சுவர்க்கலோகத்திலிருப்பதாக நினைத்துக்கொண்டார்; அவளுக்கெதிரில் கதவண்டையிலேயே உட்கார்ந்துகொண்டார். பெண்மணி முதலிற் காட்டிய நாணமும் குறைந்துபோனமையால், அவளும் காலைக்கீழே விடுத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். எதிரில் உட்கார்ந்திருந்த சாமாவையர் இன்னம் ஏழெட்டுப் பழங்களை வாரி, அவளுக்கருகில் பலகையில் போட்டுவிட்டு நயமாக “சாப்பிடம்மா! வெட்கப்படாதே” என்று கூறியவாறு தாமும் ஒரு பழத்தை எடுத்து தோலை உரித்துவிட்டு சுளைகளை வாயிற்போட்டுக்கொண்டு அவளை மேன்மேலும் ஊக்கினார். அவள் தனது முகத்தை வண்டிக்கு வெளியில் விடுத்து, சுளைகளைத் தின்னவாரம்பித்தாள். ஆனால், வாயில் போட்டுக்கொண்டதும், மென்றதும், விழுங்கியதும் வெளியில் தெரியாமல் அவ்வளவு மறைவாகக் காரியத்தை நடத்தினாள். இரண்டொரு நிமிஷத்தில் பழம் தீர்ந்துபோனதாகையால், உட்புறம் சிரத்தை வாங்கிக் கொண்டாள். அதற்குள் சாமாவையர் மூன்று பழங்களை ஒழித்துவிட்டார். உட்புறம் திரும்பிய பெண்ணைப் பார்த்து “பழம் ருசியாகவிருக்கிறது. இன்னொன்று சாப்பிடு” என்று தன் கையிலிருந்த ஒன்றை நீட்ட அவள் “வேண்டாம் வேண்டாம், அப்புறம் ஆகட்டும், இன்னம் நாம் நெடுந்தூரம் போகவேண்டும்” என்று உறுதியாகக் கூறி மறுக்க, சாமாவையர், திரும்பவும் எடுத்துக்கொள்வதாக அவள் வாக்களித்ததை உத்தேசித்து, மேலும் வற்புறுத்தாமல் தமது கையை இழுத்துக்கொண்டார். பழத்தைப்பற்றிய உபசாரணை அவ்வளவோடு நின்றது.

பிறகு ஐயர் திடீரென்று எதைக்குறித்தோ நினைத்துக் கொண்டவரைப்போல, தமது பையைத் திறந்து தடபுடலாக உட்புறமெல்லாஞ் சோதனை செய்தார். அங்கு பார்த்தார். இங்கு பார்த்தார். அவர் எதைத் தேடுகிறாரென்பதை அறிந்து கொள்ளும் எண்ணத்துடன் பெண்மணி

யும் அவர் செய்ததைக் கடைக்கண்ணால் உற்றுநோக்கியவாறிருந்தாள்; அடுத்த நிமிஷம் அவர் "பைத்தியக்காரன்; முக்கியமான சாமானை வைக்க மறந்து விட்டான். வேலைக்காரப் பயல்களெல்லாம் முட்டாள்கள்; வெற்றிலைப் பெட்டியை வைக்க மறந்து போகவேண்டாமென்று ஆயிரந்தரம் சொன்னேன். அதை வைக்க மறந்தேபோய்விட்டான்." என்று கூறிக்கொண்டே அதிருப்தியாகப் பையைப் பூட்டினார். அதைக்கேட்ட மடந்தை தனக்கருகிலிருந்த அழகிய வெற்றிலைப் பெட்டியை எடுத்து, அவரிருந்த பலகையில் மெல்ல வைத்து "இதில் வெற்றிலை நிறைய இருக்கிறது. போட்டுக் கொள்ளுங்கள்" என்று மரியாதையாகத் தேனும் பாலுமாய் மொழிந்தாள். பழம் நழுவிப் பாலில் விழுந்ததாக நினைத்த சாமாவையர் ஆநந்தமடைந்தவராய்ப் புன்முறுவல் கொண்டு "அடாடா! இருப்பதை நான் போட்டுக் கொண்டால், உனக்கு வேண்டாமா?" என்றார். அவள் "நான் அதிகமாகப் போட்டுக் கொள்ளுகிறதில்லை. நீங்கள் போட்டுக் கொள்ளுங்கள்" என்று வற்புறுத்தி உபசரிக்க உடனே ஐயர் பெட்டியைக் கையால் எடுத்தார். அது மிகவும் பளபளப்பாயும், பல அழகிய பூக்களால் சித்தரிக்கப்பட்டதாயுமிருந்து கண்ணைக் கவர்ந்தது. வியப்போடு அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்து "பெட்டி நிரம்பவும் சொகுசாயிருக்கிறது." என்றார்; அந்தப்பொற்பாவையால் தீண்டப்பட்ட பெட்டியை எடுத்தவுடன் அவர் உடம்பில் ஒருவிதமான இனிமை பரவியது. அவரது கரை கடந்த ஆவேசத்தில் தம்மை மறந்து, அந்தப் பெட்டியை முத்தமிடலாமா வென்று நினைத்தார். என்றாலும், அடுத்த நொடியில் அவரது நல்லறிவு திரும்பி "பதறாத காரியம் சிதறாது" என்று புத்தி புகட்டியது. பெட்டியைத் திறந்து உல்லாசமாகத் தாம்பூலந்தரித்துக் கொண்டவராய்ப் பெட்டியை அவளுக் கருகில் வைத்து தாம்பூலந் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு உபசரணை புரிந்தார். அவள் முதலில் மறுத்துப் பிறகு அவரது கோரிக்கையைப் பூர்த்தி செய்தாள்; வாய் நிறைய வெற்றிலை போட்டிருந்த ஐயரவர்களின் ஆவேசமும் மகிழ்ச்சியும் உச்சநிலையிலிருந்தன. கண்கள் ஆநந்தசாகரத்தில் நீந்துவனபோலத் தோன்றின. ஏதோ ஒரு விஷஜெந்துவால் தீண்டப்பட்டவரைப் போல தத்தளித்திருந்தார்.

முதலாவது ஸ்டேஷனில் முதன்முதலாக ஒருவரை யொருவர் கண்ட அவ்விருவரும் மூன்றாவது ஸ்டேஷன் வருமுன் பழம்,

பாக்கு வெற்றிலை, கண்ஜாடைகள், வாய்மொழிகள் முதலியவற்றை மாற்றிக்கொண்டு விட்டனர். அரைமணி நேரத்தில் ஐந்து வருஷம் பழகினவரைப்போலாயினர். அந்த நிலைமையில் வண்டி அடுத்தஊரில் வந்து நின்றது. அது எப்போது புறப்படுமென்னும் ஆவலினால் சாமாவையரது மனம் துடிதுடித்தது. மங்கையும் ஒருவகை அமரிக்கையின்மையைக் காட்டி "இந்த முள்ளிக்காய் ஸ்டேஷனில் வண்டி இவ்வளவு நேரம் நிற்கிறதே!" என்று கூறி நெடுமூச்செறிந்தாள். தமது மனநிலைமையைப்போலவே அந்த மோகனாங்கியின் நிலைமையுமிருத்தலைக் கண்ட ஐயர் இன்பக்கனவு கண்டு மனக் கோட்டை கட்டினார். "இந்த எஸ். ஐ. ஆர் வண்டியே இப்படித் தான்; சுத்தப்பிணம். இதற்கு ஏற்படும் ஸ்டேஷன் மாஸ்டர்களும் தூங்குமூஞ்சிகள், ஓட்டுகிறவர்களோ அன்றாடங்காய்ச்சிகள்" என்று சரமாரியாகத் திட்டவாரம்பித்தார்.

அவர் மனது குளிரும்படி வண்டி உடனே நகர்ந்தது; "அப்பாடா புறப்பட்டதையா!" என்று குதூகலத்தைக் காட்டினார்.

சென்ற சில நிமிஷங்களாக ஐயரின் பாதங்கள் அவளது பாதங்களை நோக்கி நகர்ந்து மெல்லப்பிரயாணம்செய்துகொண்டேயிருந்தன. அந்த நிலைமையில் அவர் அவளிடம் சம்பாஷணையை வளர்த்துக் கொண்டிருந்த்வர் வண்டி புறப்பட்ட பின்னர். "ஏனம்மா! நீ இப்போது எந்த ஊரிலிருந்து வருகிறாய்?" என்று கேட்டார். "நான் கொறநாட்டிலிருந்து வருகிறேன்" என்றாள் தையல் "கொறநாடுதான் உன்னுடைய புருஷன் வீடோ?" என்று ஐயர் நயமாகக்கேட்க, அம்மாள் சிறிது நாணித்தயங்கி "இல்லை அது மாமன் வீடு; எனக்கு இன்னம் கலியாணமாகவில்லை" என்றாள். அந்த நற்செய்தியைக் கேட்ட ஐயருக்கு பேருவகையால் அங்கம்பூரித்தது; அவரது பாதங்கள் இன்னம் சிறிது முன்னுக்குச் சென்றன. "உன்னுடைய பெயரென்ன அம்மா? ஆம் ஆம்! நான்மறந்து விட்டேன். கமலமென்று உன்னுடைய மாமன் சொன்னதை மறந்துவிட்டேன்." என்றார். அதுவே குதபகாலம். ஏனெனில் அவருடைய வலதுபாதத்தின் விரல்கள் அந்த வடிவழகியின் மிருதுவான பாதத்தின் விரல்களை முத்தமிட்டு அவைகளுடன் உறவாடின. ஆகா! இமைப்பொழுதில் மின்சார சக்தி பாவுதலைப்போல அவருடைய பாதத்தின் வழியாக ஆநந்த வெள்ளம் பரவி அவரது சிகையை உலுக்கியது.

மயிர்பொடித்தது. தேகம் பரவசமடைந்தது. தாம் ஜென்மமெடுத்த நாள் முதல் அதுவரையில் தாம் அத்தகைய இணையற்ற சுகத்தை அடைந்ததே இல்லையென்று நினைத்து அளவளாவினார். தமது கால் தீண்டியதைக் குறித்து அந்தப்பூங்கோதையின் முகத்தில் கோபக் குறி உண்டானதோ வென்பதை யறிய வெண்ணி அவளது வதனத்தை உற்று நோக்கினார். அதுகாறும் ஜ்வலித்துவந்த மகிழ்ச்சியே அப்போதும் மாறுபடாமல் தாண்டவமாடியது. முகம் முன்னிலும் மிகவும் நெகிழ்ந்து உருக்கத்தைக் காண்பித்தது. அதைக் கண்ட ஐயர் மனதில்பெரிதும் துணிவுண்டாயிற்று. என்றாலும், விவரிக்க முடியாத அச்சம் ஒரு புறம் அவரைப் பின்புறம் இழுத்துக் கொண்டே இருந்தது. தேகமோ கட்டினில் நில்லாமல் தடுமாறியது. அதற்குமேல் என்னவிதமாக மொழிவதென்பதை யறியாமல் தயங்கினார். அவள் விஷயத்தில் தாம் கொண்டுள்ள எண்ணத்தை, இனி வெளிப்படையாகக் கூறுவதைத் தவிர, சொல்வதற்கு வேறொன்று மிருப்பதாக அவருக்குத்தோன்றவில்லை. அவள் குடும்ப ஸ்திரீயா அல்லது தாசியா என்னும் பெருத்த சந்தேகம் எழுந்து அவரை உலப்ப வாரம்பித்தது. ஆனால் அதை அவளிடம் கேட்கவும் அஞ்சினார். அவள் தாசியாயிருந்தால், இன்னமும் தாராளமாகவும், கொஞ்சமும் நாணமின்றியு மிருப்பதன்றி தான் தாசி என்பதை நன்றாகக் காட்டிக்கொள்வாள். கலியாணமாகாத குடும்ப ஸ்திரீயாயிருந்தால், அவள் தனிமையில் வந்திருக்கமாட்டாள். அயல் புருஷனோடு இரவில் அவ்வாறு பழகி யிருக்க மாட்டாள். ஆகையால் அவர் எவ்வித முடிவிற்கும்வரமாட்டாமல் தவித்தார். ஒருகால் அவள் குடும்ப ஸ்திரீயில் வேசையோ என்று சந்தேகித்தார். திரும்பவும் கேள்விகேட்கத் தொடங்கினார் “ஏனம்மா! இந்த வண்டி திருவாரூர் போனவுடன், அங்கிருந்து நாகைப்பட்டணத்திற்கு வேறு வண்டி புறப்படுகிறதா ?” என்றார்.

அந்தப்பெண் “ இல்லை. இந்த வண்டி ஒருமணிக்குத் திருவாரூர் போகிறது. அங்கிருந்து விடியற்காலம் ஐந்துமணிக்குத்தான் நாகைப்பட்டணத்திற்கு வேறு வண்டி புறப்படுகிறது” என்றாள்.

அதைக்கேட்ட ஐயர் பெரிதும் துன்பமடைந்தவரைப்போல நடித்து “ அப்படி யானால் நான் விடியற்காலம் ஐந்துமணி வரையில் கண்விழித்துக்கொண்டு ரயிலடியிலேதான் உட்கார்ந்திருக்க வேண்டும். அடாடா! பெருந்துன்பமாய்ப்போனதே! இந்த சங்கதி முன்னமே தெரிந்திருந்தால் பகல் வண்டியிலாயினும் வந்திருக்கலாம்; கையில் பணமுட்டையிருக்கிறது. ஸ்டேஷனில் திருட்டு பயமிருந்தாலும் இருக்கும் ” என்றார்.

அவ்வாறு அவர் பேசியபோது அவருடைய விரல்களும் சுறுசுறுப்பாக ஊமை ஜாடைகள் காட்டி அவளுடைய விரல்களுடன் தந்திபேசின. பெண் தனது காலை இழுக்காமல் அப்படியே வைத்துக்கொண்டு “ஆம் ரயிலடியில் திருட்டுப்பயமும் அதிகம்; மூட்டைப் பூச்சிக்கடியும் அதிகம். படுக்கவும் சுகமான இடமில்லை. தங்களுக்கு விருப்பமானால், எங்கள் வீட்டுக்கு வரலாம், ஐந்துமணிவரையில் வசதியாகவும், பத்திரமாகவும் படுத்திருந்துவிட்டு ரயிலுக்கு வரலாம்; என்னுடைய தாயார் சரியான காலத்தில் எழுப்பிவிடுவாள்” என்றாள். எத்தனையுகம் தவம் செய்தாலும் காணக் கிடைக்காத அந்த உன்னதமான அழகையுடைய மங்கை தம்முடன் அவ்வளவு பட்சமாகப் பேசியதையும், தனது வீட்டிற்கு வரும்படி அழைத்ததையும் காண அவர் தம்மைப்போன்ற பாக்கியவான் இவ்வுலகில் வேறு எவனு மிருக்கமாட்டானென்று நினைத்து, நேரில் பரமபதமடைந்தவரைப்போலானார். தமது அழகைக் கண்டு அந்த மின்னாள் தம்மீது மோகங் கொண்டிருக்கிறாளென்றும் நினைத்து விட்டார். உடனே அப்படியே கையைப்பிடித்துக் கொள்ளலாமோ வென்றும் அப்படியே பாய்ந்து கட்டிப்பிடித்து ஆலிங்கனம் செய்து கொள்ளலாமோ வென்றும் நினைத்துத் துடித்தார். ஒருகால் அவள் கூச்சலிடுவாளோ வென்று அஞ்சினார். அவள் தம்மை வீட்டிற்கு வரும்படி அழைத்தது பரோபகாரச் சிந்தையினாலிருக்கலாமென்று நினைத்தார். ஆனால் தமது கால் அவள் காலில் படுவதை யறிந்தும் அதை அவள் இழுத்துக் கொள்ளாமலிருந்ததே அவருக்கு ஒருவிதமான துணிவையுண்டாக்கியது. உடனே ஐயர் புன்சிரிப்போடு “ இப்படியார் உதவிசெய்யப் போகிறார்கள்! நீ சொன்னபடியே உன்னுடன் வீட்டுக்கு வருகிறேன். உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?” என்றார்.

கமலம் புன்னகை தவழ்ந்த முகத்தோடு “என் தாயார் மாத்திர மிருக்கிறாள். வேறு ஒருவருமில்லை. நீங்கள் சுகமாக இருந்து

விட்டு வரலாம்" என்று கூறினாள்; உடனே நெடுமூச் செறிந்தாள்; அவளுடைய மார்பு விம்மித் தணிந்தது.

அப்போது ஏராளமான மூட்டைப்பூச்சிகள் கடித்து வருத்தினவாகையால் அவர் நின்று கீழே குனிந்து பலகையைப் பார்த்தார்; அவளது பட்டுச்சேலை அவர்மீது வருடியது. அவருக்கு பிரம்மாநந்தமா யிருந்தது, பிறகு உட்கார்ந்து கொண்டு "இந்த மூட்டைப்பூச்சிகள் என்னை மாத்திரம் கடிக்கின்றனவே. உன்னைக் கடிக்கக்கூடாதென்னும் இரக்கம்போலிருக்கிறது" என்று உற்சாகத்துடன் பரிகாசமாகக் கூறினார். அவள் அதற்குப் பின்வாங்கியவளன்று; "பெரிய மனிதர் இருக்குமிடத்தை நாடி நான் இந்த வண்டியில் ஏறியதைப்போல மூட்டைப்பூச்சிகளும் பெரிய மனிதர்களையே நாடுகின்றன; அது நியாயந்தானே. அங்கே அவ்வளவு உபத்திரவமாயிருந்தால் இந்தப் பலகையில் உட்கார்ந்து கொள்ளலாமே" என்றாள். அவளுக்கருகில் உட்காருவதைவிட எதிரில் உட்கார்ந்திருப்பதே அநுகூலமானதென்று நினைத்துக்கொண்டு "இல்லை இல்லை நான் அந்தப்பக்கம் வந்தால், என்னை நாடிவரும் மூட்டைப் பூச்சிகள் உன்மீதும் திரும்பும். துன்பமெல்லாம் எனக்கே இருக்கட்டும்" என்று சூரத்தனமாகப் பேசிக்கொண்டே முன்போல அவளுக்கெதிரில் உட்கார்ந்தார். அப்போது அடுத்த ஸ்டேஷன் நெருங்கியது. ஆனால் அதன் கைகாட்டிமரம் இறக்கப்படாமையால் வண்டி ஒருசோலைக்குள் நின்றுவிட்டது. இஞ்சின் ஊதிக் கூச்சல் செய்து, தூங்கிக்கொண்டிருந்த ஸ்டேஷன்மாஸ்டரையும் போர்ட்டரையும் எழுப்பியது. "வண்டி என் நின்று விட்டது" என்று சொல்லிக்கொண்டே கமலம் எழுந்து நின்று குனிந்து தலையை கதவிற்கு வெளியில் நீட்டி ஸ்டேஷன் பக்கமாகப் பார்த்தாள். சாமாவையர் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருந்தபடியே தமது தலையை வெளியில் நீட்டி அவரும் ஸ்டேஷன் பக்கம் பார்த்தார். கமலத்தின் தலைப் பின்னலுக்கருகில் ஐயருடைய நாசி யிருந்தது. அங்கிருந் துண்டான பரிமள கந்தம் ஆநந்தத்தை யுண்டாக்கியது. அவரது முழங்கால்களில் அவளது கால்கள் பட்டன. அவ்விருவகை இன்பத்திலும் ஈடுபட்டு அவர் மெய்ம்மறந்திருந்த தருணத்தில், கைகாட்டிமரம் இறக்கப்பட்டது. வண்டி ஊதியது. "சரி வண்டிபுறப்படப் போகிறது" என்று சொல்லிக்கொண்டு கமலம் தனது சிரத்தை உட்புறத்தில் வாங்கிக்கொண்டாள். அப்போது வண்டி திடீரென்று விசையாகப் புறப்பட்டது; திரும்பி தன்னிடத்தில் உட்காரப்போன கமலம் அந்த விசையினால் தள்ளிவிடப்பட்டு சாமாவையரது மார்பின்மீது படேரென்று விழுந்தாள். சாமாவையருடைய விரல்கள் பலகையில்நசுங்கின. அதனால்வலியுண்டாயிற்று; அவளது இனிய மேனி தம்மீது பதிந்த இன்பத்தில் அதை மறைந்தார். அவள் கீழே விழுந்து விடாமல் பிடித்துக் கொள்பவரைப்போல மிகவும் பட்சமாக அப்படியே அவளை இரு கைகளாலும் இறுகப்பிடித்துக் கொண்டார். "அடாடா! மூடப்பயல்கள் வண்டியை இப்படித்தானா விசையாக சொடுக்கி இழுக்கிறது!" என்று சொல்லி விட்டு மிகவும் உருக்கமான குரலில் "ஏன் கமலா! எங்கேயாவது அடிபட்டதோ?" என்று பட்சமாகக் கேட்க, அவள், நாணமடைந்தவளைப்போலப் பாசாங்குசெய்து அவரது கட்டிலிருந்து விடுபடவும் தனது இடத்தில் உட்காரவும் முயன்றாள். அவர் அவளை விடாமல், "கையில் காயம் பட்டதோ? நெற்றியில் அடிபட்டதோ?" என்று அவளது கைநெற்றி முதலிய விடங்களை ஒரு கையால் தடவிக்கொடுத்த வண்ணம் அவளை விடாமல் இறுகப் பிடித்திருந்தார். அவள் முன்னிலும் அதிகம் தத்தளித்து "விடுங்கள்; விடுங்கள். ஸ்டேஷன் வந்து விட்டது. யாராவது பார்க்கப்போகிறார்கள். அப்புறம் ஆகட்டும்; இப்போது விட்டு விடுங்கள்" என்று கெஞ்சினாள். அதற்குள் வண்டியும் ஸ்டேஷனை அடைந்தது. சாமாவையர் மிகவும் துணிந்து அவளுடைய கன்னத்தில் முத்தமிட்டு அவளை அவளது ஆசனத்தில் உட்கார வைத்தார். "பூந்தோட்டம்! பூந்தோட்டம்!" என்று போர்ட்டர் ஊரின் பெயரைச்சொல்லி, தூக்கத்தில் அழுது கொண்டே வந்ததைக்கண்ட சாமாவையர் சிறிது அமைதியடைந்து தமது இடத்தில் உட்கார்ந்தார். என்றாலும் அப்போது அவர் மனம் பட்டபாட்டை என்னவென்று விவரிப்பது! அவருடைய மனோநிலைமையை வருணிப்பதைவிட யூகித்துக்கொள்வதே மேல். எவருக்கும் கிடைக்காத ஒப்புயர்வற்ற இன்பத்தைத் தாமனுபவித்திருந்த சமயத்தில் அந்த ஸ்டேஷன் வந்து கெடுத்ததைக் குறித்து ஆத்திரமடைந்து தவித்தார். வண்டி எப்போது புறப்படும் புறப்படும் என்று ஆவல் கொண்டு துடிதுடித்தார். அன்றிரவு தமது வெற்றி நிச்சயமென்று நினைத்து மனப்பால் குடித்தார். வண்டி நின்ற அந்த இரண்டொரு நிமிஷங்களும் நெருப்புத்தணல்மீதிருந்தவரைப்போலத் தத்தளித்தார். தமக்கு கிட்டாத பாக்கியமெல்லாம் கிட்டுவதால் அப்போது தமக்கு சுக்கிரதசையாகவே இருக்க வேண்டுமென்று நினைத்தார். சிலநாட்களுக்குள் பதினாயிரம் கிடைத்ததும், உடனே தெய்வ

ரம்பை போன்ற ஒரு பெண்பாவை வந்து வாய்த்ததும், தமக்கு வேண்டுமென்றே ஈசுவரனால் உதவப்பட்ட அதிர்ஷ்டமாக நினைத்து அளவளாவினார். அந்தப் பூங்கோதையின் நட்பு தமக்குக் கிடைக்கப் போவதைக் குறித்துப் பேரின்பமும், வண்டி நின்றதைக் குறித்துப் பெருந்துன்பமு மடைந்தவராயிருந்தார். அவளிடம் தாமடையப் போகும் பேரின்ப சுகத்தை மனதால் பாவித்து அதிலீடுபட்டு இன்பமயமாய் ஆத்திரமே வடிவாய் உட்கார்ந்திருந்தார். வாய் பாட்டுப் பாடியது. கை தாளம் போட்டது. அவளது முகத்தையும், மேனியையும், இமைகொட்டாமல் ஏற இறங்கப் பார்த்துப் புன்னகை மழையால் அவற்றை அபிஷேகம் செய்தார். தாம் வாங்கும் பங்களாவில் அவளை வைத்துவிடவும், தம்மாயுட்கால முழுதையும் அவளுக்கு அடிமையாயிருந்து கழிக்கவும் உறுதி செய்து கொண்டார். வண்டி புறப்பட்டவுடன் அவளைத் தூக்கி மடியில் உட்கார வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவ நினைத்து, முற்றிலும் பித்தமுற்றவரா யிருந்தார்.

அந்த வடிவழகியோ தனது முகத்தில் எத்தகைய மாறுபாட்டையும் காட்டாமல் தனது சிரத்தை கீழே கவிழ்த்துக்கொண்டு ஒன்றையுமறியாத நற்குணவதியைப்போலவும் சித்திரப் பாவையைப்போலவும் உட்கார்ந்திருந்தாள்.

வண்டி புறப்பட ஆயத்தமாகி ஊதியது. மணியும் அடிக்கப்பட்டது. அந்த சமயத்தில் ஒரு பிரயாணி ஓடிவந்து சாமாவையரிருந்த வண்டியின் கதவை விசையாகத் திறந்தான். அந்த மனிதனுக்கு வயது இருபத்தைந்திருக்கலாம். அவனும் சுந்தர புருஷனாகக் காணப்பட்டான். அவனும் அந்த வண்டிக்குள்ளிருந்த காந்தத்தினால் கவரப்பட்டே, அதில் ஏற உறுதிசெய்து கொண்டு கதவைத்திறந்தான். திரிசங்கு சுவர்க்கத்திலிருந்த சாமாவையர், தமக்கு நேரும் விபத்தை உணர்ந்து திடுக்கிட்டவராய் வண்டியின் கதவை உறுதியாகப் பிடித்துக் கொண்டு "ஐயா! அடுத்த வண்டி காலியாயிருக்கிறது. தயவுசெய்து அதில் ஏறிக்கொள்ளும்; நாங்கள் இரவில் நெடுந்தூரம் போகிறவர்கள்; இருவரும் இரண்டு பலகைகளிலும்படுத்துக்கொள்ள வேண்டும்." என்றார். வந்தவன் ஆத்திரத்தோடு "சரிதானையா! கதவைவிடும். வண்டி போய்விடும்போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே கதவை வேகமாக வெளியில் இழுத்தான்.

அவன் ஏறுவதைப் பலவந்தமாய்த் தடுத்துவிட நினைத்த சாமாவையர் உடனே வேகமாயெழுந்து முழு பலத்தையும் உபயோகித்து கதவை உள்ளே இழுத்துப்பிடித்துக்கொண்டு ஓங்கிய குரலில் "இங்கே பெண்பிள்ளை தனிமையிலிருக்கிறாள் என்று சொல்லுகிறேன். என்ன ஐயா முரட்டுத்தனம் செய்கிறீர்? நீர் இங்கே ஏறக்கூடாது. ஏராளமான நகைகளும் பணமுமிருக்கின்றன. ஏதாவது காணமற் போனால் நீர் உத்தரவாதியாவீரா? போமையா அடுத்த வண்டிக்கு" என்று அதட்டிக் கூக்குரல்செய்து அவனது மார்பில் கையைக்கொடுத்து முரட்டுத்தனமாகத் தள்ளினார். கீழே விழவிருந்த அந்த மனிதன் சிறிது தத்தளித்து ஒருவாறு சமாளித்துக் கொண்டு வீராவேசமடைந்து ஓடிவந்தான். அதைக்கண்ட பெண் முதலிடத்திலிருந்து கடைசிக்கு நகர்ந்து விட்டாள். வந்த மனிதன் "அடே! என்னைக் கீழேதள்ளி விடுகிறாயா? இது உன் பாட்டன் வீட்டு வண்டியா? ஏறாதேயென்று சொல்ல நீயா எஜமான்? இதிலேதான் நான் ஏறுவேன்? வா ஒரு கை பார்க்கலாம்; ஆகா! அவ்வளவா!" என்று கூக்குரலிட்டுக் கொண்டு பாய்ந்து சாமாவையருடைய கழுத்தில் கையைக் கொடுத்து உள்ளே தள்ளினான். ஐயர் அவனை வெளியில் தள்ளினார். இருவரும் ஒருவரையொருவர் நாயே என்றும் கழுதையென்றும், வேறு பலவிதமாகவும் அருச்சனை செய்து கொண்டனர். அதனால் அங்கு பெருத்த ஆரவாரமுண்டாயிற்று. அடுத்த நிமிஷத்தில், ஸ்டேஷன் மாஸ்டர், கார்டு, மற்றவர் முதலிய பலர் கூடிக் குறுக்கிட்டு அவர்களது சண்டையை விலக்கி, வெளியிலிருந்த மனிதனை சாமாவையரிருந்த வண்டிக்குள் ஏற்றிவிட்டுக் கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு சென்றனர். உடனே வண்டி புறப்பட்டு விட்டது.

சாமாவையர் பதறுகிறார்; அவருடைய தேகம் வெடவெடவென்று ஆடுகிறது. தமது மனக்கோட்டையை ஒரு நிமிஷத்தில் இடித்து, தாமனுபவிக்கவிருந்த இன்பத்தைப் போக்கடித்த அந்த துன்மார்க்கனைக் கசக்கிச் சாறு பிழிந்து விட நினைத்து வாயில் வந்த விதம் திட்டவாரம்பித்தார். அவர் கூறியதற்கு ஒன்றிற்குப் பத்தாக அந்த மனிதன் திருப்பி மறுமொழி கொடுக்க, இருவரும் வாய்ச் சண்டையிலிருந்து கைச் சண்டைக்கு ஆயத்தமாய் முஷ்டிப் பிரயோகம் செய்யத் தொடங்கினர். வண்டியும் ஸ்டேஷனை விட்டு நெடுந்தூரம் வந்து விட்டது; அவர்களை விலக்குவோர் எவருமிலர். அதைக் கண்ட கமலம் பெரிதும் அச்சங் கொண்டவளாய், சண்டையை வில

க்க நினைத்து சாமாவையரைப் பார்த்து "போனது போகட்டும். உட்காருங்கள். கொஞ்சமும் மரியாதை பாராமல் அவ்வளவு பிடிவாதம் செய்து நுழைந்த மனிதரோடு சண்டை செய்வதில் என்ன பலம்? விட்டு விடுங்கள். நாம் ஒரு ராத்திரி விழித்துக்கொண்டிருப்பதனால் செத்தா போய் விடுவோம்; இப்படி வந்து விடுங்கள்" என்று அழுத்தமாகக் கூறி அழைக்க, ஐயர் உடனே பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போய் அவளிருந்த கடைசி இடத்திற் கெதிரில் சந்தோஷமாக உட்கார்ந்து கொண்டார். வந்த மனிதன் இரண்டொரு நிமிஷ நேரம் ஏதோ வாய்க்குள் முணு முணுத்துவிட்டுப் பிறகு மௌனமாக இருந்தான். சாமாவையரும் சாந்தமாக இருப்பவரைப் போலக் காணப்படினும், அவர் மனது ஆத்திரத்தால் கொதித்தது. அந்தப் படுபாவி வாராதிருந்தால் அந்நேரம் தாம் எவ்வளவு சுகமனுபவித்திருக்கலாமென்று நினைத்து அவனை அப்படியே வாரி வெளியில் எறிந்து விட நினைத்தார். ஆனால். தாம் தூக்கி எறிகிற வரையில் அவன் வாளா இருக்க வேண்டுமே என்னும் கவலையும் வதைத்தது. இவ்வாறு அவர் நெடுந்தூரம் வரையில் கோபத்தைப் பாராட்டிக்கொண்டே வந்து கடைசியில் ஒரு வகையான முடிவிற்கு வந்தார். அவன் அநேகமாய் அடுத்த ஊரில் இறங்கி விடுவானென்றும், அதன் பிறகு தாம் இன்பமுறலாமென்றும் நினைத்து அமரிக்கையடைந்து அடுத்த ஊரின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். அவனிருக்கையில் அந்தப் பெண்ணோடு கொஞ்சிக் குலாவிப் பேச மனமற்றவராயிருந்தார். அடுத்த ஸ்டேஷனும் வந்தது. ஆனால் அந்த மனிதன் இறங்கவில்லை. சாமாவையரது மனம் ஏங்கித் தவித்தது. அவன் எந்த ஊர் வரையில் வருவானென்பதை அறிந்து கொள்ளவும் வழி இல்லை. என்ன செய்வார்! தமது மனதைப் புண்ணாக்கி வதைத்தவராய் நெருப்பின்மீதிருப்பவரைப் போலத் தத்தளித்திருந்தார். ஒருகால் அந்த மனிதன் அடுத்த ஊரில் இறங்குவானென்று எண்ணி, மிகவும் பாடு பட்டு அடுத்த ஊர் வரையில் பொறுத்திருந்தார். அங்கும் அவன் இறங்கவில்லை. மிகுந்த விசனத்திலாழ்ந்து, குரங்கைப் பறி கொடுத்த ஆண்டியைப்போல ஏங்கி உட்கார்ந்து விட்டார். "அடுத்த ஊரில் இறங்குவான், அடுத்த ஊரில் இறங்குவான்" என்னும் நம்பிக்கையையே உறுதியாகப் பிடித்துக்கொண்டு காத்திருந்தார்; அவ்வாறு பல ஊர்கள் சென்றன. அவரது ஆசையும் நிராசையானது, கடைசியில் மனமுடைந்தவராய், கமலத்தை

அழைத்துக் கொண்டு, கீழிறங்கி வேறு வண்டியில் ஏறிக்கொள்ள நினைத்தவராய் அவளை நோக்கி "நாம்வேறு வண்டிக்குப்போகலாமா?" என்று தாழ்ந்த குரலில் இரகசியமாகக் கேட்க அவள் "திருவாரூர் வந்து விட்டது. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். நம்முடைய வீட்டுக்கே போய் விடுவோம்." என்று இரகசியமாக மறுமொழி கூறினாள்; அதற்குமேல் எதையும் சொல்ல அறியாமல் சாமாவையர் ஓய்ந்து உட்கார்ந்திருந்தார். கமலம், தனது தாயிடத்தில் அச்சங் கொண்டவளாகத் தோன்றவில்லை. அன்னிய மனிதராகிய தம்மை, அவளறிய, வீட்டில் படுக்க வைத்து உபசரிப்பதென்றால், கமலம் தாசியாகத்தானிருக்கவேண்டுமென்று அவர் நினைத்தார். அவளோடு இரண்டு மூன்று நாட்கள் உல்லாசமாக இருந்து விட்டு, அவள் தம்மோடு வர விரும்பின், அவளையும் அழைத்துக் கொண்டு சென்னைக்குப் போகத் தீர்மானித்துக் கொண்டார். எப்போது திருவாரூர் வரும் வருமென்று வழி பார்த்துக் கண்களும்; மனதும் புண்ணாயின; மேனி பசத்தது; நரகவேதனையடைந்தவராய், உட்கார்ந்திருந்தார்.

ஆயிரங்காதத்திற் கப்பாலிருப்பதாய்த் தோன்றிய திருவாரூரும் வந்தது. சனியன் பிடித்ததைப் போல அதுவரையில் அவர்களுடன் உட்கார்ந்திருந்த மனிதனும் இறங்கிச் சென்றான். எவ்விடத்திலோ மறைந்துகிடந்த சந்தோஷமும் சாமாவையரின் வதனத்தில் தோன்றி நடனம் செய்தது. பழைய உற்சாகமும், மோகாவேசமும், ஒன்றிற்கு நூறு மடங்காய்ப் பெருகியெழுந்து சாமாவையர் மனதிலும் தேகத்திலும் மிகுந்த சுறுசுறுப்பையும், துடிதுடிப்பையும் உண்டாக்கின. கமலத்தின் முகமும் கமலத்தைப் போலவே மலர்ந்து இனிமையையும், குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும், புன்னகையையும் சொரிந்து ஐயர் மனதில் புதிய நம்பிக்கையையும், பெருங் களிப்பையும், அடங்கா மோகத்தையும் கிளப்பின.

இருவரும் வண்டியை விடுத்துக் கீழிறங்கினார்கள். ஐயர் தமது பணப்பையை ஒரு கையிலும், கமலத்தின் பெட்டியை மற்றொரு கையிலும் எடுத்துக் கொண்டார். அவளையும் தோள்மீது தூக்கிக் கொள்ளவும் அவருக்கு விருப்பமே! ஆனால் பெண்ணரசி அதற்கு இணங்க மாட்டாளென்று நினைத்து, அதை பிரரேபிக்காமல் விடுத்தார். அவர் பெட்டியை எடுத்த போதே அவள் "வேண்டாம்;

வேண்டாம் கூலியாளை அமர்த்தலாம்." என்றாள்; "இது எவ்வளவு பெரியது! இதற்காக கூலியாள் பார்த்துக் கொண்டு இங்கேயே உட்கார்ந்திருப்பதேன். வா போகலாம்" என்று அதை எடுத்துக் கொண்டு புறப்பட, அவளும் மயில் அடி பெயர்த்து வைப்பது போல நடந்து கூடத் தொடர்ந்தாள்.

"அவருக்கு அவளே இணை, அவளுக்கு அவரே இணை" என்று கூறத் தகுந்தவாறு இருவரும் மணப்பந்தலில் அமரப்போகும் சதிபதிகளைப்போல அழகு நடைநடந்து மன்மதனும் இரதியும்உலாவிப் பவனி வருவதைப்போலச் சென்று ஸ்டேஷனை விடுத்து வெளியேறினர். வெளியில் குதிரை வண்டிகள்பல ஆயத்தமாக நின்றன. வண்டிக்காரர்கள், வருவோரின் மூட்டைகளையும், பெட்டிகளையும் பிடுங்க வாரம்பித்தனர். ஒருவன் சாமாவையரது கையிலிருந்த பெட்டியைப் பிடுங்கிக்கொண்டு போய் தனது வண்டியில் வைத்து விட்டு "எஜமானே! இந்த வண்டியில் ஏறுங்கள். இதோ இருக்கிறது" என்று ஐயரையும், அம்மாளையும் உபசரித்து, அழைத்துச் செல்ல, அவர்கள் அதில் ஏறிக்கொண்டனர்; வண்டி புறப்பட்டது; சிறிது தூரத்திற்கப்பால் கடைத்தெரு வந்தது. சாமாவையர் வண்டியை அவ்விடத்தில் நிறுத்தச் செய்து ஐந்து ரூபாயை எடுத்துக்கொண்டு கீழே இறங்கி கடைகளில் புகுந்து மிட்டாய்கள், பட்சணங்கள், தாம்பூலம், வாசனை திரவியங்கள், முதலியவற்றை வாங்கிவந்து வண்டியில் நிரப்பினார். உடனே வண்டி புறப்பட்டு ஒரு மயிலுக்கப்பாலிருந்த அவளுடைய வீட்டை நோக்கிச் சென்றது. வண்டியில் விளக்கிருந்தமையாலும், வண்டிக்காரன் அருகிலிருந்தமையாலும், சாமாவையர் வண்டியில் எவ்வித விஷமமும் செய்யாமல், வீட்டின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்.

சில நிமிஷங்களில் வண்டி அவளுடைய வீட்டின் வாசலில் வந்து நின்றது. ஐயரும், அம்மாளும் கீழே இறங்கினார்கள். கமலம் உடனே கதவை இடிக்க, சிறிது நேரத்தில், ஒருகிழவி கதவைத் திறந்தாள். கமலம் வண்டிக்காரனைப்பார்த்து "அடே! சாமானை உள்ளே கொண்டு போய் வை" என்றாள்; அவன் அப்படியே செய்து விட்டுத் தனதுகூலியைப் பெற்றுக் கொண்டு சென்றான். உடனே மங்கை "வாருங்கள் உள்ளே போகலாம்" என்று மரியாதையாக உபசரித்து உட்புறம் அழைத்துச் சென்றாள். மிகவும் ஆடம்பரமாக வந்திருந்த

ஐயரவர்களைக் கண்டவுடன் கிழவியின் தூக்கமும் கலக்கமும் பறந்தன. இரகசியமாகப் பெண்ணைக் கடைக்கணித்தாள். பெண் தனது கண் சிமிட்டலால் தந்தி பேசினாள். உடனே கிழவியும் மிகுந்த வணக்கமும், அன்பும், மகிழ்ச்சியும் காட்டி, அந்த வரவேற்பில் கமலத்துடன் கலந்து கொண்டு, "சுவாமி! உள்ளே வாருங்கள்" என்று அழைத்தாள். அவளுடைய அன்பைக் கண்டு பெரிதும் உவகை கொண்ட சாமாவையர் மகாராஜன் உலாவ எழுந்ததைப்போல ஆடி அசைந்து உட்புறத்தில் பொன்னடி பெயர்த்து நுழைந்தார்.

மூவரும் கூடத்திற்குச் சென்றனர்; அந்த வீடு மிகவும் வசதியான பெருத்த மச்சு வீடு; கூடம் தாழ்வாரம் முற்றம் முதலியவை அகன்றும், சுத்தமாகவும் இருந்தன. கூடத்தில் நாற்காலிகள், விசிப்பலகை, ஊஞ்சற் பலகை முதலியவை கிடந்தன. சுவரில் அழகிய படங்கள், மணி யடிக்கும் பெருத்த கடியாரம், மான் தலைகள் முதலியவை காணப்பட்டன. கமலம் ஒரு சாய்மான நாற்காலியைக் காட்டி அதில் உட்காரும்படி அந்தரங்க அன்போடு சாமாவையரை வேண்ட, அவரும் களிப்படைந்து அதில் அமர்ந்து சுகமாகச் சாய்ந்து கொண்டார்; கிழவி கண்ணாடி விளக்கை சுவரில் மாட்டிவிட்டு உட்புறம் சென்றாள். கமலமும் "இதோ வந்து விட்டேன்" என்று சாமாவையரிடம் கூறிவிட்டு உட்புறம் நுழைந்தாள். தாயும் மகளும் இரண்டாங் கட்டிற்குள் ஒரு தனிமையான இடத்திற்குச் சென்றனர். அங்கு தாயினிடம் மகள், நடந்த விவரங்களையெல்லாம் ஒளியாமல் கூற, அவள் பெரிதும் சந்தோஷமடைந்தவளாய் "அப்படியானால் பவுன்களும், ரூபாயும் எவ்வளவிருக்கும்?" என்றாள். கமலம்: "இருபதினாயிரம் ரூபாபெறும்." கிழவி (சிறிதுயோசனை செய்து) "இதுவும் நம்முடைய பாக்கியந்தான், ஸ்ரீதேவி நம்முடைய வீட்டைத்தேடி வந்திருக்கிறாள். ஆளைப்பார்க்கையில் டம்பாச்சாரியைப்போல விருக்கிறது. இந்த விஷயங்களில் நன்றாக அடிபட்டவனாகத்தா னிருக்கவேண்டும். இவன் எளிதில் ஏமாறமாட்டான். அதிருக்கட்டும். நாம் தாசித்தொழில் செய்கிறவர்கள் என்பதைச் சொன்னாயா?" என்றாள்.

கமலம்:—இல்லை இல்லை. குடும்பஸ்திரீபோலவும் அவருடைய அழகைக் கண்டு மோகித்தவள்போலவும் நடித்து, அழைத்துவந்

தேன்; மனிதனும் அப்படியே சொக்கிப்போய் வந்திருக்கிறான் எவ்வளவு கேட்டாலும், கொடுக்கத்தடை யில்லை.

கிழவி:—அடிபோ பைத்தியமே! இந்தத்தொழிலில் நாம் இந்த மாதிரி தவித்த எத்தனையோ ஆள்களைப்பார்த்தாய்விட்டது; முதல் ஆவேசத்தில் இப்படித்தான் தாராளமாக விருப்பார்கள்; பொழுது விடிந்தால் புதுமனிதராய்ப்போய் விடுவார்கள். நீ தாசி என்பதை இவனறிந்தால் 20 ரூபா அல்லது 25 கொடுப்பான். அல்லது, குடும்பஸ்திரீ என்று பாசாங்கு செய்தால் ரூ. 100 அல்லது 200-க்கு மேல் பெயராது. அதனால் நம்முடைய தரித்திரம் விடிந்துபோகாது. குட்டுப்பட்டால் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும். மூட்டையை அப்படியே அடித்து விட்டால், ஆயிசுக்காலமெல்லாம் சுகப்பட்டுப்போகலாம்.

கமலம்:—(சிறிது அச்சமடைந்து.) அது எப்படி முடியும்? நாம் வீணாக ஜெயிலுக்குத்தான் போய்ச்சேர வேண்டும்; ஏதோ வந்ததைக் கைப்பற்றுவோம்; நாமென்ன கொடுத்தாவைத்தோம்; அவனை நான் நன்றாக மயக்கி, அவன் இங்கே நாலைந்து நாள்களாயினும் இருக்கும்படி செய்து ஆயிரம் ரூபா வரையில் பிடுங்கிக் கொண்டு அனுப்பிவிடுகிறேன்.

கிழவி:—முட்டாளேபோ; உனக்கு என்ன தெரியும்?; சின்னப் பயலைக் கண்டால் சிறுக்கிக்கும் ஆசைதான் என்பதைப்போல உனக்கும் கொஞ்சம் சபலம் உண்டாகிறதோ? பதில் பேசாமல், நான் சொல்வதைச் செய். நம்முடைய கலியே நீங்கிப்போகும். நீ போய் அவன் சந்தோஷமடையும்படி பேசிக்கொண்டிரு. நான் பால் வாங்கிக் கொண்டு வரப்போனதாகச் சொல்லி வை. நான் கொல்லை வழியாக நம்முடைய கள்ளுக்குடிக்கி வீரபத்திரனிடம்போய் இதற்குத் தகுந்த ஏற்பாட்டுடன் சீக்கிரம் வருகிறேன்.

கமலம்:—(சிறிது யோசனை செய்து) சரி; உன்னுடைய இஷ்டம்போலச் செய்; நான் அவனிடம் போகிறேன்—என்றாள்.

உடனே கிழவி ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கொல்லைப்பக்கமாக வெளியிற் போய்விட்டாள். கதவைச் சாத்தித் தாளி

டாமல் வைத்துவிட்டு, கமலம் மிகவும் விரைவாகவும், அதிக உற்சாகத்தோடும் குதித்துக் கொண்டு வந்து சாமாவையரை யடைந்து தனது அழகிய பல் வரிசைகள் வெளியில் தோன்றப் புன்னகை செய்து, "தங்களுக்கு போஜனம் ஆனதோ இல்லையோ?" என்று அன்போடு கேட்டாள். அவளது தோற்றம் நடையுடை பாவனை சொற்கள் முதலியவை சாமாவையர் மார்பில் ஆயிரம் மன்மதபாணங்களை ஒரே காலத்திற் சொருகி அவர் மனதை மயக்கின. தேனில் விழுந்த ஈயைப்போலிருந்த சாமாவையர் புன்னகை செய்து "போஜனம் ஆய்விட்டது. வயிற்றில் பசியில்லை. மனப்பசிதான் பற்றி எரிக்கிறது" என்றார்.

அதைக்கேட்ட அந்த மோகனவல்லி கலகலவென்று நகைத்து மகிழ்வே உருவாய் மாறி, "அதற்குத் தகுந்த வைத்தியன் நானிருக்கிறேன். மருந்து செய்கிறேன்; பயப்படவேண்டாம்" என்று சொல்லியவாறு, அவர் வாங்கியிருந்த மிட்டாயி, பட்சணம், தாம்பூலம் முதலியவற்றை சாயத்தட்டுகளில் எடுத்து ஒழுங்காக வைத்து அதை ஒரு கையிலும், விளக்கை மற்றொரு கையிலும் எடுத்துக் கொண்டு "வாருங்கள்; படுக்கை யறைக்குப் போவோம்" என்றாள். சுவர்க்க வாயிலுக் கருகிலிருந்து அதற்குள் நுழையப்போகும் நிலைமையிலிருந்த சாமாவையர் மிகவும் துடியாக எழுந்து அவளுடன் சென்றார். அவ்விருவரும் இரண்டொரு அறைகளைக் கடந்து, மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருந்த சயன அறையை யடைந்தனர். அவ்வறை, வீட்டின் நடுப்பாகத்திலிருந்தது. அதன் ஒரு புறத்தில் உன்னதமான, விலையுயர்ந்த பித்தளைக் கட்டிலொன்றிருந்தது. அதன்மேல் பிரம்மாண்டமான மெத்தை, திண்டுகள், தலையணைகள், கொசுவலை, அஸ்மானகிரி முதலியவை நிறைந்திருந்தன. தின்பண்டம், தாம்பூலம் முதலிய வைப்பதற்கு கட்டிலருகில் ஒரு மேஜை கிடந்தது. இன்னொரு புறத்தில் இரண்டு நாற்காலிகளும், ஒரு சோபாவுமிருந்தன. கட்டிலினருகில் சுவரில் ஒரு பெருத்த நிலைக்கண்ணாடி மாட்டப்பட்டிருந்தது. எங்கும் படங்களும், பதுமைகளும் நிறைந்து கண்ணைக் கவர்ந்தன. தான் கொணர்ந்த பொருட்களை மேஜைமீது வைத்த கமலம் ஐயரைப்பார்த்து "இதுதான் என்னுடைய வைத்தியசாலை; மருந்து கொடுக்கிறேன். இப்படிக் கட்டிலின்மேல் அமருங்கள்" என்றுகூற, அவர் பிரம்மாநந்த மடைந்தவராய்க் கட்டிலின்மேல் உட்கார்ந்தார். அது, வில் வைக்கப்பட்ட கட்டிலாகையால்,

மகா கனம் பொருந்திய ஐயரவர்கள் மிகவும் கீழே தணிந்து தணிந்து உயர்ந்தார். உடனே "என்னுடைய தாயார் பால் வாங்க அடுத்த வீட்டிற்குப் போயிருக்கிறாள். சீக்கிரம் வந்து விடுவாள். அதுவரையில் இந்தக் காரியம் ஆகட்டும்" என்று சொல்லிவிட்டு அருகிலிருந்த மிட்டாயி பட்சணங்கள் முதலியவற்றை கொஞ்சங் கொஞ்சமாய் எடுத்து அவருடைய வாயில் அன்போடு ஊட்ட ஆரம்பித்தாள். அதைக்கண்டு ஆநந்த பரவசமடைந்த ஐயர் அவளை அருகில் இழுத்து அணைத்துக்கொண்டே பலகாரங்களைத் தின்ன வாரம்பித்தார். அவள் எதையும் உட்கொள்ளாதிருந்ததைக் காண, அவருக்கு சகிக்கவில்லை. உடனே அவரும் சிலவற்றை எடுத்து அவள் வாயில்போட முயல, அவள் "எனக்கு வேண்டாம். உங்களுடனிருப்பதே எனக்கு மிட்டாயிக்கும் அதிகமாக இனிப்பைத் தருகிறது. நான் இப்போது அடைந்து கொண்டிருக்கும் பிரம்மாநந்த சுகத்திற்கு இந்த மிட்டாயியின் ருசி உறைபோடக் காணுமா? நீங்கள் என்கட்டிக்கரும்பல்லவா! அத்தனையும் முத்து அதிமதுரக் கற்கண்டல்லவா" என்று கூறி மிகுந்த மோகாவேசத்தோடு அவரைக் கட்டியணைத்து முத்தமிட்டாள். சாமாவையர் பேரின்பசாகரத்தில் முழுகிக் கிடந்தார். அப்போது கமலம் "அதிருக்கட்டும்; நாம் இவ்வளவு அந்தரங்க நண்பர்களாகிவிட்டோமே. நீங்கள் யாரென்பதை நானும் அறிந்துகொள்ளவில்லை. நான் யாரென்பதை நீங்களும் கேட்கவில்லை. இது வேடிக்கையல்லவா. இதுதான் உண்மையான காதல்; இதைத்தான் கண்டதுங் காதலென்று கவிகள் வருணிப்பது. இருக்கட்டும். இப்போதாவது விவரத்தை அறிந்து கொள்வோம். தங்களுடைய ஊர் எது? தங்களுடைய திருநாமம் என்ன? இவற்றை யெல்லாம் சொல்லலாமா?" என்றாள்.

சாமா:—ஆகா! அவசியம் சொல்லுகிறேன். நான் சென்னைப் பட்டணத்தில் ஒருபெருத்த வியாபாரி; என்பெயர் சாமாவையர் என்பார்கள்.

கமலம்:—தாங்கள் பெருத்த வியாபாரியாகத் தானிருக்கவேண்டுமென்பதை நான் பார்வையிலேயே அறிந்து கொண்டேன். அதெல்லாம் இருக்கட்டும். இன்னொன்று கேட்கிறேன் உண்மையைச் சொல்லுவீர்களா?" என்று குழந்தையைப்போலக் கொஞ்சினாள்.

சாமா:—ஆகா! நீ எதைக்கேட்டாலும், அதை அவசியம் உள்ளபடி சொல்லுகிறேன்.

கமலம்:—தங்களுக்கு கலியாணம் ஆய்விட்டதா?—என்று, மிகவும் இழுத்துக் கொஞ்சிக் கேட்டாள்.

சாமாவையர் சிறிது தடுமாற்றமடைந்தாராயினும், துணிவையடைந்து "கலியாணம் ஆனாலென்ன? அதைப்பற்றி நமக்கென்ன கவலை? தாலிகட்டுகிறவளெல்லாம் ஆசை நாயகி ஆய்விடுவாளா? இப்போது எனக்கு மனைவியாயிருப்பவள் சமையல் செய்துபோட உபயோகப்படுகிறாள். உண்மையான ஆசையோடு புருஷன் பெண்ஜாதியாக விருந்து சந்தோஷமடையத் தகுந்த மனைவியை நான் இன்னம் கலியாணம் செய்து கொள்ளவில்லை. அந்த பாக்கியம் இன்று தான் கிடைக்கப் போகிறது" என்றார்.

கமலம்:—அது இன்றைக்கு மாத்திரந்தானா அல்லது எப்போதும் நீடித்திருக்குமா? கையில் நாகைப்பட்டணம் டிக்கட்டு இருக்கிறது; விடியற்காலம் ஐந்துமணிக்கு இதெல்லாம் பழைய கதையாய்விடும். நமது நட்பு ஒரு ராத்திரியோடு மறைந்துபோகும் கனவாயிருந்தால், அதற்கு என்னுடைய தாயார் சம்மதிக்கமாட்டாள். எத்தனையோ பெரிய மனிதருடைய பிள்ளைகளுக்கு என்னைக் கட்டிக்கொடுக்கும்படி கேட்டார்கள். ஆனால், அவர்கள் ஒருவர் மேலும் என் மனம் செல்லவில்லை. இன்று தாங்கள் என் புத்தியையும் கெடுத்து இப்படிப் பைத்தியம் பிடிக்கச்செய்து விட்டீர்கள். இனி உங்களை விட்டுப்பிரிந்து நான் ஒருநிமிஷமும் உயிரைவைத்துக்கொண்டிருக்க முடியாது; நீங்கள் இப்படி விடியற்காலம் போய்விடுவீர்களென்பதை உணர்ந்திருந்தால், தங்கள் முகத்தையே நான் பார்த்திருக்க மாட்டேன்." என்று கூறினாள். தண்ணீர்க் குழாய் திறக்கப்பட்டவாறு அவளது இருகண்களிலும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. நெடுமூச்செறிந்து தேம்பித் தேம்பி யழவாரம்பித்தாள். அதைக் கண்ட சாமாவையரது தேகம் பதறிப்போனது. தமது முழு அன்பையும் காட்டி அவளை அருகில் இழுத்து இருகைகளாலும் அணைத்து, தமது வஸ்திரத்தால் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு "கமலம்! பயப்படாதே; உன்னை நான் இன்றோடு விட்டு விடுவேனென்று நினைக்காதே; உன் தலையில் அடித்து சத்தியம் செய்கிறேன்;

இனி நீயே என் எஜமானி; என்னுடைய செல்வத்தை உன்னிடம் ஒப்புவித்து விடுகிறேன். நீயும் நானும் எப்போதும் இணைபிரியாதிருந்தே நம்முடைய நாட்களை நாம் சுகமாய்க் கழிக்க வேண்டும். நாகைப்பட்டணத்திலிருக்கும் ஒருகப்பல் வியாபாரிக்கு பட்டணத்தில் ஒரு பங்களாவிருக்கிறது; அதை நான் விலைக்கு வாங்கப்போகிறேன்; நாளைக்கு தஸ்தாவேஜை முடித்து விடுவதாக எழுதி யிருந்தேன்; அதை முடித்துக்கொண்டு இங்கே வந்து விடுகிறேன். எத்தனை நாள் நீ இங்கிருக்கச் சொன்னாலும் இருக்கிறேன். போகும்போது, நீயும், உன் தாயாரும் என்னுடன் கூடவே வந்து விடுங்கள்; என் உயிர்போகும் வரையில் நான் உன்னை விடுவதில்லை; இது நிச்சயம், இது சத்தியம்'' என்று உறுதியாகவும் உருக்கமாகவும் கூறினார். அதற்குள் "கமலம்! கமலம்! விளக்கெங்கே?" என்று கிழவி பேசிய சப்தம் உண்டானது. கமலம் சுறுசுறுப்பாக விலகி "சரி! அம்மாள் பால் கொண்டு வந்திருக்கிறாள். கூடத்திலிருந்த ஒரே விளக்கை நாம் எடுத்து வந்து விட்டோம்; அவள் இருளில் இருக்கிறாள். நமக்கு இனி விளக்கு வேண்டாம். பாலை வாங்கிக்கொண்டு ஒரே முடிவாக வந்து விடுகிறேன், நேரமாய் விட்டது." என்று சொல்லி விட்டு, அருகிலிருந்த விளக்கை எடுத்துக் கொண்டு வெளியிற்போய் விட்டாள். சாமாவையரிருந்த அறையை இருள் மூடிக்கொண்டது. அவர் இன்பக்கனவு கண்டு இளகி உருகி ஆநந்த சாகரத்திலாழ்ந்து தமக்குத்தாமே இணையென உட்கார்ந்திருந்தார். திடீரென்று தமக்கு உண்டான பெருத்த அதிர்ஷ்டத்தை நினைத்து விம்மித மடைந்தார். இன்னம் சில நாட்களில், தாமும் அந்த மடமயிலாளும் சென்னைக் கடற்கரை பங்களாவில் இரதியும் மதனனும் போல சுகவாரியிலாடித் திளைத்திருக்கலாமென்று நினைத்தார். இன்னம் இரண்டொரு நிமிஷத்தில் அந்தக் காமக் களஞ்சியமாகிய கட்டழகி தனது ஆலிங்கனத்திற்கு வந்துவிடுவாளென்று நினைத்து மனோரதியமான சுவர்க்கத்தில் கொலு வீற்றிருந்தார். அவரது மனதின் ஆசைகள் அப்போதே உச்சநிலையிலிருந்தன. அவள் தம் மீது கொண்ட ஒப்புயர்வற்ற மையலை எவருக்கும் கிடைக்காத பெரும் பேறாக எண்ணி இன்பமயமாக விருந்தார்.

அப்போது கமலத்தின் கால் மெட்டிகள் கலீர் கலீரென்று ஒலித்து "இராஜாத்தி வருகிறாள்; எச்சரிக்கை, பராக்கு" என்று

கட்டியங் கூறின. அந்த ஓசையைக் கேட்ட சாமாவையருடைய உரோமம் சிலிர்த்தது; வந்தாள் வந்தாள் அருகில் நெருங்கி விட்டாள். அவளது கையில் விளக்கில்லை; இருளில் வந்து தனது இடக்கரத்தால் ஐயரது கன்னத்தைத் தடவினாள். வலக்கரத்தில் பாலிருந்தது. வந்தவள் அவள்தானோ வென்பதை உணர நினைத்த ஐயரும் தமது கையை நீட்டினார். கமலம் "பால் கொட்டிப்போகும்; விஷமம் ஒன்றும் செய்யவேண்டாம். வாயைத் திறவுங்கள்; நான் பாத்திரத்தை வாயில் வைக்கிறேன். அப்படியே பாலைக்குடித்துவிடுங்கள்" என்றாள். இடக்கரத்தால் அவரது சிரத்தைமேல் நோக்கித் திருப்பி சிறிதளவு பாலை வாயில் விடுத்து "பால்வாயில் விழுகிறதா?" என்றாள். ஐயர் "விழுகிறது" என்றார். "நன்றாகத் திறவுங்கள்" என்றாள் கமலம். அவர் அப்படியே செய்தார். அப்போது அவளுடைய கைகளினிடையில் இன்னொருவருடைய கை நுழைந்தது. கமலம் மெல்ல ஒருபுறமாக நகர்ந்தாள். ஐயரின்வாயில் பாலுக்குப்பதில் ஒரு துணிப்பந்து நுழைக்கப்பட்டது. அவர் உடனே திடுக்கிட்டுக் கூச்சலிடமுயன்றார். அதற்குள் துணிப்பந்து வலுவாக வாய்க்குள் நுழைந்து விட்டதாகையால் சத்தம் வெளிப்படவில்லை. கமலம் அப்பால்போய் விட்டாள். உடனே ஏழெட்டு முரட்டுக்கைகள் ஐயருடைய கால்களையும் கைகளையும் இறுகப்பிடித்துக் கயிற்றினால் கட்டிவிட்டன. இரும்புப் பொறியிலகப்பட்ட எலியைப்போல ஐயரது தேகம்நடுங்குகிறது. மூச்சுவிடமாட்டாமல் ஐயர் தத்தளித்து பிரம்மாநந்த சுகமனுபவிக்கிறார். அப்போது ஒருவன் விளக்குடன் உள்ளே நுழைந்தான். என்ன விந்தை! கமலம் காணப்படவில்லை. பனைமரங்களைப்போலக் கறுத்துப்பெருத்த தேகங்களைக் கொண்ட நான்கு மனிதர் தமக்கருகில் நின்றுகொண்டிருந்ததைக்காண, ஐயருக்குக் குலைநடுக்கமெடுத்தது. ஒருசிறிதும் அசையமாட்டாமல், மூட்டையைப்போலத் தரையில் கிடந்தார். அவர்மீதிருந்த ஆடையாபரணங்கள் யாவும் உடனே விலக்கப்பட்டன. அவரது கோவணத்தை மாத்திரம் மிகுதியாக விடுத்தார்கள். இருவர் ஒரு பெருத்த கோணிப்பையை விரித்தனர். மூட்டையைப்போலக் கிடந்த சாமாவையரை வேறிருவர் தூக்கி அதற்குள் புகுத்திக்கையிற்றைக்கொண்டு நன்றாகக் கட்டினர். அடுத்த நிமிஷம் ஐயரவர்கள் இரண்டு மனிதர்களின்மீது ஆரோகணித்தவராய் ஊர்வலம் செல்ல எழுந்தார். கொல்லைப்புறவாயிலின் வழியாக வெளிப்பட்ட அம்மனிதர்கள்

பலகொல்லைகளின் வழியாக விரைந்து சென்று, சிறிது தூரத்தில் குறிக்கிட்ட ஓடம்போக்கி யாற்றையடைந்தனர். அதில் தண்ணீர் இடுப்பளவு ஓடிக்கொண்டிருந்தது. மூட்டையை அதில் போட்டுவிட நினைத்தனர். அப்போது அவர்களில் ஒருவன் ஆற்றில் போட்டால், ஒருவேளை கரையில் ஒதுக்கப்பட்டுப் பிழைத்துக்கொள்வானென்றும் அதனால் கமலத்துக்கு துன்பம் உண்டாகுமென்றும், ஆகையால் அருகிலிருந்த ரயில்பாதையில் தண்டவாளத்தின்மீது வைத்துக்கட்டி விட்டால் நிச்சயமாகத் துகையலாய் விடுவானென்றும் கூற மற்றவர் அதுவேசரியென்று ஒப்புக்கொண்டனர். அடுத்த நிமிஷம் ரயில்பாதையை யடைந்து, அம்மூட்டையை ஒருதண்டவாளத்தின் மீது வைத்தனர். மழைத்தண்ணீர் போவதற்காக தண்டவாளத்தினடியில் விடப்பட்டிருந்த இடைவெளியில் ஒரு கயிற்றைக் கொடுத்து அதனால் மூட்டையைத் தண்டவாளத்தோடு சேர்த்து இறுக்கிக் கட்டிவிட்டுப் போயினர்.

ஐயர் மூச்சுவிட மாட்டாமல் தத்தளித்து மரணவேதனை யடைந்து தண்டவாளத்தின்மீது கிடைந்தார். கை கால்களில் இரத்தஓட்டம் நின்று போனதாகையால் பெருந்துன்ப மனுபவித்தார். அப்போது நெடுந்தூரத்திற்கப்பால் ரயில் வருவதைப்போல ஓசை யுண்டானதைக் கேட்டார். அவருடைய மனோ மெய்களின் அப்போதைய நிலைமையெப்படி இருந்திருக்கும். இன்னம் சிலநிமிஷங்களில் தாம் ரயிலில் அகப்பட்டுத் துகையலாய் விடுவோமென்று நினைத்துப் பேரச்சங் கொண்டு நரகவேதனை யனுபவித்தார்.

* * *

OFFICE OF
10 JUL 1920

மேனகா

20வது அதிகாரம்

சமய சஞ்சீவி ஐயர்.

மைலாப்பூரில் கடற்கரையினோரத்திற் சென்ற அகன்ற சாலையில் அழகிய பெருத்த பல பங்களாக்கள் அடுத்தடுத்து அமைந்திருந்தன. அவற்றின் வாயில்கள் கடல் முகமாயிருந்தமையின், இனிய காற்று, பங்களாக்களின் உட்புறத்தில் எப்போதும் ஜிலுஜிலென்று வீசி, அவற்றில் வசிப்போரை ஆநந்த சாகரத்தி லாழ்த்தி வந்தது. இத்தகைய உன்னதமான பங்களாக்களொன்றிலேதான் பெண்ணரசியான நமது நூர்ஜஹானுடைய தந்தை **கான்பகதூர் பெரிய தம்பி மரக்காயர்** வசித்து வந்தார். அவர், தலைமுறை தலைமுறையாகப் பெருத்த செல்வவந்தராக இருந்தவர்களின் குடும்பத்தில் தோன்றிய சீமான்; நற்குணம், நல்லொழுக்கம், திறமை, கல்வி முதலிய சிறப்புகள் வாய்ந்த உண்மையான பெரிய மனிதர். முன்னரே கூறப்பட்டபடி அவர் சென்னை துரைத்தனத்தாரின் நிருவாக சபையில் ஒரு அங்கத்தினராவர்; அவர் அதற்குமுன் பல ஜில்லாக்களில் கலெக்டர் உத்தியோகம் செய்து யாவராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். அவருக்கு வயது ஐம்பதிருக்கலாம். கட்டுத் தளர்வடையாத தடித்த உடம்பையும் சிவப்பு நிறத்தையும் கொண்டவர். பதற்றமில்லாத நிதானகுணமும் உண்மையான மனவுருக்கமும் வாய்ந்தவர். அவருக்கு ஆண் மக்கள் பிறக்கவில்லை; **அலிமாபீ, நூர்ஜஹான்** என்னும் இரண்டு அரிய பெண் மக்களையே அவர் பெற்றிருந்தார், அவர்களை அவர் இரண்டு உலகங்களாக மதித்து, தமது உயிரையே அவர்களின்மீது வைத்திருந்தார்; அவர்களை ஊட்டி வளர்த்து, கல்வி, நல்லொழுக்கம் முதலியவற்றில் பயிற்றி, இரண்டு ஒப்பற்ற நட்சத்திரச் சுடர்களைப்போல மதித்துப் பாதுகாத்து வந்ததன்றி அவர்களை தான தமது மேலான பாக்கியத்தை நினைத்து நினைத்து அளவளாவியிருந்தார்.

இருவரையும் நெருங்கிய உறவினர்களின் புத்திரருக்கு மணம் புரிவித்தனர். ஆனால் அலிமாபீபியின் கணவன் இறந்து போயினன்.

அவர் அதைக் குறித்துப் பெரிதும் விசனத்தி லாழ்ந்தாராயினும், இளைய குமாரியான நூர்ஜஹானும் நைனா முகம்மதுவும் மனமொத்த காதலோடு வாழ்ந்து வருவதாக நினைத்து ஒருவாறு ஆறுதலடைந்தார். நைனாமுகம்மது மிகவும் யோக்கியமான நடத்தை வாய்ந்தவனென்றும், தமது புதல்வி அவனிடம் இன்புற்று வாழ்ந்து வருகின்றாளென்றும் நினைத்துப் பெருமகிழ்வடைந்து வந்தார்.

அந்த நிலைமையில் மேனகாவின் விஷயம் அவர்செவிகளில் பேரிடியைப்போல வந்து தாக்கியது. அவளை அவன் தன் வீட்டிற்கு வரவழைத்து, வற்புறுத்தியதையும், அன்று அவன் வாயினாலேயே வெளிவந்த பல இரகசியங்களையும் அலிமாபீபி சொல்லக் கேட்டபோது அவர் அவற்றை உண்மையென்று நம்பவில்லை; ஏதோ தவறுதலாக, அவள் அந்தச் செய்தியைத் தெரிவிப்பதாக நினைத்தார். ஆனால், தமது பங்களாவில், மேனகா நோய்கொண்டு கிடந்ததையும், டாக்டர் துரைசானி வந்து வைத்தியம் செய்ததையுங் கண்டபிறகே அவர் மனதில் அச்செய்தி உண்மையானதென்று பட்டது. பெருத்த வியாகுலத்திலாழ்ந்தார்; தாம் எல்லாவற்றிலும் சிறந்த பாக்கியமாக மதித்துப் பாராட்டி வந்த தமது செல்வப் பெண்கள் இருவரும் கணவன் விஷயத்தில் துர்ப்பாக்கிய முடையவர்களாய்ப் போனதை நினைத்து நினைத்து உருகி உட்கார்ந்து போனார். பெருத்த விசனத்தினால் புண்பட்ட அவரது மனம் தமது உத்தியோகத்திலும் செல்ல வில்லை; அவர் வேறு எத்தகைய சௌகரியத்தையும் தேடவில்லை.

மேனகாவைப் பற்றியும் பெருத்த கவலை கொண்டு தமது மனதைமுற்றிலும் அதே விஷயத்தில்செலுத்தினார்; கவரி மானிலும் சிறந்த மானத்தையும், புருஷனிடம் வைத்த காதலையும் கொண்டவளான தமது புதல்வி தன் உயிருக்கு ஏதேனும் தீங்குசெய்து கொள்வாளோ வென நினைத்தவராய், தாம் மூன்று நாட்கள்வரை துரைத்தன உத்தியோக சாலைக்கு வரக்கூடவில்லை யாகையால், தமது உத்தரவு பெற வேண்டிய காகிதங்களை பங்களாவுக்கே அனுப்பும்படி கவர்னருக்குச் செய்தியனுப்பினார்; நூர்ஜஹானை பந்தோபஸ்தாகப் பாதுகாத்து அவள்மீதிலேயே கண்ணாக விருந்தார். தாம் நேரிலும், தமது முதிய புத்திரியின் மூலமாயும், அவளுக்குத் தேவையான ஆறுதல்களைச் சொல்லிவந்தார்.

சாம்பசிவம், கனகம்மாள் ஆகிய இருவரும் சென்னைக்கு வந்து பல துன்பங்களிற் பட்டு, தஞ்சைக்குத் திரும்பிச்சென்ற அன்றைய தினம் இரவு எட்டுமணி நேரமாயிற்று; பெரியதம்பி மரக்காயர் தமது பங்களாவின் மேன்மாடியிலிருந்த ஒரு சிங்காரமான அறையில் சோபாவின்மீது உட்கார்ந்திருந்தார்; பெருத்த ஹுக்கா வொன்று நெடுந்தூரத்திற்கப்பாலிருந்தது. பட்டுத்துணியால் அமைக்கப்பட்ட அந்த ஹுக்காவின் காம்பு, அநுமாரின் வாலைப்போல வளர்ந்து சுருண்டு சுருண்டு அவரிருந்த சோபாவிற்கு வந்திருந்தது; பங்களாவிலிருந்த சம்பங்கி, ரோஜா முதலிய புஷ்பங்களின் பரிமள கந்தத்தைச் சுமந்து உட்புறம் நுழைந்து வீசிய கடற்காற்றின் இனிமையினால் பரவசமடைந்திருந்த மரக்காயர் அப்போதைக்கப்போது ஹுக்காவின் காம்பைவாயில் வைத்துக்கொண்டு குடுகுடு குளுகுளு குடுகுடு குளுகுளு வென்று ஓசைசெய்து, பிரம்மாநந்த சாகரத்தில் மிதந்து கொண்டிருந்தார். அவருடைய கண்கள் சொக்கிப்போய் அந்த சாகரத்தில் நீந்துவனபோலத் தோன்றின; வெளித்தோற்றத்திற்கு அவர் இன்பத்தி லாழ்ந்திருந்ததாய்த் தோன்றினும் உண்மையில் அவர் மனது பெருத்தஅல்லல்களின் திரள்களினால் உலப்பப்பட்டு மிக்க சுறுசுறுப்பாக வேலைசெய்து கொண்டிருந்தது. மாறி மாறி ஹுக்காவுடன் சம்பாஷணை செய்வதும், எதிலிருந்த ஒரு நாற்காலியில் துயரமே வடிவாக உட்கார்ந்திருந்த நூர்ஜஹானிடம் ஏதோவிஷயங்களைப்பற்றி மொழிவதுமா யிருந்தார்.

பெரியதம்பி மரக்காயர்:—எல்லாம் சரிதான்; வி, பி, ஹாலில் நாடகம் பார்க்க அழைத்துக்கொண்டு போவதாய் குமாஸ்தா சாமாவையரும், வக்கீலின் அக்காளும் பாசாங்கு செய்து அங்கப்பநாயக்கன் தெருவிலுள்ள நமது வீட்டிற்கு தன்னை அழைத்துக்கொணர்ந்து இரகசியமான ஒரு அறையில் விட்டதாக இந்தப் பெண் சொன்னாளென்றாயே. இவள் அங்கு வந்ததை நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள் ?

நூர்—அறையில் விட்டபிறகு குமாஸ்தாவும், வக்கீலின் அக்காளும் மிகவும் அவசரமாகப் பல அறைகளின் வழியாய் நுழைந்து வெளிப்பட்டதை தற்செயலாக அக்காள் பார்த்து விட்டாள். உடனே அவளுக்குப் பெருத்த சந்தேகம் தோன்றி விட்டது. விஷயத்தை என்னிடம் வெளியிட்டாள். நான் முதலில் இதைப்பற்றி

எவ்விதமான கெட்ட யூகமும் செய்யவில்லை. என்றாலும் அன்னியரான அவர்கள் இரவு ஒன்பது மணிக்கு நமது வீட்டிற்குள் வந்ததும், மிகவும் அச்சங் கொண்டவரைப் போல விரைந்தோடியதும் ஆச்சரியத்தையுண்டாக்கின; ஆகையால் நானும் அக்காளும் மெல்ல நடந்து உட்புறத்திலிருந்த அறைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு போனோம். ஒரு அறையின் கதவுகள் யாவும் வெளிப்புறத்தில் தாளிடப்பட்டிருந்தன. ஆனால் அதற்குள் வெளிச்சமும் மனிதர் சம்பாஷித்த குரலும் உண்டாயின. சந்தேகப்பட்டு கதவுகளின் இடுக்கால் உட்புறம் பார்த்தோம். இந்தப் பெண் தனிமையில் நின்று தவித்துக் கொண்டிருந்தாள். உங்களுடைய மருமகப்பிள்ளை அவளுடன் தகாத சொற்களைக் கூறிக்கொண்டிருந்தார். அப்புறந்தான் மற்ற சங்கதிகள் வெளிவந்தன.

பெரிய:—நடந்த காரியங்களை நினைக்க நினைக்க இவைகளெல்லாம் எனக்கு பெருத்த அதிசயமாகவே இருக்கின்றன. இந்த குமாஸ்தாவும், வக்கீலின் அக்காளும் சேர்ந்துகொண்டு எவ்வளவு சாமர்த்தியமாகக் காரியம் செய்திருக்கிறார்கள்! நாடகம் பார்க்க அழைத்துக்கொண்டு போவதாய்ச்சொல்லி பெண்ணை ஏமாற்றி நம்முடைய வீட்டில் கொணர்ந்து விட்டதும், புருஷன் உண்மையை அறிந்துகொள்ளாமலிருக்கும்படி நாடகக்காரன் எழுதியதைப்போல பொய்க்கடிதம் எழுதிப் பெட்டியில் வைத்திருந்ததும் சாதாரணமான ஜனங்களால் செய்யத்தகுந்த காரியங்களா; இவர்கள் எதற்கும் துணிந்த பெருத்த ஆசாமிகள்! ஆமா! கடிதத்தைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் டாக்துரைசானி சொன்னாளென்றாயே; அவளுக்கு இந்த இரகசியமெல்லாம் எப்படித் தெரிந்தது ?

நூர்:—துரைசானி நேற்று மாலை 7-மணிக்கு இங்கு வந்தாள். மோட்டார் வண்டியில் அரைபட்ட மனிதரைப்பற்றி அப்போது பிரஸ்தாபம் ஏற்பட்டது; அந்த மனிதரே இந்தப்பெண்ணின் புருஷன் என்பது உடனே தெரியவந்தது; தன் கணவனுக்கு நேர்ந்தவிபத்தைக்கண்டு பொறாமல் இந்தப்பெண் மூர்ச்சித்து விழுந்தாள்; இவளுக்குத் தேவையான மருந்தைக்கொடுத்து விட்டு துரைசானி அவசரமாக வைத்தியசாலைக்குப்போய் விட்டாள். இன்று காலையில், இந்தப்பெண்ணின் தகப்பனாரான தஞ்சாவூர் டிப்டி கலெக்டரும் அவருடைய தாயாரும் சாமாவையரும் அங்குவந்து, வண்டியில் அரைபட்டவரைப் பார்த்தார்களாம்.

பெரிய:—ஆ! என்ன ஆச்சரியம்! இவள் சாம்பசிவையங்காருடைய பெண்ணா ?

நூர்:—ஆம்.

பெரிய:— அவர் யாரென்பது உனக்குத்தெரியுமா ? நான் சேலத்தில் கஜானா டிப்டி கலெக்டரா யிருந்தபோது, அவரும் சேலத்தில் டிப்டி கலெக்டராயிருந்தவர்; ஆகா ! அவர் மகாயோக்கியரல்லவா; அவரைப்போன்ற பரிசுத்தமான மனிதர் ஒருவரும் கிடைக்க மாட்டார்களே ! அவர் என்னுடைய அந்தரங்க நண்பரல்லவா! அடாடா! அவருடைய பெண்ணா இந்தக்குழந்தை? என்ன துர்ப்பாக்கியம் ! நான் சேலத்திலிருக்கும்போது அவருடைய வீட்டில் இந்தக்குழந்தையைப் பார்த்திருக்கிறேன்; அவர் இந்தக்குழந்தையை எவ்வளவோ அருமையாக வளர்த்தாரே! கடைசியில் இந்த துஷ்டர் வீட்டிலா கொண்டுவந்து கொடுத்தார் ! ஆகா! அவருடைய தாயாரைப்போல நல்ல பெண்பிள்ளை உலகத்திலிருப்பது சந்தேகம்! அந்த அம்மாள் மகா விவேகி! ஆனால், அவர்கள் இந்த ஊருக்கு வந்திருக்கிறார்களா ?

நூர்:— அவர்கள் இன்றுகாலையில் வைத்தியசாலைக்கு வந்து மாப்பிள்ளையைப்பார்த்தார்களாம்; அவர்களுக்குப் பதினைந்து நிமிஷநேரம் சாவகாசம் கொடுக்கப்பட்டதாம்; அவ்வளவு நேரமும் விசனித்து அழுதே தீர்த்தார்களாம்; கூடவிருந்த குமாஸ்தா சாமாவையர், மாப்பிள்ளை நேற்று அணிந்திருந்த சட்டையிலிருந்து இரண்டு கடிதங்களை எடுத்து டிப்டிகலெக்டரிடம் கொடுக்க, அவரும் அம்மாளும் அவைகளைப் படித்தார்களாம். உடனே இருவரும் மிகவும் ஆத்திரமடைந்து பைத்தியம் பிடித்தவர்களைப்போல மாறி, அவ்விடத்தை விட்டு வெளியிற்போய் விட்டார்களாம்; இவற்றை யெல்லாம் அங்கு நியமிக்கப்பட்டிருந்த வெள்ளைக்காரத் தாதி கவனித்துக் கொண்டிருந்தாளாம்; டாக்டர் துரைசானி வந்ததும் அவளிடம் விஷயத்தைத் தெரிவித்தாளாம்; உடனே துரைசானி அந்தக் கடிதங்களை எடுத்து அவற்றிலிருந்த விவரங்களை அறிந்து கொண்டாளாம்.

இன்று மாலையில் சாமாவையர் திரும்பவும் வைத்தியசாலைக்கு வந்தாராம்; துரைசானி அவரைத்தனிமையில் ஓரிடத்திற்கழைத்துப்போய் தந்திரமாக விசாரித்தாளாம்; அவர் முதலில் சரியான மறுமொழி கொடாமல் தயங்கினாராம்; பிறகு துரைசானி கடிதங்களைக்காட்டிக் கேட்க, அவர் எல்லாவிஷயங்களையும் தெரிவித்தாராம்; கடிதங்களில் கண்ட சங்கதிகள் நிஜமானவை யென்றும், இந்தப்பெண் நாடகக் காரனோடு ஓடிப்போய் விட்டாளென்றும், கடிதங்களை அவளுடைய பெட்டியிலிருந்து எடுத்த புருஷன் அவமானத்தினால் தற்கொலை செய்து கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் மோட்டார் வண்டியின்கீழ் தாமே போய் வீழ்ந்தாரென்றும் சாமாவையர் சொன்னாராம்.

பெரிய:—ஆகா! என்ன தந்திரம்! என்ன தந்திரம்! அவர்களே எல்லாவற்றையும் செய்து விட்டுப் பெண்ணின்மேல் பழியைப் போட்டு விட்டார்களா! அப்பா! மகாமோசக்காரர்கள்! பெண் இங்கிருக்கும் சங்கதியை துரைசானி ஒருவேளை சாமாவையருக்குச் சொல்லியிருப்பாளோ?

நூர்:—இல்லை இல்லை. அதை எவரிடமும் சொல்ல வேண்டாமென்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எவரிடமும் அவள் சொல்லவே மாட்டாள்.

பெரிய:—அவர் பிழைப்பாரா? துரைசானி என்னசொன்னாள்?

நூர்:—அவர் இன்னும் கண்ணைக்கூடத் திறக்க வில்லையாம். அங்கே அவருடைய நிலைமை அப்படி இருக்கிறது. இங்கே இந்தப்பெண்ணிருக்கும் நிலைமையோ பரிதாபகரமாக விருக்கிறது; உட்கார நினைத்துப் படுக்கையை விட்டு எழுந்தாளானால் மயங்கிக் குப்புற விழுந்து விடுகிறாள். இவளுடைய நிலைமையைக் காணக் கல்லும் கரைந்துருகும்; கட்டைகளும் வாய் விட்டுப் புலம்பும். தன் புருஷனை வண்டியில் அரைபட்டவர் என்பதை யறிந்தவுடன் இவளுடைய உயிர் அநேகமாய்ப் போய்விட்டது. துரைசானியின் பெருமுயர்ச்சியால் உயிர் நிற்கிறது. இந்த நிலைமையில் இவள் தன் புருஷனைப் பார்க்க வேண்டுமென்று பதறுகிறாள்; தான் பார்ப்பதற்குள் அவர் உயிர் துறந்து விடுவாரோ என்று துடிதுடிக்கிறாள். அதேபித்தாக நிமிஷத்திற்கு நிமிஷம் வேண்டிக் கெஞ்சுகிறாள். கடிதங்களைப்பற்றிய விவரங்களை நாங்கள் தெரிவித்தோம்; புருஷன் இவள்மேல் அருவருப்புக் கொண்டிருப்பதாயும் இப்போது அவளைப்பார்த்தால் அவர் ஆத்திரப்படுவாரென்றும், அதனால் இந்த ஹீனஸ்திதியில் அவருடைய உயிருக்கே மோசம் வந்துவிடுமென்றும் துரைசானி சொன்னாள். கடிதங்களின் வரலாற்றைக் கேட்க, அவள் இடியோசையைக்கேட்ட நாகமென்ன திடுக்கிட்டுக் கலங்கினாள்; இந்த அபவாதத்திற்கு ஆளான பின், தான் உயிரை வைத்துக்கொண்டிருக்கக் கூடாதென்றும், அவரை ஒருமுறை பார்த்துவிட்டு அவருடைய காலடியிலேயே விழுந்து உயிரை விட்டுவிட வேண்டுமென்று தன்னை அழைத்துப் போகும்படியும் சொல்லி மன்றாடுகிறாள். இவளைக் கண்டால் அவர் பிழைக்க மாட்டாரென்றும், இல்லையானால் பிழைத்துக் கொள்ளலாமென்றும், வீணில் ஆத்திரப்பட்டு அவரைக்கொல்லக் கூடாதென்றும் துரைசானி வற்புறுத்திச் சொல்லுகிறாள்; பெண், நோயாளியான தன்னையும் அவருக்கருகில் ஒரு படுக்கையில் கொண்டு போயாகிலும் விட்டு வைத்தால், அவரைப் பார்த்துக்கொண்டு அருகிலாயினும் இருப்பேனென்று சொல்லுகிறாள்; அப்படிச் செய்வது இருவருக்கும் ஆபத்தானதென்றும், இன்னம் ஒரு வாரமாயினும் கழியுமுன் இவளை அழைத்துப் போவது பிசகென்றும் துரைசானி முடிவாகச் சொல்லிவிட்டுப்போய் விட்டாள். இவள் மிகவும் ஏங்கிப்போய், சோர்ந்து படுக்கையில் வீழ்ந்து விட்டாள்; என்ன செய்வதென்பது தோன்றவில்லை; இது சகிக்கவொண்ணாத காட்சியாக இருக்கிறது—என்றாள்.

அப்போது தந்தை, மகள் ஆகிய இருவரது தேகமும் பதறியது. இருவருடைய கண்களினின்றும் கண்ணீர் வழிந்தது; மேலே பேசமாட்டாமல் விசனத்தினால் உருகி உட்கார்ந்து போயினர்.

பெரிய:—(மிகவும் வருந்திய குரலில்) ஆகா! கேட்கவே சகிக்கவில்லையே! மனிதருக்கு இப்படியும் ஆபத்துவருமோ? இன்னதைச் செய்வதென்று தோன்றவில்லையே!—என்றார். சிறிது யோசனையிலாழ்ந்தார்; பிறகு நூர்ஜஹானை நோக்கி "அம்மா! நாம் ஒரு காரியம் செய்யலாம்; இன்று வந்த டிப்டிகலெக்டர் எந்த இடத்தில் தங்குகிறாரென்பதை நாளைக்குக் காலையில் சாமாவையர் மூலமாக அறிந்துகொண்டு, அவரிடம் போய், விஷயங்களைச் சொல்லி பெண்ணையும் அவரிடம் ஒப்புவித்து விடுவோம்; அதுதான் சரியான காரியம்.

நார்:—(மிகுந்த விசனத்தோடு) அவரைப் பற்றியும் துரைசானி சாமாவையரிடம் கேட்டாளாம். அவர் திரும்பி ஊருக்குப்போய் விட்டாராம்; இன்று காலையிலேதான் அவர் இந்த ஊருக்கு வந்தாராம்; அவருக்கு உத்தியோக விஷயத்தில் ஏதோ பெருத்த ஆபத்து வந்து விட்டதாம்; அவர் இன்று வைத்தியசாலைக்குவரும்போது, நடு வழியிலிருந்த போலீஸ் ஸ்டேஷனில் போலீஸார் அவரை இறங்கச் செய்து உள்ளே அழைத்துப் போனார்களாம்; கமிஷனர் துரை தஞ்சைக் கலெக்டர் துரையிடத்திலிருந்து வந்திருந்த தந்தி உத்தரவை அவரிடம் கொடுத்தாராம். அதில் அவரை வேலையிலிருந்து நீக்கியிருப்பதாக உத்தரவு செய்யப் பட்டிருக்கிறதாம்; அதை வாங்கிக் கொண்டபின் அவர் வைத்தியசாலை, நாடகக்காரன் வீடு முதலிய இடங்களுக்குப் போனாராம்; நேற்று ராத்திரி அவருடைய வீட்டில் பெருத்த கொள்ளை நடந்ததாகவும், அவருடைய மனைவி கடுமையாக அடிபட்டுக் கிடப்பதாயும் தந்தி வந்ததாம்; உடனே அவரும் அவருடைய தாயாரும் புறப்பட்டுப்போய் விட்டார்களாம்:--என்றாள்,

அதைக் கேட்ட பெரிய தம்பி மரக்காயருடைய தேகம் கிடுகிடென்று ஆடியது; அவர் பெருத்த வியப்பும் திகைப்பு மடைந்தார்; ''ஆ! என்ன ஆச்சரியம்! இது உண்மைதானா? ஒரு மனிதர் தலையின் மேல் இத்தனை இடிகள் விழுமோ! அவருக்காவது வேலை போகவாவது! அவர் எவ்விதமான குற்றமும் செய்யமாட்டாரே! எந்தப் போலீஸ் ஸ்டேஷனில் உத்தரவு கொடுத்தார்களாம்?

நார்:—பீட்டர் சாலையிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்தார்களாம்; அதன் விவரம் தெரியவில்லை—என்றாள்.

அதைக் கேட்ட பெரிய தம்பி மரக்காயர் மிகவும் ஆழ்ந்து யோசனை செய்தார்; தமது ஹூக்காவின் காம்பை வாயில் வைத்து வலுவாக நாலைந்து முறை இழுத்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு ஐந்து நிமிஷ நேரம் நிஷ்டையிலிருந்தார். பிறகு ஏதோ நினைவைக் கொண்டு திடுக்கென்று எழுந்து எதிரிலிருந்த ஒரு மேஜைக்குச் சென்றார்; டெலிபோன் [Telephone] என்னும், செய்தி யனுப்பும் கருவி, அதன்மீ திருந்தது; அதை எடுத்து வாயிலும் செவியிலும் வைத்துக்கொண்டு பீட்டர் சாலைப் போலீஸ் ஸ்டேஷனிலிருந்த சமய சஞ்சீவி ஐயருடன் பேசினார். உடனே புறப்பட்டுத் தமது

பங்களாவுக்கு வரும்படி ஐயரிடம் சொல்லிவிட்டுத் திரும்பவும் தமது ஆசனத்தை யடைந்தார்; "என்ன செய்வதென்பது தோன்ற வில்லை. இந்தப் பெண்ணின் தகப்பனார் இங்கிருந்தால், அவரிடம் பெண்ணை ஒப்புவித்து விடலாம்; நம்முடைய கவலை யெல்லாம் தீர்ந்து விடும். அவரோ ஊருக்குப்போய் விட்டார்; இவளுடைய புருஷன் வீட்டில் கொண்டு போய் விடுவோமானால், இவளுடைய நாத்திமார்கள் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள்; ஒருகால் சேர்த்துக்கொண்டாலும், இந்த நிலைமையில் விஷமிட்டுக் கொன்றாலும் கொன்று விடுவார்கள்; வைத்தியசாலையிலுள்ள புருஷனோ இன்னம் கண்ணைக் கூடத் திறக்க வில்லை; பிழைப்பதே சந்தேகமாயிருக்கிறது; அவர் கொஞ்சம் தேறி, குணமடைந்தாலும், இவளைப் பார்த்தால், அவருக்குப் பெருத்த ஆத்திர முண்டாவது நிச்சயம். அது அவருடைய தேகத்திற்குத் தீங்கை விளைவிக்கும்; இப்போது நாம் என்ன செய்வதென்று தோன்ற வில்லை" என்றார் பெரியவர்.

நார்:—இவள் இதற்குமுன் பாலையாயினும் கொஞ்சம் குடித்தாள். இப்போது தன் புருஷனைக் காணவேண்டுமென்னும் கவலையில் பாலும் வேண்டாமென்று விலக்கி விட்டாள். இவள் இப்படியே இரண்டொரு நாள்களிருந்தால் இவ்விடத்திலேயே உயிரை விட்டு விடுவாள் போலிருக்கிறது. இது நமக்குப் பெருத்த வதையாக இருக்கிறது. பார்க்க சகிக்கவில்லை. என்னைக் காணும்போதெல்லாம் கெஞ்சி மன்றாடுகிறாள்; என் மோவாயைப் பிடித்து வேண்டிக் கொள்ளுகிறாள். எப்படியாயினும் தான் தன் புருஷனைப் பார்க்க வேண்டுமென்கிறாள். பைத்தியங்கொண்டவளைப்போலப் பிதற்றுகிறாள்—என்றாள்.

பிறகு, இருவரும் சிந்தனையி லாழ்ந்து தம்மை மறந்து பத்து நிமிஷ நேரம் மௌனமாயிருந்தனர்.

அப்போது ஒரு வேலைக்காரி அவ்விடத்திற்கு வந்து, வெளியில் பைசைகிலில் யாரோ ஒருவர் வந்திருப்பதாயும், அவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று சொன்னதாயும் கூறினாள். மரக்காயர், "அவரைக் கச்சேரி மண்டபத்திற்கு அழைத்துக் கொண்டுவா" என்று கூறி அவளை அனுப்பி விட்டு, எழுந்து வெளியிற் சென்று தாம் கச்சேரி செய்யும் உத்தியோக மண்டபத்திற்கு வந்து நாற்காலியில் அமர்

ந்து கொண்டார். அடுத்த நிமிஷம் சமய சஞ்சீவி ஐயர் வந்து மரக்காயருக்கு வணக்க வொடுக்கத்தோடு சலாம் செய்து மரியாதையாக நின்றார். உடனே மரக்காயர் நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளும்படி அன்போடு ஐயரை உபசரிக்க, அவர் மிகவும் தயங்கி கடைசியில் ஒரு விசிப்பலகையின்மீது உட்கார்ந்து கொண்டார். மரக்காயர், சென்னை துரைத்தனத்தில் யாவற்றையும் படைத்துக் காத்தழிக்கும் மும்மூர்த்திகளான பெருந் தெய்வங்களில் ஒருவராதலால், அவர் அற்ப உத்தியோகஸ்தரான தம்மை அவ்வளவு தூரம் மதித்து அழைப்பதன் காரணமென்னவோ வென்று ஐயமுற்று சஞ்சீவி ஐயர் பெரிதும் கலக்கமும் அச்சமுமடைந்து வந்திருந்தார். தாம் ஏதாயினும் குற்றம் செய்துவிட்டோமோ என்று கவலை கொண்டார். அப்படியிருந்தால் தமது மேலதிகாரியின் மூலமாகவன்றோ அத்தகைய உத்தரவு அனுப்பப் படவேண்டுமென்று நினைத்துக் குழப்பமும் பலவாறான சஞ்சலங்களையுமடைந்து மரக்காயர் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசப்போகிறாரோ வென்று ஆவல் கொண்டு, அவர் வாயைப்பார்த்த வண்ணமிருந்தார். முதலில் அவர் தம்மைக்காணும்போதே தம்மீதுவிழுந்து கடித்துவிடப் போகிறாரென்று நினைத்து வந்தார், ஆனால் அவர் தம்மை நாற்காலியில் அமரும்படி அன்போடு உபசரித்ததைக்காண சஞ்சீவி ஐயரின் மனது ஒருவாறு அமரிக்கையடைந்தது. என்றாலும் அவ்வளவு உயர்வான பதவியிலிருக்கும் பெரிய மனிதர் தம்மை ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தின் பொருட்டே வரவழைத்திருக்க வேண்டுமென்று நினைத்தார்.

அடுத்த நிமிஷத்தில் மரக்காயர் "ஐயரே! இன்று காலையில் தஞ்சாவூர் டிப்டி கலெக்டர் சாம்பசிவையங்கார் உம்முடைய ஸ்டேஷனுக்கு வந்தாரா?" என்றார்.

சஞ்சீவி ஐயர் மேலும் துணிவடைந்தார். "ஆம் வந்தார்" என்றார்.

பெரிய:—என்ன காரியமாக வந்தார்?

சஞ்சீ:—நேற்று ராத்திரி தஞ்சாவூர் கலெக்டரிடமிருந்து போலீஸ் கமிஷனருக்கு ஒரு தந்தி வந்தது; டிப்டி கலெக்டர் சாம்பசிவையங்கார் இன்றுகாலையில் எழும்பூரில் இறங்கி, தொளசிங்கப்பெருமாள் கோவில் தெருவிலுள்ள வக்கீல் வராகசாமி ஐயங்கார் வீட்டிற்கு வருவாரென்றும் அவர் ரஜா இல்லாமல் இரண்டு முறை பட்டணத்திற்கு வந்த குற்றத்திற்காகவும், பொய்யான செலவுப்பட்டி தயாரித்து சர்க்கார்பணத்தை வாங்கிக்கொண்ட குற்றத்திற்காகவும், லஞ்சம் வாங்கின குற்றத்திற்காகவும் தமது விசாரணை முடியும்வரையில் அவரை வேலையிலிருந்து நீக்கி வைத்திருப்பதாகவும், அவர் உடனே தஞ்சாவூருக்கு வந்து தமது சீல், முகர் முதலியவற்றை கஜானா டிப்டி கலெக்டரிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும், இந்தச்செய்தியை கமிஷனரே நேரில் அவருக்கு அறிவித்து அவரிடம் கையெழுத்துப் பெறவேண்டுமென்றும் அந்தத்தந்தியில் கலெக்டர் எழுதியிருந்தார். நான்கு நாள்களுக்கு முன் அவர் இந்த ஊருக்குவந்து தம்முடைய பெண்ணை இரகசியமாக அழைத்துப்போனாராம்; அதன் விவரத்தைப் பற்றி வக்கீல் வீட்டிலும் விசாரணை செய்து, கிடைக்கக்கூடிய சாட்சியத்தையும், அனுப்பும்படி தந்தியில் கமிஷனருக்குத் தனியாக கலெக்டர் எழுதியிருந்தார். நான் இன்று காலையில் அவர்களுடைய வீட்டில் போய் விசாரணை செய்தேன். டிப்டி கலெக்டர் நான்கு நாள்களுக்கு முன் வந்தது உண்மைதானென்று வக்கீலின் அக்காள் சொன்னாள்; அவர்களுக்கு நண்பரான அடுத்த வீட்டு சாமாவையர் அதற்கு அநுகூலமாக வாக்குமூலம்கொடுத்தார். இருவரின் வாக்குமூலங்களையும் டிப்டி கலெக்டர் கையெழுத்தையும் இன்று நாங்கள் கலெக்டருக்கு அனுப்பிவிட்டோம்.

பெரிய:—(பெரிதும் வியப்படைந்து) என்ன ஆச்சரியம்! ஒரே அம்பினால் இரண்டு பட்சிகளைக் கொன்றிருக்கிறார்களே! மூளை இருந்தாலும் இப்படியல்லவோ இருக்கவேண்டும்; கடிதங்களை எழுதி இங்கே வைத்துவிட்டு, தஞ்சாவூர் கலெக்டருக்கும் எழுதியிருக்கிறார்கள்போலிருக்கிறது! இந்தமாதிரியான அற்புதத்தை நான் இதுவரையில் காதாலும் கேட்டதில்லை; பலே! பலே! (சிறிது மௌனம்) அதிருக்கட்டும்; வராகசாமி ஐயங்கார் மோட்டார் வண்டியில் அரைபட்டு வைத்தியசாலையிலிருப்பது உமக்குத்தெரியுமா?

சஞ்சீ:—தெரியும். அதையும் சாமாவையரிடம் கேள்விப்பட்டேன். மாமனார்மீது கோபமாக கடற்கரைக்குப் போனபோது வண்டி ஏறிவிட்டதென்று அவர் சொன்னார்.

பெரிய:—ஓகோ! உம்மிடம் ஒருவிதமாகவும் டாக்டர் துரைசானியிடம் ஒருவிதமாகவும் சொல்லியிருக்கிறீரோ? சரிதான்; எல்லாம் பொருத்தமாகத்தானிருக்கிறது. அது இருக்கட்டும். உம்மிடம் நான் சில இரகசியங்களைத் தெரிவிக்கிறேன்; ஆனால் நான் உத்தியோக முறையில் அவைகளைத் தெரிவிக்கவில்லை. உம்மை ஒரு நண்பராக மதித்து உம்மிடம் விஷயங்களைச் சொல்லுகிறேன். நீர் எனக்குச் சில உதவிகள் செய்யவேண்டும். செய்வீரா?

சஞ்சீ:—கேவலம் சேவகனான என்னைத் தாங்கள் இவ்வளவு தூரம் மதித்து அழைத்து சரிசமானமாக உட்காரவைத்து உத்தரவு கொடுப்பதை பெருத்த அதிர்ஷ்டமாகவே நான் நினைக்கிறேன் விஷயங்களை நீங்கள் சொல்லலாம்; என்னால் என்ன காரியம் ஆகவேண்டுமோ அதை நான் உடனே செய்து முடிக்கிறேன். தங்களுக்குப் புலிப்பால் தேவையான போதிலும் கொண்டு வருவேன்—என்று உறுதியாகக் கூறினார்.

அந்த உறுதியான மொழியைக்கேட்ட பெரியதம்பி மரக்காயர் மிகவும் நம்பிக்கையடைந்தார்; சஞ்சீவி ஐயரோடு அரைநாழிகைவரையில் இரகசியமாகப் பேசி, மேனகாவின் பெட்டியிலிருந்து அகப்பட்ட கடிதங்கள் முதலிய பல விஷயங்களைப் பற்றித் தெரிவித்து மேல் ஆகவேண்டியவற்றிற்கு அவருடைய யோசனைகளைக்கேட்டும், தமது எண்ணங்களை வெளியிட்டுமிருந்தார். முடிவாக சஞ்சீவி ஐயர் "கவலைப்படவேண்டாம்; தாங்கள் சொன்னபடி காரியத்தை நான் நிறைவேற்றுகிறேன்" என்று உறுதியாகக் கூறிவிட்டு சலாம் செய்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். பெரிய தம்பி மரக்காயர் எழுந்து நூர்ஜஹானிடம் விரைவாகச் சென்றார்.

21-வது அதிகாரம்.

முற்று நனைந்தவர்க் கீரமுண்டோ?

தஞ்சாவூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் புளுகுமலைப் பிள்ளையும் தாந்தோனிராயரைப் போலவே, சாம்பசிவத்தின்மீது பெரும்பகைமைகொண்டிருந்தார். அதன் காரணமென்னவென்பதை இரண்டொரு சொற்களிற் சொல்லி விடுவோம். பிள்ளையவர்கள் பெருத்த படிப்பாளியல்லர்; என்றாலும் அவருடைய கற்பனா சக்தியோ அபாரமானது; அவரது மூளையோ மயன், விசுவகருமன் முதலிய தெய்வலோகத்தின் இஞ்சினீர்களது நிருமாணசக்தியைக் கொண்டது. அவர் கட்டும் கதைகளோ அராபிக்கதைகளிலும் அற்புதமான காற்று மூட்டைகள்; அவரது புத்தியும், விவேகமும் மகாதீவிரமும், கூர்மையும் பொருந்தியவை. நூலாசிரியர்கள் தமது மனோவல்லமையால் பல வகைப்பட்ட மனிதரையும், விஷயங்களையும், சம்பவங்களையும் நிஜம் போல நிருமாணித்துக் காகிதத்திற் காட்டுவதைப்போல, பிள்ளையவர்கள் உண்மை மனிதரை எடுத்துக்கொண்டு, பொய்யான விஷயங்களை சிருஷ்டித்து அதனால் பல திருவிளையாடல்கள்செய்துவந்தார். உண்மையான குற்றவாளி கச்சேரிக்கேவருவதில்லை. அவனிடம் அவரே பெருத்தஅபராதத்தொகையைவசூலித்து எடுத்துக்கொள்வார்: சாம்பசிவத்தின்கச்சேரியில் வேறுமனிதரைக்கொணர்ந்து நிறுத்துவார். அவரிடம் கொண்டுவரப்படும் ஆயிரம் பொய்க்கேஸ்களில் ஒன்றாயினும் நிற்பதில்லை. யாவும் பொய்யாகவே புகைந்துபோம். சாம்ப சிவத்தின் பகுத்தறிவின்முன் அவரது புளுகு மூட்டைகள், நீர்க்குமிழிகளைப் போல உடைந்து வெறுமையாய்ப் போவதே வழக்கமாயிருந்தது; குற்றமற்றவர்கள் யாவரும் விடுபட்டு சாம்பசிவத்தை வாழ்த்திக் கொண்டு சென்றனர். அதனால், பிள்ளையவர்கள் மேலதிகாரிகளிடத்தில் கடுமையான கண்டனங்கள் பெற்றுவந்தார்; அவருக்குக் கிடைத்திருந்த கறும்புள்ளிகள் (Black Marks) சோளக் கொல்லைப் பானைகளின் புள்ளிகளிலும் அதிகமாக விருந்தன. அவருடைய சம்பளமோ ரூபா இருநூறிலிருந்து நூற்றைம்பதாகச் சுருங்கிவிட்டது, இவ்வாறு அவர் டிப்டி கலெக்டரால் பெருத்த துன்பங்களுக்கு ஆளாய் வேலையை இழக்கும் நிலைமையிலிருந்தார். ஆகையால் அவர் சாம்பசிவத்தின்மீது கடும்பகைமை கொண்டிருந்தார். பிள்ளையவர்களின் ஆத்திரம் வடவா முகாக்கினிக்கும், நரகத் தீய்க்கும் ஒப்பிடத்தக்கது. சாம்பசிவத்திற்கும் அவரது குடும்பத்தாருக்கும் எவ்வளவு கொடுந் துன்பங்களிழைக்கக்கூடுமோ அவ்வளவையும் செய்ய பிள்ளையவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார். தமக்குத் தகுந்த துணைவரான தாந்தோனிராயருடன் சேர்ந்து கொண்டு பல சூழ்ச்சிகளைச்செய்ய வாரம்பித்தார். இராயர் கலெக்டர் துரையின் மனதில் பகையை மூட்டி சாம்பசிவத்திற்குத் துன்பங்

களை உண்டாக்கினது முன்னரே தெரிந்த விஷயம். டிப்டி கலெக்டர் அவருடைய மைத்துனன் கிட்டன் மூலமாகவும், சேவகர்கள் மூலமாகவும் பலரிடம் லஞ்சம் வாங்கினாரென்று அநேகம் சாட்சிகளைத் தயாரித்து அவர்களிடம் வாக்குமூலம் பெற்று பெரிய கலெடக்ரிடம் கொடுத்திருந்தார். கிட்டனுடைய அறியாமையினால், கேஸ்களின் தீர்மானங்களை யுணர்ந்த சேவகர்களிற் சிலர் சாம்பசிவத்தின் பெயரைச்சொல்லிப் பணம் வாங்கினதாக முன்னரே சொல்லப்பட்டதல்லவா? அவ்வாறு பணம் கொடுத்தவர்களில் சிலரும் சாட்சிசொல்லத் தயாராக விருந்தனர்.

இந்த நிலைமையில் சாம்பசிவமும், கனகம்மாளும், பெண் காணாமற் போனதுபற்றி தந்தி வந்ததனால், சென்னைக்குப்போன தினத்தன்று பிள்ளையவர்கள் ராயருடன் அவசரமாகத் தனிமையில் பேச வேண்டுமென்று செய்தி யனுப்பினார். ராயர் இரவு 8 மணிக்கு வருவதாக சேவகன் மூலமாய்ச் செய்திசொல்லி யனுப்பினாரல்லவா. அவ்வாறே காலந்தவறாமல், ராயர் பிள்ளையவர்களின் வீட்டிற்குச் சென்று அன்று நிகழ்ந்த சம்பவங்களையும் தாம் சாம்பசிவத்தின் விஷயத்தில் சொன்ன கோள்களையும், அதனாலுண்டான பலன்களையும் விரித்துக்கூற, புளுகுமலைப்பிள்ளையின் மனம் குளிர்ந்தது. தங்களது பகைவரின் வீழ்ச்சியைக் குறித்து இருவரும் கரைகடந்த மகிழ்வெய்தி அவரையும், அவரது குடும்பத்தினரையும், மிகவும் இழித்து ஏளனம்செய்து, பலவாறு தூற்றி; நகைத்துக்கொண்டிருந்தனர். சாம்பசிவத்தை வேலையினின்று நீக்கி, அவரை சிறைச்சாலைக்கு அனுப்புவது போதுமென்பது தாந்தோணி ராயரின் கொள்கை. அந்தத் தண்டனை போதாதென்பது இன்ஸ்பெக்டரின் எண்ணம். சாம்பசிவத்தின் வீட்டிலிருந்த பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு போய் விடவும், அவரையும், அவரது வீட்டிலுள்ள தாய், மனைவி முதலிய யாவரையும் நன்றாக அடித்து கால்களையும் கைகளையும் ஒடித்துவிடவும் தக்க ஆள்களைத் தயாரித்து அன்றிரவு அவர்கள் அந்தக் காரியத்தைமுடிக்க வேண்டுமென்று உறுதிசெய்து கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர். தெற்குச் சீமைப் பிரபலக் கள்ளர்களான சங்கிலி, கட்டாரி என்றகொள்ளைக்காரர்களே அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஜனங்கள் உளறியடித்துக்கொண்டு ஒளிந்து கொள்வர். உடனே ஜுரமும், சீதபேதியும் உண்டாய்விடும். அவ்விருவரும் அவ்வளவு மகா கொடிய பாதகர்கள். அவர்கள், வீட்டிற்குள்ளிருக்கும் மாடுகளை யெல்லாம் மூட்டையாகக் கட்டிக் கூரையின் வழியாகவே ஏற்றி வெளிப்படுத்திவிடக்கூடிய அவ்வளவு திறமைவாய்ந்த அரக்கர்கள். சமயம் நேர்ந்தால் தமது தாய்களையும், பிள்ளைகளையும், மனைவிமாரையும் ஆடுகளைப் போல வெட்டி பலியிடக்கூடியவர்கள். அவர்களிடம் தாம் செய்திருந்த ஒப்பந்தத்தை பிள்ளையவர்கள் ராயரிடம் கூற, அவர் மிகவும் சந்தோஷமடைந்து அதை ஆமோதித்தார். ஆனால் அந்தப்பெருத்த மண்டபப்படியில் சாம்பசிவத்திற்கு நிவேதனமில்லாமற் போகிறதே என்பது மாத்திரம் அவர் மனதிற்குக் குறையாக விருந்தது. என்றாலும், அவரும், இன்ஸ்பெக்டரும் பெருமகிழ்வடைந்து அன்றிரவே இன்பக் கனவு கண்டு நன்றாகத் துயின்றனர்.

அன்று விடியற்காலம் மூன்று மணிக்கே தாந்தோணிராயர் எழுந்து தமது குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு பத்துமயில் தூரத்திற் கப்பாலுள்ள சாலியமங்கலம் என்ற ஊருக்கு சர்க்கியூட் போய் விட்டார். பொழுது விடிந்தது; டிப்டிகலெக்டா வீட்டில் நடந்த பயங்கரமான கொள்ளையைப் பற்றிய செய்தி மிகவும் சீக்கிரமாக ஊர் முற்றிலும் பரவியது. தமது ஸ்டேஷனிலிருந்த இன்ஸ்பெக்டர் புளுகுமலைப் பிள்ளை கொள்ளை நடந்ததென்பதைக் கேட்டு வியப்பும் திகைப்பும் விசனமுமடைந்து உடனே புறப்பட்டு டிப்டி கலெக்டருடைய வீட்டிற்கு ஓடோடியும் வந்தார்; வீட்டின் உட்புறத்தையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார். வாசலிலிருந்த காலடிச்சுவடுகளின் மேல் காகிதங்களை வைத்து அவற்றின் வடிவத்தை அப்படியே சித்திரமாக எழுதிக் கொண்டார். எதிர்த்த வீட்டு ஏகப்பன், நடு வீட்டு நாகப்பன், அடுத்த வீட்டு அங்கப்பன் முதலியோரிடம் வாக்குமூலங்களை வாங்கினார். வைத்திய சாலையிலிருந்த கிட்டன், தங்கம்மாள் முதலியோரிடம் சென்று கிட்டனிடம் வாக்கு மூலம் வாக்கிக் கொண்டார். அவன் உடம்பிலும், தங்கம்மாள் உடம்பிலுமிருந்த காயங்களைப் பற்றிய விவரங்களை யெல்லாம் எழுதிக்கொண்டார். எதிர்ப்படுவோரிடமெல்லாம் டிப்டி கலெக்டர் வீட்டில் நடந்த கொடிய கொள்ளையைப்பற்றி வருந்திப் பேசி வாய்ச்சொற்களாலும், கண்ணீரின் வழியாகவும் மிகுந்த அநுதாபத்தை ஓடவிட்டார். அங்குமிங்கும்ஓடினார். மாஜிஸ்டிரேட்டிடம் சென்று அவரைக்கட்டிக்கொண்டழுதார்; டிப்டி கலெக்டர் ஊரில் இல்லை யென்னும் சங்கதியை

அறிந்த உள்ளாளின் உளவினால் அந்தக்கொள்ளை நடந்திருப்பதாக உறுதியாகக்கூறினார். டிப்டி கலெக்டர் ரஜா வாங்கிக்கொண்டுபோன விஷயம், அவருடைய சேவகர்களுக்கு மாத்திரமே தெரிந்ததென்றும் கூறி, சேவகர்கள் ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று விசாரணை செய்தார். சேவக ரெங்கராஜுவின் வீட்டிற்கெதிரில் அன்று பகலில் சில பள்ளர்கள் மீன்விற்றுக்கொண்டிருந்ததாக அவருடைய விசாரணையில் இரகசியம் வெளியாயிற்று; தஞ்சாவூர் கீழக்கோட்டை வாசலிலிருந்து மாரியம்மன்கோவிலுக்குப் போகும் பாதையிலுள்ள பள்ளத்தெருவில் குடியிருந்த பதினைந்து பள்ளர்களைக் கைதுசெய்து தமது ஸ்டேஷனில் சிறைப்படுத்தி, உண்மையைச் சொல்லும்படி குட்டைத்தடியால் மொத்தி வாயாலும் மூக்காலும் இரத்தம் கக்கும்படி அவர்களை அன்று பகல் முழுதும் மர்த்தனம் செய்துகொண்டிருந்தார். டிப்டிகலெக்டர் பலரிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு எவ்வித அநுகூலமும் செய்யாமையால், அவர்மீது ஆத்திரமடைந்த கட்சிக்காரர்கள் பள்ளர்களைக்கொண்டு அந்தக்கொள்ளையை நடத்தியிருக்கிறார்களென்றும், தாம் அதற்குத் தக்க நடவடிக்கைகளைச்செய்து வருவதாகவும் பெரிய கலெக்டருக்கு தமது சப் இன்ஸ்பெக்டர் மூலமாய்ச் செய்தி சொல்லி யனுப்பினார்.

கொள்ளையின் விவரங்களையும், தங்கம்மாள் படுவதை செய்யப்பட்டதையும் கேட்ட பெரிய கலெக்டர் துரை மிகவும் விசனித்து இரங்கினார். சாம்பசிவையங்கார் அவருடைய அபிப்பிராயத்தில் மிகவும் பொல்லாத துஷ்டராய்த் தோன்றினாராயினும், தமது கீழ் உத்தியோகஸ்தரான அவருக்குப் பிறர் அத்தகைய தீங்கு செய்ததைப் பொறாமல் பதைபதைத்துப் பறந்தார். உண்மையிலேயே பெண் மக்களிடம் வெள்ளைக்காரர் அதிக மதிப்பும், அன்பும் கொள்ளுவது இயல்பாதலால், தங்கம்மாளுக்கு நேர்ந்த விபத்தைக்கேட்டு துரை டிப்டிகலெக்டர் விஷயத்தில் பச்சாதாபமும், க்ஷமையும்கொண்டார்; உடனே தமது பைசைகிளில் ஏறிக்கொண்டு வைத்திய சாலைக்குப் பறந்து சென்று வேடனால் சுடப்பட்ட பஞ்சவருணக்கிளி போல மிகவும் பரிதாபகரமான நிலைமையில் அங்குகிடந்த வடிவழகியான தங்கம்மாளைப் பார்த்தார். அவருடைய மனதும் கண்களும் இளகிக்கலங்கின. அந்தத் துயரமான சம்பவம் அவருடைய மனதில் மாறாமல் நிரந்தரமாய்ப் பதிந்து போனது. மிகவும் ஜாக்கிரதையாக வைத்தியம் செய்து அந்த அம்மாளைக் காப்பாற்றும்படி பெரிதும் உருக்கமாகவும், உறுதியாகவும் டாக்டரிடம்கூறிவிட்டு உடனே சென்னைக்கு தந்தியனுப்பும்படி கிட்டனிடம் வற்புறுத்திச் சொல்லிவிட்டுத் தமது பங்களாவை யடைந்தார். அவருடைய மனதில் இரக்கமும், தயாளமும், அநுதாபமும் நிறைந்திருந்தன. அந்த நிலைமையில் அவர் தமது காலைத்தபால்களை உடைத்துப் பார்த்தார். தபால்களில், சென்னை போலீஸ் கமிஷனரால் அனுப்பப்பட்டிருந்த, சாமாவையர், பெருந்தேவி யம்மாள் ஆகிய இருவரின் வாக்குமூலமும், தந்தி உத்தரவைப் பெற்றுக்கொண்டதற்கு சாம்பசிவம் கையெழுத்திட்ட காகிதம் முதலியவை ஒரு உறையில் இருந்தன. அவற்றைப் படித்தார்; அப்போது சாம்பசிவத்தின்மீது அவ்வளவு கோபமும் அருவருப்பும் தோன்றவில்லை. அவர்மீது தாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை நிறுத்திவிடலாமாவென்று நெடுநேரம் எண்ணமிட்டார். ஆனால் தாம் முதல் நாள் இரவிலேயே சென்னை, துரைத்தனத்தாருக்கும் ஒரு தந்தி அனுப்பி, அதில் டிப்டி கலெக்டர் செய்துள்ள குற்றங்களையும், அதற்காக அவரைத் தாம் வேலையினின்று நீக்கிவைத்திருப்பதையும், விசாரணைகள் தீர்ந்தபின் முடிவான அறிக்கை யொன்றை யனுப்புவதாயும் எழுதியிருந்தார். ஆகையால் இப்போது பரோபகாரத்தைக் கருதி திடீரென்று நடவடிக்கைகளை நிறுத்திவிட்டால் அது நமக்கே துன்பமாய் முடியுமென்று நினைத்தார். மிகவும் அயோக்கியமான நடத்தையுள்ள சாம்பசிவம், தாம் செய்யும் நன்மையை நினையாமல், தம்மீது திருப்பி பாணம் தொடுப்பாரென்றும் கலெக்டர் நினைத்து அஞ்சினார். அவர் குற்றங்களைச் செய்யும் துஷ்டமனிதரென்பதைக் கலெக்டர் உறுதியாக நினைத்திருந்தார். என்றாலும், அவருக்குண்டான பயங்கரமான ஆபத்தை நினைக்க அவர் விஷயத்தில் பெருங்கருணை தோன்றியது. சாம்பசிவத்தினுடைய பொல்லாத வேளையில் அவர் ரூ 200, 300, நம்மிடம் பெற்றுக் கொள்ளுவதாயினும், அதைக்கொடுத்து உதவத் தயாராக விருந்தார். வேறுவிதமான எத்தகைய உதவியையும் செய்ய ஆயத்தமாக விருந்தார். ஆனால் சென்னை துரைத்தனத்தாருக்கு எழுதிவிட்ட விஷயத்தில் பொய் சொல்லி அதை முற்றிலும் மாற்ற அவர் விரும்பவில்லை. மாற்றுவதும் தமக்குத் தீங்காய் முடியுமென்று நினைத்தார்; மின்னற்கொடியான தங்கம்மாளின் பொன்னைப் பழித்த மேனியில் உண்டாயிருந்த காயங்கள் யாவும் வாய்திறந்து அவருடன் பேசிக் கெஞ்சி மன்றாடி அவளது கணவனை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்வதைப்போல கலெக்டர் மனதில்

தோன்றி வதைத்தமையால், அவருக்கு ஏதாயினும் உதவி செய்ய வேண்டுமென்னும் இரக்கமும் ஒருபுறம் வதைத்தது. அவ்வாறு அன்றைப் பகலையும் இரவையும் சிந்தனை செய்வதிலேயே போக்கி மறுநாள் ஒருவித முடிவுடன் விழித்தெழுந்தார்; சாம்பசிவையங்காரோ கொடிய பாவங்களையும், குற்றங்களையும் செய்தவர். அவற்றின் பொருட்டு கடவுள் அவரை அந்தக் கொள்ளையினால் மிகவும் கடுமையாகத் தண்டித்து விட்டார். ஒருமனிதன் அதைவிட, அதிகக் கடுமையான தண்டனையை அடைய முடியாது. ஆகையால் தாம் அவர் விஷயத்தில் தம்மாலான கருணையைக்காட்டி உதவிசெய்வது அவசியமென்று நினைத்தார். லஞ்சம் வாங்கின கேஸ்கள் ருஜுவாக்கப் பட்டால் அது அவரை சிறைச்சாலைக்கு அனுப்பத்தக்க பெரிய குற்றமாகும். ரஜா இல்லாமல் ஊரை விட்டுப்போனதும் பொய்யான செலவுப் பட்டி தயாரித்ததும், அதன்படி பணம் வாங்கியதும் அவரை வேலையினின்றி விலக்கப்போதுமான குற்றங்கள்; ஆகையால் அவரை சிறைச்சாலைக்கு அனுப்பாமல் வேலையினின்று நீக்குவதோடு விட்டுவிடத் தீர்மானித்தார். தவிர, அவரை சிறைச்சாலைக்கு அனுப்பி விட்டால், அவருடைய மனைவியின் பரிதாபகரமான நிலைமையில் அவளை ஆதரித்துக் காப்பாற்ற மனிதரில்லாமற் போவதைக் கருதி அவரைவேலையினின்று நீக்குவதோடு விட்டுவிடத் தீர்மானித்தார். கலெக்டர், துரைத்தனத்தாருக்கு எழுதி யனுப்பிய அறிக்கையில் சாம்பசிவையங்கார் லஞ்சம்வாங்கியதாக யூகிக்க இடமிருக்கிறதென்று சந்தேகமாக எழுதி யிருந்தாரே யன்றி அதை உறுதியாக எழுதவில்லை; ஆகையால், அதைமாத்திரம் ருஜுவாக வில்லையென்று நழுவ விட்டு விடுவது அவருக்கு எளிதாகத் தோன்றியது. இந்நினைவுகளுக்கிணங்க, சாம்பசிவத்தின் மீது முடிவான குற்றப்பத்திரிகையை உடனே தயாரித்தார். அதில் அடியிற் காணப்பட்ட குற்றங்களைக் குறித்தார்:—

(1) நான்கு நாட்களுக்கு முன் அவர் ரஜா இல்லாமல் சென்னைக்குப்போனது. (அதற்கு சாட்சியம்; பெண்ணை அழைத்து வந்ததாக சென்னையிலிருந்து வந்த தந்தி. பெருந்தேவி யம்மாள் சாமாவையர் ஆகிய இருவரின் வாக்கு மூலம்).

(4) அன்றைய தினம் அம்மாள் சத்திரம் முதலிய ஊர்களில் இருந்ததாக பொய்யானசெலவுப்பட்டி தயாரித்து சர்க்கார்பணத்தைப் பெற்றுக்கொண்டது. (இதற்கு சாட்சியம்: செலவு பட்டியும் மேற்கண்ட தஸ்தாவேஜுகளும்),

(3) முதல் நாள் தாம் ரஜாக்கொடுக்க மறுத்திருந்தும், அந்த உத்தரவை மீறி சென்னைக்குப் போனது (இதற்கு சாட்சியம் சென்னையில் போலீஸ் கமிஷனர் முன் கையெழுத்திட்ட காகிதம்) இம்மூன்று குற்றங்களுக்காகவும் சாம்பசிவத்தை ஏன் வேலையிலிருந்து அறவே நீக்கிவிடக்கூடாதென்பதற்கு தக்க முகாந்திரங்களை இரண்டு நாட்களுக்குள் எழுதி யனுப்பவேண்டியதென்று கலெக்டர் குற்றப் பத்திரிகை தயாரித்து வைத்துக்கொண்டு சென்னையிலிருந்து சாம்பசிவத்தின் வருகையை எதிர்பார்த் திருந்தார்.

இங்கு நிலைமை இப்படி யிருக்க, சென்னையிலிருந்து புறப்பட்ட சாம்பசிவமும், கனகம்மாளும் பித்தமும் பேயுங் கொண்டவரைப்போலத் தலைவிரிகோலமாய் தஞ்சை ரயிலடியிலிறங்கி, ஒரு குதிரை வண்டியிலேறிக்கொண்டு காற்றாய்ப் பறந்து ஓடிவந்து தமது வீட்டையடைந்தனர். அவர்கள் தங்களது உடம்பையும், மற்ற எல்லாவிதக் கவலைகளையும், உலகத்தையும் மறந்தவர்களாய், தங்கம்மாள் உயிருடனிருக்கிறாளோ அன்றி இறந்துபோய்விட்டாளோ என்ற ஒரே கவலையைக்கொண்டு அவளைப்பார்க்கவேண்டுமென்னும் ஆவலொன்றினாலேயே தள்ளப்பட்டு வந்து சேர்ந்து வீட்டை யடைந்தனர். வீட்டின் வாயிலில் வண்டியை விட்டிறங்கினர். திண்ணையில் சேவகர் ஒருவரேனும் காணப்படவில்லை. வெளிக்கதவு தாளிடப்படாமல் வெறுமையாக மூடப் பட்டிருந்தது. அதைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தனர். தாழ்வாரம், கூடம், அறைகள், மேன்மாடி முதலிய எல்லா இடங்களிலும் புகுந்து புகுந்து தேடினர். மனிதருக்கு பதிலாக கம்பங்களும், சாமான்களுக்குப்பதிலாக வெறுவெளியும் காணப்பட்டன. அவ்வீட்டில் அசையாப் பொருள்களே காணப்பட்டன வன்றி அசையும் பொருட்கள் ஒன்றும் காணப்படவில்லை. அது ஒழித்து விடப்பட்ட காலிவீட்டைப்போலிருந்தது. எங்கும் இரத்தக் குறிகள் காணப்பட்டன; அவைகளைக்காண இருவருக்கும் மூளை குழம்பியது. பெருங்கலக்கமடைந்து, செய்யவேண்டுவதை யறியாமல் வெளியில் வந்தனர்; தங்கம்மாள் எங்கிருக்கிறாளோ வென்பதை யறியமாட்டாமல் திகைத்து வாயிலிலிருந்த வண்டிபடியில் வந்து நின்றனர். அவர்களைக் கண்டு இரக்கங்கொண்ட

எதிர்த்த கடையின் சொந்தக்காரன் எழுந்து ஓடிவந்து அவர்களிடம் விவரங்களைச்சொல்லி, தங்கம்மாள் வைத்தியசாலையிலிருப்பதாகக்கூற, அவர்கள் உடனே வண்டியிலேறிக் கொண்டு வைத்திய சாலையை யடைந்து, வண்டியை விட்டிறங்கி உட்புறம் நுழைந்தனர். அங்கிருந்த ஒரறையின் வாயிலில் கிட்டனும், ரெங்கராஜுவும் மிகவும் விசனத்துடன் இருக்கக்கண்டனர். அப்போது அவர்கள் தாம் எந்த உலகத்திலிருக்கிறோமென்பதை மறந்தனர்; இருதிறத்தார்களும் ஒருவரையொருவர் கண்டகாட்சி, கன்றைப்பிரிந்த தாய் கூடியதைப்போல விருந்தது. இருதிறத்தார்களின் தேகங்களும் பதறின; இருதிறத்தார்களும் கண்ணீர் விட்டு விம்மி விம்மிப் பொருமினர்.

சாம்பசிவம் தஞ்சைக்கு வந்த தொடக்கத்தில் ரெங்கராஜுவை வைததும், அடித்ததும் தெரிந்தவிஷயம். அதன்பிறகும் அவர்முன் கோபத்தைக்காட்டிப்பேசுவதே வழக்கம். என்றாலும் ரெங்கராஜு மிகவும் நற்குணமும் விவேகமுமுள்ள மனிதன். அவன் டிப்டி கலெக்டர் குடும்பத்தில் பழகப் பழக அவர்களுடைய பெருந்தன்மை, உள்ளார்ந்த நற்குணம், அன்பு, நீதிநெறி தவறாத சீலம் முதலியவற்றைக் காணக்காண அவன் சாம்பசிவத்தினிடமும் மற்றையோரிடமும் ஆழ்ந்த அபிமானமும், வாஞ்சையும் வைத்து அவர்கள் பொருட்டு தன்னுடைய உயிரையும் கொடுக்கக் கூடிய நிலைமையிலிருந்தான். திடீரென்று கொள்ளை நடந்ததையும் டிப்டி கலெக்டர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதையும் கேட்ட ஏனைய சேவகர்களும், ஜனங்களும் டிப்டி கலெக்டரைப் பற்றிப் பலவாறு தூற்றிப்பேசிப் புரளிசெய்தனர். அவரது வீட்டில் காவல் காத்திருந்த சேவகர்கள் யாவரும் அதை விட்டு கச்சேரிக்குப் போய்ச் சேர்ந்துவிட்டனர். ரெங்கராஜு ஒருவனே கிட்டன், தங்கம்மாள் முதலியோரின் காயங்களைக் கட்டி அவர்களுக்குரிய முதல் சிகிச்சைகளைச் செய்தான். உடனே, தனது வீட்டிற்கு ஓடி தன் மனைவியின் காதுக்கு இருபுறங்களிலுமிருந்த மணிகளைக் கழற்றி அடகுவைத்துப் பணம் வாங்கிவந்து, தந்தியடித்ததன்றி அவர்களுக்குத் தேவையான உடைகளையும் கொணர்ந்து கொடுத்தான். தங்கம்மாளை, வைத்தியசாலைக்குக் கொணர்ந்து சிகிச்சை செய்வித்து, தண்ணீர் கூட அருந்த மனமற்றவனாய்ப் பதைபதைத்து கிட்டனுடன்கூட வாயிலிலேயே இருந்தான்; சாம்பசிவம், கனகம்மாள் இருவரையும் கண்டவுடன் பதறி எழுந்து கண்ணீர் விடுத்தான். கனகம்மாளைப் பார்த்து "பாவிப்பய்ங்க எஜமானியம்

மாரெ அடிச்சுப்புட்டாங்க, பெரியம்மா!" என்று வீரிட்டுக்கூற, அவனது பரிதாபகரமான குரலானது, அவர்களுடைய மனதில் அம்பைப்போலச் சுருக்கென்று தைத்தது. இருவரும் நெருப்பின் மீதிருப்பவரைப்போலத் தத்தளித்தனர். உடனே கனகம்மாள் "அவள் எங்கே இருக்கிறாள்?" என்று கேட்க, அவன் இருவரையும் அருகிலிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றான். அங்கு தங்கம்மாள் ஒரு தொட்டிலின்மீது கிடத்தப் பெற்றிருந்தாள். செவிகள், நாசி, சிரம், கைகள், கால்கள் முதலிய விடங்களில் பெருத்த இரணக் கட்டுகளிருந்தன. அவள் கண்களைத் திறவாமல், உணர்வற்று, அசைவற்றுக் கிடந்தாள். அவளைக் கண்ட இருவரும் ஆவலோடு பாய்ந்து ஓடிக்கட்டிலையடைந்து அவளை உற்று நோக்கினர். அதற்குள் கிட்டன் தனது வாயில் கையை வைத்து மூடி தங்கத்திற் கருகில் பேசவேண்டாமென்று சைகை செய்தான்; டாக்டர் துரை அவ்வாறு உத்தரவு செய்திருப்பதாகத் தாழ்ந்த குரலில் இரகசியமாகக் கூறினான். என்றாலும் கனகம்மாள் தனது ஆத்திரத்தில் எதையும் கவனியாமல், தங்கம்மாளின் மார்பு, கை, கால், முதலிய விடங்களை அன்போடு தடவிப்பார்த்தாள். உடம்பில் சூடுமில்லை குளிர்ச்சியுமில்லை. இருதயத்தின் அடிப்பும் காணப்படவில்லை. சுவாசம் வெளிப்பட்டதும், உட்சென்றதும் புலப்படவில்லை. அவளுடம்பில் உயிரிருந்ததா இல்லையா என்பது தோன்றவில்லை; மிகவும் சந்தேகித்த கனகம்மாள் கிட்டனைப்பார்த்து தணிவான குரலில் "இவள் பேசவே இல்லையா?" என்றாள். "ஆம் ராத்திரி அடிபட்ட முதல் இப்படியே இருக்கிறாள்; கண்ணைத் திறக்கவுமில்லை; பேசவுமில்லை; அசைபவுமில்லை; மூச்சு விடவுமில்லை" என்றான் கிட்டன். அதைக்கேட்ட அவ்விருவரும் அப்படியே திகைத்து திக்பிரமை கொண்டனர். மூன்று நாட்களாக ஆகாரம், தண்ணீர், துயில், ஓய்வு முதலிய எதையும் கொள்ளாமையாலும், சென்னையிற் பல பயங்கரமான சம்பவங்களிற்பட்டு தத்தளித்து வந்தமையாலும், அவர்களது நிலைமை விவரிக்கமுடியாததாயும், காண்போர் கன்னெஞ்சரேனும், கண்ணீர் பெருக்கி உருகத்தக்கதாயும், மனிதரால் ஒரு நொடியேனும் சகிக்கவொண்ணாததாயுமிருந்தது. மனமோ பெரும் புண்ணாகவிருந்தது. தேகமோ கட்டிற்கடங்காமல் சென்றது. கீழே குனிந்து நிமிர்ந்தார்களானால், கண்கள் இருண்டன; மயங்கி விழுந்து தட்டித்தடுமாறிச் சுவரைப் பிடித்துக் கொள்ளும் நிலைமையிலிருந்தனர். தங்கம்மாளின் கோரமான தோற்றத்தைக்காண, இருவரும் தள்ளாடிக்

கீழே வீழ்ந்துவிடும் தருணத்திலிருந்தனர். தனது அன்பின் பெருக்கினால் கனகம்மாள் மாத்திரம் சிறிது சமாளித்துக் கொண்டாள். சாம்பசிவம் இடிப்பொடிபட்டவரைப் போலக் கீழே உட்கார்ந்து விட்டார். பேசும் வல்லமையற்று ஊமையனைப்போல மாறி உருட்டி உருட்டி விழித்துக்கொண்டு பைத்தியக்காரனோவெனும்படியிருந்தார்; தேகம் நெருப்புக் குவியலானது. அது ஆகாயமோ பூமியோவென்பது தோன்றவில்லை. கனகம்மாளோ தன்னை மறந்து தானிருக்கும் இடத்தையும் மறந்து நாட்டுப் பெண்ணின் உடம்பை அன்போடு தடவிக்கொடுத்த வண்ணம் கண்ணீர் பெய்து கரைந்து பிரலாபித்தழத் தொடங்கினாள் "ஐயோ! என் கண்ணே! உனக்கும் இந்தக் கதி வந்ததோ! என் குடியை விளக்க வந்த மகாலட்சுமியல்லவோ நீ! உன்னைப்போன்ற நாட்டுப் பெண்ணை நான் இனி பெறுவேனோ! என் தங்கமே! உன் வாயை இனி திறப்பாயோ திறக்கமாட்டாயோ! அத்தனையும் தங்கமல்லவோ நீ! என் ராஜாத்தி! உன்னை அருந்ததி யென்றாலும் தகுமே! அடி உத்தமியே! உன்னையடித்தவன் வீடு இந்நேரம் பாழாய்ப் போயிராதோ! அவன்குடும்பம் ஏழேழு தலைமுறைக்கும் நசித்து நரகத்தில் வசிக்காதோ? ஆகாயத்திலுள்ள இடிகளெல்லாம் அவர்கள் தலையில் விழாதோ? என் கண்ணே! என்னப்பா! என் துரை சிங்கத்துக்கு வந்து வாய்த்த மகாலட்சுமியே! ஐயோ என் குடியைக் கெடுத்து விடுவாயோ! என் வீட்டு விளக்கை யவித்து விடுவாயோ! என் பாக்கிய லட்சுமியை அழைத்துக்கொண்டு போய் விடுவாயோ! என் பிள்ளை கூட என்னிடத்தில் அவ்வளவு பிரியமும் மரியாதையும் வைக்க வில்லையே! எத்தனை ஜென்ம மெடுத்தாலும் என்ன தவம் செய்தாலும் உன்னைப் போன்ற நாட்டுப் பெண் எனக்கு வருவாளோ! பாவியாகிய எனக்கு நல்லது நிலைக்காதோ! கிழவியான என்னை அந்த எமன் கொண்டு போகக்கூடாதோ; பட்டணத்தில் குழந்தையைப் பறி கொடுத்தோம்; இங்கே உன்னைப் பறி கொடுத்தோம். இனி நாங்கள் ஒருநிமிஷமும் உயிருடனிருப்போமென்று நினைக்காதே;" என்று பிரலாபித்துத் தேம்பித் தேம்பி யழுது அனலிடு மெழுகாய் உருகினாள். அதைக் கண்ட சாம்பசிவம், கிட்டன் ரெங்க ராஜன் முதலிய யாவரும் தம்மை மறந்து ஓவெனக் கதறி யழத் தொடங்கினர். அது வைத்திய சாலை யென்பதையே அவர்கள் மறந்து விட்டனர். அந்தப் பெரும் கூக்குரல் நெடுந் தூரம் பரவியது.

அடுத்த நிமிஷத்தில் பெரிய டாக்டர் துரை "என்ன இது! என்ன இது!" என்று சொல்லிக்கொண்டு உள்ளே நுழைந்து, அவர்களுடைய அழுகைக்குச் சட்டென்று முற்றுப் புள்ளி வைத்தார்; என்றாலும் டிப்டி கலெக்டர் அவ்வூரில் முக்கியமான உத்தியோகஸ்தராதலாலும் அவருடைய துக்ககரமான விபத்தைக் கருதியும் டாக்டர் அவர்களைக் கண்டியாமல் டிப்டி கலெக்டருக்கு வந்தனம் செலுத்தினார். சாம்பசிவமும் டாக்டருக்கு வந்தனம் செய்து தமது மனைவியின் கதி எப்படி முடியு மென்று கேட்டார். துரை மிக்க இரக்கமான குரலில் "ஐயா! தங்களுக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி நான் மிகவும் விசனமடைகிறேன். தங்கள் மனைவியின் தேக நிலைமை முற்றிலும் நம்பிக்கை யற்றதாயிருக்கிறது. திருடர்கள் முரட்டுத்தனமாகப் பல விடங்களில் அடித்து விட்டார்கள். அதனால் மார்பில் இரண்டு எலும்புகள் முறிந்து போய் ஹிருதயத்தில் குத்திக்கொண்டிருக்கின்றன. மார்பைக் கீறி (ஆபரேஷன் செய்து) அந்த எலும்புகளை மிகவும் சாமர்த்தியமாக எடுத்தாலன்றி, தங்கள் சம்சாரம் பிழைப்பது கடினம். இன்று மாலைக்குள் ஸ்மரணையை நான் திருப்பித் தருகிறேன்.. மார்பைக் கீறி உட்புறத்தை ஒழுங்குப் படுத்தித் திரும்பவும் தைப்பது எளிய காரியமல்ல; அதில் அற்பமான தவறு ஏற்பட்டாலும் உடனே மரணம் நேருவது திண்ணம். அந்த அபாயகரமான வேலை எல்லோராலும் செய்யத்தக்கதல்ல. கைதேர்ந்த நிபுணர்களாலேயே அதை நாம் செய்விக்கவேண்டும். உண்மையை மறைப்பதில் பயனில்லை. அந்த அரிய காரியத்தைச் செய்வதில் எனக்கு அவ்வளவாகப் பழக்கமில்லை. இங்கே எனக்குக் கீழிருக்கும் இரண வைத்தியர்கள் ஆட்டை அறுப்பதற்கே தக்கவர்கள். அந்த அபாயகரமான காரியத்தை அவர்களிடம் ஒப்படைப்பது ஆபத்தாகும்; சென்னை புரசைப் பாக்கத்தில் டாக்டர் வில்லியம்ஸ் என்ற பெயருடைய துரை ஒருவர் இருக்கிறார். அவர் இந்த விஷயத்தில் மிகவும் தேர்ச்சி பெற்ற மேதாவி; வேறு பலரிடத்திற்குப் போய் வீண்காலதாமதம் செய்ய வேண்டாம். உடனே அவரிடம் கொண்டு போவீர்களானால், அவர் நொடியில் குணப்படுத்தி விடுவார். ஆனால் அவர் அதிகமாகப் பணம் கேட்கக் கூடியவர். இந்தக் காரியத்திற்கு அவர் குறைந்தது ரூபா முன்னூறு கேட்பார். அவருக்கு நான் ஒரு கடிதம் எழுதித் தருகிறேன். அதை அவரிடம் சேர்ப்பித்தால், அவர் அதிகமான சிரத்தை யெடுத்துக்கொண்டு இந்தக் காரியத்தை முடிப்பார்; ரூபாய் இருநூறு பெற்றுக்கொள்வார்;" என்றார். அப்படியே செய்வதாக சாம்பசிவம் ஒப்புக்கொண்டார்;

உடனே டாக்டர் "சரி; மாலையில் ஏழுமணிக்குப் புறப்படும் வண்டியில் இன்றைக்கே போங்கள். போகும் போது நான் டிக்கட்டும் தருகிறேன்; நீங்கள் இவ்விடத்திலிருந்து நோயாளியை அலட்டுதல் கூடாது. சாயுங்காலம் வரையில் வெளியிலேயே யிருங்கள்" என்று அழுத்தமாகக் கூறிவிட்டு அப்புறம் சென்றுவிட்டார்; பிறகு சேவகன் ஒருவன் வந்து "சுவாமிகளே! தயவு செய்து வெளியில் வந்து விடுங்கள்; கதவை மூடவேண்டும்" என்று நயமாகக் கூறினான். ஆறா மனதோடு நால்வரும் வெளியில் வந்தனர்; கதவும் சாத்தி மூடப்பட்டது.

வெளியில் போடப்பட்டிருந்த ஒரு விசிப்பலகையில் சாம்பசிவம் ஓய்ந்து உட்கார்ந்து கொண்டார். கனகம்மாள் தரையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டாள்; கிட்டனும், ரெங்கராஜுவும் சிறிது தூரத்தில் நின்றார்கள். யாவரும் கால் நாழிகை நேரம் வரையில் என்ன பேசுவதென்பதை யறியாமல் ஏக்கங் கொண்டு திகைத்து உட்கார்ந்து விட்டனர். எதற்கும் அஞ்சாத தீரரான சாம்பசிவம் செயலற்றுத் தமது பெருமையை இழந்து ஒரே நாளில் சாதாரண மனிதராய் மாறி பெருத்த துன்பங்களுக்கும் அபாயத்திற்கும் ஆளாய் ஓய்ந்து பரதேசியைப் போல உட்கார்ந்திருந்ததைக் காண ரெங்கராஜுவின் மனம் பதறியது. அவன் உள்ளத்திலிருந்து பொங்கியெழுந்த பல உணர்ச்சிகளால் அவனுடைய கண்ணிமைகள், உதடுகள் முதலியவை காற்றிலசையும் மாந்தளிர்போலத் துடித்தன. சாம்பசிவமும் கனகம்மாளும், பல நாட்களாக போஜனம் செய்யவில்லையென்பதை அவர்களது விகாரமான தோற்றமே எளிதில் காண்பித்தது; ரெங்கராஜு கனகம்மாளை நோக்கிப் பணிவாக "பெரியம்மா! பட்டணத்தில் குழந்தை சௌக்கியமா?" என்று அந்தரங்கமான அபிமானத்துடன் கேட்டான். அவன் அன்பின் பெருக்கினால் கேட்ட கேள்வி அவர்களுக்குப் பெருத்த துன்பத்தைச் செய்தது. சில நாழிகையாக மறைந்திருந்த சென்னையின் நினைவு அவர்களிருவரின் மனதிலும் உடனே திரும்பி விட்டது; முதல் நாள் சம்பவித்த விஷயங்கள் யாவும் அப்போதே கண்ணெதிரில் நடப்பனபோல அவர்களுக்குத் தோன்றின; அப்படியே மெய்ம்மறந்து கல்லாய்ச் சமைந்து போயினர்; தனது கேள்விக்கு மறுமொழி இல்லாது போனதைக் கண்ட ரெங்கராஜு சென்னையில் பெண்ணின் நிலைமையும் சரியாக இல்லையென்று யூகித்துக் கொண்டான். அவர்களுடைய முகவாட்டத்தையும், மிதமிஞ்சிய அயர்வையுங் கண்ட அந்த நற்குணம் பெற்ற சேவகன் அவர்கள் போஜனம் செய்யவில்லையென்பதைக் கிட்டனிடம் சைகையின் மூலமாகக் காட்டினான். கிட்டன் "பாட்டீ! நீங்கள் இன்னம் பல்கூடத் தேய்க்கவில்லை போலிருக்கிறது. நாம் அகத்துக்குப் போய்விட்டு வருவோம். சாயுங்காலம் வரையில் நம்மைத்தான் உள்ளே விடமாட்டார்களே. இங்கே நாமென்னசெய்யப்போகிறோம்" என்றான். அவர்களிருவரும் அப்போது ஆகாரத்தையும், தமது உடம்பையும், உலகத்தையும் மறந்து, தங்கம்மாள், மேனகா, வராகசாமி ஆகிய மூவரின் வடிவங்களையே மனதில் கொண்டிருந்தனர். ரெங்கராஜுவின் கேள்விக்கும், கிட்டனது பிரேரபணைக்கும், கால் நாழிகை வரையில், எவ்விதமான மறுமொழியும் கிடைக்கவில்லை. பிறகு கனகம்மாள் திடீரென்று தனது சுய உணர்வைப்பெற்று சாம்பசிவத்தை நோக்கி "ஏனடா உன் கையில் எவ்வளவு பணம் மிகுதிஇருக்கிறது?" என்றாள். அவர் தமது பையிலிருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்து ரூபா 87-5-0 இருக்கிறதென்றார். உடனே கனகம்மாள்? "சரி; இன்று நாம் ரயிலேறுவதற்குள் ரூபா முன்னூறாவது வேண்டுமே; அதற்கென்ன வழி?" என்றாள். தலையை நிமிர்த்திய சாம்பசிவம் உடனே கீழே குனிந்து யோசனை செய்தார். மூன்றாம் நாள் மாலையில் அவருடைய வீட்டில் இருந்த பணம், நகைகள், உடைகள், சாமான்கள் முதலியவற்றின் பெறுமானம் இருபதினாயிரத்திற்குமேலிருக்கும். அவ்வளவு பொருட்களும் கொள்ளைக்காரர்களால் அபகரிக்கப்பட்டுப் போயின. அவருடைய தகப்பனார் காலத்திலிருந்த நிலம், வீடு முதலியவற்றை விற்று, அவற்றைக் கொண்டே கல்வி கற்றுக்கொண்டாராதலின் அவருக்குப் புராதனமான பொருள் ஒன்றும் கிடையாது. ஆனால் ஒரு ஜீவாதார நிதியில் (Life Insurance Fund) அவர் பணம் செலுத்திக் கொண்டு வந்திருந்தார். அவருக்கு 50 வயதாகும்போது அதிலிருந்து ரூபா முப்பதினாயிரம் கிடைக்கும். ஆனால் வயது இன்னம் அவ்வளவாகவில்லை. அந்த நிதியிலிருந்து அவசர நிமித்தம் ஏதாவது சொற்பத்தொகையைக் கடனாக வாங்க அவருக்கு உரிமையிருந்தது. ஆனால், அந்த நிதியின் நிருவாகஸ்தரால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பத்திரமும் மற்றப் பொருட்களுடன் களவாடப்பட்டுப் போனமையால், அதை அடமானம் வைத்துக் கடன் வாங்குவதும் கூடாமற்போய்விட்டது. ஆகையால் சாம்பசிவையங்காரின் அப்போதைய பெறுமானம் ரூபா 87-5-0

தான். அவ்வளவு சொற்ப காலத்தில் தாம் ஏழையினும் பரம ஏழையாய்ப் போனதை நினைத்து "ஆகா! பணமில்லாதவன் பிணமென்பது இப்போதே நன்றாய்த் தெரிகிறது. பொருளிலார்க் கிவ்வுலகமில்லை; அருளிலார்க் கவ்வுலகமில்லை என்றவர் பரமஞானியல்லவா; அவர் சொன்னது ஒரு நாளும் பொய்க்காது" என்று நினைத்து ஏங்கி உட்கார்ந்து விட்டார். ஆனால் உண்மையில் அவருடைய நிலைமை அவ்வளவு கேவலமானதன்று. கனகம்மாளுக்கு அவருடைய தந்தையால் மஞ்சற் காணியாகக்கொடுக்கப்பட்ட நிலமும், வீடுமிருந்தன. அவை இரண்டும் ரூபா எண்ணாயிரம் பெறும். ஆனால் அவை செங்கற்பட்டிற்கு மேற்கில் பதினைந்து மயில் தூரத்திற்கப்பாலிருந்த **பகற்கோளைப் பாக்கம்** என்னும் ஊரிலிருந்தன. அவை தமக்குச் சொந்தமல்லவாதலால் சாம்பசிவத்திற்கு அவற்றின் நினைவு உண்டாகவில்லை. தாம் செய்ய வேண்டுவதைப்பற்றி கனகம்மாள் மனதில் முன்னமே தீர்மானம் ஏற்பட்டு விட்டது. தனது நிலத்தையும், வீட்டையும் அந்த அவசரத்திற்கு விற்கமுடியாதாயினும் அவற்றை அடமானம் வைத்தாயினும் ரூபா ஆயிரம் வாங்கி தமது அவசரமான செலவுகளுக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டாள். ஆனால் சாம்பசிவம் அதை நினைக்காமல், வேறு எவரிடமாயினும் கைமாற்றாக வாங்கலாமா என்று நினைத்துப் பார்த்தார். அவருக்குப் பணம் கொடுக்கக் கூடியவராக ஒருவரும் காணப்படவில்லை. அந்த நிலைமையில் அவருக்கு அவருடைய மாமனாரின் நினைவு வந்தது. அவர் தஞ்சைக்கு ஐந்தாறு மயில் வடக்கிலிருந்த **தில்லை ஸ்தானம்** என்னும் ஊரிலிருந்த ஒருவைதிகப் பிராம்மணர். அவருடைய புத்திரனான கிட்டன் நெடுங்காலமாக இவர்கள் வீட்டில் வளர்ந்து வந்தானென்பது தெரிந்த விஷயமல்லவா? அந்த வைதிகரிடம் நிலத்தைத் தவிர பணமாகவும் நகைகளாகவும் ரூபா இரண்டாயிரத்திற்கு சொத்து இருந்தது சாம்பசிவம், கிட்டன் முதலிய யாவருக்கும் தெரியும்; பொதுவாக தமது பெண்ணான தங்கம்மாளிடம் அவருக்கு அவ்வளவு உள்ளார்ந்த அபிமானம் இருந்ததாக அவர் அதுவரையில் காட்டிக்கொண்டதில்லை. பெண்வீட்டிலிருந்து எதாயினும் பொருளை அப்போதைக்கப்போது அபகரித்துக்கொண்டு போவதில் அவர் கண்ணுங் கருத்துமாயிருந்தாரேயன்றி பெண்ணிடத்தில் ஒரு அன்பான மொழியையும் வழங்கியறிந்தவரன்று. என்றாலும், தமது பெண்ணுக்குவந்துள்ள பிராணாபாயமான அந்தப் பெருத்த ஆபத்துக்காலத்தில் அவர் அவசியம் தயாள குணமுடையவராயிருப்பாரென்று சாம்பசிவம்நினைத்தவராய்க் கிட்டனை நோக்கி "ஏனடா இந்த சங்கதியைப்பற்றி தில்லைஸ்தானத்திற்கு எழுதினாயா?" என்றார் "ஆம்; உடனே புறப்பட்டு வரும்படி கடிதமெழுதி ஒரு ஆளிடம் நேற்றைக்கே அனுப்பினேன்; என்னவோ அவர் இன்னம் வரவில்லை; வேண்டுமானால் நான் நேரில்போய் அவரையும் அழைத்துக்கொண்டு நானூறோ, ஐந்நூறோ கிடைக்கக்கூடிய பணத்தையும் வாங்கிக்கொண்டு வருகிறே"னென்றான். சாம்பசிவம் உண்மையில் அதில் நம்பிக்கை வைத்தார். கனகம்மாளுக்கு அந்தக் கிழவரின் குணம் நன்றாகத் தெரியும்; அந்த ஆபத்துக்காலத்தில் பணச்செலவாகுமென்று கருதியே அவர் வரவில்லையென்று கனகம்மாள் யூகித்துக்கொண்டாள்; எனினும் தன் மனதை வெளியிடவில்லை. ஏனெனில் அவரிடமிருந்து ஒருகால் தெய்வச் செலவாகப் பணம் கிடைத்துவிடுமானால் தங்கம்மாளுடைய காரியத்தைத் தாமதமின்றி நடத்தலாமென்று நினைத்தே மௌனம் சாதித்தாள். அவர்களிருவரும் தனது பிரேரபணையை ஆமோதிப்பதாக நினைத்த கிட்டன், தான் போய்விட்டு வருவதாகக் கூறிவிட்டு வெளியிற்சென்று ஒரு குதிரை வண்டியை அமர்த்திக் கொண்டு வேகமாய்ப் போய்விட்டான். உடனே ரெங்கராஜு "பெரியம்மா! எஜமான் ரொம்பவும் களைப்பாயிருக்கிறாங்க; இஞ்சே நாம்ப சும்மாத்தானே இருக்கப்போறோம்; ஊட்டுக்குப் போயி பூசையை முடிச்சிக் கிட்டு வந்துடலாமே; எசமான் பசி தாங்க மாட்டாங்கம்மா!" என்று உருக்கமாக மெல்லக் கூறினான். அதைக் கேட்ட கனகம்மாளின் மனதிலும் இனி சாம்பசிவத்தைப் பட்டினியாயிருக்கவிடுவது தவறென்றுதோன்றியது; "சரி; நாம் அகத்துக்குப்போய்விட்டு வந்துவிடுவோம்; குதிரை வண்டிகொண்டுவா" என்றாள். அடுத்த நிமிஷம் வண்டி வந்து நின்றது; அதில் ஏறிக்கொண்டு மூவரும் வீட்டையடைந்தனர்.

உடனே வேலைக்காரி, புரோகிதர் முதலியோர் வரவழைக்கப்பட்டனர்; வேலைக்காரி வீட்டை மெழுகிச் சுத்திசெய்தாள்; புரோகிதர் புண்ணியாகவாசனம் செய்தார்; அதற்குள் சாம்பசிவத்தினிடம் ரூபா பத்தைப் பெற்றுக்கொண்டுபோன ரெங்கராஜு சில பத்திரங்கள், சாமான்கள், முதலியவற்றைக்கொணர்ந்து நிரப்பினான். இருவ

ரும் ஸ்நானம் செய்து கொண்டனர். ஐந்து நிமிஷத்தில் சமையல் சாப்பாடுமுதலியவை முடிந்தன; இருவரும் சிறிதுநேரம் ஒய்ந்து உட்கார்ந்தனர். அப்போது பகல் மணி இரண்டாயிற்று; கிட்டன் வியர்த்து விருவிருத்தமேனியோடு விரைந்து உட்புறம் நுழைந்தான். இருவரும் அவன் முகத்தை நோக்கினர். அது விசனத்தையும், வெட்கத்தையும் காட்டியது. கனகம்மாள் “என்ன சங்கதி?” என்றாள். கிட்டன் “பணமில்லை” என்று உதட்டைப் பிதுக்கினான். “அவர் வரவில்லையா?” என்றார் சாம்பசிவம். “அவர் ஏன் வருவார்? பணத்தாசைப் பிடித்த மனிதனுக்கு பெண்ணேது? பிள்ளையேது? இங்கே பெண் ஏதாவது கொடுப்பதானால் வாங்கிக்கொண்டுபோக வருவார்” என்றான். அதைக்கேட்ட சாம்பசிவம், “பெண்ணைப்பெற்ற தகப்பன் அப்படியும் கிராதகனா யிருப்பானோ!” என்று நினைத்து வியப்பும் திகைப்புமடைந்து அப்படியே அசைவற்று சித்திரப்பதுமை போல உட்கார்ந்து போனார். கனகம்மாள் அதைப்பற்றி ஒரு சிறிதும் கவலைகொள்ளாமல் “போனால் போகிறது; நீ குளித்துவிட்டு சாப்பிடவா” என்று கூறினாள். அவனும் முதல்நாளிலிருந்து பட்டினியிருந்தவனாதலால் உடனே ஸ்நானத்திற்குச் சென்றான். சிறிது நேரத்தில் அவனுடைய சாப்பாடும் முடிந்தது.

உடனே கனகம்மாள் சாம்பசிவத்தைப் பார்த்து “அப்பா! ஏன் கவலைப் படுகிறாய்? தலைக்குமேல் வெள்ளம்போகுமானால், முழம் போனாலென்ன? சாண்போனாலென்ன? எல்லாம்போய் விட்டது; இனி ஏன் கவலை; என் பேரிலிருக்கும் நிலத்தையும் வீட்டையும் அடமானம் வைத்து ரூபா ஆயிரம் வாங்கிக்கொண்டுவா; உத்தியோகம் இனி திரும்பி வரும் வரையில் நம்முடைய செலவுக்கும் பணம் வேண்டும். பட்டணத்தில் வைத்தியச் செலவு, படிச்செலவு எவ்வளவு ஆகுமோ; எல்லாவற்றிற்கும் கையில் ரூபா ஆயிரம் இருக்கவேண்டும்.” என்றாள். சாம்பசிவம் (திகைத்து) “எப்போது ஊருக்குப் போகிறது? கடன் வாங்க அவகாசம் எங்கே இருக்கிறது?” என்றார்.

கனகம்மாள்:—நாமெல்லோரும் தங்கம்மாளை எடுத்துக்கொண்டு சாயுங்கால வண்டியில் பட்டணம் போவோம். நீ செங்கற்பட்டிலிறங்கி, பொழுது விடியுமுன் கிராமத்திற்குப்போய் நாட்டுக்கோட்டை நீலகண்டம் செட்டியிடம் அடமானம் வைத்து உடனே பணத்தை வாங்கிக்கொண்டு நாளை சாயுங்காலம் பட்டணத்திற்கு வந்து விடு. நான் டாக்டரிடம் தங்கம்மாளைக் கொண்டுபோய் “இதோ பணம் வருகிற” தென்று சொல்லி ஆபரேஷன் செய்யச்சொல்லுகிறேன்.

சாம்ப:—அது நல்லயோசனைதான். ஆனால் அதில் ஒரு இடைஞ்சலிருக்கிறது.

கனக:—என்ன இடைஞ்சல்?.

சாம்ப:—நிலம் வீடு முதலியவை உன்பேரி லல்லவோ இருக்கின்றன. நான் எப்படி அடமானப்பத்திரம் எழுதிக்கொடுக்கிறது? (சிறிது யோசனை செய்து) இருக்கட்டும். அதற்கு ஒரு காரியம் செய்வோம். உன்பேரிலிருக்கும் நிலத்தையும் வீட்டையும், அடமானம் வைக்க நீ எனக்கு ஒரு அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்தாக இப்போதே ஒரு தஸ்தாவேஜு எழுதி ரிஜிஸ்டர்செய்து கொள்வோம். —என்றார்.

கனக:—சரி; சீக்கிரம் ஆகட்டும்; ரெங்கராஜுவை அனுப்பி முத்திரைக் காகிதம் வாங்கிக்கொண்டு வரச் சொல்—என்றாள். அவ்வாறே முத்திரைக் காகிதம் வரவழைக்கப்பட்டது. அதிகாரப் பத்திரம், தயாராய் ரிஜிஸ்டர் கச்சேரியில் பதிவும் செய்யப்பட்டது. அதற்குள் மாலை ஐந்துமணி சமயமாய் விட்டது.

சேவக ரெங்கராஜு அவர்களுடன் சென்னைக்கு வரவேண்டுமென்னும் ஆசை கொண்டவனாய் கச்சேரிக்குப்போய் மானேஜரிடம், எட்டு நாளைக்குத் தனக்கு ரஜா வேண்டுமென்று கேட்டான். அவனுக்கு ரஜாக்கொடுத்தால், தாமும் சாம்பசிவத்திற்கு உளவாக இருப்பதாகப் பெரிய கலெக்டர் நினைத்துத் தமக்கும் ஏதாவது கெடுதல் செய்வாரோவென்று நினைத்த மானேஜர் சுப்பிரமணிய ஐயங்கார், ரஜாக் கொடுக்க மறுத்து விட்டார். சாம்பசிவம், தங்கம்மாள், முதலியோரை அந்த ஆபத்துக்காலத்தில் கைவிட்டு தனது உத்தியோகமே பெரிதென்று இருந்துவிட ரெங்கராஜு விரும்பவில்லை; ஆகையால் முன்பின் யோசனை செய்யாமல் ஒரே நொடியில் ஒருவிதமுடிவிற்கு வந்தான். தனது வேலையையே ராஜீநாமாச்செய்து விட்ட

தாய் ஒரு காகிதத்தி லெழுதி மானேஜரிடம் கொடுத்து விட்டு சாம்ப சிவத்தினிடம் வந்து சேர்ந்தான்.

உடனே யாவரும் சென்னைக்குப்போக ஆயத்தமாய்க் குதிரை வண்டியிலேறிக் கொண்டு வைத்தியசாலையில் வந்திறங்கி டாக்டர் துரைக்குச் செய்தி யனுப்பிவிட்டு தங்கம்மாளைப் பார்க்கவும் அவளுடைய அப்போதைய நிலைமையை அறியவும் ஆவல்கொண்டு துடிதுடித்து நின்றனர். அப்போது டாக்டர் தங்கம்மாளுக்குரிய சிகிச்சைகளைச் செய்து கொண்டிருந்தார். கால் நாழிகைக்குப் பிறகு அவர் வெளியில் வந்து சாம்பசிவத்தினிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து "இதைப் பட்டணம் டாக்டரிடம் சேர்ப்பித்து ரூபா இருநூறைக் கொடுங்கள். அவர், ஆகவேண்டுவதைச் செய்வார் கொஞ்சமும் தாமதமானால், அது ஆபத்தாய் முடியும். கையில் சில மருந்துகளையும் தருகிறேன். அவற்றை பிரயோகித்துக் கொண்டே போங்கள்; நாளைக்காலையில் நீங்கள் தவறாமல் வைத்தியரிடம் போய்ச் சேரவேண்டும் ஜாக்கிரதை" என்றார்.

சாம்பசிவம் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

டாக்டர் "சரியாக ஆறரை மணிக்கு நோயாளியை அனுப்புகிறோம்; அதுவரையில் இவ்விடத்திலேயே இருங்கள்." என்று சொல்லிவிட்டு உட்புறம் போய் விட்டார்.

இவர்கள் நால்வரும் வெளியிலேயே நின்றனர். டாக்டருடைய சொற்களிலிருந்து தங்கம்மாளுடைய தேக நிலைமையில் முன்னிலும் அதிகமான கெடுதல் ஏற்படவில்லையென்று ஊகித்துக்கொண்டவராயிருந்தனர்; கால் நாழிகை வரையில் எவரும் வாய்திறக்கவில்லை. பிறகு கனகம்மாள் "அடே ரெங்கராஜு நீ எங்களுடனேயே இருக்கிறாயே! கச்சேரிக்கு வந்துவிடும்படி உனக்கு உத்தரவு வரவில்லைப்பா?" என்றாள். ரெங்கராஜு, தான் வேலையிலிருந்து விலகிக் கொண்டதை அப்போது தெரிவித்தால் அவர்கள் தன்மீது கோபமுற்று, தன்னை சென்னைக்கு அழைத்துப் போகாமல் விட்டுவிடுவார்களோ வென்று அஞ்சி உடனே ஒரு பொய்ம்மொழி கூறினான்; "நான் நேத்து காலையிலேயே கச்சேரிக்குப்போயி ஒருவாரத்துக்கு ரஜா வாங்கிப்புட்டேன்; பட்டணத்துக்கு நானும் வாரேனுங்க; என் மனசு தாளல்லீங்க" என்று உருக்கமாகக் கூறினான்; அவனுடைய உண்மையான அன்பையும், ஆபத்தில் உதவும் நற்குணத்தையும் காண சாம்பசிவம், கனகம்மாள் ஆகிய இருவரின் மனதும் பொங்கிப் பூரித்தது. தமது கண்களில் துளித்த நீரைத்துடைத்துக் கோண்டனர்.

உடனே கனகம்மாள் சாம்பசிவத்தினிடமிருந்து ஐந்து ரூபா நோட்டொன்றை வாங்கி ரெங்கராஜுவிடம் நீட்டி "நீ எங்களுடன் வந்து விட்டால், உன் வீட்டில் பெண்டுபிள்ளைகளுக்கு ஒருவாரத்துக்கு வேண்டிய சாமான்களுக்கு என்ன செய்வார்கள்? இந்தப்பணத்தையாவது கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வா" என்றாள்.

ரெங்கராஜு நோட்டை வாங்காமல் "சாமான்க நிறைய இருக்குதுங்க; இப்பதான் சம்பளம் வந்துச்சு; வாங்கிப்போட்டேன். அதைப்பத்திக் கவலையில்லீங்க; சாமி புண்ணியத்திலே தங்கம்மாளும் பொழைக்க, ஒங்ககலியும் நீங்கினா அதுவே போதுங்க" என்றான். தமக்கு வந்த அத்தனை துன்பங்களிலும் தமக்கு உதவி செய்ய அவ்வளவு ஆழ்ந்த அபிமானமுள்ள ஒருமனிதன் தமக்கு மிகுதி யிருப்பதை நினைத்து பெருமகிழ்வடைந்து பேசமாட்டாமல் இருவரும் மௌனமாயிருந்தனர்.

அப்போது பெரிய கலெக்டர் துரையின் சேவகனொருவன் டிப்டி கலெக்டரிடம் வந்து மரியாதையாக வணங்கி நின்றுகொண்டு ஒருகடிதத்தைநீட்டினான். சாம்பசிவம் திடுக்கிட்டு நிமிர்ந்து "என்ன இது?" என்று கேட்க, அவன் "தொரெ குடுக்கச் சொன்னாங்க" என்றான். உடனே சாம்பசிவம் அதை வாங்கிப்பிரித்துப் படித்து அது குற்றப் பத்திரிகை என்று உணர்ந்தார்; முன் குறிக்கப்பட்ட மூன்று குற்றங்களும் அதில் விவரிக்கப்பட்டிருந்தன. பிறகு அதில் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"இம்மூன்று குற்றங்களையும் நீங்கள் செய்ததாய் நன்றாக ருஜுவாயிருக்கிறது. நீங்கள் மிகவும் பொறுப்புவாய்ந்த பெருத்த உத்தியோகஸ்தர். நாகனில்லாமல் உங்களுடைய கச்சேரியையும் அதிகார எல்லையையும் விடுத்துப்போவதும், பொய்க்கணக்குத் தயாரிப்பதும், துரைத்தனத்தார் பணத்தை அபகரிப்பதும் உத்தியோகத்தை இழந்து, சிறைச்சாலைக்குப் போகத்தக்க குற்றங்களாகின்றன;

இவற்றிற்காக உங்களை என் வேலையிலிருந்து விலக்கக்கூடாதென்பதற்கு முகாந்திரமெழுதி நாளை மாலைக்குள் அனுப்ப வேண்டியது. அனுப்பத் தவறுவீர்களானால் சொல்லிக் கொள்ள யாதொரு சமாதானமுமில்லை யென்றும், குற்றங்களைச் செய்ததாக நீங்கள் ஒப்புக்கொள்வதாயும் கருதப்படும். நிற்க, உங்களிடமுள்ள சர்க்கார் சீல், முகர் முதலியவற்றை கஜானா டிப்டி கலெக்டரிடம் ஒப்புவிக்க வேண்டியது."

என்று எழுதப்பட்டிருந்த பத்திரிகையைப் படித்தார்; அதன் கருத்தை கனகம்மாளிடம் கூறினார். அதற்குள் அந்தச் சேவகன் ஒரு புஸ்தகத்தைக் காட்டி அதில் கையெழுத்துச் செய்யும்படி கூறி பௌண்டன் பேனா (Fountain Pen)வை நீட்டினான். சாம்பசிவம் அதை வாங்கிக் கொண்டார். ஆனால் உடனே கையெழுத்துச் செய்யவில்லை. தாம் மறுநாள் எங்கிருக்க வேண்டுமோ, எப்பாடுபட வேண்டுமோ என்பதை அறியக் கூடவில்லை. ஆகையால் தமது சமாதானத்தை உடனே எழுதிக் கொடுத்து விட நினைத்தார். அருகிலிருந்த கடையில் ஒரு காகிதம் வாங்கிவரச் செய்து அதில் அடியில் வருமாறு மறுமொழி எழுதினார்:—

"ஐயா! தங்களுடைய உத்தரவைப் பெற்றுக்கொண்டேன். அதில் எழுதப்பட்டுள்ள விஷயங்கள் வியப்பையுண்டாக்குகின்றன. அதிற் குறிக்கப்பட்டுள்ள குற்றங்களில் ஒன்றையேனும் நான் செய்யவில்லை. முதலாவது பகுதியிற் கூறப்பட்டபடி நான் சென்னைக்குப் போனதே இல்லை. நான் போனதாகக் கிடைத்திருக்கும் சாட்சியம் உண்மையானதல்ல, இரண்டாவது பகுதியிற்கண்டபடி, நான் அனுப்பியது பொய்க்கணக்கன்று; அதிற் சொல்லப்பட்டபடி நான் அம்மாள் சத்திரம் முதலிய இடங்களிலேதான் முகாம் செய்திருந்தேன். மூன்றாவது பகுதியிற் குறிப்பிட்டபடி நான் நேற்று சென்னையிலிருந்தது உண்மையே; முந்திய நாள் நான் ரஜாக்கேட்டதும் தாங்கள் மறுத்ததும் உண்மையே. ஆனால் அதன் பிறகு நான் வேறு மனு எழுதி தாசில்தார் தாந்தோணிராயர் மூலமாய்த் தங்களுக்கு அனுப்பி, எனக்கு ரஜா அவசியம் தேவையாதலால், தயவுசெய்து உத்தரவை மாற்றி ரஜாக்கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன். அந்த மனுவைத் தங்களிடம் எடுத்து வந்த தாசில்தார், தாங்கள் எனக்கு ரஜாக்கொடுத்து விட்டீர்களென்று செய்தியனுப்பினர். என்னுடைய அவசரத்தில் அதை நம்பி நான் போய் விட்டேன். தாந்தோணிராயர் கண்ணியமான மனிதர்; பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர்; ஆதலால் அவருடைய சொல்லை நிஜமென்று மதித்தேன். அவரை நீங்கள் கேட்பீர்களானால், அவர் இதை உண்மையென்றே ஒப்புக்கொள்வார். அவர் ஒப்புகொள்ளாவிடில், இதன் பொருட்டு நான் எவ்வித சிட்சைக்கும் உடன்படுகிறேன். நிற்க, என் வீட்டிலிருந்த சீல், முகர் முதலியவை நேற்று என் வீட்டில் நடந்த கொள்ளையில் களவுபோய்விட்டன. ஆகையால் நான் ஒப்புக்கொடுக்கக்கூடிய சர்க்கார் சாமான்கள் ஒன்றும் என்னிடமில்லை. கச்சேரி வேலையை கஜானா டிப்டி கலெக்டரே பார்த்துக் கொள்ளலாம்" என்று மறுமொழி எழுதி அதை சேவகனிடம் கொடுத்து புஸ்தகத்திலும் கையெழுத்துச் செய்து சேவகனை அனுப்பினர்.

அப்போது மணி ஆறரை ஆயிற்று; ரயிலுக்குப் புறப்பட வேண்டிய காலம் வந்தது. அறையின் கதவு திறக்கப்பட்டது. மெத்தை, தலையணைகள் முதலியவற்றைக் கொண்ட ஒரு அடக்கமான நீண்ட தொட்டியில் தங்கம்மாள் விடப்பட்டிருந்தாள். நான்கு வேலைக்காரர்கள் அந்தத் தொட்டியோடு தங்கம்மாளை அசையாமல் தூக்கி வந்து, வாசலில் நின்ற ஒரு மோட்டார் வண்டியில் தொட்டியோடு வைத்தனர். சில மருந்துகளும் சாம்பசிவத்தினிடம் கொடுக்கப்பட்டன. உடனே அவர்கள் நால்வரும் வேறொரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டனர். இரண்டு வண்டிகளும் புறப்பட்டு மெல்லச் சென்று ரயிலடியை யடைந்தன. ஐந்து நிமிஷநேரத்தில் ரயிலும் வந்தது. வேலைக்காரர்கள் தங்கம்மாளை தொட்டியோடு கொணர்ந்து இரண்டாவது வகுப்பு வண்டியொன்றில் வைத்து விட்டுச் சென்றனர். சாம்பசிவம், வேலைக்காரருக்கும், மோட்டார் வண்டிக்கும் உரிய பணத்தைக் கொடுத்தனுப்பி விட்டு டிக்கட்டுகள் வாங்கிக்கொண்டார். அவரும் கனகம்மாளும் தங்கம்மாளிருந்த இரண்டாவது வகுப்பு வண்டியில் உட்கார்ந்து கொண்டனர். கிட்டனும், ரெங்க ராஜுவும் பக்கத்திலிருந்த மூன்றாவது வகுப்பு வண்டியில் உட்கார்ந்து கொண்டனர்; ரயில் புறப்பட்டது.

பெருந்தேவி அம்மாள் கலெக்டருக்கு ஏதோ கடிதமெழுதியிருக்கிறாளென்றும், அதைக் கொண்டே கலெக்டர் அவ்வாறு உத்

தரவு செய்திருக்கிறு ரென்றும், அதுவரையில், சாம்பசிவமும், கனகம்மாளும் நினைத்திருந்தனர். நிற்க, தந்தி உத்தரவு நாம் சென்னைக்கு வந்ததைக் குறித்ததோ அல்லது வேறு எந்த விடத்திற்காயினும் போனதைக் குறித்ததோ வென்பதும் அவர்களுக்கு அதுவரையில் சந்தேகமாயிருந்தது. இப்போது கிடைத்த உத்தரவில் அந்த சந்தேகம் நீங்கியது. இப்போது தாந்தோனிராயர்மீதும் சந்தேக முதித்தது. அவர் நம்மீது பகைமை கொண்டு அவ்வளவு தூரம் தீம்பு செய்யக்காரண மென்ன வென்று நினைத்துப் பெரிதும் வியப்படைந்தனர். முற்றிலும் தாந்தோனி ராயரால் செய்யப்பட்டதாகவும் தோன்றவில்லை; ஏனெனில் முதல் நடவை தாம் சென்னைக்குவந்து பெண்ணை அழைத்து வந்ததாக ஏற்பட்ட அபவாதம் தாந்தோனி ராயருக்குத் தெரியாது; ஒருகால் அது பெருந்தேவியால் எழுதப்பட்டிருக்கவேண்டும்; அல்லது தமக்கு வந்த தந்தியை தாந்தோனி ராயர் பார்த்திருக்கவேண்டும் என்று பலவாறு சிந்தித்தனர். இருவரும் ஆட்சேபனை செய்து ஒருவருக் கொருவர் சமாதானம் சொல்லிக் கொண்டனர்; லஞ்சம் வாங்கினதாக ஏற்பட்ட குற்றம் ஏன் இப்போது எடுபட்டுப்போனதென்பதும் விளங்க வில்லை. தமக்கு நேர்ந்த எதிர்பாராத எத்தனையோ கொடிய தீங்குகளில் சாம்பசிவத்திற்கு சிறைச்சாலைப் பிரவேசம் இல்லாமற் போனதைப்பற்றி இருவரும் சந்தோஷமும் ஒருசிறிது ஆறுதலுமடைந்தனர். தமது சொத்துக்கள் போனதற்காகவும், உத்தியோகம் போனதற்காகவும் அவர்கள் வருந்த வில்லை; தமது புத்திரியான மேனகா, தமக்கு அவமானம் உண்டாக்காத நிலைமையில், எவ்விதமான களங்கமு மற்றவளாகத் திரும்பி வரவேண்டுமே என்றும், தமது மருமகப்பிள்ளையும், தங்கம்மாளும் பிழைக்கவேண்டுமே யென்றும், மேனகா திரும்பவும் தனது கணவனுடன் சுகமாக வாழவேண்டுமே என்றும் பெரிதும் கவலையும் ஏக்கமும் கொண்டவர்களாய், தலையில் வைத்த கையும், தங்கத்தையே இமை கொட்டாமல் நோக்கிய விழியுமாக துயரமே வடிவெடுத்ததைப்போல அசைவற்று இருவரும் தொட்டிலிற் கருகில் உட்கார்ந்திருந்தனர்.

தங்கம்மாள் உயிருடனிருப்பவள்போலத் தோன்றவில்லை. கண்கள் மூடப்பட்டே இருந்தன. எவ்வித அசைவும், மூச்சும் தோன்றவில்லை. பெரிதும் அஞ்சிய கனகம்மாள் அப்போதைக் கப்போது தங்கம்மாளின் மார்பில் கையை வைத்து ஹிருதயம் அடித்துக் கொள்ளுகிறதோ வென்பதைப் பார்த்தாள். உடம்பில் சிறிது சூடு புலப்பட்டது. பிறகு கனகம்மாள் கரத்திலுள்ள நாடியைப் பார்த்தாள். நிற்கப்போகும் கடியாரத்தைப் போல நாடி நெடு நேரத்திற் கொருதரம் மெல்ல அடித்துக்கொண்டது. உயிரிருப்பதாக நினைத்து இருவரும் ஒருசிறிது துணி வடைந்தனர்.

இவர்கள் ரயிலில் இப்படி இருக்க, சாம்பசிவத்தின் மறுமொழிக் கடிதத்தை எடுத்துச் சென்ற, சேவகன் அதை பெரிய கலெக்டர் துரையிடம் சேர்த்தான். துரை கடிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்து மிகவும் ஆச்சரிய மடைந்தார்; குற்றப் பத்திரிகையிற் கண்ட மூன்றாவது குற்றத்திற்கு டிப்டி கலெக்டர் எழுதியிருந்த சமாதானத்தை இன்னொரு முறை படித்தார். முந்திய நாள் தாம் ரஜாக் கொடுக்க மறுத்த பிறகு சாம்பசிவம் திரும்ப ஒரு மனு எழுதி தாந்தோனிராயரிடம் கொடுத்ததாயும், அதை எடுத்து வந்த ராயர், ரஜா கிடைத்துவிட்டதாகச் சொல்லி யனுப்பினதாயும் சாம்பசிவம் எழுதியிருந்த விஷயம் துரையின் மனதைக் கலக்கியது. ஒருகால் அது உண்மையாயிருக்குமோ வென்று சந்தேகித்தார். அப்படி இருந்தால் ரஜாக் கொடுக்கப்பட்டதாக தாந்தோனி ராயர் பொய்யான செய்தி சொல்லியனுப்ப முகாந்தர மென்ன வென்று யோசித்தார். தாந்தோனி ராயர் சாம்பசிவத்தின்மீது கொண்ட அருவருப்பினால் ஒருகால் அவ்வாறு செய்திருப்பாரோ என்றும் நினைத்தார். உடனே தாந்தோனியை வரவழைத்து உண்மையை அறிந்து கொள்வதே நல்லதென்று நினைத்து, அவரை உடனே அழைத்து வரும்படி சேவகனை அனுப்பினார். சாலியமங்கலத்திலிருந்து அப்போதே வீட்டிற்கு வந்த ராயர் டிப்டி கலெக்டருடைய சங்கதிகளை தமது சேவகர்களிடம்கேட்டு அறிந்துகொண்டார். சாம்பசிவம் தங்கம்மாளை சென்னைக்கு அழைத்துச் சென்றது முதலிய செய்தி யனைத்தையும் உணர்ந்து "இன்றோடு ஒழிந்தான் சனியன்" என்று உல்லாசமாகச் சாய்மான நாற்காலியிற் படுத்தார். அப்போது கலெக்டருடைய சேவகன் வந்து துரை அழைத்து வரச்சொன்னதாகக் கூறினான். என்ன சம்பவித்ததோ, எந்த இரகசியம் வெளியானதோ என்று சந்தேகித்துக் கலங்கிய ராயர் உடனே எழுந்து உத்தியோக உடைகளை யணிந்துகொண்டு, ஓடோடியும் வந்து பங்களாவை யடைந்து துரைக்கு குனிந்து சலாம்செய்தார். துரை உடனே சாம்பசிவத்தின் சமாதானத்தின்மேல் தமக்குண்டான சந்தேகத்தைத்தெரிவிக்க, ராயர்

மிகவும் வியப்படைந்தவரைப் போலக் காண்பித்து "ஐயோ! இது முழுப்புரட்டா யிருக்கிறதே! நானாவது மனுவை வாங்கி வரவாவது! ரஜாக் கொடுக்க வில்லை யென்று அவரும் அவருடைய தாயாரும் தங்களை மிகவும் இழிவாகப் பேசினார்கள். சர்க்யூட் போவதாகச் சொல்லிவிட்டு பட்டணம் போகப்போகிறோமென்று சொன்னார்கள். எனக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை; நான் எழுந்து நேராகத் தங்களிடம் வந்து விட்டேன். பிறகு நாம் இருவரும் ரயிலடிக்குப் போய், அவர்கள் பட்டணத்திற்குப் போனதைப் பார்த்தோம். ரஜாக் கொடுக்கப்பட்ட தென்று அவருக்கு நான் சொல்லி யனுப்ப எனக்கு சாவகாசமேது? தாங்கள் ரஜாக் கொடுக்க மறுத்ததை நான் அறிந்தவன். அப்படி இருக்க, மறுபடியும், அவர் மனுக் கொடுத்தால், அதை வாங்கிக்கொண்டுவர நான்தான் துணிவேனா? இந்த மனிதன் ஜெகஜாலப் புரட்டனா யிருக்கிறான். கிட்ட நெருங்குவோர் பேரிலெல்லாம் பழிபோடுகிறானே! அப்பப்பா! இது பெருத்த மோசடியாயிருக்கிறதே! அவர் என்னிடம் மனுவும் கொடுக்க வில்லை; ரஜாக் கொடுக்கப்பட்ட தென்று நான் செய்தியு மனுப்ப வில்லை. உத்தரவானால், அப்படியே நான் காகிதத்தில் எழுதித் தருகிறேன். அதை ஆதாரமாக மற்ற காகிதத்தோடு சேர்த்துக் கொள்ளுங்கள்;" என்றார். "பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால் மெய் போலும்மே" என்றபடி, ராயர் அழுத்தந் திருத்தமாகச் சொன்னதைக் கேட்ட துரை அதை உண்மை யென்று நம்பி விட்டார். அவ்வாறே அவரிடம் ஒரு காகிதத்தில் வாக்கு மூலம் எழுதி வாங்கிக் கொண்டு, குற்றப் பத்திரிகையின் நகலொன்றையும், எல்லா வாக்கு மூலங்களையும், சாம்பசிவத்தின் சமாதானத்தையும் துரை சேர்த்துத் தைத்து, அத்துடன் ஒரு அறிக்கையும் எழுதி, யாவற்றையும் சென்னைத் துரைத்தனத்தாருக்கு அனுப்பி விட்டார். அந்த அறிக்கையில் சாம்பசிவம் தாமறிந்த வரையில் அயோக்கியதை, அகம்பாவம், பொய், சூது முதலியவற்றிற்கு இருப்பிடமானவரென்றும், கீழ் அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் நடத்தும் திறமையற்ற முட்டாளென்றும், முன் கோபத்தால் தாசில்தார் முதல் தலையாரி வரையிலுள்ள யாவரையும் அடித்தும் திட்டியும் கொடுமை செய்பவரென்றும், மேம்பட்ட பதவியான டிப்டிகலெக்டர் உத்தியோகத்தை வகிக்கும் கண்ணிய மற்ற அற்ப மனிதரென்றும், அக்கிரமங்களைச் செய்ய அஞ்சாதவரென்றும் [illegible] விரிவாக எழுதினார். அவர் லஞ்சம் வாங்குவதில் மகா சமர்த்தரென்றும், அதைப்பற்றி ஊர் முற்றிலும் பெருத்த புரளியாக விருப்பதாயும், ஆனால், அதை ருஜுப்படுத்தப் போதுமான அளவில் சாட்சிகள் இன்னம் முன்வர வில்லையென்றும் எழுதினார். அவர் வீட்டில் சமீபத்தில் நடந்த பயங்கரமான கொள்ளையையும், அவர் மனைவிக்கு நேர்ந்த பெருந் துன்பத்தையும் பற்றி, விரிவாக எழுதினார். இவ்வாறு அவருக்குநேர்ந்த விபத்துக்களைக்கருதி துரைத்தனத்தார் அவர்மீது கருணை கூர்ந்து, அவரை சிறைச்சாலைக்கு அனுப்பாமல், வேலையிலிருந்து விலக்குவதோடு விடவேண்டுமென்று பலமாகச் சிபாரிசு செய்து எழுதி அதை ராயருக்குப் படித்துக் காட்டினார். அவர் துரையின் காருண்ணிய குணத்தைக் குறித்துப் புகழ்ந்து பேசிவிட்டு விடைபெற்றுக் கொண்டு, வெளியிற்சென்று நிகழ்ந்த விஷயங்களை புனுகுமலைப் பிள்ளையிடம் கூறி மகிழ்வடைய நினைத்து ஓடியும் சென்றார்.

இத்துடன் அவரை விடுத்து, நாம், ரயிலிற் சென்ற அதிர்ஷ்டஹீனர்களான சாம்பசிவம், கனகம்மாள் முதலியோரைப் பின்பற்றிச் செல்வோம். அன்றிரவு முற்றிலும், அவ்விருவரும் கண்ணிமைக்காமலும், தலையைச் சாய்க்காமலும் ஒரே நிலையில் சுவரிலெழுதப்பட்ட உயிரற்ற சித்திரங்களைப்போல விருந்தனர். தங்கம்மாள் படுத்த சவம்போலவும், மற்றிருவரும் உட்கார்ந்திருந்த சவங்கள் போலவும் காணப்பட்டனரென்று சொல்வதைத் தவிர, வேறு கூறுதல் பொருந்தாது; அந்த இரவோ குறுகா இரவாயும், தூரமோ தொலையாத் தூரமாயு மிருந்து சகிக்கவொண்ணா வேதனைசெய்து அவர்களை வதைத்தன. மாறி மாறி, மேனகா, தங்கம்மாள், வராகசாமி மூவரையும் நினைத்து நினைத்து, அவர்களின் மனது தாமரையிலையின் நீரைப் போலத் தத்தளித்த வண்ணமிருந்தது. மயக்கத்தினால் அவர்களுடைய தேகம் கிருகிரென்று சுழன்று ஆகாயத்திற்குப் போய்த் திரும்புவதாய்த் தோன்றியது. அவர்களின் உடம்பிலிருந்த நீரெல்லாம் கண்ணீராய் வெளிப்பட்டுப் போனமையின், நாவறண்டு போயிற்று; தேகம் நெருப்பாய்ப்பற்றி எரிந்தது. இனி அழுது சிந்துவதற்குக் கண்ணீர் கிடையாமற் போனது. தலைநோய் ஒருபுறம் கொன்று கொண்டிருந்தது. இந்த கோரமான நிலைமையில் விடியற்காலம் ஐந்தரை மணிக்கு வண்டி செங்கற்பட்டை யடைந்தது. போர்ட்டர் தலையில் கையைவைத்துக் கொண்டு "செங்கல்பட்டு, செங்கல்பட்டு" என்று தூக்கத்தில் அழுது

கொண்டு வந்ததைக் கேட்டுத் தமது உணர்வைப் பெற்ற சாம்பசிவம் "சரி; நான்போய் விட்டு வருகிறேன். இன்று சாயுங்காலத்திற்குள் தவறாமல் பட்டணம் வந்து சேருகிறேன். பணம் கிடைக்க தாமசமானால் நாளைக்கு மத்தியானத்திற்குள் கட்டாயமாக வந்து விடுகிறேன். ஜாக்கிரதையாகக் கொண்டுபோய்ச் சேருங்கள். சர் சவலை ராமசாமி முதலியார் சத்திரத்தில் ஒரு அறையை வாடகைக்குப்பேசி அதில் ஜாகைசெய்து கொள்ளுங்கள். பணம் அடுத்த ரயிலில் வருவதாக டாக்டரிடம் சொல்லி, காரியத்தை முடிக்கும்படி செய்; இந்தப் பணத்தை யெல்லாம் நீ கொண்டுபோ; எனக்கு ரூபா இரண்டு போதும்; ஜாக்கிரதை ஜாக்கிரதை" என்று சொல்லி இரண்டு ரூபாயை எடுத்துக் கொண்டு மிகுதிப்பணத்தை அம்மாளிடம் கொடுத்து விட்டு வண்டியிலிருந்து கீழே இறங்கினார். கனகம்மாள் அவருக்கு ஆயிரம் முறை "ஜாக்கிரதை" சொல்லி யனுப்பினாள். கீழே இறங்கிய சாம்பசிவம் அடுத்த வண்டிக்குச் சென்று கிட்டனுக்கும் ரெங்கராஜுவுக்கும் சொல்லவேண்டுவதைச் சொல்லிக்கொண்டிருக்கையில் வண்டி சென்னையை நோக்கி நகர்ந்தது. வண்டியிலிருந்த தமது மனைவியின் வடிவத்திலேயே தமது முழுமனதையும் செலுத்தியிருந்த சாம்பசிவம் யாவற்றையும் மறந்து பைத்தியக்காரனைப்போல ரயில் போன திக்கைப் பார்த்துக் கொண்டே நின்றார்.

தங்கம்மாளை எடுத்துச் சென்ற வண்டியோ காலை ஏழரை மணிக்கு சென்னை எழும்பூர் வந்து சேர்ந்தது. உடனே, ரெங்கராஜு, சில கூலியாட்களை அமர்த்தி அவர்களின் உதவியால் தங்கம்மாளைத் தொட்டிலுடன் கீழே இறக்க, தொட்டில் மறைவான ஓரிடத்தில் வைக்கப்பட்டது. கூலிக்கு மோட்டார் வண்டியொன்றை அமர்த்தும்படி ரெங்கராஜு அங்கு மிங்கும் தலை தெறிக்க ஓடினான்; அதற்குள் நூற்றுக்கணக்கான பிரயாணிகள், அதென்ன காட்சியோ வென்று வேடிக்கை பார்க்க வந்து தொட்டிலைச் சுற்றிக் கூடிவிட்டனர். அதில் மயிலோ மடவன்னமோவெனப் படுத்திருந்த சுவர்ண விக்கிரகத்தைக் கண்டவுடன், ஜனங்களின் வியப்பும் திகைப்பும் மிகவும் பெருகின. அதிலிருந்த மாதரசி மூச்சுப்பேச்சின்றிக் கண் திறவாமல் படுத்திருந்ததையும், அவளது சுந்தரமேனியில் ஏராளமான இரணக் கட்டுகளிருந்ததையும் காண அவர்களின் மனதிளகியது; ஒவ்வொருவரும் கனகம்மாளிடம்கேட்டு நிகழ்ந்ததை யறிந்தனர்; உடனே கண்ணீர்விடுவோரும், "இந்த அம்மாளுக்கு என்ன காலகதி வந்ததப்பா" என்போரும், "ஐயோ பாவம்! அழகு வழிகிறதே! இந்த மகா லட்சுமியை அடிக்க அந்தக் கொலைகாரப் பயல்களுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?" என்போரும், அதைக் காணப் பொறாமல் ஏபோ லபோ என்று வாயிலடித்துக் கொண்டு "அட பாவி! இந்தப் பச்சைக் கிளியை இப்படிக் கொல்லுவார்களா! அவன் வீடு குட்டிச்சுவராய்ப்போக" என்போரும் "அந்த டாக்டரிடம் கொண்டு போங்கள்" என்போரும், "இந்த டாக்டரிடம் கொண்டு போங்கள்" என்போரும், "இந்த நிலைமையில் இவ்வளவு தூரம் கொண்டுவந்திருக்கக் கூடாது" என்போரும், தாம் ஒருகால் கச்சேரிக்கு சாட்சியாகப்போக நேரிடுமோவென்று அஞ்சி, நெடுந்தூரத்திற் கப்பாலிருந்தபடியே முகத்தை வேறுபக்கமாய்த் திருப்பிக் கொண்டு குடுகுடென்று போவோருமா யிருந்தனர். அந்தச்சமயத்தில் தமது அதிகாரத்தைக் காட்டினால் ஏதாவது பணம் பெயருமென்று நினைத்து ரயில்வே சிப்பந்திகளிற் பழைய பெருச்சாளிகளான சிலரும் போலீசாரும் "இங்கே என்ன இவ்வளவு கூட்டம்? போங்கள், போங்கள். தொட்டிலை ஏன் இங்கே வைத்திருக்கிறீர்கள்? சீக்கிரம் எடுத்துக் கொண்டுபோங்கள். இங்கே வைக்க வேண்டாம்" என்று அதட்டிப் பிணம் பிடுங்கிப் பருந்தைப்போல வட்டமிட்டனர். ஐந்து நிமிஷத்தில் ரெங்கராஜு மோட்டார் வண்டியொன்றில் வந்து சேர்ந்தான்; பரோபகாரகுணம் நிறைந்த ஜனங்கள் தொட்டிலைத் தூக்கிவைக்க "நான், நீ" என்று முன்னுக்கு வந்தனர். அடுத்த நிமிஷம் தொட்டில் மோட்டாரில் வைக்கப் பட்டது. மற்ற மூவரும் அதிலேயே தொற்றிக்கொள்ள வண்டி மெல்ல நகர வாரம்பித்தது. தொட்டில் அசையுமோவென்று அஞ்சிய ரெங்கராஜு "மெதுவாகப்போகட்டும் மெதுவாகப் போகட்டும்" என்று நிமிஷத்திற்கு நிமிஷம் வண்டிக்காரனிடம் சொல்லிக்கொண்டே யிருந்தான். கால் நாழிகை நேரத்தில் வண்டி புரைசைப்பாக்கத்திலுள்ள டாக்டர் **வில்லியம்ஸ் துரை** வீட்டின் வாசலில் வந்து நின்றது.

வில்லியம்ஸ் என்னும் பெயரைக் கொண்ட அந்த துரை சுத்தமான ஐரோப்பியரல்லர். ஐரோப்பியத் தந்தைக்கும், இந்தியத்தாய்க்கும் பிறந்தவர்களான யூரேஷிய ரென்னும் வகுப்பைச் சார்ந்தவர். அந்த வகுப்பினரை ஜனங்கள் சட்டைக்காரரென்று குறிப்பது வழக்கம். வில்லியம்ஸ் துரையிடத்தில் இந்திய அம்சத்தைக் காட்டிலும் ஐரோப்பிய அம்சம் அதிகமாயிருந்ததாகையால், அவர் இரணவைத்

தியத்தில் மகா நிபுணராயிருந்தார். பணம் வாங்குவதிலோ அதற்கு மேல் நிபுணர். அவருடைய பிடிவாதத்தைக் குரங்கின் பிடிக்கே ஒப்பிடவேண்டும்; அவர் எதைச் சொன்னாலும், அதுவே முடிவு. யுகமே மாறினாலும், ஜெகமே பிறழ்ந்தாலும், அவருடைய தீர்மானம் மாத்திரம் மாறாது. பிறர், அதைப்பற்றி ஏதாயினும் ஆட்சேபனை கூறினால், அவருக்கு உடனே மூக்கின்மேல் கோபம் பிறந்துவிடும். எழுந்து அடிக்கப்போய் விடுவார். குரங்கினிடம் பூமாலை யகப்பட்டுக்கொண்டதைப் போல, அவரிடம், அந்த அருமையான வித்தையகப்பட்டுக் கொண்டு விழித்தது. ஜனங்கள் அவரிடம் வைத்தியம் செய்து கொள்ளவருவதற்கு அஞ்சி நடுங்குவார்கள். என்றாலும், இரண வைத்தியத்தில், அவரை விட்டால், வேறுகதி யில்லாமலிருந்தது. இத்தகைய மனிதரான வில்லியப்ஸ் துரைவீட்டின் வாயிலில் மோட்டார் வண்டி வந்து நின்றது. உடனே கிட்டனும், ரெங்கராஜுவும் வண்டியினின்றிறங்கி உட்புறம் நுழைந்து, கடிதத்தை துரையிடம் நீட்டினர். துரை மூக்குக்கண்ணாடி பளபளவென்று மின்னிய தமது முகத்தால் அவர்களை ஏற இறங்கப்பார்த்தார். பிறகு கடிதத்தை வாங்கி அதை அலட்சியமாகத் திறந்து படித்தார்; ஆனால் அவருடைய முகத்தில் எவ்வித மாறுபாடேனும், இறக்கமேனும், துடிதுடிப்பேனும், கவலையேனும் காணப்படவில்லை. கடிதத்தை அருகிலிருந்த மேஜையின்மீது அலட்சியமாக எறிந்தார். வேறு திசையில் தமது முகத்தை திருப்பிக்கொண்டு “அடே நடேசா! வண்டி தயாராக இருக்கிறதா?” என்றார். அவருடைய வேலையாளான நடேசன் “தயாராயிருக்கிறது; புறப்படலாம்” என்றான். உண்மையில், அவர் அப்போது ஒரு அவசரகாரியத்தின் பொருட்டு வெளியிற்போக ஆயத்தமாக விருந்தார். அந்த சமயத்தில் நம்மவர் வந்து தோன்றியது அவருக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கியது. என்றாலும், தஞ்சையிலிருந்து வந்த கடிதத்தை மதித்துத் தமது கோபத்தை ஒருசிறிது அடக்கிக்கொண்டு கிட்டனை நோக்கி “அந்த அம்மாள் எங்கே இருக்கிறாள்?” என்று கேட்டார்; வாயிலில் மோட்டாரில் இருப்பதாக அவன் கூற, உடனே அழைத்து வரும்படி துரை உத்தரவளித்தார். அடுத்த நிமிஷம், தங்கம்மாளிருந்த தொட்டிலை கிட்டன், ரெங்கராஜு, கனகம்மாள், மோட்டார் வண்டிக்காரன் ஆகிய நால்வரும் தூக்கிக் கொண்டு வந்து உட்புறத்தில் வைத்தனர். உடனே துரை அவர்கள் நால்வரையும் வெளியிலிருக்கச் செய்து கதவை மூடித்தாளிட்டுக் கொண்டு கால் நாழிகை நேரம் தங்கம்மாளின் உடம்பைச்சோதனை செய்து பார்த்தார். தமது சிப்பந்தியை அழைத்து, காயங்களை அலம்பிச் சுத்திசெய்து மருந்துகள் வைத்துக்கட்டச் செய்தார். ஏதோ ஒருவகையான திராவகத்தைத் தயாரித்து மூக்கின் வழியாகப் பீச்சாங்குழல் வைத்து அம்மருந்தை உட்புறம் செலுத்தினார். இன்னம் பல முக்கியமான சிகிச்சைகளைச் செய்தார். வெளியிலிருந்த கிட்டன் முதலியோரை உள்ளே வரவழைத்தார்; தங்கம்மாள் முன்னிருந்த மாதிரியே தொட்டிலில் எவ்விதமாறுபாடுமின்றிக்கிடந்தாள். துரை அவர்களைப்பார்த்து “சரி; பணமெங்கே?;’ என்றார். உடனே கனகம்மாள் “நாங்கள் மிகவும் அவசரமாக முன்னால் வந்து விட்டோம். இதோ அடுத்த வண்டியில், இந்தப்பெண்ணின் புருஷன் பணத்தோடு வருவார். அவசரமாகச் செய்ய வேண்டிய காரியங்கள் நடக்கட்டும்; பணத்தைப்பற்றிக் கொஞ்சமும் யோசனை செய்ய வேண்டாம். இதோ வருகிறது” என்றாள். அதைக்கேட்ட துரைக்குப் பெருத்தகோபம் மூண்டது. “நல்ல காரியம் செய்தீர்கள்! பெண்ணின் புருஷனில்லாமலா நீங்கள் மாத்திரம் வந்தீர்கள்? மார்பைக் கீறி ஆபரேஷன் செய்யவேண்டும். இன்று சாயுங்காலத்துக்குள் இதை சரிப்படுத்தாவிட்டால், உயிர் போய்விடும்; உடம்பு மிகவும் அபாயகரமான நிலைமையிலிருக்கிறது. எலும்புத்துண்டுகள் ஹிருதயத்தில் குத்திக் கொண்டிருக்கின்றன; ஹிருதயத்திலிருந்து வரும் இரத்த ஓட்டம் தாறுமாறாயிருக்கிறது. இன்று சாயுங்காலத்துக்குள் இரத்த ஓட்டமே நின்றுபோம்; உடனே மார்பைக்கீறி எலும்பை எடுக்க வேண்டும்; மார்பைக் கீறுவதில், உயிர்போனாலும் போய்விடும். அப்படி உயிர் போனால் என்னை உத்தரவாதியாக ஆக்குவதில்லையென்று பெண்ணின் புருஷன் முதலில் எனக்குப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். பணத்தையும் உடனே கொடுக்க வேண்டும். பெண்ணின் புருஷனில்லாமல் நீங்கள் ஏன் வந்தீர்கள்? எடுத்துக்கொண்டு போங்கள்’ என்று ஆத்திரத்தோடு மொழிந்தார். கனகம்மாள் திகைப்பும் அச்சமுமடைந்து “ஐயா! அவர் அடுத்த வண்டியில் அவசியம் வருவார். நான் இந்தப் பெண்ணின் மாமியார்; அவசரமாகக் காரியம் ஆகவேண்டுமானால், நான் பத்திரம் எழுதிக்கொடுக்கிறேன்; தயவு செய்து வேலையை நடத்துங்கள்” என்று நயந்து கூறி வேண்டிக்கொ

ண்டான். துரைக்குப் பொறுக்கக்கூடாத ஆத்திரம் உண்டாயிற்று; "Damn nonsense! you talk bloody rot. இதென்ன புத்தியில்லாத பேச்சு! நீ பத்திரம் எழுதிக்கொடுத்தால், அது குப்பையில் போடத்தான் உபயோகப்படும்; அவர் எழுதிக் கொடுக்காவிட்டால் நான் ஆபரேஷன் செய்யத் தயாராக இல்லை. சாயுங்காலத்துக்குள் அவரையும் அழைத்துக்கொண்டுவந்து சேருங்கள். நான் அவசரமாக இப்போதுவெளியில்போகவேண்டும்'' என்றுகண்டிப்பாகக்கூறிவிட்டு, ஏதோ ஒருவகை மருந்தைத் தயாரித்து, அதைத் தங்கம்மாளின் மூக்கின் வழியாக உட்புறம் செலுத்திவிட்டு " சரி எடுத்துக்கொண்டு போங்கள் " என்று மூர்க்கமாகப்பேசி விட்டு வெளியில் நடந்தார்; அவரிடம் இனி நயப்பதில் பயனுண்டாகாதென்பது நன்றாக விளங்கியது. உடனே தொட்டில் வண்டிக்குப் போய்ச்சேர்ந்தது. அதே காலத்தில் தமது வண்டியில் ஏறிக்கொண்டிருந்த துரை கிட்டனைப் பார்த்து "ஏன் ஐயா நீங்கள் எந்த இடத்தில் இறங்கி இருக்கிறீர்கள் ?'' என்று கேட்டார். கிட்டன் " சர் சவலை ராமசாமி முதலியார் சத்திரத்தில் இறங்கப்போகிறோம்." என்றான். அதைக்கேட்டுக் கொண்ட துரை அலட்சியமாகப் போய்விட்டார்; மோட்டார் வண்டி சர் சவலை ராமசாமி முதலியார் சத்திரத்திற்குச் சென்றது. அதில் வசதியான இரண்டு அறைகள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன. அவ்விடத்தில் தொட்டில் வைக்கப்பட்டது. கனகம்மாள், கிட்டன் ரெங்கராஜு ஆகிய மூவரும் என்ன செய்வது என்பதை அறியமாட்டாமல் ஏங்கி பெருங்கவலையால் பீடிக்கப்பட்டு மூலைக்கொருவராக உட்கார்ந்துவிட்டனர். எவருக்கும் சாப்பாட்டிலும், வேறு எந்த விஷயத்திலும் புத்தி செல்லவில்லை; அன்று சாயுங்காலத்திற்குள் சாம்பசிவம் வரவேண்டுமே என்றும், அவர் பணத்துடன் வரவேண்டுமே என்றும் ஆவல்கொண்டு ஓய்ந்து உட்கார்ந்துவிட்டார்கள். அப்போது கிட்டன் " ஏன் பாட்டீ ! இந்த டாக்டர் கொஞ்சமும் இரக்கமற்ற பாவியாயிருக்கிறானே; வேறு யாரிடத்திலாயினும் கொண்டுபோனால் என்ன?'' என்றான்.

உடனே கனகம்மாள் "சேச்சே! அது பிசகு; இந்த ஆபரேஷன் செய்வதில் இவரைப்போல சாமர்த்தியமாகச்செய்பவர் எவருமில்லையாம். இவருக்கு சிபாரிசுக்கடிதம் கொண்டு வந்தோம்; இவரே இவ்வளவு அலட்சியம் செய்கிறாரே ; இன்னும் மற்றவர்கள்

வாயைத்திறந்து பேசக்கூடமாட்டார்கள்; இருக்கட்டும் ; சாயுங்காலத்துக்குள் அவன் வந்து விடுவான்; துரையும் ஏதோ மருந்து கொடுத்திருக்கிறாரே ; பார்ப்போம் '' என்று கூறினாள். அன்று பகற்பொழுது முற்றிலும், சாம்பசிவம் இந்த வண்டியில் வருவார், அடுத்த வண்டியில் வருவார் என்று சொல்லிச் சொல்லி வழி பார்த்துக் கொண்டே இருந்தனர். "பார்க்" என்னும் ரயில் ஸ்டேஷன் சத்திரத்திற்குப் பின்புறத்திலிருப்பதால், ஒவ்வொரு வண்டியும்வந்த போதெல்லாம், ரெங்கராஜு ஸ்டேஷனுக்குப் போய்விட்டு, ஏங்கிய முகத்துடன் திரும்பினான். இரவும் வந்தது; கனகம்மாள், கிட்டன், ரெங்கராஜு ஆகிய மூவரும் நெருப்பின்மேற் புழுவெனத் துடிக்கின்றனர். கைகளைப் பிசைந்து கொள்ளுகின்றனர். அன்று மாலைக்குள் ஆபரேஷன் செய்யாவிட்டால், தங்கத்தின் உயிர் நில்லாதென்று டாக்டர் சொன்னது அவர்கள் செவிகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருந்தது. எந்த நிமிஷத்தில் அவளுடைய உயிர் நின்று போய் விடுமோவென்று அஞ்சித் தவித்தனர். அப்போதைக் கப்போது தங்கம்மாளின் நாடியைக் கனகம்மாள் பிடித்துப்பார்த்தாள்; வரவர நாடி தடதடவென்று அடித்துக்கொண்டது; மரணகாலத்திலிருப்போரின் நாடி அவ்வாறு விசையாக அடித்துக்கொள்வது வழக்கமென்று கனகம்மாள் கேள்வியுற்றிருந்தாளாதலின், அவளது மனது பட்டபாட்டையும், அதன் தவிப்பையும் விரித்துக்கூறுதல் எளிய காரியமல்ல. அவளனுபவித்த துன்பத்தை நரகவேதனையென்றே சொல்லவேண்டும். அந்த நிலைமையில் பொழுதும் விடிந்தது; சாம்பசிவமோ வருவதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு ரயிலும் மோசம் செய்துவிட்டது. ஆனால் தங்கம்மாளின் உயிர் இன்னம் தேகத்தில் நின்றது. இனி தாமதமின்றி ஆபரேஷன் செய்யாவிடில் அன்று தங்கம்மாளின் உயிர் போவது நிச்சயமென்று கனகம்மாள் நினைத்தாள். அன்றுமாலைக்குள் தங்கம்மாள் பிழைப்பாளோ, அல்லது பட்டணத்து மண்ணுக்கு இரையாவாளோ என்று நினைத்து நினைத்து மனமாழ்கினாள். தங்களுடைய எதிர்காலத்து சந்தோஷமும், துயரமும் அந்த ஒருநாளிலேதான் தெரியவிருந்ததாக வெண்ணி யெண்ணிப் பரிதபித்தாள். அந்த நிலைமையில் கதவைத் திறந்துகொண்டு டாக்டர் வில்லியம்ஸ் உள்ளே நுழைந்தார். இவர்கள் மூவரும் திடுக்கிட்டெழுந்து நின்றனர். கிட்டன் வந்தனம் செலுத்தினான். உடனே டாக்டர் "நேற்று சாயுங்காலமே இந்தப்பெண்ணின் புருஷன் வருவ

தாகப் பொய் சொன்னீர்களே! என்னை ஏமாற்றத்தானே பார்த்தீர்கள்" என்றார். அதற்கு மறுமொழிகூற எவருக்கும் ஒன்றுந்தோன்றவில்லை. சிறிது தத்தளித்த பிறகு கனகம்மாள் "ஐயா! எங்களுக்கு இது பொல்லாத காலமாயிருக்கிறது. நினைக்காத ஆபத்துகளெல்லாம் வருகின்றன. பணத்துடன் நேற்று சாயுங்காலத்திற்குள் வருவதாகச் சொன்ன பையன் வரவில்லை. அவனுக்கு என்ன துன்பம் சம்பவித்ததோ தெரியவில்லை. அவனைத் தேடிப்பார்த்து அழைத்துவரும்படி மனிதரை அனுப்புகிறேன். பெண்ணுக்கு அதற்குள் உயிர்போய் விடுமோவென்று பயமாக இருக்கிறது. பெரியமனதோடு நீங்கள் இவளுடைய உயிரைக் காப்பாற்றவேண்டும். உங்களுக்கும், உங்களுடைய பெண்டு பிள்ளைகளுக்கும் ஆயிரங்கோடி புண்ணியம் உண்டாகும். ஈசுவரன் உங்களைக் காப்பாற்றுவார். நாங்கள் உங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றி விடமாட்டோம். நாங்கள் நன்றி கெட்டவர்களன்று. தயவு செய்யுங்கள்." என்று கூறி மன்றாடினாள். அதைக் காதில் வாங்காதவரைப் போலத் தோன்றிய துரை தொட்டிலினருகிற் சென்று தங்கம்மாளின் நாடி முதலியவற்றின் நிலைமையை ஆராய்ந்து பார்த்தார். அதற்குள் அவருடைய வேலைக்காரனொருவன் வந்து தங்கம்மாளின் கட்டுகளை அவிழ்த்து விட்டு, காயங்களை அலம்பி மருந்து வைத்துத் திரும்பவும் கட்டினான். உடனே துரை கனகம்மாளைப் பார்த்து "என்னவோ தெய்வச் செயலாக உயிர் இது வரையில் நின்றிருக்கிறது. நேற்று சாயுங்காலத்திற்குள் பிராணன் போயிருக்கவேண்டும். நான் உள்ளுக்குக் கொடுத்த மருந்தின் பலத்தினால் உயிர் நிற்றது, அதே மருந்தை இப்போது ஒருமுறை உள்ளே செலுத்துகிறேன். அந்த மனிதர் வந்து பத்திரம் எழுதிக்கொடுத்துப் பணமும் செலுத்தாமுன் ஆப்ரேஷன் செய்வது என்மீது குற்றமாகும். ஆகையால் ஒரு ஆளை அனுப்பி அவரை உடனே வரவழையுங்கள்" என்று சொல்லிவிட்டு, முதல்நாள் மூக்கின் வழியாக உட்செலுத்திய மருந்தை இன்னமொருமுறை உட்புறம் செலுத்திவிட்டு எழுந்து சென்றார்; கதவிற் கருகில் போனவர் முகத்தைத் திரும்பி "அலட்சியமாயிருந்தீர்களானால், இன்று சாயுங்காலத்திற்குள் உயிர் போய்விடும். கண்டிப்பான விஷயம்; விளையாட்டல்ல, ஜாக்கிரதை; நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன்; பிறகு என்மேல் குறை சொல்லக்கூடாது. என்னுடைய மருந்தில் கூட

இனிமேல் உயிர் நிற்பது சந்தேகம்" என்று சொல்லிவிட்டு வெளியிற் போய் விட்டார்.

துரையின் விஷயத்தில் கனகம்மாளுக்கு இருந்த அருவருப்பு ஒருவாறு குறைந்தது. முதல்நாள் இரக்கமற்றவராய்த் தோன்றினும், அவர் அன்று தமது இருப்பிடத்திற்கு வந்ததைப் பற்றி சந்தோஷமடைந்தாள். ஆபரேஷனைத் தவிர, மற்ற சிகிச்சைகளை யெல்லாம் அவர் செய்ததை நினைத்து, அவர் முற்றிலும் இரக்கமில்லாத மனிதரல்லரென்றும், மனிதரிடத்திலுண்டாம் தயையை அவர் வெளியில் காட்டாமல் காரியத்தைச் செய்பவரென்றும், பத்திரமில்லாமல் ஆபரேஷன் செய்ய அவர் உண்மையில் அஞ்சுகிறாரென்றும் நினைத்தாள். அன்றைப் பகலுக்குள்ளாயினும் சாம்பசிவம் வந்து விடுவாரென்று நிச்சயமாக நினைத்திருந்தாள்; அவர் வரவில்லை. ரெங்க ராஜு "அம்மா! இது என்னவோ சந்தேகமா யிருக்கிறது. நான் உடனே ரயிலேறி செங்கற்பட்டிற்குப் போய் எஜமானை அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்றான். கனகம்மாள் அதை அமோதித்து அவனை அடுத்த வண்டியில் செங்கற்பட்டிற்கு அனுப்பினாள். அவன் சென்ற ரயில் பகல் மூன்று மணிக்கு செங்கற்பட்டை யடைந்தது. எதிர்ப்பட்ட வண்டிகளில் அவர் வருகிறாரோ வென்று எச்சரிக்கையாகப் பார்த்துக்கொண்டே ரெங்க ராஜு சென்றான். எந்த வண்டியிலும் சாம்பசிவம் காணப்படவில்லை. செங்கற்பட்டிலிறங்கி, ரயிலடியில் ஜனங்கள் தங்குமிடங்களி லெல்லாம் அவன் தேடினான். பிறகு ஒரு குதிரை வண்டியை அமர்த்திக்கொண்டு அவர்களுடைய சிற்றூருக்கு மாலை ஆறுமணிக்குப் போய்ச் சேர்ந்தான். கனகம்மாளால் குறிக்கப்பட்ட நீலகண்டம் செட்டியாரிடம் சென்று டிப்டி கலெக்டர் சாம்பசிவையங்கார் பணம் வாங்க வந்தாராவென்றும் அவர் எங்கிருக்கிறாரென்றும் விசாரிக்க, செட்டியார் "நீ யார்?" என்று கேட்டார். "நான் அவருடைய சேவகன். அவரை அவசரமாக அழைத்துக்கொண்டு போகவேண்டும்" என்றான் ரெங்க ராஜு; உடனே செட்டியார் "அவர் பணம் வாங்கிக்கொண்டு நேற்றைக்கு சாயுங்காலமே புறப்பட்டுப் பட்டணம் போய்விட்டாரே! நீ எங்கிருந்து வருகிறாய்?" என்றார். அதைக் கேட்ட ரெங்க ராஜு பெருந்திகைப்படைந்தவனாய் "நான் பட்டணத்திலிருந்துதானே வருகிறேன். அவர் அங்கு வரவில்லையே. இங்கிருந்து எத்தனை மணிக்குப் புறப்பட்டார்?" என்றான். "அவர் சாயுங்காலம் ஐந்து மணிக்கு குதிரை வண்டி

வைத்துக்கொண்டு போய்விட்டார். பட்டணத்துக்குப் போவதாகச் சொன்னார்; எங்கே போனாரோ எனக்குத் தெரியாது” என்றார் செட்டியார். ரெங்க ராஜுவின் மனதில் இன்னதென்று விவரிக்கக் கூடாத பல சந்தேகங்களும், திகிலும், கவலையும் குடி கொண்டன. சாம்பசிவம் எங்கு சென்றாரோ, அவருக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ, குதிரை வண்டியில் போகும்போது வழிப்பறி ஏதேனும் நடந்திருக்குமோ வென்று பலவாறு நினைத்து, வந்த வண்டியிலேயே ஏறிக்கொண்டு செங்கற்பட்டை நோக்கித் திரும்பினான்.

கனகம்மாள் முதலியோருடன் வந்து முந்திய நாள் விடியற் காலையில் செங்கற்பட்டிலிறங்கிய சாம்பசிவம் எங்குச் சென்றார், என்ன செய்தார் என்பனவற்றைக் கவனிப்போம். தங்கம்மாளை எடுத்துச் சென்ற வண்டி மறைந்து போன பின்னரும் நெடுநேரம் வரையில் ஒரே நிலையில் நின்றிருந்த சாம்பசிவத்தின் மனதில், தாம் சீக்கிரம் போய்ப், பணம் வாங்கி வராவிடில், தமது மனைவியின் ஆபரேஷன் ஒழுங்காய் நடைபெறாதென்னும் நினைவு தோன்றியது. விரைவில் தமது ஊருக்குப்போய்ப் பணத்தை வாங்கி வரவேண்டுமென்னும் ஆவலைக்கொண்டவராய் ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்து, குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு பதினைந்து மயிலுக்கப்பா லிருந்த பகற்கோள்ளைப்பாக்கம் என்னும் சிற்றூரை யடைந்தார். அவ்வூரில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்த நீலகண்டம் செட்டியாரிடம் சென்று தமதுவரலாறுகளைச் சுருங்கக்கூறி தமக்கு ரூபா ஆயிரம் அப்போதே வேண்டுமென்றும் ரூபா மூவாயிரம்பெறத்தக்க தமதுவீட்டை அடமானம் வைப்பதாயும் தெரிவித்தார். அந்த நீலகண்டம் செட்டியார் மேலும் கீழும் பார்த்தார்; மொட்டைத்தலையைத் தடவிக்கொண்டார். மிகவும் அமர்த்தலாகத் திண்டில் சாய்ந்த வண்ணம் “பணமாவது காசாவது! இப்போது காலம் இருக்கிற இருப்பு உங்களுக் கென்ன தெரியும். பணத்தைக் கண்ட மூளியாரையா? எங்கேயும் இப்ப சுணக்கமா இருக்குது; பணம் பேருகிறது குதிரைக் கொம்பா யிருக்குது எளவு; ஒங்களுக்கு ஒடனே வேணும். எங்களூட்டுலே பணம் காச்சா தொங்குது. இப்போ சரிப்படாதுங்க. அடுத்தமாஷம் சிங்கப்பூரிலே யிருந்து ஊண்டியல் வருதுங்க; அதுக்குப் பொறவாலே வாங்க; பாத்துக்கிடலாம்” என்றார். அதைக்கேட்ட சாம்பசிவம் தமது அவசரத்தை மேன்மேலும் திரும்பத் திரும்ப விளக்கிச் செட்டியாரிடம் கெஞ்சி மன்றாடினார். அதிகமான வட்டி தேவையான போதிலும் கொடுப்பதாகக் கூறினார். உடனே செட்டியார் “இதென்ன ஐயா எளவு தொல்லையாப் போச்சு, பணமில்லேன்னா விடமாட்டேங்குறீரே! அந்த முள்ளிக் காயத்தனெ வூட்டுக்கு எவன் ஐயா ஆயிர ரூபா கொடுப்பான். மூணுகாசு கூட அது தாளாதையா? வேலெயெப் பாரையா” என்றார். உடனே சாம்பசிவம் வீடு, நிலம் முதலிய எல்லா வற்றையும் அடமானம் வைப்பதாகவும் இரண்டு வட்டி கொடுப்பதாயும் ஒப்புக்கொள்ள, செட்டியார், அரை மனதோடு இணங்கினார். பிறகு அதற்குத் தேவையான தஸ்தாவேஜு எழுதப்பட்டது. அதற்கு நான்கு மயிலுக்கப்பாலுள்ள சப்ரிஜிஸ்டரார் கச்சேரியில் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. மாலை 5-மணிக்கு செட்டியார் ரூபா ஆயிரத்தையும் பணமாக எண்ணிவிட்டார், சாம்பசிவம் அதை எடுத்துப் பெருத்த மூட்டையாகக் கட்டிக்கொண்டு குதிரை வண்டியில் உட்கார்ந்தார். இரவு ஒன்பது மணிக்கு வண்டி செங்கற்பட்டுக்கு வந்து சேர்ந்தது. கீழே இறங்கிப் பணமூட்டையையும் கையிலெடுத்துக் கொண்டு, ரயில் ஸ்டேஷனுக்குள்போய், சென்னைக்குப்போக டிக்கட்டுக் கேட்டார். உள்ளே இருந்த குமாஸ்தா சாம்பசிவையங்காரைப் பார்த்து நகைத்து ஏளனம் செய்து “அதோ அடுத்த அறையில் கொடுக்கிறார்கள்போய் வாங்கிக் கொள்ளும்.” என்றார். அதை உண்மையென்று நம்பிய சாம்பசிவம் அடுத்த அறைக்குப்போய்ப் பார்க்க, அங்கு மனிதரே காணப்படவில்லை. அதில் விளக்குகள், எண்ணெய், கயிறுகள், கடப்பாறைகள், முதலிய பலவகைப்பட்ட சாமான் நிறைந்திருந்தன. அதைப்பார்த்து விட்டுத் திரும்பி வந்து ஸ்டேஷன் மாஸ்டரிருந்த அறைக்குப் போய்க் கேட்க, அவர் “இனிமேல் நாளைக்குத்தான் வண்டி. சென்னைக்கு விடியற்காலம் ஐந்தரை மணிக்கு வண்டி வரும்” என்று சொல்லிவிட்டு ஜன்னல்கள், கதவு முதலிய வற்றை மூடி உட்புறம் தாளிட்டுக் கொண்டார். அதைக்கேட்ட சாம்பசிவம் தவிக்கிறார், உடனே இரண்டு இறகுகள் தமது புஜங்களில் முளைத்தால், அப்போதே பறந்துபோய் விடலாமே என்று நினைக்கிறார். அப்போது தமது மனைவி, உயிருட னிருக்கிறாளோ; அல்லது விண்ணுலக மடைந்தனளோ, டாக்டர் துரை மார்பைக் கீறி எலும்புகளை எடுத்தாரோ இல்லையோ என்று பலவாறு எண்ண மிட்டார். குதிரைவண்டியில் ஏறிப்போகலாமாவென்று நினைத்து வண்டிக்காரர்களிடம் கேட்டார். நெடுந்தூரமாதலால், ஒருவரும் வரத்துணியவில்லை. அவ்வூரில் வாட

கைக்கு மோட்டார் வண்டி அகப்படுமோ என்று விசாரித்தார். அகப்படாது என்னும் மறுமொழி கிடைத்தது. என்ன செய்வார்! இன்னதைத்தான் செய்வதென்று அறியமாட்டாமல் நெடுநேரம் அங்கு தமது பளுவான மூட்டையைத் தூக்கிக் கொண்டே அலைந்தார். விடியற்காலம் ஐந்தரைமணி வரையில் ஸ்டேஷனில் இருப்பதைத் தவிர வேறு வழி எதுவும் தோன்றவில்லை. அவர் மூட்டையை ஒரு கையிலிருந்து இன்னொருகைக்கு மாற்றும்போது ரூபாய்கள் கலகலவென்று ஓசை செய்ததைப்பலர் கேட்டனர். யாரோ பெரிய மனிதர் பெருந்த-பண மூட்டையுடன் ஏதோ வியாபாரத்தின் பொருட்டுச் செல்கிறாரென்று நினைத்துக் கொண்டனர். கடைசியில் சாம்பசிவம், கீழே உட்கார்ந்து கொள்ள நினைத்தார். அவர் முதல் நாட்பகலில் போஜனம் செய்தவர். மூன்று நாட்களாய்க் கண்களையே மூடியறியாதவர்; பெண்ணையும், மனைவியையும், மருமகப்பிள்ளையையும், நினைத்து நினைத்துச் சோர்வடைந் திருந்தவர். அவருடைய மூளை முற்றிலும் குழம்பிப் போயிருந்தது. அப்போதைக்கப்போது அவருடைய தெளிந்த அறிவும் பிறழ்ந்து கொண்டே வந்தது. தேகமும் மனமும் கட்டினில் நில்லாமல் தவித்தன. அந்த நிலைமையில் மூன்றாவது வகுப்பு வழிப்போக்கர்கள் தங்கும் இடத்திற்குச் சென்று கீழே உட்கார்ந்து கொண்டார். அந்த இடமோ மாட்டுக்கொட்டிலைப் போல விருந்தது; அதில் குப்பை, செத்தை, வெற்றிலைபாக்குத் தம்பலம், வாழைப்பழத்தோல், பட்டாணிக் கடலைத்தோல் முதலியவை நிறைந்திருந்தன. மேலே ஆறுபட்டை லாந்தரொன்று முணுக்கு முணுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அதில் எரிந்த சுடர் எங்கிருந்ததென்பதை இன்னொரு விளக்கின் உதவியாலேயே அறிதல் வேண்டும்; அங்கு அப்போது வேறு ஒருவரும் இருக்கவில்லை. சாம்பசிவம் கீழே உட்கார்ந்த உடன், களைப்புமேலிட்ட தாகையால் படுத்துக் கொள்ளவேண்டுமென்னும் விருப்ப முண்டாயிற்று; தலையணையைப்போலப் பருமனாயிருந்த பணமூட்டையைத் தலையின் கீழ் வைத்துக்கொண்டு படுத்தார். அந்தப்பணமே தங்களுடைய உயிராதலால் அதை ஜாக்கிரதையாகக் கொண்டுபோக வேண்டுமே யென்னும் கவலைகொண்டார். படுத்த படியே தமது இரண்டு கைகளாலும் மூட்டையை அணைத்து இருகைகளின் விரல்களையும் ஒன்றாய்ப் பிணைத்துக் கொண்டார்.

ஐந்து நிமிஷத்தில் துயில்வந்து அழுத்தியது. என்றாலும் மிகவும் வருந்தி சமாளித்துக்கொண்டு, துயிலாமல் இருந்தார்; அன்றிரவு முற்றிலும் அவ்வாறே இருக்கவேண்டுமென்று உறுதி செய்துகொண்டிருந்தார். அவ்வாறு கால்நாழிகை கழிந்தது. அப்போது ஒரு பெண்பிள்ளை ஒரு சிறிய மூட்டையைஎடுத்துக்கொண்டு அங்குவந்து, சாம்பசிவத்தின் காலடிக் கருகில் உட்கார்ந்து வெற்றிலைபாக்குப் போட்டுக்கொண்ட வண்ணம் ‘‘சாமி! கூடுவாஞ்சேரிக்கு வண்டி எப்ப வரும்?’’ என்றாள். சாம்பசிவம் விடியற்காலையில் வரும் என்றார்: அவள் வெற்றிலைபாக்கைப் போட்டுக்கொண்டு அவருடைய காலடிக் கருகில் படுத்துக்கொண்டாள். கால் நாழிகையில் அவள், அந்த ஊரையே பெயர்த்தெறியும்படியான குறட்டைகளை விடத்தொடங்கினாள். அப்போது பிரயாணியைப்போலக் காணப்பட்ட ஒருமனிதன் அங்குவந்து, சாம்பசிவத்தின் வலப்பக்கத்திற் கருகில் உட்கார்ந்து பட்டாணிக்கடலை தின்னவாரம்பித்தான். அந்த வேலையைக் கால் நாழிகை வரையில் செய்து விட்டு அவருடைய தலைப்பக்கத்தில் இரண்டு முழத்திற்கப்பால் படுத்துக்கொண்டு பாட்டுப் பாடவாரம்பித்தான். தேவாரம், திருப்புகழ், இந்துஸ்தானி, கெஜல் முதலிய பாட்டுகளை ஒரு நாழிகை நேரம் பாடிக் கடைசியில் ஓய்ந்துபோய்க் குறட்டை விடத் தொடங்கினான்.

அப்போது இரவுமணி ஒன்றாயிற்று; சாம்பசிவம் மூன்றாம் ஜாமம் நித்திரையிலாழ்ந்திருந்தார். பட்டினியாலும், நெடுநாட்களாக துயிலாமையாலும், அலட்டலினாலும், அயர்ந்திருந்த மனிதராதலின், அவர் ஆழ்ந்த நித்திரையில் பிரம்மாநந்தமாக அழுந்திக்கிடந்தார். ஆனால் அவர் துயிலுவதாக எவருக்கும் தெரியவில்லை. அவருடைய ஆழ்ந்த துயில் சிறுகச் சிறுகக் கலையவாரம்பித்தது அரைத்துயிலும் அரை உணர்வுமாக விருந்தது. அப்போது அவருடைய வலது உள்ளங்காலில் ஒருவகைக் குறுகுறுப்புத் தோன்றியது; ஒரு நாய் தனது நாக்கால் நக்குவதாலுண்டாகும் குறுகுறுப்பும் கூச்சமும், ஒருவகையான இன்பமும் துன்பமும் கலந்து தோன்றின. அதனாலேயே அவருடைய ஆழ்ந்த துயில் கலைந்தது. மேன்மேலும் அந்த இன்பகரமான உணர்ச்சி அதிகரித்துத் தோன்றியது. அது கனவோ என்று நினைத்தார்; அதனாலுண்டான குறுகுறுப்பைத் தாங்கமாட்டாது சிறிது தவித்தார். ஏதோ நாய்தான் அவ்வாறு தமது காலைநக்குவதாக நினைத்துச், ‘‘சூ’’ என்று அதட்டிக் கொண்டு எழுந்து

உட்கார்ந்து தமது கண்களைத் துடைத்துக்கொண்டு காலடியில் பார்த்தார். நாய் காணப்படவில்லை. கால் பக்கத்தில் படுத்திருந்த மாது குறட்டைவிட்டுத் துயின்று கொண்டிருந்தாள். ஒருகால் நாய் ஓடிப்போயிருக்குமோ வென்று அவர் நினைத்தார். என்றாலும் அவ்வளவு விரைவாக அது ஓடிப்போனதைப் பற்றி வியப்படைந்தவராய் முன்போலப் படுத்துக்கொண்டார். அவர் மூட்டையின்மேல் வைக்கப் போன தலை கருங்கல் தரையில் படேரென்று மோதுண்டது. மூட்டை அப்பால் நழுவிப்போயிருக்குமோ வென்று கைகளால் தடவி மூட்டையைத் தேடினார். அது கைகளில் தட்டுப்படவில்லை. பெரிதும் திடுக்கிட்டு வியப்படைந்து எழுந்து தலைப் பக்கம் பார்த்தார். பணமூட்டையும் காணப்படவில்லை. அங்கு படுத்திருந்த மனிதனும் காணப்படவில்லை; நாற்புறங்களையும் சுற்றிப் பார்த்தார். எங்கும் ஒரு மனிதராயினும் காணப்படவில்லை. மூட்டை போன விடமும் தெரியவில்லை. காலடியில் பெண் பிள்ளை மாத்திரம் குறட்டைவிட்டு நன்றாய்த் தூங்குகிறாள். அவளிடமும் பண மூட்டை காணப்படவில்லை. தாம் கனவிலிருக்கிறோமோ அல்லது விழித்திருக்கிறோமோ வென்று சந்தேகப்பட்டார்! இரண்டொரு நிமிஷ நேரம் வரையில் உருட்டி உருட்டி விழித்து நாற் புறங்களையும் பார்த்தார். மிகவும் குழம்பிச் சிதறிப்போய்க் கிடந்த அவருடைய மூளையை அந்த பயங்கரமான அதிர்ச்சி வலுவாகத் தாக்கிச் சின்னாபின்னமாக்கி விட்டது. அது எந்த இடம் என்பதும் தாம் யாரென்பதும், எங்கிருக்கிறோமென்பதும் தோன்றவில்லை. அவருடைய பழைய நினைவுகளே மறைந்து போய், புத்தியும் பேதுற்றது; உண்மையில் சித்தப்பிரமை கொண்டுவிட்டார். கீழே விரித்திருந்த தமது அங்கவஸ்திரத்தையும் எடுக்காமல் எழுந்து இடுப்புத் துணியோடு வெளியில் நடந்தார்; எங்கும் இருள் சூழ்ந்திருந்தது; தஞ்சாவூர் முகமாக, வயல்களிலும் வாப்புகளிலும் விழுந்தெழுந்து போகவாரம்பித்து விட்டார்; தாம் இன்ன விடத்திற்குத் தான் போகிறோமென்பதை யறியாமல், பைத்தியங்கொண்டு, நடந்து விட்டார். அவருடைய காலடியிற் படுத்திருந்தவளே நாயைப் போல நக்கிவிட்டு, அவர் எழுந்திருக்கும் சமயத்தில் அப்பால் நகர்ந்து படுத்துக் குறட்டைவிடுவதாகப் பாசாங்கு செய்தாள். அவர் எழுந்து கால்பக்கம் பார்த்த போது, தலைப் பக்கத்தில் தயாராக இருந்த மனிதன் மூட்டையை எடுத்துக்கொண்டு ஓசையின்றி விரைவாகப் போய் விட்டான்; ஸ்டேஷன் மாஸ்டர் சென்னைக்கு அப்போது வண்டி யில்லையென்று சாம்பசிவத்தினிடம் சொன்ன பிறகு அவர் பணமூட்டையைத் தூக்கிக் கொண்டு வண்டிக்காக அலைந்த போது, பணம் கலகலவென்று ஓசைசெய்ததென்று சொன்னோமல்லவா? அப்போது அதைக் கவனித்திருந்த ஒரு போர்ட்டரே தன் மனைவியின் உதவியால் அவ்வாறு சாமர்த்தியமாகத் திருடிக்கொண்டு போனவன்.

OFFICE OF
2-AUG 1920
MADRAS

மேனகா.

22-வது அதிகாரம்

வேம்போ கரும்போ

இராயப்பேட்டை வைத்திய சாலையில் மிக்க நீளமும், அகலமுமான கூடங்கள் பல விருந்தன. அவை யொவ்வொன்றிலும் இருபது, இருபத்தைந்து இரும்புக்கட்டில்கள் வரிசையாகப் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு கட்டிலிலும் ஒவ்வொரு நோயாளி படுத்திருந்தான். நோயாளிகளின் தேவைகளைக் கவனித்து அவர்களுக்குரிய பணிவிடைகளை இயற்றும் பொருட்டு ஒவ்வொரு அறைக்கும் இரண்டிரண்டு மாதர் நியமிக்கப்பட்டிருந்தனர். சென்னை வைத்திய சாலைகளில் அவர்கள் பெரும்பாலும் வெள்ளைக்கார (சட்டைக்கார) வகுப்பைச் சேர்ந்த யௌவனமடந்தையராகவே இருந்தனர். அவர்கள் மிகவும் அழகு வாய்ந்த பக்குவகாலப் பெண்களாக விருந்தமையாலும், முகவசீகரம், அன்பு, தளரா முயற்சி, சலியா உழைப்பு, இரக்கம் முதலியவற்றைத் தோற்றுவித்துத் தமது கடமைகளைச் செய்யவேண்டுமென்பது வைத்தியசாலையின் முறைமையாதலாலும், சாதாரணமாக உலக நடவடிக்கைகளில், இந்திய மக்களோடு கூடிப் பழகாத வெள்ளைக்கார மாதர், இங்கு அன்பே வடிவாய்க் காணப்பட்டுப் பணி புரிவது பெரும் புதுமையாயிருத்தலினாலும் பிணியாளருக்கு அம்மடந்தையர் அமுத சஞ்சீவியோ, கந்தருவ மங்கையரோ, காமதேனுவோ, கற்பகத்தருவோ வென்னக் காணப்பட்டு காலத்திற்குரியவாறு உதவிபுரிந்து இன்பங் கொடுத்து வந்தனர். மருந்தினாற் குணமடைவோரினும், இத்தகைய அணங்குகளின் மனமார்ந்த உபசரணையினால் குணமடைவோரே பெரும்பாலரென மதித்தல் வேண்டும்.

இத்தகைய அறையொன்றில் விடப்பட்டிருந்த வராகசாமி உயிருடனிருக்கின்றானோ, அல்லது உயிர் துறந்துவிட்டானோ வென்று ஐயுறத் தகுந்த நிலைமையில் கட்டிலிற் படுத்திருந்தான். அவனுடம்பில் ஏராளமான காயங்கள் நிறைந்திருந்தன. சாம்பசிவம், கனகம்மாள், சாமாவையர் ஆகிய மூவரும் வந்து அவனைப் பார்த்துவிட்டுச் சென்ற பிறகு அவன் கட்டிலோடு ஒரு தனிமையான அறைக்கு நகர்த்தப்பட்டான். அவ்விடத்தில், அவனது முழங்காலில் முறிபட்டுப்போயிருந்த எலும்பு சரியாக வைத்துக் கட்டப்பட்டது. அந்த நிலைமையில் அவனை மேனும் அலட்டுதல் கூடாதென நினைத்த டாக்டர் அவ்விடத்திலேயே அவனைத் தனிமையில் விடுத்திருந்தார். அவன் அவ்வாறே கண்களைத் திறவாமலும், அசையாமலும் இரவு பகலாய் உணர்வற்றுக் கிடந்தான். அவன் இனிப் பிழைக்க மாட்டானென்பதும், பிழைத்தால் அது தெய்வச் செயலென்பதும் பெரியதுரையின் நினைவு. பெரிய தம்பி மரக்காருடைய பங்களாவில் கிடந்த மேனகாவென்னும் பெண்ணின் கணவன் இவனென்பதை யறிந்த பிறகு டாக்டர் துரைசானி பெரிதும் இரக்கங்கொண்டு வராகசாமியின் விஷயத்தில் மிகவும் சிரத்தை காட்டினாள். டாக்டர் துரையிடத்தில் அவனது குடும்ப விஷயங்களையெல்லாம் கூறி, அவனுக்கு எண்ணிறந்த வசதிகளையும் ஏற்பாடுகளையும் செய்வித்தாள்; மிகவும் விலையுயர்ந்த மருந்துகளைப் பிரயோகிக்கும்படி செய்தாள். அவனைத் தனிமையிலிருந்த அறையிலேயே சந்தடியும், சலனமுமின்றி சுகமாய் விடுவித்துவைத்தனர். அவனுக்குரிய பணிவிடைகளைச் செய்யவும், இரவு பகலாய்க் காத்திருந்து மணிக்கு மணி மருந்துகளைச் செலுத்தவும் ஆயத்தமாக ஒரு வெள்ளைக்காரப் பணிமகள், அவனுக்காகப் பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்டாள். இரண்டு மூன்று நாட்களாயின. கடுமையான ஜுரம் தலைகாட்டியது. இரணங்கள் யாவும் சீழ் கோர்த்துக்கொள்ளும் நிலைமையடைந்து, விண் விண்ணென்று தெறித்துப் பொறுக்கலாற்றா நோவையுண்டாக்கின. மூளை சிதறிப்போயிருந்தது. பிதற்ற வாரம்பித்தான் "அடி சண்டாளி! துரோகி! தப்பியோடிப்போய்விட்டாயோ! என்மேல் மோட்டார் வண்டியை வேண்டுமென்று ஏற்றி என்னைக்கொல்ல நினைத்தாயோ! ஆகா! மாயாண்டிப்பிள்ளையின் மயக்கமா! ஒரே அடியில் மண்டையைப் பிளந்திருப்பேனே! திண்டென்ன! தலையணைகளென்ன! அலங்காரமென்ன! என்னைக்கண்டு கண்ணை மூடிக்கொள்ளுகிறாய்!" என்று கூறுகிறான். பற்கள் நறநறவென்று ஓசை செய்கின்றன. முக்கல், முனகல் முதலியவை உண்டாகின்றன. உடம்பு சிறிதளவு புரளுகிறது. வெள்ளைக்காரப் பணிப்பெண்ணோ இமைகொட்டாமல் அருகில் உட்கார்ந்து விலையுயர்ந்த அரிய மருந்துகளை விடாமுயற்சியுடன் செலுத்தி, நிமிஷத்திற்கு நிமிஷம் காணப்படும், முகத்தின் மாறுபாடுகளை மிகவும் எச்சரிக்கையாகக் கவனித்த வண்ணம் பெரிதும் கவலைகொண்டு உட்கார்ந்திருக்கிறாள். காலையிலும் மாலையிலும் பெரியடாக்டரும், டாக்டர் துரைசானியும், வந்து, அவனுடைய நிலைமையை நன்றாக ஆராய்ச்சிசெய்து, புதியபுதிய மருந்துகளைத் தயாரிக்கச் செய்து பலவகையாகப் பிரயோகிக்கச் செய்தனர். சாமாவையர், பெருந்தேவியம்மாள் முதலியோர் எவரும் நாலைந்து நாட்கள் வரையில் அங்கு வரக்கூடாதென்று கட்டளையிட்டனர். அந்த பயங்கரமான நிலைமை ஏழெட்டு நாட்கள் வரையில் நீடித்திருந்தது. பிறகு ஓயாமல் செலுத்தப்படும் திறமையான மருந்துகள் அவனுடைய புண்களைச் சிறுகச் சிறுக ஆற்றின. உடம்பில் அறவே ஓய்ந்துபோயிருந்த இரத்த ஊற்றையும் ஊக்கிப் பெருக்கின. சீர்குலைந்து கிடந்த மூளையும் அறிவும் சிறிது செவ்வைப் பட்டன. அவன் தனது உணர்வைப்பெற்றான். கண்களைத்திறந்து நாற்புறங்களையும் பார்த்தான். மின்சார விளக்கின் வெளிச்சம் பளிச்சென்று பிரகாசித்துக் கண்ணைப்பறித்தது. அதைத் தாங்கமாட்டாமல் கண்கள் சோர்வடைந்து மூடிக்கொண்டன. தான் நோய் கொண்டு ஏதோ ஒரு அறையில் கட்டிலில் படுத்திருப்பதாக நினைத்தான்; சிறிதுநேரம் கழிந்தது. தன்னுடைய நினைவு நன்றாக உண்டாயிற்று. தான் கடற்கரையில் மேனகாவைக் கொல்ல முயன்றதும், அப்போது கீழேவிழுந்து மோட்டார் வண்டியில் அறைபட்டதும் நினைவிற்கு வந்தன. தனது கட்டிலிற்கருகில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பதாகவும், அவர் பல நாட்களாய்த் தனக்கருகிலிருந்து தனக்கு இன்பமுண்டாக்கி வந்ததாகவும் அவன் மனதில் கனவைப்போல எண்ணமுண்டாயிற்று. அத்தகைய பேருபகாரி யாரென்பதை யறிய நினைத்துக் கண்களை இன்னொரு முறை திறந்து அவரிருந்த பக்கத்தில் நோக்கினான். கட்டிலினருகில் போடப் பட்டிருந்த நாற்காலி யொன்றில் கொப்பி முதலியவற்றை யணிந்த ஒரு அழகிய வெள்ளைக்காரப் பெண்மயிலாள் மிகவும் கவலைகொண்ட முகத்தோடு உட்கார்ந்திருக்கக் கண்டான். அந்தப்பெண் அவன்

மனதிலெழும் நினைவை வெளியிடா முன்னரே ஞானதிருஷ்டியால் அதை யுணர்ந்து அவனுக்குத் தேவையானவற்றைச் செய்ய ஆயத்தமாயிருப்பவளாய்க் காணப்பட்டாள். அவளுடைய முகம் கபடமற்றதும் மிகவும் வசீகரமானதுமாய்க் காணப்பட்டது. எனினும் பல நாட்களாய் இரவு பகல் காத்திருப்பதனால் வாட்டமடைந்திருப்பது போலத் தோன்றியது. அவன் தன்னை உற்று நோக்கியதைக் கண்ட பெண்மணி, சுருக்கென எழுந்து கட்டிலிற்கருகில் நெருங்கி நின்று "என்னவேண்டும்?" என்று அன்பொழுகக் கேட்டாள். அவளுடைய குரல் அமுதம் சொரியப் படுதலைப்போல் செவிகளுக்கு இனிமைசெய்தது. வராகசாமி உடனே தனது கண்களை மூடிக்கொண்டான். உலகிலுள்ள பெண்கள் யாவரும் கற்பென்பதே யற்ற வஞ்சகரென்று நினைத்து அருவருப்புற்று அவர்களின் முகத்திலும் விழிப்பது பாபமென உறுதியாக எண்ணியிருந்தவனாதலின், அவன் தனக்கருகில் பூரணசந்திரோதயம்போலக் காணப்பட்ட கட்டழகியைக் கூற்றுவனிலும் கொடியவளென மதித்துத் தன் கண்களை இறுக மூடிக்கொண்டான். நிற்க, அவன், இந்திய மாதரைக் காட்டிலும், ஐரோப்பிய மாதர்மீது அதிகமாகப் பகைமை கொண்டிருந்தான். ஏனெனில், ஐரோப்பிய மாதர், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் பெண் தன்மைகளை விடுத்து அன்னிய மனிதரோடு பழகி நமது நாட்டுப்பெண்களுக்கு துர் ஆசாரங்களில் ஆசையுண்டாம்படிசெய்கின்றார்களென்னும் நினைவைக்கொண்டவனாதலின், அவன் வெள்ளைக்கார மகளிரை விஷத்திலும் கொடியவராய் நினைத்து அவர்களின்மீது தீராப்பகைமை கொண்டிருந்தான். ஆதலின் அவளுடைய அன்பு நிறைந்த கேள்வி அவன் மனதின் அமைதியைக் குலைத்துப் புண் படுத்திவிட்டது. திரும்பவும் களைப்படைந்து கண்களை மூடிக்கொண்டு அயர்ந்தான். அருகில் நின்ற, வெள்ளைக் கலை யுடுத்திய, வெள்ளை மடவன்னம் பஞ்சிலும் பூவிதழ்களிலும் மிருதுவான தனது கரத்தால் அவனுடைய நெற்றி, கன்னங்கள் முதலியவற்றைத் தடவினாள். ஜுரநோய் கொண்டவன் மார்பில் பச்சைக் கற்பூரம் குங்குமப் பூ பன்னீர் முதலியவை கலக்கப்பட்ட சந்தனம் பூசப்படுதல்போல அந்த வருடல் அவனை இன்பக்கடலி லாழ்த்திய தாயினும் அவளுடைய தெய்வகானம் போன்ற தீங்குரலே, மந்திர உச்சாடனம்போல, அவனுடைய பிணியைத் துரத்திய தாயினும், அவன் மனது மாத்திரம் மிகுந்த ஆத்

திரமடைந்தது. "எங்கு போனாலும் பெண்பீடைகள் மனிதரை
விடுவதில்லை. இவர்களுக்கு பயந்து மனிதர் எமலோகத்தில் ஓடி
ஒளிந்து கொண்டாலும் விடமாட்டார்கள்போ லிருக்கிறதே! சே!
சே! என்ன உலகம்! வைத்தியசாலையில் கூடவா இவர்களுடன் கூட
இருந்து அழவேண்டும். ஏன் ஆண்பிள்ளைகளை இங்கு நியமிக்கக்
கூடாது? இந்த வெள்ளைக்காரரே மகா காமாதுரர்கள். ஒரு நொடி
யேனும் பெண்பிள்ளைகளை அப்பால் விடுவதில்லை. பெண்பித்துப்
பிடித்தவர்கள்! இப்படி நோயாளிகளுக் கருகில் யௌவனப் பெண்
களை வைத்தால், அவர்களுடைய பலஹீனமான நிலைமையில் அவர்
கள் மனதில் ஸ்திரீ சபலம் ஏற்படுமானால், அவர்களுடைய நோய்
அதிகப்படுமன்றி விலகுமா? ஆண்பிள்ளைகளின் பணிவிடைகளிலும்,
பெண்பிள்ளைகளின் பணிவிடைகள் சிறந்தனவாயினும், பின்னவர்
களாலுண்டாகும் தீமையே பெரியதென்பதை இந்த இங்கிலீஷ்
வைத்தியர்கள் உணராதுபோன தென்ன! நோயாளிகள் எப்படி
நாசமாய்ப்போனால் அவர்களுக்கென்ன? தாம் வேலைசெய்யும் இடங்
களில்கூட பெண்கள் எதிரில் நிற்பது அவர்களுக்கு சுகமாக இருக்
கிறது. அவ்வளவே அவர்களுடைய கோரிக்கை; இந்த வெள்ளைக்
காரப் பெண்ணின் துடுக்கையும் துணிவையும் என்னவென்று சொல்
வது! நான் இவளைப் பார்த்தவுடன் எனக்கு என்னதேவை என்று
இவள் கேட்டது நியாயமே; அதன்பிறகு நான் கண்களைமூடியதைக்
கண்டு, இவள், என்னுடைய நெற்றியையும் கன்னங்களையும் தடவிக்
கொடுத்த காரணமென்ன? அவ்வாறு செய்யும்படி இவளைக்கேட்ட
வர் யார்? அது இவளுடைய கடமைகளிலொன்றா? நோயாளிகளிடத்
தில் அவ்வளவு அந்தரங்க அன்பைக் காட்டுகிறார்களாம்! வேஷக்
காரர்கள்! பெண்களே வெளிப்பட்ட வடிவம்; அதிலும் வெள்ளைக்
காரப் பெண்களோ சாகசத்தில் கைதேர்ந்து முதற்பட்டம் பெற்ற
கபடநாடக வேஷங்கள். நான் யாரோ அன்னியன்; என்னை முன்பின்
அறியாதவளான இவள் ஆயிரங் காலம்பழகிய தாய் மனைவிமுதலி
யோரைப் போல வித்தியாசமின்றி அருகில் வந்து தடவிக்கொடுக்கி
றாளே! இந்த வைத்திய சாலையில் தினம் ஒருவனுக்கு இப்படித் தட
விக்கொடுத்து, இவளுடைய அன்பாதரங்களை யெல்லாம் செல
வழித்துவிட்டு வீட்டுக்குச் செல்வாளாயின், அதன் பின் புருஷனி
டம், இவள் எவ்வளவு அன்பைக் காட்டப்போகிறாள்! அவனுடன்
சுகமாக ஒருவார்த்தை பேசத்தான் இவளுக்குப் பொறுமை இருக்

குமா! ஆகா! இவளைப் பெண்டாட்டியாக அடைபவன் வாழ்ந்து போவான்!" என்று பலவாறு நினைத்து அந்தப் பெண்ணைத் தன் மனதில் இகழ்ந்த வண்ணம் துயிலில் ஆழ்ந்தான். இரண்டொரு நாழிகை கழிந்த பின் விழித்துக்கொண்டு கண்களைத் திறப்பான். ஜெகஜ்ஜோதியைப்போல தன்னை விட்டகலாமல் அறையிலிருந்த அந்த வெள்ளை மடமயிலை, அவன் பெருத்த பூச்சாண்டியாக மதித்து அவளைப்பார்க்க அஞ்சினான். அவளிருந்த பக்கம் நோக்கவும் கண்கள் கூசின; கண்களை மூடுவான்; பழைய நினைவுகள் புற்றிலிருந்தெழும் ஈசல்களைப்போல மனதில் எழுந்தன; தன் மனைவியின் விபசாரச் செயல்களும், மாயாண்டிப்பிள்ளையின் காதற் கடிதங்களின் சொற்களும் அகக்கண்ணின்முன் தோன்றி நின்று, தாண்டவமாடின; அந்த நினைவுகளைத் தாங்கமாட்டாமல் மயங்கி உணர்வற்று வீழ்ந்துவிடுவான்; காம்பொடிபட்ட மலரென அவன் சிரம் தலையணையில் வாட்டமுற்றுச் சாய்ந்து கிடக்கும். அந்த மடந்தை மாறி மாறி மருந்துகளையும், பாலையும் செலுத்தி, அயர்வின்றி எப்போதும் மாறுபடா ஆதரத்தோடு, அவனைக் குணப்படுத்த முயன்று கொண்டிருந்தாள். அவளாற் செலுத்தப்படும் மருந்து அவனது பலஹீனத்தைப் போக்கடித்து அங்கங்களுக்கு வலு ஊட்டிக்கொண்டே வந்தது. முதலில் அடிக்கடி உண்டான சோர்வும், உறக்கமும் நெடுநேரம் இடை விட்டு வரத்தொடங்கின. அவளால் திருப்பிக் கொணரப்படும் நல்ல நிலைமை, அவன் அவளைப் பார்த்தமாத்திரத்தில் கெட்டுப்போய்க் கொண்டிருந்தது. அவளைக் காணும்போதெல்லாம் அவனுடைய மனதில் பழைய நினைவுகளே தோன்றி வதைத்தன. முற்றிலும் வஞ்சகியான தன் மனைவி மேனகா தஞ்சையிலிருந்து தனக்கு அனுப்பிய கடிதத்தை தான் உண்மையென்று நம்பி ஏமாறிப்போனதை நினைத்து நினைத்து தன் மூடமதியை நிந்தித்துக் கொண்டான்; அவள் கல்லால் அடிபட்டு இறவாமல் தப்பி இன்னமும் உலகில் உயிருடனிருப்பதைப் பற்றி நினைத்து ஆத்திரங்கொள்வான். தான் முற்றிலும் குணமடைந்து வெளியிற்போன பின் எப்பாடு பட்டாயினும் அவளைக் கண்டுபிடித்து அவளைக் கொன்றுவிட்டுத் தானும் விஷத்தைத் தின்று மரிப்பதே முடிவென உறுதி செய்து கொண்டான். அவள் உயிருடனிருக்கும் வரையில் தனக்கும், தன் குடும்பத்திற்கும் நீங்கா அவமானமே உண்டாகுமென்று நினைத்துத் துடி துடித்தான். அவளைக் கொன்ற பின்

தான் உயிர் வாழ்வதிற்பயனில்லை யென்று நினைத்தான்; தான் அப்புறம் இன்னொரு பெண்பேயை மணக்க நேருமென்றும், அவளும் இப்படியே மேனகாவைப்போலவே வேசையாயிருப்பாளென்றும் நினைத்தான். கண்கள் தாமாகத்திறந்து கொள்ளும். உடனே எதிரிலிருந்த வெள்ளைக்காரப் பெண்ணின்மீது அவனது திருஷ்டிபடும்; அவள் மகா பரிசுத்தமான குணவொழுக்கமுடையவளைப்போல அன்பே வடிவாய் உட்கார்ந்திருப்பதைக் காண்பான். அது புண்ணில் மிளகாய் விழுதை அப்புதலைப்போல விருக்கும் "எவ்வளவோ சிறந்த அழகை ஈசுவரன் இவளுக்குக்கொடுத்திருப்பினும் மணமற்ற பொன்மலரைப்போலவும், பணத்திற்காக ஆசைகாட்டும் பரத்தையரைப்போலவும், பெண்களுக்குரிய அச்சம் பயிர்ப்புமுதலிய இன்றி அன்னியனாகிய என்னிடமிருக்கிறாளே இதென்ன ஜென்மமோ!" என்று பலவாறு நினைப்பதும், சோர்வடைந்து கண்ணை மூடுவதும், துயில்வதும், உணர்வை யடைவதும், எண்ணிறந்த நினைவுகளினால் வதைபடுவதுமாய் மாறி மாறிச் செய்துகொண்டிருந்தான். அவன் மனதிலும், தேகத்திலும் பெருத்த போர் நடந்து கொண்டிருந்தது. அவ்வாறு மேலும் இரண்டொரு நாட்கள் கழிந்தன. நன்றாகத் திரும்பிப்படுக்கவும், எழுந்திருக்கவும் இன்னம் வல்லமை யுண்டாகவில்லை. உடம்பின் புண்களும் காற்பங்கே ஆறியிருந்தன. அருகிலிருந்த தாதியைக் காண்பதினால் தன்னுடைய குடும்ப நினைவைப் பெற்றுப் பெற்று அவன் தவித்த வண்ணம் கிடந்தான்.

ஆனால் அந்த வெள்ளைக்காரப் பணிப் பெண்ணோ ஓய்வு துயிலின்றி, இரவு பகலாய் அவனருகிலேயே இருந்து ஈன்றதாயினும் சிறந்த அன்னையாய் அமைந்து, அவனுக்குரிய காரியங்களைச் செய்து கைம்மாறுகருதாத பேருதவி செய்து வந்தாள்; பல்தேய்ப்பது பால் புகட்டுவது முதல், இடையில் நழுவிப்போகும்வஸ்திரத்தை இறுக்கிக் கட்டுதல் உடம்பில் உட்கார்ந்து வதைக்கும் ஈயை ஓட்டுதல் வரையிலுள்ள ஒவ்வொரு காரியத்தையும் சலிப்பின்றி உவப்போடு செய்துவந்தாள். வராகசாமியின் அறிவு தெளிவடைய அடைய, அந்தப்பெண்மணி அவனுக்குச் செய்துவந்த பணி விடைகளின் அருமை மனதில் படவாரம்பித்தது. பெண்பாலார் யாவரும் வஞ்சகரென்னும் நினைவு அவன் மனதில் வேரூன்றி இருந்தபோதிலும், அந்த வெள்ளைக்காரியின் பணிவிடைகள் மாத்திரம் அவனுக்கு அவசியமானவையாயும்

இன்பகரமானவையாயும் தோன்றின. ஆரம்பத்தில், அவளுடைய பணிவிடைகளை ஏற்றுக்கொள்ளவே மனமற்றிருந்தான். அவள் ஐந்து நிமிஷமாயினும் தன்னைவிட்டு அப்புறம் போக மாட்டாளோ வென்று சுவாமியை வேண்டுவான். அந்த வெறுப்பு படிப்படியாய்க் குறைந்தது. அவள் அப்போதைக் கப்போது, கேட்ட கேள்விக்கு மறுமொழி கூற மனமற்று மௌனம் சாதித்தான். என்றாலும் அந்தத்தாதி தன் விஷயத்தில் பெருத்த பாடு பட்டு வருவதை நன்றாக உணர்ந்தான். அவள் சம்பளத்திற்கு வேலைசெய்யும் கூலிக்காரியாயினும், தன்வேலையை அவ்வளவு திறமையாகவும் பிறர் மனதைக் கவரும்படியும் செய்வதைக் கண்டு, அவள் விஷயத்தில் ஒருவகையான நல்ல அபிப்பிராயமும், நன்றியறிவும கொள்ளவாரம்பித்தான்; தான் அந்த வைத்தியசாலையில் இருக்கப்போகும் இன்னம் சொற்ப நாட்களும், அவளுடன் சாதாரணமாக இருந்து விட்டுப் போவதனால் தன கொள்கைக்கு எவ்விதமான கெடுதலுமில்லையென்று நினைத்தான். தன் விஷயத்தில் எவ்விதக் குற்றமும் செய்யாதவளும், நன்மைகளையே செய்து உயிரை மீட்டவளுமான அவளுடன் தான் பேசாமலே வருமம் பாராட்டுவது மிருகத்தன மென்றும் நன்றி கெட்டவன் காரியமென்றும் நினைத்தான. மெல்ல அவளிருந்த பக்கமாகத் திரும்பி அவளுடைய முகத்தை உற்று நோக்கினான். அவன் தன்னுடன் ஏதோ விஷயத்தைப்பற்றிப் பேச விரும்புகிறானென்று கண்ட அந்த வெள்ளைக் கிள்ளை "என்னவேண்டும்?" என்று வினவினள்.

உடனே வராகசாமி பலஹீனமடைந்த குரலில் "இரவிலும், பகலிலும் நீயே இங்கு இருக்கிறாயே! உனக்கு ஓய்வு வேண்டாமா? நீ தூங்கவேண்டாமா? பகலுக்கு ஒருத்தி இரவுக்கு ஒருத்தி என்ற ஏற்பாடு இங்கு கிடையாதா? எங்களை குணப்படுத்துமுன் நீங்கள் வியாதியாய்ப் படுத்துக்கொள்வீர்கள்போலிருக்கிறதே! இப்படிப்பட்ட பெருத்த அக்கிரமம் நடக்குமோ? இப்படியும் வேலைவாங்குவார்களா!" என்று கூறிவிட்டு அவள் முகத்தை நோக்கினான். தான் கேட்ட கேள்விக்கு அவள் ஏதாயினும் துடுக்காக விடை கொடுப்பாளோ வென்று அஞ்சினான். அதைக்கேட்ட அந்த மங்கை ஒருவாறு கிலேசமடைந்து அப்பாலிருந்த ஏதோ வஸ்துவைக் கவனிப்பவளைப்போல வேறுபுறத்தில் பார்த்துக்கொண்டு "ஏராளமாக சம்பளங்களை வாரிக் கொடுத்து விட்டு எங்களை சும்மா உட்காரவைப்பார்களா? இப்படி ஆபத்துக் காலத்தில் இராப்பகலாய் உட்கார்ந்து உபசரணை செய்வதற்காகத்தானே எங்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கிறார்கள். நல்ல தேக ஸ்திதியிலிருப்பவர்கள் கஷ்டப்படா விட்டால் வியாதியஸ்தர் எப்படிப் பிழைப்பார்கள்! ஒருவர் கஷ்டப்பட்டால்தான் இன்னொருவருக்கு சுகமுண்டாகும். நாங்கள் இப்படிச் செய்து செய்து பழகியிருக்கிறோம். இது துன்பமாகவே தோன்றவில்லை. முதலில் இது எங்களுடைய கடமை; இரண்டாவது, இது பரோபகாரமான காரியம். பிறர் துன்பப்படுவதைக் கண்டு இரக்கங்கொள்ளாத மனிதர் மனிதராவரோ? மூன்றாவது; இந்தக்காரியம் பெண்டுகளுக்கு இயற்கையானது; வீட்டில் புருஷன் குழந்தைகள் முதலியோர் வியாதிப்பட்டிருந்தால், அவர்களுடனிருந்து துன்பமனுபவிப்போர் ஸ்திரீகளே. ஆகையால் இது என் மனதிற்கு உகந்த வேலையாகவே இருக்கிறது; இதில் அக்கிரமம் ஒன்றுமில்லை" என்றாள்.

அவள் பேசியது மிகவும் இன்பகரமாக விருந்தது. அவள் காரியத்தாலும், பேச்சாலும் புருஷரை ஒரு நொடியில் மயக்கிவிடக் கூடிய மகாதந்திரி என நினைத்தான். ஆனால் உண்மையில், அவளுடைய குணம் எப்படிப்பட்டதோ என்னும் சந்தேகம் அவனுடைய மனதில்தோன்றியது; அவள்மீது ஒருவகை வெறுப்பும், விருப்பும் ஒருங்கே யுதித்து அவன் மனதை வதைத்தன. தான் கேட்ட கேள்விக்கு அவள் துடுக்காக மறுமொழி கூறாமல் பெண்தன்மையோடு பேசியதைப் பற்றி ஒருவகையான திருப்தியும் தோன்றியது. சிறிது கண்களை மூடிக்கொண்டுமௌனமாயிருந்தான்; பிறகு கண்களைத் திறந்துகொண்டு "நான் இங்கே வந்து எத்தனை நாளாகிறது?" என்று கேட்டான்.

வெள்ளைக்காரி:—பன்னிரண்டு நாட்களாகின்றன.—என்றாள்.

வராக:—என்னுடைய சொந்தக்காரர்கள் யாராயினும் இங்கே வந்து என்னைப்பார்த்துப் போகிறார்களா?

வெள்ளை:—உங்களுடைய அக்காளும், சாமாவையர் என்ற இன்னொரு மனிதரும் அப்போதைக்கப்போது வந்து போய்க்கொண்

டிருக்கிறார்கள். நீங்கள் இவ்விடத்திற்கு வந்ததினத்துக்கு மறுநாள் உங்களுடைய மாமனாரும், அவருடைய தாயாரும், சாமாவையரும் வந்தார்கள்—என்றாள்.

அதைக்கேட்ட வராகசாமி, அவர்கள் வந்தபோது என்ன நடந்ததென்பதை யறிய ஆவல்கொண்டவனாய், "அவர்கள் வந்து என்ன செய்தார்கள்? அவர்களும் தினம் வந்து கொண்டிருக்கிறார்களா?" என்றான்.

வெள்ளைக்காரப்பெண் "அவர்கள் அன்றைக்கு மாத்திரந்தான் வந்தார்கள்; இங்கே வந்தவுடன் உங்களுடைய பரிதாபகரமான நிலைமையையும் உடம்பு முழுவதும் நிறைந்திருந்த புண்களையும் கண்டு இருவரும் விசனித்தழுதார்கள்., கண்ணீர்விட்டுக் கதறினார்கள்; சாமாவையர் உங்களுடைய சட்டைப்பையிலிருந்த இரண்டு கடிதங்களை எடுத்து அவர்களிடம் கொடுக்க, அவர்கள் அதிலுள்ள விஷயங்களை அறிந்துகொண்டவுடன் மிகவும் ஆத்திரமடைந்தார்கள். அவர்களுக்குப்பதினைந்து நிமிஷம் சாவகாசம்கொடுக்கப்பட்டிருந்தது; அது முடிந்துபோனதாகையால், அவர்களை உடனே நாங்கள் வெளியிற்போகச்சொல்லி விட்டோம். அதற்கப்புறம் அவர்கள் இன்னம் வரவில்லை." என்று கூறினாள்.

அதைக்கேட்ட வராகசாமி ஒருவகையான அருவருப்பை யடைந்தான்; மேனகாவின்மீது அவன்கொண்ட வெறுப்பு அவர்கள்மீதும் சென்றது. அவர்கள் கெட்டவர்களாகையாலும் தஞ்சையில் சுயேச்சையாக அவளை நாடகம்பார்க்க விட்டிருந்தமையாலும் மேனகா அவ்வாறு ஓடிப்போனாளென்றும் தங்களுக்குண்டான அவமானத்திற்கெல்லாம் அவர்களேகாரணமென்றும், நினைத்துப்பெரிதும் ஆத்திரமடைந்தான். அந்தப்பெண்ணிடம் எதைச்சொல்லலாம், எதைச்சொல்லக்கூடாது என்பதையும் யோசனை செய்யாமல், அவர்களைப்பற்றி அவதூறாகப் பேசத்தொடங்கினான். "அவர்களுடைய விசனம் அந்த ஒரு நாளோடு முடிந்துவிட்டதுபோலிருக்கிறது. எல்லாம் பெண்ணுக்காகப் போடும் வேஷம். மாப்பிள்ளையைப்பற்றி மாமனார்களுக்கு அந்தரங்கத்தில் அபிமானம் ஏது! பெண் இருக்கிறாளென்று நினைத்து, அவளுக்காகப் பாசாங்கு செய்தார்கள்போலிருக்கிறது. பெண் போய்விட்டாளென்பதை யறிந்தவுடன், இனி மேல் மாப்பிள்ளையின் தயவு எதற்கென்று போய்விட்டார்கள். அப்புறம் அவர்கள் ஏன் வருவார்கள்?" என்று மிகவும் குத்தலாகவும் அதிருப்தியோடும் கூறிக்கொண்டான். அதைக்கேட்ட அந்த வெள்ளைக்காரப்பெண்ணின் முகம் ஒருவகையான மாறுதலடைந்தது. தன் முகத்தை அம்புறம் திருப்பி வேறு எதையோ கவனிப்பவள்போல இருந்துவிட்டு மறுபடியும் முகத்தை அலட்சியமாக அவன் பக்கம் திருப்பினாள். "அவர்களுக்கு என்னென்னவோ பல ஆபத்துகள் வந்து விட்டனவாம். ஆகையால் ஊருக்கு உடனே போய்விட்டார்களாம். சாமாவையர் என்பவர், டாக்டர் துரைசானியம்மாளிடம் சொன்னாராம்?" என்றாள். அதைக்கேட்ட வராகசாமி சிறிது திகைப்படைந்து "அவர்களுக்கு என்ன ஆபத்து வந்ததாம்? அந்த விவரத்தை சாமாவையர் சொல்லவில்லையா?" என்று பரிகாசமாகக் கேட்டான்.

வெள்ளை—எல்லாவற்றையும் சொன்னாராம். அவர்கள் உங்களைப்பார்க்க இங்கே வரும்போது வழியில் போலீசார் உங்கள் மாமனாரை ஸ்டேஷனுக்குள் அழைத்துப்போய் அவரைக் கலெக்டர், வேலையிலிருந்து விலக்கி வைத்திருக்கிறதாக அனுப்பியிருந்த தந்தி உத்தரவைக் கொடுத்தார்களாம்.

வராக.—(அதிக வியப்படைந்து) என்ன! ஏன் வேலையிலிருந்து நீக்கினார்களாம்?

வெள்ளை:—அவர் ரஜா இல்லாமல் இந்த ஊருக்கு வந்து தம்முடைய பெண்ணை யழைத்துக்கொண்டு போனாராம். அதற்காகவும் இன்னம் ஏதோ காரணத்திற்காகவும் வேலையிலிருந்து நீக்கினார்களாம்—என்றாள்.

அதைக்கேட்ட வராகசாமி மிகவும் ஆச்சரியமடைந்தான். மாமனார் சென்னைக்கு வந்து பெண்ணை அழைத்துப்போனாரென்பதே பொய்; அம்மாதிரி தானும், தன் சகோதரிமாரும், சாமாவையருமே நினைத்திருந்தவர்கள். மாயாண்டிப்பிள்ளையின் கடிதங்கள் கிடைத்த பிறகு, அந்த எண்ணம் விலகிவிட்டது. அப்படி இருக்க, அவர் சென்னைக்கு வந்தாரென்னும் பொய்யான அவதூறு தஞ்சை கலெக்டருக்கு எப்படி எட்டியிருக்கும் என்று நினைத்து நினைத்துப் பார்த்தான். தான் அனுப்பிய தந்தி ஒருகால் கலெக்டரிடம் போய்ச்

சேர்ந்திருக்குமோவென்று நினைத்தான். வேறு எத்தகைய காரணமும் தோன்றாமையால், விஷயம் அப்படித்தானிருக்கவேண்டுமென்று நினைத்தான். இரண்டொரு நிமிஷம் மௌனம் சாதித்தான். "அப்புறம் இன்னம் என்ன ஆபத்து வந்ததாம்?" என்று கேட்டான்.

வெள்ளை:—அவர்கள் தஞ்சாவூரிலிருந்து புறப்பட்ட அன்றிராத்திரி, அவர்களுடைய வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்து, சொத்துக்களையெல்லாம்கொண்டுபோனதுமன்றி உங்களுடைய மாமியாரை மிகவும் அடித்துப்போட்டு விட்டார்களாம். அந்தச் செய்தியும் உடனே தந்தியின் மூலமாகக் கிடைத்ததாம். உங்கள் மாமியார் பிழைக்கமாட்டார்களென்ற செய்தியைக் கேட்டு உடனே அவர்கள் போய்விட்டார்களாம்—என்றாள்.

அந்த துக்ககரமான விஷயத்தைச் சொல்ல மாட்டாமல், தயாள குணமுள்ள அந்த வெள்ளைக்காரப்பெண் மிகவும் வருந்திக் கூறினாள். அவளுடைய கண்களிலும் கண்ணீர் துளித்தது. அப்புறம் திரும்பி அதைத் துடைத்துக் கொண்டாள். அந்த விபரத்தைக் கேட்ட வராகசாமியின் மனம் ஒருவாறு கலங்கியது. அறிவும் சோர்வடைந்தது. கண்களை மூடிக்கொண்டு கால் நாழிகையளவு உறங்கியபின் விழித்துக்கொண்டான். அப்போது அவனுக்கு மருந்தும் பாலும் கொடுக்கவேண்டிய தருணம் வந்தமையால் பணிமகள் மிகவும் அன்போடு மருந்தை உட்செலுத்தினாள். அம்மருந்து வயிற்றைப் புரட்டியதாகையால், அவன் வாந்தியெடுக்க முயன்றான். அவள் அவனுக்கருகில் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு, "வாந்தி எடுக்கவேண்டாம். சமாளித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டு அவனுடைய மார்பைத் தடவிக்கொடுத்தாள். அவள் தனக்கருகில் உட்கார்ந்ததால், அவன் சகிக்கவொண்ணாத ஒருவகைக் கிலேசத்தை யடைந்தான். உடனே வாந்தி சிறிதளவு வெளிப்பட்டது. அந்தப் பெண் சிறிதும் அருவருப்பின்றி அதைத் தன் கையாலேந்தி அப்புறமிருந்த பாத்திரத்திற் போட்டுவிட்டுத் தன் கையைச் சுத்தி செய்துகொண்டு வந்து அவனுடைய வாய் முதலியவற்றைத் தனது பட்டுக் கைக்குட்டையால் துடைத்துவிட்டு அருகில் உட்கார்ந்து மேலும் மார்பைத் தடவிக்கொடுத்தாள். அவனுடைய வாந்தி அத்துடன் ஓய்ந்தது. அந்தப் பெண் கட்டிலைவிட்டு எழுந்து எப்போது நாற்காலியில் உட்கார்ந்து கொள்வாளென்று

அவன் நினைத்தான். அவள் மிகவும் அழகுவாய்ந்த பதினாறு வயதுப் பருவமடந்தையாக விருந்தாளாயினும், அவள் மிகவும் பாக்கியம் பெற்றவனுக்கே கிடைக்கக்கூடிய தெய்வ ரம்பையைப்போல விருப்பினும் அவள் அன்னிய மாது என்னும் நினைவினால் அவன் அவளைத் தொடவும் அஞ்சினான். அவள் அன்போடு தனக்குச்செய்த உபசாரணைகளைப்பற்றி, அவன் மனதில் நன்றியறிவு சுரந்ததாயினும், அவள் முற்றிலும் நாணமின்றியும், தான் அன்னியப் பெண்ணென்பதை மறந்தும் நடந்துகொள்வதைக் கண்டு, அவள் விஷயத்தில் இழிவான அபிப்பிராயம் கொண்டான். அவள் செய்ததைப்போல அவனுடைய மனைவி மேனகா அதற்குமுன் உபசாரணை செய்ததெல்லாம் உடனே நினைவிற்கு வந்தது. "எல்லாம் வேஷம்! பெண்பிள்ளைகள் இயற்கையிலேயே பாசாங்கு செய்யும் அவதாரங்கள்!" என்று நினைத்தான். "நான் இனி வாந்தி எடுக்கமாட்டேன். நீ நாற்காலியில் உட்கார்ந்துகொள்ளலாம். என்னால் உனக்கு எவ்வளவு சிரமம்!" என்றான். அதைக்கேட்ட மங்கை உடனே எழுந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள். உட்கொண்ட மருந்தினால் வராகசாமி ஒருவிதமான சோர்வையும், சிறிது மயக்கத்தையுமடைந்து கண்களை மூடிக்கொண்டு அரை நாழிகை நேரம் தூங்கி முன்னிலும் அதிகமான தெளிவடைந்து விழித்துக்கொண்டான். அந்தப் பெண் சுவரில் தீட்டப்பட்ட பதுமையைப்போல அசைவின்றித் தன்னையே கவனித்த வண்ணம் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவனுடைய நினைவு தன் மாமனாரின் விஷயங்களிற் சென்றது. அவர்களைப்பற்றி அந்தத் தாதிக்கு மேலும் ஏதாயினும் விபரம் தெரிந்திருக்கலாமென்று நினைத்தவனாய் "மாமனாரைப்பற்றி அப்புறம் ஒருசெய்தியும் கிடைக்கவில்லையா?" என்றான்.

வெள்ளை:—ஒன்றும் தெரியவில்லை—என்றாள்.

வராகசாமி:—சரி; எப்படியாவது போகட்டும்: கெட்டவர்களை சுவாமி எப்படியும் தண்டித்துவிடுவார்—என்றான்.

அதைக்கேட்ட வெள்ளைக்காரப்பெண் "நீங்கள் அப்படிச் சொல்வது சரியல்ல; உங்கள் மாமனாருக்கு நேர்ந்த விபத்துகளைக் கேட்க, அன்னியர்களான எங்களுக்கே சகிக்கவில்லையே. நம்முடைய பகைவனுக்கு இவ்விதமான துன்பம் வந்தாலும், நாம் வருத்தப்படுவோமே.

அப்படி இருக்க, உங்கள் விஷயத்தில் எவ்விதமான குற்றமும்செய்யாத மாமனார் விஷயத்தில் நீங்கள் இரக்கங்கொள்ளாமல், அதைப் பற்றி திருப்தி யடைவது தருமமல்ல” என்றாள்.

வராகசாமி:—நீ சொல்வது உண்மைதான்; பொதுவான தருமமும் அதுதான். நீ, நல்ல இளகிய மனதைக்கொண்டவள் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால் அவர்களுடைய இரகசியமான செய்கைகளை நீ அறிந்தால் அவர்கள்மீது உனக்கு இவ்வளவு இரக்கந்தோன்றாது. அந்த இரகசியங்களை யெல்லாம் வெளிப்படுத்த எனக்கு மனமில்லை. பொதுவாக மனிதரோ, அல்லது வேறு எந்தஜீவனோ, துன்பப்படுவதைக்காண மனமிளகுவது அவசியந்தான். ஆனால் குற்றஞ்செய்தவர்களை நியாயாதிபதி தண்டித்தால், அந்த தண்டனை பொருத்தமானதென்றுதானே எல்லோரும் மதிக்கிறார்கள். விஷமுள்ள பாம்பு தேள் முதலிய ஜெந்துக்களை இரக்க மின்றி மனிதர் அடித்துத் துவையலாக்குகிறார்கள். அவை மரணவேதனை யடையும்போது நம் மனம் வருத்த மடையினும் அந்த தண்டனையை நாம் நியாயமானதென்றே நினைக்கிறோமல்லவா! அதைப்போல அவர்களும், அவர்களுடைய பெண்ணும் எவ்விதமான மனிதர்கள் என்பது மற்றவர்களிலும் எனக்கு நன்றாகத் தெரியுமாதலால் என்மனது அப்படி நினைத்தது. மனச்சாட்சியை அடக்க முடியுமா?—என்றான்.

அதைக்கேட்ட அந்த வெள்ளை மடமங்கை ஒருவகையான கிலேசமடைந்தாள். அன்னிய மாதாகிய தான், தனக்கு எவ்விதமான சம்பந்தமு மற்ற அவர்களுடைய விஷயங்களைப் பற்றி அதிகமாய்ப் பேசுவதால், அந்த மனிதருக்கு ஆயாசம் உண்டாகுமோவென நினைப்பவளைப்போல ஒரு வகையான நாணமும் சஞ்சலமுமடைந்தாள். அந்த விஷயத்தில் எவ்விதமான சிரத்தையுமில்லாதவளைப்போலவும், உலகத்தின் பொது நியாயத்தைப் பேசுகிறவள் போலவும் காண்பித்து “உலகத்தில் மாமனார் மாமியார்களின்மீது அதிருப்தியும் ஆத்திரமுங்கொள்ளாத மாப்பிள்ளைகளே இல்லை; நீங்கள் உங்கள் மனைவி வீட்டார்மேல் தப்பான அபிப்பிராயங்கொண்டிருப்பதற்குத் தகுந்தாற்போல அவர்களுக்குப் பல துன்பங்கள் வந்து நேர்ந்தன. அதைக்கொண்டு அவர்கள் கெட்டவர்களென்றும், ஆகையால் தண்டிக்கப்பட்டார்களென்றும் சொல்வது காகதாலிய

நியாயமே யாகும். உலகத்தில், குற்றமற்ற மனிதர்களுக்கு ஆபத்துகளும் துன்பங்களும் வருவதில்லையா? அப்படி துன்பமடைவோர் நியாயமாகவே சிட்சிக்கப் படுகிறார்களென்று நாம் நினைப்பது தருமமாகுமா? இப்போது நீங்கள் மோட்டார் வண்டியில் அகப்பட்டுக்கொண்டு பிழைக்கக் கூடாத நிலைமையிலிருந்தீர்களே; நீங்கள் செய்த ஏதோ குற்றத்திற்கு இது தண்டனை யென்று நினைத்து மற்ற ஜனங்கள் சும்மா இருந்துவிட்டார்களா? இம்மாதிரி நாம் செய்வதானால் உலகத்தில் துன்ப மனுபவிக்கும் எவனையும் பிறன் காப்பாற்றக் கூடாது; ஏழைகளுக்குபிச்சையிடுவது கூடாது. ஏனெனில் அவர்கள் செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுகிறார்களாகையால், அவர்களுக்கு உதவிசெய்வது, கடவுளின் விருப்பத்திற்கு விரோதமான காரியமாகிறது. நீங்கள் பெருத்த வக்கீலென்று சொல்லுகிறார்கள். சட்டங்களையும் நியாயத்தையும் நன்றாக நீங்கள் படித்தறிந்திருப்பீர்கள். உங்களுக்கு நான் அதிகமாகச் சொல்லக்கூடாது. டாக்டர் துரைசாணி அம்மாளிடம் சாமாவையரென்பவர் உங்களிடமிருந்த கடிதங்களின் விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். கடிதவிஷயமாக நீங்கள் ஆத்திரப்பட்டு, தற்கொலை செய்துகொள்ளப்போய் மோட்டாரில் வீழ்ந்து விட்டதாகவும் சொன்னார்; இவைகளைக்கேட்டவர்கள் யாவரும் நீங்கள், விஷயங்கள் பொய்யா மெய்யா வென்பதை ஆய்ந்தோய்ந்து பாராமல் தற்கொலை செய்து கொள்ள முயன்றதைப்பற்றி, உங்கள்மேலேதான் குறை சொன்னார்கள்” என்றாள்.

அதைக்கேட்ட வராகசாமி வியப்பும் அவமானமுமடைந்து “கடிதங்களின் இரகசியத்தைஎல்லோரிடமும் வெளியிட்டுவிட்டானா அந்தமடையன்? அவனுக்கு புத்தியே கிடையாது” என்றான். தனது கைகளால் முகத்தை மூடிக்கொண்டு கால் நாழிகை நேரம் மௌனமாயிருந்தான். அவன் மேனகாவின்மீது கொண்டிருந்த கோபம் பொங்கி யெழுந்தது; அவளால் தனக்குண்டான மானக்கேட்டை அறிந்த அந்த வெள்ளைக்காரப் பெண்ணின் முகத்தில் விழிக்க விருப்பமற்றவனாய்ச் சிறிது நேரம் குன்றிப்போய்க் கிடந்தான். அவனை மீறி ஆத்திரச் சொற்கள் வாயில் தோன்றின. “இந்த முட்டாள்கள் எதற்காக இரகசியமான விஷயத்தை விளம்பரப்படுத்துகிறார்கள். சுத்த மானங்கெட்டவர்கள்! இன்னம் யார் யாரிடம் சொல்லிவிட்டார்களோ தெரியவில்லையே! ஐயோ! இனிமேல் நான் வெளியில் போய் மனிதர் முகத்தில் எப்படி விழிப்பேன்! ஆ! கொலை

பாதகி! சண்டாளி! என்றைக்கும் தீராத அவமானத்தைக் கொணர்ந்து வைத்துவிட்டாயே! அடி துஷ்டமுண்டை! பாழாய்ப்போன உன்னுடைய உடம்பு நெருப்பில் வெந்தழியாதோ? நீயேன் சாகிறாய்! இது கெட்டவர்களுக்கல்லவோ காலமாயிருக்கிறது! உலகத்தில் சாமி ஏது பூதமேது! இந்த மானக்கேட்டை உண்டாக்கின தேவடியாள் முண்டையான உன் மண்டையை ஒரே அடியில் கல்லால் உடைத்திருப்பேனே! தப்பித்துக்கொண்டாயே! கள்ளப்புருஷனோடு உல்லாசமாகவந்த உன்னை ஈசுவரன் தப்பு வித்துவிட்டான்; சொந்தப்புருஷனாகிய நான் வண்டியில் அறைபட்டேன்." என்று பலவாறு தனக்குத் தானே பிரலாபித்து, ஆத்திரமும், அவமானமும், துக்கமுமடைந்து கண்ணீர் விட்டுத் தவித்தான். அதைக்கண்ட பணிமகளும் இரக்கங் கொண்டு துடி துடித்து, தனது ஆசனத்தை விட்டு எழுந்து அவனுக்கருகில் சென்று "நீங்கள் இப்படி விசனப்பட்டால், குணமடைந்த உடம்பு திரும்பவும் கெட்டுவிடும். டாக்டர் துரையும், துரைசானியும் என்னைக் கண்டித்து வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள். நான் இந்த விஷயத்தை உங்களிடம் தெரிவித்திருக்கக் கூடாது. என்னுடைய தவறை மன்னித்துக் கொள்ளுங்கள்; சாமாவையர் உங்களுடைய இரகசியத்தைப் பலரிடம் சொல்லி யிருப்பாரோ என்று நீங்கள் சந்தேகப் பட்டு வருந்தவேண்டாம். இந்த விஷயத்தை சாமாவையர் முதலில் துரைசானியிடம் சொல்லவில்லை. துரைசானிக்கு இந்த சங்கதி வேறு எவ்வகையிலோ தெரிந்து அவரிடம் கேட்க, அவர் உண்மைதானென்று ஒப்புக்கொண்டாராம். துரைசானி இதை மிகவும் இரகசியமாக என்னிடம் கூறி, 'உங்களை மிகவும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி சொன்னார்கள். இந்த விஷயம் எங்கள் இருவருக்குமே தெரிந்தது. நாங்கள் வெளியிட மாட்டோம்; அதைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலை கொள்ள வேண்டாம்; துரைசானி வந்தால் என் உத்தியோகம் போய் விடும். நீங்கள் விசனப்படவேண்டாம்" என்று கூறி மன்றாடிய வண்ணம் வராகசாமியின் முகம் கண்கள் முதலியவற்றை அன்போடு துடைத்துவிட்டு, ஏதோ மருந்தை எடுத்து அவனுடைய வாயில் வைத்துச் சிறிது பருகுவித்தாள். அவளுடைய அன்பையும், வேண்டுகோளையும், அவளுக்குத் துன்ப முண்டாகுமென்பதையும் கருதி வராகசாமி தனது ஆவேசத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டான்.

உடனே அந்த அழகிய மடந்தை ஒருவாறு புன்னகை காட்டி "உங்களைப்பார்த்தால் ஒரு எறும்புக்கும் துன்பம் செய்யாத [illegible]வைப்போலிருக்கிறதே; நீங்கள் உங்களுடைய மனைவியைக் கொல்லப் போனீர்களென்பதைக் கேட்க, எனக்கு நம்பிக்கையே உண்டாகவில்லை. படிக்காத முரடர்கள் செய்யத் தகுந்த காரியத்தை நீங்கள் செய்யத் துணிந்தீர்களா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அவளைக்கொல்ல நினைத்தீர்களே! கொலைகாரனுக்கு விதிக்கப்படும் தண்டனையை அல்லவா அவளுக்கு நீங்கள்விதிக்க நினைத்தீர்கள்! விபசாரதோஷத்திற்கு உயிரைவாங்குவது மிகவும் கடுமையான தண்டனை யாயினும், புருஷருக்கு அவமானமுண்டான சமயத்தில், அவர்கள்கொல்ல நினைப்பது இயல்பே. அப்படிக்கொன்றாலும் அது குற்றமாகாது; ஆனால், அவள் உண்மையில் விபசாரம் செய்தாள் என்பதை நீங்கள் தெளிவாக அறிந்துகொண்டீர்களா? அல்லது அறியமுயன்றீர்களா? ஏதோ இரண்டு கடிதங்கள் அகப்பட்டன; அவைகளேமுடிவான சாட்சிகள். அவைகளை வேதவாக்கியமாக வைத்துக்கொண்டு கொலை செய்யப் போய்விட்டீர்கள். உங்களுடைய கொடிய எண்ணம் நிறைவேறாதபடி ஈசுவரன் தடுத்ததிலிருந்தே இதில் ஏதோ சூதிருக்கிறதென்பது உங்களுக்குத் தோன்றவில்லையா? கடிதங்களை எடுத்தீர்களே; அவைகள் உண்மையாக அவளுக்கு நாடகக்காரனால் எழுதப்பட்ட கடிதங்களா இல்லையா என்பதை தெளிவாக நிச்சயித்துக் கொண்டீர்களா? கச்சேரிகளில்எத்தனையோ கொலைக் குற்றங்கள் விசாரணைக்கு வருகின்றனவே; இம்மாதிரியான இரண்டு கடிதங்களின் ஆதாரத்தைக் கொண்டே நியாயாதிபதிகள் தண்டித்ததுண்டா? விரோதிகள் யாராயினும் பொய்யாக இம்மாதிரிப் பொய்க் கடிதம் தயாரித்து வைத்திருக்கக் கூடாதா?" என்றாள்.

எதிர்பாராத அவளது சொற்களைக் கேட்ட வராகசாமி சிறிது மௌனம் சாதித்தான். கடிதம் பொய்க்கடிதமாக இருந்தாலும் இருக்லாம் என்னும் எண்ணம் அவன் மனதில் தோன்றியது; ஆனால் அது உடனே மின்னலைப்போல மறைந்து போனது. "நீ சொல்வது நியாயந்தான். ஆனால் அவள்மேல் அப்படி அபாண்டமான பழி சுமத்தக்கூடியவர்கள் எங்கள் வீட்டில் ஒருவருமில்லை. என்னுடைய சகோதரிகள் அவளிடம் மிகவும் பிரியமுள்ளவர்கள்: தவிர; அவளுடைய பெட்டியில் இந்தக் கடிதங்கள் இருந்தன. இரவு

கோலைத் தாலிச்சரட்டை விட்டு நீக்காமல் அவளே வைத்திருந்தாள். பெட்டி அவள் வைத்த நிலைமையிலேயே பூட்டப்பட்டிருந்தது. அதை நானே நேரில் உடைத்துக் கடிதத்தை எடுத்தேன். இது ஒன்றையே நாம் முடிவான ருஜுவாகக் கொள்ளலாம்—என்றான்.

வெள்ளை :—(புன்னகை காட்டி) நீங்கள் வக்கீல் உத்தியோகம் செய்பவர்கள். உங்களிடம் நான் வாக்குவாதம் செய்வது அதிகப்பிரசங்கித்தனமாகும்; என்றாலும் பெண் பேதையான ஒருத்தியின் மேல் அபாண்டமாக குற்றம் சுமத்துவதைக்காண பெண்பிள்ளையான எனக்கு சகிக்கவில்லை. அதனால் கேட்கிறேன். கோபிக்கக்கூடாது. பெட்டி பூட்டப்பட்டிருந்ததாகச் சொல்லுகிறீர்களே; டிரங்குப் பெட்டியின் பூட்டு உள்பக்கத்திலிருப்பதல்லவா? ஒருவர் பூட்டை உடைத்து, அதற்குள் கடிதங்களை வைத்து விட்டுப் பிறகு வேறு பூட்டு அதற்குப் போடுவித்துப் பூட்டி வைத்திருக்கக்கூடாதா? நீங்கள் உடைத்தபோது இருந்த பூட்டே, அதற்குமுன் எப்போதும் இருந்த பூட்டென்பதை நீங்கள் நிச்சயமாக அறிந்துகொண்டீர்களா?—என்றாள்.

அதைக்கேட்ட வராகசாமி மேலும் தடுமாற்றமடைந்து சிறிது யோசனை செய்தான்; “அவ்வாறு உடைத்திருந்தால், என்னுடைய சகோதரிகளே செய்யவேண்டும். அவர் அப்படிச் செய்யமாட்டார்கள். அவர்கள் அப்படிச்செய்யவெண்டிய முகாந்திரமுமில்லை.” என்றான்.

வெள்ளை :—அவர்கள் செய்யவில்லை என்றே வைத்துக்கொள்வோம். அவள் தஞ்சாவூரிலிருந்து இங்கே வருமுன் அவளுடைய தகப்பனார் வீட்டிலுள்ள மனிதர் யாராயினும் அவள்மீது பகைமையினால் இப்படிப் பொய்க் கடிதம் எழுதி வைத்திருக்கலாம். பிறகு புருஷன் அதைப் படித்தால் அவளுக்குத் துன்பம் சம்பவிக்கும் என்னும் கெட்ட நோக்கத்துடன் வைத்திருந்தாலாகாதா? அங்கே அவளுடைய தாயாருடன்கூடப் பிறந்தவன் ஒருவனிருப்பதாகவும், அவன் கொள்ளையைப்பற்றி தந்தியனுப்பியதாயும் சாமாவையர் சொன்னாரே! அவனுக்கும் அவளுக்கும் பகைமையிருந்ததனால் ஒருகால் பொய்க் கடிதங்களை வைத்திருக்கக்கூடாதா? ஆகையால் இந்தக் கடிதங்களை வைத்துக்கொண்டே ஒரு முடிவான தீர்மானம் செய்வது

தருமமாகாது. நான் சொல்லுகிறேனென்று நீங்கள் ஆயாசப்படக்கூடாது. நான் வாக்குவாதத்திற்காகப் பேசுகிறேன்; உங்களுடைய சகோதரிமார் அவள் விஷயத்தில் இப்படிச்செய்ய முகாந்திரமில்லைபென்றீர்களே; அவர்கள் அவளுடைய ஆபரணங்களை அபகரித்துக் கொள்ளவோ அல்லது வேறு எந்தக் கருத்துடனோ அவளைக் கொன்றிருக்கக் கூடாதா? அல்லது அவளைப் பாராதீனப்படுத்தியிருக்கக் கூடாதா?

வராக :—அவளை நான் கடற்கரையிற் கண்டுதானே கொல்லப்போனேன்; அவள் பிறரால் கொல்லப்பட்டிருப்பாளென்னும் சந்தேகம் ஏன் உண்டாகவேண்டும்? அவளுடைய மனதிற்கு விரோதமாக அவள் பராதீனப்படுத்தப்பட்டிருந்தால், சுயேச்சையாக மோட்டார் வண்டியில் காற்று வாங்க வந்திருக்கமாட்டாளல்லவா? அவள் தப்பித்துக்கொண்டு என்னிடமல்லவா வந்திருக்கவேண்டும்.

வெள்ளை :—கடற்கரையில் நீங்கள் கண்ட பெண் அவள்தானென்பதற்கு ருஜுவென்ன? அவளைப்போல உலகத்தில் இன்னொருத்தி இருக்கக்கூடாதா? உங்களுடைய ஆவேசத்திலும், மோட்டார் வண்டியின் விசையிலும் அவள் உங்கள் மனைவியைப்போலக் காணப்பட்டிருக்கலாம்; அல்லது அவளாகவே இருப்பினும், அவள் அன்னியரிடத்திலிருந்து தப்பிவரக்கூடாமல் கட்டாயப் படுத்தப்பட்டிருக்கலாம்.

வராக :—நீ கேட்பதெல்லாம் சரியான கேள்விகளே; என்றாலும், அவள் என் மனைவி என்பதைப்பற்றி கொஞ்சமும் சந்தேகமே இல்லை. அவளல்லவென்று சொல்வதற்கில்லை. அவள் அன்னியரால் பாதுகாப்பாக வற்புறுத்தி வைக்கப்பட்டிருக்கலாம். காரியம் அப்படி நடந்திருக்குமாயின், அவள் இதுகாறும் அவசியம் களங்கமடைந்திருப்பாள். அப்படித் தன் தேகசுத்தத்தை இழந்த பெண்ணை எவன் திரும்பவும் அழைத்துக்கொள்வான். அவள் உயிரோடிருந்து, இன்னமும் எனக்கு அவள் அவமானம் உண்டாக்குவதைக் காட்டிலும் சாவதே நல்லது.

வெள்ளை :—(புன்சிரிப்புக்காட்டி) நீங்கள் சொல்லுவது எப்படியிருக்கிறதென்றால், கிணற்றில் விழுந்து தத்தளிக்கும் மனிதரைத் தண்ணீருக்குள் அழுத்திவிடுவதைப்போலிருக்கிறது. உலகத்தில்

ஸ்திரீகளுக்கு ஆபத்து அதிகம். ஆண் பிள்ளைகளோ பொல்லாதவர்கள். நல்ல அழகான பெண்களைக் கண்டு விட்டால், யோக்கியர்கள்கூட அயோக்கியர்களாக மாறிவிடுவார்கள். பலவந்தத்தினாலோ, மோசத்தாலோ உங்களுடைய மனைவியை அவள் மனதிற்கு விரோதமாக பிறர் அவளை அபகரித்துக்கொண்டு போயிருந்தால், அவளை மீட்க வேண்டியது, அவளுடைய நாயகனாகிய உங்களுடைய கடமையல்லவா? அவள் அன்னியரால் வஞ்சிக்கப்பட்டது அவளுடைய குற்றமா? அவளை அப்படி விடுவது பாவமல்லவா? இன்னமும் அவள் மாசற்ற, கற்புடையவளாயிருக்கலாம். நீங்கள் வந்து காப்பாற்றுவீர்களென்று அவள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாம். கற்பழிந்து போமாயின் உத்தம ஸ்திரீகள் உயிரை வைத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். உங்களுடைய மனைவி உயிருடனிருப்பதால், அவள் களங்கமற்றவளென்பது நிச்சயமாகத் தெரிகிறது. அவளை மீட்கவேண்டுமே என்பதை நினையாமல் அவளைக் கொல்லப்போனது நீதியாகுமா? உங்களுடைய இராமாயணத்தில் சீதையை இராமர் கவனிக்காமல் விட்டுவிட்டாரா? அவளை மீட்டபிறகல்லவா, அவளுடைய கற்பு அழிந்ததா இல்லையா வென்பதைச் சோதனைசெய்து ஏற்றுக்கொண்டார். அதுவல்லவோ புருஷ தருமம். நீங்கள் உங்களுடைய ஸ்திரீகளின் மனோ உறுதியில் இவ்வளவு கேவலமான அபிப்பிராயம் கொண்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. வெள்ளைக்காரர்களாகிய எங்கள் ஜாதியில் புருஷர் தமது ஸ்திரீகளின்மேல் இவ்வாறு எளிதில் அவநம்பிக்கைப் படமாட்டார்கள். அவர்களுடைய மனதின் உறுதியை ஒரு முறை கண்டு கொண்டார்களானால், எவ்விடத்திற்குப்போனாலும், அவர்களுடைய மனோ உறுதியைப்பற்றி இப்படி சந்தேகப்படமாட்டார்கள். பெண்மக்களுக்கு மனோ உறுதி யில்லையென்று நினைத்தீர்களா? உங்களுடைய மனதாகிலும், அழகிய ஸ்திரீகளைக் கண்டால் சலிக்கும். அவர்கள் மனதாற்கூட வேறு புருஷரை நினைக்க மாட்டார்களே—என்றாள்.

அதைக்கேட்ட வராகசாமியின் மனதில், அந்த வெள்ளைக்கார மடந்தை சொல்வது நியாயமானதென்று படினும், அவள்மீது ஒரு வகையான கோபமும் தோன்றியது. நிச்சயமாக உண்மை யென்று தெரிந்த அந்த விஷயத்தைப்பற்றி, அவள் வெறும் தத்துவம்பேசி, வீண் வாக்குவாதம் செய்கிறாளென்று நினைத்துக்கொண்டான். "நீ சொல்வதெல்லாம் சரிதான். என் வீட்டிலுள்ள சகோதரிகள் ஒருகாலும் என்னை வஞ்சிக்கக் கூடியவர்களல்ல. ஆகையால் அவர்கள் ஏதேனும் துன்பம் செய்திருப்பார்களென்று நினைக்கமுடியாது. அவர்களுடைய பாதுகாப்பில் வீட்டிலிருக்கையில், அன்னியர் வஞ்சித்து அழைத்துக்கொண்டு போயிருப்பார்கள் என்று நினைப்பதும் அசம்பாவிதம். ஆகையால் அவளே தன் முழுமனதுடன், தன்னுடைய முயற்சியினாலேயே போயிருக்கிறாள். அதைப்பற்றி சந்தேகமே இல்லை. ஆகையால், அவளை நாம் மீட்க நியாயமே இல்லை—என்றான்.

அதைக் கேட்ட வெள்ளைக்காரப் பணிப்பெண் மிகவும் இரக்கமும் விசனமுங்கொண்டு "ஐயோ பாவம்! சகோதரிகள் வஞ்சகம் செய்யமாட்டார்கள்! உயிருக்குயிரான மனைவி மாத்திரம் வஞ்சகம் செய்வாளா! ஆம் ஆம் உண்மைதான். அதிக ஆசையை எவர்கள் வைக்கிறார்களோ அவர்கள்மீது சந்தேகங் கொள்வது உலக வழக்கந்தானே. அதிருக்கட்டும். நீங்கள் இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கவனித்தீர்களா? அவள் தஞ்சாவூரி லிருந்த போது சுயேச்சையாக நாடகம் பார்த்து வந்தாளென்பதும் தனிமையில் ஒரு வீடு வைத்துக்கொண்டு இரகசியமாக அவ்விடத்தில் நாடகக்காரனை சந்தித்து வந்தாளென்பதும் கடிதத்தி லிருந்து தெரிகிறதே! அங்கிருந்தபடியே நாடகக் காரனோடு பட்டணத்துக்கு ஓடிவந்து இரகசியமான ஒரு இடத்தில் இருப்பது சுலபமா? அல்லது தன்னை அழைத்துக்கொள்ளும்படி உங்களுக்குக் கடிதம் எழுதி, எவ்வளவோ பாடுபட்டு, உங்கள் வீட்டுக்கு வந்து பிறகு போகவேண்டிய காரணமென்ன? உங்கள் வீட்டிலிருந்து தப்பித்துக்கொண்டு போவது கடினமாயிருக்குமென்பதை அவள் யோசித்திருக்க மாட்டாளா? நாடகக்காரன்மேல் ஆசைவைத்தவள் அப்படியே ஓடிப்போக நினைப்பாளேயன்றி அப்புறம் தன் புருஷனிடம் வர ஒரு நாளும் விரும்பமாட்டாள். அப்படிப் பட்டவளுக்கு சொந்தப் புருஷன் வேப்பங்காயல்லவா" என்றாள்.

அதைக் கேட்ட வராகசாமி சிந்தனையி லாழ்ந்தான். அவனுடைய மனதில் பெருத்த குழப்ப முண்டாயிற்று. மேனகா குற்றவாளி என்று நினைத்திருந்த அவனுடைய மன உறுதி ஒருவாறு தளரவாரம்பித்தது. ஒருகால் அவள் குற்ற மற்றவளாயிருப்பாளோ வென்னும் சந்தேகம் அடிக்கடி மனதில் தோன்றித் தோன்றி

மறைந்தது: சஞ்சலம் குடி கொண்டது. உண்மையில் அவள் எப்படித்தான் மறைந்து போனாளோ கடிதங்கள் எப்படித்தான் வந்தனவோ வென்று பலவாறு நினைக்க வாரம்பித்தான். தன்னைக் காட்டிலும் அந்த வெள்ளைக்காரப் பெண் கூரிய பகுத்தறிவைக் கொண்டிருப்பதை நினைத்து அவளுடன் மேலும் சம்பாஷிக்க விருப்பங் கொண்டான். தன் மனைவி விஷயத்தில் இன்னும் அநுகூலமான சங்கதி எதையேனும் அவள் வெளியிடக் கூடுமென்றும், அதனால், தான் பயனடையலா மென்றும் நினைத்து வாயைத் திறந்து பேச வாரம்பித்தான்.

அந்த சமயத்தில் அந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. டாக்டர் துரையும், டாக்டர் துரைசானியும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கண்ட வராகசாமி திடுக்கிட்டுத் தன் கட்டிலில் அமைதியாகப் படுத்துக்கொண்டான். பணிமகள் எழுந்து மரியாதையாக ஒதுங்கி நின்றாள்.

உடனே துரைசானி கட்டிலிற் கருகில் வந்து வராகசாமியின் நாடியைப் பார்த்தாள். பணிப் பெண்ணின் முகத்தைப் பார்த்தாள். “அடி எமிலி; நல்ல நிலைமையி லிருந்த இவருடைய உடம்பு இப்போது இவ்வளவு படபடப்பா யிருக்கக் காரணமென்ன?” என்று அதிகாரமாகக் கேட்டாள்.

எமிலி என்னும் அந்தப் பணிப்பெண் அதன் காரணம் தனக்குத் தெரியவில்லை யென்றாள்.

துரைசானி:—ஓகோ! உனக்குத் தெரியாதோ! நீ இவருடன் ஏதோ பேசிக்கொண்டிருந் திருக்கவேண்டும். இல்லாவிட்டால், இப்படி இருக்காது; நீ பெருத்த வாயாடி. உன் வாய் ஒரு நிமிஷமும் ஓய்ந்திருக்காது; ஏதாவது பேசிக்கொண்டே இருப்பாய்; உன்னை இந்த அறையில் வைத்தது பிசகு. வேறு எந்த அறைக்காவது உன்னை அனுப்புகிறோம். நான் இவ்விடத்தில் அதிக ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னதற்கா இப்படிச் செய்தாய்? இதோ போய் உத்தரவு அனுப்புகிறோம்; வேறு அறைக்குப் போகத் தயாராக இரு—என்று கோபமாகச் சொல்லிவிட்டு துரைசானி துரையுடன் வெளியிற் சென்றாள். பணிமகள் மிகவும் அவமான மடைந்தவளைப்

போலக் கீழே குனிந்து கொண்டாள். தன் மனதிற்கு உகந்த விதமாய் நடந்து கொண்டிருக்கும் அந்த நற்குணவதி போய்விடுவாளோ, வேறு எவள் வருவாளோ என்று பலவாறு நினைத்து ஏக்கங்கொண்டு அவன் அந்த மங்கையின் முகத்தை நோக்கினான்.

23-வது அதிகாரம்.

பாதாள எட்சிணி வசியம்.

பதினைந்தாவது அதிகாரத்தின் இறுதியில் நைனா முகம்மது தனது சயன அறையிலிருந்து ஓடிய நூர்ஜஹானைத் துரத்திய போது அவளுடைய அக்காளிருந்ததைக் கண்டு திரும்பி வந்து, மிகவும் அச்சமும் கலக்கமு மடைந்து படுத்திருந்தா னென்று சொல்லப்பட்டதல்லவா. அவன் அன்றிரவு துயிலே கொள்ளாமல் மிகவும் கவலை கொண்டு வருந்திக் கிடந்தான். மேனகாவின் விஷயத்தில் தான் கொண்ட எண்ணம் நிறைவேறாமற் போனது ஒரு புறம் வதைக்க, தன் மனைவி யாவற்றையு மறிந்து கொண்டு தன்னை அவமானப்படுத்தியது இன்னொரு புறம் பொறுக்கலாற்றாமல் அல்லற்படுத்த அவன் அன்றிரவு முற்றிலும் வேதனைக் கடலிலாழ்ந்து கிடந்தான். ஆனால், நற்குணவதியான தனது மனைவி தன்மீது கொண்ட அந்தரங்கமான வாஞ்சையினால், தன்னைக் காட்டிக் கொடுக்காமல், எப்படியும் காப்பாற்றிவிடுவாளென்னும் நினைவு அப்போதைக் கப்போது அவன் மனதில் தோன்றி ஒருவகையான ஆறுதலை யுண்டாக்கிக் கொண்டிருந்தது. அன்றிரவு கழிந்தது. நூர்ஜஹான் என்ன செய்கிறாளென்பதையும், மேனகா வீட்டில் இருக்கிறாளோ அல்லது எங்காயினும் போய்விட்டாளோ வென்பதையும் அறிந்துகொள்ளும் பொருட்டு நைனா முகம்மது, தனது வேலைக்காரி ஒருத்தியை மெல்ல வரவழைத்து, கேள்விகளை சாமர்த்தியமாகக் கேட்கத் தொடங்கினான். நூர்ஜஹானும், அவளுடைய அக்காளும் தங்கள் தகப்பனாரின் பங்களாவிற்கு இரவிலேயே போய்விட்டார்களென்னும் சங்கதியை அவள் தெரிவித்தாள். அதுகாறும் தன்னுடைய அநுமதியின்றித்

தனது தகப்பனாருடைய வீட்டிற்குப் போகாத தன் மனைவி, அன்று இரவிலேயே போய்விட்டதைக் கேட்க, அவன் மனது திரும்பவும் கலக்கமடைந்து குழம்பியது; தன் மனைவி தனக்கு எவ்விதமான துன்பமும் உண்டாக்க மாட்டாளென்பது நிச்சயமாயினும், அவர்களால் விடுவிக்கப்பட்ட மேனகா யாவற்றையும் தன் புருஷனிடம் சொல்ல அதனால் என்ன துன்பம் நேருமோ வென்னும் அச்சம் தோன்றி அவனை வதைக்க ஆரம்பித்தது. மேனகாவின் புருஷன் தன்மீது மாஜிஸ்ரேட்டு கச்சேரியில் பிரியாது கொடுப்பானாகில், அதற்குப் பிடிவாரண்டு பிறக்குமென்பதை யுணர்ந்தவனாதலின், செய்வதின்னதென்பதை யறியாமல் தத்தளித்தான். அவனுடைய வீட்டில் அவனுக்கு சையது இமாம் என்று ஒரு வேலைக்காரனிருந்தான்; நைனாமுகம்மதுவுக்குப் புதிய ஆசை நாயகிகளை அமர்த்துவதிலும், அவர்களை வீட்டிற்கு அழைத்துவந்து அனுப்புவதிலும் தேவையான சௌகரியங்களை யெல்லாம் அவனே செய்பவன்; மேனகாவை அழைத்துவந்த இரவில், வீட்டின் கதவைத் திறந்தவன் அவனே. தான் என்ன செய்வதென்பதைப் பற்றி நைனா முகம்மது அந்த வேலைக்காரனிடம் நெடுநேரம் யோசனை செய்தான். கடைசியில் அவர்களிருவரும் ஒருவகையான முடிவிற்கு வந்தனர். அடுத்த தெருவிலிருந்த சையது இமாமின் வீட்டில் நைனா முகம்மது சில நாட்களுக்கு ஒளிந்து கொண்டிருப்பதென்றும் ஆனால் அவன் வியாபார நிமித்தம் நாகைப்பட்டணத்திற்குப் போயிருப்பதாக சையது இமாம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்து அப்படியே செய்தனர். ஒருவாரமாக நைனா முகம்மது அந்த இடத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். ஆனால் அவன் நாகைப்பட்டணம் போயிருப்பதாக வேலைக்காரன், குமாஸ்தாக்களிடத்திற் கூடப் பொய் சொல்லிக் கொண்டிருந்தான். ஒருவாரம் சென்றும் தன் மனைவி தனது வீட்டிற்கு வரவில்லை என்பதை உணர்ந்தான். மைலாப்பூர் பங்களாவில் அவர்களின் கருத்து எப்படி இருந்ததென்பதை அறிந்து கொண்டுவர சையது இமாம் எவ்வளவு பாடுபட்டானாயினும், அது பலியாமற் போனது. ஆகையால், இன்னம் எத்தனை நாட்களுக்கு அப்படி மறைந்து கொண்டிருக்க வேண்டுமோ வென்று நினைத்து நைனா முகம்மது தவித்து சிறைச் சாலையில் வசிப்பவனைப் போல வதைபட்டுக் கொண்டிருந்தான். சையது இமாம் நைனா முகம்மதுவின் சாப்பாட்டு வசதிகளுக்கென்று ஒவ்வொரு நாளும்

ஏராளமான பணத்தைப் பிடுங்கி, புலாவ் முதலிய சிறந்த உண்டிகளைத் தயாரித்துத் தின்றுவந்ததன்றி பெரும் பொருளையும் அபகரித்துவந்தான். ஆகையால் நைனா முகம்மதுவை பயமுறுத்தி, தன் வீட்டில் அவன் இன்னும் பல நாட்களிருக்கும்படி செய்ய நினைத்து, அதற்குத் தக்கபடி பல புளுகுகளைக் கூறிவந்தான்.

ஒருநாள் அவன் நைனாமுகம்மதுவுடன் மிகவும் கவலையும் அச்சமும் கொண்டு பேசிக்கொண்டிருந்தான். அப்போது நைனா முகம்மது அவனை நோக்கி "என் மாமனாரே போலீசுக்கு எழுதிவிட்டாரென்று மந்திரவாதி சொன்னார்? அப்படியானால் நான் தப்பமுடியாது. நூர்ஜஹானும் எனக்கு விரோதமாக சாட்சி சொல்லுவாள்" என்று மிகவும் அச்சங்கொண்டு கூறினான்.

சையது இமாம்.—அந்த மந்திரவாதிதான் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து உங்களுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் பாதுகாக்கிறேனென்று சொல்லுகிறாரே; இனிமேல் இதைப்பற்றிக் கவலைப்படுவதேன்? அவர் மலையாளத்து மந்திரவாதி; மகா கெட்டிக்காரர்; என்னவோ ஆண்டவன் செயலாகத்தான் நமது வீடுதேடி வந்தார்.—என்றான்.

நைனா:—அவர் மந்திரவாதி என்பதை நீ எப்படி அறிந்து கொண்டாய்?

சையது:—அவர் தெருவின் வழியாகவே வந்து கொண்டிருந்தார்; அப்போது வெயிலின் கொடுமை சகிக்க முடியாமலிருந்தது. கால் பொசுங்கிப் போனது. அப்போது தெருவின் வழியாக வெறுங்காலோடு வந்த மந்திரவாதி சூட்டைத் தாங்கமாட்டாமல் தவித்துப் போய், நம்முடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்; கொப்புளித்துப் போன தமது காலைக் காட்டினார். வீட்டில் தேனிருந்தால் கொஞ்சம் கொப்புளத்தில் தடவுவதற்குக் கொடுக்கும்படி கேட்டார்; நான் கொஞ்சம் தேன் கொடுத்தேன். அதை வாங்கித் தடவிக்கொண்டு கால் நாழிகை நேரம் உட்கார்ந்திருந்தார். பிறகு எழுந்து போகு முன், தாம் மலையாளத்து மந்திரவாதி யென்றும், அந்த வீட்டு எஜமான் அப்போது ஒரு பெருத்த ஆபத்தில் மாட்டிக்கொண்டு ஒளிந்திருப்பதாயும் என்னிடம் தெரிவித்தார்; நான் திடுக்

கிட்டு அவரை நோக்கி என்ன விதமான ஆபத்து என்று கேட்டேன். பெண் விஷயமான ஆபத்தென்றும் அதற்குத் தக்கபடி வேலைசெய்யா விட்டால், எஜமான் சிறைச்சாலைக்குப்போவது நிச்சயமென்றும் சொல்லிவிட்டு எழுந்து போனார். நான் அவரைவிடாமல், தொடர்ந்துபோய் அதன் விவரங்களை யெல்லாம் தெரிவிக்கும்படி கேட்டேன். இருபத்தேழிற்குக்குறைந்த ஒரு எண்ணைச் சொல்லும்படி கேட்டார்; நான் பத்து என்றேன்; அவர் உடனே, "சரி; அவருடைய மாமனாரே போலீசுக்குப் பிரியாது எழுதியனுப்பிவிட்டார். இனி தப்பமுடியாது" என்று சொல்லிக் கொண்டே அவசரமாக நடந்தார். நான் அவரைவிடாமல் தொடர்ந்துசென்று, இதற்கு ஏதாவது பரிகாரம் மாந்திரிகத்தின் மூலமாகச் செய்தால் எஜமானிடம் பெருத்த வெகுமதி வாங்கித்தருவதாகச் சொல்லிவேண்டிக்கொண்டேன். அவர் தமக்கு வெகுமதி வேண்டாமென்றும், ஆனால் பரோபகாரமாக உதவி செய்கிறேனென்றும் நாகூர் தர்காவுக்கு இரண்டு ஆயிரம் ரூபா கொடுத்துவிட வேண்டுமென்றும் சொன்னார். அப்படியே ஆகட்டுமென்றேன். உங்களிடம் வரும்படி கேட்டுக் கொண்டேன்; இன்று காலையில் வருவதாகச் சொன்னார்; அவர் வரும் நேரமாய் விட்டது. நம்முடைய வீட்டு வாசலில் காத்திருப்பார். நான் போய் அழைத்துக்கொண்டு வருகிறேன்—என்றான்.

நைனா.—என்னவோ நல்ல காலத்துக்குத்தான் இந்த மகானை ஆண்டவன் அனுப்பியிருக்கிறான். வெயில் சுட்டதென்று நம்முடைய வீட்டில் அவர் உட்கார்ந்ததே ஆண்டவன் செய்த காரியம். நீ சீக்கிரம் போய் அவரை இங்கே அழைத்துவா—என்றான்.

உடனே சையது இமாம், தன்னுடைய வீட்டைவிட்டு வெளியிற் சென்று அங்கப்ப நாயக்கன் தெருவிலுள்ள நைனா முகம்மதுவின் வீட்டை யடைந்தான். அதன்பிறகு அரை நாழிகை சென்றது மந்திரவாதி தோன்றினார். அவரும் முகம்மதியரே; அவருக்குச் சற்றேறக் குறைய முப்பது வயதிருக்கலாம். நன்றாய்ச் சிவந்த மேனியைக் கொண்டிருந்தார். தலையில் ஒரு குல்லாவணிந்து அதற்குமேல் பெருத்த சீட்டித்துணித் தலைப்பாகை யணிந்திருந்தார். கறுத்தடர்ந்த தாடி பக்கங்களில் செவிகள் வரையிலும், கீழே மார்பு வரையிலும் எட்டி செழுமையாயிருந்தது. இடையில் கைலியும் (லுங்கியும்) அதற்குமேல் காஷாய அங்கியும் தரித்திருந்ததன்றி, கழுத்தில் ஜெபமணி மாலை, பளிங்குமணி மாலை முதலியவற்றை யணிந்திருந்தார். கண்களில் மைதீட்டிக் கொண்டிருந்தார். கொளுத்தப்பட்ட ஊதுவர்த்தியொன்றை வலது காதிற்கும் தலைப்பாகைக்கும் இடையில் சொருகிக் கொண்டிருந்தார். அதிலிருந்து வெளிப்பட்ட புகை பரிமளகந்தத்தை நெடுந்தூரம் வீசியது. கையில் ஒரு அர்த்தசந்திரக் கவைக்கோலும், ஒருசிறிய மூட்டையும், சுரைக்குடுக்கையிலிருந்து செதுக்கிச்செய்யப்பட்ட தூக்குச்செம்பொன்றும் ஒரு ஓலைச் சுவடியுமிருந்தன. அந்த மகானைக் கண்ட சையது இமாம், எழுந்து தரையோடு தரையாய்க் குனிந்து சலாம் செய்ய அவரும் பணிவாக அவனுக்கு சலாம் செய்தார். உடனே சையது இமாம் அவரை அழைத்துக்கொண்டு அடுத்த தெருவிலிருந்த தன்னுடைய வீட்டையடைந்து உட்புறத்தில் அழைத்துச் சென்றான். அந்த மந்திரவாதி அவனுடன் பேசாமல் பின்தொடர்ந்து சென்றாராயினும், அவர் ஏதோ மந்திரத்தை ஜெபித்து முணு முணுத்துக் கொண்டு நடந்தார். அவ்விருவரும் வந்ததைக் கண்ட நைனா முகம்மது விரைவாக எழுந்து மிகவும் பணிவாக மந்திரவாதிக்கு சலாம் செய்து, அவரை ஒரு ஆசனத்தில் அமரச் செய்து மரியாதையாக நிற்க, மகான், அவனும் உட்காரும்படி தமது கையசைப்பால் அநுமதி கொடுத்தார். அவ்வாறே அவனும் உட்கார்ந்து கொண்டான். பிறகு மந்திரவாதி சையது இமாமைப் பார்த்து "நீங்களிருந்த அந்த வீட்டுக் கதவைத்திறந்து போட்டுவிட்டு வந்தீர்களே. அங்குபோக வேண்டாமா?" என்றார். அதைக்கேட்ட வேலைக்காரன், தன்னை மந்திரவாதி அங்கிருக்க வேண்டாமென்று போகச் சொல்லுவதாக ஊகித்துக் கொண்டு "ஆம் நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியில் நடந்தால். பிறகு நைனா முகம்மது மந்திரவாதியை நோக்கி "ஐயா பெரியவரே! தங்களுடைய சொந்த ஊர் எது? இந்த ஊருக்கு வந்து எத்தனை நாளாகிறது?" என்றான். மந்திரவாதி: "நானிருப்பது மலையாள தேசத்தில் திருச்சூர். இங்கே ஒரு பெரிய மனிதர் வீட்டில் ஒரு மாந்திரீக வேலைமுடித்துக்கொடுக்க அழைத்து வந்தார்கள். நேற்றுத்தான் இந்த ஊருக்கு வந்தேன். ரயில் டிக்கட்டுக் கூட என்னிடமே இருக்கிறது. டிக்கட்டு வாங்குகிறவர்கள் என்னிடம் டிக்கட்டுக் கேட்கவே இல்லை. இதோ பாருங்கள்" என்று தன் சட்டைப் பையிலிருந்த டிக்கட்டை எடுத்துக் கொடுத்தார்; அது திருச்சூரிலிருந்து (எரணாகுலத்திலிருந்து) சென்னைக்கு இரண்

நாளைக்குமுன் வாங்கப்பட்ட டிக்கட்டாக விருந்தது. சமீபகாலத்தில் வந்த மனிதராகிய அவர், பல நாட்களுக்குமுன் நிகழ்ந்ததன் விஷயங்களை யறிந்து சொல்வதால், அவர் உண்மையில் பெருத்த மகானே என்று நைனா முகம்மது நினைத்தான். அவரிடத்தில் பெருத்த மதிப்பையும் மரியாதையையும் வைத்துப் பேசத்தொடங்கினான்; "மகானே! எனக்கு வந்துள்ள ஆபத்தை இன்னதென்றறிந்து சொல்லி, அதற்குத் தகுந்த பரிகாரமும் நீங்கள் தேடிச்செய்ய வேண்டும். தங்கள் ஆக்கினைப்படி நாகூர் தர்காவுக்கு இரண்டாயிரம் ரூபா இப்போதே காணிக்கை செலுத்தி விடுகிறேன்." என்றான்.

உடனே மந்திரவாதி ஆடம்பரமாக உட்கார்ந்து கொண்டு தனது மூட்டையை அவிழ்த்து, அதிலிருந்த சக்கரம் எழுதப்பட்ட சில ஏடுகளையும் ஒரு மாத்திரைக் கோலையும் எடுத்து வெளியில் பரப்பினார். ஓலைச் சுவடியைக் கையில் வைத்துக்கொண்டு அதைச்சுழற்றி வெறு வெளியில் ஏதோ சக்கரம் போடுவதாய்க் கையை ஆட்டிக் கண்ணை மூடிக்கொண்டு முணு முணுத்தார். அவ்வாறு கால் நாழிகை சென்றது; உடனே கண்களைத் திறந்துகொண்டு "அல்லா பெரியவன். ஆண்டவன் பெரியவன். உம்முடைய மாமனார். பிரியாது எழுதி போலீசுக்கு அனுப்பிவிட்டார். நீர் இரகசியமாகக் கொணர்ந்த பெண்ணின் புருஷன் மோட்டார் வண்டியில் அறைபட்டு வைத்திய சாலையிற் கிடக்கிறான். அவன் இன்னம் இரண்டொரு நாளில் வீட்டுக்கு வரப்போகிறான். இன்னமும் உமது மாமனார் வீட்டிலிருக்கும் அந்த பிராம்மணப் பெண், புருஷன் வைத்திய சாலையிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன், போய்ச்சேரப் போகிறாள். அதன் பிறகு போலீசார் கேசை நடத்தப் போகிறார்கள். நீங்கள் நாகைப்பட்டணத்தில் இருப்பதாக நினைத்து உங்களைப் பிடித்துவரப் போலீசார் அந்த வூருக்குப் போயிருக்கிறார்கள். உம்முடைய மனைவியும் உம்மிடம் இனி வரமாட்டாள். நீர் துர்நடத்தையுள்ளவரென்று நினைத்து அவர்கள் உம்முடைய உறவை ஒழித்துவிட்டார்கள்.—என்றார்.

அதைக்கேட்ட நைனா முகம்மது வியப்பும் திகைப்புமடைந்து அச்சத்தினால் நடுநடுங்கிப் போனான். "மிகவும் நற்குணமும், என் மேல் கரைகடந்த காதலும் கொண்ட என் மனைவி நூர்ஜஹான் கூட இதற்கு இணங்கினாளா? இதை மாத்திரம் என்மனது நம்பவில்லை" என்று கூறினான்.

மந்திரவாதி.—நீர் நம்பினாலும் சரி; நம்பாவிட்டாலும் சரி; உண்மை அதுதான். பெண்டுகளின் உண்மையான குணம் உமக்குத் தெரியாது. தமது கணவன் விஷயத்தில் அவர்கள் தங்களுடைய உயிரைக் கூடக் கொடுத்து விடுவார்கள். ஆனால், கணவன் வேறொருத்தியோடு நட்பாயிருப்பதைக் கண்டு விட்டால், அவர்களுக்கு தலை போவதும் தெரியாது. அதன்பிறகு தாட்சணியம் பார்க்க மாட்டார்கள். எதற்கும் துணிந்து விடுவார்கள்.—என்றார்.

அதைக் கேட்ட நைனா முகம்மது பெரிதும் கலங்கினான். தங்களுடைய வீட்டு இரகசியங்களை யெல்லாம் அவ்வளவு தூரம் உணர்ந்த அந்தப் பெரியவர், தன்னை அந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற ஏதாவது வழி தேடுவாரென்று நினைத்தான். என்றாலும் சந்தேகம் வருத்தியது. "மகானே! என்னுடைய மாமனார் என்மேல் பிரியாது எழுதும்படி என்னுடைய அரிய மனைவி சம்மதித்தாளா வென்பதே எனக்குப் பெருத்த சந்தேகமா யிருக்கிறது" என்றான்.

அதைக் கேட்ட மந்திரவாதி "சரி; உமக்கு நான் இப்போதே அதைப் பற்றி ருஜுக் காட்டுகிறேன். உமது மாமனாரின் எழுத்து உமக்கு அடையாளம் தெரியுமா?" என்றார்.

நைனா முகம்மது:—தெரியும்—என்றான்.

மந்திர:—சரி; அப்படியானால் இதோநான் என்னுடைய எட்சிணி தேவதையை அழைத்து உம்முடைய மாமனார் போலீசாருக்கு அனுப்பியுள்ள பிரியாதை போலீஸ் டேஷனிலிருந்து எடுத்துக்கொண்டு வரும்படி செய்கிறேன். பாரும்—என்றார்; உடனே தமது சுவடியை எடுத்துப் பலவாறு சுழற்றிச் சக்கரம் போட்டு கண்களை மூடிக்கொண்டு ஆகாயத்தைப், பார்த்து, வீட்டின் மோட்டு வளையில் தயாராகக் காத்திருந்த பாதாள எட்சிணி தேவதையை அழைத்து ஆக்ஞை செய்தார். கால் நாழிகை வரையில் முணுமுணுத்து மந்திர உச்சாடனம் செய்தார். சுவடியின் கட்டை அவிழ்த்து "பூ" வென்று ஊதினார். உடனே சுவடியிலிருந்து ஒரு காகிதமடிப்பு வந்து எதிரில் விழுந்தது; அந்த அதிசயத்தைக் கண்ட நைனாமுகம்மது திகைத்து அசைவற்று உட்கார்ந்து போனான். உடனே மந்திரவாதி காயிதமடிப்பை எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்து விட்டு, நைனாமுகம்மதுவின் கையில் கொடுத்து "இது யாருடைய எழுத்து என்று பாரும்" என்றார்.

அதை வாங்கிப் பார்த்தவுடனே அவன் பிரமித்து "இது என் மாமனாருடைய எழுத்துத்தான்!" என்றான்.

மந்திர:—இதுதான் உமது மாமனாரால் போலீசாருக்கு எழுதியனுப்பப் பட்ட பிராது; என்னுடைய பாதாள எட்சிணி தேவதையை அனுப்பி வரவழைத்திருக்கிறேன்! இதோ பாரும். போலீஸ் ஆபீஸ் முத்திரை இந்தக் காகிதத்தில் பதிந்திருக்கிறது; விஷயத்தையும் நீர் படித்துப் பார்க்கலாம்—என்றார். ஆச்சரியத்தினால் பிணிக்கப்பட்டுப் போயிருந்த நைனா முகம்மது அந்தக் காகிதத்திலிருந்த போலீஸ் ஆபீஸ் முத்திரையைப் பார்த்தான். பிறகு அதைப் படிக்கத் தொடங்கினான். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

பிரியாது:

சென்னை துரைத்தனத்தின் நிருவாக சபை அங்கத்தினராள கான் பகதூர் பெரிய தம்பி மரக்காயரிடமிருந்து,

போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு

ஐயா,

திருவல்லிக்கேணி தொளசிங்கப்பெருமாள் கோவில் தெருவிலுள்ள வக்கீல் வராகசாமி ஐயங்கார் என்பவரின் மனைவியான மேனகா என்னும் பெண்ணை, அந்த வக்கீலின் அக்காளான பெருந்தேவியம்மாள் என்பவளும், அவர்கள் வீட்டிற் கடுத்த வீட்டிலுள்ள சாமாவையர் என்பவரும், நாடகம் பார்க்கப் போவதாய்க் கூறி வஞ்சித்து அங்கப்ப நாயக்கன் தெருவில்—கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும் நைனா முகம்மது மரக்காயரிடம் ரூ. 10,000 க்கு விற்றனர். அவன் அந்தப் பெண்ணிடம் காமாதுர நோக்கங்கொண்டு அவளைக் கற்பழிக்க முயலுகையில், அவள் கூச்சலிட்டு அங்கு அகப்பட்ட பழம் நறுக்கும் கத்தியால் தன்னைக் குத்திக்கொள்ள முயன்றாள். வீட்டிற் குள்ளிருந்த எனது குமாரத்தியும், மேற் குறிக்கப்பட்ட நைனா முகம்மது மரக்காயரின் மனைவியுமான நூர்ஜஹான் பீபி அவ்விடத்திற்கு வந்து அந்தப் பெண்ணை விடுவித்து என் பங்களாவிற்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறாள். அந்தப் பெண் பெருத்த பயத்தினாலுண்டான அதிர்ச்சியால் நோய் கொண்டு என் பங்களாவிலிருக்கிறாள். மேற் குறிக்கப் பட்ட மூன்று மனிதரும், இந்தியன் பினல் கோட் 366 பிரிவுப்படி ஒருவருடைய மனைவியை வஞ்சகமாக

விபசாரத்தின் பொருட்டு அபகரித்துப் போய் விற்றதும், வாங்கியதுமான குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் (Offence of Kidnapping a married woman for illicit inter course) இந்த விஷயத்தில் நீர் உடனே தக்க விசாரணைகளைச்செய்து குற்றவாளிகளான மூவரையும் கைதியாக்கிச் சிறைப்படுத்த வேண்டியது.

பெரிய தம்பி.

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தை நைனா முகம்மது முற்றிலும் படித்தான். அவனது மனம் மிகவும் குழம்பியது. பயத்தினால் கை கால்கள் நடுங்கின. முகத்தில் பிணக்களை தோன்றியது. கண்களை நம்பாமல் கடிதத்தை மேலும் இரண்டு முறை படித்தான். எழுத்து தன் மாமனாருடைய எழுத்தே என்பது நிச்சயமாகத் தெரிந்தது. போலீஸ் முத்திரையும் அதில் பதிந்திருந்தது. அவர் முதல் தரமான மந்திரவாதி என்று நினைத்து அப்படியே மயங்கிப் போனான். தடைகட்டப்பட்ட நாகப்பாம்பைப் போல் பிரமை கொண்டு விழித்தான். தன் மனைவி, எல்லா விஷயங்களையும் தனது தகப்பனாரிடம் சொன்னாளென்பதும் அவர் தன்னிடம் சிறிதும் தாட்சணியமின்றிப் பிரியாது எழுதியனுப்பிவிட்டாரென்பதும், சந்தேகமறக் கண்ணெதிரில் ருஜுவாய்ப் போயின; அந்த ஆபத்து வேளையில் தான் என்ன செய்வதென்பதை அறியமாட்டாமல் விழித்து மந்திரவாதியின் முகத்தை நோக்கி "இவைகளிலிருந்து நீங்கள்தான் என்னைமீட்க வேண்டும்." என்று கூறி சலாம் செய்து வேண்டிக்கொண்டான்.

மந்திர:—ஐயா! இதைப்பற்றி சிறிதும் கவலை கொள்ளவேண்டாம். இன்று ஒருபொழுது பொறுத்துக்கொண்டிருந்து, நாளைக்குக் காலையில் என்ன நடக்கிறதென்று பாரும். நீங்காத விபத்துகளையெல்லாம் நீங்கவைத்து பணியாதவர்களைப் பணியச் செய்வேன்; இன்று இரவில் பதினைந்து நாழிகை சமயத்தில் நான் சுடுகாட்டிற்குப் போய் ஜெபித்துக் காவுகொடுத்து பாதாள எட்சிணியை உச்சாடனம் செய்து விடுகிறேன். நீர் இன்றிரவே உமது வீட்டிற்குப் போய்ச் சேரும்; நாளைக்குக் காலையில் உமது மாமனாரும், மனைவியும் உம்மிடம் வந்து, உமது காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்பதன்றி, அவர்கள், நீர் சொல்லுவதுபோல் இனி எப்போதும் ஆடுவார்கள். நீர் எத்தனை வைப்பாட்டியை வைத்துக் கொண்டாலும் அவர்கள் அதற்கு

அநுசரணையாகவே இருப்பார்கள். தவிர, மகா பதிவிரதையைப்போல நடித்த அந்தப் பார்ப்பாரப்பெண்ணையும் வசியம்செய்து வைக்கிறேன். அவள் இனித்தன் வீட்டையும் புருஷனையும் நினைக்காமல் நீரே கதியென்று வந்து சேரும்படி செய்துவிடுகிறேன்; போதுமா" என்றார். அதைக்கேட்ட நைனா முகம்மது பெரிதும் மகிழ்ச்சியடைந்தவனாய் எழுந்து மந்திரவாதிக் கெதிரில் மண்டியிட்டு வணங்கி "மகானே! நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்வீர்களானால், என்னைப் போன்ற பாக்கியவான் யாரிருக்கப் போகிறான். தாங்கள் என்னிடம் ரூபா பதினாயிரம் கேட்டபோதிலும் தருகிறேன். தங்களுக்குப் பணம் தேவையில்லையாயினும், தாங்கள் வேறுயாருக்குக் 'கொடுக்கச் சொன்னாலும் கொடுக்கத் தடையில்லை" யென்று கூறி வேண்டினான்.

மந்திர.—இவைகள் எல்லாம் முடிந்து போனதென்றே நீர் நினைத்துக் கொள்ளலாம். எனக்குப் பணமே தேவையில்லை. நாளைக்குக் காரியம் முடிவானபின் மறந்துபோகாமல் நாகூர் தர்காவுக்கு இரண்டாயிரம் ரூபா அனுப்பிவிடும். தவிர, இந்த ஊரில் பதினாயிரம் பக்கிரிகளுக்கு மூன்று நாட்களுக்கு சாப்பாடுபோடும். அதுவே போதும்.

நைனா—அவசியம் அப்படியே செய்கிறேன். அந்தப் பிராம்மணப் பெண்ணும் நாளைக்கே என்னிடம் வந்து விடுவாளா?

மந்திர.—ஆகா! அவசியம் வருவாள். அவள் விஷயத்தில் இன்னொரு காரியமும் உமக்குச் செய்து கொடுக்கிறேன். அந்தப் பெண் இனிமேல் உம்மிடமிருப்பதை எவரும் கண்டுபிடிக்க முடியாமல் ஒரு தடைக்கட்டுச் செய்து தகடு தயாரித்துத் தருகிறேன். அதை அவளிருக்கும் வீட்டின் வாசற்படிக்குள் அடித்துவைத்தால், அவள் அந்த வீட்டிலிருப்பதை எவரும் காண முடியாது. ஒரு கால் அந்தத் தகட்டையே யாராயினும் அபகரித்துக் கொண்டு போய்விட்டாலும் சட்டம் உம்மைத் தொடாதிருக்கும்படி உமக்கு இன்னொரு காரியமும் செய்து வைத்துவிட்டுப் போகிறேன்.—என்றார்.

அவற்றைக் கேட்ட நைனா முகம்மது பூரித்துப் புளகாங்கிதமடைந்து மெய்ம்மறந்து அளவளாவினான். வணங்காமுடி மன்னரான தன் மாமனாரும், நூர்ஜஹானும் தன் காலில் வீழ்ந்து மன்னிப்புக்

கேட்பதாகவும், தான் அவர்களை அலட்சியம் செய்வதாகவும் அப்போதே மனதில் பாவித்துக் கொண்டான். மேனகாவை ஒருத்தனியான பங்களாவில் வைத்து அவளுடன் கொஞ்சிக் குலாவி சரசசல்லாபம் செய்து இன்புற்று வாழ்வதாக நினைத்து மனக்கோட்டை கட்டினான். "சரி; சட்டமும் தொடாமலிருக்கும்படி என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றான்.

மந்திர:—அதற்கு உங்களிடத்தில் ஒரு தஸ்தாவேஜு இருக்கவேண்டும். பெருந்தேவியம்மாள் பெண்ணுக்குத் தாயென்றும், சாமாவையர், பெண்ணுக்கு அண்ணனென்றும், பெண் கலியாணம் ஆகாத மைனரென்றும், அந்தப் பெண்ணை சவரட்சணை செய்யமாட்டாமையால் அவர்கள் அவளை உம்மிடம் விட்டுவிட்டதாயும், அவளை நீர் மகம்மதியப் பெண்ணாக்கி மணந்து கொள்ள அவர்கள் உமக்கு அநுமதி கொடுத்திருப்பதாயும் ஒரு கடிதம் அவர்களால் எழுதப்பட்டு, உம்மிடம்வந்து சேரவேண்டும். அதை நீர்வைத்துக் கொண்டிருந்தால், சட்டப்படி உம்மீது குற்றம் ஏற்படாது. அந்தப் பெண்ணின் புருஷன் உம்மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாது.

நைனா:—(சிறிது யோசனை செய்து) இது நல்ல யுக்திதான். ஆனால் அவர்கள் அந்த மாதிரி கடிதம் எழுதிக்கொடுக்க மாட்டார்களே. சாமாவையர் ஒருவேளை எழுதிக் கொடுத்தாலும் கொடுக்கலாம். அந்த அம்மாள் அதற்குச் சம்மதிக்கமாட்டாள். அதற்கு என்ன தந்திரம் செய்கிறது?

மந்திர.—அதற்கு நான் இருக்கிறேன். கவலைப்பட வேண்டாம்; என்னிடத்தில் ஒரு வகையான சொக்குப் பொடி இருக்கிறது. அவர்களிடம்போய் நான் பேசிகொண்டே, அந்தப் பொடியில் சிறிதளவு காற்றில் வீசினால், நான் சொல்வது போல அவர்கள் ஆடுவார்கள்; உடனே அந்த மாதிரியான கடிதம் எழுதி வாங்கிக்கொண்டு வருகிறேன். எல்லாவற்றிற்கும் நீர் சாமாவையருக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடும்.

நைனா:—அவருக்கு கடிதம் என்ன மாதிரி எழுதுகிறது?

மந்திர.—"பெண் சம்மதிக்குமென்று சொல்லிவிட்டுப் போனீர்கள். அறையில் பெண்ணை நீங்கள் விட்டுப்போன பிறகு நான் அங்கு வந்தேன். என்னைக் கண்டு பெண் நடுநடுங்கி, விஷயம் ஒன்றையும் அறியாதவளைப்போல நடித்து, தன்னை விட்டுவிடும்படி வேண்டினாள். நான் இணங்காமையால் அவள் என்னைப் பலவாறு தூஷித்தாள். நான் பலவந்தமாகப் பிடிக்கப் போகும்போது, அவள் எனக்கருகிலும் வாராமல் ஓடிஓடிக் கடைசியில் மாம்பழமறுக்கும் கத்தியை எடுத்து அதனால் தன்னைக் குத்திக்கொள்ளப் போனாள். நான் அருகிலும் நெருங்காமல் தூரத்தில்நின்று, குத்திக்கொள்ள வேண்டாமென்றும், அவளை நான் வெளியில் அனுப்பிவிடுவதாயும் சொல்லிவிட்டு வெளியில் போய்விட்டேன். அவளுடைய கூச்சலைக்கேட்ட என் மனைவி உடனே வந்து அவளை அழைத்துக் கொண்டு என்னுடைய மாமனார் வீட்டிற்குப் போய்விட்டாள். இப்போதும் அவள் ஜுரத்தோடு அவ்விடத்திலிருக்கிறாள். அவள் திரும்பவும் உங்கள் வீட்டுக்கு வந்தால், அது உங்களுக்கு ஆபத்தாய் முடியும். இந்தக் கடிதத்தை கொண்டு வருகிறவர் ஒரு மந்திரவாதி. இவருடைய உதவியால் அந்தப் பெண்ணை வசியம் செய்து திரும்பவும் அழைத்துக் கொள்ளப் போகிறேன். மேல் விவரங்களை இந்த மனிதர் சொல்லுவார்." என்று ஒரு கடிதம் எழுதி என்னிடம் கொடும். நான் இப்போதே போய் காரியத்தை ஒரு நொடியில் முடித்துக், கொண்டு வருகிறேன்.—என்றார்.

அந்த யோசனையைக் கேட்ட நைனா முகம்மது மிகவும் மகிழ்ச்சியடைந்தான். தனக்கு எவ்வகையான துன்பமுமின்றி எல்லா விஷயங்களையும் எளிதில் முடித்துத் தன் துன்பங்களையெல்லாம் தீர்த்து வைக்கும்படி நல்ல சமயத்தில் அந்த மந்திரவாதி வந்ததைக் குறித்து ஆநந்தங்கொண்டான். தான் மிகவும் நற்குணமுள்ளவனாகலாலும் பலருக்கு உதவி செய்பவனாகலாலும் ஆண்டவன் தனது ஆபத்தில் அந்த மந்திரவாதியை அனுப்பி உதவி செய்திருக்கிறாரென்று நினைத்துக் கொண்டான். உடனே எழுந்து அங்கிருந்த காகிதத்தை எடுத்து அவ்வாறே ஒரு கடிதம் எழுதி அதை மந்திரவாதியிடத்தில் கொடுத்தான். அதை வாங்கிக்கொண்ட மந்திரவாதி உடனே தன் கண்களை மூடிக்கொண்டு ஞான திருஷ்டியால் எதையோ பார்த்தார்; "சரி; சாமாவையர் இப்போது அவருடைய வீட்டிலேதானிருக்கிறார். இன்னம் அரை நாழிகையில் வெளியில் போய் விடுவார்; அதற்குள் நான் அவரிடம் போய் காரியத்தை முடிக்கிறேன்; இன்று இரவில், நான் சுடலையில் ஜெபிப்பேன். நாளைக் காலையில் அவர்கள் மூவரும் உம்முடைய வீட்டுக்குவந்து சேருவார்கள். நானும் அப்போது வந்து சாமாவையரால் கொடுக்கப்பட்ட பத்திரத்தைக் கொண்டுவந்து கொடுக்கிறேன்." என்று சொல்லிவிட்டு மந்திரவாதி எழுந்து உத்தரவு பெற்றுக்கொண்டு வெளியில் சென்றார். நைனா முகம்மது தனது அதிர்ஷ்டத்தை நினைத்து நினைத்து மனக்கிளர்ச்சியும், பூரிப்புமடைந்தவனாய் எழுந்து, அறையில் உல்லாசமாக மேல் நடக்கவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி திட்டங்கள் போட்டுக் கொண்டு அன்றைப்பொழுது கழியவேண்டுமே என்று ஆவல் கொண்டு பொழுதைப் போக்கினான்.

அந்த வீட்டை விட்டு வெளியில் வந்த மந்திரவாதி, இரண்டு மூன்று வீடுகளுக்கப்பாற் சென்று ஒரு திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, தன் பைக்குள்ளிருந்த ஒரு காகிதத்தையும் பென்சலையும் எடுத்து, சாமாவையர், பெருந்தேவி யம்மாள் ஆகிய இருவரும் எழுதிக் கொடுக்கவேண்டிய கடிதத்திற்கு ஒரு நகல் தயாரித்து எடுத்துக்கொண்டு அப்பாற் சென்றார். அங்கு நின்ற குதிரை வண்டியொன்றைக் கண்டு அதை திருவல்லிக்கேணிக்கு அமர்த்திக் கொண்டு சென்றார். வண்டி பகல் பதினொருமணிக்கு தொளசிங்கப் பெருமாள் கோவில் தெருவிலுள்ள சாமாவையர் வீட்டு வாசலில் அவரை விடுத்துச் சென்றது. மந்திரவாதி அந்த வீட்டின் நடையில் நின்றவண்ணம் "சாமி! சாமி!" என்று கூப்பிட்டான். உட்புறத்திலிருந்த சாமாவையரின் மனைவி மீனாட்சியம்மாள் "யார் அங்கே?" என்று சொல்லிக் கொண்டு நடைக்கு வந்தாள்.

மந்திரவாதிக்கும் மீனாட்சியம்மாளுக்கும் நடந்த சம்பாஷணையை விவரிக்குமுன், சாமாவையரைப் பற்றிய விவரங்கள் யாவற்றையும் கூறுதல் அவசியமாகிறது. திருவாரூரில் தாசி கமலத்தின் வீட்டில் கள்வர்களிடம் அகப்பட்டு, ரயில் தண்டவாளத்தில் கட்டப்பட்ட சாமாவையர், சாக்கு மூட்டைக்குள் உருண்டை வடிவமாயிருந்து ஹடயோகம் செய்துகொண்டிருந்தார். எந்த நிமிஷத்தில் ரயில்வண்டி தம்மீது ஏறுமோ, எந்த நொடியில், அருமையாக ஊட்டி

வளர்த்த தமது அழகிய தேகம், சக்கரங்களுக்கு இரையாகுமோ என்று நினைத்துப் பெருத்த திகிலும் அச்சமுங்கொண்டு மரணவேதனை யநுபவித்திருந்தார். வாய்க்குள் பெரிய துணிப்பந்து வலுவாக நுழைந்துகொண்டிருந்தமையால், கன்னம் தொண்டை முதலியவை எப்போது கிழிந்துபோகுமோ வென்னும் நிலைமையிலிருந்தமையால் அவருடைய முகத்திலிருந்த இரத்தக் குழாய்களும் நரம்புகளும் விண் விண்ணென்று தந்தி மீட்ட வாரம்பித்தன. மூச்சு ஒழுங்காக உட்சென்று வெளிப்படாமையால் திக்கு முக்காடியது; வயிறு உப்புசமடைந்து வெடிக்கும் நிலைமையை யடைந்தது. ஊற்றுக் கண்களிலிருந்து தண்ணீர் வருதலைப்போல, அவரது தேகத்திலிருந்து வியர்வை வழிந்து கொண்டிருந்தது; இத்தனை துன்பங்களுக்கும் வட்டியாக, அவர் விடப்பட்டிருந்த விடுதியில் எறும்புப் பாழிகளிருந்தன; பாசறைக்கு அணிவகுத்துச் செல்லும் படைகளைப் போலச் சென்ற கட்டெறும்புகளின் ஒழுங்கை சாமாவையரின் உடம்பு கலைத்தமையால் அவைகள் அவர்மீது சினங்கொண்டு, யாவும் அவர் உடம்பில் மொய்த்துக் கொண்டு கடிக்க வாரம்பித்தன. கயிற்றின் கட்டுகளால், அவருடைய தேகத்து இரத்த ஓட்டம் ஆங்காங்கு தடைப்பட்டுப் போனமையால், கைகால்கள் முதலியவை மரத்துப் போயின. அதனால் அநந்த கோடி ஊசிகள் கொண்டு குத்துதல் போன்ற உணர்ச்சி, உடம்பு முற்றிலும் உண்டாயிற்று; அவர் இத்தகைய நரகவேதனையிலிருந்து, இரவு இரண்டு மணி முதல், வதைபட்டுத்தவித்தார். ரயில் வந்து தம்மைக் கொன்றுவிடுமோ வென்று ஆரம்பத்தில் நினைத்து அதைப்பற்றிப் பெரிதும் அச்சங் கொண்டிருந்த சாமாவையர் நாழிகை செல்லச்செல்லத் தமது தேகத்தின் நரகவேதனையைப பொறுக்க மாட்டாதவராய் தமது உயிர் உடனே போய்விடுவதே நல்லதென நினைத்தார்; ரயில் சீக்கிரம் வரவில்லையே வரவில்லையே என்று எண்ணி எண்ணி அதையே ஜெபமாகச் செய்கிறார். ரயில் போவதன் ஓசையும், இஞ்சின் ஊதுகிற ஓசையும் அருகில் அடிக்கடி கேட்டன. இதோ ரயில் வந்துவிட்டது. அடுத்த நிமிஷம் தமது நரகவேதனை ஒழிந்து போகுமென்று நினைக்கிறார். அதே நிமிஷத்தில் அதற்கு மாறாக நினைக்கிறார். பூலோகத்தில் சுகங்களையெல்லாம் அநுபவியாமல் தாம் அகால மரண மடையப்போவதை நினைத்து விசன மடைந்து விம்மி விம்மி யழுகிறார். மனதார அழவும் அவரால் கூடாமற் போனது. விடுவித்துக் கொள்ளக்கூடுமோவென்று நினைத்து தமது உடம்பை உருட்ட நினைத்தார். மூட்டை

தண்டவாளத்தோடு இறுகப் பிணிக்கப்பட்டிருந்தமையால் அவருடையதேகம், சிறிதும் அசையவில்லை. ஐயோ! அந்த ஓயா மரணவேதனையிலிருந்து தத்தளிப்பதைவிட உடனே உயிரை விடுவதே நல்லதென நினைக்கிறார். ரயில் வந்து தம்மீது மோதி தமதுடம்பை ஒரே அடியில் சக்கை சக்கையாகக் கிழித்தெறிந்துவிடாதோ வென்று தபசு செய்கிறார். அடிக்கடி ரயிலின் ஓசை யருகிலுண்டாகிறதன்றி அவரதுகோரிக்கை நிறைவேற வில்லை; திருவாலூர் நான்கு வண்டிகள் வந்து கூடும் நாற்சந்தியாகையாலும், சாமான் வண்டிகள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றப்பட வேண்டுமாதலாலும், அருகிலிருந்த ஸ்டேஷனிலிருந்து வண்டிகளின் ஓசைகேட்டுக்கொண்டே இருந்தது. தஞ்சையிலிருந்து திருவாலூருக்கு ரயில் போகும் பாதையிலேயே தாம் கட்டப்பட்டிருப்பதாக அவர் நினைத்தார். ஆனால் அதில் நெடுநேரமாக ரயில்வாராமையால், இரவு இரண்டு மணிக்குப்பிறகு அந்தப்பாதையில் வண்டி வருவதில்லையோ வென்று ஐயமுற்றார். ஆனால் விடியற்காலம் ஐந்து மணிக்கு திருவாலூரிலிருந்து தஞ்சைக்கு ரயில் போவதுண்டென்பதை அவர் நிச்சயமாக அறிவார். அந்த நேரம் வரையில் தாம் அவ்வாறு நரகவேதனை யடைந்திருக்கவேண்டுமோ என்று நினைத்து மன முடைந்தவராய் ஏங்கிக் கிடந்தார். விடியற்காலம் வரும் வண்டியில் தாம் ஒருகால் அரை குறையாய் நறுக்கப்பட்டு, இன்னம் அதிகரித்த சித்திரவதை யனுபவிக்க நேருமோ வென்னும் சந்தேகமும் அப்போதைக் கப்போது அவர் மனதி லெழுந்து வாட்டியது. முதல் நாள் காலையிலிருந்து இரவு ஒரு மணி வரையில் தாம் அநுபவித்த சுகங்களையும் தாமிருந்த உன்னத நிலைமையையும் பற்றி எண்ணி எண்ணிப் பரிதபித்தார்; வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி உடைதலைப் போல், தாம் பங்களாவை வாங்கிக் அதில் கமலத்தை வைத்துக் கொண்டு மகோன்னத தசையிலிருந்து சுகமநுபவிக்க நினைத்த காலத்தில் கள்வர் தோன்றி தமது எண்ணத்தில் மண்ணைப் போட்டு விட்டதைப் பற்றி நினைத்து நினைத்து உருகினார். தமது அதிர்ஷ்டஹீனத்தையும் தம்மையும் மனங்கொண்ட மட்டும் தூற்றிக் கொண்டார்; கள்வர் வந்தது கமலத்தின் தூண்டுதலினாலென்பதை அவர் நினைக்கவில்லை. அவர்கள் தற்செயலாக வந்தவர்களென்றே நினைத்திருந்தார். கொடியவராகிய அக்கள்வர் தம்மை

வதைத்ததைப்போலக் கமலம் முதலிய இருவரையும் கட்டிப் போட்டு விட்டு, அவர்களுடைய சொத்துக்களை யெல்லாம் கொண்டுபோயிருப்பார்களென்று நினைத்து அவர்கள் விஷயத்தில் மிகுந்த இரக்கமும் துக்கமும் கொண்டார். கண்கொள்ளா வனப்பையும் மனங்கொள்ளாக் காதலையுங் கொண்டு இரதி தேவிபோலிருந்த அந்தப் பெண்மணியின்மீது தாம் கொண்ட விருப்பம் நிறைவேறாமல் போனதை நினைத்து உருகினார்; விடியற்காலம் ஐந்து மணி சமயம் வரவேண்டுமே என்றும் வந்து விடுமே என்றும் மாறி மாறி நினைத்து சகிக்கவொண்ணா நிலைமையிலிருந்தார். விடியற்காலம் ஐந்து மணியும் கழிந்தது. ரயிலோ அவர்மீது ஏறவில்லை. ஆனால் அது செல்லும் ஓசை கேட்டுக் கொண்டே இருந்தது. அன்றைக்கு தமது அதிர்ஷ்டத்தினால், தாமிருந்த பாதை பழுது பட்டுப்போனதோவென்றும், ஆதலால், அதில் வண்டி வாராமற் போனதோவென்றும் நினைத்தார். பொழுது மேலும் சென்றது; கதிரவன் குணதிசையி லெழுந்தான்; படிப்படியாக, வெயிலும் அவர் உடம்பில் எரிக்கத் தொடங்கியது. பகலின் ஆரவாரமும், மனிதரின் பேச்சுக் குரலும் எங்கும் எழுந்தன. மனிதர் போவதும் வருவதுமாயிருப்பது அவர்களுடைய சம்பாஷணையால் புலப்பட்டது. அவர் உடனே கூச்சலிட முயன்றார்; அது பலிக்கவில்லை. அவர் மூட்டையாகக் கட்டப்பட்டுக் கிடந்ததை எவரும் கவனித்ததாகவும் தோன்றவில்லை. அவ்வாறு பகல் பத்து மணி சமயமானது. ரயில் சிப்பந்திகளான யாரோ இரண்டு மனிதர் அவருக்கு மிகவும் அருகில் பேசிய குரல் கேட்டது.

“அடே கண்ணுச்சாமி! இதென்னடா மூட்டை!” என்று ஒருவன் வியப்போடு கூறிய வண்ணம் அருகில் ஓடி வந்தான்.

கண்ணு:—ஆமடா கந்தா இது நேத்து இல்லேடா! இது யாரோடெ வேலையோ தெரியலேடா.

கந்தன்:—தண்டவாளத்துலே கட்டியிருக்குதுடா! (காலால் மூட்டையைப் புரட்டி) அடேடே! பொணம் மாதிரி இருக்குதுடா! கொலை நடந்திருக்குதுடா!—

“கண்ணு:—அசையுதுடா! உயிர் இருக்குது. மூட்டையெ அவுடா.—என்றான்.

உடனே இருவரும் விரைவாக மூட்டைக்கருகில் நெருங்கி மிகவும் பாடு. பட்டுக் கட்டுக்களையும் சாக்கையும் விலக்கினர். துவண்டு வாடி வதங்கி மூச்சுவிடமாட்டாமல் கண்களை மூடிக்கொண்டு அசைவற்று மூர்ச்சித்துக் கிடந்த ஐயரை கோணிப் பையிலிருந்து வெளியில் இழுத்துப் போட்டனர். அவருடைய வாயிலிருந்த துணிப்பந்தை விலக்கினர். மடங்கிக்கிடந்த கைகளையும் கால்களையும் நன்றாக நீட்டிவிட்டனர். “அடே யாரோ பெரிய மனிசருடா!” உயிர் இருக்குதுடா! அடே கந்தா! ஓடிப்போய் தண்ணி கொண்டாடா.” என்றான் கண்ணுச்சாமி. கந்தன் ஓடிப்போய் ஒரு செம்பில் தண்ணீர் கொணர்ந்தான். அந்த அமுதசஞ்சீவி ஐயரது வாயில் விடப்பட்டது; முகத்திலும் தடவப்பட்டது. கைகால்களின் மரப்பு நீங்கவாரம்பித்தது. மூச்சும் ஒழுங்குப்பட்டது. உணர்வைப் பெற்ற ஐயர் பிரம்மாநந்த மனுபவிப்பவரைப்போலானார். என்றாலும் வாயும் உடம்பும் பச்சைப் புண்ணாயிருந்தமையால், பத்து நிமிஷநேரம் பேச மாட்டாமலும், அசையமாட்டாமலும் தரையில் கிடந்தார். பிறகு கண்களை மெல்லத்திறந்து அருகிலிருந்த உயிர்கொடுத்த பேருபகாரிகளை நன்றியோடு நோக்கினார். நாற்புறங்களையும், தானிருந்தவிடத்தையும் கவனித்துப் பார்த்தார். தாம் அதுவரையில் ரயிலில் அறைபட்டுக் கொல்லப்படாததன் காரணம் என்னவென்பதை அப்போதே அறிந்தார். அந்த ஸ்டேஷன் நான்கு ரயில்கள் கூடும், நாற்சந்தியென்பது முன்னரே கூறப்பட்டதல்லவா? அந்த ஸ்டேஷனில் ரயில் வண்டிகளும், சாமான் வண்டிகளும் ஒதுக்கப்படுவதற்கு, இருபது முப்பது பாதைகள் அரை அரை பர்லாங்கு தூரத்தில் அமைக்கப்பட்டிருந்தன. தஞ்சைக்கு ரயில் போகும் முக்கியமான பாதை நெடுந்தூரத்திற்கப்பாலிருந்தது. அவரிருந்த பாதை, வண்டி ஒதுக்கப்படும் பாதைகளிலொன்று. கள்வர் குடி வெறியில் அதைக் கவனியாமல் முதலிலிருந்த பாதையில் அவரைக் கட்டிவிட்டுச் சென்றனர். அந்த உண்மையையூகித்துணர்ந்த சாமாவையர் பெரிதும் சந்தோஷமடைந்தார்; மெல்ல வாயைத்திறந்து, “நீங்கள் இன்னும் ஐந்து நிமிஷம் வாராதிருந்தால், என் உயிர் போயிருக்கும். எனக்கு உயிர் கொடுத்த மகா உபகாரிகளான உங்களுக்கு நான் என்ன பதிலுதவி செய்யப் போகிறேன். இந்த ராஜ்ஜியம் என்னுடையதாயிருந்தால் அப்படியே உங்களுக்குக் கொடுத்திருப்பேன்” என்று எழுந்து உட்கார்ந்தார். இன்னமும் உடம்பு சரியான நிலைமைக்குவாராமையால் எழுந்திருக்கக்

கூடவில்லை. நிற்க அவருடைய இடையில் கோவணமொன்றே யிருந்தமையால் எழுந்திருக்கவும் வெட்கினர்.

அவர் சொன்னதைக் கேட்ட கந்தன் “யார் சாமி இப்படிச் செய்தது? தங்களுடைய ஊர் எது சாமி?” என்றான்.

சாமாவையர் “அப்பா! நானிருப்பது பட்டணம். வர்த்தக விஷயமாக நாகைப்பட்டணத்துக்குப் போகிறவன். ராத்திரி ஒருமணி வண்டியில் இறங்கி திருவாரூரில் ஒரு சிநேகிதர் வீட்டில் தங்கினேன்; அங்கே கொள்ளைக்காரர் வந்து, என்னிடமிருந்த பதினாயிரம் ரூபாயையும் எடுத்துக்கொண்டு, என்னைக் கட்டிக்கொண்டு வந்து இங்கே போட்டு விட்டார்கள். நீங்கள் எனக்கு உயிர் கொடுத்தது பெரிதல்ல. என்னுடைய் மானத்தைக் காப்பாற்ற இரண்டு துணிகளும், நாகைப்பட்டணம் போக ஒரு டிக்கட்டும் வாங்கிக் கொடுப்பீர்களானால், நான் அதை மறக்கமாட்டேன். நாகைப்பட்டணம் போனவுடன் அவைகளின் கிரயத்தை யனுப்பி விடுகிறேன்” என்று கெஞ்சி மன்றாடினர். அதைக்கேட்ட கந்தன் “ஐயோ பாவம்! ஐயருடா! பெரிய மனிசரு வந்து மாட்டிக் கிட்டாருடா! நீ நம்ப விசயபுரம் மாணிக்கம்பிள்ளை கடைக்கு ஓடி கடனு ரெண்டு துணி எடுத்துக் கிட்டுவா; நான் டிக்கட்டு வாங்கிக் கிட்டுவாரேன்.” என்றான். உடனே இருவரும் தலை தெறிக்க ஓடி மறைந்து போனார்கள். தனிமையில் விடப்பட்ட சாமாவையர் எண்ணமிடலானார். தாம் அப்படியே நேராக நாகைப் பட்டணம் போகிறதா, அல்லது கமலத்தின் வீட்டுக்குப் போய் அவளுடைய செய்தியை அறிந்துகொண்டு போகிறதா வென்று யோசனை செய்தார். எப்படியாயினும் கமலத்தை இன்னொரு முறை தாம் பார்க்காவிட்டால் தமது ஆசை தீராதென்றும் தமது ஜன்மம் கடைத்தேறாதென்றும் நினைத்தார். என்றாலும் தாம் அப்போது ஏழ்மை நிலைமையிலிருப்பதால், அவளிடம் போனால் மதிப்பு ஏற்படாதென்றும், சென்னைக்குப்போய், பணம் கொண்டுவரவேண்டுமென்றும் முடிவு கட்டிக் கொண்டார். டிக்கட்டை வாங்கிக்கொண்டு, நாகைப்பட்டணம்போய் கப்பல் வியாபாரியிடத்தில், தமது பணம் களவாடப்பட்டதைக் கூறி, சென்னைக்குப் போகச் செலவாகும் பணத்தை அவரிடம் கடன் வாங்கிக் கொண்டுபோக நினைத்தார். கால் நாழிகையில்

கண்ணுச்சாமியும், கந்தனும் திரும்பி ஓடிவந்தனர். இரண்டு துணிகளும், டிக்கட்டும் கொடுக்கப்பட்டன. அந்த மனிதரின் பரோபகார குணத்தையும் அன்பையுங்கண்டு “ஆகா! ஏழைகளே ஆபத்துக்காலத்தில் உதவி செய்வார்கள். பணக்காரர்கள் கல் நெஞ்சர்கள்; அப்பா! உங்களுடைய நல்லகுணத்துக்கு, ஈசுவரன் ஒருகுறையையும் வைக்க மாட்டான். நான் போய் உடனே பணத்தை அனுப்புகிறேன். எவ்வளவு பணம் அனுப்பவேண்டும்?” என்றார்.

கண்ணுச்சாமி “எல்லாம் நாலேகால் ரூபா ஆச்சு சாமி” என்றான்.

சாமாவையர் “சரி; நான் நாகைப்பட்டணம் போனவுடன் தபாலில் ரூ. 10 அனுப்புகிறேன். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்” என்றார். எழுந்து நின்று துணிகளை வாங்கியணிந்தார். டிக்கட்டை வாங்கிக் கொண்டார். ஸ்டேஷனை நோக்கி நடந்தார். அந்த இரண்டு மனிதரும் அவர்மீது இரக்கங்கொண்டு அவருடன் சென்று அடுத்த ரயில் வருகிற வரையில் அவருடன் காத்திருந்து கும்பிடு போட்டு வழியனுப்பிவிட்டுத் திரும்பினர். சாமாவையர் மறைந்து போன பின் கந்தன் “ஏண்டா கண்ணுச்சாமி! ஐயர் பணம் அனுப்புவதாகச் சொன்னாரே; நம்ப மேல்விலாசம் தெரியாதே; எப்படி அனுப்பப் போறார்?” என்றான். அதைக்கேட்ட கண்ணுச்சாமிக்கும் அந்த விஷயத்தில் அப்போதுதான் பெருத்த சந்தேகமுதித்தது. என்றாலும் அவன் தைரியத்தை இழக்கவில்லை “அடே! ஐயரு நல்லவருடா பணத்தை எப்படியாவது கட்டாயம் அனுப்புவாருடா” என்றான். கந்தசாமியும் அதை நம்பினான். அப்புறம் இருவரும் அதைமறந்து தமது வேலையைக் கவனித்தனர்.

இரயிலிற் சென்ற சாமாவையர் நாகைப்பட்டணம் போய், கப்பல் வியாபாரியிடத்தில் தமது பணம் களவாடப்பட்டுப் போனதாகக் கூறி, சென்னைக்குப் போகத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொண்டு ரயிலேறினர். திருவாரூரிலிருந்து நாகைக்குப் போன போது அந்த இரண்டு மனிதருக்கும் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்னும் நினைவோடுதான் சொன்னார். ஆனால் நாகைப்பட்டணம் போய் கப்பல் வியாபாரியிடத்தில் தம்முடைய சொந்தச் செலவுக்குப் பணம் கடன் வாங்கியபோது, அந்த இரண்டு

உபகாரிகளுக்கும் பணம் அனுப்ப வேண்டுமென்பதை மறந்துவிட்டாராகையால் அவர்களுடைய மேல்விலாசத்தை அறிந்துகொள்ளாமல் வந்துவிட்டோமே என்னும் விசனமும் அவருக்கு உண்டாக சந்தர்ப்பம் ஏற்படாமற்போனது. அடுத்த வண்டியில் ஏறி மறுநாள் சென்னைக்கு வந்து ஏழையிலும் பரம ஏழையாய்த் தமது வீட்டையடைந்தார். பங்களாவில் கமலத்துடன் சுவர்க்கபோக மநுபவிக்காவிடினும், தமது சொந்த வீட்டையடைந்து மீனாட்சியம்மாளையாவது கண்டு தமது பழைய சுகமான அற்ப சுகத்தையாவது அடையமாட்டோமாவென்று ஏங்கி வந்தவராதலின், அவரது பழைய நிலைமையே அவருக்கு அப்போது பரமபதமாகத் தோன்றியது. என்றாலும், வெட்கம் ஒருபுறம் வதைத்தது; துக்கம் இன்னொருபுறம் வருத்தியது. அழுகை நெஞ்சையடைத்தது. நெடுநாட்களாக எவ்வளவோ பாடுபட்டு மூடர்களான பெருந்தேவியம்மாள் முதலியோரை வஞ்சித்து அபகரித்தபொருள் ஒரு நிமிஷத்தில் கனவைப்போல மறைந்து போனதைப் பற்றி நினைத்து நினைத்து ஓலமிட்டு அழுதார். முடி முக்காடிட்டு ஒரு மூலையிற் படுத்தவர் எழுந்திருக்க இரண்டு நாட்களாயின. அந்த இரண்டு நாட்களுக்குள் எண்ணாத எண்ணமெல்லாங் கொண்டார்; புரண்டார்; அழுதார்; கதறினார், பதறினார். அவர் பட்டபாடுகள், களவாடப்பட்ட பொருளைத் திருப்ப வல்லமையற்றிருந்தன. அடிக்கடி பெருந்தேவியின் நினைவு மனதில் தோன்றியது. "நானே பணத்தை எளிதில் அபகரித்துத் திருடரிடம் கொடுத்தேன். பெருந்தேவி, எத்தனையோ வருஷங்களாகச் சேர்த்துச் சேர்த்து முன்னூறு பவுன்களை இரவு பகலாய் இடுப்பிற் கட்டிச் சுமந்தவள்: தவிர பணத்தின்மேல் கொண்ட பேராசையால் தன் சொந்தத் தம்பியின் பெண்டாட்டியை துலுக்கனிடம் விற்றதான கேவலமான காரியம் செய்து பணம் சம்பாதித்தவள்; பணம்போய் விட்டதென்பதை அவள் கேட்பாளாயின், அவள் அதை நம்பவும் மாட்டாள். தாடகை, சூர்ப்பனகை வேஷமெடுத்து என்னோடு மடிபிடித்துச் சண்டைக்கு வந்து விடுவாள். தெருவெல்லாம் சிரிக்கும். அதனால் இரகசியமெல்லாம் வெளியாய்விடும். கடைசியில் பெருந்துன்பமும் ஜெயில் வாசமும் கிடைக்கும்" என்று நினைத்தார். ஆகையால், அவளை எப்படியாவது வஞ்சித்துவிட்டு, அவள் தம்மைக்கண்டு பிடிக்க முடியாத வேறிடத்திற்குத் தாம் போய்விட வேண்டுமென்று நினைத்தார். "பெருந்தேவியோ பங்சளா பங்களா வென்றே ஜெபம்

செய்து, எப்போது அதற்குப் போவோமென்று ஆவல் கொண்டிருக்கிறாள். ஆகையால் எப்படியாவது தந்திரம் செய்து அவளை பங்களாவில் குடிவைத்துவிட்டு, வரதாச்சாரியின் பெண்ணையும் வராகசாமிக்குக் கூடிய சீக்கிரம் கலியாணம் செய்து வைத்துவிட்டு சொல்லாமல் இராத்திரியில் ஓடிப்போக வேண்டு"மென்று தீர்மானித்துக் கொண்டார். பங்களாவின் திறவுகோல் தோட்டக் காரனிடத்திலிருந்தது. சாமாவையர் சாயப்புவினிடம் குமாஸ்தாவென்பதையும், கப்பல் காரருக்கு நட்பானவரென்பதையும் தோட்டக்காரன் அறிந்தவன். ஆகையால் உடனே அவனிடம் போய், கப்பல் காரருடைய அநுமதியின்மேல் பங்களாவை ஒருவருக்கு வாடகைக்கு விட்டிருப்பதாகக் கூறி, திறவுகோலை வாங்கிவந்து பெருந்தேவியிடம் கொடுத்து அவளை அதில் உடனே குடிவைத்துவிடத் தீர்மானித்தார். தவிர, அவள் பங்களாவின் கிரயப் பத்திரமெங்கே என்று கேட்பாளாதலின் அதற்கு ஒரு தந்திரம் செய்ய வேண்டுமென்று அதைப் பற்றி இரவு முழுதும் சிந்தனை செய்து ஒருவகையான முடிவிற்கு வந்தார். அவருக்கு மிகவும் நண்பனான ஒரு ஏழை முகம்மதியன் இருந்தான். அவனிடம் சென்று ரூபாய் நூறு கொடுத்து, ஒரு நாளைக்குக் கப்பல்கார சாயப்புவாக நடிக்கும்படி தூண்டினார். அவன் தனது தரித்திரக் கொடுமையால் அதற்கிணங்கினான். ஒரு எழுத்துக் கூலிக்காரனால் விக்கிரயபத்திரமும் எழுதி முடிக்கப்பட்டது. மறுநாள் பத்து மணிக்கு ஐயர் நன்றாக உண்டு உடுத்திக் கொண்டு, விஷயங்களை ஒருவாறாகத் தமது மனைவியிடத்திற் சொல்லி விட்டு தாம் சப்ரிஜிஸ்டிரார் கச்சேரிக்குப் போய் விட்டு வருவதாகச் சொல்லி விட்டுப்போய் விட்டார். அவ்வாறு அவர் போன பிறகு இரண்டொரு நாழிகைகழிய நமது மலையாளத்து மந்திரவாதி சாமாவையர் வீட்டிற்கு வந்து, முற்கூறப் பட்டவாறு அவரை அழைத்தார்; அதைக்கேட்டு "யார் அங்கே?" என்று கேட்டுக் கொண்டு நடைக் கதவண்டை வந்து பார்த்த மீனாட்சியம்மாள், ஒரு மகம்மதியர் நின்றதைக் கண்டாள். ஆஜானுபாகுவாக உயர்ந்து பெருத்திருந்த அவருடைய சரீரம், பெருத்த தலைப்பாகை, அடர்ந்து நீண்ட தாடி, மை தீட்டப்பட்ட கண்கள் முதலியவற்றைக் கண்டு ஒருவாறு அச்சங் கொண்டவளாய் "என்ன சங்கதி? நீர் யார்?" என்று மெல்லக் கேட்டாள்.

மந்திரவாதி "ஐயர் இருக்கிறாரா?" என்றார்.

அம்மாள் "இல்லை; நீர் யார்?" என்றாள்.

மந்திர:—நான் நைனாமுகம்மது எஜமானிடமிருந்து வந்திருக்கிறேன். அவர் நாலு நாளைக்கு முன் ஐயரை அழைத்து வரும்படி ஒரு ஆளையனுப்பினாராம்; ஐயர் மைலாப்பூர் பங்களாவை வாங்குவதற்கு நாகைப்பட்டணம் போயிருப்பதாகச் சொன்னீர்களாம். இப்போது ஐயர் வந்து விட்டாரா பங்களாவை வாங்கி விட்டாரா என்பதை அறிந்து வரச்சொல்லி என்னை அனுப்பினார்.—என்றார்.

அதைக் கேட்ட அம்மாள் யோசனை செய்யாமல் அவசரப்பட்டு "பணமெல்லாம் ரயிலில் திருட்டுப்போய் விட்டதாம்; பங்களா வாங்கவில்லை; வந்து விட்டார்" என்று விசனத்தோடு கூறினாள்.

மந்திரவாதி மிகுந்த வியப்பைக் காட்டி "என்ன ஆச்சரியம்! திருட்டுப் போய் விட்டதா! எத்தனை ரூபாய் போய் விட்டது?" என்றார்.

மீனாட்சி:—பதினாயிரம் ரூபாய் போய் விட்டது. ரயிலில் மாயவாத்திலிருந்து திருவாரூருக்குப் போனாராம். வழியில் கொஞ்சம் தூங்கிவிட்டாராம். யாரோ மூட்டையை எடுத்துக்கொண்டு போய் விட்டார்களாம்.

மந்திர:—அடாடா! அவ்வளவு பணம் போய்விட்டதா; எஜமான் கேட்டால், நிரம்ப விசனப்படுவார். இப்போது ஐயர் உள்ளே இருக்கிறாரா?

மீனாட்சி:—இல்லை; சப்ரிஜிஸ்டிரார் கச்சேரிக்குப்போயிருக்கிறார். இன்னம் ஒரு நாழிகையில் வந்து விடுவார். அப்படித் திண்ணையில் உட்கார்ந்து கொள்ளும்.

மந்திர:—உட்கார எனக்கு நேரமில்லை. சீக்கிரம் வருவாரோ அதிக நேரம் பிடிக்குமோ? யாருக்காவது சாட்சி சொல்லப்போனாரா? அல்லது வேறு என்ன அலுவலாய்ப்போனார்?

மீனாட்சி:—பங்களாவை வாங்கும் விஷயமாகத்தான் போயிருக்கிறார்; எனக்கு விவரம் தெரியாது. அவருடைய விசனத்தில் அதிகமாக ஒன்றையும் சொல்லவில்லை.

மந்திர:—நாகைப்பட்டணத்திலிருந்து கப்பல்கார மரக்காயரும் வந்திருக்கிறாரா? அல்லது ஐயர் மாத்திரம் திரும்பி வந்தாரா?

மீனாட்சி:—வேறு யாரும் வரவில்லை. எல்லாவற்றிற்கும் நீர் திண்ணையில் இருந்தாலும் சரி; வேறு எங்கேயாவது வேலை யிருந்தால் போய் விட்டு வந்தாலும் சரி. இன்னம் ஒரு நாழிகைக்குள் ஐயரைக் காணலாம்.

மந்திர:—சரி, நான் போய்விட்டு மறுபடியும் வருகிறேன்; ஐயர் வந்தால் இருக்கச் சொல்லுங்கள்—என்று சொல்லி விட்டு வெளியில் நடந்தார்; நாலைந்து வீடுகளுக்கப்பால் சென்ற மந்திரவாதி, சாமாவையருக்கு சப்ரிஜிஸ்டிரார் கச்சேரியில் என்ன வேலை யிருக்கலாமென்று சந்தேகித்தார். பங்களா விஷயமாகப்போயிருக்கிறாரென்றும், ஆனால், கப்பல் வியாபாரி வரவில்லையென்றும் அம்மாள் சொல்லுகிறாள். கப்பல் வியாபாரி இல்லாமல் பங்களாவை அவர் எப்படி வாங்கக் கூடும் என்று நினைக்க நினைக்க, மந்திரவாதியின் மனதில் சந்தேகம் வலுத்தது; சாமாவையரின் வரவை எதிர்பார்த்து ஓரிடத்தில் நின்று கொண்டிருப்பதைக் காட்டிலும், அருகிலிருந்த சப்ரிஜிஸ்டிரார் கச்சேரிக்குப் போய் விட்டு வரலாமென்று தீர்மானித்துக் கொண்டார். மேலே நடந்து சென்று ஐந்து நிமிஷத்தில் அந்தக் கச்சேரிக்கு வந்து சேர்ந்தார். அவ்விடத்தில் நூற்றுக் கணக்கில் மனிதர் கூடியிருந்தனர். தம்மைக் கண்டு எவரும் சந்தேகியாதபடி, மந்திரவாதி ஜனத்திரளில் கலந்து மறைந்து கொண்டார். ஒரு மூலையில் சாமாவையரும், பெருந்தேவியம்மாளும் உட்கார்ந்திருந்ததைக் கண்டார். தம்மை ஐயர் பார்க்காமலிருக்கும்படி வேறு திக்கில் தமது முகத்தைத் திருப்பிய வண்ணம், அவர்களின் சம்பாஷணையைக் கவனித்திருந்தா. அரைநாழிகை சென்றது. அது வரையில் வேறு பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டன. அப்போது சேவகன் வாசற்படியில் நின்று கொண்டு "க்ப்பல்கர்ர நூர்முகம்மது மரக்காயர்!" என்று கூவினான்; உடனே சாமாவையர் பெருந்தேவியம்மாள் ஆகிய இருவரும் தடபுடலாக எழுந்தனர். கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒரு முகம்மதியர் உட்புறம் நுழைந்தார்; அவருக்குப் பின்னால் சாமாவையரும், இன்னொரு மனிதரும் தொடர்ந்து உட்புறம் சென்றனர். அந்த மகம்மதியர் மிகவும் விலையுயர்ந்த ஆடைகளை யணிந்திருந்

தார்; ஆனால் அவருடைய உடம்பு மிகவும் இளைத்து சுகவீனத்தைக் காண்பித்தது. தேகம் கறுப்பாயும், தசைப்பிடிப்பற்றதாயும், முரடாயும், அநாகரிகமாயும் காணப்பட்டது. அவருடைய உடைகள் மாத்திரம், அவர் பெரிய மனிதரென்பதைக் காட்டியதன்றி அவருடைய தோற்றம் பக்கிரித் தோற்றமாயிருந்தது. அவர் உள்ளே சென்று சப்ரிஜிஸ்டராருக்கெதிரில் நின்றவுடன், விசாரணை தொடங்கியது.

சப்:ரிஜி:— நீர்தன் நூர்முகம்மது மரக்காயரா?

முகம்மதியர்:—ஆம். நான்தான்.

சப்:ரி:—உம்முடைய ஊர் எது?

முக:—நாகைப்பட்டணம்,

சப்ரி:—தகப்பனார் பெயரென்ன?

முக:—கச்சி மொகிதீன் மரக்காயர்.

சப்ரி:—உம்முடைய தொழில் என்ன?

முக:—கப்பல் வியாபாரம்.

சப்ரி:—மைலாப்பூரிலுள்ள உம்முடைய புராதன பங்களாவை பெருந்தேவியம்மாளுக்கு விற்கிறீரா?

முக:—ஆம்.

சப்ரி.—எத்தனை ரூபாய்க்கு?

முக:—10500 ரூபாய்க்கு.

சப்ரி:—முழுத்தொகையையும் பெற்றுக்கொண்டீரா?

முக:—ஆம்; வாங்கிக்கொண்டேன்.

சப்ரி:—பத்திரத்தை பதிவு செய்து விடலாமா?

முக:—ஓ! செய்யலாம்.

சப்ரி:—சரி; இரண்டு சாட்சிகள் யார் யார்?

முக:—இதோ ஐயர் ஒருவர்; அதோ செட்டியார் இன்னொருவர்.

என்று, பக்கத்தில் நின்ற இருவரையும் சுட்டிக்காட்டினார். செட்டியாருக்கு அந்தக் கச்சேரியில் சாட்சி சொல்வதனாலேயே ஜீவனம் நடந்தது. ஒரு நாளைக்கு 10 பத்திரங்களுக்கு சாட்சி சொல்லுவார்; ஒவ்வொரு பத்திரத்திற்கும் நான்கணா எட்டணா வீதம் ஒவ்வொரு நாளைக்கு இரண்டு மூன்று ரூபாவரையில் சம்பாதித்தார். ஆனால் ஒருநாளைக்கு ஐந்து ரூபாய்க்குக் குடிப்பார். அவர் மாலையில் வீட்டுக்கு வரும்போது, அவரை இரண்டொரு குடிக்கும் நண்பர்கள் தூக்கிக்கொணர்ந்து வீட்டில் விட்டுப்போவார்கள். அவரை சப்ரிஜிஸ்டிரார் நன்றாக அறிவாராயினும் அவர் குடிப்பதை அறியமாட்டார். ஆனால் அவரைக் காணும்போதெல்லாம், அவரிடம் புரளியாகப் பேசுவார்; என்னவோ ஏழை பிழைத்துப் போகட்டுமென்று, அவருடைய சாட்சியத்தை ஏற்றுவந்தார். வழக்கப்படி அவரைக் கண்டு, சப்ரிஜிஸ்டிரார் நகைத்து “ஓகோ! செட்டியாரா! வாரும்; செட்டியார் இல்லாத பத்திரமுமில்லை; உலகத்தில் அவருக்குத்தெரியாத மனிதருமில்லை. கப்பல்காரர் முதல் பிச்சைக்காரர் வரையில் செட்டியாருக்குத் தெரியும் “செட்டியாரே வாரும் இப்படி; (சிரித்துக்கொண்டு) உமக்கு மரக்காயரைத் தெரியுமா? உம்மைக்கேட்கவே வேண்டியதில்லை. நீர் யாரைத்தான் தெரியாதென்று சொன்னீர்? இந்த மரக்காயரை உமக்கு எப்படி ஐயா! தெரியும்?” என்றார். செட்டியார் பல்லைக் காட்டிக் கெஞ்சி நயந்து நிருத்தனம் செய்தார். “தெரியும்; அடிக்கடி ஐயர் வீட்டுக்கு வருவார், பார்த்திருக்கிறேன்” என்றார்.

சப் ரிஜிஸ்டிரார்:—சரி ஒழிந்து போகட்டும். இப்படி வாருங்கள்; உங்கள் இரண்டு பேருக்கும் இந்த சாயப்புவைத் தெரியுமா?

செட்டியார் }
ஐயர் } :— தெரியும்.

சப் ரிஜி:—இவர் கப்பல்கார நூர்முகம்மது மரக்காயர் தானா?

செட்டியார் }
ஐயர் } ; ஆம்.

சப் ரிஜி: இவர் பங்களாவுக்காக ரூ 10500 வாங்கிக்கொண்டது தெரியுமா?

செட்டியார் }
[illegible] } தெரியும்.

சப்ரிஜிஸ்டிரார்:—சரி; அங்கே சேவகனிடம் போய் கையெழுத்துப்போடுங்கள்; போங்கள்—என்று அனுப்பிவிட்டு பத்திரத்தில் தமது கையெழுத்தைச் செய்து சேவகனிடம் விசிறிப்போட்டார். பதிவுக்கட்டணம் உடனே வசூலிக்கப்பட்டது. மரக்காயர், செட்டியார், ஐயர் மூவரும், ஒருமூலையில் போடப்பட்டிருந்த மேஜைக்கருகில் நின்ற சேவகனிடம் சென்றனர். அவன் பத்திரத்தின் பின்புறத்தில் அவர்களுடைய கையெழுத்து முதலிய விவரங்களை எழுதச் செய்ததன்றி, அவர்களுடைய கைரேகை யடையாளத்தையும் அழுத்தச் செய்தான். அப்போது சாமாவையர் ஒரு தந்திரம் செய்தார்; தகப்பனார் பெயருக் கெதிரில் தமது பெயரையும் தமது பெயருக் கெதிரில் தகப்பனார் பெயரையும் போட்டு விட்டார். அதாவது, மகாலிங்கையர் பிள்ளை சாமாவையர் என்பதற்குப் பதிலாக, சாமாவையர் பிள்ளை மகாலிங்கையர் என்று போட்டுவிட்டார். ஏனெனில், பிறகு அந்தப் பொய்ப்பத்திரம் தயாரித்த விஷயமாகத் துன்பம் நேர்ந்தால், சாட்சியாக வந்தவர் தாம் அல்லவென்று சொல்லிவிட, அந்தத் தந்திரம்செய்தார். அதை எவரும் கவனிக்கவில்லை. பத்திரப் பதிவின் சடங்குகள் நிறைவேறின. பத்திரம் பெருந்தேவியம்மாளிடம் கொடுபடவேண்டு மென்று மரக்காயர் எழுதிவைத்தார். அது மறுநாள் காலையில் கொடுபடுமென்று சப்ரிஜிஸ்டிரார் சொல்ல, அதைக்கேட்டுக்கொண்டு மூவரும் வெளிப்பட்டனர். வெளியில் நின்று, நிகழ்ந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த பெருந்தேவியம்மாள், தான் பெருத்த பங்களாவிற்கு எஜமானியானதைப்பற்றி நினைத்துப் பெருமகிழ்வும் பெருமையும் அடைந்தாள்; நால்வரும் கச்சேரிக்கட்டிடத்தை விட்டு வெளியிலிருந்த பாட்டைக்குவந்தனர். அடுத்த பத்திரத்திற்கு சாட்சி சொல்ல, செட்டியார் போகவேண்டியிருந்ததால், சாமாவையரால் கொடுக்கப்பட்ட எட்டணாவை வாங்கிக் கொண்டு செட்டியார் கச்சேரிக்குத் திரும்பினார். மற்ற மூவரும் கால் நடையாகச் சென்றனர்.

நடந்தவற்றை யெல்லாம் நன்றாகக் கவனித்திருந்த மந்திரவாதியும் பின்னால் நடந்தார். வெயிலுக்கு முகத்தை மறைத்துக் கொள்பவரைப்போல, அவர், தமது உருமாலையால் முகத்தை ஒருவாறு மறைத்துக்கொண்டு தொடர்ந்தார். தீத்தாரப்ப முதலி தெருவிற் கருகில் வந்தவுடன், மரக்காயர், மற்ற இருவரிடத்திலும் விடை

பெற்றுக்கொண்டு அந்தத் தெருவிற்குள் நுழைந்தார். சாமாவையரும் பெருந்தேவியம்மாளும் தமது வீட்டை நோக்கி மேலே சென்றனர்; மந்திரவாதியும் தீத்தாரப்ப முதலிதெருவிற்குள் நுழைந்து கப்பல்கார மரக்காயரைத் தொடர்ந்து சென்றார். அது மிகவும் ஏழைகளான மகம்மதிய ஜனங்கள் வசிக்கும் சிறிய வீடுகளைக் கொண்ட தெரு. அதில் நாலைந்து வீடுகளுக் கப்பாலிருந்த ஒரு சிறிய வீட்டிற்குள் கப்பல்காரர் புகுந்து மறைந்து போனார். மந்திரவாதி தெருவிலேயே கால் நாழிகை நேரம் நின்ற பின்னர் அந்த வீட்டின் வாயிலில்வந்து நின்று "பாயி! பாயி!" என்று கூப்பிட்டார். உள்ளே இருந்த மரக்காயர் "யார் அது?" என்று கேட்டுக் கொண்டு வெளியில் வந்து வாசற் படியில் கதவிற்குப் பதிலாக விடப்பட்டிருந்த கோணித்திரைக் கப்பாலிருந்து தலையை வெளியில் நீட்டினார். வெளியில் நின்றவர் ஒரு [illegible]க்கிய ரென்பதை யறிந்தவுடன் திரைக்கு வெளியில் வந்து "என்ன சங்கதி? நீர் யார்?" என்று கேட்டார்; அவர் அப்போது கப்பல் வியாபாரியின் உடைகளைக் கழற்றி விட்டு கருவாட்டுவியாபாரியின் உடைகளை யணிந்திருந்தமையால் துணியின் நாற்றம் குபீரென்று வீசியது; சிலைப்பேன்கள் துணியில் உல்லாசமாகத் துள்ளி விளையாடின. அந்தத் துணியில் காற்று நுழையும்படி, பல விடங்களில் வாயிற் படிகள், ஜன்னல்கள் முதலியவை நிறைந்திருந்தன. அரைப் பாகம் கடிபட்ட பன்ரோட்டித் துண்டொன்று அவருடைய கையிலிருந்தது. சப்ரிஜிஸ்டிரார் கச்சேரிக்கு வந்திருந்த கப்பல்காரர் அவர்தாமோ வென்று மந்திரவாதி ஐயுற்றார். என்றாலும் தமது முகத்தில் எவ்விதமான சலனத்தையும் காட்டாமல் "பாயி! சலாம். இதுதானே பதினேழாம் நம்பர் வீடு? இதில் ஆதழ்சா ராவுத்தர் இருந்தாரே; அவர் இப்போது இதில் இருக்கிறாரா?" என்றார்.

மரக்காயர்:—(திகைப்பும் கோபமு மடைந்து) இதுதானே பதினேழாம் நம்பர் வீடு? இதில் நான் பத்து வருஷமாக இருக்கிறேன் அங்கே ஆதம்சா என்று எவரும் இல்லையே!

மந்திரி:—அப்படியா! பதினேழாம் நம்பர் வீட்டில் இருப்பதாகச் சொன்னாரே! தங்கள் பெயரென்ன, பாயி?

மரக்காயர்:—இது என்னுடைய வீடு; என் பாட்டனார் காலத்திலிருந்து எங்களுக்குச் சொந்தமானது. கலெக்டர் கச்சேரியில், பாச்

சாமொகிதீன் என்று என்பேரில் தாக்கலா யிருக்கிறது; சர்ட்டிபிகேட்டு காட்டட்டுமா?" என்று குறும்பாக மொழிந்தார்.

அதைக் கேட்ட மந்திரவாதி மிகவும் பயந்து "பாயி! கோபம் வேண்டாம்; என்னுடைய சிநேகிதர் தப்பாக நம்பர் சொல்லி விட்டார்போ லிருக்கிறது. நீங்கள் போய் நாஷ்டா பண்ணுங்கள். நான் போகிறேன்; சலாம்" என்று சொல்லி விட்டு அப்பால் நடந்தார். மரக்காயரும் உட்புறம் போய்விட்டார்.

மந்திரவாதி நேராகத் தொளசிங்கப் பெருமாள் கோவில் தெருவை யடைந்து, சாமாவையருடைய வீட்டிற்கு வந்து முன்போலவே "அம்மா! அம்மா! ஐயர் வந்து விட்டாரா?" என்றார்.

அவர் வந்ததை மீனாட்சி யம்மாள் சொல்ல முன்னமே அறிந்திருந்த சாமாவையர் உடனே நடைக்கு வந்து மந்திர வாதியைக் கண்டு நடைத்திண்ணையில் உட்காரும்படி உபசரிக்க அவர் உட்கார்ந்து கொண்டார். ஐயரும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து அதிலிருந்த மண் திண்டில் சாய்ந்துகொண்டு "நீர் எஜமானிடத்திலிருந்தா வருகிறீர்?" என்றார்.

மந்திர ;—ஆம்—என்றார்.

சாமா:—அவர் நாகைப் பட்டணத்துக்குப் போனதாகச் சொன்னார். நானே சமீப காலத்தில் அங்கே போயிருந்தேன். அவர் வரவே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்போது எஜமான் எங்கிருக்கிறார்? இங்கே வந்து விட்டாரா அல்லது வெளியூரி லிருக்கிறாரா?

மந்திர:—அவர் நாகைப் பட்டணத்துக்கே போகவில்லை. அங்கே போவதாய்ச் சொல்லி விட்டு என்னிடம் வந்து விட்டார். நான் மலையாளத்தில் இருஞாலக்குடா என்னும் ஊரில் இருப்பவன். நெடு நாளாய் அவருக்கும் எனக்கும் பழக்க முண்டு.

சாமா:—அப்படியா! மலையாளத்தில் நீர் வர்த்தகம் செய்பவரா?

மந்திர:—எனக்கு வர்த்தகம் ஒன்றுமில்லை. நான் மந்திரவாதி.

சாமா:—ஓகோ! அப்படியா! ஆனால் அவர் இன்னமும் உம்முடைய ஊரில்தான் இருக்கிறாரோ?

மந்திர:—இல்லை இல்லை; இங்கே வந்து விட்டார். ஒரு இரகசியமான இடத்தில் இருக்கிறார்.

சாமா.—அவருடன் இன்னம் யார் இருக்கிறார்கள்?

மந்திர:—ஒருவருமில்லையே!

சாமா:—ஒரு பெண் இருக்கவேண்டுமே?

மந்திர:—பெண் ஏன் வருவாள்? நீர்தான் ஐயாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு, சோறு போடும் எஜமானையே ஏமாற்றி விட்டீரே! அவருடன் வரக்கூடிய பெண்ணையா நீர் அனுப்பினீர்?—என்றார்.

அதைக் கேட்ட ஐயர் அச்சமும் திகைப்பு மடைந்து "என்ன நடந்தது? பெண் எங்கே போனாள்? அவர் வீட்டில்தானே இருக்கிறாள்?" என்றார்.

மந்திரவாதி "சங்கதி ஒன்றும் உமக்குத் தெரியாதோ? இதோ இந்தக் கடிதத்தைப் படித்துப் பாரும். நீர் அனுப்பிய பெண்ணின் யோக்கியதையும் நீர் செய்த காரியம் எப்படி முடிந்ததென்பதும் தெரியும்", என்று கூறிய வண்ணம் ஒரு கடிதத்தைக் கொடுக்க, சாமாவையர் மிகுந்த ஆவலோடு அதை வாங்கினார்; கடிதத்தைப் பிடித்த அவருடைய கை நடுங்கியது. மனது கலங்கியது. அந்த ஒரு நொடியும் ஒரு யுகமாய்த் தோன்றியது. அதைப் பிரித்துப் படித்தார். உடனே அவருடைய முகம்மாறுதலடைந்தது; ஏதோ சொல்ல நினைத்தார்; வாய் குழறியது. "ஆனால் பெண் தப்பித்துக் கொண்டுபோய் விட்டாளா? எஜமானுடைய மாமனார்வீட்டிலா இருக்கிறாள்.?" என்றார்.

மந்திர:—ஆம்.

சாமா:—அப்படியானால் விஷயம் வெளியாயிருக்குமே?

மந்திர:—இதுவரையில் வெளியாகவில்லை; இன்னம் இரண்டொரு நாளில் வெளியாய் விடும்.

சாமா:—வெளியானால்?

மந்திர:—நீங்கள் மூவரும் காராக்கிரகத்துக்குள் போகவேண்டியதுதான். நீர் சாதாரணமான காரியமா செய்தீர்? பணத்தை வாங்கிக்கொண்டு முதலாளியை சந்தியில் இழுத்து விட்டீரே.

சாமா (நடுநடுங்கி):—இப்படி நடக்குமென்று நான் நினைக்கவே இல்லை. இப்போது இதற்கு என்ன யோசனை செய்திருக்கிறீர்கள்? எஜமானுக்கு ஆபத்துவராமலிருக்க, என்ன செய்யவேண்டுமென்றாலும் அதை நான் செய்யத் தடையில்லை. என்னுடைய உயிரைக் கேட்டாலும் கொடுக்கத் தயார்—என்றார்.

உடனே மந்திரவாதி "இதோ பாரும்; இந்தக் கடிதத்தை நான் எட்சிணிதேவதையின் மூலமாய் போலீஸ் கச்சேரியிலிருந்து வரவழைத்தேன்" என்று ஒருகாகிதத்தை நீட்ட சாமாவையர் மிகுந்த ஆவலோடு அதை வாங்கிப் படித்தார். முன்னிலும் அதிகரித்த பயத்தையும், திகைப்பையு மடைந்தார். "என்ன இது! எஜமானுடைய மாமனார் பிரியாது எழுதிவிட்டாரே! இதற்கு நாம் என்ன செய்கிறது?" என்றார். அதற்குள் அவருடைய மனதில் கோடி எண்ணங்கள் தோன்றி மறைந்தன. அதுபொய்யோ மெய்யோவென்று சந்தேகித்தார். போலீஸ் முத்திரை இருப்பதைக் கண்டார். அது உண்மையான பிரியாதென்றே நினைத்துக் கொண்டார். அது எட்சிணிதேவதையினாலேதான் வந்திருக்க வேண்டுமென்று உறுதியாக நினைத்தார். மந்திரவாதியிடத்தில் அவருக்குப் பொருத்த மதிப்பும், பயமும், மரியாதையும் ஏற்பட்டன. அவர் என்ன சொல்லப் போகிறாரென்பதை ஆவலோடு எதிர்பார்த்தார். மந்திரவாதி சிறிது நிதானித்தார்; "இதற்கு இன்று ராத்திரி முழுதும் சுடலையில் பிணத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு, நான் மந்திரம் ஜெபித்து, காவு கொடுத்து எட்சிணியை வரவழைத்து வசியம் செய்யப்போகிறேன். இதனால், அவருடைய மாமனாரும் மனைவியும் நாளைக்கு அவருடைய வசமாய் விடுவார்கள். மேனகாவென்னும் பிராம்மணப் பெண்ணும் அவர்மேல் மோகங்கொண்டு அவரிடம் வந்து சேருவாள். அவளை இனிமேல் இந்த ஊரில் வைத்துக்கொள்ளக்கூடாது; அடுத்த கப்பலில் சிங்கப்பூருக்கு அவளை அழைத்துக்கொண்டு போய் அங்கே வைத்துவிடுவார். அவர் இந்த ஊரில் மூன்றுமாசமும்

சிங்கப்பூரில் மூன்று மாசமுமாக இருப்பார்; அவளை கோஷா ஸ்திரீயைப்போல மூடியே கொண்டு போவார். அவளை எவரும் கவனிக்கவும் மாட்டார்கள் கண்டு கொள்ளவும் மாட்டார்கள்; ஒன்று லும், தெய்வச் செயலாக, கப்பலிலோ சிங்கப்பூரிலோ அவளை யாராவது இந்துப் பெண்ணென்று கண்டு கொண்டால், எஜமானுக்கு ஆபத்து நேரும்; அதற்காக நானும் அவரும் ஒரு யோசனை செய்து இதோ ஒரு நகல் தயாரித்திருக்கிறோம். அதைப்போல நீர் எழுதி அதில் நீரும், பெருந்தேவியம்மாளும் கை யெழுத்திட்டு வாங்கி வரச்சொன்னார். இந்தக் கடிதம் உபயோகப்படப் போகிறதில்லை. ஆனாலும், முன்னெச்சரிக்கையாக இது கையில் இருக்க வேண்டியது அவசியமல்லவா?" என்றார்.

உடனே சாமாவையர் சிறிதும் யோசியாமல் அவர் கொடுத்த நகலை வாங்கிப்படித்துவிட்டு "சரி; இதுதானா பெரிய காரியம்; அப்படியே எழுதித்தருகிறோம். நீர் இங்கே இரும்; நான் போய் இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து அடுத்த வீட்டிற்குச் சென்று நிகழ்ந்த விஷயங்களையெல்லாம் பெருந்தேவியம்மாள், கோமளம் இருவரிடத்திலும் வெளியிட்டு அவர்களை மிகவும் பயமுறுத்தினார். கடிதம் எழுதிக் கொடுப்பதற்கு அவர்களும் எளிதில் இசைந்தனர். மந்திரவாதி கொடுத்த நகலை சாமாவையர் படித்துவர கோமளம் வேறொரு காகிதத்தில் அப்படியே எழுதினாள்; அதில் பெருந்தேவியம்மாள் கையெழுத்திட்டாள். அடியில் சாமாவையரும் கையெழுத்திட்டு அதை எடுத்துக்கொண்டு தமது கிருகத்திற்கு வந்து அதை மந்திரவாதியிடம் கொடுத்தார். மந்திரவாதி அதை வாங்கிப் படித்துப்பார்த்து திருப்தியடைந்தவராய், அதை மடித்துத் தமது சட்டைப்பையில் வைத்துக்கொண்டார்; சாமாவையருக்கு நைனா முகம்மது எழுதியனுப்பிய கடிதத்தையும், பெரிய தம்பி மரக்காயரின் பிரியாதையும் அவ்வாறே எடுத்து பத்திரம் செய்து கொண்டார். "சரி; எஜமான் காத்திருப்பார்; நான் போகிறேன். நாளைக்கு எல்லாக்காரியமும் திருப்திகரமாய் முடிந்துபோகும். சலாம்" என்று சொல்லிவிட்டு எழுந்தார். சாமாவையரும் அவருக்கு சலாம் செய்தார். எழுந்து வெளியிற் சென்ற மந்திரவாதி திரும்பியும் நடைக்கு வந்து "ஐயரே! இன்னொரு விஷயம் கேட்டுவரச் சொன்னார்; அதை மறந்துவிட்டேன்." என்றார்.

சாமாவையர் ஆவலோடு "என்ன" வென்றார்.

மந்திரவாதி "பெண்ணுடைய பெட்டியில் நீங்கள் நாடகக்காரன் எழுதியதைப்போல இரண்டு கடிதங்கள் எழுதி வைத்தீர்களே; அவைகளை எழுதிய மனிதரை நாம் கடைசிவரையில் நம்பலாமல்லவா? அவர் ஒருவேளை விஷயத்தை வெளியிட்டு விடப்போகிறாரென்று எஜமான் பயப்படுகிறார். அவர் சொல்லிவிடக்கூடியவரானால் அவருடைய பெயரைச் சொல்லும். இன்று ராத்திரியே மாரணமந்திரம் செய்து அவரைக்கொன்று விடுகிறேன்," என்றார். அதைக் கேட்ட சாமாவையர் "இல்லை இல்லை; அதைப்பற்றிப் பயமே வேண்டாம். அதை எழுதியது வேறு யாருமில்லை. என் தம்பிதானெழுதினான். உயிர்போனாலும் அவன் நிஜத்தைச் சொல்லமாட்டான். எஜமானிடம் இதைப்பற்றிச் சொல்லுங்கள். அவர் எங்கே மறைந்து கொண்டிருக்கிறார். அவரிடம் நானும் வரலாமா?" என்றார்.

மந்திரவாதி "அவர் நாளைக்குக் காலையில் தம்முடைய வீட்டுக்கே பகிரங்கமாக வந்து விடுவார்; நீர் வீட்டிற்கே வந்து பார்க்கலாம்; இன்றைக்கு ஒரு நாள் பொறுத்துக் கொள்ளும்" என்று சொல்லிக் கொண்டே வெளியில் போய் விட்டார். விஷயங்கள் யாவும் திருப்திகரமாக நடந்து போனதைப்பற்றி சாமாவையர் மிகவும் மகிழ்ச்சியடைந்து பகற் போஜனம் செய்யும் பொருட்டு வீட்டிற்குள்போய் விட்டார்.

வீட்டை விட்டு வெளிப்பட்ட மந்திரவாதி கெங்கைகொண்டான் மண்டபத்திற்கெதிரில் திரும்பிச் சிறிது தூரம் சிங்காராசாரி தெருவில் சென்று அங்கிருந்து வெங்கடாசல முதலி தெருவிற்குள் நுழைந்தார். அதிலிருந்த பல மாடிவீடுகளைக் கடந்தார். அப்பாலிருந்த ஒரு வீட்டிலேதான் போலீஸ் இன்ஸ்பெக்டர் சமய சஞ்சீவி ஐயர் குடியிருந்தாரென்பதை மந்திரவாதி அறிவாராதலின் அந்த வீட்டிற்குள் புகுந்து நடையைத்தாண்டி தாழ்வாரத்தில் நின்றுகொண்டு "சாமி! சாமி!" என்று கூப்பிட்டார். "யார் அது?" என்று குயில் கூவுதலைப்போல ஒரு பெண்ணின் குரல் உட்புறத்தில் கேட்டது. அடுத்த நிமிஷம், தங்கப் பதுமையைப்போன்ற வடிவழகைக் கொண்ட ஒரு யௌவனப் பெண்மணி மந்திரவாதிக்கெதிரில் பிரசன்னமானாள். அவளுக்குப் பதினெட்டுவயதிருக்கலாம். தங்கமும், வைரக்கற்களும், பட்டுத்துயிலும், சிவப்பு மேனியும், முல்லை யரும்புபோன்ற வெள்ளைப்பற்களும், ஜெகஜ்ஜோதியாய் ஒளிவீச, எதிரில் வந்து காட்சி தந்த அந்த இன்பவடிவைக் கண்ட மந்திரவாதி புன்னகை காட்டி "இன்ஸ்பெக்டர் சாமி இருக்கிறாரா?" என்றார். அதைக்கேட்ட, சமய சஞ்சீவி ஐயருடைய மனைவி, அவரை ஏற இறங்க உற்று நோக்கி "இல்லை; போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறார். நீர் யார்?" என்று மிகவும் கம்பீரமாகக் கேட்டாள்; அவளிருந்த கூடத்தை நோக்கிப் புன்னகை செய்து நடந்த வண்ணம், மந்திரவாதி "ஐயர் ஸ்டேஷனில் இல்லையே! இப்போது அவர் இங்கே தான் இருக்கிறாரென்று சொன்னார்களே?" என்றார். அவருடைய முகத்தில் போக்கிரிக்களையும் புன்னகையும் பிரகாசித்தன. அதைக்கேட்ட அம்மாள் சிறிது கோபங்கொண்டு அதட்டின குரலில் "இங்கே இல்[illegible]ன்கிறேன். மேலும் மேலும் கேட்கிறீரே; அவரை அடுக்குப் பானையில் இங்கே ஒளித்து வைத்திருக்கிறோமோ; போமையா வெளியில்; திறந்த வீட்டில் எனனவோ நுழையுமென்பார்கள்; அதைப்போல கூடத்திற்கு வந்துவிட்டீரே; சுத்தப் பட்டிக்காடாயிருக்கிறீரே" என்றாள். அதைக்கேட்ட மந்திரவாதி அதைக் காதில் வாங்காதவரைப்போல நடித்து மிரண்டுமிரண்டு பார்த்து "இல்லை யம்மணி! கோபித்துக் கொள்ள வேண்டாம்; நான் ஐயரிடத்தில் வேலையாக வரவில்லை. அம்மாளிடத்திலேதான் வேலையாக வந்தேன்; நான் மலையாளத்து மந்திரவாதி" என்றார்.

அதைக்கேட்ட அம்மாள் முன்னிலும் அதிகரித்த ஆத்திரமடைந்து "இப்போது நீ வீட்டை விட்டு வெளியில் போகிறாயா; ஆர்டர்லி (சேவகன்) யைக் கூப்பிட்டு மரியாதை செய்தனுப்பட்டுமா?" என்றாள்.

உடனே மந்திரவாதி நயமாகவும் பணிவாகவும் பேசத் தொடங்கி "அம்மணியிடம் நல்ல சன்மானம் வாங்கிக்கொண்டு போக வந்திருக்கிறேன். என்னை எந்தச் சேவகன் தள்ளுவான்? அம்மணி நல்ல தங்கமான குணம்; முன் கோபம் அதிகம்; ஆனால் வெளுத்ததெல்லாம் பால்; கறுத்ததெல்லாம் தண்ணீர்; அதை அறிந்துதான் ஐயர் ஸ்டேஷனுக்குப் போவதாகச் சொல்லி ஏமாற்றி விட்டு பட்டப்பகலிலேயே தாசி ஞானம்பாள் வீட்டிற்குப் போயிருக்கிறார். உங்களுக்கும் ஐயருக்கும் இந்த விஷயத்தில் வரு

த்தமென்பது எனக்குத் தெரியும்; நான் வசிய மருந்து செய்வதில் மிகவும் கைதேர்ந்தவன். இதோ ஒரு மை தருகிறேன்; அதை நீங்கள் புருவத்தில் தடவிக்கொண்டால் அடுத்த நிமிஷம் ஐயர் உங்களுடைய காலடிக்கு வந்து சரணாகதி யடைவார்; இதை உடனே பரிட்சை பார்க்கலாமென்று மிகவும் உறுதியாகக் கூறினார். ஐயரது நடத்தையைப்பற்றி அம்மாளுக்கு நெடுநாட்களாக சந்தேகமிருந்த தன்மையாதலால், அவளுடைய கோபம் உடனே தணிந்தது. தானே கணவனை வசியம் செய்துவிட வேண்டுமென்று நினைத்தாள். "அந்த மை என் புருவத்திலிருக்கும் வரையில்தானே அவர் சொன்னபடி கேட்பார்? அது கூடாது. அவர் இனிமேல் எப்போதும் நான் சொல்லுவதைச் செய்யவேண்டும். வேறு யாரிடத்திலும் அவர் ஆசை வைக்கக்கூடாது. நான் எழுந்திரு என்றால் எழுந்திருக்க வேண்டும், உட்கார் என்றால் உட்கார வேண்டும். அப்படி மருந்திருந்தால் கொடும்; நீர் கேட்கும் பணத்தை உடனே தருகிறேன்" என்றாள். அம்மாள் எளிதில் தம் வசப்பட்டதைக்கண்ட மந்திரவாதி "மந்திர உச்சாடனம் செய்த ஒரு வேர் என்னிடம் இருக்கிறது. அதை இப்போதே தருகிறேன். தாலிச்சரட்டில் கட்டிக்கொள்ளுங்கள். அடுத்த நிமிஷம் ஐயர் என்ன செய்கிறாரென்று பாருங்கள். ஆனால் எனக்குப் பணத்தின் ஆசையில்லை." என்றார்.

அம்மாள்:—அப்படியானால் ஒன்றும் வாங்கிக் கொள்ளாமல் இலவசமாகச் செய்கிறேனென்கிறீரா?

மந்திர:—கூலியில்லாத வேலையுண்டா அம்மணி? தங்களுக்குத் தெரியாத காரியமா?

அம்மாள்:—அப்படியானால், என் உடம்பிலுள்ள நகைகளில் எதைக்கேட்டாலும் தருகிறேன். தங்கக்கொலுசு வேண்டுமா? இல்லாவிட்டால், என் காதிலிருக்கும் வைரக்கம்மல் வேண்டுமா?

மந்திர:—நல்ல காரியம் செய்தீர்கள். கம்மல் இரண்டாயிரம் ரூபா பெறுமே! உங்களுடைய ஐயரோ இன்ஸ்பெக்டர்; அவர் வசியமான பிறகு நான் கம்மலைத்திருடிக்கொண்டு போனதாகச் சொல்லி, [illegible]னையும் பிடித்துக்கொண்டு என்னையும் ஜெயிலில் போடப்பார்த்தீர்களா! நீங்கள் கம்மலைக்கொடுத்த பின், ஐயர் வந்து அதெங்கே என்று கேட்டால், என்ன சொல்லுவீர்கள்?

161426

அம்மாள்:—(புன்னகை செய்து) இந்த விஷயங்களில் புருஷரை ஏமாற்ற பெண்டுகளுக்குத் தெரியாதா? எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதற்காகக் கழற்றி வைத்தேன். காக்கை எடுத்துக்கொண்டு போய்விட்டதென்று சொல்லி விடுகிறேன். இதற்காக நாலைந்து அடி விழுந்தாலும் ஐந்து நிமிஷத்தில் ஆறிப்போகிறது. காரியம் ஆனால் அதுவே போதும்.—என்றாள்.

மந்திர:—(புன்னகை செய்து) அம்மாள் பலே தந்திரசாலி! எனக்கு கம்மலும் வேண்டாம். அதனால் அம்மாளுக்கு அவ்வளவு வருத்தமும் வேண்டாம். நான் ஐயரை உடனே அழைத்துக் கொண்டு வருகிறேன். என்னை ஆசையோடு கட்டிக்கொண்டு, எண்ணி இரண்டு முத்தங்கொடுத்து விடுங்கள்; வேறொன்றும் வேண்டாம்.—என்றார்.

எதிர்பாராத அந்தக்கொடிய சொல்லைக்கேட்ட அம்மாள் கொடிய புலியைப்போலச் [illegible]ந்தாள். "அடே தொடைப்பக்கட்டை! என்ன சொன்னாய்? வீட்டை விட்டு வெளியில் போகிறாயா? சாணியைக் கரைத்து சந்தனாபிஷேகம் செய்யட்டுமா? அடே! வெளியில் யாரடா ஆர்டர்லி?" என்று உரக்கக்கூறினாள்.

அதைக்கேட்ட மந்திரவாதி சாந்த குணத்தோடு புன்னகை செய்து "ஆகா! எஜமானி அம்மாளுக்கு எவ்வளவும் கோபம் வருகிறது! ஐயரை வசியம் பண்ண அறிந்த எனக்கு அம்மாளை வசியம் பண்ணத்தெரியாதா! இதோ பார்; சூ! மந்திரக்காளி! அடுத்த நிமிஷம் அம்மாளே ஓடிவந்து என்னைக் கட்டிக்கொண்டு முத்தமிடவேண்டும்" என்ற வண்ணம், தமது தலைப்பாகையை ஒரு கையால் கீழே தள்ளிவிட்டார்; இடையிலிருந்த கைலியையும் மேலே இருந்த அங்கியையும் கழற்றிப்போட்டார்; தமது இடையிலிருந்த ஒரு பேனாக்கத்தியால் முகத்திலிருந்த ஒரு கயிற்றை அறுக்க, அவருடைய நீண்ட தாடி உடனே பறந்து கீழே விழுந்தது. அவன் பைத்தியக்காரனென்று அதுவரையில் நினைத்திருந்த அந்த யௌவன மாது, திகைப்பும் வியப்புமடைந்து அந்த வசியத்தில் ஈடுபட்டு மந்திரவாதியின்மீது உடனே மோகங்கொண்டாள். அடுத்த நிமிஷம் காதலோடு மந்திரவாதியின்மீது பாய்ந்து அவரை அணைத்து முத்தமிட்டு "ஆகா! நல்ல மந்திரவாதி! என்னை எவ்வளவு சீக்கிரமாகவசியப் படுத்திவிட்டீர்! முத்தம் முத்தமென்று பைத்தியம் பிடித்தலைகிறீர். எத்தனை வேண்டுமானாலும் இதோ தருகிறேன்; எடுத்துக் கொள்ளும்; அப்படியாவது என் புருஷன் வசியமாகட்டும்." என்று திரும்பவும் ஆலிங்கனம் செய்துகொண்டாள்; வேஷங்கலைந்த மந்திரவாதி தேனில் விழுந்த ஈயைப்போல அவள் கையில் அகப்பட்டுக்கொண்டு திருட்டு விழிவிழிக்கிறார்.